உ

கணபதி துணை

புறநானூறு
மூலமும் பழைய உரையும்

பதிப்பாசிரியர் :

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

ஏழாம் பதிப்பு

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

திருவான்மியூர், சென்னை-41

உரிமை பதிவு] 1971 [விலை ரூ. 16-00

முதற் பதிப்பு 1894
இரண்டாம் பதிப்பு 1923
மூன்றாம் பதிப்பு 1935
நான்காம் பதிப்பு 1950
ஐந்தாம் பதிப்பு 1956
ஆறாம் பதிப்பு 1963
ஏழாம் பதிப்பு 1971

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு—46

691762

நண்பர்கள் அச்சகம்,
சென்னை-18

தாழ்வொன் றின்றி வாழ்மி னென்பவும்
சுற்றம் புரக்கு நற்றிற முரைப்பவும்
கற்பின் றிறத்தைக் கற்பிப் பனவும்
மக்கட் பேற்றின் மாண்புரைப் பனவும்
கணவனை யிழந்த மணமலி கூந்தலார்
தீப்பாய் செய்தி தெரிவிப் பனவும்
கைம்மை விரத வெம்மை விரிப்பவும்
இன்னும் பற்பல பன்னு வனவுமாய்ச்
செப்புந ரெவர்க்கு மெய்ப்பிடை வைப்பாய்
அரும்பெறன் மரபிற் பெரும்பயன் றருமே'

என்று ஒருவாறு பொதுப்படத் தொகுத்துக் கூறுவதன்றி, இன்ன பாடல் இத்தன்மையது, இன்ன பாடல் இத்தன்மையதன்று தனித்தனியே எடுத்துக்காட்டி இவற்றின் அருமை பெருமைகளைச் சீராட்டிப் பாராட்டுதற்கு ஒரு சிறிதும் வல்லேனல்லேன்.

இச்செய்யுட்கள் நூலாசிரியர் பலருடைய உள்ளத்தையும் உரையாசிரியர் பலருடைய உள்ளத்தையும் தம் வயமாக்கி அவற்றைத் தமக்கு முழுமணிப் பீடிகையாகக் கொண்டு வீற்றிருந்தனவென்பதை, அவரவர் அருளிச்செய்த நூல்களும் உரைகளும் இவற்றின் சொன்னடை பொருணடைகளை இடையிடையே பெரும்பாலும் தழுவியிருத்தலே தெளிவாகப் புலப்படுத்தும்.

எனக்குக் கிடைத்த ஏட்டுச் சுவடிகளுள் ஒரு பிரதியின் தொடக்கத்தில் 'அறநிலை' என்று வரையப் பெற்றிருந்தது. அப்படியே பொருள்நிலை, இன்பநிலை என்ற பகுதிகள் எந்த எந்தப் பாடலிலிருந்து தொடங்குமோ வென்று தேடிப் பார்த்ததில் ஒரு பிரதியிலும் கிடைக்கவில்லை; ஆனாலும் இந்நூல் அறநிலை, பொருள்நிலை, இன்பநிலை என்னும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பெற்றிருக்க வேண்டுமென்பது இதனால் ஊகித்தறியப்படுகின்றது.

இந்நூற்கு இலக்கணம் அகத்தியமும் தொல்காப்பியமுமேயென்பதும், இதில் ஒவ்வொரு பாட்டின் பின்னும் எழுதப்பட்டுள்ள திணையும் துறையும் அவ்வப்பாட்டிற்கு ஏற்றனவல்லவென்பதும் நச்சினார்க்கினியர் கருத்து; இது 'தத்தம் புதுநூல் வழிகளால் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப்பொருளாகத் துறைகூறவேண்டு மென்றறிக' என்று தொல்காப்பியப் புறத்திணையியலில், 'கொடுப்

போரேத்தி" என்னும் சூத்திர வுரையில் எழுதியிருத்தலாலும் மேற்கூறிய புறத்திணையியலுரையில் இந்நூற்பாட்டுக்களுட் சிலவற்றை வேறு திணை துறைகளுக்கு உதாரணமாகக் காட்டி அவர் மறுத்தலாலும் துணியப்படும்.

கிடைத்த பிரதிகளுள் ஒன்றிலேனும் இந்நூல் 267, 268-ஆம் பாடல்களின் மூலமேனும் உரையேனும் காணப்படவில்லை.

இந்நூற்குக் கிடைத்த உரை, பதப்பொருளை இனிது விளக்கி உரிய இடங்களில் சொற்களை முடித்துக் காட்டி இலக்கணக் குறிப்பையும் திணைதுறைகளையும் ஆங்காங்குள்ள பழமொழிகளையும் அணியையும் சொன்னயம் பொருணயங்களையும் புலப்படுத்துவது. இவ்வுரையில் இக்காலத்து வழங்காத சொற்கள் பலவுள்ளன. அன்றியும், இதன் இடையிடையே சிற்சில வாக்கியங்கள் அவ்வவ்விடத்திற்குப் பொருத்தமில்லாதனவாகத் தோற்றும். அவற்றைச் செவ்வை செய்துகொள்வதற்கு இப்பொழுது தக்க சாதனம் கிடையாமையாலும், இனி நல்ல பிரதிகள் கிடைப்பின் அவற்றைக்கொண்டு செவ்வை செய்து கொள்ளலாமென்ற எண்ணத்தாலும் அவற்றை மாற்றுமற் பிரதிகளிலிருந்தவாறே பதிப்பித்தேன். இவ்வுரை இந்நூலின் முதல் இருநூற்றறுபத்தாறு பாடல்களுக்கு மட்டுமே கிடைத்தது; மேலுள்ள பாடல்களுக்கு ஒரு பிரதியிலும் கிடைத்திலது; 243-ஆம் பாடலுக்கு மேற்பட்டுள்ள சிலவற்றின் உரை இடையிடையே சிதைந்து மாறியிருக்கிறது.

இந்நூலுரையாசிரியர் மேற்கோளாக எடுத்துக் காட்டிய நூல்கள் தொல்காப்பியம், கலித்தொகை, குறுந்தொகை, சீவக சிந்தாமணி, பெரும்பாணாற்றுப்படை என்பன. இவ்வுரையாசிரியர் இன்னரென்று தெரியவில்லை. இவர் சில பாடல்களின் விசேடவுரையிலெழுதும் சில செய்திகள் இந்நூற்குப் பழைய உரை ஒன்று உண்டென்பதைக் குறிப்பிக்கின்றன. அவ்வுரை இப்பொழுது கிடைக்கவில்லை.

9-ஆம் பாட்டின் விசேடவுரையில் இவர், 'யாற்றுநீரும் ஊற்றுநீரும் மழைநீரும் உடைமையால், கடற்கு முந்நீர் என்று பெயராயிற்று; அன்றி முன்னீரென்றோதி, நிலத்திற்கு முன்னாகிய நீரென்றும் உரைப்ப' என்று முந்நீர், முன்னீர் என்பவற்றின் பெயர்க்காரணத்தைக் கூறுகின்றார். சிலப்பதிகார உரையில் அடியார்க்குநல்லார் இவ்விரண்டு காரணங்களையும் மறுத்து, 'முந்நீர் - கடல்; ஆகுபெயர்; ஆற்று நீர் ஊற்று நீர் மேனீரென

இவை யென்பார்க்கு அற்றன்று; ஆற்றுநீர் மேனீராதலானும் இவ்விரண்டுமில்வழி ஊற்றுநீரும் இன்றுமாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று; முதிய நீரெனின், "நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றும்" என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது; ஆனால் முந்நீர்ப்பொருள் யாதோ வெனின் முச்செய்கையையுடைய நீர் முந்நீரென்பது; மு செய்கையாவன: மண்ணைப் படைத்தலும், மண்ணையழித் தலும், மண்ணைக்காத்தலும்' என்று கூறுவர். இம்மறுப்பு முற் கூறிய உரைப்பகுதியை மறுத்ததாகக் கொள்ளின் அடியார்க்கு நல்லார்க்கு இவ்வுரையாசிரியர் முற்பட்டவரென்று கொள்ள இடமுண்டு.

ஏறக்குறைய 55 வருஷங்களுக்கு முன்பு சீவகசிந்தா மணியை யான் ஆராய்ந்து வருகையில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்களாக விளங்கிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் ஆதீன புத்தகசாலையிலிருந்து அளித்த ஏட்டுப்பிரதிகளுள் மிகப் பழையனவும் பெயர் எழுதப்படாதனவுமான மூன்று சுவடிகள் இருந்தன; அவற்றில் முதலும் இல்லை; இறுதியும் இல்லை; பக்கங்கள் மிகச் சிதைந்தும் தேய்ந்துபோயும் இருந்தன. அந்தக் காலம் பத்துப்பாட்டு இன்னவை, எட்டுத் தொகை இன்னவை என்று தெரியாத காலம். சில வருஷங் களுக்குப் பின்பு சீவகசிந்தாமணியைப் பதிப்பித்து வருகையில் விளங்காத மேற்கோள்களுக்குரிய இடத்தைத் தேடிவரும் பொழுது அந்தச் சுவடிகளுள் ஒன்றை ஒருநாள் பிரித்துப் பார்த்தேன். அப்போது, "கொற்றுறைக் குற்றில" என்னும் தொடர்மொழி காணப்பட்டது. சீவகசிந்தாமணி, கனகமாலையா ரிலம்பகம் 309-ஆம் செய்யுளின் உரையில் இத்தொடர்மொழியை நச்சினார்க்கினியர் மேற்கோளாகக் கொடுத்திருத்தலால், இஃது ஏதோ பழைய நூலாக இருக்கவேண்டுமென்று மட்டும் தெரியவந்தது. பிறகு படித்துப் பார்க்கையிற் பாட்டும் உரையும் காணப்பட்டன. அப்பால் அந்தப் பாடலின் எண்ணைக் கவனிக் கையில் '95' என்று தெரிந்தது. நற்றிணை முதலியவற்றின் மூலம்மட்டும் அடங்கிய கையெழுத்துப் பிரதி வேறு இருந்தமை யால் அவற்றுள் ஒவ்வொன்றையும் சோதித்துக்கொண்டு வரும்போது இது புறநானூற்று உரை யென்று தெரிந்தது. அப் போது உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. மற்ற இரண்டு குறைச் சுவடிகளுள் ஒன்று பரிபாடலுரை; மற்றொன்று பத்துப் பாட்டுரை.

அக்காலமுதல் இந்நூலைப்பற்றிய செய்திகளைத் தொகுக்கத் தொடங்கினேன். பல இடங்களில் தேடி அன்பர்களுடைய பேருதவியாற் பல கையெழுத்துப் பிரதிகளைப் பெற்று ஆராய்ந்து வரலானேன். இறைவன் திருவருளால் இந்நூலின் முதற் பதிப்பு 1894-ஆம் வருஷத்திலும், இரண்டாம் பதிப்பு 1923-ஆம் வருஷத்திலும் வெளியாயின. அந்நூல் முதற்பதிப்பு வெளி வந்த காலத்தில் அதன் முகவுரையில், 'இத்தமிழ் நாட்டின் பழைய சரித்திரங்களைத் தெரிந்துகொள்ளுதலிலும் தெரிவித்த லிலுமே பெரும்பாலும் காலம் கழித்து உழைத்துவரும் உபகாரி களாகிய விவேகிகள், இந்நூலை நன்கு ஆராய்ச்சி செய்வார் களாயின், பலருடைய வரலாறுகள் முதலியன தெரிந்து கொள்ளுதல் கூடும்' என்றெழுதியிருந்தேன். அப்பதிப்பு வெளி வந்த பின்னர் இன்று வரையில் தமிழ் நாட்டின் சரித்திரச் செய்திகளை அறிவதற்கு இந்நூல் இத்தனை வகையாகப் பயன் பட்டிருக்கின்றதென்பதைத் தமிழ் நாட்டினர் நன்கு அறிவர். தமிழ்ப்புலவர் வரலாறுகளையும், தமிழ்ப்பேரரசர், சிற்றரசர், உபகாரிகள் முதலியோர்களுடைய சரித்திரங்களையும், பண்டைத் தமிழருடைய ஒழுக்க வழக்கங்களையும் இதிற் கண்ட ஆராய்ச்சி யாளர் பலர் அவற்றைத் தனித்தனியே தொகுத்தும் விரித்தும் விரவுவித்தும் அமைத்துப் பலவகையான சரித்திரங்களையும், ஆராய்ச்சி நூல்களையும், சிறுவர்களுக்குரிய புத்தகங்களையும் வெளியிட்டிருக்கின்றனர். இவ்வொரு நூல் இத்துணை ஆராய்ச்சி களுக்கு இடங்கொடுப்பதையும் இதனை வெளியிடும்படி நேர்ந்த திருவருட்டிறத்தையும் எண்ணும்போது, தமிழ்ப்பணியை இடையீடின்றிச் செய்து வருங்கால் இடையிடையே பலவகை யால் தோன்றும் துன்பங்களை மறந்துவிடற்குரிய பெரிய ஆறுதல் எனக்கு உண்டாகின்றது.

காலஞ் சென்ற ஜி. யு. போப் துரையவர்களுக்குத் தமிழில் அன்பு உண்டாவதற்கு முக்கிய காரணமாக இருந்தவற்றுள் இப்புறநானூறும் ஒன்றாகும். அவர் இப்புத்தகம் வெளிவந்த காலத்தில் இப்புத்தகத்தைப் பாராட்டி அடிக்கடி எனக்கு எழுதுவ துண்டு. இதிலுள்ள சில செய்யுட்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கின்றார். ஒவ்வோர் ஆங்கில வருஷப் பிறப்பன்றும் இந்நூற் செய்யுட்களுள் ஒன்றை மொழிபெயர்த்து எனக்குச் சில வருஷங்கள் வரையில் அனுப்பிவந்தார்.

உரையில்லாத மூலங்கள் எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டிருந்த

தன்றி, இவற்றுள் சில பாடல்களின்பின் திணை எழுதப்படா மலும், சிலவற்றின்பின் துறை எழுதப்படாமலும், சிலவற்றின் பின் இரண்டும் எழுதப்படாமலும், சிலவற்றின்பின் பாடினோர் பெயர் சிதைந்தும், சிலவற்றின்பின் பாடப்பட்டோர் பெயர் சிதைந்தும், சிலவற்றின்பின் இருவர் பெயருமே சிதைந்தும், சில பாடல்கள் இரண்டிடத்து எழுதப்பட்டு இரண்டெண்களை யேற்றும், வேறு வேறிடத்தில் இருத்தற்குரிய இரண்டு பாடல்கள் ஒருங்கெழுதப்பட்டு ஓரெண்ணையேற்றும், சில முதற்பாகம் குறைந்தும், சில இடைப்பாகம் குறைந்தும், சில கடைப்பாகம் குறைந்தும், சில முற்றுமின்றியும், ஒரு பாடலின் அடிகளுள் ஒன்றும் பலவும் வேறு பாடல்களின் அடிகளோடு கலந்தும், ஓரடியே ஒரு பாட்டுட் சிலவிடத்து வரப்பெற்றும், பொரு ளுண்மை காணுதவண்ணம் இன்னும் பலவகைப்பட மாறியும் கையெழுத்துப் பிரதிகளில் இருந்தன. இவற்றைப் பரிசோதித்து வருகையில், இந்நூலிலிருந்து வேறு நூல்களினுடைய பழைய உரைகளின் இடையிடையே உரையாசிரியர்களால் பூர்ண மாகவும் சிறிது சிறிதாகவும் எடுத்துக் காட்டப்பட்டிருந்த உதாரணங்களும், புறத்திரட்டென்னும் தொகைநூலும் சிற்சில பாடல்களிலுள்ள வழுக்களை நீக்கிச் செவ்வை செய்துகொண்டு பொருளுண்மை காணுதற்கும், சிற்சில பாடல்களிற் குறைந்த பாகங்களை நிரப்பிக்கொள்ளுதற்கும், பிறழ்ந்துகிடக்கும் சில பாடல்களை ஒழுங்குபடுத்தி வரையறை செய்துகொள்ளுதற்கும் பெருந்துணையாக இருந்தன.

இதன் முதற்பதிப்பிற் காணப்படாத சில திருத்தங்களும் செய்திகளும் இரண்டாம் பதிப்பில் அமைந்துள்ளன. இரண் டாம் பதிப்பைக்காட்டிலும் இப்பதிப்பில் பாடினோர் பெயர், அடிக்குறிப்புக்கள் என்பவற்றில் சில சிறு மாறுதல்களும் சில புதிய செய்திகளும் காணப்படும். உரையின் இயல்பென்ற பகுதி யொன்று புதியதாக எழுதி இப்பதிப்பிற் சேர்க்கப்பட்டுள்ளது.

முன் இரண்டு பதிப்பைப்பற்றிய விரிவான வரலாறுகள் அவ்வப்பதிப்புப் புத்தகங்களிலுள்ள முகவுரைகளால் அறியலாம்.

இரண்டாம் பதிப்பைப் போலவே இப்பதிப்பிலும், இதன் மூலங்களோடு சொல்லாலும் பொருளாலும் ஒத்திருக்கும் இந் நூற் பகுதிகளும், பிற நூற்பகுதிகளும், இந் நூற் செய்யுட்களின் முழுப்பாகமேனும் ஒவ்வொரு பகுதியேனும் மேற்கோளாக வந்துள்ள இடங்களும், பழைய உரையால் விளங்காதவற் றிற்குக் குறிப்புரையும், உரையில்லாத பாடல்களெல்லாம்

பதவுரை எழுதுவதற்குரிய திருத்தமுருமலிருந்தமையின் அவற்றின் அடிகளுட் சிலவற்றிற்குமட்டும் அறிந்த அளவு குறிப்புரையும், மூலத்திலும் உரையிலும் கண்ட பிரதிபேதங்களும் ஆராய்ச்சி செய்வோர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்குமென்றெண்ணி மூலமுள்ள பக்கங்களில் அங்கங்கே அடிக்குறிப்பாகச் சேர்க்கப் பெற்றுள்ளன. மூலத்திலும் உரையிலும் காணப்படும் அரும்பதங்கள், தொடர்மொழிகள், புலவர் பெயர்கள், தலைவர் பெயர்கள், அரிய செய்திகள், உவமைகள் முதலியன தொகுக்கப்பெற்று, 'அரும்பத முதலியவற்றின் அகராதி' என்னும் தலைப்பில் அமைக்கப் பெற்றுள்ளன.

கிடைத்த கையெழுத்துப் பிரதிகள்:—

மூலப்பிரதிகள்

பிரதிக்குரியவர்கள்	பிரதியை உதவி செய்தவர்கள்	பாடல் வரையறை
(1) திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள்	பிரதிக்குரியவர்களே	1-400
(2) திருத்தணிகைச் சரவணப் பெருமாளையரவர்கள்	யாழ்ப்பாணம், ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்	1-400
(3) யாழ்ப்பாணத்து நல்லூர், சதாசிவப்பிள்ளையவர்கள், திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள்	சென்னை, பா. வாசுதேவ முதலியாரவர்கள்	267-369
(4) யாழ்ப்பாணம், வி. கனகசபைப் பிள்ளையவர்கள்	பிரதிக்குரியவர்களே	1-369
(5) திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையவர்கள்	திருவனந்தபுரம், பி. சுந்தரம் பிள்ளையவர்கள்	3-399
(6) மந்தித் தோப்பிலுள்ள ஸ்ரீ சங்கரசுவாமி ஆதீனகர்த்தர் மஹந்து ஸ்ரீமத் சங்கர சுப்பிரமணிய தத்த சுவாமிகள்	பிரதிக்குரியவர்களே	1-400
(7) திருநெல்வேலி ஸ்ரீகவிராஜ ஈசுவரமூர்த்திப் பிள்ளையவர்கள்	பிரதிக்குரியவர்களே	1-400
(8) அரியூர் ஸ்ரீ எஸ். சாமிநாதையரவர்கள்		

உரைப்பிரதிகள்

பிரதிக்குரியவர்கள்	பிரதியை உதவி செய்தவர்கள்	பாடல் வரையறை
(1) திருவாவடுதுறையாதீனத்து, ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள்	பிரதிக்குரியவர்களே	1-260
(2) மேற்படி ஆதீனத்து ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள்	பிரதிக்குரியவர்களே	1-107
(3) ஆழ்வார் திருநகரி, தாயவலந்தீர்த்த கவிராயரவர்கள்	ஸ்ரீவைகுண்டம், ஈ. சுப்பராய முதலியாரவர்கள்	1-261
(4) மிதிலைப்பட்டி, அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள்	பிரதிக் குரியவர்களது பரம்பரையோராகிய அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள்	1-266
(5) ,,	,,	1-171
(6) திருநெல் வேலியைச் சார்ந்த வண்ணார்பேட்டை, திருப்பாற்கடனாதக் கவிராயரவர்கள்	யாழ்ப்பாணம், ராவ்பகதூர், சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்	1-260
(7) தென்காசி, சுப்பையாப் பிள்ளையவர்கள்	மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயரவர்கள்	1-48
(8) ,, [பதவுரைசிதிலம்]	,,	1-57
(9) ,, ,,	,,	1-48
(10) தூத்துக்குடி, குமாரசாமிப் பிள்ளையவர்கள்	ஆறுமுகமங்கலம், ஏ. சுந்தரமூர்த்தியா பிள்ளையவர்கள்	1-216
(11) ,,	,,	1-196
(12) மதுரைத் தமிழ்ச் சங்கம்		
(13) யாழ்ப்பாணத்து வண்ணைநகர் ஸ்ரீ சுவாமிநாத பண்டிதர்		

மூலத்திலும் உரையிலும் கண்ட அளவைப் பெயர்கள் முதலியவற்றுள் தெரிந்தவற்றைத் தொகுத்து வகைப்படுத்திய பகுதியொன்று 'விசேடச் செய்திகள்' என்ற பெயருடன் இதிற் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

முதன்முறை இந்நூலை அச்சிட்டு வருகையில் சிலாசாஸனம் முதலியவற்றில் அறிதற்குரிய சிலவற்றைத் தெரிந்துகொள்ளு

தற்பொருட்டு நான் வினவியபோது ராவ்பகதூர் வி. வெங்கைய ரவர்களும், ராவ்பகதூர் வி. கனகசபைப் பிள்ளையவர்களும் அனுப்பிய விடைகள் அரும்பத முதலியவற்றின் அகராதியில் உரிய இடங்களில் அடிக்குறிப்பாகச் சேர்க்கப்பெற்றுள்ளன.

பாடல்களிலும், அவற்றின் பின்னர்த் திணைதுறைகளையும் பாடப்பட்டோர் பாடினோர்களையும் தனித்தனியே தெரிவிக்கும் வாக்கியங்களிலும், உரைகளிலும் பிரதிகளிற் சொற்கள் சிதைந்தவிடத்தைப் புலப்படுத்தற்கு (. . . . .) இவ்வொற்றைப்புள்ளி நிரைகள் அமைக்கப்பட்டுள்ளன. பிரதிபேதங்களும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன.

உரை கிடையாதவிடத்து ஒரு வகையாலும் பொருள் காணாத விதம் சிதைவுற்றிருந்த மூலங்கள் ஏட்டுப்பிரதியிலிருந்த படியே புள்ளியிடுதல் முதலியனவின்றிப் பதிப்பிக்கப்பட்டன.

இதிற் கொடுத்துள்ள பிரதிபேதங்களுள்ளே சிலசில வற்றிற்குமட்டும் பொருள் புலப்படும்; பலவற்றிற்குப் புலப்படா. அவை பிழைகளாகவே இருத்தலும் கூடும்; ஆனாலும், வேறு பிரதிகள் கிடைப்பின் அவற்றோடு ஒப்புநோக்கி உண்மையான உருவங்களை அறிந்துகொள்ளுவதற்கு அனுகூலமாக இருக்குமென்றெண்ணியே பிரதிகளிற் காணப்பட்ட பல வகையான பேதங்களும் உள்ளபடியே அங்கங்கே காட்டப்பட்டிருக்கின்றன. ஒற்றுப்புள்ளி முதலியவற்றை நீக்கி அவற்றைப் படித்தல் நலம்.

சில சுவடிகளில் ஈகார ஐகார உயிரீற்றின்பின் யகரம் வரையப் பெற்றிருந்தமையின், அம்மொழிகள் அவ்வாறே உரிய இடங்களிற் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

இந்நூற் பகுதிகளுள் சில சிவஞானபாடியத்தில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன; அவை வருமாறு :

(1) "கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை": 6-ஆம் சூ. 2-ஆம் அதி.

(22) "தூங்கு கையா னோங்குநடைய": 5-ஆம் சூ. 1-ஆம் அதி.

(124) "நாளன்று போகி": 2-ஆம் சூ. 4-ஆம் அதி.

(395) "நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து": 8-ஆம் சூ. 1-ஆம் அதி.

இந்நூல் 41, 78, 151-ஆம் பாடல்களின் உரைகளில் மேற்கோளாக வந்துள்ள "ஏவ லிளையர் தாய்வயிறு கரிப்ப" என்பது வேறு பல உரைகளில் "புலைய னெறிந்த பூசற் றண்ணுமை" என்பதனோடு சேர்ந்து வழங்கக் காணப்பட்டும்,

இன்ன நூலில் இன்ன பாடலிலுள்ளதென்று புலப்படாம லிருந்தது. பிறகு, தமிழ்நெறிவிளக்கமென்னும் பழைய இலக்கண நூலொன்றில் வந்துள்ள மேற்கோளாகிய,

"நிரையிர் செல்லு மோவென நேர்ந்து
புலைய னெறிந்த பூசற் றண்ணுமை
ஏவ லிளையர் தாய்வயிறு கரிக்கும்
இன்னா வருஞ்சுர மென்ப
என்னோ தோழியவர் சென்ற வாறே"

என்னும் செய்யுளின் 3-ஆம் அடியின் பாடபேதமென்று தெரிய வந்தது.

இந்நூலிலுள்ள செய்யுட்களைப் பாடிய நல்லிசைப் புலவர் களுடைய வரலாறுகளும், அவர்களால் இந்நூற் செய்யுட்களிற் பாடப்பட்டவர் வரலாறுகளும் தனித்தனியே இதிற் காணப் படும். இவை இரண்டாம் பதிப்பிலுள்ளவாறே அமைக்கப் பட்டன; செய்திகளில் வேறுபாடு இல்லையேனும் சில செய்யுட் பகுதிகள் மாத்திரம் நீக்கப்பட்டன.

மேற்கூறிய இருவகையார் பெயர்களுட் சில பெயர் கையெழுத்துப் பிரதிகளிற் பலவகைப்பட்ட விசேடணத்தோடு கூடியும் கூடாமலும் வேறுவேறிடத்து வேறுவேறு விதமாக எழுதப்பட்டும் இருந்தன; அவை இன்ன பெயரின் பரியாயங் களெனத் தெரிந்தும் அவற்றை ஒரே விதமாகத் திருத்தி விடாமல் ஏனைத் தொகைகளிலும் மற்றை நூல்களிலும் உரை களிலும் வழங்கும் பழைய வழக்கத்தைத் தெரிவித்தற்கு அவை பிரதிகளில் இருந்தவாறே பதிப்பிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றற்கு உதாரணம் :—

(க) மாந்தரஞ் சேரலிரும்பொறை, (உ) சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை, (ங) யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையார், (ச) சேரமான் யானைக்கட் சேய்மாந்தரஞ் சேர லிரும் பொறை, (ரு) கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை.

மேற்கூறிய இருவகையோருடைய பெயர்களிற் சில பெயர் களுக்குக் காரணம் புலப்படுகின்றது; பலவற்றிற்குப் புலப்பட வில்லை.

தாம் பாடிய செய்யுட்களிலுள்ள தொடர்மொழிச் சிறப்பாற் சில புலவர்களுக்குப் பெயர் வந்திருத்தல் கூடுமென்று தோற்றி னும் இந்நூலிலாவது வேறு நூலிலாவது அப்பாடல்கள் அகப் படாமையின் துணிந்து காரணம் எழுதக்கூடவில்லை.

நாளடைவிற் செய்து வந்த ஆராய்ச்சியின் பயனாக இந் நூலிற் கண்ட நல்லிசைப் புலவர், அரசர்கள், உபகாரிகள் முதலியோர் வரலாறுகளுக்குரிய பல செய்திகள் இப்பொழுது விளங்குகின்றன. அவற்றையும் சேர்த்து விரிவாக எழுத எண்ணியிருந்தும் இப்போது போதிய அவகாசமின்மையால் அங்ஙனம் செய்யக்கூடவில்லை. மேற்கூறிய வரலாறுகளைத் தனித்தனியே விரிவாக எழுதி வெளியிடவேண்டுமென்பது எனது நோக்கமாதலின் அங்ஙனம் வெளியிடுங்கால் அச் செய்திகளைச் சேர்த்துக்கொள்ளக் கருதியிருக்கின்றேன். அம் முயற்சி நிறைவேறும்படி செய்வித்தருளும் வண்ணம் இறைவன் திருவருளைச் சிந்திந்து வந்திக்கின்றேன்.

சிலருடைய விருப்பத்தின்படி புறநானூற்றின் மூலம் மாத்திரம் அதற்குரிய அங்கங்களுடன் தனியே பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இப்பதிப்புக்கு உடனிருந்து உதவி செய்தவர்கள் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி வித்வான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், சிரஞ்சீவி வித்வான் கி. வா. ஜகந்நாதையரும், வேறு சில அன்பர்களும் ஆவர்.

'தியாகராச விலாசம்'
திருவேட்டீசுவரன் பேட்டை
20—12—1935

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

பாடினோர் வரலாறு

அடைநெடுங்கல்வியார் :—இது கல்வியாற் பெற்ற சிறப்புப்பெயர். எளிதில் அடைந்த மிக்க கல்வியையுடையாரென்பது இதன் பொருள். பாண்பாட்டு, மகட்பாற்காஞ்சியென்னுந் துறைகள் இவரால் அழகு பெறப் பாடப்பெற்றுள்ளன. இவராற் பாடப்பட்டோரும், இவர் காலத்தவரும் இன்னாரென்று விளங்கவில்லை; 283, 344 - 5.

அண்டர்மகன் குறுவழுதி :—தொகைநூல்களில் குறுவழுதியா ரென்று ஒரு பெயர் காணப்படுகின்றது. இவ்விருபெயரினரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. வழுதி என்ற பெயரால் இவர் பாண்டிய மரபினர் என்பது போதரும். அண்டர்மகன் குறுவழுதி இயற்றியன வாகப் புறச் செய்யுள் ஒன்றும், குறுந்தொகைச் செய்யுளொன்றும், குறுவழுதி யென்பார் அகநானூற்றில், 150, 228-ஆம் செய்யுட்கள் இயற்றியனவாகவும் உள்ளன. இவராற் பாடப்பட்டவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இவர் வாக்கில் வந்துள்ள, "கல்வியெ னென்னும் வல்லாண் சிறுஅன்" (புறநா. 346) என்பது பாராட்டற்பாலது.

அரிசில்கிழார் :-- கொள்ளிடத்தின் வடபால் அரியிலூர் அல்லது அரியில் என்று வழங்கும் ஒருரின் பெயர் அரிசில் என்பதன் மரூஉவாகக் கருதப்படுகின்றது; சகர யகரங்கள் தம்முள் மயங்குதல் இயல்பு. "அரிசிற்கரை" என்று மைஸூர் ஸம்ஸ்தானத்தில் ஓர் ஊர் உள்ளது. கிழார் - உரியவர். கிழாரென்பது வேளாளர்க்கேயுரிய சிறப்புப்பெயராக இருந்ததென்று தெரிதலின், இவர் வேளாண் மரபின ராக இருத்தல் கூடும். இஃது, "ஊரும் பேரும்" (தொல். மரபு. 74) என்னும் சூத்திரத்தின் உரையிற் காட்டிய பெயர்களாலும், திருத் தொண்டர்புராண வரலாற்றின் 2-ஆம் செய்யுளில் எடுத்துக்காட்டிய பெயர்களாலும் அறியலாகும். கடையெழுவள்ளல்களுள் ஒருவனாகிய பேகனைப் பாடி யிருத்தலின் இவர் அவன் காலத்தினராக நினைக்கப் படுகின்றார்; அவனால் துறக்கப்பட்ட கண்ணகி யென்பவளை அவனோடு சேர்த்தல் வேண்டி அவனைப் பாடினர்; இந்தக் கண்ணகி சிலப்பதி காரத்திற் கூறப்பட்ட கண்ணகியல்லள். அதியமான் தகடூர்பொருது வீழ்ந்த எழினியின் பிரிவாற்றாது வருந்தி இவர் புலம்பினர்; பதிற்றுப் பத்தில் எட்டாம் பத்தைப் பாடித் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையிடம் ஒன்பது நூறாயிரங் காணம் பரிசில்பெற்று அவன்பால் அமைச்சுத்தொழில் பூண்டு விளங்கியவர். தகடூர் யாத்திரை என்னும் நூலில் இவராற் பாடப்பட்ட பாடல்களும் சில உள்ளனவென்பது தொல்காப்பியப் புறத்திணையியலில் 8, 12-ஆம் சூத்திர முதலியவற் றிற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையால் விளங்குகின்றது. திருவள்ளுவ மாலையிலுள்ள, "பரந்த பொருளெல்லாம்" என்னும் 13-ஆம் செய்யுள் இவரியற்றியதாகக் கூறப்பட்டிருத்தலின், திருவள்ளுவர் காலத்தினராகிய கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராக

இவரைச் சொல்லுவதற்கு இடமுண்டு. இவர் பெயர் அரிசில்கிழா ரென்றும் வழங்கும். இந்நூலுள் இவராற் பாடப்பெற்ற குதிரைமறம், தானைமறம், பேய்க்காஞ்சி, மகட்பாற்காஞ்சி என்னுந் துறைகள் அறிந்து இன்புறற்பாலன. பதிற்றுப்பத்து, 8-ஆம் பத்தின் இறுதியில் அமைந்திருக்கும், "பாடிப்பெற்ற பரிசில்: தானும் கோயிலாளும் புறம் போந்து நின்று கோயிலிலுள்ள வெல்லாம் கொண்மினென்று காணம் ஒன்பது நூறுயிரத்தொடு அரசுகட்டிற் கொடுப்ப, அவர் யான் இரப்ப இதனை ஆள்க வென்று அமைச்சுப்பூண்டார்" என்னும் வாக்கியத்தால் இவருடைய குணவிசேடங்களும் மேம்பாடும் விளங்கும்.(கோயிலாள்-பட்டத்தேவி; காணம் - ஒருவகைப் பொற்காசு; அரசுகட்டில் - சிங்காதனம்; அமைச்சு - மந்திரி வேலை.) மேற்கூறிய சேரவரசனும் உக்கிரப்பெருவழுதியும் பேகனென்னும் வள்ளலும் அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினியும் இவர் காலத்தவர். இவருடனிருந்த புலவர் : கபிலர், பரணர், பெருங்குன்றூர்கிழார், பொன்முடியார் முதலியோர். எட்டுத்தொகையில் இவர் இயற்றியுள்ள செய்யுட்கள் 18 (பதிற்றுப் பத்து - 10, புறநானூறு - 7, குறுந்தொகை - 1.) 146, 230, 281, 285, 300, 304, 342.

அள்ளூர் நன்முல்லையார் :—அள்ளூரென்பது பாண்டிநாட்டில் சிவ கங்கைக் கண்ணதோர் ஊர்; இது, "கொற்றச் செழியன், பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவென், ஒண்டொடி" (அகநா. 46) என்னும் இவர் பாடலால் விளங்குகின்றது; "கிள்ளை, வளைவாய்க் கொண்ட வேப்ப வொண்பழம், புதுநா ணுழைப்பா னுதிமாண் வள்ளுகிர்ப், பொலங்கல வொருகா சேய்க்கும்" என்னும் உவமையும், "அரும்பனி யச்சிரந் தீர்க்கும், மருந்துபிறி தில்லையவர் மணந்த மார்பே", "அவர்நமக், கன்னையு மத்தனு மல்லரோ" (குறுந். 67, 68, 93) என்பனவும் இவருடைய நுண்மாண்புலமை முதலியவற்றைத் தெரிவியாநிற்கும்; இவர் பெயர் அள்ளூர் நன்முல்லையெனவும் வழங்கும். எட்டுத் தொகையில் இவரியற்றிய வேறு செய்யுட்கள்: அகநா. 1, புறநா. 1, குறுந்தொகை, 9, 32, 67, 68, 93, 96, 140, 157, 202, 237.

ஆடுதுறை மாசாத்தனார் :—காவிரி நதியின் தென்பாலொன்றும் வடபாலொன்றும் வடவெள்ளாற்றங் கரையிலொன்றுமாக மூன்று ஊர்கள் ஆடுதுறையென்னும் பெயரினவாக உள்ளன. இவற்றுள் முன்னுள்ள இரண்டும் தேவாரம் பெற்றனவும் பின்னது புராண வரலாறுள்ளதுமான சிவஸ்தலங்கள்; இவை முறையே தென்குரங்காடு துறை, வடகுரங்காடுதுறை, ஆடுதுறையென வழங்கும்; பின்னுள்ளது ஏழு துறைகளுள் ஒன்று. தெய்வப்பெயரை மக்கட்கிட்டு வழங்குதல் மரபாதலின் ஐயனாருடைய திருநாமமாகிய மாசாத்தனாரென்பது இவருக்குப் பெயராக அமைந்தது போலும். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியவராதலால், இவர் சோழநாட்டின ரென்றே கொள்வது தக்கது. அவன் இறந்தபொழுது பிரிவாற்றுமல்

வருந்திப் பாடியிருத்தலால் அவன் இறந்தபின்னும் இவர் இருந்தாரென்பதும், அவனைப் பாடிய ஆலத்தூர்கிழார் முதலிய புலவர் ஒன்பதின்மரும் இவர் காலத்தினரென்பதும் தெரிகின்றன; "பகைவர்களையும் அவர்கள் சேனைகளையும் கொன்று உன் பசியை எளிதில் ஒழிக்கும் இந்த வளவனைக் கைக்கொண்டாயே! இனி உன் பசியைத் தீர்க்கும் ஆற்றலுடையார் யாவர்? உனக்கே நீ தீங்கை விளைவித்துக் கொண்டமையின் நீ மிக்க பேதைமையுடையாய்!" (புறநா. 227) என்று கூற்றத்தை நோக்கி இவர் கூறின செய்யுள் பாராட்டற்பாலது.

ஆலங்குடி வங்கனார் :—ஆலங்குடி யென்னும் பெயருள்ள ஊர்கள் பல இருத்தலின் இவர் ஊர் இன்னதென்று நிச்சயிக்கக்கூடவில்லை. தொகைநூல்களில் ஏழு பாடல்களும், திருவள்ளுவமாலையில் ஒரு செய்யுளும் இவர் செய்தனவாக இப்பொழுது காணப்படுகின்றன. காமக் கிழத்தியர் தலைவனை ஆடிப்பாவை போன்றான் என்று இகழ்தலும் (குறுந். 8), உயர்குடிப் பிறந்த கற்புடைமகளிர் தம் தலைவர் கொடுமை புரியினும் அதனை மறந்து அன்பு பாராட்டுதலும் (குறுந். 45) கூறும் முகத்தால் இவர் இருவேறு மகளிருக்கும் உள்ள வேற்றுமையை நன்கு புலப்படுத்துகின்றார். இவர் பாடிய நற். 330-ஆம் பாடலும் இவ்வேற்றுமையையே காட்டும்.

ஆலத்தூர்கிழார் :—ஆலத்தூரிற் பிறந்தவர் இவர். ஆலத்தூர் என்ற பெயருள்ள ஊர்கள் தமிழ் நாட்டிற் பல உள்ளன. இதனை இன்ன ஆலத்தூரென்று சொல்லமுடியவில்லை. நன்றியறிவும், அரசர்களை இடித்துக்கூறும் மனவலியும், குறிப்பறிந்தளிக்கும் உபகாரிகளின் இயல்பை வெளிப்படுத்தும் அன்புடைமையும், போர்செய்யும் முறைமையை விளக்கும் இயல்பும், பொருள்களின் இயற்கைநலனைப் புலப்படுத்தும் நுண்ணறிவும் உடையவர் இவர். "நெடுங்காற் கணந்துளாளறி வுறீஇ, யாறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்" (குறுந். 350) எனக் கணந்துட் பறவையின் தன்மையை இவர் தெரிவிக்கின்றார். இவர் செய்தனவாகத் தொகைநூல்களில் 7 செய்யுட்கள் (புறநா. 5, குறுந். 2) காணப்படுகின்றன. இவராற் பாடப்பட்டோர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனும், சோழன் நலங்கிள்ளியுமாவர்.

ஆலியார் :—ஆலி என்பது சோழநாட்டின் உள்நாடுகளுள் ஒன்றாகிய ஆலிநாடென்பதன் தலைநகர். இது திருமங்கையாழ்வார் அவதரித்த தலமென்பர். இவ்வூரினராதலால் இவர் இப்பெயர் பெற்றார் போலும்; இவ்வூர்ப்பெயர் திருவாலியென வழங்காநிற்கும். தன்னுடைய தலைவன் தனக்குச் சிறந்த உணவை யளிக்கின்றானேயன்றி, போர் செய்தற்குத் தன்னை முந்திச்செல்லென்று ஏவுகின்றானல்லனென்று ஒரு வீரன் சொல்லியதாக இவர் இயற்றிய பாடலின் (புறநா. 298) பொருள் வீரச் சுவையைப் புலப்படுத்துகிறது. இதனால் இவர் வீரர் குடியிற் பிறந்தவராகவும் கருதப்படுகிறார்; இப்பெயர் சில பிரதிகளில் ஆவியாரென்றும், ஆனியாரென்றும் காணப்படுகிறது.

ஆவூர்கிழார் :—ஆவூரென்னும் பெயருள்ள ஊர்கள் பல இருத்தலின் இந்த ஆவூர் இன்ன இடத்திலுள்ளதென்று தெரிந்து கொள்ளக் கூடவில்லை; ஆனாலும், மருத நிலத்தின் வளம் இவர் பாடலிற் கூறப்பெற்றிருத்தலின், இது சோழநாட்டிற் காவிரியின் தென் கரையிலுள்ள ஆவூராக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது. கள்ளியின் முள்ளிற்குக் கானையின் பதனழிந்த கொம்புகளை இவர் உவமை கூறியிருக்கின்றார். இப்பெயர் ஆவூரழகியாரென்றும் சில பிரதிகளிற் காணப்படுகின்றது.

ஆவூர் மூலங்கிழார் :—இப்பெயர் இவருக்கு நாண்மீனால் வந்தது போலும்; மூலம் - ஒரு நக்ஷத்திரம். இவருடைய பாடல்களுள் அடியில் எடுத்துக்காட்டிய கருத்தமைந்த பகுதிகள் சிறந்தவை :—

(க) 'செங்கோலினனாகிய ஓரரசனது நாடு சுவர்க்கத்தினும் சிறந்தது'; (உ) 'வேந்தே! நீ இன்சொல்லையும் பிறர் வந்து காணுதற்கு எளியதாகிய சமயத்தையும் உடையையாவை'; (ங) 'பல நாள் தேகம் உலரக் காத்திருந்து பெருஞ் செல்வரிடத்துப் பெற்ற யானை முதலிய பெரும்பரிசில்களைக் காட்டிலும் ஒருவன் அன்புடனளிக்கும் உணவைக் காலையிற் பனம் பட்டையில் உண்ணல் மிகச் சிறந்தது'; (ச) 'அரச! கையிலுள்ளதைக் கொடுத்தலும் இல்லாததை இல்லையென்றலும் உலகியற்கை; அங்ஙனமின்றிப் பரிசிலரை அலைக் கழித்தல் உனக்கு நன்றன்று; நான் செல்வேன்'.

இவற்றால் இவருடைய குணவிசேடங்கள் புலனாகின்றன. இன்னும் பரம்பரைத் தொழிலை வழுவின்றிச் செய்துபோதரும் ஓரந்தணனுடைய இயல்பையும், தன் வீரர்க்கு முன்னே போரில் முற்படும் ஓரரசனது இயற்கையையும், யானையின்மேலன்றி ஏனையிடங்களில் தன் வேலினை எறியாத ஒரு வீரனது இயல்பையும் இவர் பாராட்டியிருக்கின்றார். ஒருபகாரி இறந்த பின்பு அவன் வீட்டை நோக்கி, 'கணவனை யிழந்து மழித்த தலையையுடைய கழிகலமகடூஉவைப் போல்கின்றாய் நீ' என்று இரங்கிக் கூறியது யாவருடைய உள்ளத்தையும் கனியச்செய்யும். இவர் செய்தனவாகத் தொகை நூல்களில் 12-செய்யுட்கள் காணப் படுகின்றன: அகநா. 4; புறநா. 8. இவரால் பாடப்பெற்றோர் : சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன், பாண்டியன் கீரஞ்சாத்தன், மல்லிகிழான் காரியாதி முதலியோர். இவர் காலத்திலிருந்த புலவர் : சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் முதலிய தலைவர் நால்வரைப் பாடிய பதின்மூவராவர்.

இடைக்காடனார் :—இடைக்காடென்னும் ஊரிலுள்ளாராதலின், இவர் இப்பெயர் பெற்றார். இடைக்காடு என்பது பட்டுக்கோட்டைத்

தாலூகாவில் உள்ளது. இவர் சாதியில் இடையர். இவர் கபிலருடைய தோழர்; மற்றப் புலவர்களிடத்தும் அன்புடையவர்; கவிசெய்யும் ஆற்றலில் மிக்கோர்; இவை, "முன்னமோர் நாளுன் மாட மதுரையின் முழுது ணர்ந்தோன், பின்னமில் கபிலன் றோழன் பெயரிடைக் காட னென்போன், இன்னியல் வாணர்க் கெல்லா மிதவியோன் கவியான் மிக்கோன்", "எனையந் தாதி சொன்னவன் கபிலன் றோழன்" (திருவால. 20:1,11) என்பவற்றால் அறியலாகும். "கடுகைத் துளைத் தேழ் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்" என்று திருக்குறளி னியல்பைப் புலப்படுத்திப் பாடியிருத்தலால், இவர் பெரும்பொருளைச் சிறுகவியில் அடக்கும் இயல்பினரென்பதும், சுருங்கச் சொல்லலென் னும் அழகில் மிக்க விருப்பமுடையவரென்பதும் புலனாகின்றன. 'அரச! மலையினின்றிழிந்து ஆறுகள் கடலை நோக்குவது போலப் புலவர்கள் நின்னையே நோக்கினர்; நீ பகைவேந்தருடைய மண்களை நோக்கினை' (42) என இந்நூலுள்ளும் வேறு வகையாக ஏனைத் தொகைநூல்களி லும் இவர் கூறியிருக்கும் உவமைகள் மதிக்கற்பாலன. இவருடைய செய்யுட்களை உற்றுநோக்குமிடத்துப் பெரும்பான்மையாக முல்லைத் திணை, மழை, இடைச்சாதி என்பவற்றின் இயல்புகளும் சிறுபான்மை யாக மருதத்திணை வளமும் அமைந்திருப்பது விளங்கும். சில பாடல்கள் இடைக்காடர் ஊசிமுறியென்று பழைய உரைகளிற் காணப் படுகின்றன; ஊசிமுறியெனப் பெயரிய நூலொன்று இவராற் செய்யப் பட்டிருந்ததென்று தெரிகின்றது; ஊசி-எழுத்தாணி. இவர், ஒரு பாண்டியன் மீது சில பாடல்களைப் பாடிக்கொண்டு சென்று அவனைக் கண்டு தெரிவித்தபொழுது அவன் அவற்றை மதியாதிருந்தமை கண்டு மனம் நொந்து உடனே ஆலவாயடிகளையடைந்து குறையிரந்து நிகழ்ந்ததனை விண்ணப்பித்து வடபாற்சென்று ஓரிடத்திருப்ப, அவரும் சங்கப் புலவர்களும் இவர்பின் சென்று இவருடன் இருந்தாரென்றும், இந் நிகழ்ச்சியை யறிந்த பாண்டியன் மனங்கலங்கி இவரையடைந்து குறையிரந்து இவர் மனவருத்தத்தைத் தீர்த்தானென்றும் இருவகைத் திருவிளையாடல்களிலும் ஒரு சரித்திரம் வழங்குகின்றது; "திருந்திய செல்வ மதுரைச் செழியன்முன் சென்றடியேன், அருந்தமிழ் பாடினன் றள்ளின னேயென் றவன்செல்லவே, கரும்பன சொல்லி யுடன்வட பாலிடைக் காடனுக்காப், பரிந்துபின் போனசொக் கேபர தேசி பயகரனே" (திருவிளையாடற்பயகரமாலை, 20), "கூறுமிடைக் காடனி யற் கவிதை பாடிக் கொடுகாண மன்னிகழ்ந்து தள்ள நொந்தே, வீறுயரா லயத்தணுகிப் பொருணீ சொல்லுன் மெல்லியென மறைபுகலு மிகழ்ந்த துன்னை, மாறகலுன் றேவியைமற் றிலையென் றேத்தி வரைந் தேக யானுமே குவலென் றேகி, ஏறியசங் கத்தொடிருந் தழைப்பப் போந்தா னிடத்தைவட திருவால வாயென் றுரர்கள்" (கடம்பவன புராணம், இலீலாசங்கிரக அத்தியாயம், 20) என்பவற்றாலும் இவ்வர லாறு அறியப்படும். இவராற் பாடப்பட்டோன் சோழன் குள

முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். எட்டுத் தொகையில் இவர் இயற்றிய செய்யுட்கள்-11 (புறநா. 1, அகநா. 6, நற். 3, குறுந். 1.)

இடைக்குன்றூர்கிழார்:—இவருக்கு இப்பெயர் ஊரான் வந்தது. நெடுஞ்செழியனென்பான் தனது மிக்க இளமைப்பருவத்தில், சோணாட்டுள்ள தலையாலங்கானமென்னும் ஊரில் முடிமன்னர்களாகிய சேர சோழர் இருவரையும் ஐம்பெருவேளிரையும் பொருது வென்ற பெருவிறலும் அவனுடைய அடக்கமும் பிற விசேடகுணங்களும் இந் நூலுள் இவர் வாக்கில் நன்கு அறியலாகும். இவரால் பாடப்பட்டோன் அப்பாண்டியன். இவர்காலத்துப் புலவர் அவனைப் பாடிய கல்லாட னூர் முதலியோராவர். இவர் பாடிய பாடல்கள்: 76-79.

இரும்பிடர்த்தலையார்:—இவர் சோழன்கரிகாலனுடைய அம்மான்; அவனுக்குப் பெருந்துணையாயிருந்தவர்; "சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும், பிடர்த்தலைப் பேரானைப் பெற்றே-கடைக்கால், செயிரறு செங்கோல் செலீஇயினான்" என்னும் பழமொழி வெண்பா வாலும் அதன் பழைய உரையாலும் உணர்க. யானைப்பிடரை இரும் பிடர்த்தலை யென்று சிறப்பித்தமைபற்றி இவர் இப்பெயர் பெற்றார் போலும் (புறநா. 3:11). இவருடைய இயற்பெயர் விளங்கவில்லை. தலைவன், இரவலருடைய குறிப்பறிந்து கொடுக்கும் வண்மைநலம் முதலியன இவரால் பாராட்டப்பெற்றுள்ளன; இவரால் பாடப்பட் டோன் பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதி.

உலோச்சனார்:—இவர் நெய்தற்றிணையையே மிகுதியாகச் சிறப் பித்துள்ளார். இதனாலும் தலைவியின் கூற்றாக, 'கழிசூழ் படப்பைக் காண்ட வாயில்...எம் அழுங்கலூரே' (நற். 38) என்று கூறுவதனாலும் இவர் நெய்தல் நிலத்தைச் சார்ந்தவர் என்று ஊகிக்கலாம். உலோச் சென்பது சைனர்கள் செய்துகொள்ளும் ஒரு கிரியை. அதனால் இவர் சைனரென்று கொள்ளுதற்கு இடமுண்டு. இவர்வாக்கில் எருமைமற மென்னுந் துறை விளங்கக் கூறப்பெற்றுள்ளது; இவரால் பாடப் பட்டோன் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி. இவர் பாடிய பாடல்கள்: 35 (அகநா. 8, குறுந். 4, நற். 20, புறநா. 3)

உறையூர் இளம்பொன் வாணிகனார் :—இவர் வணிகர்; ஒரு வீரனுடைய கொடைச்சிறப்பும் போரில் இறந்த பின்பு அவனுக்காக நட்ட வீரக்கல்லின் கோலமும் அவனை இழந்தமையாற் பாணர்கள் படுந்துன்பமும் இவரால் கூறப்பட்டிருக்கின்றன.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் :—இவர் அந்தணர்; சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையால் ஆதரிக்கப் பெற்றவர்; இவை முறையே "ஊரும் பேரும்" (தொல். மரபு. 74, பேர்.) என்பதன் விசேடவுரையாலும், 'சேரமான் அந்துவஞ்சேர லிரும்பொறையோடு வேண்மாடத்திலிருந்து' (புறநா. 13) என்பதனாலும் பெறப்படுகின்றன; போர்க்களத்திற் பகைவரது சேனையைப் பிளந்துகொண்டு வாள் வீரர்க்கிடையே தன்தலைமை தோன்றச்செல்லும் சோழன்களிற்றிற்குக்

கடலைக் கிழித்துச்செல்லும் நாவாயையும்,விண்மீன்களுக்கு இடையே விளங்கும் திங்களையும் இவர் உவமை கூறியிருக்கின்றார் (புறநா. 13); ஆய் என்னும் வள்ளலுடைய கொடைச்சிறப்பும் வீரச்சிறப்பு முதலியனவும் இவராற் பலபடியாகப் புனைந்து பாராட்டப்பெற்றுள்ளன; இது பற்றியே, ''திருந்துமொழி மோசி பாடிய ஆயும்'' (158) எனப் பெருஞ் சித்திரனார் என்னும் புலவர் இவரைப் பாராட்டியுள்ளார்; இதிலுள்ள 'திருந்து மொழி' என்னும் அடைமொழி இவருடைய சிறந்த புலமையை வெளியாக்குகின்றது; இவராற் பாடப்பெற்றோர் சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியும், ஆயுமாவார்; ஆய் இறந்த பின்பும் இருந்தவர் இவர். இவர்பெயர் மோசி; ஏணிச்சேரி முடமோசியார் எனவும் வழங்கும். இவர் இயற்றிய புறநானூற்றுச் செய்யுட்கள்-14.

உறையூர் மருத்துவன் தாமோதரனார் :—இவர் மருத்துவன்றாமோதரனார் எனவும் வழங்கப்பெறுவர்; மருத்துவர்-மருத்துவ நூலில் வல்லவர்; வைத்தியர். இது, ''சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய், மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்-காந்தி, மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற், றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு'' (திருவள். 11) என்னும் வெண்பாவால் விளங்குகின்றது; தாமோதரனாரென்பது தெய்வத்தால் வந்த பெயர்; இதனால், இவர் குடும்பத்தினர் திருமாலின் அடியவராகக் கருதப்படுகின்றனர்; இவர் செய்தனவாக 6-பாடல்கள் கிடைக்கின்றன: அகநா. 2; திருவள். 1; புறநா. 3. இவராற் பாடப்பட்டோர் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், பிட்டங் கொற்றனென்பார். இவர் வாக்கிற் பாலை நிலத்தினியல்பும் ஏற்ற உவமையணிகளும் காணப்படுகின்றன; ''முந்நீர் நாப்பட் டிமிற்சுடர் போலச், செம்மீ னிமைக்கு மாக விசும்பு'' (60), ''கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும், ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும், உரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்'' (60), ''உலைக்கல் லன்னவல் லாளன்'' (170) என்பவை இந்நூலுள் இவர் வாக்கிற் சிறந்த பகுதிகள்.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார் :—'முதுகண்' என்பது பிராயத்தாலும் அறிவாலும் முதிர்ந்து, அரசர்க்கும் பட்டத்தேவிகளுக்கும் உசாத்துணையாக இருந்து நீதிகளைச் செவியறிவுறுத்தும் ஆண்பாலார் பெண்பாலார்க்குரிய பெயராகச் சிலாசாசனம் முதலியவற்றிற் காணப்படுகின்றது; ''முற்றிழை மகளிர்க்கு முதுக ணாமென'' (பெருங். 1. 36:198) என வருதலும் காண்க; இவர், உறையூர் அரசர்பால் அத்தொழிலை உடையவராக இருந்தார்போலும்; இவராற் பாடப்பட்டோன் சோழன் நலங்கிள்ளி; இவர்காலத்துப் புலவர் அவனைப் பாடிய ஆலத்தூர்கிழாரும் கோவூர்கிழாரும்; இவர் சிறந்த குடியிற் பிறந்தவருக்குத் தாமரைப்பூக்களையும், வளர்தல் முதலியவற்றையடைந்த பொருள் குறைதல் முதலியவற்றையடையுமென்பதற்குத் திங்களையும் உவமை கூறியிருத்தலும், அருளுங்கொடையும் வெற்றிக்

கும் அவையின்மை தோல்விக்கும் காரணமென்பது புலப்பட, "அருளா வல்லை யாகுமதி யருளிலர், கொடாமை வல்ல ராகுக, கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே" (27) என விளக்கியிருத்தலும் நன்கு மதிக்கற்பாலன. இவர் செய்தனவாக 6-செய்யுட்கள் உள்ளன: குறுந். 1; புறநா. 5.

உறையூர் முதுகூத்தனுர்:—இப்பெயர் முதுகூற்றனுரெனவும் சில பிரதிகளிற் காணப்படுகின்றது; "வென்றெறி முரசின் விறற்போர்ச் சோழர், இன்கடுங் கள்ளி னுறந்தை" (அகநா. 137) என இவரே கூறியிருத்தலால் தம்முடைய ஊரில் இவர் அன்புடையரென்பதும், அவ்வூர் அரசராகிய சோழரால் நன்கு மதிக்கப்பெற்றவரென்பதும் வெளியாகின்றன; "உள்ளது, தவச்சிறி தாயினு மிகப்பல ரென்னுள், நீணெடும் பந்த ரூண்முறை யூட்டும், இற்பொலி மகடூஉ" (331) எனக் கற்புடை மங்கையினியல்பையும், "தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள் வெண், பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்-நாவிற், குயலில்லை சொற் சுவை யோர்வில்லை மற்றுஞ், செயலில்லை யென்னுந் திரு" (திருவள். 39) எனத் திருக்குறளின் சிறப்பையும் பாராட்டியிருத்தல் மதிக்கற்பாலது; இவர் வாக்கிற் பெரும்பாலுங் காணப்படுவது பாலை நிலத்தினியல்பு; இவர் செய்தனவாக 6 பாடல்கள் தெரிகின்றன: அகநா. 2; குறுந். 2; திருவள். 1; புறநா. 1.

ஊன்பொதி பசுங்குடையார்:—இவராற் பாடப்பட்டோர் சேரமான் பாமுளூரெறிந்த இளஞ்சேட்சென்னி, சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி, சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி யென்பார்; இவர் அரசர்களுக்குத் தருமங்களைக் கற்பிக்கும் முறைமிக அழகுவாய்ந்தது; இராவணன் உயிரோடிருக்கையில் தம்பால் அடைக் கலம்புகுந்த விபீடணனுக்கு இராமர் இலங்கா ராச்சியமளித்ததை உட்கொண்டு, "ஒன்னுர், ஆரெயி லவர்கட் டாகவு நுமதெனப், பாண் கட னிறுக்கும் வள்ளியோய்" (203) எனக் கூறியிருத்தலையும், மிக்க வறுமையுற்ற கிணைப்பொருநனொருவன் தன் உறவினரோடு சென்ற காலத்தில் ஒருபகாரி அவர்களுடைய நிலைமைக்கு எத்தனையோ மடங்கு மேற்பட்டுள்ளனவாகிய அணிகலங்களைக் கொணர்வித்து அவர்களிடையே சொரிவித்தபொழுது, அவர்கள் அணியும் முறை யறியாமல் தடுமாற்றமுற்று விரைந்து சென்று அவற்றை அணிந்து கொண்டதற்கு இராவணன் வௌவிச்சென்ற சீதை தான் சென்ற வழியை இராமன் அறிந்துகொள்ளுதற்கு அடையாளமாகத் துகிலில் முடிந்து வீழ்த்திய அணிகலங்களைக் கண்ட வானரங்கள் தனித் தனியே விரைந்தெடுத்து அவற்றை அணிந்துகொள்ளுந் தடுமாற் றத்தை உவமித்திருப்பதையும் (378) நோக்குகையில், இராமசரித்திரம் இவருடைய ஞாபகத்திலிருந்து வந்ததென்பதும், வறுமையின் இயல்பை விளங்கக் கூறுதலில் இவர் வல்லுநரென்பதும் விளங்கு கின்றன. இவரியற்றிய செய்யுட்கள் இந்நூலில் நான்கு.

எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் :—எருக்காட்டூரென்பது திருவாரூர்க்குத் தென்மேற்கில் மூன்றுநாழிகைவழித் தூரத்தில் உள்ளதென்பர்; கண்ணனென்பது க்ருஷ்ணனென்னும் தெய்வப்பெயரின் சிதைவுபோலும்; 'கண்ணனென்பது கரியோனென்னும் பொருளதோர் பாகதச் சிதைவு' (திருக்கோவையார் 53, பேர்.) என்பது ஈண்டறியற்பாலது; "செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை, அறுதொழி லந்தணரறம்புரிந் தெடுத்த, தீயொடு விளங்கு நாடன்" (397) என அந்தணரின் வேள்வித்தீயைப் பாராட்டிக் கூறியிருத்தலால் இவர் அந்தணராகக் கருதப்படுகிறார்; அக்காலத்திருந்த அரசரால் இவருக்கு இவ்வூர் பிரமதாயமாகக் கிடைத்ததென்று தெரிகிறது; தாயம் - உரிமை. இவரால் பாடப்பட்டோன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்; இவர்காலத்துப் புலவர்கள் அவனைப் பாடிய ஆலத்தூர்கிழார் முதலியோர்; தாயங்கண்ணனாரென்று ஒரு புலவர் பெயர் தொகைநூல்களிற் காணப்படுகின்றது; அவரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. இந்நூலிலன்றி, இவர் செய்தனவாக அகநானூற்றில் 7 செய்யுட்கள் உண்டு.

எருமைவெளியனார் :—எருமைவெளியென்பது ஓரூர். இவரால் குதிரை மறமென்னுந் துறை மிகச் செவ்விதாகப் பாடப்பெற்றுள்ளது. இவரியற்றிய பாடல்கள்-3 : அகநா. 1; புறநா. 2.

ஐயாதிச் சிறுவெண்டேரையார் :—யாக்கை நிலையாமையை அறிவித்தல் வாயிலாக விரைந்து அறஞ்செய்க என்று இவர் அறிவுறுத்துகின்றார்; சிறுவெண்டேரையாரென்று இந்நூலுள் ஒருவர் பெயர் காணப்படுகின்றது. அவரும் இவரும் ஒருவரோ வேறோ விளங்கவில்லை.

ஐயூர் முடவனார் :—இவருக்கு முடவனாரென்னும் பெயர் சினையால் வந்தது போலும்; இப்பெயர் ஐயூர்கிழாரெனவும், உறையூர் முடவனாரெனவும் சில பிரதிகளில் உள்ளது. ஐயூர் என்பது சோழநாட்டகத்தோர் ஊர். இவர் நடந்துசெல்லுதற்கு இயலாத முடவராதலின், தாமான் தோன்றிக்கோனை அடைந்து வண்டியிழுத்தற்குப் பகடு வேண்டுமென்று பாடி, அவன் பகடுகளும் பல பசுநிரைகளும் ஊர்தியுங் கொடுக்கப்பெற்று வாழ்ந்தவர்; இறந்தோருடம்பைத் தாழியாற் கவித்தலுண்டென்பதும் வீரச்சிறப்பும் கொடைச்சிறப்பும் இவர் பாடல்களிற் காணப்படுகின்றன. இவரால் பாடப்பட்டோர் ஆதனெழினி, தாமான் தோன்றிக்கோன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதியென்பார். "அறவ ரறவன் மறவர் மறவன், மள்ளர் மள்ளன் றொல்லோர் மருகன், இசையிற் கொண்டான்" என்பது இவர் தாமான் தோன்றிக்கோனைப் பாராட்டிய பகுதி. இவர் செய்தனவாக 10 செய்யுட்கள் தொகைநூல்களிற் காணப்படுகின்றன : அகநா. 1; குறுந். 3; நற். 2; புறநா. 4.

ஐயூர் மூலங்கிழார் :—இவருக்கு இப்பெயர் மூலமென்னும் நாண்மீனால் வந்ததுபோலும்; இவர்பாடலில் வேங்கைமார்பனென்னும்

தலைவனுற் பாதுகாக்கப்பட்டுள்ள கானப்பேரென்னும் ஊரில் அமைந்திருந்த அரணின் அமைதி கூறப்பெற்றுள்ளது; இவராற் பாடப்பட்டோன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி. இவர் காலத்துப் புலவர் அவ்வழுதியைப் பாடியவர்களாவர்.

ஒக்கூர் மாசாத்தனுர் :—இவர் செய்யுளிற் கணவனை யிழந்த மகளிர் புல்லரிசிக் கூழை அகாலத்திலுண்டு கைம்மைநோன்பு நோற்றிருத்தல் கூறப்பெற்றுள்ளது. இப்பெயர் எக்கூர் மாசாத்தனுரென்றும் சில பிரதிகளிற் காணப்படுகின்றது. இவர் இயற்றியதாக அகநானூற்றில் ஒரு செய்யுள் (14) உள்ளது.

ஒக்கூர் மாசாத்தியார் :—இவர் பெண்பாலார். இவர் செய்யுளில் ஒரு மறக்குடிமகளின் வீரச்செயல் விசேடித்துப் பாராட்டப்பெற்றுள்ளது. இவர் பாடல்கள் முல்லைத் திணையைப் பற்றி வருவன. ஒக்கூர் என்பது பாண்டி நாட்டில் திருக்கோஷ்டியூர்ப் புறத்தேயுள்ள ஓர் ஊர். இவர் செய்தனவாகக் கிடைத்த பாடல்கள்-9: அகநா, 3; குறுந். 5; புறநா. 1.

ஒருசிறைப் பெரியனுர் :—இவர் நாஞ்சில்மலையின் வளத்தையும் அதன் தலைவனது இயல்பையும் பாராட்டியிருக்கின்றுர். இவர் பெயர் 'ஒருசிறைப் பெயரினுர்', 'ஒருசிறைப் பெயரியனுர்' என்று சில பிரதிகளிற் காணப்படுகின்றது. இவராற் பாடப்பட்டோன் நாஞ்சில் வள்ளுவனென்பான். இவர் இயற்றிய பாடல்கள்-3: குறுந். 1; நற். 1; புறநா. 1.

ஒரூஉத்தனுர் :—இவர் செய்யுளில், ஒரு வீரன் பகைவர் சேனையைத் தனியே நின்று தடுக்கும் மறச்செயலாகிய எருமைமறம் விளக்கப்பெற்றுள்ளது. இவர் இயற்றிய பாடல், புறநா. 275.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் :—புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்திலுள்ள ஒலியமங்கலமென்னும் ஊரிலுள்ள சாஸனத்தால் ஒல்லையூரென்பது அவ்வூரென்று தெரிகின்றது. தென்னுட்டிலுள்ள பூதப்பாண்டியென்னு மோரூர் பண்டைக்காலத்தில் இவன் பெயரால் அமைக்கப்பெற்றது போலும். போர்க்களத்தில் இவன் கூறிய வஞ்சினவகைகள் அறியற்பாலன; போரில் வல்லவன்; செய்யுள் செய்தலிலும் திறமையுடையோன்; இதனை இவன் பாடிய பாடல் புலப்படுத்தும்; இவன் பெயர் பூதபாண்டியனெனவும் வழங்கும்; இவன் நட்பினர்: மையலென்னும் ஊரிலுள்ள மாவன், எயிலென்னும் ஊரிலுள்ளாணுகிய ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதனழிசி, இயக்கன் என்னும் இவர்கள். இவன் மனைவி இவன் இறந்தவுடனே தீயிற் பாய்ந்து இறந்தாள். இவன் இயற்றிய பாடல்கள்-4: அகநா. 1; புறநா. 3.

ஓரம்போகியார் :—இப்பெயர் ஓரம்போதியாரென்றும், ஓரேர் போகியாரென்றும் சில பிரதிகளில் உள்ளது. இவர் ஐங்குறுநூற்றில் மருதத்தைப் பொருளாகவுடைய முதலாம் நூறு இயற்றிய ஆசிரியர்; மருதத்திணையில் மிகப் பயின்றவர்; தமிழ்நாட்டரசர் மூவராலும் பிற உபகாரிகளாலும் நன்கு மதிக்கப்பெற்றவர்; இவைகள் இவரியற்றிய

செய்யுட்களால் புலனாகின்றன. எட்டுத்தொகையில் ஐங்குறுநூற்றின் முதல் நூறு பாடலையன்றி இவர் இயற்றினவாக 8-செய்யுட்கள் தெரிகின்றன : நற். 2; குறுந். 4; அகநா. 1; புறநா. 1. இவருடைய செய்யுட்களில் 106 மருதத்திணையின் வளத்தையே புலப்படுத்துவன. இவராற் பாடப்பட்டோர் சேரமான் ஆதனெழினி, சோழன் கடுமான் கிள்ளி, பாண்டியன், மத்தி, விராஅன் என்னும் இவர்கள். இவர் பாடலில் வந்துள்ள ஊர்கள் : ஆமூர், இருப்பை, கழார், தேனூர் என்பன. நதிகள் : காவிரி, வையை யென்பன; விழவு : இந்திர விழவு; விரதம் : தைந்நீராடல்.

ஓரேருழவர் :—வினைமுற்றி மீளும் தலைமகன் தலைமகளைக் காண்டற்கு விரையும் தன் நெஞ்சிற்கு ஈரச்செவ்வியில் விதைவிதைத் தற்பொருட்டுக் கொல்லையை அடைதற்கு விரையும் ஓரேருழவனை உவமை கூறிய சிறப்பால் இவர் இப்பெயர் பெற்றனர்; "ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோட், பேரமர்க் கண்ணி யிருந்த வூரே, நெடுஞ்சே ணாரிடை யதுவே நெஞ்சே, ஈரம் பட்ட செவ்விப் பைம் புனத், தோரே ருழவன் போலப், பெருவிதுப் புற்றன்று நோகோ யானே" (குறுந். 131) என்பதனால் உணர்க. இவருடைய இயற் பெயர் தெரியவில்லை. தம்முடைய செய்யுளில் இல்லறத்தை வெறுத் துக் கூறுதலின், இவர் துறவறத்தில் விருப்புடையாரென்று சொல்ல இடமுண்டு. இந்நூலில் இவர் இயற்றிய செய்யுள் : 193.

ஔவையார் :—இவர் அதியமான் நெடுமானஞ்சியிடம் அமுதமய மாகிய நெல்லிக்கனி பெற்று அவனைப் புகழ்ந்தார். இவர் அக்கனியைப் பெற்றமை இந்நூல் 91-ஆம் பாட்டினாலும், "பூங்கமல வாவிசூழ் புல் வேளூர்ப் பூதனையும், ஆங்குவரும் பாற்பெண்ணை யாற்றினையும்- ஈங்கே, மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றி னவை, அறுப்பித்தா யாமலகந் தந்து" என்னும் வெண்பாவாலும், 100-ஆம் திருக்குறளுக் குப் பரிமேலழகர், 'இனிய கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக்கனி போல் அமிழ்தாவனவற்றை' என்று எழுதிய விசேடவுரையாலும் வெளியாகின்றது. இவராற் பாடப்பட்டோர் : அதியமான் நெடுமா னஞ்சி, தொண்டைமான், அதியமான்மகன் பொகுட்டெழினி, நாஞ்சில் வள்ளுவன், சேரமான் மாவெண்கோ, பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி யென்பார். இவரியற்றிய பாடல்கள் புறநானூற்றி லன்றி நற்றிணையிலும், குறுந்தொகையிலும், அகநானூற்றிலும், தொல்காப்பிய உரையிலும், யாப்பருங்கலவிருத்தியுரை முதலிய வற்றிலும் காணப்படுகின்றன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக்கோவை முதலியன இவரியற்றிய நூல்க ளென்பர். இவர் அவ்வச்சமயத்துச் செய்தனவாகவுள்ள தனிப் பாடல்கள் மிகப் பல. பகைவரை நோக்கிக் கூறுவார்போல, அதியமான் நெடுமானஞ்சியின் குணங்களை இவர் பாராட்டிக் கூறி

யிருக்கும் பகுதிகளும் அவனால் தூதனுப்பப்பட்டுச் சென்றபொழுது தன் மேம்பாட்டைப் புலப்படுத்தற்பொருட்டுத் தொண்டைமான் தன் படைக்கலக்கொட்டிலைக் காட்டக் கண்டு அப்படைக்கலங்களைப் புகழ்வார்போல அதியமானது போர்த்திறத்தை வெளிப்படுத்தி யிருக்கும் பகுதியும் மிக்க விம்மிதத்தை விளைவிக்கும். அதியமான் கோவலூரெறிந்ததனைப் பரணர் பாடியதையும் (புறநா. 96), மூவேந்தரும் சேனைகளுடன் பாரியை வெல்லக் கருதி அவன் நகரைச் சூழ்ந்து புகல்போக்கின்றித் தடுத்தபோது பறவைகளால் நெற்கதிரைப் புறத்திருந்து வருவித்து உள் நகரத்தாரைப் பசியால் வருந்தாதபடி பாதுகாத்தளித்த கபிலர் செய்தியையும் (அகநா. 303), பிரிவாற்றாது வருந்திய வெள்ளிவீதியார் என்னும் புலமைவாய்ந்த பெண்பாலா ருடைய துன்பமிகுதியையும் (அகநா. 147) புலப்படுத்தியிருத்தல் புலவரிடத்து இவருக்குள்ள பேரன்பை விளக்குகின்றது; பழையனூர்க் காரிக்காகச் சென்று ஆடொன்று கேட்டபோது சேரன் இவருடைய மேம்பாட்டை நினைந்து, பொன்னால் ஓர் ஆடு செய்வித்து அளிக்க, இவர் அதனைப் பெற்று மனமகிழ்ந்து, "சேரா! உன்னாடு பொன்னாடு (உன் நாடு பொன் நாடு)" என்று கூறினாரென்றும் அதனால் மலைநாடு இதுகாறும் சிறப்புற்று விளங்குகிறதென்றும் ஒரு செய்தி வழங்குகிறது. தம்முடைய கூற்றாகவன்றிப் பாடியிரத்தற்குரிய விறலி முதலியவர் களின் கூற்றுக்களாகவும் இவர் பாடிய பாடல்கள் இந்நூலிலும் பிற நூல்களிலும் காணப்படும். ஆராய்வோர், அதனைக்கொண்டு இவரை விறலி முதலியவர்களாக நினைந்து விரைந்து முடிவுசெய்து விடுதல் மரபன்று; அங்ஙனம் பாடுதல் கவிமதமெனக் கொள்ளுதல் முறை; பிற புலவர்கள் பாடல்களிலும் இம்முறை காணப்படும். தொகை நூல்களில் இவர் பெயர் ஔவையெனவும் வழங்கும்.

கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி:—இவர் பாண்டியர் குடியிற் பிறந்தவர்; வழுதியென்ற பெயரே இதனைப் புலப்படுத்தும். பரிபாடலில் திருமாலுக்குரிய 15-ஆம் பாடலை இயற்றிய இளம்பெரு வழுதியார் என்பவரும் இவரும் ஒருவராகவே கருதப்படுகின்றனர்; பரோபகாரச் செய்திகூறல் முதலிய கருத்துக்களில் இருவர் பாடல் களும் ஒத்திருத்தலும் பெயரொற்றுமையும் பிறவும் இக்கருத்தை வலி யுறுத்தும். இளம் பிராயத்திலேயே பேரறிவினராக இருந்தது பற்றி இவர் இப்பெயரை அடைந்தனர் போலும்; ஒரு பெரியார்க்குச் சிறுப் பெரியார் என முற்காலத்திற் பெயர் வழங்கிற்று. 'கடலுண் மாய்ந்த' என்னும் அடை, இறந்த பின்பு இவருடைய பெயரின் முன்னர் அமைக்கப்பெற்றதென்பது சொல்லாமலே விளங்கும்; 'துஞ்சிய' என்பதுபோல. சோலைமலையிலுள்ள திருமாலைப் பாடியிருத்தல் பற்றிச் சமயத்தால் இவர் வைணவராகக் கருதப்பெறுகின்றனர். இவர் பாடிய, "உண்டாலம்ம" என்னும் இந்நூற்பாடல் சொல்லாலும் பொருளாலும் இனிமை வாய்ந்தது. இவருடைய ஏனை வரலாறுகளைப் பரிபாடற் பதிப்பிற் பாடினோர் வரலாற்றிற் காணலாகும்.

கண்ணகனார் :—இவர் காலத்தவர் கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார், பொத்தியார் முதலியோர்; பரிபாடலில் செவ்வேள் மேலதாகிய 21-ஆம் செய்யுளுக்கு இசைவகுத்தவர் இவரே. இதனால் இவரை முருகக்கடவுளின் அடியவராகக் கருதுவதற்கு இடமுண்டு. "என்றும், சான்றோர் சான்றோர் பால ராப, சாலார் சாலார் பாலரா குபவே" (218) என்பது இவர் வாக்கிற் சிறந்த பகுதி; இவராற் பாடப் பெற்றோர் பிசிராந்தையார்.

கணியன் பூங்குன்றன்:—கணியன் - சோதிடம்வல்லோன் : "வினை வெல்லாங், கண்ணி யுரைப்பான் கணி" (பு. வெ. 174). பூங்குன்ற மென்பது நாடொன்றின் தலைநகர் (நாலடி. 128, 212). *இராமநாதபுரம் ஜில்லாவில் மகிபாலன்பட்டிக்கு அருகிலுள்ள சாஸனங்களில் அவ்வூர் பூங்குன்றநாட்டுப் பூங்குன்றமெனக் குறிக்கப்பட்டுள்ளது; அதனால் அவ்வூரே இப்புலவருக்குரிய ஊரென்று கொள்ளலாகும். இவருக்கு இப்பெயர் தொழிலாலும் இடத்தாலும் வந்ததுபோலும். இப்பெயர் கணிபுன்குன்றனாரெனவும் வழங்கும். இவராற் பாடப்பெற்றதும் அரிய பொருள்களமைந்ததுமான 'யாதுமூரே' (புறநா. 192) என்னுஞ்செய்யுள் படிக்குந்தோறும் நினைக்குந்தோறும் எவருக்கும் மிக்க இன்பத்தை விளைவிக்கும். நற்றிணையிலும் இவரியற்றிய பாடலொன்று உண்டு.

கபிலர் :—கபிலரென்னும் பெயருள்ள முனிவர் சிலருண்டு; அவருள், எவருடைய பெயர் இவருக்கு இடப்பட்டதோ அது விளங்க வில்லை. இவர் அந்தணர். வேள்பாரியின் நண்பர். அவன் இறந்த பின்பு அவன் மகளிரை அழைத்துச்சென்று மணம் செய்துகொள்ளும் படி விச்சிக்கோன், இருங்கோவேள் என்பவர்களை வேண்டி அவர்கள் மறுத்தமையால் வெறுத்துப் பின்பு அம் மகளிரைப் பார்ப்பார்ப் படுத்துத் தம் கடனைக் கழித்தனர். இவர் பிறந்த ஊர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூர்; இது, "நீதிமா மதூக நீழ † னெட்டிலை யிருப்பை யென்றோர், காதல்கூர் பனுவல் பாடுங் கபிலனார் பிறந்த மூதூர், சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துளங்கக் காட்டும், வேத நாயகனார் வாழும் வியன்றிரு வாத வூரால்" (திருவால. 27 : 4) என்ப தனால் வெளியாகின்றது. இவர் அந்தணவருணத்தினர்; "யானே, பரிசிலன் மன்னு மந்தணன்", "யானே, தந்தை தோழ னிவரென் மகளிர், அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே" (புறநா. 200, 201) எனத் தம்மைப் புலப்படுத்துவதற்காக இவர் கூறிய செய்யுட்களும், "புலனழுக் கற்ற வந்த ணாளன்" (புறநா. 126) என மாறோக்கத்து நப்பசலையார் இவரைப் பாராட்டிக் கூறிய செய்யுளும் இதனைப் புலப்

* கலைமகள், தொகுதி, 8: பக்கம் 226.

† "நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ, வாடா தாயிற் பீடுடைப் பிடியின், கோடேய்க் கும்மே வாடிலோ பைந்தலைப், பரதர் மனைதொறு முணங்கும், செந்தலை யிறவின் சீரேய்க் கும்மே"; இச்செய்யுள் தமிழ் நாவலர் சரிதையிற் கண்டது.

படுத்தும். வேள்பாரியினுடைய உயிர் நண்பரும் அவனுடைய அவைக் களத்துப் புலவருமாக இவர் விளங்கினர். தன் மகளிரை மணஞ் செய்து கோடற்குத் தாம் விரும்பியபடி அவன் கேளாததுபற்றிச் சினந்து தமிழ்நாட்டு மூவேந்தரும் பெரும்போர் செய்ய நினைந்து நால் வகைச் சேனைகளோடும் அவன் மலையைச் சூழ்ந்தகாலையில் அவர் களைச் சிறிதும் மதியாது அவனுடைய அருமைக் குணங்களைப் புலப் படுத்திப் பாடினர்; அவ்வருமைச் செய்யுட்கள் இந்நூலிற் காணப்படும்; அவனிறந்தபின்பு, இவர் பிரிவாற்றாது மனமுருகிப் பல செய்யுட்களாற் புலம்பி, அவன் புதல்வியரை அழைத்துச்சென்று மணஞ்செய்து கொள்ளும்படி இருங்கோவேள், விச்சிக்கோன் என்பவர்களை வேண்ட மறுத்தமைகண்டு அவர்களை வெறுத்துப் பின்பு அம்மகளிரைப் பார்ப் பார்க்கு வாழ்க்கைப்படுத்திவிட்டு வந்து தம்முடைய நட்புக்கடனைக் கழித்தனர். ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் குறிஞ்சிப் பாட்டை இயற்றினர். ஐங்குறுநூற்றிற் குறிஞ்சியைப் பொருளாக வுடைய மூன்றும் நூறு இயற்றியவர் இவரே. பதிற்றுப் பத்தில் 7-ஆம் பத்தைப் பாடிச் சேரமான் செல்வக்கடுங்கோவாழி யாதனிடம் நூறுயிரங் காணமும் அவன் நன்றுவென்னும் ஒரு மலைமீது ஏறிக் கண்டு கொடுத்த நாடும் பரிசிலாகப் பெற்றனர். பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்றாகிய இன்னா நாற்பதும் கலித் தொகையில் இரண்டாவதாகிய குறிஞ்சியிலுள்ள கலிப்பாக்களும் இவர் இயற்றிய னவே. இவர் குறிஞ்சித் திணையில் மிகப் பயின்றவரென்றும், அதன் வளங்களை விளங்கப் பாடுதலிற் பேராற்றலுடையவரென்றும் இவர் இயற்றிய செய்யுட்கள் புலப்படுத்தும்; இவருடைய செய்யுட்கள் மிக்க இனிமையை யுடையன; பழைய இலக்கண உரைகளில் உதாரண மாகக் காட்டப்படும் 'கபிலரது பாட்டு' என்னும் தொடர் மொழியே இதனை வலியுறுத்தும்; இவரருளிச்செய்தனவாக 278-பாடல்கள் இப்பொழுது கிடைக்கின்றன: நற். 20; குறுந். 29; கலித். 29; ஐங்குறு. 100; பதிற். 10; அகநா. 16; புறநா. 30; குறிஞ்சி. 1; "நெட்டிலை யிருப்பை" என்பது - 1; திருவள். 1; இன்னா நாற்பது 41. பன்னிரு பாட்டியலில் இவர் பெயரினோடு சில சூத்திரங்கள் காணப்படுகின்றன. இவருடைய வாக்கில் விநாயகக் கடவுள், முருகக் கடவுள், சிவ பெருமான், பலதேவர், திருமால் இவர்களுடைய துதிகள் வந்திருக் கின்றன. இதனால், இவர் சமயக்கோட்பாட்டிற் பாரதம் பாடிய பெருந் தேவனாரைப் போன்றவராக எண்ணப்படுகிறார். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் முத்தொகுதி நூல் களிலும் இவருடைய பாடல்களும் நூல்களும் கலந்திருத்தல் இவரது பெருமையை விளக்குகின்றது. "அரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய, மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின், உவலை கூராக் கவலையி னெஞ்சின், நனவிற் பாடிய நல்லிசைக், கபிலன்" (பதிற். 85) எனப் பெருங்குன்றூர்கிழாரும், "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க்

கபிலன்'' (புறநா. 53) எனப் பொருந்திலிளங்கீரனாரும், "புலனழுக் கற்ற வந்த ணாளன், இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப், பரந்திசை நிற்கப் பாடினன்", "பொய்யா நாவிற் கபிலன்" (புறநா. 126, 174) என மாறோக்கத்து நப்பசலையாரும் பாடியவற்றைப் பார்க்கையில் இவருடைய மன வாக்குக் காயங்களின் தூய்மையும் அறம்புரி கொள்கையும் பெரும்புலமையும் அன்புடைமையும் நட்பின் பெருமையும் நன்கு விளங்குகின்றன. இவராற் பாடப்பட்டோர்: அகுதை, இருங்கோவேள், ஓரி, சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன், சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறை, நள்ளி, மலையமான் திருமுடிக் காரி, மலையன், விச்சிக்கோன், வேள்பாரி, வையாவிக்கோப்பெரும் பேகன் என்பவர்கள். கொல்லிமலை, பறம்புநாடு, பறம்புமலை, முள்ளூர் மலை, முள்ளூர்க்கானமென்பவைகள் இவராற் பாராட்டப்பெற்றிருத்தலின், அவைகள் இவர் காலத்தில் விளக்கமுற்றிருந்தனவென்றும், இவர் பழகிய இடங்களென்றும் தெரிகின்றன. நட்பு, வண்மை, நன்றி மறவாமை என்பவைகளை இவருடைய செய்யுட்களிற் பரக்கக் காணலாகும். பழைய இலக்கண உரைகளில் வந்துள்ள 'கபிலபரணர்' என்பதனால் பரணர் என்பவருக்கும், "பின்னமில் கபிலன் றோழன் பெயரிடைக் காட னென்போன்" (திருவால. 20: 1) என்னும் திரு விருத்தத்தால் இடைக்காடருக்கும் சிறந்த நட்பினராக இவர் எண்ணப் படுகிறார். இவர் வேறு; தொகை நூல்களிற் காணப்படும் தொல்கபிலர் என்பவர் வேறு. வீரசோழியம், தொகைப் படலம், 6-ஆம் கட்டளைக் கலித்துறையுரையால், பரணருடன் இவர் வாது செய்தனரென்பது வெளியாகின்றது. 11-ஆம் திருமுறையில் வந்துள்ள மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்னும் பிரபந்தங்கள் மூன்றையும் அருளிச்செய்த கபிலதேவநாயனார் என்பவர் இவரேயென்று சிலர் கூறுவர். மேற்கூறிய திருவிளையாடற் புராணத்தில், இடைக்காடன் பிணக்குத்தீர்த்த திருவிளையாடல் 11-ஆம் திருவிருத்தத்தில், "எனையந்தாதி சொன்னவன் கபிலன்" எனச் சிவபெருமான் கட்டளை யிட்டருளியதாக வந்திருத்தல் காண்க. 'முதலிற் கூறுஞ் சினையறி கிளவி' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்துக்கு இளம்பூரணரும் சேனாவரையரும் எழுதிய உரையால் கபிலராற் செய்யப்பெற்றுக் கபிலம் என்னும் பெயரிய நூலொன்று இருந்ததாகத் தெரிகிறது. இவருடைய விரிந்த வரலாற்றைப் பத்துப்பாட்டுப் பதிப்பிலுள்ள பாடினோர் வரலாற்றிற் காணலாம்.

கயமனார்:—உப்பங்கழியில் மலர்ந்த கருநெய்தற்பூ நீர் பெருகுந் தோறும் கயத்தில் முழுகும் மகளிருடைய கண்களை ஒத்துத்தோன்று மென்று, "யாயாகியளே" (குறுந். 9) என்னுஞ் செய்யுளில் இவர் மொழிந்திருத்தலின், இவருக்கு இப்பெயர் அமைக்கப்பெற்றது போலும்; கயம் - நீர் நிறைந்த பள்ளம். இந்நூலுள் போரில் இறந்த

மகனுடைய பிரிவாற்ருது வருந்தும் நற்ருயின் இயல்பைப் புலப்படுத்தி, "என்மகன், வளனுஞ் செம்மலு மெமக்கென நாளும், ஆனது புகழு மன்னே, யாங்கா குவள்கொ லளிய டானே" (254) எனக் கண்டோர் கூறியதாக இவர் பாடியிருக்கும் நயம் படிப்பவர் மனத்தைக் கனிவிக்கும்; வேறு தொகைநூல்களிலும் (அகநா. குறுந். நற்.) இவருடைய பாடல்கள் பல காணப்படுகின்றன.

கருங்குழலாதனுர் :—இவர் சோழன் கரிகாற்பெருவளத்தான் இறந்தபின்பு அவன் பிரிவாற்ருது வருந்துதல் வாயிலாக அவனுடைய குணவிசேடங்களையும் அரிய செயல்களையும் அவனுரிமை மகளிர் அருங்கல முதலியவற்றைக் களைந்ததனையும் கூறியிருக்கின்றனர்.

கருவூர்க் கதப்பிள்ளை :—இவருடைய ஊர் கருவூர். இவர் பெயர் கருவூர்க் கந்தப்பிள்ளை என்றும் காணப்படுகிறது. கருவூர்க் கந்தப் பிள்ளைச் சாத்தனுர் என்ற புலவர் இவருடைய மகனுர் என்று கருத இடமுண்டு. இவராற் பாடப்பட்டோன் பாண்டியனுடைய வீரனும் கந்தன் என்னும் பெயரினனுமாகிய நாஞ்சில்வள்ளுவனென்பான். இவர் பாடலால் அவனுடைய வண்மையும் வீரமும் நாஞ்சில்மலையின் வளனும் புலனுகின்றன; "துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மை யன், நட்பெதிர்ந் தோர்க்கே யங்கை நண்மையன்" என்பது இவர் அவனைப் பாராட்டிய பகுதி. இவர் செய்த பாடல்கள்-3: குறுந். 2, புறநா. 1. பண்டைக்காலத்தும் தெய்வப்பெயரை மனிதர்க்கு இட்டு வழங்குதல் மரபாகத் தெரிதலாலும், மிளைக்கந்தன், மிளைப்பெருங் கந்தன் என்று வேறு தொகைநூல்களிற் புலவர்கள் பெயர் காணப்படுத லாலும் இப்பாடமும் பொருத்தமுடையதென்றே தோற்றுகிறது.

கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனுர் :—இப்பெயர் கருவூர்க் கந்தப் பிள்ளைசாத்தனுரெனவும் காணப்படுகின்றது. இவருடைய ஊர் கருவூர். சாத்தனுரென்பது இவரது இயற்பெயர். 'கதப்பிள்ளை' என்பவர் இவருடைய தந்தை. சேரன் சேனுதிபதியும் குதிரைமலைத் தலைவனு மாகிய பிட்டங்கொற்றனை நோக்கி, "பாடுப வென்ப பரிசிலர் நாளும், ஈயா மன்னர் நாண, வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே" (168) என்று பாடியுள்ளார்; இப்பாடலிற் குதிரைமலையிலுள்ள குறவர்களின் இயல்பு நன்கு கூறப்பெற்றுள்ளது; ஏனைத் தொகைநூல்களிலும் இவர் செய்யுட்கள் உள்ளன: அகநா. 1; குறுந். 1; நற். 1.

கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனுர் :—சதுக்கம் - நான்கு தெருக்கள் கூடுமிடம்; அங்கேயுள்ள தெய்வமாகிய ஒரு பூதத்தின் பெயர் இவருக்கு எய்தியதுபோலும்; கருவூரிற் சதுக்கப்பூதமொன் றிருந்தமை, "சதுக்கப் பூதரை வஞ்சியுட் டந்து, மதுக்கொள் வேள்வி வேட்டோ னுயினும்" (சிலப். 28: 147-8) என்பதனுல் அறிய லாகும். முசுகுந்தனுக்குத் துணையாக இந்திரனுல் அனுப்பப் பட்ட பூதமொன்று காவிரிப்பூம்பட்டினத்திற் சதுக்கத்திலிருந்து அந் நகரைப் பாதுகாத்து வந்ததாகச் சிலப்பதிகார முதலியன தெரிவிக்

கின்றன. துறவு பூண்டிருந்த கோப்பெருஞ்சோழனை நோக்கி மன முருகிப் பாடியவர்களுள் இவர் ஒருவர்.

கல்லாடனார் :—கல்லாடமென்னும் ஊரிலுள்ளவராதலின் இவர் இப்பெயர் பெற்றார் போலும்; "கல்லா டத்துக் கலந்தினி தருளி" (திருவா. கீர்த்தி.) என்பதை நோக்குக. தொல்காப்பியத்திற்கு உரை செய்தவர்களுள் கல்லாடர் என்பவர் ஒருவர்; "ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்திற், குரையிடை யிட்ட விரகர்கல் லாடர்" என்னும் ஆன்றோர் வாக்காலுணர்க. அவர் வேறு, இவர் வேறு. இவருடைய பாடல்களில் பகைவருடைய நீர்நிலையைக் கெடுத்தல் கடிமரந்தடிதல் அவர் முரசைக் கைக்கொள்ளல் முதலிய தலைவர்களின் வீரச்செயல் களும், பகைவர் இறந்தபின் அவருடைய மனைவிமார் கைம்மை நோன்பு நோற்றிருத்தலும் கூறப்பெற்றுள்ளன. இவர் கிணைப்பொருந னாகத் தம்மைக் காட்டி அவன் செயல்களை முறையே சொல்லிச் செல்லும் மறக்களவழி ஏர்க்களவுருவகமென்னுந் துறைகள் நயப் பாடுடையன. பகைவரைக் கொன்றவிடத்து அவருடைய பெண்டிர் தம் இளம்புதல்வரைப் பாதுகாத்தற் பொருட்டுத் தாம் இறந்துபடாமல் இலைகளைத் தின்று உயிர்வாழ்தலைப் புலப்படுத்தி இவர் கூறியிருக்கும் செய்யுள் யாருடைய மனத்தையுங் கனியச்செய்யும். 11-ஆம் திரு முறையிலுள்ள திருக்கண்ணப்பதேவர் திருமறமென்னும் நூலொன்று இவர் செய்ததாகக் கூறுவர். பன்னிரு பாட்டியலில் இவர் செய்தன வாகச் சில சூத்திரங்கள் காணப்படுதலால் இவராற் செய்யப்பட்ட பாட்டியலொன்றுள்ளதென்று கொள்வாரும் உளர். இலக்கணவுரை களில் கல்லாடமாமூலர் என்று ஒரு தொடர்மொழி இருப்பதால் மாமூல ரென்னும் புலவரோடு இவர் நட்புடையவரென்று சொல்லலாம். இவரியற்றிய பாடல்கள்-16: அகநா. 7; குறுந். 2; திருக்கண்ணப்பர். 1; திருவள். 1; புறநா. 5. இவராற் பாடப்பெற்றோர்: அம்பர்கிழானருவந்தை, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன், புல்லி, பொறையாற்று கிழானென்பார்.

கழாத்தலையார் :—கழாத்தலை: ஓரூர். சேரமான்குடக்கோ நெடுஞ் சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியும் போர்ப் புறத்துப் பொருது வீழ்ந்து இறந்தது கண்டு இவர் மனம்வருந்திப் பாடினர்; இருங்கோவேளின் முன்னோரில் ஒருவன் இவரை இகழ்ந் தமையால் அவனது நகரமாகிய அரையமென்பது அழிவுற்றதென்று கபிலர் பாடியிருத்தலின், இவர் மேம்பாடு விளங்குகின்றது; 202; அன்றியும் கபிலருக்கு இவர் காலத்தால் முற்பட்டவரென்று தெரிகிறது. இவர் கூறும் உவமைகள் அழகுவாய்ந்தவை. இவராற் பாடப்பட்டோர் மேற்கூறிய அரசரும் சேரமான்பெருஞ்சேரலாதனுமாவர்.

கழைதின் யானையார் :—இவர் தைரியமும் கம்பீரமுமுடையவர்: "ஈயென விரத்த லிழிந்தன் றதனெதிர், ஈயே னென்ற லதனினு மிழிந்தன்று, கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர்,

கொள்ளே னென்ற லதனினு முயர்ந்தன்று" என்பது இவருடைய வாக்கிற் சிறந்த பகுதி. இவராற் பாடப்பட்டோன் வல்விலோரி.

கள்ளில் ஆத்திரையனார் :—கள்ளில் என்பது தொண்டை நாட்டிலுள்ளதும் ஸ்ரீ ஞானசம்பந்தர் தேவாரம் பெற்றதுமான ஒரு சிவஸ்தலம். ஆத்திரையன்-அத்திரிகுலத்திற் பிறந்தவன்; இவரது இப்பெயர் குடிப்பெயர்; இதனால் இவர் அந்தணராகக் கருதப்படுகின்றார்; நன்றியறிவு முதலிய உத்தம குணத்தினர். இவராற் பாடப்பட்டோர் : வேங்கடமலைக்குரிய தலைவனாகிய ஆதனுங்கனும், ஆதியருமனுமாவர். இவர் செய்த பாடல்கள் - 3: குறுந். 1; புறநா. 2.

காக்கைபாடினியார் நச்செள்ளையார் :—இவர் பெண்பாலார். ஆடு கோட்பாட்டுச் சேரலாதனென்னும் அரசன்மீது பதிற்றுப்பத்துள் ஆறும் பத்தைப் பாடி, அணிகலனுக்கென்று ஒன்பது துலாம் பொன்னும், நூறாயிரம் பொற்காசும் பரிசுபெற்றவர்; நச்செள்ளையாரென்பது இவரது இயற்பெயரென்பதும், குறுந்தொகையில், "திண்டேர் நள்ளி கானத் தண்டர், பல்லா பயந்த நெய்யிற் றொண்டி, முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ, றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி, பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு, விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"என்னும் 210-ஆம் பாட்டில், காக்கை கரைந்தமையைப் பாராட்டிக் கூறிய அருமைபற்றிக் காக்கைபாடினியார் என்ற சிறப்புப் பெயரைப் பிற்காலத்தில் ஆன்றோரால் இவர் பெற்றனரென்பதும் தெரிகின்றன; பாடினி-பாடுபவள். செள்ளையென்பது பெண்பாலார்க்கு இயற்பெயராகப் பண்டைக்காலத்து வழங்கிவந்தது போலும்; பதிற். 9-ஆம் பத்தின் பதிகத்தில் மையூர்கிழானுடைய மனைவியின் பெயர் அந்துவஞ்செள்ளை யென்று வந்திருத்தல் காண்க. மறக்குடி மங்கையின் இயல்பை விளக்கி இவர் பாடிய, "படுமகன் கிடக்கை காணூஉ, ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" (278) என்னும் புறப்பாட்டும், அப்பாடல் ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்பாலாருடைய பாக்களின் வரிசையிற் சேர்க்கப்பெற்றிருத்தலும் இவர் பெண்பாலாராதலை வலியுறுத்தும்; 'ந' என்பது சிறப்புப் பொருளைத் தருவதோரிடைச்சொல். 'கலனணிக' என்று அரசன் பொற்காசு முதலியன கொடுத்தானென்றது ஈண்டு அறியற்பாலது. இப்பெயர் சில பிரதிகளில் காக்கைபாடினியார் நச்சென்னையாரெனவும் காணப்படுகின்றது.

காரிகிழார் :—இவர் வேளாளர்; இவருக்கு இப்பெயர் ஊரான் வந்தது; காரி யென்பது தொண்டை நாட்டிலுள்ளதோரூர்; இப்பொழுது இராமகிரி யென்று வழங்கப்படுகின்றது; "பணியிய ரத்தை நின் குடையே முனிவர், முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே" என்று அரசனை நோக்கிக் கூறியதனால், இவர் பரமசிவனை வழிபடுபவரென்று தெரிகின்றது; இவருடைய செவியறிவுறூஉவை உற்று நோக்குகையில் வைதிக வொழுக்கிற் சிறந்தவராகக் கருதப்படு

கின்றனர்; இவருடைய சிவநேயத்தையும் பெயரையும் பார்க்கும் பொழுது, பெரியபுராணத்துக் கூறப்படும் காரிநாயனர், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் 52-ஆம் திருவிளையாடலில் வந்துள்ள காரியாரென்பவர்களுடைய ஞாபகம் வருகின்றது. இவராற் பாடப்பட்டோன் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

காவட்டனார் :—இப்பெயர் கானட்டனாரெனவும் வழங்கும்; இவர் பாடலில் வந்துள்ள 'வசையு நிற்கு மிசையு நிற்கும்' என்பது முதலிய அரிய வாக்கியங்கள் அறிந்து கோடற்பாலன; இவர் செய்த பாடல்கள் - 2: அகநா. 1; புறநா. 1. இவராற் பாடப்பட்டோன் அந்துவன் கீரன்.

காவற்பெண்டு :—இவர் சோழன் போர்வைக்கோப் பெருநற் கிள்ளியின் செவிலித்தாயென்று தெரிகிறது, காவற்பெண்டு-செவிலித் தாய். இவர் பெயர் காதற்பெண்டு எனவுங் காணப்படுகின்றது; தம் மகன் போர் செய்தற்குச் சென்றானென்னும் பகுதி இவர் வீரக் குடியிற் பிறந்தவரென்பதைப் புலப்படுத்தும்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் :—இப்பெயர் காரிக் கண்ணனாரெனவும் வழங்கும்; இவருக்கு இப்பெயர் உறுப்பான் வந்தது போலும்; காரி-கரிக்குருவி. இவர் வணிகர்; இதனை, "ஊரும் பேரும்" (தொல். மரபு. சூ. 74, பேர்.) என்பதன் விசேடவுரையால் உணர்க; இவர் வாக்கிற் காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகத்துறை கூறப்பெற்றுள்ளது (அகநா. 123). பாண்டியனுக்குத் திருமாலையும் அப்பாண்டியனும் சோழனும் ஒருங்கிருந்தபொழுது அவர்களுக்குக் கண்ணன் பலதேவரிருவரையும் உவமை கூறியிருத்தலின், இவர் திருமாலடியவராகக் கருதப்படுகின்றனர். மேற்கூறிய அரசருக்கு ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்று இவர் கூறும் பகுதியும், பிறவும் இன்பத்தைத் தருவன. அயனே திருவள்ளுவராக வந்து திருக் குறளைத் தந்தானென்றதனால், அந்நூலின்பால் இவர்க்குள்ள நன்மதிப்பு வெளியாகும். இவராற் பாடப்பட்டோர்: சோழன் குராப் பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, பிட்டங் கொற்றனென்பார். இவரியற்றிய பாடல்கள்-9: அகநா. 2; குறுந். 1; திருவள். 1; புறநா. 5.

குட்டுவன் கீரனார் :—குட்டுவன்-குட்டநாட்டில் உள்ளவன்; கீரனாரென்பது இவரது இயற்பெயர். கீரனாரென்னும் பெயருள்ள புலவர் சிலர் இருத்தலின் இவர் பெயர்க்குத் தேயப்பெயரை அடைமொழி யாக்கினர் போலும்; சிறந்த உபகாரியாகிய ஆய்அண்டிரன் தன் உரிமை மகளிரோடு தேவலோகத்தை அடைந்தமையால் புலவர்கள் மிக்க பசியையுடையவர்களாகி அயல்நாடு செல்லுவதாக வருந்திக் கூறியிருத்தலின் இவர் அவனிறந்த பின்பும் இருந்தவரென்று தெரிகின்றது.

குடபுலவியனார் :—போர்க்களத்தின் இயல்பைப் பாடுதலில் இவர் ஆற்றலுடையவர்; சினவாதபடி அரசனுக்கு இவர் தருமங்களைக் கூறும் இயல்பு யாரும் கற்றுக்கோடற்குரியதே. "உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே" என்பது இவர் வாக்கு. இவரால் பாடப் பட்டோன்: பாண்டியன் நெடுஞ்செழியன்; இவர் காலத்துப் புலவர்: அவனைப் பாடிய கல்லாடர் முதலியோர்.

குடவாயிற் கீரத்தனார் :—குடவாயிலென்பது சோழ நாட்டிலுள்ளதும் சோழர்களின் தலைநகராகவிருந்ததும் தேவாரம் பெற்ற சிவஸ்தலமுமான ஓரூர்; "தண்குட வாயி லன்னோள்", "கொற்றச் சோழர் குடந்தை வைத்த நாடுதரு நிதியினுஞ் செறிய,வருங்கடிப் படுக்குவள்" (அகநா. 44, 60), "தேர்வண் சோழர் குடந்தை வாயில்" (நற். 379) என்பவற்றால் அவ்வூரின் பெருமையை இவர் புலப்படுத்தியிருக்கின் றனர்; புலவர்கள் தம்மூர்ப்பெயர் முதலியவற்றை ஒருவகையாகத் தம்முடைய பாடல்களில் தெரிவித்தல் மரபு; ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன் இறந்த பின்பு அவனுடைய வண்மையைப் பாராட்டியும் இரவலர் வருந்துதலை ஒருவகையாகப் புலப்படுத்தியும் இவர் பாடிய செய்யுள் படிப்பவர் உள்ளத்தை உருகச் செய்யும்; இன்னும் சேரனுடைய தொண்டி, பாண்டியரின் கூடல்நகர், கொற்கைத்துறை, சோழரின் உறையூரென்பவை இவர் பாடலிற் பாராட்டப் பெற்றிருத்தலின், மேற்கூறிய பெருஞ்சாத்தனையன்றிச் சேரர் முதலிய முடிமன்னர் மூவராலும் நன்னனாலும் இவர் ஆதரிக்கப் பெற்றவரென்று தெரிகின்றது; பெரும்பாலும் இவர் பாடல்களில் வந்துள்ளது பாலைத்திணை; இவரியற்றிய பாடல்கள்-18: அகநா. 10; குறுந். 3; நற். 4; புறநா. 1.

குண்டுகட் பாலியாதன் :—குண்டுகண்-ஆழமான கண்; பாலி-ஓரூர்; இவருக்கு இப்பெயர் சினையாலும் இடத்தாலும் வந்தது; பகைவர் தருந் திறைப் பொருள்களை அரசர் இரவலர்க்குக் கொடுத்து விடும் வழக்கம் பண்டைக்காலத்தில் உண்டென்பது இவர் பாடலாலும் தெரியவருகின்றது; சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோவாழியாதனுடைய வண்மையைப் பாராட்டி, இவர் கூறியிருக்கும் அருமைச் செய்யுள் (387) மிகப் பாராட்டற்பாலது; இவர் பாடிய பாடல்கள் - 2: நற். 1; புறநா. 1.

குளம்பாதாயனார் :—இவர் பாடலில் வளையல் களைந்த மகளிர் கைகளுக்குப் பட்டை நீங்கிய மூங்கில் உவமை கூறப்பெற்றுள்ளது.

குறமகள் இளவெயினி :—இவருக்கு இப்பெயர் சாதியால் வந்தது; குறவர் தலைமகனாகிய ஏறைக்கோனை, "எம்மோன்" (157) என்று இவர் சொல்லியிருத்தலும் இதனை வலியுறுத்தும்; "தமர்தற் றப்பி னதுநோன் றல்லும், பிறர்கை யறவு தானா ணுதலும், படைப்பழி தாரா மைந்தின ராகலும், வேந்துடை யவையத் தோங்குபு நடத் தலும்,......ஏறைக்குத் தகுமே" என அச்செய்யுளில் இவர் விதந்திருக்கும் அவனுடைய அருமைக் குணங்கள் அறிதற்பாலன.

குறுங்கோழியூர் கிழார் :—இவர் வேளாளர்; சேனையை இவர் வருணித்தல் மிக அழகியது; இவராற் பாடப்பட்டோன் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை யென்னுஞ் சேரவரசன்; போரிற் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் பிணிப்புண்டு அப்பால் அப்பிணிப்பைத் தானே நீக்கிக்கொண்டு சென்று அவன் சிங்காசனத்திலேறிய வரலாறும், அச்சேரனுடைய வீரமும்,செங்கோன் முறைமையும் இவரால் நன்கு கூறப்பெற்றுள்ளன; இவர்பெயர் குறுங்கோளியூர்கிழாரெனவும் வழங்கும்; இவர் பாடல் களுட் சிறந்த பகுதிகளின் கருத்துக்கள் வருமாறு:-(1) 'அரச! ஐம்பூதங் களை அளந்தறிந்தாலும் அறியலாகும்; உன்னுடைய அறிவு முதலியன அளந்தறிதற்கரியன'; (2) 'சோற்றை ஆக்குந் தீயாலும் வெயிலாலும் உண்டாகும் வெம்மையை யன்றி உன் குடைநிழலில் வாழ்வோர்க்கு வேறு வெம்மையில்லை'; (3) 'இந்திரவில்லை யன்றி வேறு கொலைவில்லை யும் கலப்பையை யன்றி வேறு படைக்கலங்களையும் உன் நாட்டார் அறியார்'; (4) 'வயாவுற்ற மகளிர் விரும்பியுண்பாரே யன்றிப் பகைவர் நின் மண்ணை ஒரு பொழுதும் நுகரார்; (5) 'உன்னைப் பாடிய நா வேறொருவரையும் பாடாதபடி கொடுக்கும் வண்மையை உடையாய் நீ'; (6) 'எல்லா வகையாலும் உன் நாடு தேவருலகம் போல்வது.'

குன்றூர்கிழார் மகனார் :—இவர் வேளாளர்; நீர் நிறைந்த வயல் களின் இடையேயுள்ள ஒரூரின் மதிலுக்குக் கடலின் இடையேயுள்ள புறமுலர்ந்த கப்பலை உவமை கூறியிருக்கின்றனர். இவராற் பாடப் பட்டோன் போந்தையென்னும் நகரின் தலைவனான நெடுவேளாத னென்பான்.

கூகைக் கோழியார் :—மயானத்தின் இயல்பை, பழைய மரங்க ளின் பொந்திற் பிறர் திடுக்கிடும்படி சுட்டுக் குவியென்று ஒலித்துக் கொண்டிருக்கும் கூகைக்கோழிகள் நீங்காதது என்னும் கருத்துப்பட, "முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும், கூகைக் கோழி யானாத், தாழிய பெருங்காடு" (364) என்றமையின், இப்பெயர் இடப்பட்ட தென்று தெரிகின்றது.

கூடலூர்கிழார் :—இவர் மலைநாட்டின் கண்ணதாகிய கூடலூரை இருப்பிடமாக உடையவர்; வேளாண்மரபினர்; இவருடைய பாடல்கள் இன்சுவையைத் தருபவை; ஒரு விண்மீன் வீழ்ச்சியைக் கண்டு கோச் சேரமான் யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை என்னும் அரசன் இன்னநாளில் இறப்பானென்று முதலில் நிச்சயித்திருந்து அவ் வாறே அவன் இறந்ததுகண்டு ஒருவாற்றானும் பிரிவாற்றாது வருந்தினா ரென்று, "ஆடிய லழற்குட்டத்து" (229) என்னும் பாடலாலும் அதன் பின்னுள்ள வாக்கியங்களாலும் தெரிதலால், இவர் கணிதத்திலும் வல்ல வராகக் கருதப்படுகிறார்; இவர் மேற்கூறிய அரசனால் மிக ஆதரிக்கப் பெற்றவர்; அவன் வேண்டுகோளால் ஐங்குறுநூறென்னும் தொகை நூலைத் தொகுத்தவர் இவரே; ஐங்குறுநூற்றின் இறுதி வாக்கியத்தில்

'புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்' என ஆன்றோராற் சிறப்பித்துக் கூறப் பெற்றிருத்தலின், இவருடைய பெரும்புலமை நன்கு வெளியாகின்றது. இவர் காலத்துப் புலவர்கள் : குறுங்கோழியூர்கிழார், பொருந்தில் இளங்கீரனுர் என்பவர்கள். முதுமொழிக்காஞ்சியை இயற்றிய மதுரைக் கூடலூர் கிழார் என்பவர் வேறு; இவர் வேறு. இவரியற்றிய பாடல்கள்-4 : குறுந். 3; புறநா. 1.

கோடை பாடிய பெரும்பூதனுர் :—பெரும்பூதனுரென்பது இவரது இயற்பெயர்; கோடைமலையையோ கோடைக்காலத்தையோ நன்கு பாடிய இவருடைய ஆற்றலுடைமையைக் கண்டு, 'கோடைபாடிய' என்னும் அடைமொழியை இவர்பெயர்க்கு முன்பு ஆன்றோர் அமைத்தனர்போலும்; "முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத், தாவுபு தெறிக்குமான்" (259) என்னும் இவர் பாடலானது முருகக் கடவுளின் ஆவேசங் கொண்டு மகளிர் ஆடும் வழக்கம் பண்டைக் காலத்தில் உண்டென்பதைத் தெரிவிக்கின்றது.

கோதமனுர் :—இவர் பெயர் கௌதமனுரெனவும், பாலைக் கௌதமனுரெனவும் வழங்கும்; இவர் அந்தணர். பதிற்றுப்பத்தில் 3-ஆம் பத்தைப் பாடி இவர் இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனுற் சுவர்க்கம் பெற்ருர்; இதனை, "பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனுர் பாடினுர் பத்துப்பாட்டு... பாடிப் பெற்ற பரிசில் : 'நீர் வேண்டியது கொண்மின்' என,' யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகவேண்டும்' என, பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டுப் பெருவேள்வி வேட்பிக்கப் பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையுங் காணுராயினுர்" (பதிற். 3-ஆம் பத்தின் இறுதிக் கட்டுரை) என்பதனுலும், "பாடாண்டிணையே" (தொல். புறத்திணை, சூ. 25, ந.) என்பதன் விசேடவுரையாலும், "சேரன் குட்டுவன் புகழைச் செய்யுளாகத் தொடுத்த கௌதமனென்னும் பெரிய புலவன், 'யானும் என்சுற்றமும் துறக்கம் புகும்படி பொருந்திய அறங்களை முடித்துத் துறக்கத்தைத் தா' என்ருற்கு, அவன் சொற்குறை தீர்ப்பான்பொருட்டு உவந்து யாகங்களை நடத்தி, 'நீ வேண்டிய துறக்கத்தின்கண் நீடுவாழ்வாயாக' என்ருன்; ஆதலால் புனைந்து இப்பெற்றியாரென்று புகழவேண்டுவதில்லை; இயற்கையாகக் கொடுக்கும் சீலத்தார் தம் அளவினுற் கொடுக்க வல்லதனைத் தாமே அறிந்துகொடுப்பார்" (பழ. 316, பழையவுரை) என்பதனுலும் உணர்க.

கோப்பெருஞ்சோழன் :—"செய்குவங் கொல்லோ நல்வினையெனவே, ஐய மருஅர் கசடீண்டு காட்சி, நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே", "பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே, செல்வக் காலை நிற்பினும், அல்லற் காலை நில்லலன்" என்பவை இந்நூலுள் இவன் பாடல்களிற் சிறந்த பகுதிகள். இவனுற் பாடப்பட்டோர் பிசிராந்தையார். இவனியற்றிய பாடல்கள்-7 : குறுந். 4; புறநா. 3. இவனுடைய பிற வரலாற்றைப் பாடப்பட்டோர் வரிசையிற் காண்க.

கோவூர்கிழார் :—இவர் வேளாண்மரபினர்; சோழ பரம்பரையோ ரால் ஆதரிக்கப்பெற்றவர்; நன்றியுள்ளவர்; பிறருடைய சீற்றத்தைத் தணித்தலிற் கண்ணுங் கருத்துமாகவிருந்து வாழ்ந்தவர்; யாரும் மன ஒற்றுமையுடன் இருக்கவேண்டுமென்பது இவரது கொள்கை. கணு நூல், சோதிடநூல், இசைநூல் என்பவற்றில் வல்லுநர்; உவமை கூறுத லிலும் உபகாரிகளின் குணங்களைப் பாராட்டுதலிலும் வீரச்செயல்களை விளக்குதலிலும் மிக்க ஆற்றல் வாய்ந்தவர்; அஞ்சாத நெஞ்சினர். இவை இவருடைய பாடற்பகுதிகளால் விளங்கும். சோழர்களுள், நலங்கிள்ளி யென்பவன் ஒருகாலத்தில் ஆவூரையும் ஒருகாலத்தில் உறையூரையும் முற்றியிருந்தபொழுது அவ்வக்காலத்தில் அடைத்துக் கொண்டு அந்நகரங்களுக்குள்ளே அஞ்சியிருந்த நெடுங்கிள்ளியை நோக்கி, 'வெளியே வந்து போர்செய்தல், ஒற்றுமையுடன் வாழ்தல் இந்த இரண்டனுள் ஒன்றைச் செய்து கொள்க' என்று இடித்துக் கூறிய பகுதியும் (44-5), நலங்கிள்ளியிடத்திருந்து உறையூர்க்கு வந்த இளந் தத்தனென்னும் புலவனை ஒற்றுவந்தானென்று நெடுங்கிள்ளி கொல் லத் தொடங்கிய விடத்து அப்புலவனை உய்வித்தற்பொருட்டுப் பொது வாகப் புலவர்களின் இயல்பை விதந்து கூறிய பகுதியும் (47), மலைய மான் மக்களைக் கிள்ளிவளவன் யானைக்கு இடத்துணிந்தபொழுது அவர்களை உய்விக்கவும் அவனுடைய மனத்தைக் கனிவிக்கவும் எண்ணிச் சிறுவர்களின் இயல்பை எடுத்துக் கூறிய பகுதியும் (46) இவருடைய ஆற்றலையும் அருமைக் குணங்களையும் புலப்படுத்தும். "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும், அறத்துவழிப் படூஉந் தோற்றம் போல, இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை", "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்", "ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்தும், செம்மற் றம்மநின் வெம்முனை யிருக்கை", "காலனுங் காலம் பார்க்கும் பாராது, வேலீண்டு தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே", "மையல் கொண்ட வேமமி லிருக்கையர், புதல்வர் பூங்கண் முத்தி மனையோட், கெவ்வங் கரக்கும் பைதன் மாக்களொடு, பெருங்கலக் குற்றன்றாற் றுனே காற்றே, டெரிநிகழ்ந் தன்ன செலவிற், செருமிகு வளவநிற் சினை இயோர் நாடே", "உடும்புரித் தன்ன வென்பெழு மருங்கிற், கடும் பின் கடும்பசி களையுநர்க் காணது, சில்செவித் தாகிய கேள்வி நொந்துநொந்து", "மென்மையின் மகளிர்க்கு வணங்கி வண்மை யின், ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை, புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச், சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர், மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன்", "யானை, நெடுநகர் வரைப்பிற் படு முழா வோர்க்கும், உறந்தை யோனே குருசில், பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே", "தைஇத் திங்கட் டண்கயம் போலக், கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர், அடுதீ யல்லது சுடுதீ யறியா, திருமருந்து விளைக்கு நன்னாட்டுப் பொருநன்", "நிறனுற்ற வராப்

போலும் வறன்", "வெய்துண்ட வியர்ப்பல்லது, செய்தொழிலான் வியர்ப்பறியாமை, ஈத்தோ னெந்தை" என்பவை இவருடைய பாடல் களுட் சிறந்த பகுதிகள். இவராற் பாடப்பட்டோரும் இவர் காலத்த வரும் : சோழன் நலங்கிள்ளி, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன், சிறுகுடிகிழான் பண்ணனென் போரும் அவர்களைப் பாடிய புலவர்களும் ஆவார். இவர் இயற்றிய பாடல்கள்-18: குறுந். 1; திருவள். 1; நற். 1; புறநா. 15.

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் :—வஞ்சப் புகழ்ச்சியணி இவர்பாடல்களில்நன்றாக அமைந்துள்ளது; திருவள்ளுவ மாலையில் இவர் பெயரோடு ஒருபாடல் காணப்படுகின்றது. இவராற் பாடப்பட்டோர்:சேரமான் குட்டுவன்கோதை, சோழன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி, ஏனாதி திருக்கிள்ளி, ஈர்ந்தூர்கிழான் தோயன் மாறன், சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், சோழிய ஏனாதி திருக்குட்டுவனென்போர்.

சங்கவருண ரென்னும் நாகரியர் :—இவர்பாடிய பெருங்காஞ்சித் துறை இனியபொருள் வாய்ந்தது. இவர்பாடல் யாக்கைநிலையாமை முதலியவற்றை வற்புறுத்திக் கூறும்; இவராற் பாடப்பட்டோன் நந்து மாறன்.

சாத்தந்தையார்:—இவர், பதினெண்கீழ்க்கணக்கினுளொன்றாகிய திணைமொழியைம்பது என்னும் நூலாசிரியரான கண்ணஞ்சேந்தனாரு டைய தந்தையார். மற்போரியல்பு இவர் பாடலிற் காணப்படுகின்றது. இவராற் பாடப்பட்டோன் சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி.

சிறுவெண்டேரையார் :—ஐயாதிச் சிறுவெண்டேரையா ரென்றும் இவர் பெயர் காணப்படுகின்றது.

சேரமான் கணைக்காலிரும்பொறை :—இவன் சோழன் செங்கணா னொடு போர்செய்து பிடிக்கப்பட்டுக் குடவாயிற்கோட்டச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று கேட்டு உடனே பெறாது பின்பு பெற்று அதனை மானத்தால் உண்ணாது கைக்கொண்டிருந்து, "குழவி யிறப்பி னும்" என்னும் பாடலைப் பாடித் தன் கருத்தைப் புலப்படுத்தி அப்பால் துஞ்சினான்.

சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை :—இவன், தன் மனைவி யிறந்தபொழுது பிரிவாற்றாது, "யாங்குப் பெரிதாயினும்" என்னும் பாடலைப் பாடினான்.

சோனாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் :—முகையலூர்ச் சிறு கருந்தும்பியாரென்றும் பிரதிபேதமுண்டு. திருவள்ளுவமாலையில் 17-ஆம் செய்யுளாகிய, "உள்ளுத லுள்ளி" என்னும் வெண்பா இவரால் இயற்றப்பெற்றது. இவராற் பாடப்பட்டோன் வல்லார்கிழான் பண்ணன்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் :—தன்னாட்டில் வேளாண்மைத் தொழிலிற் சிறந்து விளங்கிய பண்ணனென்பவ

னுடைய அரிய குணங்களை இவன் பாராட்டிப் பாடினன். இவனது மற்ற வரலாற்றைப் பாடப்பட்டோர் பெயர் வரிசையிற் காண்க.

சோழன் நல்லுருத்திரன் :—இப்பெயர் சோழன் நல்லுத்தரனென வும், நல்லுத்திரனெனவும், உருத்திரனெனவும் பிரதிகளில் வேறுபட் டுள்ளது. இவன் முயற்சியுடையோரிடத்து மிக்க விருப்பும் முயற்சி யில்லாரிடத்து மிக்க வெறுப்பும் உடையானென்றும் சிறந்த நட்புடை யவர்பாற் பழகும் இயல்பினனென்றும் இவன் பாடிய பாடல் தெரி விக்கின்றது; கலித்தொகையில் முல்லைக்கலி இவன் பாடியது.

சோழன் நலங்கிள்ளி :—இவன் பகைவரை அஞ்சாது வெல்லும் ஆற்றலுடையவனென்றும் பொதுமகளிரைச் சிறிதும் விரும்பாதவ னென்றும் இரப்போர்க்கு எவற்றையும் வரையாது கொடுக்கும் வள்ள லென்றும் செங்கோலை உடையவனென்றும் இவன்பாடிய பாடல்கள் தெரிவிக்கின்றன. இவனுடைய மற்ற வரலாற்றைப் பாடப்பட்டோர் பெயர் வரிசையிற் காண்க. இவன் இயற்றிய பாடல்கள் புறநானூற்றில் இரண்டு.

தண்காற் பூட்கொல்லனார் :—தண்கால் - பாண்டி நாட்டிலுள்ள தோரூர்; திருத்தண்காலென இக்காலத்து வழங்கும்; இது திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. பூண் கொல்லனார்-ஆபரணஞ் செய்யுந் தட்டார்; இவருக்கு இப்பெயர் ஊராலும் தொழிலாலும் வந்தது. இப்பெயர், தங்கால் தாட்கோவலனாரெனவும் தங்கால் பூட்கோவலனார் எனவும் காணப்படுகின்றது. இவர் பாடலில் இல்லற வொழுக்கம் நன்கு கூறப்பட்டுள்ளது.

தாமப் பல்கண்ணனார் :—காஞ்சீபுரத்தின் பக்கத்தில் தாமல் என்று ஓரூர் உள்ளது; இவர் அந்தணர்; அரசரோடு நெருங்கிய பழக்கமுடையவர்; தைரியம் மிக்கவர். இவராற் பாடப்பட்டோன் சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தான்.

தாயங்கண்ணனார் :—எருக்காட்டூர்த் தாயங்கண்ணனாரென்ற புலவரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. இவருடைய பாட்டில், மயானத்தின் இயல்பும் அதன் தொன்மையும் விளங்கக் கூறப்பெற்றுள்ளன; "நெஞ்சமர் காதல ரழுத கண்ணீர், என்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப, எல்லார் புறனுந் தான்கண் டுலகத்து, மன்பதைக் கெல்லாந் தானாய்த், தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே" (புறநா. 356 : 5-9) என்பதைப் பார்க்க; "முன்புறந் தான்காணு மிவ்வுலகை யிவ்வுலகிற், றன்புறங் கண்டறிவார் தாமில்லை-அன்பின், அழுதார்க ணீர்விடுத்த வாருடிக் கூகை, கழுதார்ந் திரவழங்குங் காடு" (பு. வெ.) என்னும் காடு வாழ்த்து மேற்கூறிய பகுதியை ஒத்து விளங்குதல் காண்க. இவர் பெயர் கதையங்கண்ணனாரெனவும் பிரதியிற் காணப்படுகின்றது.

தாயங்கண்ணியார் :—கைம்மை நோன்பு இவர் பாடலிற் கூறப் பெற்றுள்ளது.

திருத்தாமனார் :—இவரால் பாடப்பட்டோன் சேரமான் வஞ்சன்.

தும்பி சொகினனார்:—தும்பி - ஒருவகை வண்டு; சொகினம்- நிமித்தம். தும்பியை நோக்கிச் செய்திகூறிய சிறப்பால் இவர் இப்பெயர் பெற்றார்போலும்; தும்பிசேர் கீரனாரென்றும் பிரதிபேதமுண்டு; இவருடைய பாடல்கள் குறுந்தொகையிலும் நற்றிணையிலும் உள்ளன.

துறையூர் ஓடைகிழார் :—இவர் வேளாளர்; இவர் வறுமையால் மிக்க துன்பமுற்றவரென்று தெரிகிறது. இப்பெயர் துறையூர் அரிசில் கிழாரெனவும் பிரதிகளிலுள்ளது. இவரால் பாடப்பட்டோன் ஆய் என்னும் வள்ளல்.

தொடித்தலை விழுத்தண்டினார் :—தாம் கூறும் முதுமைப்பருவ வருணனையில், 'தொடித்தலை' என்னும் அடையைத் தண்டிற்குக் கூறிய சிறப்பால், இவர் இப்பெயர் பெற்றார் : தொடி - பூண். இவரால் பாடப்பட்டோன் ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன். திருவள்ளுவமாலையில் இவர் பெயரோடு பாடல் ஒன்றுள்ளது.

தொண்டைமான் இளந்திரையன் :—இவன் காஞ்சிநகரத்திருந்த ஓரரசன்; பாடுதலில் வல்லவன்; கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப் படைத்தலைவன் இவனே; இவன் பெயர்க் காரணத்தைப் பெரும்பாணாற்றுப்படை, 37-ஆம் அடியின் விசேடவுரையால் உணர்க. இவன் காலத்துப் புலவர் மேற்கூறிய உருத்திரங் கண்ணனாரும் நக்கண்ணையாரு மாவார்.

நரிவெரூஉத்தலையார் :—இவர், யாதுகாரணத்தாலோ தம் உடம்பு வேறுபட்டிருந்து சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரலிரும்பொறையைக் கண்டநாளில் அவ்வேறுபாடு நீங்கித் தம் உடம்பு பெற்றனர். இது, புறநானூற்றின் 5-ஆம் பாட்டின் பின்புள்ள வாக்கியத்தாலும், "புதுமை பெருமை" (தொல் மெய்ப். சூ. 7. பேர்.) என்பதன் விசேடவுரையாலும் விளங்கும். இவரால் பாடப்பட்டோன் : மேற்கூறிய சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரலிரும்பொறை. இவர் இயற்றிய பாடல்கள் குறுந்தொகையிலும் திருவள்ளுவ மாலையிலும் உள்ளன.

நல்லிறையனார்:—இவர் வாக்கிற் காவிரி சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இவரால் பாடப்பட்டோன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். இறையனார் வேறு; இவர் வேறு.

நன்னாகனார் :—ஆறுகளில் தருமவோடமுண்டென்று இவர் பாடலால் தெரிகின்றது. இவரால் பாடப்பட்டோன் கரும்பனூர்கிழான். பரிபாடலில் இரண்டாம் பாட்டுக்கு இசைவகுத்தவர் இவரே.

நெட்டிமையார் :—இவருக்கு இப்பெயர் உறுப்பால் வந்தது; நெடுமை இமையார். இவரால் பாடப்பட்டோன் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. அப்பாண்டியன் பகைவருடைய மதிலை அழித்து ஊரைப் பாழ்படுத்தினமையும், குதிரைகளைச் செலுத்தி அவர் வயல்களை அழித்தமையும், யானைகளால் அவர் குளங்களைக் கலக்

கினமையும், அவன் செய்த தருமயுத்தமும் இவர் பாடல்களிற் கூறப் பெற்றுள்ளன.

நெடுங்கழுத்துப் பரணர் :—போருக்குச் செல்வோர் வெள்ளுடை உடுத்துச் செல்லவேண்டுமென்பது இவர் பாடலால் தெரிகின்றது. இவருக்கு இப்பெயர் உறுப்பால் வந்ததுபோலும்.

நெடும்பல்லியத்தனார் :—பல்லியம் என்பது பலவாத்தியங்களைக் குறிக்கும். நெடிய பலவாத்தியங்களை உடைமையின், இவருக்கு இப்பெயர் வந்தது; இப்பெயருக்கேற்ப இவர், "நல்யா ழாகுளி பதலை யொடு சுருக்கிச், செல்லா மோதில் சில்வளை விறலி" என்று கூறி யிருப்பது நோக்கத்தகுந்தது. தலைவனது தூய தன்மையினால் பரத்தைமையுடைய தலைவன் நீங்கி ஒழுகுவதற்கு முனிவரது தூய்மையைக் கண்டு தூய்மையில்லாதார் அஞ்சி விலகியொழுகுவதை இவர் உவமையாய்க் கூறியுள்ளார். இவராற் பாடப்பட்டோன் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

நொச்சி நியமங்கிழார் :—நொச்சிநியமம் - ஓரூர்; இக்காலத்து நொச்சியம் என்று வழங்கப்படுகிறது. இவர் வேளாண்மரபினர்; இவர் பாடல்கள் புறநானூற்றிலன்றி அகநானூற்றிலும், நற்றிணையிலும் காணப்படுகின்றன. நொச்சி நியக் கிழாரென்று இப்பெயர் சில பிரதி களில் உள்ளது.

பக்குடுக்கை நன்கணியார் :—நன்கணியாரென்பது இவரது இயற் பெயர்; கணி-சோதிடம்வல்லவன்; உலகத்தை வெறுத்த ஞானியாத லால், இவர் பையையே உடையாகக் கொண்டிருந்தனரென்றும் அது பற்றியே 'பக்குடுக்கை' என்னும் அடை இவர் பெயர்க்குமுன் கொடுக்கப்பட்டதென்றும் தெரிகின்றன; பக்கு-பை (ஐங்குறு. 271). இவர் ஞானியென்பது இவரது செய்யுளால் அறியலாகும்.

பரணர் :—இவர் கபிலர்பால் மிக்க நேயமுடையவர். இது கபில பரணர் என்னும் தொடரால் விளங்கும். இவர் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்துப் பாடிக் கடல்பிறக்கோட்டிய கோச்செங்குட்டுவனிடம் உம்பற்காட்டு வாரியையும், அவன்மகன் குட்டுவன் சேரலையும் பரிசி லாகப் பெற்றனர்; இதனை மேற்கூறிய பகுதியின் இறுதிக்கட்டுரையால் உணர்க. இவராற் பாடப்பட்டோர்: சோழன் உருவப்பஃறேரிளஞ் சேட்சென்னி, சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி, வையாவிக்கோப் பெரும்பேகன், சேரமான் கடலோட்டிய வெல்கெழு குட்டுவனென்பார். "அமரர்ப் பேணியும்" என்னும் ஒளவையாருடைய பாட்டினால், அதியமான் நெடுமானஞ்சியை இவர் புகழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது. திருவள் ளுவமாலையிலுள்ள 'மாலுங் குறளாய்' என்னும் அரிய வெண்பா இவர் பெயரால் உள்ளது. இன்னும் இவரியற்றிய பாடல்கள் நற்றிணையிலும், குறுந்தொகையிலுமுண்டு; 11-ஆம் திருமுறையில் உள்ளதான சிவ பெருமான் திருவந்தாதி யென்னும் பிரபந்தத்தின் ஆசிரியராகிய பரண

தேவநாயனாரென்பவர் இவரென்று சொல்லுவர். இவர் வேறு; வன்பரணர் வேறு. இரண்டு திருவிளையாடற் புராணங்களிலும் இவர் புகழப்பட்டிருக்கிறார். பதிற்றுப்பத்திலும் இந்நூலிலுமன்றி இவர் எட்டுத்தொகையில் இயற்றினவாக உள்ள செய்யுட்கள் 61. இவர் பாடிய பாடல் ஒவ்வொன்றிலும் யாரையேனும் புகழாமலும் அக்காலத்து நிகழ்ந்த கதை எதையேனும் அமையாமலும் இரார்.

பாண்டரங் கண்ணனார் :—இவரால் பாடப்பட்டோன் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி.

பாண்டியன் அறிவுடை நம்பி :—இவர் அரசர்; புதல்வர்களால் உண்டாகும் இன்பமானது இம்மையின்பம் எல்லாவற்றிலும் சிறந்ததென்பதை இவர், "படைப்புப்பல படைத்து" என்னும் பாடலால் நன்கு விளக்கியிருக்கின்றனர்; இவர் காலத்துப் புலவர் பிசிராந்தையார்.

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் :—இவன் கற்றோர்பால் மிக்க மதிப்புடையவனென்றும், கற்றலையே பெரும் பயனாக எண்ணியவனென்றும் இவன்பாடிய பாடல் விளக்கும்; சிலப்பதிகாரக் கதாநாயகனாகிய கோவலனைக் கொல்வித்தவன் இவனே. இதனை அந்நூல் மதுரைக்காண்டத்தின் இறுதிக்கட்டுரையால் உணர்க.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் :—இவன் பகைவரை வெல்லுதலிற் சிறந்தவனென்பதும், குடிகளைப் பாதுகாத்தலில் வன்மையுடையோனென்பதும், புலவர்களால் மதிக்கப்படுதலில் மிக்க நாட்டமுடையோனென்பதும், இரப்போர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்தலையுடையோனென்பதும் இவன் பாடிய பாட்டால் விளங்குகின்றன. இவன் பாடப்பட்டவருள்ளும் ஒருவனாவன்; இவன் வரலாற்றை அவர் வரிசையிற் காண்க.

பாரதம்பாடிய பெருந்தேவனார்:—பெருந்தேவனார் என்பது இவரது இயற்பெயர். இவர் தொண்டைநாட்டினர்; தமிழில் பாரதக் கதையை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இயற்றிய ஆசிரியர்; அந்நூற் செய்யுட்கள் தொல்காப்பியப் பொருளதிகாரம் நச்சினார்க்கினியத்திலும் யாப்பருங்கலவிருத்தி முதலியவற்றிலும் காணப்படும். இவர் கடைச் சங்கப் புலவருள் ஒருவர். நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு என்பவற்றிலுள்ள கடவுள் வாழ்த்துக்களும், திருவள்ளுவமாலையிலுள்ள, 'எப்பொருளும் யாரும்' என்னும் வெண்பாவும் இவராலேயே செய்யப்பட்டுள்ளன. இவருடைய மற்ற வரலாறுகளை ஐங்குறுநூற்றிற் பாடினோர் வரலாற்றிற் காண்க.

பாரிமகளிர்:—இவர்கள் பாரியென்னும் வள்ளலுடைய மகளிர்; இவர்களுள் ஒருத்தி, மழையில்லாத வறட்காலத்தில் இரந்துவந்த ஒரு பாணனை உண்பித்தற்குச் சோறுபெறுமையாற் பொன்னை உலையிற் பெய்து சோறாக்கிக் கொடுத்தாளென்று, "மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்துப், பாரி மடமகள் பாண்மகற்கு-நீருலையுட், பொன்றந்து கொண்டு புகாவாக நல்கினாள், ஒன்றுரு முன்றிலோ வில்"

(பழமொழி, 171) என்னும் வெண்பாவால் விளங்குகின்றது. இவர்கள் தம் தந்தை இறந்தபின்பு அவன் பிரிவாற்ருது வருந்திப் புலம்பிப் பாடினர்; அப்பாடல்கள் படிப்பவர் மனத்தைக் கலங்கச் செய்யும். பின்பு, தம் தந்தையின் தோழராகிய கபிலரால் பார்ப்பார்க்கு மணஞ்செய்து கொடுக்கப்பட்டார்கள்.

பாலைபாடிய பெருங்கடுங்கோ :—இவர் சேரருள் ஒருவர்; பாடப் பட்டோருள்ளும் ஒருவராவர்; இப்பெயர் சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோவெனவும் வழங்கும். பெருங்கடுங்கோ வென்பது இவரது இயற்பெயர். பாலைத்திணையின் இயல்பை நன்ருக விளக்கிப் பாடுதலில் மிக்க ஆற்றல் வாய்ந்தவராதலின் பாலைபாடியவென்னும் அடைமொழி இவர் பெயருக்குமுன் சார்த்தப்பெற்றது; இதனை ஏனைத் தொகைகளில் (அகநா. குறுந். நற்.) காண்க. "வருபடை தாங்கிய கிளர்தா ரகலம், அருங்கட னிறுமார் வயவ ரெறிய, உடம்புந் தோன்ரு வுயிர்கெட் டன்றே,......சேண்விளங்கு நல்லிசை நிறீஇ, நாநவில் புலவர் வாயு ளானே" என ஒரு வீரனது ஆற்றலை இவர் பாராட்டியிருத்தல் கருதத் தக்கது. இவருடைய பிற வரலாறுகள் பாடப்பட்டோர் பெயர் வரிசையில் அறியலாகும்.

பிசிராந்தையார் :—இவர் பாண்டிநாட்டிலுள்ள பிசிரென்னும் ஊரினர்; கோப்பெருஞ்சோழனுடைய உயிர்த்தோழர்; அவன் துறந்து உயிர்நீத்தது கேட்டுத் தாமும் உடன் உயிர்நீத்தார்; "பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே" (215) என்னும் அவன் வாய்மொழி யாலும், "கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி யொப்பின், அதுவே உடனுயிர் நீங்கு முரிமைத்தாய நட்பினைப் பயக்கும்" (குறள், 785, பரிமேல்.), "இதற்குக் கோப்பெருஞ் சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தாரென்று கூறும் புறச்செய்யுட்கள் உதாரணம்" (தொல். கற்பு. சூ. 52, ந.) என்பவற்ருலும் இவை அறியலாகும். இவருடைய பாடல் மிக்க இன்பம் பயக்கும். இவர் நரை திரை மூப்புத் துன்பங்க ளின்றி வாழ்ந்தவர்; அதன் காரணத்தை, "யாண்டு பலவாக" என்னும் இவர் பாடல் புலப்படுத்தும். இவர் பெயர் இரும்பிசிராந்தையாரெனவும் வழங்கும்; இவராற் பாடப்பட்டோர்: கோப்பெருஞ்சோழன், பாண்டி யன் அறிவுடை நம்பி.

பிரமனார் :—நிலையாமையை இவர் நன்கு அறிந்தவர்; அதனை அறிவுறுத்துதலிலும் வல்லவர்; இது, "பொதுமை சுட்டிய மூவ ருலகமும், பொதுமை யின்றி யாண்டிசி னோர்க்கும், மாண்ட வன்றே யாண்டுகள்" என்பதனுல் விளங்கும்.

புல்லாற்றூர் எயிற்றியனார் :—இம்மை மறுமைப் பயன்களை இவர் நன்கறிந்தவர். கோப்பெருஞ் சோழன் தன் மக்களோடு போர் செய்தற்கு எழுந்தபொழுது பாடித் தடுத்த அரிய பாடலே இதனை விளக்கும்; புல்லாற்றூர் எயிற்றியாரெனவும் பிரதிபேத முண்டு. இவராற் பாடப்பட்டோன் மேற்கூறிய கோப்பெருஞ்சோழன்.

புறத்திணை நன்னாகனார் :—புறத்திணைத் துறைகளைச் சிறப்புறப் பாடுதல் பற்றி இப்பெயர் இவருக்கு அமைந்தது போலும். பெருமா விலங்கை, பாரிபறம்பிற் சுனை யென்பவை இவர் வாக்கிற் பாடப்பெற் றுள்ளன; "இல்லோர் சொன்மலை", "நிரயத் தன்னவென் வறன்களைந் தன்றே, இரவி னானே யீத்தோ னெந்தை, அன்றை ஞான்றினோ டின்றி னூங்கும், இரப்பச் சிந்தியேன்...நிறைக்குளப் புதவின் மகிழ்ந்த னென்", "மண்ணுணப் புகழ்வேட்டு நீர்நாண நெய்வழங்கிப் புரந்தோ னெந்தை...யாண்டு நிற்க வெள்ளி" என்பவை உபகாரிகளை இவர் பாராட்டிய அருமைப் பகுதிகள். இவர் பெயர் நன்னாகனாரெனவும் நன்னாதனாரெனவும் சில பிரதிகளில் வழங்கும். இவரால் பாடப்பட் டோர்: ஓய்மான் நல்லியக்கோடன், ஓய்மான் நல்லியாதன், ஓய்மான் வில்லியாதன், கரும்பனூர் கிழானென்பார்.

பூங்கணுத்தரையார் :—இவர் பெண்பாலார். உத்தரையார் என்பது இவருடைய இயற்பெயர். "மீனுண் கொக்கின் றூவி யன்ன, வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன், களிறெறிந்து பட்டன னென்னு முவகை, ஈன்ற ஞான்றினும் பெரிதே" என மறக்குடியிற் பிறந்த முதுமகளின் இயல்பை இவர் தெரிவித்திருத்தல் அறிதற் பாலது. குறுந்தொகையிலும் இவர் செய்யுட்கள் உண்டு.

பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு :—பெருங்கோப் பெண்டு-பட்டத்துத் தேவியார். இவர் தம் கணவனாகிய பூதபாண்டி யன் இறந்தபொழுது அவன் பிரிவாற்றாமல் வருந்தி, 'மற்றை மகளிர் போல யான் இனி உயிரோடிரேன்' என்று, "பல்சான் றீரே" என்னும் அரிய பாடலைப் பாடித் தீயிற் பாய்ந்தார். இவர் காலத்துப் புலவர் மதுரைப் பேராலவாயார். பூதப்பாண்டி என்ற ஓர் ஊர் பாண்டி நாட்டில் உள்ளது.

பெருங்குன்றூர்கிழார் :—இவர் வேளாண் மரபினர். இவர் பதிற் றுப்பத்தில் 9-ஆம் பத்தைப் பாடிச் சேரமான் குடக்கோ இளஞ்சேர லிரும்பொறையிடம் முப்பத்தீராயிரம் காணம் முதலிய பரிசில்பெற் றனர். இதனை, அப்பத்தின் பதிகத்தால் உணர்க. வையாவிக்கோப் பெரும்பேகனால் துறக்கப்பட்ட கண்ணகி யென்பவளை அவனுடன் சேர்த்தற்கு அவனைப் பாடி அதனையே பரிசிலாகக் கூறினர். இவரால் பாடப்பட்டோர் வையாவிக்கோப்பெரும் பேகன், சேரமான் குடக் கோச் சேரலிரும்பொறை, குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை, சோழன் உருவப்பஃறே ரிளஞ்சேட்சென்னி யென்பார். இன்னும் இவரியற்றிய செய்யுட்கள் அகநானூற்றிலும் குறுந்தொகையிலும் நற்றிணையிலு முண்டு. பன்னிருபாட்டியலில் இவர் பெயரோடு சில சூத்திரங்கள் காணப்படுகின்றன. ஈண்டுக் கூறிய கண்ணகி சிலப் பதிகாரத்திற் கூறப்பெற்ற கண்ணகி யல்லள். இறையனாரகப் பொரு ளுரையிலும் இவர் பெயர் வந்துள்ளது. இவர் காலத்துப் புலவர்கள்: சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், இளந்திரு

மாறனார், மதுரையாசிரியன் நல்லந்துவனார், மருத னிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார், பரணர் முதலியோர்.

பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் :—இவரால் பாடப் பட்டோன் சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி. அவனைத் தானாக விரும்பி அவன் வெற்றியைப் பாராட்டி இவர் பாடிய பாடல்கள் மதிக்கற்பாலன;'பெருங்கோழி நாய்கன் மகள் ஒருவன் ஒத்த அன்பினாற் காமமுறுதவழியும் குணச்சிறப்பின்றித் தானே காமமுற்றுக் கூறியது' (தொல். புறத்திணை. சூ. 28, ந.) என்பதும் இதனை வலியுறுத்தும்.

பெருஞ்சித்திரனார் :—அன்பில்லாதவர்கள் எவ்வளவு செல்வ முடையவர்களாக இருப்பினும் அவர்களை இவர் மதிப்பவரல்லர்; 162, 207-8. ஊக்கமுதலிய இயல்பு வாய்ந்தவர்; 161. குமணனுடைய வண்மையைப் புலப்படுத்துதல்முகமாகக் கடையெழு வள்ளல்களின் வரலாறுகள் சிறுபாணாற்றுப்படையிற் போலச் சுருக்கமாக இவரால் கூறப்பெற்றுள்ளன; 158. தம்முடைய தாய், குழந்தைகள், மனைவி, சுற்றத்தார் ஆகிய இவர்கள் பசியால் வருந்துவதை இவர் குமண னுக்குக் கூறும் பகுதிகள் (159) கன்னெஞ்சையும் கரையச் செய்யும்; பசியால் வருந்தும் குழந்தைகளுக்கு அத்துன்பத்தைப் போக்குதற் பொருட்டு, அவ்வப்பொழுது தம் மனைவி செய்யும் உபாயங்களை இவர் கூறும் பகுதிகளும் (160), குமணனளித்த பரிசிலை அம்மனைவியிடம் கொடுத்து, "நீ இனிக் கவலையின்றி வாழ்" (163) என்று கூறுவனவும் அறிதற்பாலன; செய்யுளிலுள்ள பொருளமைதிகளை நோக்கியே இவ ருக்கு இப்பெயரை இட்டனர் போலும்; சித்திரம்-ஆச்சரியம். இவரால் பாடப்பட்டோன் குமணன்; இகழப்பட்டோர்: அதியமானெடுமா னஞ்சி, இளவெளிமானென்பார்.

பெருந்தலைச் சாத்தனார்:—சாத்தனாரென்பது தெய்வத்தான் வந்த இவரது இயற்பெயர்; குமணனது தலையை இவர் பாதுகாத்தது பற்றியோ உறுப்புப் பற்றியோ இப்பெயர் முன் இவ்வடைமொழி சார்த் தப்பெற்றதுபோலும். ஆவூர் மூலங்கிழாரென்பவருடைய புதல்வர் இவர் (அகநா. 224); நள்ளியின் தம்பியாகிய இளங்கண்டீரக்கோவும் இளவிச்சிக்கோவும் சேர்ந்திருந்தபொழுது சென்று இளவிச்சிக் கோவை மதியாமல் இளங்கண்டீரக்கோவைமட்டுந் தழுவி, அதற்குக் காரணமுங் கூறினர்; 151. தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனைக் கண்டு தம்முடைய வறுமைத் துன்பத்தைக் கூறித் தன் தலையைத் துணித்தற்கு அவன் வாள் கொடுப்ப அதனைக் கொண்டு சென்று இளங்குமணனுக்குக் காட்டி அவன் மனத்திலிருந்த மாறுபாட்டைப் போக்கினர்; 164-5. இவரால் பாடப்பட்டோரும் இவர் காலத்தவரும் இளங்கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ, குமணன், இளங்குமணன், கடிய நெடுவேட்டுவன், மூவனென்பார்; இவர் பாடல்கள் அகநானூற்றிலும், நற்றிணையிலும், திருவள்ளுவமாலை யிலும், யாப்பருங்கல விருத்தியுரையிலும் காணப்படுகின்றன.

பெரும்பதுமனார் :—உயர்ந்த கருத்தமைந்த செய்யுள் செய்தலில் வல்லவர்; ஆரியக்கூத்தர் கழையிற் கட்டிய கயிற்றின்மேல் நின்று ஆடுவதும் அப்பொழுது பறை கொட்டுவதும் இவராற் கூறப்பட்டுள்ளன. ''ஆலமரத்தின் பழங்களை நேற்று உண்டேமென்று நினையாமல் மீட்டும் அம்மரத்தின்பாற் செல்லுதலைத் தவிரா, புள்ளினங்கள்; இரவலரும் அத்தன்மையரே; தம்மை ஆதரிப்போர் செல்வமே இவர் செல்வம்; அவர் வறுமையே இவர் வறுமை'' என்பது இவர் பாடலின் (199) பொருள். குறுந்தொகையிலும் நற்றிணையிலும் இவர் பாடல்கள் உள்ளன.

பேய்மகள் இளவெயினி :– பேய்மகள்-தேவராட்டி; பூசாரிச்சி; பேயினது ஆவேசமுற்றவள். இந்த வகையார் இக்காலத்தும் அங்கங்கே உள்ளார். இப்பாட்டின் விசேடவுரையால், பேயே ஒரு மகள் வடிவங்கொண்டு பாடினுளென்று இந்நூலின் பழைய உரையாசிரியர் கருதியதாகத் தெரிகிறது. எயினி-எயினக்குலத்திற் பிறந்த மங்கை. வஞ்சி நகரின் வளமும் தலைவன் கொடையும் இவர் பாடலிற் கூறப்பெற்றுள்ளன. இவராற் பாடப்பெற்றோன் சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பேரெயின் முறுவலார்:—முறுவலாரென்பது இவரது இயற்பெயர்; பேரெயில்-சோழநாட்டிற் காவிரியின் தென்பாலுள்ள தேவாரம் பெற்ற ஒரு சிவஸ்தலம்; இவருக்கு இப்பெயர் ஊராலும் உறுப்பாலும் வந்த பெயர் போலும். அன்றிப் பெரிய மும்மதில்களைத் தமது முறுவலாலெரித்த பரமசிவனுடைய திருநாமம் இவருக்கு இடப்பட்டதென்று கொள்ளினும் பொருந்தும்; முறுவல்-புன்னகை. நம்பி நெடுஞ்செழியனென்பான், இம்மையில் தானடைதற்குரிய இன்பங்களை யெல்லாம் அடைந்தானென்றும் செய்யவேண்டிய நற்காரியங்களையெல்லாம் வழுவின்றிச் செய்தானென்றும் இவர் அவனைப் பாராட்டியுள்ள பகுதிகள் அறியற்பாலன. இவர் செய்யுள் குறுந்தொகையிலும் உண்டு.

பொத்தியார் :—இவர் கோப்பெருஞ்சோழனுடைய உயிர்த்தோழர்; இவருடைய ஊர் உறையூர்; அவன் வடக்கிருத்தற்குச் செல்லும் பொழுது உடன் சென்று அங்கே பிசிராந்தையார் வரக்கண்டு வியந்து (217), ''நீர் பிள்ளையைப் பெற்றபின்பு ஈங்கு வாரும்'' (222)என்று அவன் சொல்லக்கேட்டு மீண்டுவந்து உறையூர் புகுந்து அவனுடைய பிரிவாற்றாமல் வருந்திச் (220) சிலநாள் இருந்து, புதல்வன் பிறந்தபின் சென்று அவன் நடுகற் கண்டு வருந்தி, 'எனக்கு இடந்தா' என்று கேட்டு அவன் இடங் கொடுக்கப்பெற்று வியப்புற்று அவனைப் பாடித் (221-3) தாமும் வடக்கிருந்து உயிர் நீத்தனர். அவனது பிரிவாற்றாமையால் இவர் அடைந்த வருத்தங்களும் அவனுடைய அருமைக் குணங்களும் இவருடைய செய்யுட்களால் விளங்கும். 'கோப்பெருஞ் சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தாரென்று கூறும் புறச்செய்யுட்கள் உதாரணம்' (தொல் கற்பு.

சூ. 53, ந.) என்பது இச்சரிதத்தைத் தெரிவிக்கின்றது. இவராற் பாடப் பட்டோர் : கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையா ரென்பார்.

பொய்கையார் :—இவருடைய ஊர் மலைநாட்டிலுள்ள தொண்டி யென்பது; 48. இவராற் பாடப்பட்டோன் சேரமான் கோக்கோதை மார்பன்; சேரமான் கணைக்காலிரும்பொறையின் அவைக்களத்துப் புலவராக விளங்கியவர்; மூவன் என்பவனை அச்சேரமான் வென்று அவனது பல்லைப் பிடுங்கித் தன்னுடைய தொண்டி நகரத்துக் கோட்டை வாயிற் கதவிலே அழுத்திவைத்த செய்தி இவர் பாடலில் வந்துள்ளது; நற். 18. அச்சேரமானைப் போரில் சோழன் செங்கணான் வென்று சிறையில் வைத்துவிட்டபொழுது சோழன்மீது களவழி நாற்பது என்னும் நூலைப் பாடி அச்சேரமானை மீட்ட பேரருளாளர்; "செய்கை யரிய களவழிப்பா முன்செய்த, பொய்கை யொருவனாற் போந்தரமோ" (பழம்பாடல்), "களவ ழிக்கவிதை பொய்கையுரை செய்ய வுதியன் கால்வ ழித்தளையை வெட்டியர சிட்ட பரிசும்" (கலிங்க.), "இன்னருளின், மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப், பாதத் தளைவிட்ட பார்த்திபனும்" (விக்கிரமசோழனுலா), "பொறையனைப் பொய்கை கவிக்குக், கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோனும்" (குலோத்துங்கசோழனுலா), "பொய்கை களவழி நாற்பதுக்கு, வில்லவன் காற்றளையை விட்டகோன்" (இராசராசசோழ னுலா) என இச்செய்தி கூறப்பெற்றிருத்தல் காண்க. இவர் பாடியன வாக யாப்பருங்கல விருத்தியிற் சில வெண்பாக்களும், பன்னிருபாட் டியலிற் சில சூத்திரங்களும் காணப்படுகின்றன. இவரே பொய்கை யாழ்வாரென்பது சிலருடைய கொள்கை; ஆழ்வார்கள் மறந்தும் புறந்தொழாத பெரியாரென்பது வைஷ்ணவ சித்தாந்தமாதலால் அவர் வேறு, இவர் வேறென்று கொள்வதே மரபு.

பொருந்திலிளங் கீரனார் :—"செறுத்த செய்யுள் செய்செந் நாவின், வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" எனக் கபிலருடைய கல்வி கேள்விகளை இவர் புகழ்ந்திருத்தலால் இவருடைய நற்குணம் வெளி யாகின்றது; 53. இவராற் பாடப்பெற்றோன் சேரன் மாந்தரஞ் சேரலிரும் பொறை.

பொன்முடியார் :—இவர் சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையின் காலத்தவர்; தகடூர் யாத்திரை யென்னும் நூலில் இவராற் செய்யப்பட்ட சில செய்யுட்களுமுள்ளன; தொல். புறத்திணை. சூ. 8, 12, ந. இவருடனிருந்த புலவர் அரிசில்கிழார். இவராற் பாடப் பட்டோன் அதியமான் நெடுமானஞ்சி. திருவள்ளுவமாலையிலும் இவர் பெயரோடுள்ள செய்யுளொன்று காணப்படுகின்றது. மறக்குடியிற் பிறந்த முதியவள் கூற்றாக இவர் கூறிய, "ஈன்றுபுறந் தருதலென்றலைக் கடனே, சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே, வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே, நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே, ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக், களிறெறிந்து பெயர்தல்

காளைக்குக் கடனே" (312) என்னும் பாடலால், ஒவ்வொருவருக்கு முரிய கடப்பாடுகள் இவை என்பது விளங்கும்; இவர் கூறும் உவமை இனிமை வாய்ந்தது; இது, "சிற்றூ ரரசனுடையதும் உழுத்தஞ்சக்கை யுண்டதும் அலங்கார மில்லாததுமான குதிரை, பகைவருடைய சேனை யைக் கடலில் அலைகளைப் பிளந்து செல்லும் தோணியைப்போல விரைந்து அஞ்சாமல் செல்லாநின்றது. பெருஞ்செல்வத்தையுடைய அரசரின் நெய்விரவிய கவளத்தை உண்டனவும் மிக்க அலங்கார முள்ளனவுமான குதிரைகள் முருகன் கோயிலில் கலந்தொடாதமகளி ரைப் போலப் போரில் சும்மா நிற்கின்றன" (299) என்பதனால் விளங்கும்.

மதுரை அளக்கர்ஞாழலார் மகனார் மள்ளனார்:—அளக்கர்ஞாழ லென்பது ஓரூர். மள்ளர் என்பது வீரரைக் குறிக்கும் சொல். பாண்டிய அரசரால் முதலில் இவர் பாதுகாக்கப்பெற்றவர்; சுக்கிரன் வானத்தில் தென்பாற் காணப்படின் மழை குறையுமென்று இவரறிந்திருந்தவர்; 388: 1-2, 15-6. இவராற் பாடப்பட்டோன் சிறுகுடிகிழான் பண்ண னென்பவன். ஏனைத் தொகைகளிலும் (அகநா. குறுந். நற்.) இவருடைய பாடல்கள் காணப்படுகின்றன. இப்பெயர் 'அளக்கர் ஞாழார்' என்று பிரதிகளிற் காணப்படினும் அது பிழையென்று தோற்றுகின்றது.

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்:—இவர் ஆடை விற்கும் வணிகர்; அறுவை-ஆடை. வேட்டனார் என்ற பெயர்க் காரணம் புலப்படவில்லை. "அரவுறை புற்றத் தற்றே நாளும், புரவலர் புன்கணோக்கா திரவலர்க், கருகா தீயும் வண்மை, உரைசா னெடுந் தகை யோம்பு மூரே" (329) என்பது இவருடைய பாடற்பகுதி; ஏனைத் தொகைகளிலும் (அகநா. குறுந். நற்.) திருவள்ளுவமாலையிலும் இவர் பாடல்கள் காணப்படுகின்றன.

மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்:—கௌசிகனாரென்பது இவ ரது இயற்பெயர்; ஒருமுனிவர் பெயர் இவருக்கு இடப்பட்டது. பகைவர் சேய்மையிலிருந்தே அஞ்சுதற்குரிய ஒளி தன்பால் அமையப்பெற்ற தலைவனுக்கு நல்லபாம்பு தங்கும் புற்றையும் கொல்லேறு திரிந்துலா வும் மன்றத்தையும் இவர் உவமை கூறியிருக்கின்றார்.

மதுரை ஓலைக்கடைக் கண்ணம்புகுந்தாராயத்தனார்:—ஓலை-ஓலை யால் இயற்றப்பட்ட குடை; தாறு முதலியவற்றின் ஓலையுமாம். இதனால், இவர் வியாபாரஞ் செய்பவரென்று தெரிகிறது; இவர் பாடிய மகட்பாற் காஞ்சி இன்சுவை யுடையது.

மதுரைக் கணக்காயனார்:—கணக்காயனார்-ஓதுவிப்பார்; "கணக் காய ரில்லாத வூரும்" (திரி. 10). இதனால், இவருடைய தொழில் இன்ன தென்று விளங்கும்; திருவருளாற் கிடைத்த சங்கப்பலகையில் முதலில் ஏறி வீற்றிருந்தவரும் நல்லிசைப் புலவர்களின் நடுநாயகமாக விளங்கி யவருமான நக்கீரனாருடைய அருமைத் தந்தையார் இவர். இதனா லேயே இவருடைய தவப்பயனும் கல்விப்பெருமையும் விளங்கும்; பகைவருடைய பெருஞ்சேனையைத் தனியே நின்று தடுக்கும் ஒரு

வீரனை, "பெருங்கடற் காழி யனையன்", "தொன்மை சுட்டிய வண்மையோன்" என்று இவர் பாராட்டினர்.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் :—இவரூர் மதுரை; மதுரைக் கணக்காயனாரென்பது இவர் தந்தையார் பெயர். குலம், ஒரு வகை வேதியர் குலமென்பது சிலர்கொள்கை. கடைச்சங்ககாலத்திற் சங்கப்பலகையில் முதலிடத்தை முதலில் ஏற்றவர் இவரே; கீரங்கொற்றனாருடைய தந்தையார்; இந்நூலிற் பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனுக்குச் சிவபிரான், பலதேவர், மாயோன், முருகவேளென்பவர்களை உவமையாக்கி இவர் பாடிய பூவைநிலையும்(56), பொதுவாகப் பாடிய பொருண்மொழிக்காஞ்சியும் (189) மிக அழகுவாய்ந்தவை. திருமுருகாற்றுப்படையும், நெடுநல்வாடையும் இவர் இயற்றிய நூல்கள். நக்கீரர் நாலடி நாற்பதென்னும் நூலொன்றும் இவர் இயற்றியதாக யாப்பருங்கலவிருத்தி முதலியவற்றால் தெரிகின்றது. இறையனாரகப் பொருளுக்கு முதலுரை கண்டவர் இவரே. இவர் செய்தனவாகச் சில தனிப்பாடல்கள் வழங்குகின்றன. இவர் இயற்றியதாகத் திருக்காளத்தி ஞானப்பூங்கோதை ஸகஸ்ரநாமம் ஒன்று தஞ்சாவூர் அரண்மனைப் புத்தகசாலையிலுள்ளதென்பர். அதனால், இவர் வடமொழியிலும் பயிற்சியுள்ளவரென்று தெரிகின்றது. இவருடைய மாணாக்கர் இவர் புதல்வரான கொற்றனாரென்பவரே. இன்னும் 11-ஆம் திருமுறையில் காணப்படும் கைலைபாதி காளத்திபாதியந்தாதி முதலிய 10 பிரபந்தங்களின் ஆசிரியர் இவரே யென்பாரும் உளர். மதுரைப்பட்டிமண்டபம் (வித்தியாமண்டபம்) புகுந்து வடமொழியே சிறப்புடையதென்றும் தென்மொழி இழிந்ததென்றும் கூறிய குயக்கொண்டானென்பவனை இறக்கப்பாடி, சிலர் வேண்ட அவனைப் பிழைப்பிக்கவும் பாடிய ஆற்றல் வாய்ந்தவர். இவருடைய வரலாறு இவரியற்றிய பிரபந்தங்களாலும், தனிப்பாடல்களாலும், திருப்புகழாலும், கல்லாடம் முதலியவற்றாலும், தொல்காப்பியவுரைகளாலும், இறையனாரகப் பொருளுரையாலும், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், திருவிளையாடல், திருப்பரங்கிரிப்புராணம், சீகாளத்திப் புராணம் முதலியவற்றாலும் நன்கு விளங்கும். இவருடைய திருவுருவம் திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீமுத்துக்குமாரக்கடவுளின் பக்கத்தே எழுந்தருளியிருக்கின்றது; திருவிழாக் காலத்தில் அதற்குப் புறப்பாடு உண்டு. மதுரை மேலைமாசிவீதியின் மேல்சிறகில் நக்கீரர் கோயிலென்று ஒரு கோயில் பெரிதாகவுள்ளது; அது சங்கத்தார் கோயிலெனவும் வழங்கும். ஈங்கோய் மலையென்னும் சிவஸ்தலத்தில் பண்டைக்காலத்தில் ஓரரசர் நக்கீரர் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்து நிவந்தங்கள் அமைத்தனரென்று அத்தலத்திலுள்ள ஒரு சாசனம் தெரிவிக்கிறது. நக்கீரராற் பிரதிட்டை செய்யப்பெற்றதாகக் கருதப்படும் ஒரு சிவலிங்கப்பெருமான் நக்கீரநாதர் அல்லது நக்கீரலிங்கம் என்னும் திருநாமத்தோடு திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கின்றனர். இவர் வரலாறு இன்னும் விரிப்பிற் பெருகும்.

மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார் :—வெண்ணாகனா ரென்பது இவரது இயற்பெயர்; இவர் பாடிய வல்லாண்முல்லைத்துறை பொருட்சிறப்புடையது. அகநானூற்றில் ஒரு செய்யுள் இவர் பாடியதாக வுள்ளது.

மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் :—இவர் கூல வியாபாரி; கூலம் - நெல் முதலியவை; பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனை நோக்கி அவனுடைய இயல்புகளைச் சுருக்கிக் கூறியவர்; 59. பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் வரலாற்றையும் அவள் மேம்பாட்டையும் சேரன் செங்குட்டுவனுக்கு அறிவுறுத்தி அவனைக் கொண்டு அவளுக்குக் கோயில் கட்டுவித்து நித்தியபூசை முதலியன நடக்கும்படி செய்தவர். அவ்வரசனுக்குக் கண்ணகியின் வரலாற்றைக் கூறியபொழுது அவனோடு கேட்டுக்கொண்டிருந்தவரும் துறவுபூண்டவருமாகிய இளங்கோவடிகள் அவளுடைய சரித்திரத்தைப் பொருட்டொடர்நிலைச் செய்யுளாகச் செய்தற்கு வேட்கையடையும் வண்ணம் செய்தவரும் இவரே; இதனைச் சிலப்பதிகாரத்தின் பதிகத்தாலும், அந்நூற் காட்சிக் காதையாலும் உணர்க. மணிமேகலை நூலாசிரியர் இவரே; 'சீத்தலைச் சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலை' (தொல். செய். சூ. 241, பேர்.) ஏனைத் தொகைநூல்களிலும் (குறுந். அகநா. நற்.) இவர் செய்யுட்கள் உண்டு. திருவள்ளுவ மாலையில் இவர் பெயரோடு ஒரு வெண்பா, காணப்படுகிறது. இவர் பெயர், மதுரைச் சீத்தலைச் சாத்தனா ரெனவும், சீத்தலைச் சாத்தனாரெனவும், சாத்தனாரெனவும் வழங்கும்; "தண்டமிழ்ச் சாத்தன்" (பதிகம், 10) என்றும், "தண்டமி ழாசான் சாத்தன்" (25: 66) என்றும், "நன்னூற் புலவன்" (25: 106) என்றும் சிலப்பதிகாரத்து இவர் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றனர். சங்கத்தில் அரங்கேற்றுவித்தற்பொருட்டு வரும் நூல்களிற் பிழைகள் காணப்படுந் தோறும் ஆக்கியோர்களைக் குற்றங்கூறுதற்குத் துணியாராய், 'இந்தப் பிழைகளைக் கேட்கும்படி நேரிட்டதே' என்று இவர் மனம் வருந்தித் தமது தலையைக் குத்திக்கொள்வாரென்றும், அதனால் தலை புண்பட்டுச் சீயோடிருந்தமையின், சீத்தலைச் சாத்தனாரென்பது இவர்க்குப் பெயராயிற்றென்றுங் கூறி, "வள்ளுவர்முப் பாலாற், றலைக்குத்துத் தீர்வு சாத் தற்கு" என்று மருத்துவன் தாமோதரனார் திருக்குறளைச் சிறப்பித்துக் கூறிய செய்யுளை ஆதாரமாகக் காட்டுவர் ஒருசாரார்; 'சீத்தலைச் சாத்தன், கொடும்புறமருதியென்பன சினைப்பெயரொடு தொடர்ந்து வரும் முதற்பெயர்' (தொல். பெயர். சூ. 20, இளம்.) என்பது இக் கருத்தை வலியுறுத்தும். சிலப்பதிகாரத்தை இவர் கேட்டனரெனச் சிலப்பதிகாரப் பதிகத்து இறுதியிலும், மணிமேகலையைச் சிலப்பதிகார நூலாசிரியர் கேட்டனரென அந்நூற்பதிகத்து இறுதியிலும் கூறியிருத்தலால், இளங்கோவடிகளும் இவரும் ஒரேகாலத்தினரென்பது அறியப்படுகின்றது. சீத்தலையென்னும் ஓர் ஊரிலுள்ள ஐயனார் பெயராகிய சீத்தலைச் சாத்தனாரென்பது இவரது இயற்பெயரென்பது ஒரு சாரார்

கொள்கை; உண்மை விளங்கவில்லை. இவரைப்பற்றிய பிற வரலாறு களை மணிமேகலைப் பதிப்பிற் காணலாம்.

மதுரைத் தமிழக்கூத்தனார் :—ஆரியக்கூத்து முதலியவற்றைப் போலத் தமிழ்மொழிக்கேயுரிய கூத்தாற் பெயர்பெற்றவர் இவர். இவருக்குக் கடுவன் மள்ளனார், நாகன்றேவனாரென இரு புதல்வருளர்; அகநா. 70, 164, 354. இவர் பாட்டில் வந்துள்ள உவமையும் தலைவன் தலைவிகளுக்குரிய இல்லற முறையும் அறிந்து இன்புறற்பாலன.

மதுரை நக்கீரர்:—நிலையாமையை இவர் எடுத்துக்காட்டியிருக்கும் முறை மிக அழகிது; 365. இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனால் ஆதரிக்கப் பெற்றவர்; கபிலருக்கும் வேள்பாரிக்கும் காலத்தாற் பிற்பட்டவர்; அகநா. 36, 78.

மதுரைப் படைமங்கமன்னியார் : - ாயினனென்னும் ஒருபகாரி யையும் அவனது ஊராகிய வாகையென்பதையும் இவர் பாராட்டி யிருக்கிறார்.

மதுரைப்பூதனிளநாகனார்:—தன்னுடைய தறுகண்மையாற் பகை வருடைய சேனையை அஞ்சுவித்து வேறுபடுத்தும் ஒரு வீரனுக்குக் குடத்திலுள்ள பாலையெல்லாம் தயிராகத் திரிக்கும் சிறுபிரையை இவர் உவமை கூறியிருக்கின்றனர்.

மதுரைப் பேராலவாயார் :—சொக்கநாதக் கடவுள் ஒரு புலவராக வந்து சங்கப்புலவருடைய வழக்கை விடுவித்தபொழுது முதலில் அவர் பெயராக அமைந்திருந்த இப்பெயர் (திருவால. 15 : 13-9), பின்பு அவர்களுள் ஒருவராகிய இவருக்கு இடப்பட்டு வழங்கலாயிற்று; ஒல்லை யூர் தந்த பூதபாண்டியன் காலத்தினர் இவர். அவன் இறந்தபின்பு தானும் இறத்தற்குத் தீயிற் பாயும் அவன் மனைவியின் நிலைமையைப் பார்த்து இவர் கூறிய பாடல் (247) யாருடைய மனத்தையும் நெகிழ் விக்கும். இன்னும் இவர் செய்த பாடல்கள் ஏனைத் தொகைகளிலும் உண்டு; அகநா. நற்.

மதுரை மருதனிள நாகனார்:—இவராற் பாடப்பட்டோன், பாண்டி யன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன்; இவர் பாடலில், திரிபுரவிசயமும், திருச்செந்தூரில் முருகக்கடவுள் எழுந்தருளிய துறைக்கண்ணுள்ள மணற்குவியல்களும் பாராட்டப்பெற்றுள்ளன. இறையனாரகப்பொருளுக்கு நல்லுரை யியற்றியவர்களுள் இவருமொரு வர். 'உருத்திரசன்மன்......எல்லாரும் முறையே உரைப்பக் கேட்டு வாளாவிருந்து மதுரை மருதனிள நாகனார் உரைத்த விடத்து ஒரோ வழிக் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்தி......இருந்தான்' (இறை. முதற் சூத்திரவுரை) என்பதனால், அவ்வுரையின் பெருமை விளங்கும். இவர் பாடல்கள் ஏனைத் தொகைகளிலும் (அகநா. குறுந். நற்.) காணப்படுகின்றன.

மதுரை வேளாசான் :—வேள்-யாகஞ்செய்யுந் தொழிலின் பெய ராகிய வேட்டலென்பதன் முதனிலை; ஆசான்-ஆசிரியன். ஒரு வேந்த

னிடமிருந்து மற்றொரு வேந்தன்பால் அந்தணன் தூது செல்லுதற்குரிய னென்பது இவர் பாடலால் தெரியவருகின்றது.

மருதனிளநாகனுர் :—இப்பெயர் மருதினிள நாகனுரெனவும் பிரதிகளிற் காணப்படுகின்றது. இவராற் பாடப்பட்டோர் : பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, நாஞ்சில் வள்ளுவனென்பார். மருதக்கலியைப் பாடியவர் இவர்; "மருதனிள நாகன் மருதம்" என்பதனுல் உணர்க. இவர் பாடல்கள் ஏனைத் தொகைகளிலும் (அகநா. குறுந். நற்.) காணப்படுகின்றன.

மாங்குடிகிழார் :—இவராற் பாடப்பட்டோர் : தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், வாட்டாற்றெழினியாதனென்பார். இவர் பாடலொன்றில் (24) எவ்வியென்னும் வேளினுடைய மிழலைக் கூற்றத்தையும் பழைய வேளிர்களுக்குரிய முத்தூற்றுக் கூற்றத்தையும் மேற்கூறிய செழியன் கைப்பற்றினமை கூறப்பெற்றுள்ளது; இவர் பாடல்கள் ஏனைத் தொகைகளிலும் வந்துள்ளன; குறுந். நற்.

மாதி மாதிரத்தனுர் :—இஃது இந்நூல் 186-ஆம் செய்யுளியற்றிய ஆசிரியர் பெயராகச் சில பிரதிகளில் காணப்படுகின்றது.

மார்க்கண்டேயனுர் :—ஒரு முனிவர் பெயராகிய இஃது இவருக்கு இடப்பட்டது. இவரியற்றிய நூலைத் தலையாயவோத்தென்பர். (தொல். புறத்திணை. சூ. 20, ந.); மார்க்கண்டேயனுர் காஞ்சி யென்று ஒரு நூற் பெயரும் ஒரு செய்யுளும் வழங்கும்; யா. வி.; யா. கா.; உரை.

மாற்பித்தியார் :—இவர் பெண்பாலாரென்று தெரிகிறது. பெருஞ் செல்வத்தை நுகர்ந்த ஒரு தலைவன் அச்செல்வத்தை வெறுத்துத் துறவு பூண்டு கடிய விரதங் கொண்டு நோற்றிருத்தல் இவர் பாடல்களிற் கூறப்பெற்றுள்ளது.

மாறோக்கத்து நப்பசலையார் :—மாறோக்கம் - கொற்கையைச் சூழ்ந்ததொரு நாடு; ந:சிறப்புப் பொருளைத் தருவதோர் இடைச்சொல். பசலை - கணவனைப் பிரிந்த மகளிருடைய நெற்றி முதலியவற்றில் உண்டாவதாகிய வேறுபட்ட நிறம்; "மணிமிடை பொன்னின் மாமை சாயவென், அணிநலஞ் சிதைக்குமார் பசலை" (நற். 304) எனப் பசலையின் இயல்பை விளங்கக் கூறியிருத்தலின், இவர் இப்பெயர் பெற்றுர்; சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுடைய போர் வென்றியையும் அவன் கொடை முதலியவற்றையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். அவன் இறந்தபொழுது இவர் பாடிய பாடல் படிப்பவர் மனத்தை உருக்கும். மலையமான் திருமுடிக் காரியும் அவன் மகன் சோழிய வேனுதி திருக்கண்ணனும் கபிலரும் இவராற் பாராட்டப் பெற்றோராவார். இவர் பெண்பாலாரென்று தெரிகிறது; இவர் இயற்றிய செய்யுளொன்று நற்றிணையில் உண்டு.

முரஞ்சியூர் முடிநாகராயர் :—இப்பெயரினரொருவர் தலைச்சங்கத்தில் இருந்தனரென்று இறையனுரகப்பொருளின் முதற் சூத்திரவுரை

யால் தெரிகின்றது. இவராற் பாடப்பட்டோன் சேரமான் பெருஞ் சோற்று உதியஞ் சேரலாதன்.

மோசி கீரனார் :—மோசியென்பது ஓர் ஊர். மோசி கொற்றனார் இவ்வூரினரே. இவராற் பாடப்பட்டோர் : சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும்பொறை, கொண்கானங்கிழானென்பார். இவர் பெயர் மோசு கீரனாரெனவும் வழங்கும்; "நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே, மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம், அதனால், யானுயி ரென்ப தறிகை, வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே" என்பது இவருடைய பாடல்களுள் ஒன்று.

மோசி சாத்தனார் :—இவர் செய்யுளிற் களவேள்வி ஒரு வகையாக விளங்கக் கூறப்பெற்றுள்ளது.

வடம நெடுந்தத்தனார் :—இவராற் பாடப்பட்டோன் நாலை கிழவன் நாகனென்பான். இவர் பெயர் வடநெடுந் தத்தனா ரெனவும், வடம நெடுந் தச்சனாரெனவும் சில பிரதிகளிற் காணப்படு கின்றது.

வடம வண்ணக்கன் தாமோதரனார் :—வண்ணக்கன் - நாணய பரிசோதகன்; இப்பொருள் நீலகேசியுரையிற் கண்டது. நோட்டக்கார னென்னும் பெயர் இப்பொருளில் இக்காலத்து வழங்கப்படுகின்றது. தாமோதரனாரென்பது கடவுள் பெயரால் வந்த இவரது இயற்பெயர். இவர் வடதிசையிலிருந்து வந்தவராக எண்ணப்படுகிறார். இவராற் பாடப்பட்டோன் பிட்டங்கொற்றனென்பான்.

வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் :—இவராற் பாடப்பட்டோன் தேர்வண் மலையன். அவனை நோக்கி இவர்,"உழுத நோன்பக டழிதின் றாங்கு, நல்லமிழ் தாகநீ நயந்துண்ணு நறவே" என்கிறார்; அழி - வைக்கோல். இப்பெயர் வடவண்ணக்கன் பெருஞ்சாத்தனாரெனவும் வழங்கும்.

வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் :—"தெண்கடல், முழங்குதிரை முழவின் பாணியிற் பைபயப், பழம்புண் ணுறுநரிற் பரவையி னாலும்" (நற். 378) எனக் கடலலையின் ஒலிக்கு முழவின் ஒலியை உவமங் கூறிய சிறப்பால் இவர் பெயர்க்குமுன் 'பேரி' என்னும் அடை கொடுக்கப்பட்டது போலும். இவராற் பாடப்பட்டோன் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனென்பான். அவனை நோக்கி, 'நீயும் நின் புதல்வரும் அவர்பெறும் புதல்வரும் நீடுவாழ்க' என்று கூறும் பகுதி மிக்க நயமுடையது. இவர் பாடல்கள் ஏனைத் தொகை களிலும் காணப்படுகின்றன; அகநா. குறுந். நற்.

வடமோதங்கிழார் :—இவருடைய பாடலிற் பகைவர் கைப்பற்றிச் சென்ற நிரையை மீட்டுவந்த வீரனொருவன் தன் உயிர்விட்ட சிறப்பும் அவனுக்காக நடப்பட்ட வீரக்கல்லில் அவன் தெய்வமாக வாழ்ந்ததும் கூறப்பெற்றுள்ளன. இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு செய்யுள் காணப்படுகின்றது.

வன்பரணர் :—பரணர், நெடுங்கழுத்துப் பரணரென வேறு இரு புலவர் உளராதலின், இவர் பெயர்க்குமுன் வன்மையென்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது. இவருடைய செய்யுளிலுள்ள பொருள் நயம் சிறந்தது. இவராற் பாடப்பட்டோர்: கண்டீரக்கோப்பெருநள்ளி, வல்வில்லோரி யென்பார். நள்ளியை நோக்கி, 'நீ முற்ற அளித்ததால், இனி எம்முடைய நா ஏனை அரசரைத் துதித்தலை யறியாது' என்பர்: "பரிசின் முற்றளிப்பப், பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச், செய்யா கூறிக் கிளத்தல், எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே" (148). பெருஞ் செல்வத்தை அடைந்தமையால், எம்மவர் ஆடல்பாடல்களை அடியோடே மறந்தனரென்பதைப் புலப்படுத்தி, "மாலை மருதம் பண்ணிக் காலைக், கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி, வரவெமர் மறந்தன ரதுநீ, புரவுக்கடன் பூண்ட வண்மை யானே" (149) எனவும், "பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக், கூடுகொ ளின்னியங் கறங்க, ஆடலு மொல்லார்தம் பாடலு மறந்தே" (153) எனவும் கூறுவர்; நள்ளி தன்னை இன்னானென்று புலப்படுத்தாமல் உணவு முதலியவற்றை அன்புடனளித்துச் சென்ற அருமையைக் கூறிய 150-ஆம் செய்யுள் அறிஞரும் கொடையாளிகளும் எப்பொழுதும் படித்துக் கைக்கொண்டொழுகற் பாலது. வல்விலோரியின் வில்வன்மையைப் புலப்படுத்தற்கு, "வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி, பேழ்வா யுழுவையைப் பெரும்பிறிதுறீஇப், புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக், கேழற் பன்றி வீழ வயல, தாழற் புற்றத் துடும்பிற் செற்றும், வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்" (152) என இவர் கூறிய அருமை நுணுகி அறிதற்பாலது. இவர் செய்ததாக நற்றிணையில் ஒரு செய்யுள் காணப்படுகின்றது.

வான்மீகியார் :—ஒரு முனிவர் பெயராகிய இப்பெயர் மரபு பற்றி இவருக்கு இடப்பட்டது போலும். இவர் கூறிய துறவறத்தின் பெருமை அறிதற்பாலது; "வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக், கையவி யனைத்து மாற்றாது" என்பதனால் அறிக. இவர் பெயர் வான்மீகையாரெனவும் வழங்கும். முதற் சங்கத்திருந்த புலவருள் வான்மீகனாரென்று ஒருவருளர்; அவர் வேறு; இவர் வேறு.

விரிச்சியூர் நன்னாகனார் :—தம்முடைய தலைவன் போர்செய்தற்குத் தம்மினும் முந்திச் செல்லுதலை விளக்கிக் கூறியிருத்தலின், இவர் ஒரு வீரராக எண்ணப்படுகிறார்; அன்றி ஒரு வீரன் கூற்றைக் கொண்டு கூறியதுமாம்.

விரியூர் நக்கனார் :—சிவபிரானுடைய திருநாமமாகிய நக்கனாரென்பது இவருக்கு இடப்பட்டது போலும். இப்பெயர் விரியூரக நக்கனாரெனவும் விரியூரங்கனெனவும் பிரதிகளிற் காணப்படுகின்றது. இவர் தம்முடைய தலைவனது வேற்படையைப் பலபடப் பாராட்டிக் கூறியிருக்கின்றனர்.

வீரைவெளியனார் :—வீரைவெளியென்பது ஓரூர். இவர், "முன்றின் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப், பந்தர் வேண்டாப் பலர்தூங்கு

நீழல்'' என்று தம்முடைய தலைவனது வீட்டு முன்றிலையும், ''வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும், அருகா தீயும் வண்மை, உரைசா னெடுந்தகை'' என்று அவன் கொடை விசேடத்தையும் கூறுவர்.

வெண்ணிக் குயத்தியார் :—வெண்ணியென்பது ஓரூர்; குயத்தி-குயச்சாதியிற் பிறந்த மாது. இவராற் பாடப்பட்டோன் சோழன் கரிகாற் பெருவளவன். இப்பெயர் வெண்ணிற் குயத்தியாரெனவும் காணப்படுகின்றது.

வெள்ளெருக்கிலையார் :—இவராற் பாடப்பட்டோன் வேள் எவ்வி. அவனிறந்த பின்பும் இவரிருந்து புலம்பினர். இறந்த அவனுக்கு அவன் மனைவி சிறிய இடத்திற் பிண்டம் வைத்தலைக் கண்டு கூறுதல் வாயிலாக, அவன் பெருங்கொடையைப் புலப்படுத்தினர்.

வெள்ளைக்குடி நாகனார் :—வெள்ளைக்குடி யென்பது ஓரூர். இவர் தம்முடைய பழைய நிலங்களுக்குரிய வரிப்பணத்தைச் செலுத்துதற்கு ஆற்றுதவராகிச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனுக்குச் செவியறிவுறுத்தி அச்செய்களை முற்றூட்டாகப் பெற்றனர். முற்றூட்டு - ஸர்வமானியம். இன்னும் இவர் வாக்காக நற்றிணையில் இரண்டு பாடல்கள் உள்ளன.

வெள்ளைமாளர் :—இவர் பாடிய ஏருண்முல்லைத்துறை மிக்க பொருள் நயமுடையது.

வெறிபாடிய காமக்கண்ணியார் :—இவர் பெண்பாலார். காமக்கண்ணி(காமாக்ஷி) யென்பது காஞ்சிநகரத்திற் கோயில்கொண்டெழுந்தருளிய அம்பிகையின் திருநாமம். வெறியென்பது தெய்வமேறப்பெற்று ஒருத்தி யாடுதல். இது வெறியாட்டமெனவும் வழங்கும்; இதன் இயல்பை நன்குக விளக்கிப் பாடியிருத்தலால், 'வெறிபாடிய' என்னும் அடைமொழி இவர் பெயர்க்குமுன் சேர்க்கப்பெற்றது; அகநா. 22, 92; நற். 268. இவர் பெயர் வெறியாடிய காமக்கண்ணியாரெனவும் பிரதிகளிற் காணப்படுகின்றது. இவர் இந்நூலிற் பாடிய செருவிடைவீழ்தல், குதிரைமறமென்னுந் துறைப்பாடல்கள் அறிதற்பாலன.

வேம்பற்றூர்க் குமரனார் :—வேம்பற்றூரென்பது மதுரைக்குக் கிழக்கே யுள்ளதோரூர்; வேம்பத்தூரென இக்காலத்து வழங்கும்; குலசேகரச் சதுர்வேதிமங்கலமென்றும் இதனுக்கு ஒரு பெயருண்டென்று சிலாசாசனத்தால் தெரிகிறது. கடைச்சங்கப் புலவர் காலந் தொடங்கி இன்றுவரை அந்தணர்களே தமிழ்ப் புலவர்களாக இவ்வூரில் விளங்கியிருத்தல் கண்கூடாதலாலும், பெயராலும் இவர் அந்தணராகக் கருதப்படுகிறார்.

ஆசிரியர் பெயரில்லாத பாட்டுக்கள் :—244, 256-7, 263, 267-8, 297, 307, 323, 327-8, 333, 339-40, 355, 361.

உ

பாடப்பட்டோர் வரலாறு

அகுதை :—இவன் பரிசிலர்க்கு யானைகொடுக்கும் கொடையாளி களுள் ஒருவன்; போர்செய்தலில் வல்லவன்; இவன் ஊர் மதுரை. இவற்றை, "இன்கடுங் கள்ளி னகுதை களிற்றொடு, நன்கல னீயு, நாண் மகி ழிருக்கை" (அகநா.76), "பாவடி யானை பரிசிலர்க் கருகாச், சீர் கெழு நோன்ற ளகுதை", "மணநாறு மார்பின் மறப்போ ரகுதை, குண்டுநீர் வரைப்பிற் கூடல்" (233, 347) என்பவற்றாலுணர்க. இவனைப் புகழ்ந்த புலவர் : வெள்ளெருக்கிலையார், கபிலர்; இவன் பெயர் அஃதை யென்றும் பிரதியிற் காணப்படும்.

அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி :—இவன் ஓரரசன்; போரில் வல்லவன்; சிறந்த கொடையாளிகளுள் ஒருவன்; செங்கோலை யுடையவன்; இவன் யுத்தத்தில் இறந்தபொழுது பிரிவாற்றாது வருந்தி யமனை நோக்கி, "நோயுழந்து வைகிய வுலகினு மிகநனி, நீயிழந் தனையே யறனில் கூற்றம், வாழ்தலின் வரூஉம் வயல்வள னறியான், வீழ்குடி யுழவன் வித்துண் டாஅங், கொருவ னுருயி ருண்ணு யாயின், நேரார் பல்லுயிர் பருகி, ஆர்குவை மன்னோவவ னமரடு களத்தே" என்று அரிசில் கிழார் கூறிய பாட்டே இவன் இத்தன்மையனுதலைப் புலப்படுத்தும்; அதியமான் தகடுரெறிந்து வீழ்ந்த எழினியென்றும் பிரதிபேத முண்டு.

அதியமான் நெடுமானஞ்சி :—இவன் கடையெழுவள்ளல்களி லொருவன்; யுத்தத்திற் பேர்பெற்ற வீரன்; ஒரு வகை வீரர்களாகிய மழவர்களுக்குத் தலைவன்; ஒரு காலத்தில், உண்டோரை நெடுங்காலம் சீவித்திருக்கச் செய்யும் கருநெல்லிப் பழத்தைப் பெற்று அதனை ஔவைக்குக் கொடுத்துப் புகழ்பெற்றவன்; காஞ்சி நகரத்திருந்த தொண்டைமானென்னும் அரசனிடம் ஔவையைத் தூதுவிடுத்தோன்; சேரமானுடைய உறவினன்; பனைமாலையை யுடையவன்; வெட்சிப்பூவையும் வேங்கைப்பூவையும் அணிவோன்; அரசரெழுவர்க் குரிய ஏழிலாஞ்சனையும் நாடும் அரசவுரிமையு முடையோன்; மேற் கூறிய அரசர் எழுவரோடு பகைத்து மேற்சென்று அவரைப் போரில் வென்றோன்; பரணர் புகழ்ந்து பாடும்படி கோவலூரையும் வென்றான். இவனுடைய ஊர் தகடூர்; இவன் மலை குதிரைமலை; இவன் மகன் பொகுட்டெழினி; இவன் முன்னோர், தேவர்களைப் போற்றி வழிபட்டு விண்ணுலகிலிருந்து கரும்பை இவ்வுலகில் கொணர்ந்தனர். அவர் களுக்கு வரங்கொடுக்கும் பொருட்டுத் தேவர்கள் வந்து தங்கியதொரு சோலை இவனூரில் இருந்தது. இவன் பெயர் அதிகமான் நெடுமானஞ்சி யெனவும், நெடுமானஞ்சி யெனவும், அஞ்சி யெனவும், எழினியெனவும் வழங்கும்; 158. இவன் சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையால்

வெல்லப்பட்டானென்று பதிற்றுப்பத்துள் எட்டாம்பத்திலுல் விளங்கு கின்றது. 'ஒருவன்மேற் சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது தன் மதிற் புறத்து வருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதியமானிருந்ததாம்' (தொல்; புறத்திணை. சூ. 7, ந.) என்றதனுல் இவனுடைய வரலாற்றின் ஒரு பகுதி அறியப்படுகின்றது. இவனைப் பாடியவர்கள்: ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனுர், பொன்முடியார்.

அதியமான் நெடுமானஞ்சி மகன் பொருட்டெழினி:—இவன் கொடையும் இன்பச்சிறப்பும் வென்றிச்சிறப்புமுடையோன்: இவன் பெயர் அதியமான் மகன் பொருட்டெழினி எனவும் வழங்கும்; இவனைப் பாடியவர் ஔவையார்.

அந்துவஞ் சாத்தன்:—இப்பெயர்க்கு அந்துவன் மகனுகிய சாத்த னெனப் பொருள் கொள்க. இவன் ஒல்லையூர் தந்த பூதபாண்டிய னுடைய நண்பருள் ஒருவன்; "உரைசா லந்துவஞ் சாத்தனும்" (71)

அந்துவன் கீரன்:—இதற்கு அந்துவன் மகனுகிய கீரனென்பது பொருள். இவனுக்குக் கொடையைச் செவியறிவுறுத்திப் பாடிய புலவர் காவட்டனுர்.

அம்பர்கிழாஅன் அருவந்தை: - இவனைப் பாடிய புலவர் கல்லாட னுர்; 385-ஆம் செய்யுளின் 9-10-ஆம் அடிகளின் குறிப்பாற் பிற வரலாறுகளை உணர்க.

அவியன்:—ஒருபகாரி; இவனைப் பாடியவர் மாறோக்கத்து நப்பசலையார்.

ஆதனழிசி:—ஒல்லையூர் தந்த பூதபாண்டியனுடைய நண்பருள் ஒருவன்.

ஆதனுங்கன்:—இவன் கொடையாளிகளுள் ஒருவன்; வேங்கட மலையின் தலைவன்; இவனைப் பாடிய புலவர் கள்ளில் ஆத்திரையனுர். இவன் அருமைபெருமையை இப்புலவர் பாடிய பாடல்கள் புலப் படுத்தும்.

ஆந்தை:—இவன் ஒல்லையூர் தந்த பூதபாண்டியனுடைய நண்பருள் ஒருவன்; இவனுடைய ஊர் எயிலென்பது; "மன்னெயி லாந்தையும்" (71)

ஆமூர் மல்லன்:—முக்காவனுட்டு ஆமூர் மல்லனென்னும் பெயரைப் பார்க்க.

ஆய்:—இருவகை வேளாளரில் இவன் உழுவித்துண்போர் வகை யினன்; அரசராற் கொடுக்கப்படும் வேளென்னும் உரிமையடைந் தோன்; கடையெழுவள்ளல்களில் ஒருவன்; சிறந்த வீரன்; பொதியின் மலைத்தலைவன்; அதனருகேயுள்ள ஆய்குடி என்பது இவனுடைய ஊர்; ஆய் அண்டிரனென்றும், அண்டிரனென்றும் இவன் பெயர் வழங்கும்; பாணர்க்கும் இரவலர்க்கும் யானைகளையும் பிறவற்றையும் மிகுதியாகக் கொடுத்தோன்; சுரபுன்னைப்பூ மாலையை உடையவன்;

கொங்கு நாட்டாரோடு போர்செய்து அவர்களைப் புறங்காட்டியோடச் செய்தோன்; யாதொரு பயனையுங் கருதாது இரவலர்க்குக் கொடுத்து மகிழ்வித்தலையே கடனாக வுடையோன்; இவனுடைய நற்குண நற்செய்கைகள் யாவும் மனமுருகிப் புலவர்கள் இவனைப் பாடிய பாட்டுக்களால் (127-36, 240-41, 374-5) நன்கு புலப்படும்; இன்னும், பாம்பு பெற்றுக்கொடுத்த நீலஉடையினை ஆலின் கீழெழுந்தருளிய தலைவனுக்கு (பரமசிவனுக்கு) இவன் கொடுத்தனன்; இதனை, "நீல நாக நல்கிய கலிங்கம், ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த, சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள், ஆர்வ நன்மொழி யாயும்" (96-9) என்னும் சிறுபாணாற்றுப்படையால் உணர்க. இவனைப் பாடிய புலவர்கள்: உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், துறையூர் ஓடைகிழார், குட்டுவன் கீரனார். இவர்களுள் இவன் இறந்தபின்பும் இருந்தோர்: துறையூர் ஓடைகிழாரொழிந்த மற்றையோர்.

இயக்கன்:—இவன் ஒல்லையூர் தந்த பூதபாண்டியனுடைய நண்பருள் ஒருவன்.

இருங்கோவேள்:—இவன் கொடையாளிகளுள் ஒருவன்; வடபக்கத்தில் ஒரு முனிவருடைய ஓமகுண்டத்திலே தோன்றித் துவராபதியை (துவாரசமுத்திரத்தை) ஆண்டு நாற்பத்தொன்பது தலைமுறை தொன்று தொட்டுவந்த வேளிர்களுள் ஒருவன்; ஒரு பெரியோர் தவஞ் செய்து கொண்டிருக்கையில் அவருக்கு இடையூறு செய்யவந்த புலியொன்றை அவர் கட்டளையின்படி கொன்றமையால் இவனுக்குப் புலிகடி மாலென்று ஒரு பெயர் உண்டாயிற்றென்பர்; இவற்றை, "நீயே, வடபான் முனிவன் றடவினுட் டோன்றிச், செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை, உவரா வீகைத் துவரை யாண்டு, நாற்பத் தொன்பது வழிமுறை வந்த, வேளிருள் வேளே", "ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்" என்பவற்றாலுணர்க. வேள்பாரி இறந்த பின்பு அவன் புதல்வியரை அழைத்து வந்து மணஞ்செய்து கொள்ளும்படி கபிலர் புகழ்ந்துவேண்ட, அதற்கு உடம்படாது மறுத்தமையால் இவன் அவரால் வெறுக்கப்பட்டான்.

இளங்கண்டீரக் கோ:—இவன் கண்டீரக்கோவின் தம்பி; இவனும் இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்தபொழுது அங்கு வந்த பெருந்தலைச் சாத்தனார் இவனை மட்டும் தழுவ, அவன் இவ்வாறு செய்தது என்னையென, அவர் இவன் மேம்பாட்டைப் புகழ்ந்தும் அவனை அவமதித்தும் பாடினர்.

இளங்குமணன்:—இவன் குமணன் தம்பி; இவன் தன் தமையனும் சிறந்த கொடையாளியுமாகிய குமணன்பாற் பகைமையுற்று அவன் நாட்டைக் கைக்கொண்டு, காட்டிற் புகுந்து ஒளித்திருந்த அவனைக் கொல்ல நினைந்து பின்பு பெருந்தலைச்சாத்தனாரால் அப் பகைமை ஒழிந்து வாழ்ந்தான்.

இளந்தத்தன்:—இவன் ஒரு புலவன்; சோழன் நலங்கிள்ளியிடத்திருந்து உறையூர் புகுந்தபொழுது, ஒற்றுவந்தானென்று காரியாற்றுத்

துஞ்சிய நெடுங்கிள்ளியால் எண்ணப்பட்டு அவன் கொல்லப்புகுந்த விடத்துக் கோவூர் கிழாராற் பாடி விடுவிக்கப்பட்டான்.

இளவிச்சிக்கோ :—இவன் விச்சிக்கோவின் தம்பி; இவனைப் பற்றிய வரலாற்றை, 'இளங்கண்டீரக்கோ' என்பதிற் காண்க. இவன் பெயர் இளவச்சிரக்கோவெனவும் வழங்கும்; இவன் காலத்துப் புலவர் பெருந்தலைச்சாத்தனார்.

இளவெளிமான் :—இவன் வெளிமானுடைய தம்பி; உலோபகுண முடையவன்; கல்விமான்கள்பால் அன்பில்லாதவன். வெளிமானிறந்த பின்பு பெருஞ்சித்திரனார் வந்து, 'பரிசில் கொடு' என்று கேட்ப, சிறிது கொடுத்தமையின் அவரால் அவமதித்துப் பாடப்பெற்றான்; இவன் காலத்துப் புலவர் பெருஞ்சித்திரனார்.

ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் :—இவன் சிறிது செல்வமுடைய வனாயினும் பரிசிலர்க்கு இல்லையென்னாது கொடுப்போன்; தன் அரச னுக்கு வந்த துன்பங்களைத் தாங்கிப் பகைவரை வெல்லும் வீரமுடை யோன்; இவனைப் பாடிய புலவர் : கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார்; ஈரந்தூர் கிழான் கோயமானெனவும் பிரதிபேத முண்டு.

எயினன் :—ஓருபகாரி; இவனது ஊர் வாகையென்பது; இவனைப் பாராட்டிய புலவர் மதுரைப் படைமங்க மன்னியார்.

எவ்வி :—வேளெவ்வியென்னும் பெயரைப் பார்க்க.

எழினி :—இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்; கூவிளங் கண்ணியை யுடையோன்; குதிரைமலை இவனுடையது.

ஏறைக்கோன் :—இவன் குறவர்கள் தலைவன்; காந்தட்பூமாலையை அணிவோன்; மலைநாட்டை ஆள்வோன்; நற்குண நற்செய்கையை உடையவன்; இவனைப் பாடியவர் குறமகள் இளவெயினி யென்பார்.

ஏனாதி திருக்கிள்ளி :—இவன் கொடையும் வீரமுமுடையோன்; இவனைப் பாடிய புலவர் : கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார். ஏனாதியென்பது அரசனாற் கொடுக்கப்படும் பட்டப்பெயர்; தொல்காப்பியப் புறத்திணையியல் 8-ஆம் சூத்திர (ந.) உரையிற் காண்க.

ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் :—இவன் வீரர்க்கும் பாணர்க்கும் விறலியர்க்கும் பேருதவி புரிந்தோன்; வலிய வீரன்; இவன் இறந்தபின்பு பிரிவாற்றாது பாடிய புலவர்: குடவாயிற்கீரத்தனார், தொடித்தலை விழுத்தண்டினார். இவன் பெயர் சாத்தனெனவும் வழங்கும்.

ஓய்மான் நல்லியக்கோடன் :—இவன், ஓய்மானாட்டு நல்லியக் கோடனெனவும் வழங்கப்படுவன். இவன் ஒரு சிற்றரசன்; சிறுபாணாற் றுப்படைத் தலைவன்; இவன் காலத்தில் இவனைப் போன்ற பெருங் கொடையாளிகள் யாரும் இலரென்று தெரிகின்றது. பேகன் முதலிய ஏழு வள்ளல்களுக்கும் இவன் காலத்தாற் பிந்தியவன்; இவை, அப்

பாட்டிலுள்ள, "வஞ்சியும் வறிதே", "மதுரையும் வறிதே", "உறந்தையும் வறிதே" என்பவற்றாலும் அதன் 84-ஆம் அடி முதலியவற்றாலும் விளங்கும். இவன் பரம்பரையில் ஓய்மான் நல்லியாதன், ஓய்மான் வில்லியாதனென்ற இரண்டு உபகாரிகள் இருந்து விளங்கினர்களென்று இந் நூலால் தெரிகின்றது. இவனைப் பாடிய நல்லிசைப் புலவர்கள் : நல்லூர் நத்தத்தனாரும், புறத்திணை நன்னாகனாருமாவார். கிடங்கிலென்னும் ஊரும் திருத்திண்டீசுவரமும் (திண்டிவனமும்) ஓய்மானாட்டில் உள்ளனவென்று தென்னிந்திய சிலாசாசனத்தின் 3-ஆம் தொகுதி, 2-ஆம் பகுதி, 201-ஆம் பக்கத்திலுள்ள சாசனத்தால் தெரிகின்றது; கிடங்கில் (சிறுபாண். 160) என்பது திண்டிவனத்தைச் சார்ந்த ஊர்களுளொன்று; இக்காலத்துக் கிடங்காலென வழங்கும்; யாப்பருங்கல விருத்தியின் மேற்கோளாகிய "கிடங்கிற் கிடங்கில்" என்னும் வெண்பாவில் வந்துள்ள கிடங்கிலென்னும் ஊர் இதுவே. இவ்வூரிற் சிதைந்த அகழியும் இடிந்த கோட்டையும் இன்றும் காணப்படுகின்றன. இவனுடைய ஊர்களுள் ஒன்றாகிய மாவிலங்கை (176) புனனாட்டுக்கு வடக்குள்ள அருவாநாடு, அருவாவடதலை நாடென்ற இரண்டும் சேர்ந்த இடமென்று கூறுவர். அவ்வூர் சிறுபாணாற்றுப் படையாலும் இவனதென்று தெரிகின்றது. இவனுடைய மற்ற ஊர்களுள் எயிற்பட்டினம், வேலூர், ஆமூரென்பவை தொண்டை நாட்டிலுள்ள இருபத்துநான்கு கோட்டங்களுள் மூன்று கோட்டங்களுக்குத் தலைநகரங்களாக உள்ளவை. வேலூர் உப்பு வேலூரென்று இக்காலத்து வழங்குகின்றதென்பர். "உறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்" (சிறுபாண். 122) என்பதனால், ஓவியர்குடியிற் பிறந்தவனென்று எண்ணப் படுகின்றான். ஓவியர்குடி நாகர் வகுப்பினுள் ஒரு பிரிவென்பர். இவன் பெயர் ஏறுமா நாட்டு நல்லியக்கோடனெனவும் வழங்கும்.

ஓய்மான் வில்லியாதன் :—இவன் இலங்கை என்னும் ஊர்க்குத் தலைவன்; இவ்விலங்கை மேற்கூறிய மாவிலங்கையென்னும் ஊரென்பதும் இவன் மேற்கூறிய ஓய்மான் நல்லியக்கோடன் பரம்பரையைச் சார்ந்தோனென்பதும் ஊகித்தறியப்படுகின்றன. இவனைப் பாடிய புலவர் புறத்திணை நன்னாகனார்.

கடியநெடுவேட்டுவன் :—இவன் கொடையாளிகளுளொருவன்; வேடர்கள் தலைவன்; தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவி புரிந்து பகைவர்களை அழிக்கும் வன்மையுடையவன்; கோடையென்னும் மலைக்குத் தலைவன்; இவனைப் பாடியவர் பெருந்தலைச்சாத்தனார்.

கண்டீரக்கோப் பெருநள்ளி :—இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்; தோட்டியென்னும் மலைக்கும் அதனைச் சார்ந்த மலைநாட்டிற்கும் காட்டு நாட்டிற்கும் தலைவன்; "கரவாது, நட்டோ ருவப்ப நடைப்பரி காரம், முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத், துளி மழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு, நளிமலை நாட னள்ளியும்" (103-7) எனச் சிறுபாணாற்றுப்படையிலும் இவனைப் புகழ்ந்து கூறினர்;

இவன் பெயர் கண்டிற்கோப் பெருநள்ளியெனவும், நள்ளி யெனவும், கண்டிற்கோப் பெருநற்கிள்ளி யெனவும் பிரதிகளிற் காணப்படும். இவனைப் பாடிய புலவர் : வன்பரணர், பெருந்தலைச்சாத்தனார்.

கண்ணகி :—இவள் வையாவிக்கோப் பெரும்பேகனுக்குரியவள்; ஒரு காலத்து அவனால் துறக்கப்பட்டுப் பிரிவாற்ருது வருந்திக் கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழாரென்பவர்கள் தன்னை அவனோடு சேர்த்து வைத்தற்கு அவனைப் பாடி வேண்டும்படி பெருமையுற்றவள்; 'கண்ணகி காரணமாக வையாவிக்கோப் பெரும் பேகனைப் பரணர் பாடிய கைக்கிளை வகைப் பாடாண் பாட்டு' (தொல். புறத்திணை. சூ. 35, ந.) என்பதனாலும் இது விளங்குகின்றது. இவள் சிலப்பதிகாரத்துக் கூறப்பட்டுள்ள கண்ணகியல்லள்.

கந்தன் :—இது நாஞ்சிற் பொருநனது இயற்பெயர்.

கபிலர்:—இவர் வரலாற்றைப் பாடினோர் பெயர்வரிசையிற் காண்க.

கரிகால் வளவன் :—இவன் வரலாற்றைச் சோழன் கரிகாற்பெரு வளத்தானென்னும் பெயரிற் காண்க.

கரும்பனூர் கிழான்:—இவன் வேங்கடமலையைச் சார்ந்த நாட்டை யுடையவன்; இவனைப் பாடியவர்: நன்னாகனார், புறத்திணை நன்னாகனார்.

காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி :—இவன் சோழ பரம்பரை யைச் சார்ந்தோன்; உறையூரில் இருந்தோன்; சோழன் நலங் கிள்ளிக்குப் பகைவன்; இவன் பெயர் நெடுங்கிள்ளியெனவும் வழங்கும்; இவனைப் பாடியவர் கோவூர்கிழார். 'இளந்தத்தன்' என்னும் புலவர் இவன் காலத்தவரே. 'காரியாற்றுத் துஞ்சிய' என்பதற்குக் காரியா றென்னுமிடத்தில் இறந்த என்பது பொருள்.

கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி :—இவன், சேரமான் மாவெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியென்பவர் களுடைய நண்பன்; கடைச்சங்கமிரீஇய பாண்டியர் நாற்பத்தொன் பதின்மருள் ஒருவன்; இதனை இறையனாரகப்பொருளுரையாலும் சிலப்பதிகார வுரையாலும் உணர்க. இவன் முன்னிலையில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டதென்ற செய்தி, அக்குறளுக்கு இவன் கொடுத்த, "நான்மறையின் மெய்ப்பொருளை" என்னும் வெண்பாவிற் காணப்படு கிறது; எட்டுத்தொகையுள் அகநானூற்றைத் தொகுப்பித்தோன் இவனே; "புலவரையிறந்த" என்னும் புறப்பாட்டால், வேங்கைமார்ப னென்னும் பகைவனை வென்று அவன் ஆட்சியிலிருந்த பல சிற்றரண் களையுடைய கானப்பேரரணைக் கைக்கொண்டானென்று விளங்கு கின்றது; இவன் பெயர், பாண்டியன் உக்கிரப்பெருவழுதி யெனவும், உக்கிரப்பெருவழுதி யெனவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி யெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர் : ஐயூர் மூலங்கிழார், ஔவையார்.

குமணன் :—இவன் மிக்க கொடையாளி; முதிரமென்னும் மலைக்குத் தலைவன்; இவன் காலம் கடையெழு வள்ளல்களின்

பிற்காலம். தன் தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த பொழுது பெருந்தலைச்சாத்தனார் இரப்பத் தனது தலை கொடுத்தற்கு வாளைக் கொடுத்தோன். இவன் கொடைவிசேடம் முதலியவற்றை, இந்நூல், 158-165 ஆம் பாடல்கள் புலப்படுத்தும். இவனைப் பாடிய புலவர் : பெருஞ்சித்திரனார், பெருந்தலைச் சாத்தனார்.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் :—இவன் குளமுற்ற மென்னும் இடத்தில் இறந்ததுபற்றி இப்பெயர் பெற்றான்.

கொண்கானங்கிழான் :—இவன் கொடை வெற்றி இரண்டுமுடை யோன்; கொண்கானமென்னும் மலைக்குத் தலைவன்; கொண்கானம் - கொங்கணம். இவனைப் பாடிய புலவர் மோசிகீரனார்.

கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை :— இவன் செங்கோலையுடையவன்; யானையினது பார்வைபோலும் பார்வையையுடையவன்; கொல்லிமலைக்குத் தலைவன்; விளங்கி லென்னும் ஊரார்க்குப் பகைவரான்வந்த துன்பத்தைத் தீர்த்தோன்; கபிலருடைய நண்பன்; கடற்கரையிலுள்ள தொண்டி யென்னும் நகரத்தை ஆண்டோன்; ஒரு காலத்து, பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் கட்டப்பட்டுப் பின்பு அதனை நீக்கிக்கொண்டு புகழ்பெற்றோன்; சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு போர் செய்தோன்; இவன் பெயர் யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறையெனவும், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை யெனவும், சேரன் மாந்தரஞ் சேரலிரும் பொறை யெனவும் வழங்கும். எட்டுத்தொகையுள் ஒன்றாகிய ஐங்குறு நூற்றைத் தொகுப்பித்தோன் இவனே. இவனைப் பாடிய புலவர் : குறுங்கோழியூர் கிழார், பொருந்தில் இளங்கீரனார், கூடலூர் கிழார்; இவருள் இவன் இறந்த பின்பும் இருந்தவர் : கூடலூர்கிழார்.

கோப்பெருஞ்சோழன் :—இவனுடைய இராசதானி உறையூர்; பிசிராந்தையார்க்கும் பொத்தியார்க்கும் உயிர் நண்பன்; இவன் தன் பிள்ளைகள் இருவரோடு பகைமைகொண்டு போர் செய்தற்கு எழுந்த பொழுது புல்லாற்றூர் எயிற்றியனாரால் சமாதானம் செய்யப்பட்டான். செய்யுள் செய்தலில் வல்லவன்; இவன், பின்பு எல்லாவற்றையுந் துறந்து வடக்கிருந்து, உடன் உயிர் நீத்தற்கு வந்த பொத்தியாரை, 'மகன் பிறந்த பின் வருக' எனக் கூறித் தான் உயிர் நீத்துக் கல்லாகியும், அவ்வாறு வந்த அவருக்கு இடங்கொடுத்தும் புகழ்பெற்று விளங் கினான்; இவன் வடக்கிருந்ததைக் கேட்டு வந்த பிசிராந்தையாரும் உடன் உயிர் நீத்தனர்; இதனை, "புணர்ச்சி பழகுதல் வேண்டா" என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரையாலும், "தோழி தாயே" (தொல். கற்பு. சூ. 52) என்பதனுரையாலுமுணர்க. இவன் இளஞ்சேரலிரும்பொறையால் வெல்லப்பட்டான் போலும். (பதிற். 9-ஆம் பத்தின் பதிகம்.) இவனைப் பாடிய புலவர் : பிசிராந்தையார், புல்லாற்றூ ரெயிற்றியனார், பொத்தியார், கருவூர்ப்

பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனர்; இவ்வரசனும் இப்புலவர்களும் அவ்வச்சமயத்துக் கூறிய பாடல்கள் மிக அற்புதமானவை.

சிறுகுடிகிழான் பண்ணன் :—இவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுடைய நண்பருள் ஒருவன்; சிறந்த கொடையாளி; "தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன், பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப், புன்காழ் நெல்லிப் பைங்காய்" என அகநானூற்று 54-ஆம் பாட்டிலும் இவன் பாராட்டப்பட்டிருத்தல் காண்க. இவன் பெயர் பண்ணனெனவும் வழங்கும். இவனைப் பாடியவர்கள் : கோவூர் கிழார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மதுரை அளக்கர் ஞாழலார் மகனர் மள்ளனர்.

சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை :—இவன் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியின் பகைவன்; உறையூர் ஏணிச்சேரி முடமோசியாருடைய நண்பன்.

சேரமான் கடலோட்டிய வெல்கெழு குட்டுவன் :—இவன் போரில் வல்லவன்; இவனைப் பாடிய புலவர் பரணர். பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தை யேற்று அதனைப் பாடிய பரணர்க்கு உம்பற்காட்டுவாரியையும் தன் மகன் குட்டுவன்சேரலையும் பரிசில் கொடுத்தோன் இவனே. இவன் கடலோட்டிய வரலாறு, "கோடுநரல் பௌவங் கலங்க வேலிட், டுடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய, வெல்புகழ்க் குட்டுவன்" (பதிற். 46), "மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன், பொருமுரண் பெறுஅது விலங்குசினஞ் சிறந்து, செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி, ஓங்குதிரைப் பௌவ நீங்க வோட்டிய, நீர்மா ணெஃகம்" (அகநா. 212), "கொடும்போர் கடந்து நெடுங்கட லோட்டி" (சிலப். 28 : 119), "பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டி" (சிலப். 30 : கட்டுரை, 19), என்பவற்ருலும் அறியலாகும். இவன் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனெனவும் வழங்கப்படுவன்.

சேரமான் கடுங்கோவாழியாதன் :—இவன் சிறந்த வீரன்; பதிற்றுப் பத்தில், கபிலர் பாடிய ஏழாம் பத்தைக் கேட்டு அவருக்கு நூருயிரம் காணமும், ஒரு மலைமீதேறிக் கண்ட நாடும் பரிசிலாகக் கொடுத்தனன். இதனைப் பதிற்றுப்பத்து, 7-ஆம் பத்தின் பதிகத்தால் உணர்க. இவனைப் பாடிய புலவர் : கபிலர்.

சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேர லிரும்பொறை :—இவனைக் கண்டபொழுது நரிவெரூஉத்தலையார்க்குப் பழைய நல்லுடம்பு கிடைத்தது; இவனைப் பாடிய புலவர் அவரே.

சேரமான் குட்டுவன் கோதை :—இவன் இரவலர்க்கு வேண்டியவற்றைக் கொடுப்பவன்; வீரன்; குட்டுவன்-குட்ட நாட்டரசன்; குட்டநாடு-மலைநாட்டின் ஒரு பகுதி. இவனைப் பாடிய புலவர் கோனட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனர்.

சேரமான் குடக்கோச் சேரலிரும்பொறை :—இவன் பெயர் குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை யெனவும் வழங்கும்; பதிற்றுப்

பத்தில், ஒன்பதாம் பத்திற்குத் தலைவன் இவனே; இவனைப் பாடியவர் பெருங்குன்றூர் கிழார்.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் :—இவன் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியொடு போர் செய்து இறந்தான். அக்காலத்து அக்களத்தில் இவனைப் பாடிய புலவர்கள் : கழாத் தலையார், பரணர்.

சேரமான் கோக்கோதைமார்பன் :—இவன் சிறந்த கொடையாளி; இவன் நகரம் தொண்டியென்பது; இவனைப் பாடிய புலவர் பொய்கை யார்; "கோதை மார்ப னுவகையிற் பெரிதே" (அகநா. 346). இவன் நக்கீரனாலும் பாராட்டப்பெற்றவன்.

சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழி யாதன் :—இவன் சிறந்த கொடையாளி; மிக்க வீரமுடையவன். இவனைப் பாடிய புலவர் குண்டுகட்பாலியாதனார்.

சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் :—இவன் புலவர்பால் மிக்க நேயமுடையோன். இவனைப் பாடிய புலவர் கபிலர்.

சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை :—இவன், தன் முரசுகட்டிலின்மேல் அறியாமல் ஏறித் துயின்ற மோசிகீரனாரைத் துன்பஞ் செய்யாமல் அவர் எழுமளவும் கவரிகொண்டு வீசியதனால் அவராற் புகழ்ந்து பாடப்பெற்றான். பதிற்றுப்பத்துள் எட்டாம் பத்திற்குத் தலைவன் இவனே. அதுபாடிய அரிசில்கிழார்க்கு ஒன்பது நூறாயிரங் காணம் பரிசில் கொடுத்தான்; அதியமானுடைய தகடூரை வென்றான்; தகடூர் யாத்திரை யென்னும் நூல் இவன் காலத்துச் செய்யப்பட்டது போலும்.

சேரமான் பாமுளூ ரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி :—இவன் அரசர்களுக்கு இன்றியமையாத குணங்கள் பலவும் நிறைந்தவன்; சோழபரம்பரையிற் பிறந்தவன். ஒரு காலத்துச் சேரமானுடைய பாமுளூரை வென்று கைக்கொண்டான். இதனா லேயே இவனுக்கு இப்பெயர் வந்தது; இரப்போரைப் பாதுகாத்தலையே விரதமாக வுடையவன்; இவன் பெயர் சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி யெனவும் வழங்கும். சேரமான் பாமுளூரென்பதற் குச் சேரமானுடைய பாமுளூரென்று பொருள் கொள்க. இவனைப் பாடிய புலவர் ஊன்பொதி பசுங்குடையார்.

சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ :—இவன் கொடையும் வீரமும் உடையோன்; பாலைநிலத்தைப் பாடுதலில் ஆற்றல் மிக்கவனாக இருந்ததுபற்றி இவன் இப்பெயர் பெற்றான்; இவன் பெயர் பாலைபாடிய பெருங்கடுங்கோவெனவும் காணப்படுகின்றது. இவனைப் பாடியவர் பேய்மகள் இளவெயினி யென்பார்.

சேரமான் பெருஞ் சேரலாதன் :—இவன், சோழன் கரிகாற்பெரு வளத்தானோடு போர்செய்து புறப்புண்ணுற்று நாணி வடக்கிருந்தான்.

இவனைப் பாடியவர்கள்: கழாத்தலையார், வெண்ணிக் குயத்தியார். இவன் பெயர் சேரமான் பெருந்தோளாதனெனவும் வழங்கும்.

சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் :—இவன், பாரதப் போரிற் பாண்டவர் துரியோதனாதியரென்னும் இருவகையார் சேனைக்கும் உணவளித்தான். இவ்வரலாற்றை, "ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த, போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த, சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக், கார்செய் குழலாட வாடாமோ ஊசல், கடம்பெறிந்த வாபாடி யாடாமோ ஊசல்" என்னும் சிலப்பதிகார வாழ்த்துக் காதைச் செய்யுளும் புலப்படுத்தும். இதனாலேயே இவன் இப்பெயர்பெற்றான். இவனைப் பாடிய புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர்.

சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறை :—கோச்சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை யென்னும் பெயரைப் பார்க்க. மாந்தரன்-ஒரு சேரன் (பதிற். 90); "இலமல ரன்ன வஞ்செந் நாவிற், புலமீக் கூறும் புரையோ ரேத்தப், பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல், நிறையருந் தானை வெல்போர் மாந்தரன், பொறையன்" (அகநா. 142); அம்மாந்தரன் புதல்வனாதலின் இவனுக்கு இப்பெயர் வாய்ந்தது. இவன் காலத்துப் புலவர் வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார்.

சேரமான் மாரிவெண்கோ :—இவன் காலத்தரசர்: பாண்டியன் கானப்பேரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதியும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியுமாவார்; இவனைப் பாடியவர் ஔவையார்.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை :—கோச் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையென்னும் பெயரைப் பார்க்க. இதனை ஒட்டுப்பெயரென்பர். (இ. வி. சூ. 38, உரை.) இவனைப் பாடிய புலவர் குறுங்கோழியூர் கிழார். இவனுடைய பிற வரலாறுகள் ஐங்குறுநூற்றிற் காணலாகும்.

சேரமான் வஞ்சன் :—இவன் பரிசிலர்க்கு வேண்டியவற்றைக் கொடுப்போன்; இவனைப் பாடிய புலவர் திருத்தாமனார்.

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் :—பூஞ்சாற்றூரென்பது முடிகொண்டானாற்றங்கரையிலுள்ளது; இவன் அந்தணர்திலகன்; கௌண்டின்னிய கோத்திரத்திற் பிறந்தோன்; ஓதல் முதலிய அறுவகைத் தொழிலிலும் சிறந்து பார்ப்பன வாகைபெற்றோன்; மிக்க கொடையாளி; இவனைப் பாடிய புலவர் ஆவூர் மூலங்கிழார். பூஞ்சிற்றூரென்று சில பிரதிகளிற் காணப்படுகின்றது.

சோழநாட்டுப் பிடவூர்கிழார்மகன் பெருஞ்சாத்தன் :—இவன் வேளாளரில் உழுவித்துண்போன்; முடியுடைவேந்தற்கு மகட்கொடை நேர்தற்கு உரியோன் (தொல். அகத்திணை. சூ. 30, ந.) இவனைப் பாடிய புலவர் மதுரை நக்கீரர்.

சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி :—இவன் யுத்தத்தில் வல்லவன்; தேர்வண்மலையனென்பவனைத் துணையாகக் கொண்டு சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறையோடு பொருது அவனை வென்றான்;

சேரமானின் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியென்பவர்களின் நண்பன். இவனைப் பாடியவர்கள்: பாண்டரங்கண்ணனார், ஔவையார், உலோச்சனார். இன்னும் இவன் காலத்துப் புலவர் வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார்.

சோழன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட் சென்னி :—இவன் சிறந்த வீரன். இவனைப் பாடிய புலவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார். காலேகப்பள்ளி யெனவும் பிரதிபேத முண்டு.

சோழன் உருவப்பஃறே ரிளஞ்சேட்சென்னி :—இவன் சோழன் கரிகாற் பெருவளத்தான் தந்தை; அழுந்தூர் வேளிடை மகட்கொண் டோன். இதனை, "மன்னர்பாங்கின்" (தொல். அகத்திணை. சூ. 30, ந.) என்பதன் உரையாலுணர்க; "உருவப்பஃறே ரிளையோன் சிறுவன்" (130) என்றார் பொருநராற்றுப்படையிலும்; வீரத்திலும் கொடையிலும் சிறந்தோன். இவன் பெயர் இளையோனெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர்கள் : பரணர், பெருங்குன்றூர்கிழார்.

சோழன் கரிகாற் பெருவளத்தான் :—இவன் சோழன் உருவப்பஃறே ரிளஞ் சேட்சென்னியின் புதல்வன்; பொருந. 130; நாங்கூர் வேளிடை மகட்கொண்டோன்; தொல். அகத்திணை. சூ. 30, ந. தம்முள் மாறு பட்டுவந்து தன்னை இளையனென்றிகழ்ந்த முதியோர் பொருட்டுத் தான் முதியனாய் வந்து அவர்கள் வழக்கைத் தீர்த்தானென்றும், தான் கரு வூரிலிருக்கையில், கழுமலமென்னுமூரிலிருந்த யானையாற் கொண்டு வரப்பட்டு அரசாட்சிக்குரியனாயினானென்றும், இளமையில் நெருப்பாற் சுடப்பட்டு உயிர் பிழைத்தானென்றும், இரும்பிடர்த்தலையாரை அம்மா னாக உடையானென்றும் பழமொழி 21, 62, 105-ஆம் வெண்பாக்களும் அவற்றின் உரைகளும் விளக்குகின்றன. பொருநராற்றுப்படைக்கும், பட்டினப்பாலைக்கும் தலைவன் இவனே. பட்டினப்பாலை கேட்டுக் கடிய லூர் உருத்திரங்கண்ணனாருக்குப் பதினாறுநூறாயிரம் பொன் பரிசளித்தா னென்று கலிங்கத்துப்பரணி, இராச பாரம்பரியம் 22-ஆம் செய்யுளால் விளங்குகின்றது. *வெண்ணி யென்னும் ஊர்ப்புறத்தேயுள்ள போர்க் களத்திற் சேரமான் பெருஞ்சேரலாதனோடு போர்செய்து அவனையும் அவனோடு வந்த ஒரு பாண்டியனையும் அக்களத்தில் இவன் வென்றான்; இஃது "இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை, அரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும், ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த, இருபெரு வேந்தரு மொருகளத் தவிய, வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட், கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்" (143-8) என்னும் பொருந ராற்றுப்படையால் விளங்குகின்றது. மேற்கூறிய முடிமன்னரிருவரோடு பதினொரு வேளிரையும் அக்களத்தே வென்றானென்று, "காய்சின

*இவ்வூர் சோழநாட்டில் நீடாமங்கலத்திற்கு மேற்கேயுள்ளது; தேவாரம்பெற்ற சிவஸ்தலம்; கோவிலுண்ணியென வழங்கப் படுகின்றது.

மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால், ஆர்கலி நறவின் வெண்ணி வாயிற், சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின், இமிழிசை முரசம் பொருகளத் தொழியப், பதினொரு வேளிரொடு வேந்தர்சாய, மொய்வலி யறுத்த ஞான்றைத், தொய்யா வழுந்தூ ரார்ப்பினும் பெரிதே" (அகநா. 246) என்பதனுல் தெரிகின்றது. இவன் காவிரிப்பூம்பட்டினத் திலிருந்து அரசாட்சி செய்தானென்பதும், ஒரு காலத்தில் இமயமலை வரையிற் சென்று இடையிலுள்ள அரசர்களை வென்றுனென்பதும், சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி, பெரியபுராணம், காஞ்சிப்புராணம் முதலியவற்றுல் தெரிந்த வரலாறுகள். இவன் வீரருட் சிறந்த வீரன். இவன் பெயர் சோழன் கரிகால்வளவனெனவும், கரிகாலனெனவும், கரிகாலெனவும் வழங்கும்; அகநா. 125, 246. இவனைப் பாடியவர்கள்: கருங்குழலாதனுர், வெண்ணிக் குயத்தியார். இவர்களுள் இவன் இறந்த பின்பும் இருந்தவர் கருங்குழலாதனுர்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன்:—இவன் ஒரு சேரனேடு பகைமை கொண்டு அவனது கருவூரை யழித்தான். இவனைப் பாடிய புலவர் கோவூர் கிழார்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்:—இவன் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியோடு நட்புடையவன். இவனைப் பாடிய புலவர்கள்: காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனுர், உறையூர் மருத்துவன் தாமோதரனுர், கோனுட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனுர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்:—இவனது இராசதானி உறையூர்; மிக்க கொடையும் வீரமும் உடையோன். செய்யுள் செய்தலில் வல்லவன்; கருவூரை முற்றுகை செய்து சேரனை வென்றவன். இவனைப் பாடிய புலவர்கள்: ஆலத்தூர் கிழார், மாறேக் கத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனுர், ஆடுதுறை மாசாத்தனுர், ஐயூர் முடவனுர், கோவூர்கிழார், நல்லிறையனுர், எருக் காட்டூர்த் தாயங்கண்ணனுர், வெள்ளைக்குடி நாகனுர்; இவருள், இவன் இறந்தபின்பும் இருந்து பிரிவாற்ருது வருந்தியவர்கள்: மாறேக் கத்து நப்பசலையார், ஐயூர்முடவனுர், ஆடுதுறை மாசாத்தனுர்.

சோழன் செங்கணுன்:—இவன் சேரமான் கணைக்கால் இரும் பொறையோடு போர்செய்து அவனைப் பிடித்துக் கட்டிச் சிறைப்படுத் தினுன். பொய்கையார் பாடிய 'களவழி நாற்பது' என்னும் நூலின் தலைவன் இவனே. இவன் காலத்துப் புலவர் பொய்கையார்; இப்புத்தகம் 635 - ஆம் பக்கத்தின் அடிக்குறிப்பைப் பார்க்க.

சோழன் செருப்பாழி யெறிந்த இளஞ்சேட்சென்னி:—இவன் மிக்க வீரமும் கொடையுமுடையோன்; இவனைப் பாடிய புலவர்: ஊன்பொதி பசுங்குடையார்.

சோழன் நலங்கிள்ளி:—இவன் கவிசெய்தலில் வல்லவன்; பாண்டிய நாட்டிலிருந்த ஏழரண்களை அழித்துக் கைக்கொண்டு

அவற்றில் தனது புலிக்கொடியை நாட்டினான்; தன் தாயத்தாரோடு பகைத்து அவர்கள் இருந்த ஆவூரையும் உறையூரையும் முற்றுகை செய்தான்; மாவளத்தானென்பவனுக்குத் தமையன்; இவனுக்குச் சேட்சென்னியென்றும் புட்பகையென்றும் தேர்வண்கிள்ளியென்றும் பெயருண்டு; நெடுங்கிள்ளி யென்பவனோடு பகைமையுடையோன்; முன்னர், போர்செய்து வெற்றி கொள்ளுதலையே பொருளாகக் கொண்டிருந்த இவன் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சொல்லாற் பின்பு அதனைத் துறந்து அறஞ்செய்தலையே மேற்கொண்டான்; இவனைப் பாடிய புலவர்கள்: உறையூர் முதுகண்ணன் சாத்தனார், கோவூர் கிழார், ஆலத்தூர் கிழார்.

சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தான் :—இவனைப் பாடிய புலவர் தாமப்பல்கண்ணனார்.

சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி :—இவனைப் பாடியவர் ஊன்பொதி பசுங்குடையார்; நெய்தலங்காலை யெனவும் இப் பெயர் சில பிரதிகளிற் காணப்படுகின்றது.

சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி :—இவன் தித்தனென்னுஞ் சோழனுடைய மகன். அவனோடு பகைத்து நாடிழந்து வறுமையுற்றுப் புல்லரிசிக்கூழை யுண்டிருந்தான் ; முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனைப் பொருது கொன்றான். இவனைப் பாடிய புலவர்கள் : சாத்தந்தையார், பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார்.

சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி :—இவன் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையோடு பகைமையுடையவன்; இவனைப் பாடிய புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி :—இவன் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனோடு போர்செய்து இறந்தான். அக் காலத்து இவனைப் பாடிய புலவர்: கழாத்தலையார், பரணர்; இவன்பெயர் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி யெனவும் வழங்கும்.

சோழியவேனாதி திருக்குட்டுவன் :—இவன் மிக்க கொடையாளி; இவனைப் பாடிய புலவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார்.

தந்துமாறன் :—மிக்க ஒழுக்கமுடையவன்; நிலையாமையை இவனுக்கு அறிவுறுத்திய புலவர் சங்கவருணரென்னும் நாகரியர்.

தருமபுத்திரன் :—இவன் ஓரரசன்; இவனைப் பாடிய புலவர் கோதமனார்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் :—இவன் இளமைப் பருவத்தில் தலையாலங்கானத்தில் கோச்சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையோடு போர்செய்து அவனைச் சிறைப்படுத்தியதன்றிச் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்பவரையும் வென்றான்; வேள் எவ்வியின் மிழலைக்கூற்றத்தையும் பழைய வேளிருடைய முத்தூற்றுக்

கூற்றத்தையும் கைக்கொண்டான்; மறக்கள வேள்வியும் அறக்கள வேள்வியும் செய்தான்; செய்யுள் செய்தலில் வல்லவன்; புலவர்களிடத்து மிக்க அன்புள்ளவன்; உத்தம குணங்கள் பலவும் உடையோன். மாங்குடி மருதனாரியற்றிய மதுரைக்காஞ்சிக்குத் தலைவன் இவனே. "நகுதக்கனரே" (72) என்னுஞ் செய்யுளை இயற்றியவனாதலால், இவன் நல்லிசைப் புலவர் வரிசையில் விளங்கியவனென்று தெரிகின்றது. "பல்யானை மன்னர் முருங்க" (யா. வி. மேற்.) என்னும் பாடலும் இவன் வரலாற்றின் ஒரு பகுதியைத் தெரிவிக்கும். இவன் பெயர் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனெனவும், பாண்டியன் நெடுஞ்செழியனெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர்கள்: குறுங்கோழியூர் கிழார், குடபுலவியனார், கல்லாடனார், மாங்குடி கிழார், இடைக்குன்றூர் கிழார்.

தழும்பன் :—இவனைப் பாடியவர் பரணர்.

தாமான் தோன்றிக்கோன் :—இவன் தோன்றியென்னும் மலைக்குத் தலைவன்; இவனைப் பாடிய புலவர் ஐயூர்முடவனார்.

தித்தன் :—இவன் உறையூரிலிருந்த ஒரு சோழன்; "நொச்சி வேலித் தித்த னுறந்தை" (அகநா.122). சோழன் போர்வைக்கோப்பெரு நற்கிள்ளியின் தந்தை; அவனோடு மிக்க பகைமை கொண்டிருந்தான்.

தேர்வண் மலையன் :—இவன் சிறந்த வீரன்; சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்குத் துணையாய் நின்று சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறையை வென்றான்; இவனைப் பாடிய புலவர் வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார்.

தொண்டைமான் :—இவன் காஞ்சி நகரத்திருந்த ஓரரசன்; அதியமான் நெடுமானஞ்சி காலமும் இவன் காலமும் ஒன்றே; இவன் காலத்தவர் ஔவையார். இவன் தொண்டைமான் இளந்திரையனென்றும் வழங்கப்பெறுவன்; பெரும்பாணாற்றுப்படைக்குத் தலைவன் இவனே; இவனுடைய பிறப்பின் வரலாறு அந்நூல், 29-31-ஆம் அடிகளால் அறியலாகும்; அதில் நாககன்னியென்றது, பீலிவளையையே என்றும் (மணி. 24 : 57), அதற்குத் தக்க ஆதாரம் சாசனத்திலும் நூல்களிலுமுள்ளதென்றும் சொல்லுகின்றனர்; இவன் முடியுடை மன்னர் மூவரோடு சேர்த்து எண்ணப்படும் பெருமை வாய்ந்தவனேனும், "வில்லும் வேலும்" (தொல். மரபு. சூ. 83) என்பதன் உரையில், 'மன்பெறு மரபி னேனோரெனப்படுவார், அரசுபெறு மரபிற் குறுநில மன்னரெனக் கொள்க; அவை பெரும்பாணாற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் காணப்படும்' எனப் பேராசிரியர் எழுதியிருத்தலால், இவனைக் குறுநிலமன்னனாகப் பண்டையோர் கொண்டிருந்தனரென்று தெரிகின்றது. இப்பெயர் இளந்திரையனெனவும் திரையனெனவும் நூல்களில் வழங்கும். இவனியற்றிய பாடல்களாக நற்றிணையில் மூன்றும் இந்நூலில் ஒன்றும் காணப்படுதலால், இவன் நல்லிசைப்புலவர் வரிசையிற் சேர்ந்த பெருமை வாய்ந்தவனென்றும் தெரிகின்றது. இளந்திரையமென ஒரு நூல் இவனாற்

செய்விக்கப் பெற்றதென்று இறையனாரகப் பொருளுரை, நன்னூல் மயிலைநாதருரை முதலியன தெரிவிக்கின்றன; நன்னூல் மயிலை நாதருரையில் (சூ. 372) திரையனாற் செய்யப்பட்ட ஊர் திரையனது ஊரென்று பொருள் செய்திருத்தலின், இப்பெயருள்ள ஊரொன்று பண்டைக்காலத்தில் இவனாலோ பிறராலோ நிருமிக்கப்பெற்றிருந்ததாகத் தெரிகின்றது. 'வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர், இனமழை தவழு மேற்றரு நெடுங்கோட், டோங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர்" (அகநா.213), "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ, பாவீற் றிருந்த புலவிர்காள் பாடுகோ, ஞாயிற் றொளியான் மதிநிழற்றே தொண்டையார், கோவீற் றிருந்த குடை", "வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன், நான்மாடக் கூடலிற் கல்லவிது, சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான், கச்சியிற் காக்கை கரிது", "ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாம், தோழி துணையாத் துயர் தீரும்-வாழி, நறுமாலை தாராய் திரையவோ வென்னும், செறுமாலை சென்றடைந்த போது" (யா.வி.மேற்.) என்பவற்றால், இவன் பரம்பரையோருடைய பெருமைகள் புலப்படும்.

நம்பி நெடுஞ்செழியன் :—இவன் அரசர்களுக்குரிய எல்லா இன்புங்களையும் அநுபவித்தவன்; பலவித நன்மைகளையுமுடையவன். இவனைப் பாடிய புலவர் பேரெயின் முறுவலார்.

நள்ளி :—இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்; இரப் போர்க்கு இழையணி நெடுந்தேர் களிற்றொடும் ஈவோன்; (அகநா. 237). கண்டீரக் கோப்பெரு நள்ளியென்னும் பெயரைப் பார்க்க. பாண்டிநாட்டில் நள்ளியென ஓரூர் உள்ளது.

நன்னன் :—இவன் விச்சிக்கோவின் பரம்பரையில் முன்னுள் ளோன்; பல்குன்றக்கோட்டமுடையவன். இவன் மகன் நன்னன்மீது (மலைபடு. 64) இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசி கனார் மலைபடுகடாம் பாடினர். "சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன், பாழி யன்ன", "நறவுமகி ழிருக்கை நன்னன் வேண்மான், வயலை வேலி வியலூ ரன்ன" (அகநா. 15 : 10-1, 97 : 12-3) எனக் கூறியிருத்தலாற் புகழுடையவனென்று இவன் நினைக்கப்படுகின்றான். இவனைப் பாராட்டிய புலவர் பெருந்தலைச்சாத்தனார்.

நாஞ்சில் வள்ளுவன் :—இவன் நாஞ்சில் மலையை யுடையவன்; சேரனிடத்து அன்புற்று அவனுக்குப் படைத்துணையாய் நின்றோன்; பரிசிலர்க்கு வேண்டியவற்றைக் கொடுப்போன்; இவனைப் பாடியவர்கள் : ஔவையார், ஒருசிறைப் பெரியனார், மருதனிளநாகனார், கருவூர்க் கதப்பிள்ளை.

நாலைகிழவன் நாகன் :—இவன் பாண்டியனுடைய வீரன்; மிக்க கொடையையுடையவன்; இவனைப் பாடிய புலவர் வடமநெடுந்தத் தனார். இவன் பெயர் நாலைகிழானாகனெனவும் வழங்கும். 'நாலை' என்பதை 'நரலை' எனவும் படிப்பதற்கிடமுண்டு.

நெடுங்கிள்ளி :—இவன் சோழ பரம்பரையைச் சார்ந்தோன்; ஆவூரும் உறையூரும் இவனுடையவை; சோழன் நலங்கிள்ளி இவற்றை முற்றி இருந்தபொழுது கோட்டைவாயிலை அடைத்துக் கொண்டு உள்ளேயிருந்த இவன் பின்பு கோவூர் கிழாரால் தேற்றப் பட்டான்; காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி யெனவும் இவனுக்குப் பெயருண்டு; இவனைப் பாடிய புலவர் கோவூர் கிழார்.

நெடுமானஞ்சி :—அதியமான் நெடுமானஞ்சியென்னும் பெயரைப் பார்க்க.

நெடுவேளாதன் :—இவனைப் பாடியவர் குன்றூர்கிழார் மகனார்.

பரதவர் :—தென்றிசைக்கட் குறுநில மன்னர்; "தென்பரதவர் மிடல்சாய" என இந்நூலிலும், "தென்பரதவர் போரேறே" (144) என மதுரைக் காஞ்சியிலும் கூறப்பட்டிருத்தல் காண்க.

பழையன் :—இவன் பாண்டிய நாட்டிலுள்ள மோகூரிலிருந்த குறுநில மன்னன்; இதனை மதுரைக்காஞ்சியாலுணர்க. இவன் காவல் மரமாக ஒரு வேம்பினை வளர்த்து வந்தானென்று பதிற்றுப்பத்தால் தெரி கின்றது; 5-ஆம் பத்தின் பதிகம். சோழநாட்டிற் போரென்னுமூர்க்குத் தலைவனாகப் பழையனென்னுருவன் இருந்தானென்றும் தெரிகின்றது; அகநா. 186.

பாண்டியன் அறிவுடை நம்பி :—இவன் சிறந்த அறிவுடையோன்; இவன் காலத்துப் புலவர் பிசிராந்தையார்.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் :—இவன் தமிழ் நாட்டரசர் மூவரிலும் மேம்பட்டு விளங்கினோன். இவனைப் பாடியவர்கள் : மதுரை மருதனிளநாகனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனார், வடம வண்ணக்கன் பேரிசாத்தனார்.

பாண்டியன் கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி :— இவன் மிக்க வீரமும் கொடையுமுடையோன். இவனைப் பாடிய புலவர் இரும்பிடர்த் தலையார்.

பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி :—இவனைப் பாடியவர் ஔவையார். கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி யென்னும் பெயரைப் பார்க்க.

பாண்டியன் கீரஞ்சாத்தன் :—இவன் வந்தோர்க்கு அன்புடன் உணவளிப்போன்; சிறந்த வீரன்; இவன் பெயர் பாண்டிக் குதிரைச் சாக்கைய னெனவும் பிரதிகளிற் காணப்படுகின்றது. இவனைப் பாடியவர் ஆவூர் மூலங்கிழார்.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி :—இவன் மிக்க வீரச் செல்வமுடையோன்; வடநாட்டரசரை வென்று அடிப்படுத்தி னோன். இவனைப் பாடியபுலவர்கள் : ஐயூர்முடவனார், மருதனிளநாகனார்.

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் :—இவன் தன்னைச் சேர்ந்தோருக்கு மிக்க நன்மையும் பகைவருக்குத் துன்பமும்

புரிபவன்; இவனைப் பாடியவர்: மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்:—இவன் வரலாற்றைத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய னென்பதிற் காண்க.

பாண்டியன் நெடுஞ்செழியன்:—இவனைப் பாடிய புலவர் குடபுலவியனுர்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி:—இவன் அநேக யாகங்களைச் செய்தவன்; பல பகைவர்களையும் அறப்போரால் வென்று மறக்கள வேள்வி புரிந்தோன்; பெரிய வள்ளல்; சிவபெருமானிடத்து மிக்க பக்தியுடையோன்; இவனைப் பாடியவர்கள்: காரிகிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனுர். பெருந்தோட் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி யெனவும் இவன் பெயர் வழங்கும்; 'பெருந்தோட் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' (தொல். கிளவி. சூ. 26, சே. மேற்.)

பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி:—இவன் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருமாவளவனேடு நட்புடையன். இவன் காலத்துப் புலவர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனுர்;

பாரி:—இவன் கடையெழு வள்ளல்களி லொருவன்; முந்நூறு ஊரையுடைய பறம்பு நாட்டிற்கும் பறம்பு மலைக்கும் தலைவன்; முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்தோன்; இவற்றை, "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரியும்" (89-91) என்னும் சிறுபாணுற்றுப்படையால் உணர்க. தன்னுடைய முந்நூறு ஊரையும், மற்றைப் பொருள்கள் எல்லாவற்றையும் பரிசிலர்க்குக் கொடுத்தோன்; மிக்க பராக்கிரமமுடையவன். இவனை வெல்லக் கருதிய தமிழ்நாட்டு வேந்தர் மூவரும் போரில் வெல்லவொண்ணுமையின் வஞ்சித்துக் கொன்றனர். இவன் இறந்த பின்பு இவன் நண்பராகிய கபிலர் சென்று இவன் மகளிரை மணஞ்செய்துகொள்ளும்படி விச்சிக்கோனையும், இருங்கோவேளையும் வேண்டுகையில் அவர்கள் மறுப்ப, அம் மகளிரைப் பார்ப்பாருக்கு மணம் புரிவித்தனர். இவனைப்பற்றி அவ்வச் சமயங்களிற் கபிலர் பாடிய செய்யுட்களை ஊன்றிப் படிப்பின் யாரும் மனமுருகாதிரார். சைவ சமயாசாரியருள் ஒருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனுர், "கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று அருளிச் செய்திருத்தலின் இவன் அவர் காலத்துக்கு முந்தியவனுதல் வேண்டும். இவன் மலைச்சுனை புலவர் பலராலும் புகழப்பட்டுள்ளது. "பலாஅம் பழுத்த" (பதிற். 11) என்பதிலும் இவன் பாராட்டப் பெற்றுள்ளான். இவன் பெயர் வேள்பாரியெனவும் வழங்கும். இவனைப் பாடியவர்: கபிலர், இவன் மகளிர் முதலியோர். இவன் இறந்த பின்பும் இருந்த புலவர்: புறத்திணை நன்னுகனுர், கபிலர் முதலியோர்.

பாரிமகளிர் :—இவர்கள் கபிலராற் பாடப்பட்டவர்கள்.

பிசிராந்தையார் :—இவரைப் பாடியவர் கண்ணகனார்.

பிட்டங்கொற்றன் :—இவன் குதிரைமலைத் தலைவன்; சேரனுடைய சேனாதிபதி; மிக்க கொடையாளிகளுள் ஒருவன். இவன் பெயர் பிட்டனெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர்கள் : கருவூர்க் கந்தப் பிள்ளை சாத்தனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், வடம வண்ணக்கன் தாமோதரனார்.

புல்லி :—ஓர் உபகாரி; வேங்கடமலை இவனுக்கு உரியது.

பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு :—இவரைப் பாடியவர் மதுரைப் பேராலவாயார்.

பேகன் :—இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். இவன் வரலாற்றை வையாவிக்கோப் பெரும்பேக னென்பதிற் காண்க.

பொகுட்டெழினி :—இவன் அதியமான் நெடுமானஞ்சி யென்பவனுடைய மகன்; இவனைப் பாடிய புலவர் ஔவையார்.

பொறையாற்றுகிழான் :—இவன் பொறையாறென்னும் ஊருக்குரியவன்; மிக்க கொடையை யுடையோன். இவனைப் பாடியவர் கல்லாடனார்.

மல்லிகிழான் காரியாதி :—இவன் குடநாட்டை யுடையவன்; வருவோர்க்கு வேண்டியவற்றை மிக்க அன்புடன் அளிக்கும் கொடையை யுடையான். இவனைப் பாடியவர் ஆவூர் மூலங்கிழார்.

மலையமான் சோழியவேனாதி திருக்கண்ணன் :—இவன் மலையமானாட்டுள்ள கோவலூர்க்கரசன்; முள்ளூர்மலையையுடையவன்; சோழராசனுக்குப் பேருதவி புரிந்தோன்; இரவலர்க்கு வைப்புத் திரவியம் போன்றவன். இவன் பெயர் மலையமான் சோழியவேனாதி திருக்கிள்ளி யெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர் மாறோக்கத்து நப்பசலையார்.

மலையமான் திருமுடிக்காரி :—இவன் பெண்ணையாற்றங்கரையின் கண் உள்ள மலாடென்று வழங்கும் மலையமானாட்டின் அரசன். கோவலூர் இவனது இராசதானி. தமிழ் நாட்டரசர் மூவர்களுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சமயத்து யுத்தத்தில் உதவி புரிந்தவன்; புலவர்க்குப் பரமோபகாரி; முள்ளூர் மலையையுடையான்; அந்தணர்க்கு நிலங்கொடுத்தோன்; கடையெழு வள்ளல்களில் ஒருவனென்று கூறப்படும் மலையன் இவனே. இவன் குதிரைக்குக் காரி யென்று பெயர். மேற்கூறிய வள்ளல்களு ளொருவனாகிய ஓரியென்பவனோடு போர் செய்தவன்; இதனை, "காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, வோரிக் குதிரை யோரியும்" (110-11)என்னும் சிறுபாணாற்றுப்படையாலுணர்க. இன்னும், "துஞ்சா முழவிற் கோவற் கோமான், நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப், பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கும், நெறியிருங் கதுப்பி னென் பே தைக்கு" (அகநா. 35), "முரண் கொள் துப்பிற் செவ்வேல் மலையன், முள்ளூர்க் கானம்" (குறுந். 312),

"ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப், பலருடன் கழித்த வொள் வாண் மலையன, தொருவேற் கோடியாங்கு" (நற். 170) எனச் சான்றோர் இவனைப் பாராட்டியிருத்தல் காண்க. இவன் பெயர் மலையமானெனவும் காரியெனவும் மலையனெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர்கள் : கபிலர், மாறோக்கத்து நப்பசலையார்.

மலையமான் மக்கள் :—இவர்கள் தம் குலப்பகைவனாகிய சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தம்மை யானைக்கு இடத் தொடங்கியபொழுது கோவூர்கிழாரால் பாடி உய்விக்கப்பட்டார்கள்.

மாங்குடி மருதனார் :—இவர் மதுரைக்காஞ்சி யென்னும் நூலின் ஆசிரியர்; பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனால் நன்கு மதித்துப் பாடப்பட்டார். இவருடைய பிற வரலாறு களைப் பத்துப்பாட்டில், பாடினோர் வரலாற்றில் காண்க.

மாவளத்தான் :—இவன் சோழன் நலங்கிள்ளியின் தம்பி; தாமப் பல்கண்ணனாரோடு வட்டாடியபொழுது, அவர் கைகரப்பத் தான் வெகுண்டு வட்டுக்கொண்டெறிந்து, அவர் 'நீ சோழன் மகனல்லை' என்று சொல்ல நாணமுற்றுப் பின்பு அவரால் புகழ்ந்து பாடப் பெற்றான். இவனைப் பாடியவர் மேற்கூறிய தாமப்பல் கண்ணனார்.

முக்காவனாட்டு ஆமூர் மல்லன் :—இவன் மற்போரிற் சிறந்தவன்; உறையூரி லிருந்த சோழனாகிய தித்தன் மகன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளியாற் பொருது கொல்லப்பட்டவன். இவன் காலத்தவர் சாத்தந்தையார்.

முதியன் :—ஆதனுங்கனென்பவனது இயற்பெயர் இது; அப் பெயரைப் பார்க்க.

மூவன் :—இவன் ஒரு சிற்றரசன்; விரைந்து பரிசில் கொடாமை யால் பெருந்தலைச் சாத்தனாரால் இகழ்ந்து பாடப்பட்டான்.

மூவேந்தர் :—சேர சோழ பாண்டியர்; இவர்கள் வேள் பாரி யென்னும் வள்ளலை வஞ்சனையாற் கொன்றார்.

யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை :—கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை யென்பதைப் பார்க்க.

வடிம்பலம்ப நின்ற பாண்டியன் :—இவன் கடற்றெய்வத்திற்குப் பெரியதொரு விழவு செய்தான்; பஃறுளியாற்றை உண்டாக்கினான். இன்னும் இவன் பெருமையை மதுரைக்காஞ்சியாலும், சிலப்பதிகாரத் தாலும் உணர்க.

வல்லார்கிழான் பண்ணன் :—இவன் வல்லாரென்னும் ஊரிலுள்ள வன்; பண்ணனென்னு மியற்பெயரையும் உடையான்; சிற்றரசன். இவனைப் பாடிய புலவர் சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.

வல்வில் ஓரி :—இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்; கொல்லி மலைக்கும் அதைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவன்; "காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, ஓரிக் குதிரை யோரியும்" எனச் சிறுபாணாற்றுப்படையிலும் இவனைப் புகழ்ந்து கூறினர்; இவன் பெயர்

ஆதனோரி யெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர்கள்: வன்பரணர், கழைதின் யானையார்.

வாட்டாற் றெழினியாதன் :—இவன் சிறந்த கொடையாளி; வாட்டாறு என்னும் ஊரிலுள்ளவன். இவனைப் பாடிய புலவர் மாங்குடி கிழார்.

விச்சிக்கோன் :—இவன் சிற்றரசரு ளொருவன். பாரிமகளிரை மணஞ்செய்து கொள்ளும்படி கபிலரால் வேண்டிப் பாடப்பெற்றோன். இவன் சேரமான் குடக்கோவிருஞ்சேரலிரும்பொறையால் வெல்லப் பட்டான்; பதிற். 9-ஆம் பத்தின் பதிகம் பார்க்க.

வெளிமான் :—இவன் சிற்றரசன்; மிக்க கொடையாளி; இவன் காலத்தவரும் இவனிறந்தபின்பு பிரிவாற்றாது வருந்திப் பாடியவரும் பெருஞ்சித்திரனார்.

வேங்கைமார்பன் :—இவன் கானப்பேரெயிலின் தலைவன்; பாண்டியன் உக்கிரப்பெருவழுதியால் வெல்லப்பட்டான். இவன் காலத்துப் புலவர் ஐயூர் மூலங்கிழார்.

வேள் எவ்வி :—இவன், *வேளாளருள் உழுவித்துண்போர் வகையினன்; மிழலைக் கூற்றத்துத் தலைவன்; மிகுந்த கொடையாளி; தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டோன். "ஓம்பா வீகை மாவே ளெவ்வி", "எவ்வி தொல்குடி", "போரடு தானை எவ்வி" என இந்நூலிலும், "எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர், பூவில் வறுந்தலை போல" (19) எனக் குறுந்தொகையிலும் சான்றோர் இவனைப் புகழ்ந்து கூறியிருத்தல் காண்க. கடற்கரைக்கணுள்ள நீழ லென்னுமூர் இவனுடையது; அகநா. 366. இவனைப் பாடியவர்கள்: மாங்குடிகிழார், கபிலர், வெள்ளெருக்கிலையார். இவருள், இவன் இறந்தபின் வருந்திப் புலம்பியவர் வெள்ளெருக்கிலையார்.

வேள்பாரி :—இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்; இவன் வரலாற்றைப் பாரி யென்னும் பெயரிற் காண்க.

வையாவிக் கோப்பெரும் பேகன் :—இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்; மலைநாட்டை யுடையவன்; மயிற்பறவைக்குப் போர்வை கொடுத்தோன்; இவனது ஊர் நல்லூரென்பது; ஆவியர் குடியிற் பிறந்தவன். இதனை இவன் பெயராலும், சிறுபாணாற்றுப்படை

---

* 'வேளாளர் உழுவித்துண்போரும், உழுதுண்போருமென இரு வகையினர். அவருள், உழுவித்துண்போர் மண்டிலமாக்களும், தண்டத் தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாருமுதலிய பதியிற்றோன்றி வேளெனவும், அரசெனவும் உரிமையெய்தினோரும், பாண்டிநாட்டுக் காவிதிப்பட்ட மெய்தினோரும், குறுமுடிக் குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட் கொடைக்குரிய வேளாளராம்.' (தொல். அகத்திணை. சூ. 30, ந.)

யாலும் உணர்க. தனக்குரியவளாகிய கண்ணகியென்பவளைத் துறந்த தனால், 'இவளை அங்கீகரித்துக்கொள்க' என்று கபிலர் முதலிய புலவர் களால் இரந்து பாடப்பெற்றான்; "கண்ணகி காரணமாக வையாவிக் கோப்பெரும் பேகனைப் பரணர் பாடிய கைக்கிளைவகைப் பாடாண் பாட்டு." (தொல். புறத்திணை. சூ. 35, ந.) "கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய, அருந்திற லணங்கிய னாவியர் பெருமகன், பெருங்க லுடன் பேகனும்" (85-7) என்றார் சிறுபாணாற்றுப்படையிலும். இவன் பெயர் பேகனெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர்கள்: பரணர், கபிலர், வன்பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார்.

---

*திணைகளும் துறைகளும்

திணைகள் :—கரந்தை, காஞ்சி, கைக்கிளை, தும்பை, நொச்சி, பாடாண்டிணை, பெருந்திணை, பொதுவியல், வஞ்சி, வாகை, வெட்சி.

திணையிறந்துபோன பாட்டுக்கள்:—244-50, 267-8, 282, 289, 323-5, 355-61.

துறைகள் :—அரசவாகை, ஆனந்தப்பையுள், இயன்மொழி, உடனிலை, உண்டாட்டு, உவகைக் கலுழ்ச்சி, எருமைமறம், ஏர்க்கள வுருவகம், ஏறாண்முல்லை, கடவுள் வாழ்த்து, கடைநிலை, கடைநிலை விடை, களிற்றுடனிலை, குடிநிலையுரைத்தல், குடைமங்கலம், குதிரை மறம், குறுங்கலி, கையறுநிலை, கொற்றவள்ளை, செருமலைதல், செரு விடை வீழ்தல், செவியறிவுறூஉ, தலைத்தோற்றம், தாபதநிலை, தாபத வாகை, தானைநிலை, தானைமறம், துணைவஞ்சி, தொகைநிலை, நல்லிசை வஞ்சி, நீண்மொழி, நூழிலாட்டு, நெடுமொழி, பரிசில்கடாநிலை, பரிசில் விடை, பரிசிற்றுறை, பழிச்சுதல், பாண்பாட்டு, பாணாற்றுப்படை, பார்ப்பனவாகை, பிள்ளைப்பெயர்ச்சி, புலவராற்றுப்படை, பூக்கோட் காஞ்சி, பூவைநிலை, பெருங்காஞ்சி, பெருஞ்சோற்றுநிலை, பேய்க் காஞ்சி, பொருண்மொழிக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி, மகண்மறுத்தல், மழபுல வஞ்சி, மறக்களவழி, மறக்களவேள்வி, மனையறந்துறவறம், முதல்வஞ்சி, முதுபாலை, முதுமொழிக் காஞ்சி, மூதின்முல்லை, வஞ்சினக்காஞ்சி, வல்லாண்முல்லை, வாண்மங்கலம், வாழ்த்தியல், வாழ்த்து, விறலியாற்றுப்படை, வேத்தியல்.

துறையிறந்து போன பாட்டுக்கள் :—244-5, 267-8, 282, 285, 323-5, 355-7, 361.

திணை துறையில்லாத பாட்டு :—289.

---

* இவற்றின் விளக்கத்தையும் இவற்றிற்குரிய செய்யுளெண்ணை யும் 'அரும்பத முதலியவற்றினகராதி' என்னும் பகுதியிற் காண்க.

விசேடச் செய்திகள்

அளவுகள் :—உறை, நாழி, மா, வேலி.

ஆபரண வகை :—அருங்கலம், அருங்கலவெறுக்கை, ஐம்படைத் தாலி, கம்பியாகச் செய்த நூல், கிண்கிணி, குறுவளை, தாலி, தொடி, நெற்றிப்பட்டம், புலிப்பற்றாலி, பொலங்கலம், பொலங்காசு, பொலந் தாமரை, பொற்கம்பி, பொற்றளிர், பொற்றும்பை, பொன்னுழிஞை, மாங்கலியசூத்திரம், முத்தாரம், முத்துவடம், முன்கைக் கடகம், யானை யின் நெற்றிப்பட்டம், வள்ளித்தொடி, வளை, வளைந்த கடகம், வீரக்கழல் (வீரகண்டை), வீரவளை.

ஆயுத வகை :—அடார், அம்பருத் தூணி, அம்பு, அரம், அரிவாள், ஆயுதக்காம்பு, எஃகு, கண்ணுடி தைத்த கேடகம், கணிச்சிப்படை, கலப்பை, கழிப்பிணிப்பலகை, காழெஃகம், கிளிகடி கருவி (தட்டை), குந்தாலி, குறடு, கேடகம், கோடாலி, சக்கரம், சிறியிலையெஃகம், சேறுகுத்தி, தறிகை, துடுப்பு, நவியம், படைவாள், பூண்கட்டிய தண்டு, மழு, வாள், வில், வேல், வேலுறை.

ஆறுகள் :—ஆன்பொருநை (பொருநை), கங்கை, காரியாறு, காவிரி, குமரி, பஃறுளி, பெண்ணை, வையை.

இடவகை :—அம்பலம், அரண்மனை, அரைமண் இஞ்சி, அரை மலை, அறச்சபை, ஆயுதக்கொட்டில், ஆலை, ஆற்றிடைக்குறை, ஆற்றின் கூடல், இடைகழி, இடைமதில், இளமரச்சோலை, இறைப்புரிசை, ஊர்ப் பொது, ஊருண்மரம், எயில், கட்டூர், கடைமடை, கடைமுகம், கரம்பை (பாழ்நிலம்), கருப்பம்பாத்தி, கருப்பாலை, கல்லணை, கல்வளை, கலிங்கு, கவர்த்தவழி, கழனி, கள்ளிற்கடை, காட்டுவழி, காட்டு வாயில், காலை ஓலக்கம், காவற்காடு, குகை, குடம்பை, குதிரைப்பந்தி, குறிய அரண், குறுநெறி, கூடகாரம், கூற்றம், கொற்றுறைக்குற்றில், கோட்டம்பலம், கோடுயரடுப்பு, சதுக்கம், சபை, சித்திரமாடம், சில்குடிச்சீறூர், சிற்றரண், சிற்றூர், சிறுமனை, சுடலை, செண்டுவெளி, சேக்கை, சேனைகளின் வரவைப் பார்த்துக்கொண்டு இருத்தற்குரிய இருப்பு, தாதெருமறுகு, திண்ணை, தெரு, நாளோலக்கம், நெற்கதிர் வேய்ந்த வீடு, நெற்களம், பசுத்தொழு, படைக்கலக்கொட்டில், படை வீடு, பணிக்களரி, பாண்சேரி, பாத்தி, பாழூர், பீலிவேய்ந்த குடம்பை, புக்கில், புல்லால் வேய்ந்த சிறுமனை, புலிபொறித்த கோட்டை, புற்று, புறங்காடு, புன்செய், புனம், பூஞ்சோலை, பெருங்குறும்பு, பொதியில் (அம்பலம்), மணற்குன்று, மதில், மதிற்சூட்டு, மலைநாடு, மலைவழி, மாடம், முரம்பு நிலம், முல்லை நிலம், முற்றம், முன்னூர்ப்பொதியில், யாகசாலை, யானைக்கூடம், வயல், வழி, வன்புலம், வாய்த்தலை, வாயில், விடுநிலம், வீட்டின் இறப்பு, வீடு, வீதி, வேண்மாடம், வேத்தவை, வேலி.

உடை வகை:—கலிங்கம், காழக ஆடை, சிதார், சீரை, தழைகளா லாகிய ஆடை, தழைகளாலும் பூக்களாலுமாகிய உடை, பழந்துணி, புதுக்காழ்ப் போர்வை, புதுமடி, பூவடிவமைந்த ஆடை.

உணவு வகை :—அரிசி, அல்குபதம், அல்லியரிசி, அவல், அவிப் புழுக்கல், அவிழ், ஆட்டிறைச்சி, ஆமைப்புழுக்கு, ஆமையிறைச்சி, ஆரன்மீன் சூட்டிறைச்சி, இல்லடு கள், இலைக்கறி, இளநீர், உப்பிலாப் புழுக்கல், உலை, ஊன்சோறு, ஊன்றடி, ஊன்றுவை, கட்கலங்கல், கடுங்கள், கந்தாரம், கருனை, கள், களிகொள்சோறு, காடி, குய்யுடை யடிசில், கூழ், சுட்ட பனங்கிழங்கு, சுடுகிழங்கு, சோற்றுத்திரளை, துவை, நறுநெய், நனைக்கள், நிணப்புழுக்கு, நிணமுரி, நெய், நெய்ம்மிதி கவளம், நெற்கவளம், பழஞ்சோறு, பனநுகும்பு, பனம் பிசிர், பாகு, பாசவல், பாலுலையில் வெந்ததும் தேனோடு கலந்தது மான வரகரிசிச் சோறு, புல்லரிசி, புளிங்கறி, புளிங்கூழ், புளிமிதவை, புற்கை, பெருஞ்சோறு, பொரியல், மரையான்பாலுலையில் வெந்த சோறு, மான்வறைக் கருனை, மான்றசைப்புழுக்கல், மானிறைச்சி, முயலின் சூட்டிறைச்சி, முயலின் நிணம், மோர், வரகின் சோறு, வராலிறைச்சி, வறை, விழுக்கு, விழுக்குநிணம், வீரபானம், வெந்தை, வேளையிலை வேவை (வேளைவெந்தை).

உலக வகை :—கீழுலகம், கோலோகம், சுவர்க்கம், நரகம், வீர சுவர்க்கம்.

உலோக வகை :—இரும்பு, செம்பு, பொன், வெள்ளி.

உவமைகள் :—அரசனுக்கு உயிர், அருவிக்குத் துகில், அருளுக்கு நீர், அழகிய இடத்திற்கு ஓவம், அழித்தற்குத் தீ, உபகாரியாகிய ஒருவனுக்கு அருஞ்சுரத்தின் மரம், உசாவினது அகலத்திற்கு ஆகாயம், எருமைக்குக் குண்டுக்கல், எருமைக்கொம்பிற்குப் பயற்று நெற்று, கந்தைத் துணிக்குப் பாசிவேர், கள்மயக்கத்திற்குத் தேளின் கடுப்பு, கலிங்கவுடைக்குப் பாம்பின் தோல், கிணைப்பறைக்குக் களிற்றின் அடி, குடுமிக்கு மானுளை, குதிரை வேகத்திற்குக் காற்றின் வேகம், சாயலுக்கு நீர், செந்நெலுக்கு வேங்கைப்பூ, சேவற்கோழியின் நெற்றிச் சூட்டிற்கு முள்ளுமுருங்கைப்பூ, சேனைக்குக் கடல், தடாரிப் பறைக்குத் திங்களும் யானைக் காற்சுவடும், தமிழ்நாட்டரசர் மூவர்க்கு முத்தீ, தலைவனுக்குச் சூரியன், நண்பர்க்குக் கண், நரைக்கூந்தற்குக் கொக்கின் தூவி, நிணத்திற்கு நெய்விழுதும் மெழுகடையும், நிமிர்ந்த அவிழுக்குக் கொக்கின் நகம், நிரைக்கு விண்மீன், பகைவர் சேனை யைத் தடுத்து நிறுத்தும் வீரனுக்குக் கடலைத் தடுத்து நிற்கும் கரை, பலவகைப் பூக்களாலாகிய மாலைக்கு இந்திரவில், பன்றித்தலைக்கு உரல், பனையினடிக்கு முழா, பாசறைக்குக் கடல், புகழுக்குத் திங்கள், புகைக்கு இருளும் மங்குலும், புதல்வர் தலைக்கு முனிவர் தலை, பொறுமைக்கு நிலம், மகளிர் நடைக்கு மயில்நடை, மணிக்கு முழவு, மதுவைப் பிழிந்த கோதுக்கு யானையுண்ட கவளக்கோது, மதுவிற்கு ஆனெய், முத்தாரத்திற்குப் பிறை, முயல்விழிக்கு நீர்க்கொப்புள், மேகத் தோற்றத்திற்கு மலை, யானைச் செவிக்கு முறம், யானைத் தாளுக்குப் பணை, வண்மைக்கு மாரி, வலிக்குக் காற்று, வறுமைக்கு

அரா, வறுமைத் துன்பத்திற்கு நரகத் துன்பம், வீட்டிற்குக் கயம் (நீர் நிலை), வெள்ளைக் கூந்தலுக்கு விரித்த நூல், வேலுக்குக் கெண்டை, வேள்வித் தீக்குத் தாமரை.

ஊர்கள் :—அம்பர், அரிசில் (அரியிலூர்), அரையம், அழும்பில், அள்ளூர், ஆடுதுறை, ஆமூர், ஆய்குடி, ஆலங்கானம், ஆலங்குடி, ஆலத்தூர், ஆவூர், இடைக்காடு, இடைக்குன்றூர், இலவந்திகைப் பள்ளி, ஈர்ந்தூர் (ஈரந்தூர்), உறையூர், உறையூர் ஏணிச்சேரி, ஊணூர், எக்கூர், எயில், எருக்காட்டூர், எருமைவெளி, எறிச்சிலூர் (எறிச்சி), ஐயூர், ஒக்கூர், ஒல்லையூர், கபிலநகர், கரும்பனூர், கருவூர், கழனிவாயில், கள்ளில், காவிரிப்பூம்பட்டினம், கானப்பேர் (காளையார் கோயில்), குடவாயில், குராப்பள்ளி, குளமுற்றம், குறுங்கோழியூர், குன்றூர், கூடலூர், கோட்டம்பலம், கோவலூர், கோவூர், சிக்கற்பள்ளி, சிற்றரையம், சிறுகுடி, செந்தில், செருப்பாழி, தகடூர், தங்கால், தலை யாலங்கானம், தழும்பனூர், திருப்போர் (திருப்பூர்), துவராபதி, துறை யூர், தொண்டி, நல்லூர், நாலை (நாலூர்), *நெய்தலங்கானல், நொச்சி நியமம், பாமுளூர், பிசிர், பிடவூர், புல்லாற்றூர், பூஞ்சாற்றூர், பெருங் குன்றூர், பேரரையம், பொருந்தில், பொறையாறு, போந்தை, மதுரை, † மல்லி, மாங்குடி, மாவிலங்கை (இலங்கை, பெருமாவிலங்கை), முகையலூர், முசுறி, முரஞ்சியூர், முள்ளூர், மையல், வஞ்சி, வல்லார், வாட்டாறு, விரிச்சியூர், விரியூர், விளங்கில், வீரை, வெண்குடை, வெண்ணி, வெள்ளைக்குடி, வேம்பற்றூர்.

ஊர்தி வகை :—குதிரை, சகடம், தேர், யானை.

ஐதிஹ்யம் :—ஆலமரம், சுடுகாடு, தூண், மலை இவற்றில் தெய்வங்களுண்டென்றல்; மேல்கடல் பழையதென்பது.

கட்டில் வகை :—அரசுகட்டில், ஆயுதக்கட்டில், கால்கழிகட்டில், முரசுகட்டில்.

கதைகள் :—கீழ்கடல் சகரரால் தோண்டப்பட்டது, சிபி புறவிற் காகத் துலையிலேறியது, சீதை ஆபரணங்களை முடிந்து வீழ்த்தியது, பரமசிவன் முப்புரங்களை எரித்தது, பாண்டவர் நூற்றுவரோடு போர் புரிந்தது.

கூத்து வகை :—அல்லியக் கூத்து, குரவைக் கூத்து.

கூற்றங்கள் :—மிழலைக் கூற்றம், முத்தூற்றுக் கூற்றம் (முத்தூர்க் கூற்றம்).

கோயில்கள் :—இந்திரன்கோயில், சிவாலயம், முருகக் கடவுள் கோயில்.

சாதிகள் :—அந்தணர், அரசர், அளவர், இடையர், இயவர், உப்பு வாணிகர் (உமணர்), உழவர், எயிற்றியர், கடம்பர், கடைசியர், கம்மி யர், களமர், கிணைஞர், கிணைமகள், குயவர், குறத்தியர், குறவர், குறும்

---

* நெய்தல் வாயில் அல்லது நெய்வாசலென்று காவிரிப்பூம் பட்டினத்துக் கருகே ஓரூருள்ளது. † இப்பெயருள்ள ஊர்கள் பல.

பர், கூத்தர், கொல்லர், கோசர், தச்சர், துடியர், தேர்ப்பாகர், நுளையர், பரதவர், பறையர், பாடினி, பாணர், பாணிச்சி, புலையர், பூண்செய் கொல்லர், பூவிலைப்பெண்டு, பொதுவிலைமகளிர், பொருநர், மடையர், மழவர், மறத்தியர், மறவர், மோரியர், யவனர், யாழ்ப்புலவர், யானைப்பாகர், யானைவேட்டுவர், வடவடுகர், வண்ணாத்தி, வணிகர், வலைஞர், விலைப் பெண்டிர், வேடர்.

சிறுதெய்வங்கள் :—கள்ளிநீழற் கடவுள், கூளி, நடுகற்றெய்வம், பேய், பேய்ப்பெண்டிர், பேய்மகள், பேயாயம்.

தானியங்கள் :—அவரை, உழுந்து, எள், கடலை, குளநெல், கொள், செந்நெல், தினை, நெல், பயறு, மலைநெல், மூங்கில்நெல், வரகு, வெண் சிறுகடுகு, வெண்ணெல், வெள்ளெள், வெள்ளைவரகு.

துவச வகை :—இடபக் கொடி, கருடக் கொடி, துகிற் கொடி, நாட் கொடி, பனைக் கொடி, புலிக் கொடி, மயிற் கொடி, மீனக் கொடி, விசயக் கொடி (வெண் கொடி).

தெய்வ வகை :—அருந்ததி, இந்திரன், இயக்கன், இராமன், உலகபாலர், கண்ணபிரான், காலன், சிவன், ஞாயிறு, திருமகள், திருமால், தூமக்கோள், பலராமர், பிதிரர், பிரமதேவர், முருகக்கடவுள், யமன், விண்மீன்கள்.

தொகைகள் :—அங்கம்-4; அங்கம்-6; அந்தணர் தொழில்-6; அரசர் மூவர்; இலாஞ்சனை-7; உணா-4; உலகம்-3; உழவர் உழாமலுள வாகும் பயன்-4; ஊர்-300; எச்சம்-8; எயில்-7; ஐம்படைத் தாலி; கடல்-7; கணம்-18; கழல்-2; காட்டுப்பசு-7; குடிகள்-4; திசை-4; திதி-15; தீ-3; துரியோதனுதியர்-100; நாட்டுப்பசு-7; நீர்-3; பாடற்றுறை-21; பாண்டவர் ஐவர்; பூக்கள்-4; பூதம்-5; பெருவேளிர் ஐவர்; பொறி-5; மருந்து-2; முரசு-3; மூர்த்திகள்-3; வருணம்-4; வள்ளல்கள்-7; வேதம்-4; வேள்வி-21.

நாடுகள் :—காட்டுநாடு, காரிநாடு, கொங்குநாடு, கோனாடு, சோணாடு, பறம்புநாடு, பெண்ணைநாடு, மலைநாடு, மாரோக்கம், முக்காவனாடு, வேங்கடநாடு.

நார் வகை :—ஆத்தி நார், நறைக்கொடி நார், மரல் நார்.

நீர்நிலை வகை :—அருவி, ஆறு, உவர்க்கூவல், ஊருண்கேணி, கடல், கயம், களர்நிலக்கிணறு, கற்கூவல், காட்டாறு, சிற்றாறு, சுனை, நிறைக்குளம், பொய்கை, மடு, வல்லுவர்க்கூவல்.

நீர்மிதவை :—அம்பி (ஓடம்), அறத்துறையம்பி, கப்பல், கழித்தோணி, தெப்பம், தோணி, நாவாய், மீன்படகு.

நீர்வாழ்வன :—அயிரைமீன், ஆமை, ஆரல்மீன், இருமீன், கயல், கவடி, கெடிற்றுமீன், கொழுமீன், கோட்டுமீன், சங்கு, சிப்பி, சிறுசின் மீன், சுறுமீன், நத்தை, நந்தினேற்றை, நீர்க்கோழி, நீர்நாய், நுழை மீன், மலங்குமீன், முதலை, வரால், வாளை.

நூல்கள் :—அங்கங்கள், அருத்தநூல், தருமநூல், வேதங்கள்.

நோய்கள் :—நினைவாலுண்டாகும் நோய், பஞ்சி களையாப் புண், புண்வழலை, மிடற்றுப் பசும்புண், வயாநோய்.

பண்கள் :—இரங்கற்பண், காஞ்சிப்பண், குறிஞ்சிப்பண், செவ்வழிப்பண், படுமலைப்பண், மருதப்பண், விளரிப்பண்.

பந்தர் :—கூவையிலைப்பந்தர், தழைப்பந்தர், படஞ்செய் பந்தர்.

பரிசில் :—ஊர்ப்பரிசில், ஓடைப்பரிசில், யானைப்பரிசில் முதலியன.

பலி :—குருதிப்பலி, நாட்பலி.

பழமொழி :—கிளியீடு வாய்த்தாற்போல்வது, கொண்டைமேற் காற்றடிக்கச் செல்லல்.

பழவகை :—ஆலம்பழம், களங்கனி, துடரிப்பழம், நெல்லிக்கனி, பலாக்கனி, பனம்பழம், மாங்கனி, விளாங்கனி.

பறவை வகை :—அன்னப்பறவை, ஆந்தை, இதல், ஈசல் (செம்புற்றீயல்), கழுகு (கழுகின் சேவல்), காக்கை, காட்டுக்கோழி, கானக்காக்கை, கிளி, குயில், குருவி, குறும்பூழ், கொக்கு, கோட்டான், செவ்வரிநாரை, தும்பி, தூக்கணங்குருவி, தேனீ, நாரை, பருந்து, புதா, புறவு, பூழ், பேராந்தை, பொகுவல், மயில், மனைக்கோழி, மிஞிறு, வானம்பாடி.

பாத்திரங்கள்:—உண்கலம், கட்குடம், கருங்கலன், கவிக்குந்தாழி, கிண்ணி, குடம், குடை (உண்கலம்), குண்டிகை, கோய், சமைக்கும் பானை, சாடி, சேறுபட்ட தசும்பு, தாலம், தாழி, பனங்குடை, பாற்பானை, பானை, பொற்கலம், மண்டை, மதுக்குடம், மிடா, முதுமக்கட்டாழி, வட்டி, வெண்மண்டை, வெள்ளிக்கலம்.

பால் வகை :—கவரிமாவின் பால், பசுப்பால், மரையாவின் பால்.

பாவை வகை :—அல்லிப்பாவை, கண்மணிப்பாவை, கொல்லிப்பாவை, தெற்றிப்பாவை, மணற்பாவை, வண்டற்பாவை.

பின்வருவனவற்றை முன் அறிவிப்பவை :—உற்பாதம், தீய கனா, பழம்புள் போதல், பறவை நிமித்தம், புதுப் புள் வருதல், விண்வீழ் கொள்ளி.

புகை வகை :—சூளைப்புகை, துகிற்புகை, நறைப்புகை, நாடுசுடு புகை, மீன்சுடுபுகை, யாகப்புகை.

புளி வகை :—களாப்பழப்புளி, துடரிப்பழப்புளி, நாவற்பழப்புளி, நெல்லிப்பழப்புளி, புளியம்பழப்புளி, மாங்கனிப்புளி.

பொருள்களின் இயற்கை :—இடி வெள்ளை நிறத்தது, நிலத்திற்கு நீர் முந்தியது, புலி இடப்பக்கத்தில் வீழ்ந்ததை உண்ணாது, பூமிக்குக் கீழே நீர்நிலையுண்டு, மலையில் ஆவியுண்டாகும், மழைநீர்த் துளி கடலில் வீழ்ந்து முத்தாகும், யானை தன்மேலே ஒருவனெறிந்த கல்லைக் கவுளில் அடக்கி வைத்திருந்து பின்னர்க் காணும்பொழுது அதனை யெறிந்து அவனைக் கொல்லும், யானைப்போர்க்கு வேற்படை உரித்து, யானைமதம் மணமுடையது, யானையிறைச்சியைப் புலி விரும்பும், விளக்கொளியில் மான் துயிலும்.

மணிகள் :—அரவீன்ற மணி, சிப்பிமுத்து, தென்கடல் முத்து, நீலமணி, பவழம், மலைபயந்த மணி, மாணிக்கம், யானைக்கொம்பின் முத்தம்.

மரமுதலியன :—அதிரல், அல்லி, அலரி, அவரை, ஆசினிமரம், ஆத்தி, ஆம்பல், ஆம்பற்கிழங்கு, இரவமரம் (இரமரம்), இருப்பை, இருவாட்சி, இலந்தை, இலைப்பாசி, ஈந்து, ஈரப்பலா, உடை, உழிஞைக்கொடி, உழுஞ்சில், உன்னம், ஊகம்புல், எருக்கு, எள், ஓடு, கடம்பு, கடல்முள்ளி, கண்பு, கரந்தை, கருநெய்தல், கரும்பு, கழற்கொடி, கழைக்கரும்பு, கள்ளி, களாச்செடி, காஞ்சி, காந்தள், காரைச்செடி, காளாம்பி, காளான், கீரை, குச்சுப்புல், குமிழ், குரலிக்கொடி, குருந்த மரம், குளநெல், குன்றி, கூதளம், கூவிளை, கூவை, கொற்றுழிஞை, கொன்றை, கோங்கு, சந்தனம், சிறுகடுகு, சுரபுன்னை, சுரைக்கொடி, செங்கழுநீர், செருந்தி, தகரமரம், தருப்பைப்புல், தாமரை, தாழை, தாளிச்செடி, தில்லைமரம், தினை, துடரி, தும்பை, தெங்கு, தெறுழங்கொடி, நரந்தப்புல், நரந்தம், நறும்புல், நாவல், நெட்டி, நெருஞ்சி, நெல்லி, நொச்சி, பகன்றைக்கொடி, பருத்தி, பலா, பனை, பாகல், பாதிரி, பீர்க்கு, புளி, புளிமா, புன்னை, பூவாது காய்க்கும் மரம், மரல், மருதம், மலைமல்லிகை, மிளகுக்கொடி, முஞ்ஞை, முசுண்டை, முண்முருங்கை, முல்லைக்கொடி, முல்லைப்புதல், முன்ன மரம், மூங்கில், மூங்கில்முளை, வடகுன்றத்துச் சாந்தம், வயலைக்கொடி, வள்ளிக்கிழங்கு, வள்ளிக்கொடி, வள்ளைக்கொடி, வாகை, வாழை, விளாமரம், வெட்சி, வெண்காந்தள், வெண்சிறுகடுகு, வெண்ணெட்டி, வெள்ளரி, வெள்ளெருக்கு, வேங்கை, வேம்பு, வேல், வேலை.

மலைகள் :—இமயம், கண்டீரம், குடகமலை, குதிரைமலை, கொண்கானம், கொல்லி, கோடை, தோட்டி, தோன்றி, நாஞ்சில், பறம்பு, பாயல், பூங்குன்றம், பொதியில், பொன்படு நெடுவரை, முதிரம், முள்ளூர்மலை, விச்சிமலை, வேங்கடம்.

மன்ற வகை :—இரத்திமன்றம், பலாமன்றம், விளாமன்றம், வேப்பமன்றம்.

மாலை வகை :—அடையாளமாலை, ஆத்திமாலை, ஒருகாழ்மாலை, கடன்முள்ளிப்பூமாலை, கண்ணி, காஞ்சிப்பூமாலை, காந்தட்பூமாலை, குடர்மாலை, கூவிளங்கண்ணி, சுரபுன்னைப்பூமாலை, செம்பூங்கண்ணி, தழைமாலை, தளிர்மாலை, தளிரும் உழிஞையும் கலந்தமாலை, தும்பை மாலை, நரந்தப்பூமாலை, நூலரிமாலை, பகைமாலை, பல்காழ்மாலை, பனந்தோட்டில் வேங்கைப்பூக்களை வைத்துத் தொடுத்த மாலை, பனமாலை, பீலிக்கண்ணி, புறத்திணைமாலை, புன்னைமாலை, பூக்களுடன் இலைகளை விரவிக் கோத்த மாலை, வஞ்சிமாலை, வளையமாலை, வேப்பமாலை.

முடிமன்னர் :—சேரர், சோழர், பாண்டியர்.

முள் வகை :—இடுமுள், உடைமுள், கயல்முள், கழல்முள், கள்ளிமுள், நெருஞ்சிமுள், வேல்முள்.

யுத்த வகை :—அறப்போர், கன்னிப்போர், குதிரைப்போர், தேர்ப்போர், நீர்ப்போர், மற்போர், யானைப்போர், வாட்போர், விழவுமேம்பட்ட போர், விற்போர், வேற்போர்.

வழக்கங்கள் :—அரைத்த மண்ணால் மதிலமைத்தல், அவலை வாயிலடக்கிக்கொண்டு நீந்துதற்கு மடுவிற்பாய்தல், ஆகுதி செய்தல், ஆபரணங்களில் அருப்புத் தொழிலமைத்தல், ஆம்பலிலையால் மதுவை யுண்ணல், ஆம்பற்கொடியை வளையாக அணிதல், ஆயுதங்களுக்கு நெய் பூசிப் பீலியணிந்து மாலை சூட்டல், ஆறலைத்தல், இசை கேட்போர் தலையசைத்தல், இறந்தவர்க்குப் பிண்டோதகக் கிரியை செய்தல், இறந்தவருடம்பைச் சுடுதல், உடலை வெறுத்துத் துறக்க விரும்பினோர் வடக்கிருத்தல், உடன்கட்டையேறல், உடைப்பை மீனாலடைத்தல், உப்பு முதலிய பண்டங்களை வண்டியிலேற்றிக் கொண்டுபோய் விற்றல், ஊர்காப்பாளர் பறையறைந்துகொண்டு விளக்குடன் யாமந்தோறுஞ் சென்று ஊரைக் காத்தல், ஊர்ப் பொது விடத்திற் பரிசிலர் தங்கல், கடாவடித்தல், கடாவிடல், கடிமரந் தடிதல், கழற்கனியாற் கூந்தலை வகிர்தல், கள்ளையுண்டோர் புளிச் சுவையை விரும்பல், களம் வேட்டல் (களவேள்வி செய்தல்), கள வேள்வியிற் கூழை இடந்துழந்தடுதல், களை களைதல், காலையில் மதுவை யுண்ணல், காவற்குத் தீயிடல், குதிரையை இடவாய் வலவாய் செலுத்தல், குழந்தைகளுக்கு அம்புலி காட்டல், கைம்மை நோன்பு நோற்றல், கோலாற் கடைந்து விறகில் நெருப்பெடுத்தல், சூதாடுதல், சூளுறல், தயிர் கடைதல், தருப்பைப்புன்மேல் பிண்டம் வைத்தல், தருமவோடம் விடுதல், தாளித்தல், தாளியடித்தல், தாளைப் பாடல், தானியங்களைக் குத்தல், தீவேட்டல், தூய்மை இல்லா மகளிர் கலந்தொடாமை, தெய்வ ஆவேசமுற்று மனிதர் ஆடுதல், தைத்தல், நல்ல வேளை பார்த்துப் புறப்படல், நாட்கடாவழித்தல், நாட் சோறளித்தல், நீரில் மூழ்கி மண்ணெடுத்தல், நீலமணியை உச்சியில் தரித்தல், நெய்யை உலையாக வைத்தல், நெல் உகுத்துக் கடவுளைப் பரவுதல், நோயாலிறந்த அரசருடம்பைத் தருப்பையிற் கிடத்தி வாளாற் பிளத்தல், பகைவரிடமிருந்து கவர்ந்த பசுக்களைப் பொது விடத்தில் நிறுத்தல், பகைவருடைய அரணிற் கொண்ட பொருள் களைப் பரிசிலர்க்குக் கொடுத்தல், பன்னாடையாற் கள்ளை வடித்தல், பனங்குருத்தில் வேங்கைப்பூவை வைத்துத் தொடுத்தல், பாலில் உறையைத் தெறித்தல், பிணத்தைத் தாழியாற் கவித்துப் புதைத்தல், புதிதுண்ணல், புறத்திணைக்குரிய பூக்கள் பொன்னாற் செய்யப்படல், புறத்திணைக்குரிய பூக்களைக் காலத்திற் பறித்தல் அல்லது வாங்கிக் கோடல், பெண்டிர் பருத்தி நூற்றல், பொதுவிடத்துள்ள வேப்பந் தளிரைச் சூடல், போர்க்களத்தைத் தமதாக்கிக்கோடல், போர்க்குச் செல்வோர் கயத்தில் மூழ்கிச் செல்லல், மணியை ஒப்பமிடல், மருந்திற்காக மரங்களிலிருந்து பாலெடுத்தல், மழையின் பொருட்டுத் தெய்வத்திற்குப் பலி தூவுதல், மன்றத்திற் பாணர் முதலியோர் முழவைக் கட்டுதல், யானைக்குப் பூணணிதல், யானையின்மீது கொடி யெடுத்தல், யுத்தத்தில் இமைத்தவர் முதலியவரோடு போர்

செய்யாமை, வஞ்சி பாடல், வயாவுற்ற மகளிர் மண்ணுண்ணல், வாழையிலையி லுண்டல், வீர முரசை நீராட்டல், வெறியாடல், வேட்டையாடல், வேலுக்குப் பீலி யணிதல்.

வணிகம் :—உடை வாணிகம், ஓலை வாணிகம், கள் வியாபாரம், கூல வாணிகம், பொன் வாணிகம்.

வாத்தியங்கள் :—அரிப் பறை, அனந்தற் பறை, ஆகுளிப் பறை, ஆம்பற்குழல், உடுக்கை, ஏற்றுத்தோல் முரசம், ஒருகட்பறை, ஒரு கண் மாக்கிணை, கண்விடுதூம்பு, காலை முரசம், கிணை, சல்லிப் பறை, சாக்காட்டுப் பறை, சிறு கிணை, சிறு பறை, சீறியாழ், செருப் பறை, தடாரிப் பறை, தண்ணுமை, நெய்தற்பறை, பதலை, பலிபெறு முரசம், பெருவங்கியம், பேரியாழ், போர்ப் பறை, மணப் பறை, மத்தளம், முரசம், முழவு, யாழ், வேய்ங்குழல்.

வாழ்த்து வகை :—ஆற்று மணலினும் நின் ஆயுள் சிறக்க, கழனி யில் விளையும் நெல்லினும் நீ வாழ்க, காவிரி மணலினும் நின் ஆயுள் சிறக்க, நின் தார் வாழ்க, நின் தாள் வாழ்க, நின் நாண்மீன் நிலைத்திடுக நின் பகடு வாழ்க, நின் புரவி வாழ்க, பொருநை மணலினும் நீ வாழ்க, மழைத் துளியினும் பல நாள் நீ வாழ்க, வாழ்க நின் கண்ணி, விண்மீனினும் உன்னுடைய நாள் பொலிக.

விலங்கு முதலியன :—அணில், ஆடு, ஆமான், ஆமை, ஆவேறு, ஆளி, இரலைமான், ஈர், உடும்பு, எய்ம்மான், எருது, எருமைக்கடா, எலி, எறும்பு, ஐந்தலைநாகம், கடமானேறு, கடுவன், கலைமான், கவரிமா, கழுதை, கறையான், காட்டுப்பசு, காட்டுப்பூனை, குதிரை, குரங்கு, குராற்பசு, குறுநரி, கேழற்பன்றி, சிங்கம், சிலைப்பேன், செம்மறியாடு, செம்முகக் குரங்கு, தேள், நரி, நாய், பசு, பல்லி, பன்றி, பாம்பு, பார்வைப்பிணை, புலி, புள்ளிமான், பேன், மந்தி (துய்த்தலை மந்தி), மரையா, முசுக்கலை, முயல், முள்ளம்பன்றி, யாளி, யானை, வீட்டெலி, வெண்ணரி, வெருக்குவிடை, வெள்ளாடு.

விழாக்கள் :—கடற்றெய்வ விழா, சிறுசோற்று விழா, யுத்த விழா, வதுவை விழா.

வேலிகள் :—இடுமுள்வேலி, கழன்முள்வேலி, நெல்லிவேலி, பருத்திவேலி, மலைவேலி, முல்லைவேலி, முள்வேலி.

வேள்வி :—அறக்களவேள்வி, சோமயாக முதலியன, மறக்கள வேள்வி.

வேறு பெயர்கள் :—அடிக்கும் மணி, அதட்படுக்கை, அமிழ்தம், அரக்கன், அரில், அழற்பள்ளிப்பாயல், அறக்கற்பு, ஆகுதி, ஆணி, ஆயுத இலக்கம், ஆயுதப் பிடி, ஆரக்கால், ஆரநெருப்பு, ஆலம் பொந்து, ஆலம்வீழ், இந்திரவில், இராசசூயம், இலக்கம், ஈமவிளக்கு, உப்பு, உரல், உருளி, உருளை, உலக்கை, உலைக்கல், உள்ளிடு பருக்கை, எண்ணெய், எந்திரம், எரிகொள்ளி, எழுத்தாங்கிய கதவு, ஏணி, ஏத்தம், ஏர், ஒடுங்காழ்ப்படலை, ஒத்தல் (தாளம்), ஓலைக்கடை,

ஓமகுண்டம், கச்சு, கச்சை, கடகப்பெட்டி, கடல்முத்து, கடற்றுரம், கடிவாளம், கடுந்தெற்று மூடை, கடைக்கொள்ளி, கண்ணுடி, கண்ணேணி, கணக்காயர், கணைய மரம், கதவு, கப்பற்பாய், கருங்கல், கரும்பின் பூ, கரும்பினெந்திரம், கவசம், கவரி, கழிப்பிணிப் பலகை, கற்பகச் சோலை, காம்பு, காமரம், காவற்பெண்டு, காவன்மரம், கிணைப்பறைக்கோல், கிளியீடு, குப்பி, குப்பை, குயவன்சக்கரம், குரல்நரம்பு, கூடு, கைகவரிரும்பு, கொங்கர், கொளுத்து, கொற்றக் குடை, கோல், சக்கரவாள சக்கரவர்த்திகள், சங்கிலி, சித்திரம், சிறு காடு, சிறுதூறு, சுவர், சுள்ளி, சுளகு, சூடு, சூரபன்மா, சூலை, செருப்பு, சேமவச்சு, தலையடுப்பு, தலையாட்டம் (உளை), தவம், தாள்நிழல், திறை, தீக்கடைகோல், தூண், தூண்டில், தேர்மொட்டு, தொடிமாணுலக்கை, நடுகல், நரம்பு (தந்தி), நல்வினை, நாய் (சூதாடு கருவி), நாராசம், நிறைக்குளப்புதவு, நீலக்கச்சை, நுகம், நூலிழை, நெற்கூடு, நெற்சூடு, நெற்பொலி, நெற்போர், பஞ்சு, படஞ் செய் பந்தர்க்கல், படப்பை, படமடை. படுக்கை, பரிசம், பருக்கைக் கல், பறவைக்கூடு, பன்றுடை, பனிச்சை, பனைப்போழ், பா, பாடை, பாத கம், பாய், பாய்மரம், பின்படை, புலிநிறக் கவசம், புலிப்பொறி, புறச் சமயத்தோர், பூணூல், பொற்றைக்கல், மடல், மத்து, மலைத்தாரம், மறுபிறப்பு, மார்பிற் செம்பொறி, மாலைப்பந்து, மிளகுமூடை, மீப்பாய், முட்டை, முரசடிக்குங் குறுந்தடி, முருக்கமர இலக்கம். முருகன் யானை, முன்படை, முனிவர், மூதிற்பெண்டிர், மேழி, யாகபத்தினி, யாகம், யானைக் கம்பம், யானைத் தந்தத்தாற் செய்யப்பட்ட துலாக்கோல், யானைத்தந்தப் பூண், யானைமணி, யூபத்தம்பம், வண்டிப் பார், வலை, வளைமுறி, வன்னித்துடுப்பு, வார், வாழைப்பூ, விமானம், விளக்கு, வீரச்செல்வம், வேணுவியோர், வேலுறை.

உரையின் இயல்பு

முகவுரையில் தெரிவித்தபடி புறநானூற்றிற்கு உரை இயற்றிய ஆசிரியர் பெயர் முதலிய வரலாறுகளில் ஒன்றும் கிடைக்கவில்லை. இவரைப்பற்றி அறிந்துகொள்ளுதற்குக் கருவியாக இருப்பது இவருடைய உரை ஒன்றே. இவருடைய உரைநடையின் அமைதியும் உரைநயமும் இலக்கணம் கூறும் திறமும், பிறவும் இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் முதலியவர்களுடன் ஒப்பக் கருதும் அறிவுடையவராக இவரைப் புலப்படுத்துகின்றன. தமிழ் நாட்டின் பண்டைக் கால வரலாறுகளையும் தமிழர் ஒழுக்கம் முதலியவற்றையும் அறிவிக்கும் கருவூலமாகிய இந்நூலுக்கு உரை வகுக்கப் புகுந்ததொன்றே இவர் பேராற்றலுடையாரென்பதைப் புலப்படுத்தும்.

ஆற்றொழுக்காகச் செய்யுளிற் சொற்கிடக்கை அமைந்தவாறே பொருள் கூறிச் செல்லுதலும், எளிய நடையில் உரை வரைதலும்,

பிறரைக் கண்டியாமல் அவர்கள் கூறும் பலதிறப்பட்ட பொருள் வேறு பாடுகளையும் எடுத்துக் கூறுவதும், இன்றியமையாதவற்றை மட்டும் சுருக்கமாக உரைப்பதும், விளங்கும்பொருட்டு வினைமுடிவு காட்டு தலும் இவ்வுரையாசிரியருடைய சிறப்பியல்புகள். இவருடைய உரை பதவுரையாக விளங்குகின்றது.

சொற்பெய்துரைத்தல்

ஒவ்வொரு சொல்லுக்கும் மூலத்திலுள்ள முறையிலேயே உரை கூறும்பொழுது சில இடங்களில் கருத்தை விளக்குதற்குரிய சொற் களைப் பெய்து வரைதல் இவருடைய வழக்கம். கடவுள் வாழ்த்துச் செய்யுளில் இறைவனுடைய திருமிடற்றிலுள்ள கறையைப்பற்றி, "அக்கறை மறைநவி லந்தணர் நுவலவும் படுமே" என்று சிறப்பித் துள்ள பகுதிக்கு, 'அக்கறுப்பு, தான் மறுவாயும் வானோரை உய்யக் கொண்டமையின் வேதத்தைப் பயிலும் அந்தணராற் புகழவும்படும்' என்று அது புகழப்படுதற்குரிய காரணத்தையும் உடன்பெய் துரைத்தார். இங்ஙனமே, "அப்பிறை, பதினெண் கணனு மேத்தவும் படுமே" என்றவிடத்து, "அப்பிறைதான் பெரியோன் சூடுதலால் பதினெண்கணங்களாலும் புகழவும்படும்' என்று உரை கூறினர். "இருநிலத் தன்ன நோன்மை" (14) என்றவிடத்து, 'துளக்கப் படாமையின் பெரிய நிலம்போன்ற வலியினையும்' என்று கூறினர். "நாட னென்கோ வூர னென்கோ, பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்ப னென்கோ" (49) என்னும் பகுதிக்கு, 'குறிஞ்சி நிலமுடைமையால் நாடனென்று சொல்லுவேனோ? மருதநிலமுடைமையால் ஊரனென்று சொல்லுவேனோ? நெய்தனிலமுடைமையால்... சேர்ப்பனென்று சொல்லுவேனோ?' என்று பொருள் கூறினர். "மையன்மாலை" (67) என்பதற்கு, 'தமியராயினோர்க்கு மயக்கத்தைச் செய்யும் மாலைப் பொழுது' என்றும், "பகைவர், ஓடுகழற் கம்பலை கண்ட" (120) என்பதற்கு, 'பகைவரது புறக்கொடுத்தோடும் வீரக்கழலினது ஆரவா ரத்தைக் கேட்டு நாணிப் பின்செல்லாது கண்டு நின்ற' என்றும், 'பீடின்மன்னர்" (138) என்பதற்கு, 'பிறர்க்கேயும் பெருமையில்லாத அரசர்' என்றும் கூறினர்.

இங்ஙனம் பெய்துரைக்கும் முறையிற் சிலவிடங்களில் தாம் அங்ஙனம் கூட்டியுரைத்தமைக்குரிய காரணத்தை வெளியிடுவர் :—

"நின் மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென வீசியோயே" (50) என்பதில், 'வீசியோயே' என்பதற்கு, 'சாமரத்தாற் குளிர வீசினாய்' என்று உரை வகுத்துவிட்டு, 'முழவுத்தோளோச்சி யெனவும், தண்ணென வீசியோயெனவும் கூறியவாற்றால், சாமரை யென்பது பெற்றாம்' என்று அதற்குரிய காரணமும் காட்டினர். "முன்னுள்ளு வோனைப் பின்னுள்ளி னேனே, ஆழ்கென் னுள்ளம் போழ்கென் னாவே, பாழூர்க் கிணற்றிற் றூர்கவென் செவியே" (132)

என்னும் பாடற் பகுதிக்கு, 'யாவரினும் முன்னே நினைக்கப்படுமவனைப் பின்பே நினைத்தேன் யான்; அவ்வாறு நினைந்த குற்றத்தால் எனதுள்ளம் அமிழ்ந்திப் போவதாக; அவனையன்றிப் பிறரைப் புகழ்ந்த நாவும் கருவியாற் பிளக்கப்படுவதாக; அவன் புகழன்றிப் பிறர் புகழைக் கூறக் கேட்ட எனது செவியும் பாழ்பட்ட ஊரின்கட் கிணறு போலத் தூர்வதாக' என்று பல சொற்களைப் பெய்துரைத்து அங்ஙனம் உரைத்ததன் காரணத்தை, 'முன்னுள்ளு வோனைப் பின்னுள்ளி னேனென உள்ளம் ஆழ்தற்குக் காரணங் கூறினமையால், பிறரைப் புகழ்ந்த நாவெனவும், பிறர்புகழ் கேட்ட செவியெனவும் ஏனையவற்றிற்கும் காரணம் வருவித்து உரைக்கப்பட்டது' என்பதனால் அறிவிக்கின்றார்.

மாறிக் கூட்டுதல்

இன்றியமையாத சில இடங்களில் மாறிக் கூட்டியுரைத்தல் இவர் இயல்பு. அங்ஙனம் கூட்டும்பொழுது அதனைத் தனியே எடுத்துக்கூறுவதோடு சில இடங்களில் அதற்குரிய காரணத்தையும் உணர்த்துவர்:—

"வார்கோற், செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்" (36) என்றவிடத்து, 'செறிந்த உள்ளிடுபருக்கையையுடைய சிலம்பினையும் நீண்ட கோற்றொழிலாற் செய்யப்பட்ட குறிய வளையையுமுடைய மகளிர்' என்று மாறிக்கூட்டி உரைகூறி அங்ஙனம் கூறியதை விசேடவுரையில், 'வார்கோற் குறுந்தொடியென மாறியுரைக்கப்பட்டது' என்று அறிவித்தனர். 'உணவின் பிண்டம் உண்டிமுதற் றுதலான், உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரென மாறிக்கூட்டுக' (18) எனவும், 'சுரம்பல கடந்து புள்ளிற்போகியென மாறிக்கூட்டுக' (47) எனவும் வேறு பல இடங்களிற் கூறுதலும் காண்க.

பழஞ்செய்யுட் பகுதியை உரைநடையாக உரைத்தல்

இவர் பழைய நூல்களிலுள்ள செய்யுட்பகுதிகளை இடையிட்டு எழுதுவர் :—

"நிற்றிறஞ் சிறக்க" (6) என்பதற்கு, 'படைகுடி முதலாகிய கூறுபாடுகள் சிறக்க' என்று உரையெழுதியிருத்தல், 'படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும், உடையா னரசரு ளேறு" என்னும் திருக்குறளின் நினைவிலிருந்தெழுந்தமை காண்க. "பல்கதிர்ச் செல்வன்" (34) என்னும் தொடருக்கு, 'வாழ்நாட்கு அலகாகிய பல கதிரையுடைய செல்வன்' என்று இவர் உரைத்த உரையில், "வாழ்நாட் கலகாய் வயங்கொளி மண்டிலம்" என்னும் நாலடிச் செய்யுட்பகுதி அமைந்திருக்கின்றது. "புரவலர்" (69) என்ற சொல்லுக்கு, 'ஈத்தளிப்போர்' என்று உரை கூறினர்; இவ்வுரை, "இன்சொலா லீத்தளிக்க வல்லாற்கு" என்னும் குறளை அடியொற்றியது. "கவிழ்ந்த மண்டை" (13) என்ற தொடருக்கு, 'ஏலாது கவிழ்ந்த என் மண்டை' என்று உரை எழுதுகையில், புறநானூற்றிலுள்ள வேறொரு செய்யுளின் அடியாகிய "ஏலாது கவிழ்ந்தவென் னிரவன் மண்டை" (179) என்பது

நினைவிலிருந்ததென்றே தோற்றுகின்றது. "உழுத நோன்பக டழிதின் ருங்கு" (125) என்னும் உவமையை விளக்கி, 'தாளாற்றலாற் செய்த பொருளில் நல்லனவெல்லாம் பரிசிலர்க்கு வழங்கி எஞ்சியது உண்டலான் அழிதின்ருங்கென்ருர்' என்றெழுதிய உரையில், "தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு, வேளாண்மை செய்தற் பொருட்டு" என்னும் குறளின் சொல்லும் பொருளும் அமைந்திருக்கின்றன.

சொன்னடை

இவர் செயவென்னும் எச்சத்திற்குப் பொருள் கூறும்பொழுது பரிசு என்னும் சொல்லைக் கூட்டி யுரைப்பர்; இதனை, 'தீப்பிறக்கும் பரிசு முறுகி' (37), 'மாளும்பரிசு...சொல்லும்' (41), 'கைவிடும் பரிசு... மாறிய' (52), 'தூங்கும்பரிசு தூக்கி' (103), 'கொள்ளா வாம்பரிசு' (116), மூழ்கும்பரிசு குளிர' (160) முதலியவற்ருல் அறியலாம்.

* 'வைத்து' என்னும் சொல் இவரது உரைநடையில் இடையிடையே வரும் :—"எம்முளும்" (87) என்பதன் உரையில், 'எங்களுள் வைத்தும்' என்றும், வேருரிடத்தில் (106), 'அவை இரண்டினும் வைத்து எண்ணப்படாத' என்றும் இச்சொல்லைச் சொன்னடையாக அமைத்திருத்தலைக் காணலாம்.

பொழிப்புரையின் பின்னர் விசேடவுரையில் முன்னர்க் கூறிய உரையையன்றி வேறு சில உரைகளையும் கூறி, 'எனினும் அமையும்' என்று முடிப்பர். பிறர் கூறும் உரைகளையும் எடுத்துக் கூறுவர். பாட பேதங்களைக் காட்டிச் சில இடங்களில் அவற்றிற்கும் உரை கூறுவர். வினைமுடிவு காட்டுவதும், சில சில தொடர்களுக்குப் பதசாரம் கூறுவதும், இலக்கணம் உரைப்பதும், துறைப்பொருத்தம் உணர்த்துவதும் இவர் இயல்பு. இரண்டு வகையாகத் துறை கூறுமிடங்களில் அவ்விரண்டிற்கும் செய்யுட் பொருளோடு பொருத்திக் காட்டுவதுண்டு. சில இடங்களில் துறைப்பொருத்தம் காட்டாமற் செல்லுவதும் உண்டு.

மாறுபாடு நீக்கல்

செய்யுளிற் கூறப்பட்ட பொருள் சில வகைகளில் மாறுபாடாகத் தோற்றுவதற்கு இடமிருப்பின் அம் மாறுபாடு நீங்க, இன்ன காரணத்தால் இங்ஙனம் கூறப்பட்டதென்று தெளிவுறுத்துவது இவர் இயல்பு:—

இரண்டாவது பாட்டில் போற்ருர்ப் பொறுத்தல் முதலியவற்றிற்கு உவமையாக ஐம்பெரும்பூதங்கள் கூறப்படுகையில் அவை நிலன், விசும்பு, வளி, தீ, நீர் என்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளன. அம் முறை ஐம்பூதங்களின் தோற்ற முறையாகவேனும், ஒடுக்க முறையாக வேனும் இல்லை. இம் மாறுபாட்டை இவர், 'போற்ருர்ப் பொறுத்தல் முதலாகிய குணங்களை அரசியலடைவாற் கூறுகின்ருராதலின் பூதங்களின் அடைவு கூருராயினர்' என்று தெளியவைக்கின்ருர். "ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும், உரனுடை நோன்பகட் டன்ன

* பரிமேலழகரது உரைநடையிலும் இது காணப்படும்.

வெங்கோன்'' என்றவிடத்து, உயர்ந்த தலைவனுக்கு இழிந்த பகட்டை உவமை கூறுவது குற்றமாகுமோ என்னும் மயக்கத்தை, 'இராச்சிய பாரத்தைப் பொறுத்து நடத்துமாறு நோக்கி நோன்பகட்டோடு உவமித்தமையின், இறப்ப இழிந்த ஆனந்த உவமை அன்றாயிற்று' என்பதனாற் போக்குகின்றனர். சோழன் நலங்கிள்ளியின் பாட்டில் (73), ''மெல்ல வந்தெ னல்லடி பொருந்தி'' என்னும் பகுதியில், தனதடியைத் தானே நல்லடியென்று சொல்லுதல் தற்புகழ்ச்சி யென்னும் குற்றமாமோ என்னும் மயக்கத்தை, '*தன் மேம்பாடு கூறுகின்ற இடமாதலின், நல்லடி யென்பது தற்புகழ்தலென்னும் குற்றமாகாது' என்று அகற்றுகின்றார்.''மூவ ரு ளொருவன் றுப்பா கியரென, ஏத்தினர் தரூஉங் கூழே'' (122) என்றவிடத்து, ஒருவன் என்ற ஒருமையும் ஏத்தினரென்னும் பன்மையும் பொருளொடு பொருந்துமாற்றை, 'ஏத்தினர் தரூஉமென்று பன்மையாற் கூறியது, அவ்வேந்தன் அமைச்சரை; மூவருள் யான் ஒருவன், எனக்குத் துப்பாகியரென அம் மூவரும் ஏத்தினர் தரூஉமென்று உரைப்பினும் அமையும்' என்று தெளிய வைக்கின்றார். ''பயனின் மூப்பிற் பல்சான் றீரே'' (195) என்றதில், பயனின்மூப்பு என்னும் இழிவுக்கு மாறாகச் சான்றீரென்றிருத்தல் பொருந்துமோ என்னும் ஐயுறவை, 'பயனின்மூப்பென்று வைத்துப் பல்சான்றீரே யென்றது இகழ்ச்சிக் குறிப்பு' என்று போக்குகின்றார். ''காலன புனைகழல்'' (100) என்றதில், காலன என்னும் பன்மைக்கு வகை, 'காலன புனைகழல் என்பது வீரத்திற்கும் வென்றிக்கும் கட்டின; போர்தொறும் வென்று கட்டினவெனவுமாம்' என்று புலப்படுத்துகின்றார். பிட்டங்கொற்றனை வாழ்த்த வந்த வடம வண்ணக்கன் தாமோதரனார், ''மாறுகொண் மன்னரும் வாழியர் நெடிதே'' (172) என்று அவன் பகைஞரையும் வாழ்த்துதல் முரண்பாடுடையதுபோலத் தோற்றி மயக்கம் தருதலை, 'மாறுகொண் மன்னரும் வாழியரென்ற கருத்து : இவன் வென்று திறைகொள்வது அவருளராயினென்பதாம்' என்பதனால் தெரிவிக்கின்றார்.

சொல்வருவித்துரைத்தல்

அங்கங்கே துறைப்பொருளொடு பொருந்தும்பொருட்டும் பொருள் முடிபின்பொருட்டும் ஒரு சொல் வருவித்து முடிப்பர் :—

'வாழ்த்தியலாதல் விளங்க, வேண்டுமென ஒரு சொல் தந்துரைக்கப்பட்டது' (3), 'கொளீஇ யென்னுமெச்சம் அமைத்த வென்னும் ஒரு சொல் வருவித்து முடிக்கப்பட்டது' (14), 'செரீஇ யென்னும் வினையெச்சத்தை ஆடுமென ஒரு சொல் வருவித்து அதனோடு முடிக்க' (22), 'செய்யென ஒரு சொல் வருவித்து உரைக்கப்பட்டது' (44) முதலிய இடங்களைக் காண்க.

வகுத்துக் கூறல்

செய்யுளிற் கூறப்படும் பொருள்களை இன்னவை இன்னவற்றைச் சார்ந்தனவென்று வகுத்து எளிதிலறியும்படி கூறுவர் :—

* நன். சூ. 53.

'நகர்வலஞ்செயற்குப் பணியியரென வீடும், ஏந்துகை யெதிர் இறைஞ்சுகவென அறமும், புகையெறித்தலான் வாடுகவெனப் பொருளும், முகத்தெதிர் தணிகவென இன்பமும் கூறியவாருயிற்று' (6), 'கழறைஇய வல்லாளனென்றதனுற் பகையின்மையும், ஒருபிடி படியுஞ் சீறிட மெழுகளிறு புரக்கும் நாடுகிழவோ யென்றதனுற் பொருட்குறைவின்மையும் கூறியவாருயிற்று' (40), 'உற்கமுதலிய நான்கும் உற்பாதமாய் நனவிற் காணப்பட்டன; எயிறு நிலத்து வீழ்தல் முதலாயின கனவிற் காணப்பட்டன.'

கூற்று விளக்கல்

இன்னுரால் இன்ன காலத்தில் இது கூறப்பட்டதென்று விளக்குவர் :—

'தாம் நினைந்த நினைவு எவ்வண்ணமாவதென்று தம் நெஞ்சொடு கூறிப் பின் பொலிக நும் புகழே யென அவ்வரசர் கிடந்தவாறு கண்டு கூறியவாறு' (62), 'உளையக் கூறியதனைத் தம்மிடமிருந்து கூறியதாக வும், சிறுசொற் சொல்லியதனைப் போர்க்களத்து எதிர்ப்பட்டுக் கூறிய தாகவும் கொள்க' (72), 'இது, பரிசில்பெறப் போகின்ருன் வருகின்ற வரைக் கண்டு வினவுவான் பண்ணனது இயல்பு கூறி வாழ்த்தியவாறு' (173), 'இவன் நிரைகொள்ளச் செல்கின்றமை கண்டார் கள்விலை யாட்டிக்குக் கூறியது' (258).

குறிப்பாலறிந்த பொருள்

அகப்பொருட் செய்யுளுக்கு உரை வகுக்கும் உரையாசிரியர்கள் உள்ளுறையுவமமாகவும், இறைச்சிப்பொருளாகவும் அறிந்து கூறும் பொருளைப்போன்று பாட்டிற் காணப்படும் இன்ன சொற்களின் குறிப் பினுல் இன்ன பொருள் தோற்றுகின்றதென்றும், இன்ன நயம் புலப்படு கின்றதென்றும் இவர் எழுதிச்செல்லும் இடங்கள் மிக்க இன்பத்தை உண்டாக்கும்.

'கலை புலிப்பாற்பட்டெனச் சிறுமறி தழீஇய மடப்பிணை பறந்தலை வேளை வெண்பூக் கறிக்குமென்பது, அவன் பகைவரைக் கொன்றவழி அவர் பெண்டிர் தம் இளம்புதல்வரை ஓம்புதற்பொருட்டு இறந்து படாது அடகு தின்று உயிர் வாழ்கின்ருரென்பதோர் பொருள் தோன்ற நின்றது' (23), 'நின் மலையிற் குறவர்மாக்கள் கடவுட் பேணி மழை வேண்டியபொழுது பெற்றுத் தாம் வேண்டுமுணவு நுகருமாறுபோல், இவளும் நின் அருள்பெற்று இன்பம் நுகர்வாளாக வேண்டுமென்ப தொரு நயந்தோன்ற நின்றது' (143), 'மடத்தகைமாமயில் பனிக்குமென் றருளிப் படாஅ மீத்த...பேக என்ற கருத்து : இவ்வாறு ஒரு காரணமின் றியும் அருள் பண்ணுகின்ற நீ நின்னுல் வருந்துகின்ற இவட்கு அருளா தொழிதல் தகாதென்பதாம்' (145), *'பலவின் கனிகவர்ந்துண்ட

* திருச்சிற். 99.

கடுவன் மந்தியோடு சிறந்து சேண்விளங்கிக் கழைமிசைத் துஞ்சு மென்றதனால், நீயும் இவரை வரைந்து கொண்டு இன்புற்று வாழ்தல் வேண்டுமென்பது தோற்றி நின்றது' (200), 'வேங்கைவீ தாய துறுகல் இரும்புலி வரிப்புறங் கடுக்கு மென்ற கருத்து : ஏதம்செய்யாததூஉம் ஏதம்செய்வது போலக் கண்டார்க்கு அச்சம்வரத் தோன்றுமென்றமை யான், இதுவும் இகழ்ச்சி தோன்ற நின்றது' (202).

வரலாற்றுச் செய்திகள்

சில இடங்களில் வரலாற்றுச் செய்திகள் சிலவற்றை இவர் கூறு கின்றார் :—

'தான் பேய்மகளானமை தோன்றப் பரிசில் கடாயினாளெனவுங் கூறுவாருமுளர்' (11) என்று பேய்மகள் இளவெயினியின் வரலா றொன்றைப் புலப்படுத்துகின்றார். 'புட்பகையென்பது இவனுக்கு ஒரு பெயர்' (68) எனச் சோழன் நலங்கிள்ளியைப் பற்றிக் கூறுகின்றார். 'என்றது, தந்தையுடன் வெறுத்துப் போந்தான் அமருட் புகுந்து இப் போர் செய்தானை அவன் விரும்பின் உவக்கின்றான்; விரும்பாவிடின் அஞ்சுகின்றானென்பதாம்' (81) என்று சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளியைப் பற்றிக் கூறுகின்றார். 'பூவார்கா - வானோர் இவன் முன்னோர்க்கு வரங்கொடுத்தற்கு வந்திருந்ததொரு கா' (99) என்று அதியமான் நெடுமானஞ்சியைப்பற்றிய வரலாறொன்றும், 'ஆய்க்கு அண்டிரனென்பதும் ஒரு பெயர்' (131) என்று ஆயைப் பற்றிய செய்தி யொன்றும், 'நன்னன்மருகனன்றியு மென்றதற்குப் பெண்கொலைபுரிந்த நன்னன்போல வரையாநிரயத்துச் செலியரோ வன்னை யென்றமையின் அதுவும் வரைதற்கு ஒரு காரணமாக உரைப்பாரும் உளர்' என்று நன்னனைப் பற்றிய வரலாறு ஒன்றும், 'மோரியராவார் சக்கரவாள சக்கரவர்த்திகள்' (175) என்று மோரியரைப்பற்றிய செய்தியும் கூறப் படுகின்றன.

கருத்துரைத்தல்

பல இடங்களில், இங்ஙனம் கூறியதன் கருத்து இதுவென்று பல அரிய செய்திகளைக் கூறுவர் :—

'இதனால் நீயும் நீர்நிலை பெருகத் தட்கவேண்டுமென்பது கருத் தாகக் கொள்க' (18), 'நீலமணிமிடற் றொருவன்போல வென்ற கருத்து, சாதற்குக் காரணமாகிய நஞ்சுண்டும் நிலைபெற்றிருந்தாற்போல நீயும் சாவாதிருத்தல் வேண்டுமென்பதாம்' (91), 'பகைப்புலத்தோனென்ற கருத்து : பகைவர்போல் திறைகொண்ட பொருளுடையனாதலின், நீ வேண்டியவெல்லாந் தருதல் அவனுக்கு எளிதென்பதாம்' (103), 'நீர் பாடி வரினும் பரிசிலர் முன்னே பெற்றமையின், அது நுமக்குக் கிடையாதென்பது கருத்தாகக் கொள்க' (110), 'பாடினளாய் வரி னென்ற கருத்து : அவட்கும் அவ்வாறன்றித் தன் பெண்மையால் வென்று கோடல் அரிதென்பதாம்' (111), 'தலைப்பெயர்த்திட்டவேல்

என்ற கருத்து:படைக்கலமில்லாதாரை ஏதஞ்செய்வாரில்லையாதலின், தம்முயிர்க்கு அரணாகப் பெயர்த்திடப்பட்ட வேலென்பதாம்' (130), 'மண்டை அகலம் நோக்கி மலர்ந்தவென்ற கருத்து: கொடுக்கும் பொருள் மார்பின் வலியான் உளதாமாகலின், அகலம் நோக்கின வென்றதாகக் கொள்க' (155); 36, 53, 74, 83, 97, 114, 123, 127, 131, 138, 139, 162, 186, 198, 201, 204, 266—ஆம் செய்யுட்களின் உரையையும் பார்க்க.

சில இடங்களில் செய்யுட்களிற் சொற்கிடந்தவாறே பதவுரையிற் பொருள் கூறிவிட்டு, இங்ஙனம் கூறினாரேனும் கருதியது இன்னதென்று தெளிவுறுத்துதல் இவர் உரை வகைகளில் ஒன்று :-"எம்மு முள்ளுமோ முதுவா யிரவல, அமர்மேம் படூஉங் காலைநின், புகழ்மேம் படுநனைக் கண்டன மெனவே" (48) என்ற செய்யுட் பகுதியைப் பற்றிய விசேட உரையில், 'கண்டனமென எம்முமுள்ளென்றாரேனும், உள்ளிக் கண்டனமெனச் சொல்லென்பது கருத்தாகக் கொள்க' என்றுரைத்ததையும், "குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே" (58) என்றவிடத்துச் சொற்கிடந்தவாறே பொருளுரைத்தல் மாறுபாடாதலை நினைந்து, 'குன்றுகெழு நாடென்றதாயினும், கருதியது பிறர் நாட்டுக் குன்றுகளென்றதாகக் கொள்க' என்று அமைத்ததையும், வேறொரு செய்யுளில் (109), 'நான்கு பயனுடைத்தென்றுவைத்து, நெல்விளையும் பழம் ஊழ்க்கும் கிழங்கு வீழ்க்கும் தேன்சொரியுமென்று அவற்றின் செய்கை தோன்றக் கூறினாரெனினும், கருதியது நெல்லும் பழனும் கிழங்கும் தேனுமாகக் கொள்க' என்று வரைந்ததையும், 206-ஆம் செய்யுளுரையில், 'காட்டகமென்றாரேனும் கருதியது அதன்கண் மரமாகக் கொள்க' என்று உரைத்ததையும் காண்க.

நினைவுரைத்தல்

இங்ஙனமே, இவ்வாறு கூறியது இன்ன நினைவுபற்றி யென்றெழுதுவது இவருரைத்திறங்களில் ஒன்று :—அன்னச்சேவலைக் கோப்பெருஞ்சோழன்பால் தூதுவிடும் பிசிராந்தையார் செய்யுளில் (67) அவ்வன்னத்தைப் பார்த்து, "நின், இன்புறு பேடை யணியத்தன், நன்புறு நன்கல நல்குவ னினக்கே" என்ற பகுதியைப் பற்றிய விசேடவுரையில், 'பேடையணிய நன்கலம் நல்குவனென்றதனாற் பயன்: மறவாது போதல்வேண்டுமென்னும் நினைவாயிற்று' என்பர். சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளியைப் பாடிய நக்கண்ணையார் பாட்டில், 'உமணர்வெரூஉம் துறையன்னனென்றதனாற் பயன், வருத்துங்கூற்றின் ஆடவரையும் மகளிரையும் ஒக்கவருத்துவதல்லது அருளுமாறு கற்றிலனேவென்னும் நினைவிற்று' (84) என்பர். வன்பரணர் பாடிய பரிசில் விடைத்துறைச் செய்யுளுரையில் (152), 'பாடுவல்விறலியோர் வண்ணமென்றது நீயும் ஒன்று பாடுவாயாக வென்னும் நினைவிற்று' என்பர். மூவனென்பான் பரிசில் கொடுக்க நீட்டித்த காலத்துப்

பெருந்தலைச் சாத்தனார் கூறிய செய்யுளின் (209) உரையில், 'நம்முட் குறுநணி காண்குவதாகவென்றது: நீ என்மாட்டுச் செய்த அன்பின் மையை அவ்விருக்கையன்றிப் பிறர் அறியாதொழிவாராகவென்னும் நினைவிற்று' என்பர். வெளிமான் இறந்ததையறிந்து பெருஞ்சித்திரனார் வருந்திக் கூறிய செய்யுளில், "அவல மறுசுழி மறுகலிற், றவலே நன்று மற் றகுதியு மதுவே" (238) என்றது கண்டு, 'யான் அது செய்யப் பெற்றிலே னென்னும் நினைவிற்று' என்றுரைத்தார். இங்ஙனம் உரை கூறுதல் ஆசிரியர்களுடைய உள்ளக் கருத்தை உள்ளியறிந்து உரைக்கும் இவரது ஆற்றலைப் புலப்படுத்துகின்றது.

பயனுரைத்தல்

இது கருத்தென்றும், இது நினைவென்றும் கூறுவதுபோலவே இது பயனென்று சில இடங்களில் இவர் உரை வகுப்பர்:—

சோழன் நலங்கிள்ளியைப் பாடிய உறையூர் முதுகண்ணன் சாத்தனார் அவ்வரசனுக்கு, "வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி, அருள வல்லை யாகுமதி" (27) என்று அறிவுறுத்திவிட்டு, "அருளிலர், கொடாமை வல்ல ராகுக, கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே" என்று கூறுகின்றார். 'பகைவர் கொடாமைவல்லராதலினால் இவனுக்கு என்ன பயன்?' என்ற வினாவெழுங்கால் அதற்குரிய விடை எளிதிற் றோற்றுவதில்லை. இவ்வினாவை இவ்வுரையாசிரியர், 'அருளிலர் கொடாமை வல்ல ராகுகவென்றதனாற் பயன், *அவையுடையோர் தத்தம் பகைவரை வெல்வராதலால், பகையெதிர்ந்தோர் அவை இலராகவென்பதாம்' என்று விடுத்தார். "விரைவளர் கூந்தல் வரை வளி யுளர" (134) என்பதற்குப் பயன், 'பிறிதொன்றால் இடையூறில்லை யென்பதாம்' என்றார்.

பெறப்பட்டவை கூறுதல்

கூறப்பட்ட செய்திகளைக் கொண்டு இவற்றால் இன்னவை பெறப் பட்டன என்று வேறு சிலவற்றைக் கூறுவர்:—

'சென்றமர் கடத்தல் யாவதென்றதனானும் வாள்போழ்ந்தடக்கலும் உய்ந்தனரென்றதனானும் வந்தோர் பட்டமை விளங்கும்' (93); 'சந்தனப் புகை வேங்கைமிசைத் தவழும் பறம்பெனவே, இவை யொழிய மரமின்மையும், பகைவர் சுடும் புகையின்மையும் கூறியவாறு யிற்று' (108); 'பெண்டிரும் தம்பதங் கொடுக்குமெனவே ஆடவரும் தம் தரத்தே களிறு கொடுத்தல் போந்தது' (151); 'விடர்ப்புலி பொறித்த கோட்டை யென்றதனால், சோழனொடு தொடர்புபட்டு அவனுக்குத் துப்பாதல் தோன்றி நின்றது' (174); 'யானே பரிசில னென் பதனால் நினக்கு என் குறை முடிக்கவேண்டுமென்பதூஉம், அந்தண னென்றதனால் யான் தருதற் குரியேனென்பதூஉம் கொள்ளப்படும்' (200); 'பெருங்கட லுண்ணு ராகுப நீர்வேட்டோ ரென்பதனாற்

---

*அருளும் கொடையும்.

செல்வரேயாயினும் வள்ளியோரல்லார்பாற் செல்லேனென்பதும், உண்ணீர் மருங்கின் அதர் பலவாகுமென்பதனால் நீ வள்ளியை யாகலின் நின்பால் வந்தேனென்பதும் கொள்ளப்படும்' (204) என்ப வற்றால் இதனை அறியலாகும்.

இன்னாமைக் குறிப்பு

நல்லிசைச் சான்றோர்களாகிய புலவர்கள் இன்னாதவற்றை இயன்ற வரையில் மறைத்துக் குறிப்பாகப் புலப்படுத்தும் இயல்புடைய வர்கள். அவ்வியல்பை நன்கு அறிந்தவர் இவ்வுரையாசிரியர் :—

'கோவதை முதலாயின வாக்கால் சொல்லவும் படாமையின், ஆன்முலை யறுத்த வெனவும் மகளிர் கருச்சிதைத்த வெனவும் பார்ப் பார்த் தப்பிய வெனவும் மறைத்துக் கூறப்பட்டன' (34); 'இறந்த வென்று சொல்லுதல் இன்னாமையால் போகியவென்றார்' (220); 'பட வென்றல் இன்னாமையிற் கைவைத்துறங்கவும் கண் கிழிந்துருளவும் கால்பரிந் துலறவும் கதியின்றி வைகவுமெனத் தகுதிபற்றிக் கூறப் பட்டன' (229).

வழக்கு

சில இடங்களில் இன்ன உலக வழக்கைக் குறிக்கொண்டது இது வென்றும் இச்சொல் இன்ன நாட்டவர் வழக்கென்றும் புலப் படுத்துவர்:-

'உழிஞை - கொற்றான்; அது குடநாட்டார் வழக்கு' (50); 'விரை வளர்கூந்தல் வரைவளி யுளர வென்றது, கொண்டைமேற் காற் றடிக்க வென்பதொரு வழக்குப்பற்றி நின்றது' (133); 'கிளி........ குரலனையனென்றது கிளியீடு வாய்த்தாற்போல்வனென்னும் வழக் கைப் பற்றி நின்றது' (138); 'ஓசையென்றது ஆகுபெயரான் ஓசையை யுடைய கறியை; இஃது ஒரு திசைச்சொல்' (261).

மரபு

சிவபெருமான், திருமால், பலதேவர், முருகக்கடவுள் முதலியவர் களைப்பற்றிய செய்திகள் வருமிடங்களில் இவர் அவ்வக்கடவுளின் அன் பர்கள் வழங்கும் மரபு பிழையாமல் உரைவகுக்கின்றார். இது, சிவபிரா னுக்குரிய பொருள்களைத் திருவென்னும் அடைகொடுத்து, 'திருநுதல்', 'திருச்சடை', 'திருமுடி' என்றும் (1), திருமால் மேனியைத் திரு மேனியென்றும், பலதேவரை நம்பி மூத்தபிரானென்றும், அவரது நிறத் தைத் திருநிறமென்றும், முருகக்கடவுளைப் பிள்ளையாரென்றும் (56) வழங்குவதனால் உணரலாம்.

உவமைகளை விளக்கல்

உவமைகள் வந்த இடங்களில் இன்னதற்கு இஃது உவமையென் பதையும் பொதுத்தன்மை இன்னதென்பதையும் வெளிப்படுத்துவர்; அங்ஙனம் வெளிப்படுத்தும் முறை சுருங்கிய உருவத்தில் இருப்பினும் விளங்கவைக்கும் திறனுடையதாக இருக்கும்.

'களிற்றுக்கு நாவாயோடு உவமை எதிர்ப்படையைக் கிழித்தோடலும், திங்களோடு உவமை வாளோர் சூழத் தன் தலைமைதோன்றச் செல்லுதலுமாகக் கொள்க' (13); 'மன்னர்க்கு இடையனும், அவர் படைக்குச் சிறுதலையாயமும், கோதை நாட்டிற்குப் புலிதுஞ்சு வியன் புலமும் உவமையாகக் கொள்க' (54); 'திங்கள் நாள்நிறைமதியத் தனையை யென்றது, அறிவும் நிறைவும் அருளும் முதலாகிய குணங் களால் அமைந்தா யென்றவாறும்' (102); இங்ஙனம் உள்ள பிற இடங் களையும் கண்டுகொள்க.

௯. வட சொல்லாட்சி

இவரது உரைநடை பெரும்பாலும் செந்தமிழ்ச்சொல் நிறைந்ததாக இருப்பினும் ஒரோவிடங்களில் சில தமிழ்ச் சொற்களுக்கு வடசொற் களைக் கொண்டு இவர் பொருளெழுதியுள்ளார். கடனென்பதற்குப் பிண்டோதகக் கிரியையென்றும், மருந்தென்பதற்குப் பரிகாரமென்றும், ஒளிறுமென்பதற்குப் பாடஞ் செய்யுமென்றும், அறமென்பதற்குத் தர்மமென்றும், பூண்டென்பதற்குப் பரித்தென்றும், ஓம்புதலென்பதற் குப் பரிகரித்தலென்றும் கூறும் இடங்களையும் இவற்றைப் போன்ற பிறவற்றையும் காண்க.

குறிப்பு மொழி

அங்கங்கே நல்லிசைப் புலவர்கள் குறிப்பாகப் புலப்படுத்தியிருக் கும் பகுதிகளைச் சுட்டி, 'இது குறிப்புமொழி', 'இஃது இகழ்ச்சிக்குறிப்பு' என்று தெளிவுறுத்தலை இவர் உரையிற் பல இடங்களிற் காணலாம்:—

பாரிமகளிர் தம் தந்தையின் பகைவராகிய வேந்தரை, "வென்றெறி முரசின்வேந்தர்" (112) என்றதை, 'ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது' என்பர். பரிசில் கொடாமல் நீட்டித்த நன்மாறன்பால் ஆவூர் மூலங்கிழார், "நோயில ராகநின் புதல்வர்", "சிறக்க நின்னுயுள்" (196) என்று கூறியவற்றைக் குறிப்புமொழி யென்பர். இங்ஙனமே, 'வாழ்க நின்கண்ணியெனவும் நீடுவாழியவெனவும் நின்றவை குறிப்பு மொழி' (198), 'வெலீஇயர் நின்வேல் என்றது குறிப்பு மொழி' (202), 'யான் களிறின்றிப் பெயராநின்றேனென்பது கருத்தாகலின், நோயிலை யாகுக வென்பது இகழ்ச்சிக் குறிப்பு' (205), 'புலம்பை முந்துறுத்துக் கொண்டு போகாநின்றேனென இரங்கிக் கூறியவதனால், வாழியர் குருசி லென்பது இகழ்ச்சிக் குறிப்பாயிற்று' (210), 'இன்சிறுபிண்டமென்றது இகழ்ச்சிக் குறிப்பு' (234) என்ற இடங்களில் உரைத்தல் காண்க.

இன்ன சிறப்பென்றுரைத்தல்

சில செய்யுட்களின்பின் இவற்றால் இன்ன சிறப்புக் கூறப்பட்டது என்று பகுத்துக் கூறுதல் இவர் உரைவகுப்பினுள் ஒன்று. பதிற்றுப் பத்து உரையாசிரியரும் இங்ஙனம் கூறுவர் :—

'இது கொடைச்சிறப்பும் வென்றிச்சிறப்பும் கூறியவாறு' (65, 130); 'இதனால் அவன் இன்பச்சிறப்பும் வென்றிச்சிறப்பும் கூறியவாறு' (96) என வரும் இடங்களைப் பார்க்க.

நயங்கள்

இவருடைய உரையிலுள்ள நயங்கள் பலபடியாகப் பகுத்து அறிந்து இன்புறுதற்குரியன. சில சில இடங்களில் இவர் அமைத்திருக்கும் உரை இவருடைய உலகியலறிவையும், பொருளியலறிவையும், கல்விச் சிறப்பையும் புலப்படுத்துகின்றன :—

"எருத்து வவ்விய புலி" (4) என்பதற்கு, 'கழுத்தைக் கவ்வி உதிரம் உவற்றியுண்ட புலி' என்று விரித்துக்கூறும் உரை இவர் ஒவ்வொரு பொருளின் இயல்பையும் அறிந்து உரையெழுதும் திறலினரென்பதைப் புலப்படுத்துகின்றது.

"வழிபடு வோரை வல்லறி தீயே" (10) என்ற விடத்து அதன் கருத்தை, 'அறிந்து அவர்களுக்கு அருள்செய்வை யென்பதாம்' என்று புலப்படுத்தல் பல நூல்களில் வந்துள்ள அத்தகைய பிரயோகங்களுக்கு நல்லுரைகாணத் துணையாகின்றது.

தாமப்பல் கண்ணனார் மாவளத்தானை இகழ்ந்ததற்கு இரங்கிப் பாடிய செய்யுள் அரசவாகையாதலை, 'பொறுத்தற்கரிய பிழையைப் பொறுத்த குணவென்றியான் அரச வாகையாயிற்று' (43) என்று தெளிவுறுத்திய பகுதி இவருடைய நுண்ணறிவைக் காட்டுகின்றது.

"இளைய னிவனென வுளையக் கூறி" (72) என்ற இடத்து இவனென்ற அண்மைச்சுட்டு நெடுந்தூரத்திலுள்ள பகைவர் கூற்றாக அமையுமோ என்ற ஐயத்தை, 'இவனென்றார் தம் கருத்துக்கண் அணுமையால்' என்று நீக்குவதால் படிப்பாருக்கு இன்னதை விளக்க வேண்டுமென்பதை யறிந்து உரையெழுதுபவரென்று அறியலாம்.

'பொய்கூறாமையிற் செந்நாவென்றார்; தற்புகழ்ந்தாராகாமற் சிறு செந்நாவென்றார்' (148) என்ற உரையினால் இவர் நல்லிசைப் புலவரின் சால்பை நன்கறிந்தவரென்பது போதரும்.

"ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்" (164) என்றவிடத்து, 'அடுதலை மிகவும் மறத்தலால் தேய்பின்றி உயர்ந்த அடுப்பென்றாராம்' என்றும், "நெடுமொழி மறந்த சிறுபே ராளர்" (178) என்றவிடத்து, 'நெடுமொழி மொழிதலாற் பேராண்மையும், பின் அதனை மறத்தலாற் சிறுமையுமுடைமையின் சிறுபேராளர் என்றார்' என்றும், "முழூஉ வள்ளுரமுணக்குமள்ள" (219) என்றவிடத்து, 'அரசுதுறந்து வடக்கிருந்து உயிர்நீத்த உள்ளமிகுதியால் மள்ளவென்றார்' என்றும், "வல்வின் மறவ ரொடுக்கங் காணாய், செல்லல் செல்லல் சிறக்கநின் னுள்ளம்" (259) என்றவிடத்து, 'செல்லலென்றது அவரைக் கண்டு பொருது கொன்றன்றிச் செல்லலென்பதாம்' என்றுமெழுதிய பதசாரங்கள் மிக்க இன்பத்தை விளைவிக்கின்றன.

'நட்டோரை யுயர்பு கூறினனென்றது, தான் உயர்த்துக் கூறவே யாவரும் உயர்த்துக் கூறுவரென்பதாம்' (239) என்றது இவருடைய உலகியலறிவை விளக்குகின்றது.

இலக்கணக் குறிப்பு

இவர் அங்கங்கே எழுதிச் செல்லும் இலக்கணங்கள் பலவகைப் படும். எச்சத் திரிபுகளையும், அசைநிலைகளையும், விகாரங்களையும், அடுக்கு இடைச்சொல் முதலியவற்றாற் பெறப்படும் பொருள்களையும் எடுத்துக் கூறுவார். புறப்பொருட்டுறைகளைச் செய்யுட்பொருளோடு பொருத்திக் காட்டுவதன்றிச் சில இடங்களில் சில துறைகளுக்குப் புறப்பொருள் வெண்பாமாலையிலிருந்து மேற்கோள் காட்டுவர். அங்ஙனம் இவர் காட்டிய துறைகள்: பரிசில்விடை, வல்லாண்முல்லை, ஆனந்தப் பையுள், தாபதநிலை, முதுபாலை, உண்டாட்டு, செரு மலைதல், தலைத்தோற்றம் என்பன.

சில இடங்களில் இஃது இன்ன அணியெனப் புலப்படுத்துவ துண்டு; இவ்வாறு இவர் கூறியிருக்கும் அணிகள் : உவமை, ஒட்டு, தலைப்பெயலுவமை, தற்குறிப்பேற்றம், நுவலாநுவற்சி, பழித்தது போலப் புகழ்தல், புகழ்வதுபோலப் பழித்தல், வெளிப்படை.

இவர் கூறியுள்ள இலக்கணக் குறிப்புக்கள் வருமாறு :-

அசைநிலையும்மை, அசைநிலையோகாரம், அடுக்கு இரங்கற்குறிப் புணர்த்தல், அடுக்கு விரைவின்கண் வருதல், அடை, அத்தையென்னும் அசைநிலை, அம்மவென்னும் அசைநிலை, அம்ம கேட்பித்தற்கண் வருதல், அல்லீற்றுத் தனித்தன்மைவினை, அல்லீற்று வியங்கோள், அல்வழிச் சாரியை, ஆகுபெயர், ஆங்க என்னும் அசைநிலை, ஆங்கதென்பது ஒரு சொல், ஆங்கென்னும் அசைநிலை, ஆசாகென்னும் இரங்கற் குறிப்புப் படுமொழி, ஆல் என்னும் அசை, ஆலுருபு விரித்தல், ஆற்றலாற் போந்த பொருள், இகழ்ச்சிக் குறிப்பு, இசினென்பது தன்மைக்கண் வருதல், இசினென்பது படர்க்கைக்கண் வருதல், இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்துமேல் ஏறிநிற்றல், இடவழுவமைதி, இடைக்குறை, இயரீற்று வியங்கோள், இருமுறை கூறுதலால் ஆதரவு தோற்றல், இழிவுசிறப்பும்மை, இறப்ப இழிந்த ஆனந்த உவமை, இன் னென்னும் அசைநிலை, இன்னென்னும் சாரியை, உம் உந்தாய் நிற்றல், உம்மை இசைநிறை, உம்மை எஞ்சிநிற்றல், உம்மை விகாரத்தால் தொகுதல், உயர்திணை ஆறனொருமையில் அதுவெனுருபுகெடக் குகரம் வருதல், உருபுமயக்கம், உருபு விரித்துரைத்தல், உலமரலென்னும் உரிச்சொல், உவமங்கருதாத அடை, உவமை, எச்சத்திரிபு, எச்ச வும்மை, எதிர்காலச்சொல் இறந்தகாலப் பொருட்டாய் நிற்றல், எதிர் மறை வினையெச்சமுற்று, எனவென்னும் அசைநிலை, எனவென்னும் எண்ணிடைச்சொல், ஏ யென்னும் அசைநிலை, ஐ என்னும் அசைநிலை, ஐகாரம் முன்னிலையை விளக்கி நிற்றல், ஐகாரம் விகாரத்தால் தொகுதல், ஒட்டன்றி ஒருபெயராய் நிற்கும் தொடர், ஒப்பில்போலி, ஒரு சொல் வருவித்து வினையெச்சத்தை முடித்தல், ஒருமை பன்மை மயக்கம், ஒன்றேவென்னும் எண்ணிடைச் சொல், ஓ என்பது அசைநிலைப் பொருளிலும் வியப்புப் பொருளிலும் வினுப் பொருளிலும் வருதல், ஓர்

என்னும் அசைநிலை, ஓரிடத்திலுள்ள சொல்லை எங்குந் தந்துரைத்தல், கடைக்குறை, கண் என்னும் அசைநிலை, கருவி கருத்தாவாய் நிற்றல், காலமயக்கம், குடிமைஆண்மைத்தொடக்கத்தன உயர்திணை பெறுதல், குறிப்பிற்றேன்றல், குறிப்புமொழி, குறிப்பு வினையெச்சம் எதிர்மறை வினையின் முதனிலையோடு முடிதல், குறுகி நிற்றல், கொல்லென்பது அசைநிலையாகவும் ஐயப்பொருளிலும் வியப்புப் பொருளிலும் வருதல், சிறப்பும்மை, சின் என்னும் இடைச்சொல் முன்னிலை வினைச்சொல்லோடு அசைக்கப்பட்டு நிற்றல், சினைவினை முதல்வினை கொள்ளல், செய்தென் வாய்பாட்டு வினையெச்சம் செயவெனத் திரிதல், செய்தெனெச்சம் வினைக்குறிப்பொடு முடிதல், செய்யுள்நோக்கி விரித்தல், செய்யுள்விகாரம், செயவெனெச்சம், செயவெனெச்சம் பிறவினையோடு முடிதல், செயவெனெச்சம் வினைக்குறிப்பொடு முடிதல், சொற்றெடர் ஒருசொல் நடைத்தாதல், சொற்றெடர் பெயர்மாத்திரையாக நிற்றல், தகுதிபற்றிக் கூறல், தலையென்னும் அசைநிலை, தானென்னும் அசைநிலை, திசைச்சொல், தில்லென்பது அசைநிலையாகவும் விழைவுப்பொருளிலும் வருதல், தொகுதல், தொகுதி ஒருமை, நிரனிறை, படர்க்கைச் சொல் முன்னிலைக்கண் வருதல், பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, பண்பொட்டு, பன்மை ஒருமை வழுவமைதி, பன்மை பெருமிதந்தோன்ற நிற்றல், பிறவென்னும் அசைநிலை, பிறவினை தன்வினையாய் நிற்றல், பெயர் மாத்திரையாய் நிற்றல், பெயரெச்சம் பெயரோடு முடிதல், பொதுவினை, பொருளேக்கால் முடிவு பெறுதல், மதியென்னும் அசைநிலை முன்னிலையில் வருதல், மற்று என்னும் அசைநிலை, மறைப்பொருள், மன் ஆக்கப் பொருளிலும் ஒழியிசைப் பொருளிலும் கழிவுப்பொருளிலும் வருதல், மன் என்னும் அசைநிலை, மா என்னும் அசைநிலை, மாதோ என்னும் அசைநிலை, மாறிக்கூட்டுதல், மாறென்னும் ஏதுப்பொருள்தரும் இடைச்சொல், முதற்கேற்ற அடையடுத்த ஆகுபெயர், முற்றுவினைக்குறிப்பு, முன்மொழி நிலையல், முன்னிலைப்பெயரோடு படர்க்கைப்பெயர்கள் விராய் வந்து முன்னிலை வினையால் முடிதல், முன்னிலையேவல், முன்னிலை வினைச்சொல் மெலிந்து நிற்றல், மோ என்னும் முன்னிலை அசைச்சொல், வகரவீற்றுச் செயவெனெச்சம் வகரங்கெட்டு முடிதல், வலித்துநிற்றல், வழக்கு, வாய்பாடு, வாழியென்னும் அசைநிலை, விகாரம், வியப்பின்கட்குறிப்பு, வினைக்குறிப்பு ஆக்கம்பெறுதல், வினைக்குறிப்புமுற்று, வினைத்தொகை, வினைமுடிவு, வினையெச்சக்குறிப்பு, வினையெச்சம் குறிப்புவினையோடு முடிதல், வினையெச்சம் பெயரெச்சமறையோடு முடிதல், வினையெச்சம் பெயரெச்சவினையொடு முடிதல், வினையெச்சம் வருவித்துரைக்கும் சொல்லொடு முடிதல், வினையெச்சமுற்று, வினையெச்ச வினைக்குறிப்பு முற்று, வெளிப்படை, வேண்டாவென்பது வினைமேனின்றதொருசொல்.

———

உ

கணபதி துணை

எட்டுத்தொகையுள்

எட்டாவதாகிய

புறநானூறு

மூலமும் உரையும்

(க) **கண்ணி கார்நறுங் கொன்றை காமர்**
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்
பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
எல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே.

கடவுள் வாழ்த்து.

பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியது.

இதன் பொருள் :—திருமுடிமேற் சூடப்படுங் (பி - ம். சூட்டிய) கண்ணி கார்காலத்து மலரும் நறிய கொன்றைப்பூ; அழகிய நிறத்தை யுடைய திருமார்பின் மாலையும் அக் கொன்றைப்பூ; ஏறப்படுவது தூய வெளிய ஆனேறு; மிக்க பெருமை பொருந்திய கொடியும் அவ்வானே றென்று சொல்லுவர்; நஞ்சினது கறுப்பு, திருமிடற்றை அழகு செய்தலும் செய்தது; அக்கறுப்பு, தான் மறுவாயும் வானோரை உய்யக் கொண்டமையின், வேதத்தைப் பயிலும் அந்தணராற் புகழவும்படும்; பெண் வடிவு ஒருபக்கமாயிற்று; ஆய அவ்வடிவுதான், தன்னுள்ளே

ஒடுக்கி மறைக்கினும் மறைக்கப்படும்; பிறை, திருநுதற்கு (பி-ம். திரு நுதலது) அழகாயது. அப்பிறைதான் பெரியோன் சூடுதலால், பதினெண் கணங்களாலும் புகழவும்படும்; எவ்வகைப்பட்ட உயிர்களுக்கும் காவலாகிய, நீர் தொலைவறியாக் குண்டிகையானும் தாழ்ந்த திருச்சடையானும் சிறந்த செய்தற்கரிய தவத்தையுடையோனுக்கு—என்றவாறு.

தன்னுள்ளடக்கிக் கரக்கினும் கரக்குமென்பதற்கு, அவ்வடிவு தான் எல்லாப் பொருளையும் தன்னுள்ளேயடக்கி அவ்விறைவன் கூற்றிலே மறையினும் மறையுமென்று உரைப்பினும் அமையும்.

நீரறவறியாக் கரகம் - கங்கையென்பாருமுளர்.

அக்கறை, அவ்வுரு, அப்பிறை என நின்ற எழுவாய்கட்கு நுவலவும்படும், கரக்கினுங்கரக்கும், ஏத்தவும்படும் என நின்ற பயனிலைகளை நிரலே கொடுக்க. இவ்வெழுவாய்களையும் பிறவற்றையும் அருந்தவத்தோற்கென்னும் நான்காவதனோடு முடிக்க.

ஏமமாகிய (11) அருந்தவத்தோ (13) னென்க; *ஏமமாகிய நீரெனினும் அமையும்.

அணியலுமணிந்தன்றென்பது, "உண்ணலு முண்ணேன்" (கலித். 23) என்பது போல நின்றது.

பதினெண்கணங்களாவார் : தேவரும் அசுரரும் முனிவரும் கின்னரரும் கிம்புருடரும் கருடரும் இயக்கரும் இராக்கதரும் கந்தருவரும் சித்தரும் சாரணரும் வித்தியாதரரும் நாகரும் பூதமும் வேதாளமும் தாராகணமும் ஆகாசவாசிகளும் போகபூமியோருமென இவர்; † பிறவாறும் உரைப்பர்.

இப்பெரியோனை மனமொழி மெய்களான் வணங்க அறமுதல் நான்கும் பயக்கு மென்பது கருத்தாகக் கொள்க.

(குறிப்புரை) 1. கண்ணி - ஆடவர் தலையிற் சூடுதற்குரிய மாலை; "பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்" (முருகு. 44); கார் நறுங் கொன்றை : "காரினார் மலர்க்கொன்றை தாங்கு கடவுள்", "கார்க் கொன்றை மாலை கலந்த துண்டோ" (தே.); கொன்றைமாலை சிவபெருமானது அடையாள மாலை என்பர்; கலித். 150 : 1.; சீவக. 208, ந.

2. தார் - மார்பிலணியும் மாலை; "மார்பொடு விளங்க வொருகை, தாரொடு பொலிய வொருகை" (முருகு. 112 - 3); "பொலந்தார் மார்பி னெடியோன்" (மதுரைக். 61); "புனைதார்ப் பொலிந்த வண்டுபடு மார்பின்" (மலைபடு. 56).

1 - 2. "கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த், தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்" (அகநா. கடவுள்.)

---

* 'ஏமமாகிய நீர்' என்றது "நீரின் றமையா துலகு" (குறள், 20) என்பது கருதி.

† முருகு. 168, ந.; பிங்கலம், 92; தக்க. 136, உரை.

3. "ஒன்றுனுங் குறைவில்லை யூர்திவெள் ளேறு" (தே.); "வால் வெண் சுண்ணம்" (மணி. 4 : 18); "வால் வெண்டோடு - இளைய வெள்ளிய தோடெனினுமமையும்; 'ஊர்திவால்வெள்ளேறே' (சிலப். 16 : 35, அடியார்.) என்ருராகலின்".

1 - 3. "கண்ணி......ஏறே யென்புழிக் கொன்றையையும் ஏற்றை யும் இடைவந்த சொற்கள் விசேடித்து வந்தன" (தொல். எச்ச. சூ. 59, ந.)

3 - 4. புறநா. 56 : 1 - 2.

5. "இயங்கலு மியங்கு மயங்கலு மயங்கும்" (சிலப். 22 : 154); "சுழலலுஞ் சுழலு மோடலு மோடும்......நீடலு நீடும்", "தமபெரும் பற்று நீங்கலு நீங்கார்" (மணி. 3 : 111 - 3, 8 : 57); "முரிமுரிந்த வென்பதனை, 'அணியலு மணிந்தன்று' என்ருற்போலக் கொள்க" (சீவக. 2310, ந.); "கறைமிட றணியலு மணிந்தன்றென்புழிக் கறை மிடற்றை அழகு பெறுதலையுஞ் செய்ததென......முழுதும் காரியவாசக மாயே நின்றவாறு காண்க" (தொல். வேற்றுமை மயங்கு. சூ. 29, ந.); வேற்றுமைக்கண் றகரம் மிகாமைக்கு இவ்வடி மேற்கோள் (நன். மயிலை. சூ. 182; நன். வி. சூ. 183; இ - வி. சூ. 102, உரை); "விடமும் வந் தீசன் கோல மிடற்றினி னீல வண்ண, வடிவுபெற் றணிய தாகி வயங்கிற்றுப் பெரிது மென்ருல், கொடியரும் பெருமை யோரைக் கூடின் வெங் கோது நீங்கி, ஒடிவறு நலம்பெற் றுய்த லுரைப்பதெ னுலகி னம்மா" (பாகவதம், 8; கடல்கடைந்த. 24); "அணியலுமணிந்தன்று: ஒருபொருட் பன்மொழி" (நன். மயிலை. சூ. 397); கறை மறுவெனப் படுதல் : "விண்ணினுர் புகழ்தற் கொத்த விழுமியோ னெற்றி போழ்ந்த, கண்ணினுன் கண்டந் தன்மேற் கறையையார் கறையன் றென்பார்" (குண்டல.); "பாவகத்தைப் பாவித்தலென்பது, 'கறைமிட றணியலு மணிந்தன்று' என்றது போலக் கொள்க" (சிவஞானபோதம், பொது வியல்பு, சூ. 6, மேற்.); கறை அழகு செய்யு மென்பதை, "கடுக்கவின் பெறு கண்டனும்" (திருவிளை. நகரப்.) என்பதனுல் உணர்க.

6. நவிலல் - கூறியடிப்படல்; "நாவிடை நன்னூ னன்கன நவிற்றி" (மணி. 13 : 24).

9. (புறநா. 55 : 4 - 5); "பிறைநெற்றி யோடுற்ற முக்கண்ணி னுர்", "பிறைதாங்கு நெற்றியர்", "பிறைசேர் நுதலிடைக் கண்ண மர்ந் தவனே" (தே.)

7 - 9. ஆகின்று - ஆயிற்று; (புறநா. 148 : 7.)

10. பதினெண்கணன் : "ஒன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்" (முருகு. 168).

9 - 10. பிறை தொழுதேத்தப்படுதல் : "தொழுதுகாண் பிறையிற் றோன்றி" (குறுந். 178); "ஒள்ளிழை மகளி ருயர்பிறை தொழூஉம், புல்லென் மாலை" (அகநா. 239); "குழவித் திங்க ளிமையவ ரேத்த,

அழகொடு முடித்த வருமைத்து" (சிலப். 2 : 38 - 9); "அப்பிறை, பதினெண் கணனு மேத்தவும் படுமே யென்றார் புறப்பாட்டினும்" (சிலப். 2 : 38 - 9, அடியார்.); வி. பா. குருகுலச். 6.

11 - 2. ஆசிரியப்பாவில் ஈற்றயலடி முச்சீர்த்தாய் வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; தொல். செய். சூ. 68; பேர்.

13. அருந்தவத்தோன் : "அருந்தவ முதல்வன்" (கலித். 100 : 7); "நற்றவனைப் புற்றரவ நாணி னானை", "நற்றவனை நான்மறைக ளாயி னானை", "நற்றவா வுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவா யவே", "நற்றவன் காண்", "மாதொர் கூறுடை நற்றவனை" (தே.); "அருந்தவ னதிசயித்து" (திருவால. 61 : 6). (௧)

(௨) மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரு மென்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு முடையோய்
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந
வான வரம்பனை நீயோ பெரும
அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
பாஅல்புளிப்பினும் பகலிருளினும்
நாஅல்வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ வத்தை யடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே.

(பி - ம்.) 20 'நிலையரோ'

திணை - பாடாண்டிணை. துறை - செவியறிவுறூஉ; வாழ்த்தியலுமாம்.

சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது.

(இ - ள்.) அணுச்செறிந்த நிலனும், அந்நிலத்தின் ஓங்கிய ஆகாயமும், அவ்வாகாயத்தைத் தடவிவரும் காற்றும், அக்காற்றின்கண் தலைப்பட்ட தீயும், அத்தீயோடு மாறுபட்ட நீருமென ஐவகைப்பட்ட பெரிய பூதத்தினது தன்மைபோலப் பகைவர் பிழைசெய்தால் அப்பிழையைப் பொறுத்தலும், அப்பிழை பொறுக்குமளவல்லவாயின் அவரை அழித்தற்கு உசாவும் உசாவினது அகலமும், அவரை அழித்தற்கேற்ற மனவலியும் சதுரங்கவலியும், அவ்வாற்றால் அவரை அழித்தலும், அவர் வழிபட்டால் அவர்க்குச் செய்யும் அருளுமுடையோய்! நினது கடற்கட்டோன்றிய ஞாயிறு பின்னும் நினது வெளிய தலைபொருந்திய திரையையுடைய மேல்கடற்கண்ணே மூழ்கும் புது வருவாய் இடையறாத ஊர்களையுடைய நல்ல நாட்டிற்கு வேந்தே! வானவரம்ப! பெரும! நீ, அசைந்த தலையாட்டமணிந்த குதிரையையுடைய பாண்டவர் ஐவருடனே சினந்து நிலத்தைத் தம்மிடத்தே கொண்ட பொற்பூந்தும்பையையுடைய துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் பொருது போர்க்களத்தின்கட் படுந்துணையும் பெருஞ்சோறாகிய மிக்க உணவை இருபடைக்கும் வரையாது வழங்கினோய்! பால் தன் இனிமையொழிந்து புளிப்பினும்,ஞாயிறு தன் விளக்கமொழிந்து இருளினும், நான்கு வேதத்தினது ஒழுக்கம் வேறுபடினும் வேறுபாடில்லாத சூழ்ச்சியையுடைய *மந்திரச் சுற்றத்தோடு ஒழியாது நெடுங்காலம் விளங்கித் துளக்கமின்றி நிற்பாயாக; அரைமலையின்கட் சிறிய தலையையுடைய மறிகளையுடையவாகிய பெரிய கண்ணையுடைய மான் பிணைகள் அந்திக்காலத்தே அந்தணர் செய்தற்கரிய கடனாகிய ஆவுதியைப் பண்ணும் முத்தீயாகிய விளக்கின்கண்ணே துயிலும் பொற்சிகரங்களையுடைய இமயமலையும் பொதியின்மலையும் போன்று—எ - று.

குளிக்கும் நாடென இயையும்; குளிக்கும் நாடென இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்துமேல் ஏறிநின்றது. நீயோ; ஓ : அசைநிலை; அன்றி, இதனை வினாவாக்கி, ஞாயிறு குளிக்கு மென்பதனை முற்றாக்கி, வானவரம்ப னென்பதனை அவ்வினாவிற்குப் பொருளாக்கி உரைப்பாருமுளர்.

முத்தீயாவன : ஆகவனீயம், காருகபத்தியம், தென்றிசையங்கி.

ஆங்கும், அத்தையும் அசைநிலை. வானவரம்பனை: ஐகாரம் முன்னிலையை விளக்கிநின்றது.

நிலந்தலைக்கொண்ட (14) என்பதற்கு நிலங்கோடல் காரணமாகத் தலைக்கட் சூடியவெனினும் அமையும்.

---

* மந்திரச்சுற்றம் : கம்ப. அயோத்தி. மந்திர. 71

போற்ருர்ப்பொறுத்தல் முதலிய குணங்களையுடையோய், பொருந, வரையாதுகொடுத்தோய், வானவரம்ப, பெரும, நீ, புளிப்பினும் இருளினும் திரியினும் இமயமும் பொதியமும் போன்று நடுக்கின்றிச் சுற்றமொடு விளங்கி நிற்பாயாகவெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

போற்ருர்ப்பொறுத்தல் முதலாகிய குணங்களை அரசியலடைவாற் கூறுகின்ருராதலின், பூதங்களின் அடைவு கூருராயினர்.

இதனுற் சொல்லியது, தன்கடற்பிறந்த ஞாயிறு தன்கடற்குளிக்கும் நாடனுதலாற் (பி - ம். வானவரம்பனுதலாற்) செல்வமுடையையாக வென்று வாழ்த்தவேண்டுவதின்மையின், நீடு வாழ்கவென வாழ்த்திய வாருயிற்று.

(கு - ரை.) 1. "மண்கெழு ஞாலம்" (பதிற். 69 : 12); "மண்டிணி ஞால மாள்வோன்" (சிலப். 26 : 42); "மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கு" (மணி. 11 : 95)

1 - 3. "மண்டிணிந்த...வளியும் என்பது எண்" (தொல். இடை. சூ. 7, தெய்வச்.; ந.)

4 - 5. "வளித்தலைஇய...நீருமென்ருஅங்கென நாற்சீரடிக்கு இருசீரும் முச்சீரும் பொருந்தி ஆசிரியம் வந்தது" (தொல். செய். சூ. 115, ந.)

1 - 5. "அல்லதூஉம் நேரீற்றியற்சீர் இறுதிக்கண் நிற்றல் பெரும்பான்மை யெனப்படும்; மண்டிணிந்த......நீரும்" (தொல். செய். சூ. 26, பேர்.); "மண்டிணிந்த...நீருமென ஈற்றுக்கண் வருதல் பெரும்பான்மையாதலின் இறுதிநில்லாவெனப் பொருள் கூறலாகாமை யுணர்க"(தொல். செய். சூ. 26, ந.); "மண்டிணிந்த...நீரும் : இவ்வஞ்சியடியிறுதி நேரீற்றியற்சீர் சிறுபான்மை வந்தது" (யா - வி. சூ. 15.)

7. குறள், 152.

2 - 7. "விசும்பி னன்ன சூழ்ச்சி" (தொல். உவம. சூ. 6, பேர். மேற்.)

8. பெரும்பாண. 422; "அவை நிகழ்ந்த பொழுதே அவற்றிற்குத் தக்க அளியாகத் தெறலாகச் செய்ய வேண்டுதலின்" (குறள்,582, பரிமேல்.)

4 - 8. "வளிமிகின் வலியுமில்லை" (புறநா. 51 : 3).

3 - 8. "வளியிடைத், தீயெழுந் தன்ன திறலினர்" (முருகு. 170 - 71)

1 - 8. நிரனிறை.

10. "வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப" (புறநா. 31 : 14); "வெண்டலைப் புணரியின் விளிம்புசூழ் போத" (சிலப். 26 : 81).

12. "கானக நாடனை நீயோ பெரும" (புறநா. 5 : 3); "வானவரம்பனெனப் பேரினிது விளக்கி" (பதிற். 6 ஆம் பத்தின் பதிகம்.)

13. "ஐவர் : குறிப்பினுல் தொகைப்பொருள் அறிய வந்தது" (நன். மயிலை. சூ. 268); "ஐவரென்னுந் தொகைக் குறிப்புச் சொற்

பாண்டவரைக் குறிப்பாலுணர்த்திற்று" (நன். வி. சூ. 269); "ஐவ ரென்னுந் தொகைச் சொல் அறமகன் முதலிய ஐவரையும் குறிப்பான் விளக்கியவாறு காண்க" (இ - வி. சூ. 170, உரை); "அலங்குளை... சினைஇயென்பது தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகதேவ னென்பன கொண்டது" (நன். வி. சூ. 360.)

14. பொலம்பூந்தும்பை: "பொலந்தோட்டுப் பைந்தும்பை", "பொலந்தும்பை" (புறநா. 22 : 20, 97 : 15); "பொலம்பூந் தும்பை" (மதுரைக். 737.)

13—5. செய்தெனெச்சம் வினைமுதல்வினைகொண்டு முடிந்ததற்கு 'ஐவரொடு...கொண்ட' என்பது மேற்கோள் (நன். மயிலை. சூ 343; நன். வி. சூ. 344; இ-வி. சூ. 247, உரை);"ஈரைம் பதின்மரும் பொருது களத் தவியப், பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தே, ராராச் செருவி னவர்" (பெரும்பாண். 415 - 7.)

16. "முதியர்ப் பேணிய வுதியஞ் சேரல், பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை" (அகநா. 233 : 8 - 9); "பெருஞ்சோறு பயந்த திருந்து வேற் றடக்கை" (சிலப். 23 : 55); "ஓரைவ ரீரைம் பதின்ம ருடன் றெழுந்த, போரிற் பெருஞ்சோறு போற்றுது தானளித்த, சேரன்" (சிலப். 29 : ஊசல் வரி.) பெயரின் ஈற்றயலாகாரம் ஓகாரமாக வந்த தற்கு இவ்வடி மேற்கோள்; நன். மயிலை. சூ. 352; நன். வி. சூ. 353.

17. இயற்சீர் வெள்ளடியல்லது பிறவடி ஆசிரியத்துள் மயங்கு மென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். செய். சூ. 62, பேர்.

17 - 8. "பால்புளித்துப் பகலிருண்டு மாறுபடினும் எக்காலத்தி னுந் தப்பா சான்றோர் மெய்ம்மொழி" (பு - வெ. 167, உரை.)

19. ஈரசைச்சீர் நின்று வேற்றுச்சீரோடு ஒன்றிய சிறப்பில் ஆசிரியத் தளைக்கு இவ்வடி மேற்கோள்; யா. வி. சூ. 19.

20. ரகரமெய்யீற்று வியங்கோள் முற்றிற்கு இவ்வடி மேற்கோள்; நன். மயிலை. சூ. 337; நன். வி. சூ. 338; இ - வி. சூ. 239, உரை.

21 - 3. நெருப்பிற்கு அஞ்சிப் புலி வாராமையின் கவலையின்றி மான்கள் தூங்குமென்பர்; "கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து, மடமான் பெருநிரை வைகுதுயில்" (புறநா. 247 : 2 - 3); "ஞெலிகழை முழங்கழல் வயமா வெரூஉம்" (ஐங்குறு. 307.)

22 - 3. "ஒன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர், முத்தீப் புரைய" (புறநா. 367 : 12 - 3); "மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத், திருபிறப் பாளர்" (முருகு. 181 - 2.)

24. இமயம் பொற்கோட்டதென்பது : (புறநா. 39 : 14 - 5, 369; 24; நற். 356; யா. கா. அவை. 2). இனமில்லாத பொருள் அடை யடுத்த மொழிக்கு இவ்வடி மேற்கோள்; நன். மயிலை. சூ. 400; நன். வி. சூ. 401; இ. வி. சூ. 312, உரை.

20 - 24. இமயம்போலத் துளக்கமின்றி நெடுங்காலம் நிற்பாயாக வென்றல் மரபு; "மின்னுமிழ் வைரக் கோட்டு விளங்கொளி யிமய மென்னும், பொன்னெடுங் குன்றம் போலப் பூமிமே னிலவி வையம், நின்னடி நிழலின் வைக நேமியஞ் செல்வ னாகி, மன்னுவாய் திருவோ டென்று வாழ்த்திநெய் யேற்றி னாரே" (சீவக. 2417); "துளக்க லாகா நிலையுந் தோற்றமும்...மலைக்கே" (நன். பாயிரம்.)

மூ. இச்செய்யுள், 'பால்புளிப்பினும் பகலிருளினும்...நடுக்கின்றி நிலியரோ' என்றதனாற் செவியறிவுறூஉவும், 'இமயம் போன்று...நடுக் கின்றி நிலியரோ' என்றதனால் வாழ்த்தியலுமாயிற்று; இது, "பகை நிலத்தரசர்க்குப் பயந்தவாறு கூறிப் பின்னர்த் திரியாச் சுற்றமொடு விளங்கி நடுக்கின்றி நிற்பாயென அச்சந்தோன்றக்கூறி ஓம்படுத்தலின், ஓம்படைவாழ்த்தாயிற்று" என்பர்; தொல். புறத்திணை. சூ. 36, ந.)

இதன் 16 - ஆம் அடியால் பாட்டுடைத்தலைவன் பெயர்க்காரணம் புலப்பட்டவாறு அறிதற்பாலது; "நாடுகண் ணகற்றிய வுதியஞ் சேரற், பாடிச் சென்ற பரிசிலர் போல, உவவினி வாழிய தோழி", "கொடைக் கட னேன்ற கோடா நெஞ்சி, னுதியஞ் சேரல னட்டில் போல, வொலி யெழுந்து" (அகநா. 65, 168) என்பவற்றால் இத்தலைவன் குணங்கள் விளங்கும். (உ)

(௩) உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணக நிழற்ற
ஏம முரச மிழுமென முழங்க
நேமி யுய்த்த நேஎ நெஞ்சிற்
றவிரா வீகைக் கவுரியர் மருக
செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ
பொன்னோடைப் புகரணி நுதற்
றுன்னருந்திறற் கமழ்கடாஅத்
தெயிறுபடை யாக வெயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானை யிரும்பிடர்த் தலையிருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி
நிலம்பெயரினு நின்சொற்பெயரல்
பொலங்கழற்காற் புலர்சாந்தின்
விலங்ககன்ற வியன்மார்ப
ஊரில்ல வுயவரிய

நீரில்ல நீளிடைய
பார்வ லிருக்கைக் கவிகண் ணோக்கிற்
செந்தொடை பிழையா வன்க ணாடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையி னிரவலர் வருவரது
முன்ன முகத்தி னுணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே.

(பி-ம்.) 7 'பொன்னிணோடை' 12 'லசாவாக்' 24 'வருவதை'

திணையும் துறையும் அவை.

பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதியை இரும்பிடர்த்தலையார் பாடியது.

(இ-ள்.) உவாநாளின் மதியினது வடிவுபோலும் வடிவினையுடைய உயர்ந்த வெண்கொற்றக்குடை நிலைபெற்ற கடலெல்லைக்கண் நிலத்தை நிழற் செய்ய, காவலாகிய வீரமுரசம் இழுமென முழங்கும் ஓசையை யுடைத்தாய் முழங்க, சக்கரத்தைச் செலுத்திய ஈரமுடைய நெஞ்சினையும் ஒழியாத வண்மையையுமுடைய பாண்டியர் மரபினுள்ளாய்! குற்றமற்ற கற்பினையுடைய சேயிழைக்குத் தலைவ! பொன்னானியன்ற பட்டத்தையுடைய புகரணிந்த மத்தகத்தினையும், அணுகுதற்கரிய வலியையும், மணநாறும் மதத்தினையுமுடைய, கொம்பு படைக்கலமாகக் கொண்டு பகைவர் மதிலின்கட் கதவைக் குத்திக் கயிற்றாற் பிணித்தலைச்செய்த கவிழ்ந்த மணியையணிந்த பக்கத்தையும் பெருங்கையையுமுடைய யானையினது பெரிய கழுத்திடத்தே யிருந்து பரிகாரமில்லாத கூற்றத்தினது பொறுத்தற்கரிய கொலைத்தொழிலுக்கு இளையாத வலிய கையின் கண்ணே ஒள்ளிய வாளினையுடைய பெரும்பெயர்வழுதி! நிலம் பிறழினும் நினது ஆணையாகிய சொற் பிறழாதொழியல் வேண்டும்; பொன்னாற் செய்யப்பட்ட வீரக்கழல் புனைந்த காலினையும் பூசிப்புலர்ந்த சந்தனத்தை யுடைத்தாகிய குறுக்ககன்ற பரந்த மார்பினையு முடையோய்! ஊரில்லாதனவும், பொறுத்தற்கரிய உயங்குதலையுடையனவும், நீரில்லாதனவும், நீண்ட வழியனவுமாகிய, வம்பலரை நலியச் சேய்மைக் கண்ணே பார்த்திருக்கும் இருப்பினையும், கையாற் கவிக்கப்பட்ட கண்ணாற் குறித்துப் பார்க்கும் பார்வையையும், செவ்விய தொடை பிழையாத தறுகண்மையையுமுடைய மறவர்தாம் அம்பை விடுதலாற் பட்டோரது உடல்மூடிய புதிய கற்குவையின்மேலே திருந்திய சிறகினையும் வளைந்த வாயினையுமுடைய பருந்திருந்து வருந்தும் உன்ன மரத்தினையுடையவாகிய அணுகுதற்கரிய கவர்த்த வழியின்கண்ணே நின்பால் நச்சிய விருப்பத்தால் இரப்போர் வருகுவர்; அங்ஙனம் வருவது, அவர் மனக்குறிப்பை அவர்

முகத்தானறிந்து அவருடைய வறுமையைத் தீர்த்தலை வல்ல தன்மையான்—எ - று.

நுதலையும் திறலையும் கடாத்தையும் மருங்கையும் பெருங் கையையும் உடைய யானைப்பிடர்த்தலையிருந்து எயிறுபடையாக எயிற்கத விடாக் கூற்றத்து அருந்தொழில் சாயாப் பெரும்பெயர் வழுதியென மாறிக் கூட்டுக; காலாலடுதல் (பி - ம். காலிலிடுதல்) கையாலூக்குதலன்றி எயிறு படையாக எயிற்கதவிடக்கை விடாத பெருங்கை யானையென இயைத்துரைப்பினு மமையும்; எயிற்கதவிடாஅக் கயிறுபிணிக் கொண்டவென இயைத்துரைப்பாருமுளர்.

ஊரில்ல உயவரிய நீரில்ல நீளிடையவாகிய உன்னமரத்த கவலையெனவும், பருந்திருந்துயவும் துன்னருங்கவலையெனவும் இயையும்.

மருக, கணவ, வழுதி, மார்ப, இரவலர் வருவர்; அஃது அவர் இன்மை தீர்த்தல்வன்மையான்; அதனுல், நின்சொற் பெயராதொழியல் வேண்டுமெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

வாழ்த்தியலாதல் விளங்க, வேண்டுமென ஒருசொல் தந்துரைக்கப்பட்டது.

(கு - ரை.) 1. தொல். செய். சூ. 14, 54, 94, பேர்., ந.; தொல். செய். சூ. 92, ந. மேற்.

3. "ஏம முரச மிழுமெனச் சிலைப்ப" (பெருங். 2. 5 : 18)

1 - 5. கலித். 99 : 8 - 9.

6. பெண்பாலாரை ஆண்பாலாரோடு சேர்த்து வாழ்த்துதல் மரபாதலின் இங்ஙனங் கூறினர்; "ஒடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ", "ஆன்றோள் கணவ", "பாவை யன்ன நல்லோள் கணவன்", "புரையோள் கணவ" (பதிற். 14, 55, 61, 70); "மங்கையர் கணவ" (முருகு. 264); "மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்" (மலைபடு. 58); "மக்களுட் பெண்பாலைப் பாடுதல் சிறப்பன்மையின், 'செயிர்தீர்...... கணவ' என்றாற்போலச் சிறுபான்மை ஆண்மக்களோடு படுத்துப் பாடுப" (தொல். புறத்திணை. சூ. 26. ந.)

8. "துன்னருங் கடாஅம் போல" (புறநா. 94 : 4). கடாம் மணமுள்ளது; "மிஞிறார்க்குங் கமழ்கடாத்து", "வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்து" (புறநா. 22 : 6, 93 : 12; கலித். 21 : 2); "கடுஞ்சினத்த கமழ்கடாஅத்து" (மதுரைக். 44); தக்க. 3, வி - கு.; கம்ப. நகரப். 58.

9. புறநா. 4 : 10 - 11. இடாஅ - குத்தி; புறநா. 303 : 9; கலித். 24 : 10.

9 - 11. கலித். 135 : 2 - 4.

7 - 11. "பொன்னோடை......யானை என அடுக்கி வருவனவும் ஒட்டி ஒரு சொல்லாகாமையுமுணர்க" (தொல். எச்ச. சூ. 16, ந.)

12. "மருந்தில் கணிச்சி" (புறநா. 42 : 22); "நின்ற கருமத்த தல்லாத கூற்று" (அறநெறிச். 111); "மாற்றருங் கூற்றஞ் சாற்றிய

பெருமையும்" (தொல். புறத்திணை. சூ. 24); "மாற்றோ னெனவந்த காலனை" (திருச்சிற். 150); "மாற்றருங் கூற்றம்" (மணி. 25 : 49)

7-12. "எயிறுபடையாக.......சாயா என மாட்டாய் ஒட்டி நின்றது, 'கயிறு பிணிக்கொண்ட' என்பதனோடும் ஒட்டினாற் போல நின்று ஒற்றடுத்தது, இன்னோசை பெறுதற்கு" (தொல். புணர். சூ. 9, ந.); "பொன்னோடை......சாயாவென்றாற்போல வருவனவெல்லாம் அணுகி வந்த மாட்டென்னு முறுப்பு" (தொல். எச்ச. சூ. 13, ந.)

10 - 13. "மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா" (இன்னா. 14.)

14. "நிலம்புடை பெயர்வ தாயினும்" (புறநா. 34 : 5); "நிலந் திறம் பெயருங் காலை யாயினும்,கிளந்த சொன்னீ பொய்ப்பறி யலையே" (பதிற். 63 : 6 -7); "காதலர், நிலம்புடை பெயர்வ தாயினுங் கூறிய, சொற்புடை பெயர்தலோ விலரே" (நற். 289); 'இம்மூ வுலகி னிருள் கடியு மாய்கதிர்போல், அம்மூன்று முற்ற வறிதலாற் - றம்மின், உறழா மயங்கி யுறழினு மென்றும், பிறழா பெரியோர்வாய்ச் சொல்" (பு - வெ. 167.)

16. இவ்வடி ஒருபொருட் பன்மொழிக்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 397.

19. பார்வல் - பார்த்தல்; "பார்வற் பாசறை" (பதிற். 84 - 15); "பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறை" (மதுரைக். 231.)

20. "சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇ" (குறுந். 285 : 2); "வாங்குதொடை பிழையா வன்க ணாடவர்" (அகநா. 175 : 2.)

19 - 20. "அற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்" (கலித். 4 : 3.)

21. "வெண்ணுனை யம்பின் விசையிட வீழ்ந்தோர், எண்ணுவரம் பறியா வுவலிடு பதுக்கை", "வில்லிட வீழ்ந்தோர் பதுக்கை", "வடி நவி லம்பி னேவ லாடவர், ஆளழித் துயர்த்த வஞ்சுவரு பதுக்கை", "கொடுவிற் கானவர் கணையிடத் தொலைந்தோர், படுகளத் துயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை" (அகநா. 109, 157, 215, 231.)

23. உன்னம் - போர் செய்தற்குச் செல்வோர் நிமித்தம் பார்த்தற் குரிய ஒருவகை மரம்; "புன்கா லுன்னஞ் சாய" (பதிற். 40 : 17) என்பதும்,' தன்னொடு பொரக்கருதுவார் நிமித்தம் பார்த்தவழி அவர்க்கு வென்றியின்மையிற் கரிந்து காட்ட' என்னும் அதன் உரையும், "புன்கா லுன்னத்துப் பகைவன்" (பதிற். 61 : 6) என்பதும், "துன்னருந் தானைத் தொடுகழலான் றுப்பெதிர்ந்து, முன்னர் வணங்கார் முரண் முருங்க-மன்னரு, மீடெலாந் தாங்கி யிகலவிந்தார் நீயுநின், கோடெலா முன்னங் குழை" (பு - வெ. 243) என்பதும் இங்கே அறியற்பாலன. உன்னம் - இலவமரமென்பது மலைநாட்டு வழக்கென்பர்.

20 - 23. "இலைமாண் பகழிச் சிலைமா ணிரீஇய, அன்பி லாடவ ரலைத்தலிற் பலருடன், வம்பலர் தொலைந்த வருஞ்சுரக் கவலை, அழல்

போற் செவிய சேவ லாட்டி, நிழலொடு கதிக்கு நிணம்புரி முதுநரி, பச்சூன் கொள்ளை மாந்திவெய் துற்றுத், தேர்திகழ் வறும்புலந் துழைஇ நீர்நயந்து, பதுக்கை நீழ லொதுக்கிடம் பெறாஅ, வஞ்சுவரு கவலை'' (நற். 352.)

24. ''நீர்நசை வேட்கையின்'' (மணி. 23 : 112); ''பெறனசை வேட்கையி னின்குறி வாய்ப்ப'' (கலித். 93 : 17)

25. ''ஒளிப்பினு முள்ளம், படர்ந்ததே கூறு முகம்'', ''நோக்கி, முகனறிவார் முன்ன மறிப'' (பழ. 41, 30); ''முன்ன, முகம்போல முன் னுரைப்ப தில்'' (நான்மணிக். 50); ''அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங், கடுத்தது காட்டு முகம்'', ''முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினும், காயினுந் தான்முந் துறும்'' (குறள், 706 - 7.)

24 - 6. ''சுரந்தவான் பொழிந்தற்றுச் சூழநின் றியாவர்க்கும், இரந்தது நசைவாட்டா யென்பது கெடாதோதான்'' (கலித். 100 : 11 - 2.)

''நிலம்பெயரினு நின்சொற் பெயரல்'' (14) என்றதனால், இது செவியறிவுறூஉ வென்னும் துறையாயிற்று.

11 - ஆம் அடியாற் புலவரது பெயர்க் காரணமும், 13 - ஆம் அடியாற் பாட்டுடைத் தலைவனது பெயரும் விளங்கியவாறறிக. (ங)

(ச) வாள், வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப்போன்றன
தாள், களங்கொளக் கழல்பறைந்தன
கொல்லேற்றின் மருப்புப்போன்றன
தோல், துவைத்தம்பிற் றுளைதோன்றுவ
நிலைக்கொராஅ விலக்கம்போன்றன
மாவே, எறிபதத்தா னிடங்காட்டக்
கறுழ்பொருத செவ்வாயான்
எருத்துவவ்விய புலிபோன்றன
களிறு, கதவெறியாச் சிவந்துராஅய்
நுதிமழுங்கிய வெண்கோட்டான்
உயிருண்ணுங் கூற்றுப்போன்றன
நீயே, அலங்குளைப் பரீஇயிவுளிப்
பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கட னிவந்தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ
அனையை யாகன் மாறே
தாயி றூவாக் குழவி போல
ஓவாது கூஉ நின் னுடற்றியோர் நாடே.

(பி - ம்.) 10 'களிறே' 14 'பொலிவொடு'

திணை - வஞ்சி; துறை - கொற்றவள்ளை.

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியைப் பரணர் பாடியது.

(இ - ள்.) வாள் வெற்றியைத் தருதலாற் குருதிக்கறைபட்டன, செக்கர் வானத்தினது அழகையொத்தன; கால் புடைபெயர்ந்து போர் செய்து களத்தைத் தமதாக்கிக்கொள்ளுதலால் வீரக்கழல் *அருப்புத் தொழில் பறைந்தவை, கொல்லும் ஆனேற்றினது கோட்டையொத்தன; பரிசைகள் ஒலித்துத் தைத்த அம்புகளால் துளைதோன்றுவன, நிலையிற் றப்பாத இலக்கத்தையொத்தன; குதிரைகள் எதிரியை எறியும் காலமுடையான் †இடவாய் வலவாயாகிய இடத்தைக் காட்ட முகக்கருவி பொரப்பட்ட செவ்வாயை உடைமையான் மான் முதலாயினவற்றின் கழுத்தைக் கவ்வி உதிரம் ‡உவற்றியுண்ட புலியை யொத்தன; களிறுகள், கதவை முறித்து வெகுண்டு உலாவி நுனைதேய்ந்த வெளிய கோட்டை யுடைமையான் உயிரை யுண்ணும் கூற்றை யொத்தன; நீதான், அசைந்த தலையாட்டமணிந்த கதியையுடைய குதிரையாற் பூட்டப்பட்ட பொற்றேரின்மேலே பொலிவொடு தோன்றுதலாற் கரிய கடலின்கண்ணே ஓங்கி யெழுகின்ற செய்ய ஞாயிற்றினது ஒளியை யுடையை; அத்தன்மையை யாதலால், தாயில்லாத உண்ணுக் குழவி போல ஒழியாது கூப்பிடும் நின்னைச் சினப்பித்தவருடைய நாடு—எ-று.

நாடென்றது (19) நாட்டுள் வாழ்வாரை. மாறென்பது (17) ஏதுப் பொருள்படுவதோர் இடைச்சொல்.

கழல் பரிந்தன (3) வென்ருேதி, வீரக்கழல் நீங்கியவையென்று உரைப்பாருமுளர்.

வாளாகிய மறுப்பட்டவை (1) யெனவும், கழலாகிய பறைந்தவை யெனவும் (3), தோலாகிய துளைதோன்றுவ (5) வெனவும் கொள்க.

துவைத்துத் தோன்றுவவென இயையும்.

எறிபதத்தா (7) னென்பதற்கு $ ஒத்தும் காலையுடையானென்று உரைப்பாருமுளர்.

செஞ்ஞாயிற்றுக் கவினை (16) யென்றதுணையும் மன்னவன் புகழும், ஓவாது கூஉநின் உடற்றியோர் நாடென (19) ஒன்னார் நாடழிபிரங்கலுமோதலான், இது கொற்றவள்ளை (பு- வெ. 43) யாயிற்று.

---

* அருப்புத்தொழில் : கலித். 104 ; 23, ந. † 'இடவாய்வலவாயாகிய இடம்' (கலித். 140 : 14, ந.) ‡ உவற்றி-ஊற்றி; "ஒண்செங் குருதி யுவற்றி யுண் டருந்துபு, புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை" (அகநா. 3.) $ ஒத்துதல் - அழுத்தல்; "ஒத்துந் தாளத் தொக்கத் தத்தித், தத்தும் பரிதன் ருள்வைத் ததுவே" (திருவால. 28 : 53.)

(கு - ரை.) 1 - 2 நேரசை கூனாய் நின்றதற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். செய். சூ. 48; பேர்.; 49, ந.

3. களத்தைத் தமதாக்கிக் கொள்ளுதல்: புறநா. 53 : 5, கு - ரை. "வென்று களங்கொண்ட வேல்வேந்தே" (பு - வெ. 225) என்பதனுலும், "தேன்மிடைந்த தாரினுன் செங்களஞ் சிறந்ததே" (சீவக. 279) என்பதற்கு எழுதப்பட்ட, 'இத்துணையும் இவன் வெற்றியாதலின் இவன் களமென்ருர்' என்னும் குறிப்புரையாலும் விளங்கும். "பறைதாள் விளவு" (பெரும்பாண். 95.) இவ்வடி பதினேரெழுத் திருசீரடி வஞ்சிப் பாவிற்கு மேற்கோள்; யா - வி. ஒழிபியல், சூ. 95.

5. துவையென்னும் உரிச்சொல் ஓசைப்பொருளில் வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; நன். மயிலை. சூ. 458; நன். வி. சூ. 459.

5 - 6. குறளடியும் சிந்தடியும் வந்தமையான் மயக்கடி வஞ்சிப் பாட்டானதற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 47, ந.

6. "கம்பமொடு துளங்கிய விலக்கம்" (புறநா. 260 : 23.)

9. 'எருத்துவ்விய' எனப் பாடங்கொண்டு எரு, இறைச்சியெனப் பொருள்கூறுவர் தக்க. உரையாசிரியர் (386.)

10-11. "கடிமதிற் கதவம் பாய்தலிற் ருெடிபிளந்து, நுதிமுக மழுகிய மண்ணைவெண் கோட்டுச், சிறுகண் யானை" (அகநா. 24 : 11 - 3.)

10 - 12. களிறு...போன்றன: நிரையசை வஞ்சியடியிற் கூனாய் வந்ததற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 48. பேர்.; ந.

13. புறநா. 2 - 13.

15 - 6. "பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங், கோவற விமைக் குஞ் சேண்விளங் கவிரொளி" (முருகு. 2 - 3); தொல். களவி. சூ. 18 ; தெய்வச்.; கல். மேற்.; புறநா. 228 : 8 - 9; பு - வெ. 201; சீவக. 2371.

13 - 6. வாழ்த்து வகையில் தேரடுத்து வந்ததற்கு இது மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 31, ந.

17. மு. புறநா. 20 : 20; பதிற். 80 : 12. மாறு, மூன்றும் வேற்றுமைப் பொருட்கண் வருமென்பதற்கும் (தொல். இடை. சூ. 2, சே.; இ - வி. சூ. 251, உரை), காரணப்பொருளுணர்த்தி நிற்குமென்பதற்கும் (தொல். இடை. சூ. 2, ந.), ஆகலென்னும் வினைக்குறிப்புச்சொல் சார்ந்து நின்ற சொற்பொருளையே உணர்த்தி நிற்குமென்பதற்கும் முச்சீரடி இடை வந்ததற்கும் (தொல். இடை. சூ. 32, ந.; தொல். செய். சூ. 71, பேர்.) இது மேற்கோள்.

18 - 9. "ஈன்றோ ணீத்த குழவி போல", "தாயி, றூவாக் குழவி போல" (புறநா. 230 : 7, 379 : 14-5); "குழவிகொள் வாரிற் குடிபுறந் தந்து" (பதிற். 6-ஆம் பத்துப் பதிகம்); "தாயிலாக் குழவி போலச் சாதுய ரெய்து கின்றேன்; (சீவக. 1581); "தாயி றூவாக் குழவித்துயர்", "தாயொழி குழவி போலக் கூஉம்" (மணி. 13 : 11, 25 : 111);

"ஓங்குகுடை நீழ லுலகுதுயின் மடியக், குழவிகொள் பவரி னிகழா தோம்பி" (பெருங். 4. 10 : 133 - 4.)

15 - 9. வஞ்சிப்பா மண்டில ஆசிரியத்தான் இற்றதற்கு மேற் கோள்; தொல். செய். சூ. 71, பேர்.

இதன் 14-ஆம் அடியாற் பாட்டுடைத் தலைவனது பெயர்க் காரணம் புலப்படுகின்றது. (ச)

(ரு) எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலி னின்னொன்று மொழிவல்
அருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி
அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே.

திணை - பாடாண்டிணை; துறை - செவியறிவுறூஉ; பொருண் மொழிக் காஞ்சியுமாம்.

சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ் சேரலிரும் பொறையைக் கண்டஞான்று நின் உடம்பு பெறுவாயாகெனா, அவனைச் சென்று கண்டு தம்முடம்பு பெற்று நின்ற நரிவெரூஉத் தலையார் பாடியது.

(இ - ள்.) எருமைபோலும் வடிவையுடைய கரிய கற்பொருந்திய இடந்தோறும் பெற்றம்போலப் பரக்கும் யானையையுடையவாய் வலியை யுடைய காட்டிற்குள்ளாகிய நாட்டினையுடையாய்! பெரும! நீ இங்ஙனம் பகைவரான் அணுகப்படாத இயல்பாகிய பெருஞ்செல்வத்தையுடைய னுதலால், நினக்கு ஒரு காரியஞ் சொல்வேன்; அதனைக் கேட்பாயாக; அருளையும் அன்பையும் நீக்கிப் பாவஞ்செய்தாரை நீங்காத நரகத் தைத் தமக்கிடமாகக் கொள்பவரோடு பொருந்தாது நீ காக்கப்படும் தேயத்தைக் குழவியை வளர்ப்பாரைப் போலப் பாதுகாப்பாயாக; அளிக்கத்தக்க தொன்று அக்காவல்; அது பெறுதற்கரிது—எ - று.

காவலென்றது (7) ஆகுபெயர். நாடனை (3) : ஐகாரம் முன்னிலைக் கண் வந்தது. ஓவும், ஓரும் : அசைநிலை.

அருளாவது :—ஒன்றின் துயர்கண்டாற் காரணமின்றித் தோன்றும் இரக்கம் (தொல். பொருள். சூ. 53, ந.)

அன்பாவது :—தன்னாற் புரக்கப்படுவார் மேலுளதாகிய காதல். (தொல். பொருள். சூ. 53, ந.)

இனி, ஓகாரத்தைப் பிரித்து வினாவாக்கிக் கோப்பெருஞ்சேரலிரும் பொறையைக் கண்டஞான்று நின்னுடம்பு பெறுவாயெனத் தம்முடம்பு பெற்றமை தோன்ற, நீயோவென வினாவினாராக்கியுரைப்பாருமுளர்.

காவல் குழவி கொள்பவரி னோம்பென்றமையாற் செவியறிவுறூஉவும், அருளும் அன்பும் நீக்கி நீங்கா நிரயங் கொள்பவரொ டொன்றாதென்றமையாற் பொருண்மொழிக் காஞ்சியுமாயிற்று.

(சூ - ரை.) 1. "மேதி யன்ன கல்" (மலைபடு. 111.)

2. "ஆபரந் தன்ன செலவிற்பல், யானை", "ஆபரந் தன்ன யானை யோன் குன்றே" (பதிற். 77 : 11 - 2, 78 : 14.)

3. "வான வரம்பனை நீயோ பெரும" (புறநா. 2 : 12); தொல். இடை. சூ. 8. தெய்வச். மேற்.

1 - 3. "எருமை...பெருமவென்பது, நரிவெரூஉத்தலையார் தம் உடம்பு பெற்று வியந்து கூறிய பாட்டாகலின், இது தன்கட்டோன்றிய ஆக்கம் பற்றி வியப்புப் பிறந்ததாயிற்று" (தொல். மெய். சூ. 7, பேர்.; இ. வி. சூ. 578.)

6 - 7. புறநா. 4 : 18-9-ஆம் குறிப்புரையைப் பார்க்க. மக்கட் கணின்ற இளமைப் பெயர்க்கு இது மேற்கோள்; தொல். மரபு. சூ. 23, பேர்.

8. "அளிதோ...குரைத்தே : இஃது இசைநிறை" (தொல். இடை. சூ. 24, சே.; தெய்வச்.; ந.; இ. வி. சூ. 278); "என்றிசினோர், பெறலருங்குரைத்து என்பன போலச் செய்யுண் முடிபு பெற்று நின்றதென்றலே பொருத்த முடைத்து" (தொல். எச்ச. சூ. 1, சே.); குரையென்னும் அசைநிலையிடைச்சொல் வந்துள்ள தொடர்மொழிக்கு இது மேற்கோள்; (நன். மயிலை. சூ. 440; நன். வி. சூ. 441). "கண்ணிற் சொலிச் செவியி னோக்கு மிறைமாட்சி, புண்ணியத்தின் பாலதே" (நீதிநெறி. 28) என்பது இங்கே அறியற்பாலது.

மு : "எருமை...குரைத்தே : இதனுள் நிரயங்கொள்பவரொடொன்றாது காவலையோம்பென வேம்புங் கடுவும்போல வெய்தாகக் கூறி அவற்கு உறுதி பயத்தலின், வாயுறைவாழ்த்தாயிற்று" (தொல். புறத் திணை. சூ. 35, ந.) (௫)

(௬) வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்
கீழது, முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழு மேல
தானிலை யுலகத் தானு மானா

துருவும் புகழு மாகி விரிசீர்த்
தெரிகோன் ஞமன்ன் போல வொருதிறம்
பற்ற லிலியரோ நிற்றிறஞ் சிறக்க
செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி யடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதி னேவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்
தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கிப்
பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே
வாடுக விறைவநின் கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே
செலிய ரத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத் தெதிரே
ஆங்க, வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே.

(பி - ம்.) 9 'தெரிகோற்சமன்போல' 10 'பற்றிலியரே' 12 'யடர்ப் புகர்ச்' 13 'னேஎய்ப்' 17 'பணீஇயரத்தை' 20 'நான்மறை முதல்வ' 21 'வியவுணின்' 23 'சொலிகவத்தைநின்' 29 'மன்னுக'

திணையும் துறையும் அவை; துறை வாழ்த்தியலுமாம்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரி கிழார் பாடியது.

(இ - ள்.) வடக்கின்கண்ணது பனிதங்கிய நெடிய இமயமலையின் வடக்கும், தெற்கின்கண்ணது உட்குந்திறம் பொருந்திய *கன்னியாற்

உரை. *கன்னியாறு : பாண்டி நாட்டைக் கன்னிநாடென்பது இதனாலும் இருத்தல் கூடும்; வேறு கூறுவாருமுளர்; திருவிளை. தடாதகைப். 61.

றின் தெற்கும், கீழ்க்கண்ணது கரையைப் பொருகின்ற சகரரால் தோண்டப்பட்ட சாகரத்தின் கிழக்கும், மேல்கண்ணது பழைதாய் முதிர்ந்த கடலின் மேற்கும், கீழதாகிய நிலமும் ஆகாயமும் சுவர்க்கமுமென மூன்றுங் கூடிய புணர்ச்சியாக அடுக்கப்பட்ட அடைவின்கண் முதற் கட்டாகிய நீர்நிலைக்கண் ஓங்கிய நிலத்தின் கீழும், மேலதாகிய கோலோகத்தின் கண்ணும் அமையாது உட்கும் புகழுமாகப் பரந்த அளவையுடைய பொருள்களை ஆராயும் துலாக்கோலின்கட் சமன்வாய் போல ஒரு பக்கம் கோடாதொழிக; நினது *படை குடிமுதலாகிய கூறுபாடுகள் சிறக்க; போர் செய்தற்கு மாறுபட்ட பகைவர் தேயத்தின்கண்ணே நினது கடல்போலும் படை மேல்விழுந்து உள்புக மிக்குச் சென்று அடர்ந்த புகரினையுடைய சிறுகண்யானையைத் தடையின்றி நேரே ஏவிப் பசிய விளைநிலப் பக்கத்தையுடைய அரிய மதிலரண் பலவற்றையுங் கொண்டு அவ்வரணின்கட் கொள்ளப்பட்ட அழகுபடச் செய்த நல்ல அணிகலங்களைப் பரிசிலர்க்கு வரிசையின் வழங்கி நினது கொற்றக்குடை முனிவரால் பரவப்படும் மூன்று திருநயனத்தையுடைய செல்வரது கோயிலை வலம் வருவதற்குத் தாழ்க; பெரும! நினது முடி, மிக்க நான்கு வேதத்தினையுடைய அந்தணர் நின்னை நீடுவாழ்கவென்றெடுத்த கையின்முன்னே வணங்குக; இறைவ! நினது கண்ணி, நின்பகைவரது நாட்டைச் சுடும் பலமணம் நாறும் புகையுறைத்தலான் வாடுக; நினது சினம், வெளிய முத்தாரத்தையுடைய நின் தேவியருடைய துனித்த ஒளியையுடைய முகத்தின் முன்னர்த் தணிக; வென்று வென்றி முழுதையும் வியவாது நின் மனத்தே உட்கொண்ட தணியாத வண்மையையுடைய தகுதிமாட்சிமைப்பட்ட குடுமி! குளிர்ந்த சுடரையுடைய திங்களையொப்பவும் சுடுகின்ற ஒளிபொருந்திய ஒள்ளிய கதிரையுடைய ஞாயிற்றையொப்பவும் நிலை பெறுவாயாக, நீ உலகத்தின்மேல்—எ - று.

வடாது (1) என்னும் முற்றுவினைக்குறிப்பைப் பெயர்ப்படுத்தி, பனிபடு நெடுவரையொடு பண்பொட்டாக்கி, அதன் வடக்குமென்க; ஒழிந்தனவு மன்ன.

மேலது துறக்கத்தின் மேலுமென்பார், அதற்கு மேலதாகிய ஆனிலையுலகத்தானும் (7) என்றார். உரு (8) என்பது, இவனுணையாற் பிறரஞ்சும் உட்குடைமை.

அத்தை (23) யும், ஆங்க (25) வும் அசைநிலை.

குடுமி! பெரும! உருவும் புகழும் ஆக; ஒருதிறம் பற்றாதொழிக; நிற்றிறஞ் சிறக்க; பணிக; இறைஞ்சுக; வாடுக; செல்லுக; பரிசின் மாக்கட்கு நல்கி மதியம்போலவும், ஞாயிறுபோலவும் நீ நிலத்தின் மிசை மன்னுக வெனக்கூட்டி வினைமுடிவு செய்க.

---

* படைகுடி முதலியன : குறள், 381.

தேளத்து (11) என்பதனுள், அத்தை அசைநிலையாக்கி, தேயம் கடற்படைக்குள்ளே குளிப்பவென்றுரைப்பாரு முளர்.

ஞமன் (9) - யமனெனினுமமையும். அடற்புகர்ச் சிறுகண் யானை (12) யென்று பாடமோதி, கொலையைச் செய்யும் புகரையுடைய யானை யெனினும் அமையும்.

ஆகி (8), ஆகவெனத் திரிந்து நின்றது; ஆகியென்பதனைத் திரி யாது, நிற்றிறஞ் சிறக்க (10) என்பதனோடு இயைத்துரைப்பாரும் உளர். நின்றிறம், நிற்றிறமென வலிந்து நின்றது.

நகர்வலஞ்செயற்குப் பணியியரென வீடும், ஏந்துகையெதிர் இறைஞ்சுகவென அறமும், புகையெறித்தலான் வாடுகவெனப் பொருளும், முகத்தெதிர் தணிகவென இன்பமும் கூறியவாறாயிற்று.

இஃது, இவ்வாறு செய்கவென அரசியல் கூறலிற் *செவியறி வுறூஉவும், மதியமும் ஞாயிறும்போல மன்னுகவென்றமையான் வாழ்த்தியலுமாயிற்று.

(கு - ரை.) 1. கட்டளை ஒரூஉ மோனைக்கு இது மேற்கோள்; (தொல் செய். சூ. 92, ந.;) ஆசிரியத்தில் அடிமுதற்கண், 'வடாஅது' என உகரவீறுய நேரீற்றியற்சீர்க்கூன் அருகி வந்ததற்கு மேற்கோள்; யா. வி. சூ. 94.

2. "தெனாஅ துருகெழு குமரி யென்னுங் குறிப்பு வினைச்சொல் குறிப்பினானன்றி வினையறியலாகாமையின், வினைக்குறிப்புமொழி" (நன். மயிலை. சூ. 268.)

1 - 2. "வடாஅது, தெனாஅதென்பனவும் ஏழாம் வேற்றுமைப் பொருண்மைக்கண் வந்த வினைக்குறிப்பு; பெயருமாம்", "வடாஅது, தெனாஅதென்பன ஏழனுருபின் பொருள்பட வந்தன" (தொல். வினை. சூ. 23. சே. ந.)

3. சகரரால் தோண்டப்பட்டமையின் கீழ்கடலைத் தொடுகட லென்றார்; "தொட்ட பைங்கடற் சூரியன் றோன்றுமுன் றோன்றி" (வி. பா. நிரைமீட்சி. 24.)

4. மேல்கடல் பழையதாதலின், தொன்றுமுதிர் பௌவமெனப் பட்டது.

1 - 4. "தென்குமரி வடபெருங்கல், குணகுடகட லாவெல்லை". (புறநா. 17 : 1 - 2; மதுரைக். 70 - 71.)

7. ஆனிலையுலகம் - கோலோகம். இதனியல்பை, சிவதருமோத் தரத்துள்ள கோபுரவியலாலும், "விளங்குநம் முலகின் மேலாம்

---

* செவியறிவுறூஉ : ஒருவுதல், ஒரூஉதல் எனவும் ஒரூஉ எனவும் கூறப்படுதல்போல உறுதலும் உறூஉதலெனவும் உறூஉவெனவும் கூறப்படுமென்பர்; தொல். புறத்திணை. சூ. 35, ந.

வைகுந்த மதன்மேற் கந்தன், வளங்கெழு முலகம் வெற்பின் மாதுல கதனின் மேலாம், களங்கனி யனைய கண்ட னுலகதன் மேலாம் பாங்கர், உளங்கவர் வனப்பின் மேவுங் கோவின துலக மாமே" (காசிகாண்டம், 2 : 29) என்னுஞ் செய்யுளாலு முணர்க.

8. இவ்வடி அகலக்கவியைக் கொண்டோர் பெறும் பயனுக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது; இ. வி. சூ. 940, உரை.

9. "வாண்ஞுமற்கு" (சீவக. 251); "ஞெமன்ன், றெரிகோ லன்ன" (அகநா. 349 : 3 - 4).

9 - 10. குறள், 118; "செம்பொற்றுலைத், தால மன்ன தனிநிலை தாங்கிய, ஞால மன்னற்கு" (கம்ப. மந்தரை. 19); "ஓர்வுற் றொருதிற மொல்காத நேர்கோல், அறம்புரி நெஞ்சத் தவன்" (கலித். 42 : 14 - 5.)

12. 'கடற்படை குளிப்ப மண்டி' என்பது, பின்னின்ற மொழி முன்னே மாற்றப்பட்டதற்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. 13, ந.

11 - 2. "விரிகடல் வியன்றுணையொடு, முருகுறழப் பகைத்தலைச் சென்று" (மதுரைக். 180 - 81).

16. "வரிசை யறிதலோ வரிதே" (புறநா. 121 : 3); "வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்" (சிறுபாண். 217.)

15 - 6. "ஆண்டுநீர்ப் பெற்ற தார மீண்டிவர், கொள்ளாப் பாடற் கெளிதினி னீயும்" (பதிற். 48 : 5 - 6); "அங்கட் கிணையன் றுடியன் விறலிபாண், வெங்கட்கு வீசும் விலையாகும் - செங்கட், செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி, வரிச்சிலையாற் றந்த வளம்" (பு. வெ. 16); "கலந்தோ ருவப்ப வெயிற்பல கடைஇ, மறங்கலங்கத் தலைச்சென்று, வாளுழந்ததன் றாள்வாழ்த்தி, நாளீண்டிய நல்லகவர்க்குத், தேரோடு மாசிதறி" (மதுரைக். 220 - 24), "பலர்புறங் கண்டவ ரருங்கலந் தரீஇப், புலவோர்க்குச் சுரக்குமவ னீகை மாரியும்" (மலைபடு. 71 - 2.)

11 – 6. "விறல்வேன் மன்னர் மன்னெயின் முருக்கி, நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்" (சிறுபாண். 247 - 8).

17 - 8. "நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி, உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி, மறஞ்சேர் வஞ்சி மாலை யொடுபுனைந், திறைஞ்சாச் சென்னி யிறைஞ்சிவலங் கொண்டு" (சிலப். 26 : 54 - 7.)

20. "முனிவர்...வாழ்கெனப் பரவிப் பாணியை விரித்தனர் நிற்ப" (கந்த. சூரனரசிருக்கை. 19.)

19 - 20. "பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே" (பதிற். 63 : 1.)

17 - 20. இவ்வடிகள், செவியுறை வாழ்த்திற்கு மேற்கோள் : (தொல். செய். சூ. 114, பேர்.)

22. "ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக், கொள்ளை மேவலை", "ஏம நன்று டொள்ளெரி யூட்டினை", "வினைபுனை நல்லில் வெவ்வெரி

நைப்பக், கனையெரி யுரறிய மருங்கும்" (புறநா. 7 : 8 - 9, 16 : 17; 23 : 10 - 11); "யாண்டுதலைப் பெயர வேண்டுபுலத் திறுத்து, முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு", "பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கு", "ஊரெரி கவர வுருத்தெழுந் துரைஇப், போர்சுடு கமழ்புகை மாதிர மறைப்ப" (பதிற். 15 : 1 - 2, 25 : 7, 71 : 9 - 10); "செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல, எரிமேய்ந்த கரிவறல்" (கலித். 13 : 1 - 2); "நாடுகெட வெரிபரப்பி" (மதுரைக். 126).

23. அத்தை என்னும் இடைச்சொல் முன்னிலையசையாய் வருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். இடை. சூ. 47. தெய்வச்.; இ. வி. சூ. 276, உரை.

24. "துனிநீங்கி யாட ரொடங்கு துனிநனி, கன்றிடிற் காமங் கெடூஉம்" (பரி. 6 : 97 - 8).

25. வென்று அகத்தடக்கல் : புறநா. 77 : 10 - 13.

26. "தண்டாக் களிப்பு" (மணி. 6 : 126.)

29. இது, யகரவீற்று வியங்கோளுக்கு மேற்கோள் : தொல். உயிர். சூ. 8, இளம்.; நன். மயிலை. சூ. 337; நன். வி. சூ. 338; இ. வி. சூ. 239, உரை; மன்னைமை நிலையாமையை உணர்த்துமென்பதற்கு மேற்கோள்; தொல். கிளவி. சூ. 34, ந.

மு. "இதனுள் இயல்பாகிய குணங்கூறி அவற்றோடு செவியுறையும் கூறினான், செவியுறைப்பொருள் சிறப்புடைத்தென்று அவன் கருதி வாழ்தல் வேண்டி" (தொல். புறத்திணை. சூ. 35; செய். சூ. 144, ந.)

பாட்டுடைத் தலைவன் பெயரின் ஒரு பகுதி இப்பாட்டின் 26 - ஆம் அடியில் அமைந்திருத்தல் காண்க. (சா)

(எ) களிறு கடைஇய தாட்
கழலுரீஇய திருந்தடிக்
கணைபொருது கவிவண் கையாற்
கண்ணொளிர்வரூஉங் கவின்சாபத்து
மாமறுத்த மலர்மார்பிற்
றோல்பெயரிய வெறுழ்முன்பின்
எல்லையு மிரவு மெண்ணாய் பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலி னல்ல
இல்லவா குபவா லியறேர் வளவ
தண்புனல் பரந்த பூசன் மண்மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்ப்
பயன்றிகழ் வைப்பிற்பிற ரகன்றலை நாடே.

(பி - ம்.) 3 'கணைக்கால் பொருத' 7 'மென்னுய்'

திணை - வஞ்சி; துறை - கொற்றவள்ளை; மழபுல வஞ்சியுமாம்.

சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியது.

(இ - ள்.) களிற்றைச் செலுத்திய தாளையும், வீரக்கழலுரிஞ்சிய இலக்கணத்தாற்றிருந்திய அடியினையும், அம்பொடு பொருது (பி - ம். பொருத) இடக் கவிந்த வள்ளிய கையுடனே கண்ணிற்கு விளங்கும் அழகினையுடைய வில்லையும், திருமகள் பிறர் மார்பை மறுத்தற்கு ஏதுவாகிய பரந்த மார்பினையும், யானையைப் பெயர்த்த மிக்க வலியினையுமுடைய, பகலுமிரவும் எண்ணாது பகைவரது ஊரைச் சுடுகின்ற தீயினது ஒளியின்கண்ணே தம் சுற்றத்தை அழைத்தலுடனே அழுகின்ற கூவுதலையுடைய ஆரவாரத்தோடு கூடிய கொள்ளையை விரும்புதலுடையை; ஆதலான், நல்ல பொருள்கள் இல்லையாகுவன வால்; இயற்றப்பட்ட தேரையுடைய வளவ! குளிர்ந்த நீர்பரந்த ஓசையையுடைய உடைப்புக்களை மண்மறுத்தலான் மீனுலடைக்கும் புது வருவாயினையுடைய பயன் விளங்கும் ஊர்களையுடைய மாற்றரது அகன்ற இடத்தையுடைய நாடுகள்—எ - று.

திருந்தடி (2) என்பதற்குப் *பிறக்கிடாத அடியெனினும் அமையும்.

கணைபொருது (3) என்றது, அதனெடு மருவுதலை.

தாளையும், அடியையும், கையுடனே சாபத்தையும், மார்பையும், முன்பையுமுடைய வளவ! நீ கொள்ளைமேவலையாதலின், யாணரையும் வைப்பினையுமுடைய பிறர் நாடு, நல்ல இல்லவாகுபவெனக் கூட்டுக. நாடு நல்ல இல்லவாகுபவென இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்து மேலேறி நின்றது.

இனித் தாளாலும் அடியாலும் கையாலும் சாபத்தாலும் மார்பாலும் முன்பாலும் கொள்ளை மேவலையாகலினென ஆலுருபு விரித்துரைப்பினும் அமையும்.

இது, பிறரகன்றலை நாடு நல்ல இல்லவாகுப வென்றமையிற் கொற்றவள்ளையும், ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலை யென்றமையின் மழபுல வஞ்சியுமாயிற்று.

(கு - ரை.) 1. மு. பதிற். 70 : 1.

5. மாவென்பது இடத்தால் திருவை விளக்கியதென்பதற்கு இது மேற்கோள்; நன். மயிலை. சூ. 389; நன். வி. 390; இ. வி. சூ, 320. உரை.

6. எறும் முன்பு : ஒருபொருட் பன்மொழி.

---

* பிறக்கு - பின்; "நசைபிறக் கொழிய" (புறநா. 15 : 15.)

12. செறுக்கும் - அடைக்கும்; ''செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ ரூடார்'' (நாலடி. 222).

மு. 'இப்பாட்டினை வஞ்சித்திணைக்குரிய எரிபரந்தெடுத்தலென் னுந் துறைக்கு உதாரணமாகக் காட்டினர்; தொல். புறத். சூ. 8, ந. (எ)

(அ) வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப
ஒடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி; பூவைநிலையுமாம்.

சேரமான் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது.

(இ - ள்.) உலகத்தைக் காக்கும் அரசர் வழிபாடு சொல்லி நடக்க நுகரும் இன்பத்தை விரும்பிப் பூமி பிறவேந்தருக்கும் பொதுவென்னும் வார்த்தைக்குப் பொறாது தன் நாடு இடஞ்சிறிதென்னும் மேற்கோள் செலுத்த மடியாத உள்ளத்தையும் பொருளைப் பாதுகாவாது வழங்கும் வண்மையையும் வஞ்சியாது எதிர்நின்று கொல்லும் படையையு முடைய சேரலாதனை எவ்வாறொப்பை? மிக்க செலவையுடைய மண்டிலமே! நீ பகற்பொழுதை நினக்கெனக் கூறுபடுப்பை; திங்கள் மண்டிலத்திற்கு முதுகிட்டுப் போதி; தெற்கும் வடக்குமாகிய இடங்களில் மாறி மாறி வருவை; மலையின்கண்ணே வெளிப்படாது கரப்பை; அகன்ற பெரிய ஆகாயத்தின்கண்ணும் பகற்பொழுது விளங்குவை, பல கிரணங்களையும் பரப்பி—எ - று.

மாறி வருதி (8) என்பதற்கு இராசிதோறும் மாறி வருதி யெனினு மமையும்.

வீங்குசெலன்மண்டிலமே! வரைதி; இறத்தி; வருதி; ஒளித்தி; நீ விசும்பினானும் பகல் விளங்குதி; இக்குறைபாடெல்லாமுடைய நீ சேரலாதனை யாங்கன மொத்தியோவெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

ஒழுகவென்னுமெச்சம் (1) நுகருமென ஒருசொல் வருவித்து அதனோடு கூட்டி முடிக்கப்பட்டது; ஒழுகவும் போகம் நுகரவும் வேண்டி யெனினும் அமையும். வேண்டி, பொருது, துரப்ப என நின்ற வினையெச்சங்கள் ஒடுங்காவென்னும் பெயரெச்சமறையின் முதனிலையோடு முடிந்தன.

இனி, 'பகல்விளங்கலை' என்னும் பாடத்திற்குத் * திங்கண் மண்டிலமாக்கி, 'மாறிவருதி' என்பதற்குத் தேய்ந்தும் வளர்ந்தும் வருதி யெனவும் பிறவும் அதற்கேற்ப வுரைப்ப. (உரைப்பவர் இளம்பூரணர்.)

(கு - ரை.) 1. "தொன்றுபட்டு வழிமொழிய" (புறநா. 17 : 4).

2. புறநா. 51 : 4 - 5; 189 : 1 - 2 "பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு" (கலித். 68); "அரசன் போகம் வேண்டிப் பொதுச் சொற் பொறுஅய்" (நெடுநல். அவதாரிகை); "கொடியு முரசுங் கொற்றவெண் குடையும், பிறர்கொளப் பொருஅன் றுனே கொண்டு" (சிதம்பர மும்மணி. 25).

4. "ஓம்பா தீயு மாற்ற லெங்கோ" (புறநா. 23 : 33); "ஓம்பா வீகையின் வண்மகிழ் சுரந்து" (பதிற். 42 : 13.)

5. "ஒன்னுதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற, வென் வேலான்" (கலித். 27 : 15 - 6).

6. யாங்கனம் : "நீங்கு கென்றியான் யாங்கன மொழிகோ" (அகநா. 90 : 8); "யாங்கனம் வந்தனை" (மணி. 5 : 41). ஒக்குமெனக் கூருமல் ஒவ்வாதெனக் கூறலும் உவமையாமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உவம. சூ. 33, பேர்.

7. "மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்ப" (அகநா. 4 : 5); "அழிகுநர் புறக்கொடை" (பு. வெ. 55, கொளு.)

8. புறநா. 65 : 6 - 8. 10. புறநா. 374 : 17 - 8.

மு. "ஒரீஇக் கூறலும்" (தொல். உவம. சூ. 35, இளம்.) என்பதற்கு மேற்கோள்; " 'வையங் காவலர்...பல்கதிர் விரித்தே' என்னும் பாட்டினுள், 'கடந்தடு தானைச் சேரலாதனை' என்னுந்துணை உவமத்

---

* புறநா. 27 : 11 - 4; "மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்க லும், தேய்தலு முடைமையைத் திங்கள் செப்புமால்" (சீவக. 2932); "உலகினர் செல்வ நந்த லுரைப்பொரு ளிரண்டுங் கோடல், இலகு வெண் மதியங் காட்ட வென்றுமோர் தகைத்தாய்ச் சேறல், விலகுதஞ் செல்வ மெங்கள் விழுப்பொரு ளாய வண்ணல், அலகில்செஞ் சோதிப் பின்ன லணிமதி யுணர்த்த வாழ்வார்" (கூவப். நைமிசா. 14); "அகன்மதி வளர்ந்து தேய்ந்தற் றச்சக போகத் தன்மை, நகலுறக் காட்ட" (தியாக. நைமிச. 16.)

திற்கு வந்த அடையினைப் பொருட்கு மறுத்துக் கொள்ளவைத்தானென் பது. என்னை? வெஞ்சுடர் வழியென்னுந் துணை உவமத்திற்குரிய அடையினைப் பொருட்கு மறுத்துக் கொள்ளவைத்தானென்பது. இனி, 'பொழுதென வரைதி' என்பது தொடங்கிப் பாட்டு முடிகாறும் பொருட் குரிய அடையினை உவமத்திற்கு மறுத்துக் கொள்ளவைத்தானென்பது. என்னை? வெஞ்சுடர் வழித்தோன்றிய அரசனைத் தண்சுடரோடு உவமிப்பான், 'பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்' என்றதனாற் பொருளினை உவமையாகக் கூறுது உள்ளுறையுவமம் போலக் கொள்ளவைத்துப் பின்னர் உவமத்திற்கு அடையாயவற்றுள், 'வையங் காவலர் வழிமொழிந் தொழுக' என்றான். வழிமொழித லென்பது வேற்றரசர்க்குத் தம் தன்மையென வேறின்றித் தன்னகப்படுத்தல்; ஆதலால் தத்தம் ஒளியொடு படுத்து ஒழிந்த கோளுஞ் செல்லத் தானுஞ் செல்லும் மதியமென்று எதிர்மறுத்துக் குற்றங்கூறும் குறிப்புப் படவைத்தானென்பது. 'போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅது' எனவே இன்ப நுகர்வு முற்றுச் சிறப்பில்லாக் கட்டுரை பெய்தா னெனவும் அவனோடு உவமிக்கின்ற மதியமாயின் இருபத்தெழுவர் மகளிரொடு போகந்துய்த்துச் சிறப்பில்லாத கட்டுரை புணையுமென்றும் எதிர்மறுத்துக் கொள்ள வைத்தான். சிறப்பின்மை யென்பது, எல்லார்க்கும் ஒத்தவாற்றான் அறஞ்செய்யாது உரோகிணிமேற் கழிபெருங் காதல னெனப்படுதல் போல்வன. 'இடஞ்சிறி தென்னு மூக்கந்துரப்ப' எனவே, எஞ்ஞான்றுந் தன்னெல்லைக்கண்ணே வரும், மதிமண்டிலமென்று எதிர்மறுத்துக் கொள்ளப்படும். 'ஒடுங்கா வுள்ளம்' எனவே, மதியம் தேய்ந்தொடுங்கு மென்பது கொள்ளப் படும். 'ஓம்பா வீகை' எனவே, நாடோறும் ஒரோவோர் கலையாகப் பல்லுயிர்க்கும் இன்பம் பயக்குமாற்றால் தருவதல்லது தானுடைய தெல்லாம் ஒருகாலே கொடாது மதியமெனப்படும். 'கடந்தடுதானை' எனவே மதிக்குத் தானையாகிய தாரகையெல்லாம் பகைக்கதிராகிய பருதி மண்டிலத்துக்குத் தோற்குமென்றானும். இவ்வாற்றான் உவமான அடையெல்லாம் எதிர்மறுத்துக் கொள்ளப்பட்டன. இனி, பொருட் குரிய அடையும் அவ்வாறே எதிர்மறுத்துக் கொள்ளப்படு மென்ற வாறு. 'விலங்குசெலன் மண்டிலம்' எனவே, கடையாயினோர் கதியிற் செல்லு மதியமென்று பாட்டுடைத் தலைவன் தலையாயினோர் கதியிற் செல்லுமென்றான். 'பொழுதென வரைதி' எனவே, நாடோறும் நாழிகை வேறுபட்டு எறித்தியென்றதனான் இவன் பொழுது செய்யா னெனவும், 'புறக்கொடுத் திறத்தி' எனவே, தோற்றார் போன்று ஒளி மழுங்கிச் செல்கின்றா யென்பதனால் சுடர்போல விளங்கிப் பிறர் தோற்றோடக் காயும் இவனெனவும், 'மாறி வருதி' எனவே, திங்க டோறுமாறிப் பிறத்தி யென்பதனான் இவன் நிலைபெற்றானெனவும், 'மலைமறைந் தொளித்தி' எனவே மலைசார்ந்தவழித் தோன்றா யென்பத னான் இவன் தன்னாட்டு மலைமீக்கூறு மெனவும், 'அகலிரு விசும்பி

னும்' எனவே, இவன் இவ்வுலகத்து நிலைபேறுடையனெனவும், 'பகல்விளங்காய்' எனவே, இவன் இருபொழுதும் விளங்குமெனவுங் கொள்ளப்படும். முற்பகுதியும் பிற்பகுதியும் வேறுபட வருதலின் இது வேறுபட வந்ததாயிற்று'' (தொல். உவம. சூ. 32, பேர்.). (அ)

(கூ) ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

(இ - ள்.) ஆவும், ஆனினது இயல்பையுடைய அந்தணரும், மகளிரும், நோயுடையீரும், பாதுகாத்துத் தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியில் இறந்தோர்க்குச் செய்தற்கரிய பிண்டோதகக் கிரியையைப் பண்ணும் பொன்போலும் பிள்ளைகளைப் பெறாதீரும் எம்முடைய அம்பை விரையச் செலுத்தக்கடவேம், நீர் நுமக்கு அரணாகிய இடத்தை அடையுமென்று அறநெறியைச் சொல்லும் மேற்கோளினையும் அதற்கேற்ற மறத்தினையுமுடைய, கொல்யானை மேலே எடுக்கப்பட்ட கொடிகள் ஆகாயத்தை நிழற்செய்யும் எம்முடைய வேந்தனாகிய குடுமி வாழ்வானாக; தம்முடைய கோவாகிய, சிவந்த நீர்மையையுடைய போக்கற்ற பசிய பொன்னைக் கூத்தர்க்கு வழங்கிய முந்நீர்க் *கடற்றெய்வத்திற்கெடுத்த விழாவினையுடைய நெடியோனால் (பி - ம். உயர்ந்தோனால்) உளதாக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளி யென்னும் ஆற்றின் மணலினும் பல காலம்—எ - று.

எங்கோவாகிய குடுமி, பஃறுளியாற்றின் மணலினும் பலகாலம் வாழியவெனக் கூட்டுக.

கொடி விசும்பு நிழற்றும் (6) என்பது, சினைவினைப்பாற்பட்டு எங்கோவென்னும் (7) முதலொடு முடிந்தது; கொடியால் விசும்பு நிழற்றுமென் றுரைப்பினும் அமையும்; மீமிசைக்கொடி விசும்பு

* ''கடற்றெய்வங் காட்டிக் காட்டி'' (சிலப். கானல்வரி, சார்த்துவரி.)

நிழற்றும் களிற்றிணையுமென மாறிக் கூட்டுவாருமுளர். தங்கோச் செந் நீர்ப் பசும்பொன் னென்பதற்குத் (9 - 10) தமதரசாட்சியினது செவ்விய நீர்மையாற் செய்த பசும்பொனென்பாரு முளர்.

முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்றுனென்ற வியப்பால், நெடியோ னென்று ரென்ப. யாற்றுநீரும் ஊற்றுநீரும் மழைநீருமுடைமையால், கடற்கு * முந்நீர் என்று பெயராயிற்று; அன்றி, முன்னீரென்ருேதி, † நிலத்திற்கு முன்னுகிய நீரென்றுமுரைப்ப.

பிணியுடையீரும் புதல்வர்ப்பெருதீரு மென்னும் முன்னிலைப் பெய ரோடு ஆவும் பார்ப்பன மாக்களும் பெண்டிரு மென்னும் படர்க்கைப் பெயர்கள் விராய்வந்து, நும்மரண் சேர்மினென்னும் முன்னிலை வினை யான் முடிதல், ‡ "செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்" என்னும் அதிகாரப் புறனடையாற் கொள்ளப்படும்.

(கு - ரை.) 1. சிறிதும் தீங்கு செய்யத்தகாத சாதியாகலின், பசு முற்கூறப்பட்டது; "ஆவு மாவுங் கொண்டுகழி கென்றே" (மணி. 9 : 25).

1 - 2. தொல். விளி. சூ. 8, தெய்வச். மேற்.; "ஆவு மானியற்...... பிணியுடை யீரும்' என்றுற் போலும் அண்மைவிளியும் இதனுற் கொள்க" (தொல். விளி. சூ. 12, ந.).

4. "பொன்போற் புதல்வனே டென்னீத் தோனே" (ஐங்குறு. 265 : 4.) புதல்வன் செல்வமென்பது: கலித். 85 : 34 - 6, ந.

5. "எம்மம்பு...சேர்மி னென்பது விரைவு" (நன். மயிலை. சூ. 456; நன். வி. சூ. 457).

1 - 5. "மண்டமர் மேல்கொடு வந்தன மின்னே, தண்கட னாட் டுறை தாபதர் நோயோர், பெண்டிரு நும்மர ணேகுதிர் பெட்டென்,

---

* "முந்நீர் - கடல்; ஆகுபெயர்; ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரென இவையென்பார்க்கு அற்றன்று; ஆற்றுநீர் மேனீராதலானும் இவ் விரண்டுமில்வழி ஊற்றுநீரும் இன்றுமாதலானும் இவற்றை முந்நீ ரென்றல் பொருந்தியதன்று; முதிய நீரெனின், "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்" (குறள், 17) என்பதனுல் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது; ஆனுல் முந்நீர்க்குப் பொருள் யாதோ வெனின் முச்செய்கையையுடைய நீர் முந்நீரென்பது; முச்செய்கை யாவன, மண்ணைப் படைத்தலும் மண்ணை யழித்தலும் மண்ணைக் காத்தலுமாம்" என்பர் அடியார்க்கு நல்லார் (சிலப். 17 : முந்நீரின்); பெரும்பாண். 441; சீவக. 5, ந. பார்க்க.

† இங்ஙனம் கூறியது பூதங்களின் தோற்ற முறைபற்றி.

‡ தொல். எச்ச. சூ. 67.

றெண்டிசை யார்ப்ப விசைப்பறை சாற்றி" (காஞ்சிப். நாடு. 21). "ஆவும்...சேர்மினெனத் திணைவிராய்வந்து முன்னிலை வினைகோடல் எற்றாற் பெறுதுமெனின்,—அந் நிகரன செய்யுண்முடிபெனப்படும்; அவற்றை அதிகாரப் புறனடையாற் கொள்க" (தொல். கிளவி. சூ. 45, சே.); "ஆவு மானியற் பார்ப்பன மாக்களுமென எண்ணி 'நும்மரண் சேர்மின்' என முன்னிலைவினை கோடல் செய்யுண் முடிபென்பது அதிகாரப் புறனடையாற் கொள்க" (தொல். கிளவி. சூ. 45, ந.); "ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்...சேர்மின் என ளகரவீற்று உயர்திணைப் பெயர் அண்மைக்கண் இயல்பாயிற்று" (இ. வி. சூ. 207, உரை.)

6. "அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்" (புறநா. 62 : 7). "சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாம், சொல்லிய வண்ணஞ் செயல்" (குறள், 664) என்பதும், "சிறப்புடை அரசியலாவன : மடிந்த உள்ளத்தோனையும் மகப்பெறாதோனையும் மயிர்குலைந்தோனையும் அடி பிறக்கிட்டோனையும் பெண்பெயரோனையும் படையிழந்தோனையும் ஒத்தபடையெடாதோனையும் பிறவும் இத்தன்மையுடையோரையும் கொல்லாது விடுதலும் கூறிப் பொருதலும் முதலியனவாம்" (தொல். புறத்திணை. சூ. 10, ந.) என்பதும் இங்கே அறியற்பாலன.

1 - 6. "இருபெரு வேந்தர் பொருவது கருதியக்கால் ஒருவர், ஒருவர் நாட்டு வாழும் அந்தணரும் ஆவும் முதலியன தீங்கு செய்யத் தகாத சாதிகளை ஆண்டு நின்றும் அகற்றல் வேண்டிப் போதருக வெனப் புகறலும், அங்ஙனம் போதருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவினால் தாமே கொண்டு வந்து பாதுகாத்தலும் தீதெனப்படாது அறமேயா மென்றற்கு 'ஆதந் தோம்பல்' என்றான்; அஃது 'ஆவும்... மறத்தின்' எனச் சான்றோர் கூறியவாற்றா னுணர்க; மன்னுயிர் காக்கும் அன்புடை வேந்தற்கு மறத்துறையினும் அறமே நிகழுமென்றற்கு, 'மேவற்றாகும்' என்றான்" (தொல். புறத்திணை. சூ. 2, ந.; இ. வி. சூ. 602, உரை) என்பனவும், "நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர்பார்ப்பார், என்பாரை யோம்பே னெனின்யான வனாக வென்றான்" (சீவக. 443) என்பதும் இங்கே அறியத்தக்கவை.

7. மீமிசை : "ஓங்குயர் சமந்தத் துச்சி மீமிசை" (மணி. 19 : 22). யானைமேற் கொடி : பதிற். 52 : 1, 69 : 1 - 2, 88 : 17; நெடுநல். 87; கம்ப. சம்புமாலி. 26.

9. செந்நீர்ப் பசும்பொன் - நால்வகைப் பொன்னுட் கிளிச்சிறை யென்பது; "செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை" (மதுரைக். 410).

10. முன்னொரு காலத்தில் மதுரையை அழித்தற்கு வந்த கடலை உக்கிர குமார பாண்டிய னென்பவன், ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் அருளிய வேலையெறிந்து வற்றச்செய்து, அக்கடல் தன்னுடைய காலின் வடிம்பை யலம்பும்படி உயர்ந்து நின்றமையால், அவனுக்குக் கடல் வடிம்பலம்ப நின்ற பாண்டியனென்பது பெயராயிற்று; இதனைத்

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் 21 - ஆவதிலுள்ள 6 - ஆம் விருத்தம் முதலியவற்றாலுணர்க. "அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி, வடிவே லெறிந்த வான்பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" (சிலப். 11 : 17 - 20), "ஆழி வடிம்பலம்ப நின்றானும்" (நள. சுயம். 137), "கடல்வடிம் பலம்ப நின்ற கைதவன்" (வி. பா. 15 - ஆம் போர். 18) எனவும் வருபவை இதனை வலியுறுத்தும். நெடியோன்: "பொலந்தார் மார்பினெடியோ னும்பல்" (மதுரைக். 61); "உரைசால் சிறப்பி னெடியோ னன்ன, அரைச பூதம்" (சிலப். 22 : 60 - 61).

11. பஃறுளியாறு : சிலப். 11 : 19.

8 - 11. ஓர் அரசரை வாழ்த்துகையில் அவரை அவர்க்குரிய ஆற்று மணலினும் வாழ்கவென்றல் மரபாகலின் இங்ஙனம் கூறினார்; புறநா. 43 : 21 - 3 : "மண்ணாள் வேந்தே நின்வா ணாட்கள், தண்ணான் பொருநை மணலினுஞ் சிறக்க" (சிலப். 28 : 125 - 6).

மு. இச்செய்யுள், பொருளின்றுய்த்த பேராண்பக்கத்திற்கும், இயன்மொழிவாழ்த்திற்கும் (தொல். புறத். சூ. 7, 29, இளம்.) உதாரணமாக முறையே காட்டப்பட்டுள்ளது. (கூ)

(கo) வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி யத்தக வொறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பிற்
றண்டமுந் தணிதிநீ பண்டையிற் பெரிதே
அமிழ்தட் டானாக் கமழ்குய் யடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்த லல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப
செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்
நெய்தலங் கான னெடியோய்
எய்தவந் தனம்யா மேத்துகம் பலவே.

திணையும் துறையும் அவை.

சோழன் நெய்தலங்கானல் (பி - ம். நெய்தலங்காலை) இளஞ் சேட் சென்னியை ஊன்பொதி பசுங் * குடையார் பாடியது.

(இ - ள்.) நின்னை வழிபட்டொழுகுவோரை விரைய அறிவை; பிறருடைய குற்றஞ்சொல்லுவாரது வார்த்தையைத் தெளிவாய்; நீ மெய்

* குடை - பனை ஓலையால் செய்யப்படுவது.

யாக மனத்தான் ஆராய்ந்து அறுதியிடப்பட்ட கொடுமையை ஒருவன் பாற் காணின், அதனை நீதிநூற்குத் தக ஆராய்ந்து அத்தீமைக்குத் தகத் தண்டஞ்செய்வை; வந்து நின் பாதத்தை அடைந்து முன்னே நிற் பாராயின், அவர் பிழைசெய்வதற்குமுன் நீ செய்யும் அருளினும் அருள் பெரிதாக அவரைச் செய்யுந் தண்டமும் தணிவை; அமிழ்தத்தைத் தன் சுவையால் வென்று உண்ண உண்ண அமையாத மணங்கமழும் தாளிப் பையுடைய அடிசிலை விருந்தினர்க்கு மிகுதி குறைபடாமல் வழங்கும் பழிதீர்ந்த மனைவாழ்க்கையையுடைய பெண்டிர் முயக்கத்தால் மாறு படுத்தலல்லது வீரர் போரால் மாறுபடுத்தலொழிந்த இந்திரவிற் போலும் மாலையையுடைய மார்ப! ஒரு தொழிலைச் செய்து பின் பிழைக்கச் செய்தேமென்று கருதாத செய்கையையும் சேய்மைக் கண்ணே விளங்கும் புகழினையுமுடைய நெய்தலங்கானலென்னும் ஊரையுடைய நெடியோய்! அணுக வந்தேம் யாம்; நின் பல குணங் களையும் புகழ்வேமாக—எ - று.

வழிபடுவோரை வல்லறிதி யென்றது, * அறிந்து அவர்களுக்கு அருள் செய்வை யென்பதாம்.

பெரிது (6) என்பது வினையெச்சக் குறிப்பாகலின், ஆகவென ஒரு சொல் வருவித்து உரைக்கப்பட்டது. பண்டையிற் பெரிது தணிதி யென்பதற்கு, நீ பண்டு செய்த கோபத்தினும் பெரிதாகத் தணிதி யென்றுரைப்பினும் அமையும். அடப்பட்டமையாத அமிழ்துபோலும் அடிசில் (7) என்றுரைப்பினும் அமையும்.

நெடியோய்! பல ஏத்துவேமாக எய்த வந்தனமெனக் கூட்டுக.

(கு - ரை.) 3 - 4. "முறையெனப் படுவது கண்ணோடா துயிர் வௌவல்" (கலித். 133 : 13); "எங்க ணினைய ரெனக்கருதி னேதமால், தங்கண்ண ராயினுந் தகவில கண்டக்கால், வன்கண்ண னாகி யொறுக்க வொறுக்கல்லா, மென்கண்ண னாளா னரசு" (பழமொழி, 322); "தண்டமாவது, அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தகவொறுத்தல்" (குறள், பரிமேல். உரைப்பாயிரம்).

5 - 6. "அஞ்சினர்க் களித்தலும்" (சிறுபாண். 210).

8. வாழ்க்கை : ஐங்குறுநூற்றின் முதற்பத்தால் விளங்கும்.

10. போகிய : "மக்கள் போகிய வணிலாடு முன்றில்" (குறுந். 41).

---

* 'அறிதி' என்றதற்கு இங்கே எழுதிய உரைநயம், "ஒருவாரண மழைப்ப நீயோவந் தேனென்றாய்" (கம்ப. விராதன். 49), "எங்கை மீரேனென்கிலீர்" (தக்க. 298), "என்னென்று னெங்கட் கிறை" (நள. காப்பு) என்பவற்றிலுள்ள 'ஏனென்றாய்', 'ஏனென்கிலீர்', 'என்னென் றான்' என்பவற்றிற்கு இன்னவாறு பொருள் செய்யவேண்டுமென்பதை நன்கு புலப்படுத்துகின்றது.

9 - 10. "சிலைத்தா ரகல மலைக்குந ருளரெனிற், றுமறி குவர்தமக் குறுதி யாமவன், எழுவுறழ் திணிதோள் வழுவின்று மலைந்தோர், வாழக் கண்டன்று மிலமே", "மலைப்பரு மகல மதியார் சிலைத்தெழுந்து" (புறநா. 61 : 14 - 7, 78 : 4); "வணங்குசிலை பொருதநின் மணங்கம ழகல, மகளிர்க் கல்லது மலைப்பறி யலையே" (பதிற். 63 : 4 - 5). "இளை யோர்க்கு மலர்ந்த மார்பினை" (சிறுபாண். 232, ந.) என்பதற்கும், "சோலைமயி லார்கடுணை வெம்முலைக டுஞ்சும், கோலவரைமார்பு" (சீவக. 283, ந.) என்பதற்கும் இவ்வடிகள் மேற்கோள்; "மள்ளர்... மார்ப; இது தாரடுத்தது" (தொல். புறத். சூ. 31, ந.).

11. செய்திரங்காவினை : "செய்துபின் னிரங்கா வினையொடு" (அகநா. 268 : 13); "எற்றென் றிரங்குவ செய்யற்க" (குறள், 655); "கற்றார்முற் றோன்றா கழிவிரக்கம்" (நான்மணிக். 10). "செய்திரங்கா வினையென இரங்கல் இசையேயன்றிப் பொருளது கழிவாகிய குறிப்பும் உணர்த்திற்று" (தொல். உரி. சூ. 63, சே.); "இரங்கல், இசையேயன்றி ஒரு பொருளது கழிவாற் பிறந்த வருத்தமாகிய குறிப்பும் உணர்த்தும்; 'செய்திரங்கா...புகழ்' என வரும்" (தொல். உரி. சூ. 61, ந.); "செய்து......புகழென இரங்கலென்னுமுரிச்சொல்......ஒரு பொருளது கழிவாற் பிறந்த வருத்தமாகிய குறிப்புப் பொருளுணர்த்தலும் பொருந்தும்" (இ. வி. சூ. 286, உரை). சேண்விளங்கும்புகழ் : "விண் பொரு புகழ்" (புறநா. 11 : 6); "சேணுறு நல்லிசைச் சேயிழை கணவ" (பதிற். 88 : 36); "கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை" (மதுரைக். 209).

12. நெய்தலங்கானனெடியோய் : அரசன் பெயர்க் காரணம் இதுவே. (௧௦)

(௧௧) அரிமயிர்த் திரண்முன்கை
வாலிழை மடமங்கையர்
வரிமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து
தண்பொருநைப் புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல்வஞ்சிப்
பாடல்சான்ற விறல்வேந்தனும்மே
வெப்புடைய வரண்கடந்து
துப்புறுவர் புறம்பெற்றிசினே
புறம்பெற்ற வயவேந்தன்
மறம்பாடிய பாடினியும்மே
ஏருடைய விழுக்கழஞ்சிற்
சீருடைய விழைபெற்றிசினே
இழைபெற்ற பாடினிக்குக்

குரல்புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே
எனவாங்
கொள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோவைப் பேய்மகள் இள வெயினி (பி - ம். இளவினி) பாடியது.

(இ - ள்.) ஐய மயிரையுடைய திரண்ட முன் கையினையும் தூய ஆபரணத்தையுமுடைய பேதை மகளிர் வண்டலிழைத்த சிற்றிற்கட் செய்த பாவைக்கு வளைந்த கோட்டுப்பூவைப் பறித்துக் குளிர்ந்த ஆன் பொருந்தத்து நீரின்கட் பாய்ந்து விளையாடும் வானைமுட்டிய புகழினை யும் வென்றியையுமுடைய கருவூரின்கட் பாடுதற்கமைந்த வெற்றியை யுடைய அரசனும், பகைதெறும் வெம்மையையுடைய அரணை அழித்து வலியோடு எதிர்ந்தவருடைய புறக்கொடையைப் பெற்றான்; அப்புறக் கொடையைப் பெற்ற வலிய அரசனது வீரத்தைப் பாடிய பாடினியும், தோற்றப் பொலிவுடைய சிறந்த பல கழஞ்சாற் செய்யப்பட்ட நன்மையையுடைய அணிகலத்தைப் பெற்றாள்; அவ்வணிகலத்தைப் பெற்ற விறலிக்கு முதற்றானமாகிய குரலிலே வந்து பொருந்தும் அளவை யுடைய பாட்டைவல்ல பாணனும், விளங்கிய தழலின்கண்ணே ஆக்கப் பட்ட பொற்றாமரையாகிய வெள்ளிநாராற் றொடுத்த பூவைப் பெற்றான்— எ - று.

பாடினி இழைபெற்றாள், பாணன் பூப்பெற்றான், யான் அது பெறு கின்றிலேனெனப் பரிசில்கடாநிலையாயிற்று; இனி, இவள் பேயா யிருக்கக் கட்புலனாயதோர் வடிவுகொண்டு பாடினா ளொருத்தி யெனவும், 'இக் களத்து வந்தோர் யாவரும் பரிசில் பெற்றார்கள்; ஈண்டு நின்னோடு எதிர்ந்து பட்டோரில்லாமையான், எனக்கு உண வாகிய தசை பெற்றிலேன்' எனத் தான் பேய்மகளானமை தோன்றப் பரிசில்கடாயினா ளெனவுங் கூறுவாரு முளர்.

'பாடினிக்கு...பாண்மகன்' என்பது, * அதுவெனுருபுகெடக் குகரம் வந்தது; உயர்திணையாகலின். † பாடினி பாடலுக்கேற்பக் கொளைவல் பாண்மகனெனினும் அமையும். எனவும், ஆங்கும் : அசை நிலை; பெற்றிசின் மூன்றும் படர்க்கைக்கண் வந்தன.

(கு - ரை.) 1. "அரிமுன்கை" (கலித். 147 : 36). அரியென்பது ஐம்மைப் பொருளில் வருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 59, இளம்.; சூ. 60, சே.; சூ. 58, ந.; இ. வி. சூ. 290, உரை. 'அரிமயிர் முன்கை' என்பது அழகு; நேமி. சொல். 59, உரை.

* தொல். வேற்றுமை மயங்கு. சூ. 11.
† "பாடினி, பாடின பாணிக் கேற்ப" (பொருந. 47 - 8).

5. "புல்லிலை வஞ்சிப் புறமதி லலைக்கும், கல்லென் பொருநை" (புறநா. 387 : 33 - 4).

2 - 5. "மணற், செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத், தண் கய மாடு மகளிர்" (புறநா. 243 : 1 - 3).

6. பொருவென்பது, பயவுவமைபற்றி வருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உவம. சூ. 14, பேர்.; இ. வி. சூ. 642, உரை.

7 - 9. சின்னென்பது பால்காட்டும் எழுத்தோடு அடுத்து வருமென்பதற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 26, பேர்.

11 - 3. தொல். எச்ச. சூ. 53, பேர். மேற்.

16. "அழல்புரிந்த வடர்தாமரை" (புறநா. 29 : 1).

15 - 7. எனவும் ஆங்கும் அசைநிலையாயின வென்பதற்கு மேற் கோள்; தொல். இடை. சூ. 47, தெய்வச்.

14 - 7. "இழைபெற்ற...பெற்றிசினே; இஃது, ஈற்றயலடி முச்சீர்த் நாகி வந்து செந்தூக்கியற்றுகி இற்ற வஞ்சிப்பா" (தொல். செய். சூ. 71, பேர்.).

11 - 7. பாடினி இழைபெறுதல், பாணன் பொற்றாமரை பெறுதல் : (கலித். 54 : 2, 85 : 2; புறநா. 12 : 1, 29 : 1 - 5, 69 : 4 - 21, 126 : 1 - 3, 319 : 9 - 15, 364 : 1 - 3); "எரியகைந் தன்ன வேடி ருமரை, சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி, நூலின் வலவா நுணங்கரின் மாலை, வாலொளி முத்தமொடு பாடினி யணிய" (பொருந. 159 - 62), "தலைவன் ருமரை மலைய விறலியர், சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய" (மலைபடு. 569 – 70).

மு. "மகிழ்செய்தற்கட் காமம் நறவினும் சிறந்ததே யெனினும் இவள் குறிப்பு ஆராய்ந்தறியாமையின் யானது பெற்றிலேனெனக் குறிப்பெச்சம் வருவித்துரைக்க, 'அரிமயிர்த்திரண்முன்கை' என்னும் புறப்பாட்டிற் குறிப்புப்போல" (குறள், 1090, பரிமேல்.). (கக)

(கஉ) பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிது விறன்மாண் குடுமி
இன்னா வாகப் பிறர்மண்கொண்
5 டினிய செய்திநின் னார்வலர் முகத்தே.

திணை - அது; துறை - இயன்மொழி.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டி மையார் பாடியது.

(இ - ள்.) பாணர் பொற்றாமரைப் பூவைச் சூடவும், புலவர் பட்டம் பொலிந்த மத்தகத்தையுடைய யானையுடனே அலங்கரிக்கப் பட்ட தேரினை ஏறுதற்கேற்ப அமைக்கவும், அறனோ இவ்வாறு செய்தல்? வென்றி மாட்சிமைப்பட்ட குடுமி! வேற்றரசருடைய நிலத்தை அவர்க்கு இன்னாவாகக் கொண்டு நின்னுடைய பரிசில ரிடத்து இனியவற்றைச் செய்வை—எ - று.

குடுமி! பிறர்மண் இன்னாவாகக்கொண்டு, மலையவும் பண்ணவும் நின் ஆர்வலர் முகத்து இனிய செய்வை; இது நினக்கு அறனோ? சொல்லுவாயாக வெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

மற்று : அசைநிலை.

இது பழித்ததுபோலப் புகழ்ந்ததாகக் கொள்க.

(கு - ரை.) 1. இந்நூல், 11 - ஆம் பாட்டின் 11 - 7 - ஆம் அடிகளின் குறிப்பைப் பார்க்க.

3 - 5. "அறனோ...முகத்தே...இவை சொல்லுவான் குறிப்பினாற் பொருளறிய வந்தன" (நன். மயிலை. சூ. 268; நன். வி. சூ. 269).

மு. இச்செய்யுள், கொடுத்தலெய்திய கொடைமைக்கு மேற் கோள்; தொல். புறத்திணை. சூ. 7, இளம். (கஉ)

(கங) இவனியா ரென்குவை யாயி னிவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீ னாப்பட் டிங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதி லம்ம
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே.

திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்தியல்.

சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி கருவூரிடஞ் செல்வா னைக் கண்டு சேரமான் அந்துவஞ்சேர லிரும்பொறையொடு * வேண் மாடத்து மேலிருந்து உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

* "வேளா விக்கோ மாளிகை காட்டி" (சிலப். 28 : 198).

(இ - ள்.) இவன் யாரென்று வினவுவாயாயின், இவன்றான், புலியி னது தோலாற் செய்யப்பட்ட மெய்புகு கருவி பொலிந்த கொளுத்தற எய்த அம்புகள் போழப்பட்ட பரந்துயர்ந்த மார்பினையுடைய கூற்றம் போன்ற களிற்றின் மேலோன்; இக்களிறுதான், கடலின்கண்ணே இயங்கும் மரக்கலத்தை யொப்பவும் பல மீனினது நடுவே செல்லும் மதியத்தை யொப்பவும் சுறவினத்தையொத்த வாண்மறவர் சூழத் தன்னை மருவிய பாகரை யறியாது மதம்பட்டது; இவன் நோயின்றிப் பெயர்வானாக; வயலிடத்து மயிலுதிர்த்த பீலியை ஆண்டுள்ள உழவர் நெற்சூட்டுடனே திரட்டும் கொழுவிய மீனையும் விளைந்த கள்ளையு முடைய மிக்க நீராகிய வேலியையுடைய நாட்டையுடையோன்— எ - று.

களிற்றுமிசையோனாகிய இவன் யாரென்குவையாயின், நாடு கிழவோன்; இவன் களிறு மதம்பட்டது; அதனால், இவன் நோயின்றிப் பெயர்க வெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

களிற்றுக்கு நாவாயோடு உவமை எதிர்ப்படையைக் கிழித் தோடலும், திங்களோடு உவமை வாளோர் சூழத் தன் தலைமை தோன்றச் செல்லுதலுமாகக் கொள்க.

தில் : விழைவின்கண் நின்றது.

பெருநற்கிள்ளி களிறு கையிகந்து பகையகத்துப் புகுந்தமையான் அவற்குத் தீங்குறுமென்று அஞ்சி வாழ்த்தினமையால், இது வாழ்த்திய லாயிற்று; இவற்குத் தீங்குறின் நமக்குத் தீங்குறுமென்னுங் கருத் தால் நோயிலனாகிப் பெயர்க வென்றாராயின், வாழ்த்தியலாகாது; துறை, பாட்டுடையானது என்றுணர்க.

(கு - ரை.) "இவன் யார்...இவனேயென்னும் புறப்பாட்டினுட் சேரனை முன்னிலையாக்கி முடமோசியார் கூறுகின்ற காலத்து இவனென்பது முன்னிலைப் படர்க்கையாய் நின்றது" (தொல். எச்ச. சூ. 68, ந.); "இவன் யார்...இவனேயென்னும் புறப்பாட்டினுள் இவனென்பது முன்னிலைப் படர்க்கையாய் நிற்றலும் இன்னோரன்ன பிறவும் இப்புறனடையானே அமைத்துக்கொள்க" (இ. வி. சூ. 372, உரை).

2. "புலிப்பொறிப் போர்வை நீக்கி" (சீவக. 266).

3. எழில் - எழுச்சி; "நுண்மா ணுழைபுல மில்லா னெழில்" (குறள், 407).

2 - 4. "தன்மையென்பது சாதியியல்பு; பார்ப்பார் அரசர் இடை யர் குறவரென்று இன்னோர் மாட்டு ஒருவரையொருவர் ஒவ்வாமற் கிடக்கும் இயல்பு; அது மெய்த்தன்மையின்கண் வேறுபட்டு வருதலின் மெய்ப்பாடாயிற்று;...'புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய...களிற்று மிசையோனே' எனவும்...வரும்" (தொல். மெய்ப். சூ. 12, இளம்.).

5. களிற்றிற்கு நாவாயுவமை : கலித். 132 : 5 - 7; "நளிகட லிருங் குட்டத்து, வளிபுடைத்த கலம்போலக், களிறு சென்று களனகற்றவும்"

(புறநா. 26 : 1 - 3); "வீங்கு நோன்கயிறு...கடாஅயானையும்" (மதுரைக். 376 - 83); "நீயா னடுங்க...கால வேகங் களிமயக் குற்றென" (மணி. 4 : 29 - 44).

6. புறநா. 396 : 25 - 7; பதிற். 90 : 17 - 8.

7. "எறிசுற விளையவர்", "கோட்டுமீன் குழாத்தின் மள்ள ரீண்டினர்", "தூத்திரட் சுருவினந் தொக்கபோன் மறவரும்" (சீவக. 1446, 1845, 2325). பல பொருளோடு பல பொருள்கள் உவமையாய் வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; இ. வி. சூ. 639, உரை.

5 - 8. பல பொருளோடு பல பொருள் உவமையாய் வந்ததற்கு மேற்கோள்; தண்டி. சூ. 30, உரை.

11. சூடு - நெல்லரி; "சூடுகோ டாகப் பிறக்கி" (பொருந. 243).

10 - 11. "எல்வளை மகளிர் தெள்விளி யிசைப்பிற், பழனக் காவிற் பசுமயி லாலும்", "கழனி யுழவர் தண்ணுமை யிசைப்பிற், பழன மஞ்ஞை மழைசெத் தாலும்" (பதிற். 27 : 7 - 8, 90 : 41 - 2).

12. கொழுமீன் : ஒரு சாதிமீன்; திருச்சிற். 188, பேர்.

13. நாடுகிழவோன் : "காவிரி புரக்கு நாடுகிழ வோனே" (பொருந. 248.) (கங)

(கச) *கடுங்கண்ண கொல்களிற்றாற்
காப்புடைய வெழுமுருக்கிப்
பொன்னியற் புனைதோட்டியான்
முன்புதுரந்து சமந்தாங்கவும்
பாருடைத்த குண்டகழி
நீரழுவ நிவப்புக்குறித்து
நிமிர்பரிய மாதாங்கவும்
ஆவஞ் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாவ நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
பரிசிலர்க் கருங்கல நல்கவுங் குரிசில்
வலிய வாகுநின் றாடோய் தடக்கை
புலவுநாற் றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ யூன்றுவை
கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது

---

* "கடுங்கண்ண கொல்களிற்றால் என்னும் புறப்பாட்டுள் படைக் கலங்கூறியவதனாற் காத்தல் கூறியவாறுங் காண்க" (தொல். புறத் திணை. சூ. 16, இளம்.; சூ. 20, ந.).

பிறிதுதொழி லறியா வாகலி னன்றும்
மெல்லிய பெரும தாமே நல்லவர்க்
காரணங் காகிய மார்பிற் பொருநர்க்
கிருநிலத் தன்ன நோன்மைச்
செருமிகு சேஎய்நிற் பாடுநர் கையே.

(பி - ம்.) 9 'சாப'

திணை - அது; துறை - இயன்மொழி.

சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் கபிலர் கைப்பற்றி, 'மெல்லியவாமால் நுங்கை' எனக் கபிலர் பாடியது.

(இ - ள்.) வன்கண்மையை உடைய கொலையானையாலே காவலையுடைய * கணையமரத்தை முறித்து இரும்பாற் செய்யப்பட்ட அழகு செய்த அங்குசத்தால் முன்னர்க் கடாவி அது செய்யும் வினையைப் பின் வேண்டுமளவிலே பிடிக்கவும், வலிய நிலத்தைக் குந்தாலியால் இடித்துச் செய்த குழிந்த கிடங்கின்கண் நீர்ப்பரப்பினது ஆழமாகிய உயர்ச்சியைக் கருதி அதன்கட் செல்லாமல் மிகைத்த செலவினையுடைய குதிரையைக் குசை தாங்கி வேண்டுமளவிலே பிடிக்கவும், அம்பருத்தூணி பொருந்திய முதுகையுடையையாய்த் தேர்மேலே நின்று வில்லினது வலிய நாணாற் பிறந்த வடுப் பொருந்தும்படி அம்பைச் செலுத்தவும், பரிசிலர்க்குப் பெறுதற்கரிய அணிகலங்களை அளிக்கவும், தலைவ! வலியவாகும் நின் முழந்தாளைப் பொருந்திய பெரிய கைகள்; புலாலுநாற்றத்தை யுடையவாகிய செவ்வித் தடியைப் பூநாற்றத்தவாகிய புகையைக் கொளுத்தி அமைத்த ஊனையும் துவையையும் கறியையும் சோற்றையும் உண்டு வருந்துஞ் செயலல்லது வேறு செயலறியாவாகலான், அவைதாம் பெரிதும் மெல்லியவாயின; பெரும! பெண்டிர்கட்கு ஆற்றுதற்கரிய வருத்தமாகிய மார்பினையும் பொருவார்க்குத் துளக்கப்படாமையிற் பெரிய நிலம்போன்ற வலியினையும் உடைய, போரின்கண்ணே மிக்க சேயையொப்பாய்! நின்னைப் பாடுவாருடைய கைகள்—எ - று.

கொளீஇ (13) என்னுமெச்சம் அமைத்த வென்னும் ஒரு சொல் வருவித்து முடிக்கப்பட்டது; கொளுத்த வெனத் திரித்து, அவ்வூனென ஒரு சுட்டு வருவித்து அதனோடு முடிப்பினும் அமையும்.

உண்டு (14) என்பது பொதுவினை யன்றேனும் கறி யொழிந்தவற்றிற்கெல்லாம் சேறலின், பன்மைபற்றி அமைத்துக்கொள்ளப்படும். ஊன் துவை கறியொடுகூடிய சோற்றை உண்டெனை உரைப்பினும் அமையும்; இதனைப் பொதுவினையென்று உரைப்பாருமுளர்.

---

* கணையமரம் - கதவின் உட்புறத்தே குறுக்காகப் போடப்படும் மரம்; "முழுவிறற் கணையம்" (சிலப். 15 : 215, அடியார்.).

குரிசில்! பெரும! சேஎய்! வலியவாகும் நின் கை; நிற்பாடுநர் கைதாம் மெல்லியவாகு மெனக் கூட்டுக.

இனி, மாதாங்கவும் (7) என்பதற்கு அகழியைக் கடக்கப் பாய்தற்குக் குதிரைக்குசையைத் தாங்கி எடுத்துவிடவு மென்றுரைப்பாருமுளர்.

பாடுநர் (19) எனத் தம்மைப் படர்க்கையாகக் கூறினர்.

தம் கையின் மென்மையது இயல்பு கூறுவார், அரசன் கையின் வலிய இயல்பும் கூறினமையான், இஃது இயன்மொழியாயிற்று.

(கு - ரை.) 1. "கடுஞ்சினத்த கொல்களிறும்" (புறநா. 55 : 7); "கடாஅஞ் சென்னிய கடுங்கண் யானை" (பதிற். 25 : 2); "கடுஞ் சினத்த களிறு" (மதுரைக். 179).

3. "விளங்குபொன் னெறிந்த நலங்கிளர் பலகை" (புறநா. 15 : 12); "மின்னுந் தமனியமும் வெற்றிரும்பு மொன்ருகப், பொன்னென் பெயர்படைத்தாற் போலுமே" (பெரும்பொருள் விளக்கம்).

8 - 9. இது, படையடுத்ததற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 31, ந.

11. "தாட்டாழ் தடக்கைத் தனிமதி வெண்குடையான்" (பு. வெ. 52).

10 - 11. இவ்வடிகள், ஆக்கக்கிளவி காரணம் பெற்று வந்தமைக்கு மேற்கோள்; தொல். கிளவி. சூ. 22, சே.

8 - 11. "மாண்வினைச் சாப மார்புற வாங்கி, ஞாண்பொர விளங்கிய வலிகெழு தடக்கை" (பதிற். 90 : 33 - 4) என்பதையும் அதன் உரையையும் பார்க்க.

13 - 4. "மற்று, ஊன்றுவை கறிசோறுண்டு வருந்துமென வந்ததால் எனின், அது பாடமறிந்து திருத்திக்கொள்க" (தொல். கிளவி. சூ. 46, இளம்.); "அஃதேல், ஊன்றுவை... அல்லது என்புழி உண்டென்பது ஒன்றற்கே உரிய வினையாகலின் வழுவாம் பிறவெனின், உண்டலென்பது உண்பன தின்பன எனப் பிரித்துக் கூறும்வழிச் சிறப்புவினையாம்; பசிப்பிணி தீர நுகரப்படும் பொருளெல்லாம் உணவெனப்படுமாகலிற் பொதுவினையுமாம்: அதனுன் அது வழுவன்றென்பது" (தொல். கிளவி. சூ. 47, சே.; இ. வி. சூ. 319, உரை); "ஊன்றுவை......அல்ல தென்புழி நுகரப்படும் பொருள் எல்லாவற்றிற்கும் உண்டற்றெழில் வந்தவாறு காண்க" (தொல். கிளவி. சூ. 47, ந.); உண்டல் பொதுவினை யென்பதற்கு மேற்கோள் (தொல். கிளவி. சூ. 42, தெய்வச்.); பல பொருள் விரவின, சிறப்பினுல் ஒன்றற்கேற்ற வினைகொண்டதென்பதற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 377.

19. "செருமிகு சேஎயொ டுற்ற சூளே" (அகநா. 266 : 21). (கச)

(கரு) கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்
புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத்
தேர்வழங் கினைநின் றெவ்வர் தேஎத்துத்
துளங்கியலாற் பணையெருத்திற்
பாவடியாற் செறனோக்கின்
ஒளிறுமருப்பிற் களிறவர
காப்புடைய கயம்படியினை
அன்ன சீற்றத் தனையை யாகலின்
விளங்குபொன் னெறிந்த நலங்கிளர் பலகையொடு
நிழல்படு நெடுவே லேந்தி யொன்னார்
ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்
நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையில்
நற்பனுவ னால்வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்
யாபல கொல்லோ பெரும வாருற்று
விசிபிணிக் கொண்ட மண்கனை முழவிற்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினோய் நினக்கே.

(பி - ம்) 2 'பேழ்வாய்க்'

திணையும் துறையும் அவை.

* பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

(இ - ள்.) விரைந்த தேர் குழித்த தெருவின்கண்ணே வெளிய வாயையுடைய கழுதையாகிய புல்லிய நிரையைப் பூட்டி உழுது பாழ்படுத்தினை அவருடைய அகலிய இடத்தையுடைய நல்ல அரண்களை;

---

* இப்பாட்டின் 20 - 21 - ஆம் அடிகளால் தலைவனுடைய பெயர்க் காரணம் புலப்படுகின்றது.

புள்ளினங்கள் ஒலிக்கும் புகழமைந்த விளைகழனிக்கண்ணே வெளிய தலையாட்டம் அணிந்த மனஞ்செருக்கிய குதிரையினுடைய கவிந்த குளம்புகள் தாவத் தேரைச் செலுத்தினை நின்னுடைய பகைவர் தேயத்துக்கண்; அசைந்த தன்மையோடு பெரிய கழுத்தினையும் பரந்த அடியோடு வெகுட்சி பொருந்திய பார்வையினையும் விளங்கிய கோட்டினையுமுடைய களிற்றை அப் பகைவருடையனவாகிய காவலையுடைய வாவிக்கட் படிவித்தனை; அப்பெற்றிப்பட்ட சினத்துடனே அதற்கேற்ற செய்கையையுடையை; ஆதலான், விளங்கிய இரும்பாற் செய்யப்பட்ட ஆணியும் பட்டமும் அறைந்த அழகு மிக்க பலகையுடனே நிழலுண்டாகிய நெடிய வேலை எடுத்துப் பகைவர் ஒள்ளிய படைக்கலங்களை யுடைய நினது விரைந்த தூசிப்படையின் வலியைக் கெடுத்தல்வேண்டித் தம் ஆசை கொடுவர வந்தோர் அவ்வாசை பின் ஒழிய வசையுண்டாக உயிர்வாழ்ந்தோர் பலரோ? குற்றமில்லாத நல்ல தருமநூலினும் நால்வகைப்பட்ட வேதத்தினுஞ் சொல்லப்பட்ட எய்தற்கரிய மிக்க புகழையுடைய சமிதையும் பொரியும் முதலாகிய பெரிய கண்ணுறையோடு நெய்மிக்க புகை மேன்மேற் கிளரப் பல மாட்சிமைப்பட்ட கெடாத தலைமையையுடைய யாகங்களை முடித்துத் தூண் நடப்பட்ட அகன்ற வேள்விச்சாலைகள்பலவோ? இவற்றுள், யாவையோ பல? பெரும! வார்பொருந்தி வலித்துக் கட்டுதலைப் பொருந்திய மார்ச்சனை செறிந்த தண்ணுமையையுடைய விறலி பாடும் மேற்செலவிற்கு ஏற்ப, ஆராய்தலமைந்த வலியையுடையோய்! நினக்கு—எ - று.

பூட்டி (2) என்னும் வினையெச்சத்திற்கு உழுதென்னுஞ்சொல் தந்துரைக்கப்பட்டது. நற்பனுவலாகிய நால்வேதம் (17) என்பாருமுளர். நற்பனுவல் நால்வேதத்து வேள்வியென இயையும்.

பெரும! மைந்தினோய்! பாழ்செய்தனை; தேர் வழங்கினை; கயம் படியினை; ஆகலின், நினக்கு ஒன்றாகிய வசைபட வாழ்ந்தோர் பலர்கொல்? யூபம் நட்ட வியன்களம் பலகொல்? இவற்றுள், யா பலகொல்லோ எனக் கூட்டி வினைமுடிவு செய்க.

விளங்கு பொன்னெறிந்த (12) என்பதற்குக் கண்ணுடி தைத்த எனினும் அமையும். தார் முன்பு தலைக்கொண்மார் (14) என்பதற்குத் தாரை வலியால் தலைப்படவெனினும் அமையும்.

புரையுநற் பனுவல் (16 - 7) என்பதூஉம் பாடம்.

யா பலவென இவ்விரண்டின் பெருமையும் கூறியவாறு.

இவை எப்பொழுதுஞ் செய்தல் இயல்பெனக் கூறினமையின், இஃது இயன்மொழியாயிற்று.

(கு - ரை.) 1. மு. அகநா. 326 : 4; பெரும்பாண். 397. கடியென்னும் உரிச்சொல் விரைவுப் பொருளை உணர்த்துமென்பதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 85, ந.; இ. வி. சூ. 282, உரை.

1 - 3. பகைவர் மதிலையழித்துக் கழுதையேரால் உழுது வெள்ளை வரகும் கொள்ளும் வித்துதல் மரபு; புறநா. 392 : 9 - 11; "எழுதெழின் மாடத் திடனெலா நூறிக், கழுதையேர் கையொளிர்வேல் கோலா-உழுததற்பின், வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதாற், கள்விரவு தாரான் கதம்" (பு. வெ. 120); "வடதிசை மன்னர் மன்னெயின் முருக்கிக், கவடி வித்திய கழுதையே ருழவன்" (சிலப். 27 : 225 - 6);"இடித்து வெளி செய்துநக ரெங்கணு நுழைந்தாங், கடுத்தமட வார்வயி றலைத்தன ரிரங்கக், கொடுத்திடு வளங்கள்பல கொள்ளைகொடு மண்ணின், எடுத்துவரு வெள்வரகு கொள்ளுட னிறைத்து" (காஞ்சிப். நாடு. 28). இவ்வடிகளை மக்கட்பாடாண்டிணைக்குரிய துறையாகிய மண்ணுமங்கலத்திற்கு உதாரணமாகக் காட்டுவர்; தொல். புறத்திணை. சூ, 36, ந.

3 - 5. புறநா. 16 : 1 - 4.

8 - 10. புறநா. 16 : 6, 23 : 1 - 2.

12. புறநா. 14 : 3.

14. கொண்மார் : முருகு. 173.

15.'பிறக்கு'என்பது அசைநிலையாக வருமென்பதற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 30, தெய்வச்.; சூ. 31, ந.; இ. வி. சூ. 277, உரை.

18. கண்ணுறை : புறநா. 61 : 5, 140 : 4.

19 - 20. புறநா. 166 : 22 - 3.

1 - 21. " 'கடுந்தேர்.........எயில்' என எயிலழித்தவாறு கூறி, 'வீயாச்சிறப்பின்.......நாட்டி' எனவே ஒருவாற்றுன் மண்ணியவாறுங் கூறியவாறு காண்க" (தொல். புறத்திணை. சூ. 36, ந.)

22. "காழி லாவறு பத்துநான் கெனுங்கலை யானும், வாழி வென்றுவென் றலைகடல் வரைப்பெலா நாட்டும், கேழில் வாகைய மதிலையுங் கிளர்மறை முறையான், வேழ்வி யாற்றிய யூபமும் விறந்தன வனேகம்" (காஞ்சிப். நகரேற்றுப். 183).

15 - 22. சிறப்பினுன் அஃறிணைமுடிபேற்றதற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 377; நன். வி. சூ. 378; இ. வி. சூ. 298, உரை.

24. புறநா. 33 : 10. (கரு)

(கசு) வினைமாட்சிய விரைபுரவியொடு
மழையுருவின தோல்பரப்பி
முனைமுருங்கத் தலைச்சென்றவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
எல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்றப்

புலங்கெட விறுக்கும் வரம்பி றானைத்
துணைவேண்டாச் செருவென்றிப்
புலவுவாட் புலர்சாந்தின்
முருகற் சீற்றத் துருகெழு குருசில்
மயங்குவள்ளை மலராம்பற்
பனிப்பகன்றைக் கனிப்பாகற்
கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நன்னா டொள்ளெரி யூட்டினை
நாம நல்லமர் செய்ய
ஓராங்கு மலைந்தன பெருமநின் களிறே.

திணை - வஞ்சி; துறை - மழபுலவஞ்சி.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாண்டரங் கண்ணனார் பாடியது.

(இ - ள்.) போரிற்கு நன்மையை யுடையவாகிய விரைந்த குதிரை யுடனே முகில்போலும் நிறத்தையுடைய பரிசையைப் பரப்பி, முனை யிடங் கலங்க மேற்சென்று, அவரது நெல்விளை கழனியைக் கொள்ளை யூட்டி, மனையிடத்து மரமே விறகாகக் காவற்பொய்கைகளின் நீரிலே களிற்றைப் படிவித்து, விளக்கமுண்டாக இடப்பட்ட நாடு சுடுநெருப் பினது ஒளிதான் விடுகின்ற கதிரையுடைய ஞாயிற்றினது செக்கர் நிறம் போலத் தோன்ற இடமில்லையாகச் சென்று விடும் எல்லை யில்லாத படையினையும், துணைப்படை வேண்டாத போர் வெற்றி யினையும், புலால் நாறும் வாளினையும், பூசிப் புலர்ந்த சாந்தினையும், முருகனது வெகுட்சிபோலும் வெகுட்சியினையுமுடைய உட்குப் பொருந்திய தலைவ! ஒன்றோடொன்று கலந்த வள்ளையையும் மலர்ந்த ஆம்பலையும் குளிர்ச்சியையுடைய பகன்றையையும் பழத்தையுடைய பாகலையும் உடைத்தாகிய கரும்பல்லது பிறிது காடறியாத பெரிய மருதம் பாழாகக் காவலையுடைய நல்ல நாட்டை ஒள்ளிய தீயை ஊட்டி அஞ்சத்தக்க நல்ல போரைச் செய்ய, நின் கருத்திற்கேற்ப ஒரு பெற்றிப்படப் பொருதன, பெரும! நின்னுடைய களிறுகள்—எ - று.

தோல்பரப்பி (2) என்பது முதலாகிய வினையெச்சங்களை இறுக்கும் (9) என்னும் பெயரெச்ச வினையொடு முடித்து, அதனைத் தானை (9) என்னும் பெயரோடு முடிக்க. பாகல் (14) தண்பணை (16) என இயை யும். எல்லுப்பட இட்ட சுடுதீ (7) என்றதனைத் தானைக்கு அடையாக்குக.

கவர்பூட்டி (4) என்பதற்கு விரும்பிக் கொள்ளையூட்டி யெனவும், புலங்கெட (9) என்பதற்கு நாடழிய வெனவும், புலவுவாள் (11) என்ப தற்குப் புலாலுடைய வாளெனவும் உரைப்பினும் அமையும்.

குருசில்! பெரும! நீ அமர் செய்ய, நின் களிறு ஓராங்கு மலைந்தன வன வினைமுடிவு செய்க.

பாகல் : பலாவென்று உரைப்பாருமுளர்.

ஏம நன்றுடு ஒள்ளெரியூட்டி யென்றதனால், இது மழபுலவஞ்சி யாயிற்று.

(கு - ரை.) 2. கேடகத்திற்கு மேகம் உவமை : புறநா. 17 : 34; "மன்ன ரெயிலூர் பஃறேரல் போலச், சென்மழை" (நற். 197 : 10-12); "மழையென மருளு மாயிரும் பஃறேரல்" (பதிற். 62 : 2); "மழைமருள் பஃறேரல்" (மலைபடு. 377).

4. புறநா. 57 : 6. 6. புறநா. 15 : 8 - 10.

10. "கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ" (கம்ப. வாலி வதை. 81); "துணைவேண்டாச் செருவென்றி நாடகவழக்கு" (தொல். புறத்திணை. சூ. 8, ந).

9 - 10. "மன்னர், உவப்ப வழிபட் டொழுகினுஞ் செல்வம், தொகற்பால போழ்தே தொகும்" (பழ. 120); "ஊக்க முரண்மிகுதி யொன்றிய நற் சூழ்ச்சி, யாக்க மவன்க ணகலாவால் - வீக்க, நகப்படா வென்றி நலமிகு தாராற், ககப்படா வில்லை யரண்" (பு. வெ. 100).

12. மு. பொருந. 131; "முருக னன்ன சீற்றத்து" (அகநா. 158).

14. பகன்றை - சிவதை; குறிஞ்சிப். 88; ஐங்குறு, 456; கலித். 73.

15 - 6. "கரும்பலாற் காடொன் றில்லாக் கழனி" (சீவக. 2902).

16 - 7. புறநா. 6 : 21 - 2, 7 : 7 - 8, 23 : 10 - 11; "இழிபறியாப் பெருந்தண்பணை, குரூஉக்கொடிய வெரிமேய, நாடெனும்பேர் காடாக...பாழா யினநின் பகைவர் தேஎம்" (மதுரைக். 154 - 76); கலித். 13 : 1 - 2.

இப்பாட்டினை, எரிபரந்தெடுத்தலென்னும் துறைக்கு உதாரண மாகக் காட்டுவர்; தொல். புறத்திணை. சூ. 7, இளம்.; சூ. 8, ந. (கசு)

(கள) தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லை
குன்றுமலை காடுநா
டொன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோறிருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல
குலையிறைஞ்சிய கோட்டாழை
அகல்வயன் மலைவேலி

நிலவுமணல் வியன்கானற்
றெண்கழிமிசைச் சுடர்ப்பூவிற்
றண்டொண்டியோ ரடுபொருந
மாப்பயம்பின் பொறைபோற்றாது
நீடுகுழி யகப்பட்ட
பீடுடைய வெறுழ்முன்பிற்
கோடுமுற்றிய கொல்களிறு
நிலைகலங்கக் குழிகொன்று
கிளைபுகலத் தலைக்கூடியாங்கு
நீபட்ட வருமுன்பிற்
பெருந்தளர்ச்சி பலருவப்பப்
பிறிதுசென்று மலர்தாயத்துப்
பலர்நாப்பண் மீக்கூறலின்
உண்டாகிய வுயர்மண்ணும்
சென்றுபட்ட விழுக்கலனும்
பெறல்கூடு மிவனெஞ் சுறப்பெறி னெனவும்
ஏந்துகொடி யிறைப்புரிசை
வீங்குசிறை வியலருப்பம்
இழந்துவைகுது மினிநாமிவன்
உடன்றுநோக்கினன் பெரிதெனவும்
வேற்றரசு பணிதொடங்குநின்
ஆற்றலொடு புகழேத்திக்
காண்கு வந்திசிற் பெரும வீண்டிய
மழையென மருளும் பஃறோல் மலையெனத்
தேனிறை கொள்ளு மிரும்பல் யானை
உடலுந ருட்க வீங்கிக் கடலென
வானீர்க் கூக்குந் தானை யானது
கடுவொடுங் கெயிற்ற வரவுத்தலை பனிப்ப
இடியென முழங்கு முரசின்
வரையா வீகைக் குடவர் கோவே.

(பி - ம்.) 9 'காய்த்தாழை' 12 'றென்கழிமிசைத் தீப்பூவின்'
திணை - வாகை; துறை - அரசவாகை; இயன்மொழியுமாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய ஞற் பிணியிருந்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை வலிதிற் போய்க் கட்டிலெய்திஞனைக் குறுங்கோழியூர் (பி - ம். குறுங்கோளியூர்) கிழார் பாடியது.

(இ - ள்.) தென்றிசைக்கட் கன்னியும் வடதிசைக்கண் இமயமும் கீழ்த்திசைக்கண்ணும் மேற்றிசைக்கண்ணும் கடலும் எல்லையாக நடுவு பட்ட நிலத்துக் குன்றும் மலையும் காடும் நாடும் என இவற்றையுடை யோர் ஒரு பெற்றிப்பட்டு வழிபாடு கூறத் தீத்தொழிலைப் போக்கிக் கோலைச் செவ்விதாக்கி ஆறிலொன்ருகிய இறையை உண்டு நடுவு நிலைமையைச் செய்து தடையின்ருக உருண்ட ஒளியையுடைய ஃக்கரத்தால் நில முழுதையும் ஆண்டோரது மரபைக் காத்தவனே! குலைதாழ்ந்த கோட்புக்க தெங்கினையும் அகன்ற கழனியையும் மலை யாகிய வேலியையும் நிலாப்போன்ற மணலையுடைய அகன்ற கடற் கரையையும் தெளிந்த கழியிடத்துத் தீப்போலும் பூவினையும் உடைய குளிர்ந்த தொண்டியிலுள்ளோருடைய அடுபொருந! யானை படுக்குங் குழிமேற் பாவின பாவைத் தன் மனச் செருக்காற் பாதுகாவாது ஆழத்தால் நெடிய குழியின்கண்ணே அகப்பட்ட பெருமையையுடைத் தாகிய மிக்க வலியையுடைய கொம்பு முதிர்ந்த கொல்லுங்களிறு அதன் நிலைசரியக் குழியைத் தூர்த்துத் தன்னினம் விரும்பத் தன்னினத் திலே சென்று பொருந்திஞற்போல, பொறுத்தற்கரிய வலியாற் பகையை மதியாது நீயுற்ற பெரிய தளர்ச்சி நீங்கப் பிறிதொரு சூழ்ச்சி யாற் போய்ப் பலரும் மகிழப் பரந்த உரிமையையுடைய இடத்தின் நின் சுற்றத்தார் பலர்க்கு நடுவே உயர்த்துச் சொல்லப்படுதலால், நீ செழியஞற் பிணிப்புண்பதற்கு முன்பு நின்ஞல் அழிக்கப்பட்டுப் பின்பு தம்மரசு வெளவாது நின் வரவு பார்த்திருந்த அரசர் நமதாய் இவஞற் கொள்ளப்பட்டு உண்டு அடிப்பட்டுப் போந்த மேம்பட்ட நிலமும் இவன்பாற் சென்றுற்ற சீரிய அணிகலமும் கிடைத்த லுண்டாம், இவனது நெஞ்சு நமக்கு உரித்தாகப் பெறினென நினைந்தும், நின் வரவு பார்த்திராது தம்மரசு வெளவிய பகைவர் எடுத்த கொடியையுடைய உயர்ந்த மதிலையும் மிக்க காடும் அகழும் முதலாய காவலையுடைய அகலிய அரணினையும் நாம் இனி இழந்து தங்குவேம், இவன் நம்மை வெகுண்டு பார்த்தான் மிகவென நினைந்தும் பகைவேந்தர் ஏவல் செய்யத் தொடங்குதற்குக் காரணமாகிய நினது வலியுடனே புகழை வாழ்த்திக் காண்பேஞக வந்தேன்; பெரும! திரண்ட முகிலெனக் கருதி மயங்கும் பல பரிசைப் படையினையும், மலையென்று கருதித் தேனினம் தங்கும் பெரிய பல யானையினையும், மாறுபடுவோர் அஞ்சும்படி பெருத்தலாற் (பி - ம். அஞ்சும்படி பொருதலாற்) கடலெனக் கருதி மேகம் நீர்முகக்க மேற்கொள்ளும் படையினையும், அமையாது நஞ்சுகரக்கும் பல்லினையுடையவாகிய பாம்பினது தலை நடுங்கும் பரிசு இடியென்று கருத முழங்கும் முரசினையும், எல்லார்க்கும்

எப்பொருளும் வரையாது கொடுக்கும் வண்மையையும் உடைய குடநாட்டார் வேந்தே!—எ - று.

காவல! (8) பொருந! (13) பெரும! (33) கோவே! (40) ஏத்திக் காண்கு வந்தேனெனக் (32 - 3) கூட்டி வினைமுடிவு செய்க.

குன்று (3) என்றது சிறுமலைகளை; அன்றி, மணற்குன்றென்று நெய்தல் நிலமாக்கி ஏனை மூன்றொடுங் கூட்டி, நானிலத்தோருமென்று உரைப்பாரு முளர்.

அடுபொருந (13) என்றது, வேந்தற்கு வெளிப்படையாய் நின்றது.

தளர்ச்சி (21) என்பதன்பின் நீங்கவென ஒரு சொல் தந்தது.

'அருமுன்பிற்...பிறிதுசென்று' (20-22) என்பதற்கு முன்போலவே தளர்ச்சி பிறிதாகப் பலருவப்பச் சென்று எனினும் அமையும்; அன்றி முன்பின் தளர்ச்சி பிறிதாகச் சென்றென்று உரைப்பாரு முளர்.

ஆனுது முழங்கும் முரசென்க.

(கு - ரை.) 1. செய்யுளில் இனமில்லாத இடப்பெயர் அடையடுத்து வந்ததற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 400.

1 - 2. புறநா. 6 : 1 - 4.

1 - 4. "தென்குமரி வடபெருங்கல், குணகுடகட லாவெல்லைத்; தொன்று மொழிந்து தொழில் கேட்ப" (மதுரைக். 70 - 72).

11. "நிலவெக்கர்" (பொருந. 213, கு - ரை.); குறுந். 320 : 3; கலித். 131 : 17. நிலவுமணல் வியன்கானலென்பது வஞ்சியடிக்கு மேற்கோள்; தொல். செய். சூ. 14, பேர்., ந.

10 - 11. இயற்சீர் தூங்கி வந்ததென்பதற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 216, பேர்., ந.

13. தொண்டி - (இங்கே) சேர நாட்டிற் கடற்கரைக்கண்ண தொரு பட்டினம்.

14 - 9. "அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று, பெருங்கை யானை பிடிபுக் காங்கு" (பட்டினப். 223 - 4).

33. செய்கென்னும் வாய்பாட்டு வினைமுற்று வினைகொண்டு முடிந்ததற்கு மேற்கோள்; தொல். வினை. சூ. 7, ந.

34. புறநா. 16 : 2. குறிப்புரையைப் பார்க்க. 'தோல்' என்பது பரிசை என்னும் பொருளில் வந்ததற்கு மேற்கோள்; சிலப். 5 : 81, அடியார்.

36 - 7. "படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி" (முல்லை. 28).

38 - 9. பாம்பு இடிக்கு அஞ்சுதல் : புறநா. 211 : 1 - 4; "விரிநிற நாகம் விடருள தேனு, முருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்" (நாலடி. 164).

40. "ஓம்பா வீகையின்" (பதிற். 42). (கஎ)

(கஅ) முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியன்ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
ஒருதா மாகிய வுரவோ ரும்பல்
ஒன்றுபத் தடுக்கிய கோடிகடை யிரீஇய
பெருமைத் தாகநின் னாயு டானே
நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉ மினவாளை
நுண்ணாரற் பருவராற்
குரூஉக்கெடிற்ற குண்டகழி
வானுட்கும் வடிநீண்மதில்
மல்லன்மூதூர் வயவேந்தே
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினுஞ் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே
வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே யதனால்
அடுபோர்ச் செழிய விகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே.

(பா - ம்.) 9 'நுண்வாரற்' 10 'கெடிற்றுக்'

திணை - பொதுவியல்; துறை - முதுமொழிக்காஞ்சி (பா - ம். பொருண்மொழிக் காஞ்சி).

பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியது.

(இ - ள்.) ஒலிக்கின்ற கடலானது முழுதுஞ் சூழப்பட்டுப் பரந்து கிடக்கின்ற அகன்ற உலகத்தைத் தமது முயற்சியாற் கொண்டு தம்முடைய புகழை உலகத்தின்கண்ணே நிறுத்தித் தாமே யாண்ட வலியோருடைய வழித்தோன்றிஞேய்! ஒன்றைப் பத்து முறையாக அடுக்கப்பட்டதாகிய கோடி என்னும் எண்ணினைக் கடையெண்ணாக இருத்திய * சங்கு முதலாகிய பேரெண்ணினை உடைத்தாக நினது வாழ்நாள்; நீரின்கண்ணே உறத்தாழ்ந்த குறிய காஞ்சியினது பூவைக் கவரும் இனமாகிய வாளையினையும் நுண்ணிய ஆரலினையும் பரிய வராலினையும் நிறமுடைய கெடிற்றினையும் உடைத்தாகிய குழிந்த கிடங்கினையும் வானமஞ்சும் திருந்திய நெடிய மதிலையும் உடைத்தாகிய வளவிய பழைய ஊரினையுடைய வலிய வேந்தே! நீ போகக் கடவ மறுமை யுலகத்தின்கண் நுகருஞ் செல்வத்தை விரும்பினும், உலகத்தைக் காப்பாரது தோள்வலியைக் கெடுத்து நீ ஒருவனுமே தலைவனுதலை விரும்பினும், மிக்க நல்ல புகழை இவ்வுலகத்தே நிறுத்துதலை விரும்பினும், அவ் வேட்கைக்குத் தக்க செய்கையைக் கேட்பாயாக, இப்பொழுது; பெரியோய்! நீரை இன்றியமையாத உடம்பிற்கெல்லாம் உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தார்; உணவை முதலாக உடைத்து அவ்வுணவால் உளதாகிய உடம்பு; ஆதலால், உணவென்று சொல்லப்படுவது நிலத்தோடு கூடிய நீர்; அந்நீரையும் நிலத்தையும் ஒருவழிக் கூட்டினவர்கள் இவ்வுலகத்து உடம்பையும் உயிரையும் படைத்தவராவர்; நெல் முதலாயவற்றை வித்தி மழையைப் பார்த்திருக்கும் புல்லிய நிலம் (புன்செய்) இடமகன்ற நிலத்தை உடைத்தாயினும் அது பொருந்தியாளும் அரசனது முயற்சிக்குப் பயன்படாது; ஆதலால், கொல்லும் போரையுடைய செழிய! இதனைக் கடைப்பிடித்து விரைந்து நிலங்குழிந்தவிடத்தே நீர்நிலை மிகும் பரிசு தளைத்தோர், தாம் செல்லும் உலகத்துச் செல்வம் முதலாகிய மூன்றினையும் இவ்வுலகத்துத் தம் பேரோடு தளைத்தோராவர்; அந்நீரைத் தளையாதவர், இவ்வுலகத்துத் தம் பெயரைத் தளையாதோர்—எ - று.

இதனுல், நீயும் நீர்நிலை பெருகத் தட்கவேண்டுமென்பது கருத்தாகக் கொள்க.

மற்றும் (16), அம்மவும் (29) அசைநிலை.

உணவின் பிண்டம் உண்டி முதற்றுதலான், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் (19 - 20) என மாறிக் கூட்டுக.

தள்ளாதோர் இவட்டள்ளாதோராதலால் செழிய! இதனை இகழாது வல்லே செய்யென ஒரு சொல் வருவித்துரைப்பாரும் உளர். தட்டோர் என்பதற்குத் தம் பெயரைத் தளைத்தோரெனினும் அமையும்.

---

* "சங்குதரு நீணிதியஞ் சாலவுடை நாய்கன்" (சீவக. 493).

நீரும் நிலனும் புணரியோர் உடம்பும் உயிரும் படைத்தோ ரெனவே செல்லுமுலகத்துச் செல்வமும், வித்திவாஞேக்கும் புன்புலம் இறைவன்றுட்கு உதவாதெனவே நீர்நிலை பெருகத் தட்டலால் வாஞேக்க வேண்டாத நன்புலம் இறைவன்றுட்கு உதவி ஞாலங் காவலர் தோள்வலி முருக்குதலும், நிலனெளிமருங்கின் நீர்நிலை பெருகத் தட்டோர் இவட்டட்டோரெனவே நல்லிசை நிறுத்தலும் கூறப்பட்டன.

நீர்நிலை பெருகத் தட்கவே * அறன்முதன்மூன்றும் பயக்குமென்பது கூறினமையான், இது முதுமொழிக்காஞ்சி யாயிற்று.

(கு - ரை.) 1. 'முழக்கு' என்பது ஒலித்தற்ருெழிற் பண்பை உணர்த்துதற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 458; நன். வி. சூ. 459.

5. "பல்வெள்ள மீக்கூற, வுலக மாண்ட வுயர்ந்தோர் மருக" (மதுரைக். 23- 4); "அடையடுப் பறியா வருவி யாம்ப, லாயிர வெள்ள வூழி, வாழி யாத வாழிய பலவே" (பதிற். 63 : 19 - 21).

9. "ஆர லீன்ற வையவி முட்டை" (புறநா. 342 : 9).

10. கெடிறு : "இன்கெடிறு சொரிந்த வகன்பெரு வட்டி", "காக்கை, இருங்கழி யினக்கெடி றுருந் துறைவன்" (ஐங்குறு. 47, 167).

11. வடி - திருத்தம்; "வடித்தேர்த் தானை" (மணி. 15 : 62).

14 - 5. "வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலு, நீர்சான் றுயரவே நெல்லுயருஞ் - சீர்சான்ற, தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும், ஓவா துரைக்கு முலகு" (சிறுபஞ்ச. 46).

16. புறநா. 50 : 14 - 5.

18. "நீரின் றமையா துலகு" (குறள், 20).

18 - 9. "மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம், உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே" (மணி. 11 : 95 - 6).

20. "மக்கள் யாக்கை யுணவின் பிண்டம்" (மணி. 10 : 90); "இசைபட வாழ்வதற்குக் கல்வி ஆண்மை முதலிய பிற காரணங்களும் உளவேனும் 'உணவின் பிண்ட முண்டி முதற்று' ஆதலின் ஈதல் சிறந்தது என்பதற்கு ஞாபகமாக ஈதலென்றுர்" (குறள், 231, பரிமேல்.).

24. "வாஞேக்கி வாழு முலகெல்லா மன்னவன், கோஞேக்கி வாழுங் குடி" (குறள், 542).

28 - 9. "குளந்தொட்டு வளம்பெருக்கி" (பட்டினப். 284). (கஅ)

(கக) இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத் தொருமையும்
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய

---

* புறநா. 28 : 15.

இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய
பெருங்கல் லடாரும் போன்மென விரும்பி
முயங்கினே னல்லனோ யானே மயங்கிக்
குன்றத் திறுத்த குரீஇயினம் போல
அம்புசென் றிறுத்த வரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள
எறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்
எந்தையொடு கிடந்தோரெம் புன்றலைப் புதல்வர்
இன்ன விறலு முளகொ னமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக்கண் ணோடிய வெருவரு பறந்தலை
எழுவர் நல்வலங் கடந்தோய்நின்
கழூஉவிளங் காரங் கவைஇய மார்பே.

(பி - ம்.) 18 'கழூவிளங்'

திணை - வாகை; துறை - அரச வாகை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) ஒலிக்குங் கடலாற் சூழப்பட்ட அணுச்செறிந்த அகன்ற உலகத்துக்கண் * தமிழப்படை கைகலந்த தலையாலங்கானத்துக்கண் நிலைபெற்ற உயிரது பன்மையையும் அவ்வுயிரைக் கொள்ளுங் கூற்றினது ஒருமையையும் நின்னுடனே சீர்தூக்கிக் காட்டிய வென்றி வேலையுடைய செழிய! பெரும்புலியைப் படுக்கும் வேட்டுவன் எந்திர மறிந்து கொளுத்திய பெரிய கல்லையுடைய அடாரையும் (பி - ம். கல்லை யுடைய இடியை ஒக்கும் அடாரையும்) போலுமென்று விரும்பிப் புல்லினே னல்லனோ யான்? கலங்கி மலைக்கண்ணே தங்கிய குருவி யினம்போல அம்பு சென்று தைத்த பொறுத்தற்கரிய புண்ணையுடைய யானையினது துளையையுடைய பெருங்கை வாயுடனே துணிந்து வீழ்ந்து கலப்பையை யொப்ப நிலத்தின்மேலே புரள வெட்டிப் போர்க் களத்தின்கண்ணே வீழ்த்த ஏந்திய வாள் வெற்றியை யுடையோராய் எம் தலைவனோடு கிடந்தார், எம்முடைய புல்லிய தலையையுடைய மைந்தர்; இப்பெற்றிப்பட்ட வென்றியும் உளவோ நமக்கென்று சொல்லி முதிய மறக்குடியிற் பிறந்த பெண்டிர் இன்புற்று உவகையால் அழ, அது கண்டு நாணிக் கூற்றம் இரங்கிய அஞ்சத்தக்க போர்க் களத்தின்கண்ணே இரு பெரு வேந்தரும் ஐம்பெரு வேளிருமாகிய

* "தலைப்பெருஞ் சேனைத் தமிழச் சேரி" (பெருங். 3. 4 : 10 - 11); தமிழ்ப்படை - தமிழ் நாட்டரசர்களின் சேனை; நெடுஞ்செழியனோடு பொருத பகைவரெழுவரும் தமிழ்நாட்டினராதலின் தமிழ்ப்படை என்றார்.

எழுவரது நல்ல வலியை வென்றோய்! நினது கழுவி விளங்கின முத்தாரம் அகத்திட்ட மார்பை—எ - று.

தமிழ்தலை மயங்கியவென்புழி, தலை, அசைநிலை; இடமுமாம்.

செழிய! கடந்தோய்! நின் மார்பை யான் விரும்பி முயங்கினே னல்லனோவெனக் கூட்டுக.

பெருங்கல்லடாரு மென்ற உம்மை, எமக்கு விருப்பஞ் செய்தலே யன்றி நின் பகைவர்க்கு வருத்தஞ் செய்தலான், நின் மார்பு கல்லடாரும் போலுமென எச்சவும்மையாயிற்று; சிறப்பும்மையுமாம்.

மூதிற்பெண்டிர் கசிதலால் நாணி யெனவும் அழுதலாற் கண் ணோடிய எனவும் நிரனிறையாகக் கொள்க.

போர் முடிதலாற் போயின கூற்றை நாணியும் கண்ணோடியும் போயிற்றுப் போலக் கூறியது,ஓரணி (தற்குறிப்பேற்றம்) கருதி நின்றது.

இனி, அம்பு தைத்த யானையை வெட்டிப்படுத்தல் மறத்திற் கிழிபென்று பெண்டிர் இரங்கி யழுதலின், கூற்றுக் கண்டு நாணிக் கண்ணோடியதென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) 1. 'இமிழ்' என்பது ஒலித்தற்றொழிற்பண்பில் வந்த தற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 458; நன். வி. சூ. 459. கிடக்கை - பூமி; "ஞாலந்தாத் திரிய ளக்கர் நாடுபூ தலங்கி டக்கை" என்பது நிகண்டு.

1 - 2. "இமிழ்கடல்...தலையாலங்கானத்து என்றவழித் தலை யாலம் என ஆசிரியவடியுள் இன்சீர் இயைய வெண்சீர் வந்தது" (தொல். செய். சூ. 30, பேர்.; ந.).

4. பெயரெச்சத்திற்கு முடிபாகிய பெயரை இடைவருஞ்சொற்கள் விசேடித்து நின்றதற்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. 59, ந.

3 - 4. "எருமைக் கடும்பரி யூர்வோ னுயிர்த்தொகை, ஒரு பக லெல்லையி னுண்ணு மென்ப, தாரிய வரச ரமர்க்களத் தழிய, நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்", "கூற்றுக்கண் ணோட வரிந்துகளங் கொண்டோர்" (சிலப். 26 : 215 - 8, 27 : 40).

5 - 6. "தினையுண் கேழ லிரியப் புனவன், சிறுபொறி மாட்டிய பெருங்கல் லடாஅர், ஒண்கேழ் வயப்புலி படூஉ நாடன்" (நற். 119); "புழைதொறு மாட்டிய விருங்க லரும்பொறி" (மலைபடு. 194); "கொல் புலி படுக்கும் பெருங்கனீ ளடார்வெங் குறவர்வீழ்த் திடுதலும்" (கூர்ம. சம்புத்தீவின், 29); "பண்ணேறு சிறுகுதலைக் கொடிச்சியருட் பதைபதைத்து நடுங்க வெய்ய, திண்ணேறுங் கொடுஞ்சினத்த செங்கண்வா லுளைமடங்கற் சிதர்ந்து வீழ, விண்ணேறு மமரருளம் வியப்பூரக் கல்லதரின் வீழ்த்தி விண்டு, தண்ணேறு மலர்த்தொடையற் குறவருறை வாமனமாந் தகைசால் குன்றும்" (இலிங்க. பிலக்க முதலான தீவு. 54).

8 - 9. யானையின்மேல் தைத்த அம்புகளுக்கு மலைமீது தங்கிய குருவிகள் உவமை; "யானைமேல் யானை நெரிதர வானுது, கண்ணேர்

கடுங்கணை மெய்மறைப்ப வெவ்வாயும்,எண்ணருங் குன்றிற் குரீஇயினம் போன்றனவே" (களவழி. 8); "கணைமொய்ப்பக் கதஞ்சிறந்து, குருவி சேர் வரைபோன்ற குஞ்சரம்" (சீவக. 2237); "கோல்பொரக் குளித்த யானை குருவிசேர் குன்ற மொத்த" (மேருமந்தர. பலதேவர். 15).

11. "உறலூறு கமழ்கடாத் தொல்கிய வெழில்வேழம், வறனுழு நாஞ்சில்போன் மருப்பூன்றி நிலஞ்சேர" (கலித். 8); "பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்" (பெரும்பாண். 199; கு - ரை.).

9 - 12. "மின்னவி, ரோடையொடு பொலிந்த வினைநவில் யானை, நீடிர டடக்கை நிலமிசைப் புரளக், களிறுகளம் படுத்த" (நெடுநல். 168 - 71).

14. 'இன்ன' என்பது உவமவுருபாக வந்ததற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 366.

15. மூதிற் பெண்டிர் - மறக்குடி மகளிர்;"மூதிற் பெண்டி ரோதை யிற் பெயர" (சிலப். 5 : 75); "கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு, முற்றோன்றி மூத்த குடி" (பு. வெ. 35).

13 - 6. புறநா. 278; மறக்குடி மகளிர், தம்முடைய தந்தை முதலியவர்கள் போர்க்களத்தில் இறந்தது கண்டு இன்புறுதல், "கன்னின்ற னெந்தை கணவன் களப்பட்டான், முன்னின்று மொய்ய விந்தா ரென்னையர் - பின்னின்று, கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி, எய்போற் கிடந்தானென் னேறு" (பு. வெ. 176) என்பதனாலும் அறியப்படும்.

14 - 6. "இன்ன விறலும்......பறந்தலை என்புழி மூதிற்பெண்டிர் இழவுபற்றி அழுதாராயிற் கூற்றுக்கண்ணோடாதாகலின் அவர் உவந்த னர் என்பது பெற்றாம்; அதனானே அஃது உவகைக்கலுழ்ச்சியா மென்பது" (தொல். மெய். சூ. 5, பேர்.).

17. புறநா. 76 : 12 - 3; "கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன், ஆலங் கானத் தகன்றலை சிவப்பச், சேரல் செம்பியன் சினங் கெழு திதியன், போர்வல் லியானைப் பொலம்பூ ணெழினி, நாரரி நறவி னெருமை யூரன், தேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தின், இருங்கோ வேண்மா னியறேர்ப் பொருநனென், றெழுவர் நல்வல மடங்க வொரு பகல், முரைசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக், கொன்று", "காலிய னெடுந்தேர்க் கைவண் செழியன், ஆலங் கானத் தமர்கடந் துயர்த்த, வேலினும் பல்லூழ் மின்னி", "தென்னர் கோமான், எழு வுறழ் திணிதோ ளியறேர்ச் செழியன், நேரா வெழுவ ரடிப்படக் கடந்த, ஆலங் கானத் தார்ப்பினும் பெரிது" (அகநா. 36, 175, 209); "இரு பெரு வேந்தரொடு வேளிர் சாயப், பொருதவரைச் செருவென்று", "ஆலங்கானத் தஞ்சுவரவிறுத், தரசுபட வமருழக்கி, முரசுகொண்டு களம்வேட்ட, அடுதிறலுயர் புகழ்வேந்தே" (மதுரைக். 55 - 6, 127 - 30).

17 - 8. "பொன்மா மௌலி புனைந்து பொய்யிலான், றன்மா னக்கழ ருழும் வேலையி, னன்மார் பிற்றழு வுற்ற நாயகன், சொன்னான்" (கம்ப. கிட்கிந்தா. அரசியல். 26).

7 - 18. கவவு என்னுஞ்சொல் அகத்தீடென்னும் பொருளுணர்த்தும் (தொல். உரி. சூ. 61, சே.) என்பதற்கும், எச்சமாங்கால் திரிந்து வரும் (தொல். உரி. சூ. 59, ந.) என்பதற்கும் மேற்கோள்; செய்யுட்கண் 'கழூஉவிளங் காரங் கவைஇய மார்பே' என இறுதிக்கண் இரண்டாவது தொக்கது, 'முயங்கினோ னல்லனோ' என வரும் முடிக்குஞ் சொல்லோடு ஒட்டி ஒரு சொல்லாகாதென்பதற்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. 16, ந. (கக)

(உ௦) இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும், என்றாங்
கவையளந் தறியினு மளத்தற் கரியை
அறிவு மீரமும் பெருங்க ணோட்டமும்
சோறுபடுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவி லல்லது கொலைவில் லறியார்
நாஞ்சி லல்லது படையு மறியார்
திறனறி வயவரொடு தெவ்வர் தேயவப்
பிறர்மண் ணுண்ணுஞ் செம்மனின் னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது
பகைவ ருண்ணா வருமண் ணினையே
அம்புதுஞ்சுங் கடியரணால்
அறந்துஞ்சுஞ் செங்கோலையே
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை
அனையை யாகன் மாறே
மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே.

திணையும் துறையும் அவை.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையைக் குறுங்கோழியூர் கிழார் பாடியது.

(இ - ள்.) பெரிய கடலினது ஆழமும், அகன்ற உலகத்துப் பரப்பும், காற்றியங்கும் திசையும், வடிவின்றி நிலைபெற்ற ஆகாயமும் என்று

சொல்லப்படும் அவற்றை வரையறுத்தறியினும் வரையறுத்தற்கு அரியை, அறிவும் அன்பும் மிக்க கண்ணோட்டமும்; ஆகலால், சோற்றை ஆக்கும் நெருப்புடனே செஞ்ஞாயிற்றினது வெம்மையல்லது வேறு வெம்மை யறியார், நின் குடைநிழற்கண் வாழ்வோர்; இந்திர வில் அல்லது பகைவரது கொலைவில்லை அறியார்; கலப்பை அல்லது வேறு படைக்கலமும் அறியார்; போர் செய்யும் கூறுபாட்டை அறியும் வீரருடனே பகைவர் மாய அம்மாற்றருடைய * மண்ணைக் கொண்டு உண்ணுந் தலைவ! நின்னுடைய நாட்டின்கண் வேட்கை நோயுற்ற பெண்டிர் விரும்பி உண்ணினல்லது பகைவர் உண்ணப்படாத பெறுதற் கரிய மண்ணை உடையை; அம்பு தங்குங் காவலையுடைய அரணுடனே அறம் தங்கும் செவ்விய கோலை உடையை; புதுப்புள் வரினும் பழைய புள் அவ்விடத்தை விட்டுப் போகினும் அவற்றால் நடுக்கமுறுதல் அறியாத சேமமாகிய காவலை உடையை; அத்தன்மையை உடையை யாதலான், உலகத்து நிலைபெற்ற உயிரெல்லாம், தத்தம் காதலால் நினக்கு ஏதம் வருங்கொலென்று அஞ்சும்—எ - று.

அறிவும் ஈரமும் கண்ணோட்டமுமென்பன சினைவினைப்பாற்பட்டு அளத்தற்கரியை யென்னும் முதல்வினை கொண்டன.

(கு - ரை.) 1. புறநா. 26 : 1; "கடற்குட்டம் போழ்வர் கலவர்' (நான்மணிக். 18).

1 - 5. புறநா. 30 : 1 - 6; "நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின், அளப்பரி யையே" (பதிற். 14).

10. திருவில் - இந்திர வில்; "தேர்செல வழுங்கத் திருவிற் கோலி, ஆர்கலி யெழிலி சோர்தொடங் கின்றே" (ஐங்குறு. 428); "திருவில் வீழ்ந், தொருக்குலாய் நிலமிசை மிளிர்வ" (சீவக. 1903); "திருவி லிட்டுத் திகழ்தரு மேனியன்" (சிலப். 15 : 156; மணி. 6 : 10); "நாமவே னரபதி யுலகங் காத்தநாட், காமவேள் கவர்கணை கலந்த தல்லது, தாமவேல் வயவர்தந் தழலங் கொல்படை, நாமநீர் வரைப்பக நலிவ தில்லையே" (சூளா. நகர. 18).

13. "பொருவார், மண்ணெடுத் துண்ணு மண்ணல் யானை, வண்டேர்த் தொண்டையர்" (குறுந். 260).

14. வயவு - வயா; கருப்பமுற்ற மகளிர்க்கு நுகரப்படும் பொருள் மேற்செல்லும் வேட்கை;அதனுல் அவர்கள் புகையுண்ட மண்ணையுண் பர்; "மனைபுகை யுண்ட கருமண் ணிடந்து, பவள வாயிற் சுவை காணுது" (கல்லாடம், 7); "வயாநோ யெய்தி மண்ணினை நுகர்தல் தேன்சோர், முருகவிழ் துளவத் தண்டார் முகுந்தனை மல்ல லோங்கு,

* இப்பொருள்பற்றியே வடமொழியிலும் 'பூபுக்' என்று அரசனைக் கூறுவர்.

திருமகள் சேரு முன்னஞ் சேர்ந்திட வேண்டு மென்ன, இருநில மங்கை முன்போ யெய்துதல் போன்ற தன்றே” (கூர்ம. கண்ணனவதரித்த. 21); “பொருதடந்தோண் மகன்பழகப் புகையுண்ட கருமண்ணும்......உவந்தருந்தும் வயாநிறைந்த” (திருவானைக்கா. கோச்செங்கணர். 171). ‘வயா’ என்னுஞ் சொல், ‘வயவு’ எனத் திரிந்து நின்று வேட்கைப் பெருக்கமாகிய குறிப்பை யுணர்த்துதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 75, சே.; சூ. 73, ந.

18. “புதுப் புள் வருதலும் பழம்புள் போதலும் பொழுதன்றிக் கூகை குழறலும் போல்வன புள்ளின்கட்டோன்றிய நிமித்தம்” (தொல். புறத்திணை. சூ. 36, ந.).

19. ‘விதிர்ப்பு’ என்பது நடுக்கமாகிய குறிப்புணர்த்துமென்பதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 20, சே.; சூ. 18, ந.; இ. வி. சூ. 281, உரை.

18 - 9. மணி. 12 : 94.

20. புறநா. 4 : 17.

21. சீவக. 957, ந. மேற்.

18 - 21. புட்களைப்பற்றி வந்ததற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 30, இளம்.

மு. “குடியோம்புதல் வருமாறு :—‘இருமுந்நீர்......அஞ்சும்மே’ என வரும்” (தொல். புறத்திணை. சூ. 16, இளம்.); புள்நிமித்தத்தால் பாடாண்டலைவற்குத் தோன்றிய தீங்கு கண்டு அஞ்சி ஓம்படை கூறியதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 36, ந. (உ௦)

(உக) புலவரை யிறந்த புகழ்சா றோன்றல்
நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி
வான்றோய் வன்ன புரிசை விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவ ஞாயிற்
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை
அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்பு ணீரினு மீட்டற் கரிதென
வேங்கை மார்ப னிரங்க வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே
இகழுந ரிசையொடு மாயப்
புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே.

திணையும் துறையும் அவை.

* கானப்பேரெயில் (பி - ம். தானப்பேரெயில்) கடந்த உக்கிரப் பெருவழுதியை ஐயூர் மூலங்கிழார் பாடியது.

(இ - ள்.) நின்னைப் பாடுவாரது அறிவின் எல்லையைக் கடந்த புகழமைந்த தலைவ; நிலவெல்லையைக் கடந்த பாதலத்தேயுற ஆழ்ந்த இடத்தையுடைய அகழியினையும் உயர்ச்சியான் வானைப் பொருந்துவது போன்ற மதிலையும் அவ்வானிடத்து மீனைப் பூத்தாற்போன்ற வடிவை யுடைய சூட்டினையும் வெயிற்கதிர் நுழையாத மரஞ்செறிந்த காவற்காட்டினையும் உடைத்தாய் அணுதற்கரிய சிற்றரண்களாற் சூழப்பட்ட கானப்பேரென்னும் அரண், வலிய கையையுடைய கொல்லனுற் செந்தீயின்கண்ணே மாட்டப்பட்ட இரும்புண்ட நீரினும் மீட்டற்கரி தெனக் கருதி வேங்கைமார்பன் வருந்த நாடோறும் வென்றிகொளத் தழைத்த தும்பையையுடைய, புலவர் பாடப்படுந் துறைகளை முடித்த வெற்றியினையுடைய வேந்தே! நின்னை மதியாத பகைவர் தம்முடைய புகழுடனே பொன்ற வெற்றிப் புகழுடனே விளங்கிப் பொலிவதாக நின் வேல்—எ - று.

கானப்பேரெயில் மீட்டற்கரிதென வேங்கைமார்பன் இரங்கப் பாடு துறை முற்றிய கொற்றவேந்தே! நின் வேல் பூக்கவெனக் கூட்டி வினை முடிவுசெய்க.

குழைத்த வென்பது குழைந்த வென மெலிந்து நின்றது.

(கு - ரை.) 1. புலவரை - அறிவின் எல்லை; "புலவரை யிறந் தோய் போகுதல் பொறேஎன்" (சிலப். 28 : 174); "புலவரை யிறந்த புகாரெனும் பூங்கொடி" (மணி. 5 : 109).

2. "மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்" (மதுரைக். 351).

4. ஞாயில் - சூட்டு; என்பது மதிலின்மீதுள்ள ஒரு சிற்றுறுப்பு; ஏப்புழைக்கு நடுவாய் எய்துமறையும் சூட்டென்பர்; சீவக. 105, ந.

5. "வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்" (பெரும் பாண். 374; மணி. 4 : 5); "வெயிலொளி யறியாத விரிமலர்த் தண் காவில்" (கலித். 30 : 7).

2 - 6. மதுரைக். 64 - 7 ; பதிற். 20 : 17 - 9.

7. புறநா. 36 : 6 : "கருங்கைக் கொல்லர்" (சிலப். 5 : 29) என்ப தையும் அதனுரைகளையும் பார்க்க.

7 - 8. "கனலிரும் புண்ட நீரின் விடாது" (பெருங். 3. 25 : 71); "இரும்புண்டநீர் மீள்கினு மென்னுழையிற், கரும்புண்டசொான் மீள்கிலள் காணுதியால்" (கம்ப. சடாயு. 104).

12 - 3. "பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழே" (கம்ப. மந்தரை. 66). (உக)

---

* இப்பாட்டின் 5 - 6-ஆம் அடிகளில் கானப்பேரென்னும் பெயர்க் காரணம் வந்திருத்தல் காண்க.

(உ௨) தூங்குகையா னோங்குநடைய
உறழ்மணியா னுயர்மருப்பின
பிறைநுதலாற் செறனோக்கின
பாவடியாற் பணையெருத்தின
தேன்சிதைந்த வரைபோல
மிஞிறார்க்குங் கமழ்கடாத்
தயறுசோரு மிருஞ்சென்னிய
மைந்துமலிந்த மழகளிறு
கந்துசேர்பு நிலைஇவழங்கப்
பாஅனின்று கதிர்சோரும்
வானுறையும் மதிபோலும்
மாலைவெண் குடைநிழலான்
வாண்மருங்கிலோர் காப்புறங்க
அலங்குசெந்நெற் கதிர்வேய்ந்த
ஆய்கரும்பின் கொடிக்கூரை
சாறுகொண்ட களம்போல
வேறுவேறு பொலிவுதோன்றக்
குற்றானா வுலக்கையாற்
கலிச்சும்மை வியலாங்கட்
பொலந்தோட்டுப் பைந்தும்பை
மிசையலங் குளைய பனைப்போழ் செரீஇச்
சினமாந்தர் வெறிக்குரவை
ஓத நீரிற் பெயர்பு பொங்க
வாய்காவாது பரந்துபட்ட
வியன்பாசறைக் காப்பாள
வேந்துதந்த பணிதிறையாற்
சேர்ந்தவர் கடும்பார்த்தும்
ஓங்குகொல்லியோ ரடுபொருந
வேழ நோக்கின் விறல்வெஞ் சேஎய்
வாழிய பெருமநின் வரம்பில் படைப்பே
நிற்பாடிய வலங்குசெந்நாப்
பிறரிசை நுவலாமை
ஓம்பா தீயு மாற்ற லெங்கோ
மாந்தரஞ் சேர லிரும்பொறை யோம்பிய நாடே
புத்தே ளுலகத் தற்றெனக் கேட்டுவந்
தினிது கண்டிசிற் பெரும முனிவிலை

வேறுபுலத் திறுக்குந் தானையொடு
சோறுபட நடத்திநீ துஞ்சாய் மாறே.

(பி - ம்.) 27 'கடும்பருத்தும்'

திணையும் துறையும் அவை; துறை - இயன்மொழியுமாம்.

*** சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரலிரும்பொறையைக் குறுங்கோழியூர் கிழார் பாடியது.**

(இ - ள்.) அசைந்த பெருங்கையுடனே தலையெடுத்து நடக்கும் உயர்ந்த நடையை யுடையனவும் அந்நடைக்கேற்ப ஒன்றற்கொன்று மாறுபட்டொலிக்கும் மணியுடனே உயர்ந்த கோட்டினையுடையனவும் பிறை வடிவாக இடப்பட்ட மத்தகத்துடனே சினம் பொருந்திய பார்வையை யுடையனவும் பரந்த அடியுடனே பரிய கழுத்தையுடையனவும் தேனழிந்த (பி-ம். தேனழித்த) மலைபோலத் தேனீயொலிக்கும் மணம் நாறும் மதத்துடனே புண்வழலை வடியும் பெரிய தலையை யுடையனவுமாகிய வலிமிக்க இளங்களிறு கம்பத்தைப் பொருந்தித் தான் நின்ற நிலையிலே நின்று அசையப் பக்கத்தே நின்று கிரணத்தை விடுகின்ற வானத்தின்கண்ணே தங்கும் திங்கள்போலும் முத்தமாலையையுடைய வெண்கொற்றக் குடையினது நிழற்கண்ணே தம்பக்கத்து வாளில்லாதோர் அக்குடையே காவலாக உறங்க அசைந்த † செந்நெற் கதிரால் வேயப்பட்ட மெல்லிய கரும்பாற் கட்டப்பட்ட ஒழுங்குபட்ட கூரை விழாவெடுத்துக் கொள்ளப்பட்ட இடம்போல் வேறுவேருகப் பொலிவு தோன்றக் குற்று அமையாத உலக்கையொலியுடனே மிக்க ஆரவாரத்தையுடைய அகன்றவிடத்துப் பொன்னுற் செய்யப்பட்ட இதழையுடைய பசிய தும்பையுடனே மிசையே அசைந்த தலையினை யுடைய பனந்தோட்டைச் செருகிச் சினத்தையுடைய வீரர் வெறியாடும் குரவைக் கூத்தொலி ஓதத்தையுடைய கடலொலி போலக் கிளர்ந்து பொங்கப் ‡ படைப்பெருமையாற் பகைவ ருட்கும் மதிப்புடைமையின் இடங்காவாது பரந்துகிடக்கின்ற அகன்ற பாசறையிடத்துக் காவலாள!

---

* "கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரலிரும் பொறை என்றவழி அரசனென்பதொரு சாதியும், சேரமானென்பதொரு குடியும், வேழநோக்கினை யுடையானென்பதொரு வடிவும், சேயென்பதோர் இயற்பெயரும், மாந்தரஞ்சேரலிரும்பொறை யென்பதொரு சிறப்புப் பெயரும், ஒரு பொருளின்கட் கற்பனை" (குறள், 355, பரிமேல்.). இச்செய்யுளின் 29, 34-ஆம் அடிகளில் தலைவன் பெயர் அமைக்கப்பெற்றுள்ளது.

† ஒரு சமயத்தில் கம்பருக்காகச் சடையப்பவள்ளல் விரைவில் வீடொன்று கட்டுவித்து அதனை நெற்கதிரால் வேய்ந்தளித்தமையின் கதிர்வேய்மங்கலமென்று அவ்வீடுள்ள ஊர் பெயர் பெற்றதென்ற பழஞ் செய்தி இங்கே கருதற்குரியது.

‡ "தானை, படைத்தகையாற் பாடு பெறும்" (குறள், 768).

மாற்றரசர் பணிந்து தந்த திறையால் தம்மை அடைந்தவருடைய சுற்றத்தை நிறைக்கும் உயர்ந்த கொல்மிமலையோருடைய அடுபொருந! யானையினது நோக்குப் போலும் நோக்கினையுடைய வெற்றியை விரும்பும் சேயே! வாழ்க, பெருமானே! நினது எல்லையில்லாத செல்வம்; நின்னைப் பாடிய விளங்கிய செவ்விய நாப் பின்னைப் பிறருடைய புகழைச் சொல்லாமற் பாதுகாவாது கொடுக்கும் வலியையுடைய எங்கோவே! மாந்தரஞ் சேர லிரும்பொறை பாதுகாத்த நாடு தேவ ருலகத்தை யொக்குமென்று பிறர் சொல்லக் கேட்டு வந்து கட்கினிதாகக் கண்டேன்; பெருமானே! முயற்சி வெறுப்பில்லையாய் வேற்றுநாட்டின்கட் சென்றுவிடும் படையுடனே சோறுண்டாக நடப்பை; நீ மடியாயாதலான்—எ - று.

கதிர்சோரும் மதியென இயையும்; கதிர்சோரு மென்னும் சினை வினை மதியென்னும் முதலொடு முடிந்தது; கதிர்சோரும் மாலையென இயைப்பினும் அமையும்.

பாய்நின்றென்று பாடமோதுவாரும் உளர்.

கூரை பொலிவுதோன்றவென இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்துமேல் ஏறிநின்றது.

செரீஇ யென்னும் வினையெச்சத்தை ஆடுமென ஒரு சொல் வருவித்து அதனோடு முடிக்க.

நிலைஇ வழங்கக் காப்புறங்கப் பொலிவுதோன்றப் பெயர்புபொங்க என்னும் செயவெனெச்சங்களும், வாய்காவா தென்னும் எதிர்மறை வினையெச்சமும் பரந்துபட்ட வென்னும் பெயரெச்ச வினையொடு முடிந்தன.

காப்பாள! பொருந! சேஎய்! பெரும! எங்கோ! பெரும! நீ துஞ்சா யாதலாற் சோறுபட நடத்தி; அதனால் இரும்பொறை ஓம்பிய நாடு புத்தேளுலகத்தற்றெனக் கேட்டு வந்து இனிது கண்டிசின்; நின் படைப்பு வாழிய வெனக் கூட்டி வினைமுடிவு செய்க; அன்றி, எங்கோவே! நீ துஞ்சாதபடியாலே, இரும்பொறை யோம்பிய நாடு புத்தேளுலகத் தற்றெனப் பிறர் சொல்லக் கேட்டு நிற்பாடிய அலங்கு செந்நாப் பிறரிசை நுவலாதபடி வந்து இனிது கண்டேன்; நினது படைப்பொடு வாழ்வாயாக வென இயைப்பினும் அமையும்.

இசின், தன்மைக்கண் வந்தது.

சோறுபட நடத்தி யென்பதனை வினையெச்சமாக உரைப்பினும் அமையும்.

உயர்மருப்பி னென்பதூஉம், செறனோக்கி னென்பதூஉம், பணை யெருத்தி னென்பதூஉம் பாடம்.

(கு - ரை.) 1. மூன்றும் வேற்றுமை விரியைக் கூறும் சூத்திரத்தில், 'அன்ன பிறவும்' என்பதற்கு மேற்கோள்; தொல். வேற்றுமை. சூ. 13. சே.; ஆனுருபு சகார்த்தமாய் வந்ததற்கு மேற்கோள்; பிரயோக. காரக. 16, உரை.

2. ஆன் ஒடுவாதற்கு மேற்கோள்; தொல். வேற்றுமை. சூ. 13, ந.

1 - 2. "தூங்கு......மருப்பின என்பன போல்வனவெல்லாம் ஆன் ஒடுவாயின" (இ. வி. சூ. 200, உரை); "தூங்குகையா லோங்குநடைய, உறழ்மணியா லுயர்மருப்பின...இவை உடனிகழ்ச்சி; ஆன்உருபோடும் இவ்வாறே ஒட்டிக்கொள்க" (நன். மயிலை. சூ. 296; நன். வி. சூ. 297).

6. யானைமதம் மணமுடைய தென்பதையும் அதில் வண்டு மொய்க்கு மென்பதையும், "வரிவண் டார்க்கும் வாய்புகு கடாஅம்" (புறநா. 93 : 12 - 3), "ஈர்நறுங் கமழ்கடாஅத் தினம்பிரி யொருத்தல்", "வரிவண், டோங்குய ரெழில்யானைக் கனைகடாங் கமழ்நாற்றம், ஆங்கவை விருந்தாற்ற" (கலித். 21 : 2, 66 : 2 - 4), "வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்துப், பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றொருத்தல்" (அகநா. 78 : 3 - 4), "பூநாறு கடாஞ்செருக்கி" (மணி. 19 : 22), "புணர் மருப் பியானையின் புயல்கொண் மும்மதம், மணமகள் கதுப்பென நாறும்" (சீவக. 1621), "பாத்த யானையிற் பதங்களிற் படுமத நாறக், காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப், பூத்த வேழிலைப் பாலையைப் பொடிப்பொடி யாகக், காத்தி ரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு" (கம்ப. வரைக். 6), "விழிமலர்ப்பூசனையுஞற்றித் திருநெடுமால் பெறுமாழி மீள வாங்கி, வழியொழுகாச் சலந்தரன்மெய்க் குருதிபடி முடைநாற்ற மாறு மாற்றாற், பொழிமதநீர் விரையேற்றி" (காஞ்சிப். கடவுள். 5) என்பவற்றால் அறிக.

6 - 9. "கமழ்கடாஅத், தளறுபட்ட நறுஞ்சென்னிய, வரைமருளு முயர்தோன்றல" (மதுரைக். 44 - 6).

10 - 12. புறநா. 60 : 3 - 12.

15. "கொடி - ஒழுங்கு; 'கொடிக்கூரை' என்றார்" (சீவக. 1976, ந.)

16. "சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி" (முருகு. 283).

20. புறநா. 97 : 15; "செய்பொன் வாகை" (மணி. 26 : 90).

20 - 21. அரசர் தமக்குரிய அடையாளப்பூவொடு புறத்திணைப் பூக்களையும் விரவித் தொடுப்பித்துத் தாம் சூடிக்கொள்ளுதலும், வீரர்க்குச் சூட்டுதலும் மரபு; புறநா. 76 : 4 - 5, 77 : 2 - 3, 100 : 3 - 6; "குடைநிலை வஞ்சியும்......வட்கர் போகிய வான்பனந் தோட்டுடன், புட்கைச் சேனை பொலியச் சூட்டி" (சிலப். 25 : 141 - 7); "இளவரிக் கவட்டிலை யாரோ டேர்பெறத், துளவிய றும்பையுஞ் சுழியச் சூடினன்" (கம்ப. முதற்போர். 115).

27. கடும்பு - சுற்றம்.

28. "கொல்லிப் பொருந" (பதிற். 73); "முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி, செல்லா நல்லிசை நிறுத்த வல்வில், ஓரிக் கொன்று சேரலற் கீத்த, செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகநா. 209 : 12: 5), "கொல்லி யாண்ட குடவர் கோவே" (சிலப். 24: 'பாட்டுமடை') என்பவற்றாற் கொல்லிமலை சேர பரம்பரையினர்க்குரித்தாதல் காண்க.

30. படைப்பு - செல்வம்; புறநா. 188.

31 - 3. புறநா. 68 : 19; ‘‘செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம், பெருமான் முகம்பார்த்த பின்னர் - ஒருநாளும், பூதலத்தோர் தம்மைப் பொருணசையாற் பாராவாம், காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்’’ (தண்டி. சூ. 21, மேற்.) என்பதும், ‘‘இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்’’ (223) என்னும் திருக்குறளின் பொருள் விசேடங் களும் இங்கே அறிதற்குரியன.

34 - 5. ‘‘மீக்கூறு மன்ன னிலம்’’ (குறள், 386) என்பதும், ‘மீக் கூறுதல் : இவன் காக்கின்ற நாடு பசி பிணி பகை முதலியவின்றி யாவர்க்கும் பேரின்பந் தருதலின் தேவருலகினும் நன்றென்றல்’ என்னும் அதன் உரையும் இங்கே கருதற்பாலன. (உஉ)

(உங) வெளிறி னோன்காழ்ப் பணைநிலை முனைஇக்
களிறுபடிந் துண்டெனக் கலங்கிய துறையும்
கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியற்
சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்
கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்
கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில்
கொள்பத மொழிய வீசிய புலனும்
வடிநவில் நவியம் பாய்தலி னூர்தொறும்
கடிமரந் துளங்கிய காவு நெடுநகர்
வினைபுனை நல்லில் வெவ்வெரி நைப்பக்
கனையெரி யுரறிய மருங்கு நோக்கி
நண்ணார் நாண நாடொறுந் தலைச்சென்
றின்னு மின்னபல செய்குவன் யாவரும்
துன்னல் போகிய துணிவி னோனென
ஞால நெளிய வீண்டிய வியன்படை
ஆலங் கானத் தமர்கடந் தட்ட
கால முன்பநிற் கண்டனென் வருவல்
அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளி லத்த மாகிய காடே.

திணையும் துறையும் அவை; துறை - நல்லிசைவஞ்சியுமாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனைக் கல்லாடனார் பாடியது.

(இ - ள்.) வெண்மையில்லாத வலிய வயிரக் கம்பத்தையுடைய கூடத்தில் நிற்றலை வெறுத்துச் சென்று யானை படிந்து நீருண்டதாகக் கலக்கமுற்ற துறையையும் கார்காலத்து நறிய கடம்பினது பசிய இலையோடு விரவிய மாலையையுடைய சூரபன்மாவைக் கொன்ற முருகனது கூளிச் சுற்றத்தை யொக்கும் (பி - ம். முருகனது சுற்றத்தை யொக்கும்) நின்னுடைய கூரிய நல்ல அம்பினையும் வளைந்த வில்லினையுமுடைய மறவர் தம்மாற் கொள்ளலாவதனை முகந்துகொண்டு கொள்ளாத ஒழி பொருளை மாற்றார் முகந்து கொள்ளப்படும் உணவாக்காமற் சிதறிய நிலங்களையும் வடித்தல் பயின்ற கோடாலி வெட்டுதலான் ஊர்தோறும் காவல் மரங்கள் நிலைகலங்கிய காவையும் நெடிய நகரின்கண் தொழில் புனைந்த *நல்ல மனைகளிடத்து விரும்பும் அடுதீயைக் கெடுக்க மிக்க தீ முழங்கிய பக்கத்தையும் பார்த்துப் பகைவர் நாண நாடோறும் அவரிடத்துச் சென்று இன்னமும் இத்தன்மையன பலவுஞ் செய்குவன், யாவரும் தன்னை அணுகவொண்ணாத சூழ்ச்சித் தெளிவினையுடையோ னெனக் கருதி உலகம் பொறையாற்றாது நெளியத் திரண்ட பரந்த படையினையுடைய தலையாலங்கானத்தின்கட் போரை எதிர்நின்று கொன்ற காலன்போலும் வலியையுடையோய்! நின்னைக் கண்டேனாய் வந்தேன்; அற்ற கோட்டையுடைய பெரிய கலை புலியின்கண்ணே அகப்பட்டதாகச் சிறிய மறியை அணைத்துக்கொண்ட துள்ளிய நடையையுடைய மெல்லிய மான்பிணை பூளை யோங்கிய அஞ்சத்தக்க பாழிடத்து வேளையினது வெளிய பூவைத் தின்னும் ஆளற்ற அருஞ்சுர மாகிய காட்டுவழியே—எ - று.

காலமுன்ப! துறையும் புலனும் காவும் மருங்கும் நோக்கி இன்னும் இன்ன பல செய்குவன் துணிவினோனென உட்கொண்டு காட்டின் கண்ணே நின்னைக் கண்டு அக்காட்டுவழியே வந்தேனெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

வருவ லென்பது, ஈண்டு இறந்தகாலப்பொருட்டாய் நின்றது.

இவனைக் காணுமுன்னே கண்டு வந்தேனென்றான், இவன் செய்த வென்றியெல்லாம் கண்டமையின்.

பாசிலைத் தெரியல் முருகனென இயையும்.

நவியம் பாய்த லென்பது, கருவி கருத்தாவாய் நின்றது.

கலை புலிப்பாற்பட்டெனச் சிறுமறி தழீஇய மடப்பிணை பறந்தலை வேளை வெண்பூக் கறிக்குமென்பது, அவன் பகைவரைக் கொன்றவழி

* "நல்லிற் சிதைத்ததீ நாடொறு நாடித்தம், இல்லத்தி லாக்குத லால்" (நாலடி. 225).

அவர் பெண்டிர் தம் இளம்புதல்வரை ஓம்புதற்பொருட்டு இறந்துபடாது அடகு தின்று உயிர் வாழ்கின்றரென்பதோர் பொருள் தோன்ற நின்றது.

இனித் துணிவினே னென்று பிறர் சொல்லவெனவும், கண்டனென் வருவ லென்பதனைக் காலமயக்கமாக்கிக் கலங்கிய துறை முதலாயின வற்றை நோக்கி இன்னும் இவ்வாறு பகைவர் நாட்டின்கண் மேற் செல்வனென நினைந்து காட்டிடத்தே நின்னைக் காணிய வந்தேனென வும் உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 1. வெளிறு - வயிரமின்மை; "இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன" (முருகு. 312).

1 - 2. பகைவருடைய காவற்குளங்களைத் தம்முடைய யானை களாற் கலக்குவித்தமை இவ்வடிகளாற் கூறப்பட்டது; புறநா. 15 : 9-ஆம் அடி முதலியவற்றைப் பார்க்க.

3 - 4. புறநா. 33 : 12 - 3; "மறுவில் கற்பின் வாணுதல் கண வன்...மராஅத், துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்", "செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு, சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை" (முருகு. 6 - 11, 202 - 3); "காரலர் கடம்பன்" (மணி. 4 : 49); "கார்க்கடப்பந் தாரெங் கடவுள்" (சிலப். 24 : பாட்டுமடை, 'நேரிழை').

5. கூளியர், ஏவல் செய்வோரென்பதற்கு இவ்வடி மேற்கோள்; முருகு. 282, ந.; "கொடுவிற் கூளியர் கூவை காணின்" (மலைபடு. 422).

7. புலனென்றது, பகைவரிடங்களை.

8 - 9. பகைவருடைய காவன்மரத்தை அரசர் வெட்டுவிப்பர்; புறநா. 36 : 6 - 9, 57 : 10; "கடிகாவி னிலைதொலைச்சி" (மதுரைக். 153); "பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின், முழாவரை முழுமுத றுமியப் பண்ணி" (பதிற். 5-ஆம் பத்து, பதி.); "பழையன் காக்குங் குழைபயி னெடுங்கோட்டு, வேம்புமுத றடிந்த வேந்துவாள் வலத்துப், போந்தைக் கண்ணிப் பொறைய" (சிலப். 27 : 124 - 6).

10. வெவ்வெரி - விரும்பப்படும் நெருப்பு; வெம்மை - விருப்பம்; என்றது, மடைப்பள்ளித் தீயை.

11. "கனையெரி பொத்தி" (மணி. 2 : 42).

10 - 11. புறநா. 6 : 21 - 2, குறிப்புரை.

15. "கார்விளை மேக மன்ன கவுளழி கடாத்த வேழம், போர்விளை யிவுளித் திண்டேர் புனைமயிர்ப் புரவி காலாள், வார்விளை முரசம் விம்ம வானுலாப் போந்த தேபோல், நீர்விளை சுரிசங் கார்ப்ப நிலநெளி பரந்த வன்றே" (சீவக. 433).

16. "ஆலங் கானத் தஞ்சுவர விறுத்த, வேல்கெழு தானைச் செழியன்" (நற். 387 : 7 - 8).

17. புறநா. 19 : 3, 41 : 3; "மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி" (பொருந. 140); "ஆற்றல், காலனோ டொக்கும்" (பெருங். 1. 36 : 100 - 101); "எண்மரின் வலியனாய யமன்" (கம்ப. மிதிலை. 107).

20 - 21. பாழான இடங்களில் வேளைச்செடி முதலியவைகள் உண்டாவது இயல்பு. 19-ஆம் அடி முதலியவற்றிற்கு எழுதப்பட்டிருக்கும் இரண்டாவது பொருள் மிக அருமையானது; அது குறிப்பு என்றும், தொனியென்றும் கூறப்படும். (உங)

(உச) நெல்லரியு மிருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயின்முனையிற்
றெண்கடற்றிரை மிசைப்பாயுந்து
திண்டிமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூங்குந்து
தூவற் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து
வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானல்
முண்டகக் கோதை யொண்டொடி மகளிர்
இரும்பனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் றீஞ்சாறும்
ஓங்குமணற் குவவுத்தாழைத்
தீநீரோ டுடன்விரா அய்
முந்நீ ருண்டு முந்நீர்ப் பாயுந்
தாங்கா வுறையு ணல்லூர் கெழீஇய
ஓம்பா வீகை மாவே ளெவ்வி
புனலம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை போர்விற் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய
நின்று நிலைஇயர்நின் னாண்மீ னில்லாது
படாஅச் செலீஇயர்நின் பகைவர் மீனே
நின்னொடு, தொன்று மூத்த வுயிரினு முயிரொடு
நின்று மூத்த யாக்கை யன்னநின்
ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த

இரவன் மாக்க ளீகை நுவல
ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி பெரும வாங்கது
வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப தொல்லிசை
மலர்தலை யுலகத்துத் தோன்றிப்
பலர்செலச் செல்லாது நின்றுவிளிந் தோரே.

(பி - ம்.) 7 'திவலையிற்' 9 'தழூஉந்து' 16 'பாயுந்து' 20 'போரிற்'

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

அவனை மாங்குடி கிழார் (பி - ம். மாங்குடி மருதனர்) பாடியது.

(இ - ள்.) நெல்லை யரியும் பெரிய உழவர் செஞ்ஞாயிற்றினது வெயிலை வெறுப்பின் தெளிந்த கடற்றிரையின்மேலே பாயும் திண்ணிய திமிலையுடைய வலிய நுளையர் வெம்மையையுடைய மதுவையுண்டு மெல்லிய குரவைக் கூத்திற்கு ஏற்ற தாளத்தையாடும் கடற்றுவலை யாலே தழைத்த தேன் பரந்த புன்னையினது மெல்லிய பூங்கொத்தாற் செய்யப்பட்ட மாலையைச் சூடிய ஆடவர் விளங்கிய வளையையுடைய மகளிர்க்கு முதற்கை கொடுக்கும் வண்டு மொய்ப்ப மலர்ந்த குளிர்ந்த நறிய கானலிடத்துக் கடன்முள்ளிப்பூவாற் செய்யப்பட்ட மாலையை யுடைய விளங்கிய வளையை யணிந்த மகளிர் பெரிய பனையினது நுங்கின் நீரும் பொலிவினையுடைய கரும்பினது இனிய சாறும் உயர்ந்த மணலிடத்துத் திரண்ட தெங்கினது இனிய இளநீருடனே கூடக் கலந்து இம்மூன்று நீரையும் உண்டு மூன்று நீரையுடைய கடற் கண்ணே பாயும் பரிக்க வொண்ணாத பல மக்களும் வாழ்தலையுடைய நல்ல ஊர்கள் பொருந்திய பொருளைப் பாதுகாவாத வண்மையை யுடைய பெரிய வேளாகிய எவ்வியது நீர் வழங்கும் வாய்த்தலைகளை யுடைய மிழலைக் கூற்றத்துடனே வயலிடத்துக் கயலை மேயும் நாரை போரின்கண்ணே உறங்கும் பொன்னணிந்த யானையையுடைய பழைய முதிர்ந்த வேளிரது திரண்ட நெல்லினையுடைய முத்தூற்றுக் கூற்றத் தைக் கொண்ட வெற்றி பொருந்திய உயர்ந்த குடையினையும் கொடி யாற் பொலிந்த தேரினையும் உடைய செழிய! நின்று நிலைப்பதாக நினது நாளாகிய மீன்; நில்லாது பட்டுப் போவதாக நின் பகைவருடைய நாளாகிய மீன்; நின்னொடு பழைதாய் முதிர்ந்த உயிரினும் உயிருடனே நின்று முதிர்ந்த உடம்புபோன்ற நினது வெற்றிக்குடியோடு மூத்த சீரிய குடியின்கட் சிறந்த வாட்போராலே வாழ்வார் நினது முயற்சிவலியை வாழ்த்த இரக்கும் பரிசிலர் நின் வண்மையைச் சொல்ல ஒள்ளிய வளையையுடைய மகளிர் பொற்கலத்தின்கண் ஏந்திய குளிர்ந்த

நறுநாற்றத்தையுடைய மதுவை மடுப்ப அதனை உண்டு மகிழ்ச்சிமிக்கு அப்படி இனிதாக நடப்பாயாக; பெரும! அவ்வொழுக்கம் வல்லவரை வாழ்ந்தோரென்று சொல்லுவர் அறிவுடையோர்; பழைய புகழ்தான், பரந்த இடத்தையுடைய உலகத்தின்கண்ணே பிரந்து பரக்க ஒழுகாது நின்று மாய்ந்தோர் பலர்; அவர் வாழ்ந்தோ ரெனப்படாராதலான்— எ - று.

மேல் எண்ணப்பட்ட பெயரெச்ச மூன்றும் மிழலை யென்னும் பெயர் கொண்டன; அவை உம் உந்தாய் நின்றன.

முந்நீர்ப் பாயும் நல்லூ ரென்க.

உயிரினும் சிறந்த, ஆக்கையன்ன வாளின் வாழ்நரெனக் கூட்டி, உயிர்க்கு யாக்கை போலவும் யாக்கைக்கு உயிர்போலவும் இன்றியமை யாது இரண்டுமாயிருக்கின்ற வாளின் வாழ்நரென்க.

நின் குடியொடு மூத்த நின் யாக்கையன்ன விழுத்திணைக்கண் உளராய் நின்னுயிரினுஞ் சிறந்த வாளின் வாழ்நரெனக் கூட்டினும் அமையும்.

செழிய! நின் நாண்மீன் நின்று நிலைஇயர்; நின் பகைவர் மீன் படாஅச் செலீஇயர்; உலகத்துத் தோன்றி இசைசெலச் செல்லாது விளிந்தோர் பலர்; அவர் வாழ்ந்தோ ரெனப்படார்; ஆதலால், பெரும! வாழ்ந்த நுவல மடுப்ப மகிழ்சிறந்து இனிது ஒழுகு; அது வல்லுநரை வாழ்ந்தோ ரென்ப வெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

தாங்கா விளையு ளென்பதூஉம் பாடம்.

ஆங்கது : ஒருசொல்; ஆங்கு, அசைநிலையுமாம்.

இனி, தொல்லிசையையுடைய உலகத்துத் தோன்றி மேற்சொல் லப்பட்ட நன்மைகள் தமக்குப் பரக்க ஒழுகாது நின்று விளிந்தோர் பலரென உரைப்பாரும் உளர்.

இது, நிலையாமை கூறி, இனிது ஒழுகென்றமையாற் பொருண் மொழிக்காஞ்சி.

(கு - ரை.) 1. புறநா. 209 : 2; தொழுவர் - தொழில்செய்வார்; மதுரைக். 89.

3. உம்மீறு உந்தாய்த் திரிந்ததென்பதற்கு, 'பாயுந்து' என்பது மேற்கோள்; இ. வி. சூ. 244, உரை.

1 - 3. "நெல்லரியும்......பாயுந்து; இதிற் 'பாயும்' எனற்பாலது 'பாயுந்து' என வந்தது" (தொல். இடை. சூ 7, தெய்வச்.) உம் உந்தாயிற்றென்பதற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 340; நன். வி. சூ. 341.

5. புறநா. 29 : 15.

4 - 6. குரவை : புறநா. 129 : 1 - 3; கலித். 106 : 32 - 3; அகநா. 20 : 7.

3 - 6. 'பாயுந்து', 'தூங்குந்து' என வருவன பெயரெச்சவினைத் திரிசொல் என்பர்; தொல். எச்ச. சூ. 61, ந.

4. திமில் - தோணி; பரதவர் - நுளையவர்; இவர் கடற்கரையில் வாழும் ஒருவகைச் சாதியார்; திமிலர் என்றும் கூறப்படுவர்.

7. "புன்னை, உடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்" (குறுந். 5 : 2 - 3). 'கலித்தல்' தழைப்பென்னும் பொருளில் வந்ததற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 93, தெய்வச்.

9. "எல்லென்பது உரிச்சொனீர்மைத்தாயினும், ஆசிரியர் இடைச் சொல்லாக ஓதினமையான் இடைச்சொல்லென்று கோடும்; 'எல்வளை' என எல்லென்பது இலங்குதற்கண் வந்தவாறு" (தொல். இடை. சூ. 21, சே.) தலைக்கை : கலித். 73 : 16, ந.

8 - 9. "மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன், முழவுறழ் தடக் கையி னியல வேந்தி, மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து" (முருகு. 214 - 6).

11. "மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானற், பரதவர் மகளிர் குரவையொ டொலிப்ப" (மதுரைக். 96 - 6); "அணிமலர் முண்டகத் தாய்பூங் கோதை, மணிமரு ளைம்பால் வண்டுபடத் தைஇ" (நற். 125 : 2 - 3); "முண்டகக் கோதை நனையத், தெண்டிரைப் பௌவம் பாய்ந்து நின் றோளே" (ஐங்குறு. 121). முண்டகக் கோதை : தொல். புள்ளி. சூ. 1, ந. மேற்.

1 - 17. "நெல்லரியும்...கெழீஇய என்ற வழி உம் உந்தாயிற்று" (தொல். இடை. சூ. 43, தெய்வச்.); பெயரெச்ச வினை அடுக்கி வந்து ஒரு பெயர் கொண்டதற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 354.

1 - 19. "நெல்லரியு மிருந்தொழுவர் என்னும் புறத்தொகைப் பாட்டினுள் 'தெண்கடற்றிரை மிசைப்பாயுந்து' எனவும், 'தண்குர வைச் சீர்தூங்குந்து' எனவும், 'எல்வளை மகளிர் தலைக்கை தருஉந்து' எனவும், 'முந்நீர்ப் பாயும்' எனவும் செய்யுமென்னும் பெயரெச்சம் அடுக்கி, 'ஓம்பா வீகை மாவே ளெவ்வி, புனலம் புதவின் மிழலை' என்னும் ஒருபொருள் கொண்டு முடிந்தவாறு கண்டுகொள்க; ஆங்குத் 'தாங்கா விளையு ணல்லூர் கெழீஇய' என்னும் பெயரெச்சம் இடைநிலையாய் வந்தது" (தொல். வினை. சூ. 36, சே.; ந.; இ. வி. சூ. 328, உரை).

20. மு. ஐங்குறு. 9 : 4.

21. தொன்முதிர்வேளிர் - அகத்திய முனிவராற் கொண்டுவரப் பட்ட பழமை முதிர்ந்த வேளிர்; இது, "துவராபதிப்போந்து நிலங் கடந்த நெடுமுடி யண்ணல்வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும்...கொண்டுபோந்து", "மலய மாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்" (தொல். பாயிரம், ந.; அகத். சூ. 32, ந.) எனப் போந்துள்ள வாக்கியங்களால் விளங்கு கின்றது.

22. 'தரல்' படர்க்கைக்கண் வந்ததற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 380.

24. "'நெல்லரியு மிருந்தொழுவர்' என்னும் புறப்பாட்டினுள், 'நின்று நிலைஇயர் நின்னுண்மீன்' என அவன் நாளிற்கு முற்கூறிய வாற்றான் ஓர் இடையூறுகண்டு அவன்கண் அன்பால் அஞ்சி ஓம்படை கூறியது" (தொல். புறத். சூ. 36, ந.). 24 - 5. புறநா. 229 : 10 - 12.

29. "அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையும், ஆணணி புகுதலு மழிபடை தாங்கலும், வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்த" (சிறுபாண். 210 - 12); "ஒன்னா ரோட்டிய செருப்புகன் மறவர், வாள் வலம் புணர்ந்தநின் றாள்வலம் வாழ்த்த" (மதுரைக். 726 - 7); "தாள் வலம் படவென்று" (கலித். 31 : 13).

30. "வரையாது கொடுத்தலும், பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்த" (சிறுபாண். 217 - 8).

32. தண்கமழ்தேறல் : "தண்கமழ் நறுந்தேறல்" (கலித். 73 : 4); "தண்ணற வுண்களி" (திருச்சிற். 122).

31 - 33. புறநா. 56 : 18 - 21, 367 : 6 - 7; "மகிழ்..........மகளிர், போக்கில் பொலங்கல நிறையப் பல்கால், வாக்குபு தரத்தர" (பொருந. 84 - 7); "இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய, மணங்கமழ் தேறன் மடுப்ப நாளும், மகிழ்ந்தினி துறைமதி பெரும" (மதுரைக். 779 - 81); "பூங்குழை மகளிர் பொலங்கலத் தேந்திய, தேங்கமழ் தேறலொடு தெளிமது மடுப்பினும்" (பெருங். 2. 14 : 60 - 61).

34 - 6. புறநா. 165 : 1 - 5, 366 : 1 - 5; "மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா, தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய், வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனும், ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே" (கம்ப. வேள்வி. 30). (உச)

(உரு) மீன்றிகழ் விசும்பிற் பாயிரு ளகல
ஈண்டுசெலன் மரபிற் றன்னியல் வழாஅ
துரவுச்சினந் திருகிய வுருகெழு ஞாயிறு
நிலவுத்திகழ் மதியமொடு நிலஞ்சேர்ந் தாஅங்
குடலருந் துப்பி னொன்றுமொழி வேந்தரை
அணங்கரும் பறந்தலை யுணங்கப் பண்ணி
பிணியுறு முரசங் கொண்ட காலை
நிலைதிரி பெறியத் திண்மடை கலங்கிச்
சிதைதலுய்ந் தன்றோ நின்வேல் செழிய
முலைபொலி யாக முருப்ப நூறி
மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்
ஒண்ணுதன் மகளிர் கைம்மை கூர
அவிரறல் கடுக்கு மம்மென்
குவையிருங் கூந்தல் கொய்தல் கண்டே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனைக் கல்லாடனார் பாடியது.

(இ - ள்.) மீன் விளங்கும் வானத்தின்கண் பரந்த இருள் நீங்க ஓங்கிச் செல்லுதல் முறைமையையுடைய தனது தன்மையிற் பிழையாது வலிய வெம்மை *முறுகிய உட்குப் பொருந்திய ஞாயிறு நிலா விளங்கும் திங்களுடனே நிலத்தைப் பொருந்தினாற்போலப் பகைத்தற்கரிய வலியையுடைய வஞ்சினங் கூறிய இரு வேந்தரை வருத்துதற்கரிய போர்க் களத்தின்கண்ணே மாயப் பொருது அவருடைய வாராற் பிணிப்புற்ற முரசத்தைக் கொண்ட காலத்து நின்ற நிலையிலே நின்று நின்னைச் சூழ்ந்துகொண்ட வீரரைப் புரிந்தெறிதலால் திண்ணரிய கொளுத்துக் கலங்கிக் கெடுதல் பிழைத்தது, நினது வேல்; செழிய! முலை பொலிந்த மார்பம் அழல அறைந்துகொண்டு அறிவு மயங்கியுற்ற அளவற்ற அழுகை யாரவாரத்தையுடைய ஒண்ணுதல் மகளிர் கைம்மை நோன்பிலே மிக விளங்கும் அறலை யொக்கும் அழகிய மெல்லிய குவிந்த கரிய மயிரினைக் கொய்த பரிசைக் கண்டு—எ - று.

செழிய! மகளிர் கூந்தல் கொய்தல் கண்டு நின் வேல் சிதைதல் உய்ந்ததெனக் கூட்டுக.

ஈண்டுச் செலன்மரபெனவும், ஐம்பாற் குவையிருங் கூந்த லெனவும் பாடமோதுவாரு முளர்.

உய்ந்தன்றே : ஓ, அசைநிலை.

(கு - ரை.) 3 - 4. சேர சோழர்க்கு ஞாயிறும் மதியமும் உவமை: புறநா. 55 : 4 - 6, 367 : 13 - 4.

5. ஒன்றுமொழி : புறநா. 71 - 3; "தன்பான் மனையா ளயலான் றலைக் கண்டு பின்னும், இன்பா லடிசிற் கிவர்கின்றகைப் பேடி போலாம், நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர்பார்ப்பார், என்பாரை யோம்பே னெனின்யானவ னாகவென்றான்" (சீவக. 443); "நின்னை யறி வன்பெரிது நின்முறையு ளாய, கன்னியையொர் காளைபிற னெய்துவது கண்டு, மன்னுமண வில்லுள்வயி றுரவயில் கின்றாய்க், கின்னுமுள வோபுதிய வென்றுமிக நக்கான்" (சூளா. அரசியல். 156); "வினையிலென் மகன்றனுயிர் வேறுசெய் வித்தோனைக், குனிசிலையி னாளையுயிர் கோறல்புரி யேனேல், மனைவியய லான்மருவல் கண்டு மவள் கையாற், றினையளவு மோர்பொழுது தின்றவனு மாவேன்" (வி. பா. பதின்மூன்றாம்போர். 184).

5 - 7. வென்ற அரசர் பகைவருடைய முரசைக் கவர்ந்துகொள்ளு தல் மரபு; புறநா. 26: 6 - 7, 72: 8 - 9, 179: 4; "அரசுபட வமருழக்கி, முரசுகொண்டு களம்வேட்ட...வேந்தே", "வேந்தர், இன்னிசை முரச மிடைப்புலத் தொழிய...புறம்பெற்று" (மதுரைக்.

---

* முறுகிய - மிகுத்த; சீவக. 1503; காஞ்சிப். திருநகர். 1.

128 - 30, 348 - 50); "எழுவர் நல்வல மடங்க வொருபகல், முரசொடு வெண்குடை யகப்படுத்து" (அகநா. 36 : 20 - 21).

8. மடை - மூட்டுவாய்; புறநா. 150.

8 - 9. தலைவனது வேலினைப் புகழ்ந்ததற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 17, இளம்.

10. உருப்ப : புறநா. 237 : 10.

11. மெய் - அறிவு; "விதமுறு வடிவங் கண்டே மெய்யொருப் பட்ட தில்லை" (திருவால. 30 : 31). பூசல் - அழுகையாரவாரம்; "கரையா தேனிடு பூசல் கண்டுமொன், றுரையாய்" (கம்ப. கிட்கிந்தா. அரசியல், 8).

13. அறல் - ஆற்றில் நீர் அற்றற்றுச் செல்லுமிடத்துள்ள கரு மணல். பகைவருடைய மனைவியர் கூந்தல் களைதலைக் கண்டு இரங்கி இவன் போர் செய்தலைத் தவிர்ந்தா னென்பது கருத்து. (உரு)

(உசு) நளிகட லிருங்குட்டத்து
வளிபுடைத்த கலம்போலக்
களிறுசென்று களனகற்றவும்
களனகற்றிய வியலாங்கண்
ஒளிறிலைய வெஃகேந்தி
அரைசுபட வமருழக்கி
உரைசெல முரசுவெளவி
முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின்
அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய
ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்ற மாக
மன்ன ரேவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே
நோற்றோர் மன்றநின் பகைவர் நின்னொடு
மாற்றா ரென்னும் பெயர்பெற்
றாற்றா ராயினு மாண்டுவாழ் வோரே.

திணையும் துறையும் அவை.

அவனை மாங்குடி கிழார் பாடியது.

(இ - ள்.)—பெரிய கடலின்கட் பெரிய ஆழத்திடத்துக் காற்றாற் புடைக்கப்பட்ட * மரக்கலம் நீரைக் கிழித்து ஓடுமாறுபோலக் களிறு

* "வங்கம்போழ் முந்நீர்" (பு. வெ. 185).

சென்று போர்க்களத்தை இடமகலச் செய்ய அவ்வாறு களமகலச் செய்த பரந்த இடத்தின்கண் விளங்கிய இலையையுடைய வேலை யேந்தி வேந்துபடப் போரைக் கலக்கிப் புகழ் பரக்க அவர் முரசைக் கொண்டு முடித் தலையை அடுப்பாகக் கொண்டு குருதிப் புனலாகிய உலையின்கண் தசையும் மூளையும் முதலாயினவற்றைப் பெய்து வீர வளையையுடைய தோளாகிய துடுப்பால் துழாவி அடப்பட்ட உணவால் அடுக்களத்தின்கட் களவேள்வி வேட்ட கொல்லும் போரையுடைய செழிய! அமைந்த கேள்வியையும் ஐம்புலனும் அடங்கிய விரதங்களையும் நான்கு வேதத்தையுமுடைய அந்தணர் சுற்றமாக வேந்தர் அதற்கேற்ப ஏவல் செய்ய நிலைபெற்ற வேள்வியைச் செய்து முடித்த வாய்த்த வாளினையுடைய வேந்தே! தவஞ்செய்தார், யாவர்க்குந் தெளிவாக நின்னுடைய பகைவர்; நினக்குப் பகைவரென்னும் பெயரைப் பெற்று நின்னொடு போர் செய்தற்கு மாட்டாராயினும் அத்துறக்கத்து வாழ்வோர்—எ - று.

களனகற்றவு மென்னும் உம்மை அசைநிலை.

மன்னிய வேள்வி யென்றது, களவேள்வி யொழிந்த வேள்விகளை.

செழிய! வேந்தே! ஆற்றுராயினும், ஆண்டு வாழ்வோராகிய நின் பகைவர் மாற்றுரென்னும் பெயர்பெற்று நோற்றுரெனக் கூட்டுக.

(கு - ரை.) 1. புறநா. 20 : 1.

1 - 3. புறநா. 13 : 5, குறிப்புரை; கலித். 132 : 5 - 8.

5. ஒளிறுதல் - விளங்குதல்; புறநா. 177. 1; "ஒளிறுவாள் விழுப் புண்" (நெடுநல். 172); "ஒளிறுவாண் மறவரும்" (மணி. 1 : 68).

6. மு. மதுரைக். 128.

7. புறநா. 25 : 5 - 7, குறிப்புரை.

8 - 10. "ஆண்டலை யணங்கடுப்பின், வயவேந்த ரொண்குருதி, சினத்தீயிற் பெயர்புபொங்க...தொடித்தோட்கை துடுப்பாக, ஆடுற்ற வூன்சோறு" (மதுரைக். 29 - 35); "முடித்தலை யடுப்பிற் பிடர்த் தலைத் தாழித், தொடித்தோட் டுடுப்பிற் றுழைஇய வூன்சோறு" (சிலப். 26 : 242 - 3).

11. களம் வேட்டலென்பது, பலிகொடுத்தலென்றும் களவேள்வி செய்தலென்றும் வழங்கும்; புறநா. 372, 12; "கறுவுகொ ணெஞ்ச மொடு களம்வேட் டன்றே" (முருகு. 100); "அரசுகெட...களம் வேட்ட, வடுதிறலுயர் புகழ்வேந்தே" (மதுரைக். 128 - 30); "பாண்டி யன் சோழற் காய்ந்து, பெருங்கள வேள்வி செய்த பீடுடைக் காட்டு நாட்டு" (திருவால. 44 : 54); "பிடித்தாடி யன்ன பிறழ்பற்பே யாரக், கொடித்தானை மன்னன் கொடுத்தான் - முடித்தலைத், தோளொடு வீழ்ந்த தொடிக்கை துடுப்பாக, மூளையஞ் சோற்றை முகந்து" (பு. வெ. 160). அரசன் வேட்டதற்கு மேற்கோள்; தொல். மரபு. சூ. 72, பேர்.

12. கொள்கை - விரதம்; "தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்" (முருகு. 89).

13. புறநா. 17 : 1 - 4, குறிப்புரை.

12 - 5. "நளிகட லிருங்குட்டத் தென்ற புறப்பாட்டில், ஆன்ற கேள்வி...வாள்வேந்தே என வரும் அடிகளில், பார்ப்பார் வேட்பித்த வாறும் அரசன் வேட்டவாறும் கண்டுகொள்க" (தொல். புறத். சூ. 16, இளம்.); "நளிகட லிருங்குட்டத்து என்னும் புறப்பாட்டினுள் அந்தணன் வேட்பித்தலும் அரசன் வேட்டலும் வந்தன" (தொல். புறத். சூ. 20, ந.).

16. "நோற்றோர் மன்ற தோழி" (குறுந். 344).

16 - 8. "புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க மென்னுமீ தரு மறைப் பொருளே" (கம்ப. நகர. 5); புறங்கொடாது போரின்மாண்ட பகைவர் வீரசுவர்க்கம் பெறுவ ரென்பது இங்கே அறியத்தக்கது.

மு. அரசன் களவேள்வி வேட்டதற்கு மேற்கோள்; தொல். புறத். சூ. 17, இளம்.; "நளிகட லிருங்குட்டத்து என்னும் புறப்பாட்டுப் பலி கொடுத்தது" (தொல். புறத். சூ. 21, ந.). (உசு)

(உஎ) சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றித ழலரி னிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை
உரையும் பாட்டு முடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்திசி னோர் பலரே
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப வென்பதஞ் செய்வினை முடித்தெனக்
கேட்ப லெந்தை சேட்சென்னி நலங்கிள்ளி
தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தே டிரிதரு முலகத்து
வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை யாகுமதி யருளிலர்
கொடாமை வல்ல ராகுக
கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே.

(பி - ம்.) 3 'விழுக்குடி' 6 'போன்மாய்ந்திசினோர்' 7 'பாடுபுகழ்' 17 'அருளி'

திணை - பொதுவியல்; துறை - முதுமொழிக்காஞ்சி.

* சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடியது.

(இ - ள்.) சேற்றின்கண்ணே வளரும் தாமரை பூத்த ஒள்ளிய நிறத்தை உடைத்தாகிய நூறுகிய இதழையுடைய மலரினது நிரையைக் கண்டாற் போன்ற ஏற்றத் தாழ்வில்லாத, சிறந்த குடியின்கட் பிறந்து † வீற்றிருந்த வேந்தரை எண்ணுங்காலத்துப் புகழும் பாட்டும் உடையோர் சிலர்; தாமரையினது இலையையொப்பப் பயன்படாது மாய்ந்தோர் பலர்; புலவராற் பாடப்படும் புகழையுடையோர் ஆகாயத்தின் கண் பாகனாற் செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவாரென்று சொல்லுவார் அறிவுடையோர், தாம் செய்யும் நல்வினையை முடித்தென்று சொல்லக் கேட்பேன்; என்னுடைய இறைவ! சேட்சென்னி! நலங்கிள்ளி! வளர்ந்ததொன்று பின் குறைதலுண்டாதலும், குறைந்ததொன்று பின் வளர்தலுண்டாதலும், பிறந்ததொன்று பின் இறத்தலுண்டாதலும், இறந்ததொன்று பின் பிறத்தலுண்டாதலும் கல்விமுகத்தான் அறியாத மடவோரையும் அறியக் காட்டித் திங்களாகிய தெய்வம் இயங்குகின்ற தேயத்தின்கண் ஒன்றை மாட்டாராயினும் வல்லாராயினும் வறுமையான் வருத்தமுற்று வந்தோரது உண்ணாத மருங்கைப் பார்த்து அவர்க்கருளி வழங்கவல்லை யாகுக; அருளிலராய்க் கொடாமையை வல்லராகுக, கெடாத வலியையுடைய நினக்குப் பகையாய் மாறுபட்டோர்—எ - று.

நூற்றிதழலரின் நிரைகண்டன்ன உரையும் பாட்டும் உடையோர் சிலரென இயையும்.

நிரைகண்டன்ன விழுத்திணை யென்றுரைப்பினும் அமையும்.

அருளிலர் கொடாமை வல்லராகுக என்றதனாற் பயன், அவை உடையோர் தத்தம் பகைவரை வெல்வராதலால், பகையெதிர்ந்தோர் அவை இலராக வென்பதாம்.

செய்வினை முடித்து வானவூர்தி எய்துப வென இயையும்.

(கு - ரை.) 2. நூற்றிதழ் : வி. பா. சம்பவச். 81.

3. 'விழுமம்' சிறப்பாகிய குறிப்பை உணர்த்துதற்கு மேற்கோள் ; தொல். உரி. சூ. 57, சே.; தொல். உரி. சூ. 55, ந.; இ. வி. சூ. 282, உரை.

1 - 4. சாதிக்கேற்ற உவமை யென்பர்; தண்டி. சூ. 88, உரை.; இ. வி. சூ. 639, உரை.

---

* இப்பாட்டின் 10-ஆம் அடியில், தலைவன் பெயர் அமைந்திருத்தல் காண்க.

† வீற்றிருத்தல் - கவலையின்றி யிருத்தல்; "வீற்றிருந் தவருங் கற்ருர்" (சீவக. 1676); "தமிழ்ப்புலவ, ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்" (திருவள்ளுவ மாலை, 16).

5. புறநா. 165 : 1 - 3; "நல்லிசை நிலைஇ", "நல்லிசை நிலைஇய நனந்தலை யுலகத்து" (பதிற். 14, 18); "தொலையா நல்லிசை யுலக மொடு நிற்ப", "செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட" (மலைபடு. 70, 388); "மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் .....சாவா வுடம்பெய்தி னர்" (திரி. 16); "ஒருவன திரண்டி யாக்கை யூன்பயி னரம்பின் யாத்த, உருவமும் புகழு மென்றங் கவற்றினுழ் காத்து வந்து, மருவிய வுருவ மிங்கே மறைந்துபோ மற்ற யாக்கை, திருவமர்ந் துலக மேத்தச் சிறந்துபின் னிற்கு மன்றே", "பொன்று மிவ்வுட லின்பொருட், டென்று நிற்கு மிரும்புக, ழின்றி நீர்கழிந் தீர்களாற், குன்றின் மேற்குடை வேந் திர்காள்" (சூளா. சீயவதை. 204, அரசியல். 226). இவ்வடியை, "புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும்; அவற்றுள், உரைப்பார் உரைப்பவையென எல்லார்க்குமுரிய வழக்கினையே எடுத் தாராயினும் இனம்பற்றிப் புலவர்க்கேயுரிய செய்யுளும் கொள்ளப் படும்; படவே, பாடுவார் பாடுவனவெல்லாம் புகழாமென்பதூஉம் பெற்றும்" (குறள், 232) என உரைநடையாக அமைத்தருளினர் பரிமேலழகர்.

6. "மரையிலையின் மாய்ந்தார் பலர்" (நாலடி. 359).

8. "ஊரா நற்றேர்" (மணி. 6 : 39).

7 - 9. புறநா. 50 : 14 - 5; "புகழுடம்பான் இவ்வுலகும் புத்தே ளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே எய்தாமையின், 'புலவரைப் போற் றுது' என்றார்; அவன் இரண்டுலகும் ஒருங்கெய்துதல், 'புலவர் பாடும்......முடித்து' எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது"; "புலவர் பாடும் புகழுடையோர்......எய்துவராதலின் துறக்கச் செலவு சொல்ல வேண்டாவாயிற்று" (குறள், 234, 970, பரிமேல்.).

11 - 4. புறநா. 8-ஆம் செய்யுளின் குறிப்புரையைப் பார்க்க.

"அங்கண்மா ஞாலத்தை விளக்கு மாய்கதிர்த், திங்களு மொரு முறை வளருந் தேயுமால்" (கம்ப. சடாயுவுயிர். 196).

15. புறநா. 57 : 1.

17-8. அருளும் கொடையுமுடையோர் தம் பகையை வெல்வாரென் பதை, "திருமகற் பெற்றெனச் செம்பொற் குன்றெனப், பெருநல நிதி தலை திறந்து பீடுடை, இருநிலத் திரவலர்க் கார்த்தி யின்னணம், செரு நிலம் பயப்புறச் செல்வன் செல்லுமே" (சீவக. 331) என்னுஞ்செய்யு ளாலும், அதனுரையில், நச்சினார்க்கினியர் 'அருளிலர், கொடாமை வல்லராகுக' என மேற்கோள் காட்டியிருத்தலாலும் அறிக. இது ககர வீற்று வியங்கோள் பலர்பாலில் (நன். சூ. 337, மயிலை.) வருதற்கும், வியங்கோள் வாழ்த்துதற்பொருளில் (இ. வி. சூ. 239, உரை) வருதற் கும் மேற்கோள்.

18 - 9. கலித். 11 : 1 - 4. (உள)

(உ அ) சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும்
கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
மாவு மருளு முளப்பட வாழ்நர்க்
கெண்பே ரெச்ச மென்றிவை யெல்லாம்
பேதைமை யல்ல தூதிய மில்லென
முன்னு மறிந்தோர் கூறின ரின்னும்
அதன்றிற மத்தையா னுரைக்க வந்தது
வட்ட வரிய செம்பொறிச் சேவல்
ஏனல் காப்போ ருணர்த்திய கூஉம்
கானத் தோர்நின் றெவ்வர் நீயே
புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்
ஆடுகளங் கடுக்கு மகநாட் டையே
அதனால், அறனும் பொருளு மின்பமு மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்றா மைந்நிற் போற்றா மையே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி வாழ்த்து.
திணை - பொதுவியல்; துறை - முதுமொழிக் காஞ்சியுமாம்.
அவனை அவர் பாடியது.

(இ - ள்.) மக்கட்பிறப்பிற் சிறப்பில்லாத குருடும், வடிவில்லாத தசைத்திரளும், கூனும், குறளும், ஊமும், செவிடும், மாவும், மருளும் உளப்பட உலகத்து உயிர்வாழ்வார்க்கு எட்டு வகைப்பட்ட பெரிய எச்சமென்று சொல்லப்பட்ட இவையெல்லாம் பேதைத்தன்மையை யுடைய பிறப்பாவதல்லது இவற்றால் பயனில்லை யென முற்காலத்தும் அறிந்தோர் சொன்னார்; இன்னமும் அவ்வூதியத்தின் பாகுபாட்டை யான் சொல்ல வந்தது, வட்டமாகிய வரியை யுடைத்தாகிய செம்பொறியையுடைய காட்டுக்கோழிச்சேவல் தினைப்புனம் காப்போரைத் துயிலுணர்த்துவதாகக் கூவும் காட்டின்கண் உள்ளோர், நின்னுடைய பகைவர்; நீதான் வேலிப்புறத்து நின்று வேண்டிய மாக்கட்கு அறத்தைக் கருதி, அகத்துள்ளோர் தாம் பிடுங்கியெறியும் கரும்பாகிய போகடப்பட்ட கழை வாவியகத்துத் தாமரையினது பொலிந்த பூச் சிதற வீழ்ந்ததாக, அது கூத்தர் ஆடுகளத்தை யொக்கும் உள்ளாகிய நாட்டை உடையை; ஆதலான், அறனும் பொருளும் இன்பமும் என்னப்பட்ட மூன்றும் செய்வதற் குதவும் பெரும! நினது செல்வம்; உதவாதொழிதல் நின்னைப் பாதுகாவாமை—எ - று.

பிண்ட மென்பது, மணைபோலப் பிறக்குமது. மாவென்பது, விலங்கு வடிவாகப் பிறக்குமது. மருளென்பது, அறிவின்றியே மயங்கி யிருக்குமது.

ஊதியமென்பது, அறம் பொரு ளின்பங்களை; அன்றி அறமென் பாரும் உளர்.

நிற்போற்றுமை யென்ற கருத்து, சிதடு முதல் அறிவின்மை (வரை) பிறப்பொடு கூடாதவாறுபோல நின்செல்வமும் அறமுதலியன செய்தற் கேற்றிருப்பச் செய்யாமையாகிய அறிவின்மை, மக்கள் யாக்கையிற் பிறந்தும் பயனில் பிறப்பாகப் பண்ணுதலால் நினக்கு வரும் பொல்லாங் கைப் போற்றுமை யென்பதாம்.

கானத்தோர் நின் பகைவ ரென்ற வதனாற் பகையின்மை தோற்றி நின்றது.

மாவும் மருளும் உளப்படச் சிதடு முதலாகப் பிறப்பொடு கூட்டப் படாத பெரிய எச்ச மெனப்பட்ட எட்டுமெனக் கூட்டியுரைப்பினும் அமையும்.

இஃது அறஞ்செய்யாதானை அறஞ்செய்க வெனக் கூறியவாறு.

அதன் திற மென்பதற்கு அப் பேதைமை யென்றாக்கி, அஃது உண்டானால் வரும் பொல்லாங்கும், அது போனால் வரும் நன்மையு மென்றுரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 2. மு. சிலப். 5 : 118; மணி. 12 : 97.

1 - 4. "கூனொடு வெதிரே பங்கு குருடுபே ரூமை யானோர், ஊனம டைந்த புன்மை யாக்கையோ டொழியு மம்மா" (கந்த. பானுகோபன் வதை. 24); "குறளொடு செவிடு மூங்கை கூன்மருள் குருடு மாவே, உறுமுறுப் பில்லாப் பிண்ட மோதிய வெண்மெய் யெச்சம்" (சூடாமணி நிகண்டு, 12 : 94).

10. "சூழிருஞ் சடைக டாங்கிச் சுடர்முடி துறந்து கான்போய், வீழ்சரு கருந்தி நீவிர் மெய்த்தவம் புரிதல் வேண்டும்" (நைடதம், போர் புரி. 3).

12. புய்த்தல் : "புய்ந்துகால் போகி" (களவழி. 39); "கோடு புய்க் கல்லா துழக்கு நாடகேள்" (கலித். 38); "கோட்டினிற் குத்திக் குடர்புய்த் துறுத்து" (மணி. 13 : 47).

13. பூ என்பது பொலிவினை உணர்த்தலால், 'பூம்போது' பண்புத் தொகையுள் அடங்குமென்பர்; நன். சூ. 397, மயிலை.

12 - 4. "நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும், வெள்ளை யன்ன வொள்வீ யுதிர்ந்து, சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய், மணி மரு ளையத வுறழக் காமர், துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர, வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப" (மதுரைக். 279 - 84); "பல் லிதழ் தாஅய், வெறிக்களங் கடுக்கும் வியலறை" (மலைபடு. 149 - 50).

17. ஆற்றுமை - உதவாமை. 'அறனும் பொருளும் இன்பமும் மூன்றும் ஆற்றும் பெருமநின் செல்வம்' என்று உறுதிப்பொருள் மூன் றையும் அறிவித்தமையின், இச் செய்யுளும் முதுமொழிக் காஞ்சி யாயிற்று. (உஅ)

(உகூ) அழல்புரிந்த வடர்தாமரை
ஐதடர்ந்த நூற்பெய்து
புனைவினைப் பொலிந்த பொலநறுந் தெரியல்
பாறுமயி ரிருந்தலை பொலியச் சூடிப்
பாண்முற் றுகநின் னாண்மகி ழிருக்கை
பாண்முற் றொழிந்த பின்றை மகளிர்
தோண்முற் றுகநின் சாந்துபுல ரகலம், ஆங்க
முனிவின் முற்றத் தினிதுமுர சியம்பக்
கொடியோர்த் தெறுதலுஞ் செவ்வியோர்க் களித்தலும்
ஒடியா முறையின் மடிவிலை யாகி
நல்லத னலனுந் தீயதன் றீமையும்
இல்லை யென்போர்க் கினனா கிலியர்
நெல்விளை கழனிப் படுபுள் ளோப்புநர்
ஒழிமடல் விறகிற் கழிமீன் சுட்டு
வெங்கட் டொலைச்சியு மமையார் தெங்கின்
இளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு
பெற்றன ருவக்குநின் படைகொண் மாக்கள்
பற்றா மாக்களிற் பரிவுமுந் துறுத்துக்
கூவை துற்ற நாற்காற் பந்தர்ச்
சிறுமனை வாழ்க்கையி னொரீஇ வருநர்க்
குதவி யாற்று நண்பிற் பண்புடை
ஊழிற் றாகநின் செய்கை விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்துக் கூடிய
நகைப்புற னாகநின் சுற்றம்
இசைப்புற னாகநீ யோம்பிய பொருளே.

(பி - ம்.) 3 'பொலனறுந்' 4 'மாறுமயிரிருந்தலை' 14 'இழிமடல்'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) எரியால் ஆக்கப்பட்ட தகடாகச் செய்த தாமரைப்பூவுடனே ஐதாகத் தட்டிக் கம்பியாகச் செய்த நூலின்கண்ணே யிட்டு அலங்கரித்த தொழிலாற் பொலிந்த பொன்னானியன்ற நல்ல மாலையைப் பாறிய மயிரையுடைய கரிய தலை பொலிவுபெறச் சூடிப் பாண் சுற்றம் சூழ்வதாக, நினது நாட்காலத்து மகிழ்ந்திருக்கும் ஓலக்கம்; பாண் சுற்றம் சூழலொழிந்த பின்னர் நினது உரிமை மகளிருடைய தோள் சூழ்வதாக, நின் சாந்து புலர்ந்த மார்பம்; எப்போதும் வெறுப்பில்லாத அலங்காரத்

தையுடைய கோயின்முற்றத்தின்கண்ணே இனிதாக முரசு ஒலிப்பத் தீயோரைத் தண்டஞ் செய்தலும் நடுவுநிலைமையுடையோர்க்கு அருள் பண்ணுதலுமாகிய இடையறுத முறைமையாற் சோம்புதலையுடையை யல்லையாகி நல்வினையினது நன்மையும் தீவினையினது தீமையும் இல்லை யென்று சொல்லுவோர்க்கு இனமாகா தொழிவாயாக; நெல் விளைந்த வயலிடத் துளதாகிய புள்ளை ஓட்டுவார் வீழ்ந்த பனங்கருக்காகின்ற விறகாற் கழிக்கண் மீனைச் சுட்டு அதனுடனே வெய்ய மதுவை உண்டு தொலைத்தும் அமையாராய்த் தெங்கினது இளநீரை உதிர்க்கும் செல்வம் மிக்க நல்ல நாட்டைப் பெற்று மகிழும் நின்னுடைய படைக்கலம் பிடித்த மாந்தர் நின்னுடைய பகைவரைப் போல இரக்கத்தை முன்னிட்டுக் கொண்டு கூவை யிலையால் வேயப்பட்ட நான்கு காலையுடைய பந்த ராகிய சிறிய இல்லின்கண் வாழும் வாழ்க்கையினின்று நீங்கி நின்பால் வருவார்க்கு உதவிசெய்யும் நட்போடு கூடிய குணத்தையுடைய முறைமை யுடைத்தாக, நினது தொழில்; *விழவின்கண் ஆடும் கூத்த ரது வேறுபட்ட கோலம் போல அடைவடைவே தோன்றி இயங்கி இறந்து போகின்ற இவ்வுலகத்தின்கண் பொருந்திய மகிழ்ச்சியிடத்த தாக, நின்னுடைய கிளை; புகழிடத்ததாக, நீ பாதுகாத்த பொருள்— எ - று.

நின் நாண்மகிழிருக்கை பாண் முற்றுக; அதன்பின் அகலம் தோள் முற்றுக; நீ மடிவிலையாய் இனனாகா தொழிவாயாக; நின் பற்றுமாக் களைப் போல முற்காலத்துச் சிறுமனை வாழும் வாழ்க்கையின் நீங்கி இப்பொழுது நன்னாடு பெற்று உவக்கும் நின் படைகொண் மாக்கள் வருநர்க்கு உதவியாற்றும் நண்போடு கூடிய பண்புடைத்தாகிய முறைமையை யுடைத்தாக நின் செய்கை; நகைப்புறனாக நின் சுற்றம்; இசைப்புறனாக நீ ஓம்பிய பொருளெனக் கூட்டுக.

ஒரீஇ (20) என்பதனை ஒருவவெனத் திரிப்பினும் அமையும்.

நறுமை பொன்னிற்கு இன்றெனினும் தெரியற்கு அடையாய் நின்றது; நன்மையுமாம்.

ஆங்க : அசை.

நசைப்புறனாகவென்று உரைப்பாரும் உளர்.

இதனாற் சொல்லியது: படைகொள் மாக்களும் முறை முதலாயின தப்பாமற் செய்து இன்புற்றிருக்கும்படி சிறப்புச் செய்யவேண்டு மென்பதாயிற்று.

---

* "ஆடுங் கூத்திய ரணியே போல, வேற்றோ ரணியொடு வந்தீ ரோவென" (மணி. 12 : 51 : 2); "ஆடுங் கூத்தர்போ லாருயி ரொரு வழிக், கூடிய கோலத் தொருங்குநின் றியலாது" (சிலப். 28 : 165 - 6) என்பவை இங்கே கருதற்குரியன.

(கு - ரை.) 1. புறநா. 11 : 16.

2. ஐது - மெல்லிது; ஐ : பகுதி; "ஐதுவீ ழிகுபெயல்" (சிறுபாண். 13).

3. பொல மென்னுஞ் சொல் பிற கணத்து மகரங் கெட்டு முடிதலுக்கு மேற்கோள்; தொல். புள்ளிமயங்கு. சூ. 61, ந.

5. நாண்மகிழிருக்கை - காலையில் யாவரும் தன்னைக் காணும்படி காட்சிக்கு எளியனாய் வீற்றிருக்கை; இது நாளவை யெனவும் கூறப் படும்; புறநா. 54 : 3, 123 : 1.

1 - 5. புறநா. 11 : 11 - 7, கு - ரை. 319 : 14 - 5; 364 : 1 - 3; "எரியகைந் தன்ன வேடி ருமரை, சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி, நூலின் வலவா நுணங்கரின் மாலை, வாலொளி முத்தமொடு பாடினி யணிய" (பொருந. 159 - 62, கு - ரை.).

11 - 2. இல்லையென்போர் - நாஸ்திகர்; இவ்வடிகளை, 'சிறியவின மாவது நல்லத னலனுந் தீயதன் றீமையு மில்லென்போரும்... உள்ளிட்ட குழு' (குறள், 46-ஆம் அதிகார அவதாரிகை) என உரை நடையாக அமைத்தனர் பரிமேலழகர்; 'அறிவாவது : நல்லதனலனுந் தீயதன் றீமையு முள்ளவாறுணர்தல்' (தொல். பொருளியல், சூ. 53, ந.).

15. புறநா. 24 : 5.

19. கூவை - மஞ்சளைப் போல்வதொரு புதல்; இது தென்னாட் டுள்ள மலைப்பக்கங்களிற் காணப்படுகின்றது; "நூறெடு குழீஇயின கூவை" (மலைபடு. 137); "பொலிகூவை" (மதுரைக். 142).

23 - 4. "கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம், போக்கு மதுவிளிந் தற்று" (குறள், 332) என்பது இவ்வடிகளுடன் ஒப்பிடற்பாலது.

22 - 4. விழாக்காலத்துக் கூத்தர்கள் வருதலும் அது முடிந்த பின்பு அவர்கள் வேறிடஞ் செல்லுதலும், "அறுஅ யாண ரகன்றலைப் பேரூர்ச், சாறுகழி வழிநாட் சோறுநசை யுறுது, வேறுபுல முன்னிய விரகறி பொருந" (பொருந. 1 - 3) என்பதனாலும் அறியப்படும்.

'இல்லை யென்போர்க் கினனா கிலியர்' என்பது முதலியவற்றால் அறனும், 'படைகொள் மாக்கள்...நின் செய்கை' என்பது முதலிய வற்றால் பொருளும், 'பாண்முற் றுகநின் னாண்மகிழ் இருக்கை' என்பது முதலியவற்றால் இன்பமும் கூறப்பெற்றமையின், இதன் துறையும் முதுமொழிக்காஞ்சி யாயிற்று. (உ௯)

(௩௦) செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்

இனைத்தென் போரு முளரே யனைத்தும்
அறிவறி வாகாச் செறிவினை யாகிக்
களிறுகவு ளடுத்த வெறிகற் போல
ஒளித்த துப்பினை யாதலின் வெளிப்பட
யாங்ஙனம் பாடுவர் புலவர் கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடற்பஃ றாரத்த நாடுகிழ வோயே.

(பி - ம்.) 10 'யாங்கனம்' 11 'மிசைப்பாய்'

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) செஞ்ஞாயிற்றினது வீதியும், அஞ் ஞாயிற்றினது இயக்கமும், அவ்வியக்கத்தாற் சூழப்படும் பார் வட்டமும், காற்றி யங்கும் திக்கும், ஓர் ஆதாரமுமின்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் என்று சொல்லப்பட்ட இவற்றை ஆண்டாண்டுப் போய் அளந்தறிந்த வர்களைப் போல நாளும் இத்துணையளவை உடையனவென்று சொல்லும் கல்வியை உடையோரு முளர்; அப் பெரியோர் அச் செலவு முதலாயின அறியும் அறிவாலும் அறியாத அடக்கத்தை யுடையையாகி யானை தன் கதுப்பின்கண் அடக்கிய எறியுங் கல்லைப் போல மறைத்த வலியையுடையை யாதலான், நின்னை விளங்க எப்பரிசு பாடுவர் புலவர்? கூம்புடனே மேற் பூரிக்கப்பட்ட பாயை மாற்றுமல் அதன்மேற் பாரத்தை யும் பறியாமல் ஆற்றுமுகத்துப் புகுந்த பெரிய மரக்கலத்தைப் பரதவரும் அளவரும் முதலாகிய தகுதி யில்லாதோர் தம் புலத்திற்கு இடையாகிய பெருவழிக்கண்ணே சொரியும் கடலால் வரும் பல பண்டத்தையுடைய நாட்டை யுடையோய்!—எ - று.

செலவென்றது செல்லப்படும் வீதியை.

பரிப்பென்றது இத்துணை நாழிகைக்கு இத்துணை யோசனை செல்லுமென்னும் இயக்கத்தை.

பாய் களையாது பரந்தோண்டா தென்பதனுல், துறைநன்மை கூறிய வாறும்.

பெருங்கலத்தி னின்றெென ஐந்தாவதாக உரைப்பினும் அமையும்.

துப்பினை யாதலிற் புலவர் யாங்கனம் பாடுவரெனக் கூட்டுக.

(கு - ரை.) 1. செஞ்ஞாயிறு : செம்மை, இனச்சுட்டில்லாப் பண் படை.

4. ஆகாயமென்பது முதற் குறைந்தமைக்கு மேற்கோள்; நன். சூ. 268, மயிலை.

1 - 6. புறநா. 20 : 1 - 5; "நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின், அளப்பரி யையே" (பதிற். 14 : 1 - 2).

8 - 9. "காய்ந்தெறி கடுங்கற் றன்னைக் கவுட்கொண்ட களிறு போல, ஆய்ந்தறி வுடைய ராகி யருளொடு வெகுளி மாற்றி, வேந்தர் தாம் விழைப வெல்லாம் வெளிப்படார் மறைத்தல் கண்டாய்" (சீவக. 2910) என்பதும், 'களிறுகவு ளடுத்த வெறிகற் போல, ஒளித்த துப்பினை என்றார் பிறரும்' என இவ்வடிகளை நச்சினார்க்கினியர் அச் செய்யுளின் உரையில் மேற்கோள் காட்டியிருத்தலும், "வேற்றுவ னெறிந்த கல்லைக், காந்திய கந்த தாகக் கவுட்கொண்ட களிறு போலச், சேந்தவ ருரைத்த மாற்றஞ் சிந்தையு ளடக்கி வைத்து, நாந்தகக் கிழவர் கோமா னயந்தெரி மனத்த ஞானன்" (சூளா. சீயவதை. 94) என்பதும் இங்கே அறியத்தக்கவை.

11. மீ முன் வலி மிக்கதற்கு மேற்கோள் : நன். சூ. 177, மயிலை.

"அறிவறி வாகாச் செறிவினை யாகி......ஒளித்த துப்பினை" எனத் தலைவன் இயல்பை எடுத்துக் கூறினமையால், இச்செய்யுள் இயன் மொழியாயிற்று. (௨௦)

(௨௧) சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல
இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை
உருகெழு மதியி னிவந்துசேண் விளங்க
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொல் லாயே
நுதிமுக மழுங்க மண்டி யொன்னார்
கடிமதில் பாயுநின் களிறடங் கலவே
போரெனிற் புகலும் புனைகழன் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வே மல்லே மென்னார் கல்லென்
விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்ன தாகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப
வலமுறை வருதலு முண்டென் றலமந்து
நெஞ்சுநடுங் கவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடலபுத் தரசே.

(பா - ம்.) 16 'நெஞ்ச நடுங்கி யவலம்', 'நடுங்கவவலம்'

திணை - வாகை; துறை - அரசவாகை; மழபுலவஞ்சியுமாம்.

அவனைக் கோவூர் கிழார் பாடியது.

(இ - ள்.) சிறப்புடை முறைமையாற் பொருளும் இன்பமும் அறத்தின்பின்னே தோன்றும் காட்சிபோலச் சேர பாண்டியருடைய இரண்டு குடையும் பின்னாக ஓங்கிய நினது ஒன்றாகிய வெண்கொற்றக்குடை நிறம் பொருந்திய கலைநிறைந்த திங்கள் போல ஓங்கிச் செய்மைக் கண்ணே விளங்க நல்ல புகழ்வேட்கையை விரும்பி வெல்லும் போரினைச் செய்யும் வீட்டின்கண்ணே யிருத்தலல்லது நின் நகரின்கண் இருத்தலை உடம்படாய் நீ; கோட்டினது நுனைமுகம் தேய மடுத்துப் பகைவரது காவலையுடைய மதிலைக் குத்தும் நின்னுடைய யானைகள் அடங்கா; பூசலென்று கேட்பின் விரும்பும் அணிந்த வீரக்கழலையுடைய மறவர், காடு நடுவே கிடந்த நாடு மிகவும் தூரிய வாதலால், யாம் போவேமல்லேமென்று கருதார்; ஆதலான், ஓசை உண்டான விழா வினையுடைய அவ்விடத்துப் பகைப்புலத்தின்கண்ணே தங்கிவிட்டுக் கீழ்கடல் பின்னதாக மேற்கடலினது வெளிய தலையையுடைய திரை நினது குதிரையினது குளம்பை யலைப்ப வலமாக முறையே வருதலு முண்டாமென்று சுழன்று நெஞ்சம் நடுங்கும் அவலம் பரப்பத் துயிலாத கண்ணையுடைய ஆயின, வடநாட்டுள்ள அரசுகள் – எ - று.

அவம் பாய வென்பதூஉமாம்.

(கு - ரை.) 1 - 2. குறள், 4-ஆம் அதிகாரத்தின் அவதாரிகையில் இவ்வடிகள் மேற்கோளாகப் பரிமேலழகராற் காட்டப்பட்டுள்ளன.

3. வென்ற அரசர்களின் குடைக்குப் பின் தோற்ற அரசர்களுடைய குடைகளைப் பிடிப்பித்தல் மரபு. இருகுடை என்றதற்குச் சேர பாண்டியர்களுடைய குடைகள் என்று பொருள் எழுதியதனுல், இவ்வரசன் அவர்களை வென்று அடக்கியவன் என்பது தெளிவாகின்றது; வருஞ் செய்யுளில் வந்துள்ள, 'பூவா வஞ்சியுந் தருகுவன்', 'மாட மதுரையுந் தருகுவன்' என்பனவும் இதனை வலியுறுத்தும்.

3 - 4. கலித். 100 : 3 - 4.

1 - 4. "குன்றுயர் திங்கள்போற் கொற்றக் குடையொன்று, நின்றுயர் வாயிற் புறநிலைப்ப - ஒன்றார், விளங்குருவப் பல்குடைகள் வெண்மீன்போற் றேன்றித், துளங்கினவே தோற்றந் தொலைந்து" (பெரும்பொருள் விளக்கம்).

5. வேட்டம் - விரும்புதல்; புறநா. 214 : 6.

5 - 6. "வென்றே புகழ்புனை வேலண்ண லேயிந்த வெற்பினுள்ள, தன்றே யெனினு மரிவையை யானடி வீழ்ந்திறைஞ்சி, இன்றே திருத்தி யிருந்தமை வாங்குவ னிற்றைக்குநீ, சென்றே வருக சிறுகான் முடியு நின் சிந்தனையே" (அம்பிகாபதி. 117).

9. வீரர்கள் போரின்கண் மிக்க விருப்பமுடையவரென்பது, புறநா. 68 : 11 - 3, 89 : 7 - 9 என்பவற்றாலும், "மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது" (முல்லை. 67), "செருவேட்டுச் சிலைக்குஞ் செங்க

ணுடவர்" (அகநா. 157 : 4), "உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன், செறினுஞ்சீர் குன்ற லிலர்" (குறள், 778) என்பவற்றாலும், "போர்பெற் றறியாமையின், அது பெற்றால் அரசன் தடுப்பினும் நில்லாரென்பதாம்; பிறரும், 'போரெனிற் புகலும் புனைகழன் மறவர்' என்றும்......கூறினார்" என்னும் பரிமேலழகருரையாலும் விளங்கும்.

14. புறநா. 2 : 10, குறிப்புரை.

15. "வங்க மறிகடல் சூழெழு பார்வலம் வந்த மனுகுல சோழனை" (வி. பா. 17-ஆம் போர். 66).

17. "பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே" (குறுந். 292 : 8). உயர்திணை அஃறிணையாகக் கூறப்பெற்ற வழுவமைதிக்கு மேற்கோள்; நன். வி. சூ. 410.

16 - 7. 'நெஞ்சுநடுங் கவலம்......அரசே : அஃது அரசியற் றன்மையை உணர்த்தற்பாலது அத்தன்மையையுடைய மக்களை உணர்த்தி உயர்திணையாய் ஈண்டு அஃறிணையான் முடிதலின் வழுவாயிற்று; இவ்வாறு வருவனவும் பிறவும் அமைத்துக்கொள்க' (நன். சூ. 409, மயிலை.).

மு. வஞ்சித்திணைக்குரிய இயங்குபடையரவமென்னும் துறைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 7, இளம்.; சூ. 8, ந.

இச் செய்யுள் தலைவனது வெற்றியைக் கூறலின் அரசவாகையும், அவன் பகைவர் நாட்டை அழித்தமை கூறலின் மழபுல வஞ்சியுமாயிற்று. (௬௧)

(௬௨) கடும்பி னடுகல நிறையாக நெடுங்கொடிப்
பூவா வஞ்சியுந் தருகுவ னொன்றோ
வண்ண நீவிய வணங்கிறைப் பணைத்தோள்
ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென
மாட மதுரையுந் தருகுவ னெல்லாம்
பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள்
தொன்னிலக் கிழமை சுட்டி னன்மதி
வேட்கோச் சிறாஅர் தேர்க்கால் வைத்த
பசுமட் குருஉத்திரள் போலவவன்
கொண்ட குடுமித்தித் தண்பணை நாடே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) நமது சுற்றத்தினது அடுகலத்தை நிறைக்கும் பொருட்கு விலையாக (பி - ம். நிறைக்கும் பொருளாக) நெடிய துகிற்கொடியினை யுடைய பூவாத வஞ்சியையும் தருகுவன்; நிறமுடைய கலவை பூசப்

பட்ட வளைந்த சந்தினையுடைய முன்கையினையும் வேய்போன்ற தோளினையும் ஒள்ளிய நுதலினையு முடைய விறலியர் பூவிற்கு விலையாகப் பெறுகவென்று மாடத்தையுடைய மதுரையையும் தருகுவன்; ஆதலால், யாமெல்லாம் அவனைப் பாடுவோமாக வாரீர் பரிசின் மாக்கள்! பழைய நிலவுரிமையைக் குறிப்பின், நல்ல அறிவையுடைய குயக்குலத் திளையோர் கலம் வனைதற்குத் திகிரிக் கண்ணே வைத்த பச்சை மண்ணாகிய கனத்த திரள்போல அவன் கருத்திற் கொண்ட முடியையுடைத்து, இக் குளிர்ந்த மருத நிலத்தையுடைய நாடு—எ-று.

பூவா வஞ்சி யென்றது, கருவூர்க்கு வெளிப்படை.

* ஒன்றோ வென்றது, எண்ணிடைச்சொல்.

தேர்க்கா லென்றது தேர்க்கால் போலும் திகிரியை.

அவன் கொண்ட குடுமித்து, இந் நாடு; ஆதலால், வஞ்சியையும் தருகுவன்; மதுரையையும் தருகுவன்; ஆதலால், பரிசின்மாக்கள்! நாமெல்லாம் அவனைப் பாடுகம் வம்மினோவெனக் கூட்டுக.

தொன்னிலைக் கிழமை யென்று பாடமோதுவாரு முளர்.

(கு - ரை.) 2. வஞ்சி - சேர ராசதானியாகிய கருவூர்; இது கொங்கு நாட்டுள்ள கருவூரன்று. வஞ்சியென்பது பலபொருள் ஒரு சொல்லாதலின், இங்கே நகரென்பது புலப்பட, "பூவா வஞ்சி" என்றார். "பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி, வாய்வா ணெடுந்தகை மணிமுடிக் கணிந்து" (சிலப். 29 : 50 - 51); "பூத்த வஞ்சி பூவா வஞ்சியிற், போர்த்தொழிற் றானை குஞ்சியிற் புனைய" (மணி. 26 : 78 - 9).

3. "வணங்கிறைப் பணைத்தோள்" (குறுந். 364).

5. "மாடமலி மறுகிற் கூடல்" (முருகு. 71); "மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்" (மதுரைக். 429); "மாடக் கூடல்" (பரி. 20 : 106), "மாட மதுரை", "மாட மதுரையும்" (சிலப். பதி. 20, 8 : 3, 9 : 76, 15 : 112); "நான்மாடக் கூடன் மகளிரு மைந்தரும்" (கலித். 92) என்பதும், "நான்கு மாடங் கூடலின் நான்மாடக்கூடலென்றாயிற்று; அவை திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்; இனி, கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்றுமாம்" என்னும் அதன் விசேடவுரையும், "அம்புத நால்களா னீடு கூடல்" (திருநள்ளாறும் திருவாலவாயும்; தே.) என்னும் திருவாக்கும், "மதிமலி புரிசை மாடக் கூடல்" (திருமுகப் பாசுரம்) என்பதும், "ஈசனார் மகிழ்ந்த தானம்" (திருவால. நகர. 12) என்பது முதலிய திருவிருத்தங்கள் நான்கும், "கன்னிதிருமால்காளி யீசன் காக்குங் கடிமதில்சூழ் மாமதுரை" (திருவால. பயன் முதலியன. 5) என்பதும் இங்கே கவனிக்கத்தக்கவை.

---

*"பொய்படு மொன்றோ" (குறள், 836).

5 - 6. "உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன், றீவார்மே னிற்கும் புகழ்" (குறள், 232) என்பதனாலும் அதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையாலும் ஈவார் புகழப்படுதல் அறியலாகும்.

9. சீவக. 786, ந. மேற்.

10. குடுமி - முடிவு. இந்நாடு, இவன் கருதிய வண்ணமே நடக்கு மென்றபடி. 'கடும்பின் அடுகலம்.........பூவா வஞ்சியும் தருகுவன், விறலியர்.........மாடமதுரையும் தருகுவன்' எனத் தலைவன் இயல்பைக் கூறினமையால் இச்செய்யுள் இயன்மொழி யாயிற்று. (௩௨)

(௩௩) கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்றசை சொரிந்த வட்டியு மாய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பு நிறைய
ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப வுகந்தனர் பெயரும்
தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வா யுழுவை பொறிக்கு மாற்றலை
பாடுநர் வஞ்சி பாடப் படையோர்
தாதெரு மறுகிற் பாசறை பொலியப்
புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்துகண் டன்ன
ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்தும்
செம்மற் றம்மநின் வெம்முனை யிருக்கை
வல்லோன் றைஇய வரிவனப் புற்ற
அல்லிப் பாவை யாடுவனப் பேய்ப்பக்
காம விருவ ரல்லதி யாமத்துத்
தனிமகன் வழங்காப் பனிமலர்க் காவின்
ஒதுக்கின் றிணிமணற் புதுப்பூம் பள்ளி
வாயின் மாடந்தொறு மைவிடை வீழ்ப்ப
நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே.

(பி - ம்.) 11 'மலியப்'

திணை - வாகை; துறை - அரச வாகை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) காட்டின்கண்ணே தங்கும் வாழ்க்கையையுடைய சினம் பொருந்திய நாயையுடைய வேட்டுவன் மானினது தசையைச் சொரிந்த கடகமும் இடைமகள் தயிர் கொண்டுவந்த மிடாவும் நிறைய ஏரானுழுது உண்டு வாழ்வாரது பெரிய மனையின்கண் மகளிர் குளத்துக்

கீழ் விளைந்த களத்தின்கட் கொள்ளப்பட்ட வெண்ணெல்லை முகந்து கொடுப்ப உவந்து மீளும் தென்றிசைக்கட் பொதியின் மலையையுடைய பாண்டியனது நல்ல நாட்டுள்ளும் ஏழாகிய அரணின்கட் கதவத்தை யழித்துக் கைக்கொண்டு நினது பெரிய வாயையுடைய புலியைப் பொறிக்கும் வலியை; ஆதலான், நின்னைப் பாடும் புலவர் நினது மேற் செலவைப் பாடப் படைக்கலத்தினை யுடையோர் தாதாகிய எருப் பொருந்திய மறுகினையுடைய பாசறைக்கண்ணே பொலிவு பெறப் புலராத பசிய இலையை இடையிட்டுத் தொடுக்கப்பட்ட மலராத முகை யினையுடைய மாலையினது பந்தைக் கண்டாற் போன்ற தசையோடு கூடிய பெருஞ் சோற்றுத் திரளையைப் பாண் சுற்றத்தை யூட்டும் தலைமையை யுடைத்து, நினது வெய்ய முனையாகிய இருப்பிடம்; கைவல்லோனுற் புனைந்து செய்யப்பட்ட எழுதிய அழகு பொருந்திய அல்லிப்பாவை *அல்லிய மென்னும் கூத்தையாடும் அழகையொப்ப அன்பினையுடைய துணைவனும் துணைவியு மாகிய இருவரல்லது இடையாமத்தின்கண் தனிமகன் வழங்காத குளிர்ந்த மலரையுடைய காவின்கண் இயங்குதற்கு இனிய செறிந்த மணலையுடைய புதிய பூவையுடைய சாலையினது வாயிலின்கண் மாடந்தோறும் செம்மறிக் கிடாயைப் படுக்க நீ அவ்விடத்து எடுத்துக்கொண்ட விழவினும் பல—எ - று.

நன்னாட் டுள்ளுமென்ற உம்மை, சிறப்பும்மை.

அல்லிப்பாவை யாடுவனப் பென்றது ஆண்கோலமும் பெண் கோலமுமாய அவ்விருவரும் ஆடுங் கூத்தை. படையோர் பாசறை பொலிய வென்பதற்குப் படையோரது பாசறை பொலிவுபெற வென்று உரைப்பினும் அமையும்.

பாசிலை மலைய என்று பாடம் ஓதுவாரும் உளர்.

தனிமகன் வழங்கா வென்றது, † தனித்து வழங்கின் அப்பொழில் வருத்து மென்பது.

களத்துக்கொள் வெண்ணெ லென்பது, களக்கொள் வெண்ணெ லெனத் தொக்கது.

முகந்தனர் கொடுப்ப, உகந்தனர் பெயரு மென்பன வினையெச்ச முற்று.

உழுவை பொறிக்கு மாற்றலை யாகலின், பாண்கடும் பருத்தும் நின் வெம்முனை யிருக்கை நீ கொண்ட விழவினும் பல செம்மற்றெனக் கூட்டுக.

விழவென்பது, ‡ சிறுசோற்று விழவினை; வேள்வி யென்றுரைப் பினும் அமையும்.

---

* அல்லியக்கூத்து : சிலப். 6 : 48, அடியார்.

† 'தனியவரை முனிவு செய்யும் பொழில்' (இறை. சூ. 2, உரை).

‡ சிறுசோற்று விழவு - சோற்றைத் தயிர் முதலியவற்றோடு கலந்து உருண்டைகளாக்கி அவற்றை வருவோர் ஒவ்வொருவருக்கும் கொடுத்து மகிழ்தல்.

(கு - ரை.) 2. வட்டி - கடகப்பெட்டி; அதாவது பனை அகணியாற் செய்த பெரிய பெட்டி; "ஊனூர் வட்டியர்" (மலைபடு. 152). ஆய் - இடைச்சாதி; சீவக. 426, ந.

5. சீவக. 355; நாலடி. 191; நான்மணிக். 83.

6. பலர்பாற்படர்க்கை வினைமுற்று வினையெச்சமானதற்கு மேற்கோள்; நன். சூ. 350, மயிலை.; நன். சூ. 351 வி.

1 - 6. "முள்ளெயிற்றுப் பாண்மக ளின்கெடிறு சொரிந்த, அகன் பெரு வட்டி நிறைய மனையோள், அரிகாற் பெரும்பயறு நிறைக்கு மூர", "வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள், வராஅல் சொரிந்த வட்டியுண் மனையோள், யாண்டுகழி வெண்ணெ னிறைக்கு மூர" (ஐங்குறு. 47, 48).

7. மு. புறநா 215 : 6.

8. ஏழெயிற்கதவம் - (பகைவருடைய) ஏழு மதிலின்கண்ணுள்ள கதவுகள்; பாண்டிநாட்டில் ஏழு பொன்கோட்டை யென்று ஓர் ஊர் உள்ளது; சிவகங்கையைச் சார்ந்தது; அஃது இங்கே கூறிய ஏழெயி லிருந்த இடமாக ஊகிக்கப்படுகின்றது; அந்தவூர், பல சிற்றரண்கள் வாய்ந்திருந்ததாக இந்நூல் 21-ஆவது செய்யுளிற் கூறப்பட்டுள்ள கானப்பேருக்கு (காளையார் கோவிலுக்கு)ச் சமீபமாக இருத்தல் இக்கருத்தை ஒருவாறு வலியுறுத்தும்.

9. பகைவருடைய இடங்களைக் கைப்பற்றியவுடன் அவற்றில் அவர்களுடைய முத்திரைகளைச் சிதைத்துத் தம்முடைய பொறிகளை அமைப்பது மரபு.

11. புறநா. 311 : 3, குறிப்புரை. "தாதெருத் ததைந்த முற்றம்" (மலைபடு. 531).

12. 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் வினைமுதல் கொண்டதற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 343; நன். வி. சூ. 344.

13. "மாலைப் பந்தும் மாலையு மேந்தி" (சீவக. 2928).

12 - 3. புறநா. 23 : 3.

14. புறநா. 177 : 14 - 5; "கோழூன்குறைக் கொழுவல்சி" (மதுரைக். 141).

'ஊணமலைச் சிறுகுடி' (கலித். 50) என்பதற்கு 'ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்தும்' என்பதும் மேற்கோள்.

16. வரிவனப்பு : மணி. 3 : 8.

16 - 7. வல்லோன் றைஇய...பாவை : கலித். 56 : 7.

20. பள்ளி : மணி. 26 : 72.

21. மைவிடை வீழ்த்தல் : புறநா. 262 : 1, குறிப்புரை. (௩௩)

(௩௪) ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே யாயிழை கணவ
காலை யந்தியு மாலை யந்தியும்
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த வொக்கலொ
டிரத்தி நீடிய வகன்றலை மன்றத்துக்
கரப்பி லுள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
அமலைக் கொழுஞ்சோ றார்ந்த பாணர்க்
ககலாச் செல்வ முழுவதுஞ் செய்தோன்
எங்கோன் வளவன் வாழ்க வென்றுநின்
பீடுகெழு நோன்றாள் பாடே னாயிற்
படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன்
யானோ தஞ்சம் பெருமவிவ் வுலகத்துச்
சான்றோர் செய்த நன்றுண் டாயின்
இமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழிய பலவே.

(பி - ம்.) 4 'முளவே' 7 'அறம்பாடின்றே' 18 'பாடுபறி'

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார் பாடியது.

(இ - ள்.) ஆனினது முலையாற் பெறும் பயனைக் கெடுத்த தீவினையாளர்க்கும் மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய பெண்டிரது கருப்பத்தை அழித்தோர்க்கும் பார்ப்பாரைப் பிழைத்த கொடுந்தொழிலையுடையோர்க்கும் அவர் செய்த பாதகத்தினை ஆராயுமிடத்து அவற்றைப் போக்கும் வழியுமுள வெனவும், நிலம் கீழ்மேலாம் காலமாயினும் ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தோர்க்கு நரகம் நீங்குதலில்லையெனவும் அறநூல் கூறிற்று; தெரிந்த ஆபரணத்தையுடையாள் தலைவ! காலையாகிய அந்திப்பொழுதும் மாலையாகிய அந்திப்பொழுதும்

புறவினது கருவாகிய முட்டைபோன்ற புல்லிய நிலத்து வரகினது அரிசியைப் பாலின்கட் பெய்து அடப்பட்ட சோற்றைத் தேனோடு கலந்து உண்டு குறிய முயலினது கொழுவிய சூட்டிறைச்சியைத் தின்ற என் சுற்றத்தோடுகூட இலந்தை மரமோங்கிய அகன்ற இடத்தையுடைய பொதியிற்கண் ஒன்றனையும் மறைத்தலில்லாத உள்ளத்துடனே வேண்டிய வார்த்தைகளைப் பலகாலுங் கூறிப் பெரிய கட்டியாகிய கொழுவிய சோற்றை அருந்திய பாணர்க்கு நீங்காத செல்வ மெல்லாவற்றையும் செய்தோன் எம்முடைய வேந்தனாகிய வளவன் வாழ்வானாக வென்று சொல்லி நினது பெருமை பொருந்திய வலிய தாளைப் பாடிற்றிலேனாயின், * வாழ்நாட்கு அலகாகிய பல கதிரையுடைய செல்வன் தோன்றுத லறியான்; யானோ எளியேன்; பெரும! இந்த உலகத்தின் கண் நற்குணங்களால் அமைந்தோர் செய்த நல்வினை யுண்டாயின், இமய மலையின்கண்ணே திரண்டு இனிய ஓசையைப் பயிற்றிக் கீழ் காற்றான் வரும் பெரிய முகில் சொரிந்த நுண்ணிய பல துளியினும் பல காலம் வாழ்வாயாக—எ - று.

நிலம் புடைபெயர்வ தாயினும் என்பதற்கு †ஊழி பெயருங் காலத்து யாவரும் செய்த இருவினையும் நீங்குதலின், அக்காலத்தும் செய்தி கொன்றோர்க்கு உய்தி யில்லென்றும், நிலத்துள்ளார் யாவரும் இவர் கூற்றிலே நிற்பாராயினு மென்றும் உரைப்பாரும் உளர்.

புன்கம் இவன்பாற் செல்வதற்கு முன்பு பெற்ற உணவாகவும், அமலைக் கொழுஞ் சோறு இவன்பாற் பெற்ற உணவாகவும் கொள்க; அன்றிச் சென்ற இடந்தோறும் பெற்ற உணவாக உரைப்பினும் அமையும்.

மன்றத்துச் சூடு கிழித்த ஒக்கலொடுகூட வேண்டுமொழி பயிற்றி ஆர்ந்த பாணர்க் கெனக் கூட்டுக.

பாணர்க் கெனத் தம்மைப் பிறர்போலக் கூறினார்.

ஆயிழைகணவ! செய்திகொன்றோர்க்கு உய்தி யில்லென அறம் பாடிற்று; ஆதலால், பாணர்க்குச் செல்வ முழுவதும் செய்தோன், எங்கோன் வளவன் வாழ்க வென்று காலையந்தியும் மாலையந்தியும் நின் தாள் பாடேனாயின், பல்கதிர்ச்செல்வன் படுபறியான்; பெரும! யானோ தஞ்சம்; சான்றோர் செய்த நன்றுண்டாயின், நுண்டுளியினும் பலகாலம் வாழ்வாயாக வெனக் கூட்டுக.

கோவதை முதலாயின வாக்காற் சொல்லவும் படாமையின், ஆன்முலை யறுத்த வெனவும், மகளிர் கருச்சிதைத்த வெனவும், பார்ப்பார்த் தப்பிய வெனவும் மறைத்துக் கூறப்பட்டன.

இது, பரிசில் பெற்றுப் போகின்றானை நீ எம்மை நினைத்து வருவையோ என்றாற்கு, இவ்வாறு செய்த நின்னை வளவன் வாழ்க

* 'வாழ்நாட் கலகாகிய' என்பது, "வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்" (நாலடி. 22) என்பதனைத் தழுவியது.

† கம்ப. கடல்காண். 2.

வென்று பாடேனாயின், யானிருக்குமிடத்துப் பல்கதிர்ச்செல்வன் படுத லறியான், அதனால் இம்மை யின்பம் பெறேனெனவும், செய்ந்நன்றி கொன்றோர்க்கு உய்தி யில்லை யெனவே மறுமையின்கண் நரகம் புகுவேனெனவும் கூறியதாகக் கொள்க.

(கு – ரை.) 1. "குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்று, மடிகொன்று பால்கொளலு மாண்பே" (நீதிநெறி. 29).

1 - 3. இவ்வடிகளிற் கூறப்பட்டவற்றை, 'பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை யறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும் பார்ப்பார்த் தப்புதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்' (குறள், 110) என உரைநடையில் அமைத்தனர் பரிமேலழகர்.

4. கழுவாயுமுள : குறள், 948, பரிமேல். மேற்.

1 - 4. "கொலைகளிற் கொடுமை சான்ற பார்ப்பனக் கொலைவல் வீரக், கொலைகருக் கொலைதாய் தந்தைக் கொலைகவைக் கோட்டு நல் லான், கொலைமுதற் பிறவு நீங்கும்" (காஞ்சிப். சருவதீர்த்த. 14).

5. நற். 289 : 2; "நிலந்திறம் பெயருங் காலை யாயினும்" (பதிற். 63 : 6).

6. உய்தி - பிழைத்தல்; "உய்திக் கால முரையீ ரோவென" (சிலப். 10 : 240); "சார்பறுத் துய்தியும்" (மணி. 25 : 5).

1 - 7. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந் நன்றி கொன்ற மகற்கு" (குறள், 110); "சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப், பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை, வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா, உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலா முபாய முண்டோ" (கம்ப. கிட்கிந்தை. 62) என்பன இங்கே அறியத்தக்கவை.

5 - 7. 'பாட்டு' என்னும் உரிச்சொல் சொல்லுதற்றொழிற் பண்பின்மேல் வருதற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 457; நன். வி. சூ. 458.

6 - 7. "நன்றி, செய்குநர்ப் பிழைத்தோர்க் குய்வில வென்னும், குன்றா வாய்மை" (கல்லாடம், 4).

12. "இரத்தி மன்றமும்" (மணி. 6 : 89). மன்றம் - பலர் இருந்து பேசுதற்குத் திண்ணை போடப்பட்டிருக்கும் மரத்தினடி; பொதியி லெனவும் வழங்கும்.

14. "பெருஞ்சோற் றமலை" (மணி. 17 : 2).

19. ஒரு சொல்முன் ஒரு சொல் வருங்கால் தொகைநிலை வகை யானும், எண்ணுநிலை வகையானும், பயனிலை வகையானும் வருதலே யன்றி எச்ச வகை, அடுக்கு வகை, பொருள்கோள் வகை, ஆக்க வகை, இடைச்சொல் வகை, உரிச்சொல் வகை என்றாற்போலப் பிற வகையா லும் வருதலுண்டென்று கூறி, இவ்வடியை இடைச்சொல் வகையான் வந்ததற்கு மேற்கோள் காட்டினர்; தொல். கிளவி. சூ. 1, கல்.

20 - 23. புறநா. 123 : 5 - 6, 302 : 11, 385 : 10 - 12; "நனந்தலை யுலகஞ் செய்தநன் றுண்டெனின்...வாழிய பலவே" (பதிற். 63 : 18 - 21).

மு. 'வாழ்த்து' என்னும் துறைக்கு மேற்கோள்; தொல். புறத் திணை. சூ. 29, இளம். (௩௪)

(௩௫) நளியிரு முந்நீ ரேணி யாக
வளியிடை வழங்கா வானஞ் சூடிய
மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
அரசெனப் படுவது நினதே பெரும
அலங்குகதிர்க் கனலி நால்வயிற் றோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர் பூட்டத்
தோடுகொள் வேலின் றோற்றம் போல
ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே யத்தை, ஆங்க
நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே
நினவ கூறுவ லெனவ கேண்மதி
அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பி னடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமு முழுபடை
ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்

காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்
அதுநற் கறிந்தனை யாயி னீயும்
நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவ ரடங்கா தோரே.

(பி - ம்.) 10 'ஆடுகழைக்கரும்பின்' 28 'யல்லது' 31 'பொய்ம் மொழி'

திணை - அது; துறை - செவியறிவுறூஉ.

அவனை வெள்ளைக்குடி நாகனார் பாடிப் பழஞ்செய்க்கடன் வீடு கொண்டது.

(இ - ள்.) நீர் செறிந்த பெரிய கடல் எல்லையாகக் காற்று ஊடு போகாத வானத்தைச் சூடிய மண் செறிந்த உலகத்தின்கட் குளிர்ந்த தமிழ் நாட்டிற்கு உரியராகிய முரசொலிக்கும் படையினையுடைய மூவேந்தருள்ளும் அரசென்றற்குச் சிறப்புடையது, நின்னுடைய அரசே; பெரும! விளங்கிய சுடரையுடைய ஞாயிறு நான்கு திக்கினும் தோன்றி னும், விளங்கிய கதிரையுடைய வெள்ளிமீன் தென்றிசைக்கட் செல்லி னும், அழகிய குளிர்ந்த காவிரி வந்து பல காலாயோடி ஊட்டத் தொகுதி கொண்ட வேலினது காட்சியை யொப்ப அசைந்த கண்ணினை யுடைய கரும்பினது வெளிய பூ அசையும் நாடென்று சொல்லப்படுவது நின்னுடைய நாடே! அந் நாடு பொருந்திய செல்வத்தையுடைய பெருமை பொருந்திய வேந்தே; நின்னுடையன சில காரியஞ் சொல்லுவேன்; என்னுடையன சில வார்த்தை கேட்பாயாக; அறக்கட வுள் மேவி ஆராய்ந்தாற் போன்ற செங்கோலான் ஆராயும் ஆராய்ச்சி யையுடைய நீதியைக் கேட்கவேண்டுங் காலத்துச் செவ்வி யெளியோர் இவ்விடத்துத் துளி வேண்டுங்காலத்து மழைபெற்றவரே; ஞாயிற்றைத் தன்மேற் கொண்ட பக்கந் திரண்ட முகில் மாகமாகிய உயர்ந்த வானத் தினது நடுவுநின்று அதன் வெயிலை மறைத்தாற்போலக் கண்ணொளி யோடு மாறுபட விளங்குகின்ற நினது வானை முட்டிய பரந்த வெண் கொற்றக்குடை வெயிலை மறைத்தற்குக் கொண்டதோ வெனின், அன்று; வருத்தமுற்ற குடியை நிழற் செய்தல் காரணத்தாற் கொள்ளப் பட்டது; கூரிய வேலினையுடைய வளவ! இளைய பனையினது துண்டம் போல வேறுவேறு கிடப்பக் களிற்றுத் திரளைப் பொருத இடமகன்ற போர்க்களத்தின்கண் வருகின்ற படையை எதிர்நின்று பொறுத்து அது சரிந்து மீளும் புறக்கொடை கண்டு ஆர்த்துக்கொண்டு நின் போர் செய்யும் படை தரும் வெற்றியும் உழுகின்ற கலப்பை நிலத்தின் கண்ணே ஊன்று சாலிடத்து விளைந்த நெல்லினது பயன்; மழை பெய்யுங் காலத்துப் பெய்யா தொழியினும், விளைவு குறையினும்,

இயல்பல்லாதன மக்களது தொழிலிலே தோன்றினும் காவலரைப் பழித்துரைக்கும், இவ்விடமகன்ற உலகம்; அதனை நன்றாக அறிந்தனை யாயின், நீயும் குறளை கூறுவாரது உறுதியில்லாத வார்த்தையை உட்கொள்ளாது ஏரைப் பாதுகாப்பாருடைய குடியைப் பாதுகாத்து அக் காவலாலே ஏனைக் குடிகளையும் பாதுகாப்பாயாயின் நின் அடியைப் போற்றுவர், நின் பகைவர்—எ - று.

வளியிடை வழங்கா மண்டிணி கிடக்கை யென இயையும்; அன்றி, வாயு பதத்துக்கு மேலான வானமெனக் கிடந்தவாறே உரைப்பினும் அமையும்.

அரசென்றது அரசர் தன்மையை.

முறைவேண்டுபொழுதிற் பதனெளியோர் ஈண்டு உறைவேண்டு பொழுதிற் பெயல்பெற்றோ ரென்ற கருத்து : நீயும் பதனெளியையாதல் வேண்டும், அவ்வாறு பெயல்பெறுதற்கென்றவாறும்; அன்றி, இதற்கு முறைவேண்டு பொழுதிற் பதனெளியோர் ஈண்டு உறைவேண்டு பொழுதிற் பெயல் பெற்றோரோ டொப்ப ரென்று உரைப்பாரு முளர்.

அத்தையும் ஆங்கவும் மதியும் அசைநிலை. நினவ எனவ வென ஈற்று நின்ற அகரங்கள் செய்யுள்நோக்கி விரிக்கப்பட்டன.

நாடுகெழு செல்வத்துப் பீடுகெழுவேந்தே! நினவ கூறுவல்; எனவ கேண்மதி; குடை வருந்திய குடி மறைப்பதுவாகும்; கூர்வேல் வேளவ! பதனெளியோர் உறைவேண்டு பொழுதிற் பெயல் பெற்றோராவர்; ஆகையால், நீயும் அவ்வாறு காலம் எளியையாய்க் கொற்றமும் ஈன்றதன் பயனென்று கருதிக் காவலர்ப் பழிக்கும் இக் கண்ணகன் ஞாலமென்று கொண்டு, நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது பாரமோம்பிப் புறந்தருகுவையாயின், நின்னடி புறந்தருகுவர், அடங்காதோ ரென்றமையால், செவியறிவுறூஉவாயிற்று.

(கு - ரை.) 1. 'நளியிரு முந்நீர்' என்பது செறிவு; நேமி. சொல். 59, உரை. 'ஏணியில் - எல்லையில்; நளியிரு முந்நீ ரேணி யாக வென்றார்' (சிலப். 23 : 165, அரும்பத.).

3. புறநா. 2 : 1, குறிப்புரை.

2 - 3. "வான்கவிந்த வையகம்" (நாலடி. 80).

4. மு. பொருந. 54; பெரும்பாண். 33; "முடியுடை வேந்தர் மூவருள்ளும், தொடிவிளங்கு தடக்கைச் சோழர்" (சிலப். 10 : கட்டுரை, 1 - 2).

4 - 5. "முரசுமுழங்கு தானை......நினதே பெரும என்புழி மூவிருள்ளுமென முன்னிலையாகற்பாலது மூவருள்ளுமெனப் படர்க்கையாய வழி அமைதலும்", "முரசு முழங்குதானை.........பெரும என்புழி மூவிரென்னுதது என்னையெனின் புலவன் கூறுகின்ற இவனை ஒழிந்த இருவகைக் குலத்தோரும் இவன் முன்னுள்ளோரும் படர்க்கையராதலின், அம் மூவகைக் குலத்துள்ளோரையுங் கூட்டி முரசு முழங்கு

தானை மூவர் அரசுள்ளும் அரசென்று ஈண்டுச் சிறப்பித்துச் சொல்லப் படுவது அச் சோழர்வழித் தோன்றிய நின்னரசே யென்றுனெனப் பொருள் கூறுக" (தொல். எச்ச. சூ. 67, சே.; ந.). அரசனது தன்மை யெனப் பாவத்தன்மையை யுணர்த்தும் உகரவீற்றுப் பாவதத்திதன் என்று இப் பகுதியை மேற்கோள் காட்டினர்; பிரயோக. 34.

6 - 8. புறநா. 117 : 2, 388 : 1 - 2; "கல்காயுங் கடுவேனிலொ, டிருவானம் பெயலொளிப்பினும், வரும்வைகன் மீன்பிறழினும், வெள்ளமா ருது" (மதுரைக். 106 - 9), "வசையில்புகழ் வயங்கு வெண்மீன், திசைதிரிந்து தெற்கேகினும், தற்பாடிய தளியுணவிற், புட்டேம்பப் புயன்மாறி, வான்பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத் தலைய கடற்காவிரி" (பட்டினப். 1 - 6), "கரியவன் புகையினும் புகைக் கொடி தோன்றினும், விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்...... காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை" (சிலப். 10 : 102 - 8), "காவிரி யென்னத் தப்பாக் கருணையான்" (வி. பா. அருச்சுனன்றவநிலை. 24), "வற்றுத காவிரி" (தக்க. 812).

9 - 10. "கரும்பின், வேல்போல் வெண்முகை பிரிய" (நற். 366); "வேலீண்டு தொழுதி யிரிவுற் றென்ன" (மலைபடு. 116).

11. "தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே, மண்ணு வதுஞ்சோழ மண்டலமே" (சோழமண்டல சதகம்) என்னுஞ் செய்யுள் இங்கே அறியத்தக்கது.

1 - 11. "நளியிரு முந்நீ ரேணி யாக என்னும் புறப்பாட்டினுள், 'முரசுமுழங்கு...பெரும' எ - ம், 'ஆடுகட்...அத்தை' எ - ம் சிறப்புப் பற்றிப் புணர்த்தார் சான்றோர்" (யா. வி. எழுத். 1).

13. நினவ - நினக்கு உரியன; "நினவ கூறுவ லெனவ கேண்மதி என்றாற்போல ஆருவதற்குரிய அகரவுருபின் முன்னரும் ஓர் அகர வெழுத்துப்பேறு நிலைமொழிக்கண் வருதலுளதாகக் கருதினர்" (தொல். புணர். சூ. 13, ந.). "எனவ கேண்மதி" (அகநா. 379 : 5).

15-6. "முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்,வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி" (பெரும்பாண். 443 - 4); "காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல், மீக்கூறு மன்ன னிலம்", 'முறை வேண்டினுர்க்குங் குறைவேண்டினுர்க்குங் காண்டற் கெளியனுய்' (குறள், 386, பரிமேல்.) என்பவற்றில் இவ்வடிகளின் சொல்லும் பொரு ளும் அமைந்திருக்கின்றன; "முறைகோடி மன்னவன் செய்யி னுறை கோடி, யொல்லாது வானம் பெயல்" (குறள், 559), "வெஞ்சின வேந்தன் முறைநெறியிற் சேர்தலும்...திங்கண்மும் மாரிக்கு வித்து" (திரி. 98) என்பவை இங்கே அறியற்பாலன.

17. கொண்மூ - நீரைக் கொள்ளுதலையுடையது; காரணப்பெயர்.

18. மாகவிசும்பு - ஒருபொருட் பன்மொழி; திக்குகளையுடைய ஆகாயம் என்பர் நச்சினுர்க்கினியர்; பரி. 1 : 47; அகநா. 253 : 24; மதுரைக். 454.

19 - 21. புறநா. 60 : 11 - 2; "உலகுடன் நிழற்றிய தொலையா வெண்குடை" (அகநா. 204); "திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதும், கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ், வங்க ணுலகளித்த லான்" (சிலப். 1 : 1 - 3); "ஏம வெண்குடை", "வெயிலழல் கவியாது வியலக வரைப்பின், உயிரழல் கவிக்கு முயர்ச் சித் தாகிப், பூந்தா ரணிந்த வேந்தல் வெண்குடை" (பெருங். 1. 36 : 104, 42 : 44 - 6).

"தீதுதீர் மதுரை" (சிலப். 15 : 9 - 10) என்பதன் விசேட வுரையில் அடியார்க்குநல்லாரால் இப் பகுதி மேற்கோள் காட்டப்பெற் றுள்ளது. இங்ஙனம் குடையை உயர்த்துக் கூறுதல், 'நடைமிகுத்தேத் திய குடைநிழல் மரபு' என்னுந் துறையின் பாற்படு மென்றும், இங்ஙனம் புகழ்தல் குடியைப் புறங்காத்தற்கு அறிகுறியாக இக் குடையை யான் கொண்டே னென்று அரசனுற் குறிக்கப்படுதலின் என்றும் கூறுவர் (தொல். புறத்திணை. சூ. 36) நச்சினார்க்கினியர்.

22. வெளிற்றுப்பனை : உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் அல்வழியில் வல்லின றகரம் இரட்டினமைக்கு மேற்கோள்; நன். சூ. 182, மயிலை.

24. "ஒன்னுத் தெவ்வ ருலைவிடத் தார்த்து" (பெரும்பாண். 419).

25 - 6. வீரர்கள் அரசனுக்கு வெற்றி தருதற்குக் காரணம் உழ வென்பதை, "பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர், அலகுடை நீழ லவர்" (குறள், 1034) என்பதாலும், அதற்குப் பரிமேலழகர் எழுதிய "குடைநீழலென்பதூஉம் ஆகுபெயர்;'ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே' என்றதனுல் தம்மரசனுக்குக் கொற்றம் பெருக்கி மண் முழுதும் அவனதாகக் கண்டிருப்ப ரென்பதாம்" என்னும் உரையாலும், "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும், உழவிடை விளைப் போர்" (சிலப். 10 : 149 - 50) என்னும் அடிகளாலும் உணர்க.

30. மு. புறநா. 121 : 5.

31. நொதுமலாளர் - அயலார் : நொதுமல் - அயல்; இங்கே கோள் கூறுவாரை உணர்த்தியது. "தீயனெனும் பாம்பு செவியி லொரு வற்கவ்வ, மாயுமே மற்றை யவன்" என்னும் செய்யுள் இங்கே அறிதற்பாலது.

32. பகடுபுறந்தருதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 16, இளம்.

33. "'சாலக், குடியோம்பல் வல்லா னரசன்" (திரி. 13); "கண் ணிற் சொலிச்செவியி னேக்கு மிறைமாட்சி, புண்ணியத்தின் பாலதே யாயினும் - தண்ணளியான், மன்பதை யோம்பாதார்க் கென்னும்" (நீதிநெறி. 28).

32 - 3. "குடிபுறந் தருநர் பார மோம்பி" (பதிற். 13 : 24).

"வீழ்குடி - காணியாளர்; 'பகடு......தருகுவையாயின்' என்றார் பிறரும்" (சிலப். 5 : 43 - 5, அடியார்.); வேளாளர் உழுதுண்டற்கு மேற்கோள் : தொல். அகத்திணை. சூ. 30, ந.

32 - 4. "உற்றதற் கெல்லா முரஞ்செய்தல் வேண்டுமோ, கற்றறிந்தார் தம்மை வெகுளாமை காப்பமையு, நெற்செய்யப் புற்றேய்ந்தாற் போல நெடும்பகை, தற்செய்யத் தானே கெடும்" (பழ. 83); "வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும், பகைவர்கட் பட்ட செருக்கு" (குறள், 878).

மு. "நளியிரு முந்நீர்......அடங்காதோரே! இஃது இஞ்ஞாலம் இயற்கை யல்லது தமது செயற்கையிற்றேன்றினும் காவலனைப் பழிக் கும்; இதனையு முணராதே நீ வேற்றரசர்க்குப் பெறுதற்கரிதாகிய சிறந்த நாட்டினை நினதாகப் பெற்றுவைத்தும் அதனை யழிக்கின்றது நினக்கு அரசியலன்றென்று அவனுட்டை யழித்தமை கூறுதலில், துகளொடு புணர்வும், குடிபுறந்தரின் நினக்குச் செல்வம் முதலிய சிறத் தலிற் பகைவர் நின்னை வணங்குவரெனப் பொருளொடு புணர்வும் வெளிப்படக் கூறலிற் செம்பொருட்செவியுறை அங்கதமாயிற்று" (தொல். செய். சூ. 128, ந.) (௩௫)

(௩௬) அடுநை யாயினும் விடுநை யாயினும்
நீயளந் தறிதிநின் புரைமை வார்கோற்
செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்
5 தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்ல னரஞ்செ யவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலி னிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறும்
கடிமரந் தடியு மோசை தன்னூர்
10 நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப
ஆங்கினி திருந்த வேந்தனொ டீங்குநின்
சிலைத்தார் முரசங் கறங்க
மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே.

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.

அவன் கருவூர் முற்றியிருந்தானை ஆலத்தூர் கிழார் பாடியது.

(இ - ள்.) கொல்வா யாயினும் கொல்லாது ஒழிவாயாயினும் அவற் றால் நினக்கு வரும் உயர்ச்சி யாம் சொல்லவேண்டா; நீயே எண்ணி யறிவை; செறிந்த உள்ளிடு பருக்கையையுடைய சிலம்பினையும் நீண்ட கோற்றொழிலாற் செய்யப்பட்ட குறிய வளையையுமுடைய மகளிர் பொன்னாற் செய்யப்பட்ட கழலான் வேதிகை போல உயர்ந்த எக்கர்க்கண்ணே இருந்து விளையாடும் அணுமையையுடைய குளிர்ந்த ஆன்பொருந்தத்தினது வெளிய மணல் சிதற வலிய கையை

யுடைய கொல்லன் அரத்தாற் கூர்மை செய்யப்பட்ட அழகிய வாயினை யுடைத்தாகிய நெடிய கையையுடைய கோடாலி வெட்டுதலான் நின்ற நிலை கலங்கி வீழும் பூ நாறுகின்ற நெடிய கொம்புகள் தனிப்பக் காக்கள்தோறும் காவன்மரங்களை வெட்டும் ஓசை தன்னுடைய ஊரின்கண் நெடிய மதிலெல்லையில் தனது காவலையுடைய கோயிற் கண்ணே சென்றொலிப்ப அவ்விடத்து மானமின்றி இனிதாகவிருந்த வேந்தனுடன் இவ்விடத்து நினது இந்திரவிற் போலும் மாலையை யுடைய முரசொலிப்பப் பொருதா யென்பது கேட்டார்க்கு நாணும் தகுதியை யுடைத்து; ஆதலால், அப் போரை ஒழியத்தகும்—எ - று.

வார்கோற் குறுந்தொடி யென மாறி உரைக்கப்பட்டது.

இனிதிருந்த வென்றது, குறிப்புமொழி.

கடிமரந் தடியு மோசை தன் மனை யியம்ப இனிதிருந்த வேந்தனொடு மலைத்தனை யென்பது நாணுத்தகவுடைத்து; அதனால் அடுநை யாயினும் விடுநையாயினும் நின் புரைமை நீ அளந்தறிதி யென மாறிக் கூட்டி வினைமுடிவு செய்க.

மகளிர் தெற்றி யாடும் பொருநை யென்ற கருத்து : இங்ஙனம் இளமகளிர் கழங்காடும் அணுமையதாயினும் புறப்பட்டுப் போர் செய்யாத அவன் வலியின்மை தோற்றி நின்றது.

தெற்றி யாடும் தன்னூ ரென இயைப்பினும் அமையும்.

மேற்சென்றோனைச் சந்து செய்து மீட்டலின், இது துணைவஞ்சி யாயிற்று.

(கு - ரை.) 1 - 2. அடுநை விடுநை என்பவற்றிலுள்ள நகரம் எதிர்கால இடைநிலை. "ஒல்வை யாயினுங் கொல்வை யாயினு, நீயளந் தறிவைநின் புரைமை" (குறுந். 259).

3 - 4. "மகளிர்......முத்த வார்மணற் பொற்கழங் காடும்" (பெரும்பாண். 327 - 35).

5. புறநா. 11 : 5, குறிப்புரை.

6. வாய் : "வலம்படு திகிரி வாய்நீ வுதியே" (கலித். 7).

9. 'கடி' என்னும் உரிச்சொல் காப்பு என்னும் பொருளில் வந்ததற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 85, ந.; 'கடி' என்னும் உரிச்சொல் காவலென்னும் பொருளில் வந்ததற்கு மேற்கோள்; இ. வி. சூ. 282, உரை.

6 - 9. புறநா. 23 : 8 - 9, குறிப்புரை.

9 - 10. இயம்பலென்னும் உரிச்சொல் இசைப்பொருளுணர்த்தற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 62, சே.; சூ. 60, ந.; இ. வி. சூ. 285, உரை.

12. சிலைத்தார் : புறநா. 10 : 10; "அகலிரு வானத்துக் குறைவிலேய்ப்ப, அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி, முரட்பூ மலிந்த முதுநீர்" (பெரும்பாண். 292 - 4).

‘சிலை’ என்னும் உரிச்சொல் ஒலித்தற்றொழிற் பண்பில் வந்ததற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 458; நன். வி. சூ. 459.

13. “நாப்புடை பெயராது நாணுத்தக வுடைத்தே” (மணி. 23 : 16).

மு. ‘உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்’ என்னும் துறைக்கு மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 10, இளம்.); “அடுநையாயினும்......நாணுத்தக வுடைத்தே : இது புறத்துழிஞை யோன்கண் தூதன் அவன் சிறப்பு எடுத்துரைத்தது” (தொல். புறத்திணை. சூ. 12, ந.). (௩௬)

(௩௭) நஞ்சுடை வாலெயிற் றைந்தலை சுமந்த
வேக வெந்திற னாகம் புக்கென
விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுங்கொடிப்
பெருமலை விடரகத் துருமெறிந் தாங்குப்
புள்ளுறு புன்கண் டீர்த்த வெள்வேற்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக
கராஅங் கலித்த குண்டுகண் ணகழி
இடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மன் மூதூர்
வம்பணி யானை வேந்தகத் துண்மையின்
நல்ல வென்னாது சிதைத்தல்
வல்லையா னெடுந்தகை செருவத் தானே.

திணை - வாகை (பி - ம். உழிஞை); துறை - அரசவாகை (பி - ம். குற்றுழிஞை); முதல்வஞ்சியுமாம்.

அவனை மாறோக்கத்து (பி - ம். மாறோகத்து) நப்பசலையார் பாடியது.

(இ - ள்.) நஞ்சுடைத்தாகிய வெளிய பல்லினையுடைய ஐந்து படம் பொருந்திய தலையைச் சுமந்த *சினம் பொருந்திய வெய்ய திறலை யுடைய பாம்பு புக்கதாக வானம் தீப் பிறக்கும் பரிசு முறுகிப் பசிய கொடியினையுடைய பெரிய மலைமுழையின்கண்ணே இடியேறு எறிந் தாற்போல, புறவுற்ற துயரத்தைக் கெடுத்த வெள்வேலோடு சினம் பொருந்திய படையையுடைய செம்பியன் மரபிலுள்ளாய்! கராம் செருக்கிய குழிந்த இடத்தையுடைய அகழியினையும், இடம் கரிதாகிய

* “விரிநிற நாகம் விடருள தேனும், உருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்” (நாலடி. 164).

ஆழத்தின்கட் சேரத் திரண்டோடி இடை யாமத்து ஊர்காப்பா ருடைய விளக்கு நிழலைக் கவரும் கடிய மாறுபாடு பொருந்திய முதலையையுடைய நீர் மிக்க மடுவினையும், செம்பு பொருவும் மதிலையும் உடைய தலைமை பொருந்திய பழைய ஊரினுள்ளே கச்சணிந்த யானையை உடைய அரசுண்டாகவின், அவற்றை நல்லவென்று பாராது அழித்தலை வல்லையா யிருந்தாய் பெருந்தகாய்! போரின்கண்—எ - று.

இலஞ்சியை உடைய அகழி யென மாறிக் கூட்டினும் அமையும்; இப் பொருட்கும் கராம் கலித்தலை அகழிக்கு அடையாக்குக.

கராம் - முதலையுள் ஒரு சாதி.

செம்பியன்மருக! நெடுந்தகாய்! விடரகத்து நாகம் புக்கென உரு மெறிந் தாங்கு மூதூரகத்து வேந்துண்மையின், செருவத்துச் சிதைத் தல் வல்லை யென மாறிக் கூட்டுக.

புள்ளுறு புன்கண் தீர்த்த பேரருளினோன் மருகனும் செருவின் கண் இவற்றை நல்லவென்று பாராது அழித்தல் வல்லையா யிருந்தா யென அவன் மறம் வியந்து கூறியவாறு.

ஐந்தலை யென்றதற்கு ஐந்து தலை யெனினும் அமையும்.

இடங்கருங் குட்ட மென்பதனுள் உம்மையை அசைநிலையாக்கி இடங்கரையுடைய குட்டமென்று உரைப்பாரும் உளர்.

இடங்க ரீட்டத்தென்று பாடம் ஓதுவாருமுளர்.

(கு - ரை.) 2. புக்கென - புக; இது, செய்தென என்னும் வாய் பாட்டு வினையெச்சம். 4. புறநா. 91 : 8; கலித். 103 : 19.

1 - 4. புறநா. 211 : 1 - 4; "பாணுட், பாம்புடை விடர வோங்கு மலை மிளிர, உருமுச்சிவந் தெறியும் பொழுது" (நற். 104).

5 - 6. புள் - புரு; அஃதுற்ற புன்கணைத் தீர்த்தோன் சிபி; புறநா. 39: 41, 46; "எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப், புள்ளுறு புன்கண் டீர்த்தோன்", "அறனறி செங்கோன் மறநெறி நெடுவாட், புறவுநிறை புக்கோன்", "புறவுநிறை புக்குப் பொன்னுலக மேத்தக், குறைவி லுடம்பரிந்த கொற்றவன்" (சிலப். 20 : 51 - 2, 23 : 57 - 8, 29 : "அம் மானை வரி"); "உடல்கலக்கற வரிந்துதசை யிட்டுமொருவ னொரு துலைப்புறவொ டொக்கநிறை புக்கபுகழும்" (கலிங்க. இராச. 13); "புக்கால், மருனிறை யென்று சரணடைந்த வஞ்சப், புருநிறை புக்க புகழோன்" (இராசராசசோழனுலா, 5 - 6); "கொலையே றுடம்படையக் கொய்தாலு மெய்தாத், துலையேறி வீற்றிருந்த சோழன்" (குலோத் துங்கசோழனுலா, 17); "உலகறியக், காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து, தூக்குந் துலைபுக்க தூயோனும்" (விக்கிரமசோழனுலா, 10 - 11); "புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகை", "இவர்குலத்தோன் மேற்பறவை, மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாருக வழங்கினனுல்", "பிறந்தநாட் டொடங்கி யாருந் துலைபுக்க பெரியோன்பெற்றி, மறந்தநா ளுண்டே", "புக்கடைந்த புறவொன்

றின் பொருட்டாகத் துலைபுக்க, மைக்கடங்கார் மதயானை வான் வேந்தன்" (கம்ப. திருவவதார. 65, குலமுறை. 7, விபீடண னடைக்கல. 10, கும்பகருணன்வதை. 355); 'என்பும் உரியராதல், தன்னகம்புக்க குறுநடைப் புறவின் றபுதியஞ்சிச் சீரைபுக்கோன் முதலாயினார்கட் காண்க' (குறள், 72, பரிமேல்.).

7. "கராஅங் கலித்த கண்ணகன் பொய்கை" (பட்டினப். 242).

9. கலித். 142 : 32 - 3.

7 - 10. 'முதலையும் இடங்கரும் கராமும் தம்மின் வேறெனப் படுமோவெனின், கராஅங் கலித்த......இலஞ்சியென வேறெனக் கூறப்பட்டன வென்பது' (தொல். மரபு. சூ. 41 - 3, பேர்.).

11. புறநா. 201 : 9; "செம்பியன் றன்ன செஞ்சுவர்" (மதுரைக். 485); "செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்" (நெடுநல். 112); "செம்புறழ் புரிசை" (அகநா. 375); "செம்பைச்சே ரிஞ்சி", "செம் படுத்த செழும்புரிசை", "செம்புகொப் புளித்த மூன்றுமதில்" (தே); "செம்புகொண் டன்ன விஞ்சித் திருநகர்" (சீவக. 439).

4 - 13. உருமெறிந்தாங்குச் சிதைத்தல் என இயைக்க. அரசனது இயல்பின் மிகுதியைக் கூறியதனால், இச் செய்யுள் அரசவாகை யாயிற்று.

மு. முரணிய புறத்தோ னணங்கிய பக்கமென்னும் துறைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 10, இளம். (௩எ)

(௩அ) வரைபுரையு மழகளிற்றின்மிசை
வான்றுடைக்கும் வகையபோல
விரவுருவின கொடிநுடங்கும்
வியன்றானை விறல்வேந்தே
நீ, உடன்றுநோக்கும்வா யெரிதவழ
நீ, நயந்துநோக்கும்வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும்
வெண்டிங்களுள் வெயில்வேண்டினும்
வேண்டியது விளைக்கு மாற்றலை யாகலின்
நின்னிழற் பிறந்து நின்னிழல் வளர்ந்த
எம்மள வெவனோ மற்றே யின்னிலைப்
பொலம்பூங் காவி னன்னாட் டோரும்
செய்வினை மருங்கி னெய்த லல்லதை
உடையோ ரீதலு மில்லோ ரிரத்தலும்
கடவ தன்மையிற் கையற வுடைத்தென
ஆண்டுச்செய் நுகர்ச்சி யீண்டுங் கூடலின்
நின்னா டுள்ளுவர் பரிசிலர்
ஒன்னார் தேஎத்து நின்னுடைத் தெனவே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

அவன் 'எம்முள்ளீர் எந்நாட்டீர்?' என்றாற்கு ஆவூர் மூலங் கிழார் பாடியது.

(இ - ள்.) மலையையொக்கும் இளங் களிற்றின்மேல் ஆகாயத்தைத் தடவும் கூறுபாட்டை யுடையனபோல விரவின பல நிறத்தை யுடையனவாகிய கொடிகள் அசைந்து தோன்றும் பரந்த படையை யுடைய விறல் வேந்தே! நீ முனிந்து பார்க்குமிடம் தீப் பரக்க, நீ அருளிப் பார்க்குமிடம் பொன்பொலியச் செஞ்ஞாயிற்றின்கண்ணே நிலவுண்டாக வேண்டினும், வெளிய திங்களின்கண்ணே வெயிலுண் டாக வேண்டினும் நீ வேண்டிய பொருளை உண்டாக்கும் வலியை யுடையை யாகலின், நினது நிழற்கண்ணே பிறந்து நினது நிழற் கண்ணே வளர்ந்த எமது நிலைவெல்லை சொல்ல வேண்டுமோ? வேண்டா வன்றே; இனிய நிலையையுடைத்தாகிய பொற்பூப் பொருந்திய கற்பகக் காவையுடைய நல்ல விண்ணுலகத்தவரும் தாம் செய்த நல்வினையாலுள்ள இன்பத்தின் பக்கத்தைப் பொருந்துவ தல்லது, செல்வமுடையோர் வறியோர்க்கு வழங்குதலும் வறியோர் செல்வமுடையோர்பாற் சென்றிரத்தலும் ஆண்டுச் செய்யக்கடவ தல்லாமையான், அது செயலற வுடைத்தெனக் கருதி, அவ்விடத்து நுகரும் நுகர்ச்சி இவ்விடத்தும் கூடுதலான், நின் நாட்டை நினைப்பர் பரிசிலர்; பகைவர் தேயத்திருந்தும், நின்நாடு நின்னையுடைத்தென்று கருதி ஆதலால்—எ - று.

மற்று : அசை.

வேந்தே! நீ வேண்டியது விளைக்கும் ஆற்றலை யாகலின், விண்ணுலகத்து நுகர்ச்சி ஈண்டுங் கூடலின், ஒன்னார் தேயத்திருந்தும், பரிசிலர், நின் நாடு நின்னை யுடைத்தென்று நின் நாட்டையுள்ளுவர்; ஆதலான், நின்னிழற் பிறந்து நின்னிழல் வளர்ந்த எம்மளவு எவனோ வென மாறிக் கூட்டுக.

(கு - ரை.) 1. இவ்வடி முதற்கு முதலே வந்த உவமைக்கும் (தொல். உவம. சூ. 6, பேர்.) 'ஒப்பு' புறப்பொருட்கண் வந்ததற்கும் (தொல். பொருளியல், சூ. 53, ந.), 'மழ' என்னும் உரிச்சொல் இள மைப்பொருளில் வந்ததற்கும் (தொல். உரி. சூ. 15, சே.; சூ. 14, ந.; இ. வி. சூ. 281, உரை) மேற்கோள்.

4. வியலென்னும் உரிச்சொல் வியனென்று திரிந்து நிற்றற்கு மேற்கோள்; தொல். உரி. சூ 66, ந.

5 - 6. புறநா. 239 : 4 - 5, குறிப்புரை; "மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட, நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப" (பெரும்பாண். 423 - 4).

7 - 8. புறநா. 30 : 1; "அகப்படு பொறியி னுரை யாக்குவா ரியாவ ரம்மா, மிகைப்படு பொறியி னுரை வெறியராச் செய்ய லாமோ, நகைக்கதிர் மதியம் வெய்தா நடுங்கச்சுட் டிடுத லுண்டோ, பகைக் கதிர்ப் பருதி சந்து மாலியும் பயத்த லுண்டோ" (வளையாபதி).

"இனப்பொருளைச் சுட்டுதலன்றிப் பண்படுத்து வழங்கப்படும் பெயர் வழக்குநெறியல்ல செய்யுணெறி யென்றவாறு; உ - ம். 'செஞ் ஞாயிற்று...வேண்டினும்' என வரும்; பல பொருட்குப் பொதுவாகிய சொல்லன்றே ஒரு பொருட்குச் சிறந்த பண்பான் விசேடிக்கப்படுவது; ஞாயிறு திங்களென்பன பொதுச்சொல் அன்மையிற் செஞ்ஞாயிறென் றும் வெண்டிங்களென்றும் விசேடிக்கப்படா வாயினும், செய்யுட்கண் அணியாய் நிற்றலின் அமைக்க வென்றார்", "செஞ்ஞாயிற்று நிலவு... வெயில் வேண்டினும் : என இவை கருஞாயிறும் கருந்திங்களுமாகிய இனமின்மையின் விசேடிக்கப்படா வாயினும் செய்யுட்கு அணியாய் நிற்றலின் அமைத்தார்" (தொல். கிளவி. சூ. 18, சே., ந.); செம்மை வெண்மை, இங்கே இனமில்லாதவற்றிற்கு அடையாக வந்தன வென்பர்; நன். சூ. 400, மயிலை.; நன். சூ. 401, வி.; இ. வி. சூ. 312, உரை; பிரயோக. 23.

12 - 5. ஈதல் ஏற்றல் முதலியன இல்லாமையால் தேவருலகம் அவமதிக்கப்படுதலை, "ஈண்டுச் செய்வினை யாண்டுநுகர்ந் திருத்தல், காண்டகு சிறப்பினுங் கடவுள ரல்ல, தறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர், நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர், யாவரு மில்லாத் தேவர்நன் னாட்டுக், கிறைவ னாகிய பெருவிறல் வேந்தே" (மணி. 14 : 38 - 43), "ஈவாரு மேற்பாருமின்றி எல்லாரும் ஒரு தன்மையராதலின் (ஒப்புரவு) புத்தேளுலகத்து அரிதாயிற்று", "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்க ணவர்" (குறள், 213, 1058, பரிமேல்.) என்பவற்றாலும் உணர்க.

மு. புகழ்ச்சிக்கண் வந்த செந்துறைப் பாடாண்பாட்டிற்கு மேற் கோள்; தொல். புறத்திணை. சூ. 27, ந.

நீ உடன்று நோக்கு மென்பது முதலியவற்றால் அரசனது இயல் பைக் கூறினமையின் இச் செய்யுள் இயன்மொழியாயிற்று. (௬௮)

(௬௯) புறவி னல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக
ஈதனின் புகழு மன்றே சார்தல்
ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறற்
றூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர் நினைப்பின்
அடுதனின் புகழு மன்றே கெடுவின்று
மறங்கெழு சோழ ருறந்தை யவையத்
தறநின்று நிலையிற் றாகலி னதனால்
முறைமைநின் புகழு மன்றே மறமிக்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோட்
கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ

யாங்கன மொழிகோ யானே யோங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்
டிமயஞ் சூட்டிய வேம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் றொலைய
வாடா வஞ்சி வாட்டுநின்
பீடுகெழு நோன்றாள் பாடுங் காலே.

திணையும் துறையும் அவை.

அவனை மாறோக்கத்து நப்பசலையார் பாடியது.

(இ - ள்.) புறவினது வருத்தத்தைக் களைய வேண்டிக் கறைபொருந்திய அடியிணையுடைய யானையினது வெளிய கோட்டாற் கடைந்து செறிக்கப்பட்ட வெளிய கடையிணையுடைய கோலாகிய நிறுக்கப்படும் துலாத்தின்கண்ணே துலைபுக்க செம்பியனது மரபினுள்ளா யாதலான், இரந்தோர்க்குக் கொடுத்தல் நினக்கு இயல்பாவதல்லது புகழு மல்லவே; அசுரர்க்குப் பகைவராகிய தேவர்கள் கிட்டுதற்கு வெருவும் அணுகுதற்கரிய மிக்க வலியையுடைய ஆகாயத்துத் தூங்கெயிலை அழித்த நின்னுடைய முன்னுள்ளோரை நினைப்பின், ஈண்டுள்ள பகைவரைக் கொல்லுதல் நினது புகழு மல்லவே; கேடின்றி, மறம் பொருந்திய சோழரது உறையூர்க்கண் அவைக்களத்து அறம் நின்று நிலைபெற்றதாதலால், முறைமை செய்தல் நினக்குப் புகழு மல்லவே; அதனால், மறம் மிக்கெழுந்திருந்த போரை வென்ற கணையமரத்தோடு மாறுபடும் தசை செறிந்த தோளிணையும், கண்ணிற்கு ஆர்ந்த கண்ணியையும், மனஞ் செருக்கிய குதிரையையுமுடைய வளவ! எவ்வாறு கூறுவேனோ யான்? உயர்ந்த எல்லை அளந்தறியப்படாத பொன்படுகின்ற நெடிய சிகரங்களையுடைய இமயமலையின்கட் சூட்டப்பட்ட காவலாகிய விற்பொறியையும், மாட்சிமைப்பட்ட தொழில் பொருந்திய நெடிய தேரையுமுடைய சேரன் அழிய அவனது அழிவில்லாத கருவூரை அழிக்கும் நினது பெருமை பொருந்திய வலிய தாளைப் பாடுங் காலத்து - எ - று.

நின்னைப் பாடுங்கா லென்பார், அவனது சிறப்புத் தோன்றத் தாள் பாடுங்கா லென்றார்; தாளை முயற்சி யெனினும் அமையும்.

நிறைதுலாம் புக்கோன் மருக! நீ அவன் மருகனாதலால், ஈதல் நின் புகழுமன்று; தூங்கெயி லெறிந்த நின் ஊங்கணோர் நினைப்பின், அடுதல் நின் புகழுமன்று; உறந்தை அவையத்து அறம் நின்று நிலையிற்றாதலின், முறைமை நின் புகழுமன்று; அதனால், கலிமான் வளவ! நின் தாள் பாடுங்கால், யான் யாங்கனம் மொழிகோ வெனக் கூட்டுக.

அதனால், யாங்கனம் மொழிகோ வென இயையும்.

மருகவென்புழி, ஆதலா னென்பது ஆற்றலாற் போந்த பொருளெனக் கொள்க.

* கறையடி யென்பதற்கு உரல்போலும் அடி யென்பாரு முளர்.

(கு - ரை.) 1. சொல்லிய - கலைய; (புறநா. 90 : 7); "துணைவனுக் குற்ற துன்பஞ் சொல்லிய தொடங்கி னாளே" (சீவக. 1146).

1 - 3. புறநா. 37 : 5 - 6, குறிப்புரை.

5 - 6. செம்பியன் பகைவருடைய தூங்கெயி லெறிந்தமை பின் வருவனவற்றாலும் விளங்கும்:—"ஒன்னா ரோங்கெயிற் கதவ முரு முச்சுவல் சொறியும், தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை, நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்" (சிறுபாண். 79 - 82); "வீங்கு தோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பிற், றூங்கு மெயிலுந் தொலைத்த லால்" (பழ. 49); "வெயில்விளங்கு மணிப்பூண் விண்ணவர் வியப்ப, எயில்மூன் றெறிந்த விகல்வேற் கொற்றமும்", "தூங்கெயின் மூன் றெறிந்த சோழன்கா ணம்மானை" (சிலப். 27 : 164 - 5, 29 : "வீங்கு நீர்"); "தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்" (மணி. 1 : 4); "திறல்விளங் கவுணர் தூங்கெயி லெறிந்த, விறன்மிகு முரசின் வெல்போர்ச் சோழன்" (தொல். களவு. சூ. 11, ந. "கண்ணே"); "தேங்கு தூங்கெயி லெறிந்த வவனும்" (கலிங்க. இராச. 17); "வாங்குந் திருக்கொற்ற வாளொன்றின் வாய்வாய்ப்பத், தூங்கும் புரிசை துணித்தகோன்" (இராசராச. 13); "கூடார்தந், தூங்கு மெயிலெறிந்த சோழனும்" (விக்கிரம. 8 - 9).

8 - 9. புறநா. 58 : 9; "மறங்கெழு சோழ ருறந்தை யவையத், தறங்கெட வறியா தாங்கு" (நற். 400); "ஆரங் கண்ணி யடுபோர்ச் சோழர், அறங்கெழு நல்லவை யுறந்தை" (அகநா. 93).

12. "கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்" (பொருந. 148).

15. "விடர்ச்சிலை பொறித்த வேந்தன்" (சிலப். 23 : 82; மணி. 28 : 104); "விடர்ச்சிலை பொறித்த விறலோன்" (சிலப். 28 : 136).

14 - 5. புறநா. 2 : 24, குறிப்புரை.

தலைவன் செய்தியையும் அவன் குலத்தோர் செய்தியையும் மொழிந்தமையால் இச் செய்யுள் இயன்மொழியாயிற்று. (௩௯)

(௪௦) நீயே, பிறரோம்புறு மறமன்னெயில்
ஓம்பாது கடந்தட்டவர்
முடிபுனைந்த பசும்பொன்னின்
அடிபொலியக் கழறைஇய
வல்லாளனை வயவேந்தே
யாமேநின், இகழ்பாடுவோ ரெருத்தடங்கப்
புகழ்பாடுவோர் பொலிவுதோன்ற

* பெரும்பாண். 351, ந.

இன்று கண்டாங்குக் காண்குவ மென்றும்
இன்சொலெண் பதத்தை யாகுமதி பெரும
ஒருபிடி படியுஞ் சீறிடம்
எழுகளிறு புரக்கு நாடுகிழ வோயே.

(பி - ம்) 1 'ரோம்புற்றமன்' 6 'ரெருத்தமடங்க'

திணை - அது; துறை - செவியறிவுறூஉ.

அவனை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

(இ - ள்.) நீ, பகைவரது பாதுகாத்த மறம் நிலைபெற்ற அரண்களைப் பாதுகாவாது எதிர்நின்று அழித்து அவரைக் கொன்று அவர் மகுடமாகச் செய்யப்பட்ட பசும்பொன்னால் நினது அடி பொலிய வீரக் கழல் செய்து புனைந்த வலிய ஆண்மையை யுடையை; வய வேந்தே! யாங்கள், நின்னை இழித்துரைப்போர் கழுத்திறைஞ்சப் புகழ்ந்துரைப்போர் பொலிவு தோன்ற இன்று கண்டாற்போலக் காண்போம்; எந்நாளும் இனிய மொழியோடு எளிய செவ்வியை யாகுக; பெரும! ஒரு பிடி கிடக்கும் சிறிய இடம் ஏழு களிற்றியானையைப் பாதுகாக்கும் நாட்டை யுடையோய்— எ - று.

நாடுகிழவோய்! இன்சொல் எண்பதத்தை ஆகுமதி; அதனால், நின் இகழ் பாடுவோர் எருத்தமடங்கப் புகழ் பாடுவோர் பொலிவு தோன்ற யாம் இன்று கண்டாங்குக் காண்குவ மெனக் கூட்டுக.

வல்லாளனை யென்பதனுள் ஐகாரம் முன்னிலை விளக்கி நின்றது; அசைநிலையுமாம். மதி : முன்னிலை யசைச்சொல்.

'கழறைஇய வல்லாளன்' என்றதனாற் பகையின்மையும், 'ஒருபிடி படியுஞ் சீறிட மெழுகளிறு புரக்கும் நாடுகிழவோய்' என்றதனாற் பொருட்குறைவின்மையும் கூறியவாறாயிற்று.

(கு - ரை.) 1 - 3. "புலவர் பூண்கட னாற்றிப் பகைவர், கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும், வென்றி" (பெரும்பாண். 450 - 52).

2. கடந்தடுதல் : புறநா. 8 : 5, 23 : 16, 80 : 9, 110 : 1 ; கலித். 2 : 4, 27 : 15.

9. எண்மை - எளிமை. பதம் - சமயம். 'இன்சொல் எண்பதத்தை ஆகுமதி' என்பது, "காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல், மீக்கூறு மன்ன னிலம்" (குறள், 386) என்பதைத் தழுவியது.

8 - 9. செவியறிவுறுத்தற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 114, ந. (௪௰)

(சக) காலனுங் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே
திசையிரு நான்கு முற்க முற்கவும்
பெருமரத், திலையி னெடுங்கோடு வற்றல் பற்றவும்
வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவும்
எயிறுநிலத்து வீழவு மெண்ணெ யாடவும்
களிறுமேல் கொள்ளவுங் காழக நீப்பவும்
வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்
கனவி னரியன காணா நனவிற்
செருச்செய் முன்பநின் வருதிற னோக்கி
மையல் கொண்ட வேமமி லிருக்கையர்
புதல்வர் பூங்கண் முத்தி மனையோட்
கெவ்வங் கரக்கும் பைதன் மாக்களொடு
பெருங்கலக் குற்றன்றாற் றானே காற்றோ
டெரிநிகழ்ந் தன்ன செலவிற்
செருமிகு வளவநிற் சினைஇயோர் நாடே.

(பி - ம்.) 4 'முற்கவும்'

திணை - வஞ்சி; துறை - கொற்றவள்ளை.

அவனைக் கோவூர் கிழார் பாடியது.

(இ - ள்.) கூற்றும் தன்னால் உயிர்கொள்ளலாங் காலம் வருந்துணையும் பார்க்கும்; அவ்வாறு காலம் பாராது வேல் நெருங்கிய படையினையுடைய பெரியோர் மாளும் பரிசு நீ வேண்டிய இடத்தே கொல்லும் வெல்லும் போரையுடைய வேந்தே! எட்டுத் திசையும் எரிகொள்ளி எரிந்து வீழவும், பெரிய மரத்தின்கண்ணே இலையில்லாத நெடிய கோடாகிய வற்றல் பற்றவும், வெய்ய சுடரையுடைய ஞாயிறு பல இடத்தும் செறிந்து தோன்றவும், மற்றும் அஞ்சத் தகுவனவாகிய புட்கள் குரலிசைப்பவும், பல்லு நிலத்தின்கண்ணே வீழவும், எண்ணெயை மயிரின்கண்ணே வார்க்கவும், * பன்றியேற்றை ஏறவும், ஆடையைக் களையவும், வெளிதாகிய வலிய படைக்கலம் தானிருந்த கட்டிலுடனே மறியவும், இங்ஙனம் கனவினும் மெய்ம்மையினும் பொறுத்தற் கரியவற்றைக் கண்டு, போர்செய்யும் வலியை யுடையோய்! நின்மேற்செலவின் கூறுபாட்டைக் கருதி, மயக்கம் பொருந்திய காவலில்லாத இருத்தலையுடையராய்த் தம் பிள்ளைகளுடைய பூப்போலும் கண்ணை முத்தங்

*களிறு - பன்றி; தொல். மரபு. சூ. 34.

கொண்டு தம் மனைவியர்க்குத் தமது வருத்தம் தோன்றாமல் மறைக்கும் துன்பத்தையுடைய ஆடவரோடு மிக்க கலக்கமுற்றது; காற்றுடன் எரி நிகழ்ந்தாற்போன்ற செலவையுடைய போரின்கண்ணே மிக்க வளவ! நின்னைச் சினப்பித்தோருடைய நாடு—எ - று.

உற்கலென்றது வீழ்தலை. உற்கம் முதலிய நான்கும் உற்பாதமாய் நனவிற் காணப்பட்டன; எயிறு நிலத்து வீழ்தல் முதலாயின கனவிற் காணப்பட்டன.

வரு திறன் : ஈண்டுச் செல்லுந் திறனென இடவழுவமைதியாய் நின்றது.

'மனையோட் கெவ்வங் கரக்கும்' என்பது, "ஏவ லிளையர் தாய் வயிறு கரிப்ப" (தமிழ்நெறி விளக்கம், மேற்.) என்றாற்போலப் பன்மைக் கேற்ப நின்றது.

தான் : ஈண்டு அசைநிலை.

பெருமரத்துப் பற்றவு மென இயையும்.

இலையி னெடுங்கோடு வற்றல் பற்றவு மென்பதற்கு நெடுங் கோட்டின் கண்ணே இலையில் வற்றற்றன்மை பற்றவு மென உரைப் பினும் அமையும்.

வேந்தே! முன்ப! வளவ! நீ இத்தன்மையை யாதலால், நிற்சினைஇ யோர் நாடு, பைதன் மாக்களொடு பெருங் கலக்குற்றதெனக் கூட்டுக.

காற்றோடு எரி நிகழ்ந்தன்ன செலவிற் செருமிகு வளவ வென மன்னவன் புகழும், நிற்சினைஇயோர் நாடு பைதன் மாக்களொடு பெருங்கலக்குற்றன் றென ஒன்னார் நாடு அழிபிரங்கியதும் கூறு தலால், இது கொற்றவள்ளை ஆயிற்று.

(கு - ரை.) 1 - 3. "செயிரிற் குறைநாளாற் பின்சென்று சாடி, உயிருண்ணுங் கூற்றமும் போன்ம்" (கலித். 105 : 37 - 8); "உண் ணுந் துணைக்காக்குங் கூற்று" (பழ. 89); "ஞாலத் தின்னுயிர் வாழ் வோர் நாப்பட், காலம் பார்க்குங் காலன் போல" (பெருங். 1. 37 : 204 - 5); சாற்று நாளற்ற தெண்ணித் தருமம்பார்த், தேற்றும் விண் ணெனப தன்றி யிவளைப்போல், நாற்றங் கேட்டலுந் தின்ன நயப்ப தோர், கூற்றுண்டோ" (கம்ப. தாடகைவதை. 64).

'அடல்வேண்டி னாற்றுபவர்கண்' என்பதற்கு வேற்றுவேந்தரைக் கோறல் வேண்டியவழி அதனை அப்பொழுதே செய்யவல்ல வேந்தர் மாட்டு எனப் பொருள் கூறி இப் பகுதியை மேற்கோள் காட்டினர்; குறள். 893, பரிமேல்.

9 - 10. களிறென்றது பன்றியை உணர்த்தி வருதற்கு இப் பகுதி மேற்கோள்; சிலப். 15 : 95 - 106, அடியார்.

"மிக்க வெயிற்றின கொம்பின பன்றி விறற்குரங்கு, தொக்கன தம்மைக் கனவினிற் காணிற் சுடர்மகுடச், சக்கர வர்த்திக ளாற்பய முண்டெனுந் தம்முயிர்கள், உக்கன வாதல்செய் தாற்பொரு டேயும் பயமுடைத்தே" (கனாநூல்; 15).

14 - 5. மனைவியர்க்குத் தமது வருத்தம் தோன்றாமல் கணவர் மறைத்தலை, "கருங்கய னெடுங்கட் காதலி தன்னை......வருபனி கரந்த கண்ண ணாகி" (சிலப். 16 : 94 - 7) என்பதனாலும் அறிக.

6 - 16. "பிறவும்...தானே" : தோற்றோர் தேய்விற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 7, இளம்.

16 - 7. கலக்குற்றன்று - கலக்கமுற்றது. 'காற்றும் நெருப்பும் கூடினாற்போலும்' என்பது ஒரு பழமொழி.

மு. நிமித்தம்பற்றி வந்ததற்கும் (தொல். புறத்திணை. சூ. 30, இளம்.), பாடாண் கொற்றவள்ளைக்கும் (தொல். புறத்திணை, சூ. 34, ந.), ஓம்படை வாழ்த்திற்கும் (தொல்.புறத்திணை.36, ந.) மேற்கோள். (சக)

(சஉ) ஆனா வீகை யடுபோ ரண்ணனின்
யானையு மலையிற் றோன்றும் பெருமநின்
தானையுங் கடலென முழங்குங் கூர்நுனை
வேலு மின்னின் விளங்கு முலகத்
தரைசுதலை பனிக்கு மாற்றலை யாதலிற்
புரைதீர்ந் தன்றது புதுவதோ வன்றே
தண்புனற் பூச லல்லது நொந்து
களைக வாழி வளவ வென்றுநின்
முனைதரு பூசல் கனவினு மறியாது
புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோ னீபுறங் காப்பப்
பெருவிறல் யாணர்த் தாகி யரிநர்
கீழ்மடைக் கொண்ட வாளையு முழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையு மறைநர்
கரும்பிற் கொண்ட தேனும் பெருந்துறை
நீர்தரு மகளிர் குற்ற குவளையும்
வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தமரும்
மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந

மலையி னிழிந்து மாக்கட னோக்கி
நிலவரை யிழிதரும் பல்யாறு போலப்
புலவ ரெல்லா நின்னோக் கினரே
நீயே, மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்றுவெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே.

(பி - ம்.) 3 'கடலினொலிக்கும் வைந்நுதி' 4 'மின்போலவிர் வருஞாலத்து' 17 'வருவிருந்தயரும்'

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை அவர் பாடியது.

(இ-ள்.) அமையாத வண்மையையும், பகையைக் கொல்லும் பூசலையுமுடைய தலைவ! நினது யானையும் மலைபோலத் தோன்றும்; பெரும! நின் படையும் கடல்போல முழங்கும்; கூரிய நுனியையுடைய வேலும் மின்போல விட்டு விளங்கும்; இங்ஙனம் உலகத்தின்கண் வேந்து தலை நடுங்குதற்கு ஏதுவாகிய வலியை யுடையை யாதலால், குற்றம் தீர்ந்தது; அது நினக்குப் பழையதாய் வருகின்றது; குளிர்ந்த நீராலுள்ளதாகிய பூசலல்லது வருந்தி 'எமது துயரத்தைத் தீர்ப்பாயாக வாழி வளவ!' என்று சொல்லி, நினது முந்துற்றுச் செல்லும் படையுண் டாக்கும் பூசலைக் கனவின்கண்ணும் அறியாது, புலி பாதுகாக்கும் குட்டிபோலக் குறைவில்லாத செவ்விய கோலால் நீ பாதுகாப்பப் பெரிய விசேடத்தையுடைய புது வருவாயை யுடைத்தாய் நெல்ல றுப்பார் கடைமடைக்கட் பிடித்துக்கொள்ளப்பட்ட வாளையும், உழுவார் படைவாளால் மறிக்கப்பட்ட ஆமையும், கரும்பறுப்பார் கரும் பினின்றும் வாங்கப்பட்ட தேனும், பெரிய துறைக்கண் நீரை முகந்து கொள்ளும் பெண்டிர் பறித்த செங்கழுநீருமென இவற்றை வன்புலத் தினின்றும் வந்த சுற்றத்தார்க்கு விருந்தாக விரும்பிக் கொடுக்கும் மென்புலத் தூர்களையுடைய நல்ல நாட்டுக்கு வேந்தே! மலையினின் றிழிந்து பெரிய கடலை நோக்கி நிலவெல்லையினின்று இழியும் பல யாறுகளை யொப்பப் புலவர் யாவரும் நின்னை நோக்கினர்; நீதான் அவர்க்குப் பரிசில் கொடுத்தற்பொருட்டுப் * பரிகாரமில்லாத கணிச்சி யென்னும் படைக்கலத்தை உயிர்வருந்தச் சுழற்றிக் கூற்றம் சினந்தாற் போலும் வலியுடனே நினக்கு மறுதலையாகிய இரு வேந்தருடைய நிலத்தைக் கொள்ள நோக்கினாய்—எ - று.

அறியா தென்பதனை அறியாம லெனத் திரிப்பினும் அமையும்.

வன்புலம் - குறிஞ்சியும் முல்லையும். மென்புலம் - மருதமும் நெய்தலும்.

கணிச்சியைக் குந்தாலி யென்றும், மழு வென்றும் சொல்லுவர்.

---

* மருந்து - பரிகாரம்; புறநா. 3 : 12; கலித். 89 : 10.

யாணர்த்தாகி விருந் தமரும் நன்று டென்க.

பொருந! புலவரெல்லாம் நின் னோக்கினர்; நீ அரசுதலை பனிக்கும் ஆற்றலை யாதலின், இரு வேந்தர் மண் ணோக்கினை; அதனால், இச் செய்தி புரை தீர்ந்தது, நினக்குப் புதுவ தன்றாகலி னெனக் கூட்டுக.

புரைதீர்ந்தன் றென்பதற்கு உயர்ச்சி தீர்ந்ததெனப் பொருளாக்கி, பொருந! நீ ஆற்றலை யாதலின், இருவேந்தர் மண்ணோக்கினை; புலவ ரெல்லாம் பரிசில் பெறுதற்பொருட்டு நின்னோக்கினர்; இச்செய்தி நினக் குப் புதிதன்று; ஆகலின் உயர்ச்சி தீர்ந்ததென் றுரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 1. புறநா. 54: 7.

2. யானைக்கு மலை : புறநா. 38 : 1; பெரும்பாண். 352; மதுரைக். 46; மலைபடு. 572.

6. புறநா 76 : 2.

7. புனற்பூசல் - நீர்விளையாட்டால் உண்டாகும் சண்டை.

9. இவ்வடியை மனத்துட் கொண்டு சிலப்பதிகார உரையில், 'பகைவர் தெறுதலைக் கனவிலு நினைந்தறியாத வெனவுமாம், (சிலப். 14 : 200, உரை) என அடியார்க்குநல்லார் எழுதியுள்ளார்.

7 - 9. 'நீரழி பாக்க மென்றது வெள்ளத்தான் அழிவுபடி னல்லது பகைவரான் அழியாத பாக்க மென்றவாறு' (பதிற். 13 : 12, உரை; 28 : 11 - 3.)

10. "குட்டியைத் தின்ன லாமோ கோட்புலி புறத்த தாக" (சீவக. 1134); "புலிதானே புறங்காக்கக் குட்டிகோட் படாதென்ன, ஒலியாழி யுலகுரைக்கு முரைபொய்யோ", "புன்புற மயிரும் பூவாக் கட்புலம் புறத்து நாரு, வன்பறழ் வாயிற் கவ்வி வல்லிய மிரிந்த" (கம்ப. சூர்ப்பநகை. 102, கடறுவு. 7).

17 - 8. வன்புலம் - குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும்; இவை வன்பால் எனவும் வழங்கும். மென்புலம் - மருதமும் நெய்தலும்; மென்பா லெனவும் வழங்கும். "வன்புல......பொருந : என்றக்காற் பகைவேந்தரை வென்றி கொள்ளுங்கால் அவர்தாமே தத்தம் பொருள் பிறர்க் களிப்பாரென்னும் பொருள்தோன்றினுந் தோன்று மென்பதல்லது ஒருதலையாக உள்ளுறையுமவங் கோடல் வேண்டுவதன்று; என்னை? 'தாய்சாப்பிறக்கும்...அவனூர்' (ஐங்குறு. 24) என்றாற்போலக் கூறுது அந்நாட்டுக் கருங்களமர் முதலாயினோர் வருந்தாமற் பெறும் பொருள் பிற நாட்டார்க்கு விருந்து செய்யத் தகுமென்று, அந் நாட்டினது வளமை கூறினமையி னென்பது" (தொல். உவம. சூ. 31, பேர்.)

19 - 21. "கல்வீ ழருவி கடற்படர்ந் தாங்குப், பல்வேறு வகையிற் பணிந்த மன்னர்" (பெரும்பாண். 427 - 8); "தூமலர் துவன்றிய கரை பொரு நிவப்பின், மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாஅங்கு, யாமவ ணின்றும் வருதும்" (மலைபடு. 51 - 3); "கடுவரை நீரிற் கடுந்துவர"

(பு. வெ. 11); பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய், மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்'' (கம்ப. கையடை. 15).

22. புறநா. 3 : 12, குறிப்புரை பார்க்க; ''கூற்றுவெகுண்டு வரினுமாற்றுமாற் றலையே'' (பதிற். 14 : 10).

23 - 4. 'கூற்று......நோக்கினையே : என்பது வெகுளியுவமம்' (தொல். உவம. சூ. 19, பேர்.)

21 - 4. புறநா. 203; ''நெருந லென்பது சென்றது நின்ற, இன் றுஞ் செல்லா நின்றது முன்சென்று, வருநாள் கண்டா ரியாரே யதனால், ஒருநா ளகப்படுத் துடையோ ரின்மையின், நல்லது நாடுமி னுள்ளது கொடுமின், வழாஅ வின்பமும் புணர்மி னதாஅன்று, கீழது நீரகம் புகினு மேலது, விசும்பின் பிடர்த்தலை யேறினும் புடையது, நேமி மால்வரைக் கப்புறம் புகினும், கோள்வாய்த்துக் கொட்குங் கூற்றத்து, மீளிக் கொடுநா விலக்குதற் கரிதே'' (ஆசிரியமாலை).

மு. கொள்ளார்தேஎங் குறித்த கொற்ற மென்னுந் துறைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 10, இளம்.; சூ. 12, ந. (சஉ)

(சங) நிலமிசை வாழ்ந ரலமர றீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரு மருளக் கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக
நேரார்க் கடந்த முரண்மிகு திருவிற்
றேர்வண் கிள்ளி தம்பி வார்கோற்
கொடுமர மறவர் பெரும கடுமான்
கைவண் டோன்ற லைய முடையேன்
ஆர்புனை தெரியனின் முன்னோ ரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர் மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவா யென்னினும்
நீபிழைத் தாய்போ னனிநா ணினையே
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க் கெண்மை காணுமெனக்

காண்டகு மொய்ம்ப காட்டினை யாகலின்
யானே பிழைத்தனென் சிறக்கநின் னாயுள்
மிக்குவரு மின்னீர்க் காவிரி
எக்க ரிட்ட மணலினும் பலவே.

(பி - ம்.) 5 'பருந்தினெறி' 7 'தபுதிகண்டஞ்சிச்' 11 'கொடுவின் மறவர்' 14 'செய்யார்' 22 'வருநீர்க்'

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும் தாமப்பல்கண்ணனும் வட்டுப் பொருவுழிக் கைகரப்ப வெகுண்டு வட்டுக் கொண்டெறிந் தானைச் சோழன் மகனல்லை யென, நாணியிருந்தானைத் தாமப்பல் கண்ணனார் பாடியது.

(இ - ள்.) நிலத்தின்மேல் உயிர் வாழ்வார்க்கு வெம்மையான் உளதாகிய சுழற்சி நீங்கச் சுடுகின்ற கதிரையுடைய ஞாயிற்றினது வெப்பத்தைத் தாம் பொறுத்துக் காற்றை உணவாகக் கொண்டு அச் சுடருடனே சூழ வரும் விளங்கிய சடையையுடைய அருந்தவரும் வியப்பான் மயங்க, வளைந்த சிறகினையும் கூரிய உகிரினையுமுடைய பருந்தினது எறிதலைக் கருதி அதனைத் தப்பித் தன்னிடத்தை யடைந்த குறிய நடையையுடைய புருவினது அழிவிற்கு அஞ்சித் தன்னழிவிற்கு அஞ்சாது துலாத்தலையுட் புக்க வரையாத வண்மையையுடைய வலியோனது மரபினுள்ளாய்! பகைவரை வென்ற மாறுபாட்டான் மிக்க செல்வத்தையுடைய தேர்வண் கிள்ளிக்குத் தம்பி! நீண்ட அம்பினையும் வளைந்த வில்லினையு முடைய மறவர்க்குத் தலைவ! விரைந்த குதிரையை யுடைய கைவள்ளிய தோன்றல்! நினது பிறப்பின்கண் ஐயப்பாடுடையேன்; ஆத்தியாற் செய்யப்பட்ட தாரை யுடைய நினக்கு முன்னுள்ளார் யாவரும் பார்ப்பார் வெறுக்கத்தகுவன செய்யார்; மற்று இவ் வெறுக்கத்தக்க செய்கை நினக்கு நீர்மையை யுடைத்தோ வென்று, நீ வெறுக்கச் சொல்லி நினக்கு யான் செய்த தவற்றிற்கு வெரு யென்னினும், நீ தவறு செய்தாய் போல மிக நாணி னாய்; இவ்வாறு தம்மைத் தப்பியவரைப் பொறுக்குந் தலைமை இக் குலத்தின்கட் பிறந்தோர்க்கு எளிமை யுடைத்துக்காணுமெனக் காணத் தக்க வலியை யுடையோய்! நீ அறிவித்தாய்; ஆகலின், யானே தவறு செய்தேன்; பெருகி வரும் இனிய நீரையுடைய காவிரி கொழித்திடப் பட்ட மணலினும் பலவாக நின் வாழ்நாள் சிறப்பதாக—எ - று.

முனிவ ரென்றது வேணுவியோரை; அன்றி, சுடர் திரிந்தவழித் திரிந்து தவஞ்செய்யும் முனிவ ரென்றும் உரைப்ப.

சீரை - துலாக்கோற்றட்டு.

'மற்றிது, நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி' என்றது, சூது பொருவுழிக் கையாற் கவறு புதைப்ப வெகுண்டு * வட்டுக்கொண் டெறிந்தானை 'இவ்வாறு செய்தல் நின் பெருமைக்குப் பொருந்துமோ? அதனால் நின் பிறப்பிலே ஓர் ஐயமுடையேன்' என்ற சொல்லை.

இது பொறுத்தற்கரிய பிழையைப் பொறுத்த குணவென்றியான் அரசவாகை யாயிற்று.

(சூ - ரை.) 1. அலமரல் - சூரிய வெப்பத்தால் உண்டாகும் சுழற்சி.

2 - 4 "விண்செலன் மரபி னையர்" (முருகு. 107) என்பதற்கு 'ஞாயிற்றின் வெம்மையைப் பல்லுயிரும் பொறுத்தலாற்றுவென்று கருதித் தமதருளினாற் சுடரொடு திரிந்து அவ் வெம்மையைப் பொறுக்கின்ற முனிவர்' என்று நச்சினார்க்கினியர் விசேடவுரை யெழுதி இவ்வடிகளை மேற்கோள் காட்டியிருத்தலும், "சுடரொடு திரிதரு முனி வரும்" (சிலப். 12 : 'அவிப்பலி') என்பதும், 'ஆதித்தன் வெப்பந் தணிதல் காரணமாக அவனுடனே கூடித் திரியும் முனிவரும்', 'கதிரவ னுடைய வெம்மை உயிர்களை வருத்தாமல் அதனைத் தாங்கி அவனுடனே சுழன்று திரிதலைச் செய்யும் தெய்வ விருடிகளும்' என்னும் அதன் உரைகளும் இங்கே அறிதற்பாலன.

6 - 7. 'என்புமுரியராதல், தன்னகம் புக்க..........சீரை புக்கோன் முதலாயினார்கட் காண்க' (குறள், 72, பரிமேல்.).

6 - 8. இவ்வடிகளாற் கூறிய அவ்வரசன் பெருமை கொடையால் உண்டாகிய வீரச்சுவைக்கு உதாரணம்; தொல். மெய்ப்பாடு. சூ. 9, பேர்.

4 - 8. புறநா. 37 : 5 - 6, குறிப்புரை.; "சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி, ஈர்ந்திட் டுயர்துலைதா னேறினான்-நேர்ந்த, கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட், படைவீர மோசென்னி பண்பு" (தண்டி. மேற்.).

21 - 3. ஒரு தலைவனை வாழ்த்துங்கால் அவன் ஆட்சிக்குரிய ஆறு முதலியவற்றின் மணலினும் நீ வாழ்க என்று அவனை வாழ்த்துதல் மரபு; அதனை இந்நூல் 9-ஆம் செய்யுளாலு முணர்க.

மு. 'நிலமிசை வாழ்நரென்னும் புறப்பாட்டுப் புலவன் அரசனை வைது ஆறி அது நன்குரைத்தல்; அஃது இயற்கை வகையானன்றிச் செயற்கை வகையாற் பரவலும் புகழ்ச்சியுந் தொடர்ந்த முன்னோர் கூறிய குறிப்பு' (தொல். புறத்திணை. சூ. 27, ந.) (சங)

(சச) இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்

---

* இச் செயல் தருமபுத்திரர்மீது கோபத்தால் விராடவரசன் கவறு கொண்டெறிந்த செய்தியை நினைப்பூட்டுகின்றது.

தலமரல் யானை யுருமென முழங்கவும்
பாலில் குழவி யலறவு மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவு நீரில்
வினைபுனை நல்லி லினைகூஉக் கேட்பவும்
இன்னா தம்ம வீங்கினி திருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் றோன்றல்
அறவை யாயி னினதெனத் திறத்தல்
மறவை யாயிற் போரொடு திறத்தல்
அறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதி லொருசிறை யொடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே.

(பி - ம்.) 2 'நெய்மிகுதி' 3 'வெற்றி' 5 'துலமரல்' 9 'வீண்டினி திருத்தல்' 11 'யாயினிற்றெனத் திறவைதன்' 13 'யாகித்' 16 'வுடைத்தது'

திணையும் துறையும் அவை.

அவன் ஆவூர் முற்றியிருந்த காலத்து அடைத்திருந்த நெடுங் கிள்ளியைக் கோவூர் கிழார் பாடியது.

(இ - ள்.) கரிய பிடியினது ஈட்டத்தோடு பெரிய கயத்தின்கட் படியாவாய் நெல்லையுடைய கவளத்துடனே நெய்யால் மிதித்துத் திரட்டப்பட்ட கவளமும் பெருவாய்த் திருந்திய மருங்கையுடைய வலிய கம்பம் வருந்தச் சாய்த்து நிலத்தின் மேலே புரளும் கையை யுடையவாய் வெய்தாக உயிர்த்துச் சுழலும் யானை உருமேறுபோல முழங்கவும், பாலில்லாத குழவி அழவும், மகளிர் பூவில்லாத வறிய தலையை முடிப்பவும், நீரில்லாத தொழில் புனைந்த நல்ல மனையிடத் துள்ளார் வருந்திக் கூப்பிடும் கூப்பீட்டைக் கேட்கவும், இவற்றிற்கு நாணாது இவ்விடத்து நீ இனிதாக இருத்தல் இன்னாது; நண்ணுதற்கு அரிய வலியை யுடைய வலிய குதிரையை யுடைய தோன்றால்! அறத்தை உடையையாயின், இது நினதன்றோ என்று சொல்லித் திறத்தல் செய்வாயாக; மறத்தை உடையையாயின், போரால் திறத்தல் செய்வாயாக; அவ்வாறன்றி, அறத்தையும் மறத்தையு முடையை யல்லையாகத் திறவாது அடைக்கப்பட்ட திண்ணிய நிலையை உடைத்தாகிய கதவினையுடைய நீண்ட மதிலுள் ஒரு பக்கத்தே ஒதுங்குதல் நாணுந் தன்மையை யுடைத்து, இஃது ஆராயுங்காலத்து—எ - று.

செய் யென ஒரு சொல் வருவித்து உரைக்கப்பட்டது.

திறத்த லென்பதனை இது திறக்க வென வியங்கோளாக உரைப்பினும் அமையும்.

* அம்ம (9) கேட்பித்தற்கண் வந்தது.

'அறவியு மறவியு மல்லே யாயின்' என்று பாடமோதுவாரும் உளர்.

படியா, பெரு என்பன எதிர்மறை வினையெச்ச முற்று.

கைய வென்பது, வினையெச்ச வினைக்குறிப்பு முற்று.

(கு - ரை.) 2. நெற்கவளம் : புறநா. 184 : 1, 337 : 14; "காய்நெற் கற்றையின், பிடிநலந் தழீஇவரும் பெருங்கைக் குஞ்சரம்" (சீவக. 81). நெய்ம்மிதி : 'நெய்ம்மிதி கவளம்' (பெரும்பாண். 394); "நெய்ம்மலி கவளங் கொள்ளாது" (சீவக. 1076); "நெய்ம்மிதி கவளந் தெவிட்டிநின் நடர்க்கு நிழல்சுளி தறுகண்மால் யானை", "கைம்முகந் தெடுத்த நெய்ம்மிதி கவளங் களித்தெறி மும்மதக் களிறு" (கூர்ம. சூரியன் மரபு. 8, 22).

4. பலவின்பாற் படர்க்கை வினைக்குறிப்புமுற்று வினையெச்சக் குறிப்பானதற்கு மேற்கோள்; நன். சூ. 350, மயிலை; நன். வி. சூ. 351; இ. வி. சூ. 250.

7. உண்ணுதற்குரிய நீரைப் புக விடாது தடுத்தல் பகைவர்க் குரிய தொழிலாதலின் நீரின்மை கூறப்பட்டது.

9. புறநா. 36 : 11.

10. வய என்னும் உரிச்சொல் 'வலி' என்னும் பொருளில் வந்த தற்கு மேற்கோள்; இ. வி. சூ. 290, உரை.

11 - 2. புறநா. 390 : 1 - 2; "மறவையா யென்னுயிர்மேல் வந்த விம் மருண்மாலை" (சிலப். 7 : 42).

11 - 6. "அறவை....காணுங்காலே" என இது செம்பொருட் செவியுறை; தொல். செய். சூ. 128, பேர்.

16. புறநா. 36 : 13.

மு. அகத்தரசற்கு அழிந்து கூறியதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 10, இளம்.

ஆவூர் என்பது சோழ நாட்டின்கண் காவிரியின் தென்பாலுள்ள தான ஒரு பழைய ஊர்; பாடல் பெற்ற சிவஸ்தலம்.

நினதெனத் திறத்தல் அல்லது போரொடு திறத்தல் அரசர்க்குரிய இயல்பென்று நினைந்து கூறினமையின், இச் செய்யுள் அரசவாகை யாயிற்று. (சச)

(சரு) இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே

* "அம்ம கேட்பிக்கும்" (தொல். இடை. சூ. 28).

இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனுற்
குடிப்பொரு ளன்று நுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே.

(பி - ம்.) 1 'மிலைத்தோனு மல்லன்' 7 'செய்கை'

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.

சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர் கிழார் பாடியது.

(இ - ள்.) பெரிய பனையினது வெளிய தோட்டைச் சூடினோனல்லன்; கரிய கோட்டினையுடைய வேம்பினது தாரையுடையோனல்லன்; நின்னுடைய கண்ணியும் ஆத்தியாற் செறியக் கட்டப்பட்டது; நின்னுடன் பொருவானுடைய கண்ணியும் ஆத்தியாற் செறியக் கட்டப்பட்டது; ஆதலால், நும்முள், ஒருவீர் தோற்பினும் தோற்பது நுங் குடியன்றோ? இருவீரும் வெல்லுதல் இயல்புமன்று; ஆதலால், நுங் குடிக்குத் தக்க தொன்றன்று நுமது செய்கை; கொடியாற் பொலிந்த தேரையுடைய நும்மைப் போலும் வேந்தர்க்கு உடம்பு பூரிக்கும் உவகையைச் செய்யும், இம் மாறுபாடு; ஆதலான், இது தவிர்தலே நுமக்குத் தக்கது—எ - று.

நின கண்ணியு மென்பது, நின்ன கண்ணியு மென விகாரமாயிற்று. அதனு லென்பதனை ஒழித்தும் பாடமோதுப.

இது சந்து செய்தலால் துணைவஞ்சி யாயிற்று.

(கு - ரை.) 1. 'தோடு' என்பது புல்லுறுப்பை யுணர்த்துதற்கு மேற்கோள்; தொல். மரபு. சூ. 86, பேர்.

2. புறநா. 79 : 2.

3 - 6. முன்னிலைகூடிய படர்க்கையும் முன்னிலை முடிபேற்றதற்கு மேற்கோள்; நன். சூ. 333, மயிலை.

9. மெய்ம்மலியுவகை; குறுந். 398 : 7; கலித். 40 : 32. (சரு)

(சசு) நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
இவரே, புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்
களிறுகண் டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே.

(பி - ம்.) 1 - 2 'பிறவும் பலவும்' 6 'மன்ற மருண்டு'

திணையும் துறையும் அவை (பி - ம். துறை - இயன்மொழி).

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர் கிழார் பாடி உய்யக்கொண்டது.

(இ - ள்.) நீதான், புறவின் அல்லலன்றியும் பிறவும் உற்ற துன்பம் பலவற்றையும் தீர்த்த சோழனுடைய மரபிலுள்ளாய்; இவர்தாம், அறிவான் உழுதுண்ணுங் கற்றோரது வறுமையை யஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலையுடையராய் வாழ்வாரது மரபினுள்ளார்; இவர் இப்பொழுது களிற்றைக் கண்டு தம் இளமையால் தாம் முன்பு வெருவி அழுகின்ற அழுகையை மறந்த புல்லிய தலையையுடைய சிறு பிள்ளைகள்; மன்றை வெருவிப் பார்த்து முன்பு அறியாத புதியதோர் வருத்தத்தை யுடையர்; இது கேட்டாயாயின், நீ விரும்பியதைச் செய்வாயாக—எ - று.

தண்ணிழல் வாழ்நர் சிருஅரென இயைப்பினும் அமையும்.

அழாஅல் களிறு கண்டு மறந்த வெனக் கூட்டுக.

நீ புரு முதலாயினவற்றின் துயர் தீர்த்தற்கு உயிர்க் கொடை பூண்டோன் மருகனுதலானும், இவர் கற்றோர் வறுமையஞ்சிப் பகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர் மரபினுள்ளா ராதலானும் இவர் நின்னால் அருளத்தகி னல்லது முனியத்தகா ரென்பதாம்.

இதுவும், இவரைக் கொல்லாமற் சந்து செய்வித்தலின் துணை வஞ்சி ஆயிற்று.

(கு - ரை.) 1 - 2. விடுத்தோன் - சிபிச் சக்கரவர்த்தி. புறநா. 37 : 5 - 6, குறிப்புரை.

3. புலனுழுதுண்மார் : புறநா. 206 : 2 - 5, குறிப்புரை.

5. அழாஅல் - அழுதல். தம்மைக் கொல்ல வந்த களிற்றைக் கண்டவுடன் அழுகையை நீங்கினர் என்றது, அவர்கள் பேதைமையை விளக்கி நின்றது. மலையமா னென்றது கோவலூரி லிருந்த சிற்றரச னொருவனை.

மு. துணைவஞ்சி யென்னும் துறைக்கு மேற்கோள் (தொல். புறத் திணை. சூ. 7, இளம்.); இப் பாட்டு மேற்செலவின்கண் அடங்காமையின் துணைவஞ்சி யன்றென்றும், பாடாண்டிணை யென்றும் கூறுவர்; தொல். புறத்திணை. சூ. 8, ந. (சசு)

(சஎ) வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி

வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண வண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே.

(பி - ம்.) 7 'தீங்கறிந்தன்றோ' 9 'தோங்கிய' 10 'மெய்தின'

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளியுழை நின்று உறையூர் புகுந்த இளந்தத்தனென்னும் புலவனை (பி - ம். இளந்தத்தனை)க் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றுவந்தா னென்று கொல்லப் புக்குழி (பி - ம். கொலைபுகுவழி)க் கோவூர் கிழார் பாடி உய்யக்கொண்டது.

(இ - ள்.) வண்மையை யுடையோரை நினைத்துப் பழுமரந் தேரும் பறவை போலப் போகி நெடிய வென்று கருதாது அரிய வழி பல வற்றையுங் கழிந்து *திருந்தாத நாவால் தாம் வல்லபடி பாடி ஆண்டுப் பெற்ற பரிசிலான் மகிழ்ந்து சுற்றத்தை யூட்டித் தாமும் பொருளைப் பாதுகாவாது உண்டு உள்ளம் மலர்ந்து வழங்கித் தம்மைப் புரப் போராற் பெறும் சிறப்பு ஏதுவாக வருந்தும் இப் பரிசிலான் வாழும் வாழ்க்கை,பிறர்க்குச் செய்யும் கொடுமை யறிந்ததோ வெனின், இல்லை; கூறுபடக் கல்விமுகத்தால் தம்மொடு மலைந்தோர் நாணத் தமது கல்வியான் வென்று தலையெடுத்து நடந்து அவ்விடத்து இனிதாக ஒழுகி னல்லது, உயர்ந்த புகழுடைய நிலமாளும் திருப் பொருந்திய நும்மை யொக்கும் தலைமையு முடைத்து—எ - று.

ஓங்கிய வென்பதூஉம், செல்வமுமுடைத்தென்பதூஉம் பாடம்.

சுரம் பல கடந்து புள்ளிற் போகி யென மாறிக் கூட்டுக.

பரிசில் வாழ்க்கை நும்மோ ரன்ன செம்மலு முடைத்து; ஆதலால், நண்ணார் நாண இனிதொழுகி னல்லது (பி - ம். இனிதொழுகின் நல்லது), பிறர்க்குத் தீதறிந்தன்றோ? இன்றெனக் கூட்டுக.

இக் கோவூர் கிழார் தாமும் பரிசில் வாழ்நருள் ஒருவராதலான், 'வடியா நாவின் வல்லாங்குப் பாடி' எனப் பணிந்து கூறினா ரென்க.

(கு - ரை.) 1. புறநா. 370 : 11; "பழுமர முள்ளிய பறவையின்... புக்கு" (பொருந. 64 - 7); "பழுமரந் தேரும் பறவை போல...பாண" (பெரும்பாண். 20 - 22); "பழந்தேர் வாழ்க்கைப் பறவை போல......

*வடியாநாவென்பதற்கு இங்கே எழுதியுள்ள உரையோடு, "வடிநா" (கலித். 141 : 18) என்பதற்கு, 'வழுவின சொற்கள் சொல் லாதபடி தெள்ளிய நா' என நச்சினார்க்கினியர் எழுதிய உரை கருதற் குரியது.

துவன்றி" (மதுரைக். 576 - 80); "கனிபொழி கானங் கிளையொடுணீஇய, துணைபறை நிவக்கும் புள்ளின மான......நன்னற் படர்ந்த கொள்கையொடு" (மலைபடு. 54 - 64).

'படர்' என்பது உள்ளுதலாகிய குறிப்புணர்த்துதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 44, சே.; தெய்வச்; இ. வி. சூ. 232, உரை.

3. "வல்லாங்குச் செய்து" (மணி. 23 : 44).

6. மு. புறநா. 206 : 4.

6 - 7. வாழ்வாரது தொழில் வாழ்க்கைமேல் ஏற்றப்பட்டது.

குவ்வுருபு பொருட்டுப்பொருண்மைக்கண் வந்ததற்கு 'வரிசைக்கு வருந்தும்' என்பது மேற்கோள்; சிலப். பதி. 5, அடியார்.; நன். சூ. 297, மயிலை.

மு. துணைவஞ்சி யென்னும் துறைக்கு மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 7, இளம்.); இப் பாட்டு மேற்செலவின்கண் அடங்காமையின் துணைவஞ்சி யன்றென்றும், பாடாண்டிணை யென்றும் கூறுவர் (தொல். புறத்திணை. சூ. 8, ந.); "வள்ளியோர்ப் படர்ந்து...செம்மலுமுடைத்தே : இது சோழன் நலங்கிள்ளியுழை நின்று உறையூர் புக்க இளந்தத்தன் என்னும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்று வந்தானென்று கொல்லப் புக்குழி அவ்வரசற்கு வருகின்ற துகளினைக் கோவூர் கிழார் புலப்படாமற் செய்யுள் செய்து, தமது சொல்லை அரசன் கேட்டு அஞ்சினு னென்னும் பொருளை நிறுத்துதலிற் பழிகரப்புச் செவியுறை யங்கத மாயிற்று; இவ்வாறே புறத்தினுட் செவியுறைச் செய்யுட்கள் பலவும் வருவன வுள; அவ் வேறுபாடுணர்ந்து கொள்க" (தொல். செய். சூ. 128, ந.). (சஎ)

(சஅ) கோதை மார்பிற் கோதை யானும்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்
மாக்கழி மலர்ந்த நெய்த லானும்
கண்ணு றும்மே கானலந் தொண்டி
அஃதெம் மூரே யவனெம் மிறைவன்
அன்னோற் படர்தி யாயி னீயும்
எம்மு முள்ளுமோ முதுவா யிரவல
அமர்மேம் படூஉங் காலைநின்
புகழ்மேம் படுநனைக் கண்டன மெனவே.

(பி - ம்.) 7 'எம்மையு'

திணை - பாடாண்டிணை; துறை - புலவராற்றுப்படை.

* சேரமான் கோக்கோதைமார்பனைப் பொய்கையார் பாடியது.

(இ - ள்.) கோதையுடைய மார்பிற்கு அணிந்த கோதையானும், அக் கோதையைப் புணர்ந்த மகளிர் சூடிய கோதையானும், கரிய

---

* இப் பாட்டின் முதலடியில் தலைவன் பெயர் அமைந்துள்ளது.

கழியின்கண் மலர்ந்த நெய்தற்பூவானும் தேன் நாறுநிற்கும் கானலை யுடைய தொண்டி; அஃது எம்முடைய ஊர்; அவன் எம்முடைய தலைவன்; அத் தன்மையோனிடத்தே போகின்றாயாயின், நீயும் எம்மையும் நினைப்பாயாக; முதிய வாய்மையையுடைய இரவல! நீ அமரின்கண் மேம்படுங் காலத்து நினக்கு உளதாகிய புகழை மேம் படுத்துமவனைக் கண்டேம் யாமெனச் சொல்லி—எ - று.

இரவல! நீயும் அன்றோற் படர்குவையாயின் நின் புகழ் மேம்படு நனைக் கண்டன மென எம்மையும் உள்ளெனக் கூட்டுக.

கண்டனமென எம்மும் உள்ளென்றாரேனும், உள்ளிக் கண்டன மெனச் சொல் லென்பது கருத்தாகக் கொள்க.

மோ : முன்னிலை அசைச்சொல். நீயு மென்பதூஉம், எம்மு மென்ப தூஉம் எச்சவும்மை.

தலைவனது இயல்பையும் ஊரையும் கூறி, முதுவாயிரவல! எம்மும் உள்ளெனத் தன் தலைமை தோன்றக் கூறினமையால், இது புலவராற் றுப்படை ஆயிற்று.

(கு - ரை.) 1. கோதை - சேரன், மாலை.

1 - 2. மோனைத்தொடைக்கும் (தொல். செய். சூ. 92, பேர்.), பிறவடி தொடுத்த கட்டளையடி மோனைக்கும் (தொல். செய். சூ. 92, ந.) மேற்கோள்.

4. தொண்டி : புறநா. 17 : 13; ஐங்குறு. 178.

7. முதுவாயிரவல : புறநா. 180 : 9; பதிற். 66; சிறுபாண். 40.

(சஅ)

(சகூ) நாட னென்கோ வூர னென்கோ
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்ப னென்கோ
யாங்கன மொழிகோ வோங்குவாட் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பி னயல
5 திறங்குகதி ரலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே.

(பி - ம்.) 3 'யாங்ஙன' 4 - 5 'னயலினிரங்கு'

திணையும் துறையும் அவை; துறை - இயன்மொழியுமாம்.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) குறிஞ்சி நில முடைமையால், நாடனென்று சொல்லு வேனோ? மருத நில முடைமையால், ஊரனென்று சொல்லுவேனோ? நெய்த னில முடைமையால், ஒலி முழங்குகின்ற குளிர்ந்த கடலை யுடைய சேர்ப்பனென்று சொல்லுவேனோ? எவ்வாறு சொல்லுவேன், மேம்பட்ட வாளையுடைய கோதையை? புனங் காப்போர் கிளிகடி கருவியைப் புடைப்பின், அப் புனத்திற்கு அயலாகிய வளைந்த நெற் கதிர் சுழலும் வயலின்கண்ணும், மிக்க நீரையுடைய கடற்கரையின் கண்ணும் உளவாகிய புட்கள் சேர எழுமாதலான்—எ - று.

'புனவர் தட்டை புடைப்பின்' எனக் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் ஏற்பக் கூறினமையான், நாடனென்பதூஉம் அவ்விரண்டு நிலத்துக்கும் கொள்ளப்படும்; எனவே முல்லை நிலமும் உடைய னென்றவாறும்.

புனவர் தட்டை புடைப்பின், கழனியிலும் சேர்ப்பினும் புள்ளெழு மாதலால், கோதையை யாங்கனம் மொழிகோ வெனக் கூட்டுக.

இது, நானிலமு முடைய ஞதலிற் பெருஞ் செல்வ முடையன்; நீ அவன்பாற் செல்லென ஆற்றுப்படுத்தவாறு; அவனது இயல்பைப் புகழ்ந்தமையான் இயன்மொழியு மாயிற்று.

(கு - ரை.) 2. "பாடிமிழ் பனிக்கடல்" (முல்லைப். 4).

1 - 3. சேரனது நாடு நானில வளமுடையது : "திரைசெய் கடலின் பெருவளனுந் திருந்து நிலனின் செழுவளனும், வரையின் வளனு முடன்பெருகி மல்கு நாடு மலைநாடு" (பெரிய. 7 : 1).

4. தட்டை : "வெதிர்புனை தட்டையேன்" (நற். 147); "தழலுந் தட்டையு முறியுந் தந்து" (குறுந். 223); "தழலை வாங்கியுந் தட்டை யோப்பியும்" (அகநா. 188); "ஒலிகழைத் தட்டை புடையுநர் புனந் தொறும்" (மலைபடு. 328); 'தட்டையாவது :—மூங்கிலைக் கண்ணுக் குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன் றிலே தட்டுவதொரு கருவி' (குறிஞ்சிப். 43, ந.).

4 - 6. திணைமயக்கத்திற்கு மேற்கோள்; திருச்சிற். 63, பேர். (சகூ)

(௫௦) மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ

இவணிசை யுடையோர்க் கல்ல தவண
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசினீ யீங்கிது செயலே.

(பி - ம்.) 1 'வளப்பின்', 'வள்ளின்'

திணை - அது; துறை - இயன்மொழி.

சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை முரசுகட்டில் அறியாதேறிய மோசிகீரனை (பி - ம். மோசிகீரனரை)த் தவறு செய்யாது அவன் துயிலெழுந்துணையும் கவரிகொண்டு வீசியானை மோசி கீரனர் பாடியது.

(இ - ள்.) குற்றந் தீர வலித்துப் பிணித்த வாரப்பட்ட வாரை யுடைய கருமரத்தாற் செய்தலான் இருட்சி பொருந்திய பக்கம் பொலிவு பெற மயிலினது தழைத்த நெடிய பீலியால் தொடுக்கப்பட்ட ஒள்ளிய பொறியை யுடைத்தாகிய நீலமணி போலும் நிறத்தையுடைய தாரைப் பொற்றளிரையுடைய உழிஞையுடனே பொலியச் சூட்டப்பட்டுக் குருதிப் பலிகொள்ளும் விருப்பத்தையுடைய உட்குப் பொருந்திய வீர முரசம் நீராடி வருவதன் முன்னே எண்ணெயினது நுரையை முகந்தாற் போன்ற மெல்லிய பூவையுடைய கட்டிற்கண்ணே இதனை முரசுகட்டி லென்ப தறியாது ஏறிக் கிடந்த என்னை வெகுட்சி தோன்ற இரு கூறாக்கும் நின்னுடைய வாளை வாயை மாற்றியதாகிய அதுவும் அமையும், நல்ல தமிழ் முழுதும் அறிந்தமைக்கு; அவ் வெகுட்சி யொழிந்து அதனுலும் அமையாதே குறுக வந்து நினது வலியையுடைய முழவு போலும் தோளை யெடுத்துச் சாமரத்தாற் குளிர வீசினாய்; இவ் வகன்ற உலகத்தின்கண்ணே பரக்கும் பரிசு இவ்வுலகத்துப் புகழுடையோர்க் கல்லது, அவ்விடத்ததாகிய உயர்ந்த நிலைமையையுடைய உலகத்தின் கண் உறைதலில்லாமையைத் தெரியக் கேட்ட பரிசாலேயோ வெற்றி பொருந்தப்பட்ட தலைவா! நீ இவ்விடத்து இச் சாமரையை வீசுதல்? அதற்குக் காரணம் சொல்லுவாயாக—எ - று.

சூட்டி யென்பதனைச் சூட்ட வென்று திரிப்பினும் அமையும்.

உழிஞை - கொற்றான்; அது குட நாட்டார் வழக்கு.

முழவுத்தோ ளோச்சி யெனவும், தண்ணென வீசியோ யெனவும் கூறியவாற்றால், சாமரை யென்பது பெற்றாம்.

கமழ்தல் ஈண்டுப் பரத்தற்பொருட்டாய் நின்றது.

* தமிழென்பதற்குத் தமிழ்நா டெனினும் அமையும்.

---

* "மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்", "தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்" (புறநா. 35 : 3, 51 : 5).

குருசில்! நீ இது செய்தல், இசையுடையோர்க் கல்லது உறையு ளின்மை கேட்ட மாறுகொ லெனக் கூட்டுக.

எண்ணென்பது கருதெனவுமாம்.

எண்ணி யென்று பாடமாயின், கருதி யென்க.

(கு - ரை.) 1. விசித்த - கட்டிய. வார்பு - வாருதல். வள்பு - வார்.

3. புறநா. 274 : 2.

4. உழிஞை - கொத்தா னென்னும் கொடி; பகைவருடைய மதிலை வளைத்துக் கொள்வோர் அதற்கு அறிகுறியாக அணிதற்குரியது. அடையாளப்பூக்கள் தலைவர்களுக்கேயன்றி அவர்களுடைய ஆயுதங்களுக்கும் அவர்களுடைய வாத்தியங்களுக்கும் சூட்டப்படுதல் மரபு; "வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகம்" (நெடுநல். 176) என்று பாண்டியனுடைய வேல் கூறப்பட்டிருத்தல் காண்க.

5. "குருதி வேட்ட, மயிர்புதை மாக்கண் கடிய கழற" (பதிற். 29); "கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்கை, முரசு" (மணி. 1: 30 - 31).

1 - 5. "விரவிய சந்தமென் சேறு மட்டித்துப், பிரவியந் தழை யொடு பிணையல் வேய்ந்தன, பரவிய பலிபெறு முரசம் பன்மையில், அரவியங் கதிர்கொள வதிர்ந்த றைந்ததே" (சூளா. சுயம். 210); பெருங். 2. 2 : 26 - 30.

7. மு. அகநா. 93 : 13.

14 - 5. புறநா. 27 : 7 - 9, குறிப்புரை; "புகழ்வெய் யோர்க்குப் புத்தேளு டெளிது" (முதுமொழிக். 71).

14 - 6. 'ஒருவர்க்கு இம்மை மறுமைகட்கு இன்பத்தைத் தந்து பூமியுள்ளளவும் நிற்பது புகழெனலுமாம்; ஒன்றுவுலகத்...தொன்றி லெனவும், இவணிசையுடையோர்க்.................மாறுகொ லெனவும் கூறினாராகலின்' (சிலப். 11 : 112 – 7, அடியார்.).

15. உயர்நிலை யுலகம் : மதுரைக். 197; கலித். 139 : 36.

16. மாறு, ஏதுப்பொருள் படுவதோரிடைச் சொல். தலைவனது உத்தம குணங்களைக் கூறினமையின், இஃது இயன்மொழியாயிற்று.

மு. முரசுநாட்கோடலுக்கும் (சிலப். 5 : 89 - 94, அடியார்.), இயன்மொழிக்கும் (தொல். புறத்திணை. சூ. 35, ந.) மேற்கோள். (௫௦)

(௫௧) நீர்மிகிற் சிறையு மில்லை தீமிகின்
மன்னுயிர் நிழற்று நிழலு மில்லை
வளிமிகின் வலியு மில்லை யொளிமிக்
கவற்றோ ரன்ன சினப்போர் வழுதி
தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன் போரெதிர்ந்து

கொண்டி வேண்டுவ னாயிற் கொள்கெனக்
கொடுத்த மன்னர் நடுக்கற் றனரே
அளியரோ வளியரவ னளியிழந் தோரே
நுண்பல சிதலை யரிதுமுயன் றெடுத்த
செம்புற் றீயல் போல
ஒருபகல் வாழ்க்கைக் குலமரு வோரே.

(பி - ம்.) 5 'தண்டமிழ்ப்' 9 'நுண்பல்' 11 'கலம்வருவோரே'

திணை - வாகை; துறை - அரசவாகை.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியை ஐயூர் முடவனார் (பி - ம். ஐயூர் கிழார்) பாடியது.

(இ - ள்.) நீர் மிகுமாயின், அதனைத் தாங்கும் அரணு மில்லை; நெருப்பு மிகுமாயின், உலகத்து நிலைபெற்ற உயிர்களை நிழல்செய்யும் நிழலு மில்லை; காற்று மிகுமாயின், அதனைப் பொறுக்கும் வலியு மில்லை; விளக்கம் மிக்கு அவற்றை யொத்த சினம் பொருந்திய போரையுடைய வழுதி குளிர்ந்த தமிழ்நாடு மூவேந்தர்க்கும் பொதுவென்று கூறப் பொருளாய்ப் போரையேற்றுத் திறையை வேண்டுவ னாயின், கொள்க என்று சொல்லி முன்னே கொடுத்த மன்னர் நடுக்கந் தீர்ந்தார்; கொடாமையின், யாவராலும் மிக இரங்கத்தக்கார், அவனது அருளை யிழந்த அரசர், நுண்ணிய பல கறையான் அரிதாக உழந்தெடுக்கப் பட்ட செம்புற்றினின்றும் புறப்பட்ட ஈயலைப் போல ஒரு பகற்பொழுதின் கண் வாழும் உயிர் வாழ்க்கையின்பொருட்டுச் சுழல்வோர் — எ - று.

வழுதி, தமிழ் பொதுவெனப் பொருளாய்க் கொண்டி வேண்டுவ னாயின், கொடுத்த மன்னர் நடுக்கற்றனர்; கொடாமையின் அவன் அளியிழந்தோர், ஒரு பகல் வாழ்க்கைக்கு அலமருவோர்; ஆதலான், அவர் அளியரோ அளிய ரெனக் கூட்டி வினைமுடிவு செய்க; அவன் அளியிழந்தோராகிய அலமருவோர் அளிய ரெனக் கூட்டி யுரைப் பினும் அமையும்.

அளியரோ அளிய ரென இரங்கற் குறிப்புத் தோன்ற அடுக்கி நின்றது.

(கு - ரை.) 1. "ஒலித்துடன், நீர்மிகி னில்லை சிறை" (பழ. 190); "சிறையு முண்டோ செழும்புனல் மிக்குழீஇ" (மணி. 5 : 19); "சிறை யென்ப தில்லை செவ்வே செம்புனல் பெருகு மாயின்" (சூளா. கல்யாண. 155).

3. ஒளியாவது : அரசர்பாலுள்ள தெய்வத்தன்மை; அதனை, "இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற, ஒளியோ டொழுகப் படும்" (குறள், 698), "உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி, கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" (சீவக. 248) என்பவற்றால் அறிக.

4. அவற்றோ ரன்னவென்பதில் ஓர் : இடைச்சொல். அவற்றை யன்ன - நீர், தீ, வளி யென்னும் இம் மூன்றையும் ஒத்த; ஐம்பூதங்களுள் இம் மூன்றுமே புடைபெயர்ந்து வருத்துவன வாதலின், இவற்றைக்

கூறினர். வழுதி - பாண்டியன்; சினத்தையுடைய வழுதி யெனக் கூட்டுக.

5. புறநா. 8 : 2, குறிப்புரை. 'ஞாலம் பொதுவெனப் பொருவரசர்' (குறள், 492, பரிமேல்.); "வையம் பொதுக்கடிந்து", "பூவலயம் பொது நீக்கி யாண்டருளி" (பெரிய. மனுநீதி. 32, கோச்செங்கட். 17); 'தனி கோலுகையாவது பூசக்கரம் பொதுக்கடிதல்' (தக்க. 2, உரை).

6. கொண்டி - கொள்ளப்படுவது; ஆவது திறை; "கட் கொண்டிக் குடிப்பாக்கத்து" (மதுரைக். 137).

8. "அளியபேளா வளியபளென் னெஞ்சமர்ந் தோளே" (குறுந். 56 : 5).

10. செம்புற்றீயல் : புறநா. 119 : 3.

9 - 10. "சிறுபுன் சிதலை சேண்முயன் றெடுத்த, நெடுஞ்செம் புற்றத்து" (அகநா. 149).

11. உலமரல் : புறநா. 207, உரை.

9 - 11. "மண்ணுள்வாழ் சிதலைச் சாதி மற்றவை வாழு நாள்கள், எண்ணியாங் கிகந்த பின்னை யிறகுபெய் தெழும்" (சூளா. அரசியல். 316).

10 - 11. திருவா. நீத்தல். 41. (ருக)

(ருஉ) அணங்குடை நெடுங்கோட் டளையக முனைஇ
முணங்குநிமிர் வயமான் முழுவலி யொருத்தல்
ஊனசை யுள்ளந் துரப்ப விரைகுறித்துத்
தான்வேண்டு மருங்கின் வேட்டெழுந் தாங்கு
வடபுல மன்னர் வாட வடல்குறித்
தின்னு வெம்போ ரியறேர் வழுதி
இதுநீ கண்ணிய தாயி னிருநிலத்
தியார்கொ லளியர் தாமே யூர்தொறும்
மீன்சுடு புகையின் புலவுநாறு நெடுங்கொடி
வயலுழை மருதின் வாங்குசினை வலக்கும்
பெருநல் யாணரி னொரீஇ யினியே
கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்
நரைமூ தாளர் நாயிடக் குழிந்த
வல்லி னல்லக நிறையப் பல்பொறிக்
கான வாரண மீனும்
காடாகி விளியு நாடுடை யோரே.

(பி - ம்.) 3 'ஊன்மிசை' 12 'கலிகெழு மூதூர்க்கந்து'

திணையும் துறையும் அவை.

அவனை மருதனிளநாகனர் (பி - ம். மருதினிள நாகனர்) பாடியது.

(இ - ள்.) தெய்வங்களை யுடைத்தாகிய நெடிய சிகரங்களையுடைய மலையின்கண்ணே முழையின்கண் துயிலை வெறுத்து * மூரிநிமிர்ந்த புலியாகிய நிரம்பிய வலியையுடைய ஏற்றை ஊனை விரும்பிய உள்ளம் செலுத்துதலான் அவ்விரையைக் கருதித் தான் வேண்டிய இடத்தே விரும்பிச் சென்றாற்போல, வடநாட்டு வேந்தர் வாட அவரைக் கொல்லுதலைக் கருதி ‡இன்னாத வெய்ய போரைச் செய்யும் இயற்றப் பட்ட தேரினையுடைய வழுதி! நீ கருதியது இப் போராயின், பெரிய உலகத்தின்கண் யாரோ அளிக்கத் தக்கார்தாம்? ஊர்தோறும் மீன் சுடுகின்ற புகையினது புலால் நாறும் நெடிய ஒழுங்கு வயலிடத்து மருதினது வளைந்த கோட்டைச் சூழும் பெரிய நல்ல புது வருவாயின் நீங்கி இப்பொழுது முழவு முதலாகிய ஒலி பொருந்திய தெய்வங்கள் தூணத்தைக் கைவிடும் பரிசு பலி இடத்தின் மாறிய பாழ்பட்ட அம்பலத்தின்கண் முற்காலத்து நரையையுடைய முதியோர் சூதாடுங் கருவியை இடுதலாற் குழிந்த அச் சூதுகருவியினது நல்ல மனையாகிய இடம் நிறையப் பல பொறியையுடைய காட்டுக்கோழி முட்டையிடும் காடாய்க் கெடும் நாடுடையோர்—எ - று.

கலி - புகழும் அரவமுமாம்.

வழுதி! அடல் குறித்து நீ கருதியது இதுவாயின், விளியும் நாடுடையோர்தாம் யார்கொல் அளிய ரெனக் கூட்டுக.

(கு - ரை.) 1. அணங்குடை நெடுங்கோடு : "அணங்குடை நெடு வரை" (அகநா. 22 : 1). அணங்கு - தெய்வம். கோடு - சிகரத்தை யுடைய மலை; ஆகுபெயர்.

1 - 4. புறநா. 78 : 1 - 4; திருப்பாவை, 23 : 1 - 5.

6. இன்னா - இனிதல்லாத. போர்வழுதி : உருபும் பயனும் உடன் தொக்க தொகை. இயல்தேர் : வினைத்தொகை.

7 - 8. "இதுநீ கருதினை யாயி னேற்பவர், முதுநீ ருலகின் முழு வது மில்லை" (சிலப். 25 : 166 - 7).

9. "கொழுமீன் சுடுபுகை மறுகினுண் மயங்கி" (நற். 311); "தூமக் கொடியும்" (மணி. 6 : 64).

12. "மரஞ்சேர் மாடத், தெழுதணி கடவுள் போகலிற் புல்லென், றொழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை", "கடவுள் போகிய

---

* மூரிநிமிர்தல் - துயின்றெழுந்தவுடன் இரண்டு கைகளையும் நிமிர்த்துச் சோம்பைப் போக்குதல்; "மூரி நிமிர்வன போல" (பெருங். 2. 6 : 102); "பொய்த்ததோர் மூரியா னிமிர்ந்து போக்குவாள்" (கம்ப. உண்டாட்டு. 35); இக்காலத்துச் சோம்பல் முறித்தலென வழங்கும்.

‡ இன்னாத - பகைவர்களுக்கு இன்னாத; "இன்னா வாகப் பிறர் மண் கொண்டு" (புறநா. 12 : 4) என்பதையும் அதன் உரையையும் பார்க்க.

கருந்தாட் கந்தம்'' (அகநா. 167, 307); ''அருந்திறற் கடவுட் டிருந்து பலிக் கந்தமும்'', ''இலங்கொளிக் கந்தமும்'' (மணி. 6 : 60, 24 : 162).

'கலி' என்பது ஒலித்தற்றொழிற்பண்பில் வந்ததற்கு மேற்கோள்; நன். சூ. 458, மயிலை.

13. பலி - பூசை; நிவேதனமுமாம். பொதியில் - அம்பலம்; பொது இல் - பொதுவான இடம்; இலக்கணப் போலி. அம்பலத்தில் அமைக்கப்பெற்றுள்ள தூணில் தெய்வத்தை ஆவாகித்து வழிபட்டு வருதல் பண்டைக் கால வழக்கம்; ''கந்துடைப் பொதியில்'' (பட்டினப். 249) என்பதனால் அறியலாகும்; மலைநாட்டிலுள்ள ஆலயங்கள் அம்பலமென்று இக்காலத்தும் வழங்கப்படுகின்றன.

14. நாய் - சூதாடுகருவியுள் ஒன்று; ''பளிக்குநாய் சிவப்பத் தொட்டு'' (கம்ப. மிதிலைக்காட்சி. 17).

16. கானவாரணம் : புறநா. 320 : 11, 395 : 10.

15 - 6. பல்பொறிக் கானவாரணம் : ''அந்நுண் பல்பொறிக், காமரு தகைய கான வாரணம்'' (நற். 21 : 7 - 8, மருதனிளநாகனார்).

14 - 6. ''உமண ருயங்குவயி னொழித்த, பண்ணழி பழம்பார் வெண்குரு கீனும், தண்ணந் துறைவன்'' (நற். 138).

13 - 6. ''நரைமூ தாள ரதிர்தலை யிறக்கிக், கவைமனத் திருத்தும் வல்லுவனப் பழிய......பொதியில்'' (அகநா. 377).

16 - 7. ''கானங் கோழிக் கவர்குரற் சேவல், ஒண்பொறி யெருத் திற் றண்சித ருறைப்ப'' (குறுந். 242).

கோழியை வாரணமென்றல் மரபென்பதற்கு மேற்கோள்; தொல். மரபு. சூ. 68, பேர். (ருஉ)

(ருஙு) முதிர்வா ரிப்பி முத்த வார்மணற்
கதிர்விடு மணியிற் கண்பொரு மாடத்
திலங்குவளை மகளிர் தெற்றி யாடும்
விளங்குசீர் விளங்கில் விழுமங் கொன்ற
களங்கொள் யானைக் கடுமான் பொறைய
விரிப்பி னகலுந் தொகுப்பி னெஞ்சும்
மம்மர் நெஞ்சத் தெம்மனோர்க் கொருதலை
கைம்முற் றலநின் புகழே யென்றும்
ஒளியோர் பிறந்தவிம் மலர்தலை யுலகத்து
வாழே மென்றலு மரிதே தாழாது

செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயி னன்றும னென்றநின்
ஆடுகொள் வரிசைக் கொப்பப்
பாடுவன் மன்னாற் பகைவரைக் கடப்பே.

(பி - ம்.) 7 'தெமக்கோவொருநிலை' 14 'கேற்பப்'

திணையும் துறையும் அவை.

சேரன் * மாந்தரஞ் சேரலிரும் பொறையைப் பொருந்திலிளங் கீரனார் பாடியது.

(இ - ள்.) முற்றி நீண்ட சிப்பிக்கண் முத்துப் போலும் வெளிய ஒழுங்குபட்ட மணற்கண்ணே ஒளி விடுகின்ற மணிகளாற் கண்ணைப் பொருகின்ற மாடத்திடத்து விளங்கிய வளையையுடைய மகளிர் வேதி கைக்கண்ணே விளையாடும் விளங்கிய சீர்மையையுடைய விளங் கிற்குப் பகைவரான் வந்த இடும்பையைத் தீர்த்த, போர்க்களத்தைத் தனதாக்கிக் கொண்ட, யானையையும் விரைந்த குதிரையையுமுடைய பொறைய! விரித்துச் சொல்லிற் பரக்கும்; தொகுத்துச் சொல்லிற் பொருள் ஒழிவுபடும்; ஆதலான், மயக்கம் பொருந்திய நெஞ்சை யுடைய எங்களுக்கு ஒருதலையாக முடியா, நினது புகழ் எந்நாளும்; கல்வியால் விளக்க முடையோர் பிறந்த இப் பெரிய இடத்தையுடைய உலகத்தின்கண்ணே வாழ்மே மென்றிருத்தலும் கூடாது; விரைய, பல பொருளையும் அடக்கிய செய்யுளைச் செய்யும் செவ்விய நாவினை யும் மிக்க கேள்வியையும் விளங்கிய புகழையுமுடைய கபிலன் இன்று உளனாகப் பெறின் நன்று, அது பெற்றிலே னென்று சொல்லிய நினது வென்றி கொண்ட சிறப்பிற்குப் பொருந்தப் பாடுவேன், நீ பகைவரை வென்ற வெற்றியை—எ - று.

மாடத்து மகளிர் மணலிடத்துத் தெற்றிக்கண் ஆடும் விளங்கி லென்க.

தெற்றி யென்பதனைக் கைகோத்தாடும் குரவை யென்பாரும் உளர்.

பொறைய! கபிலன் இன்று உளனாயின், நன்றும னென்ற நின் ஆடு கொள் வரிசைக்கொப்பப் பகைவரைக் கடப்பை யான் தாழாது பாடு வேன்; நின் புகழ் விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்; ஆதலான், எமக்குக் கைம்முற்றல; ஒளியோர் பிறந்த இம் மலர்தலை யுலகத்து வாழ்மே மென்றலும் அரிதெனை மாறிக் கூட்டுக.

தாழாது செய்யுட்செய் செந்நா வென இயைப்பினும் அமையும்.

'ஒளியோர்' என்றது கபிலன் முதலாயினோரை.

---

* "பலர்மேனந் தோன்றிய கவிகை வள்ளல், நிறையருந் தானை வெல்போர் மாந்தரன், பொறையன்" (அகநா. 142 : 3 - 5).

வாழே மென்றலும் அரிதென்ற கருத்து, பாடாதிருத்தலும் அரி தென்றதாக்கி யாழும் * வல்லபடி பாடிப் போதுவே மென்றதாகக் கொள்க.

நன்றுமன் என்பது கழிவின்கண் வந்தது.

பாடுவன் மன்ஞ லென்றவழி, மன்னும் ஆலும் அசைநிலை.

பாடுவன்மன் னென்பதனை அல்லீற்றுத் தனித்தன்மை வினையாக்கி, நின் வரிசைக்கொப்ப, நின் பகைவரைக் கடப்பைப் பாடுவேன்; அதனால், விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்; மம்மர் நெஞ்சத்து எமக்கு நின் புகழ் கைம்முற்றலவென அவன் புகழை மேம்படுத்துக் கூறிய வாருக உரைப்பினு மமையும். இப்பொருட்குப் பாடுவன்ம னென்றதனை ஒழியிசையாகக் கொள்க.

'சிறந்த செய்யுள்' என்றும், 'செய்யுட் செய்த செந்நா' என்றும் பாடம்.

(கு - ரை.) 1. முதிர் முத்தம் : "விளைந்துமுதிர்ந்த விழுமுத்தின்" (மதுரைக். 135). முத்தவார்மணல் : பெரும்பாண். 355; கலித். 136 : 5; பெருங். 1. 48 : 88, 2. 7 : 142, 5. 6 : 41.

1 - 3. புறநா. 36 : 3 - 5.

3. தெற்றி, வேதிகை - திண்ணை; குரவை யென்னும் பொருளில், 'தெற்றி' என்பதற்குப் பின்னியாடுவது என்க; தெற்றல் - பின்னல்.

4. விளங்கில் - மிக்க வளமுள்ளதொரு நகரம்; "மாவண் கடலன் விளங்கி லன்னவெம், மையெழி லுண்கண்" (அகநா. 81).

5. பொறையன் - மலைநாட்டின் தலைவன்; சேரன்; பொறை - மலை. 'களங்கொள் பொறைய' என்றது போர்க்களம் வென்ற வேந்தர்க்குரித் தாதலான்; புறநா. 4 : 3; 62 : 12; சிலப். 28 : 104 - 5; "ஏந்துவாட் டானை யிரிய வுறைகழித்துப், போந்துவாண் மின்னும் பொருசமத்து - வேந்தர், இருங்களி யானை யினமிரிந் தோடக், கருங்கழலான் கொண் டான் களம்", "வென்று களங்கொண்ட வேல்வேந்தே" (பு. வெ. 180, 225); "தேன்மிடைந்த தாரினான் செங்களஞ் சிறந்ததே" (சீவக. 279); "கொன்று களங்கொள்ளுங் கொல்யானை வேந்தனை, வென்றுகளங் கொள்ளுமேல் வேந்து" (தொல். புறத். சூ. 5, ந. மேற்.).

8. கைம்முற்றல : இதுபோன்ற மொழிகளிலுள்ள கையென்பதை வினைச்சொல்லோடு வந்த உபஸர்க்கம் என்பர் பிரயோகவிவேக நூலு டையார்.

12. வெறுப்பென்னும் உரிச்சொல் செறிவென்னும் பொருளில் வந்த தற்கும் (தொல். உரி. சூ. 51, சே.; சூ. 49, ந.; இ. வி. சூ. 211, உரை), 'வெறுப்பு' என்பது புறப்பொருட்கண் வந்ததற்கும் (தொல். பொரு ளியல், சூ. 53, ந.) மேற்கோள்.

---

* "வடியா நாவின் வல்லாங்குப் பாடி" (புறநா. 47 : 3).

11 - 2. "மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின், உவலை கூராக் கவலையி னெஞ்சின், நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்" (பதிற். 85 : 10 - 13).

13 - 5. பழிகரப்பு அங்கதத்திற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 126, பேர்.

15. கடப்பு - கடந்ததனாலாகிய வெற்றி. 'பாடுவன்மன்' என்பது முதலிய பகுதி வேறொரு பழைய உரை. (ருங)

(ருச) எங்கோ னிருந்த கம்பலை மூதூர்
உடையோர் போல விடையின்று குறுகிச்
செம்ம லுளவை யண்ணாந்து புகுதல்
எம்மன வாழ்க்கை யிரவலர்க் கெளிதே
இரவலர்க் கெண்மை யல்லது புரவெதிர்ந்து
வான நாண வரையாது சென்றோர்க்
கானா தீயுங் கவிகை வண்மைக்
கடுமான் கோதை துப்பெதிர்ந் தெழுந்த
நெடுமொழி மன்னர் நினைக்குங் காலைப்
பாசிலைத் தொடுத்த வுவலைக் கண்ணி
மாசு ணுடுக்கை மடிவா யிடையன்
சிறுதலை யாயமொடு குறுகல் செல்லாப்
புலிதுஞ்சு வியன்புலத் தற்றே
வலிதுஞ்சு தடக்கை யவனுடை நாடே.

(பி - ம்.) 3 - 4 'புகுதற்கெம்மன' 11 'மாசூணுடுக்கை'

திணையும் துறையும் அவை.

சேரமான் குட்டுவன் கோதையைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரன் பாடியது.

(இ - ள்.) எம்முடைய இறைவன் இருந்த ஓசையையுடைய பழைய ஊரிடத்து அதனை யுடையவர்களைப் போலக் காலம் பாராதே அணுகித் தலைமையையுடைய நாளோலக்கத்தின்கண்ணே தலையெடுத்துச் செம் மாந்து சென்று புகுதல் எம்மைப் போலும் வாழ்க்கையையுடைய இரப் போருக்கு எளிது; இங்ஙனம் இரப்போர்க்கு எளிதாவதல்லது, பாதுகாத் தலை ஏற்றுக்கொண்டு மழை நாணும்படி எப்பொருளையும் வரையாது தன்பாற் சென்றவர்கட்கு இடக் கவிந்த கையால் அமையாது கொடுக்கும் வண்மையையுடைய கடுமான் கோதையது வலியோடு மாறுபட் டெழுந்திருந்த வஞ்சினங் கூறிய வேந்தர் கருதுங் காலத்து, பசிய இலையால் தொடுக்கப்பட்ட தழைக் கண்ணியையும் மாசுண்ட

உடையையும் * மடித்த வாயையுமுடைய இடையன் சிறிய தலையை யுடைய ஆட்டினத்திேனாடு கூட அணுகல் செல்லாத புலி தங்கும் அகன்ற நிலத்தை யொக்கும், வலி தங்கிய பெரிய கையையுடைய வனுடைய நாடு—எ - று.

எங்கோ னிருந்த மூதூர்ப் புகுதல், இரவலர்க்கு எளிது; அவனுடைய நாடு, மன்னர் நினைக்குங்காலை, இடையன் சிறுதலை யாய மொடு குறுகல் செல்லாப் புலிதுஞ்சு வியன்புலத் தற்றெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

மன்னர்க்கு இடையனும், அவர் படைக்குச் சிறுதலையாயமும், கோதை நாட்டிற்குப் புலிதுஞ்சு வியன்புலமும் உவமையாகக் கொள்க.

† உவலைக் கண்ணி யென்றதனைப் பெயராகக் கொள்க.

புலியுடை வியன்புல மென்பதூஉம் பாடம்.

(கு - ரை.) 1. 'கம்பலை என்னும் உரிச்சொல் அரவமாகிய இசைப் பொருண்மை யுணர்த்தும்' (தொல். உரி. சூ. 53, சே.)

2. இடை - சமயம்; "தளரிடை யறியுந் தன்மையள்" (மணி. 4 : 98) : "நம்பன் சிறிதே யிடைதந்திது கேட்க" (சீவக. 1975).

3. நாளவை : புறநா. 29 : 5. "நசையுநர்த் தடையா நன்பெரு வாயில், இசையேன் புக்கு" (பொருந. 66 - 7); "பொருநர்க் காயினும் புலவர்க் காயினும், அருமறை நாவி னந்தணர்க் காயினும், கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன, அடையா வாயிலவ னருங்கடை குறுகி" (சிறுபாண். 203 - 6); "நும்மில் போல நில்லாது புக்கு", 'அருங்கடி வாயி லயிராது புகுமின்' (மலைபடு. 165, 491) ; "நசையுநர்க் கடையா நன்பெரு வாயில்" (கூர்ம. சூரியன்மரபு. 13); "தடைஇய வாயி றடையாது நுழைந்து" (தணிகையாறு. 231).

7. ஆறுது ஈதல் : புறநா 42 : 1. கவிகை - கொடுத்தற்குக் கவிந்த கை; "தேர்வீசு கவிகை" (மலைபடு. 399); "கலம்பெயக் கவிந்த கழறொடித் தடக்கை" (அகநா. 213); பெருங். 4. 10 : 106 - 7.

6 - 7. "மாரி பொய்க்குவ தாயினும், சேர லாதன் பொய்யல னசையே" (பதிற். 18 : 11 - 2); "நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள", "வண்மைபோல் வானம் பொழிந்தநீர்" (பரி. 4 : 27, 22 : 8); "தளியிற் சிறந்தனை வந்த புலவர்க், களியொடு கைதூ வலை" (கலித். 50 : 16 - 7).

9. நெடுமொழி : புறநா. 25 : 5, குறிப்புரை.

---

* வாயை மடித்தல் சீழ்க்கையொலி செய்தற்கு ; 'சீழ்க்கை பிடித்த லாலே மடித்த வாயையுடைய இடையர்' (பெரும்பாண். 166, உரை).

† 'பாசிலைத் தொடுத்த' என்றதனால் உவலைக் கண்ணி யென்ப தனைப் பெயர் என்றார்; 'தொடுபொறி, பெயர் மாத்திரையாய் நின்றது' (புறநா. 58 : 30, உரை.)

8 - 9. புறநா. 11 : 8 - 9, 380 : 10.

10. உவலை - தழை; பாசிலைத் தொடுத்த வென்று வந்தமையால், 'உவலைக் கண்ணி' என்பது கண்ணியென்னு மாத்திரையாய் நின்றது; கண்ணி - மாலை.

11. "மடிவாய்க் கோவலர்" (பெரும்பாண். 166); "இடையன் மடிவிடு வீளை" (அகநா. 274).

12. ஆயமென்பது சிறுதலையென்னும் அடையால் ஆட்டினத்திற் காயிற்று; "சிறுதலை வெள்ளைத் தோடு" (குறுந். 163 : 2)

13 - 4. அவன் நாடு புலிதுஞ்சு வியன்புலம் போல்வது. கோதைக் குப் புலி உவமை. இச் செய்யுளின் பொருளும், "பொருநர்க் காயினும் புலவர்க் காயினும், அருமறை நாவி னந்தணர்க் காயினும்...அடையா வாயிலவ னருங்கடை குறுகி" (சிறுபாண். 203-6) என்பதும் ஒத்திருத் தல் காண்க. 'அவை புகுதல் இரவலர்க்கு எளிது, நாடு மன்னர்க்குப் புலிதுஞ்சு வியன்புலத்தற்று' என அரசனியல்பைக் கூறினமையால் இதுவும் அரசவாகையாயிற்று.

மு. கருத்து : புறநா. 390 : 4 - 5. (ருச)

(ருரு) ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கு மொருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற
கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய புகன்மறவரும்
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட [என
அறநெறி முதற்றே யரசின் கொற்றம்
அதனால், நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு மூன்றும்
உடையை யாகி யில்லோர் கையற
நீநீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக்

கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவா ழெக்கர் மணலினும் பலவே.

(பி - ம்.) 1 'நாண்' 7 'பரிமா' 8 'எனும்' 13 'வெந்தெற' 16 'உடையாயாதலினில்லோர்', 'உடையையாதலினி' 17 'நீடுவை யொளிய'.

திணை - பாடாண்டிணை; துறை - செவியறிவுறூஉ.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரை மருதனிளநாகனார் பாடியது.

(இ - ள்.) உயர்ந்த மலையாகிய பெரிய வில்லைப் பாம்பாகிய நாணைக் கொளுத்தி ஒப்பில்லாததோர் அம்பை வாங்கி மூன்று மதிலையும் எய்து பெரிய வலியையுடைய தேவர்கட்கு வெற்றியைக் கொடுத்தகரியநிறஞ் சேர்ந்த திருமிடற்றையுடைய இறைவனது அழகிய திருமுடிப்பக்கத்து அணிந்த பிறை சேர்ந்த திருநெற்றிக்கண்ணே விளங்கும் ஒரு திரு நயனம் போல மூவேந்தருள்ளும் மேம்பட்ட பூந்தாரையுடைய மாற! கடிய சினத்தையுடையவாகிய கொல்களிறும் விரைந்த செலவை யுடையவாகிய மனஞ் செருக்கியகுதிரையும் நெடிய கொடியையுடைய வாகிய உயர்ந்த தேரும் நெஞ்சு வலியையுடைய போரை விரும்பும் மற வருமென நான்கு படையுங்கூடமாட்சிமைப்பட்டதாயினும் மாட்சிமைப் பட்ட அறநெறியை முதலாக உடைத்து வேந்தரது வெற்றி; அதனால், இவர் நம்முடையரென அவர் செய்த கொடுந்தொழிலைப் பொறுத்துக் கோல் வளையாது, இவர் நமக்கு அயலாரென்று அவர் நற்குணங்களைக் கெடாது, ஞாயிற்றைப்போன்றவெய்யதிறலையுடையவீரமும், திங்களைப் போன்ற குளிர்ந்த பெரிய மென்மையும், மழையைப்போன்ற வண்மையு மென்ற மூன்றையு முடையையாகி இல்லாதோர் இல்லையாக நீ நெடுங் காலம் வாழ்வாயாக, நெடுந்தகாய்! தாழ்ந்த நீரையுடைய கடலின்கண் வெளிய தலையையுடைய திரை அலைக்கும் செந்திலிடத்து நெடியமுருக வேள் நிலைபெற்ற அழகிய அகன்ற துறைக்கண் பெருங்காற்றுத் திரட்டு தலால் குவிந்த வடு அழுந்திய எக்கர் மணலினும் பல காலம்—எ - று.

'குணம் கொல்லாது' என்பதற்கு முறைமை யழிய நீ வேண்டிய வாறு செய்யா தெனினுமாம்.

பூந்தார்மாற! நெடுந்தகாய்! நான்குடன் மாண்டதாயினும், அரசின் கொற்றம் அறநெறி முதற்று; அதனால் கோல் கோடாது, குணங்கொல் லாது, ஆண்மையும் சாயலும் வண்மையும் உடையையாகி, இல்லோர் கையற நீ மணலினும் பல காலம் நீடுவாழிய வெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

(கு - ரை.) 1. மலை-மேருமலை. கொளீஇ-கொளுத்தி; பொருத்தி. நேர்புநிரை ஆசிரியத்துள் வந்ததற்கும்(தொல். செய். சூ. 14, பேர். ந.), தனிநிலைவகையான் வந்து கட்டளையாய் இன்னோசை பெற்றதற்கும் (தொல். செய். சூ. 54, ந.) மேற்கோள்.

2. ஒருகணை - திருமால் வாயு அக்கினி என்னும் மூவரின் கூற்று லாகிய ஒரு பாணம். மூ எயில் - மூன்று மதில்.

3. தருசொல் படர்க்கைக்கண் வந்ததற்கு மேற்கோள்; தொல். கிளவி. சூ. 29, சே. ந.; இ. வி. சூ. 301, உரை.

1-4. "தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக, அடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின், மடங்கல்போற் சினைஇ மாயஞ் செ யவுணரைக், கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும், உடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதலின்" (கலித். 2); "திரிபுர மெரியத் தேவர் வேண்ட, எரிமுகப் பேரம் பேவல் கேட்ப" (சிலப். 6 : 40 - 41).

4 - 5. புறநா . 1 : 9, குறிப்புரை; 91 : 5 - 6; "பிறைநுதல் விளங்கும்", "தேய்பொடி வெள்ளை பூசியதன் மேலோர் திங்க டிலகம் பதித்த நுதலர்" (தே.)

6. தார் - இங்கே வேப்பமாலை.

7. பதினெட்டெழுத்தான் வந்த ஆசிரிய அடிக்கு மேற்கோள்; தொல். செய். சூ. 49, இளம்.

8. பத்தொன்பதெழுத்தான் வந்த ஆசிரிய அடிக்கு மேற்கோள்; தொல். செய். சூ. 49, இளம்.

7 - 8. புறநா. 72 : 3 - 5, 351 : 1 - 3.

7 - 9. திணைவிராயெண்ணப்பட்ட பெயர் செய்யுளகத்து அஃறிணைச் சொற்கொண்டு முடியுமென்பதற்கு மேற்கோள்; தொல். கிளவி. சூ. 51, சே.; ந.; இ. வி. சூ. 298, உரை.

10. புறநா. 27 : 17 - 8, குறிப்புரை.

9 - 10. "அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா, மான முடைய தரசு", "வேலன்று வென்றி தருவது மன்னவன், கோலதூஉங் கோடா தெனின்" (384, 546) என்னுந் திருக்குறள்களின் விசேடவுரையில், 'மாண்ட, அறநெறி முதற்றே யரசின் கொற்றம்' என்னும் இப் பகுதியை மேற்கோளாக எடுத்துக் காட்டினர் பரிமேலழகர்.

"உருளு நேமியு மொண்சுட ரெஃகமு, மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்கும், தெருளு நல்லற மும்மனச் செம்மையும், அருளு நீத்தபி னுவதுண் டாகுமோ", "அறத்தி னுலன்றி யமரர்க்கு மருஞ் சமங் கடத்தல், மறத்தி னுலரி தென்பது மனத்திடை வலித்தி" (கம்ப. மந்தரை. 11; முதற்போர். 225).

11. புறநா. 6 : 9 - 10; "எங்கண் இனையர் எனக்கருதின் ஏதமால், தங்கண்ண ரானுந் தகவில கண்டக்கால், வன்கண்ண னுகி யொறுக்க வொறுக்கல்லா, மென்கண்ண னுள னரசு" (பழமொழி. 322).

13 - 4. "நின், வெம்மையும் விளக்கமு ஞாயிற்றுள, நின், தண் மையுஞ் சாயலுந் திங்களுள, நின், சுரத்தலும் வண்மையு மாரியுள" (பரி. 4 : 25 - 7).

15. புறநா. 54 : 6 - 7, குறிப்புரை; 133 : 6 - 7, 142 : 3 - 5, 158 : 7, 397 : 16; சிறுபாண். 124 - 6; மலைபடு. 580; "பொழிபெயல் வண்மையான்" (கலித். 57 : 12).

13 - 6. புறநா. 59 : 6 -7; "நீண்டுநீர் மிசைத்தோன்றி யிருள் சீக்குஞ் சுடரேபோல், வேண்டார்தார் நெஞ்சுட்க வெருவந்த கொடுமை யும், நீண்டுதோன் றுயர்குடை நிழலெனச் சேர்ந்தார்க்குக், காண்டகு மதியென்னக் கதிர்விடு தண்மையும், மாண்டநின் னொழுக்கத்தால்" (கலித். 100); "நண்ணுநர் பகைவரென் றிவர்க்கு நாளினும், தண்ணி யன் வெய்யனந் தானை மன்னனே" (சூளா. நகர. 17).

18 - 9. செந்தில் : "திருமணி விளக்கி னலைவாய்ச், செருமிகு சேஎய்" (அகநா. 266); "அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே" (முருகு. 125); "சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும், ஏரகமு நீங்கா விறைவன்" (சிலப். : 24 : தெய்வம்பராஅயது); "நஞ் செந்தின் மேய வள்ளி மணாளற்குத் தாதைகண்டாய்" (தே);"முருகன் றீம்புன லலைவாய்" (தொல். களவு. சூ. 23, ந.; "பையுண்மாலை").

21. மூ. மலைபடு. 556. எக்கர்மணல் : "கான லணிந்த வுயர்மண லெக்கர்", "முத்துறழ் மணலெக்கர்" (கலித். 133 : 2, 136 : 3).

மணலைப் பன்மைசுட்டற்கு உவமித்தல் : புறநா. 363 : 4; மதுரைக். 236, குறிப்புரை.

17 - 21. புறநா. 9 : 8 - 11, குறிப்புரை; 43 : 21 - 3, 136 : 26, 198 : 17 - 23. (ருரு)

(ருசு) ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றேனும்
கடல்வளர் புரிவளை புரையு மேனி
அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயி லுயரிய மாறு வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வ ருள்ளும்
கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்

புகழொத் தீயே யிகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்
ஆங்காங் கவரவ ரொத்தலின் யாங்கும்
அரியவு முளவோ நினக்கே யதனால்
இரவலர்க் கருங்கல மருகா தீயா
யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்குவாண் மாற
அங்கண் விசும்பி னிரு ளகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவுங் குடதிசைத்
தண்கதிர் மதியம் போலவும்
நின்று நிலைஇய ருலகமோ டுடனே.

(பி - ம்.) 5 'மண்ணிய'

திணை - அது; துறை - பூவைநிலை

அவனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் (பி - ம். அவர்) பாடியது.

(இ - ள்.) ஆனேற்றை வெற்றியாக உயர்த்த அழல் போலும் விளங்கிய சடையினையும் விலக்குதற்கரிய மழுப்படையையுமுடைய நீலமணி போலுந் திருமிடற்றை யுடையோனும், கடற்கண்ணே வளரும் புரிந்த சங்கை யொக்கும் திருநிறத்தையுடைய கொலையை விரும்பும் கலப்பையையும் பனைக்கொடியையு முடையோனும், கழுவப்பட்ட அழகிய நீலமணிபோலும் திருமேனியையும் வானுற ஓங்கிய கருடக்கொடியையுமுடைய வென்றியை விரும்புவோனும், நீலமணி போலும் நிறத்தையுடைய *மயிற்கொடியை எடுத்த மாறாத வெற்றியையுடைய †அம் மயிலாகிய ஊர்தியையுடைய ஒள்ளிய செய்யோனுமென்று சொல்லப்பட்ட உலகங் காக்கும் முடிவுகாலத்தைச் செய்யும் வலியினையும் தோல்வியில்லாத நல்ல புகழினையுமுடைய நால்வருள்ளும், விலக்குதற்கரிய வெகுட்சியாற் கூற்றத்தை ஒப்பை; வலியால் வாலியோனை ஒப்பை; புகழாற் பகைவரைக் கொல்லும் மாயோனை ஒப்பை; கருதியது முடித்தலான்

---

* 'பிள்ளையாருடைய துவச வாகனமான தோகைமயில்கள்' (தக்க. 114, உரை).

†" பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம், மணி விசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே" (சிலப். 24. தெய்வம் பராஅயது, 2); "பிணிமுக மஞ்ஞை செருமுகத் தேந்திய, மூவிரு திருமுகத் தொருவே லவற்கு" (கல்லாடம், 7).

முருகனை ஒப்பை; அப்படி அப்படி அவரை அவரை ஒத்தலான் எவ்விடத்தும் அரியனவு முளவோ நினக்கு? ஆதலால், இரப்போர்க்குப் பெறுதற்கரிய அணிகலங்களைப் பெரிதும் வழங்கி, யவனர் நல்ல குப்பியிற் கொடுவரப்பட்ட குளிர்ந்த நறுநாற்றத்தையுடைய தேறலைப் பொன்னாற் செய்யப்பட்ட புனைந்த கலத்தின்கண்ணே ஏந்தி நாடோறும் ஒள்ளிய வளையையுடைய மகளிர் ஊட்ட மகிழ்ச்சி மிக்கு இனிதாக நடப்பாயாக: வென்றியா னுயர்ந்த வாளையுடைய மாற! அழகிய இடத்தையுடைய வானத்தின்கண்ணே நிறைந்த இருளைப் போக்கும் வெய்ய கதிரையுடைய ஞாயிற்றை ஒப்பவும் மேலைத் திக்கிற் றோன்றும் குளிர்ந்த கதிரையுடைய பிறையைப் போலவும் இவ்வுலகத்தோடுகூட நின்று நிலைபெறுவாயாக—எ - று.

* பிணிமுகம் - பிள்ளையா ரேறும் யானை யென்றும் சொல்லுப.

காலமுன் பென்றது, தம்மை எதிர்ந்தோர்க்குத் தாம் நினைந்த பொழுதே முடிவுகாலத்தைச் செய்யும் வலியை (புறநா. 41 : 1 - 3).

† மணிமிடற்றோனைக் கூற்ற மென்றது, அழித்தற்றொழிலை யுடைமையான்.

வாலியோ னென்றது, நம்பிமூத்த பிரானை (பலதேவரை; கலித். 26 : 1, ந.).

இகழுநரடுந னென்றது மாயோனை.

ஆரிரு ளகற்றும் வெங்கதிர்ச் செல்வ னென்றது எழுகின்ற ஞாயிற்றை.

‡ மதி - இளம்பிறை.

இது, தேவரோடு உவமித்தமையாற் பூவைநிலை ஆயிற்று.

(கு - ரை.) 1. பதினைந்தெழுத்தான் வந்த ஆசிரிய அடிக்கு மேற்கோள்; தொல். செய். சூ. 49, இளம்.

எரிமருளவிர்சடை: "எரியகைந் தன்ன வவிர்ந்துவிளங்கு புரிசடை" (அகநா. கடவுள். 10); "ஊழியெரி, முத்தனில மோலியென முட்டவோத மீதெரிய" (தக்க. 469).

2. "சீறருங் கணிச்சியோன்" (கலித். 2); "மழுவா ணெடியோன் றலைவ னாக" (மதுரைக். 455).

---

* இதனை, "சேயுயர் பிணிமுக மூர்ந்து" (பரி. 5), "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" (முருகு. 247) என்பவற்றின் உரைகளால் உணர்க.

† இவர் காலக்கடவு ளெனவும் கூறப்படுவர்; "எரியெள்ளு வன்ன......இளம்பிறை சேர்ந்த நுதலன் களங்கனி, மாறேற்கும் பண்பின் மறுமிடற்றன் றேறிச், சூலம் பிடித்த சுடர்ப்படைக், காலக் கடவுட் குயர்கமா வலனே" (தொல். புறத்திணை. சூ. 26, ந. மேற்.); "கொலைவன்" (கலித். 103 : 15, ந.); குமரகுருபர. 551.

‡ "இருகோட் டொருமதி யெழில்பெற மிலைத்தனை" (11 - ஆம் திருமுறை, திருவெழுகூற்றிருக்கை).

1 - 2. "வெள்ளேறு, வலவயி னுயரிய...மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்" (முருகு. 151 - 4).

3. "வலம்புரி வண்ண" (பரி. 3 : 88); "சங்கமேனிப் புதுநிறத் தோன்" (மதுரைக்கோவை, 143).

4. நாஞ்சில் - கலப்பை. கலப்பையாயுதத்தையும் பனமர வடிவு எழுதப்பெற்ற கொடியையு முடையவர் பலராமர். கொடி என்னும் சொல் 'பனை' என்னுஞ் சொல்லுக்கு முன் வரின் ஐகாரம் கெடாது நிற்றற்குப் 'பனைக்கொடி' என்பது மேற்கோள்; தொல். உயிர் மயங்கு. சூ. 83, இளம். ந.

3 - 4. "மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனி...... வாய்வாங்கும் வளைநாஞ்சி லொருகுழை யொருவனை" (பரி. 1 : 3 - 5); "வானுற வோங்கிய வயங்கொளிர் பனைக்கொடிப், பானிற வண்ணன்" (கலித். 104 : 7 - 8).

5. மண்ணுறுதல் - கழுவுதல். மு. சிலப். 22 : 97.

5 - 6. "மண்ணுறு மணிபா யுருவினவை" (பரி. 1 : 59, வி. கு.).

7. "பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய, ஒடியா விழவி னெடியோன்" (அகநா. 149 : 15 - 6); "பல்பொறி மஞ்ஞை வெல் கொடி யகவ" (முருகு. 122, குறிப்புரை).

7 - 8. "மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடிப், பிணிமுக மூர்ந்த வெல்போ ரிறைவ" (பரி. 17 : 48 - 9).

1 - 10. "முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா, பொற்பனை வெள்ளையை யுள்ளா தொழுகின்னா, சக்கரத் தானை மறப்பின்னா தாங் கின்னா, சத்தியான் றடொழா தார்க்கு" (இன்னா. 1); "கண்மூன் றுடையான்றாள் சேர்தல் கடிதினிதே, தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே" (இனியது. 1); "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும், அறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும், வால்வளை மேனி வாலியோன் கோயிலும், நீல மேனி நெடியோன் கோயிலும்", "நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும், உவணச் சேவ லுயர்த்தோ னியமமும், மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும், கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்" (சிலப். 5 : 169 - 72, 14 : 7 - 10); "நுதல்விழி நாட்டத் திறையோன் முதலா" (மணி. 1 : 54).

11. புறநா. 3 : 12, 42 : 22; "மடங்கல்போற் சினைஇ" (கலித். 2 : 3); "கால னனைய கடுஞ்சின முன்ப" (பதிற். 39); "தென்புலத் தவன்போற் செய்த சீற்றமும்" (திருக்கழுக்குன்ற. நாராயண. 12); "மாற்றருஞ் சீற்றத்துக் கூற்றுவனே" (கறுநூல், 15).

12. வாலியோன் - வெண்ணிற முடையவர். இவர், வலியாற் சிறந்தவ ரென்பது பலராமர் என்னும் இவர் பெயராலும் அறியப்படும். 'வால்வளை மேனி வாலியோன்' என்பதற்கு மேற்கோள்; சிலப். 5 : 171, அடியார்.

வாலியோன் வலி: "விறன்மிகுவலி......நாஞ்சிலோன்" (பரி. 13 : 32 - 3); "கொடுமிட ஞாஞ்சிலான்" (கலித். 36 : 1); "விறல் வெள்ளை யாயவன்" (சிலப். 17 : 4).

13. புறநா. 57 : 2 - 3; "எண்ணிறந்த புகழவை" (பரி. 1 : 60); "தேயா விழுப்புகழ்த் தெய்வம்" (கலித். 103 : 76); "உரைசால் சிறப்பி னெடியோன்" (சிலப். 22 : 60).

17. கலம் - ஆபரணம். அருகாது - குறையாது. ஈயா - ஈந்து.

18. தண்கமழ் தேறல் : புறநா. 24 - 32, குறிப்புரை; 292 : 1.

18 - 21. புறநா. 24 : 31 - 3, குறிப்புரை.

மு. பூவைநிலையாவது ஒன்றனை யொன்றுபோற் கூறுந் துறை; அஃது ஓரரசனுக்குத் திருமாலையும் ஏனைத் தேவர்களையும் உவமை கூறுதலென் றுரைத்து இச் செய்யுளை மேற்கோள் காட்டினர்; தொல். புறத்திணை, சூ. 5, ந.; இ. வி. சூ. 167, உரை. (௫௬)

(௫௭) வல்லா ராயினும் வல்லுந ராயினும்
புகழ்த லுற்றோர்க்கு மாயோ னன்ன
உரைசால் சிறப்பிற் புகழ்சால் மாற
நின்னொன்று கூறுவ துடையே னென்னெனின்
நீயே, பிறர்நாடு கொள்ளுங் காலை யவர்நாட்
டிறங்குகதிர்க் கழனிநின் னிளையருங் கவர்க
நனந்தலைப் பேரூ ரெரியு நைக்க
மின்னுநிமிர்ந் தன்னநின் னொளிறிலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினுஞ் செகுக்க வென்னதூஉம்
கடிமரந் தடித லோம்புநின்
நெடுநல் யானைக் கந்தாற் றாவே.

(பி - ம்.) 11 'யானைக்குக் கந்'

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.

அவனைக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

(இ - ள்.) யாதொரு கல்வியை மாட்டாராயினும் அதனை வல்லா ராயினும் புகழ்தலைப் பொருந்தியவர்கட்கு மாயோனை யொத்த சொல்லுத லமைந்த தலைமையையுடைய புகழ் அமைந்த மாற! நினது ஒரு காரியஞ் சொல்லுத லுடையேன்; அது யாதெனின், நின் பகைவர்

நாட்டைக் கொள்ளுங் காலத்து அவர் நாட்டின்கண் விளைந்த கதிரை யுடைய வயலை நின்னுடைய வீரரும் கொள்ளை கொள்க; அகலிய இடத்தையுடைய பெரிய ஊரைத் தீயும் சுடுக; மின் நிமிர்ந்தாற் போன்ற நினது *பாடஞ் செய்கின்ற விளங்கிய நெடிய வேல் பகைவரை அழிக்கினும் அழிக்க; யாவதும் காவல்மரத்தை வெட்டுதலைப் பாதுகாப்பாயாக, நின்னுடைய நெடிய நல்ல யானைகட்கு முன்பு நட்டு நிற்கின்ற தறிகள் ஆற்றமாட்டா வாதலான்—எ - று.

† அவை இளமர மாதலால், நின் நெடுநல் யானைக்குத் தறியாதற்குப் பொறையாற்று வென்று உரைப்பாரு முளர்.

‡ வல்லவர்க்கும் மாட்டார்க்கும் ஒப்பப் புகழ்ந்து முடிய வொண்ணு மையான், மாயோனன்ன வென்றார்; அன்றி அவ்விருவர்க்கும் ஒப்ப அருள் பண்ணுதலின், அவ்வாறு கூறிற்றெனினும் அமையும்.

மாற! நின் யானைக்குக் கந்து ஆற்று வாதலால், கடிமரந் தடிதலோம்பெனக் கூட்டுக.

நின் யானைக்குக் கந்து ஆற்று வாதலாற் கடிமரந் தடிதலோம் பெனக் கூறுவான்போற் சந்து செய்விக்கும் நினைவாற் கூறினமையின், இது துணைவஞ்சி ஆயிற்று.

(கு - ரை.) 1. வல்லார் : எதிர்மறை வினையாலணையும் பெயர்.

2 : 3. புறநா. 56 : 13, குறிப்புரை.

1 - 3 புறநா. 27 : 15; "வல்லினும் வல்லா ராயினுஞ் சென் றோர்க்கு......நிறைய வீசு, மாஅல் யானை யாஅய்" (அகநா. 152).

5. 'நீ' என்பது ஆண்பாலில் வந்ததற்கு மேற்கோள்; தொல். பெயர். சூ. 39, தெய்வச்.; ந.

7. "ஒள்ளெரி நைப்ப வுடம்பு மாய்ந்தது" (புறநா. 240 : 10).

5 - 7. புறநா. 16 : 16 - 7, குறிப்புரை.

10. புறநா. 23 : 8 - 9, குறிப்புரை.

11. நெடுநல்யானை : புறநா. 72 : 4.

மு. '......கூறுதல் கருத்தாயின் வஞ்சியாம்; புகழ்தல் கருத்தா யிற் பாடாண்டிணையாம்' (தொல். புறத்திணை. சூ. 28, இளம்.); பாடாண் கொற்றவள்ளை யென்பர்; தொல். புறத்திணை. சூ. 34, ந.(நுள)

---

* பாடம் - சோதி; "திலகபாடமிருள் பருகவந்து" (தக்க. 27); "பல்லாயிர மாமணி பாடமுறும்" (கம்ப. சரபங்கர். 11).

† "ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉம், காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்" (நாலடி. 192).

‡ பரி. 3 : 28 - 30, பரிமேல்.

(ருஅ) நீயே, தண்புனற் காவிரிக் கிழவனை யிவனே
முழுமுத றொலைந்த கோளி யாலத்துக்
கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
இளைய தாயினுங் கிளையரா வெறியும்
அருநரை யுருமிற் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவ ரேறே நீயே
அறந்துஞ் சுறந்தைப் பொருநனை யிவனே
நெல்லு நீரு மெல்லார்க்கு மெளியவெனா
வரைய சாந்தமுந் திரைய முத்தமும்
இமிழ்குரன் முரச மூன்றுட னாளும்
தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே
பானிற வுருவிற் பனைக்கொடி யோனும்
நீனிற வுருவி னேமி யோனுமென்
றிருபெருந் தெய்வமு முடனின் றாஅங்
குருகெழு தோற்றமொ டுட்குவர விளங்கி
இன்னீ ராகலி னினியவு முளவோ
இன்னுங் கேண்மினும் மிசைவா ழியவே
ஒருவீ ரொருவீர்க் காற்று திரிருவீரும்
உடனிலை திரியீ ராயி னிமிழ்திரைப்
பௌவ முடுத்தவிப் பயங்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே
அதனால், நல்ல போலவு நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காத னெஞ்சினு மிடைபுகற் கலமரும்
ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளா
தின்றே போல்கநும் புணர்ச்சி வென்றுவென்
றடுகளத் துயர்கநும் வேலே கொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே.

(பி - ம்.) 10 'மெளியவரைய'

திணை - பாடாண்டிணை; துறை - உடனிலை.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங் கிருந்தாரைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

(இ - ள்.) நீ, குளிர்ந்த நீரையுடைய காவிரிக்குத் தலைவன்; இவன், பரிய அடி மாய்ந்த கோளியாகிய ஆலத்துக் கொழுவிய நிழலை யுடைய நெடிய கொம்பை அதன் வீழ் தாங்கினாற்போலத் தனக்கு முன்னுள்ளோர் இறந்தாராகத் தான் தளராது நல்ல புகழையுடைய பழைய குடியைத் தடுமாற்றமற அணைத்துத் தான் சிறிதே யாயினும் கிளையுடனே பாம்பை எறியும் பொறுத்தற்கரிய வெள்ளிய உருமேறு போல இளமைக் காலத்தும் பகைவரைக் காணப்பொறாத போரின் கண் மாட்சிமைப்பட்ட பாண்டியர் குடியுள் ஏறு போல்வான்; நீ, அறந் தங்கும் உறையூரின்கண் அரசன்; இவன், நெல்லும் நீரும் யாவர்க்கும் எளிய வெனக் கருதி அவைபோலாது யாவர்க்கும் பெறுதற்கரிய * பொதியின் மலையிடத்துச் சந்தனமும் கடலிடத்து முத்துமென இவற்றை ஒலிக்கும் குரலையுடைய † முரசம் மூன்றுடனே ஆளும் தமிழ் பொருந்திய மதுரைக்கட் குளிர்ந்த செங்கோலையுடைய வேந்தன்; நீர், பால்போலும் நிறத்தையுடைய பனைக்கொடியை யுடையோனும் நீல நிறம்போலும் திருமேனியையுடைய ஆழியை யுடையோனுமென்று சொல்லப்படும் இரண்டு பெரிய தெய்வமும் ஒருங்கு நின்றாற்போல உட்குப் பொருந்திய காட்சியோடு அச்சம் வர விளங்கி இத்தன்மையீ ராகுதலின், இதனினும் இனிய பொருள் உளவோ? இன்னமும் கேளீர்: நும்முடைய புகழ் நெடுங்காலம் செல்வதாக; நும்முள் ஒருவீர் ஒருவீர்க்கு உதவுவீராக; நீங்களிருவீரும் கூடி நிற்கின்ற இந் நிலையின் வேறுபடீராயின் ஒலிக்கும் திரையையுடைய கடல் சூழ்ந்த இப் பயன் பொருந்திய உலகங்கள் கையகத்தே அகப்படுதல் பொய்யாகாது; ஆதலால், நல்லன போலே யிருக்கவும் நியாயத்தை யுடையன போலே

---

* புறநா. 380; "தென்கடற் பிறந்த முத்தி னாரமும், முனைதிறை கொடுக்குந் துப்பிற் றன்மலைத், தெறலரு மரபிற் கடவுட் பேணிக், குறவர் தந்த சந்தி னாரமும்......அணியும்......தென்னவன்" (அகநா. 13); "குடமலைப் பிறந்த வாரமு மகிலும், தென்கடன் முத்தும்" (பட்டினப். 188 - 9); "தென்கடன் முத்துந் தென்மலைச் சந்தும்", "கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு, தெக்கண மலயகச் செழுஞ்சே றாடி", "கோவா மலையாரங் கோத்த கடலாரம்" (சிலப். 8 : 19, 14 : 80 - 1, 17: "உள்வரி"); "வெண்டிரைத் தென்கடன் முத்துந் தென்மலைச் சந்தும்" (தஞ்சை. 93).

† "முரைசுமூன் றாள்பவர் முரணியோர் முரண்டப" (கலித். 132); முரசு மூன்றாவன வீர முரசு, தியாக முரசு, நியாய முரசென்பன; தன் முரசும் சேரன்முரசும் சோழன்முரசுமென மூன்றெனலுமாம்" (கலித். 132, உரை); "மன்றல்பே றுதவி வலனுறு வெற்றியால், மூன்றினின் முழங்கு மூவகை முரசும்" (சரபேந்திர. குற. 30 : 35 - 6).

யிருக்கவும் பழையோ ரொழுகிய ஒழுக்க முடையனபோலே யிருக்கவும் அன்பு பொருந்திய நெஞ்சையுடைய நும் இடையே புகுந்து நும்மைப் பிரித்தற்கு அலமரும் அயலோருடைய * சிறப்பில்லாத மொழியைக் கேளாது இன்று போல்க, நுமது கூட்டம்; வென்று வென்று கொலைக் களத்தின்கண் மேம்படுக, நும்முடைய வேல்; வளைந்த வரியையுடைய புலிவடிவாகச் செய்யப்பட்ட சேய்மைக்கண் விளங்குகின்ற தோண்டிய இலாஞ்சனையைப் பெரிய நீரின்கண் வாழும் கயலுடனே பொறித்த சிகரங்களை யுடையவாக, பிறருடைய குன்றையுடைய நாடுகள்—எ - று.

† குன்றுகெழு நாடென்றதாயினும், கருதியது பிறர் நாட்டுக் குன்றுக ளென்றதாகக் கொள்க.

கோளி யென்றது, பூவாது காய்க்கும் மரம்.

தழீஇப் (5) பொருவென (7) இயையும்.

முரசமூன்றுவன :—வீர முரசும், நியாய முரசும், தியாக முரசும்; மண முரசுடனே ஏனை இரண்டு முரசென்பாரும் உளர்.

நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளிய வென முற்றுக உரைப்பாரும் உளர்.

தொடுபொறி : பெயர்மாத்திரையாய் நின்றது.

ஒருவீர் ஒருவீர்க்கு உதவியாய் வலியை யுடையீராய் நீங்கள் இருவீரு மென்பாரும் உளர்.

இருவர் அரசர் ஒருங்கிருந்தாரைப் பாடினமையின், இஃது உடனிலை ஆயிற்று.

(கு - ரை.) 1. கிழவனை : ஐ முன்னிலைக்கண் வந்தது.

2. "கோடுபல முரஞ்சிய கோளி யாலத்து" (மலைபடு. 268).

---

* "பொதுக்கொண்டகவ்வை" (கலித். 66 : 11) என்புழி, பொது என்பதற்குச் சிறப்பில்லாமை யென்று நச்சினார்க்கினியர் எழுதிய உரையும் "இவை பதினாறும் சிறப்பின்மையிற் பொதுச்சீரென்பது காரணக் குறி; பொது சிறப்பின்மையைச் சொல்லுமோ வெனிற் சொல்லும்; என்னை? 'புலமிக் கவரைப் புலமை தெரிதல், புலமிக் கவர்க்கே புலனாம் - நலமிக்க, பூம்புன லூர பொதுமக்கட் காகாவாம், பாம்பறியும் பாம்பினது கால்' இதனுட் பொதுவைச் சிறப்பின்மைக்கட் புணர்த்தார் சான்றோ ராதலின்" (யா. வி. சூ. 13, உரை) என்பதும் இங்கே கூறிய உரையை வலியுறுத்தும்.

† 'குன்றுகெழு நாடென்றாராயினும் நாடுகெழுகுன் றென்பது கருத்தாயினாற்போல' (பரி. 3 : 17 - 8, பரிமேல்.)

'கோளி - பூவாது காய்க்கும் மரம்; என்னை? கோளியாலத்து என்றார்' (சிலப். 16 : 22 - 8, அடியார்.).

2 - 5. "சிதலை தினப்பட்ட வால மரத்தை, மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக், குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற, புதல்வன் மறைப்பக் கெடும்" (நாலடி. 197); "தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன, ஓங்குகுல நையவத னுட்பிறந்த வீரர், தாங்கல் கடனாகும்" (சீவக. 498).

4 - 5. "துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றி" (பதிற். 32 : 7).

6 - 7. அராவெறியும் உரும் : புறநா. 17 : 38 - 9, குறிப்புரை; 37 : 1 - 4, குறிப்புரை; 126 : 19; 366 : 3.

7 - 8. "நரையுருமி னேறனையை" (மதுரைக். 63).

6 - 8. "இளைய ராயினும் பகையரசு கடியும், செருமாண் டென்னர்" (சிலப். 4 : 21 - 2); "மழைதவழும் பெருங்குன்றத்துச், செயிருடைய வரவெறிந்து, கடுஞ்சினத்த மிடறபுக்கும், பெருஞ்சினப்புய லேறனையை" (பதிற். 51 : 25 - 8).

9. புறநா. 39 : 8 - 9, குறிப்புரை.

10. புறநா. 70 : 9, 186 : 1.

13. "செழியன், தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரை" (சிறுபாண். 65 - 7); "மலையாத, தண்டாரரான் கூடற் றமிழ்" (மதுரைக். இறுதி வெண்பா).

11 - 3. "சீர்மிகு சிறப்பினோன் றொல்குடிக் குரித்தெனப், பார்வளர் முத்தமொடு படுகடல் பயந்த, ஆர்கலி யுவகையர்" (கலித். 105 : 3 - 5).

15. "நீனிற வுருவி னெடியோன்" (பெரும்பாண். 402); "நீல மேனி நெடியோன்" (சிலப். 5 : 172).

14 - 5. புறநா. 56 : 3 - 6, குறிப்புரை; நற். 32 : 1 - 2.

14 - 6. "மன்புனை லிளவெயில் வளாவவிருள் வளர்வெனப், பொன்புனை யுடுக்கையோன் புணர்ந்தமர் நிலையே" (பரி. 15 : 27 - 8).

18. இன்னீர் - இத்தன்மையையுடையீர்.

25. "பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது" (மதுரைக். 192).

28. "இன்றை யன்ன நட்பு" (குறுந். 199). "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா, னட்பாங் கிழமை தரும்" (குறள், 785) என்பதன் உரையில், 'புணர்ச்சி-ஒருதேயத்தாராதல்; இன்றே போல்க நும் புணர்ச்சி யென்றதும் அதனை' என்பர் பரிமேலழகர்.

29. புறநா. 158 : 28, 309 : 7.

30 - 32. அரசர் தாம் வென்ற நாட்டிலுள்ள மலையில் தம் கொடியை எழுதுவித்தல் மரபு; "கயலெழுதிய விமயநெற்றி" (சிலப். 17 : 1, உரைகள்); "பருப்பதத்திற் கயல்பொறித்த பாண்டியர் குலபதி போல்" (பெரியாழ்வார் திருமொழி); "நககோடி பலகோடி புலியேறு தனியேற", "பொறைசூழ் வரையிற் புலியே றெழுதும்" (தக்க. 4, 185,

குறிப்புரை). குயின்ற வென்னும் அடையடுத்தமையால், தொடுபொறி யென்பது பெயர் மாத்திரையாய் நின்றது; புறநா. 54 : 10. தாமிருக்கும் நாட்டரச ருதலின் காரிக் கண்ணனூர் சோழனையே முன்னிலையாக்கிக் கூறினார்.

29 - 22. பரி. 3 : 17 - 8, பரிமேல். மேற். (ருஅ)

(ருகூ) ஆரந் தாழ்ந்த வணிகிளர் மார்பிற்
றாடோய் தடக்கைத் தகைமாண் வழுதி
வல்லை மன்ற நீநயந் தளித்தல்
தேற்றாய் பெரும பொய்யே யென்றும்
காய்சினந் தவிராது கடலூர் பெழுதரும்
ஞாயி றனையைநின் பகைவர்க்குத்
திங்க ளனையை யெம்ம னோர்க்கே.

(பி - ம்.) 1 'வம்பகட்டு மார்பிற்'

திணை - அது; துறை - பூவைநிலை.

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் பாடியது.

(இ - ள்.) ஆரந் தாழ்ந்த அழகு மிக்க மார்பினையும் முழந்தாளிலே தோய்ந்த பெரிய கையினையுமுடைய அழகு மாட்சிமைப்பட்ட வழுதி! நீ யாவர்க்கும் உவந்து அருளைப் பண்ணுதலைத் தெளிவாக வல்லை. மெய்யாக யாவரிடத்தும் தெளியாய், பெரும! பொய்யை; எந்நாளும் சுடும் வெம்மை யொழியாது கடலிடத்தே கிளர்ந்தெழுகின்ற ஞாயிற்றை ஒப்பை, நின் பகைவர்க்கு; எம்போல்வார்க்குத் திங்களை ஒப்பை—எ - று.

தேற்று யென்றது, * தேறுயெனத் தன்வினையாய் நின்றது; தேற்று யென்பதற்குப் பொய் தெளிக்கப்படா யெனினும் அமையும்.

ஞாயிற்றேடும் திங்களோடும் உவமித்தமையால், இது பூவை நிலை ஆயிற்று.

(கு - ரை.) 1. புறநா. 152 : 10.

2. தாடோய்தடக்கை : புறநா. 14 : 11, 90 : 10; பு. வெ. 205.

4. "பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன்" (கம்ப. கைகேயி. 31).

தேற்ற லென்பது 'அறிதல்' என்னும் பொருளில் வந்ததற்கு மேற்கோள்; சீவக. 257, 770, ந.

5 - 6. "கதிர்சினந் தணிந்த" (குறுந். 387; கலித். 16 : 11 - 2).

6 - 7. புறநா. 55 : 13 - 4, குறிப்புரை; 6 : 27 - 8; 56 - 23 - 4. (ருகூ)

* புறநா. 202 : 16, உரை.

(௬௦) முந்நீர் நாப்பட் டிமிற்சுடர் போலச்
செம்மீ னிமைக்கு மாக விசும்பின்
உச்சி நின்ற வுவவுமதி கண்டு
கட்சி மஞ்ஞையிற் சுரமுதல் சேர்ந்த
சில்வளை விறலியும் யானும் வல்விரைந்து
தொழுதன மல்லமோ பலவே கானற்
கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்
ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும்
உரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்
வலனிரங்கு முரசின் வாய்வாள் வளவன்
வெயின்மறைக் கொண்ட வுருகெழு சிறப்பின்
மாலை வெண்குடை யொக்குமா லெனவே.

(பி - ம்.) 2 'செய்ம்மீ' 12 'யோர்க்குமா'

திணை - அது; துறை - குடைமங்கலம்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனை உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடியது.

(இ - ள்.) கடல்நடுவே தோன்றுகின்ற திமிலின்கண் இடப்பட்ட விளக்குப் போலச் செவ்வாய்மீன் விளங்கும் மாகமாகிய விசும்பினது உச்சிக்கண்ணே நின்ற உவாநாளின் மதியத்தைக் கண்டு காட்டுள் வாழும் மயிலைப் போலச் சுரத்திடைப் பொருந்திய சிலவாகிய வளையை யுடைய விறலியும் யானும் கடிதின் விரைந்து தொழுதேமல்லேமோ பலகால்? கடற்கரையிடத்துக் கழியினீரான் விளைந்த உப்பை முகந்து கொண்டு மலைநாட்டை நோக்கிச் செல்கின்ற ஆரையுடைய சகடை யினது குழிப்பாய்தலைத் தீர்த்துச் செலுத்தும் வலியையுடைய பாரம் பொறுக்கும் பகட்டை யொக்கும் எம் கோன், வென்றியாக முழங்கும் முரசினையும் தப்பாத வாளினையும் உடைய வளவனது வெயிலை மறைத் தற்கு எடுத்த உட்குப் பொருந்திய தலைமையையுடைய தாமம் பொருந்திய வெண்கொற்றக் குடையை ஒக்குமெனக் கருதி—எ - று.

செம்மீன் இமைக்கும் விசும்பின் உச்சி நின்ற மதியை உவமித் தமையின், இது தலைப்பெயலுவமையாய் நின்றது.

கானல் - கடற்கரை.

வெயிலென்றது, * பகைவரானும் கொடியோரானும் வரும் வெம்மையை.

---

* புறநா. 20 : 8 - 9; "வருந்திய குடி மறைப் பதுவே" (புறநா. 35 : 19 - 20).

இராச்சியபாரத்தைப் பொறுத்து நடத்துமாறு நோக்கி நோன் பகட்டோடு உவமித்தமையின், * இறப்ப இழிந்த ஆனந்தவுவமை அன்றாயிற்று.

உவாமதியைக் கண்டு வளவன் வெண்குடையை ஒக்குமென விறலியும் யானும் பலகால் தொழுதேமல்லேமோ வெனக் கூட்டி வினை முடிவு செய்க.

வளவன் வெண்குடையைக் காட்டித் தொழுமி னென்றார்க்கு † நிறைமதி தொழப்படாதாயினும், குடையோடு ஒப்புமை கண்டு தொழுத யாம் குடைதன்னைக் கண்டால் தொழுதல் சொல்ல வேண்டுமோ வென அதன் சிறப்புக் கூறியவாறு.

செம்மீன் - திருவாதிரையுமாம்.

(கு - ரை.) 1. முந்நீர் : புறநா. 9 : 10, குறிப்புரை.

2. மாகவிசும்பு : புறநா. 35 : 18, குறிப்புரை.

1 - 2. "மீன்றிமில் விளக்கமும்" என்பதற்கு இவ்வடிகளை மேற் கோளாகக் காட்டினர்; சிலப். 6 : 142, அடியார்.

3. உவவு - உவா; பூரணை.

5. சில்வளைவிறலி : புறநா. 64 : 2, 103 : 4; பதிற். 40 : 21, 57 : 6, 78 : 3; 'சில்வளை விறலி யென்றது பல்வளையிடுவது பெதும்பைப் பருவத்தாகலின், அஃதன்றிச் சில்வளையிடும் பருவத்தாளென அவள் ஆடல் முதலிய துறைக்குரியளாதல் கூறியவாறு' (பதிற். 57 : 6, உரை).

7 - 9. புறநா. 84 : 6, 90 : 6 - 8; "கதுமென மண்ட, அள்ளற் பட்டுத் துள்ளுபு துரப்ப, நல்லெருது முயலு மளறுபோகு விழுமத்துச், சாகாட் டாளர் கம்பலை" (பதிற். 27 : 12 - 4); "அள்ளற் றங்கிய பகடுறு விழுமம், கள்ளார் களமர் பெயர்க்கு மார்ப்பே" (மதுரைக். 259 - 60); "மடுத்தவா யெல்லாம் பகடன்னான்" (குறள், 624); "நிரம்பாத நீரியாற் றிடுமணலு ளாழ்ந்து, பெரும்பார வாடவர்போற் பெய்பண்டந் தாங்கி" (சீவக. 2784); "குண்டுதுறை யிடுமணற் கோடுற வழுந்திய, பண்டிதுறை யேற்றும் பகட்டிணை போல" (பெருங். 1. 53 : 53 - 4).

11 - 2. புறநா. 35 : 19 - 21, குறிப்புரை; "எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடை" (கலித். 9 : 1).

தலைவன் புகழ் குடையடுத்து வந்ததற்கு மேற்கோள்; தொல். புறத் திணை. சூ. 31, ந. (௬௦)

---

* இறப்ப இழிந்த ஆனந்தவுவமையாவது உயர்ந்த பொருளுக்குத் தாழ்ந்த பொருளை யுவமம் கூறுவது; 'இறப்ப விழிந்தது மிறப்ப வுயர்ந்ததும், அறத்தகை வழீஇய வானந்த வுவமை' என்பது விதி.

† நிறைமதி தொழப்படா தென்றது, பிறை தொழப்படு மென்பது கருதி; இதனை, புறநா. 1 : 9 - 10, குறிப்புரையாலும், "வளையுடைத் தனைய தாகிப் பலர்தொழச், செவ்வாய் வானத் தையெனத் தோன்றி, இன்னம் பிறந்தன்று பிறையே" (குறுந். 307) என்பதனாலும் அறிக.

(சுக) கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர்
சிறுமா ணெய்த லாம்பலொடு கட்கும்
மலங்குமிளிர் செறுவிற் றளம்புதடிந் திட்ட
பழன வாளைப் பரூஉக்கட் டுணியல்
புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை யாக
விலாப்புடை மருங்கு விசிப்ப மாந்தி
நீடுகதிர்க் கழனிச் சூடுதடு மாறும்
வன்கை வினைஞர் புன்றலைச் சிறாஅர்
தெங்குபடு வியன்பழ முனையிற் றந்தையர்
குறைக்க ணெடும்போ ரேறி விசைத்தெழுந்து
செழுங்கோட் பெண்ணைப் பழந்தொட முயலும்
வைகல் யாணர் நன்னாட்டுப் பொருநன்
எஃகுவிளங்கு தடக்கை யியறேர்ச் சென்னி
சிலைத்தா ரகல மலைக்குந ருளரெனிற்
றாமறி குவர்தமக் குறுதி யாமவன்
எழுவுறழ் திணிதோள் வழுவின்று மலைந்தோர்
வாழக் கண்டன்று மிலமே தாழாது
திருந்தடி பொருந்த வல்லோர்
வருந்தக் காண்ட லதனினு மிலமே.

(பி - ம்.) 9 'முணையிற்'

திணை - வாகை; துறை - அரசவாகை.

சோழன் இலவந்திகைப்பள்ளி (பி - ம். காலேகப்பள்ளி)த் துஞ்சிய நலங்கிள்ளி *சேட் சென்னியைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது.

(இ - ள்.) கொண்டையாகிய மயிரையும் குளிர்ந்த தழையையும் உடைய கடைசியர் சிறிய மாட்சிமையுடைய நெய்தலை ஆம்பலுடனே களையும் மலங்கு பிறழ்கின்ற செய்யின்கண்ணே தளம்பு துணித்து இடப்பட்ட பொய்கையிடத்து வாளையினது பரிய இடத்தையுடைய தடியைப் புதிய நெல்லினது வெள்ளிய சோற்றிற்கு மேலீடாகக் கொண்டு விலாப்புடைப் பக்கம் விம்ம உண்டு நெடிய கதிரையுடைய கழனியினிடத்துச் சூட்டை இடுமிடம் அறியாது தடுமாறும் வலிய கையையுடைய உழவர் புல்லிய தலையையுடைய சிறுவர் தெங்கு தரும் பெரிய பழத்தை வெறுப்பின், தந்தையருடைய தலை குவியாமல் இடப்

* 'சென்னி' எனத் தலைவன் பெயரில் ஒரு பகுதி 13-ஆம் அடியில் வந்துள்ளது.

பட்ட குறைந்த இடத்தையுடைய நெடிய போரின்கண்ணே ஏறி உகைத் தெழுந்து வளவிய கோட் புக்க பனையினது பழத்தைத் தொடுதற்கு முயலும், நாடோறும் புது வருவாயையுடைய நல்ல நாட்டிற்கு வேந்தனாகிய வேல் விளங்கும் பெரிய கையினையும் இயற்றப் பட்ட தேரினையுமுடைய சென்னியது இந்திர விற்போலும் மாலையை யுடைய மார்போடும் மாறுபடுவோ ருளராயின், தாமறிகுவர் தமக்குற்ற காரியம்; யாங்கள், அவனுடைய கணைய மரத்தோடு மாறுபடும் திணிந்த தோளைத் தப்பின்றாக மாறுபட்டோர் வாழக் கண்டதும் இலமே; விரைய அவனது திருந்திய அடியை அடையவல்லோர் வருந்தக் காண்டல் அவ் வாழக் கண்டதனினும் இலம்—எ - று.

தளம்பு என்றது சேறுகுத்தியை.

வழுவின்று மலைதலாவது வெளிப்பட நின்று மலைதல்.

(கு - ரை.) 1. தழை - ஒருவகை உடை; அஃது ஆம்பல் முதலிய மலர்களினாலேனும், தளிர்களினாலேனும், விரவிய இவ்விரண்டினாலே னும் ஆக்கப்படுவது; இதனை, புறநானூறு, 116 : 1 - 2, 248 : 1 - 2-ஆம் அடிகளாலும், "முடித்த குல்லை யிலையுடை நறும்பூச், செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு, சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை...உடீஇ" (முருகு. 201 - 3) என்பதனாலும் உணர்க.

2. நெய்தலும் ஆம்பலும் வயல்களிற் களைகளாக முளைத்தவை.

3. மலங்குமிளிர் செறு : சிலப். 10 : 80. மலங்கு - ஒருவகை மீன். தளம்பு - சேறு குத்தும் ஒருவகைக் கருவி.

5. கண்ணுறை - மேலீடு; வியஞ்சனம்; மேலீடு என்றதனால் சோற்றின்மேலிட்டு உண்ணப்படுவது எனக் கொள்க.

6. 'விலாப்புடை மருங்குல் விசிப்ப மாந்திய உழவர்' என இவ் வடியை உரைநடையிலிட்டு எழுதுவர் பரிமேலழகர்; பரி. 7 : 38 - 9, உரை.

7. சூடு : புறநா. 13 : 11.

11. செழுங்கோள் - செழுவிய காய்க்குலையையுடைய.

14. சிலைத்தார் : புறநா. 10 : 9 - 10, 36 : 12, குறிப்புரை. "திரு விற்றன் மாரி கற்பான் றுவலைநாட் செய்வ தேபோல், உருவிற்றுய்த் துளிக்குந் தேற லோங்குதார்" (சீவக. 2070).

18. புறநா. 10 : 5 - 6. திருந்தடி : புறநா. 7 : 2, உரை. (௬௧)

(௬௨) வருதார் தாங்கி யமர்மிகல் யாவது
பொருதாண் டொழிந்த மைந்தர் புண்டொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்த றீட்டி
நிறங்கிள ருருவிற் பேஎய்ப் பெண்டிர்

எடுத்தெறி யனந்தற் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்
தறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே
உரைசால் சிறப்பின் முரைசொழிந் தனவே
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்று லமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னோரு மாற்ற
அரும்பெற லுலக நிறைய
விருந்துபெற் றனராற் பொலிகநும் புகழே.

(பி - ம்.) 7 'விறற்போர்', 'வயப்போர்'

திணை - தும்பை; துறை - தொகைநிலை.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தாரைக் கழாத்தலையார் பாடியது.

(இ - ள்.) வருகின்ற தூசிப்படையைத் தடுத்துப் போரின்கண் ஒருவர் ஒருவரை வெல்வே மென மிகுதல் எங்ஙனமாவது? பொருது அக்களத்தின்கட் பட்ட வீரரது புண்ணைத் தோண்டி அவ் வுதிரந் தோய்ந்த செய்ய கையால் தமது மயிரைக் கோதி நிறமிக்க வடிவை யுடைய பேய் மகளிர் மேன்மேலும் கொட்டுகின்ற மந்தமான ஓசையையுடைய பறையினது தாளத்தே யாடப் பருந்து ஊனைத் தின்னப் பொருந்திய படையானே போரின்கண் வெகுண்டு அறத்தான் அடர்த்துச் செய்த வலிய போரையுடைய அரசர் இருவரும் பட்டார்; அவர் கொற்றக்குடையும் தளர்ந்தன; புகழமைந்த தலைமையையுடைய முரசு வீழ்ந்தன; பல நூறாக அடுக்கப்பட்ட * பதினெண்பாடை மாக்களாகிய படைத் தொகுதி இட மில்லையாம்படி தொக்க அகன்ற

* "பதினெட்டுப் பாடையும் கண்டவர்" (திருமந்திரம்); "முட்டிலா மூவறு பாடை மாக்கள்" ((சீவக. 93); "விரவுமொழிக் கட்டூர்" (பதிற். 90 : 30); "ஐம்பதி னிரட்டி யவனச் சேரியும், எண்பதி னிரட்டி யெறிபடைப் பாடியும், அளப்பருஞ் சிறப்பி னுயிர மாகிய, தலைப்பெருஞ் சேனைத் தமிழச் சேரியும்" (பெருங். 3. 4 : 8 - 11).

இடத்தையுடைய பாடிவீட்டின்கட் போர்க்களம் தமதாக்கிக் கொள்ளுதற்கு உரியோர் ஒருவரின்றிக் கண்டார்க்கு அச்சம் வர உடனே மடிந்தது பூசல்; அவர் * பெண்டிரும், பச்சையிலை தின்னாராய்க் குளிர்ந்த நீரின்கண் மூழ்காராய் அவர் மார்பத்தைக் கூடி அக் களத்தின்கண்ணே உடன் கிடந்தார்; வாடாத கற்பகத்தின் தாரினை யும் இமையாத கண்ணிணையும் † நாற்றமாகிய உணவையுமுடைய தேவர்களும் மிகப் பெறுதற்கரிய உலகம் நிரம்ப விருந்து பெற்றார்; அதனாற் பொலிக நுங்கள் புகழ்—எ - று.

அனந்தல் - பறை கொட்டுவார் கை புண்படுதலின், மந்தமாக ஒலித்தல்.

அறத்தின் மண்டுதலாவது படை பட்டபின் பெயராது சென்று இரு வேந்தரும் பொருதல்.

பட்ட இரு வேந்தரும் அக் களத்துக் கிடக்கின்ற படியைக் கண்டு தம் மனத்தோடு நொந்து அவரை நோக்கிக் கூறுகின்று ராதலான், நும் புகழென முன்னிலையாக்கிக் கூறினார்.

வேந்தர் மாய்ந்தனர்; குடை துளங்கின; முரசு ஒழிந்தன; அமர் உடன் வீழ்ந்தது; பெண்டிரும் மார்பகம் பொருந்தி அமைந்தனர்; நாற்ற உணவினோரும் விருந்து பெற்றனர்; இவ்வாறான பின்பும் யாம் அமரினை மேற்கொண்டு பொருது வெல்வேமென்று தாம் தாம் நினைந்த நினைவு எவ்வண்ணமாவதென்று தம் நெஞ்சொடு கூறிப் பின் பொலிக நும் புகழே யென அவ்வரசர் கிடந்தவாறு கண்டு கூறியவாறு.

மறத்தின் மண்டிய வென்று பாடமோதுவாரும் உளர்.

வருதார் தாங்கி அமர் மிகல் யாவதென்பதற்கு, இவர்கள் செய்தபடி கண்டு......இனிச் சிலர் பொருது வேறல் எங்கே யுளதென வியந்து கூறியதாக உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 1. தார் - தூசிப்படை; முன்படை. தொல். புறத் திணை. சூ. 5 : 15; பு. வெ. 28.

2 - 5. புண்ணைத் தோண்டுதலும் கூந்தலைக் கோதுதலும் சீர் தூங்குதலும் பேய்ப் பெண்டிருடைய தொழில்; உணவு கிடைத்த களிப்பால் ஆடினர்.

4 - 5. "இடிக்குரன் முரசின்மு னெழுந்தன ளாடி" (பெருங். 1. 37 : 246); "தானேயா டும்பேய், பறைபெற்று லாடாதோ பாய்ந்து" (புறத்திரட்டு).

---

* பெண்டிர் பச்சையிலை தின்னாத லென்றது, கணவர் இறந்த பின்னர் அவர் மனைவியர் வேளைக்கீரை முதலியவற்றைத் தின்று கைம்மை விரதம் காத்தலைக் குறிப்பித்தது; புறநா. 246; பு. வெ. 257. இச் செய்யுளிற் கூறப்பட்ட பெண்டிர் தலையாகு கற்பையுடையரா தலின் தம் கணவரோடு உயிர் துறந்தார்; மணி. 3 : 42 - 7.

† 'நாற்றவுணவு - அவியாகிய வுணவு' மதுரைக். 458, ந.

7. புறநா. 9 : 1 - 6.

10. பைஞ்ஞிலம் - தொகுதி; பஞ்ஞிலம், பஞிலம் எனவும் வழங்கும்; "நனந்தலைப் பைஞ்ஞிலம் வருகவிந் நிழலென", "உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி" (பதிற். 17, 31). வேறுபடு பைஞ்ஞிலம் : "வேறுபல் பெரும்படை" (முல்லை. 43).

12. புறநா. 53 : 5, குறிப்புரை.

13 - 5. "தயங்கிணர்க் கோதை தன்றுயர் பொறாஅன், மயங்கினன் கொல்லென மலரடி வருடித், தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள், கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொறாஅள், மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத், தன்னுயிர் கொண்டவ னுயிர்தேடினள்போற், பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்" (சிலப். 25 : 80 - 86); "காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி, ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா, தின்னுயி ரீவர்...பத்தினிப் பெண்டிர்" (மணி. 2 : 42 - 8); "நாடினார் நாடியே நனைவருங் கொம்பனார், வாடினார் கணவர்தம் மார்புறத் தழுவியே, வீடினார்" (கம்ப. அக்ககுமாரன். 48); பு. வெ. 262.

16 - 7. "வாடாப் பூவி னிமையா நாட்டத்து, நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்" (மதுரைக். 457 – 8).

19. புகழ்வாழ்க : புறநா. 58 : 19.

மு. தும்பைத் திணையுள், வாள்வாய்த்து இருபெருவேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியாத்தொகைநிலை யென்னுந் துறைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 14, இளம்.; சூ. 17, ந. (௬௨)

(௬௩) எனைப்பல் யானையு மம்பொடு துளங்கி
விளக்கும் வினையின் றிப் படையொழிந் தனவே
விறற்புகழ் மாண்ட புரவி யெல்லாம்
மறத்தகை மைந்தரொ டாண்டுப்பட் டனவே
தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்
தோல்கண் மறைப்ப வொருங்குமாய்ந் தனரே
விசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்
பொறுக்குந ரின்மையி னிருந்துவிளிந் தனவே
சாந்தமை மார்பி னெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தன ரினியே
என்னா வதுகொ றானே கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவன் முக்கித் தண்புனற் பாயும்
யாண ரறாஅ வைப்பிற்
காமர் கிடக்கையவ ரகன்றலை நாடே.

திணையும் துறையும் அவை.

அவரை அக்களத்திற் பரணர் பாடியது.

(இ - ள்.) எத்துணையும் பலவாகிய யானையும், அம்பாற் கலங்கி இனிமேல் உண்டாக்கும் போரின்றிப் படையிடத்துப் பட்டன; * வெற்றிப் புகழ் மாட்சிமைப்பட்ட குதிரையெல்லாம், ஆண்மைக்கேற்ற வீரக் கூறுபாட்டையுடைய மேலாட்களுடனே அக்களத்தே பட்டன; தேர் கொடுவர வந்த போரிற்கு அமைந்தோரெல்லாம், தாம் பிடித்த பரிசை (கேடகம்) தம் கண் மறைப்பச் சேரப் பட்டனர்; வாரால் விசிக்கப்பட்டுத் தொழில் மாட்சிமைப்பட்ட மயிர் சீவாது போர்க்கப் பட்ட கண்ணையுடைய முரசமெல்லாம், பரிப்பார் படுதலான் இருந்து கெட்டன; சாந்தமைந்த மார்பின்கண்ணே நெடிய வேல் பாய்ந்தன வாக அரசரும், பொருது அக் களத்தின்கண்ணே மடிந்தனர்; இனி, என்ன வருத்த முறுவதோதான்? கழனிக்கண் ஆம்பல்தண்டாற் செய்த வளையணிந்த கையினையுடைய மகளிர் செவ்வி அவலை முக்கிக் குளிர்ந்த புனற்கண்ணே பாயும் புதுவருவாய் அருத ஊர்களையுடைய அழகிய கிடையையுடைய அவரது அகன்ற இடத்தையுடைய நாடு—எ - று.

அன்றோ என்னுவதுகொ லென்று பாடமோதுவாரும் உளர்.

நாடுதான் என்னுவதுகொ லெனக் கூட்டுக.

நாடென்னும் ஒருமை நோக்கி, என்னுவதுகொல் என ஒருமையாற் கூறப்பட்டது.

(கு - ரை.) 3. விறற்புகழ் - பிரதாபம்.

5. "நோன்புரித் தடக்கைச் சான்றோர்" (பதிற். 14 : 12).

7. புறநா. 50 : 1 - 5, 288 : 1 - 4; "ஓடா நற்லேற் றுரிவை தைஇய, பாடுகொண் முரசம்" (அகநா. 334); "கொல்லேற்றுப் பைந் தோல் சீவாது போர்த்த, மாக்கண் முரசம்" (மதுரைக். 732 - 3); "ஏற்றுரியி னிமிழ்முரசம், கூற்றுட்க வெழீஇச்சிலைப்ப" (யா. வி. மேற். 'தாழிரும்பிணர்'); "மயிர்க்கண் முரசமொடு வான்பலி யூட்டி" (சிலப். 5 : 88); "புனைமருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற, கனைகுர லுருமுச் சீற்றக் கதழ்விடை யுரிவை போர்த்த, துனை குரன் முரசம்" (சீவக. 2899); "பசும்பொற் பலவார் விசித்துப் பிணி யுறீஇ...ஏற்றுரி போர்த்த...முரசம்" (பெருங். 2. 2 : 26 - 9).

8. பொறுக்குநர் - தாங்குகிறவர்.

9. புறநா. 308 : 6 - 7; "பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின், விழுமிய பெரியோர்" (மதுரைக். 226 - 7).

12. மு. புறநா. 352 : 5; ஆம்பல் வள்ளித்தொடி : "ஆம்ப னுடங்கு மணிவளையும்" (பு. வெ. 329); "பவள வளைசெறித்தாட் கண்டணிந் தாள் பச்சைக், குவளைப் பசுந்தண்டு கொண்டு" (பரி. 11 : 101 - 2).

---

* "மறம்வீங்கு பல்புகழ்" (பதிற். 12).

13. பாசவல் - பசுமையான அவலே. முக்குதல் - வாய் நிரம்பக் கொள்ளுதல்; "முதிய வானமீன் வாரிமுக்கி", "மலேகள் வாரியன வேழு முக்கி" (தக்க. 358, 410); "முத்தைக், கொக்குமுக் கிக்கக்கி விக்குமச் சோலைக் குறுங்குடியே" (தனிப்பாடல்); "கங்க முக்கின சிறுமீ னெல்லாம்" (திருவிளை. இந்திரன். 56).

12 - 3. மகளிர் புனற்பாய்தல் : புறநா. 352 - 6.

14. "அருஅ யாண ரகன்றலைப் பேரூர்" (பொருந. 1).

15. புறநா. 98 : 20. (சுரு)

(சுச) நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
விசும்பா டெருவை பசுந்தடி தடுப்பப்
5 பகைப்புல மரீஇய தகைப்பெருஞ் சிறப்பிற்
குடுமிக் கோமாற் கண்டு
நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே.

(பி - ம்.) 4 'விசும்போ டெருவை'

திணை - பாடாண்டிணை; துறை - விறலியாற்றுப்படை.

* பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை † நெடும்பல்லியத்தனார் பாடியது.

(இ - ள்.) நல்ல யாழையும் சிறு பறையையும் ஒருதலை மாக்கிணை யுடனே கட்டிப் போவே மல்லேமோ? சொல்லுவாயாக, சில வளையை யுடைய விறலி! யானை யணி பொருத இடமகன்ற பாசறைக்கண் ஆகாயத்தின்கண்ணே பறக்கும் எருவையைப் பசிய ஊன்றடி தகைப்ப மாற்றார் தேயத்தின்கண்ணே மருவிய அழகிய பெரிய செல்வத்தினையுடைய முதுகுடுமியாகிய கோமானைக் கண்டு மிக்க நீரான் அடப்பட்ட புற்கையைக் கைவிட்டு வருவதற்கு—எ - று.

எருவை - தலை வெளுத்து உடல் சிவந்திருக்கும் பருந்து; ‡ கழு கெனினும் அமையும்.

விறலி! குடுமிக் கோமாற் கண்டு புற்கையை நீத்தனம் வரற்குச் செல்லாமோ வெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

தகைப்பருஞ் சிறப்பி னென்பதூஉம் பாடம்.

---

* பாட்டுடைத்தலைவன் பெயரின் ஒரு பகுதி 6-ஆம் அடியில் வந்துள்ளது.

† இவரது பெயர்க்காரணத்தை முதலடி அறிவிக்கின்றது.

‡ தக்க. 562, உரை.

(கு - ரை.) 1. புறநா. 152 : 14 - 8; "குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி, நுண்ணீ ராகுளி யிரட்ட" (மதுரைக். 605 - 6).

2. "செல்லா யோதில் சில்வளை விறலி", "செல்லா மோதில் சில்வளை விறலி" (பதிற். 40 - 21, 57 - 6).

சில்வளை விறலி : புறநா. 60 : 5, குறிப்புரை.

1 - 2. புறநா. 103 : 1; மலைபடு. 1 - 13; பதிற். 41 : 1 - 5.

5. நிரைபுநிரை ஆசிரியத்துள் வந்ததற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 14, ந.

4. "கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல், இருங்க ணெருமையி னிரைதடுக் குநவும்" (பதிற். 13 : 3 - 4) என்பதும், 'நெய்தலானது அக் கரும்பு முதலாய மற்றோரிரையின் பாங்கரிற் செல்லாது தன்னையே நின்று தின்னும்படி தான் போதவுண்ட எருமை நிரையைத் தடுக்கு மிடங்களும்' என்னும் அதன் உரையும், "செலல்விலங்குதேன்" (தக்க. 360) என்பதும் இவ்வடியின் பொருளோடு ஒப்பு நோக்கற் குரியன.

7. புற்கை - புல்லரிசிக்கூழ்; அது நீர்வடிவமாகவே இருப்பதாத லின், 'நெடுநீர்ப் புற்கை' என்றார். புறநா. 84 : 1; "தெண்ணீ ரடு புற்கை" (குறள், 1065).

மு. பரிசில் பெறப் போகல் வேண்டுமென்னும் குறிப்பிற்கு மேற் கோள்; தொல். புறத்திணை. சூ. 30, இளம்.; 36, ந.

விறலி, செல்லாமோ வென்றமையின், இது விறலியாற்றுப்படை யாயிற்று. (௬௪)

(௬௫) மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப
இருங்கட் குழிசிகவிழ்ந் திழுது மறப்பச்
சுரும்பார் தேறல் சுற்ற மறப்ப
உழவ ரோதை மறப்ப விழவும்
அகலு ளாங்கட் சீறூர் மறப்ப
உவவுத்தலை வந்த பெருநா ளமயத்
திருசுடர் தம்மு ளோக்கி யொருசுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்
தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தன னீங்கு
நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே.

திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

சேரமான் பெருஞ்சேரலாதன் (பி - ம். பெருந்தோளாதன்) சோழன் கரிகாற் பெருவளத்தானோடு பொருது புறப்புண்ணாணி வடக்கிருந்தானைக் கழாத்தலையார் பாடியது.

(இ - ள்.) முழா மார்ச்சனை யிடுதலொழிய, யாழ் பண்ணை யொழிய, பெரிய இடத்தையுடைய பானை பாலின்மையிற் கவிழ்ந்து நெய் கடைதலை யொழிய, தம்முடைய கிளை வண்டார்ந்த மதுவை உண்ணு தொழிய, உழுவார் தொழில் செய்யும் ஓசையை யொழிய, அகன்ற தெருவினையுடைய சீறூர் விழாவினை யொழிய, உவா வந்து கூடிய பெரிய நாளாகிய பொழுதின்கண் ஞாயிறும் திங்களுமாகிய இரு சுடரும் தம்முள் எதிர்நின்று பார்த்து அவற்றுள் ஒரு சுடர் புல்லிய மாலைப் பொழுதின்கண் மலையுள்ளே யொளித்தாற்போலத் தன்னை யொக்கும் வேந்தன் முன்னாகக் கருதி யெறிந்த புறத்துற்ற புண்ணுக்கு நாணி மறக் கூறுபாட்டையுடைய வேந்தன் வாளோடு வடக்கிருந் தான்; ஆதலால், இவ்விடத்து யாம் அவனையன்றித் தனித்து உயிர் வாழும் ஞாயிற்றையுடைய பகல் எமக்கு இனி முன்பு கழிந்த நாள் போலக் கழியா—எ - று.

'மண்முழா மறப்ப' என்பது முதலாகிய செயவெனெச்சங்க ளெல்லாம் வாள்வடக் கிருந்தன னென்னும் வினையோடு முடிந்தன.

எறிந்த புண் - எறிதல் ஏதுவாக உற்ற புண்.

'முன்புகுறித் தெறிந்த புறப்புண் ணாணி' என்றது, *மார்பில் தைத்துருவின புண்ணும் புறப்புண்ணாதலை யொக்கு மென நாணி யென்றதாகக் கொள்க.

(கு - ரை.) 1. புறநா. 152 : 14.

2. குழிசி - இங்கே தயிர் கடையும் தாழி. இழுது - நெய்.

8. புன்கண்மாலை : குறுந். 46 : 6. மலைமறைதல் : "மலைமறைந் தொளித்தி" (புறநா. 8 : 8). சுடர் மலையில் மறைந்ததாகக் கூறுவது கவி மரபு.

9 - 11. புறநா. 66: 8; மேலுலகத்தை அடைய விரும்பினோர் இவ்வுலக நுகர்ச்சியைத் துறந்து விரதத்தால் உடலை மெலிவித்து யோகப் பயிற்சியால் உயிரை நீத்தற்குத் தாம் உறைந்த இடத்தை விட்டுப் புண்ணிய திசையாகிய வடதிசையிற் சென்று தங்குதலும், மீளாமல் நியமத்துடன் வடதிசையிற் செல்லுதலும் மரபு; அங்ஙனம் செல்லுதல் உத்தரகமன மென்றும், மகாப்பிரத்தான மென்றும் கூறப் படும் (புறநா. 214, 216, 218; சிறுபஞ்ச. 73); கருத்து : "கரிகால்

* இராவணனது மார்பில் திக்கயங்களின் கோடுகள் பாய்ந்து உருவின அடையாளத்தை இராமன் புறப்புண்ணென்று நாணிய செய்தி இங்கே நினைவுக்கு வருகிறது; கம்ப. இராவணன்வதை. 207-ஆம் செய்யுள் முதலியவற்றைப் பார்க்க.

வளவனொடு வெண்ணிப் பறந்தலைப், பொருதுபுண் ணாணிய சேர லாத, னழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென, இன்னா வின்னுரை கேட்ட சான்றோர், அரும்பெற லுலகத் தவனொடு செலீஇயர், பெரும்பிறி தாகியாங்கு" (அகநா. 55) ; "நிறக்கவல் விரும்பைச் செம்பொனும் வண்ண நிகழ்த்திய விரதமே நிகர்ப்பப், பிறக்கமும் வனமு மொழித்தவ ணமைத்த பெரும்பதிக் குவமையும் பெருமல், மறக்கடுங் களிற்றுக் குபேரன்வா ழளகை வடக்கிருந்தது" (வில்லி. பா. இந்திரப். 25); "வாணன்றென் மாறையில்வாழ், நின்றோகை கற்பி னிலைமையெண் ணாதெதிர் நின்றுவென்னிட், டன்றோ வடக்கிருந் தாண்மடப் பாவை யருந்ததியே" (தஞ்சை. 374); போரில் தோல்வி யுற்றோர் வடபாற் சென்றிருத்தல் மரபென்றுங் கூறுவர். (கூரு)

(கூகூ) நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் னாற்ற றோன்ற
வென்றோய் நின்னினு நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே.

(பி - ம்.) 6 'வெண்ணிற் பறந்தலை'

திணை - வாகை; துறை - அரசவாகை.

* சோழன் கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக் (பி - ம். வெண்ணிற்) குயத்தியார் பாடியது.

(இ - ள்.) நீர் செறிந்த பெரிய கடலின்கண்ணே மரக்கலத்தை யோட்டிப் போர் செய்தற்குக் † காற்றின்றி நாவாய் ஓடாதாக ஆண்டு வளிச் செல்வனை அழைத்து ஏவல் கொண்ட வலியோன் மரபி னுள்ளானே! மதம் பொருந்திய யானையையுடைய கரிகால் வளவ! மேற்சென்று போரை எதிர்நின்று கொன்ற நினது வலி தோற்ற வென்றவனே! நின்னினும் நல்ல னல்லவே? தழைத்தலைக் கொண்ட புது வருவாயையுடைய வெண்ணி யென்னும் ஊர்ப்புறத்துப் போர்க் களத்தின்கண் மிகப் புகழை உலகத்துப் பொருந்திப் புறப்புண்ணிற்கு நாணி வடக்கிருந்தோன், அவ்வாறிருத்தலான்—எ - று.

புகழெய்தி யென்றது புறப்புண்ணிற்கு நாணுதல்தன்னை.

ஓட்டி யென்பதனை ஓட்ட வெனத் திரிக்க.

எய்தி : எய்த எனத் திரிப்பினும் அமையும்; எய்த என்று பாட மோதுவாரும் உளர்.

---

* பாட்டுடைத்தலைவன் பெயர் 3-ஆம் அடியில் வந்துள்ளது.

† "வாயுவினை நோக்கியுள மாண்டவினை நாவாய்" (குண்டலகேசி).

உரவோன் மருக! கரிகால் வளவ! வென்றோய்! வெண்ணிப் பறந்தலைப்பட்ட புறப்புண்ணுணி உலகத்துப் புகழ் மிகவெய்தி வடக்கிருந்தோன், நின்னினும் நல்லனன்றே யெனக் கூட்டுக.

இது கரிகால் வளவன் வென்றி கூறியதாகலின் அரசவாகை யாயிற்று.

(கு - ரை.) 1. "நளியிரு முந்நீர்" (புறநா. 35 : 1; மணி. 12 : 92).

1 - 2. முற்காலத்திற் சோழனொருவன் கடலிற் காற்றை ஏவல் கொண்டமை, "வாத ராசனை வலிந்துபணி கொண்டவவனும்" (கலிங்கத். இராச. 16) என்பதனாலும் விளங்குகின்றது.

4. புறநா. 242 : 4.

3 - 8. வெண்ணி : சோழநாட்டில் நீடாமங்கலத்திற்கு மேற்கேயுள்ள ஓர் ஊர். அது தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. கோயில் வெண்ணி (கோவிலுண்ணி) என இக்காலத்து வழங்கும். அவ்வூரையும் அதனைச் சூழ்ந்துள்ள இடங்களையும் பார்க்கையில், அந்த இடம் பண்டைக் காலத்தில் மிகப் பெரிய நகராக இருந்திருக்க வேண்டுமென்று தோற்றுகின்றது; அகநா. 55 : 10 - 15; "காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால், ஆர்கலி நறவின் வெண்ணி வாயிற், சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்......வேந்தர் சாய, மொய்வலி யறுத்த ஞான்றை" (அகநா. 246 : 8 - 13) ; "இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை, அரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும், ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த, இருபெரு வேந்தரு மொருகளத் தவிய, வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட், கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்" (பொருந. 143 - 8). (கூகூ)

(கூஎ) அன்னச் சேவ லன்னச் சேவல்
ஆடுகொள் வென்றி யடுபோ ரண்ணல்
நாடுதலை யளிக்கு மொண்முகம் போலக்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கும்
மையன் மாலையாங் கையறு பினையக்
குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயி னிடையது
சோழநன் னாட்டுப் படினே கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க விரும்பிசிர்
ஆந்தை யடியுறை யெனினே மாண்டநின்
இன்புறு பேடை யணியத்தன்
நன்புறு நன்கல நல்குவ னினக்கே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

*** கோப்பெருஞ்சோழனைப் பிசிராந்தையார் (பி - ம். இரும் பிசிராந்தையார்) பாடியது.**

(இ - ள்.) அன்னச் சேவலே! அன்னச் சேவலே! கொல்லுதலைப் பொருந்திய வென்றியையுடைய அடுபோ ரண்ணல் தன்னுட்டைத் தலையளி செய்யும் விளங்கிய முகம் போல இரண்டு பங்கும் வந்து பொருந்திய மதியம் அரும்பு நிலா விளங்கும் தமியோராயினுர்க்கு மயக் கத்தைச் செய்யும் மாலைப் பொழுதின்கண் யாம் செயலற்று வருந்தக் குமரியாற்றினது பெரிய துறைக்கண்ணே அயிரையை மேய்ந்து வட திசைக்கண் இமயமலைக்கண்ணே போகின்ருயாயின், இவ்விரண் டிற்கும் இடையதாகிய நல்ல சோழநாட்டின்கட் சென்று பொருந்தின், உறையூரின்கண் உயர்ந்த நிலையையுடைய மாடத்தின்கண்ணே நினது குறும்பறையோடு தங்கி வாயில்காவலர்க்கு உணர்த்தி விடாதே தடையின்றிக் கோயிற்கண்ணே புக்கு எம்முடைய பெருங் கோவாகிய கிள்ளி கேட்பப் பெரிய பிசிரென்னும் ஊரின்கண் ஆந்தை யுடைய அடிக்கீழென்று சொல்லின், மாட்சிமையையுடைய நினது இன்புறும் பேடை பூணத் தனது விருப்பமுறும் நல்ல அணிகலத்தை அளிப்பன், நினக்கு—எ - று.

'ஆடுகொள் வென்றி' என்பதற்கு வென்றியுள் மிக்க வென்றி யெனினும் அமையும்.

குறும்பறை யென்றது பேடையை.

வாயில்விடா தென்றதற்கு வாயில்காவலர் விடவேண்டா தெனி னும் அமையும்.

முகிழ்நிலா வென்பது ஒருசொன்னடைத்தாய் மதியம் முகிழ் நிலா விளங்கு மென முதல்வினை கொண்டது; மதியம் முகிழ்க்கும் நிலா வெனினும் அமையும்.

ஆந்தை யடியுறை யென்பதற்கு ஆந்தை நின் அடிக்கண் உறைவா னென்றுரைப்பாரும் உளர்.

பேடை யணிய நன்கலம் நல்குவ னென்பதனுற் பயன் : மறவாது போதல் வேண்டு மென்னும் நினைவாயிற்று.

(கு - ரை.) 1. தொல். கிளவி. சூ. 52, தெய்வச். மேற். 'அன்னச் சேவ லன்னச் சேவ லென்னும் பாட்டினுள் இரும்பிசிராந்தை யடியுறை யெனி னென்பது......குறிப்புமொழி' (தொல். எச்ச. சூ. 25, தெய்வச்.).

2. ஆடு - அடுதல், கொல்லுதல். இது முதனிலை விகாரமுற்ற தொழிற்பெயர்.

---

* 11 - 2-ஆம் அடிகளில் தலைவன் பெயரும் புலவர் பெயரும் அமைந்திருக்கின்றன.

4. மதியக்கோடு : "இருகோட் டொருமதி யெழில்பெற மிலைத் தனை" (நக்கீரர் திருவெழுகூற்றிருக்கை)

5. மையல்மாலை - பிரிந்தவர்களுக்கு மயக்கத்தைச் செய்யும் மாலைக் காலம். கை அறுபு இனைய - செயலற்று வருந்த.

6 - 7. குமரியும் வடமலையும் : புறநா. 6 : 1 - 2, 17 : 1; மதுரைக். 70 - 71. குமரி - கன்னியா குமரி யென்னும் ஆறு. அயிரை - ஒருவகை மீன்.

8. கோழி - உறையூர்; சிலப். 10 : 247 - 8. உறையூர் இராசதானி யாதலின் உயர்நிலை மாடம் கூறப்பட்டது.

9. குறும்பறை - குறுகிய இறகை உடைய பேடை; அன்மொழித் தொகை; புறநா. 69 : 12.

10. புறநா. 69 : 17.

11. பிசிர் - பாண்டி நாட்டிலுள்ளதோர் ஊர்; புறநா. 215 : 6 - 7.

12. அடியுறை - அடியில் வாழ்வேன்; புறநா. 198 : 26, உரை; "அடியுறை யருளாமை யொத்ததோ" (கலித். 54 : 4); "காவலற் குறுகி, அடியுறை யருண்மொழி யான்பணிந் துரைப்ப" (பெருங். 1. 47; 7 - 8).

11 - 4. கோப்பெருஞ் சோழனுக்கும் தமக்குமுள்ள நட்பின் மிகுதியை இவ்வடிகளாற் பிசிராந்தையார் புலப்படுத்தினர். நற்செய்தி கேட்டோர் சொன்னவர்களுக்குத் தாமணிந்த அணிகலம் நல்குதல் : "அணிகலம் பரிந்து நங்கை யணிமரு ளுருவந் தந்த, மணிமருண் முறுவற் செவ்வாய் மாதவ சேனைக் கீந்து" (சூளா. கல்யாண. 182); "ஆயபே ரன்பெனு மளக்க ரார்த்தெழத், தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத், தூயவ ளுவகைபோய் மிகச்சு டர்க்கெலாம், நாயக மனையதோர் மாலை நல்கினாள்" (கம்ப. மந்தரை. 52).

'புணர்ச்சி, ஒரு தேயத்தாராதல்; பழகுதல், பலகாற் கண்டும் சொல்லாடியும் மருவுதல்; இவ்விரண்டுமின்றிக் கோப்பெருஞ்சோழ னுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சியொப்பின் அதுவே உடனுயிர் நீக்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்குமென்பதாம்' (குறள், 785, பரிமேல்.); 'கோப்பெருஞ்சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தாரென்று கூறும் புறச் செய்யுட்கள் உதாரணம்' என்னும் நச்சினார்க்கினியர் வாக்கியம் ஈண்டறியத் தக்கது; தொல். கற்பியல், சூ. 52.

மு. "நாராய் நாராய்" என்னும் சத்திமுற்றப்புலவர் பாடல் இங்கே ஞாபகத்திற்கு வருகின்றது. (௬௭)

(௬௮) உடும்புரித் தன்ன வென்பெழு மருங்கிற்
கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது
சில்செவித் தாகிய கேள்வி நொந்துநொந்
தீங்கெவன் செய்தியோ பாண பூண்சுமந்

தம்பகட் டெழிலிய செம்பொறி யாகத்து
மென்மையின் மகளிர்க்கு வணங்கி வன்மையின்
ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை
புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்
சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர்
மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன்
உட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக்
கேவா னாகலிற் சாவேம் யாமென
நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்பத்
தணிபறை யறையு மணிகொ டேர்வழிக்
கடுங்கட் பருகுநர் நடுங்குகை யுகுத்த
நறுஞ்சே றாடிய வறுந்தலை யானை
நெடுநகர் வரைப்பிற் படுமுழா வோர்க்கும்
உறந்தை யோனே குருசில்
பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே.

திணை - அது; துறை - பாணாற்றுப்படை.

சோழன் நலங்கிள்ளியைக் கோவூர் கிழார் பாடியது.

(இ - ள்.) உடும்புரித்தாற்போன்ற எலும்பெழுந்த விலாப்புடையை யுடைய சுற்றத்து மிக்க பசியைத் தீர்ப்பாரைக் காணாதே கேட்டார் பலரும் அறிதற் கரிதாய் அறிவார் சிலராதலின் சில்செவிக்கண்ண தாகிய யாழை இப் பாண் சாதியது உணவிற்கு முதலாகப் பெற்ற பரிசு என்னென்று வெறுத்து இங்கே என் செய்கின்றாயோ பாண! பூணைத் தாங்கி அழகிய பெருமையையுடைய எழில் பெற்ற செம்பொறி பொருந்திய மார்பினையுடைய மென்மையான் மகளிர்க்குத் தாழ்ந்து வன்மையான் வீரரை அகப்படுக்கும் பெருமை பொருந்திய நெடுந் தகை, ஈன்றணிமை பொருந்தி அது தீர்ந்த குழவிக்குச் சுரக்கும் முலைபோல, நீர் மிக்க காவிரியினது கரை மரத்தைச் சாய்க்கும் மிக்க வெள்ளம் உலகத்து உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கும் நல்ல சோழ நாட்டையுடைய வேந்தன், உட்பகை ஒரு கூற்றிலே பட்டதென்னும் படி எம்மைப் புட்செய்யும் பகையிடத்து ஏவானாகலான் யாம் எம்மிற் பொருது மடியக்கடவேமென்று நீங்காத மறத்தை யுடையோர் தம்முடைய பூரித்த தோள்களைத் தட்ட அவருடைய மேற்கோள் தணிதற்குக் காரணமாகிய பறை யறையும் அழகு பொருந்திய தேர் வழிக்கண் வெய்ய கள்ளைப் பருகுவார் தம் நடுங்கு கையான் உகுக்கப் பட்ட நறிய அச் சேற்றின்கண் ஆடிய பாக ரேறாத யானை நெடிய நக ரிடத்து ஒலிக்கும் பறையினது ஓசையைச் செவிதாழ்த்துக் கேட்கும் உறையூரிடத்தான்; அவ் விறைவன், நீ பிறன் வாயிலை நினையாமை நினக்கு அளிப்பன், அவன்பாற் செல்வையாயின்—எ - று.

செம்பொறி யென்றது, "வரையகன் மார்பிடை வரையு மூன்றுள" (சீவக. 1462) என்னும் இலக்கணத்தை; * திருமக ளெனினும் அமையும்.

உறந்தையோ னென்பது, வினைக்குறிப்புமுற்று.

பூண்சுமந் தெழிலிய அம்பகட் டாகத்து நெடுந்தகை யென இயையும்.

பாண! நீ செலின், நெடுந்தகை, பொருநன், குருசில், உறந்தை யோன்; அவன் பிறன் கடை மறப்ப நல்குவன்; நீ ஈங்கு எவன் செய்தியோ வெனக் கூட்டுக.

'உட்பகை யொருதிறம் பட்டென' என்பதற்கு உள்ள பகை சந்தாகிய ஒரு கூற்றிலே பட்டதாக என்று உரைப்பினும் அமையும்.

பகட்டினுடைய தோற்றம் பொலிவுபெற என்பாரும் உளர்.

'புட்பகை யேவானாகலின்' என்றேதி, உள்ள பகை தம்மிற் கூடிற் றுக, புள் நிமித்தத்திற்குப் பகைவன் ஏவானாகலிற் சாவேம் யாமென மறவர் தோள் புடைப்பவென்று உரைப்பாரும் உளர். † புட்பகை யென்று இவனுக்கு ஒரு பெயர்.

(கு - ரை.) 1 - 2. உரித்த உடும்பு என்பிற்கு உவமம். கடும்பு - சுற்றம். இவ்வடிகள் வறுமையின் மிகுதியைப் புலப்படுத்துகின்றன. புல்லென் யாக்கை என்பர்.

3. "சில்செவித் தாகிய புணர்ச்சி" (அகநா. 90 : 4).

"புலவுவாய்ப் பாண" (பெரும்பாண். 22) என்பதற்கு, 'கற்ற கல்வியை வெறுத்துக் கூறுகின்ற வாயினையுடைய பாணனே' என்று பொருள் கூறி இவ்வடியையே மேற்கோளாகக் காட்டினர் நச்சினார்க் கினியர்.

5. மார்பில் மூன்று வரிகள் கிடத்தல் ஆடவர்க்கு உத்தம இலக்கணம்; புறநா. 161 : 27; "மார்பிற் செம்பொறி வாங்கிய மொய்ம்பு" (முருகு. 104 - 5); "பொறிகுலாய்க் கிடந்த மார்பிற் புண்ணியன்" (சீவக. 1706); "செவ்வரை யாகத்தான்" (சீகாளத்தி. நக்கீர. 31).

6 - 7. புறநா. 10 : 9 - 10, குறிப்புரை.

8. 'புனிறு' என்னும் உரிச்சொல் ஈன்றணிமையாகிய குறிப்புப் பொருளை உணர்த்தியதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 77, ந.

---

* புறநா. 7 : 5; "திருமறு மார்பநீ யருளல் வேண்டும்", "பொன் னிற் றேன்றிய புனைமறு மார்ப" (பரி. 1 : 36, 4 : 58); "இருநிலங் கடந்த திருமறு மார்பின், முந்நீர் வண்ணன்" (பெரும்பாண். 29 - 30); "குருந்த மொசித்தஞான் றுண்டா லதனைக், கரந்த படியெமக்குக் காட்டாய்—மரம்பெரு, போரிற் குருகுறங்கும் பூம்புன னீர்நாட, மார்பிற் கிடந்த மறு" (தொல் புறத்திணை. சூ. 5, ந. மேற்.).

† பு. வெ. 33.

8 - 9. கலித். 99 : 4 - 5; "மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத், துணைச்சுரக்குந் தாய்முலை யொண்பால்" (திருவள். 31); "சரயு வென்பது தாய்முலை யன்னதிவ், வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்" (கம்ப. ஆற்று. 12); "பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல், மள்ளர் வேனிலின் மணற்றிடர் பிசைந்துகை வருட, வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப், பள்ள நீள்வயற் பருமடை யுடைப்பது பாலி" (பெரிய. திருக்குறிப்பு. 22).

11 - 2. புட்பகை - புள்ளின் தீய நிமித்தம்; அது மயில் வலமாதல், காகம் இடமாதல் முதலியன. "நாளும் புள்ளுங் கேளா ஆக்கமொ, டெங்கோ னேயின னுதலின்" (தொல். புறத்திணை. சூ. 3, ந. மேற்.).

11 - 3. "ஏகும்மள வையின்வந்தன வலமும்மயி லிடமும், காகம் முத லியமுந்திய தடைசெய்வன கண்டா, னுகம்மன னிடையிங்குள திடையூறென நடவான், மாகம்மணி யணிதேரொடு நின்றானெறி வந்தான்" (கம்ப. பரசுராம. 5); புள்ளின் தீய நிமித்தத்தையும் மதித் திலரென மறவரின் வீரச்சிறப்புக் கூறினர்; "உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன், செறினுஞ்சீர் குன்ற லிலர்" (778) என்னும் குறளும், "போர்பெற்று அறியாமையின், அதுபெற்றால் அரசன்தடுப்பினும் நில்லா ரென்பதாம்; பிறரும் 'புட்பகைக், கேவா னாகலிற் சாவேம்யாமென, நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப' என்றுங் கூறினர்" என்று வந்துள்ள பரிமேலழகர் வாக்கியங்களும் ஈண்டறியத் தக்கன.

16. "கீழு மேலுங் காப்போர் நீத்த, வறுந்தலைப் பெருங்களிறு" (நற். 182 : 8 - 9).

17. ஓர்க்கும் : "நென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும்" (புறநா. 280 : 6); கலித். 46 : 13; அகநா. 88 : 3.

16 - 7. "நாறுமயிர் மடப்பிடி தழீஇ வேறுநாட்டு, விழவுப்படர் மள்ளரின் முழவெடுத் துயரிக், களிறதர்ப் படுத்த" (அகநா. 189 : 4 - 6).

19. புறநா. 22 : 31 - 3, குறிப்புரை.

223-ஆம் திருக்குறளில், 'இலனென்னும் எவ்வ முரையாமை யீதல்' என்னும் பகுதிக்குரிய விசேடவுரைகளுள்,'யான் இலனென்னும் இளி வரவைப் பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவன் உரையா வகை யாற் கொடுத்தல்' என்னும் பகுதி, இவ்வடியின் பொருளைப் பின்பற்றி யது. பொறி, இரேகை, வரை, வரி என்பன ஒருபொருட்சொற்கள். "செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம், பெருமான் முகம் பார்த்த பின்னர்—ஒருநாளும், பூதலத்தோர் தம்மைப் பொருணசை யாற் பாராவாம், காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்" என்னும் பழைய பாடல் இவ்வடியின் பொருளை நன்கு விளக்குகின்றது. பாண, செலின், நல்குவனெனப் பாணனை ஆற்றுப்படுத்தியதாகக் கூறினமை யின், இச் செய்யுள் பாணாற்றுப்படை யாயிற்று. (கூஅ)

(௬௯) கையது கடனிறை யாழே மெய்யது
புரவல ரின்மையிற் பசியே யரையது
வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்
ஓம்பி யுடுத்த வுயவற் பாண
பூட்கை யில்லோன் யாக்கை போலப்
பெரும்புல் லென்ற விரும்பே ரொக்கலை
வையக முழுதுடன் வளைஇப் பையென
என்னை வினவுதி யாயின் மன்னர்
அடுகளி றுயவுங் கொடிகொள் பாசறைக்
குருதிப் பரப்பிற் கோட்டுமா தொலைச்சிப்
புலாக்களஞ் செய்த கலாஅத் தானையன்
பிறங்குநிலை மாடத் துறந்தை யோனே
பொருநர்க் கோக்கிய வேல னொருநிலைப்
பகைப்புலம் படர்தலு முரியன் றகைத்தார்
ஒள்ளெரி புரையு முருகெழு பசும்பூட்
கிள்ளி வளவற் படர்குவை யாயின்
நெடுங்கடை நிற்றலு மிலையே கடும்பகற்
றேர்வீ சிருக்கை யார நோக்கி
நீயவற் கண்ட பின்றைப் பூவின்
ஆடும்வண் டிமிராத் தாமரை
சூடா யாத லதனினு மிலையே.

(பி - ம்.) 3 'வெயர்நனை' 5 'பூண்டகை' 6 'ரொக்கலொடு' 13 'கேற்றியவில்ல'

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர் கிழார் பாடியது.

(இ - ள்.) நின் கையகத்தது, இலக்கண முறைமை நிரம்பிய யாழ்; உடம்பின் கண்ணது, * ஈத்தளிப்போ ரில்லாமையாற் பசி; அரைய தாகிய வேற்றிழை ஊடுபோன வேர்ப்பால் நனைந்த சீரையை † அற்றம் மறைத்து உடுத்த வருத்தத்தையுடைய பாண! மடியால் மேற்கோ ளில்லாதவன் உடம்பை யொப்பப் பெரிதாகப் புற்கென்ற மிகப் பெரிய சுற்றத்தை'யுடையையாய் உலக மெல்லாவற்றையுஞ் சூழ்வந்து பின்னை

* "இன்சொலா லீத்தளிக்க வல்லாற்கு" (குறள், 387).

† "அற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகில்" (மணி. 3 : 139).

என்னை, மெல்ல வறுமை தீர்ப்பார் யாரெனக் கேட்கின்றாயாயின், கேளாய்; வேந்தரது கொல்யானைபுண்பட்டு வருந்தும் கொடி யெடுக்கப் பட்ட பாடி வீட்டின்கட் குருதிப்பரப்பின்கண்ணே யானையைக் கொன்று புலாலையுடைய போர்க்களத்தை யுண்டாக்கிய போர்செய்யும் படையை யுடையவன், உயர்ந்த நிலையை யுடைத்தாகிய மாடத்தையுடைய உறையூரிடத் திருந்தான்; அவன் பொருவோர் பொருட்டு எடுக்கப் பட்ட வேலையுடையனாய் ஒரு பெற்றியே பகைவர் நாட்டின்கட் போதலும் உரியன்; சுற்றப்பட்ட மாலையையும் ஒள்ளிய எரியை யொக்கும் நிறம்பொருந்திய பசும்பொன்னாற் செய்யப்பட்ட பூணினையும் உடைய கிள்ளிவளவனிடத்தே செல்குவையாயின் அவனது நெடிய வாயிலின்கட் காலம் பார்த்து நிற்றலும் உடையை யல்லை; விளங்கிய பகற்பொழுதின்கண் அவன் பரிசிலர்க்குத் தேர் வழங்கியிருக்கும் இருப்பை நின் கண்ணாரப் பார்த்து நீ அவனைக் கண்டபின்பு பூவின் கண் ஆடும் வண்டு ஊதாத பொற்றாமரைப்பூவைச் சூடாயாதல் அந் நெடுங்கடை நிற்றலினும் உடையை அல்லை; அதனால், ஆண்டுச் செல்வாயாக—எ - று.

தகை தார் தகைத்தா ரென நின்றது; மேம்பட்ட தாருமாம்.

பாண! ஒக்கலையாய் வலாஇ வினவுதியாயின், தானையை யுடையவன், உறந்தையோன்; அவன்பாற் படர்குவையாயின், நின் கையது யாழாதலானும், மெய்யது பசியாதலானும், நெடுங்கடை நிற்றலுமிலை; நீ அவற் கண்ட பின்றைத் தாமரை சூடாயாதல் அதனினு மிலையென மாறிக் கூட்டுக.

பூவாகிய தாமரையெனினும் அமையும்; அதற்கு இன் அல்வழிச் சாரியை.

'புகழ்த்தகையில்லோன்' (5) என்பதூஉம் பாடம்.

*ஒரு நாளுள் முதலன பத்து நாழிகையும் அறத்தின்வழி யொழுகிப் பின் பத்து நாழிகையும் இறையின் முறைமை கேட்டுச் செய்த பொருளைப் பரிசிலர்க்குக் கொடுத்து மகிழ்ந்திருத்தலால் கடும்பகற் றேர் வீசிருக்கை யென்றார்.

---

* 'தலைமகனால் தலைநின்று ஒழுகப்படுவன தருமார்த்த காமமென்பன; அம் மூன்றினையும் ஒரு பகலை மூன்று கூறிட்டு முதற்கட் பத்து நாழிகையும் அறத்தொடு பட்டுச் செல்லும்; இடையன பத்து நாழிகையும் அருத்தத்தொடு பட்டுச் செல்லும்; கடையன பத்து நாழிகையும் காமத்தொடு பட்டுச் செல்லும்; ஆதலால் தலைமகன் நாழிகையளந்து கொண்டு தருமத்தொடு படுவான், தலைமகளும் வேண்டவே தானும் வேண்டப் போந்து அத்தாணி புகுந்து அறங் கேட்பதும் அறத்தொடு பட்டுச் செல்வதும் செய்யும்; நாழிகை யளந்து இடையன பத்து நாழிகையும் இறையும் முறையும் கேட்டு அருத்தத்தினொடு பட்டு வாழ்வானும்' (இறை. சூ. 40, உரை).

(கு - ரை.) 3. "வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த, துன்னற் சிதாஅர்" (பொருந. 80 - 81). சிதார் - கந்தை.

4. உயவல் : மணி. 3 : 90.

5. மேற்கோ ளில்லாதவனுடைய உடம்பு வாடியிருக்கும் என்றபடி.

6. ஒக்கலை - சுற்றங்களை உடையாய்.

11. "செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்" (மணி. 1 : 63). கலாஅம் - போர்.

12. புறநா. 67 : 8 - 9; பட்டினப். 285.

உறையூ ரென்பதனை உறந்தையென முன்னோர் திரித்து வழங்கியதற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 80, பேர்.; ந.

13. "திருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய, வேலினும் வெய்ய" (பட்டினப். 299 - 300). ஓக்கிய - எடுத்த.

16. கிள்ளிவளவன் : பாட்டுடைத் தலைவன் பெயர்.

17. கடும்பகல் - பத்து நாழிகை முதல் இருபது நாழிகை இறுதியாக உள்ள காலம்.

18. "நயந்தோர்க்குத், தேரீயும் வண்கை யவன்" (கலித். 42); தேர் வீசுதல் : மதுரைக். 752.

20. "ஆடுவண் டிமிரா வழலவிர் தாமரை" (பெரும்பாண். 481).

16 - 21. புறநா. 10 : 11 - 7, குறிப்புரை.

20 - 21. பொற்றாமரைப்பூவைப் பெறுவாய். "உயவற் பாண, கிள்ளி வளவன்பாற் செல்வா யாயின், செல்வ மெய்துவை" எனக் கூறினமையால், இதுவும் பாணாற்றுப்படை யாயிற்று. (௬௯)

(௭௦) தேஎந் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண
கயத்துவாழ் யாமை காழ்கோத் தன்ன
நுண்கோற் றகைத்த தெண்கண் மாக்கிணை
இனிய காண்கிவட் டணிகெனக் கூறி
வினவ லானா முதுவா யிரவல
தைஇத் திங்கட் டண்கயம் போலக்
கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்
அடுதீ யல்லது சுடுதீ யறியா
திருமருந்து விளைக்கு நன்னாட்டுப் பொருநன்
கிள்ளி வளவ னல்லிசை யுள்ளி
நாற்ற நாட்டத் தறுகாற் பறவை
சிறுவெள் ளாம்பன் ஞாங்க ரூதும்
கைவள் ளீகைப் பண்ணன் சிறுகுடிப்
பாதிரி கமழு மோதி யொண்ணுதல்
இன்னகை விறலியொடு மென்மெல வியலிச்

செல்வை யாயிற் செல்வை யாகுவை
விறகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்
தலைப்பா டன்றவ னீகை
நினைக்க வேண்டா வாழ்கவன் றாளே.

(பி - ம்.) 13 'பாணன்'

திணையும் துறையும் அவை.

அவனைக் கோவூர் கிழார் (பி - ம். கோவூரழகியார்) பாடியது.

(இ - ள்.) தேன் போல இனிய நரப்புத் தொடை பொருந்திய சிறிய யாழையுடைய பாண! 'கயத்தின்கண் வாழும் யாமையை நாராசத்தின் கண்ணே கோத்தாற் போன்ற நுண்ணிய கோலாற் பிணிக்கப்பட்ட தெளிந்த கண்ணையுடைய பெரிய உடுக்கை யோசை இனிய காண்க; இவ்விடத்தே சிறிது ஆறிப் போவீராக' என்று சொல்லிப் பலவும் என்னை வினவுதலமையாத முதிய வாய்மையை யுடைய இரவலனே! யான் சொல்லுவதனைக் கேட்பாயாக; தைமாதத் தின்கட் குளிர்ந்த பொய்கையைப் போலக் கொள்ளக் கொள்ளத் தொலையாத சோற்றையுடைய அகன்ற நகரிடத்து அடுநெருப்பல்லது சுடுநெருப்பறியாது * சோற்றையும் தண்ணீரையும் விளைக்கும் நல்ல நாட்டுக்கு வேந்தன், கிள்ளி வளவனது நல்ல புகழை நினைத்து மணத்தை ஆராயும் ஆராய்ச்சியையுடைய வண்டு சிறிய வெளிய ஆம்பலின்மீதே ஊதும் கையான் வள்ளிய கொடையையுடைய பண்ண னது சிறு குடிக்கட் பாதிரி நாறும் மயிரினையும் ஒள்ளிய நுதலினையும் இனிய முறுவலையுமுடைய விறலியுடனே மெல்ல மெல்ல நடந்து செல்வை யாயின் செல்வத்தையுடையை யாவை; விறகைக் காட்டினின் றும் ஊரகத்துச் செலுத்தும் மாந்தர் அக் காட்டகத்து விழுப்பொருள் எடுத்துக்கொண்டாற் போல்வதொரு நேர்பாடன்று அவனது வண்மை; அது பெறுவேங்கொ லென்று கருத வேண்டா, அவனது தாள் வாழ்க— எ - று.

பாண! தணிக எனக் கூறி வினவலானு இரவல! விறலியொடு மென்மெலச் செல்குவையாயி னெனை இயையும்; வியனகர்ச் செல்வை யாயி னெனவும் அமையும். நகரையுடைய நாடென இயைப்பாரும் உளர்.

'விறகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர் தலைப்பாடன்று' என்பதற்கு விறகிற்குச் சென்றோர் பொன் பெற்றாற் போல்வதொரு தலைப்பாடதென்று பொருளுரைப்பாரும் உளர்; அது பொருந்துமேல் அறிந்துகொள்க.

(கு - ரை.) 1. தொடை - நரப்புத்தொடை; தந்தி. தேந்தீந் தொடை : பயனுவமம்; "தீந்தே, னணிபெற வொழுகி யன்ன வமிழ் துறழ் நரம்பி னல்யாழ்" (சீவக. 722).

---

* "தண்ணீருஞ் சோறு மளிப்பான் றிருப்பனந் தாட்பட்டனே" (தனிப்பாடல்).

2 - 3. புறநா. 249 : 3 - 4; "பகுவா யாமை, கம்பு ளியவ ஞக விசிபிணித், தெண்கட் கிணையிற் பிறழும்" (அகநா. 356 : 2 - 4); "ஆமை யகடுபோ லங்கட் டடாரி", "யாமை, யள்ளகட் டன்ன வரிக் கிணை" (பு. வெ. 186, 206).

5. புறநா. 89 : 4.

6. "தைஇத் திங்கட் டண்கயம் படியும்" (நற். 80 : 7); "பனிச் சுனைத் தெண்ணீர், தைஇத் திங்கட் டண்ணிய தரினும்" (குறுந். 196); "தைஇத் தண்கயம் போலப் பலர்படிந்து" (ஐங்குறு. 84).

7. "கொளக்கொளக் குறையாச் செல்வத்து" (பதிற். 82 : 12); "கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது...நாடு" (மதுரைக். 426 - 8).

செயவெனெச்சம் இருதொழிலும் நிகழ்காலமும் ஏற்று வந்ததற்கு மேற்கோள்; நன். மயிலை. சூ. 343; நன். வி. சூ. 344.

6 - 7. "கொளக்குறை படாஅக் கோடுவளர் குட்டத்து" (அகநா. 162).

8. புறநா. 20 : 7 - 9.

9. புறநா. 58 : 10; சோறு, மருந்தெனப்படுதலை, மணி. 11 : 48, 117 - ஆம் அடிகளாலும் அறிக; "சோழ வளநாடு சோறுடைத்து" (ஔவையார் பாடல்).

12. ஊதும் - நுகரும்; கலித். 66; அகநா. 132.

13. பண்ணன் சிறுகுடி : "தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன், பண்ணன் சிறுகுடி", "பண்ணன் சிறுகுடி வடாஅது, தீநீர்க் கான்யாறு", "கழற்காற் பண்ணன் காவிரி வடவயி, னிழற்கயம்" (அகநா. 54,117, 177).

14. "கானப் பாதிரிக் கருந்தகட் டொள்வீ, வேனி லதிரலொடு விரைஇக் காண்வரச், சில்லைங் கூந்தல்" (அகநா. 261 : 1 - 3).

15. "நன்மா மயிலின் மென்மெல வியலி" (மதுரைக். 608).

16. செல்வு - செல்வம்; "செல்வாய செல்வந் தருவாய் நீயே", "செல்வாய்த் திருவாளுய் நீயே" (தே.).

17. ஒய்தல் - செலுத்துதல்; புறநா. 116 : 8; நற். 74 : 4; பதிற். 73, 87.

19. தாள்வாழ்க வென்றல் மரபு; புறநா. 101 : 10, 103 : 12, 171 : 15; "நாதன்றாள் வாழ்க" (திருவாசகம்). (௭0)

(௭க) மடங்கலிற் சினைஇய மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை

ஆரம ரலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக
அறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசால்
அந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறரும்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ
மன்பதை காக்கு நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப் பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

(பி - ம்.) 6 'பிரிகு' 13 'னிழிச்சியும்' 17 'குடிப்புறந்த'

திணை - காஞ்சி; துறை - வஞ்சினக் காஞ்சி.

*** ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் (பி - ம். பூதபாண்டியன்) பாட்டு.**

(இ - ள்.) சிங்கம் போலச் சினந்து மீளாத மேற்கோள் பொருந்திய உள்ளத்தினையும் மிகைத்துச் செல்லும் படையையுமுடைய வேந்தர் தம்மில் ஒப்பக் கூடி வந்து என்னொடு பொருவேமென்று சொல்லுவர்; அவ் வேந்தரைப் பொறுத்தற்கரிய போரின்கண்ணே அலறப் பொருது தேருடனே அவர் உடைந்தோடும் புறக்கொடையைக் கண்டிலேனாயின், எனக்குச் சிறந்த பெரியவாய் முகத்தோடு பொருந்தின மையுண்ட கண்ணினையுடைய †இவளினும் நீங்குவேனாக; அறமானது நிலைகலங்காத அன்பினையுடைய அவைக்களத்து அறத்தின் திறப்பாடில்லாத ஒருவனை வைத்து முறை கலங்கிக் கொடுங்கோல் செய்தேனாகுக; மிக்க புகழையுடைய வையையாற் சூழப்பட்ட செல்வம் பொருந்திய ஊர்களிற் பொய்யாத புது வருவாயையுடைய மையலென்னும் ஊர்க்குத் தலைவனாகிய மாவனும், நிலைபெற்ற எயிலென்னும்

---

* சோழநாட்டிலுள்ள ஒலியமங்கலமென்னும் ஊர் இதுவென்று தெரிகிறது; திருமெய்யத்துக்குப் பக்கத்தில் இப் பெயரோடு ஊர் உள்ளது.

† தன் தேவியை இவளென்றது தன் கருத்துக்கண் அணிமையாக இருத்தலின்; புறநா. 72 : 2, உரையைப் பார்க்க.

ஊரையுடைய ஆந்தையும், புகழமைந்த அந்துவஞ்சாத்தனும் ஆதனழிசியும், வெய்ய சினத்தையுடைய இயக்கனு மென இவருட் படப் பிறரும் எனது கண்போலும் நண்பினையுடைய நட்டாரோடு கூடிய இனிய செருக்கையுடைய மகிழ்நகையைத் தப்பியவனாகிப் பல உயிரையும் பாதுகாக்கும் அரசர் குலத்திற் சிறந்த பாண்டி நாடு காக்கும் காவலின் நீங்கிப் பிறருடைய வன்புலங்களைக் காக்கும் காவற் கண்ணே இக் குடிப்பிறப்பின் நீங்கி யான் பிறப்பேனாகுக—எ - று.

'மெலிகோல் செய்தே னாகுக' என்பதனுள் ஆகுக வென்பது எங்கும் தந்துரைக்கப்பட்டது.

* ஒன்றோ வென்பது எண்ணின்கண் வருவதோர் இடைச்சொல்; அதனை முன்னும் பின்னுங் கூட்டுக.

(கு - ரை.) 1. மடங்கல் - சிங்கம்; கூற்றுமாம்; "மடங்கல்போற் சினைஇ" (கலித். 2).

2. புறநா. 68 : 11 - 3.

3 - 5. பொருதும் : தன்மைப்பன்மை வினை; புறநா. 72 : 7 - 9.

6. "மெல்லிய லரிவைநின் னல்லகம் புலம்ப, நிற்றுறந் தமைகு வெ னாயி னெற்றுறந், திரவலர் வாரா வைகல், பலவா குகயான் செல வுறு தகவே" (குறுந். 137); "கருந்தடங்கண் மங்கையரை நோக்குற்ற கண்ணும், பெருந்தடந் தோட்பிணித்த கையும் - பருந்தின், வளை வாயிற் பெய்யேனேல் வந்திரந்தார் துன்பம், களையாது மாற்றுகவென் கை" (வீர. பொருள். 17, மேற்.).

பேரமருண்கண் : நற். 29 : 9, 44 : 2; குறள், 1083.

4 - 6. இவளென்றது தன் தேவியை; அவள் கற்பிற் சிறந்தவள். இந் நூல் 246-ஆம் செய்யுளின் கருத்தில், 'பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாள் சொல்லியது' என்று இருத்தலின் அவள் கல்வியிற் சிறப்புற்றுச் செய்யுள் செய்யும் ஆற்றலையுடையளா யிருந்தாள் என்பதும் இவன் அவளிடத்தே மிக்க அன்புடையவனா யிருந்தது போலவே அவளும் இவனிடத்துப் பேரன்புடையவளா யிருந்து இல்லறத்தை இனிது நடத்தி இவன் இறந்தவுடன் தீப்பாய்ந்து தானும் இறந்தாள் என்பதும் வெளியாகின்றன; தன்னுடைய குற்றமற்ற மனைவியை மனத்தால் அங்கீகரியாது விட்டவன் மிக்க பாவியாய்ப் பிணிவாய்ப்பட்டு வருந்துவானென்று நீதிநூல்கள் கூறுதலின் 'இவளி னும் பிரிக' என்றான்; "குழற்சிகைக் கோதை சூட்டிக் கொண்டவ னிருப்ப மற்றோர், நிழற்றிகழ் வேலி னானை நேடிய நெடுங்க ணாளும், பிழைப்பிலாட் புறந்தந் தானுங் குரவரைப் பேணல் செய்யா, திழுக் கினா ரிவர்கள் கண்டா யிடும்பைநோய்க் கிரைக ளாவார்" (சீவக. 252) என்னுஞ் செய்யுள் இதனை நன்கு புலப்படுத்தும்.

---

* புறநா. 32 : 2, உரை.

“கடிசொலில்லைக் காலத்துப்படினே” என்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். எச்ச. சூ. 50, தெய்வச்.

7. அறனிலைதிரியா அவையம் - தருமசபை; “சிறந்த, அவைநல மன்பின் விளங்கும்” (நான்மணிக். 26).

8 - 9. கலித். 10 : 5 - 7.

7 - 9. புறநா. 72 : 10 - 12; “நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக், கொடிதோர்த்த மன்னவன்” (கலித். 8); “உடைப் பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை, அடக்கமி லுள்ளத்த னாகி-நடக் கையின், ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக், கொள்ளி கொடுத்து விடல்”, “முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந் தவர்க்கும், இறைதிரியா னேரொக்கல் வேண்டும் - முறைதிரிந்து, நேரொழுகா னாயி னதுவா மொருபக்கம், நீரொழுகப் பாலொழுகு மாறு” (பழ. 200, 206).

15. “கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும் இரவாமை கோடி யுறும்” (குறள், 1061); பெருங். 2. 10 : 101, 11 : 166, 17 : 161, 4. 3 : 61.

10 - 16. “கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட, விலங்கிற்கும் விள்ள லரிது” (நாலடி. 76).

17 - 8. “மன்பதை காக்குந் தென்புலங் காவல், என்முதற் பிழைத் தது” (சிலப். 20 : 76 - 7) என்பவையும் இவ்வடிகள் போலவே பாண்டியருடைய குலப் பெருமையைப் புலப்படுத்துகின்றன.

19. பிறக்கு : தன்மையொரு வினைமுற்று. தலைவன் சபதம் செய்ததைக் கூறினமையால் இது வஞ்சினக்காஞ்சி யாயிற்று.

மு. காஞ்சித் திணைத் துறைகளுள் “இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத்தானும்” என்பதன் விசேட வுரையில், ‘நகுதக்கனரே (72), மடங்கலிற் சினைஇய (71) என்னும் புறப்பாட்டுக்கள் உயிரும் செல்வமும் போல்வன நிலையும் பொருளென நினையாது வஞ்சினஞ் செய்தன’ என்பர்; தொல். புறத்திணை. சூ. 24, ந. (எக)

(எ௨) நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை

அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் பாட்டு.

(இ - ள்.) நம்மாற் சிரிக்கத்தக்கார் இவன் ஆளும் நாட்டை மிகுத்துச் சொல்லுவாரெனவும் இவன்தான் இளைய னெனவும் யான் வெறுப்பச் சொல்லி ஒலிக்கும் மணி இரு மருங்கும் ஒன்றோடொன்று மாறி யிசைக்கும் பரந்த அடியினையும் பெரிய காலினையுமுடைய உயர்ந்த நல்ல யானையினையும் தேரையும் குதிரையையும் படைக்கலத் தொழில் அமைந்த வீரரையும் உடையேம் யாம் என்று எனது மிக்க வலிக்கு அஞ்சாதே மாறுபடுஞ் சினம் பெருகிப் புல்லிய வார்த்தைகளைக் கூறிய சினம் பொருந்திய அரசரைப் பொறுத்தற்கரிய போரின்கண்ணே சிதறப் பொருது முரசத்தோடுகூட அவரைக் கைக்கொண்டிலேனாயின், பொருந்திய எனது குடைநிழற்கண் வாழ்வார், தாங்கள் சென்றடையும் நிழல் காணாதே கொடியன் எம்முடைய வேந்தனென்று கருதிக் கண்ணீரைப் பரப்பிக் குடிமக்கள் பழிதூற்றும் கொடுங்கோலை யுடையே னாகுக; உயர்ந்த தலைமையுடனே மேம்பட்ட கேள்வியையுடைய மாங்குடி மருதன் முதல்வனாக உலகத்தோடு நிலைபெற்ற பலரும் புகழும் தலைமையையுடைய புலவர் பாடாது நீங்குக, எனது நிலவெல்லையை; என்னாற் புரக்கப்படுங் கேளிர் துயரம் மிக இரக்குமவர்கட்குக் கொடாத வறுமையை யான் உற—எ - று.

என் நிழல் வாழ்நராகிய குடி யென்க.

உளையக் கூறியதனைத் தம்மிடத்திருந்து கூறியதாகவும், சிறு சொற் சொல்லியதனைப் போர்க்களத்து எதிர்ப்பட்டுக் கூறியதாகவும் கொள்க.

இவனென்றார், தம் கருத்துக்கண் அணுமையான்.

அகப்படேனாயி னென்றது ஈண்டுப் பிறவினைமேல் நின்றது.

வேந்தரைத் தாக்கி அகப்படேனாயின், கோலேனாகுக; இன்மை யானுற என் நிலவரை புலவர் பாடாது வரைக வென மாறிக்கூட்டி வினைமுடிவு செய்க.

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்' என்பதனை, நாட்டாரால் மீக் கூறப்பட்ட மந்திரிச் சுற்றம் முதலாயினார் நகுதக்கன ரெனப் பிரித் துரைப்பினும் அமையும்.

'நிலவரைப் புரப்போர்' எனவும் பாடம்.

(கு - ரை.) 1. நாடு மீக்கூறுநர் : "காட்சிக் கெளியன் கடுஞ் சொல்ல னல்லனேல், மீக்கூறு மன்ன னிலம்" (குறள், 386).

எள்ளல் நகையை விளக்குமிடத்து 'நகுதக்கனரே நாடுமீக் கூறுநர் என்றாற்போல வீரத்தெழுந்த வெகுளி நகையும் எள்ளல் நகை யின்கண் அடக்க வேண்டும்' என்பர்; தொல். மெய்ப்பாடு. சூ. 4. பேர்.

2. புறநா. 58, 77, 78; "பாம்பு மரசும் பகையுஞ் சிறிதென, ஆம்பொரு ளோதின ரிகழார்" (பெருங். 4 - 10 : 130 - 31); "இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற, ஒளியோ டொழுகப் படும்" (குறள், 698); "அளையுறை பாம்பு மரசும்......இளைய வெளிய பயின்றனவென் றெண்ணி, இகழி னிழுக்கந் தரும்" (ஆசாரக். 84); "சீர்த்தகு மன்னர்......இளைதென்று பாம்பிகழ்வா ரில்" (பழ. 383).

4. நெடுநல்யானை : புறநா. 57 : 11.

3 - 4. "படுமணி யிரட்டு மருங்கின்.........வேழம்" (முருகு. 80 - 82). பாவடி : புறநா. 15 : 8.

4 - 5. "திணைவிராயெண்ணல் வழுவென்பதே கருத்தாயின், 'நெடுநல் யானையுந் தேரு மாவும், படையமை மறவரு முடையம்யாம்' என்றும், 'இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்' என்றும், படர்க் கைச் சொல்லும் அஃறிணைக் கிளவியும் விராயெண்ணுதல் வழக்குப் பயிற்சி யுடைமையான் அவையும் அடங்க 'உயர்திணைச் சொல்லே யஃறிணைக் கிளவி' எனப் பொதுப்பட ஓதாது 'தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவி' எனத் தன்மைச்சொல்லையே விதந்தோதல் குன்றக் கூறலாமாகலானும் அவர்க்கது கருத்தன்மையறிக" (தொல். கிளவி. சூ. 45, சே.).

3 - 5. நாற்படை : புறநா. 55 : 7 - 8, 351 : 1 - 3.

4 - 6. உடைமை யென்னும் மெய்ப்பாட்டிற்கு மேற்கோள் : தொல். மெய்ப்பாடு. சூ. 12, இளம்.

7. சிறுசொல் : சீவக. 207; சூளா. அரசியல். 317.

6 - 7. 'உறுதுப்பஞ்சா......வேந்தரை யென்பது கொலை பொரு ளாக வெகுளிச்சுவை பிறந்தது; என்னை? சிறுசொற் சொல்லுத லென்பது புகழ்கொன் றுரைத்த லாகலின்' (தொல். மெய்ப்பாடு. சூ. 10, பேர்.); இ. வி. சூ. 578, மேற்.

8 - 9. புறநா. 25 : 5 - 7 ஆம் அடிகளின் குறிப்புரையைப் பார்க்க; "துளங்குகுடி விழுத்திணை திருத்தி முரசுகொண், டாண்கட னிறுத்த", "இருபெரு வேந்தரையு முடனிலை வென்று, முரசுங் குடையுங் கலனுங் கொண்டு" (பதிற். 31; 8-ஆம் பத்துப் பதிகம்).

6 - 9. வெகுளிச்சுவைக்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். மெய்ப்பாடு. சூ. 10, இளம்.

12. "வன்பழி தூற்றுங் குடியதே மாமதுரை", "குடிபழி தூற்றுங் கோலனு மல்லன்" (சிலப். 19 : 28, 23 : 34).

11 - 2. 'பெயர்' என்பதற்கு 'வஞ்சினம்' எனப் பொருள் கூறி, 'கொடியனெம்...கோலே னுருக' என்னும் பகுதியை மேற்கோள் காட்டி, 'கூறும் வஞ்சினத்தால் தனக்கு ஒரு பெயர் பெறுதலின் வஞ்சினத்தைப் பெயரென்றார்' என விசேடவுரையும் எழுதினர்; பட்டினப். 289, ந.

13 - 6. இவ்வடிகளிலுள்ள கூற்றுக்களால், இவனது அவைக் களத்துப் புலவர்களுள், மாங்குடி மருதனார் தலைவரென்பதும், இவன் அவர் பாடலில் மிக்க விருப்புடையவ னென்பதும், இதுபற்றியே இவன் மீது அவர் மதுரைக்காஞ்சி யென்னும் நூலை இயற்றினா ரென்பதும் ஊகித்தறியற் பாலன.

17. புரப்போர் : செயப்பாட்டு வினையாலணையும் பெயர்.

18. "சாதலி னின்னாத தில்லை யினிததூஉம், ஈத லியையாக் கடை" (குறள், 230) என்பது இவ்வடியின் பொருளை வலியுறுத்து கின்றது.

17 - 8. புறநா. 71 : 6, குறிப்புரை; "கலிமா னோயே கலிமா னோயே, நாகத் தன்ன நன்னெடுந் தடக்கைக், காய்சின யானைக் கலிமா னோயே, வெள்ளத் தானைமுன்...முன், னுள்ளழித்துப் புகேஎ னுயி னுள்ள, திரப்போ னின்மை கண்டும், கரப்போன் சிறுமை யானுறு கவ்வே" (தகடூர் யாத்திரை).

மு. காஞ்சித் திணைத் துறைகளுள், இன்னது பிழைப்பின் இது வாகியரெனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினங் கூறியதற்கு மேற்கோள்; (தொல். புறத்திணை. சூ. 19, இளம்.; 24, ந.); "மன்னர் நுங்கள் புறக்கொடை கண்டு...கலப்ப லன்றேல், எரிசுடர் வழங்கும் வையத் தென்பெயர் கெடுக வென்றான்" (சீவக. 773) என்பதன் விசேடவுரையில், 'இது சீவகன் வஞ்சினம். இது, முன் இளமை முதலியவற்றை அவ்வரசர் கொன்று கூறுதலின் அக் கொலை பொருளாகப் பிறந்த வெகுளி யென்னும் மெய்ப்பாடு. இது, நகுதக் கனரே என்னும் புறப்பாட்டினுட் கண்டுகொள்க' என்று எழுதியிருக் கின்றனர் நச்சினார்க்கினியர். (எ௨)

(எங) மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
ஈயென விரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்றாதென்
உள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே.

(பி - ம்.) 3 'தரசே' 11 'வருந்தவொற்றேனாயிற்'

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளி (பி - ம். நல்லுருத்திரன்) பாட்டு.

(இ - ள்.) மெல்ல வந்து எனது நல்ல அடியை யடைந்து எமக்கு ஈய வேண்டுமென்று தாழ்ந் திரப்பாராயின், அவர்க்குச் சீர்மையை யுடைய முரசு பொருந்திய பழையதாய் வருகின்ற உரிமையையுடைய எனது அரசாட்சி கொடுத்தலோ எளியது; இனிய உயிரேயாயினும் கொடுப்பேன், இந் நிலத்தின்கண்; அமைச்சர் படைத்தலைவர் முதலாகிய வலியை யுடையோரது வலியைப் பாதுகாவாது என் உள்ளத்தை இகழ்ந்த அறிவில்லாதோன் யாவர்க்கும் விளங்கத் துயில்கின்ற புலியை இடறின குருடன் போலப் பிழைத்துப் போதலோ அரிது; மூங்கிலைத் தின்னும் வலியையுடைய யானையினது காலின்கண் அகப் பட்ட வலிய திண்ணிய (பி - ம். திணிய) மூங்கிலது நீண்ட முளையை யொப்ப மேற்சென்று *அவ்விடத்து வருந்தும்படி பொருதிலேனாயின், கூடிய தீதில்லாத நெஞ்சத்தாற் காதல் கொள்ளாத பலவகைப்பட்ட கரிய கூந்தலையுடைய பொதுப் பெண்டிரது பொருந்தாத புணர்ச்சி யிடை என் மாலை துவள்வதாக—எ - று.

'இரக்குவிராயின்' என்று பாடமோதுவாரும் உளர்.

தீதில் காதல் கொள்ளாவென இயைப்பினும் அமையும்.

உள்ளமென்றது உள்ளத்தாற் சூழும் சூழ்ச்சியை.

தன் மேம்பாடு கூறுகின்ற இடமாதலின், நல்லடி யென்பது தற்புகழ்த லென்னும் குற்றமாகாது.

---

* அவ்விடம் - பகைவரூர்; புறநா. 78 : 9 - 12.

(கு - ரை.) 3. புறநா. 75 : 12.

'முரசுகெழு தாயத் தரசோ தஞ்சமெனத் தஞ்சக்கிளவி அரசு கொடுத்த லெளிதென எண்மைப் பொருளுணர்த்தியவாறு கண்டு கொள்க' (தொல். இடை. சூ. 18, சே.; ந.; தெய்வச். இ - வி. சூ. 271, உரை).

1 - 4. இவ்வடியிலுள்ள மொழிகளால், சோழன் நலங்கிள்ளியின் மேம்பாடும் வீரமும் வண்மையும் விளங்குகின்றன; புறநா. 10 : 5 - 6 ஆம் அடிகளின் குறிப்புரையும், "தனுதுமேம் பாடுரைத்த ருனெடு மொழி", "தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும், தன்னை மறுதலை பழித்த காலையும், தன்னைப் புகழ்தலுந் தகும்", "ஈயென் கிளவி யிழிந் தோன் கூற்றே", "கொடுவென்கிளவி யுயர்ந்தோன் கூற்றே" என்ப வைகளும் இங்கே அறியற்பாலன.

7. இந்த அடியும், "எழுப்புபவோ, துஞ்சு புலியைத் துயில்" (பழமொழி, 33) என்பதும் ஒரு பொருளன.

10. 'அவண்' என்றது பகைவருடைய இடத்தை.

9 - 11. புறநா. 80 : 7. "நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை" (குறிஞ்சிப். 35); "சேயுயர் பணைமிசை யெழில் வேழம்" (பரி. 1 : 4); "வார்முகின் முழக்கின் மழகளிறு மிகீஇத்தன், கான்முளை மூங்கிற் கவர்கிளை போல, உய்தல் யாவதுநின் னுடற்றி யோரே" (பதிற். 84 : 11 - 3).

13 - 4. "முகைவாய்த்த முலைபாயக் குழைந்தநின் றார்", "கூருகிர் சாடிய மார்புங் குழைந்தநின் றாரும்", "சாயலின் மார்பிற் கமழ்தார் குழைத்தநின்...தடமென்றோள்" (கலித். 68 : 14, 91 : 11 - 2, 112 : 23); "செழுந்தார் குழையச் சேர்ந்தார்", "புல்லி...குழைந்து தார் திவண்ட தன்றே" (சீவக. 2034, 2062); பு. வெ. 317.

12 - 4. "அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார், இன்சொ லிழுக்குத் தரும்" (குறள், 911). ஒல்லா முயக்கு : "வேளா முயக்கம்" (கலித். 68).

காமம்பற்றியும் பெருமிதம் பிறக்கு மென்பதற்கு, 'பல்லிருங் கூந்தல்...தாரே' என்பது மேற்கோள்; தொல். மெய்ப்பாடு. சூ. 9, பேர்.

மு. காஞ்சித் திணையுள் இன்னது பிழைப்பின் இதுவாகியரெனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினங் கூறியதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 24, ந. (எங)

(எச) குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்

தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே.

(பி - ம்.) 2 'மானவிளையின்றெனவாளில்' 5 'வயிற்றலந்தித்' 7 'உண்பரோ'

திணை - பொதுவியல்; துறை - முதுமொழிக்காஞ்சி.

சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணனோடு திருப்போர்ப் (பி - ம். போர்ப்) புறத்துப் பொருது பற்றுக்கோட் பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் *துஞ்சிய பாட்டு.

(இ - ள்.) பிள்ளை இறந்து பிறப்பினும் தசைத் தடியாகிய மணை பிறப்பினும் அவற்றையும் ஆளல்லவென்று கருதாது வாளோக்குதலில் தவறார் (பி - ம். தவிரார்) அரசராயிருக்க, பகைவர் வாளாற் படாது, சங்கிலியாற் பிணிக்கப்பட்ட நாய் போலப் பிணித்துத் துன்பத்தைச் செய்து இருத்திய கேளல்லாத கேளிருடைய உபகாரத்தான் வந்த தண்ணீரை இரந்துண்ணக் கடவே மல்லே மென்னும் மனவலியின்றி வயிற்றின்கண் தீயை யாற்ற வேண்டித் தாமே இரந்துண்ணும் அளவினை யுடையாரை அவ்வரசர் பெறுவார்களோ இவ்வுலகத்தின் கண்—எ - று.

அளவை யுடையாரை அளவை யென்றார்.

இதன் கருத்து : சாக்குழவியும் ஊன்பிண்டமுமென இவற்றின் மாத்திரையும் பெற்றிலே மெனப் பிறர்மேல் வைத்துக் கூறியவாறு.

கேளல் கேளி ரென்றது சிறைக்கோட்டங் காவலரை.

அன்றி, இவன் ஆண்மையுடைய னல்லனென்று வாளாற் கொல்லாராய்த் தொடர்ப்படு ஞமலி போல இடர்ப்படுத் திருத்திய கேளல் கேளிர் வேளாண் சிறுபதத்தை மதுகையின்றி வயிற்றுத்தீத் தணிக்க வேண்டித் தாம் இரந்துண்ணு மளவாகக் குழவி செத்துப் பிறப்பினும் ஊன் தடி பிறப்பினும் இவ்வுலகத்து மகப்பெறுவா ருளரோ வென உரைப்பினும் அமையும்.

அரசர்க்கு மானத்தின் மிக்க அறனும் பொருளும் இன்பமு மில்லை யென்று கூறினமையின், இது முதுமொழிக்காஞ்சி யாயிற்று.

(கு - ரை.) 1 - 2. ஊன்றடி - ஊன்பிண்டம். அரசர்களில், போர்க் களத்து வீழ்ந்தோரே துறக்கம் பெறுவர்; அங்ஙனமின்றி நோயால் இறந்தோருடம்பைத் தருப்பையிற் கிடத்தி வாளாற் போழ்ந்து, 'போரில் மாண்டோரடையும் கதியை இவர் அடைக' எனக் கடவுளை வேண்டி அவ்வுடம்பை அடக்குதல் விதியென்பது ஈண்டறியற்பாலது;

* துஞ்சிய என்பதற்கு மூர்ச்சித்த என்று பொருள் கொள்ள வேண்டும் போலும்.

இதனை, "திண்பிணி முரசம்" (புறநா. 93), "தருப்பையிற் கிடத்தி... நாணுத்தக வுடைத்து" (மணி. 23 : 13 - 6), 'மூப்பினும் பிணியினும் இறவாது அமர்க்களத்து வீழ்ந்தோரே துறக்கம் பெறுவர்' (தொல். அகத்திணை. சூ. 44, ந.), (கம்ப. மந்திர. 20, 28) என்பவற்றாலும் அறிக. அன்று : பலவின்பாற்பொருளிலும் வரும்.

3 - 7. "மான வருங்கல நீக்கி யிரவென்னு, மீன விளிவினால் வாழ் வேன்ம - னீனத்தால், ஊட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு, நீட்டித்து நிற்கு மெனின்" (நாலடி. 40); "மறனிழுக்கா, மான முடைய தரசு", "மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை, பீடழிய வந்த விடத்து", "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்", "இளிவரின் வாழாத மான முடையார், ஒளிதொழு தேத்து முலகு" (குறள், 384, 968 - 70); "மான மழிந்த பின் வாழாமை முன்னினிதே" (இனியது. 14) என்பவை இச் செய்யு ளின் பொருளை விளக்குகின்றன.

'தொடர்ப்படு...உலகத்தானே : இது தன்மாட்டு வருத்தத்தான் இழிப்புப் பிறந்தது' (தொல். மெய்ப்பாடு. சூ. 6, இளம்.) பதம் - உணவு. அளவை : பண்பாகு பெயர்.

7. ஈன்மரோ - பெறுவார்களோ; மகரம் எதிர்காலம் உணர்த் திற்று.

மு. காஞ்சித் திணையுள், தாமே யேங்கிய தாங்கரும் பையுள் என்னும் துறைக்கு மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 19, இளம்.); 'தாமே யேங்கிய வென்பதற்குச் சிறைப்பட்டார் தாமே தனித்திருந்த வென்று கூறி, குழவி......உலகத்தானே யென்னும் புறப்பாட்டைக் காட்டுவாரு முளர்' (தொல். புறத்திணை. சூ. 24, ந.). (எச)

(எரு) மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பாறர வந்த பழவிறற் றாயம்
எய்தின மாயி னெய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்
விழுமியோன் பெறுகுவ னாயி னாழ்நீர்
அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தா லம்ம தானே மையற்று
விசும்புற வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்த ரரசுகெழு திருவே.

(பி - ம்.) 1 'மூத்தோர்க்கூற்றமுய்த்தெனவுய்த்தென' 7 'னாயிற் கழூநீர்', 'கழிநீர்'

திணை - அது; துறை - பொருண்மொழிக்காஞ்சி (பி - ம். பொது மொழிக்காஞ்சி).

சோழன் நலங்கிள்ளி பாட்டு.

(இ - ள்.) தம் குடியின் முதியோரை முதியோரைக் கூற்றம் கொண்டு போயிற்றாக, விதி தரப்பட்டுத் தம்பால் வந்த பழைய வெற்றியால் உண்டாகிய அரசுரிமையைப் பெற்றேமாதலால் இத் தலைமையைப் பெற்றேமெனக் கொண்டு தம் குடிமக்களை இறை வேண்டி யிரக்கும் மிகுதியில்லாத ஆண்மையையுடைய உள்ளஞ் சிறியோன் பெறின், அத் தாயம் அவனுக்குப் பரிக்கவொண்ணாதாம்படி கனத்தது, மிகவும்; அடுத்துப் பொரும் போரைப் பொறுக்கும் மனவெழுச்சியை யுடைத்தாகிய வலிய முயற்சியையுடைய சீரியோன் பெறுவனாயின், தாழ்ந்த நீரையுடைய வற்றிய கயத்திடத்துச் சிறிய தண்டாகிய வெளிய கிடேச்சினது கோடைக்கண் உலர்ந்த சுள்ளியைப் போலப் பெரிதும் நொய்து, குற்றமற்று விண்ணின் கண்ணே பொருந்த உயர்ந்த வெண்குடையினையும் முரசினையுமுடைய அரசரது அரசாட்சியைப் பொருந்திய செல்வம்—எ - று.

குடிபுர விரக்கு மென்பது, குடிமக்களைக் கொள்ளுங் கடமையன்றி மிகத் தர வேண்டுமென்று இரத்தலை.

தாயம் சிறியோன் பெறின், அது மிகவும் சிறந்தன்று; வேந்தர் அரசு கெழு திரு விழுமியோன் பெறுகுவனாயின், நன்றும் நொய்தாலெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

மன் : ஆக்கத்தின்கண் வந்தது. அம்ம : அசைநிலை.

(கு - ரை.) 1. "எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத், தனக்குத்தாய் நாடியே சென்றாள்" (நாலடி. 15).

2 - 3. தாயம் - உரிமை. "உருகெழு தாய மூழி னெய்தி" (பட்டினப். 227).

4 - 5. புரவு - காத்தல்; அஃது இறைக்கு ஆனமையின், ஆகு பெயர். கூர் - மிகுதி. "வேலொடு நின்றா னிடுவென் றதுபோலும், கோலொடு நின்றா னிரவு" (குறள், 552).

8. அறுகயம் - நீரற்ற குளம். வெண்கிடை - வெளிய கிடேச்சு; வெளிய நெட்டி.

முனிவர் தெளிந்த பொருளைக் கூறினமையால் இது பொருண் மொழிக்காஞ்சி யாயிற்று. (எரு)

(எசு) ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை
இன்றி னூங்கோ கேளலந் திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை யொண்டளிர்
5 நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி

ஒலியன் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும்பூட் செழியன்
பீடுஞ் செம்மலு மறியார் கூடிப்
பொருது மென்று தன்றலை வந்த
புனைகழ லெழுவர் நல்வல மடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத் தடலே.

(பி - ம்.) 6 'தேம்பாய் தெரியல்'

திணை - வாகை; துறை - அரசவாகை.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற * நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடியது.

(இ - ள்.) ஒருவனை ஒருவன் கொல்லுதலும், ஒருவற்கு ஒருவன் தோற்றலும் புதிதன்று; இந்த உலகத்தின்கண் முன்னே தொட்டு இயல்பு; இன்றையின் முன் கேட்டறியேம்: திரண்ட தாளையுடைய மன்றத்திடத்து வேம்பினது பெரிய கொம்பின்கண் உண்டாகிய ஒள்ளிய தளிரை நீண்ட கொடியாகிய உழிஞைக் கொடியுடனே விரவிச் செறியத் தொடுக்கப்பட்ட தேன் மிக்க மாலையை வளைய மாலையுடனே சிறப்பச் சூடி ஓசையினிய தெளிந்த போர்ப்பறை யொலிப்பக் காட்சி தக நாடு பொருந்திய செல்வத்தினையுடைய பசும் பொன்னாற் செய்த பூணை அணிந்த நெடுஞ்செழியனது பெருமையையும் உயர்ந்த தலைமையையும் அறியாராய்த் தம்மிற் கூடிப் பொருவேமென்று தன்னிடத்து வந்த புனைந்த வீரக் கழலினையுடைய †இரு பெரு வேந்தரும் ஐம் பெரு வேளிருமாகிய ஏழரசருடைய நல்ல வென்றி அடங்கத் தான் ஒருவனாய் நின்று பொருது களத்தின்கட் கொல்லுதல்—எ - று.

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவ தன்று; இவ்வுலகத்து இயற்கை; செழியன் பொருது மென்று வந்த எழுவர் நல்வலம் அடங்க ஒருவனாகித் தெரியலை மாலையொடு காண்டகச் சூடிக் கிணை கறங்கப் பொருது களத்து அடல் இன்றின் ஊங்கோ கேளலமெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

(கு - ரை.) 2. புறநா. 42 : 6; "பண்டுமிவ் வுலகத் தியற்கை யஃதின்றும், புதுவ தன்றே" (கலித். 22 : 3 - 4); "புதுவ தன்றே தொன்றியல் வாழ்க்கை" (சிலப். 30 : 140).

4. மன்ற வேம்பு: புறநா. 45 : 2, 79 : 2, 371 : 7. மாச்சினை: பொருந. 143-4.

---

* 9 - ஆம் அடியில் தலைவன் பெயரின் ஒரு பகுதி வந்துள்ளது.
† மதுரைக். 55 - 6, குறிப்புரை.

4 - 5. புறநா. 22 : 20 - 21, குறிப்புரை; 77 : 2 - 3; "போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த, கடவுள் வாகை" (பதிற். 66); "ஆரொ டேர்பெறத் துளவி யறும்பையஞ் சுழியச் சூடினன்" (கம்ப. முதற் போர். 115).

5. பகைவருடைய ஊர்மதிலை வளைத்துப் போர் செய்யச் செல்கின்றா னாதலின் உழிஞை சூடினார்.

8. கிணைகறங்கச் செல்லுதல் : புறநா. 78 : 12, 79 : 3.

9 - 13. புறநா. 19 : 17, குறிப்புரை.

12. எழுவர் - சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்பார்; அகநா. 36 : 15 - 20.

மு. நூழிலென்னுந் துறைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 14, இளம்.

நெடுஞ்செழியனுடைய இயல்பையும் வெற்றியையும் கூறினமையால் இச் செய்யுள் அரசவாகை யாயிற்று 77, 78 - ஆம் செய்யுட்களுக்கும் இப்படியே கொள்க. (எசு)

(எஎ) கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டுக்
குடுமி களைந்த நுதல் வேம்பி னொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்கவவன் கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்று மிலனே பால்விட்
டயினியு மின்றயின் றனனே வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே யவரை
அழுந்தப் பற்றி யகல்விசும் பார்ப்பெழக்
கவிழ்ந்துநிலஞ் சேர வட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினு மிலனே.

(பி - ம்.) 11 'அழுங்கப்'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) சதங்கை வாங்கப்பட்ட காலிலே ஒள்ளிய வீரக் கழலினைச் செறித்துக் குடுமி யொழிக்கப்பட்ட சென்னிக்கண்ணே வேம்பினது ஒள்ளிய தளிரை நெடிய கொடியாகிய உழிஞைக் கொடி யோடு சூடிக் குறிய வளைகளை யொழிக்கப்பட்ட கையின்கண்ணே

வில்லைப் பிடித்து நெடிய தேரினது மொட்டுப் பொலிவுபெற நின்றவன் யாரோதான்? யாரே யாயினும், அவன் கண்ணி வாழ்வதாக; தாரை யணிந்து ஐம்படைத் தாலி கழித்ததும் இலன்; பாலை யொழித்து உணவும் இன்றுண்டான்; முறை முறையாக வெகுண்டு மேல் வந்த புதிய வீரரை மதித்ததும் அவமதித்ததும் இலன்; அவரை இறுகப் பிடித்துப் பரந்த ஆகாயத்தின்கண்ணே ஒலியெழக் கவிழ்ந்து உடலம் நிலத்தின்கண்ணே பொருந்தக் கொன்றதற்கு மகிழ்ந்ததுவும், இவ்வாறு செய்தேமென்று தன்னை மிகுத்ததுவும் அதனினும் இலன்— எ - று.

யார்கொ லென்றது வியப்பின்கட் குறிப்பு.

இழித்தன் றென்பது இழிந்தன்றென மெலிந்து நின்றது.

(கு - ரை.) 1. கிண்கிணிக் கால்: புறநா. 198; 5. கழல் தொட்டு: புறநா. 83 : 1.

2. குடுமி களைதல்: "ஏந்து, நெடுமதில் கொண்டு நிலமிசையோ ரேத்தக், குடுமி களைந்தானெங் கோ" (பு. வெ. 209). நுதல் - முன்தலை.

2 - 3. புறநா. 76 : 4 - 5, குறிப்புரை. பவர் - கொடி.

1 - 4. புறநா. 72 : 2, குறிப்புரை.

5. நெடுந்தேர்க் கொடுஞ்சி: மதுரைக். 752; மணி. 4 : 48; "நெடுந்தேர்க் கொடுஞ்சி பற்றி, நின்றோன்" (அகநா. 110 : 24 - 5); கலித். 85 - 18.

6. கண்ணியை வாழ்த்தல்: புறநா. 198 : 11; "வாழ்கநின் கண்ணி வாய்வாள் வேந்தென" (மணி. 18 : 63); "வாழ்கநுங் கண்ணி மாதோ" (சீவக. 1890); "வண்டார் கமழ்கண்ணி வாழ்கென்று" (பு. வெ. 13).

7. தாலி - ஐம்படைத் தாலி; காத்தற் கடவுளான திருமாலின் சங்கம், சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் என்னும் ஆயுதங்களின் வடிவமாக அமைக்கப்படும் ஓர் ஆபரணம். இதனைப் பஞ்சாயுத மென்றும், பிறந்த ஐந்தாம் நாளில் பிள்ளைகளுக்கு இதனை அணிவித்தல் மரபென்றுங் கூறுவர்; "பொன்னுடைத் தாலி யென்மகன்" (அகநா. 54); "மழலை, சிந்துபு சின்னீ ரைம்படை நனைப்ப", "ஐம்படைத் தாலி......புதல்வர்" (மணி. 3 : 137 - 8, 7 : 56 - 7); "எழிலார் திருமார்பிற் கேற்கு மிவையென், றழகிய வைம்படையு மாரமுங் கொண்டு" (பெரியாழ்வார் திருமொழி, 1 : 4 - 5); "பண்டுவசு தேவன்மக னாகிநில மாதின் படர்களையு மாயனிவ னென்றுதெளி வெய்தத், தண்டுதனு வாள்பணில நேமியெனு நாமத் தன்படைக ளானதிரு வைம்படை தரித்தே" (கலிங்கத். அவதாரம், 9); "தாலி யைம்படை தழுவு மார்பிடை" (கம்ப. நாடு. 58); "ஐம்படை மார்பிற் காணேன்" (திருவிளை. 39 : 25).

9. வம்ப மள்ளர்: புறநா. 78 : 7, 79 : 5.

7 - 10. "இந்த நகரஉகரம் 'தாலிகளைந் தன்றுமிலனே' என்றும், 'வியந்தன்று மிழிந்தன்று மிலனே' என்றும் உயர்திணைக்கண்ணும் வந்ததா லெனின், அவை 'களைந்தான்' 'வியந்தான்' 'இழிந்தான்' என்பனவற்றிற்கு மறையாய்க் 'களைந்திலன்' 'வியந்திலன்' 'இழிந் திலன்' என நிற்கின்றவை 'களைந்தன்றுமிலன்' 'வியந்தன்றுமிலன்' 'இழிந்தன்றுமிலன்' என முற்றுவினைத் திரிசொல்லாய் நின்றன" (தொல். வினை. சூ. 21, ந.).

10 - 11. பெரும்பாண். 419; மலைபடு. 386.

13. அகத்தடக்கல்: புறநா. 6 . 25, 192 : 13.

9 - 13. நெடுஞ்செழியனுடைய வீரமிகுதியையும் ஆழமுடைமை யையும் இவ்வடிகள் தெரிவிக்கும் இனிமை மிகப் பாராட்டற்பாலது.

மு. உழிஞைத் திணைத் துறைகளுள் ஒன்றாகிய 'திறற்பட வொரு தான் மண்டிய குறுமையும்' என்பதற்கு மேற்கோள் (தொல். புறத் திணை. சூ. 10, இளம்.); 'மதிமை சாலா மருட்கையானே .....கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டென்னும் பாட்டுச் சிறியோர் பெருந் தொழிலைச் செய்தது' (தொல். மெய்ப்பாடு. சூ. 7, பேர்.; இ. வி. சூ. 578, உரை). (எஎ)

(எஅ) வணங்குதொடைப் பொலிந்த வலிகெழு நோன்றாள்
அணங்கருங் கடுந்திற லென்னை முணங்குநிமிர்ந்
தளைச்செறி யுழுவை யிரைக்குவந் தன்ன
மலைப்பரு மகல மதியார் சிலைத்தெழுந்து
விழுமியம் பெரியம் யாமே நம்மிற்
பொருநனு மிளையன் கொண்டியும் பெரிதென
எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டவ ரடுதலு மொல்லா னாண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூ ராங்கட்
டெண்கிணை கறங்கச்சென் றாண்டட் டனனே.

(பி - ம்.) 1 'மதனுடை நோன்றாள்'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(பி - ம்.) வளைந்த * சந்துகளாற் பொலிந்த வலி பொருந்திய போரின்கண் நிலை தளராத பொறையினையுடைய தாளினையும் வருத்து தற்கரிய மிக்க வலியையுமுடைய என் இறைவன் மூரிநிமிர்ந்து முழை

* சந்து - மூட்டுவாய்; "இருகாலுஞ் சந்துபோனால்" (காளமேகம்).

யின்கட் கிடந்த புலி தான் விரும்பியதோர் இரையை நோக்கி வந்தாற் போன்ற மாறுபடுதற்கரிய மார்பத்தை மதியாராய் ஆர்த்து எழுந்திருந்து, 'சிறப்புடையேம், படையாற் பெரியேம் யாங்கள், நம்மிற் பொருவானும் இளையன், கொள்ளையும் பெரிது' என இகழ்ந்து வந்த *நிலையில்லாத வீரர் புறக்கொடுத்த கண்ணராய் நின்றவிடத்து நில்லாது புறத்தே போக அவரை இப் போர்க்களத்தின்கண்ணே கொன்றிடுதலும் உடம்படானாய் அவ்விடத்து அவர் மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய மகளிர் நாணினராய் இறந்துபடத் தந்தையருடையவாகிய தங்கள் ஊரிடத்துத் தெளிந்த போர்ப்பறை யொலிப்பச் சென்று அவ்விடத்தே கொன்றான்—எ - று.

தந்தை தம்மூ ரென்றதனை, "ஏவ லிளையர் தாய்வயிறு கரிப்ப" என்றாற்போலக் கொள்க. தந்தை தம்மூ ரென்றது, தாம் தோன்றிச் செய்த நகரியன்றி உறையூரும் கருவூரும் முதலாகிய ஊர்களை.

(கு - ரை.) 2. என் ஐ - எனது தலைவன்; புறநா. 84 : 1, 85 : 1, 89 : 9, 262 : 5; "என்னைமுன் னில்லன்மின்" (குறள், 771). முணங்கு நிமிர்தல் - வளைவு நிமிர்தல். புறநா. 52 : 2, குறிப்புரை.

4. புறநா. 10 : 9 - 10, குறிப்புரை.

1 - 4. புறநா. 52 : 1 - 4, குறிப்புரை.

6. இளையன் : புறநா. 72 : 2, குறிப்புரை.

7. வம்ப மள்ளர் : புறநா. 77 : 9, 79 : 5.

9. அவரடுதல்; இரண்டாம் வேற்றுமைத் தொகை.

12. கிணைகறங்கச் செல்லல் : புறநா. 76 : 8, குறிப்புரை.

9 - 12. "சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா, னூக்க மழிந்து விடும்", "சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்தர், உறை நிலத்தோ டொட்ட லரிது" (குறள், 498 - 9). உழிஞையைச் சூடிய வீரன் பகைவருடைய மதிலைச் சூழ்ந்து போர்செய்ய வேண்டுமென்பது விதியாதலாலும் இச் செழியன் உழிஞை சூடியவனாதலாலும் இங்ஙனம் போர் செய்வா னாயின னென்பதுமொன்று; புறநா. 76, 77-ஆம் பாடல்களைப் பார்க்க. (எஅ)

(எகூ) மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி
மன்ற வேம்பி னொண்குழை மலைந்து
தெண்கிணை முன்னர்க் களிற்றி னியலி
வெம்போர்ச் செழியனும் வந்தன னெதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே
எஞ்சுவர் கொல்லோ பகறவச் சிறிதே.

(பா - ம்.) 2 'மிலைந்து'

* "வம்புநிலை யின்மை" (தொல். உரி. சூ. 29).

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) தனது பழைய நகரிவாயிற்கண் குளிர்ந்த பொய்கையின் கண்ணே மூழ்கி மன்றத்திடத்து வேம்பினது ஒள்ளிய தளிரைச் சூடித் தெளிந்த ஓசையையுடைய *பறைமுன்னுகக் களிறுபோலப் பெருமிதத் தோடு நடந்த வெய்ய போரையுடைய நெடுஞ்செழியனும் வந்தான்; அவனோடு பகைத்த நிலையில்லாத மறவர் பலரே; பகற்பொழுது மிகச் சிறிதாதலால், அவருட் சிலர் படாதொழியவும் கூடும்—எ - று.

போர் மடந்தையைப் புணர வருகின்ற †கன்னிப்போர் (பி - ம். கண்ணிப்போர்) ஆதலாற் பனிக்கயம் மண்ணி யென்ருர்.

கிணை முன்னர் வருதல், யானைக்கும் இவனுக்கும் ஒக்கும்.

(கு - ரை.) 1. "என்னு மெல்லையி னன்றெனை வவுணர்கோ னெழுந்து, தன்ன தாகிய வுறையுள்போய்த் தடம்புன லாடி" (கந்த. சூரபன்மன்வதை. 16).

2. புறநா. 76 : 4. இவ்வடி ஏழாம் வேற்றுமைத் தொகைக்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. 17, ந.

3. தெண்கிணை : 78:12. சிறந்த ஆடவர் நடைக்குக் களிற்றின் நடை உவமை : "மங்கல மழகளி றனைய செல்கையன்" (சூளா. குமாரகால. 9); "பொன் ஞுகமு நாகமு நாண நடந்தான்" (கம்ப. கார்முக. 32). (எசு)

---

*யானைக்குமுன் பறைசெல்லுதல் மரபு : "வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை, வெருவரு செலவின் வெகுளி வேழம்" (பொருந. 171 - 2); "நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்க" (கலித். 56 : 32 - 3); "பாகும் பறையும் பருந்தின் பந்தரும், ஆதுல மாக்களு மலவுற்று விளிப்ப" (மணி. 4 : 41 - 2); "பறைநிறை கொல்யானை", "அறைபறை யானை" (முத்தொள்ளாயிரம்).

†"கடிக்கண்ணி வேந்தரை யாற்றுக் குடிக்கன்னி வாகை கொண்டே, முடிக்கண்ணி மேல்வைத்த மும்மதில் வேந்தன்" (பாண்டிக்கோவை); "காண்டுமிக் காளைதன் கன்னிப் போரெனு" (சூளா. அரசியல். 79); "காகுத்தன் கன்னிப் போரில்" (கம்ப. தாடகை. 77); "கன்னி வேட்டை மகன்போக" (பெரிய. கண்ணப்பர். 47); "மழவிடை கன்னி வேட்டம் வாய்த்துடன் வருக வென்ருன்" (சீகாளத்திப். கண்ணப்பச். 70); "கன்னிப்போர் செய்தருளி" (ஸ்ரீபராந்தகதேவர் மெய்க்கீர்த்தி). கன்னிப் போர் - முதற்போர்.

(அ0) இன்கடுங் கள்ளி னாமூ ராங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகான் மார்பொதுங் கின்றே யொருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே
நல்கினு நல்கா னாயினும் வெல்போர்ப்
போரருந் தித்தன் காண்கதி லம்ம
பசித்துப்பணை முயலும் யானை போல
இருதலை யொசிய வெற்றிக்
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே.

(பி - ம்.) 6 'பொரலருந் தித்தன்' 9 'மள்ளர்க்கடந்தடு'

திணை - தும்பை; துறை-*எருமைமறம்.

சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி முக்காவனாட்டு †ஆமூர் மல்லனைப் பொருது அட்டு நின்றானைச் சாத்தந்தையார் பாடியது.

(இ - ள்.) இனிய அழன்ற கள்ளினையுடைய ஆமூரிடத்து வலியையுடைய மல்லனது மிக்க வலியைக் கெடுத்து ஒருகால் மண்டியாக மார்பிலே மடித்து வைத்து ஒருகால் அவன் செய்கின்ற உபாயத்தை விலக்கி முதுகின்கண் வளைத்துப் பசித்து மூங்கிலைத் தின்றற்கு முயலும் யானையை யொப்பத் தலையுங் காலுமாகிய இரண்டிடமும் முறிய மோதி அக் களத்தின்கட் புக்க அம் மல்லனை எதிர்ந்து நின்று கொன்ற நிலையை, கண்டால் ‡உவப்பினும் உவவானாயினும், இவன் தந்தையாகிய வெல்லும் போரினையுடைய பொருதற்கரிய தித்தன் காண்பானாக—எ - று.

என்றது, தந்தையுடன் வெறுத்துப் போந்தான் அமருட் புகுந்து இப் போர் செய்தானை அவன் விரும்பின் உவக்கின்றான், விரும்பா விடின் அஞ்சுகின்றா னென்பதாம்.

'பணைமுயலும் யானைபோல வொருதலை யொசிய வொற்றி' என்று பாடமோதி, அம் மல்லன் முற்கூறாயினும் பிற்கூறாயினும் ஒருதலை முறிய மோதி யென்று உரைப்பாரும் உளர்.

தில் ! விழைவின்கண் வந்தது.

(கு - ரை.) 1. ஆங்கண்-அவ்விடம். இன்கடுங்கள் : நற். 10 : 5; குறுந். 298 : 5; அகநா. 76 : 3, 137 : 6.

---

*புறநா. 274 ; சீவக. 2259, ந.

†இவன் பெயர் இப் பாட்டின் முதலிரண்டடிகளிற் காணப்படுகின்றது.

‡"நல்கியா ணல்கியவை" (கலித். 138 : 13) என்ற இடத்து, 'என்னாலே காமிக்கப்பட்டவள் எனக்குக் காதலித்துத் தந்தவை' எனப் பொருளெழுதுவர் நச்சினார்க்கினியர்.

2. மதவென்பது வலியென்பதை விசேடித்த உரிச்சொல். மதவலி ; முருகு. 232;

3 - 4. ஒதுங்கின்று - ஒதுங்கிற்று; இவை இரண்டும் எச்சப் பொருளவாய் நின்றன. தார் - முன்படை.

5. நல்கல்-உவத்தல்; "நறுமலர்க் கோதாய் நல்கினை கேளாய்" (மணி. 12 : 56).

6. தித்தன்-உறையூரிலிருந்த ஒரு சோழன்; புறநா. 352 : 9 - 10, 395 : 18 - 9; "நொச்சி வேலித் தித்த னுறந்தை" (அகநா. 122 : 21).

7. புறநா. 73 : 9 - 11, குறிப்புரை.

9. கடந்தடுதல் : புறநா. 8 : 5, 23 : 16, 40 : 2, குறிப்புரை; கலித். 101 : 31, 105 : 1; பரி. 15 : 45.

மு. மல்வென்றிக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 16, இளம்; சூ. 20, ந. (அ0)

(அக) ஆர்ப்பெழு கடலினும் பெரிதவன் களிறே
கார்ப்பெய லுருமின் முழங்கலா னவே
யார்கொ லளியர் தாமே யார்நார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
5 கவிகை மள்ளன் கைப்பட் டோரே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) படையினது ஆரவாரம், எழுகடலுங் கூடி ஒலிக்கும் ஒலியினும் பெரிது ; அவனுடைய களிறு, கார்காலத்து மழையின் கண் இடியினும் முழங்குதலை அமையா; நாராற் பயிலத் தொடுக்கப் பட்ட ஆத்திக் கண்ணியையும் இடக்கவிந்த கையினையுமுடைய வீரனது கையின்கட் பட்டோராகிய இரங்கத்தக்கார்தாம் யார்கொல்? —எ - று.

(கு - ரை.) 1 - 2. யானைமுழக்கிற்கு இடிமுழக்கு உவமை: "யானை முழக்கங் கேட்ட, கதியிற்றே காரின் குரல்" (பரி. 8 : 17 - 8); "விசும் பின், ஏறெழுந்து முழங்கினு மாறெழுந்து சிலைக்கும், கடாஅ யானை" (அகநா. 144); "கார்ப்பெய லுருமிற் பிளிறி......மையல் வேழ மடங்க லின்" (குறிஞ்சிப். 162 - 5); "களிறுங் களித்ததிருங் கார்" (பு. வெ. 37).

3 - 4. ஆர்நார் என்பதற்கு ஆத்திநார் என்று பொருள் கொள்ளலா மாயினும் பாட்டுடைத் தலைவன் சோழனாதலின், ஆர்க்கண்ணி யென இயைத்து ஆத்திமாலையென்று பொருள் கூறினர்; "ஆர்புனை தெரிய னெடுந்தகை" என்பர் பின்னும்; 82 : 6. ஆர்-ஆத்தி. அரசன் இயல்பையும் வென்றியையும் கூறினமையின், இஃது அரசவாகை யாயிற்று. (அக)

(அஉ) சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி னிணக்கு மிழிசினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ
5 ஊர்கொள வந்த பொருநனொ
டார்புனை தெரிய னெடுந்தகை போரே.

(பி - ம்.) 3 'கட்டினிணர்க்குமிழிசனன்' 4 'போழ்துன்னூசி'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) ஊரின்கண் விழாத் தொடங்கிற்றாக அவ் விழாவிற்கு உதவப் போகவும் தன் மனைவி பிள்ளைபெறுதலைப் பொருந்தினளாக அவள் *மெய்ந்நோவிற்கு உதவப்போகவும் வேண்டி, பெய்கின்ற மழையையுடைய ஞாயிறு வீழ்ந்த பொழுதின்கட் கட்டிலைப் பிணிக்கும் புலைமகன் கையதாகிய வாரைச் செலுத்தும் ஊசியினும் விரைந்தது, ஊரைக் கொள்ள வந்த வீரனோடு ஆத்தியாற்றொடுக்கப்பட்ட கண்ணியை யுடைய பெருந்தகையது போர்—எ - று.

நெடுந்தகை போர், பட்டமாரி ஞான்ற ஞாயிற்றின்கட் சாறுதலைக் கொண்டெனப் பெண் ஈற்றுற்றென இழிசினன் கையதாகிய ஊசியின் விரைந்தன் றெனக் கூட்டுக.

சாறுதலைக் கொண்டென அதற்கு உதவப்போகவும், பெண் ஈற்றுற்றென அதற்கு உதவப் போகவுமென வேறு வேறு கொள்க; ஒன்றாக உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 1. சாறு - விழா; ஈற்று - ஈனுதல்.

2. ஞான்ற ஞாயிறு - அத்தமித்த சூரியன்; "ஞான்றுதோன் றவிர் சுடர்" (அகநா. 39); தொல். தொகைமரபு, சூ. 29, இளம். மேற்.

3. நிணக்கும் - பிணிக்கும்; "நிணந்தெ னெஞ்ச நிறைகொண்ட கள்வனை" (சீவக. 1311). இழிசினன் - இழிவையுடையான் : புறநா. 287 : 2, 289 : 11; "இழிசினர்க்கே யானும் பசித்தார்க ணீதல், கழி சினங் காத்தல் கடன்" (சிறுபஞ்ச. 77).

4. போழ் - பிளவு. 'விரைவு' என்னும் மெய்ப்பாட்டிற்கு மேற் கோள்; தொல். மெய். சூ. 12, இளம்.

மு. 'சாறு.........போரேயென்பது இழிந்ததன்மேல் வந்ததா லெனின்...ஊசியினது விரைவு மற்றுள்ள விரைவின் உயர்ந்ததாதலின் அதுவும் உயர்ந்ததாம்' (தொல். உவம. சூ. 3, இளம்.); 'சாறுதலைக்

---

*"அகத்தடியாண் மெய்ந்நோவ" (தனிப்பாடல்).

கொண்டென......என்னும் பாட்டினுள் உவமப்பொருளாகிய போழ் தூண்டூசிக்குப் பல அடை கூறி அதனோடு உவமிக்கப்படும் போர்த் தொழிலினை யாதுமோரடையின்றி வாளாது கூறினுனாயினும் உவமப் பொருளானே போர்த்தொழிற்குற்றதும் உணரக் கூறினுனும்; என்னை? உண்டாட்டும் கொடையும் உரனொடு நோக்கி மறுத்தலும் முதலாகிய உள்ளக்கருத்தினுன் ஒரு கணத்துள்ளே பல வேந்தரை ஒருங்கு வேறற்கு விரைகின்றது போர்த்தொழி லென்பது தெளியப்பட்டமை யின்' (தொல். உவம. சூ. 20, பேர்.); 'சாறுதலைக் கொண்டென...... நெடுந்தகை போரே: இதனுள் ஆர்புனை தெரியல் நெடுந்தகை போர்த் தொழிலுவமையாகிய போழ்தூண்டூசித் தொழிற்குப் பல அடை புணர்ப்பினும் அவையனைத்தும் போர்த்தொழில் விரைவையே சிறப் பித்து வந்தமையால் வழுவாகாது இலக்கணமாம்' (இ. வி. சூ. 641, உரை). (அஉ)

(அஙு) அடிபுனை தொடுகழன் மையணற் காளைக்கென்
தொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே
அடுதோண் முயங்க லவைநா ணுவலே
என்போற் பெருவிதுப் புறுக வென்றும்
ஒருபாற் படாஅ தாகி
இருபாற் பட்டவிம் மைய லூரே.

(பி - ம்.) 3 'அடுதொறுமுயங்கல்' 4 'எம்போற் பெருவிதிர்ப்பு'

திணை - கைக்கிளை; துறை - பழிச்சுதல்.

அவனைப் பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார் பாடியது.

(இ - ள்.) அடியின்கட் புனைந்த செறிந்த வீரக் கழலினையும் மைபோன்ற *தாடியினையுமுடைய இளையோன்பொருட்டு எனது வளை என்னைக் கைவிடுதலான், யான் யாயை அஞ்சுவேன்; அவன் பகையைக் கொல்லுந் தோளைத் தழுவுதற்கு அவையின்கணுள் ளாரை நாணுவேன்; என்னைப் போல மிக்க நடுக்கமுறுவதாக எந்நாளும், யாயே யாதல் அவையே யாதல் ஒரு கூற்றிற் படாதாகி யாயும் அவையுமாகிய இரு கூற்றிற் பட்ட இம் மயக்கத்தையுடைய ஊர்—எ - று.

மையலூர் பெருவிதுப்புறுக வெனக் கூட்டுக.

யாய் இல்லையாயின், வளை கழலுதற்கு அஞ்ச வேண்டா; அவை இல்லையாயின், முயங்குதற்கு அஞ்ச வேண்டா வென்பது கருத்தாகக் கொள்க.

---

* தாடி - வீசை; "இரலை, மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி" (கலித். 15); "கலையிரு மருப்பிற் கோடிக் காதள வோடுந் தாடி" (திருவிளை. 26 : 22).

'ஒருபாற் படாஅ தாகி யிருபாற் பட்டவிம் மையலூர்' என்பதற்கு * அச்சமும் நாணு முண்டாய் வருந்தும் என் கூற்றிலும் நில்லாது, என் காதலறிந்து அவனோடு கூட்ட நினையாத யாய் கூற்றிலும் நில்லாது, இருவர் கூற்றிலும் நின்று மயங்குகின்ற ஊரெனினும் அமையும்.

(கு - ரை.) 1. தொடு கழல் - செறித்த கழல்; புறநா. 77 : 1. மையணற் காளை : "செய்வினைப் பொலிந்த செறிகழ னோன்றாள், மையணற் காளையொடு" (ஐங்குறு. 389); "மையணற் காளை மகிழ்துடி" (பு. வெ. 12).

4. மு. புறநா. 255 : 3, 291 : 5. 'என்போற் பெருவிதுப் புறுக வென்புழி, போலென்பது போல என்னுஞ் செயவெனெச்சக் குறிப் பாகிய உவமவுருபு' (தொல். எச்ச. சூ. 18, ந.).

6. மையலூர் : குறுந். 374 : 7.

மு. 'அடிபுனை தொடுகழன்...மைய லூரே : இது பெருங்கோழி நாய்கன் மகளொருத்தி, ஒத்த அன்பினுற் காமமுருத வழியும் குணச் சிறப்பின்றித் தானே காமமுற்றுக் கூறியது இதனின் அடக்குக' (தொல். புறத்திணை. சூ. 28, ந.) (அங)

(அச) என்னை, புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே
யாமே, புறஞ்சிறை யிருந்தும் பொன்னன் னம்மே
போரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே
கல்லென் பேரூர் விழவுடை யாங்கண்
ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்
குமணர் வெரூஉந் துறையன் னன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) என்னுடைய தலைவன், தன் நாடிழந்த வறுமையாற் புற்கை நுகர்ந்தானாயினும் பகைவர் அஞ்சத்தக்க பெரிய தோளை யுடையன்; யாம் அவனுடைய சிறைப் புறத்திருந்தும் பலகாலுங் காணப் பெறினும் மெய்யுறப் பெறுமையின் வருந்திப் † பொன்போலும் நிறத்தையுடையே மாயினேம்; போரை யேற்று என் தலைவன் போர்க் களத்தின்கட் புகிற் கல்லென்னும் ஒலியையுடைய பெரிய ஊரின்கட் ‡ போர் செய்தற்கெடுத்த விழாவினையுடைய இடத்துத் தோள்வலி

* "அச்சமு நாணு மடனு முந் துறுத்த, நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப" (தொல். களவு. சூ. 8); "உட்கு நாணு மொருங்குவந் தடைதர" (பெருங். 3. 6 : 87, 4 - 13 : 100).

† பொன்போலும் நிறமென்றது பசலை நிறத்தை; இது தலைவர் பிரிவினுல் மகளிர்க்கு உண்டாவது.

‡ "விழவுமேம் பட்ட நற்போர்" (புறநா. 88 : 5).

பேசி இன்பமுற்றுப் போந்த வீரர்க்கு உப்பு விற்பார் அஞ்சத்தக்க ஏற்றிழிவுடைய துறையை ஒப்பன்—எ - று.

என்னை, புற்கை யுண்டும் பகை வெல்லும் பெருந்தோளனும்; யாம், அவன் சிறைப்புறத்திருந்தும் பசப்பை வெல்லமாட்டாமையால் பொன் போன்றன மெனத் தன் வேட்கை மிகுதி கூறியவாறு.

அன்றி, இதற்கு என்னை புற்கை யுண்டும் வழங்கும் பெரிய தோளையுடையனும் நம்மிடத்து அருளின்மையின், அவன் சிறைப் புறத்திருந்தும் பொன்போற் பசந்தே மென்று அழிந்து கூறியதாகப் பொருளுரைப்பாரும் உளர்.

உமணர் வெரூஉம் துறையன்ன னென்றதனாற் பயன் : வருத்துங் கூற்றின் ஆடவரையும் மகளிரையும் ஒக்க வருத்துவதல்லது அருளு மாறு கற்றிலனே யென்னும் நினைவிற் றுக்குக.

(கு - ரை.) 1. என்னை : புறநா. 78 : 2, குறிப்புரை.

2. தம்மைப் போன்ற மகளிரையு முளப்படுத்தி, 'யாமே' என்றார். புறஞ்சிறை - சிறைப்புறம்.

புறநா. 102 : 1 - 5.

மு. பெண்பாற் கைக்கிளைக்கும் (தொல். செய். சூ. 160, பேர்.), சுட்டியொருவர்ப் பெயர்கொள்ளாத பாடாண்டிணைக் கைக்கிளைக்கும் (தொல். செய். சூ. 160, ந.) மேற்கோள். (அச)

(அரு) என்னைக் கூரிஃ தன்மை யானும்
என்னைக்கு நாடிஃ தன்மை யானும்
ஆடா டென்ப வொருசா ரோரே
ஆடன் றென்ப வொருசா ரோரே
5 நல்ல பல்லோ ரிருநன் மொழியே
அஞ்சிலம் பொலிப்ப வோடி யெம்மில்
முழாவரைப் போந்தை பொருந்திநின்
றியான்கண் டனனவ னாடா குதலே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) என்னுடைய தலைவனுக்கு ஊர் இஃது அல்லாமை யானும் என்னுடைய தலைவனுக்கு நாடு இஃது அல்லாமையானும் அவனுக்கு இயல்பாய வென்றியை அவனது வென்றி யென்று சிறப் பாகச் சொல்லுவர் ஒரு பக்கத்தார்; அவனது வென்றி யன்றென்று சொல்லுவர் ஒரு பக்கத்தார்; பலரும் ஒத்து ஒவ்வாமற் கூறும் இவ்விரு வகைப்பட்ட நல்ல வார்த்தையும் நல்லவாயிருந்தன; அவ்வாறு கூறினராயினும், அழகிய சிலம்பார்ப்ப ஓடிச் சென்று, எம்முடைய

மனையின்கண் முழாப் போலும் பக்கத்தையுடைய பனையைப் பொருந்தி நின்று, *எனது வளையும் கலையும் முதலானவை தோற்கும் ஆண்மையுடைமையின், அவனது வென்றியாதல் யான் கண்டேன்—எ - று.

பின்னும் ஒருகால் என்னை யென்றதனால், †இவரது ஆதரவு தோற்றி நின்றது.

நல்ல வென்றது இகழ்ச்சிக் குறிப்பு.

ஆடென்றதூஉம் ஆடன்றென்றதூஉம் அவனைச் சுட்டியே கூறினமையின், இரு நன்மொழியும் நல்லவென்றாரெனினும் அமையும்.

(கு - ரை.) 1 - 2. புறத்திணைப் பகுதியில் தலைவி, தலைவனை, 'என்னை' என்பதற்கு மேற்கோள்; தொல். பொருளியல், சூ. 52, ந.

3. ஆடு ஆடு : அடுக்குத்தொடர்.

7. புறநா. 375 : 4; "முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணை" (குறுந். 301 : 1).

ஏதாவதொன்றனைச் சார்ந்து நின்று ஒருவரைப் பார்த்தலும் அங்ஙனம் நின்று ஒன்றைக் கேட்டலும் நாணமுடைய குலமகளிர்க்கு இயல்பு; புறநா. 86 : 1 - 2. (அ௫)

(அசு) சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
5 ஈன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

(பி - ம்.) 3 'னுவது'

திணை - வாகை; துறை - ஏறாண்முல்லை.

‡ காவற் (பி - ம். காதற்) பெண்டின் பாட்டு.

(இ - ள்.) சிறிய இல்லின்கண் நல்ல தூணைப் பற்றி நின்று நின் மகன் எவ்விடத் துளனோ வென்று கேட்பை; என்னுடைய மகன் எவ்விடத்துளனாயினும் அறியேன்; புலி கிடந்து போன கன்முழை போல அவனைப் பெற்ற வயிறோ இஃது; அவன் செருக்களத்தின் கண்ணே தோன்றுவன்; அவனைக் காணவேண்டின் ஆண்டுச் சென்று காண்—எ - று.

'ஈன்ற வயிறோ விது' என்ற கருத்து : புலி சேர்ந்து போகிய அளை போல அவனுக்கு என்னிடத்து உறவும் அத்தன்மைத் தென்பதாம்.

ஒருமென்பதூஉம் மாதோவென்பதூஉம் அசைச்சொல்.

---

* புறநா. 83 : 2. † திருச்சிற். 47, உரை.

‡ காவற்பெண்டு - செவிலித்தாய்; மணி. 7 : 58 : சிலப். 29, உரைப்பாட்டு மடை.

(கு - ரை.) 3. புறநா. 282 : 3.

4 - 5. கல் அளை - கல்லாலாகிய குகை. "வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமா லிந்நின்ற, வாடன் முதியாள் வயிற்றிடம் - கூடார், பெரும் படை வெள்ள நெரிதரவும் பேரா, இரும்புலி சேர்ந்த விடம்" (பு. வெ. 54).

5 - 6. நற்குய்க்கும் தனக்கும் வேறுபாடின்மையின், 'ஈன்ற வயிறோ விது' என்று இங்ஙனம் கூறினாள்.

6. போர்க்களத்தான் - போர்க்களத்தின்கண்; உருபு மயக்கம். (அசு)

(அஎ) களம்புக லோம்புமின் றெவ்விர் போரெதிர்ந்
தெம்முளு முளனொரு பொருநன் வைகல்
எண்டேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே.

திணை - தும்பை; துறை - தானைமறம்.

அதியமான் நெடுமான் அஞ்சி (பி - ம். அதிகமானெடுமான் வஞ்சி)யை ஔவையார் பாடியது.

(இ - ள்.) போர்க்களத்தின்கட் புகுதலைப் போற்றுமின், பகைவிர்! போரின்கண் மாறுபட்டு, எங்களுள் வைத்தும் ஒரு வீரன் உளன்; ஒரு நாள் எட்டுத் தேரைச் செய்யுந் தச்சன் ஒரு மாதங் கூடிக் கருதிச் செய்யப்பட்டதொரு * தேர்க்காலை யொப்பன்—எ - று.

போரெதிர்ந்து களம்புக லோம்புமின், எம்முளும் உள னெனக் கூட்டுக.

எம்முளு மென்ற உம்மை, சிறப்பும்மை.

தேர்க்காலோடு உவமை, † விரைவும் திண்மையுமாகக் கொள்க.

(கு - ரை.) தெவ்விர் - பகைவீர்; தெவ் - பகை; புறநா. 170 : 9.

மு. வாகைத்திணையின் துறைகளுள் ஒன்றாகிய, 'அரும்பகை தாங்கு மாற்றல்' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 17, இளம்; சூ. 21, ந. (அஎ)

(அஅ) யாவி ராயினுங் கூழை தார்கொண்
டியாம்பொருது மென்ற லோம்புமி னோங்குதிறல்
ஒளிறிலங்கு நெடுவேன் மழவர் பெருமகன்
கதிர்விடு நுண்பூ ணம்பகட்டு மார்பின்
5 விழவுமேம் பட்ட நற்போர்
முழவுத்தோ ளென்னையைக் காணா வூங்கே.

---

* தேர்க்கால் - தேர்ச் சக்கரம்; புறநா. 32 : 8; "கால்வழேர் கையி னியக்கி" (கலித். 81 : 8.)

† விரைவு : "கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டும்" (பு. வெ. 11).

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) எப்பெற்றிப்பட்டீராயினும், அணியையும் தூசியையும் கொண்டு யாம் அவனோடு பொருவோ மென்று சொல்லுதலைப் பாதுகாமின், உயர்ந்த வலியையுடைய * பாடஞ் செய்யும் விளங்கிய நெடிய வேலையுடைய இளையோர்க்குத் தலைவனாகிய சுடர் விடுகின்ற நுண்ணிய தொழிலையுடைய பூணணிந்த அழகிய வலிய மார்பினையும் † களவேள்வி முதலாகிய விழாச் சிறந்த நல்ல போரைச் செய்யும் முழாப் போலுந் தோளினையுமுடைய என் இறைவனைக் காண்பதற்கு முன்; கண்டால் அது செய்தல் அரிதாகலான்—எ - று.

என்னையைக் காணூ ஊங்கு யாவிராயினும் பொருது மென்றல் ஓம்புமி னெனக் கூட்டுக.

(கு - ரை.) 1. கூழை, அணி - பின்படை. 3. மழவர் - ஒருவகை வீரர்; புறநா. 90 : 11; "உருவக் குதிரை மழவர்" (அகநா. 1 : 2); "கழற்கான் மழவர்", "பெருந்தோண் மழவர்" (மதுரைக். 395, 687). ஒளிறிலங்கு நெடுவேல் : புறநா. 57 : 8.

4. அம்பகட்டு மார்பு : புறநா. 59 : 1, பி - ம்; 96 : 1.

5. புறநா. 84 : 4.

6. ஊங்கு - இங்கே காலமுன்; புறநா. 76 : 3, 141 : 7. (அஅ)

(அசு) இழையணிப் பொலிந்த வேந்துகோட் டல்குல்
மடவர லுண்கண் வாணுதல் விறலி
பொருநரு முளரோநும் மகன்றலை நாட்டெனா
வினவ லானாப் பொருபடை வேந்தே
5 எறிகோ லஞ்சா வரவி னன்ன
சிறுவன் மள்ளரு முளரே யதாஅன்று
பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோ ரென்னு மென்னையு முளனே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) மணிக் கோவையாகிய அணியாற் பொலிந்த ஏந்திய பக்கத்தினையுடைய அல்குலினையும் மடப்பத்தினையும் மையுண்ட கண்ணினையும் ஒளி தங்கிய நுதலினையுமுடைய விறலி! என்னோடு பொருவாரு முளரோ நும்முடைய பெரிய இடத்தினையுடைய நாட்டின்

* புறநா. 57 : 8, குறிப்புரை.

† புறநா. 372 : 12; "அரசுபட வமருழக்கி, முரசுகொண்டு களம் வேட்ட" (மதுரைக். 128 - 9) குறிப்புரை.

கண்ணென என்னைக் கேட்ட லமையாத செருச் செய்யுந் தானையை யுடைய வேந்தே! நீ போர் செய்யக் கருதுவையாயின், எம்முடைய நாட்டின்கண்ணே அடிக்குங் கோலுக்கு அஞ்சாது எதிர் மண்டும் பாம்பு போன்ற இளைய வலிய வீரரும் உளர்; அதுவேயன்றி, மன்றின் கண் தூங்கும் பிணிப்புற்ற முழவினது காற்றெறிந்த தெளிந்த ஓசையையுடைய கண்ணின்கண் ஒலியைக் கேட்பின், அது போர்ப் பறை யென்று மகிழும் என்னுடைய தலைவனும் உளன்—எ - று.

‘தெண்கண்’ என்றது அதன்கண் ஓசையை.

போரென்றது போர்ப்பறையை.

(கு - ரை.) 2. “மடவரல் வள்ளி” (முருகு. 102); “மடவரன் மகளிர்” (பெரும்பாண். 387).

3. நாடு - இங்கே அதிகமானாடு.

4. வினவலானா : புறநா. 70 : 5; “வினவ லானாப் புனையிழை” (அகநா. 29 : 14).

5 - 6. “அராவ ழன்ற தனையதன் னாற்றலால்”, “அரவியற் றறு கண்வன் றாளாள்”, “மூரி வெஞ்சிலை யிராவண னராவென முனிந் தான்” (கம்ப. கரன்வதை. 184, முதற்போர். 151, 239); கதையிற் றாக்கப் படுமர வென்னப் பொங்கி” (காஞ்சிப். பரசிராம. 31).

8. வளிபொரு தெண்கண் - காற்று அடித்தலால் தெள்ளிய கண்ணிலிருந்து உண்டாகிய ஓசை.

7 - 8. புறநா. 128 : 2 - 3.

9. புறநா. 31 : 9, 279 : 7. (௮௯)

(௯௦) உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழுஞ் சாரல்
மறப்புலி யுடலின் மான்கண முளவோ
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
இருளு முண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கிப் பாருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
வரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ
எழுமரங் கடுக்குந் தாடோய் தடக்கை
வழுவில் வன்கை மழவர் பெரும
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரு முளரோ நீகளம் புகினே.

(பி - ம்.) 8 ‘வரிமணன்ஞெமலக்’ 11 ‘வண்கை’

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) முறிந்த வளையை ஒப்ப மலர்ந்த வெண்காந்தட்பூ இலை தழைத்த * குளவியுடனே நாறும் மலைச்சாரற்கண் மறத்தையுடைய புலி சீறின் எதிர் நிற்க வல்ல மானினமும் உளவோ? மயங்கிய ஆகாயத்திடத்தும் திசையின்கண்ணும் செறிந்த இருளும் உண்டோ ஞாயிறு கொதித் தெழுமாயின்? பாரத்து மிகுதியாற் பார் அச்சு மரத் தோடு வந்து தாக்கி உற இருத்தலின் நிலத்தின்கட் † குளித்த பண்டத்தையுடைய சகடத்தினது ஆழ்ச்சியைப் போக்குதற்குப் புனல் கொழிக்கப்பட்ட மணற் பரக்கவும் கற் பிளக்கவும் நடக்க வல்ல மிக்க மனச் செருக்கினையுடைய கடாவிற்குப் போதற்கரிய துறையுமுண்டோ? இல்லையன்றே; அவை போல, கணைய மரத்தை யொக்கும் முழந் தாளிலே பொருந்திய பெரிய கையாகிய தப்பாத வன்மையைச் செய்யும் கையினையுடைய வீரர்க்குத் தலைவ! பெரிய நிலத்தின்கண் நினது மண்ணைக் கொண்டு ஆர்க்கும் வீரரும் உளரோ? இல்லையன்றே, நீ போர்க்களத்திற் புகின்—எ - று.

மழவர் பெரும! நீ களம் புகின் பொருநரும் உளரோ? இல்லை யன்றே யெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

தடக் கையையுடைய பெரும வெனக் கூட்டி, வன்கையை மழவ ரொடு கூட்டி யுரைப்பினும் அமையும்.

இரு நிலமாகிய மண்ணெனன்பாரும் உளர்.

'மதப்பகடு' என்பதூஉம் பாடம்.

(கு - ரை.) 1. வளை - கைவளையல். "இவட்கே, அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோல், இலங்கே ரெல்வளை யிறையூ ரும்மே", "ஊழுறு கோடல்போ லெல்வளை யுகுபவால்", "கமழ்தண்டா துதிர்ந்துக வூழுற்ற கோடல்வீ, இதழ்சோருங் குலைபோல விறைநீவு வளையாட்கு" (கலித். 7 : 15 - 6, 48 : 11, 121 : 13 - 4); "வளையுடைந் தன்ன வள்ளிதழ்க் காந்தள்" (மலைபடு. 519); "துணைமலர்க் காந்த ளூழ்த்துச் சொரிவபோற் றேன்றி முன்கை, அணிவளை நலத்தோ டேங்க" (சீவக. 1742).

1 - 2. காந்தளும் குளவியும்: "இலையடர் தண்குளவி யேய்ந்த பொதும்பிற், குலையுடைக் காந்த ளினவண் டிமிரும்" (ஐந். எழுபது, 3).

3. "பாயும், புலிமுன்னர்ப் புல்வாய்க்குப் போக்கில்" (பழ. 234). மறப்புலி: பதிற். 41 : 7; கலித். 42 : 1; சிலப். 12 : 27; சீவக. 752.

5. "ஞாயிற்று முன்ன ரிருள்போல மாய்ந்ததென், ஆயிழை மேனிப் பசப்பு", "ஞாயிற்று முன்ன ரிருள்போல மாய்ந்ததென், ஆயிழையுற்ற துயர்", "ஆயிழை மடவர லவல மகலப், பாயிருட் பரப்பினைப் பகல்களைந் ததுபோல்" (கலித். 42, 145, 148).

---

* குளவி - மலைமல்லிகை; புறநா. 168 : 12, உரை.

† 'குளித்த' என்ற இவ்வுரைக்குரிய மூலமாகிய 'இயங்கிய' என்பது 'இங்கிய' என்றிருக்க வேண்டுமென்று தோற்றுகிறது.

7. சொல்லிய : புறநா. 39 : 1.

8. ஞெமரல் - பரத்தல்.

6 - 9. புறநா. 60 : 7 - 9, குறிப்புரை.

8 - 9. 'வரிமணன்...உண்டோவென்றாற் போலும் உவமப் பொருள்களும் இக்காலத்திற்கு ஆகாவாயின' (தொல். செய். சூ. 80, ந.).

10. எழுமரம் - கோட்டைக் கதவின் உட்புறத்தே குறுக்காகப் போடப்படும் வலிய மரம்; புறநா. 97 : 8; கணைய மரமெனவும் வழங்கும்; "முழுவிறற் கணையம்" (சிலப். 15 : 215) என்பதன் உரையைப் பார்க்க. தாடோய் தடக்கை : புறநா. 59.: 2, குறிப்புரை.

11. வழுவில் வன்கை : "கருணையாற் குழைக்குங் கைகள், வாளமர் நீந்தும் போழ்தின் வழுவழுத் தொழியு மென்றான்" (சீவக. 257). (௯௦)

(௯௧) வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
ஆர்கலி நறவி னதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீத் தனையே.

(பி - ம்.) 1 'வளம்' 3 'முழவினதிகர் கோமான்', 'நறவினுதியர் கோமான்' 9 - 10 'தீங்கனிகுறையாது காதனின்' 11 'வெனக்கீத் தோயே', 'வெமக்கீத் தோயே'

திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்தியல்.

அவனை அவர் நெல்லிப் பழம் பெற்றுப் பாடியது.

(இ - ள்.) வென்றியுண்டான தப்பாத வாளை யெடுத்துப் பகைவர் களத்தின்கட் பட வென்ற கழல இடப்பட்ட வீரவளை பொருந்திய பெரிய கையினையுடைய மிக்க ஆரவாரத்தைச் செய்யும் மதுவினையுடைய அதியர் கோமான்! மாற்றாரைப் போரின்கட் கொல்லும் வீரச் செல்வத்தினையும் பொன்னாற் செய்யப்பட்ட மாலையையுமுடைய அஞ்சி! நீ, பால்போலும் பிறை நுதல் போலப் பொலிந்த திருமுடியினையும் நீலமணி போலும் கரிய திருமிடற்றினையுமுடைய ஒருவனைப் போல நிலை பெறுவாயாக; பெரும! நீ, பழைய நிலைமையையுடைய பெரிய மலையிடத்து விடரின்கண் அரிய உச்சிக்கட் கொள்ளப்பட்ட சிறிய இலையினையுடைய நெல்லியின் இனிய பழத்தைப் பெறுதற்கரி

தென்று கருதாது அதனாற் பெறும் பெரும் பேற்றினை எமக்குக் கூறாது நின்னுள்ளே அடக்கிச் சாதல் ஒழிய எமக்கு அளித்தாயாதலால்— எ - று.

'நீல மணிமிடற் றொருவன் போல' என்ற கருத்து, * சாதற்குக் காரணமாகிய நஞ்சுண்டும் நிலைபெற்றிருந்தாற் போல நீயும் சாவா திருத்தல் வேண்டு மென்பதாம்.

அதியர்கோமான்! அஞ்சி! நெல்லித் தீங்கனி எமக்கு ஈத்தாயாத லால், பெரும! நீ நீலமணிமிடற் றொருவன் போல மன்னுக வெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

'பிறைநுதற் பொலிந்த சென்னி' என்பதற்குப் பிறைதான் நுதலிடத்தே பொலிந்த சென்னி யெனினும் அமையும்.

(கு - ரை.) 2. களம்படக் கடத்தல்; புறநா. 91 : 2; "செங்களம் படக்கொன்று" (குறுந். 1 : 1). கழறொடி : புறநா. 128 : 5.

3. 'அதியர்' என்பது குடிப் பெயர்.

4. திருவிற்பொலந்தார் : புறநா. 10 : 10, குறிப்புரை.

6. தன்னுடைய ஆக்கங் கருதாமல் விடத்தையுண்டு பல்லுயிர் களையும் காத்தருளிய புண்ணியனாதலின், நீலமணிமிடற் றொருவனை உவமை கூறினார்; "போகம் மீன்ற புண்ணியன்" (சீவக. 362) என் பதையும் அதன் உரையையும் பார்க்க.

5 - 6. 'பால்புரை பசுங்கதிர்க் குழவித்திங்களைக் குறுங்கண்ணி யாக வுடைய அழலவிர் சோதி யருமறைக் கடவுள்' (இறை. சூ. 1, உரை). பிறைநுதற் சென்னி ஒருவன்: புறநா. 1 : 9, குறிப்புரை; 55 : 4 - 5, குறிப்புரை. "மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறை நுதன், முக்கண்ணான்" (கலித். 104 : 11 - 2).

7. புறநா. 6 : 28.

8. 'விடரகம்' என்பது அம் மலைப் பெயராகவும் கருதப்படு கின்றது; அகநா. 271, பார்க்க. விடரகம் : புறநா. 37 : 4; கலித். 103 : 19.

9. "சிறியிலை நெல்லிக்காய்", "சிறியிலை நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்" (அகநா. 284, 291).

10. 'அடக்கி' என்றது ஆழமுடைமையை; "அட்டதை, மகிழ்ந் தன்று மலிந்தன்று மதனினு மிலனே" (புறநா. 77) என்பதும் அது.

9 - 11. "மால்வரைக், கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி, அமிழ்து விளை தீங்கனி யௌவைக் கீந்த...அதிகனும்" (சிறுபாண். 99 - 103), "பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனையும், ஆங்குவரு பாற் பெண்ணை யாற்றினையும் - ஈங்கு, மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றி னைவை, அறுப்பித்தா யாமலகந் தந்து" (ஔவையார் பாட்டு), 'இனிய கனிக ளென்றது ஔவை யுண்ட நெல்லிக்கனி போல அமிழ்தான

* "விண்ணோ ரமுதுண்டுஞ் சாவ வொருவரும், உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்" (சிலப். 12 : 'துண்ணென் றுடியொடு').

வற்றை' (குறள், 100, பரிமேல்.), "நெல்லியம் தௌவைக் களித்து நெடு வேலதிகன், மல்குபுகழ் கொண்டான் வடமலையே" (வடமலை வெண்பா) என்பவை இந்தச் சரித்திரத்தைப் புலப்படுத்தும். (௯௧)

(௯௨) யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை
என்வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்
கடிமதி லரண்பல கடந்த
நெடுமா னஞ்சிநீ யருளன் மாறே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) யாழோசை போல இசையால் இன்பமும் செய்யா; காலத்தோடும் கூடியிரா; பொருளும் அறிய வாரா; ஆயினும், தந்தையர்க்கு அருளுதல் வந்தன பிள்ளைகளுடைய இளஞ் சொல்; என்னுடைய வாயின்கட் சொல்லும் அத்தன்மையன, பகைவரது காவலையுடைத்தாகிய மதிலையுடைய அரண் பலவற்றையும் வென்ற நெடுமானஞ்சி! நீ அருளுதலால்—எ - று.

புதல்வர் மழலை தந்தையர்க்கு அருள் வந்தன; அஞ்சி! நீ அருளுதலால், என் வாய்ச் சொல்லும் அன்ன வெனக் கூட்டுக.

யாழென்றது, யாழிற் பிறந்த ஓசையை.

பொருளுமென்னும் உம்மை, விகாரத்தால் தொக்கது.

(கு - ரை.) 3. மழலை - எழுத்து வடிவு பெறுது தோற்றும் இளஞ் சொல்; "மெய்பெறு வெழுத்துயிர்க்கு மழலை" (சீவக. 181).

1 - 3. "அத்தத்தா வென்னுநின், றேமொழி கேட்ட லினிது" (கலித். 80 : 14 - 5); "அவர்மழலை கேட்ட லமிழ்தினு மினிதே" (இனியது நாற்பது, 15); "குழலினி தியாழினி தென்பதம் மக்கள், மழலைச்சொற் கேளா தவர்" (குறள், 66); "எழுத்தி னுறழாது வழுத்து பொரு ளின்றிக், குறிப்பொடு படாஅது வெறித்தபுன் சொல்லே, ஆயினும் பயந்ததஞ் சேயவர் சொலுமொழி, குழலினும் யாழினு மழகி தாம்" (திருக்கழுமலமும்மணி. 28 : 2 - 5); "செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால், அப்பொ ருட்குரை யாவருங் கொள்வரால், இப்பொ ருட்கென் னுரைசிறி தாயினும், மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால்" (பெரிய. பாயிரம், 7). (௯௨)

(௯௩) திண்பிணி முரச மிழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது வந்தோர்
தார்தாங் குதலு மாற்றார் வெடிபட்
டோடன் மரீஇய பீடின் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்

காதன் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழன் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர் மாதோ
வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்
தண்ணல் யானை யடுகளத் தொழிய
அருஞ்சமந் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே.

(பி - ம்.) 9 'வாளமர்'

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவன் பொருது புண்பட்டு நின்றோனை அவர் பாடியது.

(இ - ள்.) திண்ணிய பிணிப்பையுடைய முரசம் இழுமென்னும் ஓசையை யுடைத்தாய் ஒலிப்ப மேற்சென்று போரை வெல்லுதல் இனி எங்கே யுள்ளது? நின்னோடு எதிர்ந்து வந்தோர், நினது தூசிப் படையைப் பொறுத்தற்கும் மாட்டாராய்ச் சிதறிக் கெட்டுப் போகலிலே மருவிய பெருமையில்லாத அரசரது நோயின் பக்கத்தான் இறந்த உடம்பை யணைத்துத் தமது ஆசைத் தன்மையை மறந்து அவர் வாளாற் படாத குற்றம் அவரிடத்தினின்றும் நீக்க வேண்டி அறத்தை விரும்பிய கோட்பாட்டையுடைய நான்கு வேதத்தையுமுடைய அந்தணர் நல்ல கூற்றிலே பொருந்திய பசிய தருப்பைப் புல்லைப் பரப்பினராய்க் கிடத்தித் தமது ஆண்மையே பற்றுக்கோடாக நல்ல பூசலிலே பட்ட மேம்பட்ட வீரக் கழலினையுடைய வேந்தர் செல்லும் உலகத்திலே செல்க வென்று வாளோக்கி யடக்கும் இழிதகவும் பிழைத்தார்கள், வரியையுடைய தேனீ ஒலிக்கும் வாயின்கண் வந்து புகுகின்ற மதத்தினையுடைய தலைமை பொருந்திய யானை போர்க்களத்தின் கண்ணே படப் பொறுத்தற்கரிய பூசற்கண்ணே சிதற வெட்டி, பெரிய தகைமையையுடையாய்! நீ சீரிய புண்பட்டபடியால்—எ - று.

பெருந்தகாய்! நீ அருஞ்சமம் ததைய நூறி விழுப்புண் பட்ட வாற்றால் நின்னோடு எதிர்த்து வந்தோர் தாம் பீடின் மன்னர் விளிந்த யாக்கை தழீஇ நீள்கழன் மன்னர் செல்வுழிச் செல்கென வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தன ராதலின், இனி நின்னோடு எதிர்ப்பார் இன்மையின், முரசு முழங்கச் சென்று அமர் கடத்தல் யாவதெனக் கூட்டுக.

சென்றமர் கடத்தல் யாவ தென்றதனானும் வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தன ரென்றதனானும் வந்தோர் பட்டமை விளங்கும்.

* இன்னும் இதற்கு நின் வாளாற் பட்டுத் துறக்கம் பெற்றதேயன்றி வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனராகலின், அவர்க்குப் பிறர்மேற் சென்று அமர்கடத்தல் என்ன பயனுடைத்தென் றுரைப்பினும் அமையும்.

இனி, வந்தோராகிய மன்னர் நீ விழுப்புண்பட்டபடியாலே வாள் போழ்ந்தடக்கலும் உய்ந்தார்; இனி நின்னோடு எதிர்ப்பா ரின்மையின் மேற்சென்று அமர்கடத்தல் யாவதெனக் கூட்டி அதற்கேற்ப உரைப் பாரும் உளர்.

தார்தாங்கலு மென்ற உம்மை இழிவுசிறப்பு.

வாள்போழ்ந்தடக்கலு மென்பது, நினக்குத் தொலைந்தா ரென்னும் இழிதகவேயன்றித் தமர் வாள்போழ்ந்தடக்கும் இழிவையும் உய்ந்தன ரென எச்சவும்மையாய் நின்றது.

(கு - ரை.) 1. "ஏம முரச மிழுமென முழங்க" (புறநா. 3 : 3).

2. சென்றமர் கடத்தல் : புறநா. 66 : 4. யாவது : 62 : 1.

3. வெடிபட்டு - சிதறி.

7. முருகு. 180.

9. நன். சூ. 451, மயிலை. மேற்.

10. செல்வுழிச் செல்க : நன். சூ. 163, வி : இ - வி. சூ. 68, உரை. மேற்.

10 - 11. நன். 228, மயிலை; இ - வி. சூ. 139, உரை, மேற்.

8 - 11. புறநா. 74 : 1 - 2, குறிப்புரை.

12. வாய்புகுகடாம் : "வாயிழி கடாத்த வான்மருப் பொருத்தல்" (கலித். 46 : 3); "நாகம் வாய்வழி கடாத்த தாகி" (சீவக. 753).

11 - 2. வண்டுபடு பூநாறு கடாஅஞ் செருக்கி" (மணி. 19 : 21 - 2).

12 - 3. புறநா. 22 : 6; "வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத் துப், பொறிநுதற் பொலிந்த வயக்களிறு" (அகநா. 78 : 3 - 4); "வரிவண் டார்க்கும் வாய்புகு கடாஅத்த, அண்ணல் யானை" (தொல். களவியல், சூ. 11, ந. "எண்ணியது"); "சுரும்புணக் களித்த புகர்முக வேழம்" (ஐங்குறு. 239); "வரிவண் டோங்குய ரெழில்யானைக் கனைகடாம்" (கலித். 66 : 2 - 3); "தண்மதந் திவண்ட வண்டு தங்கிய காட்டுள் வேழம்" (சீவக. 2313).

15. விழுப்புண் - முகத்தினும் மார்பினும் பட்ட புண்; குறள், 776, பரிமேல்.

மு. வஞ்சித்திணைத் துறைகளுள், 'அடுத்தூர்ந்தட்ட கொற்றம்' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 7, இளம். (கக)

---

* இப் பொருள், "நோற்றோர் மன்றநின் பகைவர் நின்னொடு, மாற்றா ரென்னும் பெயர்பெற், றாற்றா ராயினு மாண்டுவாழ் வோரே" (புறநா. 26 : 16 - 8) என்பதை நினைப்பிக்கின்றது.

(கூச) ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும வெமக்கே மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெருமநின் னொன்னா தோர்க்கே.

(பி - ம்.) 2 'நீர்த்துறைப்படி'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) ஊரின்கட் சிறுபிள்ளைகள் தனது வெள்ளிய கோட்டைக் கழுவுதல் காரணமாக நீரையுடைய துறைக்கட்படியும் பெரிய களிறு அவர்க்கு எவ்வாறு எளிதாய் இனிதாம்? அவ்வாறே எங்களுக்குப் பெரும! இனியை; மற்று அதனுடைய அணைதற்கரிய மதம்பட்ட நிலைமை எவ்வாறு இன்னாதாம்? அதுபோலப் பெரும! நின் பகைவர்க்கு இன்னாய்—எ - று.

கழாஅலி னென்பதற்குக் கழுவப்படுதலா லெனினும் அமையும்.

(கு - ரை.) 1. ஊர்க்குறு மாக்கள்: புறநா. 104 : 2; "ஒலித் தொருங் கீண்டிய வூர்க்குறு மாக்களும்" (மணி. 15 : 59). குறுமாக்கள்: புறநா. 159 : 7; நற். 220 : 4: கலித். 82 : 9; மதுரைக். 461; மணி. 13 : 40. கழால் - கழுவுதல்.

4. புறநா. 3 : 8.

மு. பாடாண்டிணைத் துறைகளுள், 'இயன்மொழி' என்பதற்கு மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 29, இளம்.); "ஊர்க்குறு மாக்க ளென்னும் பாட்டினுள் உவமையாகிய பொருளினை யானையும் கடாமு மென்று இரண்டாக்கி யானைக்கே ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாலின் நீர்த்துறை படியு மென்னும் அடைகூறி ஊர்க்குறு மாக்கள் போல்வாரைத் துன்னருங் கடாத்திற்குச் சொல்லாமையின் இதுவும் வேறுபட வந்த உவமத் தோற்ற மெனப்பட்டது" (தொல். உவம. சூ. 32, பேர்.). (கூச)

(கூரு) இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்
உண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணும்
இல்லோ ரொக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே.

திணை - பாடாண்டிணை; துறை - வாண்மங்கலம்.

அவன் தூதுவிடத் தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட * அவர் பாடியது.

(இ - ள்.) இவைதாம், பீலி அணியப்பட்டு மாலையைச் சூட்டப் பட்டு உடலிடம் திரண்ட வலிய காம்பை அழகுபடச் செய்யப்பட்டு நெய்யிடப்பட்டுக் காவலையுடைய அகன்ற கோயிலிடத்தன; அவை தாம், பகைவரைக் குத்துதலாற் கங்கும் நுனியும் முரிந்து கொல்லனது பணிக்களரியாகிய (வேலை செய்யும் கொட்டிலாகிய) குறிய கொட்டி லிடத்தனவாயின எந்நாளும்; செல்வமுண்டாயின் உணவு கொடுத்து இல்லையாயின் உள்ளதனைப் பலரோடு கூடவுண்ணும் வறியோருடைய சுற்றத்திற்குத் தலைவனாகிய தலைமையையுடைய எம் வேந்தனுடைய கூரிய நுனியையுடைய வேல்—எ - று.

பீலியணிந்தென்பது முதலாகிய வினையெச்சம் நான்கும் வியனகர வென்னும் குறிப்புவினையோடு முடிந்தன; இவற்றைச் செயவெனெச்ச மாகத் திரிப்பினும் அமையும்.

'சிதைந்து.......குற்றில' என்பது † பழித்ததுபோலப் புகழ்ந்து கூறப்பட்டது.

இவை வியனகர; வைந்நுதி வேலாகிய அவை கொற்றுறைக்குற்றி லிடத்தன வெனக் கூட்டுக.

வினைக்குறிப்பாகலின் ஆக்கம் கொடுக்கப்பட்டது.

இது கொடைச் சிறப்பும் வென்றிச் சிறப்பும் கூறியவாறு.

(கு - ரை.) 1. இவ் - இவை; என்றது தொண்டைமான் ஆயுதங் களை. வேலுக்குப் பீலி அணிதல்: "தொடையமை பீலிப் பொலிந்த கடிகை, மடையமை திண்சுரை மாக்காழ் வேல்" (அகநா. 119 : 12 - 3).

2. காழ் - காம்பு.

3. புறநா. 272; 4; "கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்" (நெடுநல். 49).

5. கொல்துறை - கொல்லனது துறை. "அழலவாய்க் கிடந்தவை வேல்" (சீவக. 1865) என்பதற்கு, 'கொல்லனுலையை விரும்பின வேல்' என்று பொருள் கூறி, 'கொற்றுறைக் குற்றில' என்பதனை மேற் கோள் காட்டினர் நச்சினார்க்கினியர்.

8. "கற்றவர் நற்றுணை பாண ரொக்கல்" (திருச்சிற். 400).

மு. வாகைத்திணைத் துறைகளுள், 'பெரும்பகை தாங்கும் வேல்' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 17, இளம்; சூ. 21, ந.

அதிகமானுடைய படைக்கலத்தைப் புகழ்ந்து கூறினமையால் இது வாண்மங்கல மாயிற்று. (சுரு)

* "இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற், குறுதி பயப்பதாந் தூது" (690) என்னும் குறளின்படி தம்முடைய அரசனது மேம்பாட்டை வேற்று வேந்தனிடத்து ஔவையார் இச் செய்யுள் வாயிலாக எடுத்துக் கூறிய வன்மை மிகவும் பாராட்டற்பாலது. † தண்டி. சூ. 64.

(கூசு) அலர்பூந் தும்பை யம்பகட்டு மார்பிற்
திரண்டுநீடு தடக்கை யென்னை யிளையோற்
கிரண்டெழுந் தனவாற் பகையே யொன்றே
பூப்போ லுண்கண் பசந்துதோ ணுணுகி
5 நோக்கிய மகளிர்ப் பிணித்தன் றொன்றே
விழவின் றாயினும் படுபதம் பிழையாது
மையூன் மொசித்த வொக்கலொடு துறைநீர்க்
கைமான் கொள்ளு மோவென
உறையுண் முனியுமவன் செல்லு மூரே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவன் மகன் பொகுட்டெழினியை அவர் பாடியது.

(இ - ள்.) மலர்ந்த பூவையுடைய தும்பைக் கண்ணியை அணிந்த அழகிய வலிய மார்பினையும் திரண்டு நீண்ட பெரிய கையினையுமுடைய என் இறைவன் மகன் இளையோனுக்குப் பகை இரண்டு தோன்றின; அவற்றுள் பூப்போலும் வடிவினையுடைய மையுண்ட கண்கள் பசப்பத் தோள் மெலியத் தன்னைப் பார்த்த மகளிரை நெஞ்சு பிணித்ததனால் அவர் துனி கூறுதலின் உள்ளதாயது ஒரு பகை; அவன் எடுத்து விட்டுச் சென்றிருக்கும் ஊர், விழாவில்லையாயினும், உண்டாக்கப்படும் உணவு யாவர்க்கும் தப்பாமற் செம்மறியாட்டுத் தசையைத் தின்ற சுற்றத்துடனே யாறும் குளனும் முதலாகியவற்றின் துறைநீரை அவன் யானை முகந்துண்ணுமெனக் கருதி அவ்விடத்துறைதலை வெறுக்கும்; அவ் வெறுத்ததனால் உளதாயது ஒரு பகை; ஆகப் பகை இரண்டு— எ - று.

பசந்து நுணுகி என்னும் செய்தெனெச்சங்களைச் செயவெனெச்சமாக்கி, அவற்றைப் பிணித்தன்றென்னும் வினையோடு முடிக்க.

ஓகாரம்: அசைநிலை.

இதனால், அவன் இன்பச் சிறப்பும் வென்றிச் சிறப்பும் கூறியவாறு.

(கு - ரை.) 1. அம்பகட்டு மார்பு: புறநா. 88 : 4.

5. பிணித்தன்று - கட்டியது. 6. பதம் - உணவு.

7. மொசித்தல் - உண்டல்; "மொய்கொண் மாக்கண் மொசிக்க வூண் சுரந்தனள்" (மணி. 19 : 136); "மொசிவா யுழுவை" (பெருங். 2. 17 : 24). 8. கைமான் - யானை.

9. "முனிதல் - வெறுத்தல்; அஃது அருளும் சினமுமின்றி இடை நிகர்த்தாதல்; 'வாழ்க்கை முனிந்தான்' என்றும், 'உறையுண் முனியு மவன் செல்லு மூரே' என்றும் சொல்லுபவாதலின்" (தொல். மெய்ப் பாடு. சூ. 12, பேர்.).

7 - 9. புறநா. 15 : 9 - 10, 16 : 6, 23 : 2. (கூசு)

(௯௭) போர்க்குறைஇப் புகன்றுகழித்தவாள்
உடன்றவர்காப்புடை மதிலழித்தலின்
ஊனுற மூழ்கி யுருவிழந் தனவே
வேலே, குறும்படைந்த வரண்கடந்தவர்
நறுங்கள்ளி னாடுநைத்தலிற்
சுரைதழீஇய விருங்காழொடு
மடைகலங்கி நிலைதிரிந்தனவே
களிறே, எழூஉத்தாங்கிய கதவுமலைத்தவர்
குழூஉக்களிற்றுக் குறும்புடைத்தலிற்
பரூஉப்பிணிய தொடிகழிந்தனவே
மாவே, பரந்தொருங்கு மலைந்தமறவர்
பொலம்பைந்தார் கெடப்பரிதலிற்
களனுழந் தசைஇய மறுக்குளம் பினவே
அவன்றானும், நிலந்திரைக்குங் கடற்றானைப்
பொலந்தும்பைக் கழற்பாண்டிற்
கணைபொருத துளைத்தோலன்னே
ஆயிடை, உடன்றோ ருய்தல் யாவது தடந்தாட்
பிணிக்கதிர் நெல்லின் செம்மன் மூதூர்
நுமக்குரித் தாகல் வேண்டிற் சென்றவற்
கிறுக்கல் வேண்டுந் திறையே மறுப்பின்
ஒல்வா னல்லன் வெல்போ ரானெனச்
சொல்லவுந் தேறீ ராயின் மெல்லியற்
கழற்கனி வகுத்த துணைச்சில் லோதிக்
குறுந்தொடி மகளிர் தோள்விடல்
இறும்பூ தன்றஃ தறிந்தா டுமினே.

(பி - ம்.) 9 'குரூஉக்களிற்றுக்'

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமானஞ்சியை அவர் பாடியது.

(இ - ள்.) போரைச் செய்தற்குப் புடைபெயர்ந்து உலாவி விரும்பி உறை கழித்த வாள்கள்தாம், பகைத்தவரது காவலையுடைய அரணை அழித்தலால் அவர் தசையின்கண்ணே உறக்குளித்துக் *கதுவாய்போய் வடிவிழந்தன; அவன் வேல்கள்தாம், குறும்பர் சேர்ந்த அரண்களை வென்று அப் பகைவரது நறிய மதுவையுடைய நாட்டை

* கதுவாய்போய் - வடுமிக்கு (பெருங். 1. 35 : 166, குறிப்புரை); "அரக்கன் கதுவாய்த் தலைகள்பத் தலறியிடக் கண்டான்", "கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக் கண்டா லடியார் கவலாரோ" (தேவாரம்).

அழித்தலாற் சுரையோடு பொருந்திய கரிய காம்புடனே ஆணி கலங்கி நிலைகெட்டன; அவன் களிறுதாம், கணையமரத்தால் தடுக்கப்பட்ட கதவைப் பொருது அப் பகைவரது திரண்ட களிற்றையுடைய அரணை அழித்தலாற் பரிய பிணித்தலையுடையவாகிய கிம்புரிகள் கழன்றன; அவன் குதிரைதாம், பரந்து வந்து ஒக்கப் பொருத வீரரது பொன்னாற் செய்யப்பட்ட பசிய மாலையையுடைய மார்பு உருவழிய ஓடுதலாற் போர்க்களத்தின்கட் பொருது வருந்திய குருதியான் மறுப்பட்ட குளம்பை உடையவாயின; அவன்தானும், நிலவகலத்தைத் தன்னுள்ளே அடக்கும் கடல் போன்ற படையுடனே பொன்னானியன்ற தும்பைக் கண்ணியையுடைய, கழல்வடிவாகவும் கிண்ணிவடிவாகவும் செய்து செறிக்கப்பட்டு அம்பு படுதலால் துளைபட்ட பரிசையை யுடையன்; அவ்விடத்து அவனால் வெகுளப்பட்டோர் பிழைத்தல் எங்கே யுள்ளது? * பெரிய தாளினையும் ஒன்றோடொன்று தெற்றிக் கிடக்கின்ற கதிரினையும் உடைத்தாகிய நெல்லினையுடைய தலைமை பொருந்திய பழைய ஊர் நுங்கட்கு உரித்தாக வேண்டு வீராயிற் போய் அவனுக்குத் திறை கொடுத்தல் வேண்டும்; கொடீராயின், அதற்கு உடம்படுவானல்லன் வெல்லும் பூசலையுடையா னென்று யான் சொல்லவும் தெளியீராயின், நுமக்கு, மெல்லிய தன்மையையும் கழன்மணியினது கனியாப் கூறுபடுத்துச் சுருட்டப் பட்ட இனமாகிய சிலவாகிய பனிச்சையையும் குறிய வளையையு முடைய உரிமை மகளிரது தோளைப் பிரிந்துறைதல் வியப்பன்று; அதனை அறிந்து போர் செய்ம்மின்—எ - று.

அறிந்தாடுமி னென்ற கருத்து, அறியிற் போர்செய்தல் அரிதென்ப தாம். குறும்பு - சிற்றரண்.

கடற்றானையினையும், பொலந்தும்பையினையுமுடைய அவன்றானு மென்க.

(கு - ரை.) 4. குறும்பு - அரண்; அதிலுள்ளவர்க்கானமையின் ஆகுபெயர்.

4 - 7. "மடையமை திண்சுரை மாக்காழ்வேல்", "மாக்காழ் நெடுவேல்" (அகநா. 119, 369); "காழ்மண் டெஃகம்" (மதுரைக். 739; மலைபடு. 129).

6. சுரை - உட்டுளையையுடைய இரும்பு.

8 - 9. புறநா. 3 : 9 - 11, 4 : 10 - 11.

ழகரஉகரவீற்றுச் சொற்கள் நீண்டு உகரம் பெறுதற்கு மேற் கோள்; தொல். உயிர்மயங் கு. சூ. 59, ந; இ - வி. சூ. 95, உரை.

8 - 10. "கடிமதிற் கதவம் பாய்தலிற் றொடிபிளந்து, நுதிமுக மழுகிய மண்ணை வெண்கோட்டுச், சிறுகண் யானை", "பெருங்கதவு பொருத யானை மருப்பின், இரும்புசெய் தொடியி னேர வாகி",

---

* தடவென்பதற்கு வளைவெனப் பொருள்கொண்டு, கதிர்க்கனத் தாலே வளைந்த தாளெனலுமாம்; "முடந்தைநெல்" (பதிற். 26; 3,32 : 13).

"அடுகளம் பாய்ந்த தொடிசிதை மருப்பிற், பிடிமிடை களிற்றிற் றோன்றும்" (அகநா. 24 : 11 - 3, 26 : 6 - 7, 99 : 12 - 3).

11 - 3. புறநா. 98 : 5 - 7.

12. தார் - மார்பு; ஆகுபெயர்.

14. "நிலந்திரைத்தானை" (சிலப். 26 : 187); "நிலந்திரைப் பன்ன தானையோய் நினக்கே" (பதிற். விட்டுப் போன பகுதி, 1 : 10).

15. புறத்திணைமாலை பொன்னாற் செய்யப்படல் : புறநா. 22 : 20.

16. புறநா. 4 : 5.

17. "கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சும், செழுங்கூடு கிளைத்த விளந்துணை மகாரின், அலந்தனர் பெருமநின் னுடற்றி யோரே" (பதிற். 71 : 6 - 8).

18 - 20. புறநா. 51 : 6 - 7. பிணிக்கதிர் - பிணித்தலையுடைய கதிர். செம்மல் - தலைமை. திறை - கப்பம். (கூஎ)

(கூஅ) முனைத்தெவ்வர் முரணவியப்
பொரக்குறுகிய நுதிமருப்பினின்
இனக்களிறு செலக்கண்டவர்
மதிற்கதவ மெழுச்செல்லவும்
பிணனழுங்கக் களனுழக்கிச்
செலவசைஇய மறுக்குளம்பினின்
இனநன்மாச் செலக்கண்டவர்
கவைமுள்ளிற் புழையடைப்பவும்
மார்புறச் சேர்ந்தொல்காத்
தோல்செறிப்பினின் வேல்கண்டவர்
தோல்கழியொடு பிடிசெறிப்பவும்
வாள்வாய்த்த வடுப்பரந்தநின்
மறமைந்தர் மைந்துகண்டவர்
புண்படுகுருதி யம்பொடுக்கவும்
நீயே, ஐயவி புகைப்பவுந் தாங்கா தொய்யென
உறுமுறை மரபிற் புறநின் றுய்க்கும்
கூற்றத் தனையை யாகலிற் போற்றார்
இரங்க விளிவது கொல்லோ வரம்பணைந்
திறங்குகதி ரலம்வரு கழனிப்
பெரும்புனற் படப்பையவ ரகன்றலை நாடே.

திணை - வாகை; துறை - அரசவாகை; திணை - வஞ்சியும், துறை கொற்றவள்ளையுமாம்.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) போர்முனைக்கட் பகைவரது மாறுபாடு அடங்கப் பொருதலால் தேய்ந்து குறைந்த நுனையுடைத்தாகிய கோட்டை யுடைய நினது இனமாகிய யானை போகக் கண்ட பகைவர் தமது மதில் வாயிற் கதவங்களும் கணையமரங்களும் புதியனவாக இடுதற்குப் பழையன போக்கவும், பட்டோரது பிணம் உருவழியப் போர்க் களத்தை உழக்கிச் செல்லுதலால் வருந்திய குருதிக்கறை பொருந்திய குளம்பையுடைய நினது இனமாகிய நல்ல குதிரை போகக் கண்ட அப் பகைவர்தாம் கவைத்த வேலமுள்ளாற் காட்டுவாயில்களை அடைப் பவும், நின் பகைவரது மார்பின்கண் எறிந்தவழி ஆண்டுத் தைத்து நில்லாது உருவிப்போன *உறையின்கட் செறித்தலில்லாத நின் வேலைக் கண்ட பகைவர் தமது கிடுகைக் காம்புடனே கைந்நீட்டுச் செறிக் கவும், வாள்வாய்க்கத் தைத்த வடுப் பரந்த நின்னுடைய மறத்தை யுடைய வீரரது வலியைக் கண்ட அப் பகைவர் புண்பட்ட குருதியை யுடைய அம்பைத் தூணியகத்து அடக்கிக் கொள்ளவும், நீதான் † வெண்சிறுகடுகைக் காவலாகப் புகைப்பவும் தரியாது விரைய வந்து பொருந்துதல் முறைமையையுடைய இயல்பிற் புறத்தே நின்று உயிரைக் கொடுபோதும் கூற்றத்தை ஒப்பை; ஆதலாற் பகைவர் இரங்கக் கெடுவதுகொல்லோ! ‡ வரம்பைச் சேர்ந்து வளையும் நெற்கதிர் சுழலும் கழனியொடு மிக்க நீர்ப்பக்கத்தையுடைய அவரது அகன்ற இடத்தையுடைய நாடு—எ - று.

செல்லவு மென்பது முதலாய செயவெனெச்சங்கள் கூற்றத் தனையை யென்னும் வினைக்குறிப்பொடு முடிந்தன.

நீ கூற்றத்தனையை யாகலிற் போற்றார் நாடு அவரிரங்க விளிவது கொல்லெனக் கூட்டுக.

கொல்லும் ஓவும் அசைநிலை.

(கு -ரை.) 5 - 7. புறநா. 97 : 11 - 3; "எறிபிண மிடறிய செம் மறுக் குளம்பிற், பரியுடை நன்மா" (பதிற். 65 : 1 - 2).

8. புழை - சிறிய வாயில்.

11. "கழிப்பிணிக் கறைத்தோல்" (அகநா. 24 : 14, 67 : 13).

15. புறநா. 296 : 2.

19. புறநா. 49 : 5; "இறங்குகதிர்க் கழனியும்" (சிலப். 14 : 2).

அரசனது இயல்பின் மிகுதியைக் கூறினமையின் அரசவாகையும், பகைவர் நாட்டின் அழிவைக் கூறினமையின் கொற்றவள்ளையு மாயிற்று இச் செய்யுள். (கூஅ)

* "உறைகழிப் பறியா வேலோ னூரே" (புறநா. 323 : 7).

† "ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர்தூஉய்...........யாங் காப்ப" (பு. வெ. 79).

‡ "அங்க ணகல்வய லார்பெயற் கலித்த, வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க" (நெடுநல். 21 - 2).

(கக) அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
அரும்பெறன் மரபிற் கரும்பிவட் டந்தும்
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல
ஈகையங் கழற்கா லிரும்பனம் புடையற்
பூவார் காவிற் புனிற்றுப்புலா னெடுவேல்
எழுபொறி நாட்டத் தெழாஅத் தாயம்
வழுவின் றெய்தியு மமையாய் செருவேட்
டிமிழ்குரன் முரசி னெழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் னாற்ற றோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை யின்றும்
பரணன் பாடினன் மற்கொன் மற்றுநீ
முரண்மிகு கோவ லூர் நூறிநின்
அரணடு திகிரி யேந்திய தோளே.

(பி - ம்.) 1 'பேணியாகுதி'

திணையும் துறையும் அவை.

அவன் கோவலூரெறிந்தானை அவர் பாடியது.

(இ - ள்.) தேவர்களைப் போற்றி வழிபட்டும் அவர்களுக்கு வேள்விக்கண் ஆவுதியை அருந்துவித்தும் பெறுதற்கரிய முறைமையை யுடைய கரும்பை விண்ணுலகத்தினின்று இவ்வுலகத்தின்கட் கொடுவந்து தந்தும் கடலுக்குட்பட்ட நிலத்தின்கண்ணே சக்கரத்தை நடாத்திய பழைய நிலைமை பொருந்திய முறைமையையுடைய நின் குடியிற் பழையோரை யொப்பப் பொன்னாற் செய்யப்பட்ட வீரக் கழல் புனைந்த காலினையும் பெரிய பனந்தோடாகிய தாரினையும் பூநிறைந்த காவினையும் நாடோறும் புதிய ஈரம் புலராத புலாலையுடைய நெடிய வேலினையுமுடைய ஏழிலாஞ்சனையும் நாடுதலையுடைய ஒரு நாளும் நீங்காத அரசவுரிமையைத் தப்பின்றுகப் பெற்றும் அமையா யாய்ப் போரை விரும்பி ஒலிக்கும் ஓசை பொருந்திய முரசினையுடைய ஏழரசரோடு பகைத்து மேற்சென்று போரின்கண் வென்று நின் வலியைத் தோற்றுவித்த அற்றை நாளும் பாடுவார்க்குப் பாட அரியை; இற்றை நாளும் பரணன் பாடினன், நீ மாறுபாடு மிக்க கோவலூரை அழித்து வென்று பிறவும் அரண்களை அழிக்கின்ற ஆழியைத் தாங்கிய நினது தோளை—எ - று.

இன்றும் பரணன் பாடினனென்றது, * அவனும் தன் பெருமை யாற் பாடினன்; பிறராற் பாடப்படுதலரி தென்றதாம்.

---

* இங்கே பரணரைப் பாராட்டிக் கூறியதுபோல, புறநா. 53 : 11 - 3-ஆம் அடிகளிற் கபிலரைக் கூறியிருத்தல் கருதற்பாலது.

நின் ஆற்றல் தோற்றிய அன்றும் பாடுநர்க்கு அரியை; திகிரியேந்திய தோளை இன்றும் பரணன் பாடினனெனக் கூட்டுக.

கழற்காலையும் புடையலையும் காவையும் வேலையுமுடைய நின் முன்னோர் போலத் தாயமெய்தியும் அமையாயென மாறிக் கூட்டுக.

நாடுதல் - ஆய்தல்.

'மூவரொடு முரணி' என்றும், 'முரணடுதிகிரி' என்றும் பாடம்.

கொல் : ஐயம். மன் : அசைநிலை.

பூவார் கா - வானோர் இவன் முன்னோர்க்கு வரங் கொடுத்தற்கு வந்திருந்ததொரு கா.

இவனுக்குப் பனந்தார் கூறியது, சேரமாற்கு உறவாதலின் (பி - ம். உதியவேந்தாதலின்).

எழுபொறிநாட்டமென்பதற்கு ஏழரசர் நாடும் கூடி ஒரு நாடாய் அவ்வேழரசர் பொறியும் கூடிய பொறியோடு கூடிநின்று நன்மையும் தீமையும் ஆராய்த லெனினும் அமையும்.

(கு - ரை.) 1. மு. பட்டினப். 200, ஞானமிர்தம், 17.

பேணென்னும் உரிச்சொல் பெட்பின்பொருளில் வருதற்கு மேற்கோள் : தொல். உரி. சூ. 42, தெய்வச்.; சே.; சூ. 40, ந.; இ - வி. சூ. 281, உரை.

2. இவன் முன்னோர் விண்ணுலகத்திலிருந்து இவ்வுலகத்திற்குக் கரும்பைக் கொண்டு வந்தனரென்பது புறநா. 392 : 19 - 21 ஆம் அடிகளாலும் அறியப்படும்.

3. நீரக இருக்கை - பூமி.

5. ஈகை - பொன்; புறநா. 353 : 3. புடையல் - மாலை; "மாயிரும் புடையன் மாக்கழல் புனைந்து", "இரும்பனம் புடைய லீகை வான் கழல்", "இரும்பனம் புடையலொடு வான்கழல் சிவப்ப", "புடையலங் கழற்கால்" (பதிற். 37 : 8, 42 : 1, 57 : 2, 80 : 7); "புடையலங் கழற்கால்" (அகநா. 295 : 13).

7. எழுபொறி - ஏழிலாஞ்சனை; இவை ஏழரசர்க்குரியன; இது, "கேழன் மேழிகலை யாளி வீணைசிலை கெண்டை யென்றினைய பல்கொடி" (கலிங்கத். கடவுள். 18) என்பதனாலும் ஒருவாறு விளங்குகின்றது. (௯௯)

(௧௦௦) கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்
வட்கர் போகிய வளரிளம் போந்தை
உச்சிக் கொண்ட வூசி வெண்டோடு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்

சுரியிரும் பித்தை பொலியச் சூடி
வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னு மாறாது சினனே யன்னோ
உய்ந்தன ரல்லரிவ னுடற்றி யோரே
செறுவர் நோக்கிய கண்டன்
சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னவே.

திணையும் துறையும் அவை. (பி - ம். திணை - வாகை; துறை - அரசவாகை.)

அதியமான் தவமகன் பிறந்தவனைக் கண்டானை அவர் பாடியது.

(இ - ள்.) கையின்கண்ணது வேலே; காலின்கண்ணது அணிந்த வீரக் கழல்; உடம்பின்கண்ணது வேர்ப்பு; மிடற்றின்கண்ணது ஈரம் புலராத பசிய புண்; பகைவர் தொலைதற்கு ஏதுவாகிய வளரும் இளைய பனையினது உச்சிக்கண்ணே வாங்கிக்கொள்ளப்பட்ட ஊசித்தன்மையைப் பொருந்திய வெளிய தோட்டையும் வெட்சியினது பெரிய மலரையும் வேங்கைப்பூவுடனே விரவிச் சுருண்ட கரிய மயிர் பொலிவு பெறச் சூடிப் புலியொடு பொருத வலிய யானையையொப்ப இன்னமும் நீங்காது, சினம்; ஆதலால், ஐயோ! பிழைத்தாரல்லர், இவனைச் சினப்பித்தவர்கள்; பகைவரை; வெகுண்டு பார்த்த கண் தன்னுடைய புதல்வனைப் பார்த்தும் சிவப்பு அமையா வாயின—எ - று.

காலன புனைகழ லென்பது வீரத்திற்கும் வென்றிக்கும் கட்டின; போர்தோறும் வென்று கட்டின வெனவுமாம்.

உம்மை : சிறப்பு.

தோட்டையும் மலரையும் வேங்கையொடு விரைஇச் சூடிச் செறுவர் நோக்கிய கண் சிறுவனை நோக்கியும் சிவப்பான; ஆதலால், அன்னோ! இவனுடற்றியோர் உய்ந்தனரல்லரெனக் கூட்டி வினை முடிவு செய்க.

வட்கா ரென்பது வட்கரெனக் குறுகி நின்றது: வட்கர் - குற்ற மெனினும் அமையும்.

(கு - ரை.) 1. கழல் : "ஆடவர் கொடைவீ ரத்தா லணிவது கழ லென் றுமே" (சூடாமணி. 7 : 26).

காலன புனைகழல் : "வில்லோன் காலன கழலே" (குறுந். 7).

2. மிக்க கோபமுற்றோர்க்கு உடம்பில் வேர்வை தோன்றுதல் இயல்பு : "வெயர்பொடிப்பச் சினங்கடைஇ" (பு. வெ. 139). உடம்பு முழுதும் புண்படப் போர்செய்தல் வீரர்க்கு இயல்பாதலின், இவனுக்கு மிடற்றுப்புண் கூறப்பட்டது; புறநா. 180 : 5 - 6; "விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள், வைக்குந்தன் னாளை யெடுத்து"

(குறள், 776), "சீறுஞ் செருவிற் றிருமார்பிற் றெண்ணூறும், ஆறும் படுதழும்பி னுகத்தோன்" (குலோத்துங்கசோழனுலா) என்பவற்றி லும் இங்ஙனம் கூறப்பட்டிருத்தல் காண்க.

3 - 4. வட்கர் - பகைவர். "வட்கர் போகிய வான்பனந் தோட் டுடன், புட்கைச் சேனை பொலியச் சூட்டி...வஞ்சி சூடுதும்" (சிலப். 25 : 146 - 9).

6. மு. பொருந. 160. 5 - 6. புறநா. 265 : 2 - 4.

7 - 8. "கதழ்வாய் வேழம், இருங்கேழ் வயப்புலி வெரீஇ யயலது, கருங்கால் வேங்கை யூறுபட மறலிப், பெருஞ்சினந் தணியுங் குன்ற நாட", "வயக்களிறு பொருத வாள்வரி வேங்கை, கன்முழைச் சிலம்பிற் குழுமும்" (நற். 217 : 2 - 5, 255); "கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு, நெடுவரை மருங்கிற் றுஞ்சும் யானை" (கலித். 49 : 1 - 2); "புலியொடு பொருது சினஞ்சிறந்து வலியோ, டுரவுக்களி றொதுங்கிய மருங்கு", "குயவரி யிரும்போத்துப் பொருத புண்கூர்ந், துயங்குபிடி தழீஇய மதனழி யானை" (அகநா. 291, 398); "குருஉப்புலி பொருத புண்கூர் யானை" (மலைபடு. 517); சிலப். 25 : 29.

"வரிவயம் பொருத......சினனே : என்பதனுள் அலைபற்றிச் சினம் பிறந்தது; என்னை? புலியான் அலைக்கப்பட்ட யானை பொருது போந் தும் அவ்வலைப்புண்டலை நினைந்து சினங்கொள்ளாநின்ற தென்றமை யின்" (தொல். மெய்ப். சூ. 10, பேர்.); இ - வி. சூ. 578, மேற்.

9. புறநா. 61 : 16 - 7.

10. புதல்வன் பிறந்தவுடன் அவன் முகத்தைத் தந்தை பார்த்து மகிழவேண்டு மென்பது தருமநூல் விதி; இதனை, 'சிறப்பாவன பிறந்து புதல்வன் முகங்காண்டலும்' (தொல். கற்பு. சூ. 5, ந.), "மாமுனி தன் னொடு மன்னர் மன்னவ, னேமுறப் புனல்படீஇ வித்தொ டின்பொருள், தாமுற வழங்கிவெண் சங்க மார்ப்புறக், கோமகார் திருமுகங் குறுகி நோக்கினுன்" (கம்ப. திருவவதார. 112) என்ப வற்றுலும் அறிக.

தலைவனது இயல்பைக் கூறினமையால், இதுவும் அரசவாகை யாயிற்று. (க00)

(க0க) ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே

அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

(பி - ம்.) 2 'பன்னாள்' 3 'தலைநாள் விருப்பி னன்ன பேணலன்' 10 'வாழ்கவவன்'

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) யாம் ஒருநாட் செல்லேம்; இரண்டுநாட் செல்லேம்; பல நாளும் பயின்று பலரோடுகூடச் செல்லினும் முதற்சென்ற நாள் போன்ற விருப்பத்தை யுடையன், அணிகலம் அணிந்த யானையையும் இயன்ற தேரையுமுடைய அதியமான்; பரிசில் பெறுங்காலை நீட்டிப் பினும் நீட்டியாதொழியினும், யானை தனது கொம்பினதிடையே வைக்கப்பட்ட கவளம் போல நமது கையகத்தது, அப் பரிசில்; அது தப்பாது; உண்ண ஆசைப்பட்ட நெஞ்சே! நீ பரிசிற்கு வருந்த வேண்டா; அவன் தாள் வாழ்வதாக—எ - று.

அதியமான் விருப்பினனெனை முன்னே கூட்டுக.

கோட்டிடை வைத்த கவளம் போல வென்றதற்கு யானைவாயிற் கொண்டு நுகரும் அளவும் கோட்டிடை வைத்த கவளம் போலப் பரிசில் கையகத்தது வென்க; அன்றிக் களிறு கோட்டிடை வைத்த கவளத்தைச் சிறிது தாழ்த்ததாயினும் அஃது அதற்குத் தப்பாதவாறு போலப் பரிசில் சிறிது தாழ்ப்பினும் நமக்குத் தருதல் தப்பாதென்ப தாக்கி உரைப்பினும் அமையும்.

தாளை முயற்சி யென்பாரும் உளர்.

அருந்த வென்பது அருந்தெனக் கடைக்குறைக்கப்பட்டது; அருந் தென முன்னிலையேவலாக்கி உரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 1. செல்லலமிரண்டையும் எச்சமாக்கினும் பொருந்தும்.

1 - 2. "பன்னா ணிற்பினுஞ் சேர்ந்தனிர் செலினும்" (மலைபடு. 452); "ஒருநாள் வாரல னிருநாள் வாரலன், பன்னாள் வந்து" (குறுந். 176 : 1 - 2).

1 - 3. புறநா. 58 : 28, குறிப்புரையும், "தலைநா ளன்ன பேணலன்" (நற். 332), "பெருவரை யடுக்கத்துக் கிழவ னென்றும், அன்றை யன்ன நட்பினன்" (குறுந். 385), "தண்டாக் காதலுந் தலை நாட் போன்மே" (அகநா. 332), "அன்றை யன்ன விருப்பொடு" (குறிஞ்சிப். 238), "தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து, பலநாள் நிற்பினும்" (மலைபடு. 565 - 6), "பன்னாளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழை, யென்னாணும் வேண்டுப வென்றிகழ்ப - வென்னாளும், வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர், காண்டொறுஞ் செய்வர் சிறப்பு" (நாலடி. 159), "தலைநாள் விழைவொடு" (வி. பா. குருகுல. 79) என்பனவும் ஈண்டு அறியற்பாலன.

4. அணிபூ ணணிந்த யானை : புறநா. 151 : 3 - 4, 153 : 2.

6 - 7. "தேம்படு கவுள சிறுகண் யானை, ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த, வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத், தயினுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டென" (முல்லைப். 31 - 4).

9. ஏமாந்த - ஆசைப்பட்ட; புறநா. 198 : 8; பொருந. 98; "இரப்போர்க் காணா தேமாந் திருப்ப" (மணி. 14 : 50).

10. தாள்வாழ்க வென்றல் மரபு : புறநா. 70 : 19, 103 : 12, 171 : 15. (க0க)

(க0உ) எருதே யிளைய நுகமுண ராவே
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே
அவலிழியினு மிசையேறினும்
அவண தறியுநர் யாரென வுமணர்
கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோய் திங்கள்
நாணிறை மதியத் தனையையிருள்
யாவண தோநின் னிழல்வாழ் வோர்க்கே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவன் மகன் பொருட்டெழினியை அவர் பாடியது.

(இ - ள்.) எருதுகள் இளைய; தாம் நுகம் பூண்டலை யறியா (பி - ம். மதியா); சகடந்தான் பண்டம் பெரிதாக இடப்பட்டது; ஆதலால், அது பள்ளத்தே இழியினும் மேட்டிலே ஏறினும் அவ்விடத்து வரும் இடையூறு அறிவார் யார்தாமென்று நினைந்து உப்பு வாணிகர் அச்சு மரத்தின்கண்ணே அடுத்துக் கட்டப்பட்ட சேமவச்சுப் போன்ற புகழ் விளங்கிய இடக்கவிந்த கையையுடைய உயர்ந்தோய்! நீ திங்களாகிய நாள் நிறைந்த மதியத்தை யொப்பை; ஆதலின், நின் நிழற்கண் வாழு மவர்கட்குத் துன்பமாகிய இருள் எவ்விடத்துள்ளது?—எ - று.

திங்கள் நாணிறை மதியத் தனையை யென்றது, * அறிவும் நிறைவும் அருளும் முதலாகிய குணங்களால் அமைந்தா யென்றவாறும்.

சேமவச்சன்ன வென்றது, ஏற்றிழிவுடைய வழி அச்சு முறிந்துழிச் சேமவச்சு உதவினாற்போல நீ காக்கின்ற நாட்டிற்கு ஓரிடையூறு உற்றால் அதுநீக்கிக் காத்தற்குரியை யென்பதாம்.

* முருகு. 98; மதுரைக். 769, ந.

'எருதே யிளைய நுகமுண ராவே, சகடம் பண்டம் பெரிது பெய் தன்றே' என்பது * உவமங் கருதாது சகடத்திற்கு வரும் ஏதங் குறித்து உமணர் சேமவச்சு யாத்தற்குக் காரணமாய் நின்றது.

(கு - ரை.) 2. பின்பு உமணர் என்றதனால், பண்டமென்பது உப்பைக் குறிக்கும்.

5. "கீழ்மரத் தியாத்த சேமவச்சன்ன வென்றுற் போலும் உவமப் பொருள் இக் காலத்திற்கு ஆகாதாயிற்று" (தொல். செய். சூ. 80, ந.).

சேமவச்சு - காவலாகிய அச்சு.

6. கவிகை : புறநா. 54 : 7, குறிப்புரையும், "தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை" (மலைபடு. 399) என்பதன் பொருளையும் பார்க்க.

6 - 7. "பன்மீ னுப்பட் டிங்கள் போலப், பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை" (பதிற். 90); "பன்மீ னடுவட் பான்மதி போல, இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி" (சிறுபாண். 219 - 20); "பன்மீ னடுவட் டிங்கள் போலவும், பூத்த சுற்றமொடு பொலிந்து" (மதுரைக். 769 - 70); "பூண்மின்னு மார்பன் பொலிந்தாங் கிருந்தான் விசும்பிற், கோண்மின்னு மீன்சூழ் குளிர்மாமதித் தோற்றமொத்தே" (சீவக. 882.) (௧௦௨)

(௧௦௫) ஒருதலைப் பதலை தூங்க வொருதலைத்
தூம்பகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கிக்
கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரெனச்
சுரன்முத லிருந்த சில்வளை விறலி
செல்வை யாயிற் சேணோ னல்லன்
முனைசுட வெழுந்த மங்குன் மாப்புகை
மலைசூழ் மஞ்சின் மழகளி றணியும்
பகைப்புலத் தோனே பல்வே லஞ்சி
பொழுதிடைப் படாஅப் புலரா மண்டை
மெழுகுமெல் லடையிற் கொழுநிணம் பெருப்ப

---

* "உவமப் பொருளி னுற்ற துணரும், தெளிமருங் கிலவே திறத்திய லான" (தொல். உவம. சூ. 20) என்பதையும், "இனி, உவமத்தின் உற்றது உணர்க வென்றது 'பொருள்' என்றதனாற் பொருட்கு அடுத்த அடையும் உவம அடைக்கேற்றது உணரப் படாதன களையப்படு மென்பது. அது, 'பாசடை நிவந்த கணைக்கா னெய்தல், இனமீ னிருங்கழி யோத மல்குதொறும், கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்' (குறுந். 9) என்றவழி, பாசடை நிவந்த, கணைக்கா லென நெய்தலாகிய பொருட்கு வந்த அடையிரண்டும் கண்ணெனப் பட்ட உவமத்திற்கு ஏற்ப வாராமையான் அவை தெளிமருங்கில வென்று களைந்து கொள்க" என்னும் பேராசிரியர் உரையையும் பார்க்க.

அலத்தற் காலை யாயினும்
புரத்தல் வல்லன் வாழ்கவன் றாளே.

(பி - ம்.) 10 - 11 'பரிப்ப, வறத்தற்காலை'

திணை - அது; துறை - விறலியாற்றுப்படை.

அதியமான் நெடுமானஞ்சியை அவர் பாடியது.

(இ - ள்.) காவினது ஒருதலைக்கண்ணே பதலை தூங்க ஒருதலைக் கண்ணே துளையை அகத்தேயுடைய சிறிய முழாவைத் தூங்கும்பரிசு தூக்கி, இடுவோரின்மையின் *ஏலாது கவிழ்ந்த என் மண்டையை இட்டு மலர்த்த வல்லார் யாரெனச் சொல்லிச் சுரத்திடத்தேயிருந்த சில வாகிய வளையையுடைய விறலி! நீ அவன்பாற் போவையாயின் அவன் சேய்மைக் கண்ணனல்லன்; முனைப்புலத்தைச் சுடுதலான் எழுந்த இருட்சியையுடைய கரிய புகை மலையைச் சூழும் முகில்போல இளங் களிற்றைச் சூழும் பகைவர் தேயத் திருந்தான், பல வேற்படையை யுடைய அதியமான்; ஒருபொழுதும் ஓயாமல் உண்ணவும் தின்னவும் படுதலான் ஈரம் புலராத மண்டை மெழுகான் இயன்ற மெல்லிய அடை போலக் கொழுத்த நிணம் மிக உலகம் வறுமையுறுதலையுடைய கால மாயினும் பாதுகாத்தலை வல்லன்; அவன்றாள் வாழ்க—எ - று.

பதலை யென்பது ஒருதலை முகமுடையதொரு தோற்கருவி.

பகைப்புலத்தோ னென்ற கருத்து : † பகைவர்பால் திறை கொண்ட பொருளுடையனாதலின், நீ வேண்டியவெல்லாந் தருதல் அவனுக்கு எளிதென் பதாம்.

உம்மை : சிறப்பு.

சேணோனல்ல னென்பதற்குப் பரிசில் நீட்டிப்பானல்ல னென்று உரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 1. தூங்க - தொங்க. 1 - 2. புறநா. 139 : 1, 152 : 14 – 8; "நரம்பின் றீந்தொடை பழுனிய, வணரமை நல்யா ழிளையர் பொறுப்பப், பண்ணமை முழவும் பதலையும் பிறவும், கண்ணறுத் தியற் றிய தூம்பொடு சுருக்கிக், காவிற் றகைத்த துறைகூடு கலப்பையர்" (பதிற். 41 : 1 - 5); "திண்வார் விசித்த முழவொ டாகுளி, நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில், மின்னிரும் பீலி யணிதழைக் கோட் டொடு,...நொடிதரு பாணிய பதலையும்...நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்" (மலைபடு. 3 - 13).

3. மண்டை - ஒருவகை உண்கலம்; வாணாய்; புறநா. 115 : 2, 125 : 3, 179 : 2 - 3; "பிழற்பெய் மண்டை" (மணி. 6 : 92).

4. சில்வளை விறலி : புறநா. 60 : 5, குறிப்புரை.

6, புறநா. 6 : 22, 23 : 9 - 10, 57 - 7.

---

* புறநா. 179 : 2 - 3. † புறநா. 22 : 26 - 8.

10. "நல்வரி யிருஅல் புரையு மெல்லடை" (மதுரைக். 624); "தேனி ருலன தீஞ்சுவை யின்னடை" (சீவக. 2674).

9 - 10. புறநா. 125 : 1 - 3, 386 : 5.

12. புறநா. 70 : 19, 101 : 10, குறிப்புரை. (௧௦௩)

(௧௦௪) போற்றுமின் மறவீர் சாற்றுது நும்மை
ஊர்க்குறு மாக்க ளாடக் கலங்கும்
தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை
நுண்பல் கரும நினையா
திளையனென் றிகழிற் பெறலரி தாடே.

(பி - ம்.) 4 'வெந்தை'

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) நீங்கள் பாதுகாமின், மறவீர்! நுமக்கு நாங்கள் அறிவிப்பேம்; ஊரின்கண் இளம்புதல்வர் ஆடக் கலங்குகின்ற காலளவான அளவிற்பட்ட நீருள்ளே * யானையைக் கொன்று வீழ்க்கும் இழுத்தலையுடைய முதலையை யொக்கும் என் இறைவனது நுண்ணிய பல கருமத்தையும் நினையாதே அவனை இளையனென்று மதியாதிருப் பின் நுங்களுக்கு வென்றி பெறுதல் அரிது—எ - று.

மறவீர்! நுமக்குச் சாற்றுதும்; என்னை இளையனென்று இகழின் வென்றி பெறுதல் அரிது; ஆதலால், நீர் போற்றுமின் எனக் கூட்டுக.

மீப்புடை யென்றோதி, மிகுதியையுடையவென்று உரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 1. மறவீர் - வீரர்களே. நும்மை : உருபுமயக்கம்.

2. ஊர்க்குறு மாக்கள் : புறநா. 94 : 1, குறிப்புரை; கலித். 82 : 9.

4. கராம் - முதலை விசேடம்; இதனை, "கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமும்" (257) என்னும் குறிஞ்சிப் பாட்டாலும் அதன் உரையாலும் உணர்க. என்னை : புறநா. 78 : 2, குறிப்புரை.

3 - 4. "உரவுக்களிறு கரக்கு மிடங்க ரொடுங்கி" (மலைபடு. 211).

1 - 4. "என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை, முன் னின்று கன்னின் றவர்" (குறள், 771). 6. ஆடு - வென்றி.

மறவர்களை நோக்கிக் கூறியதுபோலத் தலைவனது வென்றி கூறிய வாறு. (௧௦௪)

---

* குறள், 495.

(கoரு) சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினு மருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே.

திணை - பாடாண்டிணை; துறை - விறலியாற்றுப்படை.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

(இ - ள்.) சிவந்த அணியைப் பெறுகுவை, ஒளி தங்கிய நுதலினை யுடைய விறலி! பெரிய இடத்தையுடைய * சுனையின்கண் தழைத்த கரிய இதழையுடைய நீலத்தினது வண்டு மொய்க்கும் புதிய மலரின் கட் குளிர்ந்த துளி கலக்க மழை பெய்யினும் பெய்யாதொழியினும் அருவி கொள்ளிற்கு உழுத பரந்த நிலத்திடை நீரோடு காலாக ஓடக் † கண்ணேணியையுடைய நெடிய மலையினது சிகரந்தோறும் இழிதரும் நீரினும் மிக இனிய மென்மையையுடைய வேள் ‡ பாரிபக்கலே நீ பாடிச் செல்லின்—எ - று.

விறலி! பாரிவேள்பாற் பாடினை செலின், சேயிழை பெறுகுவை யெனக் கூட்டுக.

அவன்மலை யாதலால், எக்காலமும் அருவி கோடுதோ றிழிதரு மெனப்பட்டது.

புதுமலர்த் தண்சிதர் கலாவப் பெய்யினும் பெய்யாதாயினும் உழை காலாகக் கோடுதோ றிழிதரும் அருவிநீரினும் இனியவென இயையும்.

எனவே அவன் குணங்கள் தோன்றி நின்றன.

(கு - ரை.) 1. விறலி இழைபெறுதல்: புறநா. 11 : 11 - 7, குறிப் புரை; "செல்லா யோதில் சில்வளை விறலி, மலர்ந்த வேங்கையின் வயங்கிழை யணிந்து, மெல்லியன் மகளி ரெழினலஞ் சிறப்ப" (பதிற். 40 : 21 - 3).

2. தடவு - தாழியுமாம்; "தாழியுண் மலர்ந்த தண்செங் குவளை" (பெருங். 3. 5 : 87); "தாழிவாய்க் குவளை", "தாழிவாய் மறைக்குந்

* புறநா. 116 : 1, குறிப்புரை.

† கண்ணேணி - கணுக்களிலேயே அடிவைத்து ஏறிச் செல்லும் படி அமைந்துள்ள மூங்கில்.

‡ பாரியின் பெருமையை, "கொடுக்கிலா தானைப் பாரியே யென்று கூறி னுங்கொடுப் பாரிலை"(தே. சுந்தர.), "களியானை செம்பொன்றரும், பாரி" (தஞ்சை. 37), "பன்னுக மாமணி பாவலர்க் கீந்திடும் பாரி" (கரவைவேலன் கோவை, 113) என்பவற்றுலும் உணர்க.

தண்ணென் றடம்பெருங் குவளைக் கண்ணார்" (சீவக. 833, 2974); "தாழிவாய்க் குவளையும்" (சூளா. நகரச். 9); "தாழிநறுங் குவளையந் தார்த் தருமன்" (வி. பா. வசந்தகால. 18). தடவுவாய்: அன்மொழித் தொகை.

3. கலாவ: காரியப் பொருட்டு.

6. மால்பு: "கலைகை யற்ற காண்பி னெடுவரை, நிலைபெய் திட்ட மால்புநெறி யாக" (மலைபடு. 315 - 6); "ஈவிளை யாட நறவிளை வோர்ந் தெமர் மால்பியற்றும், வேய்விளை யாடும்வெற்ப" (திருச்சிற். 135).

6 - 7. "பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்" (குறுந். 196); "பாரி தீம்பெரும் பைஞ்சுனை பூத்த, தேங்கமழ் புதுமலர்" (அகநா. 78).

7 - 8. "வானி நீரினுந் தீந்தண் சாயலன்" (பதிற். 86); "தன் மலை, நீரினுஞ் சாய லுடையன்", "வேனிற் புனலன்ன நுந்தை" (கலித். 42, 84); "புனலஞ் சாயல்...நன்னன்" (மலைபடு. 61 - 4).

மு. புறநா. 109 : 16 - 8, 111, 128 : 5 - 7, 158 : 1 - 4, 337 : 6 - 7.

விறலியாற்றுப்படைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 36, 91, ந. (௧௦௫)

(௧௦௬) நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் பேணே மென்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
5 கடவன் பாரி கைவண் மையே.

(பி - ம்.) 3 'வேண்டேமென்னா'

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) நல்லனவென்றும் தீயனவென்றும் சொல்லப்படுவன சூடும் பூவாதலால் அவை இரண்டினும் வைத்து எண்ணப்படாத குவிந்த பூங்கொத்தினையும் புல்லிய இலையையுமுடைய எருக்கம் பூவாயினும் ஒருவனுடையவற்றைத் தெய்வங்கள் விரும்பேமென்னா; அதுபோல, யாதும் அறிவில்லாதாரும் புல்லிய குணங்களையுடையாரும் செல்லினும் பாரி கைவண்மை செய்தலைக் கடப்பாடாகவுடையன்— எ - று.

'குவியிணர்ப் புல்லிலை யெருக்கம்' என்றது முதற்கேற்ற அடையடுத்த ஆகுபெயர்.

உம்மை: இழிவுசிறப்பு.

மெல்லிய ரென்பதற்கு வறுமையுற்றா ரென்றும் உரைப்பர்.

(கு - ரை.) 2. "புல்லெருக்கங் கண்ணி" (தொல். களவி. சூ. 56, சே. "ஒல்லேம்"); "துன்னியவூ ரினும்விரைசார்ந் தறியாத புல்லெருக்குஞ் சூடிக் கொண்டாய்" (வாட்போக்கிக் கலம்பகம், 99). (௧௦௬)

(க0எ) பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) பாரி பாரியென்று சொல்லி அவன் பல புகழையும் வாழ்த்தி அவ்வொருவனையே புகழ்வர், செவ்விய நாவையுடைய அறிவுடையோர்; பாரியாகிய ஒருவனுமே அல்லன், மாரியு முண்டு, இவ்விடத்து உலகத்தைப் பாதுகாத்தற்கு—எ - று.

உலகு புரத்தற்கு மாரியும் உண்டாயிருக்கப் பாரி யொருவனைப் புகழ்வர் செந்நாப் புலவரெனப் * பழித்தது போலப் புகழ்ந்தவாறு.

(கு - ரை.) 4. 'புரப்பதற்கு' என்னும் நான்கனுருபு செய்யுள் விகாரத்தால் தொக்கது, 'ஐந்தவித்தான் ஆற்றல்' என்புழிப் போல.

மு. பாடாண்டிணைத்துறைகளுள், கொடுப்போரேத்தற்கு (தொல். புறத்திணை. சூ. 29, இளம்; சூ. 35, ந.) மேற்கோள்; 'உவமிக்கப்படும் பொருளொடு உவமை தோன்ற வருதலேயன்றி உவமையது தன்மை கூறலும் உவமையாதற் குரித்துப் பயனிலை பொருந்திய வழக்கின்கண் என்றவாறு; எனவே, இவ்வாறு வருவது பயனிலையுவமைக்கணென்று கொள்க; பாரி பாரி...புரப்பதுவே: இது மாரிபோலும் பாரியது கொடையென்னுது இவ்வாறு கூறும் பொருண்மையும் உவமமாம் எ - று' (தொல். உவம. சூ. 36, இளம்.); "உவமத் தன்மையும்" என்னும் உவம. 34 - ஆம் சூத்திரத்தில், "அது 'பாரி பாரி...புலவர்' என்னும் பாட்டினுள் உலகளித்தற்கு மாரியு முண்டெனப் பாரியை உவமித்துச் சிறப்பித்துக் கூறுவான் மாரியைச் சிறப்பித்துப் பாட்டுடைத் தலைவனுகிய பாரியை உயர்த்துக் கூருதான்போல இயல்பினுன் உவமை கூறினும்; இது மாரிக்கும் பாரிக்கும் ஓரிழிவில்லை என்னுந் தன்மை படக் கூறவே அவன் உயர்வு கூறுதலிற் பயனிலை புரிந்த வழக்கெனப் படுமென்பது" என்றனர் பேராசிரியர்; விலக்குவமையின்பாற்படு மென்பர் தண்டியுரையாசிரியரும், இலக்கணவிளக்க வுரையாசிரியரும் (தண்டி. சூ. 38; இ. வி. சூ. 645, உரை); குறிப்புவமையின்பாற்படு மென்பர் காரிரத்ந கவிராயர்; மாறன். சூ. 100.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு" (குறள், 211) என்பது ஈண்டு அறியத்தக்கது. (க0எ)

---

* புறநா. 95, உரை.

(க௦௮) குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
ஆர மாதலி னம்புகை யயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்
பறம்பு பாடின ரதுவே யறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னு னவர்வரை யன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) குறத்தி மடுத்தெரிக்கப்பட்ட வற்றிய கடைக்கொள்ளி சந்தனமாதலால் அதன் அழகியதாகிய புகை அதற்கு அருகாகிய சாரற்கண் வேங்கையின் பூங்கொம்பின்கட் பரக்கும் பறம்பு பாடுவார்க்குக் கூறிட்டுக் கொடுத்தலின் அவருடையதாயிற்று; தன்மத்தைப் பரித்துப் பாரியும் பரிசிலர் வேண்டுவாராயின் அவ்வழி வாரே னென்னுனாய் அவரெல்லையின்கண்ணே நிற்பன்—எ - று.

சந்தனப் புகை வேங்கையின்மிசைத் தவழும் பறம்பெனவே, * இவை யொழிய மரமின்மையும், பகைவர் சுடும் புகையின்மையும் கூறியவாருயிற்று.

(கு - ரை.) 2. புறநா. 320 : 12.

1 - 2. "சாந்த விறகி னுவித்த புன்கம்" (புறநா. 168 : 11).

1 - 3. "புனத்து, வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே, எறிபுனந் தீப்பட்டக் கால்" (நாலடி. 180).

4 - 6. "அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார், என்பு முரியர் பிறர்க்கு" (குறள், 72).

5 - 6. "தம்மை மாறியும் புரிவது தருமமந் நாடு" (திருவிளை. நாட்டு. 59).

பகைவர் சுடுதலை, 'எரிபரந்தெடுத்தல்' என்னும் துறையென்று தொல்காப்பியரும், ஊர்கொலை உழபுலவஞ்சி முதலிய துறைகளின் பாற்படுமென்று ஐயனாரிதனாரும் கூறுவர். (க௦௮)

---

* 'சாந்தம் ஏருதென்றது, மரமாயிற் சாந்தமே உள்ளதென்று' (அகநா. 2 : 6, உரை); 'கொன்றையே என்ற ஏகாரத்தால் மற்ற விருட்சங்களுள் ஒன்றுமின்று என்றவாறு', 'சந்தனத்தையும் அகிலையும் காடென்று விருத்தியிட்டது; நீ எழுந்தருளியிருக்கும் அவ் வனத்தில் மற்று விருட்சமில்லை' (தக்க. 62, 228, உரை).

(கoக) அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே.

(பி - ம்.) 2 'முரசம்' 5 'பழம்வீழ்க்கும்' 7 'பாயமீ தழிந்து' 9 'அகன் மலையே வான்கணத்து' 10 - 11. 'ஆங்குப், புலந்.............. தேரினராயினும், மரந்...களிற்றினராயினும்' 13 'வாளிற்கொள்ள லிற்று ளிற்றூரலன்' 16 'விரைபொலி'

திணை - நொச்சி (பி - ம். காஞ்சி); துறை - மகண்மறுத்தல்.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) இரங்கத்தக்கது, பாரியுடைய பறம்பு, பெருமையைக் கொண்ட முரசினையுடைய நீயிர் மூவேந்தரும் சூழினும்; உழவரால் உழுது விளைக்கப்படாதன நான்கு விளையுளையுடைத்து; அவற்றுள், முதலாவது, சிறிய இலையையுடைய மூங்கிலினது நெல் விளையும்; இரண்டாவது, இனிய சுளையையுடைய பலாவினது பழம் ஊழ்க்கும்; மூன்றாவது, கொழுவிய கொடியையுடைய வள்ளிக்கிழங்கு தாழ விருக்கும்; நான்காவது, அழகிய நிறத்தையுடைய ஓரி பாய்தலான் அதன்மேற் பவரழிந்து (பி - ம் பவணழிந்து) கனத்த நெடிய மலை தேனைப் பொழியும்; அகல நீள உயரத்தால் வானிடத்தை யொக்கும், அவனது மலை; அவ்வானத்தின்கண் மீனை யொக்கும், அம்மலையின்கட் சுனை; அவ்விடத்து மரந்தோறும் கட்டப்பட்ட யானையை யுடையீரா

யினும் இடந்தோறும் பரப்பப்பட்ட தேரையுடையீராயினும் உங்கள் முயற்சியாற் கொள்ளமாட்டீர்; நுமது வாள்வலியால் அவன் தாரான்; யான் அறிவேன், அதனைக் கொள்ளும் பரிசை; வடித்து முறுக்கப்பட்ட நரம்பினையுடைய சிறிய யாழைப் பண்ணி வாசித்து நறுநாற்றத்தை யுடைய தழைத்த கூந்தலையுடைய நும் விறலியர் பின்வர ஆடினிராய்ப் பாடினிராய்ச் செல்லின் அவன் நுமக்கு நாட்டையும் மலையையும் கூடத்தருவன்—எ - று.

அளிதோ வென்பது ஈண்டு வியப்பின்கண் வந்தது.

ஓரி யென்பது தேன் முதிர்ந்தாற் பரக்கும் * நீலநிறம்; முசுக்கலை யெனினும் அமையும்.

குன்றம் தேன் சொரியுமென இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்துமேல் ஏறிநின்றது.

நான்கு பயனுடைத்தென்று வைத்து, நெல் விளையும், பழம் ஊழ்க்கும், கிழங்கு வீழ்க்கும், தேன் சொரியுமென்று அவற்றின் செய்கை தோன்றக் கூறினு ரெனினும், கருதியது நெல்லும் பழமும் கிழங்கும் தேனுமாகக் கொள்க.

வான்க ணற்றணி மலையே யென்று பாடமோதுவாரும் உளர்.

வான்கணற் றென்பது மலையின் ஓக்கமும் பரப்பும்.

மீன்கணற் றென்றது † சுனையினது பன்மையும் தெளிவும், சிறுமையும்.

ஈண்டுக் கண்ணென்பது அசைநிலை.

தாளென்றது படையறுத்தலும் அழித்தற்கு வேண்டும் கருவி முதலாயின இயற்றலும்.

விறலிய ரென்றது அவர் உரிமை மகளிரை.

(கு - ரை.) 1. புறநா. 111 : 1.

2. "ஆளிடூஉக் கடந்து வாளமருழக்கி, ஏந்துகோட் டியானை வேந்த ரோட்டிய, கடும்பரிப் புரவிக் கைவண் பாரி" (அகநா. 78).

4. மூங்கில் நெல் : "வெதிரிற் பிறந்த பொதியவி ழருநெல்" (பெருங். 1. 51 : 12); "வெதிர்க்கண் ணுடைந்து நெல்லுதிரவும்" (யா. வி. சூ. 95, மேற்.); "நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை" (குறிஞ்சிப். 35); "புல்லிலை வெதிர நெல்விளை காடே" (அகநா. 367 : 16).

"சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே : இது, விளையுமேயெனற் பாலது, விளையும்மே யென ஒற்றில்வழி ஒற்றை விரித்தவாறு; இதனுட் சிறியவிலை யெனற்பாலது சிறியிலையெனத் தொகுத்தவாறு' (நன். வி. சூ. 155; சங்கர.).

---

* "நீனெய்தாழ் கோதை" (பரி. 11 : 124); "நீனிற வோரி பாய்ந் தென நெடுவரை, நேமியிற் செல்லு நெய்க்க ணிருஅல்" (மலைபடு. 524 - 5).

† "எறும்பி யளையிற் குறும்பல் சுனைய" (குறுந். 12).

5. "பல்கோட் பலவின் பயிர்ப்புறு தீங்கனி" (கலித். 50. 12).

6. கிழங்கு கீழே தாழவிருத்தலை, வீழ்த்தலென்றல் மரபு; "வள்ளி கீழ் வீழா வரைமிசைத் தேன்றொடா" (கலித். 39); "கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு" (மதுரைக். 534); "வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழி தொறும், விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை" (மலைபடு. 127 - 8).

4 - 9. "கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார், நிலைக் கெளிதா நீர தரண்" (குறள், 745).

1 - 13. "பேரிசை யுருமொடு மாரி முற்றிய, பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி, பலவுறு குன்றம் போலப், பெருங்கவி னெய்திய வருங்காப் பினளே" (நற். 253).

15. சுகிர்தல் - சிக்கற வடித்தல்.

16. ஒலித்தல் - தழைத்தல்; "ஒலிதெங்கின்" (பதிற். 13 : 7).

மு. உழிஞைத்திணையின் துறைகளுளொன்றாகிய 'அகத்தோன் செல்வம்' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 10, இளம்.; சூ. 12, 67, ந. (க0௯)

(கக0) கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.

(பி - ம்.) 5 'யானும்'

திணையும் துறையும் அவை.

மூவேந்தரும் பறம்பு முற்றியிருந்தாரை அவர் பாடியது.

(இ - ள்.) வஞ்சியாது எதிர்நின்று கொல்லும் படையினையுடைய மூன்று திறத்தீரும் கூடிப் பொருதீராயினும் பறம்பு கொள்ளுதற்கு அரிது; முந்நூறு ஊரையுடைத்து, குளிர்ந்த நல்ல பறம்பு நாடு; அம் முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர்; நீயிர் பாடினிராய் வரின், நுமக்கு யாமும் பாரியும் உள்ளேம்; அதுவேயன்றி மலையும் உண்டு—எ - று.

நீர் பாடி வரினும் பறம்பு நாடு பரிசிலர் முன்னே பெற்றமையின், அது நுமக்குக் கிடையாதென்பது கருத்தாகக் கொள்க.

(கு - ரை.) 1. கடத்தல் - வஞ்சியாது எதிர்நிற்றல்; புறநா. 8 : 5.

2. புறநா. 109 : 13, 111 : 2.

6. பாடினிர் : வினையெச்சமுற்று. (கக0)

(கககக) அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே
நீலத், திணைமலர் புரையு முண்கட்
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) இரங்கத்தக்கது, பெரிய கரிய குன்றம்; அது வேலான் வெல்லுதல் வேந்தர்க்கோ அரிது; நீலத்தினது இணைந்த மலரை யொக்கும் மையுண்ட கண்ணையுடைய கிணையையுடைய விறலிக்கு எளிது, பாடினளாய் வரின்—எ - று.

அளிதோ வென்றது ஈண்டு வியப்பின்கண் வந்தது.

பாடினளாய் வரினென்ற கருத்து: அவட்கும் அவ்வாறன்றித் தன் பெண்மையால் மயக்கி வென்றுகோடல் அரிதென்பதாம்.

(கு - ரை.) 1. தான், ஏ இரண்டும் அசைநிலை. புறநா. 109 : 1.

2. புறநா. 109 : 13, 110 : 2.

2 - 3. "எதிரிதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணாய்" (கலித். 96).

4. புறநா. 109 : 16 - 8. கிணை - தடாரிப்பறை. (கககக)

(கககஉ) அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே.

திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

பாரிமகளிர் பாடியது.

(இ - ள்.) மூவேந்தரும் முற்றி யிருந்த அற்றைத் திங்களின் அவ் வெள்ளிய நிலாவின்கண் எம்முடைய தந்தையையும் உடையேம்; எம்முடைய மலையையும் பிறர் கொள்ளார்; இற்றைத் திங்களது இவ் வெள்ளிய நிலவின்கண் வென்று அறைந்த முரசினையுடைய அரசர் எம்முடைய மலையையும் கொண்டார்; யாம் எம்முடைய தந்தையை யும் இழந்தோம்—எ - று.

திங்களை மாதமென்பாரும் உளர்.

ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்தும் வஞ்சித்துக் கொன்றமையின், * 'வென்றெறி முரசின் வேந்தர்' என்றது ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது.

(கு - ரை.) 1. முற்றியிருந்த - சூழ்ந்திருந்த. அற்றை என்பது நெஞ்சறி சுட்டு.

4. புறநா. 351 : 5; "வேந்தர், வென்றெறி முரசி னன்பல முழங்கி" (குறுந். 380 : 1 - 2). (ககஉ)

(கக௩) மட்டுவாய் திறப்பவு மைவிடை வீழ்ப்பவும்
அட்டான் றானுக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே யினியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே.

திணையும் துறையும் அவை.

அவன்மகளிரைப் பார்ப்பார்ப்படுக்கக் கொண்டுபோவான் பறம்பு விடுத்த கபிலர் பாடியது.

(இ - ள்.) மது இருந்த சாடியை வாய் திறப்பவும் ஆட்டுக் கிடாயை வீழ்ப்பவும் அடப்பட்டு அமைந்தொழியாத கொழுவிய துவையையும் ஊனையுடைய சோற்றையும் விரும்பிய பரிசே தரும் மிக்க செல்வம் முதிர்ந்து எம்மோடு நட்புச் செய்தாய் முன்பு; இப்பொழுது, பாரி இறந்தானாகக் கலங்கிச் செயலற்று நீர்வார் கண்ணையுடையேமாய்த் தொழுது நின்னை வாழ்த்திச் செல்லுதும், பெரிய புகழையுடைய பறம்பே! கோற்றொழிலாகச் செய்யப்பட்ட திரண்ட குறிய வளையை அணிந்த முன்கையினையுடைய மகளிரது மணம் கமழும் கரிய கூந்தலைத் தீண்டுதற்கு உரியவரை நினைந்து—எ - று.

பறம்பே! பெருவளம் பழுனி நட்டனை முன்; இனி நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்து சேறுமெனக் கூட்டுக.

மன் : கழிவின்கண் வந்தது.

வாழியும் ஓவும் : அசைநிலை.

ஆனுக் கொழுந்துவை யென்பதற்கு விருப்பம் அமையாத கொழுந்துவை யெனினும் அமையும்.

---

* "வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே" (கம்ப. குகப். 14) என்பதிலுள்ள மன்னரு மென்பதும் இப் பொருளதே.

(கு - ரை.) புறநா. 33 : 21, 262 : 1.

2. அடப்பட்டு - சமைக்கப்பட்டு. துவை - உணவின் விசேடம்; துவையலென்றுங் கூறப்படும்.

3. "பல்வளம் பழுனிய" (மணி. 3 : 28).

6. "நீர்வார் கண்ணேன்" (நற். 143); "நீர்வார் கண்ணை" (குறுந். 22 : 1). கண்ணேம் : வினையெச்சமுற்று.

தன்மைப்பன்மை வினைக்குறிப்புமுற்று வினையெச்சக்குறிப்பான தற்கு மேற்கோள்; நன். சூ. 350, மயிலை; நன். வி. சூ. 351; இ. வி. சூ. 250, உரை.

7. பெயர் - புகழ்.

9. "கலிமயிற் கலாவத் தன்னவிவள், ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே" (குறுந். 225 : 6 - 7); "கூந்த லணைகொடுப்பேம் யாம்" (கலித். 101); "தோடேந்து பூங்கோதை வேண்டேங் கூந்தல் தொடேல்" (சீவக. 1229). (கக௩)

(கக௪) ஈண்டுநின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை
சென்றுநின் றோர்க்குந் தோன்று மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப்பிழிந் திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகு முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே.

திணையும் துறையும் அவை.

அவன் மகளிரைக் கொண்டுபோம் கபிலர் பறம்பு நோக்கி நின்று சொல்லியது.

(இ - ள்.) இவ்விடத்து நின்றோர்க்குந் தோன்றும், சிறிது எல்லை போய் நின்றோர்க்குந் தோன்றும், நிச்சயமாக; யானை மென்று போகடப் பட்ட கவளத்தினது கோதுபோல மதுப் பிழிந்து போகடப்பட்ட கோது டைத்தாகிய சிதறியவற்றினின்றும் வார்ந்த மதுச்சேறு ஒழுகும் முற் றத்தையுடைய தேர் வழங்கும் இருப்பையுடைய உயர்ந்தோனுடைய மலை—எ - று.

நெடியோன் குன்று தோன்று மென்றது புகழான் உயர்ந்து காணு தார்க்கும் செவிப்புலனாகத் தோன்றும், அவன் உளனாய காலத்து; இப்பொழுது பிற மலை போலக் கட்புலனாகத் தோன்றும் அளவாயிற் றெனக் கையற்றுக் கூறியவாறாகக் கொள்க.

(கு - ரை.) 2. மன்ற : தெளிவென்னும் பொருளைத் தருவதோரிடைச் சொல்; "மன்றவென் கிளவி தேற்றம் செய்யும்" என்பது தொல். இடை. சூ. 17.

6. தேர்வீசிருக்கை : புறநா. 118 : 5; "தேர்வீசு கவிகை" (மலைபடு. 399). நெடியோன் - பாரி. (கக௪)

(கக௫) ஒருசா ரருவி யார்ப்ப வொருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்
கல்லலைத் தொழுகு மன்னே பல்வேல்
அண்ணல் யானை வேந்தர்க்
கின்னா னாகிய வினியோன் குன்றே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்) ஒரு பக்கம் அருவி ஆர்த்தொழுக ஒரு பக்கம் பாணருடைய மண்டைகள் நிரம்ப வாக்கவேண்டி வடிக்க உக்க இனிய கள்ளாகிய தேறல் கல்லையுருட்டி யொழுகும், பல வேற்படையுடனே தலைமை பொருந்திய யானையையுமுடைய வேந்தர்க்குக் கொடியோனாகிய இனியோன் மலை; அது கழிந்தது—எ - று.

குன்று தேறல் கல்லலைத்தொழுகும்: இனி அது கழிந்ததென்று கூட்டுக.

அருவியும் அவன் உளனாயின் உளதாவ தென்பது கருத்து.

மன் : கழிவின்கண் வந்தது.

குன்று தேறல் கல்லலைத்தொழுகுமென இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்துமேல் ஏறிநின்றது.

(கு - ரை.) 2. மண்டை - பிச்சைப் பாத்திரம்; புறநா. 103 : 3, குறிப்புரை.

3. "அடர்பொற் சிரகத்தால் வாக்கி" (கலித். 51 : 7); "வடியுறு தீந்தேறல் வாக்கு" (பு. வெ. 19). உக்க - சிந்திய.

2 - 3. "வண்டுபடு நறவிற் றண்டா மண்டையொடு" (புறநா. 261 : 2).

2 - 4 "தீந்தொடை நரம்பின் பாலை வல்லோன், பையு ளுறுப்பிற் பண்ணுப் பெயர்த்தாங்குச், சேறுசெய் மாரியி னளிக்குநின், சாறுபடு திருவி னனைமகி ழானே" (பதிற். 65 : 14 - 7).

5 - 6. பகைவர்க்கு இன்னான் : புறநா. 12 : 4, 59 - 6.

வேந்தர்க்கு இன்னான் என்றமையால், இரவலர்க்கு இனியோன் என்பது பெறப்பட்டது. (கக௫)

(ககசு) தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்
கூம்பவிழ் முழுநெறி புரள்வரு மல்குல்
ஏந்தெழின் மழைக்க ணின்னகை மகளிர்
புன்மூசு கவலைய முண்மிடை வேலிப்

பஞ்சி முன்றிற் சிற்றி லாங்கட்
பீரை நாறிய சுரையிவர் மருங்கின்
ஈத்திலைக் குப்பை யேறி யுமணர்
உப்பொ யொழுகை யெண்ணுப மாதோ
நோகோ யானே தேய்கமா காலை
பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்
பயிலிருஞ் சிலம்பிற் கலையாய்ந் துகளவும்
கலையுங் கொள்ளா வாகப் பலவும்
கால மன்றியு மரம்பயம் பகரும்
யாண ரறாஅ வியன்மலை யற்றே
அண்ண னெடுவரை யேறித் தந்தை
பெரிய நறவிற் கூர்வேற் பாரிய
தருமை யறியார் போரெதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா வெண்ணு வோரே.

(பி - ம்.) 1 'தீம்பெருங்' 12 'வாகிப்'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) இனிய நீரையுடைய பெரிய ஆழ்ந்த சுனைக்கட் பூத்த செங்கழுநீரினது முகையவிழ்ந்த புறவிதழ் ஒடித்த முழுப்பூவாற் செய்யப்பட்ட தழையசையும் அல்குலையும் மிக்க அழகையுடைய குளிர்ந்த கண்ணிணையும் இனிய முறுவலையுமுடைய மகளிர் புல் மொய்த்த கவலையை யுடைய வாகிய முள்ளால் நெருங்கிய வேலியை யும் பஞ்சு பரந்த முற்றத்தையுமுடைய சிறிய மனையிடத்தின்கட் பீர்க்கு முளைத்த சுரை படர்ந்தவிடத்தில் ஈத்திலையையுடைய குப்பையின்கண் ஏறி உமணர் உப்புச் செலுத்தும் சகடத்தை எண்ணுவர்; நோவேன் யான்; எனது வாழ்நாள் கெடுவதாக; பயின்ற பூவையுடைய சோலைக் கண் மயிலெழுந்து ஆடவும் பயின்ற பெரிய மலையின்கண்ணே யேறி முசுக்கலை (ஒருவகைக் குரங்கின் ஆண்) தாவி உகளவும் அம் முசுக் கலையும் நுகர்ந்து வெறுத்தலாற் கொள்ளாவாம் பரிசு காலமன்றாகவும் மரங்கள் பலவும் காயும் பழமும் முதலாயினவற்றை விளைந்து கொடுக் கும் புது வருவாய் ஒழியாத அகன்ற மலையைப் போலும் பயனுடைத் தாகிய தலைமையையுடைய உயர்ந்த வரையின்கண்ணே யேறித் தம் முடைய தந்தையாகிய மிக்க மதுவினையும் கூரிய வேலினையு முடைய பாரியது பெறுதற் கருமையை அறியாராய்ப் போரேற்று வந்த வென்றிப்

பட்ட சேனையை யுடைய அரசரது பொன்னாற் செய்யப்பட்ட கலம் முதலியவற்றையுடைய மனஞ்செருக்கிய குதிரையை எண்ணுவார்-எ - று.

வியன்மலை யென்றது அரைமலையை.

நெடுவரை யென்றது உச்சிமலையை.

இன்னகை மகளிர், நெடுவரை யேறி முன்பு வேந்தர் கலிமாவை எண்ணுவோர், இப்பொழுது ஈத்திலைக் குப்பையேறி உமணர் உப்பொய் ஒழுகையை எண்ணுவர்; இதற்கு நோவேன் யான்; எனது வாழ்நாள் கெடுவதாகவென வினைமுடிவு செய்க.

அற்றே யென்னும் ஏகாரம் அசைநிலை.

வியன்மலை அத்தன்மைத்தெனப் பிறிதொரு தொடராக்கி உரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 1. புறநா. 105 : 2, 132 : 5; "குவளையம் பைஞ்சுனை" (மலைபடு. 251) ; "மலிர்சுனைக் குவளைத், தேம்பா யொண்பூ" (அகநா. 308).

2. முழுநெறி - புறவிதழொடிந்த முழுப்பூ; "கழுநீ ராம்பன் முழு நெறிப் பகைத்தழை" (அகநா. 156); "கழுநீர்ப் பிணையன் முழுநெறி" (சிலப். 2 : 34).

1 - 2. தழை : புறநா. 61 : 1; 340 : 1; "மணிப்பூம் பைந்தழை தைஇ", "மனைநடு வயலை மரனிவர் கொழுங்கொடி, அரிமலராம்பலோ டார்தழை தைஇ, விழவாடு மகளிர்" (அகநா. 20, 176); "கிளையிதழ் பறியாப் பைவிரி யல்குற், கொய்தழை தைஇ" (குறிஞ்சிப். 101 - 2); "பைந்தழைமா மகளிரொடு" (பட்டினப். 91).

"முழுநெறிக் குவளை" (சிலப். 2 : 14) என்பதற்கு, இதழொடிக்கப் படாத குவளையென்று பொருள் கூறி, இவ்வடிகளை மேற்கோள் காட்டினர் அடியார்க்குநல்லார்.

1 - 3. "பைஞ்சுனைக், குவளைத் தண்டழையிவள்" (குறுந். 342 : 4 - 5).

4. கவலை - கவர்த்த வழி. முள்வேலி : "வாழ்முள் வேலி", "இடுமுள் வேலி" (பெரும்பாண். 126, 154).

6. "சுரையொடுபேய்ப் பீர்க்குஞ் சுமந்த" (பு. வெ. 60).

7. ஈத்திலை - ஈச்சமரத்தின் இலை.

8. ஒய்தல் - செலுத்துதல்; புறநா. 70 : 17, குறிப்புரை. ஒழுகை - பண்டியொழுங்கு.

7 - 8. இங்ஙனம் எண்ணுதல் ஒருவகை விளையாட்டு; திமில் முதலியவற்றை எண்ணுதலும் உண்டு; "நிலவுக்குவித் தன்ன மோட்டுமண லடைகரைக், கோடுதுணர்ந் தன்ன குருகொழுக் கெண்ணி", "உவர்விளை யுப்பி னுழாஅ வுழவர், ஒழுகை யுமணர் வருபத நோக்கிக், கான லிட்ட காவற் குப்பைப், புலவுமீ னுணங்கற் படுபுள் ளோப்பி, மடநோக் காயமொ டுடனுப் பேறி, எந்தை திமிலிது நுந்தை திமிலெனா,

வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர், திண்டிமி லெண்ணுந் தண்கடற் சேர்ப்ப" (நற். 159, 331); "ஊசன் மேவற் சேயிழை மகளிர், உரல் போற் பெருங்கா லிலங்குவான் மருப்பிற், பெருங்கை மதமாப் புகுதரி னவற்றுள், விருந்தின் வீழ்பிடி யெண்ணுமுறை பெறாஅ" (பதிற். 43); "திரையுழந் தசைஇய நிரைவளை யாயமொடு, டுப்பின் குப்பை யேறி யெற்படா, வருதிமி லெண்ணுந் துறைவனொடு"(அகநா. 190).

9. நோகு - நோவேன்; தன்மை யொருமை வினைமுற்று; ஓ : அசைநிலை.

13. "கால மன்றியு மரம்பயன் கொடுத்தலின்" (மலைபடு. 134); "பருவ மன்றியும் பயங்கொடுப் பருஅப், பலவு மாவுங் குலைவளர் வாழையும், இருங்கனி நாவலு மிளமா துளமும்" (பெருங். 2 : 20 : 61-3); "கால மின்றியுங் கனிந்தன கனி", "தீங்கனி, கால மின்றிக் கனிவது காண்டிரால்" (கம்ப. வனம்புகு. 44, நாடவிட்ட. 18).

16-8. "ஏந்துகோட் டியானை வேந்த ரோட்டிய, கடும்பரிப் புரவிக் கைவண் பாரி" (அகநா. 78).

19. பொலம்படைக் கலிமா : புறநா. 359 : 14; "பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி" (மலைபடு. 574); "புனையும் பொலம் படைப் பொங்குளைமான்" (பு. வெ. 276). (ககசு)

(ககஎ) மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்க்கண்
ஆமா நெடுநிரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி யரிவையர் தந்தை நாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) சனிமீன் புகைகளோடு கூடிப் புகையினும் எல்லாத் திசையினும் புகை தோன்றினும் தென்றிசைக்கண்ணே வெள்ளி போக் குறினும் வயலிடம் விளைவுமிகப் புதலிடத்துப் பூ மலர மனையிடத்துக் குழவியை யீன்ற மேவிய கண்ணையுடைய ஆமாவினது நெடிய நிரை நல்ல புல்லை மேயக் கோல் செவ்விதாகலின் அமைந்தோர் பலராக மழை பிழைப்பறியாத புல்லிய நிலத்தின்கண்ணது, இளைய வெருகி னது கூரிய பல்லை யொப்பப் பசிய இலையையுடைய முல்லை முகைக்கும் நுண்ணிய தொழிலை யுடைய வளையினையணிந்த மகளிருடைய தந்தை நாடு—எ - று.

பல்கி யென்பதனைப் பல்கவெனத் திரிக்க.

அரிவையர் தந்தை நாடு, பெயல் பிழைப்பறியாப் புன்புலத்தது வெனக் கூட்டுக.

என்றதனாற் போந்தது: புன்புலத்ததாயிருந்ததே! அது * பெயல் பிழைப்பறியாமை, கோல்செம்மையினான் உளதாயதன்றே; அவ்வாறு கோல் செவ்விதாக நிறுத்தியவனை இழப்பதே யென்று அவன் நாடு கண்டு இரங்கியவாறாகக் கொள்க.

(கு - ரை.) 1 - 2. புறநா. 35 : 6 - 8; சனி கரிய நிறமுடையனாத லின் மைம்மீ னென்றார்; அவனுக்குரிய, காரி, கரியவன் முதலிய காரணக் குறியாலும் உணர்க : சனி புகைதலாவது இடபம் சிங்கம் மீனம் இவற்றொடு மாறுபடுதல்; இவற்றுள், சனி தனக்குப் பகை வீடாகிய சிங்க ராசியிற் புகின் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிப்ப னென்பதை, "மகத்திற் புக்கதோர் சனியெனக் காணாய்" (தே.), "அடையார்தமக்கு, மகத்திற் சனியன்ன சந்திர வாணன்" (தஞ்சை. 48), "மகத்தில் வாழ்சனி யாயினை" (வாயுசங்கிதை, கடவுள். 7), "விசயன் றம்முற் குதவி செய்யாமன், மகத்திற் சனிபோல் வளைக்குவம் யாம்" (வி. பா. 11-ஆம் போர். 40) என்பவற்றாலுணர்க; (நக்ஷத்திரங் களுள் மகம், பூரம், உத்தரத்தின் முதற்பாதம் சிங்க ராசிக்கு உரியவை.) தூமம் புகைக்கொடி யென்றும் கூறப்படும்; தூமகேது வென்பதும் இதுவே; இது வட்டம், சிலை, நுட்பம், தூமமென்னும் கரந்துறை கோட்கள் நான்கனுளொன்று; இதன் தோற்றம் உலகிற்குப் பெருந் தீங்கு விளைவிக்கு மென்பர்; "தூம கேது புவிக்கெனத் தோன்றிய" (கம்ப. மந்தரைசூழ்ச்சி. 21).

"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும், விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்" (சிலப். 10 : 102 : 3) என்பதனுரையில் இவ்வடிகளை மேற்கோள் காட்டினர் அடியார்க்குநல்லார்.

6. புறநா. 191 : 4 - 7.

'கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கி யென வரும் பண்பு பொரு ளியைபின்றேனும் பெயர்கொள வருதற் பாற்படுதலும்.........இதனாற் கொள்க' (தொல். வேற்றுமை. சூ. 5, ந.).

8. வெருகு - காட்டுப்பூனை; இதனை, 'படப்பை வேலியும் புதலும் பற்றி விடக்கிற்கு வேற்றுயிர் கொல்வது' (தொல். மரபு. சூ. 68) என்பர் பேராசிரியர். பிள்ளைவெருகு : குறுந். 107 : 4; அகநா. 297 : 13 - 4.

8 - 9. "இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை, வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக், குறுமுகை யவிழ்ந்த நறுமலர்ப் புறவு", "வெருக் குப்பல் லுருவின் முல்லை" (குறுந். 220, 240); "வெருகு வேட்பச் சிரிப்பனபோன் முகைத்த முல்லை" (சீவக. 1651). (கசுஎ)

---

* "முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி, ஒல்லாது வானம் பெயல்", "ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர் காவலன் காவா னெனின்" (குறள், 559, 560); மணி. 7 : 8 - 10; சீவக. 255.

(ககஅ) அறையும் பொறையு மணந்த தலைய
எண்ணாட் டிங்க ளனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளங் கீள்வது மாதோ
கூர்வேற் குவைஇய மொய்ம்பிற்
றேர்வண் பாரி தண்பறம்பு நாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) பாறையும் சிறுகுவடும் (சிறுமலையும்) கூடிய தலையை யுடையவாகிய எட்டாம் பக்கத்து (எட்டாந் திதி)ப் பிறை போலும் வளைந்த கரைகளை யுடைத்தாகிய தெளிந்த நீரையுடைய சிறிய குளம் பாதுகாப்பார் இன்மையின் உடைவது போலும், கூரிய வேலை யேந்திய திரண்ட தோளையுடைய தேர்வண்மையைச் செய்யும் பாரியது குளிர்ந்த பறம்பு நாடு—எ - று.

நாடு குளங்கீள்வதென இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்து மேல் ஏறி நின்றது.

மாதோ : அசைநிலை.

(கு - ரை.) 2 - 3. "தேய்பிறை யுருவக் கேணி" (சீவக. 2998); "ஏரி வளாவிக் கிடந்தது போலு மிளம்பிறையே" (திருநா. தே.)

3. குளம் : இடத்துநிகழ்பொருள்; கீளுதல் : அதன் தொழில்.

5. தேர்வண்பாரி : புறநா. 114 - 6, 200 : 9 - 12, 201 : 2 - 5; "சுரும்புண, நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச், சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரியும்" (சிறுபாண். 87 - 91); "முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும், தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்" (பழ. 74); "முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையும், எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத் - தொல்லை, இரவாம லீந்த விறைவர்போ னீயும், கரவாம லீகை கடன்" (பு. வெ. 194). (ககஅ)

(ககக) கார்ப்பெய றலைஇய காண்பின் காலைக்
களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்
செம்புற் றீயலி னின்னளைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ
நிழலி னீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோ னாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) கார்காலத்து மழை பெய்து மாறிய காட்சியினிய காலத்துக் களிற்றுமுகத்தின்கட் புகர் (புகர் - புள்ளி) போலத் தெறுழினது மலர் பூப்பச் செம்புற்றின்கண் ஈயலை இனிய மோரொடு கூட்டி அடப்பட்ட புளிங்கறியை யுடைத்து; மெல்லிய தினையாகிய புது வருவாயை யுடைத்து, முன்பு; இனி அது கெடுங்கொல்லோ! நிழ லில்லாத நெடிய வழிக்கண் நின்ற தனிமரத்தையொப்ப முரசையுடைய அரசரின் மிகுத்தும் இரவலர்க்கு வழங்கும் வண்மையை யுடைய வனது நாடு—எ - று.

பூப்பவென்னும் வினையெச்சம் இன்னளைப் புளித்தென்னும் குறிப் பொடு முடிந்தது.

வள்ளியோன் நாடு இன்னளைப் புளித்து; யாணர்த்து; அது நந்துங் கொல்லோவெனக் கூட்டுக.

தெறுழென்றது காட்டகத்ததொரு கொடி; புளிமாவென்றுரைப் பாரும் உளர்.

(கு - ரை.) 1. "தலைப்பெய றலை இய" (முருகு. 9).

2. தெறுழ் - கார் காலத்து மலர்வதொரு கொடி. களிற்றுமுகவரி : நற். 176 : 5; கலித். 44 : 5; அகநா. 349 : 11 - 2. தெறுழ்வீ : "அரும்ப விழ்ந், தீர்ந்தண் புறவிற் றெறுழ்வீ மலர்ந்தன" (கார்நாற்பது, 25); "நறைநிறம் படுத்த நல்லிணர்த் தெறுழ்வீ" (நற். 302).

3. "சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயிர், இதைப்புன வரகி னவைப்புமா ணரிசியொடு, கார்வாய்த் தொழிந்த வீர்வாய்ப் புற்றத், தீயல்பெய் தட்ட வின்புளி வெஞ்சோறு" (அகநா. 394 : 2 - 5). செம் புற்றீயல் : புறநா. 51 : 9 - 10, குறிப்புரை.

4. புறநா. 120 : 16.

5. "அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லாம், நிழன் மரம்போ னேரொப்பத் தாங்கி" (நாலடி. 202); 'அருஞ்சுரத்தின் மரம் போல அடைந்தார்க்களித்தல் அவற்கியல்பு' (சீவக. 3, ந.); "ஆதபத் துக் கருநிழல் போலருள், வேத வித்தக வீரன்" (வி. பா. அருச்சுனன் றவநிலை. 6). (கககூ)

(கஉ0) வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவற்
கார்ப்பெயற் கலித்த பெரும்பாட் டீரத்துப்
பூழி மயங்கப் பலவுழுது வித்திப்
பல்லி யாடிய பல்கிளைச் செவ்விக்
5 களைகால் கழாலிற் றோடொலிபு நந்தி
மென்மயிற் புனிற்றுப்பெடை கடுப்ப நீடிக்
கருந்தாள் போகி யொருங்குபீள் விரிந்து
கீழு மேலு மெஞ்சாமைப் பலகாய்த்து

வாலிதின் விளைந்த புதுவர கரியத்
தினைகொய்யக் கவ்வை கறுப்ப வவரைக்
கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக
நிலம்புதைப் பழுனிய மட்டின் றேறல்
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து
நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டுப்
பெருந்தோ டாலம் பூசன் மேவர
வருந்தா யாணர்த்து நந்துங் கொல்லோ
இரும்பல் கூந்தன் மடந்தையர் தந்தை
ஆடுகழை நரலுஞ் சேட்சிமைப் புலவர்
பாடி யானாப் பண்பிற் பகைவர்
ஓடுகழற் கம்பலை கண்ட
செருவெஞ் சேஎய் பெருவிற னாடே.

(பா - ம்.) 7 'போக்கி' 13 'குடினொறும்'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) வெம்மை முதிர்ந்த வேங்கை மரத்தையுடைய சிவந்த மேட்டுநிலத்துக் கார்காலத்து மழையான் மிகுந்த * பெரிய செவ்வியையுடைய ஈரத்தின்கட் புழுதி கலக்கப் பலசால்பட உழுது வித்தித் தாளியடிக்கப்பட்ட பல கிளையையுடைய செவ்வியின்கட் களையை அடியினின்றும் களைதலான் இலை தழைத்துப் பெருகி மெல்லிய மயிலினது ஈன்றணிய பேடையையொப்ப ஓங்கிக் கரிய தண்டு நீண்டு எல்லாம் ஒருங்கு சூல்விரிந்து கதிரினது அடியும் தலையும் ஒழியாமல் மிகக் காய்த்துச் சீரிதாக விளைந்த புதிய வரகையறுக்கத் தினையை யரிய எள்ளிளங்காய் கறுப்ப அவரையினது கொழுவிய கொடியின்கண் வெள்ளைக்காய் அறுக்கும் செவ்வியாக நிலத்தின்கட் புதைக்கப்பட்டு முற்றிய மதுவாகிய தேறலைப் புல்லாலே வேயப்பட்ட சிறிய மனையின் கட் குடியுள்ள இடந்தோறும் நுகரக் கொடுக்க நறிய நெய்யிலே கடலை துள்ள அதனோடு சோற்றையட்டு ஊட்டுதற்குப் பெரிய தோளையுடைய மனையாள் கலம் பூசுதலைப் பொருந்த வருந்த வேண்டாத புதுவருவாயை யுடைத்து, முன்பு; இனி அது கெடும் போலும்! கரிய பலவாகிய கூந்தலையுடைய மடந்தையர்க்குத் தந்தையாகிய அசைந்த மூங்கில் இழைந்து ஒலிக்கும் உயர்ந்த உச்சியையுடைய, புலவர் பாடப்பட்டு அமையாத தன்மையையுடைய பகைவரது † புறக்கொடுத்தோடும்

* "மாவீரம் போகுதென்று விதைகொண் டோட" (தனிப்.).

† "அழிகுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக், கழிதறு கண்மை" (பு. வெ. 55).

வீரக் கழலினது ஆரவாரத்தைக் கேட்டு நாணிப் பின் செல்லாது கண்டு நின்ற போரை விரும்பிய சேயையொக்கும் பெரிய வென்றியையுடைய வனது நாடு—எ - று.

வித்தி ஆடிய செவ்வி யென இயையும்.

நந்தி யென்பது முதலாய வினையெச்சங்கள் விளைந்தவென்னும் பெயரெச்சவினையோடும், அரியவென்பது முதலாக மேவரவென்பதீருக நின்ற வினையெச்சங்கள் யாணர்த்தென்னும் குறிப்புவினையோடும் முடிந்தன.

பகர்ந்தென்பது பகரவெனத் திரிக்கப்பட்டது.

விசைப்பச் சோறட்டு மேவரவென இயையும்.

செருவெஞ்சேஎய் பெருவிறலது சேட்சிமையையுடைய நாடு யாணர்த்து; அது நந்துங்கொல்லோவெனக் கூட்டுக.

பெருந்தோளென்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித்தொகை.

வெப்புளென வெம்மைக்கு அதுவும் ஒரு வாய்பாடாய் நின்றது; வெம்மையை உள்ளும் முதிர்ந்தவெனினும் அமையும்.

(கு - ரை.) 4. பல்லியாடுதல், தாளியடித்தல், ஊடடித்தலென்பன ஒருபொருட் சொற்கள்; அது, நெருங்கி முளைத்த பயிர்களை விலக்குதற் கும் வருத்தமின்றிக் களை பிடுங்குதற்குமாகக் கீழ் நோக்கியுள்ள கூரிய பல முனைகளையுடைய பலகையின் இரண்டு பக்கத்தும் மேற்புறத்தி லுள்ள வளையங்களிற் கட்டிய கயிறுகளைச் சேர்த்துப் பூட்டிய நுகத்தை வாய் கட்டப்பட்டுள்ள எருதுகளின் பிடரியில் வைத்துப் பூட்டி உழச் செய்தல்.

10. "சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்ப" (மதுரைக். 271). (கஉ0)

(கஉக) ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.

திணை - அது; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

(இ - ள்.) ஒரு திசைக்கண் வள்ளியோனாகிய ஒருவனை நினைந்து நான்கு திசையினுமுள்ள பரிசின்மாக்கள் பலரும் வருவர்; அவர் வரிசையறிதல் அரிது; கொடுத்தல் மிகவும் எளிது; பெரிய வண்மையையுடைய தலைவ! நீ அவ் வரிசையறிதலை நன்ருக அறிந்தா யாயின், அறிவுடையோரிடத்து வரிசை கருதாது ஒருதரமாகப் பார்த்தலைத் தவிர்வாயாக—எ - று.

(கு - ரை.) 2. பரிசின் மாக்கள் : புறநா. 6 : 16, 24; 30.

3. வரிசை : புறநா. 6 : 16; 47 : 6; "வரிசை யறிதலும்" (சிறுபாண். 217); "பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின், அதுநோக்கி வாழ்வார் பலர்" (குறள், 528); "தத்தம், வரிசையானின்புறூஉ மேல்" (நான்மணிக். 67).

5. மு. புறநா. 35 : 30.

மு. பாடாண்டிணைக்குரிய விடைகள் பலவற்றுள், சிறிதென்ற விடைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 36, ந. (கஉக)

(கஉஉ) கடல்கொளப் படாஅ துடலுந ருக்கார்
கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே
அழல்புறந் தரூஉ மந்தண ரதுவே
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் றுப்பா கியரென
ஏத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வரூஉ மிரவல ரதுவே
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதென விலைநீ பெருமிதத் தையே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) கடலாற் கொள்ளப்படாது, அதனைக் கொள்ளுதற்குப் பகைவர் மேற்கொள்ளார், வீரக் கழலணிந்த * இலக்கணத்தாற்றிருந்திய நல்ல அடியையுடைய காரி! நினது நாடு; அது வேள்வித் தீயைப் பாதுகாக்கும் பார்ப்பாருடையது; கெடாத செல்வத்தினையும் வென்றி பொருந்திய படையையுமுடைய மூவேந்தருள் ஒருவனுக்கு வலியாக வேண்டுமென்று அம் மூவர்பானின்றும் வந்தோர் தனித்தனி புகழ்ந்து நினக்குத் தரும் பொருள், நுமது குடியை வாழ்த்தினராய் வரும் பரிசிலருடையது; ஆதலால் வடதிசைக்கட்டோன்றும் அருந்ததியையொக்கும் கற்பினையும் மெல்லிய மொழியினையுமுடைய அரிவையுடைய தோள் மாத்திரையல்லது நின்னுடையதென்று சொல்ல ஒன்றுடையையல்லையாயிருக்கவும் நீ பெரிய செருக்கினையுடையையாய் இராநின்றாய்; இதற்குக் காரணம் என்னை?—எ - று.

ஏத்தினர் தரூஉமென்று பன்மையாற் கூறியது அவ் வேந்தன் அமைச்சரை.

* திருந்தடி யென்பதற்குப் பிறக்கிடாத அடியென்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்; மதுரைக். 436, உரை.

மூவருள் யான் ஒருவன்; எனக்குத் துப்பாகியரென அம் மூவரும் ஏத்தினர் தரூஉமென்று உரைப்பினும் அமையும்.

நாடு அந்தணரது; சூழ் இரவலரது; அரிவைதோளளவல்லதை நினக்கு உரித்தாகக் கூறுதற்கு யாதும் இல்லையாயிருந்தது; நீ பெருமிதத்தை யுடையையா யிருந்தாயென வியந்து கூறியவாறு.

(கு - ரை.) 1 - 3. காரியின் நாடு மலையும் மலை சார்ந்த இடமுமாதலின், இங்ஙனம் கூறினர்; இவன் இராசதானி பெண்ணையாற்றங் கரையிலுள்ள திருக்கோவலூரென்று, "துஞ்சா முழவிற் கோவற் கோமான், நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப், பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல்" (அகநா. 35) என்பதனால் தெரிகின்றது; "கறங்குமணி, வாலுளைப் புரவியொடு வையக மருள, ஈர நன்மொழி யிரவலர்க் கீந்த, அழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற், கழறொடித் தடக்கைக் காரியும்" (சிறுபாண். 91 - 5).

5. புறநா. 125, கருத்து; "முரண்கொ டுப்பிற் செவ்வேன் மலையன்" (குறுந். 312 : 2).

6 - 7. "வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும், அருகா தீயும் வண்மை, உரைசா னெடுந்தகை" (புறநா. 320 : 16 - 8).

8. "பெருநல் வானத்து வடவயின் விளங்கும், சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்" (பெரும்பாண். 302 - 3); "வடமீன்போற் றொழு தேத்த வயங்கிய கற்பினாள்" (கலித். 2).

9. அரிவை யென்றது மலையமான் திருமுடிக்காரியின் மனைவியை. (கஉஉ)

(கஉங) நாட்கள் ளுண்டு நாண்மகிழ் மகிழின்
யார்க்கு மெளிதே தேரீ தல்லே
தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழா தீத்த விழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி யுறையினும் பலவே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) நாட்காலையே மதுவை யுண்டு நாளோலக்கத்து மகிழ்ச்சியை மகிழின், தேர் வழங்குதல் யாவர்க்கும் எளிது; கெடாத நல்ல புகழ் விளங்கும் மலையன் மதுநுகர்ந்து மகிழாது வழங்கிய பொற் படைகளால் அணியப்பட்ட உயர்ந்த தேர், பயன் பொருந்திய முள்ளூர் மலையுச்சியின்கண் உண்டாகிய மழையினது துளியினும் பல—எ - று.

இதன் கருத்து: ஏனையோர் கொடை செயற்கை யென்றும், இவன் கொடை இயற்கை யென்றும் கூறியவாறு.

(கு - ரை.) 1. "துளங்குதசும்பு வாக்கிய பசும்பொதித் தேறல், இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்" (மலைபடு. 463 - 4). நாண்மகிழ் : புறநா. 29 : 5, குறிப்புரை.

2. ஈதல்லே : விகாரத்தால் லகரவொற்று விரிந்தது.

4. இழையணி தேர் : புறநா. 359 : 15; குறுந். 345 : 1; கலித். 99 : 7. தேர் தருதல் : புறநா. 114 : 6, குறிப்புரை.

5. முள்ளூர் மலையனுடைய தென்பது, "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப், பலருடன் கழித்த வொள்வாண் மலையனது" (நற். 170), "முரண்கொ டுப்பிற் செவ்வேன் மலையன், முள்ளூர்க் கானம்" (குறுந். 312), "முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி" (அகநா. 209) என்பவற்றாலும் விளங்கும்.

6. புறநா. 34 : 20 - 23, குறிப்புரை. 5 - 6. புறநா. 125 : 18 - 9.

(கஉ௩)

(கஉ௪) நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே.

(பி - ம்.) 3 'பெயர்குவர்'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) நல்ல நாளன்றாகப் போகிப் * புள்நிமித்தம் இடையே நின்று தடுப்பச் செவ்வியன்றாகச் சென்றுகூடிக் கூறுபாடன்றாக முனியும் வார்த்தைகளைச் சொல்லினும் வறிதாக மீள்வாரல்லர், ஒழுங்குபட ஓசை நிறைந்து ஒலிக்கும் அருவியையுடைய பெருமை பொருந்திய மலையை யுடையோனைப் பாடியவர்கள்—எ - று.

மலையற் பாடியோர் வறிது பெயர்குந ரல்லரெனக் கூட்டுக.

அன்றி யென்பது அன்றெனத் திரிந்தது செய்யுளாகலின்.

வறிதென்னும் குறிப்புவினையெச்சம் பெயர்குந ரல்லரென்பதனுட் பெயர்தலோடு முடிந்தது. வறியரென் றுரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 1. நாள், ஈண்டு நல்ல நாளின் மேற்று. "புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்" (மலைபடு. 448); "நாளும் புள்ளுங் கேளா வூக்கமோ, டெங்கோ னேயின னுதலின் யாமத்துச், செங்கால் வெட்சியுந் தினையுந் தூஉய், மறிக்குரற் குருதி மன்றுதுக ளவிப்ப, விரிச்சி யோர்த்தல் வேண்டா, எயிற்புறந் தருதும்யாம் பகைப்புல நிரையே" (தகடூர் யாத்திரை).

* புள்நிமித்தம் - பறவைச் சகுனம்; நிமித்தம் என்பதற்கு அறிவிப்பது என்று பொருள்; பின்வரும் நன்மை தீமைகளை அறிவிப்பது என்றபடி.

“அன்றி’ என்னும் குறிப்பு வினையெச்சத்தின் ஈற்று இகரம் செய்யுளில் உகரமாகத் திரிந்து வந்ததற்கும் (தொல். உயிர்மயங்கு. சூ. 35, இளம்., ந.; நன். சூ. 172, மயிலை. நன். வி. சூ. 173; இ. வி. சூ. 91, உரை), அது செய்தெனெச்ச வினைக்குறிப்பாய் வந்ததற்கும் (தொல். வினை. சூ. 34, தெய்வச்.; சூ. 51, ந.; நன். சூ. 343, மயிலை.; இ. வி. சூ. 246, உரை) மேற்கோள்.

2. திறனன்று மொழிதல்: “திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும், பொருளு மதனினூஉங் கில்” (குறள், 644).

1 - 3. குறுந். 140.

வினையெச்சக் குறிப்பு அடுக்கி வந்து ஒரு வினை கொண்டதற்கு மேற்கோள் (நன். சூ. 354. மயிலை.); இவை அடுக்காகா வென்பர் விருத்தியுரையாசிரியர்; நன். சூ. 355.

4. புறநா. 369 : 22 - 3. மு. புறநா. 92. (கஉச)

(கஉரு) பருத்திப் பெண்டின் பனுவ லன்ன
நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை
பரூஉக்கண் மண்டையொ டூழ்மாறு பெயர
உண்கு மெந்தைநிற் காண்குவந் திசினே
நள்ளாதார் மிடல்சாய்த்த
வல்லாளநின் மகிழி ருக்கையே
உழுத நோன்பக டழிதின் றாங்கு
நல்லமிழ் தாகநீ நயந்துண்ணு நறவே
குன்றத் தன்ன களிறு பெயரக்
கடந்தட்டு வென்றோனு நிற்கூ றும்மே
வெலீஇயோ னிவனெனக்
கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்துவந்து சமந்தாங்கிய
வல்வேன் மலைய னல்ல னாயின்
நல்லமர் கடத்த லெளிதும னமக்கெனத்
தோற்றோன் றானு நிற்கூ றும்மே
தொலைஇயோ னிவனென
ஒருநீ யாயினை பெரும பெருமழைக்
கிருக்கை சான்ற வுயர்மலைத்
திருத்தகு சேஎய்நிற் பெற்றிசி னோர்க்கே.

(பி - ம்.) 13 ‘சமரந்’

திணை - வாகை; துறை - அரசவாகை.

சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழற்குத் *துப்பாகிய தேர் வண்மலையனை வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் (பி - ம். துப்பாகிய வொருவனும் மலையனை வடவண்ணத்தன் பேரிசாத்தன்) பாடியது.

(இ - ள்.) பருத்தி நூற்கும் †பெண்டாட்டியது சுகிர்ந்த பஞ்சு போன்ற நெருப்புத் தன் வெம்மை ஆறுதற்கு ஏதுவாகிய நிணமசைந்த கொழுவிய தடிகளைப் பெரிய உடலிடத்தையுடைய கள் வார்த்த மண்டையோடு முறை முறையாக ஒன்றற்கொன்று மாறுபட உண்பேமாக, எம்முடைய தலைவ! நின்னைக் காண்பேன் வந்தேன், பகைவரது வலியைத் தொலைத்த வலிய ஆண்மையுடையோய்! நினது மகிழ்ச்சியையுடைய இருக்கைக்கண்; உழுத வலிய பகடு பின் வைக்கோலைத் தின்றாற்போல நினது ‡தாளாற்றலாற் செய்த பொருளை யாவர்க்கும் அளித்துப் பின் நீ விரும்பி யுண்ணும் கள் நல்ல அமிழ் தாவதாக; மலைபோலும் யானை பட எதிர்நின்று கொன்று வென்ற வனும், நம்மை வெல்வித்தோன் இவனென நின்னையே மகிழ்ந்து சொல்லும்; வீரக் கழலாகிய அணியாற் சிறந்த செய்ய அடியாலே போர்க்களத்தைக் கைக்கொள்ள வேண்டி விரைந்து வந்து போரைத் தடுக்க வலிய வேலினையுடைய மலையன் அல்லனாயின் நல்ல போரை வெல்லுதல் நமக்கு எளிதெனாத் தோற்றவனும் நம்மைத் தொலைவித் தோன் இவனென நின்னையே புகழ்ந்து சொல்லும்; ஆதலால், நீ ஒருவனாயினாய், பெரும! பெரிய மழைக்கு இருப்பிடமாதற்கு அமைந்த உயர்ந்த மலையையுடைய திருத்தக்க சேயை பொப்பாய்! நின்னை நட்பாகவும் பகையாகவும் பெற்றோர்க்கு—எ - று.

பனுவலன்ன நிணமென இயையும்.

நிலங்கவர்பென்பது கவரவெனத் திரிக்கப்பட்டது. எமது நிலத் தைக் கைக்கொண்டெனினும் அமையும்.

தாளாற்றலாற் செய்த பொருளில் நல்லனவெல்லாம் பரிசிலர்க்கு வழங்கி எஞ்சியது உண்டலான், அழிதின்றாங் கென்றார்.

காண்குவந்தென்பன ஒரு சொன்னீர்மைப்பட்டு உண்குமென்ப தற்கு முடிபாய் நின்றன.

---

* புறநா. 122 : 5, குறிப்புரை.

† பெண்டாட்டி - பெண்; "மழையு மஞ்சும் வளியும் போலும், செலவினு ளொருபெண்டாட்டி" (தகடூர் யாத்திரை); 'ஒருபெண் டாட்டி தமரொடு கலாய்த்து' (இறை. சூ. 1, உரை).

‡ "தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு, வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள், 212).

உண்குமென்பது சுற்றத்தை உளப்படுத்தி நின்றமையின், பன்மையொருமை வழுவமைதியாய் நின்றது.

மன் : கழிவின்கண் வந்தது.

பெரும! சேஎய்! வென்றோனும், வெலீஇயோன் இவனென நிற் கூறும்; தோற்றோனும், தொலைஇயோன் இவனென நிற்கூறும்; அதனால், நிற்பெற்றிசினோர்க்கு ஒரு நீயாயினை யாதலால், நின் மகிழிருக் கைக்கண்ணே உண்கும் காண்குவந்திசின்; பகடு அழிதின்றுங்கு நீ உண்ணும் நறவு நல்ல அமிழ்தாகவென மாறிக் கூட்டுக.

நெருப்புச் சினந்தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை என்பதற்கு, எரியாது *பூத்துக் கிடக்கின்ற தழல் போலும் நிணந்தயங்கு கொழுங்குறை யெனினும் அமையும்.

பருஉக்கண் மண்டை யென்பதற்குக் கண்ணையுடைய உடலிடம் பரிய மண்டை யெனினும் அமையும்.

(கு - ரை.) 1. பருத்திப்பெண்டு: புறநா. 326 : 5; "ஆளில் பெண்டிர் தாளிற் செய்த, நுணங்குநுண் பனுவல் போலக் கணங் கொள" (நற். 353); 'நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளாற் கைவன் மகடூஉத் தனது செய்கை மாண்பினால் ஓரிழைப் படுத்தலாம் உலகத்து நூல் நூற்றலென்பது' (இறை. சூ. 1, உரை); "பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச், செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத, கையேவா யாகக் கதிரே மதியாக, மையிலா நூன்முடியு மாறு" (நன்னூல், சூ. 23).

2. 'நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை...... என இவை இருவகை உகரமும் ஒற்றடுத்து உரியசையாயினவாறு' (தொல். செய். சூ. 10, பேர்.).

1 - 2. புறநா. 393 : 12 - 4; "இழுதி னன்ன வானிணம்" (மலைபடு. 244).

'இன்னுமவ்விலேசானே, நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை யென்றாற் போலச் சினமில்லதனை உள்ள போலக் கூறுவனவுங் கொள்ளாமோவெனின், உணர்வுடையனவற்றுக்கல்லது சுவை தோன்றாமையின் வெகுளியென்று ஈண்டுக் கூறப்படாவென் பது. இது பிறன்கட் டோன்றிய பொருள்பற்றி வரும்" (தொல். மெய்ப் பாடு. சூ. 10, பேர்.).

7. புறநா. 366 : 14.

'அழி - வைக்கோல்; ஆளழி வாங்கி யதரி திரிப்ப : இது சிலப்பதி காரம் : உழுத நோன்பக டழிதின் றுங்கு : இது புறநானூறு' (தக்க. 439, உரை); தொல். உவம. சூ. 20, பேர். மேற். (கஉரு)

* "நீறுமேற் பூத்த நெருப்பு" (பு. வெ. 166).

(கஉசு) ஒன்னார் யானை யோடைப்பொன் கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ
வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்
ஓடாப் பூட்கை யுரவோன் மருக
வல்லே மல்லே மாயினும் வல்லே
நின்வயிற் கிளக்குவ மாயிற் கங்குல்
துயின்மடிந் தன்ன தூங்கிரு ளிறும்பிற்
பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந
தெறலரு மரபினின் கிளையொடும் பொலிய
நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற வந்த ணாளன்
இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடின னதற்கொண்டு
சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவா யோட்டிய வவ்வழிப்
பிறகலஞ் செல்கலா தனையே மத்தை
இன்மை துரப்ப விசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தனம் யாமே முள்ளெயிற்
றரவெறி யுருமின் முரசெழுந் தியம்ப
அண்ணல் யானையொடு வேந்துகளத் தொழிய
அருஞ்சமந் ததையத் தாக்கி நன்றும்
நண்ணாத் தெவ்வர்த் தாங்கும்
பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே.

(பி - ம்.) 10 'நிலமிசைப் பிறந்த' 15 - 6 'வழிப்பிறர் கலஞ்'

திணை - பாடாண்டிணை; துறை - பரிசிற்றுறை.

மலையமான் திருமுடிக்காரியை மாறோக்கத்து (பி - ம். மாறோகத்து) நப்பசலையார் பாடியது.

(இ - ள்.) பகைவருடைய யானையினது பட்டத்திற் பொன்னைக் கொண்டு பாணரது தலை பொலியும்படி செய்து வாடாத பொற்றாமரையைச் சூட்டிய சிறந்த தலைமையினையும் புறக்கொடாத மேற்கோளினையும் உடைய பெரியோன் மரபினுள்ளாய்! ஒன்றைக் கற்றறிவேமாயினும் அறியேமாயினும் விரைய நின்னிடத்துப் புகழைச் சொல்லுவேமாயின், இராப்பொழுதுதான் ஓரிடத்தே உறங்குவது போன்ற செறிந்த இருளை யுடைய சிறு காட்டையும் பறையொலி போலும் ஒலிபொருந்திய அருவியையுமுடைய முள்ளூர்க்கு வேந்தே! அழித்தற்கரிய தன்மையையுடைய

நின் சுற்றத்துடனே பெருக நிலத்தின்மேல் மிக்க மாந்தரெல்லாரினும் அறிவின்கண் மாசற்ற * அந்தணனாகிய கபிலன் இரந்து செல்லும் புலவர்க்கு இனிப் புகழ்தற்கு இடனில்லையாகப் பரந்து புகழ்நிற்பப் பாடினான்; அதனைக் கொண்டு சினமிக்க சேனையையுடைய † சேரன் மேல் கடலின்கட் பொன்னைத் தரும் நாவாய் செலுத்திய அவ்விடத்து வேறு சில மரக்கலம் போகமாட்டாத அத்தன்மையை யுடையேமாயும் எமது மிடி துரக்க நின் புகழ் கொடுவர வந்து நினது வண்மையிலே சில சொல்லத் தொடுத்தனம், யாங்கள்; முட்போலும் பல்லினையுடைய பாம்பை எறியும் இடியேறு போல முரசு கிளர்ந்தொலிப்பத் தலைமையை யுடைய யானையுடனே அரசு போர்க்களத்தின்கட்படப் பொறுத்தற் கரிய பூசலைச் சிதற வெட்டிப் பெரிதும் பொருந்தாத பகைவரைத் தடுக்கும் பெண்ணையாற்றுப் பக்கத்தை யுடைய நாட்டையுடையோய்!—எ - று.

உரவோன் மருக! பொருந! நாடுகிழவோய்! நின்வயிற் கிளக்குவமாயின், அந்தணன் கிளையொடும் பொலிய இசைநிற்பப் பாடினன்; அதற்கொண்டு பிற கலம் செல்லாத அனையேமாயும், இன்மை துரத்தலால் இசைதர வந்து நின் வண்மையிற் சில தொடுத்தேம் யாமெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

மக்கட்கெல்லா மென்பது ஐந்தாவதன் மயக்கம். மக்கட்கெல்லாம் ஒக்கவெனினும் அமையும்.

வண்மையிற் றொடுத்தன மென்பதற்கு நின் வண்மையால் வளைப் புண்டன மெனினும் அமையும்.

(கு - ரை.) 2 - 3. பாணருக்குப் பொற்றாமரை அளித்தல்: புறநா. 11 : 11 - 7, குறிப்புரை.

4. புறநா. 139 : 7; "ஓடாப் பூட்கை" (முருகு. 247).

6 - 7. "கார்வண்டு, தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய் யோற்கொதுங்கிப், புக்கிருந்தா லன்ன பொழில்" (நள. சுயம். 22).

8. புறநா. 229 : 4; "பறைக்குர லருவி" (பதிற். 70); "பறையிசை யருவி" (சிலப். 25 : 28).

'இசை' என்னும் உரிச்சொல் ஒலித்தற் றொழிற்பண்பில் வந்த தற்கு மேற்கோள்; நன். சூ. 458, மயிலை.; நன். வி. சூ. 459.

19. அரவெறியுரும்: புறநா. 58 : 6 - 7, குறிப்புரை. முரசுக்கு இடி: புறநா. 17 : 39, குறிப்புரை. (கஉகூ)

---

* அந்தணனாகிய கபிலன்: புறநா. 200 : 13, 201 : 7.

† இச் சேரன் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்.

(கஉ௭) களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாண ருய்த்தெனக்
களிறில வாகிய புல்லரை நெடுவெளிற்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப
ஈகை யரிய விழையணி மகளிரொடு
சாயின் றென்ப வாஅய் கோயில்
சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
உரைசா லோங்குபுக ழொரீஇய
முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே.

திணை - அது; துறை - கடைநிலை.

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

(இ - ள்.) களாப்பழம் போலும் கரிய கோட்டையுடைத்தாகிய சிறிய யாழைக் கொண்டு பாடும் இனிய * பாட்டை வல்ல பாணர் பரிசில் பெற்றுக்கொண்டு போனார்களாக, களிறுகள் இல்லையாகிய புல்லிய பக்கத்தையுடைய நெடிய தறியின்கண்ணே காட்டுமயில்கள் தத்தம் இனத்தோடு தங்கப் பிறிதோ ரணிகலமுமின்றிக் கொடுத்தற் கரிய மங்கலிய சூத்திரத்தை யணிந்த மகளிருடனே பொலிவழிந்து சாய்ந்ததென்று சொல்லுப, ஆயுடைய கோயிலை; நுகர்தற்கு இனிதாகிய தாளிப்பையுடைய அடிசிலைப் பிறர்க்கு உதவலின்றித் தம்முடைய வயிற்றையே நிறைத்துச் சொல்லுதற்கமைந்த மேம்பட்ட புகழை நீங்கிய முரசு பொருந்திய செல்வத்தினை யுடைய அரசர் கோயில், இதனை ஒவ்வாது—எ - று.

என்றதன் கருத்து : செல்வர் நகர் பெருந்திருவுடைமையிற் சிறந்தது போன்றிருப்பினும், ஆய்கோயில் வறிதெனினும் இஃது அதனினும் சிறந்த தென்பதாம்.

ஆய்கோயில் சாயின்றென்ப; ஆயினும் முரசுகெழு செல்வர் நகர் இதனை ஒவ்வாதெனக் கூட்டுக.

(கு - ரை.) 1. புறநா. 145 : 5; "கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணு முறை நிறுப்ப" (நெடுநல். 70); "கருங்கோட்டுச் சீறியாழ்" (மலைபடு. 534).

4. சேப்ப - தங்க.

1 - 6. "ஒப்புரவி னல்வரும் கேடெனி னஃதொருவன், விற்றுக் கோட் டக்க துடைத்து" (குறள், 220); "வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன், நல்குரவே போலு நனிநல்ல" (நீதிநெறி. 67).

---

* பாணர் களிறு பெறுதல் : புறநா. 140 : 8, குறிப்புரை.

7 - 10. "நறியன வயலவர் நாவி னீர்வர, உறுபத நுங்கிய வொருவ னுகயான்" (கம்ப. பள்ளியடை. 111).

மு. பாடாண்டிணைத் துறைகளுள் கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 29, இளம்.; சூ. 35, ந. (கஉஎ)

(கஉஅ) மன்றப் பலவின் மாச்சினை மந்தி
இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
பாடின் றெண்கண் கனிசெத் தடிப்பின்
அன்னச் சேவன் மாறெழுந் தாலும்
கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்
ஆடுமகள் குறுகி னல்லது
பீடுகெழு மன்னர் குறுகலோ வரிதே.

திணை - அது; துறை - வாழ்த்து; இயன்மொழியுமாம்.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) ஊர்ப்பொதுவின்கண் பலவினது பெரிய கோட்டின் கண் வாழும் மந்தி பரிசிலர் தூக்கி வைக்கப்பட்ட பிணிப்புப் பொருந்திய மத்தளத்தினது ஓசையினிய தெளிந்த கண்ணைப் பலாப்பழமென்று கருதித் தட்டினவிடத்து அதன்கண் வாழும் அன்னச்சேவல் அவ் வோசைக்கு மாறாக எழுந்து ஒலிக்கும் கழல இடப்பட்ட வீரவளையை யுடைய ஆயது முகில் படியும் பொதியின்மலை, ஆடச் செல்லும் மகள் அணுகினல்லது பெருமை பொருந்திய அரசர் அணுகுதல் அரிது-எ-று.

இது கொடைச்சிறப்பும் வென்றியும் கூறியவாறாயிற்று.

(கு - ரை.) 1. மன்றப்பலவு : புறநா. 374 : 5.

1 - 2. புறநா. 89 : 7 - 8.

1 - 3. முழவுக்குப் பலாப்பழம் : புறநா. 236 : 1.

3. செத்து - கருதி; "தூவற் கலித்த புதுமுகை யூன்செத், தறியா தெடுத்த புன்புறச் சேவல்" (மலைபடு. 146 - 7).

5. மு. குறுந். 84 : 3.

6 - 7. புறநா. 54 : 4 - 14, 109 : 15 - 8, 111. (கஉஅ)

(கஉகூ) குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து
வேங்கை முன்றிற் குரவை யயரும்
தீஞ்சுளைப் பலவின் மாமலைக் கிழவன்
ஆஅ யண்டிர னடுபோ ரண்ணல்

இரவலர்க் கீத்த யானையிற் கரவின்று
வான மீன்பல பூப்பி ஞானு
தொருவழிக் கருவழி யின்றிப்
பெருவெள் ளென்னிற் பிழையாது மன்னே.

(பி - ம்.) 1 'குறையிறை'

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) குறிய இறப்பையுடைய சிறிய மனையின்கட் குறமக்கள் வளைந்த மூங்கிற்குழாயின்கண் வார்த்திருந்து முதிர்ந்த மதுவை நுகர்ந்து வேங்கை மரத்தையுடைய முற்றத்தின்கட் குரவைக்கூத்தை யாடும் இனிய சுனையை யுடைத்தாகிய பலா மரத்தையுடைய பெரிய மலையை யுடையோன், ஆயாகிய அண்டிரன், கொல்லும் போரைச் செய்யும் தலைவன், அவன் இரப்போர்க்குக் கொடுக்கப்பட்ட யானைத் தொகை போல, மேகம் மறைத்தலின்றி ஆகாயம் பல மீனையும் பூக்கு மாயின் அமையாது, ஓரிடத்தும் கரிய இடம் இல்லையாகப் பெருக வெண்மையைச் செய்யுமாயின் அம் மீன்றொகை அதனுக்குத் தப்பாது—எ - று.

யானையிற் பிழையாதென இயையும். மன் : அசை.

(கு - ரை.) 2. "தூம்பகம் பழுனிய தீம்பிழி மாந்தி" (பதிற். 81 : 21); "நெடுங்க ணுடைமைப் பழுநிக் கடுந்திறற், பாப்புக் கடுப்பன்ன தோப்பி", "அம்பணை விளைந்த தேக்கட் டேறல்" (அகநா. 348, 368); "நீடமை விளைந்த தேக்கட் டேறல்" (முருகு. 195).

1 - 3. தேறலுண்டு குரவையாடுதல்: புறநா. 24 : 4 - 6; "மன்ற வேங்கை மணநாட் பூத்த, மணியே ரரும்பின் பொன்வீ தாஅய், விய லறை வரிக்கு முன்றிற் குறவர், மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்" (அகநா. 232 : 6 - 10); "வாங்கமைப் பழுனிய நறவுண்டு, வேங்கை முன்றிற் குரவையுங் கண்டே" (நற். 276 : 9 - 10); "நறவு நாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு, மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென, வான்றோய் மீமிசை யயரும் குரவை" (மலைபடு. 320 - 22).

6. பரிசிலர்க்கு யானை கொடுக்கப்படுதலை, புறநா. 130, 131, 135, 140, 151-ஆம் பாட்டுக்களாலும், "இரவலர் வரூஉ மளவை யண்டிரன், புரவெதிர்ந்து தொகுத்த யானை போல" (நற். 237), "துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு, பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கென" (பொருந. 125 - 6), "குன்று கியபொன்னும் வேழக் குழாமுங் கொடைபுகழ்ந்து, சென்றார் முகக்கும்" (தஞ்சை. 149) என்பவற்றாலும் அறிக. (கஉகூ)

(கஙo) விளங்குமணிக் கொடும்பூ ணாஅய் நின்னாட்
டிளம்பிடி யொருசூல் பத்தீ னும்மோ
நின்னுநின் மலையும் பாடி வருநர்க்
கின்முகங் கரவா துவந்துநீ யளித்த
அண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே.

(பி - ம்.) 1 'மணிப் பசும்பூணாய்', 'மணிக்கொடும் பூணாய்.'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) விளங்கிய மணிகளான் இயன்ற வளைந்த பூணாகிய ஆரத்தையுடைய ஆயே! நினது நாட்டின்கண் இளைய பிடி ஒரு கருப்பம் பத்துக் கன்று பெறுமோதான்? நின்னையும் நின் மலையையும் பாடி வரும் பரிசிலர்க்கு இனிய முகத்தை ஒளியாது வெளிப்படுத்திக் காதலித்து நீ கொடுத்த தலைமையை யுடைத்தாகிய யானையை யெண்ணின், நீ கொங்கரை மேல்கடற்கண்ணே ஓட்டப்பட்ட நாளில் அவர் புறக்கொடுத்தலால் தம்மிடத்தினின்றும் பெயர்த்துப் போகப் பட்ட வேலினும் பல—எ - று.

தலைப்பெயர்த்திட்ட வேலென்ற கருத்து: *படைக்கலமில்லாதாரை ஏதஞ் செய்வாரில்லையாதலின், தம்முயிர்க்கு அரணாகப் பெயர்த்திடப்பட்ட வேலென்பதாம்; அன்றி, புறக்கொடுத்தோடுகின்றார் முன்னோக்கிச் சாய்த்துப் பிடித்த வேலென்பாரும் உளர்.*

இதனால், கொடைச் சிறப்பும் வென்றிச் சிறப்பும் கூறியவாறு.

(கு - ரை.) 1. புறநா. 200 : 8.

னளரல ஒழிந்த ஏனைப் புள்ளி சிறுபான்மை விளியேற்றதற்கும் (தொல். விளி. சூ. 12, இளம்.; சே.; கல்.; ந.), யகாரவீற்று உயர்திணைப்பெயர் அளபெடையாகிய விளியுருபேற்றதற்கும் (நன். சூ. 309, மயிலை.) மேற்கோள்.

1 - 2. 'விளங்குமணிக் கொடும்பூ ணாஅய்......பத்தீனும்மோ: என்புழி யகரம் விளியேற்றதாலெனின் அவ்வாறு வருவன வழக்குப் பயிற்சியின்மையின் எடுத்தோதிற்றிலராயினும் செய்யுண் மருங்கி

---

* சிறுபஞ்ச. 41; "நிராயுதன், மார்பி லெய்யவோ வில்லிகல் வல்லதே", "நின்ற வன்னிலை நோக்கிய நெடுந்தகை யிவனைக், கொன்ற லுன்னிலன் வெறுங்கைநின் றானெனக் கொள்ளா" (கம்ப. வாலிவதை. 90, முதற்போர். 251); "நிராயுதரைக் கொன்றா ரெனுந் தீமை, எய்தாமை வேண்டும்" (பெரிய. ஏனாதி. 39).

னென்னும் அதிகாரப் புறநடையான் இந்நிகரனவெல்லாம் அமைத்துக் கொள்க' (தொல். விளி. சூ. 35, தெய்வச்.); யகாரவீறு செய்யுட்கண் அளபெடுத்தல் விளியுருபாமெனக் கூறி இவ்வடிகளை மேற்கோளாகக் காட்டினர்; (இ. வி. சூ. 212, உரை). "விளங்குமணிக் கொடும் பூணோய்" என விளியேற்றது; நேமி. சொல், 28.

3. மலையைப் பாடுதல்: புறநா. 131 : 3, 143 : 12; "தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை, வான்பொரு நெடுவரை வளனும் பாடி" (சிறுபாண். 127 - 8, குறிப்புரை).

3 - 5. புறநா. 129 : 6, குறிப்புரை. (க௩௦)

(க௩க) மழைக்கணஞ் சேக்கு மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வா ளண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) முகிலினம் சென்று தங்கும் உயர்ந்த மலைக்குத் தலைவன், சுரபுன்னைப் பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியினையும் வாய்த்த (வாய்த்த - தப்பாத) வாளினையுமுடைய அண்டிரனது மலையைப் பாடினவோ, களிறுகளை மிகவுமுடைய இந்தக் கவினை யுடைய காடு?—எ - று.

யானைக்குப் பிறப்பிடமாயிருக்கிற காட்டினும் அண்டிரனைப் பாடி னோர், யானை மிகவுமுடையரென்று அவன் கொடைச் சிறப்புக் கூறிய வாறு. ஆய்க்கு அண்டிர னென்பதும் ஒரு பெயர்.

(கு - ரை.) 3. புறநா. 130 : 3, குறிப்புரை.

4. புறநா. 129 : 6, குறிப்புரை. களிறு, ஆண்யானையின் பெய ராக இருப்பினும் இங்கே யானைக்குப் பொதுப் பெயராயிற்று. (க௩க)

(க௩உ) முன்னுள்ளு வோனைப் பின்னுள்ளி னேனே
ஆழ்கென் னுள்ளம் போழ்கென் னாவே
பாழூர்க் கிணற்றிற் றூர்கவென் செவியே
நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி யயல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்றோ யிமயம்
தென்றிசை யாஅய்குடி யின்றாயிற்
பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே.

(பா - ம்.) 1 'பின்னுள்ளின் யானே'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) யாவரினும் முன்னே நினைக்கப்படுமவனைப் பின்பே நினைத்தேன் யான்; அவ்வாறு நினைத்த குற்றத்தால் எனதுள்ளம் அமிழ்ந்திப் போவதாக; அவனையன்றிப் பிறரைப் புகழ்ந்த நாவும் கருவியாற் பிளக்கப்படுவதாக; அவன் புகழன்றிப் பிறர் புகழைக் கூறக் கேட்ட எனது செவியும் பாழ்பட்ட ஊரின்கட் கிணறு போலத் தூர்வதாக; நரந்தையையும் நறிய புல்லையும் மேய்ந்த கவரிமாக் குவளைப் பூவையுடைய பசிய சுனையின் நீரை நுகர்ந்து அதன் பக்கத்தவாகிய தகர மரத்தினது குளிர்ந்த நிழலின்கண் தனது பிணையுடனே தங்கும் வடதிசைக் கண்ணதாகிய வானைப் பொருந்தும் இமயமலையும் தென்றிசைக்கண் ஆய்குடியும் இல்லையாயின் இந்தப் பரந்த இடத்தையுடைய உலகம் கீழ் மேலதாகிக் கெடும்—எ - று.

* 'முன்னுள்ளு வோனைப் பின்னுள்ளினேன்' என உள்ளம் ஆழ்தற்குக் காரணங் கூறினமையால், பிறரைப் புகழ்ந்த நாவெனவும், பிறர் புகழ் கேட்ட செவி யெனவும் ஏனையவற்றிற்கும் காரணம் வருவித்து உரைக்கப்பட்டது.

அன்றி வடதிசை தேவருலகோடு ஒத்தலான், இமயத்தால் தாங்க வேண்டுவதில்லை; தென்றிசைக்கண் ஆய்குடி தாங்கிற்றில்லையாயின், இவ்வுலகு பிறழும்; அதனால் இமயத்துக்கு முன்னுள்ளப்படுவோனைப் பின்னுள்ளினேனுதலால், எனது உள்ளம் ஆழ்க; எனது நாப் போழ்க; எனது செவி தூர்வதாக வென்றதாக்கி உரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 5. புறநா. 116 : 1; "குவளையம் பைஞ்சுனை" (மலைபடு. 251).

4 - 7. "கவரி, பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும், ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்" (பதிற். 11 : 21 - 3).

8. 'திசை' என்னுஞ் சொல் ஏழாம் வேற்றுமையுருபாக வந்ததற்கு மேற்கோள்; நன். சூ. 301, மயிலை. (கசுஉ)

(கசுங) மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியிற்
கேட்பி னல்லது காண்பறி யலையே
காண்டல் வேண்டினை யாயின் மாண்டநின்
விரைவளர் கூந்தல் வரைவளி யுளரக்
5 கலவ மஞ்ஞையிற் காண்வர வியலி

---

* (பி - ம்.) இமயத்திற்கு ஒருதரமாக உலகத்தைத் தாங்கும் ஆய் உளனாகவும் பிறரிசையைக் கேட்ட செவி தூர்க; கேட்டுப் பிறரை நினைத்த உள்ளம் ஆழ்க. நினைத்துப் பிறரைப் பாடிய நாப் போழ்வதாக வென உள்ளமொழிந்தனவற்றிற்கும் காரணம் வருவித்துக்கொள்க.

மாரி யன்ன வண்மைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே.

(பி - ம்.) 3 'காண்டல் சால வேண்டினை யாயின்' 6 'வண்கை'

திணை - அது; துறை - விறலியாற்றுப்படை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) மெல்லிய இயல்பினையுடைய விறலி! நீ நல்ல புகழைச் செவியாற் கேட்பினல்லது அவன் வடிவைக் காண்டலறியாய்; காண்டலை விரும்பினையாயின், மாட்சிமைப்பட்ட நினது மணம் வளரும் கூந்தலிலே வரையிடத்துக் காற்று வந்தசைப்பப் பீலியையுடைய மயில் போலக் காட்சி உண்டாக நடந்து மழை போன்ற வண்மையை யுடைய தேரினையுடைய வேள் ஆயைக் காணச் செல்வாயாக—எ - று.

'விரைவளர் கூந்தல் வரைவளி யுளர' என்றது, 'கொண்டைமேற் காற்றடிக்க' என்பதொரு வழக்குப்பற்றி நின்றது.

என்றதனாற் பயன் : பிறிதொன்றால் இடையூறில்லை யென்பதாம்.

ஆய் மாரியன்ன வண்மைய னாதலின், விறலியை அம் மாரியைக் கண்ட மயில் போலக் களித்துச் செல் லென்றவாறும்.

யாழநின் னென்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 4. "உரைத்த சந்தி னூர லிருங்கதுப், பைதுவர லசைவளி யாற்றக் கைபெயரா, ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி" (அகநா. 102 : 3 - 5).

5. "மயில்கண் டன்ன மடநடை மகளிர்" (முருகு. 205); "நன்மா மயிலின் மென்மெல வியலி" (மதுரைக். 608).

4 - 5. "அணிகிளர் கலாவ மைதுவிரித் தியலும், மணிபுரை யெருத்தின் மஞ்ஞை போலநின், வீபெய் கூந்தல் வீசுவளி யுளர, ஏகுதி மடந்தை" (நற். 264 : 3 - 6).

6. புறநா. 54 : 6 - 7, குறிப்புரை; 55 : 15, குறிப்புரை; "மாரிமழை வள்ளல்" (சீவக. 500); "மழையொன்று வண்டடக்கை வள்ளியோற் பாடி", "எழிலி வான மெள்ளினன் றரூஉம், கவிகை வண்கைக் கடுமான் றோன்றல்", "மழைவிழை தடக்கை வாய்வா ளெவ்வி", "கார்கள்ள வுற்ற பேரிசை யுதவி" (தொல். உவம. சூ. 11, 14, பேர். மேற்.).

'அன்ன' என்பது பயனுவமத்தின்கண் வந்ததற்கு மேற்கோள்; தொல். உவம. சூ. 13, இளம்; இ. வி. 642, உரை.

6 - 7. 'மாரி யன்ன வண்மைத், தேர்வே ளாயைக் காணிய சென்மே' என்பது பயனுவமம்; 'என்னை? மாரியான் விளைக்கப்படும் பொருளும் வண்மையாற் பெறும் பொருளும் ஒக்குமென்றவாறு' (தொல். உவம. சூ. 1, பேர்.; இ. வி. சூ. 639, உரை); உவமையினது உயர்ச்சியாற் பொருட்கு உயர்ச்சியாயிற்று என்பதற்கும், தொன்று

தொட்டு வரும் உவமைக்கும் மேற்கோள் (மாறன். 92, 95, உரை); 'ஈன்றவென்' என்னும் கல்லாடச் செய்யுளில், 'மறிதிரை...மேனியை' (அடி. 12 - 8) என்பதன் விசேட வுரையில் இவ்வடியைப் பயனுவமத்தின் வகையென்று மேற்கோள் காட்டுவர் மயிலேறும் பெருமாள் பிள்ளை.

மு. பாடாண்டிணைத் துறைகளுள் விறலியாற்றுப்படைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 30, இளம்; சூ. 36, ந. (கஙௗ)

(கநச) இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிக னாயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே.

(பி - ம்.) 2 'வாணிக னஅயலன் பிறவும்'

திணை – அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) இப்பிறப்பின்கட் செய்ததொன்று மறுபிறப்பிற்கு உதவுமென்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்து அதற்கு அறங்கொள்ளும் வணிகன் ஆய் அல்லன்; அமைந்தோர் பிறரும் போயவழியென்று உலகத்தார் கருத அந்த நற்செய்கையிலே பட்டது, அவனது கைவண்மை—எ - று.

அன்றி, ஆய் அறவிலை வணிகன் அல்லன்; பிறரும் சான்றோர் சென்ற நெறியெனக் கருதி அச் செய்கையிலே பட்டதன்று, அவன் கைவண்மை யென்றுரைப்பாரும் உளர். இதற்குப் பட்டன்றென்பது மறைப்பொருள் படாமையின், பட்டதன்றென்பது பட்டன்றென விகாரமாகக் கொள்க.

(கு - ரை.) 1 - 2. புறநா. 141 : 14 - 5; "ஏற்றகை மாற்றாமை யென்னுந் தாம்வரையா, தாற்றாதார்க் கீவதா மாண்கடன்" (நாலடி. 98); "இம்மையாற் செய்ததை யிம்மையே யாம்போலும், உம்மையே யாமென்பா ரோரார்காண்" (திணைமாலை. 123); "வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாம், குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள், 221); "வைப்பானே வள்ளல் வழங்குவான் வாணிகன்" (சிறுபஞ்ச. 34); "ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோர்" (மணி. 11 : 92); "சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா லென்னாப், பெறுநன்றி மன்னும் பெரிதென் - றுறுநன்றி, தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே, வானவா முள்ளத் தவர்" (யா. வி. சூ. 4, மேற்.).

மு. செய்ததென்றது அறம் பாவமென்னு மிரண்டற்கும் பொதுவாயினும் இங்கே அறத்தை உணர்த்தி நின்றது. 'இது பிறருஞ் சான்றோர் சென்றநெறி யென்றமையின், அயலோரையும் அடுத்தூர்ந்தேத்தியது' (தொல். புறத்திணை. சூ. 35) என்பர் நச்சினார்க்கினியர். (கநச)

(கஙரு) கொடுவரி வழங்குங் கோடுயர் நெடுவரை
அருவிடர்ச் சிறுநெறி யேறலின் வருந்தித்
தடவரல் கொண்ட தகைமெல் லொதுக்கின்
வளைக்கை விறலியென் பின்ன ளாகப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
வரிநவில் பனுவல் புலம்பெயர்ந் திசைப்பப்
படுமலை நின்ற பயங்கெழு சீறியாழ்
ஒல்க லுள்ளமொ டொருபுடைத் தழீஇப்
புகழ்சால் சிறப்பினின் னல்லிசை யுள்ளி
வந்தனெ னெந்தை யானே யென்றும்
மன்றுபடு பரிசிலர்க் காணிற் கன்றொடு
கறையடி யானை யிரியல் போக்கும்
மலைகெழு நாடன் மாவே ளாஅய்
களிறு மன்றே மாவு மன்றே
ஒளிறுபடைப் புரவிய தேரு மன்றே
பாணர் பாடுநர் பரிசில ராங்கவர்
தமதெனத் தொடுக்குவ ராயி னெமதெனப்
பற்ற றேற்றுப் பயங்கெழு தாயமொ
டன்ன வாகநின் னூழி நின்னைக்
காண்டல் வேண்டிய வளவை வேண்டார்
உறுமுரண் கடந்த வாற்றற்
பொதுமீக் கூற்றத்து நாடுகிழ வோயே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) புலி இயங்கும் சிகரம் உயர்ந்த நெடிய மலையின்கண் ஏறுதற்கரிய பிளப்பின்கட் சிறிய வழியை ஏறுதலான் வருத்தமுற்று உடல் வளைவைப் பொருந்திய பயில அடியிட்டு நடக்கின்ற மெல்லிய நடையினையுடைய வளையை யணிந்த கையையுடைய விறலி என் பின்னே வரப் பொன்னைக் கம்பியாகச் செய்தாற்போன்ற முறுக்கடங்கிய நரம்பினையுடைய வரிப்பொருண்மையோடு பயிலும் பாட்டு * நிலந்தோறும் மாறி மாறி யொலிப்பப் படுமலைப்பாலை நிலைபெற்ற பயன் பொருந்திய சிறிய யாழைத் தளர்ந்த நெஞ்சத்துடனே ஒருமருங்கிலே அணைத்துக்கொண்டு புகழ்தற்கமைந்த தலைமையையுடைய நினது

---

* ஐந்திணைக்கும் உரியனவாக ஐந்து யாழும் பண்களும் உண்மையின் இங்ஙனம் கூறினர்.

நல்ல புகழை நினைந்து வந்தேன், என்னுடைய இறைவா! யான்; எந்நாளும் மன்றத்தின்கண் வந்த பரிசிலரைக் காணிற் கன்றுடனே * கறை பொருந்திய அடியையுடைய யானையை அணியணியாகச் சாய்த்துக் கொடுக்கும் மலையையுடைய நாடனே! மாவேளாகிய ஆயே! யாம் வேண்டியது யானையுமன்று; குதிரையுமன்று; விளங்கிய பொற்படையையுடைய குதிரையிற் பூட்டப்பட்ட தேருமன்று; பாணரும் புலவரும் கூத்தர் முதலாயினரு மாகிய அவர்கள் தம் முடைய பொருளென வளைத்துக்கொள்வாராயின் அதனை எம் முடையதென்று அவர்பால் நின்றும் மீண்டு கைக்கொள்ளுதலைத் தெளியாத பயன் பொருந்திய உரிமையோடு கூடி மற்றும் அத் தன்மையவாக, நின்னுடைய வாழ்நாட்கள்; யான் வந்தது நின்னைக் காண்டல் வேண்டிய மாத்திரையே. பகைவரது மிக்க மாறுபாட்டை வென்ற வலியையுடைய, யாவரும் ஒப்பப் புகழும் நாட்டையுடை யாய்—எ - று.

நாடுகிழவோய்! யான் வந்தது களிறு முதலாயின வேண்டியன்று; நின்னைக் காண்டல் வேண்டிய அளவே; நின் ஊழி அன்னவாகவெனக் கூட்டுக.

அல்லதூஉம், யானை முதலாயினவன்றிப் பிறவற்றையும் பாணர் முதலாயினர் தமதெனத் தொடுக்குவராயினென இயைத்துரைப்பினும் அமையும்.

கொடுவரி: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; ஆகுபெயருமாம்.

இனி, 'ததைமெல்லொதுக்கின்' எனவும், 'வடிநவில்பனுவல்' எனவும், 'ஒளிறுநடைப்புரவிய' எனவும் பாடமோதுவாரும் உளர்.

வடிநவில் பனுவல் புலம்பெயர்த் திசைப்பவென்று கொண்டு, வடித்தல் பயின்ற பாட்டை இசைதோறும் பெயர்த்து வாசிக்க வென்றுரைப்பாரும் உளர்.

பொதுமீக்கூற்றம், பொதியிலுமாம்.

(கு - ரை.) 1 - 4. புறநா. 139 : 3 - 4; "உயர்ந்தோங்கு பெருமலை யூறின் றேறலின், மதந்தபு ஞமலி நாவி னன்ன, துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடிக், கணங்கொ டோகையிற் கதுப்பிகுத் தசைஇ, விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத், திலங்குவளை விறலியர்" (மலைபடு. 41 - 6).

3. தடவென்பது வளைவுப் பொருளை யுணர்த்துவதோர் உரிச் சொல்; தொல். உரி. சூ. 23.

6. "வரியெனப் படுவது வகுக்குங் காலைப், பிறந்த நிலனும் சிறந்த தொழிலும், அறியக் கூறி யாற்றுழி வழங்கல்", "கண்கூடு காண்வரி யுள்வரி புறவரி, கிளர்வரி யைந்தோ டொன்ற வுரைப்பிற்,

* புறநா. 39 : 1 - 2, உரை.

காட்சி தேர்ச்சி யெடுத்துக் கோளென, மாட்சியின் வரூஉ மெண் வகை நெறித்தே" (சிலப். 8 : 77, 108 உரை, மேற்.).

7. படுமலைப்பாலை - பாலைப்பண் பன்னிரண்டனுள் ஒன்று; அது கைக்கிளை குரலாகத் தோன்றுவது.

8. ஒல்கல் - தளர்தல்; "ஒற்கா வுள்ளத் தொழியா னாகி" (மணி. 15 : 18).

11. "வயிரிய மாக்கள்...மன்ற நண்ணி" (பதிற். 29); "மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்" (மலைபடு. 492).

12. புறநா. 129 : 6, குறிப்புரை; பொருந. 125 - 7.

11 - 2. "பொருநர்க், குருகெழு பெருஞ்சிறப்பின், இருபெயர்ப் பேராயமொ, டிலங்குமருப்பிற் களிறுகொடுத்தும்" (மதுரைக். 99 - 102).

22. "மீக்கூற்றென்பது புகழ்; அது மேலாய சொல்லாற் பிறந்த புகழென்னும் மேம்பாடெனப் பொருள் தந்து நிற்றலிற் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை" (நன். வி. சூ. 178). (கஉ௫)

(கஉ௬) யாழ்ப்பத்தர்ப் புறங்கடுப்ப
இழைவலந்த பஃறுன்னத்
திடைப்புரைபற்றிப் பிணிவிடாஅ
ஈர்க்குழாத்தோ டிறைகூர்ந்த
பேஎற்பகையென வொன்றென்கோ
உண்ணாமையி னூன்வாடித்
தெண்ணீரிற் கண்மல்கிக்
கசிவுற்றவென் பல்கிளையொடு
பசியலைக்கும் பகையொன்றென்கோ
அன்னதன்மையு மறிந்தீயார்
நின்னதுதாவென நிலைதளர
மரம்பிறங்கிய நளிச்சிலம்பிற்
குரங்கன்னபுன் குறுங்கூளியர்
பரந்தலைக்கும் பகையொன்றென்கோ
ஆஅங், கெனைப்பகையு மறியுநனை
எனக்கருதிப் பெயரேத்தி
வாயாரநின் னிசைநம்பிச்
சுடர்சுட்ட சுரத்தேறி
இவண்வந்த பெருநசையேம்
எமக்கீவோர் பிறர்க்கீவோர்
பிறர்க்கீவோர் தமக்கீபவென

அனைத்துரைத்தனன் யானாக
நினக்கொத்தது நீநாடி
நல்கினை விடுமதி பரிசி லல்கலும்
தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுறை
நுண்பல மணலினு மேத்தி
உண்குவம் பெரும நீ நல்கிய வளனே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

அவனைத் துறையூர் ஓடைகிழார் (பி - ம். அரிசில்கிழார்) பாடியது.

(இ - ள்.) யாழ்ப்பத்தரினது புறத்தையொப்ப இழைசூழ்ந்த பல தையலினது இடைக்கண் உளவாகிய புரைகளைப் பற்றி ஒன்றோடொன்று தொடர்ந்த பிணிப்பு விடாதே கிடக்கின்ற ஈரினது திரளோடு தங்குதல் மிக்க பேனாகிய பகையை ஒரு பகை என்பேனோ? உண்ணாமையின், உடம்பு புலர்ந்து கண் தெளிந்த நீரால் நிறைந்து வியர்ப்புற்ற எனது பல சுற்றத்தோடு பசிநோய் வருத்தும் பகையை ஒரு பகை என்பேனோ? அப் பெற்றிப்பட்ட எனது இயல்பையும் அறியாராய் நின் கைப்பொருளைத் தாவென்று சொல்லி எம்முடைய நிலைகள் தளரும்படி மரங்கள் செறிந்த குளிர்ந்த மலையிற் குரங்கு போலப் பறித்துக்கொள்ளும் இயல்பையுடைய புல்லிய குறிய ஆறலை கள்வர் பரந்து வந்து அலைக்கும் பகையை ஒரு பகை என்பேனோ? எல்லாப் பகையும் அறிவான் ஆயேயெனக் கருதி எமது வாக்கினால் மிகவும் நினது பெயரை வாழ்த்தி நின்னுடைய புகழை நச்சி ஞாயிறு சுடப்பட்ட சுரத்தின்கண்ணே யேறி இவ்விடத்து வந்த பெரிய நச்சுதலையுடையேம்; இங்ஙனம், * வறுமையுற்ற எங்களுக்கு ஒன்றை இடுவோரன்றோ பயன் கருதாது பிறர்க்கு இடுமவர்களாவா ரெனவும் எம்மை யொழிந்த பிறர்க்கு இடுவாரன்றோ பயன்கருதி யிடுதலால் தங்களுக்கே இடுவோ ரெனவும் அவ்வளவாக யான் சொன்னேனாக, † நினக்குப் பொருந்தியது நீ ஆராய்ந்து எமக்குப் பரிசில் தந்தனையாய் விடுவாயாக; நாடோறும், குளிர்ந்த நீர் ஓடும் வாய்த்தலைகளையுடைய துறையூரின்கண் துறைமுன்னர் ‡ நுண்ணிய பல மணலினும் பல நாள் வாழ்கவென வாழ்த்தி உண்பேம், பெரும! நீ தந்த செல்வத்தை— எ - று.

பெரும! நீ நல்கிய வளத்தை அல்கலும் ஏத்தி உண்பேம்; நினக்கு ஒத்தது நீ நாடிப் பரிசில் நல்கினை விடுமதி யெனக் கூட்டுக.

---

* "வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாம், குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள், 221).

† "இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர், தாமறிவர் தங்கொடையின் சீர்" (ஔவையார் பாடல்).

‡ புறநா. 9 : 8 - 11, குறிப்புரை, 55 : 17 - 21, குறிப்புரை.

'ஆயென' என்பதற்கு ஆயென்று பிறர் சொல்லவென்றும், 'எமக்கீவோர் பிறர்க்கீவோர்' என்பதற்கு எமக்கீவோர் எம் வறுமை கண்டு வருத்த முறுவோர் யாவர்க்கும் ஈவோ ரெனவும், 'பிறர்க்கீவோர் தமக்கீப' என்பதற்குப் பிறர்க்குக் கொடுப்போர் அக் கொடுக்கப்படுகின்றோர்தமக்கே கொடுப்போராவ ரெனவும் உரைப்பாரும் உளர்.

கசிவுற்ற வென்பதற்கு இரக்கமுற்ற வெனினும் அமையும்.

பேஎற்பகையென வென்புழி எனவும் ஆங்கெனைப்பகையு மென்புழி ஆங்கும் அசைநிலை.

கண் தெண்ணீரின் மல்கி யெனவும், வாயாரப் பெயரேத்தி யெனவும் மாற்றப்பட்டன.

(கு - ரை.) 1. பத்தர் - யாழுறுப்பினுள் ஒன்று.

4 - 5. புறநா. 69 : 3 - 4, குறிப்புரை : 138 : 5.

10. 'செய்த' என்பதன் குறிப்பாய் 'அன்ன' என்பது வந்ததற்கு மேற்கோள்; தொல். வினை. சூ. 37, ந; இ. வி. சூ. 243, உரை.

13. கூளியர் என்பதற்குச் சேவித்து நிற்போர் என்று திருமுருகாற்றுப்படையிலும், நாடு காக்கும் வேடர் என்று மலைபடுகடாத்திலும், வேட்டுவர் என்று மதுரைக்காஞ்சியிலும் பொருள் செய்திருக்கின்றனர் நச்சினார்க்கினியர். "மகாஅ ரன்ன மந்தி" (சிறுபாண். 56); "கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன, நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினும்" (மலைபடு. 236 - 7).

11 - 4. "ஒப்போன் கூற்றென்றுரேனும், சிறுபான்மை வலியாற் கொள்ளுமிடத்தும் தாவென்பது வருமெனக் கொள்க; 'நின்னது... ஒன்றென்கோ' என வரும்" (தொல். எச்ச. சூ. 50, ந.).

21 - 2. புறநா. 134 : 1 - 2, குறிப்புரை.

23 - 4. புறநா. 140 : 6 - 8.

25. இச் செய்யுளைப் பாடிய புலவர் துறையூரின ராதலின் அவ்வூர்த் துறைமணலைக் கூறினர். (கசுசு)

(கசுஎ) இரங்கு முரசி னினஞ்சால் யானை
முந்நீ ரேணி விறல்கெழு மூவரை
இன்னு மோர்யா னவாவறி யேனே
நீயே, முன்யா னறியு மோனே துவன்றிய
கயத்திட்ட வித்து வறத்திற் சாவாது
கழைக்கரும்பி னொலிக்குந்து
கொண்டல் கொண்டநீர் கோடை காயினும்
கண்ணன்ன மலர்பூக்குந்து
கருங்கால் வேங்கை மலரி னுளும்

பொன்னன்ன வீசுமந்து
மணியன்னநீர் கடற்படரும்
செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந
சிறுவெள் ளருவிப் பெருங்க ணாடனை
நீவா ழியர்நின் றந்தை
தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே.

திணை - அது; துறை - இயன்மொழி; பரிசிற்றுறையுமாம்.

நாஞ்சில் வள்ளுவனை ஒருசிறைப் பெரியனார் (பி - ம். பெயரியனார், பெயரினார்) பாடியது.

(இ - ள்.) ஒலிக்கும் முரசினையும் இனம் அமைந்த யானையையும் உடைய கடலாகிய எல்லையையுடைய நிலத்தின்கண் வென்றி பொருந்திய மூவேந்தரை இன்னமும் யான் ஒருவனே பாடும் அவாவை யறியேன்; நீதான் முன்னே தொடங்கி யானறியுமவன்; நீர் நிறைந்த பள்ளத்தின்கண் விதைத்த வித்து நீரின்மையாற் சாவாது கரும்பு போலத் தழைக்கும், மழையால் முகந்து சொரியப் பட்ட நீர் கோடை காயினும் மகளிர் கண்போன்ற குவளை முதலிய மலர் பூக்கும், கரிய தாளையுடைய வேங்கை மலரின் நாடோறும் பொன் போலும் அப் பூவைச் சுமந்து மணிபோலும் நீர் கடற்கட் செல்லும் செவ்விய மலைப்பக்கத்தையுடைய நாஞ்சிலென்னும் மலையையுடைய பொருந! சிறிய வெளிய அருவியையுடைய பெரிய மலையையுடைய நாட்டையுடையாய்! நீ வாழ்வாயாக; நின்னைப் பெற்றோராகிய நின் தந்தையும் தாயும் வாழ்க—எ - று.

நீர் மலர்பூக்கு மென இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்து மேல் ஏறி நின்றது.

கோடைக்காயினு மென்பது பாடமாயின், கோடைக்கட்காயினு மென்றானும் கோடைக்கணாயினு மென்றானும் உரைக்க.

முன்னின்ற பெயரெச்சம் மூன்றும் நாஞ்சிலென்னும் நிலப்பெயர் கொண்டன.

தன் பழமை தோன்றப் புகழ்ந்து கூறுவான், மூவரையும் பாடும் அவாவை இன்னும் அறியேனென்றதாகக் கொள்க.

(கு - ரை.) 'இரங்கு' என்னும் உரிச்சொல் ஒலித்தற்றொழிற்பண்பில் வந்ததற்கு மேற்கோள்; நன். சூ. 458, மயிலை.; நன். வி. சூ. 459. இனம் - கூட்டம்.

2. முந்நீரேணி : புறநா. 35 : 1.

5. வறம் - வறுமை; இங்கே நீரின்மை.

6. கழைக் கரும்பு : "ஆலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே" (மலைபடு. 119); "மோடு கொண்டெழு மூரிக் கழைக்கரும்பு" (சூளா. நாடு. 25); கலித். 40 : 28.

11. மணி - பளிங்கு; புறநா. 150 : 27.

12. படப்பை - பக்கம்; தோட்டமுமாம்.

14 - 5. ரகரவீற்று வியங்கோள் வாழ்த்துதற்பொருளில் வந்ததற்கு மேற்கோள்; நன். சூ. 337, மயிலை; இ. வி. சூ. 239, உரை. (கஙஎ)

(கஙஅ) ஆனினங் கலித்த வதர்பல கடந்து
மானினங் கலித்த மலைபின் னொழிய
மீனினங் கலித்த துறைபல நீந்தி
உள்ளி வந்த வள்ளுயிர்ச் சீறியாழ்
சிதாஅ ருடுக்கை முதாஅரிப் பாண
நீயே பேரெண் ணலையே நின்னிறை
மாறி வாவென மொழியலன் மாதோ
ஒலியிருங் கதுப்பி னாயிழை கணவன்
கிளிமரீஇய வியன்புனத்து
மரனணி பெருங்குர லனைய ளாதலின்
நின்னை வருத லறிந்தனர் யாரே.

திணை - அது; துறை - பாணாற்றுப்படை.

அவனை மருதனிளநாகனார் பாடியது.

(இ - ள்.) பெற்றத்தினது இனம் மிக்க வழி பலவும் வந்து மான்றிரள் மிக்க மலை பின்கழிய மீனினந்தழைத்த துறை பலவற்றையும் நீந்தி நினைந்து வந்த வள்ளிய ஓசையை யுடைத்தாகிய சிறிய யாழையும் சிதாராகிய உடையையுமுடைய மூத்த பாணனே! நீதான், அவன்பாற் சில கருதிப் போகின்றமையின் பெரிய எண்ணத்தையுடையை; நின்னுடைய தலைவன் இப்பொழுது போய்ப் பின் ஒரு நாட் பரிசிற்கு வாவென்று சொல்லான்; தழைத்த கரிய கூந்தலையுடைய ஆயிழைக்குத் தலைவன், கிளி மருவிய அகன்ற புனத்தின்கண் மரப் பொதும்பின்கண் வைத்த பெரிய கதிரை யொப்பனாதலின், நீ அவன் பாற் பரிசில் பெற்று வருதற்கண் நின்னைப் *பழைய பாணனென்று அறிவார் யார்?—எ - று.

'நின்னை வருதலறிந்தனர் யார்' என்றதன் கருத்து, நின்னை அறிவாரும் அறியாத தன்மையை ஆவை யென்பதாம்.

அறிவார் யாரென்பது அறிந்தனர் யாரெனக் காலமயக்கமாயிற்று.

---

* பொருந. 96 - 100.

நினக்கு அவன் பரிசில் தப்பாமல் தருமென்பான், நின்னிறை யென்றான்.

‘கிளி.....குரலனையன்’ என்றது கிளியீடு வாய்த்தாற்போல்வ னென்னும் வழக்கைப்பற்றி நின்றது.

(கு - ரை.) 5. சிதார் - கந்தை. முதாரி - முதுமை; சிலப். 19 : 24. உரை.

4 - 5. புறநா. 69 : 3 - 4, 136 : 4 - 5.

7. “இரந்தோர்க் கெஞ்ஞான்றும், காலம் பகராதார் காழிந் நகர் தானே” (தேவாரம்).

8. ஆயிழை கணவன் : புறநா. 3 : 6, குறிப்புரை. (௱௩௮)

(௱௩௯) சுவலழுந்தப் பலகாய
சில்லோதிப் பல்லிளைஞருமே
அடிவருந்த நெடிதேறிய
கொடிமருங்குல் விறலியருமே
வாழ்தல் வேண்டிப்
பொய்கூறேன் மெய்கூறுவல்
ஓடாப் பூட்கை யுரவோர் மருக
உயர்சிமைய வுழாஅ நாஞ்சிற் பொருந
மாயா வுள்ளமொடு பரிசி றுன்னிக்
கனிபதம் பார்க்குங் காலை யன்றே
ஈத லானான் வேந்தே வேந்தற்குச்
சாத லஞ்சாய் நீயே யாயிடை
இருநில மிளிர்ந்திசி னாஅங் கொருநாள்
அருஞ்சமம் வருகுவ தாயின்
வருந்தலு முண்டென் பைதலங் கடும்பே.

திணை - அது; துறை - பரிசில் கடாநிலை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) தோள் வடுப்படப் பல முட்டுக்களையும் காவிய (காவிய - சுமந்த) சிலவாய மயிரையுடைய பல இளையோரும் அடி வருந்த நெடும்பொழுது ஏறிய கொடி போலும் இடையினையுடைய விறலி யரும் என இவர் வாழ்தலை விரும்பிப் பொய் சொல்லேன்; மெய் சொல்லுவேன்; புறக்கொடாத மேற்கோளையுடைய வலியோர் மரபி லுள்ளானே! உயர்ந்த உச்சியையுடையதாய் உழப்படாத நாஞ்சி லென்னும் பெயரையுடைய மலைக்கு வேந்தே! மறவாத நினைவுடனே பரிசிற்குவந்து பொருந்திப் பின்பு நின்று நின் மனம் நெகிழும் செவ்வி

பார்க்கும் காலமல்ல, யான் வறுமையுற்று நிற்கின்ற நிலைமை; நினக்கு வேண்டிற்றுத் தருதலை அமையான், நின்னுடைய அரசன்; அவ்வரசன் பொருட்டுச் சாதலுக்கு அஞ்சாய், நீ; அவ்விடத்துப் பெரிய நிலம் பிறழ்ந்தாற் போல ஒரு நாள் பொறுத்தற்கரிய பூசல் வருவதாயின், வருந்துதலும் உளதாம், எனது பசித் துன்பத்தையுடைய சுற்றம்— எ - று.

அதனாற் போர் வருவதன்முன்னே பரிசில் தந்து விடுவாயாக வென்பது கருத்து.

வேந்து என்றது சேரனை.

(கு - ரை.) 1 - 2. புறநா. 64 : 1 - 2, குறிப்புரை.

3 - 4. புறநா. 135 : 1 - 4.

1 - 4. இளைஞரும் விறலியரும் : "மடமா னோக்கின் வாணுதல் விறலியர், நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி, கல்லா இளையர் மெல்லத் தைவர" (சிறுபாண். 31 - 3).

5 - 6. புறநா 148 : 5 - 6.

7. புறநா. 126 : 4; குறள், 385, பரிமேல்.

8. நாஞ்சிற் பொருநன் : புறநா. 140 : 1, 380 : 9.

12. மூதுரை, 6. 1 - 13. புறநா. 103. (கஙகூ)

(கச0) தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாஞ்சில
அரிசி வேண்டினெ மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே யன்னதோர்
தேற்றா வீகையு முளதுகொல்
போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே.

(பி-ம்.) 3 'படப்பை கொய்த' 4 'கையுறையாக' 5 'பிறர்' 8 'இன்னதேற்றா' 9 'முண்டு கொல்' 10 'போற்றா தம்ம'

திணை - அது; துறை - பரிசில்விடை.

அவனை ஔவையார் (பி - ம். அவர்) பாடியது.

(இ - ள்.) பெரிய நிலைமையையுடைய பலா மரத்தையுடைத்தாய நாஞ்சின்மலைக்கு வேந்தன், அறிவுமெல்லியன், நிச்சயமாக, *செவ்விய

---

* 'பொய் கூறாமையிற் செந்நாவென்றார்' என்பர் பின்; புறநா. 148, உரை.

நாவையுடைய புலவீர்! வளையணிந்த கையையுடைய விறலியர் மனைப் பக்கத்தின்கட் பறித்த இலைக்கு மேல் தூவுவதாக யாங்கள் சில அரிசி வேண்டினேமாக, தான் பரிசிலர்க்கு உதவும் வரிசை அறிதலால் எம் வறுமையைப் பார்த்தலேயன்றித் தனது மேம்பாட்டையும் சீர்தூக்கிப் பெரிய சுரஞ் சூழ்ந்த மலைபோல்வதொரு பெரிய யானையை அளித்தான்; ஆதலான், ஒருவற்கு ஒன்றனைக் கொடுக்குமிடத்து அப் பெற்றிப்பட்டதொரு தெளியாக் கொடையும் உளதோதான்? பெரியோர் தாங்கள் செய்யக்கடவ முறைமையைத் தெரிந்து பாது காத்துச் செய்யார்கொல்?—எ - று.

பிறவென்பது அசைநிலை.

கொல்லென்பது பின்பும் கூட்டி உரைக்கப்பட்டது.

(கு - ரை.) 1. புறநா. 139 : 8, 380 : 9.

அகரவீற்று உரிச்சொல் தடவுநிலையென உகரம் பெற்று வந்த தற்கு மேற்கோள்; தொல். குற்றியலுகரப். சூ. 78, ந.

2. செந்நாப்புலவீர் : புறநா. 107 : 2; "செந்நாப் புலவனியான் செல்கின்றேன்" (தனிப்பாடல்).

4. கண்ணுறை - மேலீடு; புறநா. 61 : 5.

5 - 6. 'பிற' என்னும் இடைச்சொல் அசைநிலையாக வந்ததற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 31, சே; தெய்வச்.; ந.; இ. வி. சூ. 277, உரை.

5 - 8. புறநா. 136 : 20 - 23; "சிரப்பான் மணிமவுலிச் சேரலர் கோன் றன்னைச், சுரப்பா டியான்கேட்கப் பொன்றொடான் றீந்தான், இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர், தாமறிவர் தங்கொடையின் சீர்" (தமிழ் நாவலர் சரிதை, 24).

9. தேற்று என்பது தன்வினைப்பொருளில் வந்தது.

மு. புறநா. 394 : "சேற்றுக் கமலவயற் றென்குறை வாணனை யான், சோற்றுக் கரிசிதரச் சொன்னக்கால் - வேற்றுக், களிக்குமா வைத்தந்தான் கற்றவர்க்குச் செம்பொன், அளிக்குமா றெவ்வா றவன்" (தனிப்பாடல்).

பாடாண்டிணைத் துறைகளுள், கொடுப்போரேத்தற்கு மேற் கோள்; தொல். புறத்திணை. சூ. 29, இளம்; சூ. 35, ந. (கசо)

(கசக) பாணன் சூடிய பசும்பொற் றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீ ரோவென வினவ லானாக்

காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென்வே லண்ணற் காணா வூங்கே
நின்னினும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினே மன்னே யென்றும்
உடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினு மீத்த லன்றென
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமை நோக்கின் றவன் கைவண் மையே.

(பி - ம்.) 7 'வெல்வேல்'

திணை - அது; துறை - பாணாற்றுப்படை; புலவராற்றுப் படையு மாம்.

வையாவிக்கோப் பெரும்பேகனைப் பரணர் பாடியது.

(இ - ள்.) 'பாணன் சூடிய ஓட்டற்ற பொன்னாற் செய்யப்பட்ட தாமரைப்பூ மாட்சிமைப்பட்ட அணியினையுடைய விறலி அணிந்த பொன்னரிமாலையுடனே (பொன்னரிமாலை - பொன்னை மலராக அரிந்து தொடுத்த மாலை) விளங்கக் கடிய குதிரையைப் பூண்ட நெடிய தேரைப் பிணிப்பை விட்டு இளைப்பாறி ஊரின்கண் இருந்தீர்போலச் சுரத்திடை யிருந்தீர்! நீர் யாவிர் பாணரோ?' என எம்மைக் கேட்டல் அமையாத புல்லென்ற சுற்றத்தையும் மிக்க பசியையுமுடைய இரவலனே! வென்றி வேலையுடைய தலைவனைக் காண்பதன் முன் யாம் நின்னினும் வறியேம்; இப்பொழுது அவ் வறுமை நீங்கி இத் தன்மையே மாயினேம்; எந்நாளும் உடா போராவாதலை அறிந்துவைத்தும் படாததினை மயிலுக்குக் கொடுத்த எம் இறைவன், மதமிக்க யானையினையும் மனஞ் செருக்கிய குதிரையினையுமுடைய பேகன், எவ்வளவாயினும் கொடுத்தல் அழகிதென்று மறுபிறப்பை நோக்கிற்றோ வெனின், அன்று; பிறரது மிடியைக் கருதிற்று, அவனது கைவண்மை—எ - று.

எங்கோ, பேகன்; அவன் கைவண்மை மறுமை நோக்கிற்றன்று; பிறர் வறுமை நோக்கிற்றெனக் கூட்டுக.

'நின்னினும் புல்லியேமன்' என்பது, * 'பண்டுகாடுமன்' என்பது போல நின்றது. ஒழிந்த மன் : அசைநிலை.

(கு - ரை.) 1 - 2. புறநா. 11 : 11 - 7, குறிப்புரை, புறநா. 150 : 23.

* ஆக்கப்பொருளில் வந்தது.

7. வினைத்தொகைக்கு இவ்வடி மேற்கோள்; தொல். எச்ச. சூ. 19, ந. 8 - 9. பொருந. 68.

10. உடாஅ - உடுத்திக்கொள்வனவல்ல.

10 - 12. புறநா. 145 : 1 - 3; "கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய, அருந்திற லணங்கி னாவியர் பெருமகன், பெருங்க லாடன் பேகனும்" (சிறுபாண். 85 - 7).

11. படாம் - ஆடை. 12. கடாம் - மதம்.

13 - 5. புறநா. 134; நாலடி. 94; குறள், 222.

மு. பாணாற்றுப்படைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 30, இளம்; சூ. 36, ந. (கசக)

(கசஉ) அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
5 கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே.

(பி - ம்.) 2 'உறுநிலத்துதவா'

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) வற்றிய குளத்தின்கண்ணே பெய்தும் அகன்ற விளை நிலத்தின்கண்ணே சொரிந்தும் இவ்வாறு குளத்தும் விளைநிலத்தும் பெய்யாது களர்நிலத்தை நிறைத்தும் எவ்விடத்தும் வரையாத மரபினையுடைய மழை போல மதமிக்க யானையினையுடைய கழல் புனைந்த காலையுடைய பேகன் கொடையிடத்துத் தான் அறியாமைப் படுதலல்லது பிறர் படை வந்து கலந்து பொரின் அப் படையிடத்துத் தான் அறியாமைப்படான்—எ - று.

* படைமடமென்றது, வீரரல்லாதார்மேலும், முதுகிட்டார்மேலும் புண்பட்டார்மேலும் மூத்தார் இளையார்மேலும் செல்லுதல்.

---

* "உடையிட்டார் புன்மேய்வா ரோடுநீர் புக்கார், படையிட்டார் பற்றேது மின்றி - நடையிட்டார், இவ்வகை யைவரையு மென்று மணுகாரே, செவ்வகைச் சேவகர் சென்று" (சிறுபஞ்ச. 41); "சடையின ருடையினர் சாம்பற் பூச்சினர், பிடிகைப் பீலிப் பெருநோன் பாளர், பாடு பாணியர் பல்லியத் தோளினர், ஆடு கூத்த ராகி யெங்கணும், ஏந்துவா ளொழிய...வேண்டுவயிற் படர்தரக், கச்சை யானைக் காவலர் நடுங்க,...அதரி திரித்த வாளே ருழவன்" (சிலப். 26 : 225 - 34) என்பனவும், 'ஏந்தறன்', 'கைப்படை', 'வீறின்மையின்'

(கு - ரை.) 1. அறுகுளம் - நீரற்ற குளம்; "அற்றகுளத்தில்" என்பது மூதுரை.

3. வரையா மரபு - எல்லையிடாத முறைமை. "மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ" (கபிலரகவல்).

1 - 3. "மழைவள்ளல்" (சீவக. 899).

4. புறநா. 141 : 12, 145 : 3.

5. புறநா. 141 : 10 - 12; 'கொடைமடம்படுதல் - அகாரணத் தாற் கொடைகொடுத்தல்' (ஞானமிர்தம், 17, உரை); "கொடைமடம் வரையாது கொடுத்த லாகும்" (திவாகரம்); கொடைமட மென்று சொல்ப வரையாது கொடுத்த லாமே" (சூடாமணி. 9 : 10); "வல்லார் வல்ல கலைஞருக்கும் மறைநூ லவர்க்குங் கடவுளர்க்கும், இல்லா தவர்க்கு முள்ளவர்க்கு மிரந்தோர் தமக்குந் துறந்தவர்க்கும், சொல்லா தவர்க்குஞ் சொல்பவர்க்குஞ் சூழுஞ் சமயா திபர்களுக்கும், அல்லா தவர்க்கு மிரவி மகனரிய தான மளிக்கின்றான்" (வி. பா. கிருட்டினன் தூது, 235) என்னுஞ் செய்யுளிற் கொடைமடம் விளங்கக் கூறப்பட் டிருத்தல் காண்க.

'கொடைமடம் படுதலல்ல தென்பது வசைபோன்று புகழ்; இது செம்பொருளின்பாற்படும்' (தொல். செய். சூ. 124, பேர்.).

3 - 5. புறநா. 55 : 15, குறிப்புரை; 133 : 6 - 7, குறிப்புரை. (கசஉ)

(கசங) மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய வுவகையர் சாரற்
புனத்திணை யயிலு நாட சினப்போர்க்
கைவள் ளீகைக் கடுமான் பேக
யார்கொ லளிய டானே நெருநற்
சுரனுழந் துவருந்திய வொக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசி னிரங்கு மருவி
நளியிருஞ் சிலம்பிற் சீறூ ராங்கண்
வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று

சீவக. 2258, 2259, 2261) என்னுஞ் செய்யுட்களும், "மீனாய் வேலையை யுற்றார் சிலர்சிலர் பசுவாய் வழிதொறு மேய்வுற்றார், ஊனார் பறவை யின் வடிவுற் றார்சிலர் சிலர்நான் மறையவ ருருவானார், மானார் கண்ணிள மடவா ராயினர் முன்னே தங்குழல் வகிர்வுற்றார், ஆனார் சிலர்சில ரையா நின்சர ணென்றார் நின்றவ ரரியென்றார்" (கம்ப. அக்க. 40) என்பதும், "படைமயக் குற்ற போதும் படைமட மொன்றி லாதான்" (சூடாமணி. 9 : 10) என்பதும் ஈண்டறியற்பாலன.

நின்னுநின் மலையும் பாட வின்னா
திருத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையக நனைப்ப விம்மிக்
குழலினை வதுபோ லழுதனள் பெரிதே.

திணை - பெருந்திணை; துறை - குறுங்கலி; தாபதநிலையுமாம்.

அவனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாக அவனைக் கபிலர் பாடியது.

(இ-ள்.) மலையை மழை வந்து சூழ்கவென்று மிக்க பலியைத் தூவி அம் மழை மிகப் பெய்தலான் அப் பெயல் அமைந்து முகில் மேலே போவதாக வேண்டுமெனத் தெய்வத்தைப் போற்றிய குறமாக்கள் மழை இடத்து மாறிய உவகையராய் மலைச்சாரற்கட் புனத்தினையை உண்ணும் நாட! சினத்தினாற் செய்யும் போரையும் கைவண்மையாற் கொடுக்கும் கொடையினையுமுடைய விரைந்த குதிரையையுடைய பேக! அவ்வருளத் தக்காள், யாரோதான்? * நெருநற்றுச் சுரத்தின் கண்ணே நடந்து வருந்திய எனது சுற்றம் பசித்ததாக, கடிப்பு அறையப்பட்ட முரசுபோல ஒலிக்கப்பட்ட அருவியையுடைய பெரிய உயர்ந்த மலைக்கட் சிறிய ஊராகிய அவ்விடத்து வாயிற்கண்ணே வந்து தோன்றி வாழ்த்தி நின்று நின்னையும் நின் மலையையும் பாட, அப்பொழுது இன்னாதாகச் சொரியப்பட்ட கண்ணீரை ஒழித்தல் மாட்டாளாய் அக் கண்ணீர் முலையிடத்தை நனைப்பப் பொருமிக் குழல் இரங்கி ஒலிப்பது போல் அழுதாள், மிகவும்—எ - று.

மழை வேண்டுங் காலத்துப் பெய்வித்தற்கும் வேண்டாக் காலத்து ஒழித்தற்கும் பலி தூஉய்ப் பேணிய குறவராகிய மாக்களென்க.

குறவர்மாக்கள் : இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

மாக்கள் புனத்தினை அயிலும் நாட! பேக! என் ஒக்கல் பசித்தென வாயிற்றோன்றி வாழ்த்தி நின்று நின்னும் நின் மலையும் பாடக் குழல் இனைவதுபோல அழுதாள்; அவ்வளிக்கத்தக்காள் யார்கொல்? அவள் பால் அருள்பண்ணத்தகுமென வினைமுடிக்க.

இது நின் மலையிற் குறவர்மாக்கள் கடவுட்பேணி மழை வேண்டிய பொழுது பெற்றுத் தாம் வேண்டுமுணவு நுகருமாறு போல் இவளும் நின் அருள் பெற்று இன்பம் நுகர்வாளாக வேண்டு மென்பதொரு நயந் தோன்ற நின்றது.

மழை மிகப் பெய்தலா னென்பது ஆற்றலாற் கூறப்பட்டது.

---

* நெருநற்று : "நெருநற்றுச் சென்றாரெங் காதலர்" (குறள், 1278).

பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியை அவனோடு கூட்ட லுறுவார், அருள்பண்ண வேண்டுமென்று இரந்துகொண்டு கூறின மையின், குறுங்கலியாயிற்று.

(கு - ரை.) 1. "குன்றக் குறவ னார்ப்பி னெழிலி, நுண்ப லழிதுளி பொழியு நாட" (ஐங்குறு. 251); "ஏனற் பசுங்கதி ரென் றூழ்க் கழிய வெழிலியுன்னிக், கானக் குறவர்கள் கம்பலை செய்யும் வம் பார்சிலம்பா", "இறவரை யும்பர்க் கடவுட் பராய்நின் றெழிலி யுன்னிக், குறவரை யார்க்குங் குளிர்வரை நாட" (திருச்சிற். 159, 260).

'என' என்னும் இடைச்சொல் வினைப்பொருண்மை குறித்து வந்த தற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 10, சே.; இ. வி. சூ. 255, உரை.

1 - 2. "வையக முற்று மாமழை மறந்து வயலி னீரிலை மாநிலந் தருகோம், உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன வொளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும், பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும், செய்கை கண்டுநின் றிருவடி யடைந்தேன் செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே" (தே. சுந்தர.).

4. கண்மாறல் : குறுந். 125 : 7; கலித். 46 : 18.

5. புறநா. 168 : 6 - 7.

9. "பறையிசை யருவி" (புறநா. 126 : 8) என்பதன் குறிப்புரை யைப் பார்க்க. "புணரி, குணில்பாய் முரசி னிரங்குந் துறைவன்" (குறுந். 328).

12. புறநா. 130 : 3, குறிப்புரை. "மலைவளம் புகழ்ந்தும்" (பெருங். 2, 12 : 134).

13. இகுத்தல் - சொரிதல் : மலைபடு. 226.

14. "கருங்கால் வெண்குருகு மேயும், பெருங்குள மாயிற்றென் னிடைமுலை நனைந்தே" (குறுந். 325 : 5 - 6).

13 - 4. "அரிமதர் மழைக்கண்ணீ ரலர்முலைமேற் றெறிப்பபோல்" (கலித். 77 : 4); "முலைமேல், வடிக்கேழ் மலர்நெடுங்கண் வார்புயலுங் காலும்" (சீவக. 2049).

15. "நெய்த லுண்கண் பைதல் கூரப், பின்னிருங் கூந்தன் மறை யினள் பெரிதழிந், துதியன் மண்டிய வொலிதலை ஞாட்பி, னிம்மென் பெருங்களத் தியவ ரூதும், ஆம்பலங் குழலி னேங்கிக், கலங்கஞ ருறுவோள்" (நற். 113); "குழலினு மினைகுவள் பெரிதே" (ஐங்குறு. 306); "சிறுகுழல்...இனைதியோ வெம்போல" (கலித். 129 : 16 - 8); "குழலேங்கு மாறேங்கி யழுதார் கோதை மடவாரே" (சீவக. 2945); "வேய்ங்குழல் விளிகொ ணல்யாழ் வீணையென் றினைய நாண, வேங்கினள்" (கம்ப. கிட்கிந்தா. அரசியல். 3). (கசரு)

(கசச) அருளா யாகலோ கொடிதே யிருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக
நீனறு நெய்தலிற் பொலிந்த வுண்கண்
கலுழ்ந்துவா ரரிப்பனி பூணக நனைப்ப
இனைத லானா ளாக விளையோய்
கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென
யாந்தற் றொழுதனம் வினவக் காந்தள்
முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாமவன் கிளைஞரே மல்லேங் கேளினி
எம்போ லொருத்தி நலனயந் தென்றும்
வருஉ மென்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லென வொலிக்குந் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே.

(பி - ம்.) 1. 'யாதலோ கொடிதேமருள்' 9 "முகைபுணர்"

திணையும் துறையும் அவை.

அவனை அவள் காரணமாகப் பரணர் (பி - ம். வன்பரணர்) பாடியது.

(இ - ள்.) அருள்பண்ணாயாதல் கொடிது; மாலைக் காலம் வந்த அளவிலே சிறிய யாழை இரங்கற்பண்ணாகிய செவ்வழியென்னும் பண்ணிலே வாசிக்கும் பரிசு பண்ணி நினது மழையை யேற்றுக்கொண்ட காட்டைப் பாடினேமாக, நீலநறுநெய்தல்போன்று பொலிந்த மையுண்ட கண்கள் கலங்கி வீழ்ந்த * இடைவிட்ட துளிகள் பூணையுடைய மார்பை நனைப்ப வருந்துதல் அமையாளாக, 'இளையோய்! கிளைமையை யுடையையோ எம்முடைய கேண்மையை விரும்புவோனுக்கு?' என யாங்கள் தன்னை வணங்கிக் கேட்டேமாக, அவள், காந்தள்மொட்டுப் போலும் விரலாலே தன் கண்ணீரைத் துடைத்து 'நாங்கள் அவனுடைய கிளைஞரே மல்லேம்; கேட்பாயாக, நீ இப்பொழுது: எம்மை ஒப்பாளொருத்தியுடைய அழகைக் காதலித்து எந்நாளும் வருமென்று பலரும் சொல்லுவர், விளங்கிய புகழையுடைய பேகன், ஒல்லென முழங்கும் தேருடனே முல்லை வேலியையுடைய நல்லூரின் கண்' என்று கூறினாள்—எ - று.

கிளையையோ வென ஓகாரமும், என்றாளென ஒரு சொல்லும் வருவித்து உரைக்கப்பட்டன.

---

* 'பூப்போலும் மையுண் கண்கள் தாரையாகச் சொரியாது தனித்து வீழ்கின்ற முத்துப் போலுந் துளியைத் துளிப்ப' (முல்லைப். 23, ந.).

நின் கானம் பாடினேமாக, இளைதலாஞளாக, யாம் தற்றெழுதனம் வினவ, தன் கண்ணீர் துடைத்துப் பேகன் ஒருத்தி நலன் நயந்து நல்லூரின்கண் என்றும் வருஉமென்ப என்ருள்; அவளை அருளா யாதல் கொடிதெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

எம்போ லொருத்தி யென்றது, உவமை கருதாது வன்மையுரை தோன்ற நின்றது; எம்மைப் போலும் பொதுமகளொருத்தி யென அவளை இழித்துக் கூறியவாறுமாம்.

இனி, யாம் தற்றெழுதனம் வினவினேமாக, அவள் ஆயத்தார் தம் விரலால் அவள் கண்ணீரைத் துடைத்து யாம் அவன் கிளைஞரே மல்லேம்; இது புகுந்தவாறு யாம் கூறக் கேளென முன்பு கூறிப் பின் பேகன் எம்போலொருத்தி நலன் நயந்து நல்லூரின்கட் சென்று வரு மென்று சொன்ஞர்கள்; இவ்வாறு இளையோளும் ஆயத்தாரும் உறும் துன்புறவு தீர்த்து அருளாயாதல் கொடிதென உரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 1. ஆகலென்னும் வினைக்குறிப்புச்சொல் சார்ந்து நின்ற சொற்பொருளையே உணர்த்தி நிற்றற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 32, ந.

2. புறநா. 146 : 3, 147 : 2.

1 - 2. மாலைக்காலத்திற் செவ்வழி பண்ணல் : புறநா. 149 : 2 - 4.

3. புறநா. 145 : 13.

னகரவீற்றுச்சொல் வேற்றுமைக்கண் அம்முப் பெற்று நிற்றற்கும் (தொல். குற்றியலுகரப். சூ. 78, ந.) செயவெனெச்சம் முற்ருய்த் திரிவுழி ஆகவென்னும் இடைச்சொல் வந்து அதன் பொருளையே உணர்த்திச் செயவெனெச்சமாய் நிற்றற்கும் (தொல். இடை. சூ. 32, ந.) மேற்கோள்.

4. "கயவாய நெய்தலலர் கமழ்முகை மணநகை......மதருண் கண்" (பரி. 8 : 74 - 5).

6. செயவெனெச்சம் முற்ருய்த் திரிவுழி ஆகவென்னும் இடைச் சொல் வந்து அதன் பொருளையே உணர்த்திச் செயவெனெச்சமாய் நிற்றற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 32, ந.

8 - 9. "செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்" (சிறுபாண். 167).

14. முல்லை வேலி : "வேலி சுற்றிய வால்வீ முல்லை" (அகநா. 314 : 19); "முல்லை தலையணிந்த பூஞ்ஞை வேலி" (பெருங். 4, 2 : 63).

மு. 'அருளா யாகலோ...நல்லூரானே : இது கண்ணகி காரண மாக வையாவிக்கோப் பெரும்பேகனைப் பரணர் பாடிய கைக்கிளை வகைப் பாடாண்பாட்டு; கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென வினவ, யாம் கிளையல்லோம், முல்லைவேலி நல்லூர்க்கண்ணே வருமென்று சொல்லுவரெனக் கூறுதலின், அஃது ஏனைக் கைக்கிளை களின் வேருயிற்று' (தொல். புறத்திணை. சூ. 35, ந.). (கசச)

(கசரு) மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக
பசித்தும் வாரேம் பாரமு மிலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ வருள்வெய் யோயென
இஃதியா மிரந்த பரிசிலஃ திருளின்
இனமணி நெடுந்தே ரேறி
இன்னா துறைவி யரும்படர் களைமே.

திணையும் துறையும் அவை.

அவனை அவள் காரணமாக அவர் பாடியது.

(இ - ள்.) மெல்லிய தகைமையையுடைய கரிய மயில் குளிரால் நடுங்குமென்று அருள் செய்து படாம் கொடுத்த அழியாத நல்ல புகழினையுடைய மதம்பட்ட யானையையும் மனஞ் செருக்கிய குதிரையையுமுடைய பேக! யாம் பசித்தும் வருவேமல்லேம்; எம்மாற் பரிக்கப்படுஞ் சுற்றமுமுடையே மல்லேம்; களாப்பழம் போன்ற கரிய கோட்டையுடைய சிறிய யாழை * இசையின்பத்தை விரும்பியுறைவார் அவ்விசை யின்பத்தால் தலையசைத்துக் கொண்டாடும்படி வாசித்து, அறத்தைச் செய்வாயாக அருளை விரும்புவோயென இது நின்பால் யாம் இரந்த பரிசில்: இற்றையிரவின்கண் இனமாகிய மணியையுடைய உயர்ந்த தேரை ஏறிப்போய்க் காண்டற்கு இன்னாதாக உறைகின்றவள் பொறுத்தற்கரிய நினைவாலுண்டாகிய நோயைத் தீர்ப்பாயாக—எ - று.

பேக! தேரேறி இன்னாதுறைவி அரும்படர் களை; யாழைப் பண்ணியாம் இரந்த பரிசில் இதுவெனக் கூட்டுக.

இதுவென்றது, அப்படிப் படர் களைதலை.

'மடத்தகை மாமயில் பனிக்குமென்றருளிப், படாஅ மீத்த...... பேக' என்ற கருத்து: இவ்வாறு ஒரு காரணமின்றியும் அருள் பண்ணுகின்ற நீ நின்னால் வருந்துகின்ற இவட்கு அருளாதொழிதல் தகாதென்பதாம்.

இனி, அருள்வெய்யோய்! யாம் இரந்த பரிசில், அறஞ்செய்ய வேண்டுமென்று கூறும் இது; அவ்வறந்தான் யாதென்று கேட்பின்,

* "பண்வனப்புக், கேட்டார் நன்றென்றல்" (சிறுபஞ்ச. 9), "இசைபெறு திருவின் வேத்தவை" (மலைபடு. 39); 'இசையை எக்காலத்தும் கேட்கின்ற செல்வத்தினையுடைய அரசர்களுடைய அவைக்களம்' (மலைபடு. 39, உரை) என்பவை இங்கே அறியற்பாலன.

நின்பால் அருள் பெருமையின் இன்னுதுறைவி அரும்படரை நீ சென்று களைதல்; அதனைச் செய்வாயாகவெனக் கூட்டியுரைப்பினும் அமையும்.

'பனிக்குமென் றஞ்சி' என்பதூஉம் பாடம்.

(கு - ரை.) 3. புறநா. 141 : 12, 142 : 4.

1 - 3. புறநா. 141 : 10 - 12.

5. கோடு - யாழுறுப்பினு ளொன்று. மு. புறநா. 127 : 1; "மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்" (மலைபடு. 534).

10. உறைவி: "நோநொந் துறைவி", "நோயுழந் துறைவி" (குறுந். 192 : 2, 400 : 7).

11. முன்னிலை முன்னர் ஏகாரம் அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருதற்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. 52, தெய்வச். (கசரு)

(கசசு) அன்ன வாகநின் னருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டேஎ மடுபோர்ப் பேக
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னுடு பாட வென்னை நயந்து
பரிசி னல்குவை யாயிற் குரிசினீ
நல்கா மையி னைவரச் சாஅய்
அருந்துய ருழக்குநின் றிருந்திழை யரிவை
கலிமயிற் கலாவங் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வளமரி நெடுந்தேர் பூண்கநின் மாவே.

(பி - ம்.) 6 'நல்கா மையினீ வரச்'

திணையும் துறையும் அவை.

அவனை அவள் காரணமாக அரிசில்கிழார் பாடியது.

(இ - ள்.) அத்தன்மையவாக; நின்னுல் தரப்பட்ட பெறுதற்கரிய ஆபரணமும் செல்வமுமாகிய அவை பெறுதலை விரும்பேம்; கொல்லும் போரையுடைய பேக! சிறிய யாழைச் செவ்வழியாகப் பண்ணி வாசித்து நினது வலிய நிலமாகிய நல்ல மலைநாட்டைப் பாட, என்னைக் காதலித்துப் பரிசில் தருகுவையாயின், தலைவனே! நீ அருளாமையாற் கண்டார் இரங்க மெலிந்து அரிய துயரத்தான் வருந்தும் உன்னுடைய திருந்திய அணியையுடைய அரிவையது தழைத்த மயிலினது பீலியைக் காலொன்றக் குவித்தாற் போன்ற தழைத்த மெல்லிய கூந்தற்கண்ணே மணங்கமழும் புகையைக் கொள்ளுவித்துக் குளிர்ந்த மணங்கமழும் மாலையைச் சூட வளவிய செலவையுடைய உயர்ந்த தேரை நின் குதிரைகள் பூண்பனவாக—எ - று.

அன்னவாகவென்றது, இரவலர்க்கு அருங்கல வெறுக்கைகளை எளிதிற் கொடுப்பை யன்றே! அவ் வெறுக்கை எமக்கும் எளிதாக வென்றவாறும்.

(கு - ரை.) 1. அருங்கல வெறுக்கை: புறநா. 378 : 11; அகநா. 372 : 5; பெருங். 4. 3 : 141.

1 - 2. "அரும்பொருட் பரிசிலே னல்லேன்" (புறநா. 28 : 171).

3. புறநா. 144 : 2, 147 : 2.

7. துயருழத்தல் : மணி. பதி. 48.

7 - 9. "கலிமயிற் கலாவத் தன்னவிவள், ஒலிமென் கூந்தல்" (நற். 265 : 8 - 9); "கலிமயிற் கலாவத் தன்னவிவ, ளொலிமென் கூந்த லுரியவாம்" (குறுந். 225); சிறுபாண். 14 - 5, குறிப்புரை.

9 - 10. புறநா. 147 : 6 - 8, 194 : 3; "பெறுகநின் செவ்வி பெருமகன் வந்தா, னறுமலர்க் கூந்த ளுணரி பெறுகென" (சிலப். 27 : 215 - 6).

7 - 11. "மாணிழை யரிவை காணிய வொருநாட், பூண்க மாளநின் புரவி நெடுந்தேர்" (பதிற். 81 : 31 - 2.) (கசசு)

(கசஎ) கன்முழை யருவிப் பன்மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்
கார்வா னின்னுறை தமியள் கேளா
நெருந லொருசிறைப் புலம்புகொண் டுறையும்
5 அரிமதர் மழைக்க ணம்மா வரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல வின்று பெயரின்
அதுமனெம் பரிசி லாவியர் கோவே.

(பி - ம்.) 1 'கன்முகையருவி'

திணையும் துறையும் அவை.

அவள் காரணமாக அவனைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது.

(இ - ள்.) கன்முழைக்கணின்றும் விழும் அருவியையுடைய பல மலைகளை அரிதிற் கழித்துச் சிறிய யாழைச் செவ்வழியென்னும் பண்ணை வாசிக்கும்படியாகப் பண்ணி வாசித்து வந்ததற்குக் கார்காலத்து மழையினது இனிய துளி வீழ்கின்ற ஓசையைத் தமியளாகக் கேட்டு நெருநற்று ஒரு பக்கத்துத் தனிமை கொண்டிருந்த அரி பரந்த மதர்த்த குளிர்ச்சியையுடைய கண்ணிணையும் அழகிய மாமை நிறத்திணையு முடைய அந்த அரிவையது நெய்யால் துறக்கப்பட்ட மைபோலும்

கரிய மயிரை ஒப்பமிடப்பட்ட நீலமணியினும் மாசறக் கழுவிச் செவ்வி மலர் நெருங்கும் பரிசு இன்று வருவையாயின், அதுவாகும் எம்முடைய பரிசில்; ஆவியருடைய வேந்தே!—எ - று.

உறை - துளி; என்பது ஆகுபெயரால் துளியினோசையை. மன் : அசை.

சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததற்கு அரிவை கூந்தல் புதுமலர் கஞலும்படி அவள்பால் எம்மொடும் வரின் எம் பரிசில் அதுவெனக் கூட்டுக.

நெய் பூசுதலோடு பேணுதலைத் துறந்தவெனினும் அமையும்.

செவ்வழி பண்ணி வந்தது, புதுமலர் கஞலவென்று இயைத்துரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 2. புறநா. 144 : 2, 146 : 3. வந்ததை - உருபு மயக்கம்.

3. "முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி, இன்ப லிமிழிசை யோர்ப்பனள்" (முல்லைப். 87 - 8).

6. "வாச வெண்ணெ யின்றி மாசொடு, பிணங்குபு கிடந்த பின்னுச்சேர் புறத்தொடு" (பெருங். 4. 7 : 103 - 4).

6 - 7. பரி. 10 : 89. 8. புறநா. 194 : 3.

6 - 8. புறநா. 146 : 9 - 10; "மாசற மண்ணுற்ற மணியேசு மிருங்கூந்தல், வீசேர்ந்து வண்டார்க்குங் கவின்பெறல்" (கலித். 77 : 16 - 7); பெருங். 1. 40 : 158, குறிப்புரை.

9. "ஆவியர் பெருமகன், பெருங்க ளுடன் பேகனும்" (சிறுபாண். 86 - 7).

8 - 9. 'புதுமலர்...கோவே : இதனுள் மன்னென்பது ஆமென்பது குறித்து நின்றது' (தொல். இடை. சூ. 4, ந., தெய்வச்.); மன்னென்பது பெயர்ச்சொல்லை அடுத்து வந்ததற்கு மேற்கோள்; நன். சூ. 419, மயிலை.

மு. கைக்கிளைவகைப் பாடாண்பாட்டிற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 35, ந. (கசஎ)

(கசஅ) கறங்குமிசை யருவிப் பிறங்குமலை நள்ளிநின்
அசைவி னோன்றா ணசைவள னேத்தி
நாடொறு நன்கலங் களிற்றொடு கொணர்ந்து
கூடுவிளங்கு வியனகர்ப் பரிசின் முற் றளிப்பப்
பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசிற்றுறை.

கண்டீரக்கோப் பெருநள்ளியை (பி - ம். கண்டிற்கோப் பெருநற்கிள்ளியை) வன்பரணர் பாடியது.

(இ - ள்.) உச்சிக்கணின்றும் ஆலித்து (ஒலித்து) இழிதரும் அருவியினையுடைய உயர்ந்த மலையையுடைய நள்ளி! நினது தளர்ச்சி யில்லாத வலிய முயற்சியானுய நச்சப்படும் செல்வத்தை வாழ்த்தி நாடோறும் நல்ல அணிகலத்தைக் களிற்றோடே கொண்டு வந்து நெற் கூடு விளங்கும் அகலிய நகரின்கண் இருந்து சூழ்ந்திருந்த பரிசிலர்க்கு அளித்து (ஈந்து) விடுத்தலால், *பிறர்க்கீயும் பெருமையில்லாத அரசரைப் புகழும் புகழ்ச்சியை விரும்பி அவ்வரசர் செய்யாதன வற்றைச் சொல்லி அவர் குணங்களைக் கூறுதலை அறியாததாயிற்று, எம்முடைய சிறிய செவ்விய நா—எ - று.

† பொய்கூறுமையிற் 'செந்நா' என்ருர்; ‡ தற்புகழ்ந்தாராகாமற் 'சிறுசெந்நா' என்ருர்.

அருவியவென்பது விகாரம்.

நள்ளி! நீ பரிசின் முற்றளித்தலான், எம் சிறுசெந்நா நின் நசைவளனேத்தி மன்னரைப் புகழ்ச்சி வேண்டிக் கிளத்தல் எய்யாதாகின்றெனக் கூட்டுக.

நின் நசைவளன் ஏத்திக் கொணர்ந்து முற்றளித்தலாலெனப் பரிசிலர் மேலேற்றி உரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 1. புறநா. 158 : 3; "நளிமலை நாட னள்ளியும்" (சிறுபாண். 107).

2. புறநா. 161 : 14 - 5; "மடியிலான் செல்வம்போன் மரனந்த" (கலித். 35); "ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா, ஊக்க முடையா னுழை" (குறள், 594); புறநா. 24 : 29-ஆம் அடியையும் அதன் குறிப்பையும் பார்க்க; "ஊக்க வேந்த னுக்கம்போல" (பெருங். 3. 5 : 21).

புறநா. 171 : 10.

3 - 4. புறநா. 153 : 8 - 9; "இருங்கலி யானையொ டருங்கலந் துறுத்து" (பதிற். விட்டுப்போன பகுதி, 1); "நன்கலங் களிற்றொடு நண்ணு ரேந்தி" (அகநா. 124 : 1). (கசஅ)

---

* புறநா. 127 : 8 - 10.

† "வாழ்தல் வேண்டிப், பொய்கூறேன் மெய்கூறுவல்", "பொய் யாச் செந்நா" (புறநா. 139 : 5 - 6, 168 : 19).

‡ புறநா. 47 : 3, உரை.

(கசக) நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தன ரதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) நள்ளி! வாழ்வாயாக; நள்ளி! நள்ளென்னும் ஓசையை யுடைய மாலைப்பொழுதின்கண்ணே மருதமென்கின்ற பண்ணை வாசித்துக் காலைப்பொழுதின்கண் கைவழியாகிய யாழின்கட் செவ்வழி யென்னும் பண்ணை வாசித்து வரலாற்று முறைமையை எம்முடைய பாணர் சாதியிலுள்ளோர் மறந்தார்; அவ்வாறு மறந்தது, நீ கொடுத்து ஓம்புதலைக் கடனாக மேற்கொண்ட வண்மையான்—எ - று.

கையகத்து எப்பொழுதும் இருத்தலான், யாழைக் கைவழி யென்றார், ஆகுபெயரான்.

'வரவவர் மறந்தனர்' என்பதூஉம் பாடம்.

(கு - ரை.) 2 - 3. மாலையிற் செவ்வழிப் பண்ணும் காலையில் மருதப் பண்ணும் வாசித்தல் வேண்டுமென்பது இசைநூன்மரபு; இதனை, "சாய வெண்கிளவி போற் செவ்வழியா ழிசைநிறப......மாலையும் வந்தன் றினி" (கலித். 143 : 38 - 41), "திவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணி", "யாழோர் மருதம் பண்ண" (மதுரைக். 604, 658) என்று மாலைக்கும் காலைக்கும் உரியனவாக அப் பண்கள் கூறப்பெற்றிருத்தலால் அறிக.

2 - 5. புறநா. 153 : 7 - 12. (கசக)

(கரு௦) கூதிர்ப் பருந்தி னிருஞ்சிற கன்ன
பாறிய சிதாரேன் பலவுமுதற் பொருந்தித்
தன்னு முள்ளேன் பிறிதுபுலம் படர்ந்தவென்
உயங்குபடர் வருத்தமு முலைவு நோக்கி
மான்கணந் தொலைச்சிய குருதியங் கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதனெ னெழுவேற் கைகவித் திரீஇ
இழுதி னன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய விளையர் வல்லே
தாம்வந் தெய்தா வளவை யொய்யெனத்

தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலின்
அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி
நன்மர னளிய நறுந்தண் சாரற்
கன்மிசை யருவி தண்ணெனப் பருகி
விடுத்த றொடங்கினே னாக வல்லே
பெறுதற் கரிய வீறுசா னன்கலம்
பிறிதொன் றில்லைக் காட்டுநாட் டேமென
மார்பிற் பூண்ட வயங்குகா ழாரம்
மடைசெறி முன்கைக் கடகமோ டீத்தனன்
எந்நா டோவென நாடுஞ் சொல்லான்
யாரீ ரோவெனப் பேருஞ் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே
இரும்புபுனைந் தியற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கு மணிநெடுங் குன்றிற்
பளிங்குவகுத் தன்ன தீநீர்
நளிமலை நாட னள்ளியவ னெனவே.

(பி - ம்.) 12 'விரைவினன்' 16 'கண்முகை' 23 'பெயருஞ்'

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) கூதிர்க்காலத்துப் பருந்தினது கரிய சிறகையொத்த துணியாகிய சீரையை யுடையேனாய்ப் பலாவடியைப் பொருந்தி, தன்னையும் நினையேனாய் வேற்றுநாட்டின்கட் சென்ற எனது ஓய்ந்த செலவானுளதாகிய வருத்தத்தினையும் மிடியையும் பார்த்து மானினது திரளைத் தொலைத்த, குருதி தோய்ந்த அழகிய வீரக் கழலினையுடைய காலினையும் வாலிய ஒளியையுடைய அழகிய நீலமணி விளங்கும் உச்சியையுமுடைய செல்வத்தையுடைய தலைவனாகிய ஒரு வலிய வில்லினையுடைய வேட்டுவன், தன்னை அஞ்சலி பண்ணினேனாய் எழுந்திருப்பேனைக் கைகவித்து இருத்தி நெய்யிழுது போன்ற வெள்ளிய நிணத்தையுடைய கொழுவிய தடியைக் காட்டுவழியின்கண் வழி மயங்கிப் போகிய இளையர்தாம் விரைய வந்து பொருந்துவதற்கு முன்னே கடிதாகத் தான் கடைந்த தீயான் விரைந்து சுட்டு நினது மிகப் பெரிய சுற்றத்துடனே தின்மினென்று தருதலான் அதனை யாங்கள் அமிழ்து போலத் தின்று சுடுகின்ற பசி தீர்ந்ததாக, நல்ல மரச்செறிவையுடைய நறிய குளிர்ந்த மலைச்சாரற்கண் மலையுச்சியினின்றும் வீழ்ந்த அருவி நீரைக் குளிரக் குடித்து விடை கொள்ளத் தொடங்கினேனாக, விரைய

வந்து பெறுதற்கரிய பெருமை யமைந்த நல்ல அணிகலங்கள் தருதற்கு வேறொன்றில்லை, யாம் காட்டு நாட்டின்கண்ணே மெனச்சொல்லித் தனது மார்பிற் பூணப்பட்ட விளங்கிய முத்துவடங்களையுடைய ஆரத்தைக் கொடுத்துச் செறிந்த முன்கைக்கு அணிந்த கடகத்துடனே தந்தனன்; நும்முடைய நாடு எந்நாடோவென்று கேட்ப நாடும் சொல்லிற்றிலன்; நீர் யாரெனக் கேட்பப் பெயரும் சொல்லிற்றிலன்; அவன் நாடும் பெயரும் பிறர் பிறர் வழியின்கண்ணே சொல்லக் கேட்டேன் யான்; இரும்பாற் புனைந்து செய்யப்படாத மிக்க புகழை யுடைய தோட்டியாகிய அம் மலையைக் காக்கும், அழகிய பெரிய பக்க மலையினையும் பளிங்கை வகுத்தாற் போன்ற வெளிய நிறத்தை யுடைய இனிய நீரையுமுடைய பெரிய மலைநாட்டையுடைய நள்ளி அவனென—எ - று.

நீங்கி : நீங்க.

பலவுமுதற் பொருந்தித் தொழுதனை னெனவும், மலைகாக்கும் நள்ளி யெனவும் இயையும்.

அவன் நள்ளியெனப் பிறர்பிறர் கூற வழிக்கேட்டிசி னெனக் கூட்டுக.

(கு - ரை.) 2. சிதார் - கந்தை. இரவலர் பலவின்கீழ்த் தங்குதல். புறநா. 128 : 1 - 2.

1 - 2. "நீர்ப்படு பருந்தி னிருஞ்சிற கன்ன, நிலந்தின் சிதாஅர்" (பதிற். 12 : 19 - 20).

6. "முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி, மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப" (முருகு. 84 - 5).

7. வல்வில் வேட்டுவன் : ஒரே காலத்திற் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும்படி அம்பையெய்யும் விற்றொழிலையுடைய வீரனை வல்வில்லி யென்றல் மரபு; இதனை, புறநா. 152 : 1 - 6-ஆம் அடிகளா லும் அவற்றின் குறிப்புரையாலு முணர்க.

8. "கைகவியாச் சென்று" (அகநா. 9 : 21).

9. "இழுதி னன்ன வானிணஞ் செருக்கி" (மலைபடு. 244).

12. ஞெலிதீ : புறநா. 247 : 2.

13. புறநா. 320 : 14, 378 : 23, 391 : 19, 393 : 10.

15. புறநா. 136 : 12.

19. காட்டுநாடு : "வன்புலக் காட்டுநாட் டதுவே" (நற். 59); பாண்டிநாட்டின் உள்நாடொன்றற்குக் காட்டுநாடென்று பெயர் வழங்கியதாகத் தெரிகின்றது; திருவால. 44 : 54.

21. "மடைசெறி கடகத் தோளான் (சூடாமணி. 9 : 10).

24. இசின் : தன்மைக்கண் வந்தது; புறநா. 22 : 36, 151 : 7; "கேட்டிசி னல்லனே" (நற். 115).

25. "உயர்சிமைய வுழாஅ நாஞ்சிற் பொருந" (புறநா. 139 : 8) என்பதும் இக் கருத்தே பற்றி வந்தது.

27. புறநா. 137 : 11; "பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி" (குறிஞ்சிப். 57, குறிப்புரை).

28. "நளிமலை நாட னள்ளியும்" (சிறுபாண். 107).

'நளி' என்னும் உரிச்சொல் பெருமையை யுணர்த்தியதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 24, சே.; சூ. 26, தெய்வச்.; சூ. 22, ந.; இ. வி. சூ. 284, உரை.

இப் பாட்டில் நள்ளியென்னும் வள்ளலுடைய கம்பீரமும் குறிப்பறிந்தீதல் முதலிய நற்குணங்களும் தெள்ளிதிற் புலப்பட நின்ற அழகு மிகப் பாராட்டற்பாலது. (கருo)

(கருக) பண்டும் பண்டும் பாடுந ருவப்ப
விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅற்
கிழவன் சேட்புலம் படரி னிழையணிந்து
புன்றலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிருந் தம்பதங் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோ னாகலி னன்றும்
முயங்க லான்றிசின் யானே பொலந்தேர்
நன்னன் மருக னன்றியு நீயும்
முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்
பாடுநர்க் கடைத்த கதவி னாடுமழை
அணங்குசா லடுக்கம் பொழியுநும்
மணங்கமழ் மால்வரை வரைந்தன ரெமரே.

திணையும் துறையும் அவை.

இளங்கண்டீரக்கோவும் * இளவிச்சிக்கோ (பி - ம். இளவச்சிரக்கோ)வும் ஒருங்கிருந்தவழிச் சென்ற பெருந்தலைச்சாத்தனார் இளங்கண்டீரக்கோவைப் புல்லி இளவிச்சிக்கோவைப் புல்லாராக, என்னை என்செயப் புல்லீராயினீரென அவர் பாடியது.

(இ - ள்.) முன்பேயும் முன்பேயும் பாடுவார் விரும்ப விசும்பைப் பொருந்திய உச்சியையுடைய சிறந்த மலைப்பக்கத்துத் தம் கணவன் நெடுந்தூரத்தே செல்லின் ஆபரணத்தை யணிந்து புல்லிய தலையை

---

* விச்சி - ஒரு மலை; இதன் அரசன் விச்சிக்கோ (புறநா. 200 : 8); "வில்கெழு தானை விச்சியர் பெருமகன்" (குறுந். 328); "இருபெரு வேந்தரும் விச்சியும் வீழ" (பதிற். 9-ஆம் பத்தின் பதிகம்), "விச்சி மலைச்சாரற் பட்டைகொண்டு பகடாடி" (தே. ஐயாறு.).

யுடைய மெல்லிய பிடியைப் பரிசிலாகக் கொண்டு அவர் பெண்டிரும் தம் தரத்திலே பரிசில் கொடுக்கும் வள்ளிய புகழையுடைய கண்டீரக் கோனுதலாலே பெரிதும் தழுவிக்கொள்ளுதலை அமைந்தேன் யான்; பொன்னுற் செய்யப்பட்ட தேரினையுடைய நன்னன் மரபினுள்ளானுத லன்றியும் நீயும் தழுவுதற்குப் பொருந்தினுயாயினும் விளங்கும் மொழியையுடைய பாடுவார்க்கு அடைத்த கதவு காரணமாக, இயங்கு முகில் தெய்வம் அமைந்த அரை மலைக்கண்ணே சொரியும் நுமது மணநாறும் உயர்ந்த மலையைப் பாடுதலை நீக்கினுர், எம்முள்ளார்; ஆதலான், முயங்கிற்றிலேன் - எ - று.

பெண்டிரும் தம்பதங் கொடுக்குமெனவே ஆடவரும் தம் தரத்தே களிறு கொடுத்தல் போந்தது.

'கிழவன்' என்பது, 'ஏவ லிளையர் தாய்வயிறு கரிப்ப' (தமிழ்நெறி. பொருளியல், சூ. 24. மேற்.) என்பது போலப் பன்மை சுட்டிநின்றது.

'நன்னன்மருக னன்றியும்' என்றதற்கு, "பெண்கொலை புரிந்த நன்னன் போல, வரையா நிரயத்துச் செலியரோ வன்னை" (குறுந். 292) என்றமையின் அதுவும் வரைதற்கு ஒரு காரணமாக உரைப்பாரும் உளர்.

பதமென்றது பரிசிலை.

மன் : ஒழியிசைக்கண் வந்தது.

(கு - ரை.) 2. "மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்" (நற். 32); "மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்" (பட்டினப். 138).

3. இழை - ஒருவரால் இழைக்கப்பட்ட அணிகலங்கள்; தொல். களவு. சூ. 4, ந.

4. "இரும்பிடிப் பரிசிலர் போல" (அகநா. 311); "பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கை (சிறுபாண். 124).

5. ..."உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன், றீவார்மே னிற்கும் புகழ்" (குறள், 232).

6. கண்டீரம் - ஓரூரென்றும் உரைப்பர். இளங்கண்டீரக்கோ - கண்டீரத்தின் இளவரசன்; இவன் நள்ளியென்னும் வள்ளலுடைய தம்பியாகக் கருதப்படுவான்.

7. இசின் : புறநா. 150 : 24, குறிப்புரை.

8. நன்னன் - ஒரு சிற்றரசன்; மலைபடுகடாம் என்னும் பாட்டுடைத் தலைவனுக்கும் அவன் தந்தைக்கும் நன்னன் என்னும் பெயர் அமைந்துள்ளது.

11. புறநா. 158 : 10 - 11; "அணங்குடைச் சாரல்...இறும்பில்" (பெரும்பாண். 494 - 5).

11 - 12. புறநா. 375 : 20 - 21.

5 - 12. கொடுப்போரேத்திக் கொடாஅர்ப் பழித்தல்; தொல். புறத் திணை. சூ. 35. (கருக)

(கருஉ) வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்
புகழ்சால் சிறப்பி னம்புமிகத் திளைக்கும்
கொலைவன் யார்கொலோ கொலைவன் மற்றிவன்
விலைவன் போலான் வெறுக்கை நன் குடையன்
ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
சார லருவிப் பயமலைக் கிழவன்
ஓரி கொல்லோ வல்லன் கொல்லோ
பாடுவல் விறலியோர் வண்ண நீரும்
மண்முழா வமைமின் பண்யாழ் நிறுமின்
கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்
எல்லரி தொடுமி னாகுளி தொடுமின்
பதலை யொருகண் பையென வியக்குமின்
மதலை மாக்கோல் கைவலந் தமினென்
றிறைவ னாகலிற் சொல்லுபு குறுகி
மூவேழ் துறையு முறையுளிக் கழிப்பிக்
கோவெனப் பெயரிய காலை யாங்கது
தன்பெய ராகலி னாணி மற்றியாம்
நாட்டிட னாட்டிடன் வருது மீங்கோர்
வேட்டுவ ரில்லை நின்னொப் போரென
வேட்டது மொழியவும் விடாஅன் வேட்டத்திற்
றானுயிர் செகுத்த மானிணப் புழுக்கோ
டானுருக் கன்ன வேரியை நல்கித்
தன்மலைப் பிறந்த தாவி னன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரத்திடை நல்கி யோனே விடர்ச்சிமை
ஓங்கிருங் கொல்லிப் பொருநன்
ஓம்பா வீகை விறல்வெய் யோனே.

திணை - அது; துறை - பரிசில்விடை.

வல்விலோரியை வன்பரணர் பாடியது.

(இ - ள்.) ஆனையைக் கொன்று வீழ்த்த சிறந்த தொடையை யுடைய அம்பு, பெரிய வாயையுடைய புலியை இறந்துபாட்டையுறு வித்துத் துளை பொருந்திய கோட்டையுடைத்தாகிய தலையினையுடைய புள்ளிமான் கலையை உருட்டி உரல் போலும் தலையையுடைய கேழ லாகிய பன்றியை வீழச்செய்து அதற்கு அயலதாகிய ஆழ்தலையுடைய புற்றின்கட் கிடக்கின்ற உடும்பின்கட் சென்று செறியும் வல்வில்லா லுண்டாகிய வேட்டத்தை வென்றிப்படுத்தி யிருந்தவன், புகழமைந்த சிறப்பினையுடைய அம்பு ஏத்தொழிலிலே மிகச் சென்று உறுதற்குக் காரணமாகிய கொலைவன் யாரோதான்? கொலைவன் மற்றிவன், விலை ஏதுவாகக் கொன்றுணுக மாட்டான்; செல்வத்தை மிகவுடையனு யிருந்தான்; சந்தனம் பூசிப் புலர்த்திய அழகிய பரந்த மார்பினையுடைய, சாரற்கண்ணே அருவியையுடைய பயன்படு மலைக்குத் தலைவனாகிய ஓரியோ அல்லனோதான்? அவனாகத் தகும்; யான் பாடுவேன், விறலி! ஒருவண்ணம்; நீங்களும் முழாவின்கண்ணே மார்ச்சனையை யிடுமின்; யாழிலே பண்ணை நிறுத்துமின்; கண் திறக்கப்பட்ட தூம்பாகிய களிற்றினது கைபோலும் வடிவையுடைய பெருவங்கியத்தை இசையுங் கோள்; சல்லியை வாசியுமின்; சிறு பறையை அறையுங்கோள்; பதலையில் ஒரு முகத்தை மெல்லெனக் கொட்டுமின்; நமது * பிறப் புணர்த்தும் கரிய கோலைக் கையின்கண்ணே தாருங்கோளென்று சொல்லி அணுகித் தலைவனுதலாலே இருபத்தொரு பாடற்றுறையை யும் முறையாற் பாடி முடித்துப் பின்னர்க் கோவே யென்று அவன் பெயர் கூறிய காலத்து அவ்விடத்து அவ் வார்த்தை தன் பெயராதலால் நாணி, பின்னை யாங்கள் 'நாட்டிடந்தோறும் சென்று வருவேம்; இவ்விடத்து ஒரு வேட்டுவரில்லை, நின்னை ஒப்போர்' என யாம் விரும்பியது கூறவும் அதற்குக் காலந் தரானாய் வேட்டையின் கண் தான் எய்த மானினது நிணத்தையுடைய தசையினது புழுக்குடனே ஆவின் நெய்யை உருக்கினாற் போன்ற மதுவைத் தந்து தன்னுடைய மலையின்கட் பிறந்த வலியில்லாத நல்ல பொன்னைப் பல மணித்திரளுடனே கலந்து இதனைக் கொண்மினெனச் சொல்லிச் சுரத்திடத்தே எமக்குத் தந்தான்; முழையை யுடைத்தாகிய உச்சியை யுடைய உயர்ந்த பெரிய கொல்லிக்குத் தலைவன், பாதுகாவாத வண்மையினையுடைய வென்றியை விரும்புவோன்—எ - று.

புழலென்றது ஆகுபெயராற் புழலையுடைய கோட்டை.

களிற்றுயி ரென்றது ஆகுபெயராற் களிற்றினது கைபோலும் வடிவையுடைய பெருவங்கியத்தை.

பாடுவல் விறலியோர் வண்ணமென்றது நீயும் ஒன்று பாடுவாயாக வென்னும் நினைவிற்று.

நீருமென்றது கூட்டத்தை.

---

* நுண்கோல் - பிறப்புணர்த்துங் கோல்; பதிற். 43 : 27, உரை.

* மூவேழ்துறையு மென்றது † வலிவு மெலிவு சமம் என்னும் மூன்று தானத்திலும் ஒவ்வொன்றில் ஏழு தானம் முடித்துப் பாடும் பாடற்றுறையை; அன்றி, இருபத்தொரு நரம்பால் தொடுக்கப்படும் பேரியாழெனினும் அமையும்.

தம்மி னென்றது தமினெனக் குறைந்து நின்றது.

கொல்லிப் பொருநனுகிய விறல்வெய்யோன் கோவெனப் பெயரிய காலை, அது தன் பெயராகலின் நாணி வேட்டது மொழியவும் விடானுய் நல்கியோ னெனக் கூட்டுக.

(கு - ரை.) 1. யானையை அம்பாற் கொல்லுதல்: அகநா. 172. 7 - 9; பெருங். 2. 14 : 48 - 9.

2. பேழ்வாயுழுவை : புறநா. 33 : 9. பெரும்பிறிது : மணி 23 : 28.

3. புகர் - புள்ளிமான்; "புகராருருவாகி முனிந்தவனை" (பெரிய திருமொழி. 2 - 4 : 7).

4. 'வேழக்கரும்பு, கேழற்பன்றியென்புழித் தொக்கனவில்லையெனினும் தொகையென வேண்டப்படுமாகலான் அவற்றைத் தழுவுதற்கும், உருபு முதலாயின தொகுதலிற் றொகையென்பார்க்கும் ஒட்டி ஒரு சொன்னீர்மைப்படுதலும் தொகையிலக்கணமெனல் வேண்டும்' (தொல். எச்ச. சூ. 16, சே.); 'கேழற்பன்றி, வேழக்கரும்பென்பனவற்றிற்குத் தொக்கன இன்மையிற் றொகைச்சொல்லாமாறு என்னையெனின், அவற்றிற்கும் ஒன்றையொன்று விசேடித்து நிற்கின்ற தன்மையை உணர்த்துதற்கு வரும் ஆகிய என்னும் வாசகம் தொக்கு நின்றதென்றே கோடும்' (தொல். எச்ச. சூ. 16, ந.); 'கேழற்பன்றி முதலாயினவும் சாதிதொக்க பண்புடைமையின் ஈண்டு வேண்டினுரென்க', 'பூமலர், பூம்போது, களிற்றொருத்தல், கேழற்பன்றி யென்றற்றொடக்கத்தனவோ வெனின்,......கேழலென்பது எய்ப்பன்றி முதலான வற்றை நீக்குதலானும் பொருள் வேறுபாடுடைமையின் ஒருபொருட் பன்மொழியாகா; பண்புத் தொகையுள் அடங்குமென்க' (நன். சூ. 364, 367, மயிலை.).

3 - 4. உரற்றலைக் கேழற்பன்றி : "உரற்றலை யுருவப் பன்றி யிடம் வலந் திரிய" (சீவக. 2202).

5. வல்வில் வேட்டம் - மிக்க வன்மையையுடையதும் பலவற்றை ஊடுருவிச் செல்லும்படி அம்பை விரைவிற் செலுத்துவதுமாகிய வில் வேட்டம்: புறநா. 150 : 7; "அரக்கர் தலைவன்றன், வற்பார் திணிதோ

---

* "ஏழேயேழே நாலேமூன் றியலிசை யிசையில்பா வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்" (தேவாரம், திருத்தாளச் சதி), "பண்களுக்கு இன்றியமையாத மூவேழ்திறம்" (சிலப். 5 : 35 - 7, அடியார்.) என்பனவும் ஈண்டறியத்தக்கன.

† பொருந. 55, ந.

ஊர்நான்குந் துணித்த வல்வி லிராமனிடம்'' (பெரிய திருமொழி, 5. 1 : 4).

1 - 6. இவ்வடிகளுடன், "அலையுருவக் கடலுருவத் தாண்டகை தன் னீண்டுயர்ந்த, நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா, உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் னுரமுருவி, மலையுருவி மரமுருவி மண்ணுருவிற் றுருவாளி'', "வெய்ய வாளியை யாளுடை வில்லியும் விட்டான்'', "ஏழு மாமர முருவிக்கீ ழுலகமென் றிசைக்கும், ஏழு மூடுபுக் குருவிப்பின் னுடனடுத் தியன்ற, ஏழி லாமையின் மீண்டதவ் விராகவன் பகழி'' (கம்ப. குலமுறை. 26, மராமர. 137, 138) என்பவை ஒப்புநோக்கற்பாலன.

8. கொலைவன் - கொல்லுதற்றொழில் செய்பவன்; "கொலைவ னல்லையோ கொற்றவ னுயினை'' (மணி. 25 : 174); கலித். 12 - 1, 103 : 15, 147 : 25.

10. மு. முருகு. 104. 14. புறநா. 65 : 1.

15. "கண்ணறுத் தியற்றிய தூம்பு'' (பதிற். 41 : 3); ஓய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை, தொகுசொற் கோடியர் தூம்பி னுயிர்க் கும், அத்தம்'' (அகநா. 111 : 8 - 10); "கண்ணிடை விடுத்த களிற் றுயிர்த் தூம்பின்'' (மலைபடு. 6).

17. "நொடிதரு பாணிய பதலையும்'' (மலைபடு. 11) என்பதும், "மாத்திரையைச் சொல்லுந் தாளத்தையுடைய ஒருகண்மாக் கிணையும்'' என்னும் அதனுரையும் ஈண்டு அறியற்பாலன.

18. மாக்கோல்: "வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்'' (குறுந். 298); "தேமுதிர் சிமையக் குன்றம் பாடும், நுண்கோ லகவுநர் வேண்டின்'' (அகநா. 208 : 2 - 3).

14 - 8. மலைபடு. 2 - 11.

20. "துறைபல முற்றிய'' (மலைபடு. 40) என்பதன் உரையைப் பார்க்க.

22. ஆகலென்னும் வினைக்குறிப்புச்சொல் சார்ந்துநின்ற சொற் பொருளையே உணர்த்தி நிற்றற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 32. ந.

21 - 2. புறநா. 150 : 22 - 3; "சான்றோர், புகழுமுன்னர் நாணுப, பழியாங் கொல்பவோ காணுங் காலே'' (குறுந். 252); "தம்புகழ் கேட்டார்போற் றலைசாய்த்து மரந்துஞ்ச'' (கலித். 119 : 9); "பிறர் தன்னைப் பேணுங்கா ணாணலும்'' (திரி. 6).

25. புறநா. 399 : 29; "ஒன்றியான் பெட்டா வளவையின்'' (பொருந. 73); "நீசில மொழியா வளவை'' (சிறுபாண். 235).

28. "தாவி னன்பொன் றைஇய பாவை'' (அகநா. 212).

31 - 2. கொல்லிமலை ஓரிக்குரியதென்பது, "கொல்லி யாண்ட வல்வி லோரி'' (புறநா. 158 : 5). "ஓரி, பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி'', "வல்வி, லோரிக் கொன்று சேரலற் கீத்த, செவ்வேர்ப்

பலவின் பயங்கெழு கொல்லி" (அகநா. 208 : 21 - 2, 209 : 14 - 5) என்பவற்றாலும் விளங்கும்.

மு. 'வேழம் வீழ்த்த விழுத்தொடைப்பகழி யென்னும் புறப்பாட்டு, இடைநிலத்திற் பரிசு பெற்றமை கண்டார்க்குக் கூறியது' (தொல். புறத்திணை. சூ. 36, ந.).

(கருரு) மழையணி குன்றத்துக் கிழவ னாளும்
இழையணி யானை யிரப்போர்க் கீயும்
சுடர்விடு பசும்பூட் சூர்ப்பமை முன்கை
அடுபோ ராஅ வாத னோரி
மாரி வண்கொடை காணிய நன்றும்
சென்றது மன்னெங் கண்ணுளங் கடும்பே
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வானார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்
கூடுகொ ளின்னியங் கறங்க
ஆடலு மொல்லார்தம் பாடலு மறந்தே.

திணை - அது; துறை - இயன்மொழி.
அவனை அவர் பாடியது.

(இ - ள்.) முகில் சூழ்ந்த மலைக்குத் தலைவன், நாடோறும் பட்டம் முதலாகிய பூண்களை யணிந்த யானையை இரப்போர்க்குக் கொடுக்கும் கதிர் விடுகின்ற பசும்பொன்னாற் செய்த அணியினையும் வளைந்த கடக மமைந்த முன்கையினையுமுடைய கொல்லும் போர் அமையாத ஆதன் ஓரியது மழை போலும் வள்ளிய கொடையைக் காண்டற்கு மிகவும் சென்றது எம்முடைய கூத்தச் சுற்றம்; அச் சுற்றத்தார் குளிர்ந்த நீரின்கட் பூவாத மணி மிடைந்த குவளைப்பூவை * வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொன்னரி மாலையினையும் பிற அணிகலங்களையும் யானையணிகளுடனே பெற்றனராய் நீங்கிப் பசியாராகலானே கொல்லோதான், வாரால் வலித்துப் பிணிக்கப்பட்ட பல கருவியும் தொகுதி கொண்ட இனிய இயங்கள் ஒலிப்ப ஆடுதலும் மாட்டா ராயினர், தமது பாடுதலையும் மறந்து—எ - று.

சூர்ப்புடையதனைச் சூர்ப்பென்றார்.

† குடிமை ஆண்மைத் தொடக்கத்தன, நின்றாங்கே நின்று உயர்திணை முடிவும் பெறுதலின் இக் கடும்பென்பதும் பொருணோக் கால் முடிவு பெற்றது.

---

* "வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே" (புறநா. 11 : 17).

† குடிமை ஆண்மை முதலியவை, "குடிமையாண்மை" (தொல். கிளவி. சூ. 56) என்பதனால் அறியலாகும்.

கண்ணுளங் கடும்பென நின்றவழி, அம் : அல்வழிச்சாரியை. மன்: அசைநிலை.

ஓரி வண்கொடை காணிய கண்ணுளங் கடும்பு சென்றது; சென்ற பின்றை அக் கடும்பாயினோர் தமது * பாடலும் மறந்து ஆடலும் ஒல்லா ராயினர்: அதற்குக் காரணம் பசியாராகன் மாறுகொலெனக் கூட்டி வினைமுடிவு செய்க. 'நுண்பூண்' என்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 2. புறநா. 151 : 3 - 4.

3. சூர்ப்பு - வளைவு; ஆகுபெயராற் கடகத்திற்காயிற்று; "சூர்ப்புறு கோல்வளை செறிந்த முன்கை" (அகநா. 142 : 17).

5. புறநா. 133 : 6 - 7. 7. புறநா. 364 : 2 - 3.

8. வால் - வெண்மை; வெள்ளிக்கு ஆகுபெயர்.

8 - 9. புறநா. 148 : 3 - 4. (கருங)

(கருச) திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்
சின்னீர் வினவுவர் மாந்த ரதுபோல்
அரச ருழைய ராகவும் புரைதபு
வள்ளியோர்ப் படர்குவர் புலவ ரதனால்
யானும், பெற்ற தூதியம் பேறியா தென்னேன்
உற்றனெ னாதலி னுள்ளிவந் தனனே
ஈயென விரத்தலோ வரிதே நீயது
நல்கினு நல்கா யாயினும் வெல்போர்
எறிபடைக் கோடா வாண்மை யறுவைத்
தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத்
தண்பல விழிதரு மருவிநின்
கொண்பெருங் கானம் பாடலெனக் கெளிதே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

கொண்கானங்கிழானை மோசிகீரனார் பாடியது.

(இ - ள்.) திரையலைக்கும் கடலினது கரைக்கண் அணியவிடத்தே போகினும் அறிவாரைக் காணின் நீர்வேட்கையினைத் தணிக்கும் சிறிய நீரைக் கேட்பர், உலகத்து மக்கள்; அதுபோல, வேந்தரிடத்தராகவும், குற்றந்தீர்ந்த வள்ளியோரை நினைத்துச் செல்வர், அறிவுடையோர்; அதனால், யானும் பெற்றதனைப் பயனாகக்கொண்டு பெற்ற பொருள் சிறிதாயினும் இவன் செய்தது என்னென்று இகழேன், வறுமையுற்றே னாதலின்; நின்னை நினைத்து வந்தேன்; எனக்கு ஈயாயென்று இரத்தல்

* பல நாளாகக் கற்ற கல்வியைப் புதிதாகப் பெற்ற செல்வம் மறப்பிக்குமென்று கூறுமுகத்தால், வல்விலோரியின் கொடைச் சிறப்பை இங்கே கூறிய வன்பரணரே இந் நூல், 149-ஆம் பாடலில் நள்ளியென்னும் வள்ளலின் கொடைச் சிறப்பையும் இங்ஙனமே பாராட்டினர்.

அரிது; நீ அப் பரிசிலைத் தரினும் தாராயாயினும் பூசலிடத்து எறியும் படைக்கலத்துக்குப் புறத்து அடியிடா ஆண்மையையும், துகிலினது தூய விரியை யொப்ப நெருங்கி உச்சியினின்றும் பலவாய் இழியும் குளிர்ந்த அருவியையுடைய நினது கொண்கானத்தையும் பாடல் எனக்கு எளிது—எ - று.

புரைதப வென்று பாடமோதிப் புரைதபப் படர்குவ ரெனினும் அமையும்.

நீ அது நல்கினும் நல்காயாயினும் ஈயெனவிரத்தல் எனக்கு அரிது; நினது ஆண்மையையும் கொண்பெருங்கானத்தையும் பாடல் எனக்கு எளிதெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

(கு - ரை.) 1. நணி: "துறைநணி யூரனை" (ஐங்குறு. 20); "நணிநணித் தாயினும் சேஎய்ச் சேய்த்து" (பரி. 17 : 25); "நீர்நணிப் பிரம்பின்" (பெரும்பாண். 288).

1 - 3. புறநா. 204 : 5-9; "கடல்சார்ந்து மின்னீர் பிறக்கும் மலைசார்ந்து, முப்பீண் டுவரி பிறத்தலால்" (நாலடி. 245); கடல் பெரிது, மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல், உண்ணீரு மாகி விடும்" (மூதுரை, 12).

5. புறநா. 47 : 1.

'படர்' என்னும் உரிச்சொல் நினைத்தலும் செல்லுதலுமாகிய குறிப்பையுணர்த்து மென்பதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 42, ந.

8. புறநா. 204 : 1; "நல்லா றெனினுங் கொளறீது" (குறள், 222); "கொள்ளுத றீது கொடுப்பது நன்றால்" (கம்ப. வேள்வி. 29).

ஈயென்கிளவி இழிந்தோன் கூற்றென் *தற்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. 49, ந.

10. புறநா. 165 : 15; "ஓடாப் பூட்கை ..அறுவையர்", "ஓடாப் பூட்கை மறவர்" (பதிற். 34 : 2 - 3, 57); "ஓடாப் பூட்கை வேந்தன்", (அகநா. 100 : 8); "ஓடாப் பூட்கைப் பிணிமுகம்" (முருகு. 247); "ஓடாப் பூட்கை யுறந்தையும் வறிதே" (சிறுபாண். 83); "விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி, னொட்டன்றோ வன்கணவர்க்கு" (குறள், 775).

11. மீமிசை : "நவிரத்து மீமிசை" (மலைபடு. 579).

10 - 12. துகில் அருவிக்குவமம்; "வேறுபஃ றுகிலி னுடங்கி... இழிதருமருவி" (முருகு. 296 - 316); "அவிர்துகில் புரையு மவ்வெள் ளருவி" (குறிஞ்சிப். 55, குறிப்புரை); "மாநீல மாண்ட துகிலுமிழ்வ தொத்தருவி, மாநீல மால்வரை நாடகேள்" (திணைமாலை. 6).

13. கொண்பெருங்கானம் : புறநா. 155 : 7, 156 : 2; "பொன்படு கொண்கான நன்னன்" (நற். 391 : 6). கொண்கானம் - கொங்கண மென்பர். (கருச)

* "ஈயா யெனக்கென் றிரப்பானே லந்நிலையே, மாயானோ மாற்றி விடின்" (நாலடி. 308).

(கருரு)வணர்கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ
உணர்வோர் யாரென் னிடும்பை தீர்க்கெனக்
கிளக்கும் பாண கேளினி நயத்திற்
பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ
ஏர்தரு சுடரி னெதிர்கொண் டாஅங்
கிலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்
கொண்பெருங் கானத்துக் கிழவன்
தண்டா ரகல நோக்கின மலர்ந்தே.

திணை - அது; துறை - பாணாற்றுப்படை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) வளைந்த கோட்டையுடைய சிறிய யாழை உலர்ந்த மருங்கிலே தழுவிக்கொண்டு அறிவோர் யார்தான் எனது துன்பத்தைத் தீர்க்கவென்று நயத்திற் சொல்லும் பாண! யான் சொல்லுகின்றதனை இப்பொழுது கேட்பாயாக; பாழூரின்கண் நெருஞ்சியினது பொன் னிறத்தை யுடைய வாலிய பூ எழுகின்ற ஞாயிற்றை எதிர்கொண்டாற் போல, வறுமையுற்ற யாழ்ப் புலவரது ஏற்குமண்டை, விளங்கிய புகழையுடைய கொண்பெருங்கானங்கிழானது குளிர்ந்த தாரை யுடைய மார்பத்தை மலர்ந்து நோக்கின—எ - று.

'ஏர்தரு சுடரி னெதிர்கொண் டாங்கு' என்புழி, இன் : சாரியை; அது, * தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண் வந்தது; அன்றி, ஐகாரம் விகாரத்தால் தொக்கதெனினும் அமையும்.

நயத்திற் கிளக்கும் பாணவென இயையும்; நயத்தின் அகலம் நோக்கினவென இயைப்பினும் அமையும்.

மண்டை அகல நோக்கி மலர்ந்தவென்ற கருத்து : கொடுக்கும் பொருள் மார்பின் வலியான் உளதாமாகலின், அகல நோக்கின வென்ற தாகக் கொள்க.

(கு - ரை.) 1. "வணரமை நல்யாழ்" (பதிற். 41 : 2).

4. "பீரிவர் வேலிப் பாழ்மனை நெருஞ்சி" (பதிற். 26 : 10).

5. "வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு" (முருகு. 1 - 2).

4 - 5. நெருஞ்சிப் பூக்கள் சூரியனையே நோக்குதல் இயல்பு; "ஓங்கு மலைநாடன், ஞாயி றனையனென் றோழி, நெருஞ்சி யனையவென் பெரும்பணைத் தோளே" (குறுந். 315); "வானிடைச், சுடரொடு திரி தரு நெருஞ்சி போல" (அகநா. 336); "வெஞ்சுடர் நோக்கு நெருஞ்சி யில்" (இறை. சூ. 47, உரை, மேற். 296); "நீள்சுடர் நெறியை நோக்கு நிரையிதழ் நெருஞ்சிப் பூப்போல்" (சீவக. 461); "அருந்தவர்க் காயினுந் திருந்துமுக மிறைஞ்சாது, செங்கதிர் விரும்பும் பைங்கொடி

* "தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்" (தொல். புண ரியல், சூ. 30).

நெருஞ்சிப், பொன்புனைமலர்" (பெருங். 2. 4 : 13 - 5); "ஏழுளைப் புரவியொ டெழுகதிர் நோக்கிய, சிற்றிலை நெருஞ்சிப் பொற்பூ வென்ன" (கல்லாடம், 65 : 14 - 5).

6. "இலம்படு புலவ ரேற்றகை ஞெமர" (பரி. 10 : 126); "இலம் படு புலவ ரேற்றகை நிறைய" (மலைபடு. 576). மண்டை : புறநா. 103; 3, குறிப்புரை.

7. புறநா. 154 : 13.

6 - 8. மண்டை மலர்தல் : புறநா. 103. 3, 179 : 2 - 3, 393 : 4 - 5.

(௧௫௫)

(௧௫௬) ஒன்று நன் குடைய பிறர்குன்ற மென்றும்
இரண்டுநன் குடைத்தே கொண்பெருங் கானம்
நச்சிச் சென்ற விரவலர்ச் சுட்டித்
தொடுத்துணக் கிடப்பினுங் கிடக்கு மஃதான்று
நிறையருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்குஞ் செம்மலு முடைத்தே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) வண்மையாதல் வலியாதல் நன்மையொன்றுடைய பிறருடைய மலைகள்; எந்நாளும் இரண்டு நன்மையை யுடைத்து, பெரிய கொண்கானமென்னும் மலை; அது, தன்பாற் பரிசில் நச்சிப்போன இரப்போர் காரணமாகத் தான் அவர்க்கு முன்பு * கடன் கொடுத்தோராலே வளைப்புண்ணப்பட்டுக் கிடப்பினுங் கிடக்கும்; அதுவன்றி, நிறுத்தற்கரிய படையையுடைய அரசரைத் திறைகொண்டு அவரை மீட்கும் தலைமையையு முடைத்து—எ - று.

இரவலர்சுட்டி யென்று பாடமோதி, இரவலர் கருதிக்கொண்டு புகழ்களைத் தொடுத்துண்ணக் கிடக்கினும் கிடக்குமெனவும் †இரவலர் எமது எமதென்று கூறிட்டுண்ணக் கிடக்கினுங் கிடக்குமெனவும் உரைப்பினும் அமையும்.

இது கொடைச் சிறப்பும் வென்றிச் சிறப்பும் கூறியவாறு.

(கு - ரை.) 1. குன்றம் - பால்பகா அஃறிணைப் பெயர்.

5. "நிறையருந் தானை வெல்போர் மாந்தரன், பொறையன்" (அகநா. 142 : 4 - 5); "நிறையருந்தானை வேந்தனு நேர்ந்து" (சிலப். 25 : 178); "நிறையருந் தானையொடு.........நீங்கி" (மணி. 9 : 26 - 7).

(௧௫௬)

---

* கடன் கொடுத்தோர் - இரவலர்க்குக் கடன் கொடுத்தவர்; அவர் சூழ்வது இரவலர் பெறும் பரிசிலைத் தாம் வாங்கிக்கொண்டு செல்லுதற்கு.

† புறநா. 135 : 16 - 7.

(கருஎ) தமர்தற் றப்பி னதுநோன் றல்லும்
பிறர்கை யறவு தானா ணுதலும்
படைப்பழி தாரா மைந்தின ராகலும்
வேந்துடை யவையத் தோங்குபு நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவன வல்ல வெம்மோன்
சிலைசெல மலர்ந்த மார்பிற் கொலைவேற்
கோடற் கண்ணிக் குறவர் பெருமகன்
ஆடுமழை தவிர்க்கும் பயங்கெழு மீமிசை
எற்படு பொழுதி னினந்தலை மயங்கிக்
கட்சி காணாக் கடமா னல்லேறு
மடமா னாகுபிணை பயிரின் விடர்முழை
இரும்புலிப் புகர்ப்போத் தோர்க்கும்
பெருங்க னாடனெம் மேறைக்குத் தகுமே,

(பி - ம்.) 11 'பயிரழைப்பின்', 'பயிர்ப்பழைப்பின்', 'பயிர் பழைப்பின்'.

திணையும் துறையும் அவை.

ஏறைக்கோனைக் குறமகள் இளவெயினி பாடியது.

(இ - ள்.) தனக்குச் சிறந்தோர் தன்னைப் பிழைப்பின் அது பொறுத்தலும், பிறருடைய மிடிமைக்குத் (மிடிமை - தரித்திரம்) தான் நாணுதலும், படையிடத்துப் பிறர் பழிக்கப்படாத வலியையுடையனாத லும், அரசுடைத்தாகிய அவைக்களத்தின்கண் மேம்பட்டு நடத்தலும் நும்மால் மதிக்கப்படுந் தலைவர்க்குத் தகுவனவல்ல; எம்முடைய தலைவன், வில்லைப் பூரணமாக வலித்தலான் அகன்ற மார்பினையும் கொல்லும் வேலினையும் காந்தட் பூவாற் செய்த கண்ணியினையுமுடைய குறவர்க்குத் தலைமகன் இயங்குகின்ற முகிலைத் தனது உயரத்தால் தடுக்கும் பயன் பொருந்திய மலையினது உச்சிக்கண் ஞாயிறு படுகின்ற காலத்தில் இனத்தினின்றும் தலைமயங்கித் தான் சேரும் சேர்க்கையைக் காணாத காட்டின்கண் மானினது நல்ல கலை மடப்பத் தினையுடைய மானாகிய இளம்பிணையைப் பயிரான் அழைப்பின் அவ் வோசையை விடராகிய முழையின்கட் கிடக்கின்ற பெரும் புலியாகிய புகர் நிறத்தினையுடைய ஏறு செவி தாழ்த்துக் கேட்கும் பெரிய மலை நாடனாகிய எம்முடைய ஏறைக்கோனுக்குப் பொருந்தும்—எ - று.

'சிலைசெல மலர்ந்த மார்பு' என்பதற்கு மலை தோற்க மலர்ந்த மார் பெனினும் அமையும்.

தலைமயங்கி யென்பதனுள், தலை அசைநிலை.

(கு - ரை.) 1. "அன்பெனப் படுவது தன்கிளை செறாமை" (கலித். 133); "நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக், கண்கண்ட குற்ற முளவெனினுங் காய்ந்தீயார், பண்கொண்ட தீஞ்சொற் பணைத் தோளாய்! யாருளரோ, தங்கன்று சாக்கறப் பார்" (பழ. 16); "குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை" (கொன்றைவேந்தன், 18); "குற்றமது பார்க் குங்காற் சுற்ற மில்லை" (வில்லி. பாரதம், கிருட்டினன்றூது, 17).

2. கையறவு - செயலறுதல்.

7. "கோடல், நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ" (நெடுநல். 5 - 6); "மலைச்செங் காந்தட் கண்ணி" (நற். 173).

8. புறநா. 166 : 32, 200 : 4. 10. மு. புறநா. 202 : 2.

9. எல் - ஒளி; சூரியனுக்கு ஆகுபெயர்.

11. "மான்மறி விழுந்தது கண்டுமன மயங்கிப், பயிர்க்குரல் கேட்டதன் பான்மைய ளாகி" (மணி. 23 : 115 - 6).

12. ஓர்க்கும் : புறநா. 68 : 17, குறிப்புரை; 280 : 6; கலித். 46 : 13; முருகு. 96; முல்லை. 88; மலைபடு. 23. (கருஎ)

(கருஅ) முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத வண்ண னெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசைக்
கொல்லி யாண்ட வல்வி லோரியும்
காரி யூர்ந்து பேரமர் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையனும்
ஊரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும்
ஈர்ந்தண் சிலம்பி னிருடூங்கு நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமைப்
பெருங்க னாடன் பேகனுந் திருந்துமொழி
மோசி பாடிய வாயு மார்வமுற்
றுள்ளி வருந ருலைவுநனி தீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியு மெனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
இரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவண்
உள்ளி வந்தனென் யானே விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
ஆசினிக் கவினிய பலவி னார்வுற்று

முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்
அதிரா யாணர் முதிரத்துக் கிழவ
இவண்விளங்கு சிறப்பி னியறேர்க் குமண
இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ யேந்திய வேலே.

திணை - அது; துறை - வாழ்த்தியல்; பரிசில்கடாநிலையுமாம்.

குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

(இ - ள்.) முரசு கடிப்பு அறையவும் வெள்ளிய சங்கு முழங்கவும் வேந்தருடனே பொருத தலைமையையுடைய நெடிய மலைக்கண் ஒலிக்கும் வெளிய அருவி கல்லை உருட்டியோடும் பறம்பிற்கு வேந்தனாகிய பாரியும், உயர்ந்த உச்சியையுடைய கொல்லி மலையை யாண்ட வலிய வில்லையுடைய ஓரியும், காரி யென்னும் பெயரையுடைய குதிரையைச் செலுத்திப் * பெரிய பூசலை வென்ற மாரி போலும் வண்மையையும் மிக்க போரினையுமுடைய † மலையனும், செலுத்தப்படாது உயர்ந்த குதிரையென்னும் மலையையும் கூரிய வேலையும் கூவிளங் கண்ணியையும் வளைந்த ஆரத்தையுமுடைய எழினி அதியமானும், மிகக் குளிர்ந்த மலையின்கண் இருள் செறிந்த பெரிய முழையினையும் மலைத்தற்கரிய வலியினையுமுடைய தெய்வங் காக்கும் உயர்ந்த சிகரங்களையுடைய பெரிய மலைநாடனாகிய பேகனும், திருந்திய சொல்லையுடைய ‡ மோசி யென்னும் புலவனாற் பாடப்பட்ட ஆயும், ஆசைப்பட்டுத் தன்னை நினைந்து வருவாருடைய வறுமை மிகவும் நீங்கத் தவிராது கொடுக்கும் கூறுபாடமைந்த வண்மையினையுடைய, பகைவரைத் துரத்திய நள்ளியுமெனச் சொல்லப்பட்ட $ எழுவரும் இறந்த பின்பு கண்டார்க்கு இரக்கம் வரப் பாடி வருவாரும் பிறருங்கூட

* பெரிய பூசலென்றது, வல்விலோரியுடன் இவன் செய்த பூசலை; "முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி, செல்லா நல்லிசை நிறுத்த வல்வில், லோரிக் கொன்று சேரலர்க் கீத்த, செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகநா. 209 : 12 - 16) என்பதனாலும் விளங்கும்.

† காரி யென்பவன் இவனே; இவனை மலையமான் திருமுடிக்காரி என்றுங் கூறுவர்.

‡ மோசி யென்றது, உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரென்னும் புலவரை; புறநா. 127-ஆம் பாடல் முதலியவற்றின் பின்னுரைகளைப் பார்க்க.

$ இச் செய்யுளிற்போலவே "வானம் வாய்த்த வளமலைக் கவாஅற், கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய, வருந்திற லணங்கி னாவியர் பெருமகன், பெருங்க ளுடன் பேகனுஞ் சுரும்புண, நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச், சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரியுங் கறங்கு

இரந்தோரது துன்பத்தைத் தீர்க்கக் கடவேன் யானென்று நீ இருத்தலால் விரைந்து இவ்விடத்தே பரிசில் பெற நினைந்து வந்தேன், யான்; வானகத்தின்கண்ணே பொருந்த மூங்கில் வளரும் மலையின்கட் சுரபுன்னையோடு ஓங்கி ஆசினியோடு அழகு பெற்ற பலாவின்கண் ஆசைப்பட்டு முள்ளைப் புறத்தேயுடைய முதிர்ந்த பலாப்பழத்தைப் பெற்ற கடுவன் பஞ்சிபோலும் மயிரையுடைத்தாகிய தலையினையுடைய மந்தியைக் கையாற் குறி செய்து அழைக்கும் தளராத புது வருவாயை யுடைய முதிர மென்னும் மலைக்குத் தலைவ! உலக முழுவதிலும் விளங்குகின்ற தலைமையினையும் இயற்றப்பட்ட தேரினையுமுடைய குமணனே! புகழ் மேம்பட்ட வண்மையுடனே பகையிடத்து உயர்க, நீ எடுக்கப்பட்ட வேல்—எ - று.

ஆசினியொடும் கவினிய வென, ஒடு விரித்துரைக்கப்பட்டது.

ஆசினி யென்பது ஒரு மரம்; ஈர்ப்பலா வென்பாரும் உளர்.

ஆர்வுற்றுப் பயிருமென்க.

பாடி வருநரும் பிறருங்கூடி இரந்தோரற்றம் தீர்க்க வேண்டு மெனக் கருதி யென்று உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 1. கடிப்பு - பறையடிக்கும் குறுந்தடி. "கடிப்பிகு கண்முரசம்" (நாலடி. 100); "கடிப்பிகு முரசே" (சிலப். 17 : "என்றி யாம்").

'துவைத்தல்' என்னும் உரிச்சொல் இசைப்பொருள் உணர்த்திய தற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 60. ந.; இ. வி. சூ. 285, உரை.

1 - 2. அரசென்றது, சேர சோழ பாண்டியரை; பாரி, தன் மலை யாகிய பறம்பை முற்றிய இவர்களோடு பொருதமை இந் நூல் 109, 110-ஆம் பாட்டுக்களாலும், அகநானூறு 78-ஆம் பாட்டாலும் உணரப்படும்.

3 - 4. புறநா. 201 : 4 - 5.

மணி, வாலுளைப் புரவியொடு வையக மருள, ஈர நன்மொழி யிரவலர்க் கீந்த, வழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற், கழறொடித் தடக்கைக் காரியு நிழறிகழ், நீல நாக நல்கிய கலிங்க, மாலமர் செல்வற் கமர்ந் தனன் கொடுத்த, சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள், ஆர்வ நன்மொழி யாயு மால்வரைக், கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி, அமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த, உரவுச்சினங் கனலு மொளி திகழ் நெடுவேல், அரவக்கடற் றானை யதிகனுங் கரவாது, நட்டோ ருவப்ப நடைப்பரி கார, முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத், துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு, நளிமலை நாட னள்ளியு நளிசினை, நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக், குறும் பொறை நன்னாடு கோடியர்க் கீந்த, காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, ஓரிக் குதிரை யோரியு மெனவாங், கெழுசமங் கடந்த வெழு வுறழ் திணிதோள், எழுவர்" (சிறுபாண். 84 - 113) என வந்திருத்தல் காண்க.

5. வல்விலோரி: புறநா. 152 : 1 - 6, குறிப்புரை; அகநா. 208 : 13 - 4. கொல்லியாண்ட ஓரி : புறநா. 152 : 31 - 2, குறிப்புரை.

7. புறநா. 54; 6 - 7, குறிப்புரை; 55 : 15, குறிப்புரை; கலித். 57 : 12.

8. புறநா. 168 : 14. "நெடுநெறிக் குதிரைக் கூர்வே லஞ்சி" (அகநா. 372 : 9).

8 - 9. கூவிளங் கண்ணி - வில்வமாலை. கூர்வே லெழினி: "பல்வே லெழினி" (குறுந். 80); "உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல், அரவக் கடற்றானை யதிகன்" (சிறுபாண். 102 - 3).

10. புறநா. 126 : 6 - 7.

10 - 11. புறநா. 151 : 11.

12. பெருங்கனாடன் பேகன் : சிறுபாண். 87.

18 - 9. புறநா. 3 : 24 - 6.

21. கலித். 53 : 1.

24. "துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி" (நற். 57).

25. முதிரம் : புறநா. 160 : 13, 163 : 8.

27. புறநா. 159 : 28.

28. புறநா. 58 : 29.

மு. 'முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவுமென்னும் புறப்பாட்டு, 'எழுவர் மாய்ந்த பின்றை' எனப் புறத்திணைத் தலைவர் பலராய் வந்தது', 'முரசுகடிப் பிகுப்பவும்......வேலே : இஃது இன்னோர் போல எமக்கு ஈயென்ற இயன்மொழி வாழ்த்து' (தொல். அகத்திணை. சூ. 55, தொல். புறத்திணை. சூ. 35, ந). (கருஅ)

(கருகூ) வாழு நாளோ டியாண்டுபல வுண்மையிற்
றீர்தல்செல் லாதென் னுயிரெனப் பலபுலந்து
கோல்கா லாகக் குறும்பல வொதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்டுயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோரின்
றவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த வுடுக்கைய ளறம்பழியாத்
துவ்வா ளாகிய வென்வெய் யோளும்

என்றாங், கிருவர் நெஞ்சமு முவப்பக் கானவர்
கரிபுன மயக்கிய வகன்கட் கொல்லை
ஐவனம் வித்தி மையுறக் கவினி
ஈனல் செல்லா வேனற் கிழுமெனக்
கருவி வானந் தலைஇ யாங்கும்
ஈத்த நின்புக ழேத்தித் தொக்கவென்
பசிதினத் திரங்கிய வொக்கலு முவப்ப
உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலெ னுவந்துநீ
இன்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல் கூர்வேற் குமண
அதற்பட வருளல் வேண்டுவல் விறற்புகழ்
வசையில் விழுத்திணைப் பிறந்த
இசைமேந் தோன்றனிற் பாடிய யானே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) தனக்குச் சென்ற ஆண்டுகள் பல உண்டாதலின், இன்னும் போகின்றதில்லை எனதுயிரென்று சொல்லிக்கொண்டு வாழு நாளோடு பலவாக வெறுத்துத் தான் பிடித்த தண்டே காலாகக் கொண்டு ஒன்றற்கொன்று அணுகப் பல அடியிட்டு நடந்து நூலை விரித்தாற் போலும் மயிரையுடையவளாய்க் கண் மறைந்து முற்றத் திடத்துப் புறப்படமாட்டாத மூப்பையுடைய தாயும், பசப்புற்ற மேனி யுடனே நினைவு வருத்த வருந்தி *மருங்கிலே எடுத்த பல சிறு பிள்ளைகள் பிசைந்து மெல்லுதலால் உலர்ந்த முலையினையுடையவளாய் மிகவும் வருந்திக் குப்பையின்கண் படுமுதலாக வெழுந்த கீரையினது முன்பு கொய்யப்பட்ட கண்ணிலே கிளைத்த முதிராத இளைய தளிரைப் பறித்துக்கொண்டு உப்பின்றியே நீரை உலையாகக் கொண்டு ஏற்றிக் காய்ச்சி மோரின்றி அவிழாகிய உணவை மறந்து பசிய இலையைத் தின்று †மாசோடு கூடித் துணிபட்ட உடையினளாய் ‡அறக் கடவுளைப் பழித்து உண்ணாளாகிய என்னை விரும்பியோளுமென்று சொல்லப்பட்ட இருவருடைய நெஞ்சமும் காதலிப்ப, வேடர் சுடப் பட்டுக் கரிந்த புனத்தை மயங்க உழுத அகன்ற இடத்தையுடைய கொல்லைக்கண் ஐவன நெல்லோடு வித்தி இருட்சியுற அழகு பெற்றுக்

* மருங்கு - ஒக்கலை; பழ. 46.

† "மாசித் திங்கண் மாசின சின்னத் துணிமுள்ளின், ஊசித் துன்ன மூசிய வாடை" (சீவக. 2929).

‡ "அறனெனு மடவோய்" (சிலப். 18 : 41).

கோடை மிகுதியான் ஈன்றலைப் பொருந்தாத திணைக்கு இழுமெனும் அனுகரணவொலியுடனே *மின்னும் இடியுமுதலாகிய தொகுதியை யுடைய மழை துளியைச் சொரிந்தாற் போலத் தந்த நினது புகழை வாழ்த்திப் பசி தினலால் வருத்தமுற்ற ஈண்டிய எனது சுற்றமும் மகிழ, மேம்பட்டு ஏந்திய கோட்டையுடைய கொல்யானையைப் பெறினும் முகமாறித் தரும் பரிசிலைக் கொள்ளேன்; மகிழ்ந்து நீ யான் இன்புற விரையத் தந்து விடுவையாயிற் சிறிதாகிய குன்றியென்னும் அளவை யுடைய பொருளாயினும் கொள்வேன்; கூரிய வேலையுடைய குமணனே! அவ்வின்புறுதற்கண்ணே பட அருளுதலை வேண்டுவேன், †வென்றிப் புகழையுடைய வசையில்லாத சிறந்த குடியின்கட் பிறந்த இசை மேம்பட்ட அண்ணலே! நின்னைப் பாடிய யான்—எ - று.

குமண! இசைமேந்தோன்றல்! நிற் பாடிய யான் கொல்களிறு பெறினும் தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளேன்; இருவர் நெஞ்சமும் உவப்ப, ஒக்கலுமுவப்ப உவந்து இன்புற விடுதியாயிற் குன்றியுங் கொள்வேன்; அதற்பட அருளல் வேண்டுவலெனக் கூட்டி வினை முடிவு செய்க.

'வாழு நாளோ டியாண்டுபல வுண்மையின்' என்பதற்கு, இன்ப நுகர்ந்து கழிந்த இளமைநாளுடனே மூப்பு வந்து துன்பமுற்ற யாண்டு பல உண்மையி னெனினும் அமையும்.

குன்றியு மென்பதற்குக் குறைந்துமென்று உரைப்பாரும் உளர்.

ஆங்கு மென்னும் உம்மை இசைநிறைவு.

(கு - ரை.) 4 - 5. சினைப் பொருட்கண் வந்த வினையெச்சம் காரண காரியப் பொருட்டாய் வினைமுதலோடு முடிந்ததற்கு மேற் கோள்; தொல். வினை. சூ. 34, ந.; இ. வி. சூ. 248, உரை.

6. "பசந்த மேனியள் படர்நோ யுற்று" (சிலப். 13 : 68).

படரென்னுமுரிச்சொல், உள்ளுதல் செல்லுதலென்னுங் குறிப்புக் களை உணர்த்து மென்பதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 42, ந.

7. குறுமாக்கள் : புறநா. 94 : 1, குறிப்புரை; கலித். 82 : 9.

7 - 8. புறநா. 160 : 18 - 9.

6 - 12. "வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த, குப்பை வேளை யுப்பிலி வெந்ததை, மடவோர் காட்சி நாணிக் கடையடைத், திரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையு, மழிபசி" (சிறுபாண். 136 - 40). 14. என் வெய்யோ ளென்றது மனைவியை.

6 - 14. "பசந்த...வெய்யோளுமெனச் செய்தெனெச்சத்திடையே அவ் வினையெச்சமுற்றும் அதன் குறிப்பெச்சமும் உடனடுக்கி முடிந்

* "மின்னு முழக்கு மிடியு மற்றின்ன" (ஐந்திணையைம்பது, 3).

† "மறம்வீங்கு பல்புகழ்" (பதிற். 12 : 8) என்பதனுரையைப் பார்க்க.

தனவும் பிறவும் 'பன்முறையானும்' என்றதனாற் கொள்க" (தொல். வினை. சூ. 36, ந).

15. இருவரென்றது - தாயையும் மனைவியையும்; மிக்க மூப்பினராய இரு முதுகுரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயன பலவும் செய்தாயினும் புறந்தருக வென்பது அறநூற் பொதுவிதி யாதலின் 'இருவர் நெஞ்சமு முவப்ப' என்றார்; குறள், 656, பரிமேல். 17 - 8. கலித். 43 : 4.

19. "கருவி வானந் துளிசொரிந் தாங்கு" (பெரும்பாண். 24); "கருவி மாமழை கனைபெயல் பொழிந்தென" (சீவக. 2752).

18 - 20. புறநா. 160 : 1 - 10. 21. புறநா. 160 : 4.

28. புறநா. 158 : 27. (க௫௯)

(க௬௦) உருகெழு ஞாயிற் றொண்கதிர் மிசைந்த
முளிபுற் கானங் குழைப்பக் கல்லென
அதிர்குர லேறொடு துளிசொரிந் தாங்குப்
பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை
அவிழ்புகு வறியா தாகலின் வாடிய
நெறிகொள் வரிக்குடர் குனிப்பத் தண்ணெனக்
குய்கொள் கொழுந்துவை நெய்யுடை யடிசில்
மதிசேர் நாண்மீன் போல நவின்ற
சிறுபொ னன்கலஞ் சுற்ற விரீஇக்
கேடின் றாக பாடுநர் கடும்பென
அரிதுபெறு பொலங்கல மெளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே
செல்குவை யாயி னல்குவன் பெரிதெனப்
பல்புகழ் நுவலுநர் கூற வல்விரைந்
துள்ளந் துரப்ப வந்தனெ னெள்ளுற்
றில்லுணுத் துறத்தலி னின்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழின்
உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியும்
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்

வினவ லானு ளாகி நனவின்
அல்ல லுழப்போண் மல்லல் சிறப்பச்
செல்லாச் செல்வ மிகுத்தனை வல்லே
விடுதல் வேண்டுவ லத்தை படுதிரை
நீர்சூழ் நிலவரை யுயரநின்
சீர்கெழு விழுப்புக ழேத்துகம் பலவே.

(பி - ம்.) 28 'விடுத்தல்'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) **உட்குப் பொருந்திய ஞாயிற்றினது ஒள்ளிய சுடர்** தின்னப்பட்ட முளிந்த புல்லையுடைய காடு தளிர்ப்பக் கல்லென ஓசை யுண்டாக நடுக்கத்தைச் செய்யும் ஓசையையுடைய உருமேற்றுடனே கூடித் துளியைப் பொழிந்தாற்போலப் பசி தின்னப்பட்டு உலர்ந்த வேர்ப்புடைய உடம்பு அவிழ்புகுவது அறியாதாகலால் வாட்டமுற்ற முடக்கங்கொண்ட பல வரியையுடைய குடர் தன்கண்ணே மூழ்கும் பரிசு குளிரத் தாளிப்புச் சேரப்பட்ட கொழுவிய துவையோடு கூடிய நெய்யுடைய அடிசிலைத் திங்களைச் சேர்ந்த நாளாகிய மீனையொப்பப் பயின்ற பொன்னாற் செய்யப்பட்ட சிறிய நல்ல கலங்களைச் சூழ வைத் திருத்தி ஊட்டிக் கேடில்லையாக, பாடுவாரது சுற்றமெனச் சொல்லிப் பெறுதற்கரிய பொன்னாற் செய்யப்பட்ட அணிகலங்களை எளிதாக வழங்கித் தன்னுடைய நட்டோரினும் எம்மோடு நட்புச் செய்த நல்ல புகழையுடைய குமணன், மது நிறைந்த தெருவினையுடைய முதிர மென்னும் மலையிடத்தான்; நீ அவன்பாற் செல்வையாயின், நினக்கு மிகவுந் தருவனென நினது பல புகழையும் சொல்லுவார் சொல்ல, அது கேட்டுக் கடிதாக விரைந்து எனது உள்ளம் செலுத்துதலான் வந்தேன்; எனது மனை உண்ணப்படுவனவற்றைக் கைவிடுதலான் அம்மனையை இகழ்ந்து நினையாது உறைகின்ற புல்லிய உளைமயிர் போலும் குடுமியையுடைய புதல்வன் பல படியும் பாலில்லாத வறுவிய முலையைச் சுவைத்துப் பால் பெருனுய்க் கூழையும் சோற்றையும் வேண்டி முடுகி முறை முறையே உள்ளொன்றில்லாத வறிய அடுகலத்தைத் திறந்து அங்கு ஒன்றுங்காணுது அழ, அதனைப் பார்த்து மறத்தையுடைய புலியை வரவு சொல்லி அச்சமுறுத்தியும் * அம்புலியைக் காட்டியும் அவற்ருல் தணிக்க அருமையின் வருந்தின ளாய் நின் பிதாவை நினைந்து வெறுத்த நின் செவ்வியைக் காட்டெனச் சொல்லிக் கேட்டல் அமையாளாய் மிகுதிப்பட நனவின்கண்ணும் துயரமுறுவோள் வளப்ப மிகத் தொலையாத செல்வத்தை மிகுத்தனை யாய் விரையப் பரிசில் தந்து விடுத்தலை விரும்புவேன், யான்;

* கலித். 80 : 19.

ஒலிக்குந் திரையையுடைய நீராற் சூழப்பட்ட நிலவெல்லையிலே ஓங்க நினது சீர்மை பொருந்திய சிறந்த புகழைப் பலவாக வாழ்த்துவேம்—எ - று.

அத்தை : அசைநிலை.

நன்கலமிரீஇ அடிசிலைக் குடர்குளிப்பத் தண்ணெனை ஊட்டியென்க.

ஊட்டியென ஒரு சொல் தரப்பட்டது.

'நட்டோர்நட்ட' என்பதற்கு நட்டோரை நாட்டியவெனினும் அமையும்.

'செல்லாச் செல்வ மீத்தனை' என்பதூஉம், 'நிலவரை யுணர' என்பதூஉம் பாடம்.

(கு - ரை.) 1. உருவென்னும் உரிச்சொல் உட்கென்னும் பொருளில் வருவதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 4, ந ; இ. வி. சூ. 290, உரை.

4. புறநா. 159 : 21.

2 - 4. "பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக், கருவி வானந் துளிசொரிந் தாங்குப், பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கல்" (பெரும்பாண். 23 - 5).

1 - 4. புறநா. 174 : 23 - 8.

5. அவிழ் - பருக்கை.

7. நெய்யுடை யடிசில் : புறநா. 188 : 5.

8 - 9. பெரும்பாண். 477; "திங்கணலஞ் சூழ்ந்ததிரு மீன்களெனச் செம்பொற், பொங்குகதிர் மின்னுபுகழ்க் கலங்கள் பல பரப்பி" (சீவக. 2025).

15. பல்புகழ் - கல்வி, ஆண்மை, கொடை முதலியவற்றால் உளவாய புகழ்; மறம் வீங்கு பல்புகழ்" (பதிற். 12 : 8) என்பதனுரையையும், 231-ஆம் குறளின் பரிமேலழகருரையையும் பார்க்க.

16. "ஊக்கந் துரப்ப" (புறநா. 8 : 3).

14 - 6. புறநா. 161 : 21.

18. உளைமயிர் - குதிரையின் தலையாட்டத்திலுள்ள மயிர். "புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து" (அகநா. 176 : 19). பன்மாண் பலகால; புறநா. 365 : 9; கலித். 47 : 8.

18 - 9. புறநா. 159 : 7 - 8, 164 : 3 - 5, 211 : 20 - 21.

21 - 2. "அழுகை மகளிர்க் குழுவை செப்ப" (பரி. 14 : 12) உரையைப் பார்க்க.

30. ஏத்துகம் பல : புறநா. 10 : 13.

29 : 30. புறநா. 166 : 23; "மண்டேய்த்த புகழினன்" (சிலப். 1 : 36). (கசாO)

(கசுக) நீண்டொலி யழுவங் குறைபட முகந்துகொண்
டுண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல சூன்முதிர்
புருமுரறு கருவியொடு பெயல்கட னிறுத்து
வளமழை மாறிய வென்றூழ்க் காலை
மன்பதை யெல்லாஞ் சென்றுணக் கங்கைக்
கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்
கெமக்கும் பிறர்க்குஞ் செம்மலை யாகலின்
அன்பி லாடவர் கொன்றாறு கவரச்
சென்றுதலை வருந வல்ல வன்பின்று
வன்கலை தெவிட்டு மருஞ்சுர மிறந்தோர்க்
கிற்றை நாளொடும் யாண்டுதலைப் பெயரெனக்
கண்பொறி போகிய கசிவொ டுரனழிந்
தருந்துய ருழக்குமென் பெருந்துன் புறுவிநின்
தாள்படு செல்வங் காண்டொறு மருளப்
பனைமரு டடக்கையொடு முத்துப்பட முற்றிய
உயர்மருப் பேந்திய வரைமரு ணோன்பக
டொளிதிக ழோடை பொலிய மருங்கிற்
படுமணி யிரட்ட வேறிச் செம்மாந்து
செலனசைஇ யுற்றனென் விறன்மிகு குருசில்
இன்மை துரப்ப விசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தவென் னயந்தனை கேண்மதி
வல்லினும் வல்லே னாயினும் வல்லே
என்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த
நின்னளந் தறிமதி பெரும வென்றும்
வேந்தர் நாணப் பெயர்வேன் சாந்தருந்திப்
பல்பொறிக் கொண்ட வேந்தெழி லகலம்
மாணிழை மகளிர் புல்லுதொறும் புகல
நாண்முர சிரங்கு மிடனுடை வரைப்பினின்
தாணிழல் வாழ்நர் நன்கல மிகுப்ப
வாளம ருழந்தநின் றானையும்
சீர்மிகு செல்வமு மேத்துகம் பலவே.

(பி - ம்.) 13 'கண்பொறி மாறிய' 26 'சாத்தருந்து'

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

அவனை அவர் பாடிப் பகடு பெற்றது.

(இ - ள்.) பெரிதாய் ஒலிக்கின்ற பரப்பினையுடைய கடல் குறைபட நீரை முகந்துகொண்டு விரைந்த செலவையுடைய முகில்கள்

வேண்டிய இடத்தே திரண்டு மலைபோலும் தோற்றத்தையுடைய வாய்ச் சூல் முதிர்ந்து உருமேறிடிக்கும் மின் முதலாகிய தொகுதியுடனே கூடிப் பெயலை முறைமையாகப் பெய்து வளத்தைத் தரும் மழை நீங்கிய கோடைக் காலத்து உயிர்ப்பன்மைகளெல்லாம் சென்று நீருண்டற்குக் கங்கையினது கரையைப் பொரும் மிக்கவெள்ளம் நிறைந்து தோன்றியவாறு போல எங்கட்கும் பிறர்க்கும் தலைமையையுடையையாதலின், யாவரோடும் உறவில்லாத ஆறலைகள்வர் கொன்று வழியிலே அடித்துப் பறித்தலாற் போய் முடிவனவல்ல அருஞ்சுரமாயிருக்கத் தம்முயிர்மேல் அன்பின்றி வலிய கலை கிடந்து அசையிடும் போதற்கரிய அச்சுரத்தின் கண்ணே அன்பின்றிப் பிரிந்தவர்க்கு இற்றை நாளோடுங்கூடி யாண்டு கழிகவெனச் சொல்லிக் கண்ணுளி மழுங்கிய இரக்கத்துடனே * வலி கெட்டுப் பொறுத்தற்கரிய துன்பமுறும் எனது பெரிய வறுமையுறுவோள் நினது † முயற்சியாலுண்டாகிய செல்வத்தைக் காணுந்தோறும் வியப்பப் பனையையொக்கும் பெருங்கையுடனே முத்துப் படும்படி முதிர்ந்த உயர்ந்த கொம்பேந்திய மலையை யொக்கும் வலிய களிற்றை ஒளி விளங்கும் பட்டம் பொலியப் பக்கத்தே யொலிக்கும் மணி ஒன்றற்கொன்று மாறியொலிப்ப ஏறித் தலைமை தோன்ற இருந்து போதலை விரும்பினேன்; வென்றிமிக்க தலைவனே! எனது வறுமை பின்னே நின்று துரத்த நின் புகழ் கொடுவர வந்து நினது கைவண்மையிலே சிலவற்றைத் தொடுத்த என்னைக் காதலித்துக் கேட்பாயாக; சிலவற்றைச் சொல்ல அறிவேனுயினும் அறியேனுயினும் விரைய என் கல்வியளவை ஆராய்ந்தறிந்தனையாய் ஆராயாது சிறந்த நின்னளவை அளந்தறிவாயாக, பெருமானே! எந்நாளும் எனது மிகுதியைக் கண்டு அரசர் நாணும்படி பெயர்வேன்; சாந்து பூசப்பட்டுப் பல நல்ல இலக்கணத்தைப் பொருந்திய மேம்பட்ட அழகினையுடைய மார்பை மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய மகளிர் தழுவுந்தோறும் விரும்ப நாட்காலையே முரசு முழங்கும் இடனுடைத்தாய எல்லையின்கண் நினது தாணிழற்கண் வாழ்வார் நல்ல ஆபரணத்தை மிகுப்ப வாளாற் செய்யும் போரின்கண்ணே உழக்கப்பட்ட நினது படையையும் நினது சீர்மிக்க செல்வத்தையும் பலபடப் புகழ்வோம்—எ - று.

அருஞ்சுரம் சென்று தலை வருவனவல்லவென முற்ருக்கி, அவ்வருஞ் சுரமிறந்தோரெனவும், அன்பின்றி யிறந்தோரெனவும் கூட்டுக.

நின்வண்மையிற் ருெடுத்த என்பதற்கு நின்வண்மையால் வளைத்துக் கொள்ளப்பட்டவெனினும் அமையும்.

---

* புறநா. 148 : 2, குறிப்புரையையும், "ஊக்க வேந்த ருக்கம் போல" (பெருங். 3. 5 : 20) என்பதையும் பார்க்க.

† "இம்மியன நுண்பொருள்க ளீட்டிநிதி யாக்கிக், கம்மியரு மூர்வர்களி ரேடைநுதல் சூட்டி." (சீவக. 495).

புகல, மிகுப்ப என்னும் செயவெனெச்சங்கள், வாளமருழந்த வென்னும் பிறவினையொடு முடிந்தன.

துன்புறுவி மருளப் பகடேறிச் செலல் நசைஇ உற்றனெனெனவும், மகளிர் புகலத் தாணிழல் வாழ்நர் நன்கல மிகுப்ப வாளமருழந்தநின் தானையும் செல்வமும் ஏத்துகமெனவும் கூட்டுக.

(கு - ரை.) 1. "கடல்குறை படுத்தநீர் கல்குறை படவெறிந்து" (பரி. 20 : 1); "தடிந்தெழிலி, தானல்கா தாகி விடின்" (குறள், 17).

4. புறநா. 174 : 28; "உருமுரறு கருவிய பெருமழை" (அகநா. 158 : 1); "உருமுரறு கருவிய பெருமலை பிற்பட" (மலைபடு. 357).

5. என்றூழ் - வெயில்.

4 - 5. புறநா. 203 : 1.

9 - 10. புறநா. 136 : 10 - 14; "அற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாம், கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர், துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற், புள்ளும் வழங்காப் புலம்பு கொளாரிடை" (கலித். 4 : 3 - 6).

11. தெவிட்டல்: "புரவி புல்லுணாத் தெவிட்ட" (மதுரைக். 660); "புரவி புல்லுணாத் தெவிட்டும்" (நெடுநல். 93 : 4).

13. பொறி - ஒளி; "பொறிவரிப் புகர்முகம்" (பெரும்பாண். 448).

14. புறநா. 146 : 7.

15. தாள்படு செல்வம் : (புறநா. 148 : 2); "தாளாற்றித் தந்த பொருள்" (குறள், 212).

14 - 5. கலித். 35 : 1.

16. புறநா. 340 : 7; "பனைக்கை மும்மத வேழ முரித்தவன்" (தே.).

17. புறநா. 38, 42, 125, 140, 197, 238, 387; மலைபடு. 572.

16 - 7. யானைக்கொம்பு முத்தம் : புறநா. 170 : 10 : 11.

19. புறநா. 3 : 10, 72 : 3, 165 : 6, 351 : 1.

23. வல்லினும் - வல்லேனாயினும்; "உணர்த்த வல்லின்" (தொல். உரி. சூ. 94); வல்லேன் - வன்மையில்லேன்; "பரிசின் மாக்கள் வல்லாராயினும்" (பதிற். 20 : 22); புறநா. 57 : 1 - 3, குறிப்புரை பார்க்க.

24 - 5. "சிரப்பான் மணிமவுலிச் சேரமான் றன்னைச், சுரப்பர்டி யான் கேட்பப் பொன்னொடொன் றீந்தான், இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர், தாமறிவர் தங்கொடையின் சீர்" (ஔவையார் பாடல்) என்பது இங்கே அறியற்பாலது.

27. பொறி - உத்தம இலக்கணம்; புறநா. 68 : 5, குறிப்புரை.

29. நாண்முரசு : ஐங்குறு. 448; மதுரைக். 232; சிலப். 14 : 14, 17 : 6; பு. வெ. 117.

30. தாணிழல் : "வீரன் றாணிழல்", "அடிநிழற் றருக வென்றெம் மாலைவேந் தருளிச் செய்தான்" (சீவக. 409, 1087).

31. புறநா. 24 : 29.

32. புறநா. 10 : 13, 160 : 30. (கசுக)

(கசுஉ) இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானை யெம்பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே.

திணை - அது; துறை - பரிசில்விடை.

அவர் வெளிமானுழைச் சென்றார்க்கு வெளிமான் துஞ்சுவான் தம்பியைப் பரிசில்கொடுவென அவன் சிறிதுகொடுப்பக் கொள்ளாது போய்க் குமணனைப் பாடிக் குமணன் பகடு கொடுப்பக் கொணர்ந்து நின்று வெளிமானூர்க் கடிமரத்து யாத்துச் சென்று அவர் சொல்லியது.

(இ - ள்.) இரப்போர்க்கு ஈந்து பாதுகாப்பாய் நீயுமல்லை; புரப்போர் இரப்போர்க்கு இல்லையுமல்லர்; இனி இரப்போருண்டாதலையும் காண்பாயாக; இனி இரப்போர்க்கு இடுவோருண்டாதலையும் காண்பாயாக; நின்னுடைய ஊரின்கட் காவலையுடைய மரம்வருந்தக் கொடுவந்து யாம் கட்டிய உயர்ந்த நல்ல இலக்கணமுடைய யானை எமது பரிசில்; விரைந்த செலவினையுடைய குதிரையையுடைய தலைவனே! இனி யான் போவல்—எ - று.

யான் போவலென்ற கருத்து : முன் சிறிதுகொடுப்பக் கொள்ளாத மிகுதி தோன்ற நின்றது.

இரவலருண்மையுங்காணினியென்ற கருத்து : இரப்போர்க்குப் பெருந் தன்மையுளதாதல் என்னளவிலே காணென்பதாம்.

'யாம் பிணித்த' என்னும் பன்மை * பெருமிதந்தோன்ற நின்றது.

† "நடைவயிற் றோன்று மிருவகை விடையும்" என்பதனால், இது பெருது பெயர்ந்த பரிசில்விடை.

---

* 'யாம் என்றாள், தம்பிராட்டியாதலால், தன் பெருமிதந்தோன்ற' (சிலப். 20 : 13, அரும்பத.).

† தொல். புறத்திணை. சூ. 36.

(கு - ரை.) 5. கடிமரம் - காவன்மரம்; அது பகைவர் அணுகாத வண்ணம் வளர்க்கப்படுவது.

6. யானைப்பரிசில் : புறநா. 131, 140, 394.

5 - 6. பகைவருடைய காவன்மரத்தை அல்லது காவற்சோலையை வெட்டுதலும் வெட்டாமல் அம்மரத்தில் தம்முடைய யானையைக் கட்டுதலும் அரசர்க்கியல்பு; புறநா. 23 : 8 - 9, 36 : 6 - 9, 57 : 10 -11, 336 : 4, 345 : 1 என்பனவற்றாலுணர்க; அனுமான் அசோகவனத்தை அழித்ததும் இங்கே அறிதற்குரியது.

மு. அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கத்துள், ஏற்றற்கு மேற் கோள்; ஏற்றலாவது கொள்வோன் தனது சிறப்பிற் குன்றாமற் கொள்ளுதல்; தொல். புறத்திணை. சூ. 16, இளம்.; "இரவலர்...... யானே : இது பிறன்பாற் பெரிது பெற்றுச் சிறிது தந்தவற்குக் காட்டிய விடை" (தொல். புறத். சூ. 36, ந.). (கசுஉ)

(கசுங) நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே.

(பி - ம்.) 2 'மன்மாண்'

திணை - அது; துறை - பரிசில்.

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது.

(இ - ள்) நின்னைக் காதலித்து உறையும் நின்சார்வாய மகளிர்க்கும் நீ அன்பு செய்தொழுகப்பட்ட மகளிர்க்கும் பல குணங்களும் மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய நினது சுற்றத்து மூத்த மகளிர்க்கும் நமது சுற்றத்தினது மிக்க பசி நீங்க நினக்கு நெடுநாட்படக் குறித்த எதிர்ப்பைத் தந்தோர்க்கும் மற்றும் இன்ன தன்மையாரென்று கருதாது என்னொடுகூடி உசாவுவதும் செய்யாது சதுரப்படக் குடி வாழ்க்கை வாழக் கடவேமென்று கருதாது நீயும் யாவர்க்கும் வழங்குவாயாக, எனது மனைக்குரியோயே! பலாப்பழ முதலாயின தூங்கும் முதிர மென்னும் மலைக்குத் தலைவனாகிய திருந்திய வேலையுடைய குமணன் நல்கிய செல்வத்தை—எ - று.

மனைகிழவோய்! குமணன் நல்கிய செல்வத்தை நீயும் எல்லோர்க்கும் கொடுமதியெனக் கூட்டுக.

நின் பன்மாண்கற்பிற் கிளை முதலோர்க்குமென இயையும்; நின்றுங் குறைப்பினும் அமையும்.

நீயுமென்ற உம்மை யானுங்கொடுப்பேன் நீயுங் கொடுவென எச்ச உம்மையாய் நின்றது.

(கு - ரை.) 3. கடும்பு - சுற்றம்; புறநா. 22 : 27. கடும்பசி - மிக்க பசி; புறநா. 230 : 9.

4. “குறியெதிர்ப்பையாவது அளவு குறித்து வாங்கி அவ்வாங்கிய வாறே எதிர்கொடுப்பது” (குறள், 221, பரிமேல்.); “கூற்றுங், குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே...களிறு” (முத்தொள்ளாயிரம்).

6. வல்லாங்கு : புறநா. 47 - 3.

மு. அரசன் விடைகொடுப்பப் போந்தவன் கூற்றிற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 30, இளம்.; ‘நின்னயந்துறைநர்க்கு...... வளனே : இது மனைக்கு மகிழ்ந்து கூறியது’ (தொல். புறத்திணை. சூ. 36, ந.). (௧௬௩)

(௧௬௪) ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
என்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே.

(பி - ம்.) 10 ‘தடுத்துங்’ 12 ‘மண்ணார்’

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

தம்பியால் நாடுகொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனைப் பெருந்தலைச்சாத்தனார் பாடியது.

(இ - ள்.) அடுதலை மிகவும் மறந்த புடையோங்கிய அடுப்பின்கண் காளாம்பி (காளான்) பூப்ப உடம்பு மெலியும் பசியான் வருந்திப்

பாலின்மையால் தோலாந்தன்மையுடனே திரங்கித் துளைதூர்ந்த பொல்லாத வறிய முலையை வறிதே சுவைக்குந்தோறும் அழுகின்ற தனது பிள்ளையது முகத்தைப் பார்த்து நீரால் நிரம்பிய ஈரிய இமையையுடைய குளிர்ந்த கண்ணையுடைய என் மனைவியது வருத்தத்தைப் பார்த்து இந்த வருத்தம் தீர்த்தற்குரியாய் நீயென நினைந்து நின்பால் வந்தேன்; நல்ல போரையுடைய குமண! எனது வறுமை நிலையை நீ அறிந்தாயாயின், இவ்வாறு வறுமையுற்று நின்ற நிலைமைக்கண் வளைத்தாயினும் பரிசில்கொள்ளாது விடேன்; பலவாக அடுக்கப்பட்ட பண்ணுதலமைந்த நரம்பினையுடைய தோலாற் போர்க்கப்பட்ட நல்ல யாழையும் மார்ச்சனை நிறைந்த மத்தளத்தினையுமுடைய கூத்தரது மிடியைக் கெடுக்கும் குடியின்கட் பிறந்தோயாதலால்—எ - று.

அடுதலை மிகவும் மறத்தலால் தேய்பின்றி உயர்ந்த அடுப்பென்றுராம்.

குமண! நீ இன்மை தீர்க்கும் குடிப்பிறந்தோயாதலால் இந்நிலைத் தொடுத்தும் கொள்ளாது அமையலென் எனக் கூட்டுக.

(கு - ரை.) 1. கோடுயரடுப்பு : "பல்கோட் டடுப்பிற் பாலுலையிரீஇ" (அகநா. 141 : 15).

1 - 2. "புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில், காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த, பூழி பூத்த புழற்கா ளாம்பி, ஒல்குபசி யுழந்த...வளைக்கைக் கிணைமகள்" (சிறுபாண். 132 - 6).

3 - 5. புறநா. 211 : 20 - 21. 7. புறநா. 159 : 15, குறிப்புரை.

1 - 7. "சாம்பல்கண் டறியா வாம்பி பூத்த, எலிதுயி லடுப்பிற்றலை மடுத் தொதுங்கிச், சிறுசிறு ரலறப் பெருமனைக் கிழத்தி, குடங்கையிற் றுங்கிய கொடிற்றினள் குடங்கைக், கடங்கா வுண்க ணுறலைத் தொழுக, அழுகுரல் செவிசுட விழுமநோய் மிக்குக், களைகண் காணு தலமரு மேல்வையில்' (காசிக்கலம். 57).

4 - 8. 'இல்லிதூர்ந்த...குமண என்புழி, முலைப்பசை காணுது அழுகின்றது குழவியென்பது தன்கட்டோன்றிய வறுமைபற்றி அவலம் பிறந்தது; மகமுகநோக்கி அழுகின்றுள் என் மனைவியென்பது பிறர்கட் டோன்றிய வறுமையவலம்' (தொல். மெய்ப்பாடு. சூ. 5, பேர்.).

10. தொடுத்தும் - வளைத்தும்; புறநா. 135 : 17, 156 : 4; "வளைத்துவாங்கு பொன்னிழவாதே யென்றுர்" (திருவால. 28 : 2).

11. பண்ணமை : புறநா. 170 : 13. பச்சை - யாழின் தோற் போர்வை; "விளக்கழ லுருவின் விசியுறு பச்சை" (பொருந. 5) "புகழ்வினைப் பொலிந்த பச்சை" (சிறுபாண். 226).

13. புறநா. 3 : 24 - 6.

10 - 13. "கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின், றிரப்புமோ ரேஎ ருடைத்து" (குறள், 1053) என்பது இங்கே அறியற்பாலது.

மு. வாகைத்திணையின் பகுதியாகிய பரிசில்கடைஇய கடைக் கூட்டு நிலைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 30, இளம். 'ஆடுநனி மறந்த...குடிப்பிறந்தோயே : இது பரிசில்கடாநிலை' (தொல். புறத். சூ. 36, ந.). (கசுச)

(கசு௫) மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வர்
இன்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
ஆடுமலி யுவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.

திணை - அது; துறை - பரிசில் விடை.

தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனைக் கண்டு அவன் தன் வாள்கொடுப்பக் கொண்டுவந்து இளங்குமணற்குக் காட்டிப் பெருந்தலைச்சாத்தனார் பாடியது.

பரிசில் விடையாவது :—

"வேந்தனுண் மகிழ வெல்புக ழறைந்தோர்க்
கீந்து பரிசி லின்புற விடுத்தன்று." (பு.வெ. 214)

(இ - ள்.) எப்பொருளும் நிலையாத இவ்வுலகத்தின்கண் நிலைபெறுதலைக் கருதினோர் தம்முடைய புகழைப் பூமியிடத்தே நிறுத்தித் தாங்கள் இறந்தார்; நணுகுதற்கரிய தலைமையையுடைய மிக்க செல்வர், வறுமையால் இரப்போர்க்குக் கொடாமையிற் பழைய வண்மையையுடைய மாக்கள்போலப் பின்னும் தம் பெயரை நிறுத்தி உலகோடு தொடர்ந்து போதுதலை அறியார்; தாளின்கண் தாழ்ந்த ஓசையையுடைய மணி ஒன்றற்கொன்று மாறியொலிக்கும் புகர் நுதலையுடைய வென்றியியன்ற யானையைப் பாவலர்க்கு மிகக்கொடுக்கும் அழிவில்லாத நல்ல புகழையுடைய வலிய குதிரையையுடைய தலைவனைப் பாடி நின்றேனாக, பயனின்றியே பெருமைபெற்ற பரிசிலன்

வாடினனாகப் பெயர்தல் எனது நாட்டை இழந்ததனினும் மிக இன்னாதென நினைந்து வாளைத் தந்தான், தனது தலையை எனக்குத் தருவானாக, ஆங்குத் தருதற்குத் தன்னிற் சிறந்த பொருள் வேறொன்றில்லாமையின்; வென்றி மிக்க உவகையான் வந்தேன், புறக்கொடாத மேற்கோளையுடைய நின் தமையனைக் கண்டு—எ - று.

வருவலென்பது காலமயக்கம்.

மன்னுதல் குறித்தோர் புகழ் நிறுத்துதலும், புகழ் நிறுத்தாதோர் மன்னாராதலும் இவ்வாறன்றோ வென்பது கருத்தாகக் கொள்க.

நின் கிழமையோற்கண்டு வருவலெனவும், வயமான் தோன்றலைப் பாடி நின்றேனாகப் பரிசிலன் கொன்னே பெயர்தல் இழந்ததனினும் இன்னாதெனத் தன்னிற் சிறந்தது பிறிதொன்றின்மையின், தலை எமக்கீய வாள் தந்தனன் ஆதலால், ஆடுமலியுவகையின் வருவலெனவும் கூட்டுக.

'கிளைமையோற் கண்டு' என்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 1. 'மன்னுமை' என்பது நிலையாமையை யுணர்த்துவதற்கு மேற்கோள்; தொல். கிளவி. சூ. 34, ந.

2. "தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே" (புறநா. 366 : 5).

1 - 2. புறநா. 18 : 3; "நின்றுநீ கெடாஅ நல்லிசை நிலைஇ" "நல்லிசை நிலைஇய நனந்தலை யுலகத்து" (பதிற். 14 : 20 - 21, 86 : 5); "மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும்,...சாவா வுடம்பெய்தினார்" (திரி. 16); "மண்ணியன் ஞாலத்து மன்னுபுகழ்வேண்டிப், பெண்ணிய னல்லாய் பிரிந்தார்" (கார். 8); "நில்லா வுலகத்து நிலைமை தூக்கி, அந்நிலை யணுகல் வேண்டி" (பெரும்பாண். 466 - 7); "தொலையா நல்லிசை யுலகமொடு நிற்ப", "இன்றிவட் செல்லா துலகமொடு நிற்ப" (மலைபடு. 70, 541); "ஒருவன திரண்டி யாக்கை யூன்பயி னரம்பின் யாத்த, உருவமும் புகழுமென்றிரண்டின் கவற்றினூழ் காத்துவந்து, மருவிய வுருவ மிங்கே மறைந்துபோ மற்றை யாக்கை, திருவமர்ந் துலக மேத்தச் சிறந்துபின் னிற்குமன்றே", "பொன்று மிவ்வுட லின்பொருட், டென்று நிற்கு மிரும்புக, ழின்று நீர்கழிந் தீர்களாற், குன்றின் மேற் குடை வேந்திர்காள்" (சூளா. சீயவதை. 204; அரசியல். 226); "மன்னு வுலகத்து மன்னிய சீர்த் தஞ்சை வாணன்" (தஞ்சை. 21), "மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண்மாயா, தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய், வீந்தவ ரென்பவர் வீந்தவரேனும், ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே" (கம்ப. வேள்வி. 30).

2 - 5. மலைபடு. 541 - 3.

6 - 7. புறநா. 72 : 3 - 4, குறிப்புரை.

11. "கடலங் கான லாய மாய்ந்தவென், நலமிழந் ததனினு நனியின் னாதே" (குறுந். 245).

15. ஓடாப்பூட்கை : புறநா. 154 : 10, குறிப்புரை.

மு. வாகைத் திணைத்துறைகளுள் 'இடையில் வான்புகழ்க் கொடை' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 17, இளம்.; சூ. 21, ந. (கசுரு)

(கசுசு) நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த வொருமுதுநூல்
இகல்கண்டோர் மிகல்சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ
மூவேழ் துறையு முட்டின்று போகிய
உரைசால் சிறப்பி னுரவோர் மருக
வினைக்குவேண்டி நீபூண்ட
புலப்புல்வாய்க் கலைப்பச்சை
சுவற்பூண்ஞாண் மிசைப்பொலிய
மறங்கடிந்த வருங்கற்பின்
அறம்புகழ்ந்த வலைசூடிச்
சிறுநுதற்பே ரகலல்குற்
சிலசொல்லிற் பலகூந்தனின்
நிலைக்கொத்தநின் றுணைத்துணைவியர்
தமக்கமைந்த தொழில்கேட்பக்
காடென்றா நாடென்றாங்
கீரேழி னிடமுட்டாது
நீர்நாண நெய்வழங்கியும்
எண்ணாணப் பலவேட்டும்
மண்ணாணப் புகழ்பரப்பியும்
அருங்கடிப் பெருங்காலை
விருந்துற்றநின் றிருந்தேந்துநிலை
என்றுங், காண்கதில் லம்ம யாமே குடாஅது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை யெம்மூ ராங்கண்
உண்டுந் தின்று மூர்ந்து மாடுகம்
செல்வ லத்தை யானே செல்லாது
மழையண் ணாப்ப நீடிய நெடுவரைக்
கழைவள ரிமயம் போல
நிலீஇய ரத்தைநீ நிலமிசை யானே.

திணை - அது; துறை - பார்ப்பனவாகை.

சோணாட்டு * பூஞ்சாற்றூர் (பி - ம். பூஞ்சிற்றூர்)ப் பார்ப்பான் † கௌணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

பார்ப்பனவாகையாவது :—
"கேள்வியாற் சிறப்பெய்தியானை
வேள்வியான் விறன்மிகுத்தன்று" (பு. வெ. 163).

(இ - ள்.) பெரிதும் ஆராயப்பட்ட மிக்க நீண்ட சடையினையுடைய முதிய இறைவனது (சிவபெருமானது) வாக்கை விட்டு நீங்காது அற மொன்றையே மேவிய நான்கு கூற்றையுடைத்தாய் ‡ ஆறங்கத்தாலும் உணரப்பட்ட ஒரு பழைய நூலாகிய வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலாயின புறச்சமயத்தோரது மிகுதியைச் சாய்க்க வேண்டி அவரது மெய்போன்ற பொய்யை உளப்பட்டறிந்து அப்பொய்ம்மையை மெய்யென்று கருதாமல் உண்மைப்பொருளை அவர்களுக்கு ஏற்பச் சொல்லி § இருபத்தொரு வேள்வித் துறையையும் குறை யின்றாகச் செய்து முடித்த புகழமைந்த தலைமையையுடைய அறிவுடையோர் மரபிலுள்ளானே! வேள்வித் தொழிற்கு வேண்டி நீ போர்க்கப்பட்ட காட்டுநிலத்து வாழும்

---

* பூஞ்சாற்றூர் - சோழநாட்டில் முடிகொண்டான் ஆற்றங் கரையில் உள்ளதோரூர்.

† கௌணியன் - கௌண்டின்னிய கோத்திரத்திற் பிறந்தவன்.

‡ வேதத்தின் ஆறங்கங்களாவன :—வியாகரணம், சோதிடம், நிருத்தம், சந்தம், சிக்கை, கற்பமென்பன; "கற்பங் கைசந் தங்காலெண் கண், டெற்ற நிருத்தஞ் செவிசிக் கைமூக், குற்ற வியாகர ணமுகம் பெற்றுச், சார்பிற் றேன்று வாரண வேதக், காதி யந்த மில்லை" (மணி. 27 : 100 - 104).

§ இருபத்தொரு வேள்விகளாவன :—ஸோமயஞ்ஞம், 7; ஹவிர் யஞ்ஞம், 7; பாகயஞ்ஞம், 7; அவற்றுள், ஸோமயஞ்ஞங்களேழாவன :—அக்கினிஷ்டோமம், அதியக்கினிஷ்டோமம், உக்தியம், ஷோடசி, வாஜபேயம், அதிராத்திரம், அப்தோர்யாமமென்பன. ஹவிர்யஞ்ஞங்களேழாவன :—அக்னியாதேயம், அக்னிஹோத்திரம், தரிசபூர்ணமாசம், சாதுர்மாஸ்யம், நிரூடபசுபந்தம், ஆக்கிரயணம், ஸௌத்திராமணி யென்பன. பாகயஞ்ஞங்களேழாவன :—அஷ்டகை, ஆபார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆச்வயுஜி யென்பன.

* புல்வாய்க்கலையினது உறுப்புத்தோல் நினது தோளின்கண் இடப்பட்ட பூணுநூன்மீதே சிறந்துதோன்றக் கொடுமையை நீக்கிய பெறுதற்கரிய கற்பினையும், அறநூல் புகழப்பட்ட † சாலகத்தைச் சூடி, சிறிய நுதலினையும் பெரிய அகன்ற அல்குலையும் மெத்தென்ற சொல்லையும் பலவாகிய கூந்தலையுமுடைய நின்னுடைய நிலைமைக்கு மனமொத்த நின்னுடைய துணைவியராகிய ‡ காதலிமார் தத்தமக்குப் பொருந்திய ஏவற்றொழிலைக் கேட்டுச் செய்யக் காடென்றும் நாடென்றும் சொல்லப்பட்ட அவ்விடத்தின்கட் $ காட்டுள் எழுவகைப்பட்ட பசுவானும் நாட்டுள் எழுவகைப்பட்ட பசுவானும் முட்டாது நீர் நாணும் பரிசு நெய்யை வழங்கியும் எண்ணிறப்பப் பல வேள்விகளை வேட்டும் மண் பொருமற் புகழைப் பரப்பியும் அவ்வாறு பெறுதற்கரிய விளக்கமுற்ற வேள்விமுடிபாகிய பெரிய காலத்து விருந்தினரைப் பொருந்திய நினது திருந்திய மேம்பட்ட நிலைமையை எந்நாளும் காண்போமாக, யாங்கள்; மேற்றிசைக்கண் பொன்படுகின்ற நெடிய குடக மலைக்கண்ணே முகிலின்கண் இடியேறு முழங்கிற் பூப்பரந்த புது நீரையுடைய காவிரி உலகத்தைப் பாதுகாக்கும் குளிர்ந்த புனற்பக்கத்தையுடைய எம் ஊரிடத்தின்கண் உண்ணப்படுவனவற்றை உண்டும் தின்னப்படுவன வற்றைத் தின்றும் ஏறப்படுவனவற்றை யேறியும் கொண்டாடுவே மாகப் போவேன், யான்; போகாது, மழை தலையெடுப்ப உயர்ந்த நெடிய பக்கவரைகளையுடைத்தாய் மூங்கில் வளரும் இமயமலைபோல நிலைபெறுவாயாக, நீ நிலத்தின்மேலே—எ - று.

முதுமுதல்வன் வாய்போகாதென்ற கருத்து : ¶ அப்பெரியோனாலும் எக்காலமும் அத்தியயனம் பண்ணப்படுமென்றதாகக் கொள்க.

'வாய்போகாதொன்றுபுரிந்த' என்பதற்கு மெய்ம்மை நீங்காமல் வீடொன்றையுமே புரிந்தவென்றும், 'பொய்யோராது' என்பதற்குத்

---

* யாகத்தலைவர்கள் யாகஞ்செய்யுங்காலத்துக் கலைமானின் உறுப்புத் தோலைப் போர்த்துக்கொள்ளுதல் மரபு; "கடகரி யுரிவை போர்த்த கண்ணுதற் கடவுண் மாறி, இடம்வல மாகப் பாகத் திறைவியோ டிருந்த வாபோல், உடல்கலை யுறுப்பத் தோலி னொளித் திடப் போர்த்து வேள்விக், கடனினுக் குரிய வெல்லாங் கவினுறச் சாத்தினானே" (வில்லி பாரதம், இராசசூய. 104).

† சாலகம் - ஜாலகம்; இது யாகபத்தினிகள் அணியும் அணி விசேடம்.

‡ யாகங்களுட் சிலவற்றிற் பணிவிடை செய்தற்குப் பத்தினிகள் மூவருக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்பது விதி.

$ காட்டுப்பசு ஆரண்யபசுவென்றும், நாட்டுப்பசு கிராமப் பசுவென்றும் வழங்கப்படும்.

¶ "வேதநாவினர்", "பாடினர் சாம வேதம்", "சாமத்தினிசை வீணை தடவிக் கொண்டார்", "சாமவேத மோதி" (தேவாரம்).

தாம் பொய்ம்மையை விசாரியாதென்றும், 'மூவேழ்துறை' என்பதற்கு இருபத்தொரு கூறுபட்ட தருக்க நூலென்றும், 'ஈரேழின்' என்பதற்குக் காட்டுள் ஏழுநாளும் நாட்டுள் ஏழுநாளுமென்றும், 'கற்பின் வலைசூடி' என்பதற்குக் கற்பினால் வலைசூடி யென்றும் உரைப்பினும் அமையும்.

உரவோர் மருக! பொலியக் கேட்ப வழங்கியும் வேட்டும் பரப்பியும் இவ்வாறு விருந்துற்ற நின் திருந்தேந்துநிலை என்றும் இன்றுபோலக் காண்போமாக, யாமும்; எம்மூரிடத்து உண்டும் தின்றும் ஊர்ந்தும் இவ்வாறு செய்து நீ தந்த பரிசில்கொண்டு கொண்டாடுவேமாகச் செல்வேன்; நீதானும் இமயம்போல நிலைபெறுவாயாகவென முடிக்க.

நன்ருய்ந்த ஒரு முதுநூலெனவும், கற்பையும் நுதலையும் அல்குலையும் சொல்லையும் கூந்தலையுமுடைய துணைவியர் வலைசூடித் தொழில் கேட்பவெனவும், செல்லாது நிலீஇயரெனவும் இயையும்.

மூவேழ்துறையுமென்பதற்கு இருபத்தொரு கூறுபட்ட அருத்த நூலென்பாரும் உளர்.

விருந்தென்றது அதிதிகளை; அன்றி உறுப்புத்தோல் முதலியவற்ருற் புதுமையுற்றவெனினும் அமையும்.

தில் : விழைவின்கண் வந்தது.

'காவிரி பரக்கும்' என்பதூஉம் பாடம்.

(கு - ரை.) 1 - 2. புறநா. 1 : 13, 56 : 1 - 2; "நிமிர்புன் சடையின் முடியாய்", "நீர்பரந்த நிமிர் புன்சடை மேலோர் நிலா வெண்மதி சூடி", "நிமிர் புன்சடை யெம்மிறைவன்", "நிமிர்புன்சடைப் பெருமான்" (தேவாரம்).

2. "முது முதல்வன்" (சிலப். 12 : 'மறைமுதுமுதல்வன்').

13. தொல். தொகை. சூ. 15, ந.; மேற்படி. கிளவி. சூ. 1, ந.; இ. வி. சூ. 75, உரை, மேற்.

16. தொல். தொகை சூ. 15, கிளவி. சூ. 1, ந.; இ - வி. சூ. 75. உரை, மேற்.

21. மு. புறநா. 384 : 17. 22. புறநா. 15 : 20 - 21.

23. புறநா. 160 : 29 - 30, 384 : 16.

22 - 3. தொல். மரபு. சூ. 73, பேர். மேற்.

28. "காவிரி புரக்கு நாடுகிழ வோனே" (பொருந. 248).

26 - 8. "மலைத்தலைய கடற்காவிரி" (பட்டினப். 6); "குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி" (மலைபடு. 527); "குடமலைப் பிறந்த கொழும்பஃ றரமொடு, கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்கும், காவிரி" (சிலப். 10 : 106 - 8).

30 - 31. எண்ணிடைச்சொல் வினைச்சொற்கண் வந்ததற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 45, ந.

32. புறநா. 157 : 8, குறிப்புரை; 368 : 1 - 3.

33 - 34. புறநா. 2 : 20 - 24, குறிப்புரை.

மு. அந்தணன் வேட்டதற்கும் (தொல். புறத்திணை. சூ. 16, இளம்.); அந்தணன் வேட்டதற்கும் ஈதற்கும் (புறத்திணை. சூ. 20, ந.) மேற்கோள். (கசுசு)

(கசுஎ) நீயே, அமர்காணி னமர்கடந்தவர்
படைவிலக்கி யெதிர்நிற்றலின்
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை கட்கின் னாயே
அவரே, நிற்காணிற் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக் கினியர் செவிக்கின் னாரே
அதனா, னீயுமொன் றினியை யவருமொன் றினியர்
ஒவ்வா யாவுள மற்றே வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி
நின்னை வியக்குமிவ் வுலகமஃ
தென்னோ பெரும வுரைத்திசி னெமக்கே.

(பி - ம்.) 1. 'இகவலர்க்காணின்'

திணை - அது; துறை - அரசவாகை.

* ஏனாதி திருக்கிள்ளியைக் கோனாட்டு † எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது.

(இ - ள்.) நீதான், போரைக் காணின் அப்போரை வென்று அப் பகைவரது படையை விலக்கி எதிர்நிற்றலான் வாள் வாய்க்கத் தைத்த வடு அழுந்திய உடம்புடனே கேட்ட செவிக்கு இனியை, கண்ணுக்கு இன்னாய்; பகைவராகிய அவர்தாம், நின்னைக் காணிற் புறந்தருதலாற் புண்ணறியாத உடம்பாகிய வடிவுடனே கண்ணுக்கு இனியர்; செவிக்கு இனியரல்லர்; அதனால், இங்ஙனம் நீயும் ஒன்றினியை; அவரும் ஒன்றினியர்; இனி அவரொவ்வாதன வேறு யாவை யுள; வெல்லும் போரினைச் செய்யும் வீரக் கழலணிந்த திருந்திய அடியினை யும் கடிய செலவினையுடைய குதிரையையுமுடைய கிள்ளி! நின்னை மதித்திருக்கும் இவ்வுலகம்; அதற்குக் காரணம் யாதோ? பெருமானே! எமக்குச் சொல்லுவாய்—எ - று.

---

* "சோழிக வேனாதி தன்முக நோக்கி" (மணி. 22 : 205).

† புதுக்கோட்டையைச் சார்ந்த ஊர்களுள் 'எறிச்சி' என்று வழங்குமூர் இவ்வூர்போலும்; இது கோனாட்டைச் சார்ந்ததே. இதில், பஞ்ச பாண்டவர் சுனையென்று ஐந்து பழைய சுனைகளும் அவற்றின் பக்கத்தில் ஒரு பழைய சிவாலயமும் உள்ளன.

நீ கட்கின்னாயெனப் பழித்ததுபோலப் புகழ்தலும், (தண்டி. சூ. 64) அவர் கட்கினியரெனப் புகழ்ந்ததுபோலப் பழித்தலும் சில அணி தோன்ற நின்றன.

(கு - ரை.) 3. புறநா. 321 : 9.

1 - 3. புறநா. 62 : 1 - 2, 100 : 2, குறிப்புரை.

4. தம் உடம்பிற் பெரிய காயங்கள் பல படும்படி போர் செய்தல் வீரர்களுக்கு இயல்பாதலின் "கட்கின்னாய்" என்றார்.

3 - 7. "காணினும் முருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார், பேணினும் வரந்தர மிடுக்கிலாத தேவரை" (திவ். திருச்சந்த. 69).

(கசுஎ)

(கசுஅ) அருவி யார்க்குங் கழைபயி னனந்தலைக்
கறிவள ரடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கட் கேழ லுழுத பூழி
நன்னாள் வருபத நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாட்புதி துண்மார்
மரையான் கறந்த நுரைகொ டீம்பால்
மான்றடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கே ழிரும்புடை கழாஅ தேற்றிச்
சாந்த விறகி னுவித்த புன்கம்
கூதளங் கவினிய குளவி முன்றிற்
செழுங்கோள் வாழை யகலிலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ கூர்வேல்
நறைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி
வடிநவி லம்பின் வில்லோர் பெரும
கைவள் ளீகைக் கடுமான் கொற்ற
வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய வேத்திப்
பாடுப வென்ப பரிசிலர் நாளும்
ஈயா மன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே.

(பி - ம்.) 12 'கூதுளங்கவினிய'

திணை - பாடாண்டிணை; துறை - பரிசிற்றுறை; இயன்மொழியும், அரசவாகையுமாம்.

பிட்டங்கொற்றனைக் கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார் பாடியது.

(இ - ள்.) அருவி ஒலித்திழியும் வேய் பயின்ற அகன்றவிடத்து மிளகுகொடி வளரும் மலைச்சாரலினிடத்து மலர்ந்த காந்தளினது கொழுவிய கிழங்குபிறழக் கிளறித் தன்னினத்தோடே கூடத் தறு கண்மையையுடைய கேழலுழுத புழுதிக்கண்ணே நல்லநாள் வந்த செவ்வியைப் பார்த்துக் குறவர் அந்நிலமுழாதே அதுவே உழவாக வித்திய பரிய தோகையையுடைய சிறிய தினை முற்பட விளைந்த புதுவருவாயாகிய கதிரை நல்ல நாளின்கண்ணே புதிதுண்ண வேண்டி மரையாவைக் கறந்த நுரை கொண்ட இனிய பாலை மான்தடி புழுக்கப்பட்ட புலால் நாறும் பானையினது நிணந்தோய்ந்த வெளிய நிறத்தினையுடைய பெரிய புறத்தைக் கழுவாதே உலைநீராக வார்த்து ஏற்றிச் சந்தனவிறகான் உவிக்கப்பட்ட சோற்றைக் கூதாளி கவின் பெற்ற மலைமல்லிகை நாறும் முற்றத்து வளவிய குலையையுடைய வாழையினது அகன்ற இலைக் கண்ணே பலருடனே பகுத்துண்ணும் ஊரப்படாத குதிரையென்னும் மலைக்குத் தலைவ! கூரிய வேலையும் நறைக்கொடியின் நாராற் றொடுக்கப்பட்ட வேங்கைப் பூமாலையினையும் வடித்தல் பயின்ற அம்பினையுமுடைய வில்லாட்களுக்குத் தலைவ! கையான் வழங்கும் வள்ளிய கொடையினையும் கடிய குதிரையையு முடைய கொற்ற! உலகத்தெல்லையுள் தமிழ்நாடு கேட்கப் பொய்யாத செவ்விய நா வருந்தும்படி வாழ்த்திப் பாடுவரென்று சொல்லுவர் பரிசிலர், நாடோறும்; கொடாத வேந்தர் நாணக் கெடாது பரந்த நினது வசையில்லாத வாலிய புகழை—எ - று.

கிழவ! பெரும! கொற்ற! பரிசிலர் நின்புகழை ஏத்திப் பாடுப வென்ப; அதனால், யானும் நின்பாற் பரிசில் பெற்றுப் பாடுவேனாக வேண்டுமெனப் பரிசிற்றுறைக்கேற்பக் கூறியதாக்குக.

ஊராக்குதிரை : மலைக்கு வெளிப்படை. நறை - * பச்சிலைக் கொடி.

(கு - ரை.) 2 "கறிவள ரடுக்கத்து" (குறுந். 288); "கறிவளர் சிலம்பில்" (ஐங்குறு. 243; சிலப். 28 : 114); "கறியிவர் சிலம்பின்" (அகநா. 112 : 14); கலித். 52 : 17.

5 - 6. "நாளால், உறையெதிர்ந்து வித்தியவூ ழேனல்" (திணை மாலை. 1).

3 - 6. "கிழங்ககழ் கேழ லுழுத சிலம்பிற், றலைவிளை கானவர் கொய்தனர்" (ஐங்குறு. 270); "கேழ லுழுத கரிபுனக் கொல்லை" (ஐந். எழு. 11).

4 - 8. "உய்யாமன் மலைந்தும ராருயிரை, மெய்யாக விராமன்

* 'பைங்கொடி - பச்சிலைக்கொடி; எல்லாவற்றினும் பசுத்திருத்த லின், பச்சிலை யென்று பெயர் பெற்றது' (முருகு. 190, ந.) என்பது இங்கே அறியற்பாலது.

விருந்திடவே, கையார முகந்துகொ டந்தகனா, ரையாபுதி துண்ட தறிந்திலையோ'' (கம்ப. சடாயுவுயிர். 96).

11. சாந்தவிறகு : புறநா. 108 : 1 - 2. உவித்தல் : புறநா. 395 : 4. புன்கம் : "புன்க மிதவை பொம்மல் போனகம்" (திவாகரம், ஆறாவது).

12. "நாறிதழ்க் குளவியொடு கூதளங் குழைய" (புறநா. 380 : 7); "குல்லை குளவி கூதளங் குவளை" (நற். 376); "குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரை" (குறுந். 60); "குளவியொடு வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்" (முருகு. 191 - 2).

14. ஊராக்குதிரை : புறநா. 158 : 8; குதிரைமலை பிட்டனுக்குரிய தென்பதை, "வசையில் வெம்போர் வானவன் மறவ, னசையின் வாழ் நர்க்கு நன்கலஞ் சுரக்கும், பொய்யா வாய்வாட் புனைகழற் பிட்டன், மைதவ ழுயர்சிமைக் குதிரைக் கவாஅன்" (அகநா. 143 : 10 - 13) என்பதனாலு முணர்க.

11 - 4. "சாந்த ஞெகிழியின், ஊன்புழுக் கயருங் குன்ற நாட" (அகநா. 172 : 12 - 3).

15. நறைநார் - நறைக்கொடியிலிருந்து எடுத்த நார்; "நறைப் பவர்" (நற். 5); "தண்கமழ் நறைக்கொடி கொண்டு" (ஐங்குறு. 276); "நறைநார் வேங்கைக் கண்ணியன்" (அகநா. 282 : 9 - 10).

18. தமிழகம் : பதிற். 2 - ஆம் பத்தின் பதிகம் : சிலப். 3 : 37; மணி. 17 : 62.

19. புறநா. 53 : 11 – 2, 148 : 6 - 7. (கசுஅ)

(கசுகூ) நும்படை செல்லுங் காலை யவர்படை
எடுத்தெறி தானை முன்னரை யெனாஅ
அவர்படை வரூஉங் காலை நும்படைக்
கூழைதாங்கிய வகல்யாற்றுக்
குன்று விலங்கு சிறையி னின்றனை யெனாஅ
அரிதாற் பெருமநின் செவ்வி யென்றும்
பெரிதா லத்தையென் கடும்பின திடும்பை
இன்னே விடுமதி பரிசில் வென்வேல்
இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலின ரெறிந்த வகலிலை முருக்கின்
பெருமரக் கம்பம் போலப்
பொருநர்க் குலையாநின் வலன்வா ழியவே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

அவனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

(இ - ள்.) நும்முடைய படை பகைவர்மேற் போங்காலத்து அவரது படையாகிய வேல் முதலாயவற்றை ஓக்கியெறியும் படைக்கு முன்னே நிற்பை யாகலானும், அவர் படை படர்த்து வருங்காலத்து நும் படையினது அணியைத் தாங்கவேண்டி அகன்ற ஆற்றின்கட் குறுக்கே தடுத்துக் கிடக்கின்ற மலையையொப்ப அதனைத் தடுத்து நின்றாயாதலானும் பெரும! நின்னைக் காணலாங்காலம் பெறுதலரிது, எந்நாளும்; எனது சுற்றத்தினது இடும்பை பெரிதாதலால் நீ இப்பொழுதே எனக்குப் பரிசில் தந்துவிடுவாயாக; வென்றிவேலை யுடைய இளைய பல கோசர் விளங்கிய படைக்கலங்கற்பார் மாறு பட்டராயெறிந்த அகன்ற இலையையுடைய முருக்காகிய பெரிய மரத்தாற் செய்யப்பட்ட தூணமாகிய இலக்கைப்போலப் பொருவார்க் குத் தொலையாத நினது வென்றி வாழ்வதாக—எ - று.

'எனு' என்பன, எண்ணிடைச்சொல்.

'எளிதாலத்தை' என்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 4 - 5. புறநா. 284, 330; "வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத், தொன்னு ரோட்டிய செருப்புகன் மறவர்" (மதுரைக். 725 - 6); "வருவிசைப் புனலைக் கற்சிறை போல, ஒருவன் றாங்கிய பெருமையானும்" (தொல். புறத்திணை, சூ. 8); "பொருபடையுட் கற்சிறைபோன், றொருவன் றாங்கிய நிலையுரைத்தன்று" (பு. வெ. 54).

8. புறநா. 136 : 24. 6 - 8. புறநா. 139 : 6 - 15.

9. "கோசர் - ஒருவகை வீரர்; புறநா. 283, 396; "நாலூர்க் கோசர் நன்மொழி", "ஒன்று மொழிக் கோசர்" (குறுந். 15, 73); "மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்", "வடுவுடை முகத்தர், கடுங்கட்கோசர்", "காப்புக்கை நிறுத்த பல்வேற் கோசர்", "ஒன்று மொழிக் கோசர்", "வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை, வளங்கெழு கோசர்", "பல்லிளங் கோசர்", "புனைதேர்க் கோசர்", "ஊர்முது கோசர்" (அகநா. 15, 90, 113, 196, 205, 216, 251, 262); "அவையகம் விளங்க, நான்மொழிக் கோசர்", "கடந்தடு வாய்வா ளிளம்பல் கோசர்" (மதுரைக். 508 - 9, 773); "கொங்கிளங் கோசர் - குறும்பு செலுத்துவார் சிலவீரர்" (சிலப். உரைபெறு. 2, அரும்பத.) என்பவை இங்கே அறியற்பாலன.

10. முருக்கு - முள்ளு முருங்கை.

9 - 11. புறநா. 4 : 6, குறிப்புரை.; சீவக. 995, ந. (கசுகூ)

(களo) மரைபிரித் துண்ட நெல்லி வேலிப்
பரலுடை முன்றி லங்குடிச் சீறூர்
எல்லடிப் படுத்த கல்லாக் காட்சி
வில்லுழு துண்மார் நாப்ப ணொல்லென

இழிபிறப் பாளன் கருங்கை சிவப்ப
வலிதுரந்து சிலைக்கும் வன்கட் கடுந்துடி
புலிதுஞ்சு நெடுவரைக் குடிஞையோ டிரட்டும்
மலைகெழு நாடன் கூர்வேற் பிட்டற்
குறுக லோம்புமின் றெவ்விர வனே
சிறுகண் யானை வெண்கோடு பயந்த
ஒளிதிகழ் முத்தம் விறலியர்க் கீத்து
நார்பிழிக் கொண்ட வெங்கட் டேறல்
பண்ணமை நல்யாழ்ப் பாண்கடும் பருத்தி
நசைவர்க்கு மென்மை யல்லது பகைவர்க்
கிரும்புபயன் படுக்குங் கருங்கைக் கொல்லன்
விசைத்தெறி கூடமொடு பொரூஉம்
உலைக்கல் லன்ன வல்லா ளன்னே.

திணை - வாகை; துறை - வல்லாண்முல்லை; தானைமறமுமாம்.
அவனை உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடியது.

வல்லாண் முல்லையாவது :—

"இல்லும் பதியு மியல்புங் கூறி
நல்லாண் மையை நலமிகுத் தன்று". (பு. வெ. 177)

(இ - ள்.) மரையாவாற் பிரித்துண்ணப்பட்ட நெல்லியாகிய வேலியையுடைத்தாய் அதனது விதையாகிய பாலுடைத்தாகிய முற்றத்தினையுடைய அழகிய குடியையுடைய சிறிய ஊரின்கட் பகற்பொழுதெல்லாம் வேட்டையாடித் திரிந்த கல்வியில்லாத காட்சியையுடைய வில்லாகிய ஏரால் உழுதுண்பாருடைய நடுவே ஓசையையுடைத்தாக இழிந்த பிறப்பினையுடைய புலையன் தனது வலிய கை சிவப்ப வலியான் முடுக்கிக் கொட்டும் வலிய கண்ணையுடைய அச்சத்தைச் செய்யும் துடி புலி கிடக்கும் நெடிய மலையின்கட் பேராந்தையோடுகூடி யொலிக்கும் மலைபொருந்திய நாட்டையுடையனாகிய கூரிய வேலையுடைய பிட்டனை அணுகுதலைப் பாதுகாமின் பகைவீர்! அவன்றான் சிறுகண்ணையுடைய யானையினது வெளிய கோடு தரப்பட்ட ஒளிவிளங்கு முத்தத்தை விறலியருக்குக் கொடுத்து நாரைப் பிழிந்து கொள்ளப்பட்ட விரும்பத்தக்க * கள்ளாகிய தெளிவைப் பண் பொருந்தின நல்ல யாழினையுடைய பாணர் சுற்றத்தை நுகர்வித்து இவ்வாறு தன்பாற் பரிசில் நச்சி வந்தோர்க்கு மெல்லியனாயிருத்தலல்லது பகைவர்க்கு இரும்பைப் பயன்

* புறநா. 224 : 1 - 4.

படுத்துகின்ற வலிய கையையுடைய கொல்லன் விசைத்தடிக்கப்பட்ட கூடத்தோடே யேற்று மாறுபடும் உலையிடத்து அடைகல் போலும் வலிய ஆண்மையை யுடையன்—எ - று.

பிட்டன் நசைவர்க்கு மென்மையல்லது பகைவர்க்குக் கல்லன்ன வல்லாளனாதலால், தெவ்விர்! அவனைக் குறுகலோம்புமினெனக் கூட்டுக.

வலிதுரந்தென்பதற்கு மாற்றார் வலியைக் கெடுத்தெனினும் அமையும்.

நார்பிழிக் கொண்ட வென்பதற்குக் *கோதைப் பிழிந்துகொண்ட வெனினும் அமையும்.

(கு - ரை.) 1. மரை - மரையா; ஒருவகை விலங்கு; 'மரையா மரல்கவர' (கலித். 6).

1 - 2. நெல்லிக்காயை மரையா உண்ணும்; "நெல்லி, மரையின மாருமுன்றிற், புல்வேய் குரம்பை நல்லோ ளூரே", "புரிமட மரையான் கருநரை நல்லேறு, தீம்புளி நெல்லி மாந்தி" (குறுந். 235, 317); "புல்லிலைப், பராரை நெல்லி யம்புளித் திரள்காய், கான மடமரைக் கணநிரை கவரும்", "பளிங்கி னன்ன தோற்றப், பல்கோ ணெல்லிப் பைங்கா யருந்தி, மெல்கிடு கவுள மடமரை யோர்க்கும்" (அகநா. 69, 399).

4. புறநா. 331 : 2; "வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்", "வானம் வேண்டா வில்லே ருழவர்" (அகநா. 35, 193); "வில்லேருழவர் பகை கொளினும்" (குறள், 872).

6 - 7. புறநா. 370 : 6; "துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்து" (பொருந. 210); "ஆகுளி கடுப்பக், குடிஞை யிரட்டு நெடுமலை" (மலை படு. 140 - 41); "உருடுடி மகுளியிற் பொருடெரிந் திசைக்கும், கடுங் குரற் குடிஞைய நெடும்பெருங் குன்றம்" (அகநா. 19 : 4 - 5).

8. பிட்டன் : புறநா. 172 : 8; அகநா. 77, 143.

10 - 11. யானைக்கோடு முத்தம் பயத்தல் : புறநா. 161 : 16 - 17; "முத்துடை மருப்பில் மழகளிறு பிளிற" (பதிற். 32); "பெருங்களிற்று முத்துடை வான்கோடு" (முருகு. 304 - 5); "யானை, முத்தார் மருப்பு" (குறிஞ்சிப். 35-6); "யானை, முத்துடை மருப்பின்" (மலைபடு. 517 - 8).

12. புறநா. 232 : 3, 367 : 7; "நாரரி நறவம்" (பரி. 6 : 49); "நாரரி நறவுண் டிருந்த தந்தைக்கு", "பன்மீன் கொள்பவர் முகந்த விப்பி, நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்" (அகநா. 216, 296).

13. பண்ணமை நல்யாழ் : புறநா. 164 : 11.

12 - 3. புறநா. 160 : 10 - 11. 17. உலைக்கல் : குறுந். 12.

14 - 7. புறநா. 109 : 11 - 8, 178 : 6 - 11.

16. கூடம் - சம்மட்டி. (கள０)

* புறநா. 114 : 4.

(களக) இன்று செலினுந் தருமே சிறுவரை
நின்று செலினுந் தருமே பின்னும்
முன்னே தந்தனெ னென்னாது துன்னி
வைகலுஞ் செலினும் பொய்யல னாகி
யாம்வேண்டி யாங்கெம் வறுங்கல நிறைப்போன்
தான்வேண்டி யாங்குத் தன்னிறை யுவப்ப
அருந்தொழின் முடியரோ திருந்துவேற் கொற்றன்
இனமலி கதச்சேக் களனொடு வேண்டினும்
களமலி நெல்லின் குப்பை வேண்டினும்
அருங்கலங் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை
பிறர்க்கு மன்ன வறத்தகை யன்னே
அன்னா னாகலி னெந்தை யுள்ளடி
முள்ளு நோவ வுறற்க தில்ல
ஈவோ ரரியவிவ் வுலகத்து
வாழ்வோர் வாழவவன் றாள்வா ழியவே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

அவனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

(இ - ள்.) இன்று போகினும் தருவன்; சிறிதுநாட் கழித்துப் போகினும் தருவன்; பின்னையும் முன்னே தந்தேனென்னாது பயின்று நாடோறும் செலினும் பொய்யானாகி யாம் வேண்டினபடியே எம்முடைய வறிய கலத்தை நிரப்புவோன்; தான் விரும்பினபடியே தன்னுடைய அரசன் உவப்பச் செய்தற்கரிய போர்த் தொழில்களை முடிப்பானாக, திருந்திய வேலையுடைய கொற்றன்; இனமாகிய மிக்க வெவ்விய சேக்களைத் தொழுவோடே (கொட்டிலோடே) வேண்டினும், களத்தின்கண் மலிந்த நெல்லின் குவையை வேண்டினும் பெறுதற்கரிய அணிகலங்களைக் களிற்றுடனே வேண்டினும், பெரிய தகைமையையுடையான், பிறர்க்கும் அத்தன்மைய அறஞ்செய்யுங் கூற்றையுடையான்; அத்தன்மையனாதலால், எம்முடைய இறைவனது உள்ளடிக்கண் முள்ளும் உளப்பட நோவச் சென்று உறு தொழிய வேண்டும்; ஈவோர் அரிதாகிய இவ்வுலகத்தின்கண் உயிர் வாழ்வோர் வாழும் பரிசு அவனது தாள் வாழ்வதாக—எ - று.

பிறர்க்குமென்பது, எச்சம். தில் : விழைவின்கண் வந்தது.

திருந்துவேற் கொற்றன், பெருந்தகை, சேக் களனொடு வேண்டினும், நெல்லின் குப்பை வேண்டினும், அருங்கலம் களிற்றொடு வேண்டினும் நமக்கே யன்றிப் பிறர்க்கும் அத்தன்மைய அறஞ் செய்யும் தகுதியையுடையன்; யாம் வேண்டியாங்கு எம் வறுங்கலம் நிறைப்போன்; தான் வேண்டியாங்குத் தன் இறை உவப்ப அருந்

தொழில் முடிப்பானாக வேண்டுவது; எந்தை உள்ளடி முள்ளும் நோவவுறாற்க; வாழ்வோர் வாழ அவன் தாள் வாழியவெனக் கூட்டுக.

'வாழ்வோர் வாழ்வு' என்றோதி, வாழ்வோர் வாழும் வாழ்வெல்லாம் அவன் தாள் வாழ்கவென் றுரைப்பினும் அமையும்.

தாளை முயற்சியெனினும் அமையும்.

(கு - ரை.) 1 - 5. புறநா. 142 : 5.

1 - 7. புறநா. 42 : 1, 101 : 1 - 3, 180 : 1 - 7, 203 : 1 - 6.

8. சே - காளைகள்.

10. புறநா. 151 : 3 - 4, 153 : 2.

12 - 3. 'உள்ளங்காலில் முள்ளுத் தையாமலிருக்க வேண்டும்' என்பது ஒரு பழமொழி.

15. புறநா. 70 : 19, குறிப்புரை; 382, 386.

மு. 'இன்று செலினும்...தாள்வாழியவே; இது படர்க்கையாகிய இயன்மொழி வாழ்த்து, (தொல். புறத்திணை. சூ. 55, ந.). (களக)

(களஉ) ஏற்றுக வுலையே யாக்குக சோறே
கள்ளுங் குறைபட லோம்புக வொள்ளிழைப்
பாடுவல் விறலியர் கோதையும் புனைக
அன்னவை பிறவுஞ் செய்க வென்னதூஉம்
பரியல் வேண்டா வருபத நாடி
ஐவனங் காவலர் பெய்தீ நந்தின்
ஒளிதிகழ் திருந்துமணி நளியிரு ளகற்றும்
வன்புல நாடன் வயமான் பிட்டன்
ஆரமர் கடக்கும் வேலு மவனிறை
மாவள் ளீகைக் கோதையும்
மாறுகொண் மன்னரும் வாழியர் நெடிதே.

திணையும் துறையும் அவை.

அவனை வடமவண்ணக்கன் தாமோதரனார் பாடியது.

(இ - ள்.) உலையை ஏற்றுக; சோற்றை ஆக்குக; மதுவையும் நிறைய உண்டாக்குக; விளங்கிய அணிகலத்தையுடைய பாடுதல் வல்ல விறலியர்! மாலையுஞ் சூடுக; அத்தன்மையன மற்றும் செய்க; சிறிதும் இரங்குதல் வேண்டா; மேல் வரக்கடவ உணவை ஆராய்ந்து ஐவன நெல்லைக் காப்பார் காவற்கிடப்பட்ட தீ அவ்விடத்துக் கெட்ட காலத்து ஒளி விளங்கும் திருந்தின மாணிக்கம் செறிந்த இருளைத் துரக்கும் வலிய நிலமாகிய மலைநாட்டையுடையவன், வலிய குதிரையை

யுடைய பிட்டன் : பொருதற்கரிய போரை வெல்லும் அவன் தலைவனாகிய பெரிய வள்ளிய கொடையையுடைய கோதையும் அவனோடு பகைத்த வேந்தரும் நெடிது வாழ்க—எ - று.

பிட்டன்வேலும் கோதையும் மாறுகொள் மன்னரும் நெடிது வாழியர்; அதுவே வேண்டுவது; மேல்வரும் உணவைத் தேடி என்னதூஉம் பரியல் வேண்டா; ஆதலால், ஏற்றுக; ஆக்குக; ஓம்புக; கோதையும் புனைக; பிறவும் செய்கவென மாறிக் கூட்டுக.

மாறுகொண் மன்னரும் வாழியரென்ற கருத்து : இவன் வென்று திறைகொள்வது அவருளராயினென்பதாம்.

விறலியரென்பது, ஈண்டு முன்னிலைக்கண் வந்தது.

வேண்டா வென்பது வினைமேனின்றதொரு முற்றுச் சொல்.

அன்னவை பிறவுமென்பது பூசுவன உடுப்பன பூண்பன முதலாயினவற்றை.

வருவது நாடி யென்றோதி, ஐவனத்துக்கு வரும் இடையூறு நாடி யென்று அதனைக் காவலென்பதனான் முடிப்பினும் அமையும்.

(கு - ரை.) 2 - 3. புறநா. 11 : 11 - 3.

6 - 8. கலித். 45 : 1.

7. மணி இருளைப் போக்குமென்பதை, “இருள்பருகுமணி” (சீவக. 169) என்பதன் உரையாலும் உணர்க.

8 - 10. பிட்டன் - சேரனுடைய வீரன்; புறநா. 170 : 8; “வானவன் மறவன் வணங்குவிற் றடக்கை, யானா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்”, “வானவன் மறவ, னசையின் வாழ்நர்க்கு நன்கலஞ் சுரக்கும், பொய்யா வாய்வாட் புனைகழற் பிட்டன்” (அகநா. 77 : 15 - 6, 143 : 10 - 12).

9. “கைவண் செழிய னாலங் கானத், தமர்கடந் துயர்த்த வேல்” (அகநா. 175 : 10 - 12).

10. “வான நாண வரையாது சென்றோர்க், கானா தீயுங் கவிகை வண்மைக், கடுமான் கோதை” (புறநா. 54 : 6 - 8).

9 - 10. “வானவன் மறவன் வணங்குவிற் றடக்கை, ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன், பொருந்தா மன்ன ரருஞ்சமத் துயர்த்த, திருந்திலை யெஃகம் போல” (அகநா. 77 : 15 - 8). (கஎஉ)

(கஎங) யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி

முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டுங் கண்டும்
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே.

(பி - ம்.) 8 'வீற்றுவீற்'

திணையும் துறையும் அவை.

சிறுகுடிகிழான் பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாடியது.

(இ - ள்.) யான் உயிர் வாழும் நாளையும் பெற்றுப் பண்ணன் வாழ்வானாக; பாணரே! காண்பீராக, இந்தப் பரிசிலனது சுற்றத்தின் வறுமையை. புது வருவாயை யுடைத்தாகிப் பழுத்த மரத்தின் கண்ணே புள்ளினம் ஒலித்தாற் போன்ற ஊணொலியுண்டாகிய ஆரவாரந் தானும் கேட்கும்; காலம் தப்பாத மழை பெய்யுங்காலத்தைப் பார்த்துத் தம் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்தினையடையும் மிகச் சிறிய எறும்பினது சிலவாகிய ஒழுக்கத்தை யொப்பச் சோறுடைக் கையின ராய் வேறு வேறு போகின்ற பெரிய சுற்றத்தோடும் கூடிய பிள்ளை களைக் காண்பேம்; கண்டுவைத்தும் எம் பசி வருத்தத்தானும் வழிவரல் வருத்தத்தானும் பின்னரும் பின்னரும் விதுப்புற்று (மனத்தின் விரைவுற்று)க் கேளாநின்றேம், தெளிய. பசி நோய் தீர்க்கும் மருத்து வனது மனை அணித்தோ? தூரிதோ? எங்களுக்கு நீர் சொல்லுமின்— எ - று.

காண்க இவனென்பது, காண்கிவன் எனக் கடைக்குறைந்து நின்றது. தானென்பது அசைநிலை.

இது, பரிசில்பெறப் போகின்றான் வருகின்றவரைக் கண்டு வினவு வான் பண்ணனது இயல்பு கூறி வாழ்த்தியவாறு

இனி, பரிசிலன்றான், 'அரவமுங் கேட்கும்; சிறாரைக் காண்டும்; கண்டும் மற்றும் மற்றும் வினவுதும்; நீர் எமக்குப் பசிப்பிணி மருத்துவ னில்லம் அணித்தோ சேய்த்தோ கூறுமின்' என்றுநின்றான்; இவன் கடும்பினது இடும்பையைப் பாணர் காண்க; இங்ஙனம் எம்போலும் இரவலர் வறுமையைத் தீர்க்கின்ற பண்ணன் வாழியவென்று பெறப் போகின்றானைக் கண்டு பெற்று வருகின்றான் பக்கப்பாணரை நோக்கிக் கூறியதாக உரைப்பினும் அமையும். இதற்கு என்றுநின்றானென ஒரு சொல் வருவித்து உரைக்கப்பட்டது.

அன்றியும், பரிசிற்குச் செல்கின்றான், பசிப்பிணி மருத்துவ னில்லம் அணித்தோ சேய்த்தோவென்று பலகாலும் வினவ, அதனை உட் கொண்டு ஊணொலி யரவமுங் கேட்கும்; இருங்கிளைச் சிறார்க்

காண்டும்; கண்டும் மற்றும் மற்றும் வினவுதுமெனச் சாதியொருமையா லுளப்படுத்திக் கூறிப் பின்பு இங்ஙனம் காணவும் கேட்கவும் படுவது நுமக்கு ஏற அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கென்று அவரை நோக்கிக் கூறி, பின்பு இங்ஙனம் என் வறுமையும் தீர்த்து இவன் வறுமையுந் தீர்க்கவிருக்கின்ற பண்ணன் யான் வாழுநாளும் பெற்று வாழ்கவெனப் பரிசில் பெற்று வருகின்றான் தன் பக்கப்பாணரை நோக்கிக் கூறியவாறாக உரைப்பாரும் உளர்.

இனி, செல்கின்றான் பக்கப்பாணருள் ஒருவன் ஆண்டு நிற்கின்ற பாணன் பக்கப்பாணரை நோக்கிக் கூறியதாக உரைப்பாரும் உளர்.

ஈண்டும் இவனென்றது பரிசிலனை.

'மற்று மற்றும் வினவுந் தெற்றென' என்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 1. "மைந்தநீ கோடி யெங்கள் வாழ்க்கைநாள் யாவு மென்பார்" (கம்ப. கைகேசி சூழ்வினை. 88).

பண்ணன் : புறநா. 70 : 13, 181 : 6, 388 : 10.

வாழிய : வாழ்த்துதற் பொருண்மைக்கண் வந்த யகரவீற்று வியங்கோள் வினைமுற்றிற்கு மேற்கோள்; நன். சூ. 337, மயிலை; இ. வி. சூ. 239, உரை.

4. ஊனொலியரவம் : புறநா. 334 : 7; மணி. 17 : 97; "முட்டாது நடாஅ மட்டூண் கம்பலும்" (பெருங். 2. 2 : 87); "அட்டூண் டுழனி" (நன். சூ. 211, சங்கர. மேற்.).

3 - 4. புறநா. 47 : 1, 370 : 11.

5 - 7. கருத்து : 'இனித் தெளிவு என்பது, எறும்பு முட்டை கொண்டு தெற்றியேறின் மழை பெய்தது மழை பெய்யு மென்பது' (தொல். வினை. சூ. 45, இளம்.); 'எறும்பு முட்டைகொண்டு தெற்றி யேறின் மழைபெய்தல் நூலாற்றெளிந்தான் அவை முட்டைகொண்டு தெற்றி யேறியவழி மழை பெய்யாமுன்னும் மழை பெய்தது, மழை பெய்யும் என்னும்; ஆண்டு எதிர்காலத்திற்குரிய பொருள் இறந்தாலத் தானும் நிகழ்காலத்தானும் தோன்றியவாறு கண்டுகொள்க', 'எறும்பு முட்டைகொண்டு திட்டை யேறியது கண்டுழி மழை பெய்வதா மென்றது மழைபெய்தது பெய்கின்றதெனக் கூறுதல் தெளிவு' (தொல். வினை. சூ. 48, சே; கல்; ந; நன். சூ. 383, மயிலை; நன். வி. சூ. 384).

11. "பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர், இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது", "பசிப்பிணி மருந்து" (மணி. 11 : 80, 81, 28 : 217).

12. வினைக்குறிப்புச்சொல், பிறிதின் கிழமையாகிய உடைமைப் பொருள்பட நிற்றற்கு மேற்கோள்; தொல். வினை. சூ. 23, சே; கல்; ந.

(கஎங)

(களச) அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணா
திருள்கண் கெடுத்த பருதி ஞாலத்
திடும்பைகொள் பருவர றீரக் கடுந்திறல்
அஞ்சன வுருவன் றந்து நிறுத்தாங்
கரசிழந் திருந்த வல்லற் காலை
முரசெழுந் திரங்கு முற்றமொடு கரைபொரு
திரங்குபுன னெரிதரு மிகுபெருங் காவிரி
மல்ல னன்னாட் டல்ல றீரப்
பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணி நெடுவரை யாங்க ணொய்யெனச்
செருப்புகன் மறவர் செல்புறங் கண்ட
எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
அருவழி யிருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடை காட்டி யக்குடை
புதுமையி னிறுத்த புகழ்மேம் படுந
விடர்ப்புலி பொறித்த கோட்டைச் சுடர்ப்பூட்
சுரும்பார் கண்ணிப் பெரும்பெயர் நும்முன்
ஈண்டுச்செய் நல்வினை யாண்டுச்சென் றுணீஇயர்
உயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தன னாகலின்
ஆறுகொன் மருங்கின் மாதிரந் துழவும்
கவலை நெஞ்சத் தவலந் தீர
நீதோன் றினையே நிரைத்தா ரண்ணல்
கல்கண் பொடியக் கானம் வெம்ப
மல்குநீர் வரைப்பிற் கயம்பல வுணங்கக்
கோடை நீடிய பைதறு காலை
இருநில நெளிய வீண்டி
உருமுரறு கருவிய மழைபொழிந் தாங்கே.

(பி - ம்.) 5 'அஞ்சன வண்ணன்'

திணை - வாகை; துறை - அரசவாகை.

மலையமான் சோழியவேனாதி திருக்கண்ணனைப் (பி - ம். திருக்கிள்ளியை) மாறோக்கத்து நப்பசலையார் பாடியது.

(இ - ள்.) பிறரை வருத்தும் அச்சத்தினையுடைய அசுரர்திரள் கொண்டுபோய் மறைத்தார்களாக, சேய்மைக்கண்ணே விளங்காநின்ற தலைமையினையுடைய ஞாயிற்றைக் காணாமையால் இருளானது உலகத்தாரது கண்ணை மறைத்த வட்டமாகிய உலகத்தினது நோய்

கொண்ட துன்பம் நீங்கும் பரிசு மிக்க வலியையுடைய அஞ்சனம் போலும் நிறத்தையுடைய திருமேனியையுடைய கண்ணன் அந்த ஞாயிற்றைக்கொண்டு வந்து இவ்வுலகத்தின்கண் அந்தகாரம் நீங்கும் பரிசு ஆகாயத்தின் கண்ணே நிறுத்தினாற்போலப் பகைவேந்தரொடு பொருது உடைந்து போதலால் தம் வேந்தனை இழந்துழலும் இன்னாமையையுடைய பொழுதின்கண் முரசு கிளர்ந்து முழங்கும் சென்றுவெளியையுடைய கோயிலுடனே கரையைப் பொருது முழங்கும் நீராலே உடைந்து ஆழ்ந்தோடுகின்ற மிக்க பெரிய காவிரியையுடைய வளவிய நல்ல நாட்டினது துயரங்கெடப் பொய்யாத நாவினையுடைய கபிலனாற் பாடப்பட்ட முகிலணிந்த பெரிய மலையிடத்து விரையப் போரை விரும்புமறவர் ஓடும் புறங்கண்ட இகழ்ச்சியற்ற தலைமையினையுடைய முள்ளூரின் மலையுச்சியின்கண் பிறராற் காண்டற்கு அரிய இடத்தின்கண் இருந்த பெரிய வென்றியையுடைய சோழனது திங்கள் போலும் வெண்குடையைத் தோற்றுவித்து அக் குடையைப் புதுமையுண்டாக நிலைபெறுவித்த புகழ் மேம்படுந! வரை முழைஞ்சில் வாழும் புலியை யெழுதப்பட்ட இலாஞ்சனையையுடைய கோட்டையையும் விளங்குதலையுடைய அணிகலத்தினையும் வண்டார்க் கப்பட்ட கண்ணியையும் பெரிய புகழினையுமுடைய நும்முன்னாகிய தந்தை இவ்வுலகத்துச் செய்யப்பட்ட நல்ல அறத்தின் பயனை ஆண் டாகிய தெய்வலோகத்துப் போய் நுகரவேண்டிப் போனாதலின், நல்ல நெறியைக் கொன்ற பக்கத்தினையுடைய திசையெங்குஞ் சூழ்வரும் கவலையுற்ற மனத்தின்கண் வருத்தங்கெட நீ வந்து தோன்றினாய்; இணைந்த மாலையையுடைய தலைவ! மலையிடம்பொடியக் காடு தீமிக மிக்க நீரெல்லையையுடைய நீர்நிலைகள் பலவும் முளிய இவ்வாறு கோடை நீடப்பட்ட பசுமையற்ற காலத்துப் பெரிய நிலங்குழியும் பரிசு திரண்டு உருமேறு முழங்கும் மின் முதலாயின தொகுதியையுடைய மழை சொரிந்தாற்போல— எ - று.

முற்றமென்றது, அதனையுடைய கோயிலை.

வெளிமுற்றமொடு வெண்குடை காட்டியென இயைப்பினும் அமையும்.

கோட்டைவெளியாகிய சுடர்ப்பூணென்றுமாம்.

ஞாயிற்றை அஞ்சனவுருவன் தந்து நிறுத்தாங்கு முற்றமொடு நாட்டு அல்லல் தீர வளவன் வெண்குடை காட்டி அக்குடை நிறுத்த புகழ் மேம்படுந! நிரைத்நாரண்ணல்! நும்முன் பெயர்ந்தனனாகலின், நெஞ்சத்து அவலந் தீரப் பைதறு காலை மழைபொழிந்தாங்கு நீ தோன்றினை; ஆதலால், இவ்வுலகத்திற்குக் குறை என்னையெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

அவுணர் கணங்கொண்டொளித்தென ஞாயிறு காணாத பருவரல் தீர அஞ்சனவுருவன் தந்து நிறுத்தாங்கென்பது, தேவர்களும் அசுரர்

களும் பொருவழிப் பகலும் இராப்போல இயங்கித் தாம் போர்செய்தற் பொருட்டு அசுரர் ஞாயிற்றைக் கரந்தார்கள்; ஞாலம் அதனால் உள்ள பருவரல் தீரத் திருமால் அதைக் கொண்டுவந்துவிட்டதொரு கதை.

'விடர்ப்புலி பொறித்த கோட்டை' என்றதனால், சோழனொடு தொடர்புபட்டு † அவனுக்குத் துப்பாதல் தோன்றிநின்றது.

'ஆறுகொண் மருங்கின்' என்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 6. "அரசுகெடுத் தலம்வரு மல்லற் காலை" (சிலப். 4 : 8, 27 : 132).

7. "வள்வார் முரசங் கறங்கும்மணி முன்றில் வேந்தன்" (நைடதம், அன்னத்தைத் தூது. 64).

10. "பொய்யாச் செந்நா" (புறநா. 168 : 19); "மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவி, னுவலை கூராக் கவலையி னெஞ்சி, னனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்" (பதிற். 85).

11. "மைபடு மால்வரை" (நற். 373); "மைபடு மாமலை" (அகநா. 153).

12. செருப்புகன் மறவர் : புறநா. 31 : 9, குறிப்புரை.; "செரு வேட்டுச் சிலைக்குஞ் செங்க ணாடவர்" (அகநா. 157); "ஒன்னா ரோட்டிய செருப்புகன் மறவர்" (மதுரைக். 726).

10 - 13. முள்ளூர்மலை மலையனுடையதென்பதும் அதனைக் கபிலர் பாடியதும் இந்நூல் 123-ஆம் பாடல் முதலியவற்றாலும் விளங்கும்.

15. புறநா. 3 : 1; "மதிமருள் வெண்குடை மன்னவன்", "மதி மருள் வெண்குடை மன்ன" (மணி. 4 : 27, 22 : 194); "மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத், தலைமிசைக் கொண்ட குடையர்" (நாலடி. 21).

19 - 20. புறநா. 38 : 12 - 6; "ஈண்டுச் செய்வினை யாண்டு நுகர்ந்திருத்தல், காண்டகு சிறப்பினுங் கடவுள ரல்லது" (மணி. 14 : 38 - 9); "புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கமென்னுமீ தருமறைப் பொருளே" (கம்ப. நகர. 5).

20 - 23. "சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோ, ரிளவள ஞாயிறு தோன்றிய தென்ன, நீயோ தோன்றினை" (மணி. 10 : 10 - 12).

25 - 6. "உருகெழு மண்டிலங், கயங்கண் வறப்பப் பாஅய் நன்னிலம், பயங்கெடத் திருகிய பைதறு காலை" (அகநா. 263).

28. புறநா. 161 : 4.

23 - 8. 160 : 1 - 3. (கஎச)

ஏறுதி : கலித். 81 : 18.

---

† "மூவரு ளொருவன் றுப்பா கியரென, வேத்தினர் தரூஉங் கூழே" (புறநா. 122 : 5 - 6).

(கஎ௫) எந்தை வாழி யாத னுங்கவென்
நெஞ்சந் திறப்போர் நிற்காண் குவரே
நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென் வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக விடைகழி யறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புர வெதிர்ந்த வறத்துறை நின்னே.

(பி -ம்.) 6 'கொடித்தே ரோரியர்'

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடியது.

(இ - ள்.) என்னுடைய இறைவ! வாழ்வாயாக; ஆதனுங்க! யான் ஒன்றைச் சொல்ல நினைப்பின், நினது புகழல்லது சொல்லாமையான், எனது நெஞ்சை வெளிப்படுத்திக் காணலுறுவோர் ஆங்கு நின்னைக் காணுநிற்பர்; நின்னையுடைய யான் நின்னை மறப்பின் மறக்குங் காலமாவது சொல்லக் கேட்பாயாக; என்னுடைய உயிரானது என்னுடம்பை விட்டு நீங்குங் காலத்தும் என்னை யான் மறக்குங் காலம் உண்டாயின் அப்பொழுது மறப்பேனல்லது மறவேன். வென்றி வேலையுடைய விசும்பைத் தோயும் நெடிய குடையினையும் கொடியணிந்த தேரினையுமுடைய நிலமுழுதும் ஆண்ட வேந்தரது திண்ணிய ஆர் சூழ்ந்த சக்கரம் இயங்குதற்குக் குறைக்கப்பட்ட வெள்ளிமலைக்கு அப்பாலாகிய உலகத்திற்குக் கழியும் இடைகழியாகிய அற்றவாயின் கண் தேவர்களால் நிறுத்தப்பட்டு இருபொழுதும் ஒரு பெற்றியே நிலை பெற்று விளங்கும் பரந்த இடத்தையுடைய ஆதித்தமண்டிலத்தை யொப்ப நாள்தோறும் இரவு பகலென்னாமல் பலரையும் காத்தலை ஏற்றுக் கொண்டு ஒரு பெற்றியே விளங்கிய அறத்துறையாகிய நின்னை— எ - று.

எந்தை! வாழி; ஆதனுங்கனே! மண்டிலத்தன்ன அறத்துறை நின்னை நின்னுடையேனாகிய யான் மறப்பின் மறக்குங் காலமாவது என்? யான் மறப்பின் மறக்குவென்; ஆதலால், என்னெஞ்சைத் திறப்போர் நிற்காண்குவரெனக் கூட்டி வினைமுடிக்க.

மோரியராவார் சக்கரவாள சக்கரவர்த்திகள்; விச்சாதரரும் நாகரு மென்ப.

'திகிரி திரிதரக் குறைந்த' என்றோதி, சக்கரவாளத்திற்கு அப்பாற் பட்ட உலகத்து மோரியர் திகிரி ஊடறுத்துச் சேறலிற் குறைந்த பிளவு

பட்ட வாயிற்கு அப்பாலாகிய உதயகிரிக்கண் நிலைபெற்ற ஆதித்த மண்டலமென்று உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 1. ஆதனுங்கன் : (புறநா. 389 : 13).

6. ஓரியர் என்ற பெயர் இந்நூலிலன்றி வேறெங்கும் காணப்படவில்லை.

8. "உலக விடைகழி யொருங்குட னீங்கி" (சிலப். 10 : 27).

6 - 8. "விண்பொரு நெடுங்குடை யியறேர் மோரியர், பொன் புனை திகிரி திரிதரக் குறைத்த, அறை", "வம்ப மோரியர், புனைதேர் நேமி யுருளிய குறைத்த, விலங்குவெள் ளருவிய வரை", "மோரியர், தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு, விண்ணுற வோங்கிய பனி யிருங் குன்றத், தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த வறை" (அகநா. 69, 251, 281). (கரு)

(கசு) ஓரை யாயத் தொண்டொடி மகளிர்
கேழ லுழுத விருஞ்சேறு கிளைப்பின்
யாமை யீன்ற புலவுநாறு முட்டையைத்
தேனா றாம்பற் கிழங்கொடு பெறூஉம்
இழுமென வொலிக்கும் புனலம் புதவிற்
பெருமா விலங்கைத் தலைவன் சீறியாழ்
இல்லோர் சொன்மலை நல்லியக் கோடனை
உடையை வாழியெற் புணர்ந்த பாலே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
ஓரூ ருண்மையி னிகழ்ந்தோர் போலக்
காணாது கழிந்த வைகல் காணா
வழிநாட் கிரங்குமென் னெஞ்சமவன்
கழிமென் சாயல் காண்டொறு நினைந்தே.

திணையும் துறையும் அவை.

* ஓய்மான் நல்லியக்கோடனைப் புறத்திணை நன்னாகனார் பாடியது.

(இ - ள்.) விளையாட்டுத் திரட்சிக்கண் ஒள்ளிய வளையையுடைய மகளிர் கேழற்பன்றியுழுத கரிய சேற்றைக் கிளறின், அதன்கண்ணே ஆமையீனப்பட்ட புலால் நாறும் முட்டையைத் தேன் நாறும் ஆம்பலினது கிழங்குடனே பெறும் இழுமென்னும் அனுகரணமுண்டாக முழங்கும் நீர்வழங்கும் வாய்த்தலைகளையுடைய பெரிய மாவிலங்கை

* இவன், பத்துப்பாட்டிலுள்ள சிறுபாணாற்றுப்படைத் தலைவன்.

யென்னும் ஊர்க்குத் தலைவன், சிறிய யாழையுடைய வறியோர் தொடுக்கும் புகழ் மாலைசூடும் நல்லியக்கோடனைத் துணையாக நீ யுடையையா தலான், என்னைப் பொருந்திய விதியே! நீ ஒரு குறையுடையையல்லை, வாழ்வாயாக; பாரியது பறம்பின்கட் குளிர்ச்சியையுடைய சுனையிடத்துத் தெளிந்த நீர் போய்த் தேடிக்கொள்ள வேண்டாமல் ஓரூரின் கண்ணே யுண்டாதலின் அதனை யாம் வேண்டியபொழுது உண்கிறோமென்று நெகிழ்ந்திருந்தாரையொப்ப அவனைக் காணுதொழிந்த நாட்கள் * எனக்கு நாட்களாய்க் கழிந்தனவல்ல வென்று உட்கொண்டு அவனோடு தொடர்ந்த † நட்பு இன்றே போல இடையறுது செல்லவேண்டுமென்று பின்வருநாளைக்கு இரங்காநின்றது என்னுடைய நெஞ்சம், அவனது மிக்க மெல்லிய சாயலைக் காணுந்தோறும் நினைந்து—எ - று.

என்னெஞ்சம் அவன் சாயலைக் காணுந்தோறும் நினைந்து வழிநாட்கிரங்கும்; என்னைப் புணர்ந்த விதியே! நீ நல்லியக்கோடனை உடையையாதலால், நீ என்ன குறையையுடையை; நீ வாழ்வாயாகவெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

'இல்லோர்சொன்மலை' என்பதற்கு இல்லோர்சொல்லைச் சூடுமென்றும், 'எற்புணர்த்தபாலே' என்றோதி என்னை அவனோடு கூட்டிய விதியேயென்றும், 'வழிநாட்கிரங்கும்' என்பதற்கு இன்னும் இவனொடு தொடர்ந்த நட்பு இடையற்றுக் கழியுங்கொலென்று இரங்குமென்றும் உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 1. ஓரை - மகளிர் விளையாட்டு; "விளையா டாயமொடோரை யாடாது" (நற். 68); "ஓரை யாயங் கூற", "ஓரை மகளிர்" (குறுந். 48, 316, 401).

3. ஆமை முட்டை: "நிறைச்சூ லியாமை மறைத்தீன்று புதைத்த, கோட்டுவட் டுருவின் புலவுநாறு முட்டை" (அகநா. 160).

5. "புனலம் புதவின் மிழலை" (புறநா. 24 : 19). புதவு - கதவு; ஆகுபெயர்.

6. "நெல்லமல் புரவி ணிலங்கை கிழவோன்" (புறநா. 379 : 6).

7. "இல்லோர் செம்மல்" (சிலப். 15 : 90); "அறிந்தோர் சொன்மலை" (முருகு. 263).

6 - 7. "நன்மா விலங்கை மன்ன ருள்ளும்...பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை, நல்லியக்கோடனை", "செல்லிசை நிலைஇய பண்பினல்லியக் கோடனை" (சிறுபாண். 120 - 26, 268 - 9).

8. "நல்லைமன் றம்ம பாலே" (குறுந். 229).

9. மு. புறநா. 337 : 6.

---

* புறநா. 65 : 12.

† "இன்றே போல்கநும் புணர்ச்சி" (புறநா. 58 : 28).

9 - 10. "இனியே, பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர், தைஇத் திங்கட் டண்ணிய தரினும், வெய்ய வுவர்க்கு மென்றனிர்" (குறுந். 196).

11 - 2. செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் வினை முதலும் இறந்த காலமும் தழுவி வந்ததற்கு மேற்கோள்; (நன். சூ. 343, மயிலை.).

13. சாயல் ஆண்பாலார்க்கும் கூறப்படுதல், "நீரினு மினிய சாயற், பாரிவேள்" (புறநா. 105) என்பதனாலும் அதன் குறிப்பாலும் உணரலாகும். (௧௭௬)

(௧௭௭) ஒளிறுவாண் மன்ன ரொண்சுடர் நெடுநகர்
வெளிறுகண் போகப் பன்னாட் டிரங்கிப்
பாடிப் பெற்ற பொன்னணி யானை
தமரெனின் யாவரும் புகுப வமரெனிற்
றிங்களு நுழையா வெந்திரப் படுபுழைக்
கண்மாறு நீட்ட நணிநணி யிருந்த
குறும்பல் குறும்பிற் றதும்ப வைகிப்
புளிச்சுவை வேட்ட செங்க ணுடவர்
தீம்புளிக் களாவொடு துடரி முனையின்
மட்டற னல்யாற் றெக்க ரேறிக்
கருங்கனி நாவ லிருந்துகொய் துண்ணும்
பெரும்பெய ராதி பிணங்கரிற் குடநாட்
டெயினர் தந்த வெய்ம்மா னெறிதசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய
இரும்பனங் குடையின் மிசையும்
பெரும்புலர் வைகறைச் சீர்சா லாதே.

திணையும் துறையும் அவை.

மல்லிகிழான் காரியாதியை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

(இ - ள்.) விளங்கிய வாளையுடைய வேந்தரது ஒள்ளிய விளக்கத் தினையுடைய உயர்ந்த கோயிற்கண் கண்ணொளி கெடப் பலநாள் நின்று உலர்ந்து அவ்விடத்துப் பாடிப்பெற்ற பொற்படையணிந்த யானை, தமக்குச் சிறந்தாராயின் எல்லாரும் எளிதிற் புகப்பெறுவர், போராயின் திங்களாலும் நுழையப்படாத பொறிகளைப் பொருந்திய இட்டிய வாயிலையுடைத்தாய்க் கள்ளை ஒருவர்க்கொருவர் மாறுமாறாக நீட்டிட ஒன்றற்கொன்று அணித்தாயிருந்த குறிய பல அரணின் கண்ணேயிருந்து அக்கள்ளை நிரம்பவுண்டு காலங்கழித்துப் பின்னைச் செருக்கினால் விடாய்மிக்குப் புளிச்சுவையைவிரும்பிய மதத்தாற் சிவந்த

கண்ணையுடைய ஆண்மக்கள் இனிய புளிப்பையுடைய களாப்பழத்துடனே துடரிப்பழத்தைத் தின்று வெறுப்பிற் கரை மரத்துப் பைந்தேன் அரித்தொழுகுகின்ற நல்ல கான்யாற்றினது மணற்குன்றின்கண்ணே யேறிக் கரிய நாவற் பழத்தைப் பறித்து இருந்துண்ணும் பெரிய பெயரையுடையனாகிய ஆதியினது, பிணங்கிய அரில்பட்ட காட்டையுடைய குடநாட்டின்கண் மறவர் எய்து கொடுவரப்பட்ட எய்ப்பன்றியினது கடியப்பட்ட தசையினது செவ்வியையுடைய நிணமிக்க புதிய வெண் சோற்றுக்கட்டியை வருவோர்க்கெல்லாம் ஒப்புக்கொடுவந்து சொரியப் பெரிய பனையோலையானியன்ற குடையிலே நுகரும் பெரிய புலர்ச்சியை யுடைய விடியற்காலத்துச் சீருக்கு நிகரொவ்வாது—எ - று.

எந்திரப்புழையையுடைய நணிநணியிருந்த குறும்பிற் கண்மாறு நீட்டத் ததும்ப உண்டு வைகிப் புளிச்சுவை வேட்ட ஆடவர் முனையின் எக்கரேறியிருந்து நாவற்கனி கொய்து உண்ணுமென வினையையும்.

பாடிப்பெற்ற யானையும் பன்னாள்திரங்கிப் பெற்றமையிற் பனங் குடையின் மிசையும் வைகறைச்சீர் சாலாதென்றார்.

வெளிறுகண்போகப் பாடியெனக் கூட்டி, வெண்மை இடத்தினின்றும் நீங்கப் பாடியெனினும் அமையும்.

வைகறைச் சீர்சாலாதென்றது, அக்காலத்து அவன் செய்யும் சிறப்பினை நோக்கி.

'கைமாறு நீட்டி நணிநணி யிருந்து, குறும்பல் குறும்பிற் றதும்ப உண்டுவைகி' என்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 1. "ஒளிறுவாட் பொருப்பன்" (பரி. 22 : 1).

2. கண் வெளிறுபோதல் : "நீரிடை யத்த நோக்கி வாளற்றுக், கண்ணுங் காட்சி தௌவின" (நற். 397); "என் கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந் தனவே" (குறுந். 44); "கோலஞ் செய்பவர் கோல வெறிப்பினுன், மாலை வண்டின மாலைக்கண் கொண்டவே" (சீவக. 2397). திரங்கல் - உலர்தல்; "நிழலிடம் பெறாது, மடமா னம்பிணை மறியொடு திரங்க" (ஐங்குறு. 326).

1 - 2. "அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப், புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி, மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத், தவத்தாற் றவஞ்செய்யா தார்" (நாலடி. 31).

6. "நணிநணித் தாயினுஞ் சேஎய்ச் சேய்த்து" (பரி. 17 : 25).

9. "களவுப்புளி" (புறநா. 325); "களவும் புளித்தன" (அகநா. 394).

10. புறநா. 115 : 3 - 4.

11. "காலி னுதிர்ந்தன கருங்கனி நாவல்" (மலைபடு. 135).

10 - 11. எக்கர்...நாவல் : மணி. 17 : 25 - 30, 34.

14. "ஊன்சோற் றமலை" (புறநா. 33 : 14).

14 - 5. "செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்" (குறள், 86).

16. பனங்குடை - பனையோலையாற் செய்யப்பட்ட உண்கலம்; புறநா. 352; "பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி" (நற். 253 : 7); "வேணீ ருண்ட குடையோ ரன்னர்" (கலித். 23); "ஆறுசென் மாக்கள் சோறுபொதி வெண்குடை" (அகநா. 121); "குடைகலனு, உப்பிலி வெந்தை தின்று" (நாலடி. 289); தணிகை. களவு. 339. (களஎ)

(களஅ) கந்துமுனிந் துயிர்க்கும் யானையொடு பணைமுனிந்து
காலியற் புரவி யாலு மாங்கண்
மணன்மலி முற்றம் புக்க சான்றோர்
உண்ணா ராயினுந் தன்னொடு சூளுற்
றுண்மென விரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்
ஈண்டோ வின்சா யலனே வேண்டார்
எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பிற்
கள்ளுடைக் கலத்த ருள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ராளர்
அஞ்சி நீங்குங் காலை
ஏம மாகத் தான்முந் துறுமே.

திணை - வாகை; துறை - வல்லாண்முல்லை.

பாண்டியன் கீரஞ்சாத்தனை (பி - ம். பாண்டிக்குதிரைச் சாக்கையனை) அவர் பாடியது.

(இ - ள்.) கம்பத்தை வெறுத்து நெட்டுயிர்ப்புக் கொள்ளும் யானையோடு பந்தியை வெறுத்துக் காற்றுப்போலும் இயல்புடைய குதிரை ஆலிக்கும் அவ்விடத்து இடுமணல் மிக்க முற்றத்தின்கட் புக்க சான்றோர் அப்பொழுது உண்ணாராயினும் தன்னுடனே சார்த்திச் சூளுற்று உண்மினென்று அவரை வேண்டிக்கொள்ளும் பெரிய பெயரையுடைய சாத்தன் எம்போல்வாரிடத்து இனிய மென்மையை யுடையன்; இங்ஙனம் மெல்லியனாயினும் விரும்பாதார் எறியும் படைக்கலம் தம்மிற்கலந்த அஞ்சத்தக்க போரின்கண் வீரபானத்தை யுடைய கலத்தினராய் அதனையுடைய செருக்கான் ஊர்க்குள்ளே யிருந்து சொல்லிய வீரம் மேம்பட்ட வார்த்தையைப் போரின்கண் மறந்த சிறிய பேராண்மையை யுடையோர் போர்க்களத்து, அஞ்சிப் புறங்கொடுத்து ஓடுங்காலத்து அவர்க்கு அரணாகத் தான் தன்வலியான் முந்துற்று நிற்பன்—எ - று.

நெடுமொழி மொழிதலாற் பேராண்மையும், பின் அதனை மறத்தலாற் சிறுமையுமுடைமையின், சிறுபேராளரென்றார்.

'நெடுமொழி மறந்து' என்பதூஉம் பாடம்.

(கு - ரை.) 1. புறநா. 23 : 1 - 2.

2. "காலியக் கன்ன கதழ்பரி கடைஇ" (மதுரைக். 440).

1 - 2. "பணைநிலைப் புரவி யாலு மோதையும்" (சிலப். 13 : 148); "பணைநிலைப் புரவி பலவெழுந் தால" (மணி. 7 : 117).

4 - 5. "உண்ணு நோன்பி தன்னொடு சூளுற், றுண்மென விரக்கு மோர் களிமகன்" (மணி. 3 : 102 - 3).

3 - 5. "இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி, வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள், 81).

7. மயங்கிய ஞாட்பு : புறநா. 343 : 17; "மயங்கமர்" (கலித். 31); "கழுமியஞாட்பு" (களவழி. 11).

9. நெடுமொழி : புறநா. 54 : 9, 376 : 22. "சொல்லுத லியார்க்கு மெளிய வரியவாஞ், சொல்லிய வண்ணஞ் செயல்" (குறள், 664).

11. "அழிபடை தாங்கல்" (சிறுபாண். 211).

9 - 11. புறநா. 54, 170 : 14 - 7. (கஎஅ)

(கஎகூ) ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென
ஏலாது கவிழ்ந்தவென் னிரவன் மண்டை
மலர்ப்போர் யாரென வினவலின் மலைந்தோர்
விசிபிணி முரசமொடு மண்பல தந்த
திருவீழ் நுண்பூட் பாண்டியன் மறவன்
படைவேண்டுவழி வாளுதவியும்
வினைவேண்டுவழி யறிவுதவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன் றேஎத்
தசைநுகம் படாஅ வாண்டகை யுள்ளத்துத்
தோலா நல்லிசை நாலை கிழவன்
பருந்துபசி தீர்க்கு நற்போர்த்
திருந்துவே னாகற் கூறினர் பலரே.

திணையும் துறையும் அவை.

நாலைகிழவன் நாகனை வடநெடுந்தத்தனார் (பி - ம். வடம நெடு நத்தனார்; வடமநெடுந்தச்சனார்) பாடியது.

(இ - ள்.) உலகத்தின்மேல் வண்மையுடையோர் இறந்தாராகப் பிறர்பால் ஏலாது கவிழ்ந்த எனது இரத்தலையுடைய மண்டையை ஏற்கும் பரிசு இட்டு மலர்த்தவல்லார் யாரென்று கேட்டலின், தன்னொடு மாறுபட்டோரது வலித்துப் பிணிக்கப்பட்ட முரசத்தோடு மண் பலவற்றையும் கொண்ட திருமகள் விரும்பிய நுண்ணிய தொழில் பொருந்திய ஆபரணத்தையுடைய பாண்டியன் மறவன், அவனுக்குப் படை வேண்டிய விடத்து வாட்போரை யுதவியும் அரசியற்கேற்ற கருமச் சூழ்ச்சி வேண்டியவிடத்து அமைச்சியலோடு நின்று அறிவு உதவியும் இவ்வாறு வேண்டுவன அவ்வரசனிடத்து உதவித் தான் பூண்ட நுகம் ஒருபாற் கோடித் தளராமற் செலுத்தும் பகடுபோல ஆண்மையினும் சூழ்ச்சியினுந் தளராத ஆண்மைக்கூறுபாடு பொருந்திய ஊக்கத்தினை

யும் தோலாத நல்ல புகழையுமுடைய நாலைகிழவன், பருந்தினது பசி தீர்க்கும் நல்ல போரைச் செய்யும் திருந்திய வேலையுடைய நாகனைப் பலரும் சொன்னார்—எ - று.

பருந்து பசிதீர்க்கும் வேலென இயையும்.

(கு - ரை.) 1 - 3. புறநா. 103 : 3, குறிப்புரை.

2. ஏலாது - ஒரு பொருளையும் ஏற்றுக்கொள்ளாமல்.

4 - 5. "நிலந்தந்த பேருதவிப், பொலந்தார் மார்பி னெடியோன்" (மதுரைக். 60 - 61); "நிலந்தரு திருவிற் பாண்டியன்" தொல். சிறப்புப்.

6 - 8. "முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும், வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி" (பெரும்பாண். 443 - 4).

10. தோலா நல்லிசை : புறநா. 56 : 10. (நாலை - ஓரூர்). (கஎகூ)

(கஅ0) நிரப்பாது கொடுக்குஞ் செல்வமு மிலனே
இல்லென மறுக்குஞ் சிறுமையு மிலனே
இறையுறு விழுமந் தாங்கி யமரகத்
திரும்புசுவைக் கொண்ட விழுப்புண் ணோய்தீர்ந்து
மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்
தீர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்
இன்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல
யாந்தன் னிரக்குங் காலைத் தானெம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே.

(பி - ம்.) 7 'தீரந்தை', 'தீந்தை' 11 'மருங்கு'

திணையும் துறையும் அவை; துறை - பாணாற்றுப்படையுமாம்.

ஈர்ந்தூர்கிழான் தோயன் (பி - ம். ஈரந்தூர்கிழான் கோயமான்) மாறனைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் பாடியது.

(இ - ள்.) நாடோறும் தொடர்ந்து கொடுக்கும் செல்வமு முடையானல்லன்; இங்ஙனம் வறியனாயினும் இரந்தோர்க்கு இல்லை யெனச் சொல்லி மறுக்கும் புன்மையு முடையனல்லன்; தன் அரசுக்கு வந்துற்ற போரானமைந்த இடும்பைகளைத் தான் பொறுத்து அந்தப் போரின்கட் படைக்கலங்களை சுவைக்கொண்ட சிறந்த புண்ணாகிய நோய் தீர்ந்து, மருந்துவாங்கிக் கொள்ளப்பட்ட மரம்போல வாளுற்ற வடு ஒன்றோடொன்று விரவி ஆண்மைக் குறைபாடின்மையின் வசை

யின்றி அழகுபெற்ற உடம்பையுடையனும் வண்மையை ஏற்றுக் கொண்டு ஈர்ந்தையென்னும் ஊரின்கண்ணேயிருந்தான், பாணரது பசிக்குப் பகைவனுயவன்; நினது வறுமை நீங்கவேண்டுவையாயின் எம்முடனே நீயும் வாராய், முதிய வாயையுடைய இரவல! யாம் தன்னை இரக்கும்பொழுது தான் எம்முடைய உண்ணாத மருங்கிலைக் காட்டித் தன்னுடைய ஊரின் வலிய கையினையுடைய கொல்லனை வேண்டிக்கொள்ளாநிற்கும் அவன்; திருந்தின இலையையுடைய நெடிய வேலே வடிப்பாயாகவெனச் சொல்லி—எ - று.

பாண்பசிப்பகைஞன் ஈர்ந்தையோன்; அவன் தன்னை யாமிரக்கும் காலத் தான் எம்மருங்கைக் காட்டி வேலேவடித்திசினெனக் கொல்லனை யிரக்கும்; இரவல! இன்மை தீரவேண்டின், எம்மொடு நீயும் வருவா யாகவெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

இரக்குமென்று இழித்துக்கூறியது, பலகாலும் வடிக்கவேண்டுத லானும் பசிக்கு உதவவேண்டுதலானும்.

(கு - ரை.) 1. நிரப்பாது - பூர்த்திசெய்யாமல். 2. புறநா. 204 : 2; "இல்லென விரந்தோர்க்கொன் றீயாமை யிழிவு" (கலித். 2); "உள்ள, திரப்போ னின்மை கண்டுங், கரப்போன் சிறுமை யானுறு கவ்வே" (தகடூர். "கலிமானேயே" என்னும் பாடல்).

4. "இரும்புமேய்ந் தொழிந்த மிச்சில்வரை மார்பன்", "இரும் புண்டு மிகுத்த மார்பு", "இரும்பெச்சிற் படுத்தமார்பர்" (சீவக. 1790, 2281, 2353).

5. "மரஞ்சா மருந்துங் கொள்ளார் மாந்தர்" (நற். 226); "மர முதல் சாய மருந்துகொண் டாங்கு" (பெருங். 1. 37 : 188); "பால் கொண்ட வத்தி யெனவே யுடல்வடுப் பட்டவெமர்" (வெங்கைக் கோவை, 99).

தொல். உவம. சூ. 20, பேர். மேற்.

5 - 6. "அலகில் வெம்பியு மரிமையு மிவையென வவய வத்தினி லெழுதிய வறிகுறி யவையெ னப்பல வடுநிரை யுடையவர்" (கலிங்கத். 353); "பயில்வடுப் பொலிந்த யாக்கை வேடர்தம் பதியாம் நாகற்கு" (பெரிய. கண்ணப்ப. 12); "கொடுஞ்சமரிற் பட்ட, வடுத்துளைத்த கல் லபிராமம்" (தனிப்பாடல).

7. புறநா. 173 : 11.

'ஈர்ந்தையோனே...பகைஞனென்புழி, ஈர்ந்தையோனென்னுமுற் றிற்கு முடிபாகிய பகைஞனென்னும் பெயரை இடையினின்றசொல் விசேடித்து நின்றது' (தொல். எச்ச. சூ. 59, ந.).

9. முதுவாயிரவல : புறநா. 48 : 7, குறிப்புரை.

11. உண்ணுமருங்குல் : புறநா. 260 : 6.

12. புறநா. 170 : 15.

12 - 3. புறநா. 312 : 3.

மு. தும்பைத் திணைக்குரிய துறைகளுள், "தார்நிலை" என்பதற்கு மேற்கோள் காட்டி, 'இதனுள், பாணன் அது தோன்றப் புகழ்ந்தவாறு காண்க' என்பர் (தொல். புறத்திணை, சூ. 14, இளம்.); 'நிரப்பாது கொடுக்கு மென்னும் புறப்பாட்டினுள் இறையுறு விழுமந்தாங்கி யென்பதும் அது' (தொல். புறத்திணை. சூ. 17, ந.). (கஅ0)

(கஅக) மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்
கருங்க ணெயிற்றி காதன் மகனொடு
கான விரும்பிடிக் கன்று தலைக் கொள்ளும்
பெருங்குறும் புடுத்த வன்புல விருக்கைப்
புலாஅ வம்பிற் போரருங் கடிமிளை
வலாஅ ரோனே வாய்வாட் பண்ணன்
உண்ணு வறுங்கடும் புய்தல் வேண்டின்
இன்னே சென்மதி நீயே சென்றவன்
பகைப்புலம் படரா வளவைநின்
பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே.

(பா - ம்.) 5 'புலாஅ லம்பிற்'

திணையும் துறையும் அவை.

வல்லார்கிழான் பண்ணனைச் சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் பாடியது.

(இ - ள்.) மன்றத்தின்கண்ணே நிற்கப்பட்ட விளாவினது மனையிடத்து வீழ்ந்த விளாம்பழத்தைக் கரிய கண்ணையுடைய மறத்தி காதன் மகனுடனே காட்டுவாழுங் கரிய பிடியினது கன்றுவந்து எடுக்கும் பெரிய அரண் சூழ்ந்த வலிய நிலத்தின்கண் ஊராகிய இருப்பையும் புலால் நாறும் அம்பினையும் பொருதற்கரிய காவற் காட்டினையுமுடைய வலாரென்கிற ஊரிடத்தான், வாய்த்த வாளையுடைய பண்ணன்; நினது உண்ணப்பெருத வறிய சுற்றம் உண்டு பிழைத்தல் வேண்டுவையாயின், நீ இப்பொழுதே செல்வாயாக; போய் அவன் வேற்றுப்புலத்துச் செல்லாத எல்லையில் நினது பசிக்குப் பகையாகிய பரிசிலை நினது வறுமையைக் காட்டினையாய்க் கொள்ளுதற்கு—எ - று.

'அம்பிற் போரருங்கடிமிளை' என்பதற்கு அம்பாற் பொருதற்கரிய கடிமிளையெனினும் அமையும்.

காட்டிப் பரிசில் கொள்ளுதற்கு இன்னே சென்மதியெனக் கூட்டுக.

மதி : முன்னிலை விளக்கும் அசை.

(கு - ரை.) 1. வெள்ளில் - விளாமரம்; இங்கே பழமென்னும் மாத்திரையாய் நின்றது. மன்றமரம் : புறநா. 76, 371, 374.

4. புறநா. 21 : 6; "வன்புலக் காட்டுநாட் டதுவே" (நற். 59).

1 - 4. யானையின் கன்றும் குறத்திமகனும் : "முழந்தா ளிரும் பிடிக் கயந்தலைக் குழவி, நறவுமலி பாக்கத்துக் குறமக ளீன்ற, குறி யிறைப் புதல்வரொடு மறுவந் தோடி" (குறுந். 394 : 1 - 3).

5. புலாவம்பு : "புலவுநுனைப் பகழி" (பெரும்பாண். 269); "புலவுக்கணை" (பு. வெ. 10); (பு. வெ. 240) போரருங்கடிமிளை : "கடி மிளைக் குண்டுகிடங்கி, னெடுமதி னிரைஞாயி, லம்புடை யாரெயில்" (பதிற். 20 : 17 - 9); "அருங்குழுமிளை" (மதுரைக். 64).

6. புறநா. 180 : 7.

7 - 8. "பாசம், பசிப்ப மடியைக் கொளலும்" (திரி. 20).

9 - 10. புறநா. 139 : 14 - 5. (கஅக)

(கஅஉ) உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
5 புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி பாட்டு.

(இ - ள்.) உண்டேகாண் இவ்வுலகம்; இந்திரர்க்குரிய அமிழ்தம் தெய்வத்தானுதல் தவத்தானுதல் தமக்கு வந்துகூடுவதாயினும் அதனை இனிதென்று கொண்டு தனித்து உண்டலுமிலர்; யாரோடும் வெறுப்பிலர்; பிறர் அஞ்சத்தகுந் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அது தீர்த்தற் பொருட்டு மடிந்திருத்தலுமிலர் (மடிந்திருத்தல் - சோம்பி யிருத்தல்); புகழ் கிடைக்கின் தம்முடைய உயிரையுங் கொடுப்பர்; பழியெனின் அதனுன் உலக முழுதும் பெறினும் கொள்ளார்; மனக் கவற்சி யில்லார்; அப்பெற்றித்தாகிய மாட்சிமைப்பட்ட அத்தன்மைய ராகித் தமக்கென்று முயலாத வலிய முயற்சியையுடைய பிறர் பொருட் டென முயல்வார் உண்டாதலான்—எ - று.

அஞ்சித் துஞ்சலுமிலரென மாறிக் கூட்டுக.

இவ்வுலகம், பிறர்க்கென முயலுநருண்மையான் உண்டெனக் கூட்டுக.

ஆலும் அம்மவும், அசை.

(கு - ரை.) 1. 'அம்ம' என்னும் இடைச்சொல் அசைநிலையாக வந்ததற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 27, தெய்வச்.

1 - 2. "இந்திரர்க்கும் புகழ்வரிதே" (சீவக. 173).

'இந்திர குமரர்' என்பதற்குத் தேவகுமரரென்று பொருள் கூறி இவ்வடிகளை மேற்கோள் காட்டினர்; சிலப். 16 : 172, அடியார்.

2 - 3. "இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்" (பதிற். 38); "மருந்தே யாயினும் விருந்தோ டுண்க" (கொன்றைவேந்தன்).

4. "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ, தஞ்ச லறிவார் தொழில்" (குறள், 428); "அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி, யுறுவ துலகுவப்பச் செய்து - பெறுவதனா, லின்புற்று வாழு மியல்பினா ரென்று ஞான்றுந், துன்புற்று வாழ்த லரிது" (நாலடி. 74).

5 - 6. "வாணன் வைத்த விழுநிதி பெறினும், பழிநமக் கெழுக வென்னாய் விழுநிதி, ஈத லுள்ளமொ டிசைவேட் குவையே" (மதுரைக். 203 - 5); "அடிபிறக்கிடி லமரர்த முலகொடிவ் வுலகு கைப்படுமெனினும தொழிபவர்...உயிரை விற்றுறு புகழ்கொள வுழல்பவர்" (கலிங்கத். 340). கலித். 114 : 19 - 21.

8. "தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்" (அகநா. 54; மணி. 5 : 73).

9. "பிறர்க்கற முயலும் பெரியோய்" (மணி. 11 : 63).

8 - 9. "தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பு, மன்னுயிர் முதல்வன்" (மணி. 25 : 116 - 7); "தனக்கென், றொன்றானு முள்ளான் பிறர்க்கே யுறுதிக் குழந்தான்" (குண்டல. கடவுள்).

மு. பகட்டினானும் ஆவினானும் துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமென்பதற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டி, நோன்றாட் பிறர்க்கென முயலுநர் வணிகவேளாளரென்பர் இளம்பூரணர் (தொல். புறத்திணை. சூ. 17); "உண்டாலம்ம......உண்மையானே : இது, வகைபட முன்னோர் கூறிய செந்துறைப் பாடாண்பாட்டு; முனிவர் கூறுமாறு போலக் கூறிப் பரவலும் புகழ்ச்சியுங் கூறுது மறுமைப் பயன் பிறர்க்கு உறுதி பயப்பக் கூறலிற் கைக்கிளைப்புறனாய்ப் பாடாணாயிற்று (தொல். புறத்திணை. சூ. 27, ந). (கஅ௨)

(கஅ௩) உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் ஆரியப்படை கடந்த (பி - ம். தந்த) நெடுஞ் செழியன் பாட்டு.

(இ - ள்.) தன்னுசிரியற்கு (பி - ம். தம்மாசிரியர்க்கு) ஒருறுபாடு உற்றவிடத்து அது தீர்த்தற்கு வந்து உதவியும் மிக்க பொருளைக் கொடுத்தும் வழிபாட்டு நிலைமையை வெருது கற்றல் ஒருவற்கு அழகிது; அதற்கு என்னே காரணமெனின்: பிறப்பு ஒரு தன்மை யாகிய ஒரு வயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வி விசேடத்தால் தாயும் மனம் வேறுபடும்; ஒரு குடியின்கட் பிறந்த பலருள்ளும் மூத்தோன் வருகவென்னுது அவருள் அறிவுடையோன் சென்ற நெறியே அரச னும் செல்லும்; வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும் கீழ்க் குலத்துள் ஒருவன் கற்பின் மேற்குலத்துள் ஒருவனும் இவன் கீழ்க் குலத்தானென்று பாராது கல்விப் பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவனுதலான்—எ - று.

(கு - ரை.) 2. குறள், 395, பரிமேல். உரைநடை.

5 - 6. "ஒருகுடியிற், கல்லாது மூத்தானைக் கைவிடுபு கற்ரு, னிளமைபா ராட்டு முலகு" (நான்மணி. 65).

7. "அறிவுடை யொருவனை யரசனும் விரும்பும்" (வெற்றி வேற்கை).

8 - 10. "தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக், காணிற் கடைப்பட்டா னென்றிகழார் - காணு, யவன்றுணையா வாறுபோ யற்றே நூல்கற்ற, மகன்றுணையா நல்ல கொளல்" (நாலடி. 136).

'வேற்றுமை...படுமே : இது வேதமொழிந்த கல்வியோதல் கூறிற்று' (தொல். புறத்திணை. சூ. 16, இளம்).

மு. "சிறப்பின் பாலார் மக்க ளல்லார், மறப்பின் பாலார் மன் னர்க்கு" (மணி. 23 : 31 - 2).

'உற்றுழி...படுமே : இது வேளாளர் ஓதலின் சிறப்புக் கூறியது' (தொல். புறத்திணை. சூ. 20; ந). (கஅரு)

(கஅச) காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னுட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னுகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணு னுலகமுங் கெடுமே.

திணை - பாடாண்டிணை; துறை - செவியறிவுறூஉ. (பி - ம். திணையும் துறையும் அவை).

பாண்டியன் அறிவுடைநம்பியுழைச் சென்ற பிசிராந்தையார் பாடியது.

(இ - ள்.) காய்த்த நெல்லையறுத்துக் கவளமாகக் கொள்ளின் ஒரு மாவிற் குறைந்த நிலத்திற் கதிரும் பல நாளைக்காகும்; நூறு செய்யாயினும் யானை தனித்துப் புக்கு உண்ணுமாயின் அதனது வாயின்கட் புகுந்த நெல்லினும் கால் மிகவும் கெடுக்கும்; அப்பெற்றியே அறிவுடைய அரசன் இறை கொள்ளும் நெறியை அறிந்து கொள்ளின் அவன் நாடு கோடி பொருளினை ஈட்டிக் கொடுத்துத் தானும் மிகவுந் தழைக்கும்; வேந்தன் அறிவால் மெல்லியனாகி நாடோறும் தரமறியாத உறுதி கூறாது * அவன் விரும்புவதனையே தானுங் கூறும் ஆரவாரத்தை யுடைய சுற்றத்தோடு கூடி அன்பு கெடக் கொள்ளும் பொருட் டொகுதியை விரும்பின் அந்த யானை புக்க புலம்போலத் தானும் உண்ணப்பெறான், உலகமுங் கெடும்—எ - று.

பரிவுதவவென்றோதி, அக்குடிகட்கு வருத்த மிக என்றுரைப் பாரும் உளர்.

'மெல்லியன் கீழவ னாகி' என்றும் பாடம்.

(கு - ரை.) 1. நெற்கவளம் : புறநா. 44 : 2, குறிப்புரை.

2. மா - ஒருவகை அளவை; "மாமாவின் வயின்வயினெல்" (பொருந. 180).

4. வேற்றுமைக்கண் யகரவீற்றின்முன் பகரம் இயல்பாயதற்கு மேற்கோள்; நன். சூ. 223, மயிலை; நன். வி. சூ. 224; இ. வி. சூ. 133, உரை.

5. "நல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்" (கலித். 129 : 4).

5 - 6. "குடியோம்பிக், கொள்ளுமா கொள்வோற்குக் காண்டுமே மாநிதியம், வெள்ளத்தின் மேலும் பல" (நீதிநெறி. 29).

8. "கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்" (பெரும் பாண். 21); "கல்லென் சுற்றக் கடுங்குர லவித்து" (குறிஞ்சிப். 151).

9. நற். 226 : 2 - 3.

5 - 11. புறநா. 75.

மு. "வாய்ப்படுங் கேடு மின்றாம் வரிசையி னறிந்து நாளுங், காய்த்த நெற் கவளந் தீற்றிற் களிறுதான் கழனி மேயின், வாய்ப்பட லின்றிப் பொன்றும் வல்லனாய் மன்னன் கொள்ளின், நீத்தநீர் ஞால மெல்லா நிதிநின்று சுரக்கு மன்றே" (சீவக. 2907); "மாநி ரப்புருச் சிறுபுலப் பயன்களும் வயக்கரி நிலைநாடித், தான ளித்திடி னடுபசி

---

* "இகழி னிகழ்ந்தாங் கிறைமக னென்று, புகழினு மொக்கப் புகழ்ப" (நீதிநெறி. 44).

கெடுமது சார்ந்துபுக்குணின் வேலி, யான தென்னினுங் வாலினுங் காலினு மழிந்துவாய் புகலின்றிப், போன தாமது போன்றதவ் விறை மகன் புவியெலாம் பொலிவற்றே" (சீகாழித் தல புராணம், பூத விமோசனமானவத்தியாயம், 7).

வாயுறை வாழ்த்திற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 29, இளம்.; சூ. 35, ந. (கஅச)

(கஅரு) கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவற் சாகா டுகைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினிது படுமே
உய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே.

(பி - ம்.) 1 'ஞாலத் தியங்கும்'

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

தொண்டைமான் இளந்திரையன் பாட்டு.

(இ - ள்.) உருளையையும் பாரையும் கோத்து உலகின்கண்ணே செலுத்தும் காப்புடைய சகடந்தான் அதனைச் செலுத்துவோன் மாட்சிமைப்படின் ஊறுபாடில்லையாய் வழியை இனிதாகச் செல்லும்; அவன் அதனை இனிதாகச் செலுத்துதலைத் தெளியமாட்டானாயின் அது நாடோறும் பகையாகிய செறிந்த சேற்றிலே அழுந்தி மிகப்பல தீய துன்பத்தை மேன்மேலும் உண்டாக்கும்—எ - று.

இஃது, உலகாளு முறைமை கூறுதலையுட் கொண்டு சகடம் செல்லுமாற்றைக் கூறினமையின், நுவலாநுவற்சியென்னும் அலங்காரமாயிற்று; ஒட்டென்று கூறுவாரும் உளர்.

அன்றி இதற்கு உலகத்தின்கண்ணே உலகியற்கையை நிறுத்தி அதனோடு ஞாலத்தின்கண்ணே செலுத்தப்படும் காப்பாகிய சகடம் தன்னைச் செலுத்துவோன் மாட்சிமைப்படின் தனக்கு ஓரிடையூறு மின்றாகி நெறி முறைமையே நடக்கும்; அதனைச் செலுத்துதல் தெளியானாயின் அச்சாகாடு நாளும் மறுதலையென்னும் செறிந்த அள்ளலிலே அகப்பட்டுத் தனக்கும் தன்கீழ் வாழ்வார்க்கும் மிகப் பலவாகிய தீக்கேட்டினை மேன்மேலும் தருமெனவும் பொருளுரைப்பர்; இப்பொருட்குப் பாரென்றது, உலகியற்கையை.

கால் - உருளை.

(கு - ரை.) 1. பார் - பண்டியின் உறுப்புக்களுள் ஒன்று.

2. காவற்சாகா டுகைப்போன் : புறநா. 60 : 7 - 9, 256 : 2; 'அவையாறனுள்ளும் காவற்சாகா டுகைத்தற்கண் அவ்வரசர்க்கு இணையாய அமைச்சனதியல்பு' (குறள், 63-ஆம் அதி. அவ.) உகைப்போன் - செலுத்துவோன்.

2 - 6. கலித். 129 : 3.

மு. "ஆர்வலஞ் சூழ்ந்த வாழி யலைமணித் தேரை வல்லா, னேர் நிலத் தூரு மாயி னீடுபல் காலஞ் செல்லு, மூர்நில மறித நேற்று தூரு மேன் முறிந்து வீழுந், தார்நில மார்ப வேந்தர் தன்மையு மன்ன தாமே" (சீவக. 2909). (கஅரு)

(கஅசு) நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.

(பி - ம்.) 3 'யாமுயிர்'

திணையும் துறையும் அவை.

மோசிகீரனார் பாடியது (பி - ம். மாதிமாதிரத்தனார் பாட்டு).

(இ - ள்.) வேந்தனாகிய உயிரையுடைத்து, பரந்த இடத்தை யுடைய உலகம்; அதனால் இவ்வுலகத்தார்க்கு நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று; யான் உயிரென்பதனை அறிகை வேலான் மிக்க படையையுடைய அரசனுக்கு முறைமை—எ - று.

மன்னுயிர்த்தென்ற கருத்து: * உயிரையாக்கும் நெல்லும் நீரும் உளவாவது மன்னன் முறைசெய்து காப்பினென்றதாம்.

(கு - ரை.) 2. "உலகிற் கோருயிர்ப், பெற்றியான் பயாபதி யென்னும் பேருடை, வெற்றிவேன் மணிமுடி வேந்தர் வேந்தனே" (சூளா. நகர. 16); "மன்னுயிர் ஞாலக் கின்னுயி ரொக்கு, மிறை" (பெருங். 2. 11 : 17 - 8); "உலகினுக் குயிரா யிருந்தன னிறைகுலோத் துங்கன்" (திருவிளை. பழியஞ்சின. 44).

சிறப்பினால் உயர்திணை அஃறிணையானதற்கு மேற்கோள்; நன். சூ. 378, மயிலை; இ. வி. சூ. 299, உரை.

மு. "நெல்லுயிர் மாந்தர்க் கெல்லா நீருயி ரிரண்டுஞ் செப்பிற், புல்லுயிர் புகைந்து பொங்கு முழங்கழ லிலங்கு வாட்கை, மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய், நல்லுயிர் ஞாலந் தன்னு ளுமவே னம்பி யென்றான்" (சீவக. 2908). (கஅசு)

(கஅஎ) நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

---

* "இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு" (குறள், 545).

திணையும் துறையும் அவை.

ஔவையார் பாடியது.

(இ - ள்.) நிலனே! நீ ஒன்றில் நாடேயாக; ஒன்றிற் காடேயாக; ஒன்றிற் பள்ளமேயாக; ஒன்றின் மேடேயாக; எவ்வாறாயினும் எவ்விடத்து நல்லர் ஆண் மக்கள் அவ்விடத்து நீயும் நல்லையல்லது, நினக்கென ஒரு நலமுடையையல்லை வாழி!—எ - று.

தீய நிலனேயாயினும் நல்லோருறையின் நன்றெனவும், நல்ல நிலனேயாயினும் தீயோருறையின் தீதெனவும், தன்னிடத்து வாழ்வோரியல்பல்லது தனக்கென ஓரியல்புடையதன்றென நிலத்தை இழித்துக் கூறுவதுபோல உலகத்தியற்கை கூறியவாறாயிற்று.

* ஒன்றேவென்பது, எண்ணிடைச்சொல்.

(கு - ரை.) 1. நாடாகொன்றோ காடாகொன்றோ வென்பன வற்றையும் நாடேயாக காடேயாக என இதன்பாற்படுத்துக; இவற்றுள் ஏவல் கண்ணாதது இதுவெனவுணர்க' (தொல். வினை. சூ. 29, ந.).

3 - 4. "காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்: மீக்கூறு மன்ன னிலம்" (குறள், 386). (கஅஎ)

(கஅஅ) படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் அறிவுடை நம்பி பாட்டு.

(இ - ள்.) படைக்கப்படும் செல்வம் பலவற்றையும் படைத்துப் பலருடனே கூடவுண்ணும் உடைமை மிக்க செல்வத்தையுடையோ ராயினும் காலம் இடையே யுண்டாகக் குறுகக் குறுக நடந்துசென்று சிறிய கையை நீட்டிக் கலத்தின்கட் கிடந்ததனைத் தரையிலேயிட்டும் கூடப்பிசைந்து தோண்டியும் வாயாற் கவ்வியுங் கையால் துழாவியும் நெய்யையுடைய சோற்றை உடம்பின்கட்படச் சிதறியும் இங்ஙனம் அறிவை இன்பத்தான் மயக்கும் புதல்வரை இல்லாதார்க்குப் பயனாகிய முடிக்கப்படும் பொருளில்லை, தாம் உயிர்வாழும் நாளின்கண்—எ - று.

தொட்டென்பதற்குக் கூடவாரிப் பிடித்தெனினும் அமையும்.

குறையென்பது, முடிக்கப்படுங்கால் முடிக்கப்படும் பொருள்.

---

* புறநா. 32 : 2, 71 : 16.

இனிப்பயக்குறையுள்ளதென ஒருசொல் வருவித்துத் தாம் வாழும் நாளும் இல்லையென்று கூறுவாரும் உளர்.

(சு - ரை.) 1. படைப்பு : புறநா. 22 : 30.

1 - 2. "துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப், பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க" (நாலடி. 2); 'இல்வாழ்க்கையைப் பல படைப்பாகிய செல்வத்தோடே நடத்தி', பலபடைப்பாகிய செல்வத் தோடே மிக்க கைப்பொருளையும் கொடுத்து' (சிலப். 2 : 84 - 90, 15 : 54 - 75, அடியார்.).

3. "தளர்நடைப் புதல்வனை" (ஐங். 66); "தளர்பு தளர்போடும் பூங்கட் புதல்வன்", "குறுமோட்டு மூதாய் குறுகுறேடி" (அகநா. 66, 374); "குறுகுறு நடந்து செல்லும்" (ஆனைக்கா. அகிலாண்ட. 8).

"மொகு மொகு வென்பது இரட்டைக்கிளவி...குறுகுறு நடந்து சிறுகை நீட்டி" (தக்க. 90, உரை, மேற்); இரட்டைக்கிளவிக்கு மேற் கோள்; நன். சூ. 395, மயிலை; நன். வி. சூ. 396.

4 - 5. குறள், 64, பரிமேல். மேற்.

3 - 6. "முறியிள முல்லை மெல்லரும் பன்ன மூரல்வெண் டயிரனை பொதிந்து, குறுகுறு நடந்து சிறுவர்வந் தீண்ட" (பாகவத. 6 : விருந்தாவன. 9).

7. குறை - இன்றியமையாப் பொருள்; அது, 'பயக்குறையில்லைத் தாம் வாழு நாளே என்பதனுனுமறிக' (குறள், 612, பரிமேல்.); 'பொரு ளைச் சொல் இன்றியமையாமையின், அதனைக் குறையென்றுர்,...பயக் குறை...நாளே என்றுற்போல' (தொல். உரி. சூ. 100, சே.).

மு. பொருளொடு புணர்ந்த பக்கமென்பதில், 'புணர்ந்தபக்க மென்றதனுற் புதல்வர்ப்பெறுதலுங்கொள்க' என்று கூறி இதனை மேற் கோள் காட்டினர் (தொல். புறத்திணை. சூ. 17, இளம்.; 21, ந.). (கஅஅ)

(கஅக) தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே

(பி - ம்.) 5 'உண்பவை நாழி யுடுப்பன'

திணையும் துறையும் அவை.

மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் பாடியது.

(இ - ள்.) தெளிந்த நீராற் சூழப்பட்ட உலகமுழுவதையும் பிற வேந்தர்க்குப் பொதுவாதலின்றித் தமக்கே உரித்தாக ஆண்டு வெண் கொற்றக் குடையால் நிழல்செய்த ஒருதன்மையை யுடையோர்க்கும், இடையாமத்தும் நண்பகலும் துயிலானுய் விரைந்த செலவையுடைய மாக்களைப் படுக்கக் கருதிச் செல்லும் கல்வியில்லாத ஒருவனுக்கும் உண்ணப்படும்பொருள் நாழி, உடுக்கப்படுமவை இரண்டே; பிறவு மெல்லாம் ஒக்கும்; ஆதலாற் செல்வத்தாற் பெறும் பயனாவது கொடுத்தல்; செல்வத்தை யாமே நுகர்வேமென்று கருதின் தவறுவன பல—எ - று.

பலவென்றது, அறம்பொருளின்பங்களை.

பகலை ஒரு மாத்திரையென்றும், கடுமாவை யானையென்றும், கல்லாத ஒருவனைப் பாகனென்றும் உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 1. "திரைதரு முந்நீர் வளாஅக மெல்லாம்" (கலித். 146 : 28).

1 - 2. புறநா. 8 : 1 - 5.

3. நடுநாள்யாமம் "யாம நடுநாட் டுயில்கொண் டொளித்த" (கலித். 122 : 21).

"அரையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்" (சிலப். 4 : 81, அடியார்.) என்பதற்கு மேற்கோள்.

5. "நாழி யரிசிக்கே நாம்", "உண்பது நாழி யுடுப்பது நான்கு முழம்" (நல்வழி, 19, 28).

வினைப்பெயர், செயப்படுபொருண்மேற் பெயராய்க் காலந் தோன்றி நின்றதற்கு மேற்கோள்; (தொல். வேற்றுமை. சூ. 9, கல்; ந.).

7 - 8. "வழங்கலுந் துய்த்தலுந் தேற்ருதான் பெற்ற, முழங்கு முரசுடைச் செல்வந் - தழங்கருவி, வேய்முற்றி முத்துதிரும் வெற்பவதுவன்ரே, நாய்பெற்ற தெங்கம் பழம்" (பழ. 151). கலித். 32 : 11. (௧௮௯)

(௧௯௦) விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணு தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ.

(பி - ம்.) 3 'யுடையதம்', 8 - 9 'வேட்டெழுந்தாங், கிருங்களிற் றொருத்தல்'

திணையும் துறையும் அவை.

சோழன் நல்லுருத்திரன் (பி - ம். சோழனல்லுத்திரன்) பாட்டு.

(இ - ள்.) விளைந்த செவ்வியையுடைய சிறிய இடத்தைப்பார்த்து வளைந்த கதிராகிய உணவைக்கொண்டு முழையின்கண்ணே நிறைய வைக்கும் எலி முயன்றாற்போலும் சிறிய முயற்சியராகி உள்ள தம்முடைய செல்வத்தை நுகராது இறுகப் பிடிக்கும் உள்ள மிகுதி யில்லாருடன் பொருந்திய நட்பு இல்லையாக; தறுகண்மையையுடைய கேழலாகிய பன்றி தனது இடப்பக்கத்தே பட வீழ்ந்ததாக, அன்று அவ்விடத்து உண்ணாதாகிப் பிற்றைநாட் பெரிய மலையின்கண் தனது முழையிடம் தனிமைப்பட உணவை விரும்பியெழுந்து பெரிய களி றாகிய ஒருத்தலை நல்ல வலப் பக்கத்தே படப் படுக்கும் புலிபசித்தாற் போலும் குறையில்லாத மேற்கோளையுடைய வலியையுடையோர் நட்போடு பொருந்திய நாட்கள் உளவாக—எ - று.

சீறிடமென்றது, விளைந்து முற்றியபின் அறுப்பதற்கு முன்னாகிய இடத்தை.

இல்லாகியர், உளவாகியரென்பன ஈண்டு வியங்கோட் பொருளவாய் நின்றன.

(கு - ரை.) 4 - 5. இயைபென்னுமுரிச்சொல் கூட்டமென்னும் குறிப்புணர்த்துவதற்கு மேற்கோள்; (தொல். உரி. சூ. 11, ந.; இ. வி. சூ. 290, உரை).

10. புலி பசித்தாற் புல்லைத் தின்னாதென்பது ஒரு பழமொழி.

9 - 10. புறநா. 237 : 16 - 7; "நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும், அல்லன செய்தற் கொருப்படார் - பல்பொறிய, செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம், பைங்கட் புனத்தபைங் கூழ்" (நீதிநெறி. 61).

6 - 11. "தொடங்குவினை தவிரா வசைவி னோன்றாட், கிடந்துயிர் மறுகுவ தாயினு மிடம்படின், வீழ்களிறு மிசையாப் புலியினுஞ் சிறந்த, தாழ்வி லுள்ளம்" (அகநா. 29); "கடமா தொலைச்சிய கானுறை வேங்கை, யிடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்" (நாலடி. 300); "வாய்வ தாகிய பொருளினை வல்விரைந் தன்றே, ஆய்வ தாய்கில ராக்குவான் புகுந்தழிப் பார்போற், காய்வ தாகிய திறத்தினாற் கதழ்ந்துதா யிடத்து, வீழ்வ தாக்கியுண் ணாதுபோ துவவிள வேங்கை" (தணிகைப் புராணம், நாடு. 43). (௧௯௦)

(௧௯௧) யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்

யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

திணையும் துறையும் அவை.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தானுழைச்சென்ற பிசிராந்தையாரை, 'கேட்குங்காலம் பலவாலோ? நரை நுமக்கில்லையாலோ?' என்ற சான்றோர்க்கு அவர் சொற்றது.

(இ - ள்.) நுமக்குச் சென்ற யாண்டுகள் பலவாயிருக்க நரையில்லை யாகுதல் எப்படியாயினீரெனக் கேட்பீராயின், என்னுடைய மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வரும் அறிவு நிரம்பினர்; யான் கருதிய அதனையே கருதுவர், என்னுடைய ஏவல்செய்வாரும்; * அரசனும் முறையல்லாதன செய்யானுய்க் காக்கும்; அதற்குமேலே யான் இருக்கின்ற ஊரின்கண் நற்குணங்களால் அமைந்து பணிய வேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடைய சான்றோர் பலராதலான்—எ - று.

'ஆன்றவிந்தடங்கிய' என்பதற்குக் கல்வியால் நிறைந்து அதற்கேற்பச் சுவை முதலியவற்றிற் செல்லும் அறிவவிந்து மனமொழிமெய்களான் அடங்கியவெனினும் அமையும்.

'யாங்காகியர்' என்பதற்கு எவ்வாறுயிற்றென்றும், எப்படியாலாயிற்றென்றும் பொருள் கூறுவாரும் உளர்.

(கு - ரை.) 1 - 2. 'உலகின்புறுதலாவது, இம்மிக்காரோடு தலைப்பெய்து அறியாதனவெல்லாம் அறியப்பெற்றேமென்றும், யாண்டு பலவாக நரையில மாயினேமென்றும் உவத்தல்' (குறள், 399-பரிமேல்.).

3. மாண்ட மனைவி : "மனைத்தக்க மாண்புடைய ளாகி", "மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின்", "இல்லவண் மாண்பானுல்" (குறள், 51 - 3).

4. "மேகமே சேர்கொடை வேந்தமிர்து சேவகனும், ஆகவே செய்யினமிர்து" (சிறுபஞ்ச. 4); "வெங்குருதி மல்க விழுப்புண் ணுகுதொறூஉ, மிங்குலிகஞ் சோரும் வரையேய்க்கும் - பைங்க, ணினம்போக்கி நின்ரு ரிகல்வாட்டி வேந்தன், மனம்போல வந்த மகன்" (பு. வெ. 26).

5. "அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும், பல்லவையோர் சொல்லும் பழுதன்றே" (சிலப். 20 : இறுதி வெண்பா, 1).

---

* "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட், கிறையென்று வைக்கப் படும்" (குறள், 388).

7. "நற்றவ முனிவருங் கற்றடங் கினரும், நன்னெறி காணிய தொன்னூற் புலவரு, மெங்கணும் விளங்கிய வெயிற்புற விருக்கையின்...வஞ்சி" (மணி. 26 : 74 - 8). (கசுக)

(கசுஉ) யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன் றுமிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

திணையும் துறையும் அவை.

கணியன் பூங்குன்றன் பாட்டு.

(இ - ள்.) எமக்கு எல்லாம் ஊர்; எல்லாரும் சுற்றத்தார்; கேடும் ஆக்கமும் தாமே வரினல்லது, பிறர் தர வாரா; நோதலும் அது தீர்தலும் அவற்றையொப்பத் தாமே வருவன; சாதலும் புதிதன்று; கருவிற்றோன்றிய நாளே தொடங்கியுள்ளது; வாழ்தலை இனிதென்று உவந்ததுமிலம்; ஒரு வெறுப்பு வந்தவிடத்து இன்னாதென்றிருத்தலுமிலம்; மின்னுடனே மழை குளிர்ந்த துளியைப் பெய்தலான் அமையாது கல்லை யலைத்து ஒலிக்கும் வளவிய பேர்யாற்று நீரின்வழியே போம் மிதவை (மிதவை - தெப்பம்) போல அரியவுயிர் ஊழின்வழியே படுமென்பது நன்மைக்கூறுபாடறிவோர் கூறிய நூலாலே தெளிந்தேமாகலான், நன்மையான் மிக்கவரை மதித்தலுமிலேம்; சிறியோரைப் பழித்தல் அம்மதித்தலினுமிலேம்—எ - று.

தலைஇயென்பதனைத் தலையவெனத் திரிக்க.

'முனிவி னின்னா தென்றலு மிலமே' என்றதற்கு முன்னே கூறிய வாழ்தலை வெறுப்பான் இன்னாதென்று இகழ்ந்திருத்தலுமில்லேமெனினும் அமையும்.

(கு - ரை.) 1. "யாதானு நாடாமா லூராமா லென்னொருவன், சாந்துணையுங் கல்லாத வாறு" (குறள், 397).

முற்றும்மைக்கு, 'யாதுமூரே' என்பது மேற்கோள்; (தொல். இடை. சூ. 6. கல். ந.).

2. "பெருமைக்கு மேணைச் சிறுமைக்குந் தத்தங், கருமமே கட்டளைக் கல்" (குறள், 505); "பெருமையுஞ் சிறுமையுந் தாந்தர வருமே" (வெற்றிவேற்கை.).

4. "வருந்து முயிரொன்பான் வாயிலுடம்பிற், பொருந்துத ருனே புதுமை" (நன்னெறி, 12).

6. இன்னது - துன்பத்தைத் தருவது.

8. "கல்லலைத் தொழுகுமன்னே" (புறநா. 115 : 4); "கல்பொரு திரங்குங் கதம்வீ ழருவி" (குறுந். 134 : 5).

9. "செல்யாற்றுத் தீம்புனலிற் சென்மரம் போல" (பரி. 6 : 79); "நீர்வழிப் பட்ட புணை" (நீதிநெறி. 44).

9 - 10. "முன்னே யொருவன் முடித்தான்றன் றுப்பெலாம்" (அறநெறி. 114).

3 - 11. "சாதலும் பிறத்த ருனுந் தம்வினைப் பயத்தி னுகு,மாதலு மழிவு மெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய், நோதலும் பரிவு மெல்லா நுண்ணுணர் வின்மை யன்றே" (சீவக. 269).

13. அதனினும் இலம் : "பிரியின் வாழ்த லதனினு மிலமே" (குறுந். 168 : 7). (கக௨)

(கக௩) அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவ னூட்டும் புல்வாய் போல
ஓடி யுய்தலுங் கூடுமன்
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே.

(பி - ம்.) 2 'ஒருவ னேட்டும்'

திணையும் துறையும் அவை.

* ஓரேருழவர் (பி - ம். ஒன்னுருழவர்) பாட்டு.

(இ - ள்.) தோலைப் புடைத்துவைத்தாற்போன்ற நெடிய வெளிய களரின்கண் ஒருவன் அலைக்கும் புல்வாய் எளிதின் ஓடிப் பிழைக்குமா போலே யானும் நன்னெறிக்கண்ணேயொழுகிப் பிழைக்கவுங்கூடும்; சுற்றத்தோடு கூடிவாழும் இல்வாழ்க்கை அதன்கட் செல்லவொட்டாது காலைத் தளையாநிற்கும்; ஆதலான் உய்தல் கூடாது—எ - று.

மன் : கழிவின்கண் வந்தது. மா : அசைநிலை.

(கு - ரை.) 2. புல்வாய் - மான்.

4. "உலோகமா பாலன்", "அநங்கமாதிலகன்" (சீவக. 385. 2001) என்னுமிடங்களில், 'மா, வியங்கோளசையன்றி இசை நிறைத்து நின்றது' எனக் கூறி இவ்வடியை மேற்கோள் காட்டுவர் நச்சினார்க்கினியர். 'மா' என்பது முன்னிலையசையன்றி அசைச்சொல்லாக வந்த

* "ஓரே ருழவன் போல" (குறுந். 131).

தற்கு மேற்கோள்; (தொல். இடை. சூ. 47, ந.; இ - வி. சூ. 275, உரை).

1 - 4. "காட்டகத் தொருமகன் றுரக்கு மாக்கலை, யோட்டுடைத் தாமெனி னுய்யு நங்களை, ஆட்டியிட் டாருயி ரளைந்து கூற்றுவ, னீட்டிய வினைமதுப் போல வுண்ணுமே" (சீவக. 2930) (கக௩)

(ககச) ஓரி னெய்தல் கறங்க வோரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
இன்னா தம்மவிவ் வுலகம்
இனிய காண்கித னியல்புணர்ந் தோரே.

(பி - ம்.) 6 - 7 'வுலகின தியற்கை, யினிய'

திணை அது; துறை - பெருங்காஞ்சி.

பக்குடுக்கை நன்கணியார் பாடியது.

(இ - ள்.) ஒரு மனையின்கண்ணே சாக்காட்டுப்பறை ஒலிப்ப ஒரு மனையின் கண்ணே மணத்திற்குக் கொட்டும் மிகக் குளிர்ந்த முழவினது ஓசை மிக ஒலிப்பக் காதலரோடு (காதலர் - கணவர்) கூடின மகளிர் பூவணியை யணியப் பிரிந்த மகளிரது வருத்தத்தையுடைய உண்கண்கள் நீர் வார்ந்து துளிப்ப இப்பரிசு ஒத்து ஒவ்வாமைப்படப் படைத்தான் நிச்சிதமாக, அப்பண்பில்லாதோனாகிய நான்முகன்; கொடிது இவ்வுலகினதியற்கை; ஆதலான், இவ்வுலகினது தன்மை யறிந்தோர் வீட்டின்பத்தைத் தரும் நல்ல செய்கைகளை அறிந்து செய்து கொள்க—எ - று.

காண்கவென்பது, காண்கெனக் குறைக்கப்பட்டது.

இதன் இயல்புணர்ந்தோர் இவ்வின்னாமையை இனியவாகக் காண்க வென்றுரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 1. சாப்பறைக்கு நெய்தற்பறை யென்ற பெயர் உண்மையால், அதனை நெய்தல் என்றார். "நெஞ்சு நடுக்குறூஉ நெய்த லோசையும்" (மணி. 6 : 71).

1 - 2. "நிறையுஞ் செல்வத் தெதிர்மனைக ளிரண்டி னிகழ்மங் கலவியங்க, ளறையு மொலியொன் றினிலொன்றி லழுகை யொலிவந் தெழுதலும்" (பெரிய. வெள்ளானை. 5).

3. புறநா. 146 : 7 - 10, 167 : 8 - 9-ஆம் அடிகளின் குறிப்புரையைப் பார்க்க.

5. படைத்தோன் : 'ஐதே கம்மவிவ் வுலகுபடைத் தோனே" (நற். 240 : 1); "இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து, கெடுக வுலகியற்றி யான்" (குறள், 1062).

னகரவீற்று வினைச்சொல்லின் ஈற்றயலினின்ற ஆகாரம் செய்யுளுள் ஓகாரமானதற்கு மேற்கோள்; நன்.சூ. 352, மயிலை; நன். - வி.சூ. 353.

மு. "மன்றங் கறங்க மணப்பறை யாயின, அகன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் - பின்றை, ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே, வலிக்குமா மாண்டார் மனம்" (நாலடி. 23). (கசுச)

(கசுரு) பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குயிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.

(பி - ம்.) 6 'நல்லவை' 9 'நெறியுமற்றதுவே'

திணை - அது; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

நரிவெரூஉத்தலையார் பாடியது.

(இ - ள்.) பல அமைந்த குணங்களையுடையீர்! பல அமைந்த குணங்களையுடையீர்! கயலினது முட்போன்ற நரைமுதிர்ந்த திரைந்த கதுப்பினையும் பயனில்லாத முதுமையையுமுடைய பல அமைந்த குணங்களை யுடையீர்! மழுவாகிய கூரிய படைக்கலத்தினையும் கடிய வலியினையு முடைய ஒருவன் பாசத்தாற் கட்டிக்கொண்டு போங் காலத்து இரங்குவீர் நீர்; நல்வினையைச் செய்ய மாட்டீராயினும் தீவினையைச் செய்தலைப் பரிகரிமின்; அதுதான் யாவரும் புகழ்வ ரென்றது ஒழியவும் நல்ல நெறியின் கண்ணே செலுத்தும் வழியும் அதுதான்—எ - று.

* பலராகிய சான்றீரென்பது, பல்சான்றீரெனத் தொக்கது; "பல் குட்டுவர்" (மதுரைக். 105) என்பதுபோல.

பலவாகிய குணங்களால் அமைந்தீரெனினும் அமையும்.

பயனின் மூப்பென்று வைத்துப் பல்சான்றீரே யென்றது இகழ்ச்சிக் குறிப்பு; அடுக்கு, விரைவின்கண் வந்தது.

(கு - ரை.) 1. புறநா. 246 : 1.

'பல' என்னும் சொன்முன் பிறவரின் அகரம் விகற்பித்து வரு மென்பதற்கும் (நன். சூ. 169, மயிலை.), ரகரவீற்று உயர்திணைப் பெயரின் ஈற்றயலாகாரம் ஈகாரமாய் ஏற்றதற்கும் (நன். வி. சூ. 309) மேற்கோள்.

* தொல். தொகைமரபு, சூ. 11, ந. பார்க்க.

2. "கரிந்தநீள் கயன்முள்ளி னரையும்" (திருவிளை. விருத்த. 20).

1 - 3. சொல்லுவான் குறிப்பினுற் பொருளறிய வந்ததற்கு மேற்கோள்; நன். சூ. 268, மயிலை; நன். வி. சூ. 269.

4. ஒருவன் - யமன்.

6 - 7. "வறுமையா, லீத லிசையா தெனினு மிரவாமை, யீத லிரட்டி யுறும்" (நாலடி. 95).

பாடாண்டிணைத் துறைகளுள், ஓம்படைபற்றி வந்ததற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 30, இளம்.

மு. காஞ்சித்திணைத் துறைகளுள் 'கழிந்தோரொழிந்தோர்க்குக் காட்டிய முதுமை' என்பதற்கு மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 19, இளம்.); 'பல்சான்றீரே......அதுவே : இது வீடு ஏதுவாகவன்றி வீடுபேற்று நெறிக்கட் செல்லும் நெறியேதுவாகக் கூறியது' (தொல். புறத்திணை. சூ. 24, ந.). (ககரு)

(கசுசு) ஒல்லுவ தொல்லு மென்றலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலு மிரண்டும்
ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே
ஒல்லா தொல்லு மென்றலு மொல்லுவ
தில்லென மறுத்தலு மிரண்டும் வல்லே
இரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயி லத்தை
அனைத்தா கியரினி யிதுவே யெனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டன மதனால்
நோயில ராகநின் புதல்வர் யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் றன்னவென் னல்கூர் வளிமறை
நாணல தில்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியற் குறுமக ளுள்ளிச்
செல்வ லத்தை சிறக்கநின் னாளே.

(பி - ம்.) 8 'யதுவே'

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் நீட்டித்தானை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

(இ - ள்.) தம்மாற் கொடுக்க இயலும் பொருளை இயலுமென்று சொல்லிக்கொடுத்தலும், யாவர்க்கும் தம்மாற் கொடுக்க இயலாத பொருளை இல்லையென்று சொல்லி மறுத்தலுமாகிய இரண்டும் தாளாண்மைப் பக்கத்து உளவாகிய நட்பின் கூற்றினுள்ளன; தனக்கு

இயலாததனை இயலுமென்றலும் இயலும் பொருளை இல்லையென்று மறுத்தலுமாகிய இரண்டும் விரைய இரப்போரை மெலிவித்தலன்றியும் ஈவோர்புகழ் குறைபடும் வழியாம்; இப்பொழுது நீ எம்மளவிற் செய்த செய்தியும் அத்தன்மைத் தாகுக; இஃது எத்துணையும் எங்குடியி லுள்ளார் முன்பு காணாதது யாம் கண்டேம்; அத்தீங்கின்றல், நின் பிள்ளைகள் நோயின்றியே இருப்பாராக; யானும் வெயிலென்று நினைந்து போக்கை வெறேனாய்ப் பனியென்று . கொண்டு மடிந்திரேனாய் விட்டு நீங்காமையாற் கல்லாற் செய்தாற் போன்ற எனது நல்குரவின் மிகுதி யான் வளிமறையாகிய மனையிடத்து நாணல்லது வேறில்லாத கற்பினையும் ஒளியையுடைத்தாகிய நுதலினையும் மெல்லிய இயலினையு முடைய குறுமகளை நினைந்து போவேன்; நின் ஆயுள் மிகுவதாக— எ - று.

'நோயிலராக நின்புதல்வர்' என்பதூஉம், 'சிறக்க நின்னாள்' என்ப தூஉம் குறிப்புமொழி.

அன்றி, பரிசில் மறுத்தலான் இவன் புதல்வர்க்கும் இவனுக்கும் * தீங்கு வருமென்றஞ்சி நோயிலராகவெனவும், சிறக்க நின்னா ளெனவும் கூறினாராக உரைப்பினும் அமையும்.

நல்குரவென்பது, நல்லெனக் குறைந்து நின்றது.

'கல்குயின் றன்னவென் னல்கூர் வளிமறை' என்பதற்குக் கல்லாற் செய்தாற் போன்ற பயன் கொள்ளாத யாக்கையையுடைய எனது நல் கூர்ந்த வளிமறையெனவும், கல்லைத் துளைத்தாற்போன்ற காற்றடை மாத்திரையாகச் செய்யப்பட்ட நல்கூர்ந்த என்மனையெனவும் உரைப் பாரும் உளர்.

(கு - ரை.) 4 - 5. "இயைவது கரத்தலிற் கொடுமை யில்லை" (முதுமொழிக்காஞ்சி, 55).

4 - 6. கலித். 100 : 12.

1 - 7. "இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசை யன்று வையத் தியற்கை", "நட்டார்க்கு நள்ளா தவர்க்கு முளவரை யால், அட்டது பாத்துண்ட லட்டுண்டல் - அட்ட, தடைத்திருந் துண்டொழுகு மாவதின் மாக்கட், கடைக்குமா மாண்டைக் கதவு" (நாலடி. 111, 271); "இசைவ கொடுப்பதூஉ மில்லென் பதூஉம், வசையன்று வையத் தியற்கையஃ தன்றிப், பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணாயின், நசைகொன்ருன் செல்லுலக மில்" (பழ. 24).

12. வளிமறை - காற்றை மட்டும் மறைப்பது.

13. "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல். களவியல், சூ. 22); "உயிரினுஞ் சிறந்த நாணும்" (நற். 17 : 8); "தாயிற் சிறந்தன்று நாண்டைய

---

* "தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற், றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை, எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று, பரிவதூஉஞ் சான்றோர் கடன்" (நாலடி. 58).

லாருக்கந் நாண்டகைசால்...தோளிதிண் கற்பின் விழுமிதன்று" (திருச்சிற். 204); பு. வெ. 278. 14. குறுமகள் - மனைவி.

14 - 5. 'அத்தை' என்னும் இடைச்சொல் முன்னிலைக்கண் அசைநிலையாய் வந்ததற்கு மேற்கோள்; நன். சூ. 439, மயிலை; நன் - வி. சூ. 440.

மு. பாடாண்டிணைத்துறைகளுள் கொடார்ப்பழித்தற்கு மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 29, இளம்.; சூ. 35, ந.); 'ஒல்லுவ தொல்லுமென்னும் புறப்பாட்டினுள், நோயிலராக நின்புதல்வர் எனவும், சிறக்கநின் னுளே எனவும் வரும் மங்கலச்சொல் கெடுக வென்னும் பொருள் பட்டவாறு காண்க' (தொல். பொருளியல், சூ. 48, இளம்.) (௧௬௬)

(௧௬௭) வளிநடந் தன்ன வாச்செல லிவுளியொடு
கொடிநுடங்கு மிசைய தேரின ரெனாஅக்
கடல்கண் டன்ன வொண்படைத் தானையொடு
மலைமாறு மலைக்குங் களிற்றின ரெனாஅ
உருமுரற் றன்ன வுட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றிய ரெனாஅ
மண்கெழு தானை யொண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ விலமே
எம்மால் வியக்கப் படூஉ மோரே
இடுமுட் படப்பை மறிமேய் தொழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கட் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம்
சீறூர் மன்ன ராயினு மெம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னோரே
மிகப்பே ரெவ்வ முறினு மெனைத்தும்
உணர்ச்சி யில்லோ ருடைமை யுள்ளேம்
நல்லறி வுடையோர் நல்குர
வுள்ளுதும் பெருமயா முவந்துநனி பெரிதே.

(பி - ம்.) 1 'வாஅய்செலிவுளி', 'விரைசெல' 2 'தேரினமெனாஅ' 4 'களிற்றினமெனா' 5 'உருமுரன்றன்ன' 14 'பண்பினோரே'

திணையும் துறையும் அவை.

சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன் பரிசில் நீட்டித்தானைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது.

(இ - ள்.) காற்று இயங்கினாற்போலும் தாவுதலுடைத்தாகிய கதியையுடைய குதிரையோடு கொடி நுடங்கும் உச்சியையுடைய

தேரினையுடைய ரெனவும், கடலைக் கண்டாற்போலும் ஒள்ளிய படைக் கலத்தையுடைய சேனையுடனே மலையோடு மாறுபட்டுப் பொரும் களிற் றினையுடையரெனவும், இடிமுழங்கினாற்போலும் அஞ்சத்தக்க முரசத் தோடு போரின் மேம்படும் வெற்றியையுடையரெனவும் கருதி நிலத் தைப் பொருந்தின படையினையுடைய ஒள்ளிய பூணினையுடைய அரசர் வெண்கொற்றக்குடை நிழற்றப்படுஞ் செல்வத்தை மதித்தலில்லேம்; எங்களால் மதிக்கப்படுவோர், இடப்பட்ட முள் வேலியை யுடைய தோட்டத்து மறி (ஆடு) தின்ன ஒழிந்து நின்ற குறிய நாற்றத்தினையுடைய முஞ்ஞையது கொழுவிய கண்ணிற் கிளைக்கப்பட்ட குறிய இலையைப் புல்லிய நிலத்தில் விளைந்த வரகினது சோற்றுடனே பெறுகின்ற சிறிய ஊரையுடைய வேந்தரா யினும் எம்மிடத்துச் செய்யும் முறைமையை அறிந்து நடக்கும் குணத்தினையுடையோர்காண்; யாம் மிகப் பெரிய துன்பமுறினும் சிறிதும் அறிவில்லாதோருடைய செல்வம் பயன்படாமையின் அதனை நினையேம்; நல்லறிவினையுடையோரது வறுமை பயன்படுதலின் அதனைப் பெருமானே! யாம் உவந்து மிகப் பெரிதும் நினைப்பேம்...எ - று.

எனுவென்பது எண்ணிடைச்சொல்.

(கு - ரை.) 1. புறநா. 178 : 2, குறிப்புரை. "காற்கடுப் பன்ன கடுஞ்செல லிவுளி" (அகநா. 224 : 5).

3. "கடன்மரு டானை" (அகநா. 212 : 15).

1 - 4. 'வளிநடந்தன்ன...களிற்றின ரெனுஅ என்பதனுள் என என்பது எனுவென்று வந்து எண்ணுக்குறித்தது' (தொல். இடை. சூ. 40, தெய்வச்.)

5. "கடிப்பிகு முரசின் முழங்கி யிடித்திடித்துப், பெய்தினி வாழியோ பெருவான்" (குறுந். 270 : 3 - 4); "உருமிடி முரசம்" (முருகு. 121).

1 - 8. 'வளிநடந்தன்ன......இலமே : என்புழி வினைக்குறிப்பு எண்ணிவந்து தொகை பெருது நின்றது' (தொல். இடை. சூ. 44, தெய்வச்.)

10. இடுமுட்படப்பை : "இடுமு ணெடுவேலி" (கலித். 12 : 1).

11. முஞ்ஞை - முன்னை. புறநா. 320 : 1, 328 : 14.

10 - 11. "முன்றிலாடு முஞ்ஞை மூதிலை கறிக்கும்" (தொல். செய். சூ. 31, பேர்; ந. மேற்.).

14. "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்" (கலித். 133 : 8).

16 - 8. "நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே, கல்லார்கட் பட்ட திரு" (குறள், 408). (கசுள)

(கசுஅ) அருவி தாழ்ந்த பெருவரை போல
ஆரமொடு பொலிந்த மார்பிற் றண்டாக்
கடவுள் சான்ற கற்பிற் சேயிழை
மடவோள் பயந்த மணிமரு ளவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிகென் றேத்தித்
திண்டே ரண்ண னிற்பா ராட்டிக்
காதல் பெருமையிற் கனவினு மரற்றுமென்
காமர் நெஞ்ச மேமாந் துவப்ப
ஆலமர் கடவு ளன்னநின் செல்வம்
வேல்கெழு குருசில் கண்டே னாதலின்
விடுத்தனென் வாழ்கநின் கண்ணி தொடுத்த
தண்டமிழ் வரைப்பகங் கொண்டி யாகப்
பணித்துக்கூட் டுண்ணுந் தணிப்பருங் கடுந்திறல்
நின்னோ ரன்னநின் புதல்வ ரென்றும்
ஒன்னார் வாட வருங்கலந் தந்துநும்
பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்தநின்
முன்னோர் போல்கிவர் பெருங்கண் ணோட்டம்
யாண்டு நாளும் பெருகி யீண்டுதிரைப்
பெருங்கட னீரினு மக்கடன் மணலினும்
நீண்டுயர் வானத் துறையினு நன்றும்
இவர்பெறும் புதல்வர்க் காண்டொறு நீயும்
புகன்ற செல்வமொடு புகழினிது விளங்கி
நீடு வாழிய நெடுந்தகை யானும்
கேளில் சேஎய் நாட்டினெந் நாளும்
துளிநசைப் புள்ளினின் னளிநசைக் கிரங்கிநின்
அடிநிழற் பழகிய வடியுறை
கடுமான் மாற மறவா தீமே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனை வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் (பி - ம். பெரிய சாத்தன்) பாடியது.

(இ - ள்.) அருவி தாழ்ந்த பெரிய மலைபோல ஆரத்தோடு பொலிந்த மார்பின்கண் வேட்கை தணியாத தெய்வத் தன்மை யமைந்த கற்பினையும் செய்ய ஆபரணத்தையுமுடைய உன்னுடைய மடவோள் பெறப்பட்ட பவழமணி போன்ற அழகிய வாயையும் கிண் கிணியையுமுடைய புதல்வர் பொலிகவென்று வாழ்த்தித் திண்ணிய தேரையுடைய வேந்தே! நின்னைப் புகழ்ந்து பரிசின்மேல் அன்பு

பெரிதாகலிற் கனவின்கண்ணும் நின் புகழையே கூறும் எனது விருப்பத்தையுடைய நெஞ்சம் இன்புற்று மகிழ ஆலிலையின்கண் மேவிய திருமால் போலும் நின்னுடைய செல்வத்தையெல்லாம் வேலையுடைய தலைவ! கண்டேன்; ஆதலால் விடைகொண்டேன்: வாழ்க, நினது கண்ணி! தொடர்புபட்ட குளிர்ந்த தமிழ் நாடெல்லை முழுதும் கொள்ளையாகக் கொண்டு நின் பகைவரைத் தாழ்த்து அவர்கள் பொருள்களையும் வாங்கிக்கொண்டுண்ணும் தணித்தற்கரிய மிக்க வலியையுடைய நின்னையொக்கும் வலியையுடைய நின்னுடைய மைந்தர் எந்நாளும் பகைவர் தேய அவருடைய பெறுதற்கரிய அணிகலத்தைக் கொண்டு வந்து நும்முடைய பொன்னுடைய நெடிய நகரின்கண் பொலிய வைத்த நின்னுடைய முன்னுள்ளோரைப் போல்க, இவருடைய பெரிய கண்ணோட்டம்; யாண்டும் நாளும் மிக்குச் செறிந்த திரையையுடைய பெரிய கடல் நீரினும் அக்கடல் கொழித்திடப்பட்ட மணலினும் நீண்டுயர்ந்த மழையிற்றுளியினும் பெரிதும் இவர் பெறும் பிள்ளைகளைக் காணுந்தோறும் நீயும் விரும்பிய செல்வத்துடனே புகழும் இனிதாக விளங்கி நெடுங்காலம் வாழ்க! பெருந்தகாய்! யானும், உறவில்லாத தூரிய நாட்டின்கண்ணே நாடோறும் துளியை நச்சுதலையுடைய வானம்பாடியென்னும் புட்போல நின்னுடைய வண்மை நசையான் இரங்கி நினது அடி நிழற்கட் பழகிய அடியின் வாழ்வேன்; விரைந்த செலவையுடைய குதிரையையுடைய மாறனே! நீ செய்த செயலை மறவாதொழிவாயாக—எ - று.

புதல்வர் மார்பிற் பொலிகெனக் கூட்டினும் அமையும்.

* 'ஆலமர் கடவு ளன்னநின்' என்றதற்கு ஆலின்கீழ் அமர்ந்த முக்கட் செல்வனாகிய கடவுளையொப்ப என்றும் நிலைபெற்றிருப்பேனென்றிருக்கின்ற நின்னென்றுரைப்பினும் அமையும்.

'நின்முன்னோர் போல்கிவர் பெருங்கண்ணோட்டம்' என்றது, அவரும் வழங்காது வைத்தலிற் கண்ணோட்டமிலர்; இவரும் அவரையொக்கக் கண்ணோட்டமிலராகவென்பதாயிற்று.

'முன்னோர்போல்கிவர் பெருங்கண்ணோட்டம்' எனவும், 'வாழ்க நின் கண்ணி' எனவும், 'நீடுவாழிய' எனவும் நின்றவை குறிப்பு மொழி; † அன்றி, என்னிடத்து நீ செய்த கொடுமையால் நினக்குத் தீங்கு வரும்; அது வாராதொழிகவென வாழ்த்தியதூஉமாம்.

மறவாதீமேயென்றது, என்னளவில் நீ செய்த செய்தியை மறவா தொழியென்பதாயிற்று.

---

* புறநா. 91 : 5 - 6; "ஆலமர் செல்வ னணிசால் பெருவிறல்"; "ஆலமர்செல்வன்" (கலித். 81, 83); "ஆல்கெழு கடவுள்" (முருகு. 256), "ஆலமர் செல்வன்" (சிலப். 24); மணி. 3 : 144; சிறுபாண். 97.

† புறநா. 196 : 10, உரை.

'யாண்டுநாளும் பெருகி' என்பதற்கு * நின்னுளே திங்களனைய வாக; அத்திங்கள் யாண்டோரனையவாக; யாண்டே ஊழியனைய வரம் பினவாக வென்பது கருத்தாகக் கொள்க.

(கு - ரை.) 1 - 2. "மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை, அணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச், செல்புன லுழந்த சேய்வரற் கான்யாறு" (சிறுபாண். 1 - 3); "அலைநீ ராடை மலைமுலை யாகத், தாரப் பேரியாற்று மாரிக் கூந்தற், கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை" (சிலப். 5 : 1 - 3).

3. கடவுட் கற்பின் மடவோள்" (அகநா. 314 : 5).

4. "மணிபுரை செவ்வாய்" (கலித். 79, 81; அகநா. 16, 66).

3 - 6. "கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய, புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பி, னன்ன ராட்டிக் கன்றியு மெனக்கு, மினிதா கின்றாற் சிறக்கநின் னாயுள்" (அகநா. 184 : 1 - 4).

7. கனவினரற்றல் : கலித். 24 : 7 - 12.

8. ஏமாத்தல் : புறநா 101 : 9, குறிப்புரை; கலித். 80 : 14.

11. கண்ணியை வாழ்த்தல் : "வார்கழல் வேந்தே வாழ்கநின் கண்ணி" (மணி. 5 : 28); "வாழ்கநுங் கண்ணி மாதோ" (சீவக. 1890).

14. கலித். 80 : 14 - 5. தொல். கற்பு. சூ. 6.

18 - 22. பன்மைக்கு மணலையும் நீர்த்துளிகளையும் உவமம் கூறுதலை, "எத்துணை யாற்று ளிடுமண னீர்த்துளி, புற்பனி யுக்க மரத்திலை நுண்மயி, ரத்துணை யும்பிற ரஞ்சொல்லி னார்மனம், புக்கன மென்று பொதியறைப் பட்டார்" (வளையாபதி) என்னுமிடத்தும் காண்க.

23. புறநா. 55 : 17, குறிப்புரை.

25. "தற்பாடிய தளியுணவிற், புள்" (பட்டினப். 3 - 4); (கலித். 46 : 20 - 21, 146 : 52 - 3; "மலையுறை பகைத்து வானுறைக் கணங்கும், புட்குலஞ் சூழ்ந்த பொருப்பு", "அளிகார்ப் பாடுங் குரனீர் வறந்த, மலைப்புட் போல" (கல். 53 : 10 - 11, 95 : 11 - 2).

26. 'அடியுறை' என்பது அடியேன் என்னும் பொருளில் அக் காலத்து வழங்கியது என்று தெரிகிறது; (புறநா. 67 : 12, குறிப்புரை; கலி. 56 : 4). (கககஅ)

(கககூ) கடவு ளாலத்துத் தடவுச்சினைப் பல்பழம்
நெருந லுண்டன மென்னாது பின்னும்
செலவா னாவே களிகொள் புள்ளினம்
அனையர் வாழியோ விரவல ரவரைப்
புரவெதிர் கொள்ளும் பெருஞ்செய் யாடவர்
உடைமை யாகுமவ ருடைமை
அவர், இன்மை யாகு மவரின் மையே.

* பதிற். ௬௦ 51 - 3.

(பி - ம்.) 2 'உண்டு மமையாது' 6 - 7 'ருடைமை, யின்மை'

திணையும் துறையும் அவை.

பெரும்பதுமனார் பாட்டு.

(இ - ள்.) தெய்வம் உறையும் ஆலமரத்தினது பெரிய கொம்பின் கட் பல பழத்தை நென்னலுமுண்டேமென்னுவாய்ப் பின்னும் அவ் விடத்துப் போதலை அமையா, ஒலி பொருந்தின புள்ளினம்; அத் தன்மையினையுடையார் இரப்போர்; அவரைக் காத்தற்கு எதிர்ந்து கொள்ளும் மிக்க செய்கையையுடைய ஆண்மக்களது செல்வமாகும், அவ்விரப்போர் செல்வம்; அவ்வாண்மக்களுடைய வறுமையாகும், அவ்விரப்போருடைய வறுமை—எ - று.

வாழியும், ஓவும் அசைநிலை.

(கு - ரை.) 1. "கடவு ளாலத்து" (நற். 343); "அழல்புரை குழை கொழு நிழறரும் பலசினை, ஆலமுங் கடம்பும்......வேறுவேறு பெய ரோய்" (பரி. 4 : 66 - 9); "துறையு மாலமுந் தொல்வலி மராமு, முறை யுளி பராஅய்", "ஆலுங் கடம்பு மணிமார்" (கலித். 101, 106).

1 - 3. "புட்பயில் பழுமரப் பொலிவிற் ருகிய, மட்டிலா வளநகர்" (சீவக. 93).

1 - 4. இரவலருக்குப் புள்ளினமும் உபகாரிக்கு ஆலமரமும் உவமைகள்: "பழுமர முள்ளிய பறவையின்" (பொருந. 64) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க. (ககூகூ)

(உ00) பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி
மழைமிசை யறியா மால்வரை யடுக்கத்துக்
கழைமிசைத் துஞ்சுங் கல்லக வெற்ப
நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேற்
களங்கொண்டு கனலுங் கடுங்கண் யானை
விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே
இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னு மந்தண னீயே
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுநன்
நினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்
அடங்கா மன்னரை யடக்கும்
மடங்கா விளையு ணாடுகிழ வோயே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

பாரி மகளிரை விச்சிக்கோனுழைக் கொண்டுசென்ற கபிலர் பாடியது.

(இ - ள்.) குளிர்ந்த மலையின்கண் ஓங்கிய பசிய இலையையுடைய பலாவினது பழத்தைக் கவர்ந்து உண்ட கரிய விரலையுடைய கடுவன் சிவந்த முகத்தையுடைய தனது மந்தியுடனே பொலிந்து சேய்மைக் கண்ணே விளங்கி முகிலாலும் உச்சியறியப்படாத உயர்ந்த மலைப் பக்கத்து மூங்கிலுச்சியின்கண் துயிலும் மலையகத்துத் தாழ்ந்த வரையையுடையோய்! நிணத்தைத் தின்று களித்த நெருப்புப் போலும் தலையையுடைய நெடிய வேலினையும் களத்தைத் தனதாக்கிக்கொண்டு காயும் தறுகண்மையையுடைய யானையினையும் விளங்கிய மணிகளாற் செய்யப்பட்ட வளைந்த ஆபரணத்தினையுமுடைய விச்சிக்கோவே! இவர்கள்தாம், பூவைத் தனது தலையின்கண் மாறுத அலங்கரித்தாற் போலும் கொடிமுல்லைதான் நாத்தழும்பேறப் பாடாதாயினும் ஒலிக்கும் மணியையுடைய நெடிய தேரைக் கொள்கவென்று சொல்லிக் கொடுத்த பரந்து மேம்பட்ட தலைமையினையுடைய பாரிக்கு மகளிர்; யான் பரிசிலன்; அதுவன்றியும் நிலைபெற்ற அந்தணன்; நீ, பகைவரைப் போர் செய்யுமுறைமையாற் பொருது தாழ்விக்கும் வாளான்மேம்படுபவன்; ஆதலால், நினக்கு யான்தரக் கொள்வாயாக; சினத்தையுடைய போராலே பகைவேந்தரை மிகையடக்கும் மடக்கப்படாத மிக்க விளைதலையுடைய நாட்டையுடையோய்!—எ - று.

மடக்குதல் - போகமொருக்குதல்.

* பலவின்கனி கவர்ந்துண்ட கடுவன் மந்தியொடு சிறந்து சேண் விளங்கிக் கழைமிசைத் துஞ்சுமென்றதனால், நீயும் இவரை வரைந்து கொண்டு இன்புற்று வாழ்தல் வேண்டுமென்பது தோற்றிநின்றது.

'யானே பரிசிலன்' என்பதனால் நினக்கு என்குறை முடிக்க வேண்டுமென்பதூஉம், அந்தணனென்றதனால் யான் தருதற்குரியே னென்பதூஉம் கொள்ளப்படும்.

† உலகத்து மகட்பேசிவிடக் கொடுத்தலையன்றித் தாமே இவரைக் கொள்வாயாகவென்று இரந்து கூறினமையின், இது பரிசிற்றுறையாயிற்று.

(கு - ரை.) 2. கடுவன் - ஆண் குரங்கு.

4. புறநா. 166 : 32, குறிப்புரை.

5. கல்லகம் : பதிற். 9-ஆம் பத்துப் பதிகம்.

7. புறநா. 53 : 5, குறிப்புரை.

8. புறநா. 130 : 1.

---

* "பந்தியின் வாய்ப்பல வின்சுளை பைந்தே னெடுங்கடுவன், மந்தியின் வாய்க்கொடுத் தோம்புஞ் சிலம்ப" (திருச்சிற். 99).

† பெருங். 4. 15 : 71 - 2; சீவக. 1056.

9 - 11. புறநா. 201 : 2 - 3.

9 - 12. பாரி முல்லைக்குத் தேர்கொடுத்தது : புறநா. 118 : 5, குறிப்புரை.

13. புறநா. 126 : 11, 201 : 7.

9 - 17. பெருங். 4. 15 : 23 - 80. (உ00)

(உ0க) இவரியா ரென்குவை யாயி னிவரே
ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர் யானே
தந்தை தோழ னிவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே
நீயே, வடபான் முனிவன் றடவினுட் டோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போ ரண்ணல்
தாரணி யானைச் சேட்டிருங் கோவே
ஆண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
யான்றர விவரைக் கொண்மதி வான்கவித்
திருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்
பொன்படு மால்வரைக் கிழவ வென்வேல்
உடலுந ருட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே.

திணையும் துறையும் அவை.

பாரிமகளிரை இருங்கோவேளுழைக் கொண்டுசென்ற கபிலர் பாடியது.

(இ - ள்.) இவர் யாரென்று வினவுவாயாயின், இவர்தாம், ஊரெல்லாவற்றையும் இரப்போர்க்கு வழங்கித் தேரை ஏறுதற்கேற்பச் சமைத்த அணையோடும் புரவியோடும்கூட முல்லைக்கு வழங்கிய தொலையாத நல்ல புகழையும் ஒலிக்கும் மணியையுடைய யானையையு முடைய பறம்பிற்குத் தலைவனாகிய மிக்க பெரிய பாரியுடைய மகளிர்; யான் இவர் பிதாவின் தோழனாதலான் இவர் என்னுடைய மகளிர்; அந்தணனாகிய புலவன்யான் கொண்டுவந்தேன்; நீதான் வடபக்கத்து முனிவனுடைய ஓமகுண்டத்தின்கட் டோன்றிச் செம்பாற் புனைந்து செய்தாலொத்த சேய்மையை யுடைத்தாகிய நெடிய மதிலையுடைய

துவராபதியென்னும் படைவீட்டை யாண்டு வெறுப்பில்லாத கொடையினையுடையராய் நாற்பத்தொன்பது தலைமுறை தொன்றுபட்டுவந்த வேள்களுள் வைத்து வேளாயுள்ளாய்! வென்றிப்போரையுடைய தலைவ! தாரணிந்த யானையினையுடைய பெரிய இருங்கோவே! நீதான், ஆண்டன்மையைக் கடப்பாடாக உடைமையாற் பாணர்க்குச் செய்யக் கடவ முறைமையை உதவிய தழைத்த கண்ணியையுடைய புலிகடிமாலே! யான் நினக்குத்தர இவரைக் கொள்வாயாக; வானுற் கவிக்கப் பட்டுப் பெருங்கடல் சூழ்தரப்பட்ட இவ்வுலகத்தின்கண் அணுகுதற் கரிய வலியையுடைய பொன்னுண்டாகும் பெரிய மலைக்குத் தலைவ! வென்றிவேலையுடைத்தாகிய பகைவர் அஞ்சும் படையையுடைய கேடில்லாத நாட்டுக்குரியவனே!—எ - று.

உவராவீகை வேளிரெனக் கூட்டுக.

'வடபான் முனிவன் றடவினுட் டோன்றி' என்பதற்குக் கதை யுரைப்பிற் பெருகும்; அது கேட்டுணர்க.

புலிகடிமாலென்பது இவனுக்கு ஒரு பெயர்.

வேளே! அண்ணல் இருங்கோவே! புலிகடிமாஅல்! கிழவ! நாடு கிழவோய்! நீ இப்படிப்பட்ட உயர்ந்தகுடியிற் பிறந்தவனுதலால், யான் தர இவரைக் கொண்மதியெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

யான் இவருடைய தந்தைதோழனுதலானும் அந்தணனுதலானும் யான்தர நீ இவரைக் கோடற்குக் குறையில்லையென்பது கருத்து.

(கு - ரை.) 1. புறநா. 13 : 1. 2. புறநா. 110 : 3 - 4.

4. படுமணி யானை : புறநா. 72, 165, 351; நற். 227.

2 - 5. புறநா. 200 : 9 - 12, குறிப்புரை.

8. தடவு : இச்சொல் தடமெனவும் வழங்கும்; திருச்சிற். 202, கொளு, பேர். உரையைப் பார்க்க; "தடத் தெரியை" (தக்க. 475).

விசுவபுராணசாரமென்னும் தமிழ்நூலின் பதிகத்தில் 15-ஆம் செய்யுளில், "சம்புமா முனிவன் வேள்வித் தழறரு மரபில் வந்தோன்" எனவும், இரட்டையர்களருளிச்செய்த ஏகாம்பரநாதருலாவில், "சம்பு குலத்தொருவன்" எனவும் வந்திருத்தலின், இதில் 'வடபான் முனிவன்' என்றது அச்சம்பு முனிவனுக இருத்தல் கூடுமோ வென்று ஊகிக்கப்படுகின்றது.

9. புறநா. 37 : 11, குறிப்புரை.

10 - 12. துவரை - மைஸூரைச் சார்ந்த துவாரஸமுத்திரமென்னும் நகரம்; இந்நகரில் அரசர் பதினெண்மரும் பதினெண்குடி வேளிரும் இருந்தனரென்றும், அவர்களை அகத்தியமுனிவர் அழைத்துப் போந்து பல இடத்தும் தாபித்தனரென்றும், அவர்களுள் இருங்கோவேள் சிற்றரச னென்றும் தெரிகின்றது; இதனை, 'துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும்......கொண்டு போந்து', மலையமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன்

கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்' (தொல். பாயிரம்; அகத்திணை. சூ. 32) என வரும் நச்சினார்க்கினியர் வாக்கியங்களால் உணர்க.

14. புறநா. 203 : 11.

15. மு. புறநா. 202 : 10; தபங்கரென்னுமுனிவர் ஒரு காட்டில் தவஞ்செய்கையில் ஒரு புலி அவர்மேற் பாய்தற்கு நெருங்க, அதுகண்ட அம்முனிவர் அங்கு வேட்டையாடிவந்த சளனென்னும் யாதவ அரசனை நோக்கி 'ஹொய்ஸள' என்று கூற, அவன் அப்புலியைத் தன் அம்பால் எய்துகடிந்தமையால் ஹொய்ஸளனென்றும் புலி கடிமாலென்றும் வழங்கப்பட்டானென்று சிலர் கூறுவர்; சசகபுரத்தையடுத்த காட்டிலுள்ள தன் குலதேவதையான வாஸந்திகாதேவியைச் சளனென்னும் அரசன் வணங்கச் சென்றபோது புலியால் தடுக்கப்பட்டு வருந்துகையில், அக் கோயிலிலிருந்த பெரியவர் அவனை நோக்கி 'ஹொய்ஸள' என்று கூறி ஓர் இரும்புத் தடியை அருள, அவன் அது கொண்டு அதனைக் கொன்றமைபற்றி 'ஹொய்ஸளன்' என்றும், 'புலி கடிமால்' என்றும் பெயர் பெற்றனனென்று வேறு சிலர் கூறுவர்.

17. புறநா. 363 : 1. (உ௦க)

(உ௦உ) வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக்
கட்சி காணாக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கதழு நெடுவரைப் படப்பை
வென்றி நிலைஇய விழுப்புக ழொன்றி
இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருணுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாய நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
நும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே யியறே ரண்ணல்
எவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளி ரென்றவென்
தேற்றாப் புன்சொ னோற்றிசிற் பெரும
விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே யடுக்கத்
தரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்
பெருங்கல் வைப்பி னாடுகிழ வோயே.

திணையும் துறையும் அவை.

இருங்கோவேள் பாரி மகளிரைக் கொள்ளானாகக் கபிலர் பாடியது.

(இ - ள்.) வெட்சியையுடைய காட்டின்நடுவண் வேட்டுவர் அலைப்பத் தனக்குப் புகலிடங் காணாத கடமாவினது நல்ல ஏறு வரைச் சாரன் மணிமேலே கிளம்பவும் சிதறிய பொன் விளங்கவும் விரைய வோடும் நெடிய மலைப்பக்கத்து வெற்றி நிலைபெற்ற சிறந்த புகழ் பொருந்திச் சிற்றரையம் பேரரையமென இருகூற்றுற் பெயர்பெற்ற உட்குப் பொருந்திய பழைய ஊரின்கட் பலகோடியாக அடுக்கப்பட்ட பொன்னை நுங்களுக்கு உதவிய நீடிய நிலையையுடைய அரையத்தினது கேட்டையும் இனிக் கேட்பாயாக; அது கெடுதற்குக் காரணம்: நினது தாளால் தரப்பட்ட பொருளையன்றி நுந்தையுடைய உரிமையை நிறையப்பெற்ற தழைத்த கண்ணியையுடைய புலிகடிமாலே! நும்மை யொக்கும் அறிவினையுடைய நும் குடியுள் ஒருவன், புகழ்ந்த செய்யுளை யுடைய கழாஅத்தலையாரென்னும் புலவரை அவமதித்ததனுல் உண்டான பயன்; இயற்றப்பட்ட தேரையுடைய தலைவ! இவர் எவ்வி யுடைய பழைய குடியிலே படுவார்களாக; பின்னை இவர் கைவண்மை யையுடைய பாரிமகளிரென்று சொல்லிய எனது தெளியாத புன் சொல்லைப் பொறுப்பாயாக; பெருமானே! யான் நின்னை விடை கொண்டேன்; நின்வேல் வெல்வதாக; அரையமலையில் முகையற மலர்ந்த கரிய காலையுடைய வேங்கையினது கரிய புறவிதழையுடைய ஒள்ளிய பூப் பரந்த பொற்றைக்கல் பெரும்புலியினது வரியையுடைய புறத்தை யொக்கும் பெரிய மலையிடத்து ஊர்களையுடைய நாட்டை யுடையோய்! — எ - று.

புலிகடிமால்! அண்ணல்! நாடுகிழவோய்! அரையத்துக் கேடும் கேள், இனி; அது கழாத்தலையை இகழ்ந்ததன் பயன்; இப்பொழுது எவ்வி தொல்குடிப் படீஇயர்; இவர் பாரிமகளிரென்ற புன்சொல்லைப் பொறுப்பாயாக; பெருமானே! நின்னை விடுத்தேன்; நின் வேல் வெல்வ தாகவெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

ஒலியற்கண்ணி - தளிர்மாலையெனினும் அமையும்.

நீடுநிலை யரையத்துக் கேடும் கழாத்தலையை இகழ்ந்ததன் பயனென்ற உம்மையான், இவ்விகழ்ச்சியும் உனக்குக் கேடுதருமென்ப தாயிற்று.

அது கெடுதற்குக் காரணம், கழாத்தலையை நுமருள் ஒருவன் இகழ்ந்ததனுல்; அவன் வாக்குத் தப்பாதாகலின், அவன் வசையாகப் பாடினனென்று சொல்லுவர்; அதுவேயென்பதாம்.

'வெலீஇயர் நின்வேல்' என்றது குறிப்புமொழி.

'நுந்தை தாய நிறைவுற வெய்திய' என்பதூஉம், 'நும்போலறிவின்' என்பதூஉம் இகழ்ச்சி தோன்ற நின்றன.

வேங்கைவீ தாய துறுகல் இரும்புலி வரிப்புறங் கடுக்குமென்ற கருத்து : ஏதம் செய்யாததூஉம் ஏதம்செய்வதுபோலக் கண்டார்க்கு அச்சம் வரத் தோன்றுமென்றமையான், இதுவும் இகழ்ச்சிதோன்ற நின்றது.

(கு - ரை.) வெட்சிக்கானம் : குறுந். 209 : 5.

2. மு. புறநா. 157 : 10. 1 - 2. புறநா. 193 : 1 - 2.

6. மு. மணி. பதி. 32, 4 : 39.

10. புலிகடிமால் : புறநா. 201 : 15, குறிப்புரை.

16. 'தேற்றகில்லேமென்பது, தேற்றுப் புன்சொ ன்றேற்றிசின் : என்பது போலத் தெளிதற்கண் வந்தது' (திருச்சிற். 45, பேர்.); கலித். 92; 50.

18. "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை" (நற். 112; குறுந். 26); "கருங்காற், பொன்னிணர் வேங்கை", "கருங்கால் வேங்கை" (நற். 151, 168, 257).

18 - 20. வேங்கைப்பூ பரந்த பாறை புலி போற்றோன்றுமென்பது பின் வருவனவற்றாலும் விளங்கும்: "கருங்கால் வேங்கை வீயுகு துறுகல், இரும்புலிக் குருளையிற் றோன்றும்" (குறுந். 47); "மெல்லிணர் வேங்கை வியலறைத் தாயின, அழுகை மகளிர்க் குழுவை செப்ப" (பரி. 14 : 11 - 2); "குறவ ரூன்றிய குரம்பை புதைய, வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம், புலிசெத்து" (அகநா. 12); "கருங்காலின வேங்கை கான்றபூக் கன்மேல், இருங்கால் வயவேங்கை யேய்க்கும்" (திணைமாலை. 26); "நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாக நண்ணி, மறமனை வேங்கை யெனநனி யஞ்சும்" (திருச்சிற். 96); கலித். 38 : 6.

21. தொல். விளிமரபு, சூ. 12, ந. மேற். (உ0உ)

(உ0௩) கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்
தொல்லது விளைந்தென நிலம்வளங் கரப்பினும்
எல்லா வுயிர்க்கு மில்லால் வாழ்க்கை
இன்னுந் தம்மென வெம்மனோ ரிரப்பின்
5 முன்னுங் கொண்டிரென நும்மனோர் மறுத்தல்
இன்னா தம்ம வியறே ரண்ணல்
இல்லது நிரப்ப லாற்றா தோரினும்
உள்ளி வருநர் நசையிழப் போரே
அனையையு மல்லை நீயே யொன்னார்
10 ஆரெயி லவர்கட் டாகவு நுமதெனப்
பாண்கட னிறுக்கும் வள்ளியோய்
பூண்கட னெந்தைநீ யிரவலர் புரவே.

(பி - ம்.) 2 'விளைந்தது நிலம்' 3 - 4 'மில்வாழ்க்கையே யின்னுந்' 7 'நிரப்பதாற்ருது.'

திணையும் துறையும் அவை.

சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடியது.

(இ - ள்.) கழிந்த காலம் பெய்தேனெனக் கருதி மழை பெய்யாது மாறினும் முற்காலத்து விளைந்தேனெனக் கருதி நிலம் விளைவை ஒழியினும் எல்லாவுயிர்கட்கும் உயிர் வாழ்க்கையில்லை; அதுபோல இன்னமும் எமக்குப் பரிசில் தாருமென்று சொல்லி எம்போல்வார் இரப்பின் அவர்க்கு முன்னும் பரிசில் கொண்டீரென்று நும்போல்வார் மறுத்தல் இன்றுது; கேளாய்: இயற்றப்பட்ட தேரையுடைய அண்ணலே! இல்லாத பொருளைத் தேடி நிரப்பமாட்டாத வறுவியோரினும், அவராற் பரிசில் நினைந்து வரப்படுவார் (வரப்படுவார் - கொடையாளர்) கொடாராயின் அவ் * விரப்போரால் நச்சப்படும் இன்பத்தை யிழப்பர்; தம் வறுமையாற் கொடுக்க முடியாமையின் நாணி அவரெதிர்முகம் நோக்கமாட்டாது இன்பமிழக்கும் மாந்தர் தன்மை யையுமல்லை நீ, † இறந்துபடுவை; பகைவரது அரிய அரண் அவரிடத்த தாகவும் அதனை அழித்துக்கொள்ளுவதன் முன்னே நும்முடைய தெனப் பாணர்க்குக் கடனுகக் கொடுக்கும் வென்றியோடு கூடிய வண்மையை யுடையோயாதலான் எம் இறைவ! நீ இரப்போரைப் பாதுகாத்தலை முறைமையாகப் பரிகரிப்பாயாக—எ - று.

அனையையுமல்லை யென்பதற்கு இரவலர் வேண்டுமளவும் பாணியாது (தாமதியாது) முன்னே அளித்தலின், நசையிழப்போர் தன்மையையுடையாயல்லை யென்றுமாம்.

எம்மனோரென்றது பிறரை நோக்கியன்றெனவுணர்க.

'பொழிந்தென', 'விளைந்தென' என்பனவற்றை வினையெச்சமாக்கி மாறினும் கரப்பினுமென்னும் வினையோடு முடிப்பினும் அமையும்.

(கு - ரை.) 1 - 2. 'தகரவுகரம், கழிந்து......கரப்பினும் என்னும் புறப்பாட்டினுள், பொழிந்து எனவும், விளைந்து எனவும் இறந்தகாலம் பற்றி வந்தமையின் ஏனையவற்றிற்குஞ் சிறுபான்மை இறந்தகாலமு முண்டென அறிந்துகொள்க', 'கழிந்தது...கரப்பினும் : என்புழிப் பொழிந்தெனவும் விளைந்தெனவும் இறந்தகாலம் உணர்த்தின' (தொல். வினை. சூ. 6, கல். ந.); 'கழிந்தது...கரப்பினும் : எனப் பொழிந்து விளைந்தென்னும் துவ்வீற்றுத் தன்மையொருமை வினைமுற்றுக்கள்

* "ஈத்துவக்கு மின்பம்" (குறள், 228).

† "இன்மை யுரைத்தார்க் கதுநிறைக்க லாற்ருக்காற், றன்மெய் துறப்பான் மலை" (கலித். 43 : 26 - 7).

இறந்த காலமும் சிறுபான்மை காட்டுமெனவுங் கொள்க' (இ. வி. சூ. 50; உரை). கண்மாறல், ஒரு சொல்.

9 - 11. "பெரிய வாயினு மமர்கடந்து பெற்ற, அரிய வென்னா தோம்பாது வீசி" (பதிற். 44); "அரிய வெல்லா மெளிதி னிற்கொண், டுரிய வெல்லா மோம்பாது வீசி" (மதுரைக். 145 - 6). 'ஒன்னா, ராரெயிலவர்கட் டாகவு நுமதெனப் பாண்கடனிறுக்கும் வள்ளியோய்' என்பதற்கு இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்கு அந் நகரைக் கொடுத்தது இங்கே உதாரணமாக அறியற்பாலது.

மு. 'கொள்ளார் தேஎங்குறித்த கொற்றமும்-பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயுங் கொண்டான்போல் வேண்டியோர்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றியும்; தன்னையிகழ்ந்தோரையும், தான் இகழ்ந்தோரையும் கொள்ளாரென்ப...கழிந்தது பொழிந்தென என்னும் புறப்பாட்டினுள், ஒன்னார்...வள்ளியோய் என்பதுமது' (தொல். புறத்திணை. சூ. 12, ந.). (உ௦௩)

(உ௦ச) ஈயென விரத்த லிழிந்தன் றதனெதிர்
ஈயே னென்ற லதனினு மிழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர்
கொள்ளே னென்ற லதனினு முயர்ந்தன்று
தெண்ணீர்ப் பரப்பி னிமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணா ராகுப நீர்வேட் டோரே
ஆவு மாவுஞ் சென்றுணக் கலங்கிச்
சேறொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கி னதர்பல வாகும்
புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியல ரதனாற்
புலவேன் வாழிய ரோரி விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே.

(பி - ம்.) 4 'லதனி னுயர்ந்தன்று' 6 'ராகுவர்' 8 'சேற்றொடு' 10 'பழிப்பி னல்லதை'

திணையும் துறையும் அவை.

வல்வில் ஓரியைக் கழைதின்யானையார் பாடியது.

(இ - ள்.) * இழிந்தோன்கூற்றால் ஈயெனச் சொல்லி இரத்தல் இழிந்தது; அவ்வீயென்றதனெதிர் ஈயேனென்று சொல்லி மறுத்தல் அவ்விரத்

* "ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே" (தொல். எச்ச. சூ. 49).

தலினும் இழிந்தது; ஒருவன் *இரப்பதன் முன்னே †அவன் குறிப்பை முகத்தானுணர்ந்து இதனைக் கொள்வாயாகவென்று சொல்லித் ‡தான் இரந்து கொடுத்தல் ஒருவற்கு உயர்ந்தது; அதனை அவன் அவ்வாறு கொடுப்ப அதனெதிர் கொள்ளேனென்று சொல்லி மறுத்தல் அக் கொடையினும் உயர்ந்தது; தெளிந்த நீர்ப் பரப்பின் ஒலிக்கும் திரையையுடைய பெரிய கடல் நீரை உண்ணுராவர், தண்ணீரை விரும்பினோர்; ஆவும் மாவுஞ் சென்று நீரை உண்ணக் கலங்கிச் சேற்றொடு கூடிய சிறுமையையுடைத்தேயாயினும் உண்ணும் நீரையுடைய தாழ்ந்தவிடத்துச் செல்லும் வழி பலவாகும்; தாம் புறப்பட்டுச் செல்லப் பட்ட வழியிடத்து அப்பொழுது செய்யும் புள் நிமித்தத்தையும் புறப் பட்ட முழுத்தத்தையும் (முகூர்த்தத்தையும்) பழித்தலல்லது தாம் பரிசில் பெறக் கருதிச் செல்லப்பட்டோரை அவர் ஈந்திலராயினும் பரிசிலர் பழியார்; அதனால் நீ எனக்கு இன்னையாயினும் வெறேன், வாழ்வாயாக, ஓரி! ஆகாயத்தின்கண் மின்முதலிய தொகுதியை யுடைய மழைபோல யாவர்க்கும் எப்பொருளையும் வரையாது வழங்கும் வண்மையையுடையோய்! நின்னை—எ - று.

ஓரி! வள்ளியோய்! பரிசிலர் புள்ளும் பொழுதும் பழித்தலல்லது உள்ளிச்சென்றோரைப் பழியலர்; அதனால், யானும் நின்னைப் புலவேன்; வாழியரெனக் கூட்டுக.

மேற்கூறிய இரத்தல் முதல் நான்கிற்கும் ஈயெனவிரத்தலால் இழிபு பெற்றுக் கொள்ளேனெனும் உயர்பு யான்பெற்றிலேனென்பதூஉம், அவ்வாறிரப்பவும் ஈயேனென்றாற்போலப் பரிசில் நீட்டித்தலால் உள்ள இழிபு பெற்றுக் கொள்ளெனக் கொடுக்கும் உயர்ச்சி நீ பெற்றிலை யென்பதூஉம் கருத்தாகக் கொள்க.

இதனால், ஈயேனென்னும் இழிபினும் கொள்ளெனக் கொடுக்கும் உயர்பினும் நினக்குத் தக்கதறிந்து செய்யென்பது கூறினாராம்.

$‘பெருங்கட லுண்ணா ராகுப நீர்வேட்டோர்’ என்பதனாற் செல் வரேயாயினும் வள்ளியோரல்லார்பாற் செல்லேனென்பதும், ‘உண்ணீர் மருங்கி னதர்பல வாகும்’ என்பதனால் நீ வள்ளியையாகலின் நின்பால் வந்தேனென்பதும் கொள்ளப்படும்.

---

* இரப்பதன்முன்னே கொடுத்தல்: “இல்லது நோக்கி யிளிவரவு கூறாமுன், நல்லது வெஃகி வினைசெய்வார்” (பரி. 10 : 87 - 8); “இல னென்னு மெவ்வ முரையாமை யீதல், குலனுடையான் கண்ணே யுள” (குறள், 223). † புறநா. 3 : 25, குறிப்புரை.

‡ “கவர்வனர் போலக் காதலி னுய்த்தும்” (பெருங். 1. 39 : 54).

$“உவர்க்கட லன்ன செல்வரு முளரே, கிணற்றூற் றன்ன நீயுமா ருளையே” (பழம்பாடல்); “கடல் பெரிது, மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல், உண்ணீரு மாகிவிடும்” (ஔவையார்).

(கு - ரை.) 1 - 2. புறநா. 154 : 8, 180 : 2 குறிப்புரையைப் பார்க்க; கலித். 2 : 15.

4. 'அவர், வேண்டாவென்று மறுக்கவும் தாம் வலியப் போக விட்டென்றவாறு' (மதுரைக். 220. ந.).

1 - 6. 'ஈயெனவிரத்தலென்னும் புறப்பாட்டினுள், தெண்ணீர்... வேட்டோரே என்றவழி, நின் செல்வம் கடல்போற் பெரிதேனும் பிறர்க்கு இனிதாய் நுகரப்படாதென வசையைச் செம்பொருளாகாமற் கூறியவாறு காண்க' (தொல். செய். சூ. 126, ந.).

5 - 9. புறநா. 154 : 1 - 3.

10 - 11. புறநா. 124 : 1 - 3.

13. புறநா. 159 : 19; "கருவி மாமழை" (குறுந். 42); "கருவி வானம்" (சீவக. 725). (உ0௪)

(உ0௫) முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே
விறற்சின நந் தணிந்த விரைபரிப் புரவி
உறுவர் செல்சார் வாகிச் செறுவர்
தாளுள நந் தபுத்த வாண்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடைப் பொருந
சிறியவும் பெரியவும் புழைகெட விலங்கிய
மான்கண நந் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்
நோன்சிலை வேட்டுவ நோயிலை யாகுக
ஆர்கலி யாணர்த் தரீஇய கால்வீழ்த்துக்
கடல்வயிற் குழீஇய வண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா வாங்குத் தேரொ
டொளிறுமருப் பேந்திய செம்மற்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே.

திணையும் துறையும் அவை.

கடியநெடுவேட்டுவன் பரிசில் நீட்டித்தானைப் பெருந்தலைச் சாத்தனர் பாடியது.

(இ - ள்.) நிறைந்த செல்வத்தையுடைய மூவேந்தராயினும் எம்மைப் பேணுதலின்றி ஈதலை யாங்கள் விரும்பேம்; வென்றியான் உளதாகிய சினம் தீர்ந்த விரைந்த செலவையுடைத்தாகிய குதிரையை யுடைய அஞ்சி வந்தடைந்த பகைவர்க்குச் செல்லும் புகலிடமாய் அவ்வாறன்றிப் போர் செய்யும் பகைவருடைய முயற்சியையுடைய கிளர்ந்த உள்ளத்தைக் கெடுத்த வாட்போரின் மிக்க படையினை

யுடைய வெள்ளிய பூவையுடைத்தாகிய முல்லை வேலியையுடைய (புறநா. 144 : 14) கோடையென்னும் மலைக்குத் தலைவ! சிறியனவும் பெரியனவுமாகிய புழைகளைப் போக்கற விலக்கிய மானினது திரட்சியைத் தொலைத்த கடிய செலவையுடைய சினமிக்க நாயையும் வலிய வில்லையுமுடைய வேட்டுவ! நீ நோயின்றி இருப்பாயாக; இடியினது மிக்க ஓசையையுடைய புதுப்பெயலைத் தரவேண்டிக் கால்வீழ்த்துக் கடலிடத்தே திரண்ட தலைமையையுடைய முகில் நீரின்றி மீளாதவாறு போலத் தேருடன் விளங்கிய கோடுயர்ந்த தலைமையையுடைய களிற்றையின்றி மீளா, பரிசிலரது சுற்றம்—எ - று.

புரவியையுடைய விறற்சினந் தணிந்த உறுவரென இயையும்.

செல்சார்வாகித் தாளுளந் தபுத்த பொருநவென இயையும்.

புழைகெட விலங்கிய நாயென இயையும்.

வெள்வீயென்றது அதனையுடைய முல்லையை.

மூவராயினுமென்ற உம்மை சிறப்பும்மை.

கோடைப் பொருந! வேட்டுவ! பெட்பின்றீதல் யாம் வேண்டலம்; பரிசிலர் கடும்பு களிறின்று பெயரல; நீ நோயிலையாகுகவெனக் கூட்டுக.

யான் களிறின்றிப் பெயராநின்றேனென்பது கருத்தாகலின், நோயிலையாகுகவென்பது இகழ்ச்சிக் குறிப்பு.

'புழைகெட விலங்கி' என்பதூஉம் பாடம்.

(கு - ரை.) 1. மூவர் - சேர சோழ பாண்டியர். 2. பெட்பு - விருப்பம். 1 - 2. புறநா. 159 : 22 – 5.

6. கோடை - கோடை மலை. கோடை மலை என்பது இக்காலத்தில் கோடைக்கானல் என வழங்குகின்றது.

7. புழை - நுழை வழி.

9. புறநா. 209 : 14. 8 - 9. புறநா. 33 : 1 - 2.

11 - 4. கலித். 50 : 15 - 7.

13. புறநா. 15 : 9. 14. புறநா. 164 : 10. (உ0ரு)

(உ0சு) வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கு முரனுடை யுள்ளத்து
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க் கடையா வாயி லோயே
கடுமான் றோன்ற னெடுமா னஞ்சி
தன்னறி யலன்கொ லென்னறி யலன்கொல்
அறிவும் புக ழுமுடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலக முமன்றே யதனாற்
காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை

மரங்கொஃ றச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினு மத்திசைச் சோறே.

(பி - ம்.) 3 'முன்னியது', 'முரணுடை' 11 'மரங் கொறச்சர்.'

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமானஞ்சி பரிசில் நீட்டித்தானை ஔவையார் பாடியது.

(இ - ள்.) வாயில்காப்போய்! வாயில்காப்போய்! வண்மையுடையோரது செவியிடத்தே விளங்கிய சொற்களை விதைத்துத் தாம் நினைந்த பரிசிலை விளைக்கும் வலியையுடைத்தாகிய நெஞ்சினையுடைய, மேம்பாட்டிற்கு வருந்தும் இப்பரிசிலான் வாழும் இல்வாழ்க்கையையுடைய பரிசிலர்க்கு அடையாத வாயில்காப்போய்! விரைந்த குதிரையையுடைய குருசிலாகிய நெடுமானஞ்சி தான் தன் தரமறியான்கொல்லோ? அது கிடக்க, என் தரம் அறியான்கொல்லோ? அறிவும் புகழுமுடையோர் இறந்தாராக வறிய இடத்தையுடைய உலகமுமன்றே; ஆகலாற் காவினேம் கலங்களை; கட்டினேம் முட்டுக்களை; மரத்தைத் துணிக்குந் தச்சன் பயந்த மழுவையுடைய கைத்தொழில் வல்ல மகார் காட்டிடத்துச் சென்றால் அக்காட்டகம் பயன்படுமாறு அவர்க்கு எத்தன்மைத்து? எமக்கும் யாதொரு திசைக்கட் போகினும் அத்திசைக்கட் சோறு அத்தன்மைத்து—எ - று.

கலம் - யாழுமாம்.

உள்ளத்தையுடைய பரிசிலரெனினும் அமையும்.

மழுவென்றது வாய்ச்சியை; தறிகையுமாம்.

காட்டகமென்றாரேனும் கருதியது அதன்கண் மரமாகக் கொள்க.

பரிசிலர்க்குச் சிறாரும், கல்விக்கு மழுவும், செல்லுந்திசைக்குக் காடும், சோற்றிற்குக் காட்டுள் மரமும் உவமையாகக் கொள்க.

(கு - ரை.) 1. மு. சிலப். 20 : 24.

விளியேற்கும்பொழுது ஆனீறு ஏகாரம் பெற்று வந்ததற்கும் (தொல். விளி. சூ. 12, ந.) இறுதியவ்வொற்றாய் ஈற்றயலாகாரம் ஓகாரமாய் ஏகாரம் மிக்கதற்கும் (நன். சூ. 306, மயிலை.; நன். வி. சூ. 307) மேற்கோள்.

2. புறநா. 46 : 3, 237 : 4 - 5. 4. மு. புறநா. 47 : 6.

2 - 5. கலித். 68 : 3 - 5.

8 - 9. புறநா. 207 : 7.

10. "நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்", "காஅய்க் கொண்ட நும்மியம்" (மலைபடு. 13, 365).

10 - 13. "ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார், நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை யந்நாடு, வேற்றுநா டாகா தமவேயா மாயினால், ஆற்றுணா வேண்டுவ தில்" (பழ. 55).

மு. பாடாண்டிணைத் துறைகளுள், 'சேய்வரல் வருத்தம் வீடவாயில், காவலர்க் குரைத்த கடைநிலை' என்பதற்கு மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 29, இளம்.); 'வாயிலோயே......சோறே : இது தலைவனை எதிர்ப்பட்டுக் கூறாது வாயிலோனை நோக்கிக் கூறலிற் பரிசில் கடாயதன்றாம்' (தொல். புறத்திணை. சூ. 35, ந.) (உ0சு)

(உ0எ) எழுவினி நெஞ்சஞ் செல்கம் யாரோ
பருகு வன்ன வேட்கை யில்வழி
அருகிற் கண்டு மறியார் போல
அகனக வாரா முகனழி பரிசில்
தாளி லாளர் வேளா ரல்லர்
வருகென வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே யுலகம் பேணுநர் பலரே
மீளி முன்பி னாளி போல
உள்ள முள்ளவிந் தடங்காது வெள்ளென
நோவா தோன்வயிற் றிரங்கி
வாயா வண்கனிக் குலமரு வோரே.

(பி - ம்.) 4 'அகனகு'

திணையும் துறையும் அவை.

வெளிமான் துஞ்சியபின் அவன் தம்பி இளவெளிமானைப் பரிசில் கொடுவென அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது பெருஞ்சித்திரனார் பாடியது.

(இ - ள்.) எழுந்திருப்பாயாக, இனி எம்முடைய நெஞ்சமே! யாம் போவேமாக; யார்தாம், கண்ணாற் பருகுவது போலும் விருப்பமில்லாதவிடத்துத் தம்மருகே கண்டுவைத்தும் கண்டறியாதார்போல உள்ள மகிழ வாராத *தம்முகம் மாறித் தரப்பட்ட பரிசிலைப் பிறிதோரிடத்துச் செல்ல முயலும் முயற்சியில்லாதோர் விரும்பாரல்லர். இங்ஙனம் வருவீராக வென்று எதிர்கோடல் வேண்டும் தரமுடையோர்க்கு, பெரிது உலகம்; விரும்புவோரும் பலர்; ஆதலால், மறம்பொருந்திய வலியையுடைய யாளியையொப்ப, உள்ளம் மேற்கோளின்றித் தணியாது, கண்டோர் யாவர்க்கும் தெரியத் தம்மைக் கண்டு இரங்காதவனிடத்தே நின்று திரங்கி உள்ளுறக் கனியாத வலிய பழத்தின் பொருட்டுச் சுழல்வோர்—எ - று.

வன்கனியென்றது, நெஞ்சு நெகிழ்ந்து கொடாத பரிசிலை.

உலமரலும் அலமரல் போல்வதோர் உரிச்சொல்.

* "முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து" (குறள், 90)

வாயா வன்கனிக்கு உலமருவோர் யாரோ? நெஞ்சமே! உள்ளம் உள்ளவிந்தடங்காது யாளிபோல இனி எழுவெனக் கூட்டி வினை முடிவு செய்க.

வரிசையோர்க்கு யாளிபோல உள்ளம் உள்ளவிந்தடங்காதென முற்றாக்கி உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 1. "எழுவினி வாழியென் னெஞ்சே" (குறுந். 11 : 4).

2. "பருகு வன்ன காத லுள்ளமொடு" (அகநா. 399); "பருகு வன்ன வருகா நோக்கமொடு" (பொருந. 77); "பருகு வன்ன நோக்க மொடு" (பெருங். 3. 7 : 80); "பருகுவ னன்ன வார்வத்த னாகி" (நன். பாயிரம்); "பருகுவான் போல நோக்கும்", "பருகுவனள்போ னோக்கி" (பாக. 4. துருவன்பதம், 35; 10. சகடமுதைத்த 21); "மலர்த் தடங் கண்ணே வாயாப், பருகுவான் போல நோக்கி" (கூர்ம. திருக் கல்யாண. 61).

7. இவ்வடியுடன், "காத மிருபத்து நான்கொழியக் காசினியை, ஓதக் கடல்கொண் டொளித்ததோ - மேதினியிற், கொல்லிமலை தேன் சொரியுங் கொற்றவா நீமுனிந்தால், இல்லையோ வெங்கட் கிடம்" (கம்பர் பாடல்) என்பது ஒப்புநோக்கற்பாலது.

8. "ஆளி நன்மா னணங்குடைக் குருளை, மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி" (பொருந. 139 - 40).

11. "நற்றோண் மருவரற் குலமரு வோரே" (ஐங்குறு. 464)

(உ0எ)

(உ0அ) குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்
டீங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையன வறிந்து நல்கினர் விடினே.

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமானஞ்சியுழைச் சென்ற பெருஞ்சித்திரனாரைக் காணாது இதுகொண்டு செல்கென்று அவன் பரிசில் கொடுப்பக் கொள்ளாது அவர் சொல்லியது.

(இ - ள்.) குன்றுகளும் மலைகளும் பல பின்கழிய வந்தேன் யான் பரிசில் கொண்டேனாய்ப் போதற்கெனச் சொல்லி நின்றவென்னை அன்புற்றருளி இப்பொருளைக் கொண்டு இவ்வாறு போக, தானெனச்

சொல்ல, என்னை எப்பரிசறிந்தான் பகைவரால் தடுத்தற்கரிய வேந்தன்? என்னை யழைத்துக் காணாதே தந்த இப்பொருட்கு யான் ஓர் ஊதியமே கருதும் பரிசிலனல்லேன்; விரும்பித் தினைத்துணையளவா யினும் நன்று, அந்தப் பரிசிலரது கல்விமுதலாகிய பொருந்திய எல்லையையறிந்து கொடுத்துவிடின்—எ - று.

ஈங்கனஞ் செல்கவென்றது, காணாதே அவன் சொல்லிவிட்ட வார்த்தையை.

அவர் துணையளவறிந்து பேணி நல்கினர் விடின், தினையள வாயினும் இனிதெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

யான் தரங்கெடப் பொருள் கொடுபோமவன் அல்லேன்; அவனாயின் இதுவும் கொடுபோவன்; நீ எனக்குத் தரமறிந்து தர வேண்டுமென்பதாம்.

'அவர் துணையளவு' எனத் தம்மை உலகின்மேலிட்டுக் கூறினார்.

(கு - ரை.) 1 - 2. "சேட்சென்று, நல்குவார் கட்டே நசை" (நாலடி. 263).

9. புறநா. 121 : 3.

7 - 9. புறநா. 159 : 22 - 5, 205 : 1 - 2.

மு. பரிசில்நிலை கூறியதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 36, ந. (உ0அ)

(உ0கூ) பொய்கை நாரை போர்விற் சேர்க்கும்
நெய்தலங் கழனி நெல்லரி தொழுவர்
கூம்புவிடு மென்பிணி யவிழ்ந்த வாம்பல்
அகலடை யரியன் மாந்தித் தெண்கடற்
படுதிரை யின்சீர்ப் பாணி தூங்கும்
மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந
பல்கனி நசைஇ யல்குவிசும் புகந்து
பெருமலை விடரகஞ் சிலம்ப முன்னிப்
பழனுடைப் பெருமரந் தீர்ந்தெனக் கையற்றுப்
பெறாது பெயரும் புள்ளினம் போலநின்
நசைதர வந்துநின் னிசைநுவல் பரிசிலேன்
வறுவியேன் பெயர்கோ வாண்மேம் படுந
ஈயா யாயினு மிரங்குவே னல்லேன்
நோயிலை யாகுமதி பெரும நம்முட்
குறுநணி காண்குவ தாக நாளும்
நறும்ப லொலிவருங் கதுப்பிற் றேமொழித்
தெரியிழை மகளிர் பாணி பார்க்கும்
பெருவரை யன்ன மார்பிற்
செருவெஞ் சேஎய்நின் மகிழிருக் கையே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

* மூவன் பரிசில் நீட்டித்தானைப் பெருந்தலைச்சாத்தனார் பாடியது.

(இ - ள்.) பொய்கைக்கண் மேய்ந்த நாரை போரின்கண்ணே உறங்கும் நெய்தலையுடைய அழகிய வயற்கண் நெல்லையறுக்கும் உழவர் முகையவிழ்கின்ற மெல்லிய இதழ்கள் நெகிழ்ந்த ஆம்பலினது அகன்ற இலையதனாலே மதுவையுண்டு தெளிந்த கடலினது ஒலிக்குந் திரையின் இனிய சீராகிய தாளத்தேயாடும் மென்புலத்தூர்களை யுடைய நல்ல நாட்டுக்கு வேந்தே! பல பழத்தையும் நச்சித் தாம் வாழ்தற்கிடமாகிய ஆகாயத்தின் கண்ணே உயரப் பறந்து பெரிய மலையின்முழை எதிரொலி முழங்கச் சென்று அவ்விடத்துப் பழ முடைய பெரிய மரம் பழுத்து மாறிற்றாக வருந்திப் பழம் பெறாதே மீளும் புள்ளினத்தையொப்ப நினது நச்சப்படுந்தன்மை கொடுவர வந்து நின்புகழைக் கூறும் பரிசிலேன் யான் வறியேனாய் மீளக் கடவேனோ? வாட்போரின்கண் மேம்படுவோய்! நீ ஒன்றை ஈத்திலை யாயினும் யான் அதற்கு வருந்துவேனல்லேன்; அது நிற்க, நோயின்றி யிருப்பாயாக; பெரும! நம்மிடத்து உளதாகிய அணிய அணுமை யைக் காண்பதாக, நாடோறும் நறிய பலவாகிய தழைத்த மயிரையும் தேன்போலுஞ் சொல்லையும் ஆராய்ந்த ஆபரணத்தினையும் உடைய மகளிர் ஒருவரினொருவர் புணர்தற்குக் காலம் பார்க்கும் பெரிய மலைபோலும் மார்பினையுடைய போரை விரும்பும் சேயையொப்பாய்! நினது மகிழ்ச்சியையுடைய நாளோலக்கம்—எ - று.

பாணிபார்க்கும் மார்பு - பாணி பார்த்தற்கு ஏதுவாகிய மார்பு.

நம்முட் குறுநணி காண்குவதாகவென்றது, நீ என் மாட்டுச் செய்த அன்பின்மையை அவ்விருக்கையன்றிப் பிறரறியாதொழிவாராக வென்னும் நினைவிற்று.

பொருந! வாண்மேம்படுந! சேஎய்! நின் இசைநுவல் பரிசிலேன் வறுவியேன் பெயர்கோ? நீ ஈயாயாயினும் இரங்குவேனல்லேன்; பெரும! நோயிலையாகுமதி; நம்முட் குறுநணியை நின் இருக்கை காண்குவதாக; பிறர் காணாதொழிகவெனக் கூட்டுக.

நோயிலையாகென்பது, நீ செய்த தீங்கால் நோயுறுவை, அஃதுறா தொழிக வென்பதாம்; இனி, நின்மகிழிருக்கைக்கண் நம்முள் மிக அணித்தாகக் காணுங் காட்சி உளதாகவென்றுமாம்.

இதனாற் காட்சியுண்டாகாதென்பது குறிப்பு.

இனி, 'குறுநணி காண்குவதாக' என்பதற்கு நம்மிடத்து மிகவும் மனத்தாற்காணுங் காட்சி உளதாகவென்பது கூடாது, நீ செய்த கொடுமையானென்றுரைப்பினும் அமையும்.

---

* மூவனென்னும் பெயர் நற்றிணை, 18-ஆம் செய்யுளிலும் வந்துள்ளது.

(கு - ரை.) 1. போர்வு - நெற்கதிர்ப்போர்; "கயலார் நாரை போர்விற் சேக்கும்" (ஐங்குறு. 9).

2. தொழுவர் - தொழில் செய்யும் உழவர். புறநா. 24 - 1; "நெல்லரி தொழுவர்" (நற். 195).

3. மு. புறநா. 383 : 7; "ஆம்ப லாயிதழ் கூம்புவிட" (குறிஞ்சிப். 223).

6. மு. புறநா. 42 : 18. 8. புறநா. 91 : 8.

7. அல்குதல் - தங்குதல்.

9. கை, செய்வதென்னும் பொருளில் வந்ததற்கு மேற்கோள்; குறள், 925 - பரிமேல்.

12. வினையெச்சத் தன்மை வினைக்குறிப்பு முற்றுக்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. 61, ந.

14. புறநா. 205 : 9.

19. இருக்கை - நாளோலக்கம். காலைப்பொழுதில் தன்னை யாவரும் எளிதிற் காணும்படி அரசன் வீற்றிருக்குமிடம். (உ0கூ)

(உகO) மன்பதை காக்குநின் புரைமை நோக்கா
தன்புகண் மாறிய வறனில் காட்சியொடு
நும்ம னோருமற் றினைய ராயின்
எம்ம னோரிவட் பிறவலர் மாதோ
செயிர்தீர் கொள்கை யெம்வெங் காதலி
உயிர்சிறி துடைய ளாயி னெம்வயின்
உள்ளா திருத்தலோ வரிதே யதனால்
அறனில் கூற்றந் திறனின்று துணியப்
பிறனா யினன்கொ லிறீஇயரென் னுயிரென
நுவல்வுறு சிறுமையள் பலபுலந் துறையும்
இடுக்கண் மனையோ உரிய விந்நிலை
விடுத்தேன் வாழியர் குருசி லுதுக்காண்
அவல நெஞ்சமொடு செல்வனிற் கறுத்தோர்
அருங்கடி முனையரண் போலப்
பெருங்கை யற்றவென் புலம்புமுந் துறுத்தே.

திணையும் துறையும் அவை.

சேரமான் குடக்கோச்சேரலிரும்பொறை பரிசில் நீட்டித்தானைப் பெருங்குன்றூர்கிழார் பாடியது.

(இ - ள்.) உயிர்ப்பன்மையைக் கர்க்கும் நினது உயர்ச்சியைப் பாராது காதல் கண்மாறிய அறமில்லாத பார்வையுடனேகூடி நும்போல்வார் யாவரும் இதற்கு ஒத்த அறிவையுடையராய் அருள்மாறுவாராயின் எம்போல்வார் இவ்வுலகத்துப் பிறவாதொழியக்கடவர்;

குற்றந்தீர்ந்த கற்பினையுடையளாய எம்மை விரும்பிய காதலி இறந்து படாது உயிர்வாழ் வுடையாளாகக் கூடின் எம்மிடத்து நினையா திருத்தல் அரிது; அதனால், அறனில்லாத கூற்றம் திறப்பாடின்றி உயிர் கொளத் துணிய இறந்துபட்டான் கொல்லோ? என்னுயிர் கெடுவதாக வென்று சொல்லுதலுற்ற நோயையுடையாளாய்ப் பலபட வெறுத் துறையும் மனைவியது துன்பம் தீர்க்க வேண்டி இப்பொழுதே விடை கொண்டேன்; வாழ்வாயாக; இறைவ! இதனைப் பாராய் : இன்னா மையையுடைய நெஞ்சத்துடனே போவேன், நின்னை வெகுண்டாரது அணுகுதற்கரிய காவலையுடைய முனையிடத்து அரணைப்போலப் பெரிய செயலற்ற எனது வறுமையை முன்போகவிட்டு—எ - று.

குருசிலே! நும்மனோரும் இனையராயின் எம்மனோர் இவட்பிறவார்; எம் காதலி உயிர் சிறிது உடையளாயின் நினையாதிருத்தல் அரிது; அதனால், அம்மனையோள் இடுக்கண் தீர்க்கவேண்டி இப்பொழுதே விடுத்தேன்; நிற்கறுத்தோர் முனையரண்போலக் கையற்ற என் புலம்பு முந்துறுத்துச் செல்வேன்; வாழியரெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

'உதுக்காண்' என்றது அச்செலவை.

என் வறுமை என்னை விட்டு நீங்கப்போதலையொழியப் புலம்பை முந்துறுத்துக்கொண்டு போகாநின்றேனென இரங்கிக் கூறியவதனால், வாழியர் குருசில் என்பது இகழ்ச்சிக்குறிப்பாயிற்று.

'உயிர்வெங் காதலி' என்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 1. புறநா. 71 : 17; கலித். 65 : 3.

2. கண்மாறிய - நீங்கிய.

3. 'நும்ம னோருமற் றினையராயி னெம்புழி அன்னோரென்பது உவமவுருபாகிய இடைச்சொன் முதனிலையாகப் பிறந்த பெயர்' (தொல். எச்ச. சூ. 18, ந.)

3 - 4. தொல். எச்ச. சூ. 14, ந. மேற்.; 'நும்ம னோருமற் றினைய ராயின், எம்ம னோரிவட் பிறவலர் மாதோ : என்புழி அன்னோரென்பது இடைச்சொன்முதனிலையாகப் பிறந்த குறிப்புப்பெயராகலானும், நும் மையன்னோர் எம்மையன்னோரென இரண்டாவது விரித்தற் கேற்புடைமையறிக' (தொல். எச்ச. சூ. 18, சே.)

5. "செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ" (புறநா. 3 : 6).

7. மு. புறநா. 237 : 9.

14. முனை - பகைப்புலம்.

15. புலம்பு - வறுமை. (உ௲௦)

(உகக) அஞ்சுவரு மரபின் வெஞ்சினப் புயலே
றணங்குடை யரவி னருந்தலை துமிய
நின்றுகாண் பன்ன நீண்மலை மிளிரக்
குன்றுதூ வெறியு மரவம் போல

முரசெழுந் திரங்குந் தானையொடு தலைச்சென்
றரைசுபடக் கடக்கு முரைசா ரேன்றனின்
உள்ளி வந்த வோங்குநிலைப் பரிசிலென்
வள்ளியை யாதலின் வணங்குவ னிவனெனக்
கொள்ளா மாந்தர் கொடுமை கூற நின்
உள்ளியது முடித்தோய் மன்ற முன்னாட்
கையுள் ளதுபோற் காட்டி வழிநாட்
பொய்யொடு நின்ற புறநிலை வருத்தம்
நாணு யாயினு நாணக் கூறியென்
நுணங்கு செந்நா வணங்க வேத்திப்
பாடப் பாடப் பாடுபுகழ் கொண்ட நின்
ஆடுகொள் வியன்மார்பு தொழுதனென் பழிச்சிச்
செல்வ லத்தை யானே வைகலும்
வல்சி யின்மையின் வயின்வயின் மாறி
இல்லெலி மடிந்த தொல்சுவர் வரைப்பிற்
பாஅ லின்மையிற் பல்பாடு சுவைத்து
முலைக்கோள் மறந்த புதல்வனொடு
மனைத்தொலைந் திருந்தவென் வாணுதற் படர்ந்தே.

(பி - ம்.) 10 'உள்ளியது செய்தோய்' 22 'மனைத்தொலைஇந் திருந்த'

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) அஞ்சத்தக்க முறைமையையுடைய வெய்ய சினத்தையுடைய மழையின் கண் உள்ள இடியேறு, அச்சமுடைய பாம்பினது அணுகுதற்கரிய தலை துணிய, நிலவகலத்தை நின்று பார்ப்பது போன்ற நீண்ட மலை பிறழச் சிறுமலைதூவ எறியும் ஓசைபோல வீரமுரசு கிளர்ந்தொலிக்கும் படையுடனே மேற்சென்று வேந்தர் பட எதிர்நின்று கொல்லும் புகழமைந்த தலைவ! நீ வள்ளியையாதலால் எமக்குத் தாழ்ந்து பரிசில் நல்குவன் இவனென்று நின்னை நினைந்து வந்த உயர்ந்த நிலைமையையுடைய பரிசிலேனாகிய யான் நினக்கு எம்மை எதிரேற்றுக் கொள்ளா மாந்தரது கொடுமையைச் சொல்லவும் நின்னுடைய நினைவே செய்தாய், நிச்சயமாக; முன்னைநாட் பரிசில் கையிலே புகுந்ததுபோலக் காட்டிப் பிற்றைநாட் பொய்யைப் பெற்றுநின்ற நினது புறநிலைமைக்கு யான் வருந்திய வருத்தத்திற்கு நீதான் நாணுயாயினும் நீ நாணச் சொல்லி எனது நுண்ணிய ஆராய்ச்சியையுடைய செவ்விய நா வருந்தப் புகழ்ந்து நாடோறும் பாடப் பாடப் பின்னரும் பாட வேண்டும் புகழை ஏற்றுக்கொண்ட நினது வெற்றி பொருந்திய அகன்ற மார்பை வணங்கி வாழ்த்திப் போவேன் யான்; நாடோறும்

உணவில்லாமையான் இடந்தோறும் இடந்தோறும் மாறிமாறி அகழ்தலால் இல்லெலி மடிந்த பழைய சுவராகிய எல்லையையுடைய, பாலில்லாமையாற் பலபடி சுவைத்து முலையுண்டலை வெறுத்த பிள்ளையுடனே மனையின்கண்ணே வறுமையுற்றிருந்த என்னுடைய ஒளி பொருந்திய நுதலையுடையாளை நினைந்து—எ - று.

தோன்றல்! நின் உள்ளி வந்த பரிசிலேனாகிய நான் கூற, நின் உள்ளியது செய்தாயாதலான் வருத்தங் கூறி ஏத்தித் தொழுதனென் பழிச்சி வரைப்பின் மனைக்கண்ணே புதல்வனொடு தொலைந்திருந்த என் வாணுதலை நினைந்துசெல்வல் யானெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

நாணக்கூறியென்றதன்பின்னே ஏத்திப் பழிச்சிச் செல்வலென்றமையான், அவை குறிப்புமொழி.

வரைப்பின் மனையென இயையும்.

'வள்ளிய னாகலின் வணங்குவ னிவனென' என்று பாடமாயின், வண்மையையுடையனாதலால் இவன் எமக்குத் தாழ்ந்து பரிசிலளிப்பனெனக் கருதியென்க.

'வள்ளியை யாகலின் வணங்குவ னிவனெனக், கொள்ளா மாந்தர் கொடுமை கூற' என்றதற்கு வள்ளியையாதலின் இவனை வணங்குவேனென நினைந்து வணங்க அதுபாராது நின்பாற் பரிசில் பெறாத மாந்தர்.

தூவவெறியுமென்பது, தூவெறியுமென வகரங்கெட முடிதல் புறநடையாற் கொள்க; விகாரமெனினும் அமையும்.

'தூவவெறியும்' என்பதூஉம் பாடம்.

புறநிலை என்பதற்குப் புறங்கடை நின்றநிலையென்றுமாம்.

'இல்லெலி மடிந்த தொல்சுவர்' என்பதற்கு இல்லெலிதான் தொழில் மடிந்த தொல்சுவரென்று உரைப்பினும் அமையும்.

நின்னைக் கொடுமை கூறவென்று உரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 1 - 4. புறநா. 17 : 38 - 9, குறிப்புரை; 373 : 20 - 21; "உருமெறிந்தெங்கும், பெருமலை தூவெறிந் தற்றே" (களவழி 6); கலித். 45 : 5.

6. கலித். 105 : 1.

16. மார்பு தொழுதுபழிச்சுதல் : புறநா. 155 : 8; பரி. 13 : 12 - 3.

20 - 21. புறநா. 164 : 3 - 5. (௨௧௧)

(௨௧௨) நுங்கோ யாரென வினவி னெங்கோக்
களமர்க் கரித்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கிற் காமம் வீட வாரா
ஆரற் கொழுஞ்சூ டங்கவு ளடாஅ
வைகுதொழின் மடியு மடியா விழவின்

யாணர் நன்னாட் டுள்ளும் பாணர்
பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்
கோழி யோனே கோப்பெருஞ் சோழன்
பொத்தி நண்பிற் பொத்தியொடு கெழீஇ
வாயார் பெருநகை வைகலு நக்கே.

(பி - ம்.) 10 'வைகலு மகிழ்ந்தே'.

திணை - அது; துறை - இயன்மொழி.

கோப்பெருஞ்சோழனைப் பிசிராந்தையார் பாடியது.

(இ - ள்.) உம்முடைய இறைவன் யார்தானென்று கேட்பீராயின், எம்முடைய இறைவன் களமர்க்கு அரிக்கப்பட்ட முதிர்ந்த விரும்பத்தக்க மதுவை ஆமையிறைச்சியுடனே வேட்கைதீர அக்களமர் உண்டு ஆரன்மீனாகிய கொழுவிய சூட்டை அழகிய கதுப்பகத்தேயடக்கி மதுவுண்ட மயக்கத்தால் வைகுந்தொழிலொழியும் நீங்காத விழவினையுடைய புது வருவாயுளதாகிய நல்ல சோழநாட்டுள்ளும் பாணருடைய வருத்தமுற்ற சுற்றத்தினது பசிக்குப் பகையாய் உறையூரென்னும் படைவீட்டிடத்திருந்தான், கோப்பெருஞ்சோழன்; புரையில்லாத நட்பினையுடைய பொத்தியென்னும் புலவனொடு கூடி மெய்ம்மையார்ந்த மிக்க மகிழ்ச்சியை நாடோறும் மகிழ்ந்து—எ - று.

நன்னாட்டுள்ளுமென்ற உம்மை சிறப்பும்மை.

கோழி - உறையூர்.

நுங்கோ யாரென வினவின், எங்கோக் கோப்பெருஞ்சோழன், அவன் பசிப்பகையாகிப் பொத்தியொடு வைகலும் நக்குக் கோழியிடத்திருந்தானெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

ஆதிக் கெழீஇ நக்கென்னுஞ் செய்தெனெச்சங்களைக் கோழியோமென்னும் வினைக்குறிப்போடு முடிக்க.

(கு - ரை.) 1. மு. பதிற். 20 - 1.

2. களமர் - களத்தே சென்று தொழில் செய்வோர்.

4. சூடு - சுடப்பட்டது.

3 - 4. புறநா. 42 : 14 - 7. (உகஉ)

(உகங) மண்டம ரட்ட மதனுடை நோன்றாள்
வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே
பொங்குநீ ருடுத்தவிம் மலர்தலை யுலகத்து
நின்றலை வந்த விருவரை நினைப்பிற்
றொன்றுறை துப்பினின் பகைஞரு மல்லர்
அமர்வெங் காட்சியொடு மாறெதிர் பெழுந்தவர்

நினையுங் காலை நீயு மற்றவர்க்
கனையை யல்லை யடுமான் றோன்றல்
பரந்துபடு நல்லிசை யெய்தி மற்றுநீ
உயர்ந்தோ ருலக மெய்திப் பின்னும்
ஒழித்த தாய மவர்க்குரித் தன்றே
அதனால், அன்ன தாதலு மறிவோய் நன்றும்
இன்னுங் கேண்மதி யிசைவெய் யோயே
நின்ற துப்பொடு நிற்குறித் தெழுந்த
எண்ணில் காட்சி யிளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே
அமர்வெஞ் செல்வ நீயவர்க் குலையின்
இகழுந ருவப்பப் பழியெஞ் சுவையே
அதனால், ஒழிகதி லத்தைநின் மறனே வல்விரைந்
தெழுமதி வாழ்கநின் னுள்ள மழிந்தோர்க்
கேம மாகுநின் றுணிழன் மயங்காது
செய்தல் வேண்டுமா னன்றே வானோர்
அரும்பெற லுலகத் தான்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே.

(பி - ம்.) 24 'விதுப்புறு'

திணை - வஞ்சி ; துறை - துணைவஞ்சி.

அவன் மக்கண்மேற் சென்றானைப் புல்லாற்றூர் எயிற்றியனார் (பி- ம். எயிற்றியார்) பாடியது.

(இ - ள்.) மடுத்தெழுந்த போரின்கட் கொன்ற மிகுதிபொருந்திய வலியமுயற்சியையுடைய வெண்கொற்றக்குடையான் உலகத்தை நிழல் செய்து புகழால் விளக்கும் வென்றியையுடைய வேந்தே! கிளர்ந்த நீரையுடைய கடலாற் சூழப்பட்ட இப்பரந்தவிடத்தையுடைய உலகத்தின்கண் நின்னிடத்துப் போர்செய்யவந்த இருவரையும் கருதின், பழையதாய்த் தங்கப்பட்ட வலிமையுடைய நின் பகைவேந்தராகிய சேரபாண்டியரு மல்லர், போரின்கண் விரும்பிய காட்சியுடனே நின்னொடு பகையாய் வேறுபட்டெழுந்த அவ்விருவர்தாம்; நினையுங் காலத்து நீயும் அவர்க்கு அத்தன்மையையாகிய பகைவனல்லை; பகையைக் கொல்லும் யானையினை யுடைய தலைவ! நீ பரந்துபட்ட நல்ல புகழை இவ்வுலகத்துப் பொருந்தித் தேவருலகத்தின்கட் போய்ப் பின்பு நீ ஒழித்த அரசாட்சியுரிமை அவர்க் குரித்து! ஆதலால், அப்பெற்றித்தாதலும் அறிவோய்! பெரிதும் இன்னமும் கேட்பாயாக; புகழை விரும்புவோய்! நிலைபெற்ற வலியோடு நின்னைக் கருதிப் போர் செய்தற்கு எழுந்திருந்த சூழ்ச்சியில்லாத அறிவையுடைய நின் புதல்வர் தோற்பின் நினது பெரிய செல்வத்தை அவர்க்கொழிய

யாவர்க்குக் கொடுப்பை? போரை விரும்பிய செல்வ! நீ அவர்க்குத் தோற்பின் நின்னையிகழும் பகைவர் உவப்பப் பழியை உலகத்தே நிறுத்துவை: ஆதலான், ஒழிவதாக நின்னுடைய மறன்; கடிதின் விரைந்தெழுந்திருப்பாயாக; நின்னுடைய உள்ளம் வாழ்வதாக; அஞ்சினோர்க்கு அரணாகும் நினதடிநிழல் மயங்காமற் செய்தல்வேண்டும், நல்வினையை; விண்ணோரது பெறுதற்கரிய உலகத்தின்கண் அமைந்தவர் விரைந்த விருப்பத்தோடு விருந்தாக ஏற்றுக்கொள்ள—எ - று.

மற்று : அசை. தில் : விழைவின்கண் வந்தது.

வானோருலகென்றது, ஒட்டன்றி ஒருபெயராய் நின்றது.

வேந்தே! நின்மறனொழிக; ஆன்றவர் விருந்தெதிர்கொளற்கு நன்று செய்தல்வேண்டும்; ஆதலால், அதற்கு விரைந்தெழுவாயாக; நின்னுள்ளம் வாழ்வதாகவெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

செல்வமும் பழியும் சினைவினைப்பாற்பட்டு முதல்வினை கொண்டன.

எஞ்சுதல் - இவர்க்குப்பின்னும் நிற்றல்.

தாணிழல் மயங்காதென்பதற்கு நினக்கு ஒரு தீங்கும் வாராமலென்றதாகக் கொள்க.

இனி 'அதனு லன்ன தாதலு மறிவோய்' என்றதற்கு உயர்ந்தோருலகம் எய்துவது காரணத்தால் அத்தாயம் அவர்க்கு அப்படியேயுரித்து; அன்னதாதல் நீயறிவையென முற்றுகவும், அழிந்தோர்க்கு ஏமமாகும் நின் தாணிழலென முற்றுக்கி மயங்காது தெளிந்துநின்று நன்று செய்தல் வேண்டுமெனவும் உரைப்பாரும் உளர்.

'மாவெங் காட்சியொடு மாறெதிர்த் தெழுந்தவர்' என்று பாடம் ஓதுவாரும் உளர்.

(கு - ரை.) 1. "மண்டமர ரட்ட களிற்றன்னோன்" (கலித். 61).

3. புறநா. 18 : 11 - 12, 19 : 11, 201 : 17, 363 : 1.

9 - 10. புறநா. 27 : 7 - 9, குறிப்புரை.

10 - 11. புறநா. 75 : 1 - 2.

15 - 8. புறநா. 45 : 5 - 6. 22 - 4. புறநா. 62 : 18 - 9. (உகங)

(உகச) செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐய மருஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனிற்
றெய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்

தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தறவத் தலையே.

(பி-ம்.) 2 'மாறாஅர்' 6 'துயந்திசினோரே', 'துயர்ந்திசினோரே' 10 'பிறப்பின் வன்மையுங்'

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

அவன் * வடக்கிருந்தான் சொற்றது.

(இ-ள்.) அறவினையைச் செய்வேமோ அல்லேமோவென்று கருதி ஐயப்பாடு நீங்கார் அழுக்குச்செறிந்த காட்சிநீங்காத உள்ளத் தினையுடைய தெளிவில்லாதோர்; யானைவேட்டைக்குப் போவோன் யானையையும் எளிதாகப் பெறுவன்; குறும்பூழ் வேட்டைக்குப் போவோன் அது பெறாது வறிய கையினனாயும் வருவன்; அதனால் உயர்ந்த விருப்பத்தையுடைய உயர்ந்தோர்க்குத் தாம் செய்யப்பட்ட நல்வினைக்கூற்றிலே அதனை அனுபவித்தலுண்டாமாயின் அவர்க்கு இருவினையும் செய்யப்படாத உம்பருலகத்தின்கண் இன்பம் அனுபவித்தலுங் கூடும் (பி-ம். கூட்டும்); அவ்வுலகத்தின்கண் நுகர்ச்சி யில்லையாயின், மாறிப் பிறத்தலிலேகூடும் பிறப்பின்கண் இன்மை எய்தவுங்கூடும்; மாறிப் பிறவாரென்று சொல்லுவாருளராயின் இமய மலையின் சிகரம் ஓங்கினாற்போன்ற தமது † புகழை நிலை பெறுத்தி வசையில்லாத உடம்பொடு கூடிநின்று இறத்தல் மிகத் தலையாயது; அதனால் எவ்வாற்றானும் நல்வினைசெய்தல் அழகிது—எ-று.

உயர்ந்திசினோர்க்கென்னும் நான்காவதன்றியும் உயர்ந்திசினோர் செய்வினைமருங்கின் எய்தலுண்டெனின், இவர்க்கு நுகர்ச்சியுங்கூடு மென்றுரைப்பினும் அமையும்.

'பிறவாராயினும்' என்னும் உம்மை அசைநிலை; உம்மையின்றி ஓதுவாரும் உளர்.

'காட்சியொடு நீங்கா நெஞ்சத்து' என்பதூஉம் பாடம்.

(கு-ரை.) 4-5. குறும்பூழ் - ஒருவகைப் பறவை. "பொறாமால் கரிவேட்டும் பூழ்வேட்டும் போனார், உரியார் பெறுவ ரொழிந்தார் பெறாரே" (தத்துவ. கலிமடல்).

7-8. புறநா. 174 : 19-20, குறிப்புரை.

6-9. புறநா. 38 : 12-6.

---

* புறநா. 65 : 9-11, குறிப்புரை.

† "வசையிலா வண்பயன் குன்று மிசையிலா யாக்கை பொறுத்த நிலம்" (குறள், 239).

(உகரு) கவைக்கதிர் வரகி னவைப்புறு வாக்கல்
தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்டயிர்க் கொளீஇ
ஆய்மக ளட்ட வம்புளி மிதவை
அவரை கொய்யுந ரார மாந்தும்
தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் வாராரென்ற சான்றோர்க்கு அவர் வருவாரென்று சொல்லியது.

(இ - ள்.) கவர்த்த கதிரினையுடைய வரகினது குற்றுதலுற்ற வடிக்கப்பட்ட சோற்றையும் தாதாக உதிர்ந்த எருவையுடைய தெருவின்கண் போதொடு தழைத்த வேளையினது வெள்ளிய பூவை வெளிய தயிரின்கட் பெய்து இடைமகள் அடப்பட்ட அழகிய புளிங்கூழையும் அவரை கொய்வார் நிறைபவுண்ணும் தென்திக்கின்கட் பொதியின்மலையை யுடைய பாண்டியனது நல்ல நாட்டினுள்ளும் சேய்த்தாகிய பிசிரென்னும் ஊரிடத்தானென்று சொல்லுவார், என்னுயிரைப் பாதுகாப்போனை; அவன் எமக்குச் செல்வமுடைய காலத்து நிற்பினும் யாம் இன்னாமை யுறுங்காலத்து ஆண்டு நில்லான்—எ - று.

மன் : அசைநிலை.

(கு - ரை.) 1. "வரகி னவைப்புமா ணரிசி" (அகநா. 394 : 3) கவைக்கதிர் வரகு : மலைபடு. 112 - 3, பெருங். 1. 49 : 105.

2. "தாதெரு மறுகு" (நற். 343 : 3; அகநா. 165 : 4).

3. "வேளை வெண்பூ" (புறநா. 23 : 21).

3 - 4. "தயிர்மிதி மிதவை" (அகநா. 340 : 15).

6. மு. புறநா. 33 : 7. (உகரு)

(உகசு) கேட்டன் மாத்திரை யல்ல தியாவதும்
காண்ட லில்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்
அரிதே தோன்ற லதற்பட வொழுகலென்
றையங் கொள்ளன்மி னாரறி வாளீர்
இகழ்வில னினிய னியாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்

பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடைய னதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவ னொழிக்கவவற் கிடமே.

(பி - ம்.) 2 'காண்டலீயாது'

திணையும் துறையும் அவை.

அவன் வடக்கிருந்தான் பிசிராந்தையார்க்கு இடனொழிக்க வென்றது.

(இ - ள்.) 'நின்னை அவன் கேட்டிருக்கும் அளவல்லது சிறிது பொழுதும் காண்டல்கூடாது பல்யாண்டு செல்லத் தவறின்றாக மருவிப் போந்த உரிமையையுடையோராயினும் அரிதே தலைவ! அவ்வழுவாத கூற்றிலே படவொழுகுதல்' என்று கருதி ஐயப்படா தொழிமின்; நிறைந்த அறிவினையுடையீர்! அவன் என்னை என்றும் இகழ்ச்சியிலனாய் இனிய குணங்களையுடையன்; பிணித்த நட்பினை யுடையன்; புகழ் அழியவரூஉம் பொய்ம்மையை விரும்பான்; தனது பெயரைப் பிறர்க்குச் சொல்லும்பொழுது என்னுடைய பெயர் பேதை மையையுடைய சோழனென்று எனது பெயரைத் தனக்குப் பெய ராகச் சொல்லும் மிக்க அன்புபட்ட உரிமையையுமுடையன்; அதற்கு மேலே இப்படி யான் துயரமுறுங்காலத்து ஆண்டு நில்லான்; இப்பொழுதே வருவன்; அவனுக்கு இடம் ஒழிக்க—எ - று.

'அதற்பட' என்பதற்கு அவ்விறந்துபாட்டிலே படவென்றும், 'இகழ்விலன்' என்பதற்கு இகழப்படுவன குணமிலனென்றும் உரைப் பினும் அமையும்.

பேதைச்சோழனென்றது, தான் தன்னை இழித்துக்கூறியது.

(கு - ரை.) 1 - 5. "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான், நட்பாங் கிழமை தரும்" (குறள், 785).

6. "யாத்தன்று நட்பே" (குறுந். 313 : 4).

7. "பொய்யாமை யன்ன புகழில்லை" (குறள், 296). (உகசு)

(உகஎ) நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்
அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்
தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
இசைமரபாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை யீங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே

அதனால், தன்தோ லியங்காத் தேயத் துறையும்
சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னோனை யிழந்தவிவ் வுலகம்
என்னா வதுகொ லளியது தானே.

திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

அவன் வடக்கிருந்தானுழைச் சென்ற பிசிராந்தையாரைக் கண்டு பொத்தியார் பாடியது.

(இ - ள்.) கருதுங்காலத்து வியக்குந் தன்மையையுடைத்து, அத்துணையும் பெரிய தலைமையுடனே கூடியும் இவ்விடத்தே இவன் சிறப்புக்களைக் கைவிட்டுவரத் துணிதல்; இவன் இவ்வாறு துணிந்த எதனினும் வியக்குந் தன்மையையுடைத்து, வேற்று வேந்தனது நாட்டின்கண் விளக்கம் அமைந்த சான்றோன் பாதுகாத்துப் புகழ் மேம்பாடாக நட்பே பற்றுக்கோடாக இத்தன்மைத்தாகிய ஓர் இன்னுக்காலத்து இவ்விடத்து வருதல்; இவ்வாறு வருவனென்று துணிந்து சொல்லிய வேந்தனது மிகுதியும் அவன் சொல்லிய சொற் பழுதின்றாக வந்தவனது அறிவும் வியக்குந்தோறும் வியக்குந்தோறும் வியப்புக் கைமிக்கது; ஆதலால், தன்செங்கோல் செல்லாத தேயத் துறையும் அமைந்தோனது நெஞ்சைத் தன்னிடத்தே உரித்தாகப் பெற்ற பழைய புகழையுடைய அப்பெற்றிப்பட்ட பெரியோனை இழந்த இத்தேயம் இடும்பையுறுங்கொல்லோ? * இதுதான் இரங்கத் தக்கது—எ - று.

இதுவென்பது, அரசினைக் கைவிட்டு இறந்துபடத் துணிதலென்று மாம்.

(கு - ரை.) 4 - 6. "இடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட, தொடர்புடையே மென்பார் சிலர்" (நாலடி. 113); "கட்டலர்தார் மார்ப கலியூழிக் காலத்துக், கெட்டார்க்கு நட்டாரோ வில்" (பழ. 59). (உகஎ)

(உகஅ) பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே.

---

* 'கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி யொப்பின் அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும்' (குறள், 785, பரிமேல்.); 'இதற்குக் கோப்பெருஞ் சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தாரென்று கூறும் புறச்செய்யுட்கள் உதாரணம்' (தொல். கற்பியல், சூ. 52, ந.).

(பி - ம்.) 7 'பாலாரா குகவே'

திணையும் துறையும் அவை.

பிசிராந்தையார் வடக்கிருந்தாரைக் கண்ட கண்ணகனார் (பி - ம். பிசிராந்தையாரைக் கண்ட நத்தத்தனார்) பாடியது.

(இ - ள்.) பொன்னும் பவளமும் முத்தும் நிலைபெற்ற பெரிய மலை தரப்பட்ட விரும்பத்தக்க மணியும் ஒன்றற்கொன்று இடைநிலம்படச் சேய் நிலத்தினவாயினும் கோவைபொருந்தி அரிய விலையினையுடைய நல்ல அணிகலங்களைச் செய்யுங்காலத்து ஓரிடத்துத் தோன்றினாற் போல எந்நாளும் அமைந்தோர் அமைந்தோர் பக்கத்தராவார்; அமைதியில்லார் அமைதியில்லார் பக்கத்தராவர்—எ - று.

சான்றோர் குழுவினைப் புகழுங்கருத்தாகலின், அவர்க்கேற்ற உவமம் கூறினார்; சாலாதார்க்கும் ஏற்றவுவமம் வருவித்துக்கொள்க.

தொடைபுணர்ந்து தோன்றியாங்கென இயையும்.

(கு - ரை.) 1. பெருங். 4. 17 : 75.

'தன்னின முடித்த லென்பதனால், பொன்னுந் துகிருமுத்து... மணியும் என எண்ணுங்காலும் இனமாயபொருளே எண்ணப்படு மென்பது கொள்க' (தொல். கிளவி. சூ. 16, இளம். சே. கல்.)

2. ''கல்லிற் பிறக்குங் கதிர்மணி'' (நான்மணிக். 7); ''மலை யிடைப் பிறவா மணியே யென்கோ'' (சிலப். 2 : 77).

4. பெருங். 4. 2 : 82.

5 - 6. ''பண்காணுந் தமிழ்ப்புலவீ ரினத்தொடே யினஞ்சேரும் பரிசே போல'' (தனிப்பாடல்); ''நற்று மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற், கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' (மூதுரை, 24)

(உ௬௮)

(உ௬௯) உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்
முழூஉ வள்ளூர முணக்கு மள்ள
புலவுதி மாதோ நீயே
பலரா லத்தைநின் குறியிருந் தோரே.

திணையும் துறையும் அவை.

அவன் வடக்கிருந்தானைக் கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் பாடியது.

(இ - ள்.) யாற்றிடைக் குறையுட் புள்ளிப்பட்ட மரநிழற்கண் இருந்து உடம்பாகிய முழுத்தசையை வாட்டும் வீர! நின் கருத்திற் கேற்ப நின்னோடு வடக்கிருந்தார் பலராதலான், யான் இதற்கு உதவாது பிற்பட வந்ததற்கு என்னை அவரோடு சொல்லி வெறுத்தி நீ—எ - று.

யான் பிற்பட வந்ததற்கு என்னைப் புலந்து என்னோடு சொல் லாடாதிருந்தாய் நீயென்றும், இவனுடனே வடக்கிருந்தோர்களும்

எதிரேற்றுக் கொள்ளாமை நோக்கி நின் குறிப்பிற்கு ஏற்பப் புலந்தார் பலரென்றும் உரைப்பினும் அமையும்.

'உள்ளாற்றுக்கவலை' என்பதற்கு வழிக்குள்ளாகிய நாற்றிசையும் கூடிய இடமென்றுமாம்; கவர்த்த வழிக்குள்ளென்றுரைப்பாரும் உளர்.

* அரசு துறந்து வடக்கிருந்து உயிர் நீத்த உள்ள மிகுதியான் மள்ளவென்றார்.

(கு - ரை.) 1. "செல்லாற்றுக் கவலை" (குறுந். 263 : 2); "கணையெரி நிகழ்ந்த விலையி லங்காட், டுழைப்புறத் தன்ன புள்ளி நீழல்" (அகநா. 379 : 19 - 20).

2. புறநா. 320 : 13. (௨௧௯)

(௨௨௦) பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த
பெருங்களி றிழந்த பைதற் பாகன்
அதுசேர்ந் தல்கிய வழுங்க லாலை
வெளில்பா ழாகக் கண்டுகலுழ்ந் தாங்குக்
கலங்கினே னல்லனோ யானே பொலந்தார்த்
தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றங் கண்டே.

(பி - ம்.) 2 'இருங்களி'

திணையும் துறையும் அவை.

அவன் வடக்கிருந்தானுழைச் சென்று மீண்டுவந்து உறையூர் கண்ட பொத்தியார் அழுது பாடியது.

(இ - ள்.) பெரிய சோற்றையுண்டாக்கிப் பல்யாண்டு பாதுகாத்த பெரிய களிற்றை இழந்த வருத்தத்தினையுடைய பாகன் அவ்வியானை சேர்ந்து தங்கிய இரக்கத்தையுடைய கூடத்தின்கட் கம்பம் வறிதே நிற்கப் பார்த்துக் கலங்கின தன்மைபோல யான் இறந்துபடுதலின்றிக் கலங்கினேனல்லனோ? பொன்னான் இயன்ற மாலையையுடைய தேர் வண்மையைச் செய்யும் கிள்ளி போகப்பட்ட பெரிய புகழினையுடைய பழைய உறையூரின் மன்றத்தைப் பார்த்து—எ - று.

மூதூர் மன்றங் கண்டு கலங்கினேனல்லனோவெனக் கூட்டுக.

மன்றம் - ஈண்டுச் செண்டுவெளி.

அழுங்கல் - முன்புள்ள ஆரவாரமுமாம்.

இறந்தவென்று சொல்லுதல் இன்னாமையால் போகியவென்றார்.

(கு - ரை.) 1. பெருஞ்சோறு: புறநா. 2 : 16, 235 : 5.

* "திறைமன்ன ருய்ப்பத் திருநிற்பச் செங்கோ னடப்பக், குறைவின்றிக் கொற்ற முயரத் தெவ்வர் தேர்பணிய, உறைகின்ற காலத் தறங்கேட் டுருமுற்ற பாம்பின், அறிவன் னடிக்கீ ழரசஞ்சித் துறந்த வாறும்" (சீவக. 27).

5. பொலந்தார் : புறநா. 2 : 14, 226 : 4.
6. "தேர்வண் கிள்ளி" (புறநா. 43 : 10). (உஉ௦)

(உஉக) பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பினனே
அறவோர் புகழ்ந்த வாய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே
மகளிர் சாயன் மைந்தர்க்கு மைந்து
துகளறு கேள்வி யுயர்ந்தோர் புக்கில்
அனைய னென்னு தத்தக் கோனை
நினையாக் கூற்ற மின்னுயி ருய்த்தன்று
பைதற லொக்கற் றழீஇ யதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்
நனந்தலை யுலக மரந்தை தூங்கக்
கெடுவி னல்லிசை சூடி
நடுக லாயினன் புரவல னெனவே.

(பி - ம்.) 9 'பைதற் சுற்றங் கெழீஇ'

திணையும் துறையும் அவை.

அவன் நடுகற்கண்டு அவர் பாடியது.

(இ - ள்.) பாடுநர்க்குக் கொடுத்த பல புகழினையும் உடையன்; கூத்தர்க்குக் கொடுக்கப்பட்ட மிக்க அன்பினையும் உடையன்; அறத்திற முடையோர் புகழப்பட்ட நீதிநூற்குத் தக ஆராய்ந்து நடத்திய செங்கோலை உடையன்; சான்றோர் புகழப்பட்ட திண்ணிய நட்பினை யுடையன்; மகளிரிடத்து மென்மையை யுடையன்; வலியோரிடத்து மிக்க வலியையுடையன்; குற்றமற்ற கேள்வியையுடைய அந்தணர்க் குப் புகலிடம்; அத்தன்மையையுடையோனென்று கருதாது அத் தகுதியையுடையோனை அவ்வாறு கருதாத கூற்றம் அவனது இனிய உயிர் கொடுபோயிற்று; அதனால், பையாப்புற்ற நம்முடைய சுற்றத்தை அணைத்துக்கொண்டு அக்கூற்றத்தை வைவேமாக வாரீர், மெய் யுரையையுடைய புலவீர்! அகலிய (பி - ம். நல்ல) இடத்தினையுடைய உலகம் துன்பமிகக் கேடில்லாத நல்ல புகழ்ச்சி மாலையைச் சூடி நடப் பட்ட கல்லாயினான் எம்மைப் பாதுகாப்போனெனச் சொல்லி—எ - று.

ஈத்த புகழ் ஈதலாலுளதாகிய புகழெனவும், ஈத்தவன்பு ஈத்தற்கு ஏதுவாகிய அன்பெனவுங் கொள்க.

வாய்மொழிப் புலவீர்! அத்தக்கோனைக் கூற்றம் இன்னுயி ருய்த்தது; அதனாற் புரவலன் கல்லாயினனென ஒக்கல் தழீஇ அதனை வைகம் வம்மோவெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

சாயல், மைந்து, புக்கிலென்பன ஆகுபெயர். புக்கில்: வினைத் தொகை.

*கேடென்பது கெடுவெனக் குறைந்து நின்றது.

(கு - ரை.) 3 - 4 : சிறுபாண். 207 - 18.

5. "மறவர் மறவ" (பெரும்பாண். 455.)

1 - 6. புறநா. 239 : 1 - 18.

8. புறநா. 3 : 12, 42 : 22.

7 - 8. "தவத்துறை மாக்கண் மிகப்பெருஞ் செல்வர், ஈற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர், முதியோ ரென்னு னிளையோ ரென்னுன், கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப" (மணி. 6 : 97 - 100).

கெடு : "கெடுவாக வையா துலகம்" (குறள், 117).

12 - 3. புறநா. 264 : 1 - 4; "ஆடவர், பெயரும் பீடுமெழுதி யதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" (அகநா. 131 : 9 - 11); "செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட, கல்லேசு கவலை யெண்ணு மிகப் பலவே" (மலைபடு. 388 : 9).

13. உடம்பைப் புதைத்தவிடத்துக் கல் நடுதல் மரபு; அது வீரக் கல் என்று கூறப்படும்.

மு. காஞ்சித்திணைத் துறைகளுள், மன் அடாது வந்த மன்னைக் காஞ்சிக்கு மேற்கோள்; (தொல். புறத்திணை. சூ. 24, ந.). (உஉக)

(உஉஉ) அழலவிர் வயங்கிழைப் பொலிந்த மேனி
நிழலினும் போகாநின் வெய்யோள் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென
என்னிவ ணொழித்த வன்பி லாள
5 எண்ணு திருக்குவை யல்லை
என்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே.

திணையும் துறையும் அவை.

அவனை, தன்மகன் பிறந்த பின் பெயர்த்துச்சென்று பொத்தியார் எனக்கு இடந்தாவென்று சொற்றது.

(இ - ள்.) தீயால் விளங்கிய ஒளியையுடைய ஆபரணத்தாற் சிறந்த வடிவினையுடையளாய் நின் நிழலினும் ஒரு பொழுதும் நீங்காத நீ விரும்பத்தக்க மனைவி பெறப்பட்ட புகழமைந்த பிள்ளையானவன் பிறந்தபின் வாவெனச் சொல்லி என்னை இவ்விடத்தினின்றும் போக்கிய என்னோடு உறவில்லாதவனே! உன்னோடு என்னிடை நட்பைக் கருதா திருப்பையல்லை; புகழை விரும்புவோய்! நீ எனக்குக் குறித்த இடம் யாது? சொல்லுவாயாக—எ - று.

மற்று : அசை.

---

* முதனிலைத் தொழிற்பெயரென்பர் பரிமேலழகர்; குறள், 117, உரை.

அழல்போலப் பாடம் (ஒளி) செய்யும் மேனியெனினும் அமையும்.

(கு - ரை.) 3. "வீறுசால் புதல்வர்ப் பெற்றனை" (பதிற். 73) (உஉஉ)

(உஉங) பலர்க்குநிழ லாகி யுலகமீக் கூறித்
தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி
நிலைபெறு நடுக லாகியக் கண்ணும்
இடங்கொடுத் தளிப்ப மன்ற வுடம்போ
டின்னுயிர் விரும்புங் கிழமைத்
தொன்னட் புடையார் தம்முழைச் செலினே.

(பி - ம்.) 1 'மீக்கூறத்'

கல்லாகியும் இடங்கொடுத்த கோப்பெருஞ்சோழனை வடக்கிருந்த பொத்தியார் பாடியது.

(இ - ள்.) பலர்க்கும் அருளுடைமையான் நிழலையொத்து உலகத்தார் மிகுத்துச் சொல்ல *உலகத்தையாளுந்தன்மை முடியச்செலுத்துதற்கு மறுமையை நினைத்தால் முடிவுபோகாமையின் வடக்கிருத்தற்கு வரைந்த சிறிய இடத்தின்கண் இருந்து உயிர்நீத்தலின் நிலைபெற நடப்பட்ட கல்லான இடத்தும் இடங்கொடுத்தளிப்பர் நிச்சயமாக; உடம்போடு இனியவுயிர் விரும்புமாறுபோல விரும்பும் உரிமையையுடைய பழையதாகிய நட்பையுடையோர் தம்மிடத்தே செல்லின்—எ - று.

மீக்கூறியென்பது மீக்கூறவெனத் திரிக்கப்பட்டது; ஆணைகூறியென்றுமாம்.

தொன்னட்புடையோர் தம்முழைச் செலின், இடங்கொடுத்தளிப்ப வெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

அவன் நட்பினை வியந்து கூறியது.

(கு - ரை.) 2. தலைப்போதல் - முடிவுபோதல்.

3. நடுகல் : புறநா. 221 : 13. (உஉங)

(உஉச) அருப்பம் பேணா தமர்கடந் ததூஉம்
துணைபுண ராயமொடு தசும்புடன் றொலைச்சி
இரும்பா ணொக்கற் கடும்பு புரந்ததூஉம்
அறமறக் கண்ட நெறிமா ணவையத்து
முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
பருதி யுருவிற் பல்படைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்

* "தருமங் கைதர, மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினேன், என்னுயிர்க் குறுவதுஞ் செய்ய வெண்ணினேன்" (கம்ப. அயோத்தி. மந்திர. 15).

வேத வேள்வித் தொழின்முடித் ததூஉம்
அறிந்தோன் மன்ற வறிவுடை யாளன்
இறந்தோன் றானே யளித்திவ் வுலகம்
அருவி மாறி யஞ்சுவரக் கடுகிப்
பெருவறங் கூர்ந்த வேனிற் காலைப்
பசித்த வாயத்துப் பயனிரை தருமார்
பூவாட் கோவலர் பூவுட னுதிரக்
கொய்துகட் டழித்த வேங்கையின்
மெல்லியன் மகளிரு மிழைகளைந் தனரே.

திணையும் துறையும் அவை.

சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியது.

(இ - ள்.) அரிய அரண்களைப் பாதுகாவாது போரைச்செய்து அழித்ததுவும், துணையாய்க்கூடிய இனத்துடனேயுங்கூட மதுக்குடங்களைச் சேர நுகர்ந்து தொலைத்துப் பெரிய பாண்சுற்றமாகிய சுற்றத்தைப் பாதுகாத்ததுவும், அறத்தைத் தெளியவுணர்ந்த ஒழுக்கம் மாட்சிமைப்பட்ட அந்தணரது அவைக்களத்தின்கண் வேள்விக்குரிய முறைமையை நன்றாக அறியும் *சடங்கவிகள் அம்முறைமையை முன்னின்று காட்டப் பலரானும் புகழப்பட்ட தூய இயல்பையுடைத்தாகிய கற்பொழுக்கமாகிய கொள்கையையுடைய குற்றந்தீர்ந்த குலமகளிரோடு வட்டமாகிய வடிவினையுடைத்தாகிய பலபடையாகச் செய்யப்பட்ட மதிலாற் சூழப்பட்ட வேள்விச்சாலையுட் † பருந்து விழுங்குவதாகச் செய்யப்பட்டவிடத்து நாட்டிய யூபமாகிய நெடிய கம்பத்து வேதத்தாற் சொல்லப்பட்ட வேள்வியினைச் செய்து முடித்ததுவுமாகிய இவற்றானுய பயனை நிச்சயமாக அறிந்த அறிவினையுடையோன்; அவன்றான் துஞ்சினன்; ஆதலால், இனி இவ்வுலகம் இரங்கத்தக்கது; அருவி நீர் மறுத்து உலகத்தார் அஞ்சும்படி வெம்மையுற்றுப் பெரிய வற்கடம் (பஞ்சகாலம்) மிக்க வேனிற்காலத்துப் பசித்த ஆயமாகிய பயன்படும் ஆனிரையை இரக்கித்தல் (ரக்ஷித்தல் - காத்தல்) செய்வாராகக் கூர்மை பொருந்திய கொடுவாளாற் கோவலரானவர்கள் பூக்களுடனே உதிரக் கொம்புகளைக் கழித்து அதன் தழைச்செறிவையழித்த வேங்கையினையொப்ப மெல்லிய இயல்பினையுடைய உரிமை மகளிரும் அருங்கலவணி முதலவாகிய அணிகளை யொழித்தார்—எ - று.

---

* சடங்கவிகள் - ஷடங்கவித்துக்கள்; ஆறங்கங்களையும் அறிந்தோர்; "புத்தூர்ச் சடங்கவி மறையோன்" (பெரிய. தடுத்தாட்கொண்ட. 7); வேள்விக்குரிய முறையைக் காட்டுவோர்க்கு உபதிருஷ்டாக்கள் என்பது பெயர்.

† பருந்துவடிவமாகச் செய்வதற்குக் கருடசயனம் என்று பெயர்.

முறை நற்கறியுநர் முன்னுற வேள்வித்தொழின் முடித்ததூஉமென இயையும்.

எருவையென்றது பருந்தாகச் செய்யப்பட்ட வடிவினை.

அறிவுடையாளன் இறந்தான்; மகளிரும் இழை களைந்தனர்; இவனை இழந்த உலகம் அளித்தெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

'எருவை நுவற்சி' என்று பாடமோதுவோரும் உளர்.

'ஆயத்துப் பயனிரை' என்பதற்கு ஆயத்திற்குப் பயனாகிய இரை யெனினும் அமையும்.

(கு - ரை.) 1. "அரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய" (மலைபடு. 378); கலித். 146 : 48.

3. ஒக்கற்கடும்பு - இருபெயரொட்டு. 4. அற - தெளிய.

7. "படையார் புரிசைப் பட்டினம்", "படையிடை நெடுமதில்" (தேவாரம்) படை - மதிலின் உறுப்பு.

8. 'பொய்ப்பருந்துகா லொடுபறந்துபோய், மெய்ப்பருந்துடன் விண்ணிலாடவோ" (தக்க. 507) என்பதையும், 'பொய்ப்பருந்தாவது யாகத்துக்குச் செய்த பருந்து' என்னும் அதன் உரையையும் பார்க்க. "சுடுமனற்கலுழ ஞகச் சுருதியின் படியே கோட்டி" (வி. பா. இராசசூய : 91).

12 - 3. "அருவி மாமலை நிழத்தவு மற்றக், கருவி வானங் கடற் கோண் மறப்பவும், பெருவற ஞகிய பண்பில் காலையும்" (பொருந. 235 - 7).

15. பூ - கூர்மை; "பூநின்ற வேன்மன்னன்" (இறை. சூ. 17, மேற்.); "பூவெழு மழுவினுற் பொருது போக்கிய" (கம்ப. அயோத்தி. மந்திரப். 77); "அடைவாம்வை நிசிதம் பூவள் ளயில்வசி யாறுங் கூர்மை" (சூடாமணி. 7 : 16). (உஉச)

(உஉரு) தலையோர் நுங்கின் றீஞ்சேறு மிசைய
இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்
கடையோர், விடுவாய்ப் பிசிரொடு சுடுகிழங்கு நுகர
நிலமலர் வையத்து வலமுறை வளைஇ
வேந்துபீ டழித்த வேந்துவேற் றுனையொ
டாற்ற லென்பதன் றோற்றங் கேளினிக்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
முள்ளுடை வியன்காட் டதுவே நன்றும்
சேட்சென்னி நலங்கிள்ளி கேட்குவன் கொல்லென
இன்னிசைப் பறையொடு வென்றி நுவலத்
தூக்கணங் குரீஇத் தூங்குகூ டேய்ப்ப
ஒருசிறைக் கொளீஇய திரிவாய் வலம்புரி
ஞாலங் காவலர் கடைத்தலைக்
காலைத் தோன்றினு நோகோ யானே.

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளியை ஆலத்தூர்கிழார் பாடியது.

(இ - ள்.) முன்செல்லும் * தூசிப்படையோர் பனையின்கண் உளதாகிய நுங்கினது இனிய செறிவை அயில, இடைச்செல்வோர் பழத்தினது, செவ்விக்கனியை நுகர, பின்செல்வோர் நீங்கிய வாயையுடைய பிசிருடனே சுடப்பட்ட கிழங்கினை நுகர இப்படி ஒழுங்குடைத்தாகி இடமகன்ற உலகத்து வலமுறையாகச் சூழ்ந்து மன்னரை வலிகெடுத்த மேம்பட்ட வேலையுடைய சேனையுடனே கூடிய வலியென்று சொல்லப்பட்டதன் வினைவை இனிக் கேட்பாயாக: கள்ளியோங்கிய களர்நிலமாகிய பாழ்பட்ட இடத்து முள்ளுடைத்தாகிய பெரிய புறங்காட்டின் கண்ணதாயிற்று, பெரிதும் சேட்சென்னி நலங்கிள்ளி கேட்பான் கொல்லோ என அஞ்சி இனிய ஓசையையுடைய முரசுடனே வெற்றியைச் சொல்லாநிற்க முன்பு தூக்கணங் குருவியினது தூங்கப்பட்ட கூட்டை யொப்ப ஒருபக்கத்தே தூங்கப்பட்ட வலத்திலே புரிந்த திரிந்த வாயையுடைய சங்கம்; இப்பொழுது உலகங்காக்கும் அரசனது வாயிலிடத்தே பள்ளியெழுச்சிக் காலத்தே தோன்றினும் அதனைக் கேட்டு இறந்துபடாது நோமளவினே னுயினேன்—எ - று.

முன்பு நலங்கிள்ளிசேட்சென்னி கேட்குவன்கொல்லென ஒரு சிறைக் கொளீஇய வலம்புரி இன்று வென்றி நுவலாநிற்கப் பறையொடு காலைத் தோன்றினும் யான் நோவேனெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

கேளினியென்றது நெஞ்சினை.

'வென்றிநுவலா' என்றும், 'காலைதோன்றின' என்றும் பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 4. புறநா. 31 : 15.

7. மு. புறநா. 245 : 3 - 13, 237 : 13.

9. சேட்சென்னி நலங்கிள்ளி : புறநா. 27 : 10.

12 - 3. "வால்வெண் சங்கொடு வகைபெற் றோங்கிய காலை முரசங் கனைகுர லியம்ப" (சிலப். 14 : 13 - 4); "இயம்பும்வெண் சங்கெங்கும்", "குருகுக ளியம்பின வியம்பின சங்கம்" (திருவா. திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி); "புள்ளரையன் கோயில், வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ" (திருப்பாவை, 6). (உஉரு)

---

* தூசிப்படை - முன்படை; சேனையின் முதலிற்செல்வோர் பனை நுங்கின் தீஞ்சேறுமிசைய வென்றதும், இடையிற்செல்வோர் பனங்கனி மாந்தவென்றதும், கடையிற்செல்வோர் பனம்பிசிரையும் சுட்ட பனங்கிழங்கையும் நுகரவென்றதும் சேனையின் மிகுதியையும் அது செல்லுதற்குரிய கால நீட்சியையும் உணர்த்தி நின்றன.

(உஉசு) செற்றன் ருயினுஞ் செயிர்த்தன் ருயினும்
உற்றன் ருயினு முய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
இரந்தன் ருகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே.

(பி - ம்.) 5 'கடந்ததானைத்' 6 'திண்டோள்'

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை மாரேக்கத்து நப்பசலையார் பாடியது.

(இ - ள்.) தன் மனத்துள்ளே கறுவுகொண்டதாயினும் வெளிப்பட நின்று வெகுண்டதாயினும் உற்று நின்று கையோடு மெய்தீண்டி வருத்திற்ருயினும் அதற்குப் பிழைத்தலுண்டாகாது; பாடுவாரைப் போலத் தோன்றி நின்று கையாற்றொழுது வாழ்த்தி இரந்து உயிர் கொண்டதாகல் வேண்டும்; பொன்னுன் இயன்ற மாலையினையும் மண்டிய போரின்கண் எதிர்நின்று வெல்லும் படையினையும் திண்ணிய தேரினையுமுடைய வளவனைக் கொண்ட கூற்று—எ - று.

பொலந்தார் வளவனென இயையும்.

கூற்றம் இரந்ததாகல்வேண்டும்; இம்மூன்றினுள் ஒன்றுசெய்யினும் பிழைப்பின்றெனக் கூட்டுக.

இஃது அவனுண்மை மிகுதியினையும் வண்மையினையும் வியந்து இரங்கிக் கூறியவாறு.

(கு - ரை.) 3. "கைதொழூஉப் பரவி" (முருகு. 252).

4. புறநா. 220 : 5; "உயிரிரக்குங் கொடுங்கூற்றி னுளையச் சொன்னுன்" (கம்ப. கையடை. 10).

5. கடத்தல் - வஞ்சியாது எதிர்நின்று வெல்லல். புறநா. 213 : 1.

மு. காஞ்சித்திணைத்துறைகளுள், "கழிந்தோர் தேத்துக் கழிபடருறீஇ, ஒழிந்தோர் புலம்பிய கையறுநிலை" என்பதற்கும் (தொல். புறத்திணை. சூ. 19, இளம்.), மன் அடாது வந்த மன்னைக்காஞ்சிக்கும் (தொல். புறத். சூ. 24, ந.) மேற்கோள். (உஉசு)

(உஉஎ) நனிபே தையே நயனில் கூற்றம்
விரகின் மையின் வித்தட் டுண்டனை
இன்னுங் காண்குவை நன்வா யாகுதல்
ஒளிறுவாண் மறவருங் களிறு மாவும்
குருதியங் குரூஉப்புனற் பொருகளத் தொழிய
நாளு மானுன் கடந்தட் டென்றுநின்
வாடுபசி யருத்திய பழிதீ ராற்றல்

நின்னோ ரன்ன பொன்னியற் பெரும்பூண்
வளவ னென்னும் வண்டுமூசு கண்ணி
இனையோற் கொண்டனை யாயின்
இனியார் மற்றுநின் பசிதீர்ப் போரே.

(பி - ம்.) 7 'யருக்கிய வசைதீ ராற்றல்'

திணையும் துறையும் அவை.

அவனை ஆடுதுறை மாசாத்தனார் பாடியது.

(இ - ள்.) மிகவும் அறிவுடையையல்லை, ஈரமில்லாத கூற்றமே! நினக்குப் போவதொரு விரகில்லாமையினான் மேல் விளைந்து பயன் படும் விதையைக் குற்றியுண்டாய்; ஆயின் நினக்கு இவ்வாறு சொல்லிய வார்த்தை நல்லமெய்யாதல் இன்னமுங் காண்பை; ஒளி விளங்கிய வாட்போரைவல்ல வீரரும் யானையும் குதிரையும் உதிர மாகிய நிறமுடைய அழகிய நீர்மிக்க போர்க்களத்தின்கண் மாய நாள் தோறும் அமையானாய் எதிர்நின்று கொன்று நாள்தோறும் நினது மெய் வாடுதற்கேதுவாகிய பசி தீர்த்தற்கு ஊட்டிய வசையற்ற வலியை யுடைய கொலைத்தொழிலுக்கு நின்னையொத்த பொன்னானியன்ற பேரணிகலத்தையுடைய வளவனென்று சொல்லப்படும் வண்டுகள் மொய்க்கப்படும் கண்ணியையுடைய இத்தன்மையினையுடையோனை நீ கொண்டாயாயின், இனி நின் பசியைக் கெடுப்போர் யார்? சொல்லுவாயாக—எ - று.

கூற்றமே! இத்தன்மையோனைக் கொண்டாயாயின், நின் பசியைத் தீர்ப்போர் இனி யார்? விரகின்மையின் வித்தட்டுண்டனை; நன்வாயாகுதல் இன்னுங் காண்குவையெனக் கூட்டி வினை முடிவுசெய்க.

நயன் - நியாயமுமாம்.

(கு - ரை.) 1. உரிச்சொற்றொடருக்கும் (நன். சூ. 151, 259, 373, மயிலை.; நன். வி. சூ. 152, 374. இ. வி. சூ. 54. உரை), உரிச்சொல் பெயரை யடுத்து வந்ததற்கும் (நன். சூ. 441; மயிலை.), நனியென்னு முரிச்சொல் மிகுதியென்னும் பண்பை விளக்கியதற்கும் (நன். சூ. 455, மயிலை; நன். வி. சூ. 456) மேற்கோள்.

2. புறநா. 230 : 13.

4. "ஒளிறுவாண் மறவருந் தேரு மாவும், களிறுஞ் சூழ்தர" (மணி. 1 : 68 - 9). (உஉஎ)

(உஉஅ) கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
இருடிணிந் தன்ன குரூஉத்திரட் பரூஉப்புகை
அகலிரு விசும்பி னூன்றுஞ் சூளை
நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே

அளியை நீயே யாங்கா குவைகொல்
நிலவரை சூட்டிய நீணெடுந் தானைப்
புலவர் புகழ்ந்த பொய்யா நல்லிசை
விரிகதிர் ஞாயிறு விசும்பிவர்ந் தன்ன
சேண்விளங்கு சிறப்பிற் செம்பியர் மருகன்
கொடிநுடங்கு யானை நெடுமா வளவன்
தேவ ருலக மெய்தின னாதலின்
அன்னோற் கவிக்குங் கண்ணகன் றாழி
வனைதல் வேட்டனை யாயி னெனையதூஉம்
இருநிலந் திகிரியாப் பெருமலை
மண்ணா வனைத லொல்லுமோ நினக்கே.

திணை - அது; துறை - ஆனந்தப்பையுள்.

அவனை ஐயூர் (பி - ம். உறையூர்) முடவனார் பாடியது.

ஆனந்தப்பையுளாவது :—

"விழுமங் கூர வேய்த்தோ ளரிவை
கொழுநன் வீயக் குழைந்துயங் கின்று" (பு. வெ. 266).

(இ - ள்.) அடுகலம் வனையும் வேட்கோவே (வேட்கோ - குயவன்)! அடுகலம் வனையும் வேட்கோவே! இருள் நீங்கி ஓரிடத்தே செறிந்து நின்றாற்போன்ற நிறமுடைத்தாய்த் திரண்ட மிக்க புகை அகலிய பெரிய ஆகாயத்தின்கட் சென்று தங்கும் சூளையையுடைய அகலிய இடத்தினையுடைய பழைய ஊரின்கட் கலம் வனையும் வேட்கோவே! இரங்கத்தகுவை; நீ என்ன வருத்தமுறுவைதான்? நில வெல்லையின்கண் பரப்பிய மிக்க பெரிய சேனையினையுடைய அறிவுடையோர் புகழ்ந்த பொய்யாத நல்ல புகழினையும் பரந்த சுடரினையுமுடைய ஆதித்தன் வானத்தின்கண் பரந்தாலொத்த சேய்மைக் கண்ணே விளங்கும் தலைமையையுடைய செம்பியர் மரபினுள்ளான், கொடிகள் நுடங்காநின்ற யானையினுடைய மிகப்பெரிய வளவன், அவன் தேவருடைய விண்ணுலகத்தை அடைந்தானாகலான், அப் பெற்றிப்பட்டோனைக் கவிக்கும் இடமகன்ற தாழியை வனைதலை நீ விரும்பினையாயின் எப்படியும் பெரிய நிலவட்டம் உருளியாகப் பெரிய மேருமலை மண்ணாக வனைய இயலுமோ? இயலாதன்றே நினக்கு— எ - று.

அடுக்கு விரைவின்கண் வந்தது.

கலஞ்செய் கோவே, வளவன் தேவருலகமெய்தினனாதலால், அன்னோற் கவிக்கும் தாழி வனைதல் வேட்டனையாயின் இருநிலம் திகிரியாக மாமேரு மண்ணாக வனைதலொல்லுமோ? ஒல்லாமையின் யாங்காகுவை? நீ இரங்கத்தக்காயெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

இது சுற்றத்தார் இரங்கிக் கூறுதலின், ஆனந்தப்பையுளாயிற்று.

(கு - ரை.) 1. மு. புறநா. 256 : 1.

11 - 2. புறநா. 238, 256, 364; "தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்" (மணி. 6 : 67).

12 - 4. "மாயிருந் தாழி கவிப்பத், தாவின்று கழிகவெற் கொள்ளாக் கூற்றே" (நற். 271 : 11 - 2). (உஉஅ)

(உஉகூ) ஆடிய லழற்குட்டத்
தாரிரு ளரையிரவில்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனியுய ரழுவத்துத்
தலைநாண்மீ னிலைதிரிய
நிலைநாண்மீ னதனெதி ரேர்தரத்
தொன்னாண்மீன் றுறைபடியப்
பாசிச் செல்லா தூசி முன்னா
தளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே
அதுகண், டியாமும் பிறரும் பல்வே றிரவலர்
பறையிசை யருவி நன்னாட்டுப் பொருநன்
நோயில னாயி னன்றுமற் றில்லென
அழிந்த நெஞ்ச மடியுளம் பரப்ப
அஞ்சின மெழுநாள் வந்தன் றின்றே
மைந்துடை யானை கைவைத் துறங்கவும்
திண்பிணி முரசங் கண்கிழிந் துருளவும்
காவல் வெண்குடை கால்பரிந் துலறவும்
காலியற் கலிமாக் கதியின்றி வைகவும்
மேலோ ருலக மெய்தின னாகலின்
ஒண்டொடி மகளிர்க் குறுதுணை யாகித்
தன்றுணை யாய மறந்தனன் கொல்லோ
பகைவர்ப் பிணிக்கு மாற்ற னசைவர்க்
களந்துகொடை யறியா வீகை
மணிவரை யன்ன மாஅ யோனே.

திணையும் துறையும் அவை.

* கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இன்னநாளிற் றுஞ்சுமென அஞ்சி, அவன் துஞ்சியவிடத்துக் கூடலூர் கிழார் பாடியது.

---

* புறநா. 22, குறிப்புரை.

(இ - ள்.) மேடவிராசிபொருந்திய கார்த்திகை நாளின் முதற் காலின்கண் நிறைந்த இருளையுடைய பாதியிரவின்கண் முடப்பனை போலும் வடிவையுடைய அனுட நாளின் அடியின் வெள்ளி (முதல் நட்சத்திரம்) முதலாகக் கயமாகிய * குளவடிவுபோலும் வடிவை யுடைய புனர்பூசத்துக் கடையின்வெள்ளி எல்லையாக விளங்கப் பங்குனி மாதத்தினது முதற் பதினைந்தின்கண் உச்சமாகிய உத்தரம் அவ்வுச்சியினின்றும் சாய அதற்கு எட்டா மீனாகிய மூலம் அதற் கெதிரே எழாநிற்க அந்த உத்தரத்திற்கு முன் செல்லப்பட்ட எட்டாம் மீனாகிய மிருகசீரிடமாகிய நக்கத்திரம் (நக்ஷத்திரம்) துறையிடத்தே தாழக் கீழ்த்திசையிற் போகாது வடதிசையிற் போகாது கடலாற் சூழப்பட்ட பூமிக்கு விளக்காக முழங்காநின்ற தீப்பரக்கக் காற்றுற் பிதிர்ந்து கிளர்ந்து ஒருமீன் வீழ்ந்தது வானத்தினின்றும்; அதனைப் பார்த்து யாமும் பிறருமாகிய பல்வேறு வகைப்பட்ட இரவலர் எம்முடைய பறையொலி போலும் ஒலியையுடைய அருவியையுடைய நல்ல மலைநாட்டுக்கு வேந்தனாகியவன் நோயையுடையனல்லனாகப் பெறின் அழகிதென இரங்கிய நெஞ்சத்துடனே மடிந்தவுள்ளம் பரப்ப யாம் அஞ்சினேம்; அஞ்சினபடியே ஏழாம் நாள் வந்ததாகலின் இன்று, வலியையுடைய யானை கையை நிலத்தே யிட்டுவைத்துத் துஞ்சவும், திண்ணிய வாராற் பிணிக்கப்பட்ட முரசம் கண்கிழிந்து உருளவும், உல கிற்குக் காவலாகிய வெண்கொற்றக்குடை கால் துணிந்து உலறவும், காற்றுப்போலும் இயலையுடைய மனஞ்செருக்கிய குதிரைகள் கதி யின்றிக் கிடக்கவும் இப்படிக் கிடக்கத் தேவருலகத்தை அடைந்தான்; ஆகையாலே, ஒள்ளிய வளையையுடைய மகளிர்க்கு மேவப்பட்ட துணை யாகித் தனக்குத் துணையாகிய மகளிரையும் மறந்தான்கொல்லோ? பகைவரைப் பிணித்துக்கொள்ளும் வலியையும் நச்சியோர்க்கு அளந்து கொடுத்தலறியாத வண்மையையுமுடைய நீலமலைபோலும் மாயோன்— எ - று.

மன்னும், தில்லும் : அசை.

கயத்துக் குளக்கடையென்க.

† நற்றிசையாகிய கிழக்கும் வடக்கும் செல்லாது தீத்திசையாகிய தெற்கும் மேற்குமாகிய இரண்டனுள் ஒருதிசைக்கண் வீழ்ந்ததென்றும் ஆம்; அன்றி வடக்குங்கிழக்குஞ் செல்லாதெனவே வடகிழக்கே வீழ்ந்த தென்றுமாம்.

---

* புனர்பூசம் கயமாகிய குளவடிவமுடையது; அதனால், அது கய மென்றும், குளமென்றும், ஏரியென்றும் பெயர்பெறும்; "அதிதி நாள் கழை யாவண மேரி, புனர்தங் கரும்பிவை புனர்பூச மாகும்" (பிங்க லந்தை).

†'இனி மங்கலமரபிற்காரியஞ்செய்வார் வடக்கும் கிழக்கும்நோக்கி யும் சிந்தித்தும் நற்கருமங்கள் செய்வாராதலின் மங்கலமாகிய வட திசையை முற்கூறினர்' (தொல். பாயிரம், ந.); தண்டி. சூ. 108, மேற்.

படவென்றல் இன்னுமையிற் கைவைத்துறங்கவும் கண்கிழிந்துருள வும் கால் பரிந்துலறவும் கதியின்றி வைகவுமெனத் தகுதிபற்றிக் கூறப் பட்டன.

மாயோன் மகளிர்க்குறுதுணையாகித் தன்றுணையாயம் மறந் தனனே? இல்லையோ? யாம் மறவா நிலைமையமாயினமென இரங்கிக் கூறியவாறு.

'அஞ்சின மெழுநாள் வந்தன் றின்றென' என்பதூஉம் பாடம்.

(கு - ரை.) 1. அழற்குட்டம்: "அழல்சேர் குட்டத் தட்டமி (சிலப். 23 : 134); ஆடு - மேடராசி; அக்கினியை அதிதேவதையாக வுடைமையின் கார்த்திகைக்கு அழலென்பது பெயராயிற்று. அசுவதி யின் நான்கு கால்களும், பரணியின் நான்கு கால்களும், கார்த் திகையின் முதற்காலும் மேடராசிக்குரியன. பங்குனி மாதத்திற் கார்த்திகை நட்சத்திரம் உள்ள தினம் பூர்வ ஷஷ்டி அல்லது ஸப்தமி யென்பது கணிதநூற் றுணிபாதலால், அத்தினத்தின் பாதியிரவு நிறைந்த இருளையுடையதாயிற்று.

3. அனுடத்தின் வடிவமாகிய ஆறு நட்சத்திரங்களின் தொகுதி வளைந்த பனைமரம்போன்ற தோற்றமுடைமையின் அது முடப்பனை யெனப்பட்டது; 'அனுட மாறு முடப்பனை போலும்' என்பர்.

9. 'பாசி, ஊசி'யென்பன முறையே பிராசி, உதீசி யென்னும் வடமொழிச்சிதைவுகள்; உச்சிமீனுக்கு முன் எட்டாவது மீன் அத்தமித் தலும் பின் எட்டாவது மீன் உதித்தலும் இயல்பு; 'உச்சி மீனுக் கெட்டாமீனுதயமீன்' என்பர்.

5 - 12. புறநா. 24 : 24 - 5; பங்குனி மாதத்தில் நட்சத்திரம் வீழின், இராசபீடை என்பர்; "ஆடு கயறே டனுச்சிங்கத் தெழுமீன் விழுமே லரசழிவாம்" என்பது சோதிடநூல்.

14. புறநா. 126 : 8, குறிப்புரை.

19. புறநா. 93 : 1

22. புறநா. 213 : 10, 228 : 11, 249 : 11.

மு. பாடாண்டிணைத்துறைகளுள், 'அச்சமு முவகையு மெச்ச மின்றி, நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும், காலங் கண்ணிய ஓம்படை' என்பதற்கு மேற்கோள்(தொல். புறத்திணை. சூ. 30, இளம்.); 'ஆடிய லழற்குட்டத்து...மாஅயோனே : இதனுள், பாடாண்டலை வனது நாண்மீனை வீழ்மீன் நலிந்தமைபற்றிக் கூறியது' (தொல். புறத்திணை. சூ. 36, ந.) (உஉக)

(உஉ0) கன்றமரராயங் கானத் தல்கவும்
வெங்கால் வம்பலர் வேண்டுபுலத் துறையவும்
களமலி குப்பை காப்பில வைகவும்
விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்

வையகம் புகழ்ந்த வயங்குவினை யொள்வாட்
பொய்யா வெழினி பொருதுகளஞ் சேர
ஈன்றோ ணீத்த குழவி போலத்
தன்னமர் சுற்றந் தலைத்தலை யினையக்
கடும்பசி கலக்கிய விடும்பைகூர் நெஞ்சமொடு
நோயுழந்து வைகிய வுலகினு மிகநனி
நீயிழந் தனையே யறனில் கூற்றம்
வாழ்தலின் வரூஉம் வயல்வள னறியான்
வீழ்குடி யுழவன் வித்துண் டாஅங்
கொருவ னாருயி ருண்ணா யாயின்
நேரார் பல்லுயிர் பருகி
ஆர்குவை மன்னோவவ னமரடு களத்தே.

திணை - அது; துறை - கையறுநிலை.

அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினியை அரிசில்கிழார் பாடியது.

(இ - ள்.) கன்றைமேவிய ஆனிரை மேய்ந்த காட்டிடத்தே பிறிதொன்றால் ஏதமின்றிக் கிடப்பவும் சுரத்தில் நடத்தலால் வெம்மையுற்ற காலினையுடைய வழிபோவார் தாம் வேண்டியவிடத்தே தங்கவும் களத்தின்கண் நிறைந்த நெற்பொலி காவலின்றியே கிடப்பவும் எதிரில் நின்று தடுக்கும் பகையைத் துரந்த நிலங்கலங்காத செவ்விய ஆட்சியினையும் உலகத்தார் புகழ்ந்த விளங்கிய போரைச்செய்யும் ஒள்ளிய வாளினையும் தப்பாத மொழியினையுமுடைய எழினி பொருது போர்க்களத்தின் கண்ணே வீழப், பெற்ற தாயால் கைவிடப்பட்ட உண்ணாத குழவியை யொப்பத் தன்னைமேவிய கிளை இடந்தோறும் இடந்தோறும் வருந்த மிக்க பசிவருத்திய கலக்கமுற்ற துன்பமிக்க நெஞ்சமோடு அவனை இழந்து வருத்தமுற்றுக் கிடந்த உலகத்து விதனத்தினும் மிகப் பெரிதாக நீ இழந்தாய், அறமில்லாத கூற்றமே! வாழ்தலேதுவாக வரும் வயலிடத்து விளையும் வருவாயையறியானாய்த் தளர்ந்த குடியையுடைய உழவன் விதையை உண்டாற்போல இந்த ஒருவனது பெறுதற்கரிய உயிரை உண்டிலையாயிற் பகைவருடைய பல உயிரையும் பருகி நிறைவை, அவன் போரிற் பகைவரைக் கொல்லும் களத்தின்கண்— எ - று.

மன் : கழிவின்கண் வந்தது.

உயிர் உண்ணவும் பருகவும் படுவதன்றாயினும் அவ்வாறு கூறுதல், "அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப், பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பருதி" (பெரும்பாண். 1 - 2) என்றாற்போல *ஓரணி குறித்து நின்றது.

* ஓரணியென்பது, சமாதியென்னும் அலங்காரத்தை.

எழினி களஞ்சேர ஒருவனுருயிர் உண்ணுயாயின் அவன் அமரடு களத்துப் பல்லுயிரும் பருகி ஆர்குவை; அதுகழிந்ததேயெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

'கடும்பசி கலங்கிய' என்றும் பாடம்.

(கு - ரை.) 6. எழினி : புறநா. 158 ; 8 - 9; அகநா. 36, 105, 197, 211.

7. புறநா. 4 : 18, குறிப்புரை.

11. புறநா. 210 : 8. 13. புறநா. 227 : 2. (உ௩௦)

(உ௩௧) எறிபுனக் குறவன் குறைய லன்ன
கரிபுற விறகி னீம வொள்ளழற்
குறுகினுங் குறுகுக குறுகாது சென்று
விசும்புற நீளினு நீள்க பசுங்கதிர்த்
5 திங்க ளன்ன வெண்குடை
ஒண்ஞாயி றன்னோன் புகழ்மா யலவே.

திணையும் துறையும் அவை. (பி. ம். திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.)

அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடியது (பி - ம். அவனை அவர் பாடியது).

(இ - ள்.) வெட்டிச்சுட்ட கொல்லை நிலத்துக் குறவனுல் தறிக்கப் பட்ட துண்டம் போன்ற கரிந்த புறத்தையுடைய விறகால் அடுக்கப் பட்ட ஈமத்தின்கண் எரிகின்ற ஒள்ளிய அழலின்கண் உடல் சுடச் சென்று அணுகினும் அணுகுக; அவ்வாறு அணுகாதுபோய் வறிதே ஆகாயத்தையுற ஓங்கினும் ஓங்குக; குளிர்ந்த சுடரையுடைய மதி போலும் வெண்கொற்றக் குடையையுடைய ஒள்ளிய ஞாயிற்றை யொப்போனது புகழ்மாயா—எ - று.

ஈமமென்பது பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு.

இனி ஈமவொள்ளழல் இவனுடல் சிதையாமற் சிறுகினுஞ் சிறுகுக; அன்றிச் சிதையும்படி சென்று நீளினும் நீளுக; இவன் புகழ் மாயா வெனினும் அமையும்.

'எரிபுனக் குறவன்' என்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 5. புறநா. 3 : 1, 22 : 11 - 2, 392 : 1.

2 - 6. புறநா. 239 : 20 - 21. (உ௩௧)

(உ௩௨) இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழு நாளே
நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ
5 கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளா தோனே.

திணையும் துறையும் அவை (பி - ம். திணை - தும்பை; துறை - பாண்பாட்டு).

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) அவனையின்றிக் கழிகின்ற காலையும் மாலையும் இனி இல்லையாகுக; யான் உயிர்வாழுநாளும் எனக்கு ஒரு பயன்படாமையின் அவை யல்லவாக; நடப்பட்ட கல்லின்கட் பீலியைச் சூட்டி * நாரால் அரிக்கப்பட்ட தேறலைச் சிறிய கலத்தான் உகுப்பவும் அதனைக் கொள்வனோ, கொள்ளானோ சிகரமோங்கிய உயர்ந்த மலைபொருந்திய நாடு முழுவதும் கொடுப்பவும் கொள்ளாதவன்?—எ - று.

நாடுடன் கொடப்பவும் கொள்ளாதோன் நாரரி சிறுகலத் துகுப்பவும் கொள்வன் கொல்லோவெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

(கு - ரை.) 1. இல்லாகியர் : புறநா. 190 : 5. ஆகியர் - வியங்கோள். 3. புறநா. 264 : 3 - 4. நார் - பன்னாடை. (உகஉ)

(உகக) பொய்யா கியரோ பொய்யா கியரோ
பாவடி யானை பரிசிலர்க் கருகாச்
சீர்கெழு நோன்ற ளகுதைகட் டோன்றிய
பொன்புனை திகிரியிற் பொய்யா கியரோ
5 இரும்பா ணொக்கற் றலைவன் பெரும்பூட்
போரடு தானை யெவ்வி மார்பின்
எஃகுறு விழுப்புண் பலவென
வைகுறு விடிய லியம்பிய குரலே.

திணையும் துறையும் அவை.

வேள் எவ்வியை வெள்ளெருக்கிலையார் பாடியது.

(இ - ள்.) பொய்யாகுக; பொய்யாகுக; பரந்த அடியினையுடைய யானையைப் பரிசிலர்க்குக் குறைவறக் கொடுக்கும் சீர்மைபொருந்திய வலிய முயற்சியையுடைய அகுதையிடத்து உளதாகிய பொன்னாற் செய்யப்பட்ட ஆழிபோலப் பொய்யாகுக; பெரிய பாண்சுற்றத்திற்கு முதல்வன், பேரணிகலத்தினையுடைய, போரின்கட் கொல்லும் படையினையுடைய எவ்வியது மார்பின்கண் வேல் தைத்த சிறந்தபுண் பல வென வைகுதலுற்ற விடியற்காலத்துச் சொல்லிய வார்த்தை—எ - று.

பெரும்பூண் மார்பென இயையும்.

திகிரியென்றது திகிரி தைத்ததென்று பிறந்த வார்த்தையை.

பொன் : ஈண்டு இரும்பு.

அடுக்கு விரைவின்கண் வந்தது.

இயம்பிய குரல் பொய்யாகியரெனக் கூட்டுக.

---

* புறநா. 297 : 5 - 6.

(கு - ரை.) 3. அகுதை : புறநா. 347 : 5; "இன்கடுங் கள்ளி னகுதை" (குறுந். 298; அகநா. 76); "நன்மா வீசும் வண்மகி ழகுதை", "வயங்குபெருந் தானை யகுதை" (அகநா. 112, 208).

5. "பாண ரொக்கல்" (திருச்சிற். 400).

6. எவ்வி : புறநா. 24 : 18, 202 : 14; "எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்" (குறுந். 19); "வாய்வாள், எவ்வி வீழ்ந்த செரு விற் பாணர், கைதொழு மரபின் முறித்திடூஉப் பழிச்சிய", "பயங்கெழு வைப்பிற் பல்வே லெவ்வி", "நீடூர் கிழவோன், வாய்வாளெவ்வி யேவன் மேவார், நெடுமிடல் சாய்த்த பசும்பூட் பொருந்தில்... கள்ளுடைப் பெருஞ்சோற் றெல்லிமி ழன்ன, கவ்வையா கின்றாற் பெரிதே", "நரைமூ தாளர் கைபிணி விடுத்து, நனைமுதிர் தேற லுனையர்க் கீயும், பொலம்பூ ணெவ்வி" (அகநா. 115, 126, 266, 366).

7. "விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள், வைக்குந்தன் னாளை யெடுத்து" (குறள், 776). (உ௩௩)

(உ௩௪) நோகோ யானே தேய்கமா காலை
பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்
உலகுபுகத் திறந்த வாயிற்
பலரோ டுண்டன் மரீஇ யோனே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) நோவக்கடவேனோ யான்? எனது வாழக்கடவ மிக்க நாள் மாய்வதாக; பிடியினது அடிபோன்ற சிறிய இடத்தினை மெழுகித் தன்னை மேவப்பட்ட காதலி புன்மேல் வைக்கப்பட்ட இனிய சிறிய பிண்டத்தை எவ்வாறு உண்டான்கொல்லோ? * உலகத்தார் யாவரும் புகும் பரிசு திறந்த வாயிலையுடைய பலரோடுங் கூடி உண்டலை மருவியோன்—எ - று.

இன்சிறு பிண்டமென்றது இகழ்ச்சிக் குறிப்பு.

பலரோடுண்டலை மரீஇயோன் பிண்டம் யாங்கு உண்டனன் கொல்லெனக் கூட்டுக.

(கு - ரை.) 1. 'செய்கென்பது, நோகோ யானே யெனப் பெய ரொடு முடிந்ததாலெனின் அவ்வாறு வருவனவுளவேனும் சிறுபான்மை; வினைகோடலே பெரும்பான்மையென வுணர்க' (தொல். வினை. சூ. 7, கல்.; ந.)செய்கென்பது, நோகோ யானே யெனச் சிறுபான்மை பெயர் கோடல் உறையிற் கொள்க' (இ. வி. சூ 237, உரை.). (உ௩௪)

* "உலக விடைகழி" (சிலப். 10 : 27).

(உ௩௫) சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன்மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன்மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவரு மன்னே
அருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப், பாடுநருமில்லைப் பாடுநர்க்கொன்றீகுநருமில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே.

(பி - ம்.) 10 'அருங்கலை' 10 - 11 'துளையிரப்போர்' 12 'பார்வை' 15 'திருநிறத்திலங்கிய' 17 'பாடுநருக்கொன் றீயுநரும்'

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடியது.

(இ - ள்.) சிறிய அளவினையுடைய மதுவைப் பெறின் எங்களுக்குத் தருவன்; அது கழிந்தது! பெரிய அளவினையுடைய மதுவைப் பெற்றானாயின் அதனை யாமுண்டு பாட எஞ்சிய மதுவைத் தான் விரும்பி நுகர்வான்; அது கழிந்தது! சோறு எல்லார்க்கும் பொதுவாதலாற் சிற்றளவினையுடைய சோற்றின்கண்ணும் மிகப் பல கலத்தோடுங்கூட உண்பன்; அது கழிந்தது! மிக்க அளவினையுடைய சோற்றின் கண்ணும் மிகப் பல கலத்தோடுங்கூட உண்பன்; அது கழிந்தது; என்போடு கூடிய ஊன்றடியுளதாகிய இடமுழுதும் எங்களுக்கு அளிப்பன்; அது கழிந்தது! அம்போடு வேல் தைத்து உருவும் இடமாகிய போர்க்கள முழுதும் தான் சென்று நிற்பன்; அது கழிந்ததே! தான் காதலிப்பார்க்கு மாலை சூட்டுதலான் நரந்தப்பூ நாறும் தன்னுடைய கையால் தான் அருளுடைமையிற் புலால் நாறும் எம்முடைய தலையைத் தடவுவன்; அது கழிந்ததே! அரிய தலைமையை யுடைய பெரிய பாணரது அகலிய மண்டையின்கண் துளையையுருவி

இரப்பவர் கையுளும் தைத்துருவித் தன்னுற் புரக்கப்படும் சுற்றத்தாரது புல்லிய கண்ணிற்பாவை ஒளிமழுங்க அழகிய சொல்லை ஆராயும் நுண்ணிய ஆராய்ச்சியையுடைய அறிவினையுடையோர் நாவின் கண்ணே போய் வீழ்ந்தது, அவனது அரிய மார்பகத்தின் கண் தைத்த வேல்; எமக்குப் பற்ருகிய எம்மிறைவன் எவ்விடத்துள்ளான் கொல்லோ? இனிப் பாடுவாரும் இல்லை; பாடுவார்க்கு ஒன்றீவாரும் இல்லை; குளிர்ச்சியையுடைய நீரையுடைய துறையின் கட் பகன்றையினது தேனைப் பொருந்திய பெரிய மலர் பிறராற் சூடப் படாது கழிந்தாற்போலப் பிறர்க்கு ஒரு பொருளைக் கொடுக்காது மாய்ந்துபோம் உயிர் மிகப்பல—எ - று.

அவன் நிறத்து உருவிய வேல் அவனுக்கு இறந்துபாட்டைச் செய்தலோடே பாணர் முதலாயினுர்க்கும் இறந்துபாட்டினைச் செய்த லான் ஒரு காலத்தே யாவரிடத்தும் தைத்ததென்ருராகக் கொள்க.

மன் கழிவின் கண் வந்தது.

(கு - ரை.) 1. 'மன்' என்னும் இடைச்சொல் கழிவின்கண் வந்த தற்கு மேற்கோள்(தொல். இடை. சூ. 4, இளம். சே. தெய்வச். கல். ந.; நன். சூ. 431, மயிலை.; நன். வி. சூ. 432; இ. வி. சூ. 263, உரை); 'சிறிய கட் பெறினே யெமக்கீயு மன்னே யென்புழி மன்னைச்சொல் இனி அது கழிந்ததென்னும் பொருள் குறித்து நின்றது காணென்ருற் பொருளுணராதாளை அரிதாகப் பெற்ற கள்ளை எக்காலமும் எமக்குத் தருகின்றவன் துறக்கத்துச் சேறலின் எமக்குக் கள்ளுண்டல் போயிற்றென்றல் இதன் பொருளெனத் தொடர்மொழி கூறிப் பொருளுணர்த்துக' (தொல். உரி. சூ. 94, ந.); 'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே யென்றது உளப் பாட்டுத் தன்மையும் படர்க்கையும் பற்றி வந்தது' (தொல். எச்ச. சூ. 49, ந.); ஒரூஉவண்ணத்திற்கும் (தொல். செய். சூ. 288, பேர்.), அளவடிக்கும் (தொல். செய். சூ. 38, ந.) மேற்கோள்.

2. 'பெரியகட்பெறினே : என இருசீரடி வந்ததாலெனின், அதனைச் சொற்சீரடியென்று களைக', 'பெரியகட் பெறினே : என்பது சொற்சீராகி அகவலுட் பயிலாது வந்தது' (தொல். செய். சூ. 69, 215, பேர்.).

1 - 2. ஒரூஉ வண்ணத்திற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 227, ந.

1 - 3. 'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே : என்பதன்கண் முதலடி நாற்சீரான் வந்தது; இரண்டாமடி ஆசிரியத்தளையொடு பொருந்தி அறுசீரடியாகி வந்தது' (தொல். செய். சூ. 60, இளம்.).

4. நெடிலடிக்கு மேற்கோள்; தொல். செய். சூ. 38, ந.

4 - 5. 'சிறு சோற்ருனும்......கலத்தன் மன்னே : என்பன ஐஞ் சீரான் வந்த ஆசிரியவடி' (தொல். செய். சூ. 63, பேர்.).

4 - 7. 'சிறு சோற்ருனு நனிபல கலத்தன் மன்னே : என்பது முதலாக நான்கடி ஆசிரியத்துள் ஐஞ்சீரடுக்கி வந்தன' (தொல். செய். சூ. 63, ந.).

6 - 7. ஆசிரியத்துள் ஐஞ்சீரடி அருகி வந்ததற்கு மேற்கோள்; யா. வி. ஒழிபு. சூ. 2.

8 - 9. 'நரந்த நாறும்...தைவருமன்னே : என முச்சீரடி இடையும் ஒன்று வந்ததாலெனின், தோற்றமென்றதனுன் எருத்தடி முச்சீராய காலத்துக் குட்டம் பட்டும் இனிது விளங்கும்', 'நரந்தநாறும்... மன்னே : என்றவழி எண்சீராதலான் இரண்டு நாற்சீரடி வந்தன வென்று கோடுமன்றே தூக்கின்றுயி னென்பது' (தொல். செய். சூ. 69, 87, பேர்.).

1 - 9. 'இது பலவற்றின் நிலையாமை கூறி இரங்குதலின் மன்னைக் காஞ்சி என வேறு பெயர் கொடுத்தார்; இது பெரும்பான்மை மன் என்னும் இடைச்சொற் பற்றியே வருமென்றற்கு மன் கூறினுர்...சிறிய கட்பெறினே...மன்னே! என இப்புறப்பாட்டு மன் அடுத்து அப்பொருள் தந்தது' (தொல். புறத்திணை. சூ. 24, ந.).

2 - 9. 'இருசீர் முதல் ஐஞ்சீர்காறும் பரந்து பட்ட அகவ லோசையை, பெரியகட் பெறினே எனச் சொற்சீரடியாகவும், யாம் பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே என அளவடியாகவும், நரந்த நாறுந் தன் கையால் எனச் சிந்தடியாகவும், சிறுசோற் றுனு நனிபல கலத்தன் மன்னே என நெடிலடியாகவும் தூக்குத் துணிந்தவாறு காண்க; இங்ஙனம் தூக்கின்றென, நரந்த நாறுந் தன் கையாற் புலவு, நாறு மென்றலை தைவரு மன்னே என்றதனை இரண்டு நாற்சீரடியாக அலகிட அகவலோசை பிறவாமை யுணர்க' (தொல். செய். சூ. 87, ந.).

12. புரப்போர் : செயப்பாட்டு வினையாலணையும் பெயர்.

16. மு. புறநா. 307 : 1; குறுந். 176 : 5, 325 : 4.

கொல் என்னும் இடைச்சொல் இரக்கங்குறித்து வந்ததற்கு மேற் கோள்; நன். சூ. 420, மயிலை.

18. பகன்றை : புறநா. 16 : 14; "பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல்" (பதிற். 76 : 12).

18 - 9. "அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினும், கள்ளி மேற் கைந்நீட்டார் சூடும்பூ வன்மையால்" (நாலடி. 262).

20. 'தவ'என்னும் உரிச்சொல் மிகுதியாகிய குறிப்பை யுணர்த்து வதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 93, சே.; ந. இ. வி. சூ. 281, 287, உரை.

18 - 20. "பெய்யாது வைகிய கோதை போல, மெய்சாயினை" (நற். 11 : 1 - 2.).

மு. காஞ்சித்திணைத்துறைகளுள் 'இன்னனென் றிரங்கிய மன்னை' என்பதற்கு மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 19. இளம்.); 'சிறியகட் பெறினே...தவப் பலவே : இப்பதினேழடி ஆசிரியத்துள் ஏழாமடியும் பன்னிரண்டாமடியும் முச்சீரான் வந்தன; மூன்றும் அடி முதலாக ஆறும் அடி யீருக நான்கடியும் பதினுலாம் அடியும்

ஐஞ்சீரான் வந்தன; இரண்டாம் அடியும் பதினொன்றும் அடியும் அறு சீரான் வந்தன; ஏனைய நான்கு சீரான் வந்தன; இவ்வாறு வருதலின் அடிமயங்காசிரியமாயிற்று' (தொல். செய். சூ. 112, இளம்.); 'சிறியகட் பெறினே...பலவே : இதனுள், நரந்த நாறுந் தன் கையால் எனவும், அரு நிறத் தியங்கிய வேலே எனவும் தனித்து வந்தன; பெரியகட் பெறினே என்பது சொற்சீரடி; இதனைக் குறளடியாக்கிக் குறளடியும் வருமென் பர் பின்பு நூல் செய்த ஆசிரியர்' (தொல். செய். சூ. 69, ந.); 'சிறியகட் பெறினே...பலவே: இதனுள் இருசீரும் முச்சீரும் இடையிடையே வந்தன' (யா. வி. சூ. 19; யா. கா. செய். சூ. 3); 'சிறிய கட்பெறினே யென்னும் இணைக்குற ளாசிரியப் பாவினுள் ஐஞ்சீரடியும் அருகி வந்தனவெனக் கொள்க' (யா. வி. செய். சூ. 40); 'இரு சீரடியும் முச்சீரடியும் இடையிடை வந்த இணைக்குறளாசிரியப் பாவிற்குச் செய்யுள்;—சிறியகட்பெறினே...பலவே' (இ. வி. சூ. 734, உரை); இளம்பூரணர் கொண்ட பாடப் பகுதி அகப்படாமையால், இச்செய்யுளை அவர் கருத்தின்படி 17 அடியாகப் பிரித்தற்கு இயலவில்லை. (உ௩௫)

(உ௩௬) கலையுணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்
சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்
மலைகெழு நாட மாவண் பாரி
கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே
பெருந்தகு சிறப்பி னட்பிற் கொல்லா
தொருங்குவரல் விடாஅ தொழிகெனக் கூறி
இனையை யாதலி னினக்கு மற்றியான்
மேயினே னன்மை யானே யாயினும்
இம்மை போலக் காட்டி யும்மை
இடையில் காட்சி நின்னோ
டுடனுறை வாக்குக வுயர்ந்த பாலே.

திணை - அது; துறை - கையறுநிலை.

வேள்பாரி துஞ்சியவழி அவன் மகளிரைப் பார்ப்பார்ப்படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது.

(இ-ள்.) முசுக்கலை கிழித்துண்டலாற் பீறிய முழவு போலும் பெரிய பலாப்பழம் வில்லையுடைய குறவர்க்கு அதன் பெருமையாற் சில நாளைக்கு இட்டு வைத்துண்ணும் உணவாகும் மலையுடைய நாட்டை யுடையோய்! பெரிய வண்மையையுடைய பாரி! நீயும் யானுங்கலந்த நட்பிற்குப் பொருந்த ஒழுகாயாய் நீ என்னை வெறுத்தாயாகக் கடவை, நீ எனக்கு உதவி செய்த யாண்டுகளும், பெருமைதக்க தலைமையினையுடைய நட்பிற்குப் பொருந்தாமல் யானும் நின்னோடு கூடப் போதுதற்கு இயையாது நீ ஈண்டுத் தவிர்கவெனச் சொல்லி

இப்படி வேறுபட்ட தன்மையை யுடையையாதலின், நினக்கு யான் பொருந்தினேனல்லாமையான்; இங்ஙனம் பொருந்திற்றிலேனாயினும் இப்பிறப்பின் கண் நீயும் யானுங்கூடி இன்புற்றிருந்தவாறு போலக் காட்டி மறு பிறப்பினும் இடைவிடாத காட்சியிணையுடைய நின்னோடு கூடி வாழ்தலை உயர்ந்த விதி கூட்டுவதாக—எ - று.

'உலர்ந்த யாண்டு' என்று பாடமாயின், கழிந்த யாண்டென்க.

மற்று : அசைநிலை.

(கு - ரை.) 1. "முழவன பலவின் றீங்கனி" (சீவக. 825).

2. "அரிப்பறை வினைஞ ரல்குமிசைக் கூட்டும்" (ஐங்குறு. 81).

(உ௩௬)

(உ௩எ) நீடுவாழ் கென்றியா னெடுங்கடை குறுகிப்
பாடி நின்ற பசிநாட் கண்ணே
கோடைக் காலத்துக் கொழுநிழ லாகிப்
பொய்த்த லறியா வுரவோன் செவிமுதல்
வித்திய பனுவல் விளைந்தன்று நன்றென
நச்சி யிருந்த நசைபழு தாக
அட்ட குழிசி யழற்பயந் தாஅங்
களியர் தாமே யார்க வென்ன
அறனில் கூற்றந் திறனின்று துணிய
ஊழி னுருப்ப வெருக்கிய மகளிர்
வாழைப் பூவின் வளைமுறி சிதற
முதுவா யொக்கற் பரிசில ரிரங்கக்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்வேல் விடலை சென்றுமாய்ந் தனனே
ஆங்கது நோயின் றாக வோங்குவரைப்
புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலிபார்த் தொற்றா தாகு மலிதிரைக்
கடன்மண்டு புனலி னிழுமெனச் சென்று
நனியுடைப் பரிசிற் றருகம்
எழுமதி நெஞ்சே துணிபுமுந் துறுத்தே.

திணையும் துறையும் அவை.

வெளிமானுழைச் சென்றார்க்கு அவன் துஞ்ச இளவெளிமான் சிறிது கொடுப்பக் கொள்ளாது பெருஞ்சித்திரனார் பாடியது.

(இ - ள்.) நெடுங்காலம் வாழ்வாயாகவென்று யான் நெடிய வாயிலை அணுகிப் பாடிநின்ற பசியையுடைய காலத்தின்கண்ணே, கோடையான் வெம்மையுற்றபொழுதின்கண் அடைந்தார்க்குக் கொழுவிய நிழலையொத்து யார் கண்ணும் பொய்கூறுதல் அறியாத

அறிவுடையோனது செவியிடத்து நல்லோர் விதைத்த கேள்வியாகிய பயிர் நன்ருக விளைந்ததென நினைத்துப் பரிசிலை விரும்பியிருந்த அவ் விருப்பம் பயனில்லையாக அடப்பட்ட பானையினின்றும் சோறின்றி எரி புறப்பட்டாற்போல அளிக்கத்தக்கார் உண்பாராகவென்று கருதாத அறமில்லாத கூற்றம் கூறுபாடின்ருகி அவனுயிரைக் கொள்ளத் துணிய முறையான் வெய்தாக மார்பின்கண் அறைந்துகொண்ட மகளிர் கையிலணிந்த வளைகளின் முறிகள் வாழைப்பூப்போலச் சிதற முதிய வாக்கினையுடைய சுற்றத்தொடு கூடிய பரிசிலர் இரங்கக் கள்ளி யோங்கிய களர்நிலமாகிய பாழ்பட்ட புறங்காட்டின்கண் வெளிய வேலையுடைய வீரன் போய் இறந்துபட்டான்; கூற்றம் நோயின்றி யிருப்பதாக; உயர்ந்த மலையிடத்துப் புலி பார்த்து வீழ்த்த களிருகிய இரை தப்பின் தனக்கு இரையாதற்குப் போதாத எலியைப் பார்த்து வீழ்த்தாதாகும்; மிக்க திரையையுடைய கடலின்கண் மண்டிய ஆற்று நீர் போல விரையப்போய் மிகுதியையுடைத்தாகிய பரிசிலைக் கொடு வருவேமாக, எழுந்திராய் நெஞ்சே தெளிவை முன்னிட்டுக்கொண்டு— எ - று.

நசைபழுதாக அழற்பயந்தாங்குக் கூற்றந்துணிய விடலை மாய்ந் தனனெனவும், மகளிர் வளைமுறி வாழைப்பூவிற் சிதறவெனவும், துணிபு முந்துறுத்து நெஞ்சமே எழுவெனவுங் கூட்டுக.

நோயின்ருகவென்றது குறிப்பிற்ருேன்றல்.

'ஆங்கது நோயின்ருக' என்றது இளவெளிமான் சிறிது கொடுப்ப அதனை இகழ்ந்து கூறியதென்பாரும் உளர்.

'புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பின், எலிபார்த் தொற்ரு தாகும்' என்பதூஉம் இவன் பின்கொடுத்த பரிசிலின் சிறுமை நோக்கி நின்றது.

'ஊழை யுருப்ப வெருக்கிய மகளிர்' என்ருேதி விதியை வெறுப்ப எருக்கிய மகளிரென்றுரைப்பினும் அமையும்.

(கு - ரை.) 4 - 5. புறநா. 206 : 2 - 5; கலித். 68 : 2 - 5.

5 - 6. "இசைநுவல் வித்தி னசையே ருழவர்" (மலைபடு. 60).

10. புறநா. 25 : 10 - 12.

13. மு. புறநா. 225 : 7, 245 : 3.

16 - 7. புறநா. 190 : 6 - 10.

18 - 19. புறநா. 42 : 19 - 21. (உ௩எ)

(உ௩அ) கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா
வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடிப்
பேஎ யாயமொடு பெட்டாங்கு வழங்கும்

காடுமுன் னினனே கட்கா முறுநன்
தொடிகழி மகளிரிற் றொல்கவின் வாடிப்
பாடுநர் கடும்பும் பையென் றனவே
தோடுகொண் முரசுங் கிழிந்தன கண்ணே
ஆளில், வரைபோல் யானையு மருப்பிழந் தனவே
வெந்திறற் கூற்றம் பெரும்பே துறுப்ப
எந்தை யாகுல வதற்பட லறியேன்
அந்தோ வளியேன் வந்தனென் மன்ற
என்னா குவர்கொலெற் றுன்னி யோரே
மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதின்
ஆரஞ ருற்ற நெஞ்சமொ டொராங்குக்
கண்ணி லூமன் கடற்பட் டாங்கு
வரையளந் தறியாத் திரையரு நீத்தத்
தவல மறுசுழி மறுகலிற்
றவலே நன்றுமற் றகுதியு மதுவே.

(பி - ம்.) 11 'யாகுதலதற்பட'

திணையும் துறையும் அவை.

வெளிமான் துஞ்சியபின் அவர் பாடியது.

(இ - ள்.) பிணமிட்டுப் புதைக்கப்பட்ட கவிக்கப்பட்ட செய்ய தாழியினது குவிந்த புறத்தேயிருந்த செவி சிவந்த கழுகின் சேவலும் பொகுவலென்னும் புள்ளும் அஞ்சாவாய் வாய்வலிய காக்கையும் கோட்டானும் கூடிப் பேயினத்துடனே தாம் விரும்பிய வழியே இயங்கும் சுடுகாட்டைத் தலைப்பட்டான், வீரபானத்தைக் காமுறுவான்; அவனுடைய வளைகழிக்கப்பட்ட உரிமை மகளிரைப்போலப் பழைய அழகு தொலைந்து பாடுவாரது சுற்றமும் ஒளிமழுங்கின; தொகுதி கொண்ட முரசங்களும் கண்கிழிந்தன; பாகர் முதலாயின ஆளில்லாத மலைபோன்ற யானைகளும் மருப்பிழந்துவிட்டன; இவ்வாறு வெவ்விய திறலையுடைய கூற்றம் பெரிய இறந்துபாட்டை எய்துவிப்ப என் இறைவன்... அவ்விறந்து பாட்டிலே படுதலை அறியேனாய் ஐயோ! அளித்தலையுடையேன் வந்தேன்; நிச்சயமாக என்ன துயரமுறுவர்கொல்லோ என்னையடைந்த சுற்றத்தார்? மழையையுடைய இரவின்கண் மரக்கலம் கவிழ்ந்த காலத்துப் பொறுத்தற்கரிய துன்பமுற்ற நெஞ்சுடனே ஒரு பெற்றிப்படக் கண்ணில்லாத ஊமன் கடலின்கண் அழுந்தினாற்போல எல்லையளந்தறியப்படாத திரையரிதாகிய வெள்ளத்தின்கண் துன்பமாகிய மறுசுழியின்கட் பட்டுச் சுழலுமதனின் இறந்துபடுதலே நன்று; நமக்குத் தக்க செய்கையும் அதுவே—எ - று.

யான் அது செய்யப்பெற்றிலேனென்னும் நினைவிற்று.

மன் கழிவின்கண் வந்தது.

வெருவா வழங்குமென இயையும்.

'முரசும் கண்கிழிந்தன, யானையும் மருப்பிழந்தன' என்ற கருத்து : அவற்றால் தொழில்கொள்வாரின்மையின், அவை பயனிழந்தன வென்பதாம்.

(கு - ரை.) 1. புறநா. 228 : 12, குறிப்புரை.

2. செவிசெஞ்சேவல் : புறநா. 370 : 26, 373 : 38; அகநா. 77.

1 - 2. 'கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த, செவிசெஞ் சேவலும் : என முறை மயங்கி வந்ததாலெனின், ஆண்டுச் செஞ்செவியென்பது மொழிமாறி நின்றது' (தொல். கிளவி. சூ. 26, தெய்வச்.).

3. மு. புறநா. 362 : 17.

1 - 3. செய்யுட்கண் வண்ணச்சினைச்சொல் அடை சினை முதலெனு மூன்றும் முறைமயங்கி வந்ததற்கு மேற்கோள் (தொல். கிளவி. சூ. 26, சே., ந.; இ. வி. சூ. 314, உரை); 'கவிசெந்தாழிக்... கூகையுங் கூடி : எனவருவன, கொம்புகூர் மாடு, மடல்விரிதாழை என்றாற்போல வருதலின், உயர்திணைதொடர்ந்த பொருண்முதலாறும் என்னுஞ் சூத்திரத்துள் அஃறிணையொடு சார்த்தின் அஃறிணை முடி பினவாமென அமைத்ததன்பாற்படுமென்க' (நன். வி. சூ. 403).

6. புறநா. 261 : 18 - 9, 280 : 14.

8. முரசங் கண்கிழிதல் : புறநா. 229 : 19.

10 - 12. 'வெந்திறற் கூற்றம்...அந்தோவளியேன் வந்தனென் மன்ற : என்றவழி அந்தோவென்பது கேடு குறித்து நின்றது' (தொல். இடை. சூ. 33, தெய்வச்.).

14. மரம் : பு. வெ. 111, உரை.

18 - 9. "சங்கடத்திற் சாவதே நன்று" (தனிப்பாடல்). (உகூஅ)

(உகூகூ) தொடியுடைய தோண்மணந்தனன்
கடிகாவிற் பூச்சூடினன்
தண்கமழுஞ் சாந்துநீவினன்
செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை யுயர்புகூறினன்
வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்
பிறரைத்தா னிரப்பறியலன்
இரந்தோர்க்கு மறுப்பறியலன்
வேந்துடையவையத் தோங்குபுகழ் தோற்றினன்
வருபடை யெதிர்தாங்கினன்

பெயர்படை புறங்கண்டனன்
கடும்பரிய மாக்கடவினன்
நெடுந்தெருவிற் றேர்வழங்கினன்
ஓங்கியல களிறூர்ந்தனன்
தீஞ்செறி தசும்புதொலைச்சினன்
பாணுவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழிவிடுத்தனன், ஆங்குச்
செய்ப வெல்லாஞ் செய்தன னாகலின்
இடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் றலையே.

(பி - ம்.) 3 'நறைகமழ் சாந்த நீவினன்' 4 'வழிதேய்த்தனன்' 6 'வாய்மொழியலன்' 7 - 8 'மேற்செல்லலன் பிறரை யொன்றிரப்பு' 11 'கழறினன்' 12 'பொருபடை' 14 'றேர்மறுங்கினன், 'றேரோட்டினன்' 15 'உடல்சினத்தகளிறு' 16 'தீஞ்சொற்றசும்பு' 21 'படுகுழிப்'

திணையும் துறையும் அவை.

நம்பிநெடுஞ்செழியனைப் பேரெயின்முறுவலார் பாடியது.

(இ - ள்.) இளைய மகளிரது வளையணிந்த தோளை முயங்கினான்; காவலையுடைய இளமரக் காக்களிற் பூவைச் சூடினான்; குளிர்ந்த மண நாறும் சாந்தைப் பூசினான்; பகைத்தோரைக் கிளையொடுங் கெடுத்தான்; நட்டோரை மிகுத்துக் கூறினான்; இவர் நம்மில் வலியரென்று கருதி அவர்க்கு வழிபாடு கூறியறியான்; இவர் நம்மில் எளியரென்று கருதி அவரின் மிகுத்துச் சொல்லியறியான்; பிறரைத் தான் ஒன்றீ யெனச் சொல்லி இரந்தறியான்; சூழ்ந்து நின்று இரந்தோருக்கு யாதும் இல்லையென்று மறுத்தலை அறியான்; அரசருடைய அவைக்களத்தின் கண் தனது உயர்ந்த புகழை வெளிப்படுத்தினன்; தன்மேல் வரும் படையைத் தன் எல்லையுட் புகுதாமல் எதிர்நின்று தடுத்தான்; புறக்கொடுத்துப் பெயரப்பட்ட படையினது புறக்கொடைகண்டு அதன்பின் செல்லாது நின்றான்; விரைந்த செலவையுடைய குதிரையைத் தன் மனத்தினும் விரையச் செலுத்தினான்; நெடிய வீதியின்கண் தேரைச் சூழ இயக்கினான்; உயர்ந்த இயல்பையுடையவாகிய களிற்றைச் செலுத்தினான்; இனிய செறிவையுடைத்தாகிய மதுவையுடைய குடங்களைப் பலர்க்கும் வழங்கித் தொலைவித்தான்; பாணர் உவப்ப அவர் பசியை மாற்றினான்; நடுவுநிலைமையின் மயக்குதலையுடைய சொற்களை அந்நடுவுநிலைமையிற் பிழையாதபடி மயக்கந் தீரக் கூறினான்; அப்படிச் செய்யத்தகுவனவெல்லாம் செய்தானாதலான், இப்புகழை விரும்புவோனது தலையை வாளான் அறுத்துப் போகடினும் போகடுக; அன்றிச் சுடினும் சுடுக; பட்டபடி படுக—எ - று.

'நட்டோரை யுயர்புகூறினன்' என்றது, *தான் உயர்த்துக் கூறவே யாவரும் உயர்த்துக்கூறுவரென்பதாம்.

'மயக்குடைய மொழிவிடுத்தனன்' என்பதற்கு உலகவொழுக்கத்தில் மயக்கமுடைய சொற்கள் தன்னிடைப் புகுதாமல் விடுத்தானென்றும், பொருண்மயங்கிய சொற்களைத் தன்னிடத்துப் புகுதாமல் விடுத்தானென்றும் உரைப்பினும் அமையும்.

ஒன்றேவென்பது எண்ணிடைச்சொல்.

(கு-ரை.) 3. புறநா. 161 : 26 - 7.

4 - 5. புறநா. 38 : 5 - 6; பழ. 398; "நட்டவர் குடியுயர்க்குவை, செற்றவ ரரசுபெயர்க்குவை" (மதுரைக். 131 - 2).

6. "பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே" (மதுரைக். 201).

6 - 7. 'வலியரென...மீக்கூறலன் : எனத் தன்கண்ணும் பிறன் கண்ணுந் தோன்றிய மென்மைபற்றி இளிவரல் பிறந்தன' (தொல். மெய்ப்பாடு. சூ. 6, பேர்.; இ. வி. சூ. 578, உரை).

19 - 21. "கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார், துரும் பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார், வருந்தி யுடம்பின் பயன் கொண்டார் கூற்றம், வருங்காற் பரிவ திலர்" (நாலடி. 35).

மு. ஈற்றயலடி நாற்சீரான் வந்த வஞ்சிப்பாவிற்கும் (தொல். செய். சூ. 67, இளம்.), பிரிந்திசைத் தூங்கற் குறளடி வஞ்சிப்பாவிற்கும் (யா. வி. சூ. 37) மேற்கோள். (உ௩௯)

(உ௪௦) ஆடுநடைப் புரவியுங் களிறுந் தேரும்
வாடா யாணர் நாடு மூரும்
பாடுநர்க் கருகா வாஅ யண்டிரன்
கோடேந் தல்குற் குறுந்தொடி மகளிரொடு
கால னென்னுங் கண்ணிலி யுய்ப்ப
மேலோ ருலக மெய்தின னெனாஅப்
பொத்த வறையுட் போழ்வாய்க் கூகை
சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிரும்
கள்ளியம் பறந்தலை யொருசிறை யல்கி
ஒள்ளெரி நைப்ப வுடம்பு மாய்ந்தது
புல்லென் கண்ணர் புரவலர்க் காணாது
கல்லென் சுற்றமொடு கையழிந்து புலவர்
வாடிய பசிய ராகிப்பிறர்
நாடுபடு செலவின ராயின ரினியே.

* "மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை, ஈகையி னேக்கழுத்த மிக்குடைய - மாகொல், பகைமுகத்த வென்வேலான் பார்வையிற் றீட்டும், நகைமுகத்த நன்கு மதிப்பு" (நீதிநெறி. 39).

திணையும் துறையும் அவை.

ஆயைக் குட்டுவன்கீரனுர் பாடியது.

(இ - ள்.) தாளத்திற்கேற்ப நடக்கும் அசைந்த நடையையுடைய குதிரைகளும் யானைகளும் தேர்களும் அழியாத புது வருவாயையுடைய நாடும் ஊர்களும் பாடுவார்க்குக் குறையறக்கொடுக்கும் ஆயாகிய அண்டிரன் கோடேந்திய அல்குலினையும் குறிய கைவளைகளையுமுடைய உரிமை மகளிரோடு காலனென்று சொல்லப்படாநின்ற கண்ணோட்ட மில்லாதவன் கொண்டுபோகத் தேவருலகத்தை யடைந்தானுகக் கொண்டு, பொந்தாகிய தான் வாழுமிடத்துப் போழ்ந்தாற்போலும் வாயலகையுடைய பேராந்தை சுட்டுக்குவியென்று செத்தோரை அழைப்பதுபோலக் கூவும் கள்ளியையுடைய பாழிடமாகிய புறங் காட்டுள் ஒரு புடையிலே தங்கி ஒள்ளிய தீச்சுட உடம்பு மாய்ந்து விட்டது; பொலிவழிந்த கண்ணிணையுடையராய்த் தம்மைப் பாதுகாப் போரைக் காணுது ஆரவாரிக்குங் கிளையுடனே செயலற்று அறிவுடை யோர் தம் மெய்யுணங்கிய பசியையுடையராய்ப் பிறருடைய நாட்டின் கண் தலைப்படும் போக்கை யுடையராயினுர் இப்பொழுது; இஃதொரு நிலை இருந்தவாறு என்னை!—எ - று.

'மேலோ ருலக மெய்தின னெனவே' எனவும், 'ஒள்ளெரி நைப்ப வுடம்புமாய்ந் தனனென' எனவும் பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 5. "கூற்றின்பாற், கண்மையு முளதெனக் கருத லாகுமோ" (கம்ப. கிளைகண்டு. 71).

7. புறநா. 364 : 11 - 2.

7 - 8. "சாவோர்ப் பயிருங் கூகையின் குரலும்" (மணி. 6 : 75).

9. பறந்தலை : புறநா. 225, 245; மணி. 18 : 62.

10. "இறந்தெரி நையாமல்" (கலித். 145 : 19). (உசo)

(உசக) திண்டே ரிரவலர்க் கீத்த தண்டார்
அண்டிரன் வரூஉ மென்ன வொண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுட்
போர்ப்புறு முரசங் கறங்க
5 ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னுனே.

திணையும் துறையும் அவை,

* அவனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

(இ - ள்.) திண்ணிய தேரை இரவலர்க்கு ஈத்த குளிர்ந்த மாலையை யுடைய ஆய் வருகிருனென்று ஒள்ளிய தொடியினையும் வச்சிராயுதத் தையுமுடைய விசாலமாகிய கையையுடைய இந்திரனது கோயி

* "மோசி பாடிய வாயும்" (புறநா. 158 : 13).

லுள்ளே போர்த்தலுற்ற முரசம் முழங்க வானத்தின்கண் ஓசை தோன்றிற்று—எ - று.

இப்பெற்றிப்பட்ட வள்ளியோனை வானோர் எதிர்கோடல் தப்பா தென்றவாறு.

இது தற்குறிப்பேற்றமென்பதோர் அணிப்பொருட்டாய் நின்றது.

(கு - ரை.) 3 - 4. "வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்" (மணி. 1 : 27). (உசக)

(உசஉ) இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி யணியாள்
ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த
5 வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே.

(பி - ம்.) 3 'பாணன் கொள்ளான்'

திணையும் துறையும் அவை.

* ஒல்லையூர் கிழான்மகன் பெருஞ்சாத்தனைக் குடவாயிற்கீரத்தனார் (பி - ம். குடவாயினல்லாதனார்) பாடியது.

(இ - ள்.) இளைய வீரர் சூடார்; † வளையணிந்த இளைய மகளிர் பறியார்; நல்ல யாழ்க்கோட்டின் மெல்ல வளைத்துப் பாணன் பறித்துச் சூடிக்கொள்ளான்; பாடினி (பி - ம். பாணிச்சி) சூடாள்; தன்னுடைய ஆண்மைப்பாடு யாவர்க்கும் வெளிப்பட வீரரை எதிர்நின்று கொன்று வென்ற வலிய வேலையுடைய சாத்தன் இறந்துபட்ட பின்பு முல்லையாய நீயும் பூக்கக்கடவையோ, அவனது ஒல்லையூர் நாட்டின்கண்—எ - று.

அவனையிழந்து கொடியேனாய் வாழ்கின்ற யானேயன்றி நீயும் கொடியையாய்ப் பூக்கின்றாயோவென எச்சவும்மையாய் நின்றது; என்றது, பூச்சூடி நுகர்வாரின்மையிற் பயனில்லையென்றதாம்.

(கு - ரை.) 1. புறநா. 64 : 2.

4. ஆண்மை, ஆளுந்தன்மையெனப் பொருளுரைத்து இவ் வடியை மேற்கோள் காட்டினர் நச்சினார்க்கினியர்; தொல். கிளவி. சூ. 57. (உசஉ)

---

* ஒல்லையூர் ; இது புதுக்கோட்டை நாட்டிலுள்ள ஒலிய மங்கலமென்னும் ஊர்.

† 'சில்வளை விறலியென்றது, பல்வளையிடுவது பெதும்பைப் பருவத் தாகலின், அஃதன்றிச் சில்வளையிடும் பருவத்தாளென அவள் ஆடல் முதலிய துறைக்குரியளாதல் கூறப்பட்டது' (பதிற். 57 : 6, உரை).

(உசங) இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென வறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.

(பி - ம்.) 4 'தங்குவழித்தங்கி' 5 - 6 'லாயமொடு பாசினமருத... தாழ்ந்தநீர்க்கணிப் படிந்த' 9 'நிலையருங்குட்டம்' 10 - 11 'கள்ளாமை யளிதோ'

திணையும் துறையும் அவை.

தொடித்தலை விழுத்தண்டினூர் பாடியது.

(இ - ள்.) இப்பொழுது நினைந்து இரக்கமாகாநின்றது : செறிந்த மணலிடத்துச் செய்யப்பட்ட வண்டற்பாவைக்குப் (வண்டற்பாவை - விளையாடுதற் பொருட்டு மண்ணாற்செய்த பிரதிமை) பறிக்கப்பட்ட பூவைப் பறித்துச் சூடிக் குளிர்ந்த பொய்கையின்கண் விளையாடும் மகளிரோடு கைகோத்து அவர் தழுவின இடத்தே தழுவி அசைந்த விடத்தே யசைந்து ஒளித்துச்செய்யுமஃதறியாத வஞ்சனையில்லாத இளமைந்தருடனேகூட உயர்ந்த கோடுகளையுடைய மருதினது துறையிலே வந்து உறத்தாழ்ந்து நீர்க்கு அண்ணிதாகப் படிந்த கொம்பிலே ஏறி அழகுமிகக் கரையிடத்து நிற்போர் வியப்பத் திரையிடத்துத் திவலையெழ ஆழத்தால் நெடிய நீரையுடைய மடுவின்கண் துடுமென்று ஒலிப்பக் குதித்து மூழ்கி மணலை முகந்து காட்டிய கல்வியில்லாத இளமை இரங்கத்தக்கது; அவ்விளமை எவ்விடத்துண்டு கொல்லோ பூண்செறிந்த தலையையுடைய பரிய தண்டுக்கோலையூன்றித் தளர்ந்து இருமல் இடையே நெருங்கின சில வார்த்தையுடைய பெரிய முதுமையை யுடையேமாகிய எங்களுக்கு?—எ - று.

எமக்கு இளமை யாண்டுண்டுகொல்லோ? அதுதான் இரங்கத் தக்கதெனக் கூட்டுக.

இளமைகழிந்து இரங்கிக்கூறுதலான் இதுவும் கையறுநிலை யாயிற்று.

'மறையென வறியார்' என்று பாடமோதுவாரும் உளர்.

(கு - ரை.) 1. 'இனியென்றது, இனிநினைந் திரக்கமாகின்று என்றாற்போல இப்பொழுது என்னும் பொருள் தந்தது' (கலித். 1, ந.); 'இரங்கல்' என்னும் உரிச்சொல் இரக்கமென்றாகி ஒரு பொருளது கழிவாற் பிறந்த வருத்தமாகிய குறிப்புணர்த்தி நிற்குமென்பதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 61, ந. 1 - 3. புறநா. 11 : 1 - 4.

9. "நெடுநீர்த் தண்கயந் துடுமெனப் பாய்ந்து" (நற். 330 : 3).

'நெடுநீர்க்குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து என்பதும் இசை' (தொல். இடை. சூ. 10, ந.; நன். வி. சூ. 424); 'துடும்' என்னும் சொல் ஓசைப்பொருண்மேல் வந்ததற்கு மேற்கோள்; நன். சூ. 420, மயிலை.

6 - 9. "கரைசேர் மருத மேறிப், பண்ணை பாய்வோள்" (ஐங்குறு. 74)

14. "பெருமூ தாளர் ரேமஞ் சூழ" (முல்லை. 54).

12 - 4. 'தொடித்தலை...எமக்கே : என்பது தன்கட்டோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது; என்னை? இளமைக்காலத்துச் செய்தன செய்யமாட்டாது இளிவந்தனம் இக்காலத்து என்றமையின்' (தொல். மெய்ப்பாடு. சூ. 6, பேர்.; இ. வி. சூ. 578, உரை).

மு. காஞ்சித்திணைத்துறைகளுள், 'கழிந்தோரொழிந்தோர்க்குக் காட்டிய முதுமை' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 24. ந. (உசந)

(உசச) பாணர் சென்னியும் வண்டுசென் றூதா
விறலியர் முன்கையுந் தொடியிற் பொலியா
இரவன் மாக்களு... ....

(இ - ள்.) ....முசுக்கலையின் நீக்குதற்கு இரலையென விசேடித்தனர்......

...சாதலென்பது இன்னாதாதலிற் பெரும்பிறிதாயின்றேவென்றான். தானுறுகின்ற துன்பத்தைக் கலைமேல் வைத்துக் கூறியவாறு.

(கு - ரை.) 1. புறநா. 376 : 9; "கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்" (பொருந. 97). (உசச)

(உசரு) யாங்குப்பெரி தாயினு நோயள வெனைத்தே
உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்
தொள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி

ஞாங்கர் மாய்ந்தனண் மடந்தை
இன்னும் வாழ்வ லென்னிதன் பண்பே.

திணையும் துறையும் அவை.

சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை தன் பெருங் கோப்பெண்டு துஞ்சிய காலைச் சொல்லிய பாட்டு.

(இ - ள்.) எப்படிப் பெரிதாயினும் யானுற்ற நோயினது எல்லை எவ்வளவாயிற்று, என்னுயிரைப் போக்கமாட்டாத வலியையுடைத் தல்லாமையால்? கள்ளி வளரப்பட்ட புறங்காட்டுள் வெள்ளிடையின் மூட்டிய தீயை விளைக்கும் சிறிய விறகையுடைய படுக்கையின்கண் ஒள்ளிய அழலாகிய பாயலின்கண்ணே பொருந்தப்பண்ணி மேலுல கத்தே போயினாள், மடவாள்; அவள் மாயவும் இன்னமும் உயிரிருந்து வாழ்வேன்; இவ்வுலகியற்கை இருந்தவாறு என்னோ!—எ - று.

எனைத்தென்றது, உயிரைப் போக்கமாட்டாமையின் நோயை இகழ்ந்து கூறியவாறு.

'பாவை சேர்த்தி' என்றோதி அவளுடம்பை அழகுபடப் பள்ளியுட் கிடத்தியென்று உரைப்பாரும் உளர்.

உயிர் செகுக்கலாமைக்குக் காரணம் மதுகையுடைத்தல்லாமை யென வுணர்க.

பாயல்சேர்த்தி இன்னும் வாழ்வலென இயையும்.

சேர்த்தவெனத் திரிப்பினும் அமையும்.

'ஞாங்கர் மாய்ந்தனள்' என்பதற்கு என்னை நீத்து முன்னே இறந்தாளென்றுமாம்.

(கு - ரை.) 3 மு. புறநா. 225 : 7, 237 : 13.

5. பள்ளிப்பாயல் - ஒருபொருட் பன்மொழி.

மு. "கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும், அழல் சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான்—குழல்சேர்ந்த, தாமந் தரியா தசையுந் தளிர்மேனி, ஈமந் தரிக்குமோ வென்று" (தண்டி. சூ. 68, மேற்.).

காஞ்சித்திணைத்துறைகளுள், 'காதலியிழந்த தபுதாரநிலை' என் பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 19, இளம்.; சூ. 24, ந.

(உசரு)

(உசசு) பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட

வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே.

(பி - ம்.) 4 'வாள்போந்தட்ட', 'வாள்போழ்ந்தட்ட' 6 'தடகிடைமிடைந்த', 'தடைகிடந்த'

திணை - அது; துறை - ஆனந்தப்பையுள்.

பூதபாண்டியன்றேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாள் சொல்லியது.

ஆனந்தப்பையுளாவது :—

"விழுமங் கூர வேய்த்தோ ளரிவை
கொழுநன் வீயக் குழைந்துயங் கின்று" (பு. வெ. 166).

(இ - ள்.) பலசான்றவிரே! பலசான்றவிரே! நின் தலைவனோடு இறப்ப நீ போவென்று கூருது அதனைத் தவிர்கவென்று சொல்லி விலக்கும் பொல்லாத விசாரத்தையுடைய பலசான்றவிரே! அணிலினது வரிபோலும் வரியையுடைய வளைந்த வெள்ளரிக் காயை அரிவாளால் அரிந்திடப்பட்ட விதைபோன்ற நல்ல வெள்ளிய நறிய நெய் தீண்டாமல் இலை இடையே பயின்ற கையாற் பிழிந்துகொள்ளப்பட்ட நீர்ச் சோற்றுத் திரளுடனே வெள்ளிய எள்ளரைத்த விழுதுடனே புளிகூட்டி அடப்பட்ட வேளையிலை வெந்த வேவையுமாகிய இவை உணவாகக் கொண்டு பருக்கைகளாற் படுக்கப்பட்ட படுக்கையின்கண் பாயும் இன்றிக் கிடக்கும் கைம்மைநோன்பால் வருந்தும் பெண்டிருள்ளே மல்லேம் யாம்; புறங்காட்டின்கண் உண்டாக்கப்பட்ட கரிய * முருட்டால் அடுக்கப்பட்ட பிணப்படுக்கை உங்களுக்கு அரிதாவதாகுக; எமக்கு எம்முடைய பெரிய தோளையுடையனாகிய கொழுநன் இறந்து பட்டானாக, முகையில்லையாக வளவிய இதழ் மலர்ந்த தாமரையை யுடைய நீர்செறிந்த பெரிய பொய்கையும் தீயும் ஒரு தன்மைத்து— எ - று.

தில் : விழைவின்கண் வந்தது.

எமக்குப் பொய்கையும் தீயும் ஒருதன்மைத்து; நுமக்கு அரிதாகுக வெனக் கூட்டுக.

(கு - ரை.) 1 நன். சூ. 169, மயிலை. மேற்.

---

* "வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை" (திருவா).

4. ‘அணிவ்வரிக் கொடுங்காய் எனப் புறத்தினுங் காட்டினராத லின், கொடுங்காயென்பது பெயர்; வரி - அடை’ (சிலப். 16 : 22 - 8, அடியார்.); குறில் செறியா ளகரம் வேற்றுமையில் வலிமுன் திரியாது இயல்பானதற்கு மேற்கோள்; நன். சூ. 228, மயிலை; நன். வி. சூ. 229; இ. வி. சூ. 139, உரை.

8. “கலந்தவனைக் கூற்றங் கரப்பக் கழியா, தலந்தினையு மவ்வளைத் தோளி - உலத்தவன், தாரொடு பொங்கி நிலனசைஇத் தான்மிசையும், காரடகின் மேல்வைத்தாள் கை” (பு. வெ. 257).

7 - 9. ‘துன்புறுவன என்றார், வெள்ளெட் சாந்தொடு......... வதியும் : என்பதனை; இது புறம்’ (சிலப். 18 : 34 - 6, அடியார்.).

11 - 5. தொல். இடை. சூ. 5, தெய்வச். மேற்.

7 - 15. “காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி, ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா, தின்னுயி ரீவரீயாராயின், நன்னீர்ப் பொய்கையினளியெரி புகுவர், நளியெரி புகாஅராயி னன்பரோ, டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்” (மணி. 2 : 42 - 7.)

மு. காஞ்சித்திணைத்துறைகளுள், ‘நல்லோள் கணவனொடு நளி யழல் புகீஇச், சொல்லிடை யிட்ட மாலைநிலை’ என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 19, இளம்.; சூ. 24, ந. (உசசு)

(உசள) யானை தந்த முளிமர விறகிற்
கானவர் பொருத்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை வைகுதுயி லெழுப்பி
மந்தி சீக்கு மணங்குடை முன்றிலின்
நீர்வார் கூந்த லிரும்புறந் தாழப்
பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரு மம்ம தானேதன் கொழுநன்
முழவுகண் டுயிலாக் கடியுடை வியனகர்ச்
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் நடுங்குந்த னிளமைபுறங் கொடுத்தே.

(பி - ம்.) 6 ‘பேரமர்க்’ 10 ‘இன்னுயிர் நீங்குந்’

திணையும் துறையும் அவை.

அவள் தீப்பாய்வாளைக் கண்டு மதுரைப்பேராலவாயார் சொல்லியது.

(இ - ள்.) யானை கொண்டுவரப்பட்ட உலர்ந்த மரத்து விறகால் வேடர் மூட்டப்பட்ட கடைந்துகொள்ளப்பட்ட எரியாகிய விளக்கினது ஒளியை யுடைத்தாகிய மடவிய மானாகிய பெரியநிரை வைகிய உறக்கத்தை எழுப்பி மந்தி தூக்கும் அணங்குடைத்தேவியையுடைய முற்றத்து நீர் வடிந்த மயிர் மிக்க புறத்தில் வீழப் பெரிய துன்பமேவிய

கண்ணையுடையளாய்ப் புறங்காட்டைப் பார்த்துத் தான் சுழலும், தன் தலைவன் முழவினது கண் மார்ச்சனையுலராத காவலையுடைய அகலிய கோயிலுள் மிகச் சிறிது பொழுது தனித்திருப்பினும் இனிய உயிர் தளரும் தன் இளமை புறங்கொடுத்து—எ - று.

......................யானவற்கு அஞ்சி நடுங்குதல்..................

இளமை புறங்கொடுத்துப் பெருங்காடு நோக்கித் தான் தெருமரு மெனக் கூட்டுக.

அம்ம : அசை.

(கு - ரை.) 1 - 2. புறநா. 251 : 5 - 6, குறிப்புரை. கலித். 34 : 11.

3. வைகுதல் - துயிலல்; சிலப். 10 : 1.

4. "மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றில்" (பெரும்பாண். 497). (உசஎ)

(உசஅ) அளிய தாமே சிறுவெள் ளாம்பல்
இளைய மாகத் தழையா யினவே
இனியே, பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்
தின்னா வைக லுண்ணும்
5 அல்லிப் படூஉம் புல்லா யினவே.

திணை - அது; துறை - தாபதநிலை.

............ஒக்கூர் (பி - ம். எக்கூர்) மாசாத்தனார் பாடியது.

தாபதநிலையாவது :—

"குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்
கருந்தடங் கண்ணி கைம்மைகூறின்று" (பு. வெ. 257)

(இ - ள்.) இரங்கத்தக்கன, சிறிய வெளிய ஆம்பல்; அவைதாம், யாம் இளையேமாயிருக்க முற்காலத்துத் தழையாயுதவின; இக் காலத்துப் பெரிய செல்வத்தையுடைய தலைவன் இறந்தானாக உண்ணுங்காலை மாறி இன்னாத வைகும்பொழுதின்கண் உண்ணும் தம் அல்லியிடத்துண்டாம் புல்லரிசியாய் உதவின—எ - று.

தாம் இன்புறுங்காலத்தும் துன்புறுங்காலத்தும் துணையாய் உதவினவாதலான், அளியவாயினவென ஆம்பலை நோக்கிக் கூறிய வாறாயிற்று.

* நெல்லலாவுணவெல்லாம் புல்லென்றல் மரபு.

(கு - ரை.) 1 - 2. "வயன்மல ராம்பற் கயிலமை நுடங்குதழை" (ஐங்குறு. 72); "அயவெள் ளாம்ப லம்பகை நெறித்தழை" (குறுந்.

---

* 'புல்லென்பது பலபொருளொரு சொல்லாகலான் நெல்லென்னும் இனத்தானே வேறுபடுத்துப் புல்லென்பது உணவின் மேற்கொள்க' (தொல். மரபு. சூ. 25, பேர்.); "புல்லார் பவர்கணெற் சோறுபெற் றுங்கு" (வெங்கைக். 18).

293); "ஆம்ப லணிந்தழை யாரந் துயல்வரும், தீம்புன லூரன் மகள்" (திணைமொழி. 40); கலித். 102 : 5.

4 - 5. புறநா. 250 : 4 - 5.   1 - 5. புறநா. 280 : 12 - 4.

மு. காஞ்சித்திணைத்துறைகளுள், 'காதலனிழந்த தாபதநிலை' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 19, இளம்; சூ. 24. ந. (உசஅ)

(உசகூ) கதிர்மூக் காரல் கீழ்ச்சேற் றொளிப்பக்
கணைக்கோட்டு வாளை மீநீர்ப் பிறழ
எரிப்பூம் பழன நெரித்துடன் வலைஞர்
அரிக்குரற் றடாரியின் யாமை மிளிரப்
பனைநுகும் பன்ன சினைமுதிர் வராலொ
டுறழ்வே லன்ன வெண்கயன் முகக்கும்
அகனாட் டண்ணல் புகாவே நெருநைப்
பகலிடங் கண்ணிப் பலரொடுங் கூடி
ஒருவழிப் பட்டன்று மன்னே யின்றே
அடங்கிய கற்பி னாய்நுதன் மடந்தை
உயர்நிலை யுலக மவன்புக...லரி
நீருடு சுளகிற் சீறிட நீக்கி
அழுத லானாக் கண்ணள்
மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே.

திணையும் துறையும் அவை.

...................தும்பி சொகினனார் (பி - ம். தும்பிசேர் கீரனார்) பாடியது.

(இ - ள்.) கதிர்நுனை போலும் மூக்கையுடைய ஆரன்மீன் சேற்றின் கீழே செருகத் திரண்ட (மிசையாகிய) கோட்டையுடைய வாளைமீன் நீர்மேல் பிறழ எரிபோலும் நிறத்த பூவையுடைய பொய்கைகளை நெருங்கி உடனே வலைஞரானவர், ஒலி நிரம்பாத ஓசையையுடைய கிணையினது முகமேபோலும் யாமை பிறழப் பனையினது நுகும்பை யொத்த சினைமுற்றிய வராலோடு மாறுபடும் வேல்போன்ற ஒள்ளிய கயலை முகந்துகொள்ளும் முன்னகன்ற நாட்டையுடைய குருசிலது உணவு நெருநலை நாளாற் பகுத்த இடத்தைக் கருதிப் பலருடனே இயைந்து ஒருவழிப்பட்டது : அது கழிந்தது; இன்று, தன்கண்ணே யடங்கிய கற்பினையும் சிறிய நுதலினையுமுடைய மடந்தை உயர்ந்த நிலைமையையுடைய விண்ணுலகத்தே அவன் சென்று புக அவனுக்கு உணவு கொடுத்தல் வேண்டிச் சுளகுபோலச் சிறிய இடத்தைத் துடைத்து அழுதலமையாத கண்ணையுடையளாய்த் தன்கண் கலுழ்கின்ற நீராலே சாணகத்தைக் கொண்டு மெழுகுமளவிலே பட்டது— எ - று.

மெழுகுமளவாயிற்றென்றது பொருளெனவுரைக்க.

மன் கழிவின்கண் வந்தது.

இது, கண்டார் நிலையாமை கூறி இரங்கியவாறு.

(கு - ரை.) 2. "கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு" (குறுந். 164.)

4. புறநா. 70 : 2 - 3, குறிப்புரை, 369 : 21.

5. தொல். மரபு. சூ. 86, பேர். மேற்; 'நுகும்பென்பது பனை வாழை மரல் புல் என்பவற்றிற்குரித்து' (நன். சூ. 387, மயிலை.).

6. புறநா. 287 : 4. 11. புறநா. 229 : 22.

12. புறநா. 234 : 2.

14. சீவக. 2984.

தொல். எச்ச. சூ. 47. ந., இ. வி. சூ. 168, உரை, மேற்; 'மெழுகு மாப்பியின்கண் கலுழ்நீ ரானே : என்புழிக் கணவனை யிழந்தாள் அவற்குப் பலிக்கொடை கொடுத்தற்கு மெழுகுகின்றாளைக் கண்ணீரே நீராக மெழுகுகின்றாளென்றமையின் இது தன்கட்டோன்றிய இழவுபற்றிப் பிறந்த அவலச்சுவையாயிற்று' (தொல். மெய்ப்பாடு. சூ. 5, பேர்.; இ. வி. சூ. 578, உரை).

மு. காஞ்சித்திணைத்துறைகளுள், 'தாமே யேங்கிய தாங்கரும் பையுள்' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 24, ந.

(உ௪௯)

(உ௫௦) குய்குரன் மலிந்த கொழுந்துவை யடிசில்
இரவலர்த் தடுத்த வாயிற் புரவலர்
கண்ணீர்த் தடுத்த தண்ணறும் பந்தர்க்
கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி யுணவின் மனைவியோ டினியே
புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்
வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்
முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே.

திணையும் துறையும் அவை.

........தாயங்கண்ணியார் பாடியது.

(இ - ள்.) தாளிப்போசை மிக்க கொழுவிய துவையோடு கூடிய அடிசில் இரவலரைத் தன்கண்ணே தகைத்த வாயிலினையும் தன்னாற் புரக்கப்படுவோர் கண்ணீரை மாற்றிய குளிர்ந்த நறிய பந்தரினையுமுடைய மனையிடத்து மயிரைக் குறைத்துக் குறிய வளையைக் களைந்து அல்லியரிசியாகிய உணவையுடைய மனையாளுடனே இப்பொழுது பொலிவழிந்தாய், செல்வம் பொருந்திய அழகாகிய நகரே! வான்

சோற்றைக்கொண்டு இனிய பாலை வேண்டும் வெறுப்பைத் தம் மிடத்தேயுடைய புதல்வர் தந்தை தனியிடத்தையுடைய புறங்காட்டை அடைந்தபின்—எ - று.

கொய்து நீக்கியென்னும் வினையெச்சங்களை உணவினையுடைய வென்னுங் குறிப்புவினையோடு முடிக்க.

நகரே! நீ புதல்வர் தந்தை காடு முன்னியபின் புல்லென்றனை யெனக் கூட்டுக.

முனித்தலை - குடுமித்தலையெனினும் அமையும்.

(கு - ரை.) 4. புறநா. 253, 254, 261, 280.

5. புறநா. 248 : 4 - 5.

6. தொல். குற்றியலுகரப். சூ. 76, ந. மேற்.

7. புறநா. 261 : 19.

8. "முனித்தலைக் கண்ணி நெற்றிச் சிறுர்" (சீவக. 2541); பெருங். 2. 2 : 107. (உருo)

(உருக) ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்
இழைநிலை நெகிழ்த்த மள்ளற் கண்டிகும்
கழைக்க ணெடுவரை யருவி யாடிக்
5 கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே.

திணை - வாகை; துறை - தாபதவாகை.

.........மாற்பித்தியார் பாடியது.

(இ - ள்.) ஓவியம்போலும் அழகினையுடைத்தாகிய இடமுடைய இல்லின்கண் * கொல்லிப்பாவை போன்ற வடிவினையுடைய சிறிய வளையணிந்த மகளிருடைய அணிகலங்களை அவை நிற்கும் நிலையி னின்றும் கழலும் வகை ஆதரஞ் செய்தவனைக் கண்டேம்; மூங்கி லிடத்தையுடைய நெடிய மலையிடத்து அருவி நீரை யாடிக் காட்டி யானை கொண்டுவரப்பட்ட விறகால் மிக்க வெம்மையையுடைய செந்தீயை வேட்டு முதுகின்கண்ணே தாழ்ந்த புரிந்த சடையைப் புலர்த்துவோன்—எ - று.

ஆடி வேட்டுப் புலர்த்துவோனென இயையும்.

முன்பு இழை நெகிழ்த்த மள்ளற் கண்டேம், அவன் இப்பொழுது புறந்தாழ் புரிசடை புலர்த்தாநின்றுனெனை அவனைக் கண்டு வியந்து கூறியவாறு.

---

* கொல்லிப்பாவை: நற். 185, 192, 201; குறுந். 89, 100; அகநா. 62, 209.

பாவையென்றது, பிறிது எவ்வுணர்வுமின்றிக் காமவேட்கையாகிய ஒரு குறிப்பினை.

கானயானை தந்த விறகென்றது, இவன் தவமிகுதியான் அதுவும் ஏவல் செய்தல்.

(கு - ரை.) 1. மு. நற். 182 : 2; "ஓவுக்கண் டன்ன வில்" (நற். 268 : 1); "ஓவத் தன்ன வினைபுனை நல்லில்", "ஓவத் தன்ன வுருகெழு நெடுநகர்" (பதிற். 61 : 3, 88 : 28); "ஓவத் தன்ன வினைபுனை நல்லில்" (அகநா. 98 : 11).

'ஓவத் தன்ன விடனுடை வரைப்பின் என்புழி அந்நகரினது செயற்கை நலம் தோன்றக் கூறினமையின் அதற்கு நிலைக்களன் நல னுயிற்று' (தொல். உவம. சூ. 4, இளம்.; பேர்.; இ. வி. சூ. 639; மாறன். 92, உரை).

2. "செய்வுறு பாவை யன்னவென், மெய்பிறி தாகுதல்" (குறுந். 195 : 6); "வல்லவன் றைஇய பாவைகொல்......செல்வ மகள்" (கலித். 56 : 7 - 12). 4 - 7. கலித். 93 : 35.

5 - 6. புறநா. 247 : 1 - 2; தவஞ்செய்வோர்க்கு யானைகள் விறகு தருமென்பதை, "செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக், களிறுதரு விறகின் வேட்கும், ஒளிறிலங் கருவிய மலைகிழவோனே" (பெரும்பாண். 498 - 500) என்பதனுலும் அதன் அடிக் குறிப்பாலும் அறிக.

மு. வாகைத்திணைத்துறைகளுள், 'நாலிரு வழக்கிற் றுபதப் பக்கம்' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 16, இளம்.; சூ. 20, ந. (உருக)

(உருஉ) கறங்குவெள் ளருவி யேற்றலி னிறம்பெயர்ந்து
தில்லை யன்ன புல்லென் சடையோ
டள்ளிலைத் தாளி கொய்யு மோனே
இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவ னுயினன் முன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(இ - ள்.) ஒலிக்கும் வெள்ளிய அருவி நீரை ஏற்றலாற் பழைய நிறம் மாறித் தில்லந்தளிர் போன்ற புற்கென்ற சடையோடு கூடி நின்று செறிந்த இலையையுடைய தாளியைப் பறிப்போன், மனையின்கண் இயங்கும் மடப்பத்தையுடைய மயிலை அகப்படுத்திக்கொள்ளும் சொல் லாகிய வலையையுடைய வேட்டைக்காரனுயினுன் முன்பு—எ - று.

இதுவும் அவன் நிலைமையைக் கண்டு வியந்து கூறியது.

(கு - ரை.) 1 - 3. கலித். 133 : 1.

3. தாளி - ஒருவகைக் கொடி.

4. பிணித்தல் - வயமாக்குதல்.

4 - 5. பிறன்கட்டோன்றிய அசைவுபற்றிய அவலச் சுவைக்கு மேற்கோள்; தொல். மெய்ப்பாடு. சூ. 5, பேர்.; இ. வி. சூ. 578, உரை; கலித். 55 : 17.

மு. வாகைத்திணைத்துறைகளுள், 'நாலிரு வழக்கிற் றுபதப் பக்கம்' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 16, இளம். (உருஉ)

(உருங) என் றிறத் தவலங் கொள்ள லினியே
வவ்வார் கண்ணி யிளையர் திளைப்ப
நகாஅலென வந்த மாறே யெழாநெற்
பைங்கழை பொதிகளைந் தன்ன விளர்ப்பின்
5 வளையில் வறுங்கை யோச்சிக்
கிளையு ளொய்வலோ கூறுநின் னுரையே.

(பி - ம்.) 3 'நகாரென'

திணை - பொதுவியல்; துறை - முதுபாலை.

.........குளம்பாதாயனர் (பி - ம். குளம்பாதயானர்) பாடியது.

முதுபாலையாவது :—

"காம்புயர் கடத்திடைக் கணவனை யிழந்த
பூங்கொடி யரிவை புலம்புரைத் தன்று" (பு. வெ. 254)

(இ - ள்.) நின்னைப் பிரிந்து ஆற்றேனுகின்றேன்; என்னுடைய திறத்து வருத்தங்கொள்ளாதொழிவாயாக, இப்பொழுது; சுற்றப்பட்ட கண்ணியையுடைய நின்னோடு கூடி விளையாடப் போந்த இளையோர் விளையாடா நிற்ப அவரோடு நகுகின்றிலேனென்று கருத வந்த நின் இறந்துபாட்டை நெல் எழாத பசிய மூங்கில் பட்டையொழித்தாற் போன்ற வெளுத்திருந்த வளையில்லாத வறிய கையைத் தலை மேலே ஏற்றிக்கொண்டு நின் சுற்றத்திடத்தே செலுத்தச் செல்வேனோ இன்னும், இறந்துபடினல்லது? நின் வார்த்தையை எனக்குச் சொல்லுவாயாக—எ - று.

அவலமென்றது, பிரிந்தவழி ஆற்றேனென்று வருந்தும் அவலத்தை.

கூறும் நின்னுரையென அவன் சொற்கேட்டல் விருப்பினுற் கூறுவான் போன்று மயங்கிக் கூறியவாறு.

(கு - ரை.) 1. சீவக. 1453, ந. மேற்கோள்.

3. நகாஅல் - எதிர்மறை வியங்கோள்; தன்மைக்கண் வந்தது.

3 - 5. கலித். 4 : 16 - 7.

5. புறநா. 254 : 4. 6. ஒய்தல் : பதிற். 73, 87. (உருங)

(உருச)இளையரு முதியரும் வேறுபுலம் படர
எடுப்ப வெழாஅய் மார்பமண் புல்ல
இடைச்சுரத் திறுத்த மள்ள விளர்த்த
வளையில் வறுங்கை யோச்சிக் கிளையுள்
இன்ன னாயின னிளையோ னென்று
நின்னுரை செல்லு மாயின் மற்று
முன்னூர்ப் பழனிய கோளி யாலத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்
வளனுஞ் செம்மலு மெமக்கென நாளும்
ஆனாது புகழு மன்னை
யாங்கா குவள்கொ லளிய டானே.

(பி - ம்.) 6 'சொல்லு மாயின்' 7 'முள்ளூர்'

திணையும் துறையும் அவை.

.........கயமனார் பாடியது.

(இ - ள்.) இளையோரும் முதியோரும் வேற்று நிலத்தே விலங்கிப் போக யான் எடுப்பவும் நீ எழுந்திராயாய் நினது மார்பம் நிலத்தைப் பொருந்தச் சுரத்திடை மேம்பட வீழ்ந்த இளையோய்! வெளுத்த வளையில்லாத வறிய கையைத் தலைமேலே வைத்துச் சுற்றத்தின்கண் இத்தன்மையனாயினன் இளையனென்று யான் சொல்ல நின் இறந்து பாடு கூடிய வார்த்தை செல்லுமாயின், ஊர் முன்னர்ப் பழுத்த கோளியாகிய ஆலமரத்தின்கட் புள்ளுக்கள் மிகும் புது வருவாயையுடைய அத்தன்மைத்து, என்னுடைய மகனது செல்வமும் தலைமையும் எமக்கென்று நாடோறும் அமையாது புகழும் நின்னுடைய மாதா எவ்வாறு ஆவாள் கொல்? அவள் இரங்கத்தக்கவள்தான்!—எ - று.

வளனும் செம்மலும் புள்ளார் யாணர்த்தற்றென்றது, * புள்ளெல்லாஞ் சென்று அணுக ஆலமரம் பயன்பட்டு நின்றாற்போல இவனும் தன் சுற்றத்தாரும் பிறரும் நட்டாரும் (பி - ம். நாட்டாரும்) நுகரும்படி நின்றமை தோன்ற நின்றது.

'நின்னுரை செல்லுமாயின் யாங்காகுவள்கொல்' என்ற கருத்து: யான் இறந்துபட்டவாறு சொல்லின் அன்றே அவள் வருத்தமுறுவள்; அது யான் மாட்டேனென்பதாம்.

முன்னூர் : முன்மொழி நிலையல். மற்று : அசைநிலை.

(கு - ரை.) 4 - 5. புறநா. 253 : 5 - 6.

8. கோளியாலம் : புறநா. 58 : 2, குறிப்புரை.

* நாலடியார், 202.

7 - 9. "பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம், நயனுடை யான்கட் படின்" (குறள், 216).

மு. காஞ்சித்திணைத்துறைகளுள், 'நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து, தனிமகள் புலம்பிய முதுபாலை' என்பதற்கு மேற் கோள்; தொல். புறத்திணை. சூ. 24, ந. (உ௫௪)

(உ௫௫) ஐயோ வெனின்யான் புலியஞ் சுவலே
அணைத்தனன் கொளினே யகன்மார் பெடுக்கவல்லேன்
என்போற் பெருவிதிர்ப் புறுக நின்னை
இன்னா துற்ற வறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்திசிற் சிறிதே.

(பி - ம்.) 2 'உய்த்தனன்', 'எடுத்தனன் கொளினுய்த்தனென் கோனே மார்பெடுக்கல்லேன்' 6 'சேரநடத்தி'

திணையும் துறையும் அவை.

...........வன்பரணர் பாடியது.

(இ - ள்.) ஐயோவென்று அரற்றுவேனாயின் அவ்வுரை வழியே வந்து நின் உடம்பாயினும் யான் காணப்பெறாமல் ஏதஞ்செய்யுமோ வென்று புலியை அஞ்சுவேன்; இவ்விடத்தினின்றும் எடுத்துக் கொண்டுபோவேனென்று நினைப்பின் நினது அகலிய மார்பை எடுக்க மாட்டேன்; என்னையொப்பப் பெரிய நடுக்கத்தை உறுவதாக, உன்னை இறந்துபடும்படி பரிசு வந்து தாக்கிய அறமில்லாத கூற்றே. யாம் மலை யினது நிழற்கண்ணே அடைவேமாக; எனது நிரைத்த வளையை யுடைய முன்கையைப் பிடித்து மெல்ல நடப்பாயாக—எ - று.

நடவாயென்னும் முன்னிலை வினைச்சொல் சின்னென்னும் இடைச் சொல்லான் அசைக்கப்பட்டு நின்றது.

(கு - ரை.) 3. புறநா. 291 : 5.

3 - 4. 'என்போற் பெருவிதிர்ப் புறுக நின்னை, இன்னா துற்ற வறனில் கூற்றே: என்புழிப் போலவென்பது குறிப்புவினையெச்சமாய் நின்றது' (தொல். எச்ச. சூ. 18, சே.).

மு. காஞ்சித்திணைத்துறைகளுள், நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து தனிமகள் புலம்பிய முதுபாலைக்கும் (தொல். புறத்திணை. சூ. 19, இளம்.), இழிவுபற்றி வந்த அழுகைக்கும் (தொல். மெய்ப்பாடு. சூ. 5, இளம்.), தன்கட்டோன்றிய இழிவுபற்றிப் பிறந்த அவலச்சுவைக் கும் (தொல். மெய்ப்பாடு. சூ. 5, பேர்.) மேற்கோள்; 'ஐயோ........ சிறிதே: இதனுள் அழுகையாகிய மெய்ப்பாடு புலப்பட வந்தவாறு காண்க' (தொல். செய். சூ. 194, இளம்.). (உ௫௫)

(உருசு)கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
அச்சுடைச் சாகாட் டாரம் பொருந்திய
சிறுவெண் பல்லி போலத் தன்னொடு
சுரம்பல வந்த வெமக்கு மருளி
வியன்மல ரகன்பொழி லீமத் தாழி
அகலி தாக வனைமோ
நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே.

(பி - ம்.) 3 'தம்மொடு'

திணையும் துறையும் அவை.

....

(இ - ள்.) கலம் வனையும் வேட்கோவே! கலம் வனையும் வேட்கோவே! சகடஞ் செலுத்தும் உருளின்கண் ஆரத்தைப் பொருத்தி வந்த சிறிய வெளிய பல்லிபோல் நெருநலை நாளாற் பலசுரமும் தன்னோடு கழிந்துவந்த எமக்கும் அருள்பண்ணி (யாமும் அவனோடே கூடியிருக்கும்படி) பெரிய பரப்பினையுடைய அகலிய பூமியிடத்துக் காட்டின்கண் முதுமக்கட்டாழியை இடமுடைத்தாக வனைவாயாக, பெரிய இடத்தினையுடைய பழைய ஊரின்கட் கலம் வனையும் வேட்கோவே!—எ - று.

'எமக்கும்' என்றது பன்மையும் தலைமையும் கருதாது மயங்கக் கூறி நின்றது.

கோவே! கோவே! மூதூர்க்கலஞ்செய்கோவே! எமக்கும் அருளி அகலிதாக வனைகவெனக் கூட்டுக.

அடுக்கு, விரைவின்கண் வந்தது.

(கு - ரை.) 1. கலம் - பாண்டம். மு. புறநா. 228 : 1.

3 - 4. "பொருந்தலாற் பல்லி போன்றும்" (சீவக. 1895).

5. புறநா. 228 : 12, குறிப்புரை. (உருசு)

(உருஎ)செருப்பிடைச் சிறுபர லன்னன் கணைக்கால்
அவ்வயிற் றகன்ற மார்பிற் பைங்கட்
குச்சி னிரைத்த குரூஉமயிர் மோவாய்ச்
செவியிறந்து தாழ்தருங் கவுளன் வில்லொ
டியார்கொலோ வளியன் றானே தேரின்
ஊர்பெரி திகந்தன்று மிலனே யரணெனக்
காடுகைக் கொண்டன்று மிலனே காலைப்
புல்லா ரினநிரை செல்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென வெண்ணிச்

10 சிலையின் மாற்றி யோனே யவைதாம்
மிகப்பல வாயினு மென்னு மெனைத்தும்
வெண்கோ டோன்றாக் குழிசியொடு
நாளுறை மத்தொலி கேளா தோனே.

(பி - ம்.) 1. 'செறுபரல்' 3 'குச்சிநிரை...மேவாய்'

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு.

....

உண்டாட்டாவது :—

"தொட்டிமிழுங் கழன்மறவர்
மட்டுண்டு மகிழ்தூங்கின்று" (பு. வெ. 15).

(இ - ள்.) .... திரண்ட காலையும் அழகிய வயிற்றினையும் பரந்த மார்பினையும் பசிய கண்ணினையும் குச்சுப்புல் நிரைத்தாற் போன்ற நிறம் பொருந்திய மயிரினையுடைய தாடியினையும் செவியிறந்து முன்னே தாழ்ந்த கதுப்பினையுமுடையனாய் வில்லுடனே யார்தான் இவ் வளிக்கத் தக்கான்றான்? ஆராயின், ஊரைப் பெரிதும் நீங்கினதும் இலன் (பி - ம். நீங்கின்றுமலன்); தனக்கு அரணெனக் கருதிக் காட்டைக் கைக்கொண்டதும் இலன்; இற்றைநாட் காலையே பொருந்தாதாரது இனமாகிய நிரை போகின்ற இடத்தைப் பார்த்துத் தன் கையாற் குறித்து மெல்ல எண்ணிக் கரந்தையார் செய்யும் பூசலை மாற்றி வில்லாலே கொடு போந்தனன்; அந்நிரைதாம் மிகப் பலவேயாயினும் என்ன பயன்படும் எத்தன்மைத்தும், பால் முதலியன பெய்யப்படாமை யிற் சிறிதும் வெள்ளிய முகந்தோன்றாத பானையைக் காண்டலுடனே, நாட்காலத்து உறைதெறிப்பக் கடையும் மத்தின் ஒலியைக் கேளாதபடி பிறருக்கு நேராகக் கொடுத்தல் (பி - ம். பிறர்க்கு நோக்கிக் கொடுத்தல்) வல்லனாயினன், அவனுக்கு?—எ - று.

* பகைவர் மேல் நடக்கவொட்டாது எதிரில் நின்று விலக்குதலின், 'செருப்பிடைச் சிறுபர லன்னன்' எனப்பட்டான்.

'அன்ன' என்று பாடமோதி, செருப்பிடைச் சிறுபரலோசை போல நெடிய ஓசையையுடைய காலென்றுரைப்பாரும் உளர்.

யார்கொலென்றது அறியான்வினாதலன்றி வியப்பின்கண் வந்தது.

'ஊர்பெரி திகந்தன்று மிலனே' என்பது நிரைகோட்கடுமை.

சிறுபரலன்னன் கவுளனாகிய அளியனானவன்றான் யார்கொல்லோ? தேரின் வில்லோடு ஊர்பெரிது இகந்தன்றும் இலனாய்க் காடு கைக் கொண்டதும் இலனாய்நோக்கி எண்ணி மாற்றினான்; மாற்றிக் குழிசி

* "தருக்கி யொழுகித் தகவல்ல செய்தும், பெருக்க மதித்தபிற் பேணாத செய்தும், கரப்புடை யுள்ளங் கனற்று பவரே, செருப்பிடைப் பட்ட பரல்" (பழமொழி, 224).

காண்டலோடு மத்தொலி கேளாதோனாயினான்; அவனுக்கு அவை தாம் மிகப் பலவாயினும் என்னும் எனக்கூட்டுக.

கேளாதோற்கென உருபு விரித்து உரைப்பினும் அமையும்.

(கு - ரை.) மு. வெட்சித்திணைத்துறைகளுள், 'நோயின் றுய்த்தல்' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 3, இளம். (உருஎ)

13. உறை - துளி.

(உருஅ) முட்காட் காரை முதுபழ னேய்ப்பத்
தெறிப்ப விளைந்த தீங்கந் தாரம்
நிறுத்த வாயந் தலைச்சென் றுண்டு
பச்சூன் றின்று பைந்நிணம் பெருத்த
எச்சி லீர்ங்கை விற்புறந் திமிரிப்
புலம்புக் கனனே புல்லணற் காளை
ஒருமுறை யுண்ணா வளவைப் பெருநிரை
ஊர்ப்புற நிறையத் தருகுவன் யார்க்கும்
தொடுத லோம்புமதி முதுகட் சாடி
ஆதரக் கழுமிய துகளன்
காய்தலு முண்டக் கள்வெய் யோனே.

(பி - ம்.) 1 'முதுகனியேய்ப்பத்' 2 'தீங்கட்டாரம்' 4 'பைச்சூன்' 7 'வளவைபெருநிரை' 10 'ஆத்தர'

திணையும் துறையும் அவை.

..................உலோச்சனார் பாடியது.

உண்டாட்டாவது :—

"தொட்டிமிழுங் கழன்மறவர்
மட்டுண்டு மகிழ்தூங்கின்று" (பு. வெ. 15).

(இ - ள்.) முட்டாளையுடைய காரையினது முதிர்ந்த பழத்தை யொப்ப முற்ற விளைந்த இனிய கந்தாரமென்னும் பெயரையுடைய மதுவையுடைய வேற்றுப்புலத்துத் தான் கொண்டுவந்து நிறுத்தின நிரையைக் கள்விலைக்கு நேராகக் கொடுத்து உண்டு செவ்வித் தசையைத் தின்று செவ்வி நிணமிக்க எச்சிலாகிய ஈரமுடைய கையை வில்லினது புறத்தே திமிர்ந்து வேற்றுநாட்டின்கட் புக்கானே, புல்லிய தாடியையுடைய காளை; இவ்விருந்த மறவர் ஒருகால் உண்பதன் முன்னே பெரிய ஆனிரையை இவ்வூர்ப்புறமெல்லாம் நிற்பக் கொடு தருகுவன்; யாவர்க்கும் வாராது அதற்பொருட்டுத் தொடுதலைப் பாதுகாத்து வைப்பாயாக, முதிர்ந்த மதுவையுடைய சாடியை; ஆவைக் கொண்டுவரக் கலந்த தூளியையுடையனாய் அம்மதுவை விரும்புவோன் விடாய்த்தலும் உண்டாம்—எ - று.

தலைச்சென்றென்பது, தலைச்செலவெனத் திரிக்கப்பட்டது. இதற்குக் கள்விலையாட்டியிடத்தே செல்லவென்றுமாம்.

'தீங்கட்டாரம்' என்றேதிக் கள்ளாகிய இனிய பண்டமெனினும் அமையும்.

'காய்தலுமுண்டு' என்பதற்குக் கள்வெய்யோனாகலின், நின்னை வெகுளவுங்கூடுமென்பாரும் உளர்.

இவன் நிரைகொள்ளச் செல்கின்றமை கண்டார் கள்விலையாட்டிக்குக் கூறியது.

(கு - ரை.) 3. புறநா. 177 : 14.

6. ஏழாம் வேற்றுமை வினையோடு முடியும்வழித் திரிந்ததற்கும் (தொல். தொகை. சூ. 15, இளம். ந.), வேற்றுமைக்கண் மகரவொற்றுப் பகரம் வந்துழிக் கெடாது நின்றதற்கும் (தொல். புள்ளிமயங்கு. சூ. 17, இளம். ந; இ. வி. சூ. 129, உரை) மேற்கோள்.

10. "கழூமிய துன்பமொடு கண்ணீ ருகுத்து" (மணி. 13 : 18).

மு. 'முட்காற் காரை...வெய்யோனே : இது வெட்சித்திணை பெயர்கொள்ளாது வந்தது' (தொல். அகத்திணை. சூ. 54, ந.). (உருஅ)

(உருக) ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயரா
திலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவ ரொடுக்கங் காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் னுள்ளம்
5 முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கு மான்மேற்
புடையிலங் கொள்வாட் புனைகழ லோயே.

திணை - கரந்தை; துறை - செருமலைதல் : பிள்ளைப்பெயர்ச்சியுமாம்.

......கோடைபாடிய பெரும்பூதனார் பாடியது.

செருமலைதலாவது :—

"வெட்சி யாரைக் கண்ணுற்ற வளை இ
உட்குவரத் தாக்கி யுளர்செருப் புரிந்தன்று" (பு. வெ. 25).

(இ - ள்.) தாம் கொள்ளப்பட்ட ஏற்றையுடைய பெரிய ஆனிரை முன்னே போக மீட்க வருவாரைக் குறித்து அந்நிரையோடு தாம் போகாது தழையால் மூடிய பெரிய காட்டின்கண் தலைகரந்திருந்த வலிய வில்லையுடைய மறவரது ஒடுங்கிய நிலையைக் கருதாய்; போகாதொழி, போகாதொழி, நினது மேற்கோள் சிறப்பதாக, தெய்வம்

மெய்யின்கண் ஏறிய புலிமகளையொப்பத் தாவித் துள்ளும் ஆனிரை மேல்; மருங்கிலே விளாங்காநின்ற ஒள்ளிய வாளினையும் வீரக் கழலினையுமுடையோய்!—எ - று.

புனைகழலோய்! காணாய்; ஆன்மேற் செல்லல், செல்லல்; நின் உள்ளம் சிறப்பதாகவெனக் கூட்டுக.

செல்லலென்றது அவரைக் கண்டு பொருது கொன்றன்றிச் செல்லலென்பதாம்.

(கு - ரை.) மு. வெட்சித்திணைத்துறைகளுள், 'ஆபெயர்த்துத் தருதல்' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 5, இளம்; ந. (உருகூ)

(உசுo) வளரத் தொடினும் வௌவுபு திரிந்து
விளரி யுறுதருந் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சந் தலைஇ மனையோள்
உளருங் கூந்த னோக்கிக் களர
கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்
பசிபடு மருங்குலை கசிபுகை தொகாஅக்
காணலென் கொல்லென வினவினை வரூஉம்
பாண கேண்மதி யாணரது நிலையே
புரவுத்தொடுத் துண்குவை யாயினு மிரவெழுந்
தெவ்வங் கொள்குவை யாயினு மிரண்டும்
கையுள போலுங் கடிதண் மையவே
முன்னூர்ப் பூசலிற் றோன்றித் தன்னூர்
நெடுநிரை தழீஇய மீளி யாளர்
விடுகணை நீத்தந் துடிபுணை யாக
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து
வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வையெயிற் றுய்ந்த மதியின் மறவர்
கையகத் துய்ந்த கன்றுடைப் பல்லான்
நிரையொடு வந்த வுரைய னாகி
உரிகளை யரவ மானத் தானே
அரிதுசெல் லுலகிற் சென்றன னுடம்பே
கானச் சிற்றியாற் றருங்கரைக் காலுற்றுக்
கம்பமொடு துளங்கிய விலக்கம் போல
அம்பொடு துளங்கி யாண்டொழிந் தன்றே
உயரிசை வெறுப்பத் தோன்றிய பெயரே
மடஞ்சான் மஞ்ஞை யணிமயிர் சூட்டி

இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கன்மிசை யதுவே.

(பி - ம்.) 13 'நெடுவெறி' 22 'காலுறக்' 23 'விலங்கு'

திணை - அது; (பி - ம். பாடாண்டிணை); துறை - கையறுநிலை (பி - ம். செருவிடை வீழ்தல்; கையறுநிலையுமாம்); பாண்பாட்டுமாம் (பி - ம். பாடாண்பாட்டுமாம்).

.........*வடமோதங்கிழார் பாடியது.

(இ - ள்.) ஓசை மிகவேண்டுமென்று எறியினும் (பி - ம். அறையினும்) ஓசையை உள்வாங்கி வேறுபட்டு இரங்கற் பண்ணுகிய விளரியைச் சென்று உறுகின்ற இனிய நரப்புத்தொடையினது தீங்கை நினைந்து நடுங்கும் நெஞ்சத்தைத் தலைப்பட்டுப் புறப்பட்டவளவின் நிமித்த வழியாக ஒரு மனைவி விரித்து வருகின்ற மயிரைப் பார்த்துக் களர் நிலத்துள்ள கள்ளிமரத்தின் நிழற்கண் உண்டாகிய தெய்வத்தை ஏத்திப் பசிதங்கிய வயிற்றையுடையையாய் இரங்கிக் கையாற்றெழுது நம் குருசிலைக் காணமாட்டேன் கொல்லோவென்று எதிர் வருவாரைப் பார்த்துக் கேட்டு வருகின்ற பாண! கேட்பாயாக, நமது செல்வம் பட்ட நிலைமை : இனி நீ அவன் நமக்கு விட்ட விளைநிலங்களைக் கைப்பற்றி உண்பாயாயினும் அன்றி அவனோடுகூடி இன்புற்றிருந்த விடத்து அவனையின்றி உயிர் வாழ்தற்பொருட்டு இரக்கக்கடவோமென்றெழுந் திருந்து வருத்தங்கொள்வாயாயினும் இரண்டும் நினது கையகத்துள் ளன; மிக்க அணுமையையுடைய ஊர்முன்னுகச் செய்யப்பட்ட பூசலின்கட்டோன்றித் தன்னுடைய ஊரின்கண் மிக்க நிரையைக் கொண்ட மறத்தினையுடைய வீரர் எய்யப்பட்ட அம்பு (பி - ம். அப்பு) வெள்ளத்தைத் தன்துடியே புணையாகவென்று பகைவரைக் கொன்று அவர் கொண்ட நிரையை மீட்டு உலகம் தனிப்பச் சூழ்ந்துகொண்ட பாம்பினது கூரிய பல்லினின்றும் பிழைத்துப்போந்த திங்களைப்போல மறவருடைய கையினின்றும் பிழைத்துப்போந்த கன்றையுடைய பலவாகிய ஆனிரையுடனே வந்த சொல்லையுடையனுய்த் தோலுரித்த பாம்புபோலத் தான் ஒருவனுமேயாக அரிதாகச் செல்லப்படும் தேவருலகத்தின்கட்போயினுன்; அவனது உடம்பு, காட்டுட் சிற்றியாற்றினது அரிய கரையிடத்துக் காலுற நின்று நடுக்கத்தோடு சாய்ந்த இலக்கத்தையொப்ப அம்பாற் சலித்து அவ்விடத்து வீழ்ந்தது; உயர்ந்த கீர்த்தி மிகவுந் தோன்றிய மறவன் பெயர் மென்மையமைந்த மயிலினது அழகிய மயிராகிய பீலியைச் சூட்டப் பிறர் இடங்கொள்ளப்படாத சிறிய விடத்துப் புடைவையாற் செய்யப்பட்ட பந்தர்க்கீழ் நட்ட கன்மேலது—எ - று.

சூட்டியென்பது, சூட்டவெனத் திரிக்கப்பட்டது; சூட்டப்பட்டெனினும் அமையும்.

---

* அகநானூறு, 317.

'மனையோள் கூந்தனோக்கி' என்பதற்கு, 'பாண! என் மனைவியது சரியும் மயிரை நோக்கி' எனவும், 'புரவுத்தொடுத்து' என்பதற்கு 'அன்று உம்மைப் புரந்த பரிசைப் பாடி' எனவும் உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) 2. விளரி, நெய்தற்குரித்தாகலின், இரங்கற் பண்ணாயிற்று.

15 - 9. "வாள்வாயு மின்றி வடிவெங்கணை வாயு மின்றிக், கோள்வாய் மதிய நெடியான்விடுத் தாங்கு மைந்தன், தோள்வாய் சிலையி னொலியாற்றொறு மீட்டு மீள்வான், நாள்வாய் நிறைந்த நகைவெண்மதி செல்வ தொத்தான்" (சீவக. 454).

20 - 21. "படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து", "பாம்புரி போன் முற்றத் துறந்து" (சீவக. 1546, 3039).

23. புறநா. 4 : 6, 169 : 10 - 11.

25 - 8. புறநா. 249 : 12 - 4; 264 : 1 - 4.

மு. ஆபெயர்த்துத்தருதலென்னும் துறைக்கு மேற்கோள்காட்டி, 'இதனுள் தன்னூரென்றலிற் குறுநிலமன்னன் நிரைமீட்டுப் பட்ட நிலையைப் பாணர் கையற்றுக்கூறியது' என்பர்; தொல். புறத்திணை. சூ. 5, ந. (உசுO)

(உசுக) அந்தோ வெந்தை யடையாப் பேரில்
வண்டுபடு நறவிற் றண்டா மண்டையொடு
வரையாப் பெருஞ்சோற்று முரிவாய் முற்றம்
வெற்றியாற் றம்பியி னெற்றற் றுகக்
கண்டனென் மன்ற சோர்கவென் கண்ணே
வையங் காவலர் வளங்கெழு திருநகர்
மையல் யானை யயாவுயிர்த் தன்ன
நெய்யுலை சொரிந்த மையூ னோசை
புதுக்கண் மாக்கள் செதுக்க ணாரப்
பயந்தனை மன்னால் முன்னே யினியே
பல்லா தழீஇய கல்லா வல்வில்
உழைக்குரற் கூகை யழைப்ப வாட்டி
நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட
நிரையிவட் டந்து நடுக லாகிய
வென்வேல் விடலை யின்மையிற் புலம்பிக்
கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகடூஉப் போலப்
புல்லென் றனையாற் பல்லணி யிழந்தே.

(பி - ம்.) 3 - 4. 'முரவுவாய் முற்றம் பெற்றியாற்று 7 'யானை யவர்' 8 'நெய்யுலைச் சொரிந்த' 11 'பல்லாத் தழீஇ' 12 - 3 'ஆட்டி ருகு முலை' 17 'கைமிகக்'

திணையும் துறையும் அவை. (பி - ம். திணை - கரந்தை; துறை - கையறுநிலை).

............ஆவூர் மூலங்கிழார் பாடியது.

(இ - ள்.) அந்தோ! என் இறைவனது அடையாத பெரிய இல்லே! வண்டுகள் படியும் மதுவினால் ஒழியாத மண்டையுடனே யாவர்க்கும் வரையாமல் வழங்கும் மிக்க சோற்றையுடைய முரிந்த குறட்டையுடைத்தாகிய முற்றம் நீரற்ற யாற்றின் ஓடம் எத்தன்மைத்து அத்தன்மைத்தாகக் கண்டேன், நிச்சயமாக; என் கண்மணி சோர்ந்து வீழ்வனவாக; உலகத்தைக் காக்கும் வேந்தருடைய செல்வமிக்க திரு நகரின்கண் மதத்தான் மயங்கிய யானை உயங்குதலான் நெட்டுயிர்ப்புக் கொண்டாற் போன்ற நெய் காய்கின்ற உலையின்கண் சொரியப்பட்ட ஆட்டிறைச்சியினது ஓசையுடைய பொரியலைப் புதுமாந்தருடைய ஒளி மழுங்கின கண்கள் நிறைய உண்டாக்கினாய் முன்பு; அது கழிந்தது! இப்பொழுது பல ஆனிரையைக் கற்கவேண்டாத வலிய விற்படையைத் தன்னிடத்தே குரலை மிகவுடைய கூகை தன் இனத்தை அழைக்கும் படி அலைத்து நாகினது முலைபோன்ற நறிய பூவையுடைய கரந்தையை அறிவுடையோர் சூட்டுமுறைமையிலே சூட்ட நிரையை இவ்வூரின் கண் மீட்டுத் தந்து நடப்பட்ட கல்லாகிய வென்றி வேலையுடைய இறைவன் இல்லாமையால் தனித்துக் கொய்யப்பட்ட மொட்டை (பி - ம். மட்டை)யாகிய தலையுடனே கைம்மை நோன்புமிகக் கலக்க முற்ற ஒழிக்கப்பட்ட அணிகலத்தையுடைய அவன் மனைவியை யொப்பப் பொலிவழிந்தனை, பல அழகும் இழந்து—எ - று.

அம்பியினென்புழி, இன் அசைநிலை.

'அம்பியினற்றுக' என்று பாடமோதுவாரும் உளர்.

கண் : அசை; மன் : கழிவின்கண் வந்தது.

எந்தைபேரில்லே! செதுக்கணாரப் பயந்தனை முன்; இனி மகடூஉப் போலப் பல அணியும் இழந்து புல்லென்றனையாய் அம்பியற்றுகக் கண்டேன்; கண்ட என்கண் சோர்கவெனக் கூட்டுக.

ஓசையென்றது ஆகுபெயரான் ஓசையையுடைய கறியை; இஃது ஒரு திசைச்சொல்.

'செதுக்கணார' என்பதற்குச் செதுக்கின குடர்நிறையவென்றுமாம்; கைம்மிஞ்சவென்றுமாம்.

(கு - ரை.) 1. அந்தீற்று ஓ இரக்கக்குறிப்பு உணர்த்திநிற்றற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 34, ந.

5. "கற்கொலோ சோர்ந்திலவெங் கண்" (பு. வெ. 31).

6. வளங்கெழு திருநகர் : புறநா. 250 : 6.

7. "மையல் யானையின் மருட்டலு மருட்டினன்" (கலித். 54 : 14).

9. செதுக்கண் : கலித். 68 : 3.

17. புறநா. 250 : 4 - 5, 280 : 11 - 4.

18. புறநா. 238 : 6, 280 : 14. 19. புறநா. 250 : 6.

'கரந்தையாவது தன்னுறு தொழிலாக நிரைமீட்டோர் பூச் சூடுதலிற் பெற்ற பெயராதலின் வெட்சித்திணைபோல ஒழுக்கமன்று; அந்தோ வெந்தையென்னும் புறப்பாட்டினுள், நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை, விரகறியாளர் மரபிற் சூட்ட, நிரையிவட் டந்து என்றவாறு காண்க' (தொல். புறத்திணை. சூ. 5, ந.). (உசுக)

(உசுஉ) நறவுந் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவ லிட்ட புன்காற் பந்தர்ப்
புனறரு மிளமண னிறையப் பெய்ம்மின்
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
5 நிரையொடு வரூஉ மென்னைக்
குழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே.

(பி - ம்.) 2 'பைங்கால்'

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு; தலைத்தோற்றமுமாம்.

...........மதுரைப் பேராலவாயார் பாடியது.

தலைத்தோற்றமாவது :—

"உரவெய்யோ னினந்தழீஇ
வரவுணர்ந்து கிளைமகிழ்ந்தன்று" (பு. வெ. 12).

(இ - ள்.) மதுவையும் அலைத்துண்ணும்படி பிழிமின்; ஆட்டு விடையையும் படுமின்; பசிய தழையாலே வேயப்பட்ட புல்லிய காலை யுடைய பந்தரின்கண் நீர் கொழித்து(பி - ம். கழித்து)க் கொடுவரப் பட்ட இளைய மணலை நிரம்பப் பரப்புமின்; பகைவரது தூசிப்படையை முறித்துப் பெயர்ந்துபோகிற தனது படைக்குப்பின்னே நின்று நிரை யுடனே வருகின்ற என் இறைவனுக்குப் பக்கமறவராய் நிரைகொண்டு வருவோர் அவன் றன்னினும் பெரிய இளைப்பையுடையர்—எ - று.

சாயல் - விடாயாலுண்டான மென்மை.

என்னைக்கு உழையோர் தன்னினும் பெருஞ்சாயலர், அவர்க்கு நறவும் தொடுமின்; விடையும் வீழ்மின்; பெய்ம்மினெனக்கூட்டுக.

(கு - ரை.) 1. "மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடை" (முருகு. 232); "மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி" (பெரும்பாண். 143),

"செங்கண் மழவிடை கெண்டிச் சிலைமறவர், வெங்கண் மகிழ்ந்து" (பெரும்பொருள் விளக்கம்); விடை - ஆட்டுக்கிடாய்.

2. உவல் - தழை; உவலையென்றும் வழங்கும்; "உவலிடு பதுக்கை" (அகநா. 109 : 8); முல்லை. 29; பு. வெ. 169.

6. உழையோர் : எழுவாய்.

மு. வெட்சித்திணைத்துறைகளுள், 'நுவல்வழித் தோற்றம்' என்பதற்கும் (தொல். புறத்திணை. சூ. 3, இளம்.), 'உண்டாட்டு' என்பதற்கும் (தொல். புறத்திணை. சூ. 3, ந.) மேற்கோள். (உசுஉ)

(உசுங)* பெருங்களிற் றடியிற் றோன்று மொருகண்
இரும்பறை யிரவல சேறி யாயிற்
றொழாதனை கழித லோம்புமதி வழாது
வண்டுமேம் படூஉமிவ் வறநிலை யாறே
பல்லாத் திரணிரை பெயர்தரப் பெயர்தந்து
கல்லா விளையர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே.

திணை - கரந்தை; துறை - கையறுநிலை.

....

(இ - ள்.) பெரிய களிற்றின் அடிபோலத் தோன்றும் ஒரு கண்ணினை யுடைத்தாகிய பெரிய பறையினையுடைய இரவலனே! நீ போகின்றாயாயின் தொழாயாய்ப் போதலைப் பரிகரிப்பாயாக; தவறாதே ....யிடைவிடாது வண்டுகள் மேம்பட்டு வாழும், இக்கொடிய வழி; பல ஆக்களாகிய திரண்ட நிரை மீண்டு தன்னோடு போதரப் போந்து இயல்பாகிய போர்த்தொழிலையுடைய வீரர் இரிந்தோடத் தான் போகானாய் வில் உமிழப்பட்ட விரைந்த அம்பு குளிப்பக் கரையைக் கொல்லும் புனலின் கண் அணைபோல எதிர்நின்று விலக்கியவனது கல்லை—எ - று.

புனற்சிறையின் விலங்கியோன் கல்லைத் தொழாதனை கழிதலை ஓம்பு; தொழவே அவ்வறநிலையாறு வண்டுமேம்படுமெனக் கூட்டுக.

தொழுது போகவே கொடுங்கானம் மழைபெய்தலாற் குளிருமென்பான், காரியமாகிய வண்டு மேம்படுதலைக் கூறினான்.

வண்டென்பது, மறவருள் ஒரு சாதியென்பாரும் உளர்.

---

* இதுமுதலிய மூன்றுபாட்டுக்களின் உரையும், 266-ஆம் பாட்டும் அதனுரையும் மிதிலைப்பட்டி அழகியசிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டுப் பிரதியில்மட்டும் இருந்தன.

ஆறு வண்டு மேம்படூஉமெனை இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்துமேல் ஏறி நின்றது.

(கு - ரை.) 1 - 2. புறநா. 368 : 14 - 2, 392 : 4 - 5.

8. புறநா. 169 : 4- 5, குறிப்புரை.

மு. கண்டோர் கையற்றுக் கூறியதற்கும், நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்தியதற்கும் மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 5, ந. (உசுங)

(உசுச) பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொ
டணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லுங் கன்றொடு
கறவை தந்து பகைவ ரோட்டிய
நெடுந்தகை கழிந்தமை யறியா
தின்றும் வருங்கொல் பாணரது கடும்பே.

(பி - ம்.) 1 'சேர்த்து' 6 - 7 'யறியா, நின்று மிவருங்கொல்'

திணையும் துறையும் அவை.

..........உறையூர் இளம்பொன் வாணிகனார் (பி - ம்.......ன்சாத்தன் கொற்றனார்) பாடியது.

(இ - ள்.) பருக்கைகளையுடைய இடத்துத் திட்டையை (பி - ம். பதுக்கைக் கல்லை)ச் சேர்த்தி ஆண்டுள்ள மரலைக்கீறித் தொடுக்கப்பட்ட சிவந்த பூவையுடைய கண்ணியுடனே அழகிய மயிலினது பீலியைச் சூட்டிப் பெயரை யெழுதி இப்பொழுது நட்டார், கல்லையும்; கன்றுடனே கறவையையும் மீட்டுக்கொண்டு வந்து மறவரை ஓட்டி நோக்கிய நெடுந்தகை பட்டமை யறியாது இன்னும் வருங்கொல்லோ பாணரது சுற்றம்?—எ - று.

பட்டமையறிந்து வாராதொழியுமோ அறியாது வருமோ வென ஐயமாக்குக.

பதுக்கை சேர்த்ததேயன்றிக் கல்லும் நட்டனரென உம்மை எஞ்சி நின்றது.

(கு - ரை.) 2. 'தளிரொடு மிடைந்த காமரு கண்ணி, திரங்குமர னாரிற் பொலியச் சூடி'' (மலைபடு. 430 - 31).

3 - 4. புறநா. 260 : 26 - 8; ''நல்லமர்க் கடந்த நாணுடை மறவர், பெயரும் பீடு மெழுதி யதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்''; ''பெயரும் பீடு மெழுதி யதர்தொறும், பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்'' (அகநா. 67 : 8 - 10, 131 : 10 - 11).

மு. ''இனிப், பரலுடை மருங்கிற் பதுக்கையென்னும் புறப் பாட்டினுள், அணிமயில்,,....கல்லும் எனக் கன்னாட்டுதல் பெரும்

படைக்குப் பின்னாகக் கூறிற்றாலெனின் நீர்ப்படுத்த பின்னர்க் கற்படுத்துப் பெயர் பொறித்து நாட்டுதல் காட்டு நாட்டோர் முறைமை யென்பது, சீர்த்தகு சிறப்பின் என்பதனாற் கொள்க” தொல். புறத்திணை. சூ. 5, ந.). (௨௬௪)

(௨௬௫) ஊர்நனி யிறந்த பார்முதிர் பறந்தலை
ஓங்குநிலை வேங்கை யொள்ளிணர் நறுவீப்
போந்தையந் தோட்டிற் புனைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல்லா யினையே கடுமான் றோன்றல்
வானேறு புரையுநின் றாணிழல் வாழ்க்கைப்
பரிசிலர் செல்வ மன்றியும் விரிதார்க்
கடும்பகட் டியானை வேந்தர்
ஒடுங்கா வென்றியு நின்னொடு செலவே.

திணையும் துறையும் அவை.

... .சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் பாடியது.

(இ - ள்.) ஊரை மிகவுங் கடந்த முரம்பு நிலமாகிய முதிர்ந்த பறந்தலையிடத்து உயர்ந்த நிலையையுடைய வேங்கையினது ஒள்ளிய கொத்தாகிய நறிய பூவைப் பனையோலையால் அலங்கரித்துத் தொடுத்து......

(கு - ரை.) 2. வேங்கைப் பூமாலை : புறநா. 21 : 9, 168 : 15. மலர்களைப் பனந்தோட்டில் தொடுத்தல் : “கொம்மைப் போந்தைக் குடுமிவெண்டோ, டத்த வேம்பி னமலை வான்பூச், சரியா ருளைத்தலை பொலியச் சூடி” (குறுந். 281 : 2 - 4).

4. படலை - தழைவிரவித் தொடுத்த மாலை.

7 - 9. பரிசிலர் செல்வமும் வேந்தர் வென்றியும் நின்னோடு செல்லக் கல்லாயினையே எனக்கூட்டுக.

மு. ‘ஊர்நனி......செலவே : இது கோவலர் : படலைசூட்ட என்றலிற் கடவுளாகியபின் கண்டது’ (தொல். புறத்திணை. சூ. 5, ந.).

(௨௬௫)

(௨௬௬) பயங்கெழு மாமழை பெய்யாது மாறிக்
கயங்களி முளியுங் கோடை யாயினும்
புழற்கா லாம்ப லகலடை நீழற்
கதிர்க்கோட்டு நந்தின் சுரிமுக வேற்றை
நாகிள வளையொடு பகன்மணம் புகூஉம்
நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்
வான்றோய் நீள்குடை வயமான் சென்னி
சான்றோ ரிருந்த வவையத் துற்றோன்

ஆசா கென்னும் பூசல் போல
வல்லே களைமதி யத்தை யுள்ளிய
விருந்துகண் டொளிக்குந் திருந்தா வாழ்க்கைப்
பொறிப்புண ருடம்பிற் றோன்றியென்
அறிவுகெட நின்ற நல்கூர் மையே.

(பி - ம்.) 12 'பொறியுணர்'

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது.

(இ - ள்.) பயன்பொருந்திய பெரிய முகில் பெய்யாது ஒழிதலால் நீர்நிலைகள் களியாய் முளியும் கோடைக்காலமாயினும் துளை பொருந்திய தாளையுடைய ஆம்பலினது அகலிய இலையின் நிழற்கண் கதிர்போலுங் கோட்டையுடைய நத்தையினது சுரிமுகத்தையுடைய ஏற்றை நாகாகிய இளைய சங்குடனே பகற்காலத்தே மணங்கூடும் நீர் விளங்கும் வயலை யுடைத்தாகிய நாட்டையுடைய பெரிய வென்றியை யுடையோய்! ஆகாயத்தைப் பொருந்தும் நெடிய குடையினையும் வலிய குதிரையினையுமுடைய சென்னி! அறிவான் அமைந்தோர் தொக்கிருந்த அவையின்கண் சென்று பொருந்தினன் ஒருவன் யானுற்ற துன்பத்திற்குத் துணையாய் எனக்குநீர் பற்றுகவேண்டுமென்னும் ஆரவாரத்தை அவர் விரையத் தீர்க்குமாறு போல விரையத் தீர்ப்பாயாக, என்னைக் கருதிவரப்பட்ட விருந்தினரைக் கண்டுவைத்தும் அவர்க்கு விருந்தாற்றமாட்டாமல் ஒளிக்கும் நன்மையில்லாத இல்வாழ்க்கையை யுடைய ஐம்பொறியும் குறைவின்றிப்பொருந்திய எனது யாக்கையின் கட்டோன்றி அவற்றானாய பயன்கொள்ளாதபடி எனது அறிவுகெட நிலைபெற்ற வறுமையை—எ - று.

மதியும் அத்தையும் அசைநிலை.

பெருவிறல்! சென்னி! சான்றோரிருந்த அவையத்துற்றோன் பூசலை அவர் விரையக் களைந்தாற்போல எனது நல்கூர்மையை வல்லே களை யெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

நந்து வளையொடு பகன்மணம் புகூஉமென்ற கருத்து: அவை தம் செருக்கினால், சாதியறியாது மயங்கிப் புணருமென்று நாட்டின் மிகுதி கூறியதனால் அவன் செல்வமிகுதி கூறியவாறு.

* 'நாகிளந் தவளையொடு பகன்மணம் புகூஉம்' என்று பாடமோதி, நந்தினேற்றை நாகிளந் தவளையுடனே தத்தம் இனத்தோடு மணம்புகூஉமென்று உரைப்பினும் அமையும்.

---

* "சேற்றவளை தன்கணவ னருகிருப்பச் சினந்திருகிச், சூற்றவளை நீருழக்குந் துறைகெழுநீர் வளநாடா" (கம்ப. சூர்ப்பநகைப். 122).

'ஆசாகு' என்பதனை இரங்கற்குறிப்புப்படுமொழி யென்பாரும் உளர். பெருவிறலையுடைய வயமான்சென்னியெனினுமாம்.

* 'பொறிப்புண ருடம்பிற் றோன்றி' என்பதற்குப் பாவைபோலும் வடிவுமாத்திரையே தோன்றித் தோன்றிய பயன் கொள்ளாமையால் என் அறிவுகெட நின்ற நல்கூர்மையென்றும், 'விருந்துகண்டொளிக் கும்' என்பதற்கு வறுமை கண்டு, வந்த விருந்து தாம் அது காண மாட்டாது ஒளிக்குமென்றும் உரைப்பாரும் உளர்.

மாறியென்பது மாறவெனத் திரிக்கப்பட்டது.

(கு - ரை.) 1. 'கெழு' என்னுஞ் சாரியை, லகர னகரவீற்றுச் சொற்கள் ஒழிந்த பிறசொற்களிடத்து நிலைமொழி ஈற்றெழுத்துத் திரிய வந்ததற்கு மேற்கோள்; தொல். குற்றியலுகரப். சூ. 76, ந.

3. தனிக்குறிலையொழித்த லகரம் வல்லினம் வர அல்வழியில் திரிந்து வந்ததற்கு மேற்கோள்; நன். சூ. 228, மயிலை.

4. கதிர் - பொற்கொல்லர்களின் கருவி விசேடம்; புறநா. 249 : 1.

'நாகு' என்பது நந்தின் பெண்பாற்கு வருதல் மரபென்பதற்கு மேற்கோள்; தொல். மரபு. சூ. 63, பேர்.

8 - 10. கலித். 139 : 33 - 7.

9. ஆசாகு : குறுந். 176 ; 5.

13. "அழிபசி வருத்தம் வீடே" (சிறுபாண். 140) என்பதும், 'அறிவு முதலியன அழிதற்குக் காரணமான பசியால் உளதாகிய வருத் தங்கள் விட்டுப் போம்படி' என்னும் அதன் உரையும், "அற்றா ரழிபசி தீர்த்தல்", "அறிவினை, நிச்ச நிரப்புக்கொன் றாங்கு", "தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக, நல்குர வென்னு நசை" (குறள், 226, 532, 1043), "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம், நாணணி களையு மாணெழில் சிதைக்கும்......... பசிப்பிணி யென்னும் பாவி" (மணி. 11 : 76 - 80), "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை, தானந் தவமுயற்சி தாளாண்மை - தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந் திடப்போம் பறந்து" (நல்வழி, 26) என்பனவும் ஈண்டு உணரத்தக்கன. (உ௬௬)

(உ௬எ) † ....

(உ௬அ) † ....

---

* குறள், 410, பரிமேல்.

† இவ்வெண்களுக்குரிய பாட்டுக்கள், கிடைத்த கையெழுத்துப் பிரதிகளுள் ஒன்றிலும் காணப்படவில்லை.

(உசுகூ) * குயில்வா யன்ன கூர்முகை யதிரல்
பயிலா தல்கிய பல்காழ் மாலை
மையிரும் பித்தை பொலியச் சூட்டிப்
புத்தகற் கொண்ட புலிக்கண வெப்பர்
ஒன்றிரு முறையிருந் துண்ட பின்றை
உவலைக் கண்ணித் துடியன் வந்தெனப்
பிழிமகிழ் வல்சி வேண்ட மற்றிது
கொள்ளா யென்ப கள்ளின் வாழ்த்திக்
கரந்தை நீடிய வறிந்துமாறு செருவிற்
பல்லா னினநிரை தழீஇய வில்லோர்க்
கொடுஞ்சிறைக் குரூஉப்பருந் தார்ப்பத்
தடிந்துமாறு பெயர்த்ததிக் கருங்கை வாளே.

(பி - ம்.) 1. 'யதரல்' 8 'கொள்ளானென்ப' 12 'பெயர்த்தவிக்'

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு.

ஒளவையார்.

(கு - ரை.) 1. அதிரல் - புனலிக்கொடி; முல்லை. 51; குறிஞ்சிப். 75; மோசி மல்லிகை, காட்டு மல்லிகை; சிலப். 13 : 156.

1 - 3. "கொய்குழை யதிரல் வைகுபுல ரலரி, சுரியிரும் பித்தை சுரும்புபடச் சூடி" (அகநா. 213 : 4 - 5).

4. புதிய அகலிடத்திற்கொண்ட புலியினது கண்போன்ற நிறத்தையுடைய சூடான உணவு; வெப்பர்=வெவ்வர் - வெம்மை; பதிற். 41 : 20.

6. புறநா. 262 : 2; உவலைக்கண்ணி - தழை விரவித் தொடுத்த மாலை.

7. பிழி மகிழ் வல்சி - பிழிந்தெடுத்த மதுவாகிய உணவு.

8. என்ப - அசைநிலை. கள்ளின் வாழ்த்தல் : புறநா. 316 : 1.

9. கரந்தை - ஒருவகைப் புதற்பூ; இப்பூவாற் றொடுத்த மாலையை நிரைமீட்போர் சூடுவது மரபு.

வாள் (12) கொள்ளாயென (8) முடிக்க. (உசுகூ)

---

* இதுமுதற் பின்வரும் பாடல்களுக்கு உரை அகப்படவில்லை; சில பாடல்கள் இடையிடையே சிதைந்தும் பொருளின் உண்மை காணக்கூடாதவண்ணம் பிறழ்ந்தும் போயிருக்கின்றன.

(உஎ௦) பன்மீ னிமைக்கு மாக விசும்பின்
இரங்கு முரசி னினஞ்சால் யானை
நிலந்தவ வுருட்டிய நேமி யோரும்
சமங்கண் கூடித் தாம்வேட் பவ்வே
நறுவிரை துறந்த நாரு நரைத்தலைச்
சிறுவர் தாயே பேரிற் பெண்டே
நோகோ யானே நோக்குமதி நீயே
மறப்படை நுவலு மரிக்குரற் றண்ணுமை
இன்னிசை கேட்ட துன்னரு மறவர்
வென்றிதரு வேட்கையர் மன்றங் கொண்மார்
பேரம ருழந்த வெருவரு பறந்தலை
விழுநவி பாய்ந்த மரத்தின்
வாண்மிசைக் கிடந்த வாண்மையோன் றிறத்தே.

(பி - ம்.) 2 'முகிலி னினஞ்சால்'

திணை - கரந்தை; துறை - கையறுநிலை.

கழாத்தலையார்.

கண்டார் தாய்க்குச் சொல்லியது.

(கு - ரை.) 1. மாகவிசும்பு : புறநா. 35 : 18, குறிப்புரை.

2 - 3. ஒலிக்கும் முரசினையும் இனமிக்க யானைகளை நிலத்தில் மிகச் செலுத்திய ஆஞ்ஞாசக்கரத்தையுமுடைய அரசர்களும்.

4. வேட்ப - விரும்புவார்.

5. நல்ல மணமுடைய பொருள்களை நீக்கியதனால் மணமில்லாத வெளுத்த தலைமயிரை யுடையதாய் (6) எனக் கூட்டுக; புறநா. 276 : 1.

8. அரிக்குரல் - அரித்தெழுகின்ற ஓசை. அரிக்குரற்றண்ணுமை : புறநா. 249 : 4, 369 : 21, 396 : 4.

12. நவி - கோடாலி. மரத்தின் - மரத்தைப்போல.

13. "கணையும் வேலுந் துணையுற மொய்த்தலிற், சென்ற வுயிரி னின்ற யாக்கை, இருநிலந் தீண்டா வகை" (தொல். புறத்திணை. சூ. 16); "அப்பணைக் கிடந்த காளை" (தகடூர் யாத்திரை).

ஆண்மையோன்றிறத்தை (13) நேமியோரும் (3) வேட்ப (4) என்க; பு. வெ. 76-ஆம் பாடலைப் பார்க்க. (உஎ௦)

(உ௭௧) நீரற வறியா நிலமுதற் கலந்த
கருங்குர னொச்சிக் கண்ணார் குரூஉத்தழை
மெல்லிழை மகளி ரைதக லல்குற்
றொடலை யாகவுங் கண்டன மினியே
வெருவரு குருதியொடு மயங்கி யுருவுகரந்
தொறுவாய்ப் பட்ட தெரிய லூன்செத்துப்
பருந்துகொண் டுகப்பயாங் கண்டனம்
மறம்புகன் மைந்தன் மலைந்த மாறே.

(பி - ம்.) 1 'நீனற வறியா நிலமுதற் கரந்த' 2 'கருங்கா னொச்சிக் கண்ணார் குவவுத்தழை' 3 'மெல்லி மகளிர்க் கல்குற்' 6 'தெற்றுவாய்ப்' 6 - 7 'லூரன்செத்துப், பருந்துகண் டுவப்பவும்'

திணை - நொச்சி; துறை - செருவிடை வீழ்தல்.

வெறிபாடிய (பி - ம். வெறியாடிய) காமக்கண்ணியார்.

(கு - ரை.) 1. நீரறவறியா : புறநா. 1 : 12.

2. புறநா. 272 : 1; "மாக்குர னொச்சி" (நற். 305 : 2; அகநா. 117 : 1); "கருங்குர னொச்சி" (தகடூர் யாத்திரை).

1 - 4. புறநா. 272 : 1 - 5; "ஐதக லல்குற் றழையணிக் கூட்டும், கூழை நொச்சி" (அகநா. 275 : 16 - 7).

5 - 7. புறநா. 33 : 12 - 4; "தீயி னன்ன வொண்செங் காந்தட், டூவற் கலித்த புதுமுகை யூன்செத், தறியா தெடுத்த புன்புறச் சேவல்" (மலைபடு. 145 - 7).

மு. உழிஞைத்திணைத்துறைகளுள், 'அகத்தோன் வீழ்ந்த நொச்சி' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 11, இளம்.
(உ௭௧)

(உ௭உ) மணிதுணர்ந் தன்ன மாக்குர னொச்சி
போதுவிரி பன்மர னுள்ளுஞ் சிறந்த
காத னன்மர நீமற் றிசினே
கடியுடை வியனகர்க் காண்வரப் பொலிந்த
தொடியுடை மகளி ரல்குலுங் கிடத்தி
காப்புடைப் புரிசை புக்குமா றழித்தலின்
ஊர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை
பீடுகெழு சென்னிக் கிழமையு நினதே.

(பி - ம்.) 3 'மரனீமற்றிசினே' 5 'கொடியணி மகளிர்' 'தொடையுடை'

திணையும் துறையும் அவை.

மோசிசாத்தனார்.

(கு - ரை.) 1. நீலமணி பூத்தாற் போன்ற கரிய கொத்துக்களை யுடைய நொச்சியே; "மணியேர் நொச்சி", "மணிக்குர னொச்சி" (நற். 184 : 9, 293 : 1).

1 - 3. நொச்சியே! நீ காதல் நன்மரமென்க.

4. கடியுடை வியனகர் : புறநா. 95 : 3.

1 - 5. புறநா. 271 : 1 - 4.

6 - 8. "எயில்காத்த நொச்சி" ("வெட்சிநிரைகவர்தல்" என்னுஞ் செய்யுள்); "கருங்குர னொச்சி மிலைந்த, திருந்துவேல் விடலை" தகடூர் யாத்திரை; "பல்சான்றீரே" என்னுஞ் செய்யுள் : புறத்திரட்டு, 1341 : 10.

மு, உழிஞைத்திணைத்துறைகளுள், 'அகத்தோன் வீழ்ந்தநொச்சி' என்பதற்கு இதனை மேற்கோள் காட்டி, 'இது சூடின நொச்சியைப் புகழ்ந்தது' என்பர்; தொல். புறத்திணை. சூ. 13, ந. (உஎஉ)

(உஎங) மாவா ராதே மாவா ராதே
எல்லார் மாவும் வந்தன வெம்மிற்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த
செல்வ னூரு மாவா ராதே
5 இருபேர் யாற்ற வொருபெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல
உலந்தன்று கொல்லவன் மலைந்த மாவே.

(பி - ம்.) 2 'எல்லா மாவும்' 5 'இரும்பே ராற்ற லொருபெருங் கடலை' 7 'உலந்தின்று'.

திணை - தும்பை; துறை - குதிரைமறம்.

எருமைவெளியனார்.

(கு - ரை.) 1. நெடுஞ்சீர்வண்ணத்திற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 200, பேர்.; ந.

3. புறநா. 310 : 7 - 8.

3 - 4. புதல்வற்றந்த செல்வனென்றது, கணவனை.

5. கூடலென்றது, இரண்டாற்றுநீரும் கூடுமிடத்தை.

5 - 7. புறநா. 260 : 22 - 4; "ஆற்றங் கரையின் மரமு மரசறிய, வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே" (நல்வழி, 12).

மு. தும்பைத்திணைத் துறைகளுள், 'குதிரைநிலை' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 17, ந. (உஎங)

(உஎச) நீலக் கச்சைப் பூவா ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேறுரந் தினியே
தன்னுந் துரக்குவன் போலு மொன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பி னூக்கி மெய்க்கொண் டனனே.

(பி - ம்.) 4 'துரக்குநன்' 7 'மொய்கொண் டனனே'

திணை அது; துறை - எருமைமறம்.

உலோச்சனார்.

(கு - ரை.) 1 - 2. "கொன்றைகமழ் முடியோனும் வேணியிணைப் பின்னல்படு குஞ்சி யாக்கித், துன்றுமயிற் பீலிநெடுங் கண்ணிதிரு நெற்றியுறச் சுற்றினனே" (வி. பா. அருச்சுனன்றவநிலை. 82); "கானிறை குஞ்சிச் சூட்டிற் களிமயிற் கலாபஞ் சூடி", "வேடுருவாகி நின்றான்", "குஞ்சிக் கங்குல்வாய்ச் சிலைபோல் வெட்சிக் கண்ணிசூழ் கலாபச் சூட்டும்" (திருவிளை. 22 : 25, 37 : 13 - 4).

3. "கைவேல், களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்" (குறள். 774); "மறவன் நெருப்பிமையாக், கைக்கொண்ட வெஃகங் கடுங்களிற்றின் மேற்போக்கி" (பு. வெ. 140).

2 - 7. "கொல்லேறு பாய்ந்தழிந்த கோடுபோற் றண்டிறுத்து, மல்லேறு தோள்வீமன் மாமணைப்—புல்லிக்கொண், டாருத போர்மலைந் தானங்கரசர் கண்டார்த்தார், ஏறுட லாய ரென" (பாரதம்).

மூ. தும்பைத்திணைத்துறைகளுள், படையறுத்துப் பாழிகொள்ளு மேமமென்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 14, இளம்.; சூ. 17, ந. (உஎச)

(உஎரு) கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலும்
ஒத்தன்று மாதோ விவற்கே செற்றிய
திணிநிலை யலறக் கூவை போழ்ந்துதன்
வடிமா ணெஃகங் கடிமுகத் தேந்தி
ஓம்புமி னோம்புமி னிவணென வோம்பாது
தொடர்கொள் யானையிற் குடர்கா றட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத் தெதிர்ந்ததன் றோழற்கு வருமே.

(பி - ம்.) 4 'திணிநிலை மலரக் கூழை' 5 'கழிமுகத்' 9 'சமத் தொழிந்ததன்'.

திணையும் துறையும் அவை.

ஒரூஉத்தனார்.

(கு — ரை.) 1. "கோட்டங்காழ் கோட்டி னெடுத்துக்கொண் டாட்டிய" (கலித். 107 : 7).

'கோட்டுப்பூ' என்பதற்கு, கோடுதலைச் செய்யும் மாலையென்று பொருள்கூறி, இவ்வடியை மேற்கோள் காட்டினர் பரிமேலழகர்; குறள், 1313.

3. 'ஒத்தன்று' என்பதைக் கோட்டங்கண்ணி முதலிய மூன்றனோடும் தனித்தனியே கூட்டுக.

4. திணிநிலை - நெருங்கியிருந்த சேனையின் நிலை.

5. புறநா. 282 : 1. எஃகம் - வாள்; முல்லை. 68, ந.

7. தொடர் - சங்கிலி. தட்ப - தடுக்க; "புள்ளிடை தட்ப" (புறநா. 124), வீரனுக்கு யானை : பெருங். 1. 46 : 53 - 4.

8. "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" (திருவாசகம், திருப்புலம்பல், 3); "ஈற்றா விருப்பிற் போற்றுபு நோக்கி" (பொருந. 151); "தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லும், ஆபோற் படர்தக நாம்", "கன்றுசேர்ந் தார்கட் கதவீற்றாச் சென்றாங்கு" (கலித். 81 : 37, 116 : 8).

9. எதிர்ந்த தோழற்கு - பகைவரை எதிர்த்த நண்பனைக் காத்தற்கு. இது பாரதப்போரில் அபிமன்னுவைப் பாதுகாத்தற்குச் சென்ற வீமன் செய்தியை நினைப்பிக்கின்றது.

8 - 9. "கன்றுசேர்ந் தார்கட் கதவீற்றாச் சென்றாங்கு, வன்கண்ணளாய்வர லோம்பு" (கலித். 116).

விரைவென்னும் மெய்ப்பாட்டிற்கு மேற்கொள்; தொல். மெய்ப்பாடு. சூ. 12, இளம்.

மு. தும்பைத்திணைத்துறைகளுள், 'ஒருவனொருவனை யுடைபடை புக்குக் கூழைதாங்கிய வெருமை' என்பதற்கு மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 14, இளம்.); இதனைத் தானைநிலைக்கு மேற்கோள் காட்டி, 'இஃது உதவியது' என்பர்; தொல். புறத்திணை. சூ. 17, ந.

(உஎரு)

(உஎசு) நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்கா ழன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்
மடப்பா லாய்மகள் வள்ளுகிர்த் தெறித்த

குடப்பாற் சில்லுறை போலப்
படைக்குநோ யெல்லாந் தானு யினனே.

(பி - ம்.) 2 'ஈரங்கா ழன்ன திரங்குதலை' 3 - 4 'சிருன் முட்பாற் சில'

திணை - அது; துறை - தானைநிலை.

மதுரைப் பூதனிளநாகனார்.

(கு - ரை.) 1. புறநா. 270 : 5, 277 : 2.

2. இரங்காழ் - இரமரத்தின் விதை; இரவென ஒரு மரமுண்டென்பர்; புறநா. 281 : 1; "இரங்கா ழன்ன வரும்புமுதி ரீங்கை" (அகநா. 125 : 3). "இரவு மிண்டுங் குரவுங் கோங்கும்...வாகையும் பிறவும் வன்மர மொடுங்கி" (பெருங். 1. 52 : 40 - 44); இப்பெயர், இரா, இரவு, இரவம் எனவும் நூல்களில் வழங்கும்.

3. செம்முதுபெண்டு; புறநா. 280 : 7.

4. ஆய்மகள் - இடைச்சி.

5. குடம் நிறைய உள்ள பாலிற் றெறித்த சிறிய மோர்த்துளியைப் போல.

5 - 6. புறநா. 328 : 7; "பாலுறு பிரையெனப் பரந்த தெங்குமே" (கம்ப. மிதிலை. 41).

2 - 6. இ. வி. சூ. 641, உரை, மேற்.

மு. தும்பைத்திணைத்துறைகளுள், தானைநிலையின்பாற்படுமென்பர்; தொல். புறத்திணை. சூ. 14, இளம்.; சூ. 17, ந. (உஎசு)

(உஎஎ) மீனுண் கொக்கின் றூவி யன்ன
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே.

(பி - ம்.) 1 'வெண்சிறகன்ன' 5 'கோன்கழையலமரும்' 5 - 6 'வெதிரத்துச்சிமையத்து', 'வெதிர்...........வானலியற் றூங்கிய' 6 'வான்பெயற்றூங்கிய'

திணை - அது; துறை - உவகைக் கலுழ்ச்சி.

பூங்கணுத்திரையார் (பி - ம். பூங்கண்ணுத்திரை.)

(கு - ரை.) 1 - 2. "குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல், பயிலப் புகாமுன்ன நெஞ்சே" (11-ஆம் திருமுறை, க்ஷேத்திரத். 12).

3. புறநா. 279 : 4.

3 - 4. புறநா. 278 : 9, 265 : 5 - 7; "ஈன்ற பொழுதிற் பெரிதுவக் குந் தன்மகனைச், சான்றோ னெனக்கேட்ட தாய்" (குறள், 69); "மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலு மகனைப், பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவப் பெருவில், இற்ற வன்றினு மெறிமழு வாளவ னிழுக்கம், உற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னானான்" (கம்ப. அயோத்தி. மந்திர. 42).

5. வலிய மூங்கில் அசைகின்ற வெதிரத்தில்; வெதிரம் : ஒரு மலை.

6. மேகம் மழைபொழிய வீழ்ந்த துளிகளிலும் பலவாகும்.

மு. காஞ்சித்திணைத் துறைகளுள், 'பேரிசை, மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்ற, மாய்ந்த பூசன் மயக்கம்' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 19, இளம். சூ. 24, ந. (உஎஎ)

(உஎஅ) நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

(பி - ம்.) 1 'துரறிய 4 'குலைந்தன னாயி' 5 'முளையறுத்திடு குவன்' 8 - 9 'காணூவீன்ற'

திணையும் துறையும் அவை.

காக்கைபாடினியார் நச்செள்ளையார் (பி - ம். நெச்செளையார், நச்சென்னையார்).

(கு - ரை.) 3. போரில் தோற்று மீண்டனனென்று.

4. மண்டமர் : புறநா. 213 : 1.

5. சினைஇ - சினந்து.

2 - 5. 'நின்மகன் படையழிந்து...சினைஇ; என்பது குடிகோள் பற்றிவந்த வெகுளி, என்னை? தன் மகன் மறக்குடிக்குக் கேடு சூழ்ந்தா னென்று சினங்கொண்டாளாகலின்' (தொல். மெய்ப்பாடு. சூ. 10, பேர். இ. வி. சூ. 578, உரை).

6. பெயரா - பெயர்த்து : புரட்டிப் பார்த்து.

7. புறநா. 295 : 5; செங்களம் - உதிரத்தாற் சிவப்பாகிய போர்க் களம்; "செங்களம் படக்கொன்று" (குறுந். 1). துழவுதல் - கையால் தடவுதல்.

6 - 7. படுபிணம் நீங்காத போர்க்களத்தைச் சூழ்பவனென்றுமாம்; துழவல் - சூழ்வருதல். "மாதிரந் துழவுங், கவலை நெஞ்சத்து" (புறநா. 174 : 21 - 2).

9. புறநா. 277 : 3 - 4, குறிப்புரை.

8 - 9. 'ஊகாரம் பின்வரும் தொழிற்கு இடையின்றி விரைவு உணர்த்தி முன்வருந்தொழிலின்மேல் இறந்தகாலம் பற்றிவரும்' (தொல். வினை. சூ. 33, தெய்வச். (தொல். வினை. சூ. 31, ந.; இ. வி. சூ. 246, உரை); செய்யூ என்னும் வினையெச்சம் வினைமுதல் வினை கொண்டு முடிந்ததற்கு மேற்கோள்; நன். சூ. 343, மயிலை.; நன். வி. சூ. 344. (உஎஅ)

(உஎக) கெடுக சிந்தை கடிதிவ டுணிவே
மூதின் மகளி ராதல் றகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே.

(பி - ம்.) 5 'நெருநை யுற்ற' 7 'முயங்கி' 8 'வெளிறு'

திணை - வாகை; துறை - * மூதின்முல்லை.

ஒக்கூர் மாசாத்தியார்.

(கு - ரை.) 1. இவளென்றது, கோலஞ்செய்து மகனைப் போர்க் கனுப்புந் தாயை.

2. மூதின் மகளிர் - முதிய மறக்குடியிற் பிறந்த மகளிர்; புறநா. 19 : 15; மறக்குடியை மூதிலென்றது, "கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு, முற்றோன்றி மூத்த குடி" (பு. வெ. 35) என்ப வாகலின்.

3. தன்னை - தமையன்.

8. வெளிது - வெள்ளிய ஆடை; புறநா. 286 : 5, 291 : 2.

9. பாறுமயிர் - விரிந்த மயிர்; புறநா. 374 : 3.

---

* "வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து, வெந்திற லெஃகம் பிறைக்கொளீஇ - முந்தை, முதல்வர்கற் றான்காட்டி மூதின் மடவாள், புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு" (பு. வெ. 175).

10. "ஒருமைந்தன் றன்குலத்திற் குள்ளானென் பதுமுணரான்" பெரிய. திருவாரூர்ச்.

மு. "கன்னின்ருன்...ஏறு" (பு. வெ. 176).

வெட்சித்திணைத்துறைகளுள், மறங்கடைகூட்டிய குடிநிலை மகளிர் இயல் கூறியதற்கும் (தொல். புறத்திணை. சூ. 4, இளம்.) 'வாள்வாய்த்துக் கவிழ்தல்' என்பதற்கும் (தொல். புறத்திணை: சூ. 5, ந.) மேற்கோள். (உ எ கூ)

(உ அ ௦) என்னை மார்பிற் புண்ணும் வெய்ய
நடுநாள் வந்து தும்பியுந் துவைக்கும்
நெடுநகர் வரைப்பின் விளக்கு நில்லா
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்
அஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்றும்
நென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லு நிரம்பா
துடிய பாண பாடுவல் விறலி
என்னா குவிர்கொ லளியிர் நுமக்கும்
இவணுறை வாழ்க்கையோ வரிதே யானும்
மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுதா முடுத்த வம்பகைத் தெரியற்
சிறுவெள் ளாம்ப லல்லி யுண்ணும்
கழிகல மகளிர் போல
வழிநினைந் திருத்த லதனினு மரிதே.

(பி - ம்.) 1 'மார்பமாப் புண்ணும்' 4 'துஞ்சா கண்ண' 10 'வாட் கையோ ...வறிதே'

திணை - பொதுவியல்; துறை - ஆனந்தப்பையுள்.

மாறோக்கத்து நப்பசலையார்.

(கு - ரை.) 1. தலைவனைத் தலைவி 'என்னை' எனப் புறத்திணைக் கட் கூறியதற்கு மேற்கோள்; தொல். பொருளியல், சூ. 52, ந.

2. தும்பி - ஒருவகை வண்டு.

4. வேட்கும் - விரும்பும்.

5. குரால் - கூகைப்பெடை; மதுரைக். 170, ந.; கோட்டானுமாம்.

6. விரிச்சி - நற்சொல்; புறநா. 68 : 17, குறிப்புரை.

7. செம்முதுபெண்டு : புறநா. 276 : 3.

6 - 7. "நெல்லொடு, நாழி கொண்ட நறுவீ முல்லை, அரும்பவிழலரி தூஉய்க்கை தொழுது, பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" (முல்லை. 8 - 11).

10. இவண் - இவ்விடத்து.

13. புறநா. 248 : 1 - 5.

12 - 3. புறநா. 248; ஆம்பலல்லி - ஆம்பலாகிய அல்லிக்கா யரிசி; (சீவக. 355).

11 - 3. மழித்தலை - மழித்தலையுற்ற தலை; புறநா. 250 : 4 - 5, 261 : 17 - 9.

14. கழிகலமகளிர் - விதவைகள்; புறநா. 238 : 6.

15. வழிநினைந்து - பிற்கால விளைவை எண்ணி. 'அதனினும்' என்றது, 'வாழ்க்கையோ வரிது' (10) என்றதைச் சுட்டியது. இவ்வடி 'அழிவுநினைந் திருத்த லதனினு மரிதே' என்றிருக்கலாம் போலும்.

(உஅ0)

(உஅக) தீங்கனி யிரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கக்
கைபயப் பெயர்த்து மையிழ திழுகி
ஐயவி சிதறி யாம்ப லூதி
இசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கா னெடுந்தகை புண்ணே.

(பி - ம்.) 1 'தீங்கனி யரவமொடு', 'தீங்கண விரமொடு' 1 - 2 'மனைசெரீஇ யாங்கு மருப்பியாழை' 3 'பையப் பெயர்த்து மைவிழு திழுகி' 7 'காக்கவம்மோ' 9 'பூம்பொறியுடையநெடுந்'

திணை - காஞ்சி; துறை - பேய்க்காஞ்சி.

அரிசில்கிழார்.

(கு - ரை.) 1. இரவமொடு - இரவந்தழையோடு. செரீஇ - செருகி.

2. மருப்பு - யாழின் உறுப்புக்களுள் ஒன்றாகிய கோடு.

3. மையிழுது இழுகி - மையிட்டு.

4. ஐயவி - வெண்சிறுகடுகு. ஆம்பல் - ஆம்பலங்குழல்.

5. காஞ்சி - காஞ்சிப்பண்.

6. நறை புகைஇ - நறுநாற்றமுள்ள அகில் முதலியவற்றைப் புகைத்து.

1 - 6. புறநா. 296 : 1 - 2.

5 - 8. "கொழுநர் மார்பின், நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென, வறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்" (மலைபடு. 302 - 4).

மு. "ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர்தூய்க், கொய்யாக் குறிஞ்சி பலபாடி - மெய்யிணர்ப், பூப்பெய் தெரிய நெடுந்தகைபுண் யாங்காப்பப், பேய்ப்பெண் பெயரும் வரும்" (பு. வெ. 79).

காஞ்சித் திணைத்துறைகளுள், 'இன்னகை மனைவி பேஎய் புண் ணோற், றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சி' என்பதற்கு மேற் கோள்; தொல் புறத்திணை. சூ. 19, இளம்.; 24, ந. (உஅக)

(உஅஉ) எஃகுளங் கழிய விருநில மருங்கின்
அருங்கட னிறுத்த பெருஞ்செ யாளனை
யாண்டுள னோவென வினவுதி யாயிற்
....
வருபடை தாங்கிய கிளர்தா ரகலம்
அருங்கட னிறமார் வயவ ரெறிய
உடம்புந் தோன்றா வுயிர்கெட் டன்றே
மலையுநர் மடங்கி மாறெதிர் கழியத்
....
அலகை போகிச் சிதைந்துவே றாகிய
பலகை யல்லது களத்தொழி யாதே
சேண்விளங்கு நல்லிசை நிறீஇ
நாநவில் புலவர் வாயு ளானே.

(பி - ம்.) 5 'வாய ரெறிய' 'கழறிய' 8 'போற்கச்'

திணை - ,..................

பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(கு - ரை.) 1. எஃகு - வேல்.

2. பெருஞ்செயாளனை - பெரிய செய்கையை ஆளும் வீரனை; "பெருஞ்செ யாடவர்" (புறநா. 199 : 5).

3. புறநா. 86 : 2.

5. இறுமார் – முடித்தற்கு.

4 - 5. அகலம் - மார்பு. அகலத்தை எறிய.

6. படைக்கலங்களுக்குட் கிடக்கின்றமையின், உடம்பு தோன்றாதாயிற்று. கெட்டன்று - கெட்டது; நீங்கிற்று.

7. மடங்கி - மீண்டு. 9. பலகை - கேடயம்.

10. சேண் - நெடுந்தூரம்; "சேண்விளங்கும் புகழ்" (புறநா. 10 : 11); "சேண்விளங்கு நல்லிசை" (அகநா. 205 : 8).

11. நவிலுதல் - கூறிப்பழகுதல்; "மறைநவி லந்தணர்" (புறநா. 1 : 6) : "நவிற்றொறு நூனயம் போலும்" (குறள், 783).

10 - 11. துறக்கத்தில் விளங்குதற்குக் காரணமாகிய நல்ல புகழென்றுமாம்; புறநா. 27 : 7 - 9, குறிப்புரை. (உ-அஉ)

(உ-அ௩) ஒண்செங் குரலித் தண்கயங் கலங்கி
வாளை நீர்நாய் நாளிரை பெறூஉப்
பெளவ வுறையாள வா......வி மயக்கி
மாறுகொண் முதலையொ டூழ்மாறு பெயரும்
அழும்பிலனடாங்காறகையுமென்றும் (?)
வலம்புரி கோச ரவைக்களத் தானும்
மன்று ளென்பது கெட......ானே பாங்கற்
கார்சூழ் குறட்டின் வேணிறத் திங்க
உயிர்புறப் படாஅ வளைவைத் தெறுவரத்
தெற்றிப் பாவை திணிமண லயரும்
மென்றோண் மகளிர் நன்று புரப்ப
........ண்ட பாசிலைக்
கமழ்பூந் தும்பை நுதலசைத் தோனே.

(பி - ம்.) 1 'குரவித்' 'கழைநீர்காய, கழையுளானே' 2 - 3 'மாநீர நாய்நாளிரை பெறூஉம யெளவவவுறையளவா' 4 - 5 'கதிர் பெயரு, மழிம்பிலனண்டரங்காற்கையும்' 8 - 9 'திங்களுயிறுர்ப்படாஅ' 13 'கவிழ்'

திணை - தும்பை, துறை - பாண்பாட்டு. (பி - ம்.) பாடாண் பாட்டு.

அடை நெடுங்கல்வியார் (பி - ம். அண்ட நெடுங்க...யார்.)

(கு - ரை.) 1. குரலி - ஒருவகைக் கொடி; "சிறுசெங் குரலி" (குறிஞ்சிப். 72; பெருங். 2. 12 : 29).

2. நாளிரை - காலையுணவு; வாளையை நீர்நாய் நாளிரையாகப் பெறும்; "அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய், வாளை நாளிரை பெறூஉ மூரன்" (குறுந். 364 : 1 - 2); "வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்", "நாளிரை தரீஇய வெழுந்த நீர்நாய், வாளையொ டுழப்ப", "பொய்கை நீர்நாய்ப் புலவுநா றிரும்போத்து, வாளை நாளிரை தேரு மூர" (அகநா. 6 : 18, 336 : 1 - 2).

4, மாறு - பகை; "கடுமுரண் முதலை" (புறநா. 37 : 10); ஊழ் - முறை.

5. அழும்பில் : இப்பெயருள்ள ஊர் சோழநாட்டிலொன்றும் சேர நாட்டிலொன்றும் உண்டென்று தெரிகிறது; "பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி, அழும்பில்" (அகநா. 44 : 14 - 5); "மான விறல்வேளழும்பில்" (மதுரைக். 344 - 5); "அறைபறை யென்றே யழும்பில்வேளுரைப்ப" (சிலப். 25; 177).

6. வலம் புரி - வெற்றியை விரும்பும்; கோசர் - ஒருவகை வீரர்; புறநா. 169 : 9, குறிப்புரை. அவைக்களம் - பழையனென்னும் சிற்றரச னுடைய மோகூரிலுள்ள அவைக்களம்; "பழையன் மோகூ ரவையகம் விளங்க, நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன" (மதுரைக். 508 - 9).

7. பாங்கற்கு - தோழன் பொருட்டு.

8. ஆர் - ஆரக்கால்; குறடு - வண்டியுருளையின் குடம்; வேல் நிறுத்து இங்க - வேற்படைகள் மார்பில் தங்க. வேற்படைகளால் தைப் புண்ட வீரனுக்கு ஆரக்கால் சூழ்ந்த குறடு உவமை; "நோன்குறட் டன்ன வூன்சாய் மார்பின்" (மதுரைக். 742); "வீரவே லுடம்பெலாஞ் சூழ வெம்புலால், சோருஞ்செங் குருதியுள் மைந்தர் தோன்றுவார், ஒருமே லொண்மணிச் சூட்டு வைக்கிய, ஆரமே யமைந்ததேர்க் குழிசி யாயினர்" (சீவக. 790); "நெடுவேல் பாய்ந்த மார்பின், மடல்வன் போந்தையி னிற்கு மோர்க்கே" (புறநா. 297 : 9 - 10) என்பன இங்கே கருதற்பாலன. இங்கல் - தங்கல்; "இங்குவார்முரலும்", "செம்பொ னிங்குவார் கழலினுலும்", "இங்குசுவையின்னமிர்தம்" (சீவக. 763, 1083, 2025).

8 - 9. புறநா. 290 : 4 - 5. வேல்தைத்த ஆகத்திற்கு ஆர்சூழ் குறடு : பு. வெ. 176; தொல். புறத். சூ. 71, ந.

10. தெற்றி - திண்ணை.

13. தும்பை - தும்பை மாலையை. அசைத்தல் - கட்டுதல். (உஅங)

(உஅச) வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூ தாங்காங் கிசைப்ப
நூலரி மாலை சூடிக் காலிற்
றமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமந் தாங்கி முன்னின் றெறிந்த
ஒருகை யிரும்பிணத் தெயிறுமிறை யாகத்
திரிந்த வாய்வா டிருத்தாத்
தனக்கிரிந் தானைப் பெயர்புற நகுமே.

(பி - ம்.) 3 'சூட்டிநங்காலிற்றனியன்' 6 'பிறையாகத்' 7 'திருந்த வாய்வாடிருத்தத்' 8 'தனக்கிருந்தானை', 'தனக்கிரிதானை பெயர்'

திணையும் துறையும் அவை.

ஓரம்போகியார்.

(கு - ரை.) 1. விரைவில் வருக, விரைவில் வருகவென்று; "வருகதில் லம்மவெஞ் சேரி சேர" (அகநா. 276 : 7).

'வருகதில்' : நன். வி. சூ. 420, மேற்.

2. தூது - தூதர்.

1 - 2. சிறந்த வீரனைத் தமக்குத் துணையாக வரும் வண்ணம் அரசர் அழைத்தல் இந்நூல் 122-ஆம் பாடலாலும் விளங்கும்.

3. நூலரிமாலை - நூலை அரிந்து கட்டிய மாலை. காலின் - கால் களால்; காற்றைப்போலென்றுமாம்.

3 - 4. ஊர்தியின்றித் தனியே வந்த மறவன். மூதில் - மறக்குடி.

1 - 4. 'வருகதில்வல்லே...வந்த இது காலங்குறித்தது' (தொல். இடை. சூ. 5, ந.).

5. தடுத்தற்கரிய போரைத் தடுத்து.

6. "தாளுல் விலங்காற் றனித்தாற் பிறன்வரைத்தால், யானை யெறித லிளிவரவால் - யானை, ஒருகை யுடைய தெறிவலோ யானும், இருகை சுமந்துவாழ் வேன்" (தொல். புறத்திணை. சூ. 5, ந. மேற்.).

6 - 7. ஒருகையிரும்பிணத்தெயிறு - இறந்த யானையின் கொம்பு. மிறையாகத் திரிந்தவாள் - வளைவாக வேறுபட்ட கத்தியை; திருத்தா - திருத்தி; "புண்ணிடங் கொண்ட வெஃகம் பறித்தலிற் பொன்ன ஞர்தம், கண்ணிடங் கொண்ட மார்பிற் றடாயின காது வெள்வேல், மண்ணிடங்கொண்ட யானை மணிமருப் பிடையிட் டம்ம, விண்ணிட மள்ளர் கொள்ள மிறைக்கொளீஇத் திருத்தி ஞனே" (சீவக. 284); "வெந்திற லெஃக மிறைக்கொளீஇ" (பு. வெ. 175).

8. தனக்குத் தோற்றோடியவனது முதுகை நோக்கிச் சிரிப்பான்; "போர்தொலைந் திருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போல்" (கலித். 120 : 14).

தாங்கித் (5) திருத்தா (7) நகுமென்க (8)

மு. வஞ்சித்திணைத்துறைகளுள், 'அழிபடைதட்டோர் தழிஞ்சி' என்பதற்கும் (தொல். புறத்திணை. சூ. 7, இளம்.), 'வருவிசைப் புனலைக் கற்சிறைபோல, வொருவன் ருங்கிய பெருமை' என்பதற்கும் (தொல். புறத்திணை. சூ. 8, ந.) 'திறப்பட வொருதான் மண்டிய குறுமை' என்பதற்கும் (தொல். புறத்திணை. சூ. 12, ந.) மேற் கோள். (உஅச)

(உஅரு) பாசறை யீரே பாசறை யீரே
துடியன் கையது வேலே யடிபுணர்
வாங்கிரு மருப்பிற் றீந்தொடைச் சீறியாழ்ப்
பாணன் கையது தோலே காண்வரக்
கடுந்தெற்று மூடையின்.........
வாடிய மாலை மலைந்த சென்னியன்
வேந்துதொழி லயரு மருந்தலைச் சுற்றமொடு
நெடுநகர் வந்தென விடுகணை மொசித்த
மூரி வெண்டோள்........
சேறுபடு குருதிச் செம்மலுக் கோஒ

மாறுசெறு நெடுவேன் மார்புளம் போக
நிணம்பொதி கழலொடு நிலஞ்சேர்ந் தனனே
அதுகண்டு, பரந்தோ ரெல்லாம் புகழத் தலைபணிந்
திறைஞ்சி யோனே குருசில் பிணங்குகதிர்
அலமருங் கழனித் தண்ணடை யொழிய
இலம்பா டொக்கற் றலைவற்கோர்
கரம்பைச் சீறூர் நல்கின னனவே.

(பி - ம்.) 8 'நடுநகா' 2 'முரி வெண்டோல்' 10 - 11. 'செம்பறுக் கோஓ மாறுபடு நெடு' 13 'பார்த்தோர்' 16 'வலப்பாடு' 17 'செறூர்,' 'களறூர்'

திணை - வாகை; துறை - ......முல்லை

அரசில் கிழார்.

(கு - ரை.) 2. துடியன் - துடிப்பறை கொட்டுபவன்.

3. வளைந்த கரிய கோட்டையும் இனிய நரப்புத் தொடையையு முடைய சிறிய யாழ்.

4. தோல் - கேடகம்.

3 - 4. "தேளந் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண" (புறநா. 70 : 1).

5. கடுந்தெற்று மூடை - நெருங்கத் தெற்றின தானியக் கோட்டை; மூடை - குதிருமாம்; "கடுந்தெற்று மூடையி னிடங் கெடக் கிடக்குஞ்சாலி" (பொருந. 245 - 6).

6. மலைந்த - சூடிய.

7. அரச காரியத்தைச் செய்யும் அரிய தலைமையையுடைய சுற்றம்.

8. மொசிதல் - மொய்த்தல்; பதிற். 11 : 12, 46 : 8.

10. செம்மல் உக்கு ஓஒ.

11. பகைவரைக் கோபிக்கின்ற நெடியவேல் மார்பினுட் போதலால்; "எஃகுளங் கழிய" (புறநா. 282 : 1).

14. குருசிலென்பது அவனென்னும் பொருளில் வந்தது.

13 - 4. புகழுக்கு நாணுதல்: புறநா. 152 : 21 - 2, குறிப்புரை; கலித். 119 - 9.

15. தண்ணடை : மருதநிலத்தூர்; புறநா. 287 : 10.

14 - 5. பிணங்குகதிர் அலமரும் கழனி - பின்னிய நெற்கதிர் சுழலும் வயல்; புறநா. 338 : 10.

16. வறுமையையுடைய சுற்றத்தார்க்குத் தலைவனென்றது, ஓரிரவலனை.

நல்கினனெனப் (17) பரந்தோரெல்லாம் புகழக் (13) குருசில் இறைஞ்சியோனென்க. (14) (௨௮௫)

(௨௮௬) வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னோ ரன்ன விளைய ரிருப்பப்
பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்
கால்கழி கட்டிலிற் கிடப்பித்
தூவெள் ளறுவை போர்ப்பித் திலதே.

(பி - ம்.) 3 'நீட்டிப்பண்டையெண்' 5 'போர்ப்பித்திலனே', 'போர்ப்பித் திலவே'

திணை - கரந்தை; துறை - வேத்தியல்.

ஔவையார்.

(கு - ரை.) 1. யாட்டுச்செச்சை - ஆட்டுக்கிடாய்.

2. தன்னோரன்ன - தன்னையொத்த; ஓர் - அசைநிலை.

3. மண்டை - ஒருவகை உண்கலம்; எழுவாய்.

4. கால்கழிகட்டில் - பாடை; கிடப்பி - கிடத்தி; புறநா. 93 - 8.

5. தூவெள்ளறுவை - மிக வெண்மையான ஆடை; புறநா. 279 : 8, 291 : 2.

மண்டை (3) போர்ப்பித்திலதென்க (5)

மு. தொல். புறத்திணை. சூ. 8. ந. மேற். (௨௮௬)

(௨௮௭) துடியெறியும் புலைய
எறிகோல் கொள்ளு மிழிசின
கால மாரியி னம்பு தைப்பினும்
வயற்கெண்டையின் வேல்பிறழினும்
பொலம்புனை யோடை யண்ணல் யானை
இலங்குவான் மருப்பி னுதிமடுத் தூன்றினும்
ஓடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதற் புரளும்
தண்ணடை பெறுதல் யாவது படினே
மாசின் மகளிர் மன்ற னன்றும்
உயர்நிலை யுலகத்து நுகர்ப வதனால்
வம்ப வேந்தன் றானை
இம்பர் நின்றுங் காண்டிரோ வரவே.

(பி - ம்.) 2 - 3 'அறிசன, காலமளியினம்புகைப்பினும்' 5 - 6 'யாஅனையிலங்குவாண்' 9 'பிறழும்' 11 'மண்ணநன்று'

திணை - கரந்தை; துறை - நீண்மொழி.

சாத்தந்தையார்.

(கு - ரை.) 1. துடி - ஒருவகைப் பறை.

2. எறிகோல் - பறையை அடிக்குங் குறுந்தடி. இழிசின - புலையா; புறநா. 82 : 3, 289 : 10.

3. கார்காலத்து மழை எய்யப்படும் அம்புகளுக்கு உவமை; "ஒடுங்கா ருடன்றவன் றுனை வில்விசை, விடுங்கணை யொப்பிற் கதழுறை சிதறூஉ" (பரி. 22 - 5 : 6); "பெயலுறழக் கணைசிதறி" (மதுரைக். 183); "மால்வரைத் தொடுத்து வீழ்ந்த மணிநிற மாரி தன்னைக், காலிரைத் தெழுந்து பாறக் கல்லெனப் புடைத்த தேபோன், மேனிரைத் தெழுந்த வேடர் வெந்நுனை யப்பு மாரி, கோனிரைத் துமிழும் வில்லாற் கோமகன் விலக்கி னானே" (சீவக. 451).

4. வேலுக்குக் கெண்டை உவமம்; புறநா. 249 : 6.

3. பொலம்புனையோடை - பொன்னாற் செய்யப்பட்ட பட்டம்; புறநா. 8 : 7 - 11.

5 - 6. வால்மருப்பு - வெண்மையான கொம்பு. யானை...ஊன்றி னும்: "கூற்றம்போற் கொடிய யானைக் கோடுமு தகன்ற மார்பம், கீற்றுப்பட்டழகி தாகக் கிடக்கெனக் கொடுத்து நிற்பார்", "முளரிமுக நாகமுனை யெயிறுழுது கீற" (சீவக. 782, 2870).

7. பீடு - பெருமை.

8. பொய்கையிற் பிறழ்ந்த வாளைமீன்.

9. கூட்டுமுதல் - நெற்கூட்டிடத்தே.

10. தண்ணடை பெறுதல் இயல்பென்றபடி; "தண்ணடை பெறு தலு முரித்தே" (புறநா. 297 : 8). படின் - இறந்தால்.

11. தெய்வமகளிருடைய மணத்தை. நன்று - மிகுதியாக; உம் : அசைநிலை.

12. சுவர்க்கத்தில் அனுபவிப்பார்.

13. பகையரசனுடைய சேனை.

14. வரவுகாண்டிர் - வருதலைப் பார்ப்பீராக.

மு. வஞ்சித்திணைத்துறைகளுள், 'மாராயம்பெற்ற நெடுமொழி' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 7, இளம்.; சூ. 8, ந. (உஅஎ)

(உஅஅ) மண்கொள வரிந்த வைந்துதி மருப்பின்
அண்ண னல்லே றிரண்டுடன் மடுத்து
வென்றதன் பச்சை சீவாது போர்த்த
திண்பிணி முரச மிடைப்புலத் திரங்க

ஆரமர் மயங்கிய ஞாட்பிற் றெறுவர
நெடுவேல் பாய்ந்த நாணுடை நெஞ்சத்
தருகுகை.............மன்ற
குருதியொடு துயல்வரு மார்பின்
முயக்கிடை யீயாது மொய்த்தன பருந்தே.

(பி - ம்) 1. 'தருகுறை'

திணை - தும்பை; துறை - மூதின்முல்லை.

கழாத்தலையார்.

(கு - ரை.) 1. மண்கொள வரிந்த - கோட்டுமண் கொள்ளுதலால் வரிபட்ட.

2. இரண்டு காலைகள்.

3. வென்றதன் - வென்ற ஏற்றினது. பச்சை - தோல்.

1-4. பச்சை போர்த்த முரசம் : "ஓடா நல்லேற் றுரிவை தைஇய, பாடுகொண் முரசம்" (அகநா. 334 : 1 - 2); "கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த, மாக்கண் முரச மோவில கறங்க" (மதுரைக். 732 - 3); "ஏற்றுரி போர்த்த விடியுரு முழக்கின்,......முரசு" (மணி. 1 : 29 - 31); ஏற்றுரி போர்த்த வள்வா ரிடிமுரசு", "புலைமருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற, கலைகுர லுருமுச் சீற்றக் கதழ்விடை யுரிவை போர்த்த, துலைகுரன் முரசம்" (சீவக. 2152, 2899); சாற்றிடக் கொண்ட வேற்றுரி முரசம்", "ஏற்றுரி முரசினிறைவன்" (பெருங். 1. 38 : 100, 43 : 195); "ஏற்றுயிரி னிமிழ்முரசம்" (யா. வி. சூ. 40; 'தாழிரும்' என்னுஞ் செய்யுள்).

"ஏற்றுரி முரச நாண" (சீவக. 2142) என்னும் பகுதிக்கு இவ்வடிகளை மேற்கோள் காட்டுவர் நச்சினார்க்கினியர்.

5. அமர் - போர். ஞாட்பு - போர்க்களம்.

9. மகளிர் வந்து தழுவுதற்கு இடங்கொடாமற் பருந்துகள் மொய்த்தன. (உஅஅ)

(உஅகூ) ஈரச் செவ்வி யுதவின வாயினும்
பல்லெருத் துள்ளு நல்லெருது நோக்கி
வீறுவீ றுயு முழவன் போலப்
பீடுபெறு தொல்குடிப் பாடுபல தாங்கிய
மூதி லாள ருள்ளுங் காதலிற்
றனக்குமுகந் தேந்திய பசும்பொன் மண்டை

இவற்கீ கென்னு மதுவுமன் றிசினே
கேட்டியோ வாழி பாண பாசறைப்
பூக்கோ ளின்றென் றறையும்
மடிவாய்த் தண்ணுமை யிழிசினன் குரலே.

(பி - ம்.) 5. 'முரண்டலை களித்தமியளுங்', 'முளைத்தலை, கழித மீளுங்' 6 'தெய்திய' 7 'இவற்கீதென்னுதறகுமனறிசினே' 9 'பூக் கோளினரையும்'

திணை - ....; துறை ....முல்லை.

கழாத்தலையார்.

(கு - ரை.) 1. ஈரச்செவ்வி - ஈரமாகிய பருவம்.

2. பல உழவெருதுகளுள்ளும்.

3. வீறு வீறு ஆயும் - அவ்வெருதின் குணங்களை வேறு வேறாக ஆராய்கின்ற.

4. குடிப்பாடு - குலத்திற்குப் பொருந்திய பழைய வழக்கம்.

5. மூதிலாளர் - மறக்குடியிற் பிறந்தவர். காதலின் - அன்பினால்.

6. பசும்பொன் மண்டை யென்றது. பசிய பொன்னாற் செய்யப் பெற்ற கட்பெய்கலத்தை; மண்டை அதனிலுள்ள கள்ளுக்கு ஆகு பெயர்.

6 - 7. இவற்கு ஈகென்னும் - இவ்வீரனுக்குக் கொடுவென்பான்: "இவற்கீத் துண்மதி கள்ளே" (புறநா. 290 : 1).

8. பாசறை - படைவீட்டில்.

9. பூக்கோள் - பூவைக் கொள்ளுதல்; அஃதாவது, வெட்சி முதலிய புறத்திணைக்குரிய பூக்களைத் தம் தொழிலுக்கேற்பச் சூடுதற்கு நல்ல நாளிற் கைக்கொள்ளல்; "பூக்கோ ளெனவேஎய்க் கயம்புக் கனனே" (புறநா. 341 : 9).

10. மடிவாய்த் தண்ணுமை - தோலை மடித்துப் போர்த்த வாயை யுடைய மத்தளம்; "மடிவாய்த் தண்ணுமை நடுவ ணார்ப்ப" (நற். 130: 2); "மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்ப" (பெரும்பாண். 144) இழிசினன் : புறநா. 287 : 2, குறிப்புரை.

9 - 10. புறத்திணைக்குரிய பூக்களைக் கொள்ளுதற்குத் தண்ணுமை அறைதல் மரபென்பது, "பூக்கோ ளேய தண்ணுமை" (அகநா. 174 : 4), "பூக்கோட் டண்ணுமை கேட்டொறுங் கலிழ்ந்தே" (தகடூர் யாத் திரை) என்பவற்றாலும் விளங்கும்.

மு. வெட்சித்திணைத்துறைகளுள், மறங்கடை கூட்டிய குடிநிலை கூறியதற்கு (தொல். புறத்திணை, சூ. 4, இளம்.) மேற்கோள். (௨௮௯)

(உகூ०) இவற்கீத் துண்மதி கள்ளே சினப்போர்
இனக்களிற் றியானை யியறேர்க் குருசில்
நுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பி னிமையான் றச்சன்
அடுத்தெறி குறட்டி னின்றுமாய்ந் தனனே
மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனும்
உறைப்புழி யோலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே.

(பி - ம்.) 1 'எற்கீத்து' 2 'யியற்றேர்' 5 'குடடினிதுனறுமந தனனே' 7 'உறைப்பெயலோலை' 8 'மறைவல.......கரந்தை'

திணை - கரந்தை; துறை - குடிநிலையுரைத்தல்.

ஔவையார்.

(கு - ரை.) 1. "ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே" என்னுஞ் சூத்திர வுரையில் இவ்வடியை மேற்கோளாகக் காட்டி, 'இவ னென்பது முன்னிலையும் படாக்கையுமென்று உணர்க' என்பர் நச்சி னார்க்கினியர்; தொல். எச்ச. சூ. 49.

2. களிற்றியானை - ஆண் யானை. இயல் தேர் - செல்லுகின்ற தேர். குருசில் : விளி.

3. நுந்தை தந்தைக்கு - நின் பாட்டனுக்கு.

4. எடுத்தெறி ஞாட்பு - படைக்கலங்களை எடுத்தெறியும் போரில். இமையான் - கண்ணிமையானாய்; "விழித்தகண் வேல்கொண்டெறிய வழித்திமைப்பின், ஓட்டன்றோ வன்க ணவர்க்கு" (குறள், 775)

5. குறட்டின் - உருளையின் குடம்போல; புறநா. 283 : 8.

6. மறப்புகழ் - வீரத்தால் வரும் கீர்த்தி; "மறம்வீங்கு பல்புகழ்" (பதிற். 12 : 8).

7. உறைப்புழி ஓலைபோல - மழை பெய்யுமிடத்து அம்மழைத்துளி கள் மேலே வீழாதபடி காக்கும் குடையைப்போல; ஓலை - தாழை; தென்னை, பனை இவற்றின் மடல்; இங்கே குடைக்கு ஆகுபெயர்.

'உழி' என்பது இடப்பொருளுருபாய் வருதற்கு இவ்வடி மேற் கோள்; நன். சூ. 301, மயிலை.; நன். வி. சூ. 302.

6 - 8. இவன் மறைக்குவன் - இவன் வேல் உன்மீது படாதபடி தடுத்தற்கு முயலுவான்; இதனை, "இலக்கு வற்குமுன் வீடணன் புகு மிரு வரையும், விலக்கி யங்கதன் மேற்செலு மவனையும் விலக்கிக், கலக் கும் வானரக் காவல னநுமன்முன் கடுக, அலக்க ணன்னதை யின்ன தென் றுரைசெய லாமே" (கம்ப. வேலேற்று. 31) என்பதனாலும் உணர்க.

7 - 8. குடும்பத்தைக் குற்றமறைப்பானென்னும் இடத்துத் தன் குடியைத் துன்பமுறுமற் காக்க முயல்வானென்று பொருள்கூறி, 'உறைப்புழி.........வேலே என்புழியும் மறைத்தல் இப்பொருட் டாயிற்று' என்பர் பரிமேலழகர்; குறள், 1029.

மு. "முந்தை முதல்வர் துடிய ரிவன்முதல்வர், எந்தைக்குத் தந்தை யிவனெனக்கு - வந்த, குடியொடு கோடா மரபினோற் கின்னும், வடியுறு தீந்தேறல் வாக்கு" (பு. வெ. 19) என்பதை இச்செய்யுள் நினைப் பிக்கின்றது.

இது, தார்நிலையின் பாற்படுமென்பர்; தொல். புறத்திணை. சூ. 17, ந. (உகo)

(உகக) சிறாஅஅர் துடியர் பாடுவன் மகாஅஅர்
தூவெள் ளறுவை மாயோற் குறுகி
இரும்புட் பூச லோம்புமின் யானும்
விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவென்
என்போற் பெருவிதுப் புறுக வேந்தே
கொன்னுஞ் சாதல் வெய்யோற்குத் தன்றலை
மணிமருண் மாலை சூட்டி யவன்றலை
ஒருகாழ் மாலை தான்மலைந் தனனே.

(பி - ம்.) 1 'துடியபாடு' 3 'இறும்புபூட்பூசல்', 'இரும்பூட்பூசல்' 4 'விளரிக்கோடின வெண்ணரிகடிவென்' 5 'எம்போல்'

திணை - அது; துறை - வேத்தியல்.

நெடுங்கழுத்துப் பரணர்.

(கு - ரை.) 1. சிறாஅஅர் - சிறுவர்களே. துடியர் - துடிப்பறை கொட்டுபவர்களே. பாடுவல் மகாஅஅர் - பாடுதலில் வல்ல பாண் மக்களே.

இவ்வடி, ரகாரவீற்று அளபெடைப்பெயர் மாத்திரைமிக்கு இயல் பாய் விளியேற்றற்கு மேற்கோள்; தொல். விளி. சூ. 24, ந.

2. தூ வெள் அறுவை - மிகவும் வெள்ளிய ஆடை; புறநா. 279 : 8, 286 : 6. மாயோற் குறுகி - கரிய நிறத்தையுடையோனை நெருங்கி.

3. இரும்புட்பூசல் - பறவைகளின் ஆரவாரத்தை; பறவைகளைப் போலப் பெருமுழக்கஞ் செய்தல்; அவனுற்ற பெரும்புண்ணைக் குறித்து அழுதலைச் செய்த லெனினுமாம். ஓம்புமின் - பரிகரியுமின்.

4. விளரி - இரங்கற்பண். கொட்பு - சுழற்சி. கடிகுவென் - விலக்கு வேன். இரங்கற்பண்ணைப் பருந்தின் சுழற்சிபோல வட்டமிட்டுப் பாடுதலால், அங்கே வரும் நரிகளை ஓட்டுவேன்; இந்த இசை யொலியைக் கேட்டு நரிகள் ஓடுமென்றபடி.

5. அரசன் என்னைப்போலப் பெரிய நடுக்கத்தையுடையவனாக; புறநா. 255 : 3; நற். 293 : 5 - 6.

6. கொன்னுஞ்சாதல் வெய்யோற்கு - ஒரு பயனின்றியும் போரிற் சாதலில் விருப்பமுள்ளவனுக்கு; "மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது" (முல்லைப். 67); "புட்பகைக், கேவா னாகலிற் சாவேம் யாமென", "பொதுவிற் றூங்கும் விசிபுறு தண்ணுமை, வளிபொரு தெண்கண் கேட்பின், அதுபோ ரென்னு மென்னையு முளனே" (புறநா. 68, 89) என்பவற்றால் வீரர்க்குப் போர் விருப்பமும் போரிற் சாதலில் விருப்பமும் உண்மை அறியலாகும்.

7. மணிமருள்மாலை சூட்டி - பலவகை மணிகள் விரவிய பல வடமுள்ள மாலையை அவ்வீரனுக்குச் சூட்டி; மருளுதல் - கலத்தல்.

8. ஒருகாழ் - ஒற்றைவடம். மலைந்தனன் - சூடினான்.

மு. 'கொடுத்த லெய்திய கொடைமை' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 8, ந. (உ௬௧)

(உ௬உ) வேந்தற் கேந்திய தீந்தண் ணறவம்
யாந்தனக் குறுமுறை வளாவ விலக்கி
வாய்வாள் பற்றி நின்றனெ னென்று
சினவ லோம்புமின் சிறுபுல் லாளர்
ஈண்டே போல வேண்டுவ னாயின்
என்முறை வருக வென்னான் கம்மென
எழுதரு பெரும்படை விலக்கி
ஆண்டு நிற்கு மாண்டகை யன்னே.

(பி - ம்) 1 'வேந்தர்க்கு' 3 'வாளமற்றி நின்றனன்'.

திணை - வஞ்சி; துறை - பெருஞ்சோற்றுநிலை.

விரிச்சியூர் நன்னாகனார்.

(கு - ரை.) 1. தீந்தண் நறவம் - இனிய குளிர்ந்த நறுநாற்றத்தை யுடைய மதுவை; "தண்கமழ் தேறல்" (புறநா. 56 : 18).

2. உறுமுறை வளாவ - உற்ற முறையாற் கலந்து கொடுக்க.

3. வாய்வாள் - தப்பாத வாள்.

1 - 3. "ஆளமர் வெள்ளம் பெருகி னதுவிலக்கி, வாளொடு வைகுவேன் யானாக - நாளும், கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோ யீயப், பிழிமகி ழுண்பார் பிறர்" (பு. வெ. 52) என்பது இவ்வடிகளின் பொருளை ஒருவாறு தழுவியது.

4. சினவல் ஓம்புமின் - கோபித்தலை ஒழிமின். சிறுபுல்லாளர்: விளி.

5. இவ்விடத்திற் செய்ததுபோலப் போர் செய்யவேண்டு வனாயின்.

6. என் முறைவருக என்னான் - யான் போர் செய்யவேண்டிய முறை வருக வென்று நினையானாகி; போரில் முறையுண்டென்பதை,

"விருந்தாயினை யெறிநீயென விரைமார்பகங் கொடுத்தாற், கரும்பூணற வெறித்தாங்கவ னினதூழினி யெனவே, எரிந்தாரயி லிடைபோழ்ந்தமை யுணராதவனின்றான், சொரிந்தார்மல ரரமங்கையர் தொழுதார்விசும் படைந்தான்" (சீவக. 2265), "உணராநெடி துயிராவுரை யுதவாவெரி யுமிழா, இணையாருமி லவனேர்வர வெய்தாவலி செய்தாய், அணையா யினி யெனதூழென வடராவெளி படராப், பணையார்புய முடையா னிடை சிலவிம்மொழி பகர்ந்தான்" (கம்ப. முதற்போர். 180) என்ப வற்றால் உணர்க. கம்மென - விரைய; தேய வழக்கென்பர்; அகநா. 11, உரை. (உகூஉ)

(உகூரு) நிறப்புடைக் கொல்கா யானை மேலோன்
குறும்பர்க் கெறியு மேவற் றண்ணுமை
நாணுடை மாக்கட் கிரங்கு மாயின்
எம்மினும் பேரெழி லிழந்து வினையெனப்
5 பிறர்மனை புகுவள் கொல்லோ
அளிய டானே பூவிலைப் பெண்டே.

(பி - ம்.) 1 'நிறப்புட்' 'நிறப்புடைகலனை மேலானதுவமபற கெறியும்', 2 'குறும்பறகெறியுமோவற்'; 'குறும்பறவெறியும்' 4 'எம் மிநும்' 'லிழந்த', 'விலையெனப்' 5 'புகுவர்' 6 'ஒளியடானே'

திணை - காஞ்சி; துறை - பூக்கோட்காஞ்சி.

நொச்சி நியமங்கிழார் (பி - ம். நொச்சிநீயகஙிழார்)

(கு - ரை.) 1. குத்துக்கோலைக் காய்தலையுடைய யானையின் மேலுள்ளான்; வள்ளுவன்.

2. குறும்பர்க்கு - புற மதிலைச் சூழ்ந்த சிற்றரசரோடு போர் செய்தற் பொருட்டு. ஏவற்றண்ணுமை - காஞ்சிப்பூக்கொள்ளுகைக்கு வீரரை ஏவுதலைச் செய்யுந் தண்ணுமைப்பறை; புறநா. 289 : 9 - 10.

3. போர்ப்பறை கேட்டவுடன் புறப்படாமற் பூக்கோட்பறை அறை யப்படுங்காறும் தாமதித்து நிற்பவர்கள், 'நாணுடைந்த மாக்கள்' என் றிகழ்ந்து கூறப்பட்டனர்; "நாணுத்தக வுடைத்து", "நாண்முறை தபுத்தீர்" (புறநா. 36, 294) என்பர்; "பல்லாக் கொண்டா ரொல்லா ரென்னும், பூசல் கேட்டுக் கையது மாற்றி" (பன்னிருபடலம்), "நிரை கோள் கேட்டுச் செய்தொழி லொழிய" (பு. வெ. 23), "முரசெருக்கலு முண்டியையிடை நீத்துமொய்குழன் மாதரின், விரசியாட லிடைக் கணீத்தும் விநோதநீத்து நடத்தொடு, பரசுபாடல்கணீத்தும் வெய்து பல் வீரரும் படை நான்கொடும், அரசவீதியில் வந்துதொக்கன ராழிபோ லொலிமிக்கதே" (விநாயக. பிந்தியமயூரேசர். 405) என்பவற்றாற் போர்ப்பறை முதலியவற்றைக் கேட்டவுடன் வீரர் போருக்குப் புறப்பட் டமை அறியலாகும்.

6. அளியள் - இரங்கத்தக்காள். பூவிலைப்பெண்டு : "பூவிலை மகளிர் புலம்படார்ந் தனரே" (பழம்பாடல்). (உகூரு)

(உகூச) வெண்குடை மதிய மேனிலாத் திகழ்தரக்
கண்கூ டிறுத்த கடன்மருள் பாசறைக்
குமரிப்படை தழீஇய கூற்றுவினை யாடவர்
தமர்பிற ரறியா வமர்மயங் கழுவத்
திறையும் பெயருந் தோற்றி நுமருள்
நாண்முறை தபுத்தீர் வம்மி னீங்கெனப்
போர்மலைந் தொருசிறை நிற்ப யாவரும்
அரவுமிழ் மணியிற் குறுகார்
நிரைதார் மார்பினின் கேள்வனைப் பிறரே.

(பி - ம்.) 2 'கண்கூடியத்த' 3 'தழீஇக்கூற்று' 4 'ரறியாதமர்' 5 'தோற்றினுநுமருஞுன்' 6 'தவத்தீர்' 7 'தொருதிற' 9 'நிரைகாழ் மாலையெங்கேள்வனைப்'

திணை - தும்பை; துறை - தானைமறம்.

பெருந்தலைச் சாத்தனார் (பி - ம். பெருத்தலைச்சாத்தனார்).

(கு - ரை.) 1. குடையாகிய பூரணசந்திரன் மேலிடத்து ஒளி வீச.

2. **கண்கூடிறுத்த** - சேர்ந்து தங்கின. **கடல் மருள் பாசறை** - கடலை யொத்த படைவீடு; கண்டோர் கடலென்று மயங்கத்தக்க போர்க்களமுமாம்; "கடலென வானீர்க் கூக்குந் தானை", "கடல் கிளர்ந்தன்ன கட்டூர் நாப்பண்" (புறநா. 17, 295); "படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி" (முல்லை. 28); மருள் - உவமவுருபு.

3. **குமரிப்படை** - அழியாப்படை; புதிய படையுமாம். **கூற்று வினையாடவர்** - யமனைப்போலக் கொல்லுதற்றொழிலைச் செய்கின்ற வீரர்; கூற்று - உடலையும் உயிரையும் வேறுவேறாகப் பிரித்துக் கூறு படுத்தும் கடவுள்.

4. தம்மவரென்றும் அயலாரென்றும் அறியாத போர் மயங்கிய களப்பரப்பில்; தமர் பிறரறியாமை படைமடமெனப்படும்.

5. **இறையும் பெயரும் தோற்றி** - நும்முடைய தலைவன் பெயர் இன்னதென்பதையும் நும்பெயர் இன்னதென்பதையும் தோன்றச் செய்து; பெயர் - புகழுமாம். **நுமருள்** - உங்களுள்.

6. **நாண்** - நாணம்; நாள் - வாழ்நாளுமாம்.

5 - 6. 'இறையும்...ஈங்கு' என்றது ஒரு வீரன் கூற்று.

7. போர்த்தொழிலை மேற்கொண்டு ஒரு பக்கத்தே நிற்ப.

8. பாம்பு மணியை உமிழ்ந்து மேயச்சென்று அதனையே நினைத் திருக்குமென்பதும் அதனை அணுகுபவர்களைத் துன்புறுத்துமென்பதும் ஈண்டு அறியற்பாலன; "கொந்தொளி மாமணி யிட்டுப் போதுங் கோளரவிற்கருத் திட்டுப் போந்தார்" (தணிகை. விடையருள். 7).

மு. தும்பைத் திணைத்துறைகளுள் 'தானைநிலை' என்பதற்கு இது மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 14, இளம்.; சூ. 17, ந.).

இப்பாட்டு, மறக்குடி மகளொருத்தியை நோக்கி ஒருவர் கூறியது.

(உகூச)

(உகூரு) கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்பண்
வெந்துவாய் மடித்து வேறலைப் பெயரித்
தோடுகைத் தொழுதரூஉத் துரந்தெறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி
5 இடைப்படை யழுவத்துச் சிதைந்துவே றாகிய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே.

(பி - ம்.) 2 'பெயரத தொழுகைத்தெழுதரு நடுதூரந்தேறி', 'பெயரித்தோறுவைத்தெழுதருந்' 3 'தோறுடைத்து', 'தோறுணித்து' 4 'வாய்ப்படை' 7 'மாடு'

திணை - அது; துறை - உவகைக் கலுழ்ச்சி.

ஔவையார்.

(கு - ரை.) 1. புறநா. 294 : 2, குறிப்புரை.

2. வெந்து - மனம் புழுங்கி. வாய்மடித்து : (புறநா. 296 : 4, 298 : 5). பெயரி - பெயர்த்து; அசைத்து.

3. தோடு - சேனையின் தொகுதியை. உகைத்து - செலுத்தி; கைத்து - செலுத்தி என்றுமாம். எழுதரூஉ - எழுந்து. ஞாட்பின் - போரில்.

4. முன் வருகின்ற படையைப் பிளந்து இடமுண்டாக விலக்கி; புறநா. 299 : 3.

5. அழுவம் - பரப்பு. "சிதைந்துவே றாகிய" (புறநா. 278 : 7).

6. சிறப்புடைமை - மறக்குடிக்கே யுரிய விசேடகுணம்; "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமையான்" (குறள், 972).

7. வாடுமுலை : புறநா. 276 : 2. ஊறுதல் பாலின்றொழில்.

6 - 7. புறநா. 277 : 3 - 4.

8. பூட்கை - மேற்கோள் : ஓடாப்பூட்கை : "ஓடாப்பூட்கை யுறந்தை" (சிறுபாண். 83).

5 - 8. "செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய, படுமகன் கிடக்கை காணூஉ, ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" (புறநா. 278 : 7 - 9).

(உகூரு)

(உகசு) வேம்புசினை யொடிப்பவுங் காஞ்சி பாடவும்
நெய்யுடைக் கைய ரையவி புகைப்பவும்
எல்லா மனையுங் கல்லென் றனவே
வெந்துடன் றெறிவான் கொல்லோ
நெடிதுவந் தன்று னெடுந்தகை தேரே.

(பி - ம்.) 1 'படரவும்' 3 'கல்லென்றவ்வே' 4 'கொல்லென' 5 'தன்றுநெடுந்'

திணை - வாகை; துறை - ஏருண் முல்லை.

வெள்ளைமாளர்.

(கு - ரை.) 1. சினை - தழையையுடைய கிளையை. காஞ்சி - காஞ்சிப்பண்; புறநா. 281 : 5.

2. ஐயவி - வெண்சிறு கடுகு; "ஐயவி புகைப்பவுந் தாங்காது" (புறநா. 98 : 15).

1 - 2. புண்பட்டோரைப் பேய்கள் அணுகாதிருத்தற் பொருட்டு வேப்பந்தழையை வீட்டின் முன் இறப்பிற் செருகுதலும் காஞ்சிப் பண்ணைப் பாடுதலும் ஐயவியைப் புகைத்தலும் மரபு : புறநா. 98 : 15, 281 : 1 - 6.

5. நெடிது - நெடுநேரம்.

போர்க்குச் சென்ற ஏனைவீரர் தம்மிடத்தை அடைந்தும் ஒருவீரன் வாராமலிருக்க அவன் தேர்மட்டும் தாமதித்து வந்ததைக் கண்ட அவன் தாய் கூறியது; கண்டோர் கூறியதுமாம். (உகசு)

(உகஎ) பெருநீர் மேவற் றண்ணடை யெருமை
இருமருப் புறழு நெடுமா ணெற்றின்
பைம்பய றுதிர்த்த கோதின் கோலனைக்
கன்றுடை மரையாத் துஞ்சுஞ் சீறூர்க்
கோளிவண் வேண்டேம் புரவே நாரரி
நனைமுதிர் சாடி நறவின் வாழ்த்தித்
துறைநனி கெழீஇக் கம்பு ளீனும்
தண்ணடை பெறுதலு முரித்தே வைந்நுதி
நெடுவேல் பாய்ந்த மார்பின்
மடல்வன் போந்தையி னிற்கு மோர்க்கே.

(பி - ம்.) 2 'நெடுமா நெற்றின்' 3 'கோலனைக குன்றுடை...... துஞ்சூர்க் கோளி' 5 'நாரிநிறைமுதிராடிநறபின' 7 'துறைநனிக் கொதந்ண்' 8 'வைந்நுனை'

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு.

....

(கு - ரை.) 1. மிக்க நீர் பொருந்துதலையுடைய மருதநிலத்தூரி லுள்ள எருமையின்.

2. இருமை - கருமை. மருப்பு-கொம்பு. நெற்றின்-நெற்றினுடைய.

3. கோது - சக்கை. கோலணை - வளைந்த படுக்கையில்.

1 - 3. பயற்றின் நெற்றினுக்கு எருமைக்கொம்பு உவமை.

4. மரையா - ஒருவகை விலங்கு; "பெற்றமு மெருமையு மரையு மாவே" (தொல். மரபு. சூ. 60) என்பதனால், 'மரையா' என்றார்; "மரையா மால்கவர" (கலித். 6 : 1). துஞ்சுதல் - கிடத்தல்.

5. கோள் - கொள்ளுதலை. புரவு - இறையிலி நிலம்; புறநா. 290 : 9. நார் - பன்னாடை.

4 - 5. சிறிய ஊரைப் புரவாகக் கொள்ளுதலை இப்பொழுது விரும்பேம்.

6. நறவின் வாழ்த்தி - கள்ளை வாழ்த்தி; புறநா. 316 : 1.

5 - 6. நாரால் அரிக்கப்பட்டதும் பூவாலாக்கியதும் விளைந்ததும் சாடியிலுள்ளதுமாகிய மது; "நார்பிழிக் கொண்ட வெங்கட் டேறல்" (புறநா. 170 : 1 - 2) என்பதையும் அதன் அடிக்குறிப்பையும், "நாரரி சிறுகலத் துகுப்பவும்", "நனைக்கள்ளின் மனைக்கோசர், தீந்தேற னறவு மகிழ்ந்து" (புறநா. 232 : 3 - 4, 396 : 7 - 8), "தூம்பகம் பழுநிய தீம்பிழி" (பதிற். 81 : 21), "நெடுங்க ணுடைமைப் பழுநிய கடுந்திறற், பாப்புக்கடுப் பன்ன தோப்பி", "அம்பணை விளைந்த தேக்கட் டேறல்" (அகநா. 348 : 6 - 7, 368 : 14), "நீடமை விளைந்த தேக்கட் டேறல்" (முருகு. 195), "வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த, வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி" (பெரும்பாண். 280 - 81), "தேம்பிழி தேறன் மாந்தி" (குறிஞ்சிப். 155), "வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்", "திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்" (மலைபடு. 171, 522) என்பனவற்றையும் பார்க்க.

7. கம்புள் - நீர்வாழ் பறவையுள் ஒரு சாதி; "கதிர்த்ததண் பூணிக் கம்புடாழ் பீலிக் கனைகுரனுரை வண்டானா, மெதிர்த்ததண் புனல்சூழிந் நதிக்கரை" (சீவக. 2108) என்பதனுரையில், 'கம்புளென்பது இறந்த கால வழக்கு' என்பர் நச்சினார்க்கினியர்.

8. தண்ணடை - மருதநிலத்தூர்; நாடுமாம்; புறநா. 287 : 10.

10. தன்வடிவு முழுதும் கருக்குமட்டைகளையுடைய வலிய பனை, தம்மார்பில் வேல்கள் ஊடுருவி நிற்பத்தோன்றும் வீரர்க்கு உவமை. நிற்குமோர் - நிற்போர்.

9 - 10. ஒரு வீரன் உடம்பில் வேல்கள் மொய்த்து நின்றதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 16, ந.

மு. 'பெருநீர்......நிற்குமோர்க்கே : மடல்வன் போந்தைபோல் நிற்பலெனெ நெடுமொழி தன்னொடு புணர்த்தவாறு காண்க; சீறூர்புர வாகக் கொள்ளேன்; 'தண்ணடை கொள்வேனெனத் தன்னுறு தொழில் கூறினான்' (தொல். புறத்திணை. சூ. 5, ந.). (உகஎ)

(உ௯அ) எமக்கே கலங்க றருமே தானே
தேற லுண்ணு மன்னே நன்றும்
இன்னான் மன்ற வேந்தே யினியே
நேரா ராரெயின் முற்றி
வாய்மடித் துரறிநீ முந்தென் னனே.

(பி - ம்.) 5. 'துரறிய நீமுந் தெனவே'

திணை - கரந்தை; துறை - நெடுமொழி.

ஆவியார் (பி - ம். ஆனியார், ஆவியார்).

(கு - ரை.) 1 - 2. கலங்கிய கள்ளை எமக்கே கொடுப்பான்; தான் தெளிந்த கள்ளை யுண்பான் முன்பு; என்றது, தலைவன் எம்மை மேலாக மதித்து முன்பு இனியது செய்வானென்றபடி. 'எமக்கு' என்பது தன் போல்வாரையும் உளப்படுத்தி நின்றது. மன் : கழிவுப் பொருளது.

3. வேந்து இனி இன்னான் - வேந்தன் இப்பொழுது இன்னா தவனாயினான்: அதனைப் பின் கூறுவார்.

5. வாய்மடித்து : புறநா. 295 : 2.

4 - 5. பகைவருடைய மதிலைச் சூழ்ந்து இதழைக் கவ்வி முழங்கிக்கொண்டு நீ முற்படுக வென்னானாகித் தான் முற்படுவான்; ஆதலால், இன்னானென்க. (உ௯அ)

(உ௯௯) பருத்தி வேலிச் சீறூர் மன்னன்
உழுத்தத ருண்ட வோய்நடைப் புரவி
கடன்மண்டு தோணியிற் படைமுகம் போழ
நெய்ம்மிதி யருந்திய கொய்சுவ லெருத்திற்
றண்ணடை மன்னர் தாருடைப் புரவி
அணங்குடை முருகன் கோட்டத்துக்
கலந்தொடா மகளிரி னிகழ்ந்துநின் றவ்வே.

(பி - ம்.) 2 'உழுத்தருண்ட', 'உழுத்ததழுண்ட' 4 'யருத்த கொய', 'யருந்தக்கொய்', 5 'கோணடை', 'தண்டை மன்னர் தாருடைக்கலிமான்' 7 'கலங்கொடா...நின்றனவே'

திணை - நொச்சி; துறை - குதிரைமறம்.

பொன்முடியார்.

(கு - ரை.) 1. பருத்திவேலி; புறநா. 324 : 7; "பன்னல் வேலியிப் பணைநல் லூரே" (புறநா. 345 : 20).

2. உழுத்ததர் - உழுந்தின் சக்கை; உழுத்தரென்ற பாடத்திற்கு உழுந்தென்று பொருள்கொள்க.

3. தோணியின் - தோணியைப்போல; போழ - பிளந்துசெல்ல; "வருபடை போழ்ந்து", "மான் மேல்......கரைபொரு முந்நீர்த் திமிலிற்போழ்ந்து" (புறநா. 295 : 4, 303 : 2 - 7).

புரவி (2) போழ (3).

2 - 3. "நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி, பணைநிலைப் புரவியி னணைமுதற் பிணிக்கும்" (பட்டினப். 30 - 31); "செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர், நெறிதரு புரவியின் மறிதருந் திமில்" (யா. வி. சூ. 86, மேற்.).

4. நெய்ம்மிதி - நெய்யை வார்த்து மிதித்த உணவை; "நெய்ம்மிதி கவளம்" (பெரும்பாண். 394); குதிரை நெய்ம்மிதி யருத்தல் : "கொய்ம் மயி ரெருத்தம் பிணர்படப் பெருகி, நெய்ம்மிதி முனைஇய கொழுஞ் சோற்றார்கை...வாமான்" (அகநா. 400 : 6 - 13), "கொய்சுவற் புரவி" (அகநா. 154 : 11, சீவக. 3049). எருத்து - புறக்கழுத்து.

5. தார் - கிண்கிணிமாலை.

6. அணங்குடை முருகன் - வருத்துதலையுடைய முருகன்; "செவ் வேள்...மராத்தண்சாயை நின்றணங் குந்தைய னீநிற்க சாரலிலே" (தஞ்சை. 132). கோட்டம் - கோயில்; முருகன் கோட்டம் - குமர கோட்டம்.

7. கலந்தொடாமகளிர் - பாண்டங்களைத் தொடுதற்குரிய தூய்மை யில்லாத மகளிர்.

புரவிகள் (5) நின்ற (7)

மு. 'குதிரைநிலை' என்பர்; தொல். புறத்திணை. சூ. 17, ந. (உ௯௯)

(௩௦௦) தோஅ தோஅ வென்றி தோலொடு
துறுகன் மறையினு முய்குவை போலாய்
நெருந லெல்லைநீ யெறிந்தோன் றம்பி
அகற்பெய் குன்றியிற் சுழலுங் கண்ணன்
5 பேரூ ரட்ட கள்ளிற்
கோரிற் கோயிற் றேருமா னின்னே.

(ந - ம்.) 2 'துறுகண்மறை 4 'கற்பெய்' 6 'போறரிற்கோரிற் றேரு' 'கோரிற்கோரிற்'

திணை - தும்பை; துறை - தானைமறம்.

அரிசில்கிழார்.

(கு - ரை.) 1. தோல் தா தோல் தா என்றி - கேடகத்தைக் கொடு, கேடகத்தைக் கொடு என்கின்றாய்.

2. துறுகல் - குண்டுக்கல்; ஐங்குறு. 210, 239; துறுகல்லிலே உன்னை மறைத்துக் கொள்வாயாயினும் பிழைப்பாய்.

'கு' என்பது சாரியையாக வந்ததற்கு 'உய்குவை போலாய்' என்பது மேற்கோள்; நன். சூ. 243, மயிலை.; நன். வி. சூ. 244.

3. நெருநலெல்லை - நேற்றைப்பகலில்; "நெருந லெல்லை யேனற் றோன்றி" (அகநா. 32 : 1).

3 - 4. நேற்றுப்பகலில் நின்னாலே எறியப்பட்டவனுடைய தம்பி, அகலினிடத்துப் பெய்த குன்றிமணியைப்போலக் கோபத்தாற் சுழலுங் கண்களை யுடையவனாகி; வென்றிக் கணத்தை விடுத்தானகன் மீது பெய்த, குன்றிக் கணம்போற் சுழல்கண்ணழல் கொப்பு ளிப்பச் சென்று" (திருவிளை. 5 : 30).

குடிகோள்பற்றி வந்த வெகுளிக்கு மேற்கோள்; தொல். மெய்ப் பாடு. சூ. 10, பேர்.

6. ஓரிற்கோயிற்...னின்னே - ஒரு வீட்டினுள்ளே கட்கோயைத் தேடுவதுபோல நின்னைத் தேடுகின்றான்; கோய் - கள் முகக்கும் பாத்திரம்; "கோய்வாயிற் கீழுயிர்க்கீ துற்றுக் குரைத்தெழுந்த, நாய் வாயு ணல்லதசை" (சிறுபஞ்ச. 17); "சாத்துக் கோயும் பூத்தகைச் செப்பும்" "கோலக் கோயுட் கொண்டுநிறை யமைத்த, சூடமை சாந்தும்" (பெருங். 3. 5 : 78, 9 : 43 - 4); "கோய்சொரி நறவ மென்னத் தண்புனலுகுக்குங் குன்றின்" (கம்ப. சேதுபந்தன. 25).

5 - 6. தொல். உவமம். சூ. 37, பேர். மேற். (௩௦௦)

(௩௦௧) பல்சான் றீரே பல்சான் றீரே
குமரி மகளிர் கூந்தல் புரைய
அமரி னிட்ட வருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான் றீரே
முரசுமுழங்கு தானைநு மரசு மோம்புமின்
ஒளிறேந்து மருப்பினுங் களிறும் போற்றுமின்
எனைநாட் டங்குநும் போரே யனைநாள்
எறியா ரெறிதல் யாவண தெறிந்தோர்
எதிர்சென் றெறிதலுஞ் செல்லா னதனால்
அறிந்தோர் யாரவன் கண்ணிய பொருளே
பலமென் றிகழ்த லோம்புமி னுதுக்காண்
நிலனளப் பன்ன நில்லாக் குறுநெறி
வண்பரிப் புரவிப் பண்புபா ராட்டி
எல்லிடைப் படர்தந் தோனே கல்லென
வேந்தூர் யானைக் கல்ல
தேந்துவன் போலான்ற னிலங்கிலை வேலே.

(ந - ம்.) 5 'தானையு மரசும்' 7 'நாட்டாகு' 'யனைநான்' 9 'சொல்லானதனுல்' 10 'அறிந்தோ ராயவன்' 14 'எல்லிடப் பட்டாதந்தோனே' 16 'போலானினங்கிலை'

திணையும் துறையும் அவை.

ஆவூர்மூலங்கிழார்.

(கு - ரை.) 1. சான்ரேர் - போர் வீரர்; "தேர்தர வந்த சான்ரே ரெல்லாம்" (புறநா. 63) என்பதும் "சான்ரேர் மெய்ம்மறை" (பதிற். 14 : 12) என்னுமிடத்து 'ஈண்டுச் சான்ரேரென்பது போரில் அமைதி யையுடைய வீரரை' என்னும் அதன் உரையும் அறிதற்பாலன.

2 - 3. மணஞ்செய்யப் பெருத கன்னியரின் கூந்தல் ஓராடவ ராலும் தீண்ட வொண்ணுமையால், பகைவராற் றீண்டமுடியாத முள் வேலிக்கு அஃது உவமை கூறப்பெற்றது.

4. கல்லென்பாசறை - கல்லென்னும் ஓசைபட ஒலிக்கின்ற படை வீடு.

5. "முரசுமுழங்குதானை...மூவர்" (புறநா. 35 : 3 - 4).

6. "ஒளிறேந்து மருப்பிற் களிறு" (புறநா. 335 : 10; நற். 284 -9).

7. எனைநாள் - எத்தனை நாள்.

8 - 9. தன்னை எறியாதாரை எறிவதென்பது எங்குள்ளது? எதிர்ந் தோரையும் எதிர்த்து எறிதல் செய்யானுகச் செய்தே எறியாரை இவனெறிதல் யாண்டுளது? இல்லை யென்றபடி.

10. அவன் கருதிய காரியத்தை அறிந்தவர் யாவர்?

11. பலம் - பலராகவுள்ளேம்; புறநா. 79 : 5 - 6; 'வீரரல்லாதார் பலர் திரண்டு ஆர்த்தால் அதற்கு வீரனஞ்சான்' (குறள், 763, பரிமேல்.) என்பதும், "மறுமனத்த னல்லாத மாநலத்த வேந்த, னுறுமனத்த னுகி யொழுகிற் - செறுமனத்தார், பாயிரங் கூறிப் படைதொக்கா லென் செய்ப, ஆயிரங் காக்கைக்கோர் கல்" (பழ. 165) என்பதும், "தடத் திடைக் காக்கை யொன்றே யாயிரங் கோடி கூகை, இடத்திடை யழுங்கச் சென்ருங் கின்னுயிர் செகுத்த தன்றே" (சீவக. 1927) என்பதும் இவ்வடியின் கருத்தை வலியுறுத்தும்.

13. பரி - நடை; "வளிதொழி லொழிக்கும் வண்பரிப் புரவி" (புறநா. 304 : 3).

14. எல் - இரவு. 16. ஏந்துவன் போலான் - ஏந்தான்.

15 - 6. யானைப்போர்க்கு வேல் உரித்தென்பர்; "மேல்வருங் களிற் ருெடு வேறுரந்து", "வேலினட்டகளிறு", "கறையடி யானைக் கல்ல, துறைகழிப் பறியா வேலோன்" (புறநா. 274, 302, 323); "ஒன்ரு யினும் பலவாயினு மோரோச்சினு ளெறிய, வென்ருயின மதவேழமு முளவோவென வினவிப், பொன்ருழ்வரைப் புலிப்போத்தெனப்

புனைதார் மின்றுருர்ப்பச், சென்றுணிகல் களிறுயிர மிரியச்சின வேலோன்"
(சீவக. 2262).

13 - 6. "கரிமேலோன் தொட்டது கழலே கையது வேலே, கட்டி யதுவும் களிறே...........யானை காமினவன் பிறிதெறி யலனே." இச்செய்யுள் புறத்திரட்டிற் கண்டது.

மூ. பொருளின்றியுய்த்த பேராண்பக்கத்தின்பாற் படுமென்பர்; தொல். புறத்திணை. சூ. 8, ந. (௩௦௧)

(௩௦௨) வெடிவேய் கொள்வது போல வோடித்
தாவு புகளு மாவே பூவே
விளங்கிழை மகளிர் கூந்தற் கொண்ட
நரந்தப் பல்காழ்க் கோதை சுற்றிய
ஐதமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ்க்
கைவார் நரம்பின் பாணர்க் கோக்கிய
நிரம்பா வியல்பிற் கரம்பைச் சீறூர்
நோக்கினர்ச் செகுக்குங் காளை யூக்கி
வேலி னட்ட களிறுபெயர்த் தெண்ணின்
விண்ணவர் விசும்பின் மீனும்
தண்பெய லுறையு முறையாற் றுவே.

(பி - ம்.) 2 'தாவ வுகளும்' 4 - 5 'சுற்றி யைதமை' 6 'கைகவர் நரம்பின்' 8 'யூக்கு' 9 'வேலினிட்ட'

திணை - அது; துறை - குதிரைமறம்.

வெறிபாடிய காமக்கண்ணியார் ((பி - ம். வெறிபாபாடிய காமக் கணியார்).

(கு - ரை.) 1. வெடிகொள்ளல் - மேல் எழல்.

2. தாவுபு - தாவி. உகளும் - துள்ளும். மா - குதிரை. பூ - பொற் பூக்கள்.

1 - 2. வளைத்துவிட்ட மூங்கில் மேலே விரைந்தெழுதல் குதிரை ஓடித் தாவிச் செல்லற்கு உவமம்; "விட்ட குதிரை விசைப்பி னன்ன, விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்" (குறுந். 74 : 1 : 2).

3. மகளிர் - இங்கே விறலியர்.

2 - 3. பூக்கள் கூந்தலிற் கொள்ளப்பட்டன.

4. நரந்தம் - நாரத்தை மலர்; குறிஞ்சிப். 94. காழ் - வடம்.

5. ஐது அமை - அழகிதாக அமைந்த. பாணி - தாளம். வணர் - வளைவு. கோடு - மருப்பென்னும் உறுப்பு.

4 - 5. நரந்த மலர்களாலாகிய மாலை சுற்றிய யாழ். யாழின் கோட்டில் மாலையைச் சுற்றுதல் மரபு; "அன்ன மாலையை யாழிடைப் பிணித்தய னுலகம், கன்னி மீடலும்" (கம்ப. அகலிகை. 6).

6. வார்தல் - எட்டு வகை இசைக்கரணங்களுள் ஒன்று; அது சுட்டு விரலாற் செய்யப்படும் ஒரு தொழிலென்பர் (சிலப். 7 : 1, அரும்பத.) நரம்புகளைக் கூடத்தழுவலென்பர் நச்சினார்க்கினியர் (பொருந. 23) ஒக்கிய - அறுதியாகக் கொடுத்தவை.

5 - 6. "வணர்கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ, உணர் வோர் யாரென் னிடும்பை தீர்க்கெனக், கிளக்கும் பாண" (புறநா. 155 : 1 - 2).

ஒக்கிய (6) சீறூர் (7)

8. கோபித்துப் பார்த்த பகைவர்களைக் கொல்லுகின்ற வீரன்; "எள்ளுநர்ச் செகுக்குங் காளை" (புறநா. 303 : 3). ஊக்கி - மேற் கொண்டு.

9. வேலின் அட்ட களிறு : 301 : 15 - 6, குறிப்புரை.

10. விண் - மேகம். இவர்தல் - பரத்தல். மீன் - நட்சத்திரம்.

11. உறை - மழைத்துளி.

10 - 11. மீன்களும் மழைத் துளிகளும் உறையிடப்போதா; புறநா. 34 : 20 - 23, குறிப்புரை. "யானைத் தூமருப் பயின்ற வெண் செப், பந்தரத் தலர்ந்த பன்மீ னெனைத்துள வனைத்து மாதோ" (சீவக. 3048). (௩0௨)

(௩0௩) நிலம்பிறக் கிடுவது போற்குளம்பு கடையூஉ
உள்ள மொழிக்குங் கொட்பின் மான்மேல்
எள்ளுநர்ச் செருக்குங் காளை கூர்த்த
வெந்திற லெஃக நெஞ்சுவடு விளைப்ப
ஆட்டிக் காணிய வருமே நெருநை
உரைசால் சிறப்பின் வேந்தர் முன்னர்க்
கரைபொரு முந்நீர்த் திமிலிற் போழ்ந்தவர்
கயந்தலை மடப்பிடி புலம்ப
இலங்குமருப் பியானை யெறிந்த வெற்கே.

(பி - ம்.) 1. 'போற்குளங்குடையூ', 2 'கொடைபின் மான 4 'வெந்தெறல்' 5 'வாடிக் காணிய', 'வாட்டிடக்காணிய' 6 'வேந்தன்' 6 - 7 'வேந்தர்தா முன்னர்க் கரைபொரு முன்னர்' 7 'கங்கரைபொரு முன்னீர்' 7 'திரையிற்' 9 'இடுமருப்பியானை'

திணையும் துறையும் அவை.

எருமை வெளியனார்.

(கு - ரை.) 1. பிறக்கு - பின். கடையூஉ - செலுத்தி; "நிலம்பிறக் கிடுவபோலுங் கொய்சுவற் புரவி" (சீவக. 3049).

2. மனத்தின் விசையையும் ஒப்பன்றென்று நீக்குகின்ற கதி விசேடத்தையுடைய குதிரையின்மேல்; "உள்ளம் போல வுற்றுழி

யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான" (தொல். கற்பு. சூ. 53); "மானுருவாகநின் மனம்பூட் டினையோ" (அகநா. 384 : 10); பகைவருடைய ஊக்கத்தை ஒழித்தற்குக் காரணமான சுழற்சியையுடைய குதிரையென்றலுமாம்.

3 - 4. கூர்த்த எஃகமெனக் கூட்டுக; எஃகம் - வேல்.

5. ஆட்டி - அசைத்து; திரித்தென்றுமாம். காணிய வரும் - காணும் பொருட்டு வருவான். நெருநை - நேற்று.

6. உரைசால் - புகழ் அமைந்த; "உரைசால் சிறப்பி னரைசு விழைதிரு", "உரைசால் சிறப்பின், மன்னன் மாறன்" (சிலப். 2 : 1, 8 : 5 - 6).

7. திமிலின் - தோணிபோல. போழ்ந்து - படையைப் பிளந்து; புறநா. 299 : 3.

8. கயந்தலை - மெல்லிய தலை; "கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணிச், சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு" (அகநா. 121 : 5 - 6); "கயந்தலை மடப்பிடி" (அகநா. 165, 202; மலைபடு. 307; கலித். 23 : 10).

'கய' என்னும் உரிச்சொல் மென்மையை உணர்த்துதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 26, சே.

8 - 9. அவ்வரசருடைய பெண் யானைகள் துணையிழப்ப விளங்குகின்ற கொம்பினையுடைய களிற்றி யானைகளைக் கொன்ற என்பொருட்டு; புலம்ப - வருந்தவென்னலுமாம்; "புல்லார் பிடி புலம்பு" முத். 28.

(௩௦௩)

(௩௦௪) கொடுங்குழை மகளிர் கோதை சூட்டி
நடுங்குபனிக் களைஇயர் நாரரி பருகி
வளிதொழி லொழிக்கும் வண்பரிப் புரவி
பண்ணற்கு விரைதி நீயே நெருநை
எம்முற் றப்பியோன் றம்பியொ டொராங்கு
நாளைச் செய்குவெ னமரெனக் கூறிப்
புன்வயி றருத்தலுஞ் செல்லான் பன்மான்
கடவு மென்ப பெரிதே யதுகேட்டு
வலம்படு முரசின் வெல்போர் வேந்தன்
இலங்கிரும் பாசறை நடுங்கின்
றிரண்டா காதவன் கூறிய தெனவே.

(பி - ம்.) 1 'சூடி' 2 'நடுங்குமணி களையார் நாரி பருகி', நடுங்குமணி களையா நாளரிபருகி', 'பனிக்கசாஅய்' 6 'நாடனைச்' 'செய்குவமமரெனக்' 'செய்குவனமரெனக்' 7 'புன்மயிருகுத்தலுஞ் செய்யான் வன்மான்', 'புன்மையிற்', 'புன்மயிருருத்தலும்' 'பண்மாண்' 9 'முரசில் வெல்', 'வேந்த ரிலங்கிரும்'

திணையும் துறையும் அவை.

அரிசில்கிழார்.

(கு - ரை.) 1. சூட்டி - சூட்ட.

2. குளிர்நீங்க வீரபானமாகிய மதுவைக் குடித்து; மதுவுக்கு வெம்மை செய்தல் இயல்பு; "வெப்புடைய மட்டுண்டு", "வெங்கட் டொலைச்சியும்", "இன்கடுங் கள்ளின்", "வெங்கட்டேறல்" (புறநா. 24 : 5, 29 : 15, 80 : 1, 170 : 12); "உண்ணமது", "உக்கிரஹூறல்" (பெருங். 1. 38 : 60, 2. 2 : 180); பரி. 7 : 61 - 2.

3. காற்றைத் தொழிலொழியச் செய்கின்ற வளவிய செலவை யுடைய குதிரை; என்றது, அதனினும் விரைய நடக்கும் குதிரை யென்றபடி; "காலியற் புரவி", "வளிநடந் தன்ன வாச்செல லிவுளி", "வெவ்விசைப் புரவி வீசுவளி யாக" (புறநா. 178 : 2, 197 : 1, 369 : 7); "காற்கடுப் பன்ன கடுஞ்செல லிவுளி", 'வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ, மானுரு வாக" (அகநா. 224 : 5, 384 : 9 -10); "காலியக் கன்ன கதழ்பரி" (மதுரைக். 440).

4. பண்ணற்கு - சமைத்தற்கு. விரைதி - விரைவாய்.

5. எம்முன் தப்பியோன் தம்பியொடு - எம் தமையனைக் கொன்ற வனுடைய தம்பியுடன். ஒராங்கு - ஒருபடியாக; "நால்வேறு நனந்தலை யோராங்கு நந்த" (பதிற். 69 : 16); கலித். 142 : 6.

6. நாளை யான் அமர்செய்து அவனைக் கொல்வேன்.

7. பன்மான் - ஆராய்ந்த குதிரை.

8. கடவும் - செலுத்தும். என்ப : அசை.

7 - 8. பகையை வென்றபின்பே உண்ணுங்கருத்தினனுதலால் இவ் வாறு கூறினர்; "காலை முரச மதிலியம்பக் கண்கனன்று, வேலை விறல் வெய்யோ னேக்குதலும் - மாலை, அடுக மடிசிலென் றம்மதிலு ளிட்டார், தொடுகழலார் மூழை துடுப்பு" (பு. வெ. 117) என்பதையும், 'அம் மதிலுள் இட்டார், இதனை அழித்து இன்றுபோய் உண்பே மென்று' என்னும் அதன் விசேடவுரையையும் பார்க்க.

9. வலம்படு முரசு - வெற்றியுண்டாதற்குக் காரணமாகிய முரசு; "வலம்படு வியன்பணை" (பதிற். 17 : 5) என்பதும், 'போர்செய்து வருந்தாமற் பகைவர் வெருவியோட முழங்கி அரசனுக்கு வென்றி தன்பாலே படநின்ற முரசம்' என்னும் அதன் உரையும் ஈண்டு அறியற் பாலன.

11. கூறியது - சபதம்; வஞ்சினம் கூறுதல் ஒன்றுமொழிதலென்று கூறப்படுதலும், "வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று" (பதிற். 9. பதி.) என்பதும், 'இரண்டாகாதவன் கூறியது' என்பதும் சபதமென்று பொருள்படுதலை வலியுறுத்தும்.

9 - 11. அவன் கூறியது இரண்டாகாதென்று அரசனது பெரிய பாசறை நடுங்கியது. (௩௦௪)

(௩௦௫) வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
5 ஏணியுஞ் சீப்பு மாற்றி
மாண்வினை யானையு மணிகளைந் தனவே.

(பி - ம்.) 1. 'மருங்கின்', 'மருங்கினுயவமது வேளாசன்' 4 'சொல்லியது சொல்லோ' 6 'களைந்தனனே', 'களந்தனனே'

திணை - வாகை; துறை - பார்ப்பனவாகை.

மதுரைவேளாசான்.

(கு - ரை.) 1. வயலைக்கொடி - பசலைக்கொடி. மருங்குல் - இடை.

2. வருந்துதலையுடைய ஊர்ந்து செல்லுகின்ற நடையினையுடைய இளம் பருவத்து அந்தணன்; "ஒல்லெனீர் ஞாலத் துணர்வோ விழுமிதே, நல்லிசை முச்செந்தீ நான்மறையோன் - செல்லவும், வென்றன்றி மீளா விறல்வேந்தர் வெம்பகை, என்றன்றி மீண்ட திலர்" (பு. வெ. 172).

தன்மையென்னும் மெய்ப்பாட்டிற்கு இவ்வடி மேற்கோள்; 'தன்மையாவது - சாதியியல்பு; பார்ப்பார் அரசர் இடையர் குறவரென்றின்னோர் மாட்டு ஒருவரையொருவர் ஒவ்வாமற் கிடக்கும் இயல்பு' (தொல். மெய்ப்பாடு. சூ. 12, இளம்.).

1 - 2. அகநா. 337 : 7 - 9.

3. எல்லி - இரவு. நில்லாது புக்கு - வாயில்காவலனுற் சொல்லி விடாதே அரசனிடம் போய்; "அருமறை நாவி னந்தணர்க் காயினும், அடைபா வாயிலவ னருங்கடை குறுகி" (சிறுபாண். 204 - 6).

4. சொல்லிய சொல்லோ சில : "பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற, சிலசொல்ல றேற்ரு தவர்" (குறள், 649).

5. சீப்பு - கதவுக்கு வலியாக உள்வாயிற்படியிலே நிலத்தேவீழ இடும் மரம்; சிலப். 15 : 215, அடியார். இஃது ஒருவகைத் தாழ்.

6. மாண்வினையானை - மாட்சிமைப்பட்ட தொழிலையுடைய யானை; மாட்சிமையாவது, போரிலே எதிர்த்தாலன்றி மற்ற இடத்து ஒருயிரையும் துன்புறுத்தாமை; "வினைநவில் யானை", "தொழினவில் யானை" (பதிற். 82, 84). மணி - யானையின் இரு பக்கத்தும் அணியப் படும் மணி; "மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னு" (இன்னா. 14).

மு. அந்தணன் தூது சென்றதற்கும் (தொல். அகத்திணை. சூ. 28, இளம்; 26, ந.; நம்பி. சூ. 75; இ. வி. சூ. 443, உரை), தூதருரை கேட்ட அகத்துழிஞையோன் திறம் கண்டோர் கூறியதற்கும் (தொல். புறத்திணை. சூ. 12, ந.) மேற்கோள். (௩௦௫)

(௩௦௬) களிறுபொரக் கலங்கு கழன்முள் வேலி
அரிதுண் கூவ லங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்த லொண்ணுத லரிவை
நடுகற் கைதொழுது பரவு மொடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே யென்னையும்
ஒ.................. ....வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே.

(பி. ம்.) 1. 'கலங்கிக்', 'கன்முன்'

திணை - அது; துறை - மூதின்முல்லை.

அள்ளூர் நன்முல்லையார்.

(கு - ரை.) 1. கழல் - கழற்கொடி. முள்வேலி : பெரும்பாண். 154, 184 - 5; முல்லை. 27.

2. கூவல் - கிணறு.

1 - 2. யானை உழக்குதலாற் கலங்கிய கூவல்; முள்ளையுடைய கழற்கொடியாலாகிய வேலியையுடைய சீறூர்.

3. தழைத்த மெல்லிய கூந்தலையும் ஒள்ளிய நெற்றியையும் உடைய அரிவை; ஒலிமென் கூந்தல்'' (புறநா. 146 : 9; குறுந். 225).

4. நடுகல்லைத் தொழுதல் மரபு; "அடும்புகழ் பாடி யழுதழுது நோனு, திடும்பையுள் வைகிற் றிருந்த - கடும்பொடு, கைவண் குருசில் கற்கைதொழூஉச் செல்பாண, தெய்வமாய் நின்ருன் றிசைக்கு'' பு. வெ. 252). பரவும் - துதிப்பாள். ஒடியாது - ஒழியாது; தவிராது.

5. யான் விருந்தைப் பெறுவேனாக; தில் : விழைவின்கண் வந்தது. என் ஐயும் - என் கணவனும்.

7. பகை எய்துக வென்று வேண்டியது, தன்கணவன் நிச்சயமாக வெல்லுவானென்று துணிந்து; புறநா. - 172 : 11, உரை.

எனப் (7) பரவுமென்க (4).

இது கண்டோர் கூற்று. (௩௦௬)

(௩௦எ) ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
குன்றத் தன்ன களிற்றெடு பட்டோன்
வம்பலன் போலத் தோன்று முதுக்காண்
வேனல் வரியணில் வாலத் தன்ன
கான வூகின் கழன்றுகு முதுவீ
அரியல் வான்குழற் சுரியற் றங்க
நீரும் புல்லு மீயா துமணர்
யாருமி லொருசிறை முடத்தொடு துறந்த

வாழா வான்பக டேய்ப்பத் தெறுவர்
பேருயிர் கொள்ளு மாதோ வதுகண்டு
வெஞ்சின யானை வேந்தனு மிக்களத்
தெஞ்சலிற் சிறந்தது பிறிதொன் றில்லெனப்
பண்கொளற் கருமை நோக்கி
நெஞ்சற வீழ்ந்த புரைமை யோனே.

(பி - ம்.) 3. 'வம்பல போலத்' 7 'மீயா துமன்ற' 9 'தெறுவவர்', 'தெறுவா' 10 'பேருயிர்க், 'மாதோவ......கெகள'.

திணை - தும்பை; துறை - களிற்றுடனிலை.

....

(கு - ரை.) 1. மு. புறநா. 235 : 17; குறுந். 176; பற்றுக்கோடாகிய என் தலைவன் எங்கே உள்ளானோ?

2. பாட்டோனென்பது சுட்டுப்பொருளது.

3. வம்பலன் - அயலான். உதுக்காண் - அவ்விடத்தே பார்; "எவன்விரைந்து சேறி யுதுக்காண்" (கலித். 108 : 39).

4. வேனல் - வேனிற்காலம். வரியணில் - முதுகில் மூன்று வரிகளை யுடைய அணிற்பிள்ளை; "மூவரி யணில்" (தொல். மரபு. சூ.6) வாலம் - வால்.

5. ஊகு - ஊகம்புல். வீ - பூ; எழுவாய்.

4 - 5. அணில் வால் ஊகம் புல்லிற்கு உவமை.

7. உமணர் - உப்பு வாணிகர்.

8. யாருமில் ஒரு சிறை - ஒருவரும் இல்லாத ஒரு பக்கத்தில்.

9. பகடு - எருது. தெறுவர் - பகைவர்.

10. பெரிய உயிர்களைக் கவருகின்றான்.

பட்டோன் (2) பேருயிர் கொள்ளும் (10).

மு. தும்பைத் திணைத் துறைகளுள், 'களிறெறிந்தெதிர்ந்தோர் பாடு' என்றதற்கு மேற்கோள். தொல். புறத்திணை. சூ. 14, இளம். (௩௦௭)

(௩௦௮) பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரற் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண
சீறூர் மன்னன் சிறியிலை யெஃகம்
வேந்தூர் யானை யேந்துமுகத் ததுவே
வேந்துடன் றெறிந்த வேலே யென்னை
சார்ந்தா ரகல முளங்கழிந் தன்றே

உளங்கழி சுடர்ப்படை யேந்திநம் பெருவிறல்
ஓச்சினன் றுரந்த வாலே மற்றவன்
புன்றலே மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத் தனவே.

(பி - ம்.) 6 'வேலேன்னே' 8 - 10 'பெருவ...வாபுன்றலேமடப்பிடி' 9 'மற்றவர்'

திணை - வாகை; துறை - மூதின்முல்லே.

கோவூர்கிழார்.

(கு - ரை.) 1 - 2. "பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின், இன் குரற் சீறியாழ்" (சிறுபாண். 34 - 5); "பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பிற், றொடையமை கேள்வி" (பெரும்பாண். 15 - 6); "பொன்வார்ந் தனயாழி னரம்புளர்ந்து" (பாகவதம், 10. கோவத்தன. 39); கலித் 33 : 23.

1 - 3. பொற்கம்பியினே ஒத்த முறுக்கு அடங்கின நரம்பினேயும், மின்னலே ஒத்த தோலினேயும் மிஞிறென்னும் வண்டுச்சாதியின் குரல் போன்ற ஓசையையுமுடைய சிறிய யாழ்க்கல்வியின் நன்மை நிறைந்த விருப்பம் வந்த பாண!

4. சீறூர் மன்னன் - குறுநிலமன்னன். எஃகம் - வேல்; எழுவாய்.

5. வேந்தன் ஊருகின்ற. ஏந்துமுகம் – எடுத்த முகம்.

4 - 5. எஃகம் முகத்தது : "வேந்தூர் யானேக் கல்ல, தேந்துவன் போலான்ற னிலங்கிலே வேலே" (புறநா. 301 : 15 - 6).

6 - 7. அரசன் கோபித்தெறிந்த வேல் என் தலேவனது சந்தனம் பூசிய மார்பினுள்ளே சென்றது; புறநா. 63 : 9.

8 - 9. நம் பெருவிறல், தன் மார்பின் உட்சென்ற அவ்வொளி பொருந்திய வேற்படையைப் பறித்து எடுத்துச் செலுத்தி ஓட்டிய காலத்து; பெருவிறல் - மிக்க வலியை யுடையவன்.

9 - 11. பிடி - பெண்யானே; அது வேந்தனூர்தி. அவ்விடத்துப் புல்லிய தலேயையுடைய பிடி நாணக் களிறுகளெல்லாம் புறங் கொடுத்து ஓடின.

மு. ஆரமரோட்டலென்னுந் துறைக்கு மேற்கோள் காட்டி, 'இது சீறூர் மன்னன் வேந்தனேப் புறங் கண்டது' என்பர்; தொல். புறத் திணே. சூ. 5, ந. (௩௦௮)

(௩௦௯) இரும்புமுகஞ் சிதைய நூறி யொன்னூர்
இருஞ்சமங் கடத்த லேஞேர்க்கு மெளிதே
நல்லரா வுறையும் புற்றம் போலவும்
கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்

மாற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
உளனென வெரூஉ மோரொளி
வலனுயர் நெடுவே லென்னைகண் ணதுவே.

(பி - ம்.) 1 'முகளு...யொன்' 6 'உளனேவரூஉம்', 'உளனென வெரூஉம்' 7 'லென்னைக்கண', 'லென்னைக் கண்ணதுவே'

திணை - தும்பை; துறை - நூழிலாட்டு.

மதுரையிளங்கண்ணிக் கௌசிகனார்.

(கு - ரை.) 1 - 2. பகைவருடைய படைக்கலங்களின் முகஞ்சிதையும்படி தங்கள் படைக்கலங்களால் அவருடைய போரை வெல்லுதல் மற்றவர்க்கும் எளிதாகிய காரியம். இரும்பு: படைக்கலத்துக்கு ஆகு பெயர். ஏனோர் - ஏனையோரென்பதன் விகாரம்.

3. நல்லரா - நாகம்; "நாம நல்லரா" (அகநா. 72) எனச் செய்யுளிலும், 'நல்ல பாம்பு' என வழக்கிலும் உண்மை அறிக. இஃது உறையுமிடத்தைப் பிறர் அஞ்சி யணுகாரென்பது, "வரிமிடற், றரவுறை புற்றத் தற்றே நாளும், புரவலர் புன்க ணோக்கா திரவலர்க், கருகா தீயும் வண்மை, உரைசா னெடுந்தகை யோம்பு மூரே" (புறநா. 329 : 5 - 9) என்பதனாலும் விளங்கும்.

4. கொல்லுகின்ற இடபம் திரிகின்ற மன்றம்; மன்றம் - பசுக்கள் தங்கும் பொதுவிடம்; "கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும், புல்லாளே யாய மகள்; (கலித். 103 : 63 - 4).

6. ஒளி - பிறர்க்கு அச்சமுண்டாதற்குக் காரணமான நன் மதிப்பு; ஒளியென்பதற்குப் பரிமேலழகர் (குறள், 698) எழுதிய விசேடக் குறிப்பும், "உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி, கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" (சீவக. 248) என்பதும் இங்கே அறியற்பாலன.

5 - 6. குணமடியாகத் தோன்றிய வினைக்குறிப்புச் சொற்கள் பல விகற்பப்பட்டு வருமென்று கூறி, "மாற்றருந் துப்பின் மாற்றோர் பாசறையுளன்" என்பதை ஒருவகைக்கு மேற்கோளாகக் காட்டினர்; நன். வி. சூ. 321.

7. வென்றோர் வேலை யுயர்த்தல் மரபு; "வென்று...உயர்கநும் வேலே" (புறநா. 58); 'வெங்களத்து வேலுயர்த்த வேந்து" (பு. வெ. 199).

5 - 7. மாற்றுதற்கரிய வலியொடு பகைவர் பாசறைக்கண்ணே, இவன் இருக்கின்றானென்று வெருவுதற்குக் காரணமாகிய ஒப்பற்ற ஒளி, வெற்றியால் உயர்த்தும் நெடிய வேற்படையையுடைய என் தலைவனிடத்தேயுள்ளது. 6 - 7. ஒளி என்னை கண்ணது.

மு. "பெரும்பகைதாங்கும் வேலினானும்" என்பதனுரையில் சான்றோர் பெரும்பாலும் வேற்படையையே சிறப்பித்துக் கூறுவ

ரென்று கூறி, இதனை மேற்கோள் காட்டினர்; தொல். புறத்திணை. சூ. 21, ந. (௩௦௯)

(௩௧௦) பால்கொண்டு மடுப்பவு முண்ணா னாகலிற்
செரூஅ தோச்சிய சிறுகோ லஞ்சியொ
டுயவொடு வருந்து மன்னே யினியே
புகர்நிறங் கொண்ட களிறட் டானான்
முன்னாள் வீழ்ந்த வுரவோர் மகனே
உன்னில னென்னும் புண்ணொன் றம்பு
மானுளை யன்ன குடுமித்
தோன்மிசைக் கிடந்த புல்லண லோனே.

(பி - ம்.) 8 ‘புல்லனலோனே’

திணையும் துறையும் அவை.

பொன்முடியார்.

(கு - ரை.) 1. மடுப்ப - உண்பிக்க.

2. அஞ்சி - ஒரு குறுநில மன்னன். ஒடு - ஆல்.

1 - 2. “பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால், விரிகதிர்ப் பொற் கலத் தொருகை யேந்திப், புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோ, லுண்ணென் றோக்குபு புடைப்ப” (நற். 110 : 1 - 4).

3. உயவு - கவலை. இனி - இப்பொழுது.

4. ஆனான் - அமையானாகி. 5. முன்னாள் - முதல்நாள்.

6. புண்ணில் ஒன்றிய அம்பை யான் உன்னிலனென்பான்.

7. புறநா. 273 : 3; ஐங்குறு. 202.

8. தோல் - யானை; கேடகமுமாம். அணல் - தாடி; “மையணற் காளை” (புறநா. 83). (௩௧௦)

(௩௧௧) களர்ப்படு கூவற் றோண்டி நாளும்
புலைத்தி கழீஇய தூவெள் ளறுவை
தாதெரு மறுகின் மாசுண விருந்து
பலர்குறை செய்த மலர்தா ரண்ணற்
கொருவரு மில்லை மாதோ செருவத்துச்
சிறப்புடைச் செங்கண் புகையவோர்
தோல்கொண்டு மறைக்குஞ் சால்புடை யோனே.

(பி - ம்.) 3 ‘மறுகிறன’ 7 ‘சால்புடையோரே’.

திணை - அது; துறை - பாண்பாட்டு.

ஔவையார்.

(கு - ரை.) 1. களர் - உவர்நிலம். கூவல் - கிணறு; "பூவற் படுவிற் கூவற் றோண்டிய" (புறநா. 319).

2. புலைத்தி : வண்ணாத்தி : "உடையோர் பான்மையிற் பெருங்கை தூவா, அறனில் புலைத்தி" (நற். 90 : 2 - 3); "நலத்தகைப் புலைத்தி பசைதோய்த் தெடுத்துத், தலைப்புடை போக்கித் தண்கயத் திட்ட, நீரிற் பிரியா" (குறுந். 330); "ஆடைகொண் டொலிக்குநின் புலைத்திகாட் டென்றாளோ" (கலித். 72 : 14); "பசைகொன் மெல் விரற் பெருந்தோட்புலைத்தி" "பசைவிரற் புலைத்தி நெடிதுபிசைந் தூட்டிய, பூந்துகில்" (அகநா. 34 : 11, 387 : 6 - 7). தூவெள் ளறுவை - மிக வெள்ளிய ஆடை; "தூவெள்ளறுவை போர்ப்பித் திலதே" (புறநா. 286 : 5).

3. தாதெருமறுகு - எருப்பொடிகளையுடைய வீதி; "தாதெரு மறுகிற் பாசறை" (புறநா. 33 : 11).

2 - 3. அறுவை அழுக்குண்ணும்படி இருந்து. 4. குறை - காரியம்.

5. உதவி செய்தற்கு ஒருவருமில்லை. 7. தோல் - கேடகம்.

தலைவனது ஆற்றல் கூறியதனாற் பாண்பாட்டாயிற்று. (௩௧௧)

(௩௧௨) ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

(பி - ம்.) 3 'வேலடித்துக்' 4 'தண்ணடை', 'ந...னணடை' 5 'வாள் வெஞ்சம'

திணை - வாகை; துறை - மூதின்முல்லை.

பொன்முடியார்.

(கு - ரை.) 1. பெற்றுப் பாதுகாத்தல் என்னிடத்திலுள்ள கடமையாம்; "ஈன்றுபுறந் தந்த வெம்மு முள்ளாள்" (அகநா. 35) தலைக்கடன் - முதன்மையான கடனுமாம்.

2. தன் குலத்துக்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி அதற்குரிய அறிவு அதற்குரிய செய்கைகள் ஆகிய இவற்றால் நிறைந்தவனாகச் செய்தல் தகப்பனுக்குக் கடமையாம்.

"உயர்மிக்க தந்தை" என்பதற்கு, "பிள்ளை உயர்ச்சிமிகுதற்குக் காரணமான தந்தை' என்று பொருள்கூறி இவ்வடியை மேற்கோள் காட்டினர்; சீவக. 473, ந.

3. படைக்கலத்தைத் திருத்தமாகச் செய்துகொடுத்தல் கொல்லனுக்குக் கடமையாகும்; வடித்தல் - கூரிதாக்கலுமாம். 'கொல்லன்'

என்பதற்கு வேல்வடிக்குங் கொல்லனென இவ்வடியை உட்கொண்டு அடியார்க்கு நல்லார் பொருளெழுதியிருத்தல் ஈண்டு அறியற்பாலது; சிலப். 12 : “இளமா வெயிற்றி”; (கலித். 137).

5 - 6. “செல்சம முருக்கி” (முருகு. 99); “பொருந்தா மன்ன ருஞ்சம முருக்கி, யக்களத் தொழிதல் செல்லாய் மிக்க, புகர்முகக் குஞ்சர மெறிந்த வெஃகம், அதன்முகத் தொழிய நீபோந் தனையே” தகடூர் யாத்திரை, “வாதுவல்”).

மு. தொல். புறத்திணை. சூ. 24, ந. மேற். (௩௧௨)

(௩௧௩) அத்த நண்ணிய நாடுகெழு பெருவிறல்
கைப்பொருள் யாதொன்று மிலனே நச்சிக்
காணிய சென்ற விரவன் மாக்கள்
களிறொடு நெடுந்தேர் வேண்டினுங் கடவ
உப்பொய் சாகாட் டுமணர் காட்ட
கழிமுரி குன்றத் தற்றே
எள்ளமை வின்றவ னுள்ளிய பொருளே.

(பி - ம்.) 4 ‘களிறொடு கடுந்தேர்’, ‘கடல’, ‘கடவு’

திணை - அது; துறை - வல்லாண்முல்லை.

மாங்குடிகிழார்.

(கு - ரை.) 1. அத்தம் - அரிய வழி. பெருவிறல் - தலைவன்.

2. நச்சி - விரும்பி. 3. காணிய - காண்பதற்கு.

4. கலித். 50 : 15 - 7; கடவ - ஈதற்குரியன.

5. உப்பைக் கொண்டுசெலுத்துகின்ற வண்டிகளையுடைய உப்பு வாணிகர்; ஒய்தல் - செலுத்துதல்; “உமணர், உப்பொ யொழுகை யெண்ணுப மாதோ” (புறநா. 116 : 7 - 8).

2 - 6. “ஒன்னார், ஆரெயி லவர்கட் டாகவு நுமதெனப், பாண்கட னிறுக்கும் வள்ளியோய்” (புறநா. 203 : 9 - 11), “கிளைபொரு ளில்லான் கொடையே கொடைப்பயன்” (நாலடி. 65) என்பவற்றை இவ்வடிகளின் பொருள் நினைப்பிக்கின்றது.

7. அவன் கருதிய பொருள் இகழற்பாலதன்று; எள்ளுதல் - இகழுதல்.

மு. ‘வேந்தன் சீர்சால் சிறப்பெடுத் துரைத்தல்’ (தொல். புறத் திணை. சூ. 5, ந.) என்பதற்கு, ‘வேந்தற்குரிய புகழமைந்த தலைமை களை ஒருவற்குரியவாக அவன் படையாளரும் பிறரும் கூறல்’ என்று பொருள் கூறி, இதனை மேற்கோள் காட்டி, இது படையாளர் கூற்றென்

றும், இதற்கு முடிவேந்தன் சிறப்பெடுத்துரைத்தலென்று கூறின் அது பொதுவியலிற் கூறலாகாதென்றுணர்கவென்றும் கூறுவர். (நகந)

(நகச) மனைக்குவிளக் காகிய வாணுதல் கணவன்
முனைக்குவரம் பாகிய வென்வே னெடுந்தகை
நடுகற் பிறங்கிய வுவலிடு பறந்தலைப்
புன்காழ் நெல்லி வன்புலச் சீறூர்க்
குடியு மன்னுந் தானே கொடியெடுத்து
நிறையழிந் தெழுதரு தானைக்குச்
சிறையுந் தானே தன்னிறைவிழு முறினே.

(பி - ம்.) 6 'நிறையறிந்தெழுந்தரும்', 'நிறையறிந்தெழுதரு'

திணையும் துறையும் அவை.

ஐயூர் முடவனார்.

(கு - ரை.) 1. "மனைக்கு விளக்க மடவாள்" (நான்மணிக். 104).

2. முனை - போர். வென் - வெற்றி.

3. நடுகல் மிகுந்த பறந்தலை, உவலிடு பறந்தலையெனக் கூட்டுக; உவலிடு - தழைகளைப் பெய்த; பறந்தலை - பாழ்பட்ட இடம்.

4. புல்லிய கொட்டையையுடைய நெல்லி. வன்புலம் - குறிஞ்சியும் முல்லையும்.

5. குடிமக்களுளொருவனும் தானே; மன், உம் : அசைநிலை.

6. நிறை - நிறுத்தப்படுதல்; "நிறையருந் தானை" (சிலப். 25 : 178).

7. சிறை - காவல். இறைவிழுமுறின் - அரசன் துன்பமுற்றால்; "வேந்துவிழு முறவே" (புறநா. 316 : 12). (நகச)

(நகரு) உடைய ளாயி னுண்ணவும் வல்லன்
கடவர் மீது மிரப்போர்க் கீயும்
மடவர் மகிழ்துணை நெடுமா னஞ்சி
இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்ரு திருக்கவும் வல்லன் மற்றதன்
கான்றுபடு கனையெரி போலத்
தோன்றவும் வல்லன்றன் றேன்றுங் காலே.

(பி - ம்.) 1 'நல்லன்'

திணையும் துறையும் அவை.

நெடுமானஞ்சியை ஔவையார் (பி - ம். ஔவையாரான்)

(கு - ரை.) 3. மடவர் - அறிவில்லார்; புறநா. 106 : 4. நெடுமானஞ்சி : ஒரு தலைவன்.

2 - 3. கடவர் - படைவீரர் முதலியோர். மீதும் - மேற்பட்டும். ஈயும் அஞ்சி. 'மடவர் மகிழ்துணை' என்பது, 'பாணரொக்கல்'' (திருச்சிற். 400) என்பது போல்வது.

4 - 5. அவன் வீட்டின் இறப்பிற் செருகப்பட்ட தீக்கடை கோலைப் போலத் தன்வலி வெளிப்பட வேண்டாத காலத்து அடங்கி இருக்கவும் வல்லன்.

5 - 7. ஞெலிகோலாலே கக்கப்பட்டுத் தோன்றுகின்ற காட்டுத் தீயைப்போல வெளிப்படத் தோன்றவேண்டிய காலத்துத் தோன்றவும் வல்லன். (௩௧௫)

(௧௩௬) கள்ளின் வாழ்த்திக் கள்ளின் வாழ்த்திக்
காட்டொடு மிடைந்த சீயா முன்றில்
நாட்செருக் கனந்தநர்ந் துஞ்சு வோனே
அவனெம் மிறைவன் யாமவன் பாணர்
நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தன னின்றிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணைய மிதுகொண்
டீவதி லாள னென்னுது நீயும்
வள்ளி மருங்குல் வயங்கிழை யணியக்
கள்ளுடைக் கலத்தேம் யாமகிழ் தூங்கச்
சென்றுவாய் சிவந்துமேல் வருக
சிறுகண் யானை வேந்துவிழு முறவே.

(பி - ம்.) 1 - 2 'வாழ்த்திகள்ளின்...தசீயா' 3 'களந்தரத்துஞ்சு' 4 'மிறையவன்' 8 'டீதலிலாளன்' 9 'வள்ளியலகு விளங்கிழை' 11 'சென்று நாசிவந்து மேவருசிறுகண்', 'செறுவர் சிவந்து', 'செறுநர் சிவந்து'.

திணையும் துறையும் அவை.

மதுரைக்கள்ளிற் கடையத்தன் (பி - ம். கடையத்தனார் வெண்ணாகனார்).

(கு - ரை.) 1. கள்ளினை வாழ்த்தி; புறநா. 297 : 6.

2. சீத்தல் - தூத்தல்; பெருக்கல்; ''மந்தி சீக்கு மணங்குடை முன்றிலில்'' (புறநா. 247 : 4); ''மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றில்'' (பெரும்பாண். 497).

3. நாட்செருக்கு அனந்தர் - விடியற்காலத்துக் கள்ளைக் குடித்த மயக்கத்தால்.

1 - 4. காட்டு - செத்தை; ''துடைப்பத் துகட்காட்டுப் புல்லிதழ்'', ''காட்டுக் களைந்து'' (ஆசார. 45 - 6). ஒடு : அசை. தூவாத முன் வாயிலினிடத்தே தானுண்ட கள்ளை வாழ்த்தி நாட்கால அனந்தரால்

துயில்வோன்; "முன்றிற்கிடந்த பெருங்களி யாளற்கு" (புறநா. 317 - 2) தூங்குவோனாகிய அவனே எம் தலைவன்.

5 - 6. நேற்று வந்த விருந்தினரை உபசரித்ததற்காகத் தன் பழைய வாட்படையை ஈடாக வைத்தான். இன்று - இன்றைத் தினம்.

7. பணையம் - ஈடு. 8. ஈயாதவனென்று கருதாமல் நீயும்.

9. பூங்கொடி போன்ற இடையையுடைய நின் விறலி விளங்கிய அணிகலத்தை அணியவும்; வள்ளி - பூங்கொடி.

மு. 'மறவன் ஆரமரோட்டல் கூறியது' என்பர்; தொல். புறத்திணை. சூ. 5, ந. (௩௧௬)

(௩௧௭) வென்வேல்...........................நது
முன்றிற் கிடந்த பெருங்களி யாளற்
கதளுண் டாயினும் பாயுண் டாயினும்
யாதுண் டாயினுங் கொடுமின் வல்லே
வேட்கை மீளப............
......................கு மெமக்கும் பிறர்க்கும்
யார்க்கு மீய்ந்து துயிலேற் பினனே.

(பி-ம்.) 7 'துயலேற்பினனே'

திணையும் துறையும் அவை.

வேம்பற்றூர்க் குமரனார் (பி - ம். வேப்பத்தூர்க் குமரன்).

(கு - ரை.) 2. முன்வாயிலிற் படுத்துக்கிடந்த மிக்க களிப்பினையுடையானுக்கு.

3. அதள் - தோல். இதிற் சில சாதியார் படுத்தல் இயல்பு; அது, "மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி" (பெரும்பாண். 89), "உழையதட்பள்ளி, உவலைக் கண்ணி வன்சொ லிளைஞர்" (மதுரைக். 310 - 11), "வரியதட் படுத்த சேக்கைத் தெரியிழைத், தேனூறு கதுப்பிற் கொடிச்சியர் தந்தை" (அகநா. 58 : 4 - 5), "சீறூர் மரையத ளிற்றங்கு கங்குற் சிறுதுயிலே" (திருச்சிற். 398) என்பவற்றாலும் அறியலாகும்.

4. வல்லே - விரைவாக.

7. துயிலேற்பினன் - துயிலேற்றலையுடையான். ஆதலால் அக்களியாளனுக்கு யாதுண்டாயினும் வல்லே கொடுமினென்க. (௩௧௭)

(௩௧௮) கொய்யடகு வாடத் தருவிற குணங்க
மயிலஞ் சாயன் மாஅ யோளொடு
பசித்தன் றம்ம பெருந்தகை யூரே
மனையுறை குரீஇக் கறையணற் சேவல்

பாணர் நரம்பின் சுகிரொடு வயமான்
குரற்செய் பீலியி னிழைத்த குடம்பைப்
பெருஞ்செய் நெல்லி னரிசி யார்ந்துதன்
புன்புறப் பெடையொடு வதியும்
யாணர்த் தாகும் வேந்துவிழு முறினே.

(பி - ம்.) 4 - 5. 'யணற செலலப், பாண' 5. 'நரம்பிசை நீரொடு' 6 'குரசை பீலியினிளமை மூத்த குடம்பை', 'குரசெய்பீலியினிமைமூத்த', 'பூத்த' 7 'செய்செல்லின்'

திணையும் துறையும் அவை.

பெருங்குன்றூர்கிழார்.

(கு - ரை.) 1 கொய்த இலைக் கறிகள் வாடவும் கொண்டு வந்த விறகு உணங்கவும்.

2. மாஅயோள் - மாமை நிறத்தினையுடையவள்; மனைவி. மாமை - அழகிய நிறம்; "மாமைக் கவினே" (ஐங்குறு. 35, 103, 134).

3. பசித்தன்று - பசித்தது. ஊர் பசித்தது.

4. கழுத்திற் கறுப்பினையுடைய ஆண் குருவி; "உள்ளிறைக் குரீஇக் காரணற் சேவல்" (நற். 181).

5. வயமான் - சிங்கம். 6. குடம்பை - கூடு.

7. நெல்லின் அரிசி - நெல்லொடு கூடிய அரிசி. ஆர்ந்து - உண்டு.

8. வாடிய ஆம்பற் பூவைப்போன்ற சிறகுடைமையாற் புன்புறப் பெடை யென்றார்; "புன்புறப் புறவின் கணநிரை" (பதிற். 39 : 11).

4 - 8. "ஆம்பற் பூவின் சாம்ப லன்ன, கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ, முன்றி லுணங்கன் மாந்திமன்றத், தெருவி னுண்டாது குடைவன வாடி, இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்" (குறுந். 46 : 1 - 5).

9. யாணர்த்து - புது வருவாயினையுடையது. வேந்து - பகை வேந்தன். விழுமுறின்=விழுமமுறின் - துன்பமுற்றால்; "தன்னிறை விழுமுறினே" (புறநா. 314 : 7). (௩௧அ)

(௩௧௯) பூவற் படுவிற் கூவற் றோண்டிய
செங்கட் சின்னீர் பெய்த சீறில்
முன்றி லிருந்த முதுவாய்ச் சாடி
யாங்கஃ டுண்டென வறிது மாசின்று
படலை முன்றிற் சிறுதினை யுணங்கல்
புறவு மிதலு மறவு முண்கெனப்
பெய்தற் கெல்லின்று பொழுதே யதனால்

முயல்சுட்ட வாயினுந் தருகுவேம் புகுதந்
தீங்கிருந் தீமோ முதுவாய்ப் பாண
கொடுங்கோட் டாமா னடுங்குதலைக் குழவி
புன்றலைச் சிறாஅர் கன்றெனப் பூட்டும்
சீறூர் மன்ன னெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் வந்துநின்
பாடினி மாலை யணிய
வாடாத் தாமரை சூட்டுவ னினக்கே.

(பி - ம்.) 1. 'றெடிய' 4 'யாகஃடுண்டென', 'யாறுஃடுண', 'மாகின்று' 6 'புறவுமீதலு', 'மறவுமுணடெனப்` 8 'புகுநீங்கிரு' 9 'தீங்கிருந்தீமே', 'இருந்தீரேமுது'

திணையும் துறையும் அவை.

ஆலங்குடி வங்கனார்.

(கு - ரை.) 1. பூவல் - செம்மண்; "தருமணற் ருழப்பெய் தில்பூவ லூட்டி" (கலித். 114 : 12); "புன்னமா ணிஞ்சி பூவ லூட்டி" (அகநா. 195 : 3); "பூவலங் குன்றம்" (களவழி. 12). படு - மடு. தோண்டிய - தோண்டுதலால் உண்டாகிய; "களர்ப்படு கூவற் றோண்டி" (புறநா. 311 : 1); கலித். 114 : 12.

'பூவல் - செம்மண்; பூவற் படுவிற் கூவற் றோண்டிய' வென்றார் புறத்தினும்' (சிலப். 16 : 3 - 6, அடியார்.).

2 - 3. பெய்த சாடி. 4. அந்நீர் மாசில்லாதது.

5. படலை - தழை; படலுமாம். உணங்கல் தினை - உலர்ந்த தினை.

6. இதல் - ஒருவகைப் பறவை; "இதல்கவர்ந் துண்டென" (புறநா. 320 : 11); "இதன்முட் செந்நனை, நெருங்குகுலைப் பிடவம்" (அகநா. 23 : 3). அறவும் - மிகவும்.

7. பொழுது எல்லின்று - சூரியன் ஒளி மழுங்கியது; "ஏகுதி மடந்தை யெல்லின்று பொழுதே" (நற். 264 : 6).

9. இருந்தீமோ - இரு. முது - பேரறிவு: "முதுவா யிரவல" (புறநா. 48, 180; பதிற். 66).

10. ஆமான்கன்றை. 11. புன்றலை - சிவந்த தலை.

12. மன்னன் : எழுவாய். நெருநை ஞாங்கர் - நேற்று.

13. பகைமேற் சென்றனன். 14. பாடினி - பாணிச்சி.

15. வாடாத் தாமரை - பொற்றாமரைப்பூ; "எரியகைந் தன்ன வேடி ருமரை, சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி" (பொருந. 159 - 60); "பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி" (பதிற். 48).

14 - 5. புறநா. 11 : 11 - 7, குறிப்புரை. (௩௧௯)

(௩௨௦) முன்றின் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழற்
கைம்மான் வேட்டுவன் கனைதுயின் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்
தீர்தொழிற் றனிக்கலை திளைத்துவிளை யாட
இன்புறு புணர்நிலை கண்டமனையோள்
கணவ னெழுதலு மஞ்சிக் கலையே
பிணைவயிற் றீர்தலு மஞ்சி யாவதும்
இல்வழங் காமையிற் கல்லென வொலித்து
மானதட் பெய்த வுணங்குதினை வல்சி
கானக் கோழியோ டிதல்கவர்ந் துண்டென
ஆர நெருப்பி னார னுறத்
தடிவார்ந் திட்ட முழுவள் ளூரம்
இரும்பே ரொக்கலொ டொருங்கினி தருந்தித்
தங்கினை சென்மோ பாண தங்காது
வேந்தரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும்
அருகா தீயும் வண்மை
உரைசா னெடுந்தகை யோம்பு மூரே.

(பி - ம்.) 5 'திணைத்து விளையாட' 6 'புணரரநிலை' 18 'உரை சொல்'

திணையும் துறையும் அவை.

வீரை வெளியனார்.

(கு - ரை.) 1. முஞ்ஞை - முன்னை; "தாளிமுத னீடிய சிறுநறு முஞ்ஞை, முயல் வந்து கறிக்கு முன்றில்" (புறநா. 328 : 14 - 5) "முன்றிலாடு முஞ்ஞை மூதிலை கதிலை கறிக்கும்" (தொல். செய். சூ. 31, பேர். மேற்.) முசுண்டை - முசுட்டைக்கொடி. பம்பி - பரவி.

3. கைம்மான் வேட்டுவன் - யானை வேட்டையாடுபவன்; "யானை வேட்டுவன் யானையும் பெறுமே" (புறநா. 214 : 4). கனை - மிகுதி. துயில் மடிந்தென – தூங்க.

4. பார்வை - பார்வை மிருகம்; மிருகங்களை வேட்டையில் அகப் படுத்துவதற்காக வளர்த்துப் பழக்கஞ்செய்யப்படுவது; பெரிய. கண்ணப்ப. 3. பிணையை.

5. தொழில் தீர்ந்த ஆண்மான்.

6. மான்களின் சேர்க்கையை.

6 - 9. கணவன் எழுதற்கும் கலை பிணையினின்றுந் தீர்தற்கும் அஞ்சி மனையோள் புடைபெயர்ந்து நடவாமையால். ஒலித்தல்: கானக்கோழி முதலியவற்றின் றெழில்.

10. மான்றேலில் உலர்த்திய திணையாகிய உணவை.

11. இதல் - ஒருவகைப் பறவை; புறநா. 319 : 6, குறிப்புரை.

12. ஆரம் - சந்தனம். ஆரல் - ஒரு வகை மீன்.

13. தடிவு - தடிதல், அறுத்தல்; தடி - துண்டமுமாம். வள்ளூரம் - இறைச்சி; ''முழூஉவள் ளூரம்'' (புறநா. 219 : 2).

14. கரிய பெரிய சுற்றத்தாருடன் ஒருங்குண்டு. 15. தங்கிச்செல்.

16. கூழ் - பொருள்; ''படைகுடி கூழமைச்சு'' (குறள், 381).

18. உரை - புகழ். ஊர்க்குச் (18) செல் (15) (௩௨௦)

(௩௨௧) பொறிப்புறப் பூழின் போர்வல் சேவல்
மேந்தோல் களைந்த தீங்கொள் வெள்ளெட்
சுளகிடை யுணங்கற் செவ்வி கொண்டுடன்
வேனிற் கோங்கின் பூம்பொருட் டன்ன
குடந்தையஞ் செவிய கோட்டெலி யாட்டக்
கலியார் வரகின் பிறங்குபீ ளொளிக்கும்
வன்புல வைப்பி னதுவே சென்று
தின்பழம் பசீஇ.........னனே பாண
வாள்வடு விளங்கிய சென்னிச்
செருவெங் குருசி கோம்பு மூரே.

(பா - ம்.) 1 'பொரிப்புறப்', 'செலவன' 3 'களகிடை', 'கொண் டென' 4 'வேனிறகொண்'

திணையும் துறையும் அவை.

உறையூர் மருத்துவன் தாமோதரனுர்.

(கு - ரை.) 1. பொறி - புள்ளி. பூழ் - குறும்பூழ்ப்பறவை.

2. மேந்தோல் - மேலேயுள்ள தோல்.

3. உணங்கல் - உலருகின்ற வெள்ளெள்ளை; செவ்வியுணங்கலை. கொண்டு உடன்.

4. செய்யுளிடத்துக் காலத்தை அடையாக அடுத்து வருமொழி இனத்தைக் காட்டாததற்கு மேற்கோள்; நன். சூ. 400, மயிலை.; நன். வி. சூ. 401; இ. வி. சூ. 312, உரை.

5. குடந்தை - வளைவு; ''குடந்தையஞ் செவிய கோட்பவ ரொடுங்கி'' (அகநா. 284 : 4). கோடு - கரை. ஆட்ட - அலைத்தற்கு. சேவல் எலியை அலைக்க.

6. பீள் - கரு. வரகின் பீளிற் சேவல் ஒளிக்கும்; பீளென்றது கதிர்ப்போரை.

10. செரு வெங் குருசில் - போரை விரும்புதலையுடைய தலைவன். (௩௨௧)

(௩௨௨) உழுதூர் காளை யூழ்கோ டன்ன
கவைமுட் கள்ளிப் பொரியரைப் பொருந்திப்
புதுவர கரிகாற் கருப்பை பார்க்கும்
புன்றலைச் சிருஅர் வில்லெடுத் தார்ப்பிற்
பெருங்கட் குறுமுயல் கருங்கல னுடைய
மன்றிற் பாயும் வன்புலத் ததுவே
கரும்பி னெந்திரஞ் சிலைப்பி னயல
திருஞ்சுவல் வாளை பிறழு மாங்கட்
டண்பணை யாளும் வேந்தர்க்குக்
கண்படை யீயா வேலோ னூரே.

(பி - ம்.) 1 'உழுதூர்க்காளை' 6 'முனறினறபாயும்' 7 - 8 'னயலி னிருஞ்சுவலி...யானைபிறழுமாங்கட்'

திணையும் துறையும் அவை.

ஆவூர்கிழார்.

(கு - ரை.) 1. காளையின் செவ்வியழிந்த கொம்பையொத்த.

2. பொருந்தியவர் சிறுர்.

1 - 2. கள்ளியின் முள்ளுக்குக் கோடு உவமை; "குண்டைக் கோட்ட குறுமுட் கள்ளி" (அகநா. 184 : 8).

3. வரகு அரிகால் - வரகம் பயிரின் அரிந்த தாள். கருப்பை - எலியை; "வேலிக் கருப்பை பார்க்கும்" (புறநா. 324 : 7).

3 - 4. எய்த சிறுர் முழங்குவராயின்.

5. முயல் : எழுவாய். கருங்கலன் - மண்ணாற் செய்யப்பட்ட அடிசிற் பாண்டம்.

4 - 6. "தூமயிர்க் குறுந்தா ணெடுஞ்செவிக் குறுமுயல், புன்றலைச் சிருஅர் மன்றத் தார்ப்பிற், படப்பொடுங் கும்மே" (புறநா. 334 : 2 - 4).

7. எந்திரம் - ஆலை; "கரும்பி னெந்திரம்" (ஐங்குறு. 55).

8. சுவல் - பிடர்.

9. தண்பணை - மருத நிலத்தைச் சார்ந்த ஊர்கள்.

ஊர் (10) வன்புலத்ததுவே (6) (௩௨௨)

(௩௨௩) புலிப்பாற் பட்ட வாமான் குழவிக்குச்
சினங்கழி மூதாக் கன்றுமடுத் தூட்டும்
கா...க்
குள்ளியது சுரக்கு மோம்பா வீகை
வெள்வே லாவ மாயி னொள்வாள்

கறையடி யானைக் கல்ல
துறைகழிப் பறியா வேலோ னூரே.

(பி-ம்.) 1 'பட்ட விரமான்' 5 'லாப'

....

....டார்கிழார்.

(கு-ரை.) 1. புலியினிடத்தே அகப்பட்ட ஆமானினது கன்றினுக்கு.

2. மூதா - முதிய பசு. மடுத்து - சேர்த்து.

4. சுரக்கும் - இடைவிடாமல் அளிக்கும்.

7. வேலும் உறையும்: "நெய்துடைத் தடையலர் நேய மாதர் கண், மைதுடைத் துறைபுகும் வயங்கொள் வேலினாய்" "பொய் யுரைத் துலகினிற் சினவினர் குலமறப் பொருது தன்வேல், நெய்யுரைத் துறையினிட்டு" (கம்ப. நகர்நீங்கு. 159; யுத்த. மந்திர. 84).

5 - 7. 'பெயர்நிலைக் கிளவியி னாஅகுநவும்' என்பதற்குத் தத்தம் பொருளுணர்த்தாது பெயர்ந்த நிலைமையையுடைய சொல்லான் வருஞ் செய்யுளுமெனப் பொருள் கூறி, 'ஒள்வாட...வேலோனூரே: என்புழி, வேலோனென்பது வேலையுடையோனென்னும் பொருள் பெயர்ந்து ஒரு பெயர்த்தன்மையாய் நின்றது' என்பர்; தொல். எச்ச. சூ. 53, ந.; இ. வி. சூ. 370, உரை. (௩உ௩)

(௩உச) வெருக்குவிடை யன்ன வெருணோக்குக் கயந்தலைப்
புள்ளூன் றின்ற புலவுநாறு கயவாய்
வெள்வாய் வேட்டுவர் வீழ்துணை மகாஅர்
சிறியிலை யுடையின் சுரையுடை வான்முள்
ஊக நுண்கோற் செறித்த வம்பின்
வலாஅர் வல்விற் குலாவரக் கோலிப்
பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலந் தழீஇய வங்குடிச் சீறூர்க்
குமிழுண் வெள்ளை பகுவாய் பெயர்த்த
வெண்காழ் தாய வண்காற் பந்தர்
இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்
பாணரொ டிருந்த நாணுடை நெடுந்தகை
வலம்படு தானை வேந்தற்
குலந்துழி யுலக்கு நெஞ்சறி துணையே,

(பி-ம்.) 1 'வெருணோக்குக்' 3 'வேட்டுவன்' 4-5 'யுடையினை சுரையடை வானஞ்சுநுண்கோற்' 6 'குலா புறக்' 7 'வேலி

கருபலிப் பார்க்கும்' 9 'மதுவாய்', 'மறுகுவாய்' 'மறுவாய்' 10 'வெண்காழ்ப் பந்தரிடை', 'காய', 'வன்காழ்ப்பந்தர்'

திணையும் துறையும் அவை.

ஆலத்தூர்கிழார்.

(கு - ரை.) 1. வெருக்குவிடை - காட்டுப்பூனையின் ஆண். கயந்தலை - மெல்லிய தலை.

வெருகினை விடையென்று கூறுவதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். மரபு. சூ. 68, பேர்.

2. கயவாய் - மெல்லிய வாய். 2 - 3. கயவாய்மகார்.

4. சிறிய இலைகளையுடைய உடைமரத்தின் உட்டுளையையுடைய வெள்ளிய முள்ளை; "உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித், தாமே யாண்ட" (புறநா. 363 : 2 - 3).

5. ஊகநுண்கோல் - ஊகம்புல்லின் ஈர்க்கில்.

4 - 5. உடைமுள்ளை ஊகங்கோலிற் கோத்த அம்பினை உரையராய்.

6. வலார் - வளார்; மலாரென வழங்கும். குலாவர - வளைய.

7. தொல். எச்ச. சூ. 17, ந. மேற்.

3 - 7. "ஆர்நாரின் றிண்கயிற்று லமைச்சிறுகோல் வளைத்தவில் லும், கூர்வாய்முண் ணுனிபதித்த கோற்கோலுங் கைக்கொண்டு, கார் மேனி மைந்தரொடு கான்புகுந்து கொடுவிலங்கின், ஏர்வாய்மென் குருளைபல வெய்தல்செய்தான் விளையாட்டால்" (சீகாளத்திப். கண் ணப்ப. 29) என்பது இவ்வடிகளின் பொருளை ஒருவாறு தழுவி வந்திருத்தல் காண்க.

7 - 8. "பருத்தி வேலிச்சீறூர்" புறநா. 299 : 1.

9. குமிழுண் வெள்ளை - குமிழம்பழத்தை உண்ணும் வெள்ளாடு.

10. காழ் - கொட்டை. தாய - பரந்த. பந்தரின்கீழ்.

11. இடையன் : புறநா. 331 : 4 - 5. பொத்திய - மூட்டிய.

12. நாண் - மானம். 14. உலக்கும் - இறக்கும்.

நெடுந்தகை (12) துணை (14)

மு. வேந்தற்குத் துணையாகச் செல்வோரைக் கூறியதற்கு மேற் கோள்; தொல். புறத்திணை. சூ. 5, ந. (௱௨௪)

(௱௨௫) களிறு நீ ருடிய விடுநில மருங்கின்
வம்பப் பெரும்பெயல் வரைந்துசொரிந் திறந்தெனக்
குழிகொள் சின்னீர் குராஅ லுண்டலிற்
சேறுகிளைத் திட்ட கலுழ்கண் ணூறல்
முறையி னுண்ணு நிறையா வாழ்க்கை

முளவுமாத் தொலைச்சிய முழுச்சொ லாடவர்
உடும்பிழு தறுத்த வொடுங்காழ்ப் படலைச்
சீறின் முன்றிற் கூறுசெய் திடுமார்
கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம்
மறுகுடன் கமழு மதுகை மன்றத்
தலந்தலை யிரத்தி யலங்குபடு நீழற்
கயந்தலைச் சிறாஅர் கணைவிளை யாடும்
அருமிளை யிருக்கை யதுவே வெண்வேல்
வேந்துதலை வரினுந் தாங்கும்
தாங்கா வீகை நெடுந்தகை யூரே.

(பி - ம்.) 6 'முழவுமா தொலைச்சிய' 7 'கொடுங்காழ', 'தொடுங் காழ' 11 'யிலங்குபடு' 13 'அருமுளை'

திணையும் துறையும் அவை.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார்.

(கு - ரை.) 1. நீறு - புழுதி; "நீறடங்கு தெரு" (சிறுபாண். 201); "கரம்பைப் படுநீ றாடி" (பெரும்பாண். 93).

2. வம்பப்பெரும்பெயல் - புதிய மழை; "வம்ப மாரியைக் காரென மதித்தே" (குறுந். 66 : 4). இறந்தென - போக.

3. குரால் - ஒருவகைப் பசு; கோட்டானுமாம்.

4. சேற்றைத் தோண்டுதலால் உண்டாகிய கலங்கிய ஊறல் நீரை; "மணற்கிளைக்க நீரூறும்" (திருவள்ளுவமாலை, 31).

5. "ஊண்முறை யூட்டும்" (புறநா. 331 : 8).

6. முளவுமா - முள்ளம்பன்றியை; தொலைச்சிய - கொன்ற; "முளவுமா வல்சி" (ஐங்குறு. 364); "முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை" (மலைபடு. 176).

4 - 6. "கல்லறுத் தியற்றிய வல்லுவர்க் கூவல், வில்லேர் வாழ்க்கைச் சீறூர் மதவலி" (புறநா. 331 : 1 - 2).

7. உடும்பிழுது - உடும்பினது நிணத்தை. "உடும்பின் விழுக்கு நிணம்" (புறநா. 326 : 9 - 10). அறுத்த உடும்பிழுதையென்க. ஒடுங்காழ்ப்படலை - ஒடுமரத்தின் கழிகளாலாகிய கட்டுக்கதவு; புடலுமாம்; ஒடு - ஒருவகை மரம்; "ஒடுமரக் கிளவி" (தொல். உயிர். சூ. 60).

8. முன்றிலில். கூறுசெய்திடுமார் - பிறர்க்குப் பகுத்துக் கொடுப்பாராய்.

10. மன்றத்து - பொதுவிடத்துள்ள.

9 - 10. "நெய்ந்நறைக் கொளீஇய மங்குன் மாப்புகை, மறுகுடன் கமழும்" (புறநா. 329 : 3 - 4).

11. அலந்தலை : "அலந்தலை மராமும்" (சிலப். 11 : 75). இரத்தி - இத்திமரம்; இலந்தையுமாம். அலங்குதல் - அசைதல். நீழலில்.

10 - 11. "இரத்தி நீடிய வகன்றலை மன்றம்" (புறநா. 34 : 12).

12. வேட்டுவர் சிறுஅர் : புறநா. 324 : 1 - 7.

13. மிளை - காவற்காடு; புறநா. 326 : 7.

14. அரசன் தன்னிடத்தே வந்தாலும் தாங்குதற்குரிய.

14 - 5. "வரகுகட னிரக்கு, நெடுந்தகை, அரசுவரிற் றுங்கும் வல்லாளன்னே" (புறநா. 327 : 7 - 8).

ஊர் (15) இருக்கையது (13) (௩௨௫)

(௩௨௬) ஊர்முது வேலிப் பார்நடை வெருகின்
இருட்பகை வெரீஇய நாகிளம் பேடை
உயிர்நடுக் குற்றுப் புலாவிட் டரற்றச்
சிறையுஞ் செற்றையும் புடையுந ளெழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
கவிர்ப்பூ நெற்றிச் சேவலிற் றணியும்
அருமிளை யிருக்கை யதுவே மனைவியும்
வேட்டச் சிறுஅர் சேட்புலம் படராது
படமடைக் கொண்ட குறுந்தா ளுடும்பின்
விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் விதவை
யாணர் நல்லவை பாணரொ டொராங்கு
வருவிருந் தயரும் விருப்பினள் கிழவனும்
அருஞ்சமந் ததையத் தாக்கிப் பெருஞ்சமத்
தண்ணல் யானை யணிந்த
பொன்செ யோடைப் பெரும்பரி சிலனே.

(பி - ம்.) 3 'புலாவிட்டியாற்றச்' 6 'கதிர்ப்பூ', 'தணிவும்' 7 'அருமுளை' 9 'படபடைக்'

திணை - வாகை; துறை - மூதின்முல்லை.

தண்காற் பூட்கொல்லனார் (பி - ம்.) தண்காற்...பொற்கொல்லனார், முடக்கொல்லனார், தங்கான்ருட கோலரை, தங்காலநாட் கோவலனார்).

(கு - ரை.) 1. வேலியைச் சார்ந்துள்ள காட்டுப்பூனையால், பார் நடை வெருகு - தான் கவர்ந்துகொள்ளுதற்குரிய கோழி முதலியவற்றைப் பார்த்து மெல்ல நடத்தலையுடைய வெருகு; "ஈர்முள் வேலிப் புலவுநாறு முன்றில், எழுதி யன்ன கொடிபடு வெருகின், பூளை யன்ன பொங்குமயிர்ப் பிள்ளை" (அகநா. 297 : 12 - 4) என்பதையும், "வெவ்

வாய் வெருகினைப் பூசை யென்றலும்" (தொல். மரபு. சூ. 68) என்பதை யும், 'படப்பை வேலியும் புதலும்பற்றி விடக்கிற்கு வேற்றுயிர்கொள்ளும் வெருகு' என்னும் பேராசிரியருரையையும் பார்க்க.

1 - 2. வெருகாகிய பகைக்கு அஞ்சிய கோழிப்பேடை; எழுவாய்.

3. புலா - புலாவை; வாயிலுள்ள தசையை; அகநா. 79 : 14.

2 - 3. "மனையுறை கோழிக் குறுங்காற் பேடை, வேலி வெருகின மாலை யுற்றெனப் புகுமிட னறியாது தொகுபுடன் குழீஇப், பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்கு" (குறுந். 139 : 1 - 4).

4. சிறை - பக்கம். செற்றை - சிறுதூறு; "செற்றை வாயில்" (பெரும்பாண். 146). புடையுநள் - அடித்துத் தூத்தலையுடையளாய்.

5. பருத்திப்பெண்டின் - பருத்தி நூற்கும் மங்கையின்; "பருத்திப் பெண்டின் பனுவ லன்ன" (புறநா. 125 : 1). விளக்கத்தாற் காணப்பட்ட.

6. கவிர்ப்பூ - முள்ளு முருங்கைப்பூ. சேவலின் - ஆண்கோழி யால்; "கவிரலர் பூத்த சென்னி வாரணம்" (கல். பாயிரம், 2). தணியும் - நீங்கும்.

கோழிப்பேடை (2) அந்நடுக்கந் தணியும் (6)

7. "அருமிளை யிருக்கை யதுவே" (புறநா. 325 : 13).

8. சேட்புலம் - நெடுந்தூரமாகிய இடம்.

10. விழுக்காகிய நிணம்; விழுங்குதற்குரிய நிணமுமாம்; "விழுக் கொடு வெண்ணைஞ்சு" (சீவக. 1584). விதவை - கூழ்.

9 - 10. பெரும்பாண். 132 - 3.

11. யாணர் - புதிது. நல்லவை - நல்ல உணவுகளை. ஓராங்கு - ஒருபடியாக.

9 - 11. "உடும்பிழு தறுத்த வொடுங்காழ்ப் பாடலைச், சீறின் முன்றிற் கூறுசெய் திடுமார், கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம்" (புறநா. 325 : 7 - 9).

மனைவியும் (7) விருப்பினள் (12)

12. கிழவன் - தலைவன்.

13. ததைய - சிதைய; "அருஞ்சமஞ்சிதையத் தாக்கி" (புறநா. 72 : 8) "ததைந்த காஞ்சியொடு" (பதிற். 23 : 19).

15. ஓடை - நெற்றிப்பட்டம். 14 - 5. புறநா. 334 : 8 - 10. (௩௨௬)

(௩௨௭) எருதுகா லுறாஅ திளைஞர் கொன்ற
சில்விளை வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாண ருண்டுகடை தப்பலின்
ஒக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்ச்

சிறுபுல் லாளர் முகத்தவை கூறி
வரகுகட னிரக்கு நெடுந்தகை
அரசுவரிற் றுங்கும் வல்லா ளன்னே.

(பி - ம்.) 2 'சில்வினை' 4 'ருண்டுகன...தலொற்கஞ்' 7 'வரகு கடனீர்க்கு'

திணையும் துறையும் அவை.

....

(கு - ரை.) 1. கடாவிடுதலின்றி இளைஞர் அடித்த.

'எருதுகாலுருஅது' என்பது : தொல். மொழி. சூ. 8, இளம். மேற்.

2. சில்வினை - சிலவாக விளைந்த. குப்பை - பொலி.

3. கொடுத்த கடவர்க்கு - தன்னை வளைத்துக்கொண்ட கடன் காரர்களுக்கு; "தொடுத்துணக் கிடப்பினுங் கிடக்கும்" (புறநா. 156 : 4); கொடுத்த மிச்சில் - கொடுத்து மிஞ்சிய வரகை.

4. கடை - வாயில்.

5. ஒக்கல் ஒற்கம் சொலிய - சுற்றத்தாருடைய வறுமையை ஒழித்தற்கு.

'ஒற்கம்' என்னும் உரிச்சொல் வறுமையாகிய குறிப்புணர்த்து வதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 64, சே.; சூ. 62, ந.; இ. வி. சூ. 281, உரை.

7 – 8. "வேந்துதலை வரினுந் தாங்கும், தாங்கா வீகை நெடுந் தகை" (புறநா. 325 : 14 – 5).

மு. வாகைத்திணைத்துறைகளுள், 'புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கம்' (தொல். புறத்திணை. சூ. 17, இளம்.) என்பதற்கும், 'அரும்பகை தாங்குமாற்றல்' (தொல். புறத்திணை. சூ. 21, ந.) என்பதற்கும் மேற்கோள். (௩உ௭)

(௩உ௮) ....டைமுதற் புறவுசேர்ந் திருந்த
புன்புலச் சீறூர் நெல்விளை யாதே
வரகுந் தினையு முள்ளவை யெல்லாம்
இரவன் மாக்களுக் கீயத் தொலைந்தன
.............................டமைந் தனனே
அன்ன னாயினும் பாண நன்றும்
வெள்ளத் திடும்பா லுள்ளுறை தொட...
களவுப் புளியன்ன விளை.................
...............................வாடூன் கொழுங்குறை

கொய்குர லரிசியொடு நெய்பெய் தட்டுத்
துடுப்பொடு சிவணிய களிக்கொள் வெண்சோ
றுண்டினி திருந்த பின்........................
..................................தருகுவன் மாதோ
தாருளிமுத னீடிய சிறுநறு முஞ்ஞை
முயல்வந்து கறிக்கு முன்றிற்
சீறூர் மன்னனைப் பாடினை செலினே.

(பி - ம்.) 1 'சோர்ந்திந்த' 4 'கீயாததா...டமைந்த' 6 'மன்ன நன்றும்' 7 'வெள்ளத்தீடும்' 14 'தாழிமுதல்'

திணையும் துறையும் அவை (பி - ம். இதுவுமது).

பங்கு..................................

(கு - ரை.) 1. புறவு - முல்லைநிலம். 2. புன்புலம் - புன்செய்.

3 - 4. "வரகுந் திணையு முள்ளவை யெல்லாம், இரவன் மாக்க ளுணக்கொளத் தீர்ந்தென" (புறநா. 333 : 9 - 10).

7. "குடப்பாற் சில்லுறை" (புறநா. 276 : 5).

8. களவுப்புளி - களாப்பழத்தின் புளிப்பு. (10) குரல் - கதிர்.

14. தாளி - ஒருவகைக் கொடி. செலின் (16) தருகுவன் (13).

14 - 15. புறநா. 320 : 1. (கூஉஅ)

(கூஉகூ) இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லி னாட்பலி யூட்டி
நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும்
அருமுனை யிருக்கைத் தாயினும் வரிமிடற்
றரவுறை புற்றத் தற்றே நாளும்
புரவலர் புன்க ணோக்கா திரவலர்க்
கருகா தீயும் வண்மை
உரைசா னெடுந்தகை யோம்பு மூரே.

(பி - ம்.) 2 - 3 'பலியூட்டி நெய்ந்நறை' 3 'நன்னராட்டி'

திணையும் துறையும் அவை.

மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்.

(கு - ரை.) 1. வீட்டில் அட்ட கள்ளையுடைய; "இல்லடு கள்ளின்றேப்பி பருகி" (பெரும்பாண். 142).

2. நடுகல்லிற்கு விடியற்காலப் பலியை ஊட்டி; புறநா. 232 : 3 - 4.

3. நறை - தூபம்; "நறையும் விரையும்" (குறிஞ்சிப். 7). கொளீஇய - கொளுத்திய; சேர்த்திய.

4. மங்குல் - மேகம். உடன் - ஒருங்கு.

5. முனை - முதன்மை. ஊர் இருக்கையை உடையதாயினும்.

6. அரவுறையும் புற்றைப்போல்வது ஊர்; "நல்லரா வுறையும் புற்றம் போலவும் (புறநா. 309 : 3); ஊர் அணுகுதற்கரியதென்றபடி.

8 - 9. புறநா. 320 : 16 - 8, 367 – 8.

மு. கல்நட்டுக் கால்கொண்டதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 5, ந. (௩௨௯)

(௩௩0) வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்த னொருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்
காழி யனையன் மாதோ வென்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்
புரவிற் காற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே.

(பி - ம்.) 2 'வாள்வல்லத்தன்', 'வல்லத்தன்' 7 'சூடியவன்மை'

திணையும் துறையும் அவை.

மதுரைக் கணக்காயனார்.

(கு - ரை.) 1. முனை - சண்டை. நெரிதர - நெரிய.

3. அப்பகைவர் சேனையானது தன்னைக் கடந்து வாராதபடி தடுத்தலால். 4. ஆழி - கரை.

3 - 4. "கடல்விலக் காழியிற் கலக்க மின்றி, அடல்விலக் காளரார்த்தன ரடர்ப்பவும்" (பெருங். 1. 46 : 75 - 6).

குறள், 989, பரிமேல். மேற்.

5. வாரி - வருவாய்.

6. புரவு - இறையிலி நிலம்; புறநா. 260 : 9, 379 : 6.

மு. வஞ்சித்திணைத்துறைகளுள், 'வருவிசைப் புனலைக் கற்சிறை போல, ஒருவன் றாங்கிய பெருமை' என்பதற்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 7, இளம்.; சூ. 8, ந. (௩௩0)

(௩௩௧) கல்லறுத் தியற்றிய வல்லுவர்க் கூவல்
வில்லேர் வாழ்க்கைச் சீறூர் மதவலி
நனிநல் கூர்ந்தன ணாயினும் பனிமிகப்
புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியும்
கல்லா விடையன் போலக் குறிப்பின்
இல்லது படைக்கவும் வல்ல னுள்ளது
தவச்சிறி தாயினு மிகப்பல ரென்னாள்
நீணெடும் பந்த ரூண்முறை யூட்டும்
இற்பொலி மகடூஉப் போலச் சிற்சில
வரிசையி னளிக்கவும் வல்ல னுரிதினிற்
காவன் மன்னர் கடைமுகத் துகுக்கும்
போகுபலி வெண்சோறு போலத்
தூவவும் வல்லனவன் றூவுங் காலே.

(பி - ம்.) 8 'நீணெடு பந்தருண்' 13 'தூஉவும்'

திணையும் துறையும் அவை.

உறையூர் முதுகூத்தனார் (பி - ம். உறையூர் முதுகூற்றன்).

(கு - ரை.) 1. "வல்லூற் றுவரி தோண்டி" (பெரும்பாண். 97 - 8); "குடம்புகாக் கூவற் கொடுங்கானம்" (சிலப். 29 : காவற்பெண்டு சொல்.) கூவல் - கிணறு.

2. விற்போராகிய உழவுத்தொழிலால் வாழும் வாழ்க்கையை யுடைய தலைவன்; "வில்லுழு துண்மார்" (புறநா. 170). மதவென்பது வலியை யுணர்த்துவதோருரிச்சொல் : மதவலி - மிக்க வன்மையுடைய தலைவன்; "மதவலி விடுப்ப வேகி" (சீவக. 204).

3. மிக்க வறுமையையுற்றானாயினும்.

4. ஞெலியும் - கடையும்.

4 - 5. "இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்து" (புறநா. 324 : 11); "இடையன்......ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச், செந்தீ" (பெரும்பாண். 175 - 8).

8. பந்தரில். முறை - வரிசை; "முறையி னுண்ணு நிறையா வாழ்க்கை" (புறநா. 325 : 6).

9. மகடூஉ - மனைவி.

6 - 9. "குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதும், கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினும், கடனீர்மை கையாருக் கொள்ளு மடமொழி, மாதர் மனைமாட்சி யாள்" (நாலடி. 382).

9 - 13. புறநா. 334 : 7 - 11. (௩௩௧)

(௩௩௨) பிறர்வேல் போலா தாகி யிவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே
இரும்புற நீறு மாடிக் கலந்திடைக்
குரம்பைக் கூரைக் கிடக்கினுங் கிடக்கும்
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
இன்குர லிரும்பை யாழொடு ததும்பத்
தெண்ணீர்ப் படுவினுந் தெருவினுந் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினுஞ் செல்லுமாங்
கிருங்கடற் றானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னதே.

(பி - ம்.) 3 'இரும்புக நீருமாடிக்கலத்திடை' 4 'குரம்பைக் கூன ராக்கினுங்கிடக்கு' 5 'சூடி' 6 'லிகும்பை யாழெடுத்தியம்ப', 'யிரும் பெயர்' 8 'சொல்லினுஞ்', 'செல்லுங்கண்ணுறின்', 'செல்லுமாங்கு கடற்றானை'

திணையும் துறையும் அவை.

விரியூர் நக்கனார் (ந - ம். விரியூக நக்கனார்).

(கு - ரை.) 3. நீறு - புழுதி. 4. குரம்பை - சிறுகுடிலின்.

6. குரல் - மகளிர் இசை. இரும் பை - பெரிய பை; யாழுறை. ததும்ப - ஒலிக்க. 7. படு - மடு.

10. செலவு ஆனது - செல்லுதல் தவிராது.

மு. பாடாண்டிணைத்துறைகளுள், 'மாணார்ச்சுட்டிய வாண் மங்கலம்' என்பதற்கு இதனை மேற்கோள் காட்டினர் இளம்பூரணர் (தொல். புறத்திணை. சூ. 30); உழிஞைத்திணைத்துறைகளுள் 'வென்ற வாளின் மண்ணல்' என்பதற்கு 'ஒன்றெனமுடித்தலான் இருவர் வேற்குஞ் சிறுபான்மை மண்ணுதல் கொள்க' என விசேடவுரை கூறி இதனை மேற்கோள் காட்டினர் நச்சினார்க்கினியர்; தொல். புறத்திணை. சூ. 13. (௩௩௨)

(௩௩௩) நீருட்பட்ட மாரிப் பேருறை
மொக்கு ளன்ன பொகுட்டுவிழிக் கண்ண
கரும்பிடர்த் தலைய பெருஞ்செவிக் குறுமுயல்
உள்ளூர்க் குறும்புதற் றுள்ளுவன வுகளும்
தொள்ளை மன்றத் தாங்கட் படரின்
உண்கென வுணரா வுயவிற் றாயினும்
தங்கினிர் சென்மோ புலவிர் நன்றும்
சென்றதற் கொண்டு மனையோள் விரும்பி

வரகுந் தினையு முள்ளவை யெல்லாம்
இரவன் மாக்க ளுணக்கொளத் தீர்ந்தெனக்
குறித்துமா றெதிர்ப்பை பெறாஅ மையிற்
குரலுணங்கு விதைத்தினை யுரல்வாய்ப் பெய்து
சிறிது புறப்பட்டன் றேவில டன்னூர்
வேட்டக் குடிதொறுங் கூட்டு......
....உடும்புசெய்
பாணி நெடுந்தேர் வல்லரோ டூரா
வம்பணி யானை வேந்துதலை வரினும்
உண்பது மன்னு மதுவே
பரிசின் மன்னுங் குருசில்கொண் டதுவே.

(பி - ம்.) 7 'தங்கிநீர்' 13 'புறப்படனறேவிலளே' 15 'உழுமெபு செய்' 16 'வலவரோடூர'

திணையும் துறையும் அவை.

....

(கு - ரை.) 1. உறை - துளி.

2. மொக்குள் - சேற்றிலெழுந்த கொப்புளம்.

3. "நெடுஞ்செவிக் குறுமுயல்" (புறநா. 334 : 2, 339 : 4; பெரும்பாண். 115).

1 - 3. "சிறியிலை நெல்லிக் காழ்கண் டன்ன, குறுவிழிக் கண்ண கூரலங் குறுமுயல்" (அகநா. 284 : 1 - 2); சீவக. 3042.

4. புதல் - புதரில்.

5. தொள்ளை - துவாரம். மன்றம் - இரவலர் தங்குதற்குரியது.

6. உயவு - வருத்தம்.

7. சென்மோ - செல்லும்; செல்லுமென்னும் ஏவற்பன்மை உயிர்மெய் கெட்டு ஓகாரம் பெற்று வந்தது; "வருங்குலங் கேண்மோ" (மணி. 13 : 93) என்றாற்போல.

8. மனையோள் - தலைவி; புறநா. 331 : 8. 334 : 5. சென்றதற்கொண்டு - வந்ததனால்.

10. தீர்ந்தென - தீர்ந்தனவாக. குறித்துமாறெதிர்ப்பை - குறியெதிர்ப்பை; 'குறியெதிர்ப்பையாவது அளவுகுறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது' என்பர் (குறள், 221, பரிமேல்.); "கூற்றுங் குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே...களிறு" (முத்தொள்ளாயிரம்).

9 . 10. "வரகுந் திணையு முள்ளவை யெல்லாம், இரவன் மாக்களுக் கீயத் தொலைந்தன" (புறநா. 328 : 3 - 4).

8 - 13. "இல்லது படைக்கவும் வல்ல னுள்ளது, தவச்சிறி தாயினு மிகப்பல ரென்னுள், நீணெடும் பந்த ரூண்முறை யூட்டும், இற்பொலி மகடூஉப் போலச் சிற்சில, வரிசையி னளிக்கவும் வல்லன்", "மனையோள், பாண ரார்த்தவும் பரிசில ரோம்பவும், ஊனொலி யரவமொடு கைதூவாளே" (புறநா. 331 : 6 - 10, 334 : 5 - 7).

14. வேட்டக்குடி - வேட்டுவர் வீடு.

15 - 6. உடும்புசெய் பாணி - உடும்புத் தோலாற் செய்த கைச்சரடு.

17. வம்பு - கச்சு.

19. கொண்டது பரிசில் - பகைவரோடு போர் செய்ததற்காக அரசரிடம் பெற்ற பொருளே பாணர் முதலியோர்க்கு அவன் கொடுக்கும் பரிசிலாகும். (௩௩௩)

(௩௩௪) காமரு பழனக் கண்பி னன்ன
தூமயிர்க் குறுந்தா ணெடுஞ்செவிக் குறுமுயல்
புன்றலைச் சிருஅர் மன்றத் தார்ப்பிற்
படப்பொடுங் கும்மே....பின்பு...
..........................னுரே மனையோள்
பாண ரார்த்தவும் பரிசில ரோம்பவும்
ஊனொலி யரவமொடு கைதூ வாளே
உயர்மருப் பியானைப் புகர்முகத் தணிந்த
பொலம்.............................ப்
பரிசில் பரிசிலர்க் கீய
உரவுவேற் காளையுங் கைதூ வானே.

(பி - ம்.) 5 'மனையோர்' 6 'ரோம்பும்' 7 'கைத்தூஉவாளே' 10 'பரிசிலர்'

திணையும் துறையும் அவை.

மதுரைத் தமிழக்கூத்தனுர்.

(கு - ரை.) 1. கண்பு - ஒருவகைக் கோரை; "கண்பின், புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்" (பெரும்பாண். 220 - 21); "களிறு மாய் செருந்தியொடு கண்பமன் றூர்தர" (மதுரைக். 172); "கண்பமல் பழனங் கமழ" (மலைபடு. 454); "கண்பகத்தின் வாரணமே" (தே. திருஞா. தோணிபுரம், "வண்டரங்க" 3).

1. புறநா. 333 : 3.

4. படப்பு = படப்பை - வைக்கோற் போர்.

3 - 4. "புன்றலைச் சிருஅர் வில்லெடுத் தார்ப்பின்........மன்றிற் பாயும் வன்புலத் ததுவே" (புறநா. 322 : 4 - 6).

6. ஆர்த்த - நிறைய உண்பிக்க; "ஏதிலா ராரத் தமர்பசிப்பர்" (குறள், 837).

7. ஊனொலியரவம் - ஊனொலுண்டாகிய ஆரவாரம்; "புள்ளிமிழ்ந் தன்ன, ஊனொலி யரவம்" (புறநா. 173 : 3 - 4). கைதூவாள் - கையொழியாள்; "கள்ளுண வாட்டியுங் கைதூ வாளே" : புறத் திரட்டிற் கண்டது இது.

மனையோள் (5) கைதூவாள் (7) 11. காளை - தலைவன்.

8 - 11. 'ஒன்னார் யானை யோடைப் பொன்கொண்டு, பாணர் சென்னி பொலியத் தைஇ", "அண்ணல் யானை யணிந்த, பொன்செ யோடைப் பெரும்பரி சிலனே" (புறநா. 126 : 1 - 2, 326 : 14 - 5).

(௩௩௪)

(௩௩௫) அடலருந் துப்பின்...........
.. ..குருந்தே முல்லையென்
றிந்நான் கல்லது பூவு மில்லை
கருங்கால் வரகே யிருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொ
டிந்நான் கல்ல துணவு முல்லை
துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே.

(பி - ம்.) 7 'பாணன் பறையன் றுடியன் கடம்பனென்று'

திணையும் துறையும் அவை.

மாங்குடிகிழார் (பி - ம். மாறுகுடிகிழார்).

(கு – ரை.) 1. துப்பு - வலி.

4. "வன்பாலாற் கருங்கால் வரகின்" (புறநா. 384 : 4).

7 - 8. 'இனிப் பலவயினானும்......முடிபின செய்யுளு ளனவே, சிலவயினான் அஃறிணை விரவாது உயர்திணையானெண்ணி அஃறிணை முடிபிற்றாகலும் உண்டு, செய்யுளகத்து; உ - ம் : பாணன்...குடியு மில்லை என வரும்' (தொல். கிளவி. சூ. 51, இளம்.); 'பலவயினானு மென்றதனாற் சிலவயினாற்றிணைவிரவாது உயர்திணையானெண்ணி அஃறிணையான் முடிவன கொள்கவென்பது; உ - ம்: பாணன்.......குடியு மில்லை : எனவரும்' (தொல். கிளவி. சூ. 51, கல்.) 'பாணன்......குடியு மில்லை : என......உரையாசிரியர் கூறினாராலெனின், பாணன் முதலாயி னாரைக் குடியென்று சுட்டியவழிக் குடிக்கு ஏற்ற தொகைகொடுத்தல்

வழுவன்மையான், அவ்வுரை போலியுரை யென்க; குடியென்று சுட்டாதவழிப் பாணன் பறையன் றுடியன் கடம்பனென்று அந்நால்வரு மல்லது குடியில்லை யென்றேயாம்' (தொல். கிளவி. சூ. 51, சே.); 'பாணன் பறையன்......குடியு மில்லையென்றது பாண்குடி பறைக்குடி யெனக் குடியைச் சுட்டி நில்லாது பாணன் பறையன் எனப் பால்காட்டி நிற்றலான் உயர்திணைப்பொருள் நின்று அஃறிணை முடிபு கொண்டன வேயாம்' (தொல். கிளவி, சூ. 51, ந); 'பாணன் பறையன்......குடியு மில்லை: என்பது உயர்திணை அஃறிணையான் முடிந்தது; இவ்வழு யாண்டு அமைக்கப்படுமோவெனின், அது வழுவாயினன்றே அமைக்க வேண்டுவது! குடியென்பதனை எல்லாவற்றோடும் கூட்டியுரைக்கப் படுதலின் வழாநிலையாமென்க' (நன். சூ. 377, மயிலை.); 'பாணன்... குடியுமில்லை : என உயர்திணையெண்ணி அஃறிணை முடிபினவாய வழு யாண்டமைக்கப்படுமெனிற் குடியென்பதனைப் பாணன் முதல் நான்கோடும் கூட்டி யுரைக்கப்படுதலின் வழாநிலையாமென்க' (நன். வி. சூ. 378); 'பாணன்...குடியுமில்லை : எனத் திணைவிரவாது உயர் திணையானெண்ணி அஃறிணையான் முடிந்த இவ்வழு யாண்டமைக்கப் படுமோ வெனின், பாணன் முதலாயினுரைக் குடியென்று சுட்டியவழிக் குடிக்கு ஏற்ற தொகைகொடுத்தல் வழுவன்மையான் அமைத்தல் யாண்டைய தென்க' (இ. வி. சூ. 298, உரை); 'மக்கட்சுட்டென்புழி... அங்ஙன முணர்த்திற்றேல், பாணன்......குடியுமில்லை : என்புழிப் பாணன் முதலியன போல மக்களென்பது ஆண்டு அஃறிணைச்சொல் லாதல் வேண்டும்; வேண்டவே, 'அஃதல பிறவே யென அஃறிணைச் சுட்டுப்பெயராற் கூறுது அவரல பிறவென்றல் திணைவழுவாய் முடியு மாதலின் அஃதாசிரியர் கருத்தன்றென்றொழிக' (தொல். சூத்திர விருத்தி.).

10. புறநா. 301 : 6, குறிப்புரை.

11 - 2. 'பரவுதல்' என்னும் உரிச்சொல் வழுத்துதலாகிய குறிப் புணர்த்தியதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 86, சே.; 84, ந.; இ. வி. சூ. 281, உரை. (௩௩௫)

(௩௩௬) வேட்ட வேந்தனும் வெஞ்சினத் தினனே
கடவன கழிப்பிவ டந்தையுஞ் செய்யான்
ஒளிறுமுகத் தேந்திய வீங்குதொடி மருப்பிற்
களிறுங் கடிமரஞ் சேரா சேர்ந்த
ஒளிறுவேன் மறவரும் வாய்மூழ்த் தனரே
இயவரு மறியாப் பல்லியங் கறங்க
அன்னோ, பெரும்பே துற்றன் றிவ் வருங்கடி மூதூர்
அறனிலண் மன்ற தானே விறன்மலை
வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்

முகைவனப் பேந்திய முற்ரு விளமுலைத்
தகைவளர்த் தெடுத்த நகையொடு
பகைவளர்த் திருந்தவிப் பண்பி ருயே.

(பி - ம்.) 1 'பெருஞ்சினத்தனனே' 2 'கெடவனகறிபபிள்' 5 'வாயுமூழ்த்தனரே' 7 'றில்லங்கடி மூதூரறனிலமனற' 12 'பண் பிற்ருமே'.

திணை - காஞ்சி; துறை - மகட்பாற்காஞ்சி.

பரணர்.

(கு - ரை.) 1. வேட்ட - மணஞ்செய்தற்கு விரும்பிய.

2. கழிப்பு - கழித்தலை.

1 - 2. புறநா. 346 : 1 – 3.

4. கடிமரம் - காவன்மரம். 5. மூழ்த்தனர் - மூடினர்; முகிழ்த் தனர்.

6. இயவர் - வாச்சியக்காரர்,

7. பெரும்பேதுற்றன்று - பெரிய மயக்கத்தை யடைந்தது.

8. மன்ற - நிச்சயமாக. விறன்மலை : "விறன்மலை வியலறை" (கலித். 53 : 2).

9 - 10. "முதிர்கோங்கின் முகையென...... ....பெருத்தநின் னிளமுலை" (கலித். 56 : 23 - 4) முகை - அரும்பு.

11. நகை - மகிழ்ச்சி. தாய் (12) அறனிலள் (8). (௩௩௬)

(௩௩௭) ஆர்கலி யினனே சோணுட் டண்ணல்
கவிகை மண்ணுள் செல்வ ராயினும்
வாள்வலத் தொழியப் பாடிச் சென்ருஅர்
வாரெரு கமலர........................ ....
ஈத லானு விலங்குதொடித் தடக்கைப்
பாரி பறம்பிற் பனிச்சுனை போலக்
காண்டற் கரிய ளாகி மாண்ட
பெண்மை நிறைந்த பொலிவொடு மண்ணிய
துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென
அகிலார் நறும்புகை யைதுசென் றடங்கிய
கபில நெடுநகர்க் கமழு நாற்றமொடு
மனைச்செறிந் தனளே வாணுத லினியே
அற்றன் ருகலிற் றெற்றெனப் போற்றிக்
காய்நெற் கவளந் தீற்றிக் காவுதொறும்
கடுங்கண் யானை காப்பன ரன்றி

வருத லானுர் வேந்தர் தன்னையர்
பொருசமங் கடந்த வுருகெழு நெடுவேற்
குருதி பற்றிய வெருவரு தலையர்
மற்றிவர் மறனு மிற்ருற் றெற்றென
யாரா குவர்கொ ருமே நேரிழை
உருத்த பல்சுணங் கணிந்த
மருப்பிள வனமுலை ஞெமுக்கு வோரே,

(பி - ம்.) 1 'ஆர்கலிவினனே சேணுட்டண்ணல்' 3 'பாடிச் சேரார்' 11 'நெடுநககா' 16 'தன்னையலர்' 18 'தலைய' 21 'உரித்தல் பல்'

திணையும் துறையும் அவை.

கபிலர்.

(கு - ரை.) 1. அண்ணல் - தலைவன். 5. ஈதல் ஆனு - கொடுத்தல் தவிராத.

6. "பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்" (176) என முன்னும் இச்சுனை பாராட்டப்பட்டுள்ளது.

2 - 6. அரசராக இருந்தாலும் போர் செய்தலையொழித்துப் புகழ்ந்து பாடிக்கொண்டு வருவராயின், அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் இயல்பினனென்று பாரியின் கொடைச் சிறப்புக் கூறினுர்; புறநா. 109 - ஆம் பாட்டாலும் விளங்கும்.

6 - 7. "மன்னுயி ரறியாத் துன்னரும் பொதியிற், சூருடை யடுக்கத் தாஅங் கடுப்ப, வேனி லானே தண்ணியள்" (குறுந். 376 : 1 - 3); "பொன்னணி திகிரியஞ் செல்வன் பொற்புடைக், கன்னிய மகளிரிற் காண்டற் கரியன, நன்மணி புரித்தன வாவி நான்குள" (சீவக. 1203).

8. பெண்மை - அமைதித்தன்மை; சீவக. 356, ந.

9 - 10. விரிந்த துகில் புகைக்கு உவமை; முருகு. 138.

11. பாடினுேர்பெயர் இதிற் குறிப்பிக்கப்பெற்றுள்ளது.

12. வாணுதல் - கன்னி.

14. நெற்கவளம் : புறநா. 44 : 2, குறிப்புரை. தீற்றி - உண்பித்து; சீவக. 3105.

16. வேந்தர் - மணம் பேசவந்த அரசர். தன்னையர் - தமையன்மார்.

21. உருத்தல் - தோன்றல்.

22. ஞெமுக்குவோர் - அழுத்துவோர்; சீவக. 2552. (௱௱எ)

(௩௩௮) ஏர்பரந்தவய னீர்பரந்தசெறுவின்
நென்மலிந்தமனைப் பொன்மலிந்தமறுகிற்
படுவண் டார்க்கும் பன்மலர்க் காவின்
நெடுவே ளாதன் போந்தை யன்ன
பெருஞ்சீ ரருங்கொண் டியளே கருஞ்சினை
வேம்பு மாரும் போந்தையு மூன்றும்
மலைந்த சென்னிய ரணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினுந் தற்றக
வணங்கார்க் கீகுவ னல்லன்வண் டோட்டுப்
பிணங்குகதிர்க் கழனி நாப்ப ணேமுற்
றுணங்குகல னாழியிற் றோன்றும்
ஓரெயின் மன்ன னொருமட மகளே.

(பி - ம்.) 1 'ஏர்பரந்த வயலின்' 2 'நென்மலையிற்' 'டார்க்குங் காவிற்பஃளி', 'டார்க்குங்காவிற்பஃறுளி' 4 'நெடுவேலாதன்' 7 'செனனியாரணிந்த' 'சென்னியர்குனிந்த' 11 'றுணங்குகனாழியிற', 'றுணங்குகராழியிற்'

திணையும் துறையும் அவை.

குன்றூர்கிழார்மகனார்.

(கு - ரை.) 4. போந்தை - ஓரூர்.

5. கொண்டிச்சீரள் - மிகுதியான சீரையுடையவள்; "அன்ப தாய்க், கொண்டி யாயின வாறென்றன் கோதையே" (தே. திருநா. திருவாரூர். 'கொக்கரை' 7).

6. ஆர் - ஆத்தி. போந்தை - பனை.

5 - 6. கருஞ்சினைவேம்பு : "கருஞ்சினை, யரவாய் வேம்பு" (பொருந. 143 - 4).

8. கொற்றம் - அரசுரிமை. தற்றக - தனக்குத் தக.

6 - 9. விரும்புவோர் பாண்டியன் முதலிய முடிமன்னர் மூவரா யிருப்பினும் தன்னை வணங்கார்க்குத் தன் மகளை ஈவானல்லன் இவன்.

10. கதிர் - நெற்கதிர்.

11. உணங்குதல் - உலர்தல். கலன் - கப்பல். ஆழி - கடல்.

12. எயில் – மதில். ஓரெயின்மன்னன் : அகநா. 373 : 18.

10 -12. சூழ்ந்த கழனிக்குக் கடலும் எயிலுக்குப் புறமுலர்ந்த கப்பலும் உவமம். 'மருதநிலத்து மதிலாதல்...அகநாடுபுக்கவரருப்பம் வௌவி எனப் பாட்டிற் கூறியவாற்றானும், பிணங்குகதிர்க் கழனி... மன்னனென்றமையானும்...உணர்க' (தொல். புறத்திணை. சூ. 9, ந.).

(௩௩௮)

(௩௩௯) வியன்புலம் படர்ந்த பல்லா நெடிவேறு
மடலை மாணிழ லசைவிடக் கோவலர்
வீ தனை முல்லைப் பூப்பறிக் குந்து
குறுங்கோ லெறிந்த நெடுஞ்செவிக் குறுமுயல்
நெடுநீர்ப் பரப்பின் வாளையொ டுகளுந்து
தொடலை யல்குற் றொடித்தோண் மகளிர்
கடலாடிக் கயம்பாய்ந்து
கழிநெய்தற் பூக்குறூஉந்து
பைந்தழை துயல்வருஞ் செறுவிறற....
....லத்தி
வளர வேண்டு மவளே யென்றும்
ஆரம ருழப்பது மமரிய ளாகி
முறஞ்செவி யானை வேந்தர்
மறங்கெழு நெஞ்சங் கொண்டொளித் தோளே.

(பி - ம்.) 1 - 2 'வெறறி, மடலை' 12 'ஆரமரொழிப்பதுவுமமரிய'

திணையும் துறையும் அவை.

....

(கு - ரை.) 1. புலம் - மேய்தற்குரிய நிலம்.

2. அசைவிட - அசையிட.

1 - 2. ஏறு அசைவிட.

3. பூப்பறிக்குந்து - பூக்களைப் பறிக்கும்; "புதன்முல்லைப் பூப்பறிக் குந்து" (புறநா. 352 : 4).

4. கோலாலெறிந்த முயல்; "மாலை வெண்காழ் காவலர் வீச, நறும்பூம் புறவி னொடுங்குமுய லிரியும்" (ஐங்குறு. 421).

5. உகளுந்து - துள்ளும்.

6. தொடலை - மணிக்கோவைகளால், தொடுக்கப்பட்ட மேகலை.

8. பூக்குறூஉந்து - பூக்களைப் பறிக்கும்; குறுதல் - பறித்தல்.

12. அமரியளாகி - விரும்பியவளாய்.

13. முறம்போலும் காதுகளையுடைய யானை; "முறஞ்செவி வாரணம்" (கலித். 42 : 2; சிலப். 10 : 248); "முறஞ்செவி யானையுந் தேருமாவும்" (மணி. 19 : 121). (௩௩௯)

(௩௪௦) அணித்தழை நுடங்க வோடி மணிப்பொறிக்
குரலங் குன்றி கொள்ளு மிளையோள்
மாமகள் ....
.........லென வினவுதி கேணீ
வெடுப்பவெ ....
.......................மைந்தர் தந்தை
இரும்பனை யன்ன பெருங்கை யானை
கரந்தையஞ் செறுவிற் பெயர்க்கும்
பெருந்தகை மன்னர்க்கு வரைந்திருந் தனனே.

(பி - ம்.) 1 'தழைத் துடங்க', 'பணிப்பொரி' 2 'கூறலங்குன்றி' 5 'யெடுப்ப' 7 'மிகுபனை', 'இருபனை'.

திணையும் துறையும் அவை.

அ. ....

(கு - ரை.) 1. தழை - தளிர்களாலும் பலவகைப் பூக்களாலும் அமைக்கப்பட்ட ஒருவகை ஆடை; "அம்பூந் தொடலை யணித்தழை" (புறநா. 341 : 2); "தழையுங் கோதையு மிழையு மென்றிவை, தைஇ யினர் மகிழ்ந்து திளைஇ விளையாடும், மடமொழி யாயத் தவருள்" (கலித். 102 : 5 - 7),

2. குரலங்குன்றி - குன்றிமணிக் கொத்தினை.

7. "பனைக்கை மும்மத வேழ முரித்தவன்" (தே. திருநா கோயில். 'பனைக்கை' 1).

8. கரந்தை - ஒருவகைப் பூடு. செறு - வயல்.

7 - 8. "காய்த்த கரந்தை மாக்கொடி விளைவயல், வந்திறை கொண்டன்று தானை" (பதிற். 40 : 5 - 6). (௩௪௦)

(௩௪௧) வேந்துகுறை யுறவுங் கொடாஅ னேந்துகோட்
டம்பூந் தொடலை யணித்தழை யல்குல்
செம்பொறிச் சிலம்பி னிளையோ டந்தை
எழுவிட் டமைத்த திண்ணிலைக் கதவின்
அரைமண் ணிஞ்சி நாட்கொடி நுடங்கும்
....
புலிக்கணத் தன்ன கடுங்கட் சுற்றமொடு
மாற்ற மாறான் மறலிய சினத்தன்
பூக்கோ ளெனவேஎய்க் கயம்புக் கனனே
விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியற்

சுணங்கணி வளமுலை யவளொடு நாளை
மணம்புகு வைக லாகுத லொன்றோ
ஆரம ருழக்கிய மறங்கிளர் முன்பின்
நீளிலை யெஃக மறுத்த வுடம்பொடு
வாரா வுலகம் புகுத லொன்றெனப்
படைதொட் டனனே குருசி லாயிடைக்
களிறுபொரக் கலங்கிய தண்கயம் போலப்
பெருங்கவி னிழப்பது கொல்லோ
மென்புனல் வைப்பினித் தண்பணை யூரே.

(பி - ம்.) 2 'யணிந்ததழை' 3 'னிளையோடாதை' 5 'நுடங்குப' 9 'பூக்கொளெனபகயமபுக' 10 'வயங்கிழைப் பொலிந்தவே......ா' 12 'வைகலாகுக வொன்றோ' 14 'நேரிலையெஃகம்' 15 'ஓராவுலகம்' 17 'களிறுபொறகலங்கிய மதகயம்' 18 'பெருமகவனிழப்' 19 'மென் புலவைப்பின்', 'கணையூர்'.

திணையும் துறையும் அவை.

பரணர்.

(கு - ரை.) 1. வேந்து - அரசன். குறையுறவும் - கேட்பவும். கோடு - பக்கம்.

2. தொடலை - மாலை; "தொடலைக் குறுந்தொடி" (குறள், 1135) தழை : " அணித்தழை நுடங்க வோடி" (புறநா. 340 : 1).

தந்தை (3) கொடான் (1).

4. 'எழு' இன்னதென்பது "எழுவுஞ் சீப்பும்" (சிலப். 15 : 215 என்பதன் உரைகளால் அறியப்படும்; "சீப்புள் ளுறுத்துத் திண் ணெழுப்) போக்கிக், காப்புள் ளுறுத்த கடிமதில் வாயில்" (பெருங். 1. 43 : 163 - 4).

5. அரைமண் இஞ்சி - அரைத்த மண்ணால் அமைக்கப்பட்ட மதில். நாட்கொடி - நல்ல நாளிலே கட்டினகொடி; நாடோறுஞ்செய்த வெற்றிக்குக் கட்டின கொடியுமாம்; "நாட்கொடி நுடங்கும் வாயில்" (சிலப். 15 : 217 - 8); "நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி" (மதுரைக். 368).

7. கடுங்கட்சுற்றம் - வீரச்சுற்றம்; "வயப்புலி போலத், துஞ்சாக் கண்ணர்" (மதுரைக். 643 - 4), "கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தால்......நிணநிரை வேலார் நிலை", "புலிக்கணமுஞ் சீயமும் போர்க்களிறும் போல்வார்", "குயவரி வேங்கை யனைய—வயவர்" (பு. வெ. 9, 25, 58), "மைதோய் வரையி னிழியும் புலிபோல மைந் தன், பெய்தாம மாலைப் பிடியினிழிந் தேகி" (சீவக. 2135) என்ப வற்றிலும் வீரர்க்குப் புலி உவமிக்கப்பட்டிருத்தல் காண்க.

8. மாற்றம் - மாறுபட்டுச் சொல்லுஞ் சொல். மறலிய - போர் செய்தற் கெழுந்த.

9. போர்க்குரிய பூவை அணிந்துகொண்டு போருக்குப் புறப்படுக வென்று தன் வீரரை ஏவிவிட்டுத் தான் நீராடுதற்குப் பொய்கையின் கட் புகுந்தான்; போர் செய்தற்குப் புறப்படுமுன் அரசர் நீராடல் மரபு; புறநா. 79 : 1, குறிப்புரை.

10. வேளா - மணஞ்செய்யப்படாத.

14. எஃகம் - வேல்.

15. வாராவுலகம் - வீரசுவர்க்கம்.

12 - 5. ஒன்றோ, ஒன்று; எண்ணிடைச்சொல்; புறநா. 344 : 4 - 6. ஊர் (19) கவினிழப்பது கொல்லோ (18).

இச்செய்யுளின் பொருள், நொச்சித்திணைக்கண்ணதாகிய மகண் மறுத்துமொழிதல் என்னுந்துறைக்கும் இடனாகின்றது. (௩௪௧)

(௩௪௨) கானக் காக்கைக் கலிச்சிற கேய்க்கும்
மயிலைக் கண்ணிப் பெருந்தோட் குறுமகள்
ஏனோர் மகள்கொ லிவளென விதுப்புற்
றென்னொடு வினவும் வென்வே னெடுந்தகை
திருநயத் தக்க பண்பினிவ ணலனே
பொருநர்க் கல்லது பிறர்க்கா காதே
பைங்காற் கொக்கின் பகுவாய்ப் பிள்ளை
மென்சேற் றடைகரை மேய்ந்துண் டதற்பின்
ஆர லீன்ற வையவி முட்டை
கூர்ந விறவின் பிள்ளையொடு பெறூஉம்
தண்பணைக் கிழவனிவ டந்தையும் வேந்தரும்
பெறாஅ மையிற் பேரமர் செய்தலிற்
கழிபிணம் பிறங்குபோர் பழிகளி றெருதா
வாடக வைகலு முழக்கும்
மாட்சி யவரிவ டன்னை மாரே.

(பி - ம்.) 8 'மென்சொற்றடைகரை', 'மேயத்தூண்கற்பினாரல்', 'மேய்ந்துண்டகற்பினுஅலீன்ற' 10 'கூனலிறவு' 12 'பெருமையின்மை யிறபேரமர்' 14 'வாடகைவைகலு' 14 - 5 'முழக்கி மாட்சியிலர்'.

திணையும் துறையும் அவை.

அரிசில்கிழார்.

(கு - ரை.) 1. கலிச்சிறகு - தழைத்தலையுடைய சிறை.

2. மயிலை - இருவாட்சி.

3. ஏனோர் மகள்கொல் - யாவருடைய மகளோ? விதுப்புற்று - விரைந்து; "கண்விதுப்பழிதல்" (குறள், அதி. 118) என்பதன் பொருளால் உணர்க. 4. நெடுந்தகை : விளி.

5. நயத்தக்க - விரும்பத்தக்க. நலன் : எழுவாய்.

6. பொருநர் - போர்வீரர்.

7 - 8. கொக்கின்பிள்ளை மேய்ந்தபின்.

9. ஆரல் - ஒருவகை மீன். ஐயவி - வெண்சிறுகடுகு. ஆரல்மீன் முட்டைக்கு ஐயவியுவமை. 10. இறவு - இருமீன்.

11. தண்பணை - மருதநிலம். கிழவன் - உரியவன்.

13. போர்பு - போர். களிறு எருதாக; "படுபிணப் பல்போர் பழிய வாங்கி, எருதுகளி றாக வாண்மட லோச்சி" (புறநா. 370 : 15 - 6).

14. வாள்தக. 15. தன்னைமார் - தமையன்மார். (௩௪௨)

(௩௪௩) மீனெடுத்து நெற்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து
மனைக்குவைஇய கறிமூடையாற்
கலிச்சும்மைய கரைகலக்குறுந்து
கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து
மலைத்தாரமுங் கடற்றாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்குகடன் முழவின் முசுறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரைய ரல்லோர் வரையல ளிவளெனத்
தந்தையுங் கொடாஅ னாயின் வந்தோர்
வாய்ப்பட விறுத்த வேணி யாயிடை
வருந்தின்று கொல்லோ தானே பருந்துயிர்த்
திடைமதிற் சேக்கும் புரிசைப்
படைமயங் காரிடை நெடுந லூரே.

(பி - ம்.) 3 'மனைமறுக்குவைஇய' 4 'சும்மையகுறுந்து', 'சும்மையக்குந்து' 10 'முழங்கடன்', 'முசிறி' 12 'வரையலனிவனலனே' 15 'கொல்லெதானே'

திணையும் துறையும் அவை.

பரணர்.

(கு - ரை.) 1. நொடுத்து - விற்று; "வலைவல் பாண்மகன் வாலெ யிற்று மடமகள், வராஅல் சொரிந்த வட்டியுண் மனையோள், யாண்டு கழிவெண்ணெ ணிறைக்கு மூர", "அஞ்சி லோதி யசைநடைப் பாண் மகள், சின்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம்" (ஐங்குறு. 48, 49).

'நொடை - விலை; மீனொடுத்து நெற்குவைஇ யென்றார் புறப்பாட்டினும்' (சிலப். 5 : 24, அடியார்.).

2. அம்பி - தோணி. மறுக்குந்து - மறுகச்செய்யும்.

3. கறிமூடை - மிளகுபொதி; "பொதிமூடைப் போரேறி" (பட்டினப். 137).

4. கலிச்சும்மைய - மிக்க முழக்கத்தையுடைய. கலக்குறுந்து - கலக்கும்.

5. கலம் - கப்பல். பொன்பரிசத்தை.

6. தோணி - ஓடம். சேர்க்குந்து - சேர்க்கும்.

7. தாரம் - பலபண்டம்.

8. தலைப்பெய்து - கலந்து.

9. புனலங்கள்ளென்றது கள்ளின் மிகுதிபற்றி. குட்டுவன் - குட்டநாட்டை யுடையவன்; "போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ" (பதிற். 23 : 9).

'பொன்' என்பது 'பொலம்' என்று செய்யுட்கண் வருமென்பதற்குப் பொலந்தார்க் குட்டுவனென்பது மேற்கோள்; தொல். புள்ளி. சூ. 61, ந.

10. முசுறி : சேர நாட்டில் உள்ள ஓர் ஊர்.

9 - 10. கள்ளினையுடைய முசுறி.

12. புரையர் - ஒத்தவர். வரையலள் - மணஞ்செய்யப்படாள்; "நிரலல் லோர்க்குத் தரலோ வில்லென" (புறநா. 345 : 14).

14. வாய்ப்பட - வழிப்பட. ஏணி - மதிலிற் சார்த்தி ஏறுதற் குரியது; எல்லையுமாம்.

15 - 6. பருந்து உயிர்த்து இடைமதில் சேக்கும் - பருந்துகள் இடை மதிலில் தங்கி இளைப்பாறும்; "பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறை" "பருந்திருந் துகக்கும் பன்மா ணல்லில்" (மதுரைக். 231, 502).

17. "எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பின்" (புறநா. 178 : 7); "மயங்கமர் மாறட்டு மண்வௌவி வருபவர்" (கலித். 31 : 9). (௩௪௩)

(௩௪௪) செந்நெ லுண்ட பைந்தோட்டு மஞ்ஞை
செறிவளை மகளி ரோப்பலிற் பறந்தெழுந்து
துறைநணி மருதத் திறுக்கு மூரொடு
நிறைசால் விழுப்பொரு டருத லொன்றோ
புகைபடு கூரெரி பரப்பிப் பகைசெய்து
பண்பி லாண்மை தருத லொன்றோ
இரண்டினு ளொன்று காமையோ வரிதே
காஞ்சிப் பனிமுறி யாரங் கண்ணி......
கணிமே வந்தவ ளல்குலவ் வரியே.

(பி - ம்.) 2 'செற்றிவளை மகளிரோம்ப விற்பிறந் தெழுத்து' 3 'துறைநளி'

திணையும் துறையும் அவை. (பி - ம். திணை - வாகை; துறை - மூதின்முல்லை).

.................அடை நெடுங்கல்வியார்.

(கு - ரை.) 1. மஞ்ஞை - மயில்.

2. ஓப்பலின் - ஓட்டுதலால்.

3. துறைநணிமருதம் - நீர்த்துறைக்கு அண்ணிதான மருதமரம்; புறநா. 154 : 1, 243 : 6 - 7; "மருதிமிழ்ந் தோங்கிய பெருந்துறைத், ததைந்த காஞ்சி", "துறைநணி மருத மேறி" (பதிற். 23 : 18, 27 : 6). இறுக்கும் - தங்கும்.

4 - 6. ஒன்றோ : எண்ணிடைச்சொல்; புறநா. 341 : 12 - 5.

7. இரண்டனுள் ஒன்று ஆகும்.

8. காஞ்சிமுறி - காஞ்சித்தளிர். (௩௪௪)

(௩௪௫) களிறணைப்பக் கலங்கின, காஅ
தேரோடத் துகள்கெழுமின, தெருவு
மாமறுகலின் மயக்குற்றன, வழி
கலங்கழாஅலிற், றுறை, கலக்குற்றன
தெறன்மறவ ரிறைகூர்தலிற்
பொறைமலிந்து நிலனெளிய
வந்தோர் பலரே வம்ப வேந்தர்
பிடியுயிர்ப் பன்ன கைகவ ரிரும்பின்
நோவுற ழிரும்புறங் காவல் கண்ணிக்
கருங்கண் கொண்ட நெருங்கல் வெம்முலை

மைய னோக்கிற் றையலை நயந்தோர்
அளியர் தாமேயிவ ளன்னை மாரே
செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
நிரலல் லோர்க்குத் தரலோ வில்லெனக்
கழிப்பிணிப் பலகையர் கதுவாய் வாளர்
குழாஅங் கொண்ட குருதியம் புலவொடு
கழாஅத் தலையர் கருங்கடை நெடுவேல்
இன்ன மறவர்த் தாயினு மன்னோ
என்னா வதுகொ றானே
பன்னல் வேலியிப் பணைநல் லூரே.

(பி - ம்.) 3 'மாவழங்கலின்' 4 'கலக்கானாதே' 5 'செறன் மறவர்' 10 'நெருங்கண் வெம்முலை', 'நெடுங்கண் மென்முலை' 14 'நீரலல்லோர்க்குந்தரல்' 15 'ததுவாய்' 18 'இன்னம்பிறவாத தாயினும்' 20 'பன்னெல் வேலி'

திணையும் துறையும் அவை.

அவனை அவர்.

(கு - ரை.) 1. "வினைநவில் யானை பிணிப்ப, வேர்துளங் கினநம் மூருண் மரனே", "செந்நுதல் யானை பிணிப்ப, வருந்தல மன்னெம் பெருந்துறை மரனே" (புறநா. 347 : 12 - 3, 348 : 8 - 9).

1 - 2. இவை சீர்கூனாய் வந்ததற்கு மேற்கோள்; யா. வி. ஒழிபு. சூ. 2.

3. இவ்வடி வஞ்சியடியினிறுதியில் 'வழி' எனத் தனிச்சொல் வந்ததற்கு மேற்கோள்; யா. வி. ஒழிபு. சூ. 1; இ. வி. சூ. 751, உரை.

4. கழாலின் - கழுவுதலால்.

வஞ்சியடியின் நடுவில் 'துறை' என்பது தனிச்சொல்லாகியும் கூனாகியும் வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; யா. வி. ஒழிபு. சூ. 1, 2; இ. வி. சூ. 751, உரை.

5. இறைகூர்தல் - தங்குதல். 6. பொறை - பாரம்.

7. வம்ப வேந்தர் - புதிய அரசர்.

6 - 7. சேனைப்பாரத்தால் நிலம் நெளிதல் : புறநா. 23 : 15; "காரிவினை மேக மன்ன...நிலனெளி பரந்த வன்றே" (சீவக. 433).

8. கைகவரிரும்பு - உலைத்துருத்தியின் வாயிரும்பு.

13. செருப்புகல் வேண்டி - போரைவிரும்பி; "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" (புறநா. 31 : 9).

14. நிரல் - வரிசை. தருதலில்லையென்று; புறநா. 343 : 12.

15. கழிகளாற் கட்டப்பட்ட கேடகத்தை யுடையர், "வள்ளித் தண்டை" (சீவக. 2218). கதுவாய் - வடு; "எறிந்திலை முறிந்த கதுவாய் வேலின்" (புறநா. 347 : 4).

17. கழாத்தலையர் - கழுவாத தலையினையுடையர்.

19. மு. புறநா. 347 : 9.

18 - 9. 'அன்னோ' என்பது இரக்கக்குறிப்புணர்த்தியதற்கு இவ் வடிகள் மேற்கோள்; தொல். இடை. சூ. 34, ந.

20. பன்னல் - பருத்தி; "பருத்தி வேலிச் சீறூர்", "பருத்தி வேலி ...அங்குடிச் சீறூர்" (புறநா. 299 : 1,324 : 7 - 8).

மு. காஞ்சித்திணைத்துறைகளுள், மகட்பாற்காஞ்சிக்கு மேற் கோள் காட்டி, 'நிரலல்லோர்க்குத் தரலோவில்லென வென்றலின், அரசர்க்கு மகட்கொடைக்குரியரல்லாத அணைநிலைவகையோர்பாற் பட்டது' என்பர்; தொல். புறத்திணை. சூ. 24, ந. (௩௪௫)

(௩௪௬) பிற......................ளபாலென மடுத்தலின்
ஈன்ற தாயோ வேண்டா ளல்லள்
கல்வியெ னென்னும் வல்லாண் சிருஅன்
ஒல்வே னல்ல னதுவா யாகுதல்
அழிந்தோ ரழிய வொழிந்தோ ரொக்கற்
பேணுநர்ப் பெருஅது விளியும்
புன்றலைப் பெரும்பாழ் செயுமிவணலனே.

(பி - ம்.) 3 'கல்வியென்னும் வல்லான்' 4 'ஒல்வ...ாதுகுடியே'

திணையும் துறையும் அவை.

அண்டர்மகன் குறுவழுதி.

(கு - ரை.) 3 - 4. தன்மையின்கட் படர்க்கை வந்ததற்கு இவ்வடி கள் மேற்கோள்; நன். சூ. 379, மயிலை; நன். வி. சூ. 380; இ. வி. சூ. 300, உரை. (௩௪௬)

(௩௪௭) உண்போன் றனறுங் கள்ளி னிடச்சில
நாவிடைப் பஃறோ் கோலச் சிவந்த
ஒளிறொள வாடக் குழைந்தபைந் தும்பை
எறிந்திலை முறிந்த கதுவாய் வேலின்
மணநாறு மார்பின் மறப்போ ரகுதை
குண்டுநீர் வரைப்பிற் கூட லன்ன
குவையிருங் கூந்தல் வருமுலை சேப்ப

....
வென்ஞ வதுகொ ருனே......
விளங்குறு பராரைய வாயினும் வேந்தர்
வினை நவில் யானை பிணிப்ப
வேர்துளங் கினநம் மூருண் மரனே.

(பி - ம்.) 2 'பஃறெருகொலச்' 4 'கதுவாய்நேமி', 'கதுவாய்வாளர்' 5 'ரஃதை' 7 'வருமுமம வேநதாவினை நவிலயானை பிறணிப்ப' 'மணநாறு மாரபின மறபபொராலெசெபப' 12 'மூருணைமானே'

திணையும் துறையும் அவை.

கபிலர்.

(கு - ரை.) 4. கதுவாய்வேல் - வடுப்பட்ட வேல்; "கதுவாய் போகிய துதிவா யெஃகமொடு" (புறநா. 353 : 15).

5. அகுதை : ஓர் உபகாரி; புறநா. 233 : 3, குறிப்புரை.

6. கூடல் - மதுரை. 9. மு. புறநா. 345 : 19.

12 - 3. யானை கட்டின மரம்; புறநா. 345 : 1, 348 : 8 - 9. (௩௪௭)

(௩௪அ) வெண்ணெல் லரிஞர் தண்ணுமை வெரீஇக்
கண்மடற் கொண்ட தீந்தே னிரியக்
கள்ளரிக்குங் குயஞ் சிறுசின்
மீன்சீவும் பாண்சேரி
வாய்மொழித் தழும்ப னூணூ ரன்ன
குவளை யுண்க ணிவளைத் தாயே
ஈனு ளாயின ளாயி னூஉது
நிழறொறு நெடுந்தேர் நிற்ப வயின்றொறும்
செந்நுதல் யானை பிணிப்ப
வருந்தல மன்னெம் பெருந்துறை மரனே.

(பி - ம்.) 1 'வெரீஇப்பக்' 2 'கண்ணககொண்ட' 3 'கள்ளிரிக் குஞ் சிறுகனவும்', 'சிறுமீன்' 5 'தழும்பனூரனன' 7 'ஈனள்' 10 'வருந்தின'

திணையும் துறையும் அவை.

பரணர்.

(கு - ரை.) 1. "வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇப், பழனப் பல்புள் ளிரிய" (நற். 350); "வெண்ணெ லரிநர் பின்றைத் ததும்பும், தண்ணுமை வெரீஇய தடந்தா ணாரை", "வெண்ணெ லரிநர் மடிவாய்த் தண்ணுமை, பன்மலர்ப் பொய்கைப் படுபு ளோப்பும்"

(அகநா. 40 : 13 - 4, 204 : 10 - 11); "வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇச், செங்க ணெருமை யினம்பிரி பொருத்தல்" (மலைபடு. 471 - 2).

4. மு. மதுரைக். 269.

5. வாய்மொழி - மெய்ம்மொழி. தழும்பன் : ஓர் உபகாரி; வழுதுணைப்பெரும்பெயர்த்தழும்பனென்றும் இவன் வழங்கப்படுவன்; "பெரும்பு, ணேஎர் தழும்ப னூணூ ராங்கண்" (நற். 300 : 9 - 10); "பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன், கடிமதில் வரைப்பி னூணூர்" (அகநா. 227 : 17 - 8). (௩௪௮)

(௩௪௯) நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
கடிய கூறும் வேந்தே தந்தையும்
நெடிய வல்லது பணிந்துமொழி யலனே
இஃதிவர் படிவ மாயின் வையெயிற்
றரிமதர் மழைக்க ணம்மா வரிவை
மரம்படு சிறுதீப் போல
அணங்கா யினடான் பிறந்த வூர்க்கே.

(பி - ம்.) 1 'நுதிபல', 'நுதலவிளையாதுடை' 5 'றெரிமதர்' 6 'செநதீப போலடி'

திணையும் துறையும் அவை.

மதுரை மருதனிளநாகனார்.

(கு - ரை.) 4. படிவம் - விரதம்.

6 - 7. "முளையிள நெருப்பின் முதுக்குறைந் தனளே" (தொல். அகத். சூ. 54, ந. மேற்.) 4 - 7. தக்கயாகப்பரணி, 304, மேற்.

மு. காஞ்சித்திணைத்துறைகளுள், நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி, மகட்பாடு அஞ்சிய மகட்பாற்காஞ்சியென்னுந் துறைக்கு மேற்கோள் காட்டி, 'இது பெருஞ்சிக்கல்கிழான் மகட்கொடை மறுத்தது' என்பர்; தொல். புறத்திணை. சூ. 19, இளம்.; சூ. 24, ந. (௩௪௯)

(௩௫௦) தூர்ந்த கிடங்கிற் சோர்ந்த ஞாயிற்
சிதைந்த விஞ்சிக் கதுவாய் மூதூர்
யாங்கா வதுகொ றானே தாங்காது
படுமழை யுருமி னிரங்கு முரசிற்
கடுமான் வேந்தர் காலை வந்தெம்
நெடுநிலை வாயிற் கொட்குவர் மாதோ
பொருதா தமருவ ரல்லர் போருழந்
தடுமுரண் முன்பிற் றன்னைய ரேந்திய

வடிவே லெஃகிற் சிவந்த வுண்கட்
டொடிபிறழ் முன்கை யிளை யோள்
அணிநல் லாகத் தரும்பிய சுணங்கே.

(பி - ம்.) 7 'பொருந்தாது' 9 - 10 'சிவந்தபுணகட்டொடிமருள முனகை'

திணையும் துறையும் அவை.

மதுரையோலைக்கடைக் கண்ணம்புகுந்தாராயத்தனார் (பி - ம். கண்ணம் புகுதநராயத்தனார்.).

(கு - ரை.) 2. கதுவாய் : புறநா. 345 : 15, 347 : 4.

3. யாங்கு - எப்படி?

4. "இடிமுரசியம்ப" (பரி. 4 : 19).

9. "அமருண்கண், ஏந்துகோட் டெழில்யானை யொன்னாதார்க் கவன் வேலிற், சேந்து" (கலித். 57 : 9 - 11); "அடையார்த் துரந்த வருந்திற லயிலவன், படைதலைப் பெயர்த்த கறையெஃகம் போலக், கடைசிவந் தனவே கருங்கயன் மழைக்கண்" (நம்பி. சூ. 147, மேற்.).

(௩௫௦)

(௩௫௧) படுமணி மருங்கின பணைத்தாள் யானையும்
கொடிநுடங்கு மிசைய தேரு மாவும்
படையமை மறவரொடு துவன்றிக் கல்லெனக்
கடல்கண் டன்ன கண்ணகன் றானை
வென்றெறி முரசின் வேந்த ரென்றும்
வண்கை யெயினன் வாகை யன்ன
இவணலந் தாரா தமைகுவ ரல்லர்
என்னா வதுகொ றானே தெண்ணீர்ப்
பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை
தேங்கொண் மருதின் பூஞ்சினை முனையிற்
காமரு காஞ்சித் துஞ்சும்
ஏமஞ்சால் சிறப்பினிப் பணைநல் லூரே.

(பி - ம்.) 11 'காமர் நாஞ்சில்'

திணையும் துறையும் அவை.

மதுரைப் படைமங்கமன்னியார்.

(கு - ரை.) 1. "படுமணி யிரட்டு மருங்கின்" (முருகு. 80).

1 - 3. புறநா. 55 : 7 - 8, குறிப்புரை.

4. "கடலென, வானீர்க் கூக்குந் தானை" (புறநா. 17 : 36 - 7).

5. "வென்றெறி முரசின் வேந்தர்" (புறநா. 112 : 4).

6. எயினன் : ஒருபகாரி; வாகை : அவனுடைய ஊர்.

7. தருதல் தந்தையின் தொழில்.

வேந்தர் (5) அமைகுவரல்லர் (7)

8. என்னுவதுகொருனே : புறநா. 63 : 11, 345 : 19, 347 : 9.

10. தேம் - இனிமை. முனையின் - வெறுத்தால்.

11. காஞ்சி ஒருவகை மரம்.

ஊர் (12) என்னுவதுகொல்? (8) (௩௫௧)

(௩௫௨) தேஎங்கொண்ட வெண்மண்டையான்
வீ..................கறக்குந்து
அவல்வகுத்த பசுங்குடையாற்
புதன்முல்லைப் பூப்பறிக்குந்து
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
குன்றேறிப் புனற்பாயிற்
புறவாயாற் புனல்வள............
...............நொடைநறவின்
மாவண் டித்தன் வெண்ணெல் வேலி
உறந்தை யன்ன வுரைசா னன்கலம்
கொடுப்பவுங் கொளாஅ னெ............
......ர்தந்த நாகிள வேங்கையிற்
கதிர்த்தொளி திகழு நுண்பல் சுணங்கின்
மாக்கண் மலர்ந்த முலைய டன்னையும்
சிறுகோ லுளையும் புரவி ெ......................
.................யமரே.

திணையும் துறையும் அவை.

பரணர்.

(கு - ரை.) 1. தேம் - கள்.

3. அவல் - பள்ளம். குடை - பனமட்டையாற் செய்யப்பட்ட ஒரு கருவி; பனம்பட்டையெனத் தென்னாட்டில் வழங்கும்; "மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை, இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து" (குறுந். 168 : 1 - 2); கலித். 23 - 9.

4. புதற்றளவின் பூ : புறநா. 395 : 6.

5. மு. புறநா. 63 : 12. வள்ளி - வளை.

6. குன்று - மணற்குன்று; எக்கர்.

8. நொடை - விலை.

10. கலம் - ஆபரணம்.

9 - 10. தித்தன் : ஒரு சோழன். உறந்தை - உறையூர்; புறநா. 395 : 18 - 9; "நொச்சி வேலித் தித்த னுறந்தை" (அகநா. 122 : 21).

12 - 3. சுணங்கிற்கு வேங்கைப்பூ உவமை : "நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக், களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற்" (சிறுபாண். 23 - 4); "வேங்கை வென்ற சுணங்கின்" (ஐங்குறு. 324); "வேங்கை, ஊழுறு நறுவீ கடுப்பக் கேழ்கொள, ஆகத் தரும்பிய மாசறு சுணங்கின்", "பொன்வீ வேங்கைப் புதுமலர் புரைய, நன்னிறத் தெழுந்த சுணங்கணி வனமுலை" (அகநா. 174 : 10 - 12, 319 : 8 - 9); "வேங்கைவீ, முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணாகம்" (கலித். 64 : 26 - 7).

14. மா - கருமை. தன்னை - தமையன். (௩௫௨)

(௩௫௩) ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த
பொலஞ்செய் பல்கா சணிந்த வல்குல்
ஈகைக் கண்ணி யிலங்கத் தைஇத்
தருமமொ டியல்வோள் சாய னோக்கித்
தவிர்த்த தேரை விளர்த்த கண்ணை
வினவ லானா வெல்போ ரண்ணல்
யார்மக ளென்போய் கூறக் கேளினிக்
குன்றுகண் டன்ன நிலைப்பல் போர்பு
நாட்கடா வழித்த நனந்தலைக் குப்பை
வல்வி லிளையர்க் கல்குபத மாற்றுந்
தொல்குடி மன்னன் மகளே முன்னாட்
கூறி வந்த மாமுது வேந்தர்க்கு
... ...
....................யுழக்கிக் குருதி யோட்டிக்
கதுவாய் போகிய துதிவா யெஃகமொடு
பஞ்சியுங் களையாப் புண்ணர்
அஞ்சுதக வுடையரிவ டன்னை மாரே.

(பி - ம்.) 15 'நுதிவா'

திணையும் துறையும் அவை.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

(கு - ரை.) 1. கம்மியன் - பொற்கொல்லன்.

3. ஈகைக்கண்ணி - பொன்னாலாகிய மாலையை; "ஈகையங் கண்ணிபோற், பிணிநெகி ழலர்வேங்கை விரிந்தபூ" (கலித். 32 : 4 - 5). தைஇ - அணிந்து.

5. நிறுத்திய தேரையுடையையாய்; வெளுத்த கண்ணையுடைய யாய்.

6. அண்ணல் : விளி. 8. போர்பு - போர். குன்று - சிறுமலை.

8 - 9. காலையிற் போரையழித்துக் கடாவிட்ட தானியக் குப்பைகளை.

10. அல்குபதம் - இட்டு வைத்துண்ணும் உணவு; "சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்" (புறநா. 236 : 2). மாற்ரு - இல்லை யென்ருத. 12. கூறி - மணம்பேசி.

15. கதுவாய் - வடு. துதி - நுதி. எஃகம் - வேல்.

16. பஞ்சி - துகில்; "நெய்க்கிழி வைக்கப்பட்டார்", "புண்மேற் கிழிபோற் றுறத்தல்" (சீவக. 818, 2960).

17. தன்னைமார் - தமையன்மார். (௩௫௩)

(௩௫௪) அரைசுதலை வரினு மடங்க லானுன்
நிரைகா ழெஃக நீரின் மூழ்கப்
புரையோர் சேர்ந்தெனத் தந்தையும் பெயர்க்கும்
வயமலர் கழனி வாயிற் பொய்கைக்
கயலார் நாரை யுகைத்த வாளை
புனலாடு மகளிர் வளமனை யொய்யும்
ஊர்கவி னிழப்பவும் வருவது கொல்லோ
சுணங்கணிந் தெழிலிய வணந்தேந் திளமுலை
வீங்கிறைப் பணைத்தோண் மடந்தை
மான்பிணை யன்ன மகிழ்மட நோக்கே.

(பி - ம்.) 5 'யுதைத்த' 8 'வணைந்தேந்'

திணையும் துறையும் அவை.

பரணர்.

(கு - ரை.) 1. அடங்கல் ஆனு - அடங்குதலமையாத.

2. காழ் - காம்பு.

2 - 3. மூழ்குதற்கு எஃகத்தையும் தந்தை பெயர்ப்பான்; மூழ்கல் இங்கே மண்ணுமங்கலமெனப்படும்; இது பின் நிகழ்வது; "நீரேந்தி நெய்ம்மிதந்து நிணம்வாய்ப்பில்கி யழல்விம்மிப், போரேந்திப் பூவணிந்து புலவுநாறும் புகழ்வேலோன்" (சீவக. 2599) என்பதனுலும் அறியலாகும்.

4. கழனி வாயிலிலும் பொய்கையிலும்; வாயில் - வழி.

5. கயல் ஆர் - கயல்மீனை உண்ணுகின்ற. நாரையை உகைத்த வாளை மீனை.

6. ஒய்யும் - கொண்டு செல்லும். அணந்து - அண்ணந்து.

9. இறை - சந்து; கலித். 38 - 26.

10. "பிணையெழின் மானோக்கு" (கலித். 58 : 2).

மடநோக்கு (10) ஊர்கவினிழப்பவும் வருவது கொல்லோ (7)
(௩௭௪)

(௩௭௫) மதிலு ஞாயி லின்றே கிடங்கும்
நீஇ ரின்மையிற் கன்றுமேய்ந் துகளும்
ஊரது நிலைமையு மிதுவே*
....
....
....

(கு - ரை.) 1. ஞாயில் - மதிலின் மேலுள்ள ஏப்புழைக்கு நடுவாய் எய்து மறையும் சூட்டு; சீவக. 150, ந. (௩௭௫)

(௩௭௬) களரி பரந்து கள்ளி போகிப்
பகலுங் கூவுங் கூகையொடு பிறழ்பல்
ஈம விளக்கிற் பேஎய் மகளிரொ
டஞ்சுவந் தன்றிம் மஞ்சுபடு முதுகாடு
நெஞ்சமர் †காதல ரழுத கண்ணீர்
என்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப
எல்லார் புறனுந் தான்கண் டுலகத்து
மன்பதைக் கொல்லாந் தானாய்த்
தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே.

(பி - ம்.) 1. 'கள்ளிபொங்கிப' 2 'கூஉங்' 'பிறழ்வால', 4 'தன்றி மஞ்சு' 7 'எல்லாப்'

திணையும் துறையும் அவை.

தாயங்கண்ணனார் (பி - ம். கதையங்கண்ணனார்).

(கு - ரை.) 1. களரி - காடு.

2. புறநா. 362 : 17 - 8; "நன்பகலுங் கூகை நகும்" (பு. வெ. 39).

3. ஈமவிளக்கு - பிணஞ்சுடும் விறகின் அழல்.

---

* இதன்பின், 376 - ஆம் பாட்டு முழுவதும் ஆசிரியர் பெயருடன் சில பழைய ஏட்டுப் பிரதிகளில் தவறி வரையப்பெற்றுள்ளது.

† இந்நூலின் முதற் பதிப்பில் இதன் முன்பிருந்த பகுதி சில பிரதிகளில் 377 - ஆம் பாட்டின் முதலில் வரையப்பட்டிருந்தமையாலும், இச்செய்யுள் பழையவுரைகளில் இந்த அளவிலேயே மேற்கோளாகக் காட்டப்பட்டிருந்தமையாலும், பொருண் முடிபாலும் இங்ஙனம் பதிப்பிக்கலாயிற்று.

4. அஞ்சுவந்தன்று - அச்சம் வரப்பெற்றது. முதுகாடு - மயானம்.

5. அமர் காதலர் - விரும்பிய காதலையுடைய மகளிர்.

6. என்பு - எலும்பு.

7. எல்லாருடைய பிற்காலத்தையும் தான் கண்டு.

8. மன்பதை - மக்கட்டொகுதி. தானாய் - தானே இருப்பிடமாகி; "மக்கட் பிணத்த சுடுகாடு" (நாலடி. 121).

மு. இச்செய்யுள் காடுவாழ்த்தென்னும் துறைக்கு மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 19, இளம்; சூ. 24, ந. (௩௫௬)

(௩௫௭) குன்றுதலை மணந்த மலைபிணித் தியாத்தமண்
பொதுமை சுட்டிய மூவ ருலகமும்
பொதுமை யின்றி யாண்டிசி னோர்க்கும்
ஆண்ட வன்றே யாண்டுக டுணையே
வைத்த தன்றே வெறுக்கை வி.........
....ணை
புணைகை விட்டோர்க் கரிதே துணையழத்
தொக்குயிர் வெளவுங் காலை
இக்கரை நின்றிவர்ந் துக்கரை கொளலே.

(பி - ம்.) 9 'கொளவே'

திணை - அது; துறை..................பெருங்காஞ்சியுமாம்.

பிரமனார்.

(கு - ரை.) 1. குன்று - சிறுமலை. பிணித்து யாத்த - மிக உறுதியாக யாக்கப்பெற்ற.

2. சுட்டிய - நன்கு மதிக்கப்பெற்ற. மூவருலகம் : சேர சோழ பாண்டியருடைய நாடுகள்; 'உலகம்' என்பது பூமியின் ஏகதேசத்திற்கும் வழங்கும்; "மாயோன் மேய காடுறை யுலகமும்" (தொல். அகத்திணை. சூ. 5).

3. பொதுமையின்றி - சிறப்பாக. ஆண்டிசினோர்க்கும் - ஆண்டோர்க்கும்.

4 - 5. ஆண்டுகள் - வாழ்நாட்கள். வெறுக்கை துணை வைத்த தன்றே - பொற்குவியல் துணையாக வைக்கப் பெற்றதன்று; அழியுந் தன்மைய தென்றபடி.

7. புணை - தெப்பம். துணை - மனைவி.

8. கூற்றுவன்தமர் வந்து கூடி உயிரை வெளவுங்காலத்தில்.

9. உக்கரை - அக்கரை; வீட்டுலகம்.

கொளல் (9) அரிது (7) (௩௫௭)

(௩௫௮) பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
ஐயவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட் டனரே காதல ரதனால்
விட்டோரை விடாஅ டிருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே.

(பி - ம்.) 3 'தூக்கிறறவத்திறகைவினையவினைத்தும்' 4 'ஐயவித் துணையும்' 6 'விடாது திருவே' 7 'விடாதோரிவண்'

திணை - அது; துறை - மனையறம் துறவறம்.

வான்மீகியார் (பி - ம். வான்மீகையர்).

(கு - ரை.) 1. பருதி - சூரியன். பயம் - பிரயோசனம்.

2. பகல் - நாள்; ஒரு முகூர்த்தமுமாம். எழுவரைத் தலைவராக எய்திய அத்தன்மையையுடையது.

3. வையம் - பூமி. தூக்கின் - சீர் தூக்கினால்.

4. ஐயவி - வெண்சிறு கடுகு. ஆற்றாது - சீர் நில்லாது.

3 - 4. தவத்திற்கு வையம் ஐயவியளவும் நிறையொவ்வாது; சீவக. 2983; "ஏமநீ ருலகமோ ரிம்மிப் பாலென, நாமவே னரபதி நீக்கி நன்கலம், தூமமார் மாலையுந் துறக்கின் றனரோ" (சீவக. 3027).

5. காதலர் - வீட்டில் விருப்பமுடையோர்.

6. பற்றுவிட்டோரை; "நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான், றன்னையே தான்வேண்டுஞ் செல்வம்" (திவ். பெருமாள். 5 : 9).

7. விடாதோர் - விருப்பமொழியாதவர்கள்.

மு. தொல். புறத்திணை. சூ. 21, ந. மேற். (௩௫௮)

(௩௫௯) பாறுபடப் பறைந்த பன்மாறு மருங்கின்
வேறுபடு குரல வெவ்வாய்க் கூகையொடு
பிணந்தின் குறுநரி நிணந்திகழ் பல்ல
பேஎய் மகளிர் பிணந்தழூஉப் பற்றி
விளரூன் றின்ற வெம்புலான் மெய்யர்
களரி மருங்கிற் கால்பெயர்த் தாடி
ஈம விளக்கின் வெருவரப் பேரும்
காடுமுன் னினரே நாடுகொண் டோரும்
நினக்கும் வருதல் வைக லற்றே

வசையு நிற்கு மிசையு நிற்கும்
அதனால், வசைநீக்கி யிசைவேண்டியும்
நசைவேண்டாது நன்றுமொழிந்தும்
நிலவுக்கோட்டுப் பலகளிற்றொடு
பொலம்படைய மாமயங்கிட
இழைகிளர் நெடுந்தே ரிரவலர்க் கருகாது
கொள்ளென விடுவை யாயின் வெள்ளென
ஆண்டுநீ பெயர்ந்த பின்னும்
ஈண்டுநீடு விளங்குநீ யெய்திய புகழே.

(பி - ம்.) 4 'போமகளிர்' 5 'மெயயகளரி' 13 'நிலவுததோட்டு' 14 'மாமயங்கி' 16 'விடுகையாயின'

திணை - அது; துறை - பெருங்காஞ்சி.

அந்துவன்கீரனைக் காவட்டனார் (பி - ம். அந்துபனகீரனைத தகாநட்டனார்).

(கு - ரை.) 1. பாறுபட - கெட. பறைந்த - தேய்ந்த.

2. கூகை - கோட்டான்.

3. பல்ல - பல்லையுடையனவாய். 4. தழூஉப்பற்றி - தழுவி.

5. விளர் - வெண்மை; "விளரூன் றின்ற வீங்குசிலை மறவர்", "விளரூன் றின்ற வேட்கை" (அகநா. 89 : 10, 265 : 15); நற். 41 : 8.

8. காடு - மயானம்.

9. வைகல் - கழிதல். நினக்கும் வைகல் வருதல் அற்று.

10. வசை - பழி. இசை - புகழ்.

10 - 12. "கெடுவ லெனப்பட்டக் கண்ணுந் தனக்கோர், வடுவல்ல செய்தலே வேண்டும் - நெடுவரை, முற்றுநீ ராழி வரையகத் தீண்டிய, கற்றேயுந் தேயாது சொல்" (பழ. 394). 14. பொலம்படை - பொற் கலனை.

15. இழைகிளர் நெடுந்தேர் : புறநா. 123 : 4, குறிப்புரை.

அருகாது - குறையாமல். கலித். 99 : 7.

16. விடுவையாயின் - கொடுப்பாயாயின்; 'இடுவை' என்று பிரிப்பினும் பொருந்தும். வெள்ளென - யாவர்க்கும் தெரிய; புறநா. 207 : 9.

18. புகழ் நீடு விளங்கும். (௩௫௧)

(௩௬௦) பெரிதாரச் சிறுசினத்தர்
சிலசொல்லாற் பலகேள்வியர்
நுண்ணுணர்வி னாற் பெருங்கொடையர்
கலுழ்நனையாற் றண்டேறலர்
கனிகுய்யாற் கொழுந்துவையர்

தாழுவந்து தழூஉமொழியர்
பயனுறுப்பப் பலர்க்காற்றி
ஏம மாக விந்நில மாண்டோர்
சிலரே பெரும கேளினி நாளும்
பலரே தகையஃ தறியா தோரே
அன்னோர் செல்வமு மன்னி நில்லா
தின்னு மற்றதன் பண்பே யதனால்
நிச்சமு மொழுக்க முட்டிலை பரிசில்
நச்சுவர் கையி னிரப்ப லோம்புமதி யச்சுவரப்
பாறிறை கொண்ட பறந்தலை மாகத
கள்ளி போகிய களரி மருங்கின்
வெள்ளி னிறுத்த பின்றைக் கள்ளொடு
புல்லகத் திட்ட சில்லவிழ் வல்சி
புலைய னேவப் புன்மே லமர்ந்துண்
டழல்வாய்ப் புக்க பின்னும்
பலர்வாய்த் திராஅர் பருத்துண் டோரே.

(பி - ம்.) 1. 1 'பெரிதாராற சிறு சினததா' 3 'பருங்கொடை' 6 'தாழுவநதழூஉம்' 7 'பானுறுப்ப' 13 'ஒழுக்கமும்' 14 'இரப்பவோம புதியஞ்சுவரப்' 15 'பாறிரை' 16 'பொதியகளரி' 18 'புககலத்திட்ட'

திணையும் துறையும் அவை (பி - ம். இதுவுமது).

தந்துமாறனை (பி - ம். தநதுமாரனை)ச் சங்கவருணரென்னும் நாகரியர் பாடியது.

(கு - ரை.) 2. "பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற, சில சொல்ல றேற்றாதவர்" (குறள், 649). சொல்லால் - சொல்லோடு.

4. கலுழ் நனை - கலங்கிய கள்.

5. குய் - நறுமணப்புகை. துவை - துவையல்.

6. தாழ் உவந்து - வணங்குதலை விரும்பி. 7. ஆற்றி - கொடுத்து.

10. தகையஃது - மேற்கூறிய தன்மையை.

13. முட்டிலை - குறைபாடில்லாயாய்.

14. நிரப்பல் ஓம்பு - நிரப்புதலைப் பாதுகாப்பாயாக.

16. புறநா. 225 : 7, 245 : 3, 356 : 1.

17. வெள்ளில் - பாடை. நிறுத்த - நிறுத்திய.

18. புல் - தருப்பை. அவிழ் - பருக்கை. வல்சி - உணவு.

19. "உப்பிலிப் புழுக்கல் காட்டுட் புலைமக னுகுப்ப வேகக், கைப் பலி யுண்டு" (சீவக. 2984) என்பதற்கு இவ்வடி மேற்கோள்.

16 - 19. புறநா. 363 : 10 - 14. (௩௬௦)

(௩௬௧) காரெதி ருருமி னுரறிக் கல்லென
ஆருயிர்க் கலமரு மாராக் கூற்றம்
நின்வர வஞ்சலன் மாதோ நன்பல
கேள்வி முற்றிய வேள்வி யந்தணர்க்
கருங்கல நீரொடு சிதறிப் பெருந்தகைத்
தாயினன்று பலர்க்கீத்துத்
தெருணடை மாகளிறொடு தன்
அருள்பாடுநர்க்கு நன்கருளியும்
உருணடை..................ான்றதன்
தாள்சேருநர்க் கினிதீத்தும்
புரிமாலையர் பாடினிக்குப்
பொலந்தாமரைப் பூம்பாணரொடு
கலந்தளைஇய நீளிருக்கையாற்
பொறையொ......................மாணோக்கின்
வில்லென விலங்கிய புருவத்து வல்லென
நல்கி ணுவஞ்ச முள்ளெயிற்று மகளிர்
அல்கு ருங்கா வசைஇ மெல்லென
... .பொலங்கலத் தேந்தி
அமிழ்தென மடுப்ப மாந்தி யிகழ்விலன்
நில்லா வுலகத்து.................மை நீ
சொல்ல வேண்டா.........முந்தறிந்த
....
....ணர்.

(பி - ம்.) 7 'தனருளபாடுநாககு' 13 'கலந்தலைஇய' 15 'விலங்கிய வுருவத்து'

(கு - ரை.) 2. உயிர்க்கு - உயிரைக் கைக்கொண்டு செல்லுதற்கு. ஆரா - தெவிட்டாத. கூற்றம் : விளி.

3. அஞ்சலன் - அஞ்சான். 5. கலம் - ஆபரணம். நீர் - தாரைநீர்.

4 - 5. "ஏற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப், பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து" (புறநா. 367 : 4 -5).

6. நன்று - மிக. 7. மா - குதிரையை.

12. பொலந்தாமரை - பொற்றாமரை.

13. இருக்கையால் - இருக்கையின்கண்.

15. வல்லென - விரைய; வற்கெனவுமாம், 16. நல்கின் - பேசின்.

15 - 6. பல்லின் கூர்மைக்கு அஞ்சி நா விரையப் பேசாதென்பது; "அமிழ்துபொதி செந்நா வஞ்ச வந்த, வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவை"(குறுந். 14). (௩௬௧)

(௩௬௨) ஞாயிற் றன்ன வாய்மணி மிடைந்த
மதிபுற ழார மார்பிற் புரளப்
பலிபெறு முரசம் பாசறைச் சிலைப்பப்
பொழிலகம் பரந்த பெ..............
..........கும விசய வெண்கொடி
அணங்குருத் தன்ன கணங்கொ டானைக்
கூற்றத் தன்ன மாற்றரு முன்பின்
ஆக்குரற் காண்பி னந்த ணாளர்
நான்மறைக் குறி.................யின்
அறங்குறித் தன்று பொருளா குதலின்
மருடீர்ந்து மயக்கொரீஇக்
கைபெய்தநீர் கடற்பரப்ப
ஆமிருந்த வடைநல்கிச்
சோறுகொடுத்து மிகப்பெரிதும்
வீறுசான...................நன்றும்
சிறுவெள் ளென்பி னெடுவெண் களரின்
வாய்வன் காக்கை கூகையொடு கூடிப்
பகலுங் கூவு மகலு ளாங்கட்
காடுகண் மறைத்த கல்லென் சுற்றமொ
டில்லென் றில்வயிற் பெயர மெல்ல
இடஞ்சிறி தொதுங்க லஞ்சி
உடம்பொடுஞ் சென்மா ருயர்ந்தோர் நாட்டே.

(பி - ம்.) 2 'மணியுறழாரம்' 6 'வெணகொடி' 8 'னந்தணாளிர்' 14 'கொடுக்குமிகப்'.

திணை - பொதுவியல்; துறை - பெருங்காஞ்சி.

அவனைச் சிறுவெண்டேரையார்.

(கு - ரை.) 1. ஆய்மணி - ஆராய்ந்தெடுத்த மாணிக்கம்; அழகிய மணியுமாம்.

2. வட்டப்பூண் புரள; மதியுறழ் ஆரம் - பிறைவடமுமாம்.

3. முரசு பலிபெறுதல் இந்நூல் 50-ஆம் பாட்டாலும் அதன் குறிப்பாலும், "கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை, ஆடுநர் பெயர்ந்துவந் தரும்பலி தூஉய்" (பதிற். 17 : 5 - 6); "கோற்றொழில்

வேந்தன் கொற்ற முரசம், பெரும்பணைக் கொட்டிலு ளரும்பலி யோச்சி' (பெருங். 2. 2 : 29 - 30) என்பவற்றாலும் அறியலாகும்.

5. வெற்றியைப் புலப்படுத்தும் வெள்ளிய கொடி : ''விசயம் வெல் கொடி யுயரி' (முல்லை. 91); ''புலவுப்படக் கொன்று மிகைதோ லோட்டிப், புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி'' (மதுரைக். 370 - 71); ''மலைநீர், வென்றெழு கொடியிற் றோன்றும்'' (மலைபடு. 581 - 2); ''வான்றோய் வெல்கொடி'' (பதிற். 69 : 1).

6. அணங்கு உருத்தன்ன தானை - தெய்வங்கள் உருக்கொண்டு வந்தாற்போன்ற சேனை; உருத்தன்ன - கோபித்தாற்போன்ற வென்றுமாம்.

7. புறநா. 56 : 11; ''கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பின்'' (முருகு. 81) 12. தானநீர் கடலிற் சென்று பரவ.

13. ஆம் - நீர். அடை - தண்ணடை; மருத நிலத்து ஊர்.

17. வாய்வன் காக்கை - வலிய வாயையுடைய காகம்; கூகை - கோட்டான். மு. புறநா. 238 - 3.

17 - 8. புறநா. 356 : 2; ''பேணா ரகநாட்டு, நன்பகலுங் கூகை நகும்'' (பு. வெ. 39) 19. சுற்றத்தின் மிகுதி கூறியபடி.

20. இல்லென்று - இல்லையென்று. (௩௬௨)

(௩௬௩) இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி லேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப் பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே

செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் றுறந்தே.

(பி - ம்.) 1 'கருங்கடலுடுத்த', 'இருங்கடற்றுணையோடு பெரு நிலங்கவைஇ', 'மாநிலத்து' 2 'நடுவுபிற......கின்றி', 'பெறகெகொழி யத்' 6 'சென்றுமாயநதோரே', 'சென்று பாயந்தோரே' 7 'யக்கை' 10 'களளிவேயநத', 'முளளியபுறங்காட்டு', 'முளிசுடலை நளிசுடலை', 'முள்ளிக் கள்ளி நள்ளிருஞ் சுடலை' 14 'இப்பிறபபிஞென்' 16 - 7 'இன்ன செய்திநீ முன்னிய வினையே'

திணையும் துறையும் அவை. (பி - ம். இதுவுமது)

....ஐயாதிச்சிறு வெண்டேரையார் (பி - ம். வெண் டரையார்).

(கு - ரை.) 1. "இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் ஞாலம்" (பெருங். 2. 17 : 105).

2. உடைமரத்தின் இலை மிகச்சிறியது; "சிறியிலை யுடை" (புறநா. 324 : 4).

3. "ஒருதா மாகிய பெருமையோர்" (புறநா. 366 : 4); "ஒருநீ யாகித் தோன்ற" (முருகு. 294).

1 - 3. "இருங்கட லுடுத்த, மண்ணாள் செல்வத்து மன்னவ ரேறே" (மணி. 22 : 80 - 81).

4. புறநா. 55 : 21, குறிப்புரை.

3 - 6. புறநா. 336 : 1 - 5.

7 - 8. 'வீயாது...இல்லையென்புழியும், வீயாமை நீங்காமைக்கண் வந்தது' (குறள். 207, பரிமேல்.).

9. மு. புறநா. 366 : 23. மடங்கல் - யமன். "வருங்காலன் றிண் ணிதே" (சிறுபஞ்ச. 26) 14. சீவக. 2984, ந. மேற்.

10 - 14. புறநா. 360 : 16 - 9.

14 - 5. 'இழிபிறப்பினோன்......மிசையுமென்புழிப் பெற்றென்னுஞ் செய்தெனெச்சத்திற்கு முடிபாகிய மிசையுமென்னும் வினையை இடை நின்ற சொற்கள் விசேடித்து நின்றன' (தொல். எச்ச. சூ. 59, ந).

16 - 8. முடிந்தது போன்று முடியாதாகிய புறப்பாட்டு வண்ணத் திற்கு (தொல். செய். சூ. 225, பேர்., ந.) இவ்வடிகள் மேற்கோள்.

மு. இச்செய்யுள், 'மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமை' (தொல். புறத்திணை, சூ. 19, இளம்.) என்னுந் துறைக்கும், 'வீடேதுவாக வன்றி வீடுபேற்று நெறிக்கட் செல்லும் நெறியேதுவாகக் கூறியது' (தொல். புறத்திணை. சூ. 24, ந.) என்பதற்கும், 'வாயுறைவாழ்த்து' (தொல். செய். சூ. 107, இளம். 112, பேர்., ந.) என்னும் பகுதிக்கும் மேற்கோள்; 'இருங்கடலுடுத்த......துறந்தே : இதனுள், உப்பிலாஅ வவிப் புழுக்க

லென்பது முதலாக மூன்றடி வஞ்சியடி' (தொல். செய். சூ. 112) என்பது இளம்பூரணம்; 'உப்பிலாஅ வவிப்புழுக்கல், கைக்கொண்டு பிறக்குநோக்காது' எனவும் காட்டுப; இவை வஞ்சியடியெனப்படு மென்பது. வெண்சீரான் வஞ்சியடி வருமோவெனின் வாரா, வஞ்சிச் சீர்விரவினல்லது. உப்பிலாஅ வவிப்புழுக்கல் : என்பதோவெனின், அது மற்றை இரு சீரடியொடு கூட்டத்துக் காட்டலானும் வஞ்சியடி போன்றது', 'உப்பிலா வவிப்புழுக்கல் முதலியன வஞ்சியடி' (தொல். செய். சூ. 69. பேர். ந.); 'இருங்கடல்.........துறந்தே : இதனுள் உப்பிலாஅ வவிப்பழுக்கல் எனவும், கைக்கொண்டு பிறக்கு நோக் காது, இழிபிறப்பினோ னீயப்பெற்று' எனவும் வஞ்சியடி விரவி வந்த வாறு'' (யா. வி. அடியோத்து, சூ. 7; யா. கா. ஒழிபு. சூ. 4, உரை; இ. வி. சூ. 745, உரை). (௩௬௩)

(௩௬௪) வாடா மாலை பாடினி யணியப்
பாணன் சென்னிக் கேணி பூவா
எரிமரு டாமரைப் பெருமலர் தயங்க
மைவிடை யிரும்போத்துச் செந்தீச் சேர்த்திக்
காயங் கனிந்த கண்ணகன் கொழுங்குறை
நறவுண் செவ்வாய் நாத்திறம் பெயர்ப்ப
உண்டுந் தின்று மிரப்போர்க் கீய்ந்தும்
மகிழ்கம் வம்மோ மறப்போ ரோயே
அரிய வாகலு முரிய பெரும
நிலம்பக வீழ்ந்த வலங்கற் பல்வேர்
முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும்
கூகைக் கோழி யானாத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே.

(பி - ம்.) 2 'தெணிபூவா' 3 'கயங்க' 7 'கீந்தும்' 8 'மகிழக வமமோ' 12 'கூகை கோழியானாந்' 13 'டெயதியதுஞான்று'

திணையும் துறையும் அவை.

அவனைக் கூகைக்கோழியார்.

(கு - ரை.) 1. வாடாமாலை - பொன்னரிமாலை. பாடினி - விறலி.

1 . 3. புறநா. 11 : 16 - 7 - ஆம் அடிகளையும், அவற்றின் குறிப் புரையையும், ''மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கு, மாடுவண் டிமிரா வழலவிர் தாமரை, நீடிரும் பித்தை பொலியச் சூட்டி, உரவுக்கடன் முகந்த பருவ வானத்துப், பகற்பெயற் றுளியின் மின்னுநிமிர்ந் தாங்குப், புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின், தொடையமை மாலை விறலியர் மலைய'' (பெரும்பாண். 480-86) என்பதையும் பார்க்க.

2 - 3. கேணி பூவாத்தாமரை - பொற்றாமரைப்பூ; "பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை" (புறநா. 153 : 7; கலித். 54 : 2); பு. வெ. 216.

4. மைவிடையிரும்போத்து - ஆட்டுக்கிடாய்; "விடைவீழ்த்துச் சூடு கிழிப்ப" (புறநா. 366 : 20) என்பதையும், புறநா. 262 - ஆம் பாட்டின் முதலடியையும் அதன் குறிப்புரையையும் பார்க்க.

8. மகிழ்கம் - மகிழ்வேமாக. 10. அலங்கல் - அசைதல்.

11. பொத்து - பொந்து. கதுமென இயம்பும் - கேட்போர் திடுக்கிட்டு அஞ்சும்படி சுட்டுக் குவியென்று ஒலிக்கும்; "சாவோர்ப் பயிருங் கூகையின் குரலும்" (மணி. 6 : 75).

12. கூகை - பேராந்தை; கோட்டானுமாம். கோழி - காட்டுக் கோழி; கூகைக் கோழி வாகைப் பறந்தலை" (குறுந். 393 : 3). இவ் வடியால் ஆசிரியருடைய பெயர்க்காரணம் புலப்படுகின்றது.

13. தாழிய பெருங்காடு - பிணங்களைக் கவிக்கும் தாழிகளையுடைய மயானம்; புறநா. 228 : 11, குறிப்புரை; பெருங். 1. 46 : 83 - 5. பெருங்காடு : புறநா. 250 : 9.

11 - 3. "பொத்த வறையுட் போழ்வாய்க் கூகைச், சுட்டுக் குவி யெனச் செத்தோர்ப் பயிரும், கள்ளியம் பறந்தலை" (புறநா. 240 : 79).

எய்திய ஞான்று (13) அரியவாகலு முரிய (9) வெனக் கூட்டுக.

(௩௬௪)

(௩௬௫) மயங்கிருங் கருவிய விசும்புமுக னாக
இயங்கிய விருசுடர் கண்ணெனப் பெயரிய
வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்
வயிரக் குறட்டின் வயங்குமணி யாரத்துப்
பொன்னந் திகிரி முன்சமத் துருட்டிப்
பொருநர்க் காணாச் செருமிகு முன்பின்
முன்னோர் செல்லவுஞ் செல்லா தின்னும்
விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற
உள்ளேன் வாழியர் யானெனப் பன்மாண்
நிலமக ளழுத காஞ்சியும்
உண்டென வுரைப்பரா லுணர்ந்திசி னோரே.

(பி - ம்.) 1 'கருவி விசும்புதுகனக' 2 'பெரிய' 3 'வழியிடை' 4 'குரட்டின', 'மயிரமணியாரததுப' 5 'துருட்டிய' 7 'சொல்லா' 8 'விலைநற்' 9 'உளனேவாழிய', 'வாழியனெனனப' 11 'வுரைப் பருணர்ந்'

திணை - காஞ்சி; துறை - பெருங்காஞ்சி.

மார்க்கண்டேயனார் (பி - ம். மாகணடடயனார்).

(கு - ரை.) 1. கருவி - மின் முதலியவற்றின் தொகுதி.

2. இருசுடர் - சூரிய சந்திரர். 3. வளி - காற்று.

5. பொன்னந்திகிரி - சக்கரம்; "பொன்னணி திகிரியஞ் செல்வன்" (சீவக. 1203). தொல். குற்றியலுகரப். சூ. 78, ந. மேற்.

6. பொருநர் - போர் செய்யும் பகைவரை. முன்பு - வலி.

7. முன்னோர் - முன்பு ஆண்ட அரசர்கள். செல்ல - வேறு உலகத்தை யடைய.

8. விலைநலப் பெண்டிர் - விலைமாதர்; பரத்தையர்.

9. பன்மாண் - பலகால்; கலித். 47 : 8.

10. காஞ்சி - நிலையின்மை.

"நிலமக ணெஞ்சுகை யெறிந்து நையவும்" (சீவக. 2221) என்பதற்கு இவ்வடி மேற்கோள்.

மு. தொல். புறத்திணை. சூ. 23, ந. மேற். (௫௬௫)

(௫௬௬) விழுக்கடிப் பறைந்த முழுக்குரன் முரசம்
ஒழுக்குடை மருங்கி னொருமொழித் தாக
அரவெறி யுருமி னுரறுபு சிலைப்ப
ஒருதா மாகிய பெருமை யோரும்
தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே
அதனால், அறவோன் மகனே மறவோர் செம்மால்
..............................உரைப்பக் கேண்மதி
நின்னூற்றம் பிறரறியாது
பிறர்கூறிய மொழிதெரியா
ஞாயிற் றெல்லை யாள்வினைக் குதவி
இரவி னெல்லை வருவது நாடி
உரை...............................
உழவொழி பெரும்பக டழிதின் றாங்குச்
செங்கண் மகளிரொடு சிறுதுனி யளைஇ
அங்கட் டேறல் ஆய்கலத் துகுப்பக்
கெடலருந் திருவ.......................
மடைவேண்டுநர்க் கிடையருகா
தவிழ்வேண்டுநர்க் கிடையருளி
விடைவீழ்த்துச் சூடுகிழிப்ப
நீர்நிலை பெருத்த வார்மண லடைகரைக்
காவு தோறும்.....................
மடங்க லுண்மை மாயமோ வன்றே.

(பி - ம்.) 1 'விழுக்கடிபபடைந்த' 3 'னுரறுபரிலைபப' 16 'லாய களதது' 17 'கெடிலருநதிவே' 18 - 9 'வேண்டுநாகடையருதா திவிழ்'

திணையும் துறையும் அவை.

தருமபுத்திரனைக் கோதமனார்.

(கு - ரை.) 1. கடிப்பு - குறுந்தடி. 3. உரறுபு சிலைப்ப - மிக முழங்க.

1 - 3. மேக முழக்கிற்கு முரசு உவமை; புறநா. 58 : 6 - 7, குறிப்புரை. கலித். 45 : 3 - 5; குறுந். 270 : 3; நற். 197 : 10.

4. புறநா. 18 : 4, 363 - 2 - 3.

5. "தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே" (புறநா. 165 : 1 - 2)

6. செம்மால் - செம்மலே; தலைவனே.

9. ஊற்றம் - வலி. 10. தெரியா - தெரிந்து.

11. பகற்காலத்தை முயற்சிக்கு உதவி.

12. வருவது - பின்வருங் காரியத்தை.

14. உழுத பெரிய பகடு வைக்கோலைத் தின்றாற்போல; "உழுத நோன்பக டழிதின் றாங்கு" (புறநா. 125 : 7).

15. அளைஇ - கலந்து. 16. கட்டேறல் - கள்ளின் தெளிவை.

18. இடை - சமயம். அருகாது - குறையாமல்.

19. அவிழ் - சோற்றுப்பருக்கை.

20. விடை - ஆட்டுக்கிடாய்; புறநா. 364 : 4. சூடு - சூட்டிறைச்சி.

23. மடங்கல் - யமன்; ஒ. புறநா. 363 : 9. (௩சுசு)

(௩சுஎ) நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினுந் தம்மொடு செல்லா
வேற்றோ ராயினு நோற்றோர்க் கொழியும்
ஏற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறன் மாந்தி மகிழ்சிறந்
திரவலர்க் கருங்கல மருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்ல
தாழுங் காலைப் புணைபிறி தில்லை
ஒன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக விருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்

யானறி யளவையோ விதுவே வானத்து
வயங்கித் தோன்று மீனினு மிம்மென
இயங்கு மாமழை யுறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநுந் நாளே.

(பி - ம்.) 2 'யாயினுநதமவேயனறி' 3 'வேற்ரு' 7 'தெறறவாது நனமகிழநது', 'தெறறநாணமகிழதூங்குநது' 10 'நாலவினை' 11 'காலத்துத் துணைபிறிது', 'காலைத்துணைபிறி' 14 'நீள்குடை', 'வேந்தர்' 15 'விவவெ' 16 - 7 'இமமெனபபரநதியங்குமாமழை' 18 'தொணடுமபொலிக'

திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்தியல்.

சேரமான் மாரி வெண்கோ (பி - ம். வெள்கோ) வும், பாண்டியன் கானப்பேர் தந்த (பி - ம். கடந்த) உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரை ஔவையார்.

(கு - ரை.) 1. நாகம் - தேவலோகம்; பவணலோகமுமாம்; தக்கயாகப் பரணியில், "மாலைநாக மார்பர்" (510) என்னும் தாழிசைக்கு இவ்வடி மேற்கோள். பாகு - பகுதி. மண்டிலம் - நாடு.

2. தம - தம்முடையன.

3. நோற்ருேர்க்கு ஒழியும் - தவஞ்செய்தோர்க்கே உரியனவாகும்.

4. ஏற்ற - யாசித்த. ஈர்ங்கை - குளிர்ந்த கை; புறநா. 258 : 5, 393 : 10. 5. புனல் - தாரை நீர்.

4 - 5. "அந்தணர்க், கருங்கல நீரொடு சிதறி" (புறநா. 391 : 4-5).

7. நாரரி தேறல் - பன்ளுடையால் வடிக்கப்பட்ட கள்ளின் தெளிவை; புறநா. 170 : 12, குறிப்புரை.

6 - 7. "ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய, தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந்து" (புறநா. 24 : 31 - 2).

8. "பரிசிலர்க் கென்று, மருகா தீயும் வண்மை", "இரவலர்க், கருகாதீயும் வண்மை", "இரவலர்க் கருகாது கொள்ளென விடுவை" (புறநா. 320 : 16 - 7, 329 : 7 - 8, 359 : 15 - 6).

9. மதுரைக். 781 - 2; "தெரிகோதை யந்நல்லாய் தேறீயல் வேண்டும்" (கலித். 98 : 9).

'வேண்டுமென்பது உம்மீற்ருன் வந்ததோர் ஏவல் கண்ணிய வியங்கோள்; வாழ்தல்......வைகல்' சீவக. 201, ந.; தொல். வினை. சூ. 29, ந.; இ. வி. சூ. 46, 50, 239, உரை, மேற்.

12 - 3. "அந்தண ரருங்கட னிறுக்கு, முத்தீ" (புறநா. 2 : 22 - 3) என்பதையும் அதன் குறிப்புரையையும், "ஒன்றுபுரி கொள்கை யிரு பிறப்பாளர், முத்தீச் செல்வத்து" (சிலப். 23 : 67 - 8) என்பதையும் பார்க்க.

13. காண் தக - அழகுதக.

14. கொற்றம் - அரசவுரிமை.

16 - 8. "இமயத்தீண்டி யின்குரல் பயிற்றிக், கொண்டன் மாமழை பொழிந்த, நுண்பஃறுளியினும் வாழிய பலவே" (புறநா. 34 : 21 - 3); புறநா. 371 : 24 - 5. (௩௬௭)

(௩௬௮) களிறு முகந்து பெயர்குவ மெனினே
ஒளிறுமழை தவிர்க்குங் குன்றம் போலக்
கைம்மா வெல்லாங் கணையிடத் தொலைந்தன
கொடுஞ்சி நெடுந்தேர் முகக்குவ மெனினே
கடும்பரி நன்மான் வாங்குவயி னொல்கி
நெடும்பீ டழிந்து நிலஞ்சேர்ந் தனவே
கொய்சுவற் புரவி முகக்குவ மெனினே
மெய்நிறைந்த வடுவொடு பெரும்பிறி தாகி
வளிவழக் கறுத்த வங்கம் போலக்
குருதியம் பெரும்புனல் கூர்ந்தனவே யாங்க
முகவை யின்மையி னுகவை யின்றி
இரப்போ ரிரங்கு மின்னா வியன்களத்
தாளழிப் படுத்த வாளே ருழவ
கடாஅ யானைக் கால்வழி யன்னவென்
தெடாரித் தெண்கண் டெளிர்ப்ப வொற்றிப்
பாடி வந்த தெல்லாங் கோடியர்
முழவுமரு டிருமணி மிடைந்தநின்
அரவுற ழார முகக்குவ மெனவே.

(பி - ம்.) 4 'கொடிஞ்சி' 8 - 9 'மெயசிறைகதடு வாடுபெரும பிறி தாகி வழககறுத்த' 11 'முவையினமையினறி' 14 'காலகழிவனன வென', 'காலகழியனனவென்' 16 'கொடியார்' 17 'மிடைந்த நிரை யுறுமாரம' 18 'அறையுறும்', 'மெனினே'

திணை - வாகை; துறை - மறக்களவழி.

சேரமான் முடக்கோ நெடுஞ்சேரலாதன் சோழன் வேற்பஃறடக்கை(பி - ம். வெல்பஃறடக்கை)ப் பெருநற்கிள்ளியொடு போர்ப் புறத்துப் பொருது வீழ்ந்தாரங்கழுத்தன்னதாக உயிர் போகாது கிடந்தானைக் கழாத்தலையார்.

(கு - ரை.) 1 - 2. புறநா. 197 : 4, 369 : 24 - 7.

4. "செல்வுறு திண்டேர்க் கொடுஞ்சினை கைப்பற்றி" (கலித். 85 : 18).

7. சுவல் - பிடரி.

8. பெரும்பிறிது - மரணம்.

9. காற்றுற் போக்குதலொழிக்கப்பெற்ற கப்பல்போல.

"வழக்கு மாறு கொண்டு" (கலித். 101 : 11) என்பதற்கும், "வழக்கு நெறி மாயம்" (சீவக. 2873) என்பதற்கும் இவ்வடி மேற்கோள்.

11. முகவை - முகந்துசெல்லும் பரிசில்; புறநா. 369 : 27. உகவை - உகத்தல்.

13. வீரர்களாகிய வைக்கோற்போரைக் கடாவிட்ட வாளாகிய ஏரையுடைய வீரனே; புறநா. 371 : 15 - 6 "ஆளழி வாங்கி யதரி திரித்த, வாளே ருழவன்" (சிலப். 26 : 233 - 4).

14 - 5. கால்வழி - காலிடம்; காற்சுவடுமாம். தெடாரி - தடாரிப் பறை; புறநா. 376 : 4. தெளிர்ப்ப - ஒலிப்ப; "பெருங்களிற் றடியிற் றோன்று மொருகண், இரும்பறை", "பணைமரு ணெடுந்தாட் பல்பிணர்த் தடக்கைப், புகர்முகம்" (புறநா. 263 : 1 - 2, 371 : 19 - 20).

16. கோடியர் - கூத்தர்.

18. ஆரத்திற்கு அரவு உவமை; "விரவுமணி யொளிர்வரு மரவுற ழாரமொடு" (புறநா. 398 : 27). (௩௬௮)

(௩௬௯) இருப்புமுகஞ் செறித்த வேந்தெழின் மருப்பிற்
கருங்கை யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவ ரெறிவன ருயர்த்த
வாண்மின் னாக வயங்குகடிப் பமைந்த
குருதிப் பலிய முரசுமுழக் காக
அரசராப் பனிக்கு மணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநா ணுகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயிற் றேரே ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு பைஞ்சாற்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி
விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு

கணநரி யோடு கழுதுகளம் படுப்பப்
பூதங் காப்பப் பொலிகளந் தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாள
தேய்வை வெண்காழ் புரையும் விசிபிணி
வேய்வை காணா விருந்திற் போர்வை
அரிக்குரற் றடாரி யுருப்ப வொற்றிப்
பாடி வந்திசிற் பெரும பாடான்
றெழிலி தோயு மிமிழிசை யருவிப்
பொன்னுடை நெடுங்கோட் டிமயத் தன்ன
ஓடை நுதல வொல்குத லறியாத்
துடியடிக் குழூஉவிய பிடியிடை மிடைந்த
வேழ முகவை நல்குமதி
தாழா வீகைத் தகைவெய் யோயே.

(பி-ம்.) 1 'இரும்பு' 2 'பெருங்கையானை' 4 'படைநத' 8 'ணுதைத்த' 10 'ஈசசசெறுவவியிற்', 'ஈசசசெறுவிற்' 12 'செஞசாற்' 13 'வைவேற்கணையொடு' 14 'இருந்தலை சாய்த்த' 15 'பேஎயள்' 16 'கழுகு' 19 'வெணகாள்' 21 'வொறறப்'

திணையும் துறையும் அவை; துறை - ஏர்க்கள உருவகமுமாம்.

சேரமான் கடலோட்டிய வெல்கெழு (பி - ம். வேல்கெழு) குட்டுவனைப் பரணர்.

(கு - ரை.) 1. மு. புறநா. 370 : 20. இரும்பு - தந்தப்பூண்; கோளகை : ஆகுபெயர்.

2. கருங்கை - பெரிய கை; கருமை : பெருமை; "பெருங்கை யானை" (புறநா. 3 : 11). கொண்மூ - மேகம்.

3. நீண்மொழி - சபதம். மறவர் - வீரர்.

4. வாளாயுதம் மின்னலாக. கடிப்பு - குறுந்தடி.

5. குருதிப் பலிய முரசு - இரத்தமாகிய பலியையுடைய வீரமுரசு; "குருதி வேட்கை யுருகெழு முரசம்" (புறநா. 50 : 5, குறிப்புரை).

2 - 5. "உருமிசை முரச முழக்கென விசைப்பச், செருநவில் வேழங் கொண்மூ வாக" (புறநா. 373 : 1 - 2).

6. அரசு அரா - பகையரசர்களாகிய பாம்புகள்.

7. குதிரை காற்றுக; "காலியற் புரவி" (புறநா. 178 : 2).

8. வல்வில் : புறநா. 152 : 6, குறிப்புரை.

9. கணைத்துளி - அம்பாகிய மழைத்துளி.

1 - 9. "பெரும்படைச் செற்றத் திருங்கடன் மாந்திக், குஞ்சரக் கொண்மூக் குன்றடைந்து குழீஇக், காலிய லிவுளிக் கடுவளி யாட்ட, வேலிடை மிடைந்து வாளிடை மின்னக், கணைத்துளி பொழிந்த கார் வரைச் சாரல்" (பெருங். 3. 27 : 117 - 21).

10. ஈரச்செறுவயின் - ஈரத்தையுடைய போர்க்களமாகிய வய லின் கண்; பு. வெ. 159.

9 - 10. கிடக்கையாகிய வயலில்.

12. படை மிளிர்த்த - ஆயுதமாகிய படைவாளால் கீழ்மேலாக மறிக்கப்பட்ட; "படைமிளிர்ந்திட்ட" (புறநா. 42 : 14); "உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி" (பெரும்பாண். 92); படை : சிலேடை. சால்-படைச்சாலில்.

13. கணையம் - கணைய மரமென்னும் ஆயுதம். கணையமொடு வேலை வித்தி.

14. கூழ் - பயிர். 15. போர்பு : சிலேடை.

16. கழுது - பேயில் ஒரு சாதி; "கூற்றக் கொலைத்தேர் கழுதொடு கொட்ப" (மதுரைக். 633).

17. பாடுநர்க்கு - பாடி வருபவர்களுக்கு ஈதற்பொருட்டு.

18. தேய்வை வெண்காழ் - சந்தனக்கட்டை. விசி பிணி - விசித்த வார்க்கட்டு.

20. வேய்வை - குற்றம். "வேய்வை போகிய விரலுளர் நரம்பு" (பொருந. 17). விருந்து - புதுமை.

19 - 20. "விசிப்புறுத் தமைத்த புதுக்காழ்ப் போர்வை" (புறநா. 399 : 24).

21. அரிக்குரற்றடாரி - அரித்தெழுகின்ற ஓசையையுடைய தடாரிப் பறை; ஒலி நரம்பால் ஓசையையுடைய கிணைப்பறை யென்றுமாம். உருப்ப - சூடு பிறக்க; புறநா. 249; 4, குறிப்புரை. "அகன்கட் டடாரி தெளிர்ப்ப வொற்றி", "அரிக்குரற் றடாரி யிரிய வொற்றி" (புறநா. 370 : 18, 390 : 7).

22. வந்திசின் : வந்தேன்; "காண்கு வந்திசிற் பெரும", "நிற் காண்கு வந்திசினே", "மன்னெயின் முகவைக்கு வந்திசிற் பெரும" (புறநா. 17 : 33, 125 : 4, 373 : 34) பாடு ஆன்று - ஓசை நிறைந்து.

22 - 3. "பாடான் றிரங்கு மருவி" (புறநா. 124 : 4).

24. "பொற்கோட் டிமயம்" (புறநா. 2 : 24, 39 : 14 - 5).

26. துடியடிக் குழவிய பிடி - உடுக்கையின் கண்போன்ற அடியையுடைய கன்றை நீங்காத பெண்யானை; "துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரை" (கலித். 11 : 8).

27. முகவை - ஏற்றுக்கொள்ளும் பரிசில்.

26 - 7. "மன்றுபடு பரிசிலர்க் காணிற் கன்றொடு, கறையடி யானை யிரியல் போக்கும்......ஆஅய்", "வரைமருண் முகவைக்கு வந்தனென்", "புகர்முக முகவைக்கு வந்திசின்" (புறநா. 135 : 11 - 3, 370 : 21, 371 : 20); "துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு, பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கென" (பொருந. 125 - 6); "இருபெயர்ப் பேராயமொ, டிலங்குமருப்பிற் களிறுகொடுத்தும்" (மதுரைக். 101 - 2); 'கன்றும் பிடியுமென்னும் இரண்டு பெயரை யுடைய பெரிய திரளுடனே விளங்குகின்ற கொம்பினையுடைய களிறுகளைக் கொடுத்தும்' (மதுரைக். 101 - 2, ந.).

மு. தொல். புறத்திணை. சூ. 17, இளம்; சூ. 21, ந.; உவம. சூ. 9, இளம். மேற். (௩௬௯)

(௩௭௦) ....ளி
நாரும் போழுஞ் செய்துண் டொராங்குப்
பசிதினத் திரங்கிய விரும்பே ரொக்கற்
கார்பதங் கண்ணென மாதிரந் துழைஇ
வேருழந் துலரி மருங்குசெத் தொழியவந்
தத்தக் குடிஞைத் துடிமரு டங்குரல்
உழுஞ்சிலங் கவட்டிடை யிருந்த பருந்தின்
பெடைபயிர் குரலொ டிசைக்கு மாங்கட்
கழைகாய்ந் துலறிய வறங்கூர் நீளிடை
வளிமரற் றிரங்கிய கானம் பிற்படப்
பழுமர முள்ளிய பறவை போல
ஒண்படை மாரி வீழ்கனி பெய்தெனத்
துவைத்தெழு குருதி நிலமிசைப் பரப்ப
விளைந்த செழுங்குர லரிந்துகால் குவித்துப்
படுபிணப் பல்போர் பழிய வாங்கி
எருதுகளி றுக வாண்மட லோச்சி
அதரி திரித்த வாளுகு கடாவின்
அகன்கட் டடாரி தெளிர்ப்ப வொற்றி
வெந்திறல் வியன்களம் பொலிகென் றேத்தி
இருப்புமுகஞ் செறித்த வேந்தெழின் மருப்பின்
வரைமருண் முகவைக்கு வந்தனென் பெரும
வடிநவி லெஃகம் பாய்ந்தெனக் கிடந்த
தொடியுடைத் தடக்கை யோச்சி வெருவார்
இனத்தடி விராய வரிக்குட ரடைச்சி
அழுகுரற் பேய்மக ளயரக் கழுகொடு

செஞ்செவி யெருவை திரிதரும்
அஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே.

(பி - ம்.) 3 'பரிதினத்' 18 'தெளிர்ப்பவேயொற்றி' 25 'பேஎய் மகள்'

திணையும் துறையும் அவை.

சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னியை ஊன் பொதி பசுங்குடையார்.

(கு - ரை.) 2. நார் - மரங்களின் நார். போழ் - பனங்குருத்து. உண்டு - சுவைத்துண்டு; புறநா. 375 : 5. ஓராங்கு : ஒரு தன்மைப் பட என்னும் பொருள்படுவதோர் இடைச்சொல்; கலித். 142 : 6. இச் சொல், "ஓராங்கு" என்றும் வரும்.

3. பசிதினத் திரங்கிய இரும்பேரொக்கற்கு - பசிதின்னலால் வருத்தமுற்ற கரிந்த பெரிய சுற்றத்தார் பொருட்டு; "பசிதினத் திரங் கிய வொக்கல்", "பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை", "இலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்", "இரும்பே ரொக்கல் பெரும்புலம் பகற்ற", "பசித்தென, வீங்குவந் திறுத்தவென் னிரும்பே ரொக்கல்"; "இரும்பே ரொக்கல் பெரும்புலம் புறினும்" (புறநா. 159 : 21, 160 : 4, 378 : 13, 390 : 18, 391 : 7 - 8, 394 : 16); "பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு" (பெரும்பாண். 25).

4. ஆர்பதம் - உண்ணும் உணவு; "தேரிற் றந்தவர்க் கார்பத நல்கும்...இசைசா ன்றேன்றல்", "நெல்லின், அம்பண வளவை விரிந் துறை போகிய, வார்பத நல்கு மென்ப" (பதிற். 55 : 11 - 2, 66 : 7 - 9); "ஆர்பதமிக்கு நீரும் நிழலும் பெறுதலிற் களிசிறந்து மாவும் புள்ளும் துணையோ டின்புற்று விளையாடுவன' (தொல். அகத்திணை. சூ. 6, ந.). மாதிரம் - திசை. துழைஇ - துழாவி; தேடி.

6. அத்தம் - அருஞ்சுரம். குடிஞை - கோட்டான். குடிஞைக் குரலுக்குத் துடியோசை உவமை; புறநா. 170 : 6 - 7, குறிப்புரை. மருள் : உவமவுருபு. குரல் : எழுவாய்.

7. உழுஞ்சில் - ஒருவகை மரம்; கவடு - கிளை; "கோடலங் கவட்ட குறுங்கா லுழுஞ்சில்" (அகநா. 151 : 8); உழுஞ்சிலை வாகை யென்பர்; சிலப். 11 : 76, அடியார்.

8. பயிர் - அழைத்தல்.

9. வறம் - வறுமை, நீரின்மை; கலித். 11 : 14.

10. வரிமரல்திரங்கிய - வரியையுடைய மரல் நீர்வற்றித் திரங்கிய; "வரிமரற் றிரங்கிய கரிபுறக் கிடக்கை" (சிலப். 11 : 77). மரல், மருளென்று வழங்கும்.

11. பழுத்த மரத்தை நினைத்துச் செல்கின்ற வௌவாலைப் போல; புறநா. 47 : 1, குறிப்புரை.

13. துவைத்து - முழங்கி.

14. குரல் - கழுத்து, தானியக்கதிர்; சிலேடை.

15. பிணப்பல் போர்பு - பலவகைப்பட்ட பிணங்களாகிய போர்கள்; போர்பு - தானியக்கதிர்ப்போர்; புறநா. 209 : 1; "பிணனெதிரப் போர் பழித்து", "அஞ்சா மறவ ராட்போர் பழித்து" (புறநா. 371 : 14, 373 : 25); "நீர்சூழ் வியன்களம் பொலியப் போர்பழித்து" (அகநா. 366 : 2).

16. வாளாகிய மடலைச் செலுத்தி; மடல் - பனங்கருக்கு.

15 - 7. "கழிபிணம் பிறங்குபோர் பழிகளி றெருதா", "யானையெருத்தின் வாண்மட லோச்சி, அதரி திரித்த வாளுகு கடாவின்", "குடபுலத் ததரி, பொலிக" (புறநா. 342 : 13, 371 : 15 - 6, 373 : 26 - 7); "கோட்டுமாப் பூட்டி வாட்கோ லாக, ஆளழி வாங்கி யதரி திரித்த" (சிலப். 26 : 262).

18. "தெடாரித் தெண்கண் டெளிர்ப்ப வொற்றி", "அரிக்குரற் றடாரி யுருப்ப வொற்றி", "அகன்கட் டடாரிப் பாடுகேட் டருளி" (புறநா. 368 : 15, 369 : 21, 385 : 4). 20. புறநா. 369 : 1.

21. முகவை : புறநா. 368 : 11, 369 : 27, 371 : 20.

போல (11) வந்தனென் (21)

22. வடி நவில் - வடித்தல் பயின்ற; புறநா. 23 : 8.

23. தொடியுடைத் தடக்கை - வளையையுடைய பெரிய கையை.

24. வரிக்குடர் - பல வரியையுடைய குடர்; "நெறிகொள் வரிக்குடர்" (புறநா. 160 : 6). அடைச்சி - சேர்த்து.

26. செஞ்செவியெருவை : புறநா. 238 : 2; "செஞ்செவி யெருவைச் சேவல்" (அகநா. 161 : 5 : 6).

27. போர்க்களம் வென்றோர்க்கு உரித்தாதலால், 'களங்கிழவோய்' என்றார்; புறநா. 371 : 27, 373 : 39. (௩௭௦)

(௩௭௧) அகன்றலை வையத்துப் புரவலர்க் காணாது
மரந்தலைச் சேர்ந்து பட்டினி வைகிப்
போதவி ழலரி நாரிற் றொடுத்துத்
தயங்கிரும் பித்தை பொலியச் சூடிப்
பறையொடு தகைத்த கலப்பையென் முரவுவாய்
ஆடுறு குழிசி பாடின்று தூக்கி
மன்ற வேம்பி னொண்பூ வுறைப்பக்
குறைசெயல் வேண்டா நசைய விருக்கையேன்

அரிசி யின்மையி ஞரிடை நீந்திக்
கூர்வா யிரும்படை நீரின் மிளிர்ப்ப
வருகணை வாளி.......யன்பின்று தலைஇ
இரைமுர சார்க்கு முரைசால் பாசறை
வில்லே ருழவினின் னல்லிசை யுள்ளிக்
குறைத்தலைப் படுபிண னெதிரப் போர்பழித்
தியானை யெருத்தின் வாண்மட லோச்சி
அதரி திரித்த வாளுகு கடாவின்
மதியத் தன்னவென் விசியுறு தடாரி
அகன்க ணதிர வாகுளி தொடாலிற்
பணைமரு ணெடுந்தாட் பல்பிணர்த் தடக்கைப்
புகர்முக முகவைக்கு வந்திசிற் பெரும
களிற்றுக்கோட் டன்ன வாலெயி றழுத்தி
விழுக்கொடு விரைஇய வெண்ணிணச் சுவையினள்
குடர்த்தலை மாலை சூடி யுணத்தின
ஆனுப் பெருவளஞ் செய்தோன் வானத்து
வயங்குபன் மீனினும் வாழியர் பலவென
உருகெழு பேய்மக ளயரக்
குருதித்துக ளாடிய களங்கிழ வோயே.

(பி - ம்:) 1 'புரவறகாணுத்', 'பாவறகாணுது' 2 'மறநதலை சோநது' 11 'இருகணை' 12 'உரை சுரும்பார்க்கும்', 'இரைசுரும்பு' 13 'ருழவநின்' 18 'தொழாலிற' 19 'பகலபிணர்' 20 'முகவைவந் திசிற்' 23 'மாலைதுயல்வரச்சூடி; 'மாலைசூடி யுணத்தின மானுப்' 26 'பேஎய மகளாய'

திணையும் துறையும் அவை.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனார்.

(கு - ரை.) 1. புரவலர் - பாதுகாப்போர்.

2. மரந்தலை - இங்கே மரத்தின் கீழிடம்.

3. அலரிப் பூவை நாராற்றொடுத்து. 4. பித்தை - தலைமயிர்.

3 - 4. "அலரி, சுரியிரும் பித்தை சுரும்புபடச் சூடி" (அகநா. 213 : 4 - 5), "தாமரை, சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி" (பொருந. 159 - 60); "தாமரை, நீடிரும் பித்தை பொலியச் சூட்டி" (பெரும் பாண். 481 - 2).

5. தகைத்த - கட்டிய. கலப்பை - சமைத்தற்குரிய கருவிகளை யடக்கிய பை; "காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை" (புறநா. 206 : 10). முரவு - சிதைவு; "முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி" (பெரும்பாண். 99).

6. ஆடு - சமைத்தல். குழிசி - பானை. பாடின்று - கெடாதபடி.

7. மன்றம் - பொதுவிடம்; "மன்றவேம்பு" (புறநா. 76 : 4, 79 : 2). உறைப்ப - உதிர.

8. குறை - காரியம்.

9. ஆரிடை நீந்தி - அரிய இடங்களைக் கடந்து.

10. படை - படைவாள்; பாரை. மிளிர்ப்ப - கீழ்மேலாகப் புரளச் செய்ய. 12. உரைசால் - புகழ்மிக்க.

13. வில்லேருழவின் - வில்லை ஏராகக்கொண்டு உழுதலையுடைய; உழவன் - வீரன்; "வில்லே ருழவர்" (குறள், 872); "மாரி வளம் பெரு வில்லே ருழவர்" (சிலப். 11 : 210).

14. குறைத்தலைப் படுபிணன் - கவந்தம். போர்பு - போர்; புறநா. 370 : 15. 15. யானையாகிய உழும் எருது.

14 - 6. "படுபிணப் பல்போர் பழிய வாங்கி, எருதுகளி றுக வாண் மட லோச்சி, அதரி திரித்த வாளுகு கடாவின்" (புறநா. 370 : 15 - 7).

17. "மதிபுரை மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி", "மாக விசும்பின் வெண்டிங்கண்.........கடனறுவட் கண்டன்னவென், ணியம்" (புறநா. 393 : 20, 400 : 1 - 4).

18. ஆகுளி - சிறுபறை; "நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கி" (புறநா. 64 : 1). தொடாலின் - கொட்டுதலுடன்; "துடிக்கண் புலையன் றொடும்" (பு. வெ. 62).

17 - 8. தடாரியின் கண் அதிர.

19. பணை - ஒருவகைப் பறை. மருள் : உவமவுருபு; புறநா. 368 : 17.

20. புறநா. 368 : 11, 369 : 27, 370 : 21. வந்திசின் - வந்தேன். முகவைபாடுதல் - பொலிபாடுதல்; "முகவை என்றூர், நெல்லு முகந்து கொடுக்கப்படுதலாலே; புகர்முக முகவை போல" (சிலப். 10 : 137, அரும்பத.).

நீந்தி (9) வந்திசிற் பெரும (20)

22. விழுக்கு - ஊன்விசேடம்; "பருத்திப் பெண்டின் பனுவ லன்ன, நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை", "கொழுநிணங்கிழிப்பக், கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த, மூடைப் பண்ட மிடைநிறைந் தன்ன, வெண்ணிண மூரி" (புறநா. 125 : 1 - 2, 393 : 11 - 4) என்பவற்றையும், "விழுக்கொடு வெண்ணஞ்சு" (சீவக. 1584) என்பதையும், 'விழுக்கும் வெண்ணஞ்சும் ஊன்விசேடம்:

வெண்ணஞ்சு - நிணமுமாம்' என்னும் அதன் விசேடவுரையையும் பார்க்க.

23. "குடர்த்தொடர் மாலை பூண்பா னல்லன்", "குடர்த்தொடர் மாலை சூடாது" (மணி. 15 : 13, 25 : 72). உணத்தின : "உண்டுந் தின்று மூர்ந்து மாடுகம்" (புறநா. 166 : 30).

24 - 5. புறநா. 367 : 16 - 8.

26. உரு - அச்சம்.

27. "அஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே" (புறநா. 370 : 27, 373 : 39).

21 - 7. பின்றேர்க்குரவைக்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 17, இளம்.; 21, ந. மேற். (௩௭௧)

(௩௭௨) விசிபிணித் தடாரி விம்மென வொற்றி
ஏத்தி வந்த தெல்லா முழுத்த
இலங்குவா ளவிரொளி வலம்பட மின்னிக்
கணைத்துளி பொழிந்த கண்கூடு பாசறைப்
பொருந்தாத் தெவ்வ ரரிந்ததலை யடுப்பிற்
கூவிள விறகி னாக்குவரி நுடங்கல்
ஆனா மண்டை வன்னியந் துடுப்பின்
ஈனா வேண்மா ளிடந்துழந் தட்ட
மாமறி பிண்டம் வாலுவ னேந்த
வதுவை விழவிற் புதுவோர்க் கெல்லாம்
வெவ்வாய்ப் பெய்த பூதநீர் சால்கெனப்
புலவுக்களம் பொலிய வேட்டோய்நின்
நிலவுத்திக ழார முகக்குவ மெனவே.

(பி - ம்.) 2 'தெல்லாமமுழுத்த' 6 'னாக்குவதி துடங்கல' 9 'வலவ னேந்த', 'வலாவனேந்த'

திணை - வாகை; துறை - மறக்களவேள்வி.

அவனை மாங்குடிகிழார் (பி - ம். மாந...கிழார்)

(கு - ரை.) 1. தடாரி விம்மென - கிணைப்பறை ஒலிப்ப; "வார் வலந்த துடிவிம்ம" (பு. வெ. 13).

4. கணையாகிய நீர்த்துளி; "கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை" (புறநா. 369 : 9).

5. தெவ்வர் தலையடுப்பில் - பகைவருடைய தலைகளாகிய அடுப்பில்; "ஆண்டலை யணங்கடுப்பு" (மதுரைக். 29).

9. வாலுவன் - மடையன்.

5 - 9. "முடித்தலை யடுப்பிற் பிடர்த்தலைத் தாழித், தொடித்தோட் டுடுப்பிற் நுழைஇய ஊன்சோறு, மறப்பேய் வாலுவன் வயினறிந் தூட்ட" (சிலப். 26 : 242 - 4).

12. களம்வேட்டோய் - களவேள்வி செய்தோய்; களவேள்வி இன்னதென்பதை, 'நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்துப் போரழித்து அதரி திரித்துச் சுற்றத்தொடு நுகர்வதற்கு முன்னே கடவுட் பலி கொடுத்துப் பின்னர்ப் பரிசிலர் முகந்துகொள்ள வரிசையின் அளிக்குமாறுபோல அரசனும் நாற்படையையுங் கொன்று களத்திற் குவித்து எருது களிறாக வாண்மடலோச்சி அதரி திரித்துப் பிணக்குவையை நிணச்சேற்றொடு உதிரப் பேருலைக்கண் ஏற்றி, ஈனாவேண்மாள் இடந்துழந்தட்ட கூழ்ப்பலியைப் பலிகொடுத்து எஞ்சிநின்ற யானை குதிரைகளையும் ஆண்டுப் பெற்றன பலவற்றையும் பரிசிலர் முகந்து கொள்ளக் கொடுத்தலாம்' (தொல். புறத்திணை. சூ. 21, ந.) என்பதனால் உணர்க.

வந்ததெல்லாம் (2) முகக்குவமென (13) (௱எ௨)

(௱எ௩) உருமிசை முழக்கென முரச மிசைப்பச்
செருநவில் வேழங் கொண்மூ வாகத்
தேர்மா வழிதுளி தலைஇ நாமுறக்
கணைக்காற் றெடுத்த கண்ணகன் பாசறை
இழிதரு குருதியொ டேந்திய வொள்வாட்
பிழிவது போலப் பிட்டையூ றுவப்ப
மைந்த ராடிய மயங்குபெருந் தானைக்
கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே
....தண்ட மாப்பொறி
மடக்கண் மயிலியன் மறலி யாங்கு
நெடுஞ்சுவர் நல்லில் புலம்பக் கடைகழிந்து
மென்றோண் மகளிர் மன்றம் பேணார்
புண்ணாவ..................
.........யணியப் புரவி வாழ்கெனச்
சொன்னிழ லின்மையி னன்னிழற் சேர
நுண்பூண் மார்பிற் புன்றலைச் சிறாஅர்
அம்பழி பொழுதிற் றமர்முகங் காணா
....ற் றொக்கான
வேந்துபுறங் கொடுத்த வீய்ந்துகு பறந்தலை
மாட மயங்கெரி மண்டிக் கோடிறு
புருமெறி மலையி னிருநிலஞ் சேரச்

சென்றோன் மன்றசொ...............
....ண்ணறிநர் கண்டுகண் ணலைப்ப
வஞ்சி முற்றம் வயக்கள னாக
அஞ்சா மறவ ராட்போர் பழித்துக்
கொண்டனை பெரும குடபுலத் ததரி
பொலிக வத்தைநின் பணைதனற...ளம்
விளங்குதிணை வேந்தர் களந்தொறுஞ் சென்று
புகர்முக முகவை பொலிகென் றேத்திக்
கொண்டன ரென்ப பெரியோர் யானும்
அங்கண் மாக்கிணை யதிர வொற்ற
..................லெனாயினுங் காதலி னேத்தி
நின்னோ ரன்னோர் பிறரிவ ணின்மையின்
மன்னெயின் முகவைக்கு வந்திசிற் பெரும
பகைவர் புகழ்ந்த வாண்மை நகைவர்க்குத்
தாவின் றுதவும் பண்பிற் பேயொடு
கணநரி திரிதரு மாங்க ணிணனருந்து
செஞ்செவி யெருவை குழீஇ
அஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே.

(பி - ம்.) 1 'முழககெயிசைய' 6 'பிட்டயூறுவப்ப', 'பிட்டயூடவப்ப' 17 'அமபாழிலொழிதிறமா' 27 'பணைதனமவிளங்கு' 30 'தொண்டரெனப்' 33 'பிறரிவர்' 34 'மின்னெயில்' 35 'நசைவாக்குத்' 37 'திரிதருஉமாங்கண'

திணை - அது. துறை - மறக்களவழி; ஏர்க்கள உருவகமுமாம்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரெறிந் தானைக் கோவூர்கிழார்.

(கு - ரை.) 1. உருமிசை முழக்கு - மேகமுழக்கு; மேககர்ச்சனை முரச ஒலிக்கு உவமை; "படுமழை யுருமி னிரங்கு முரசு" (புறநா. 350 : 4); "தாழிரு டுமிய மின்னித் தண்ணென, வீழுறை யினிய சிதறி யூழியிற், கடிப்பிகு முரசின் முழங்கி" (குறுந். 270 : 1 - 3); "முரசதிர் பவைபோன் முழங்கிடி பயிற்றி" (பரி. 22 : 4); "கொண்மூ, இருண் டுயர் விசும்பின் வலனேர்பு வளைஇப், போர்ப்புறு முரசி னிரங்கி", "இடியுமிழ் முரசம் பொருகளத் தியம்ப" (அகநா. 188 : 1 - 3, 354 : 2); "உருமிடி முரசமொடு" (முருகு. 121); "மூரிவான முழங்கிவாய் விட்ட தொப்ப, அதிர்குரன் முரசம்", "இடியுமிழ் முரசம்" (சீவக. 543, 2900); "உருமி னிடிமுரசார்ப்ப" (முத்.); "இடியார் பணைதுவைப்ப', (பு. வெ. 121); "முழங்கின முகிலென முரசமே" (தக்க. 530).

2. "கருங்கை யானை கொண்மூ வாக" (புறநா. 369 : 2).

3 - 4. "மால்வரைத் தொடுத்து வீழ்ந்த மணிநிற மாரி தன்னைக், காலிரைத் தெழுந்து பாறக் கல்லெனப் புடைத்த தேபோல், மேனிரைத் தெழுந்த வேடர் வெந்நுனை யப்பு மாரி, கோனிரைத் துமிழும் வில்லாற் கோமகன் விலக்கி னானே" (சீவக. 451, ந.) என்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்.

7. ஆடிய - வென்ற. 8. கொங்கு - கொங்க நாட்டு வீரர்களை.

11. புலம்ப - தனித்து வருந்த.

12. மன்றம் - பொதுவிடம். 16. புன்றலை - சிவந்த தலை.

16 - 7. "புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி" (புறநா. 46 : 6).

20. இறுபு - ஒடிந்து.

20 - 21. புறநா. 211 : 1 - 4; கலித். 45 : 3 - 5.

24. வஞ்சி - சேரர் இராசதானி; "வஞ்சி முற்ற நீங்கிச் செல்வோன்" (சிலப். 25 : 6).

25. ஆள் போர்பு அழித்து - வீரர்களுடைய பிணங்களாலாகிய போரை அழித்து; புறநா. 371 : 14.

26. குடபுலம் - குடநாடு. அதரி கொண்டனை - கடாவிட்டனை.

28. திணை - குலம்.

29. புகர்முக முகவை - யானைப்பரிசில்; புறநா. 371 : 20.

31. கிணை - தடாரிப் பறை.

33. நின்னோர் அன்னோர் - உன்னைப் போன்றோர்.

34. சீவக. 323, ந. மேற்.

33 - 4. தொல். உவம. சூ. 24, இளம். மேற்.

35. நகைவர்க்கு - நட்பினர்க்கு; "நகைவர்க் கரண மாகிப் பகைவர்க்குச், சூர்நிகழ்ந் தற்றுநின் றானை" (பதிற். 31 : 33 - 4); "நகைவ ரார நன்கலஞ் சிதறி" (பதிற். 37 : 4, 43: 20).

38 - 9. "செஞ்செவி யெருவை திரிதரும், அஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே" (புறநா. 370 : 26 -7). (௩௭௩)

(௩௭௪) கானன் மேய்ந்து வியன்புலத் தல்கும்
புல்வா யிரலை நெற்றி யன்ன
பொலமிலங்கு சென்னிய பாறுமயி ரவியத்
தண்பனி யுறைக்கும் புலரா ஞாங்கர்
மன்றப் பலவின் மால்வரை பொருந்தியென்
தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
இருங்கலை யோர்ப்ப விசைஇக் காண்வரக்

கருங்கோற் குறிஞ்சி யடுக்கம் பாடப்
புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறாஅர்
மான்கண் மகளிர்க் கான்றே ரகன்றுவா
சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை
விடர்முகை யடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம்
புகர்முக வேழத்து மருப்பொடு மூன்றும்
இருங்கேழ் வயப்புலி வரியதட் குவைஇ
விருந்திறை நல்கு நாட னெங்கோன்
கழறொடி யாஅ யண்டிரன் போல
வண்மையு முடையையோ ஞாயிறு
கொன்விளங் குதியால் விசும்பி னானே.

(பி - ம்.) 3 'ரவியபபத' 4 'யிறைக்கும்' 12 'சாநதப்'

திணை - பாடாண்டிணை; துறை - பூவைநிலை.

ஆய் அண்டிரனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

(கு - ரை.) 1. கானல் - மலைப்பக்கம். அல்கும் - தங்கும்.

2. புல்வாய் - ஒருவகை மான்.

'இரலை' என்னும் ஆண்பாற்பெயர் புல்வாய்ச் சாதிக்குரியதென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். மரபு. சூ. 44, பேர்.

3. பொலம் - பொன்; பொற்றாமரைப் பூ; ஆகுபெயர். பாறுமயிர் அவிய - சிதறிய மயிர் அடங்கும்படி.

4. உறைக்கும் - துளிக்கும்.

3 - 4. "பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி", "பனிபழுநிய பல்யாமத்துப், பாறுதலை மயிர்நனைய" (புறநா. 279 : 9, 377 : 1 - 2).

5. மன்றப்பலவு - பொதுவிடத்திலுள்ள பலா; பொருநர் முதலிய இரவலர் பொதுவிடத்தில் வந்து தங்குதலும் அங்குள்ள மரத்தில் தம் வாச்சியங்களைத் தொங்கக்கட்டுதலும் மரபு; புறநா. 128 : 1; ஐந்திணை யெழுபது, 4.

6. புறநா. 381 : 12 - 3, 397 : 10.

7. ஓர்ப்ப - செவிசாய்த்துக் கேட்கும்படி; புறநா. 157 : 12; "பாடலோர்த்து நாடக நயந்தும்" (பட்டினப். 113). இசைஇ - முழக்கி.

8. கருங்கோல் - பெரிய தண்டு; "கருங்கோற் குறிஞ்சி மதனில் வான்பூ", "பெருங்கோற் குறிஞ்சி" (நற். 268 : 3, 301 : 1); "கருங் கோற் குறிஞ்சிப்பூ" (குறுந். 3 : 4); "கருங்கோற் குறிஞ்சி" (அகநா. 308 : 16). அடுக்கம் - மலைப்பக்கம்; குறிஞ்சியையுடைய அடுக்கம்; தலை

வனையும் அவனுடைய மலைமுதலியவற்றையும் பாடுதல் மரபு; புறநா. 130 : 3, குறிப்புரை; 143 : 12, குறிப்புரை.

9. புலிப்பல் தாலி - புலியின் பல்லைக் கோத்துச் செய்த கழுத்தணி; "புலிப்பற் றாலிப் புதல்வர்" (குறுந். 161 : 3); "புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி"(அகநா. 7 : 18); "மறங்கொள் வயப்புலி வாயிற் பிளந்து பெற்ற, மாலை வெண்பற் றாலி"(சிலப். 12 : 27 - 8).

11. முளவுமான் கொழுங்குறை - முள்ளம்பன்றியின் கொழுவிய தசை; "முளவுமாத் தொலைச்சிய" (புறநா. 325 : 6); "முளவுமா வல்சி" (ஐங்குறு. 364 : 1); "முளவுமாத் தொலைச்சுங் குன்றம்" (அகநா. 142 : 8); "முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை" (மலைபடு. 176).

12. விடர்முகை - வெடிப்பையுடைய குகை; "விடர்முகை முழங்கும்" (ஐங்குறு. 395 : 2); "விடர்முகை யடுக்கம் பாய்தலின்", "விடர்முகை முழங்கும்", "அஞ்சுவரு விடர்முகை" அகநா. 47 : 6, 143 : 7, 272 : 4.

13. புகர்முக வேழம் : புறநா. 373 : 29. மூன்று : குறை, சாந்தம், மருப்பு என்பன.

14. புலித்தோலில் மேற்கூறிய மூன்றையும் குவித்து.

15. இறை நல்கும் - திறையாகக் கொடுக்கும்.

16. ஆயாகிய அண்டிரன்; "கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்" (புறநா. 128 : 5; குறுந். 84 : 3); "ஆஅ யண்டிர னடுபோ ரண்ணல்", "வாழைப்பூங் கண்ணி வாய்வா ளண்டிரன்", "தண்டாரண்டிரன்" (புறநா. 129 : 5, 131 : 2, 241 : 1 - 2).

17. ஞாயிறு : விளி. 18. கொன் - பயனின்மை.

16 - 8. புறநா. 8 - ஆம் பாடலின் கருத்து. (௱௭௪)

(௱௭௫) அலங்குகதிர் சுமந்த கலங்கற் சூழி
நிலைதளர்வு தொலைந்த வொல்குநிலைப் பல்காற்
பொதியி லொருசிறை பள்ளி யாக
முழாவரைப் போந்தை யரவாய் மாமடல்
நாரும் போழுங் கிணையொடு சுருக்கி
ஏரின் வாழ்நர் குடிமுறை புகாஅ
ஊழிரந் துண்ணு முயவல் வாழ்வைப்
புரவெதிர்ந்து கொள்ளுஞ் சான்றோர் யாரெனப்
பிரசந் தூங்கு மறாஅ யாணர்
வரையணி படப்பை நன்னாட்டுப் பொருந
பொய்யா வீகைக் கழறொடி யாஅய்

யாவரு மின்மையிற் கிணைப்பத் தாவது
பெருமழை கடற்பரந் தாஅங் கியானும்
ஒருநின் னுள்ளி வந்தனெ னதனாற்
புலவர் புக்கி லாகி நிலவரை
நிலீஇய ரத்தை நீயே யொன்றே
நின்னின்று வறுவி தாகிய வுலகத்து
நிலவன் மாரோ புரவலர் துன்னிப்
பெரிய வோதினுஞ் சிறிய வுணராப்
பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே.

(பி - ம்.) 5 'போருங்' 9 - 10 'யாணாவரையணிப்' 12 'கினபப' 19 'பெரியவேத்தினுஞ்' 21 'பாடிமன்னரை'.

திணை - பாடாண்டிணை : துறை - வாழ்த்தியல்.

அவனை அவர்.

(கு - ரை.) 1. கதிர் - வெயில். சூழி - ஒருவகை நீர்நிலை.

3. பொதியில் ஒருசிறை - மன்றத்தினொருபக்கம்.

4. மத்தளத்தைப் போன்ற அரையையுடைய பனையின் அரம் போன்ற வாயினையுடைய மடல்; "முழாவரைப் போந்தைப் பொருந்தி", "மடல்வன் போந்தை"(புறநா. 85 : 7, 297 : 10); "முழவுத்தாளெரி வேங்கை" (கலித். 44 : 4).

5. "நாரும் போழுஞ் செய்துண்டு" (புறநா. 370 : 2).

6. புகாஅ - புகுந்து. 7. ஊழ் - முறையே. உயவல் - வருத்தம்.

8. புரவு எதிர்ந்துகொள்ளும் - பாதுகாத்தலை ஏற்றுக்கொள்ளும்.

8. பிரசம் - தேன்கூடு; "பிரசந்தூங்கு சேட்சிமை" (அகநா. 242 : 21). அருஅ யாணர் - இடையறாத செல்வ வருவாயையுடைய; பொருந. 1, ந.

10. படப்பை - தோட்டம். 11. ஆஅய் : விளி.

13. மழை - மேகம். 14. நின்னுள்ளி - உன்னை நினைத்து.

15. புக்கில் - எப்பொழுதும் இருத்தற்குரிய வீடு; "புக்கி லமைந் தின்று கொல்லோ" (குறள், 340).

16. நிலீஇயர் - நிற்பாயாக; அத்தை : அசை.

18 - 9. "துன்னி.........உணராலென்புழிப் பெரிய சிறிய வென்பன பெருமை சிறுமைப்பண்படியாக வந்தமையின், இவ்வெச்சத்தின் குறிப் பென்றலு மொன்று; இவ்வெச்சப் பொருள்படும் உரிச்சொலென்றலு மொன்று", "பெரியவோதினு மென்பதற்குச் சிறிய வோதினுமெனக் குறிப்பும் மறைவிகற்பமும் அறிக" (தொல். வினை. சூ. 30, 38. கல்.);

"துன்னி...உணராவென அகரம் வினைக்குறிப்புப்பற்றி வருவனவும்" (தொல். வினை. சூ. 31, ந.)

21. பாடன்மார் - பாடுதலைத் தவிர்வாராக; தொல். வினை. சூ. 10. கல்.; ந. மேற்.

20 - 21. தொல். வினை. சூ. 10, சே.; இ - வி. சூ. 232, 239, உரை. மேற்.

19 - 21. தொல். இடை. சூ. 8, கல்.; நன். சூ. 326, மயிலை; நன். வி. சூ. 327, மேற். (௩௭௫)

(௩௭௬) விசும்பு நீத்த மிறந்த ஞாயிற்றுப்
பசுங்கதிர் மழுகிய சிவந்துவாங் கந்தி
சிறுநனி பிறந்த பின்றைச் செறிபிணிச்
சிதாஅர் வள்பினென் றெடாரி தழீஇப்
பாண ராரு மளவை யான்றன்
யாணர் நன்மனைக் கூட்டுமுத னின்றனென்
இமைத்தோர் விழித்த மாத்திரை ஞெரேரெனக்
குணக்கெழு திங்கள் கனையிரு ளகற்றப்
பண்டறி வாரா வுருவோ டென்னரைத்
தொன்றுபடு துளையொடு பருவிழை போகி
நைந்துகரை பறைந்தவென் னுடையு நோக்கி
விருந்தின னளிய னிவனெனப் பெருந்தகை
நின்ற முரற்கை நீக்கி நன்றும்
அரவுவெகுண் டன்ன தேறலொடு சூடுதருபு
நிரயத் தன்னவென் வறன்களைந் தன்றே
இரவி னானே யீத்தோ னெந்தை
அன்றை ஞான்றினொ டின்றி னூங்கும்
இரப்பச் சிந்தியே னிரப்படு புணையின்
உளத்தி னளக்கு மிளிர்ந்த தகையேன்
நிறைக்குளப் புதவின் மகிழ்ந்தனெ னாகி
ஒருநாள், இரவலர் வரையா வள்ளியோர் கடைத்தலை
ஞாங்கர் நெடுமொழி பயிற்றித்
தோன்றல் செல்லாதென் சிறுகிணைக் குரலே.

(பி - ம்.) 1 'விசும்பினீத்தமிறந்த', 'விசும்பிணியத்தமிறந்த' 2 'மழுங்கிய', 'பழுனிய', 'மழகிய', 2 - 3 'கந்திச் சிறுநனியிறந்த' 4 'சிதாஅவளபின்' 6 'பாணர் நன்......நினறென' 8 'மறையிருள்' 10 'போக்கி' 13 'முரற்கை மிக்குநன்று' 15; 'வறங்' 17 'நான்றினொடு'

திணை - அது; துறை - இயன்மொழி.

ஓய்மான் நல்லியாதனை (பி - ம்.) 'ஆய்மானல், ஓய்மான் வில்லியாதனை' 'ஓய்மான் நல்லியக் கோடனை'ப் புறத்திணை நன்னாகனார்.

(கு - ரை.) 1. விசும்பு நீத்தம் – விசும்பாகிய நீத்தத்தை; 'நீத்தம்' என்றார் கடத்தற்கு அருமையின். இறந்த - கடந்த.

2. மழுகிய - ஒளி குறைந்த. அந்தி - மாலைக்காலம்.

1 - 2. "சுடர்கெழு மண்டில மழுக ஞாயிறு, குடகடல் சேரும் படர்கூர் மாலை" (அகநா. 378 : 14 - 5).

4. தெடாரி : மோனைநோக்கி எகரமாயிற்று; புறநா. 368 : 15. "சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி" (புறநா. 381 : 12)

5. ஆரும் - உண்ணும்.

6. யாணர் நன்மனை - புதுவருவாயை யுடைய நல்ல வீடு. கூட்டு முதல் - தானியக் கூட்டின் அடியில்; (புறநா. 396 : 19)

7. இமைத்தோர் - இமைகொட்டுவோர். மாத்திரை - அளவு. ஞெரேரென - விரைவாக. 8. குணக்கு - கிழக்கு. கனை - செறிவு.

9. "மாலை யன்னதோர் புன்மையுங் காலைக், கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்" (பொருந. 96 - 7). 10. பருஇழை - பரிய நூலிழை.

11. பறைந்த - தேய்ந்த; புறநா. 359 : 1.

9 - 11. "அரையது, வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர், ஓம்பி யுடுத்த வுயவற் பாண", "கூதிர்ப் பருந்தி னிருஞ்சிற கன்ன, பாறிய சிதாரேன்" (புறநா. 69 : 2 - 4, 150 : 1 - 2); "ஈரும் பேனுமிருந் திறை கூடி, வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த, துன்னற் சிதாஅர்", "பாசி வேரின் மாசொடு குறைந்த, துன்னற் சிதாஅர்" (பொருந. 79 - 81, 153 - 4).

13. முரற்கை - தாளம்; எங்களைப் பாடாதவாறு செய்தென்றபடி.

14. புறநா. 392 : 16; "பாப்புக் கடுப்பன்ன தோப்பி" (அகநா. 348 : 7); "பாம்புவெகுண் டன்ன தேறல்" (சிறுபாண். 237). சூடு - சுட்டிறைச்சி; புறநா. 34, 369, 395, 397.

15. நிரயத்தன்ன வறன் - நரகவேதனை போன்ற துன்பத்தைச் செய்விக்கும் வறுமை.

17 - 8. "இலனென்னு மெவ்வ முரையாமை யீதல், குலனுடை யான் கண்ணே யுள" (குறள், 223) என்பதையும் அதற்குப் பரிமேலழகர் எழுதிய விசேடவுரையையும், விநாயக புராணம், அரசியற் கைப் படலம், 38 - ஆம் பாடல் முதலியவற்றையும் பார்க்க. நிரப்படு புணை - வறுமையைக் கடத்தற்குரிய தெப்பம்.

20. நிறைக்குளப்புதவு - நீர் நிறைந்திருத்தலையுடைய குளத்தின் வாய்த்தலை; புறநா. 24 : 19.

21. இரவலர் வரையா - யாசகரை நீக்காத. வள்ளியோர் - வரையாது கொடுப்போர். கடைத்தலை - தலைவாயில்.

22. ஞாங்கர் - பக்கம். நெடுமொழி - தனது மேம்பாட்டைக் கூறு மொழி.

18 - 23. இவ்வடிகளின் பொருள். "செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம், பெருமான் முகம்பார்த்த பின்னர் - ஒருநாளும், பூதலத்தோர் தம்மைப் பொருணசையாற் பாராவாம், காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்" (தண்டி. சூ. 21, உரை, மேற்.) என்னும் வெண்பாவை நினைப்பிக்கின்றது.

மு. புறநா. 68 : 19, 148. (௩௭௬)

(௩௭௭) பனிபழுனிய பல்யாமத்துப்
பாறுதலை மயிர்நனைய
இனிது துஞ்சுந் திருநகர் வரைப்பின்
இனைய லகற்றவென் கிணைதொடாக் குறுகி
அவியுணவினோர் புறங்காப்ப
அறநெஞ்சத்தோன் வாழநாளென்
றதற்கொண்டு வரலேத்திக்
கரவில்லாக் கவிவண்கையான்
வாழ்கவெனப் பெயர்பெற்றோர்
பிறர்க்குவமந் தானல்லது
தனக்குவமம் பிறரில்லென
அதுநினைந்து மதிமழுகி
ஆங்குநின்ற வெற்காணூஉச்
சேய்நாட்டுச் செல்கிணைஞனை
நீபுரவலை யெமக்கென்ன
மலைபயந்த மணியுங் கடறுபயந்த பொன்னும்
கடல்பயந்த கதிர்முத்தமும்
வேறுபட்ட வுடையுஞ் சேறுபட்ட தசும்பும்
கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப
நனவி னல்கியோ னசைசான்றோன்றல்
நாடென மொழிவோரவ னாடென மொழிவோர்
வேந்தென மொழிவோரவன் வேந்தென மொழிவோர்
........................பொற்கோட் டியானையர்

கவர்பரிக் கச்சைநன் மான்
வடிமணி வாங்குருள
.....................நற்றேர்க்குழுவினர்
கதழிசை வன்கணினர்
வாளின் வாழ்ந ரார்வமொ டீண்டிக்
கடலொலி கொண்ட தானை
அடல்வெங் குருசின் மன்னிய நெடிதே.

(பி - ம்.) 4 'தாடகுறுகி' 6 'நெஞ்சத்தோனுளென்று' 12 'பழகி' 16 'மலைபெயர்ந்த பொன்னும்...பயந்தமணியும்' 20 'னல்கியோனென் கை' 22 'வேந்தன'

திணை - அது; துறை - வாழ்த்தியல்.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியை உலோச்சனுர்.

(கு - ரை.) 1. பழுனிய - முதிர்ந்த.

2. பாறுமயிர் - பரந்து மேல்நோக்கிய மயிர்.

1 - 2. "பாறுமயி ரவியத், தண்பனி யுறைக்கும் புலரா ஞாங்கர்" (புறநா. 374 : 3 - 4).

4. இனையல் - வருந்தல். கிணைதொடா - தடாரிப்பறையை வாசித்து.

5. அவியுணவினோர் - தேவர்; "அவியுணவி னான்றாரோ" (குறள், 413). தேவர் புறங்காப்ப.

5 - 6. வாழும்படி நாடோறும் புறங்காப்பவென்று.

8. கவி வண்கையான் - கொடையாற் கவிந்த கையோடு.

9 - 10. பெற்றோராகிய பிறர்க்கு.

10 - 11. "பிறர்க்குநீ வாயி னல்லது நினக்குப், பிறருவம மாகா வொருபெரு வேந்தே" (பதிற். 73 : 2 - 3), 'பொருநனென்றது தான் பிறர்க்கு உவமிக்கப்படுவானென்னும் பொருட்டு' (மதுரைக். 42, ந.).

12. அது - உவமமின்மையை. மழுகி : "நிறையுமதி யிரவுமழுகி நிலைகெட நகைத்து" (தக்க. 36).

13. எற்காணூஉ - என்னைக் கண்டு.

14. கிணைஞனை - கிணைஞனாகிய நீ; ஐ : முன்னிலையை விளக்கி நின்றது.

15. புரவலை - எம்மாற் பாதுகாத்தற்குரியாய். என்ன - என்று சொல்லி.

16. கடறு - காடு. 18. சேறுபட்ட தசும்பு - கட்குடம்.

19. "கனவென மருண்டவென் னெஞ்சே மாப்ப" (பொருந. 98).

19 - 20. "கனவென மருள வல்லே நனவின், நல்கி யோனே நசைசா ரேன்றல்" (புறநா. 387 : 26 - 7).

23. பொன் - கிம்புரி; ஆகுபெயர்.

24. கவர்பரி - பகுந்து விரையும் செலவு : "கவர்பரிப் புரவியர்" (சிலப். 5 : 159). மான் - குதிரை.

27. கதழிசை - விரைதல் பொருந்திய.

28. வாளின் வாழ்நர் - வாள்வீரர்.

30. மன்னிய நெடிது - நெடுங்காலம் வாழ்வானாக. (௩௭௭)

(௩௭௮) தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாளோட்டிய
தொடையமை கண்ணித் திருந்துவேற் றடக்கைக்
கடுமா கடைஇய விடுபரி வடிம்பின்
நற்றார்க் கள்ளின் சோழன் கோயிற்
புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடத்துப்
பனிக்கயத் தன்ன நீணகர் நின்றென்
அரிக்கூடு மாக்கிணை யிரிய வொற்றி
எஞ்சா மரபின் வஞ்சி பாட
எமக்கென வகுத்த வல்ல மிகப்பல
மேம்படு சிறப்பி னருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே யதுகண்
டிலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின வரைக்கியாக் குநரும்
கடுந்தெற லிராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்
கறாஅ வருநகை யினிதுபெற் றிகுமே
இருங்கிளைத் தலைமை யெய்தி
அரும்பட ரெவ்வ முழந்ததன் றலையே.

(பி - ம்.) 3 'தொடையமைக்கண்ணி' 4 'குடைஇய', 'வடிம்பின நறைக்கிளளிசொழர்' 10 'வகுதவல்ல' 11 'னழுங்கல வெறுக்கை' 15 'விரறசெறிகுநருஞ' 16 'மனக்கமைமரபினமிடறு' 18 'கடுந்தேர்' 19 - 20 'ஞான்றுநிலஞ்' 21 'மிழைப்பொலிந்' 22 'வருநதை' 23 'கிணைத்தலைமை'

திணை - அது; துறை - இயன்மொழி.

சோழன் செருப்பாழி யெறிந்த இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் (பி – ம். மொழி...திபசுங்குடையநர்).

(கு - ரை.) 1. மிடல் - வலி.

2. வடுகர் - வடுகவீரர்; இவர் வடநாட்டினருள் ஒருவகையார்; "கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர்" (நற். 212 : 5), "குல்லைக் கண்ணி வடுகர்" (குறுந். 11 : 5), "கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்", "வானிணைப் புகவின் வடுகர்", "முரண்மிகு வடுகர்", "தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்", "வம்ப வடுகர் பைந்தலை சவட்டி", "கதநாய் வடுகர்" (அகநா. 107 : 11, 213 : 8, 281 : 8, 295 : 15, 375 : 14, 381 : 7). ஓட்டிய - ஓட்ட.

1 - 2. "பரதவர் - தென்றிசைக்கட் குறுநில மன்னர்; அது, 'தென் பரதவர்...வாளோட்டிய' என்னும் புறப்பாட்டானும் உணர்க" (மதுரைக். 144, ந.).

3. தொடை அமை கண்ணி - கட்டுதலமைந்த தலைமாலை. வேலுக்கு மாலைசூட்டல் மரபு; புறநா. 332 : 1 - 5.

4. கடைஇய - செலுத்திய. வடிம்பு - இங்கே காலின் விளிம்பு; "மாவுடற்றிய வடிம்பு" (பதிற். 70 : 2).

5. கோயில் – அரண்மனை.

6. சுதை - சுண்ணச்சாந்து; "வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடத்து" (மணி. 6 : 43); "திங்களுங் கரிதென வெண்மை தீட்டிய, சங்கவெண் சுதையுடைத் தவள மாளிகை" (கம்ப. நகரப். 133); "வெண்சுதை தீற்றிய மாடம்" (நைடதம், நகர. 5).

7. பனிக்கயம் - குளிர்ந்த நீரையுடைய குளம்; நகருக்குக் குளம் உவமை; "கயங்கண் டன்ன வயங்குடை நகரத்து" (மதுரைக். 484); "நிழற்கயத் தன்ன நீணகர்" (அகநா. 105 : 7).

8. அரிக்கூடுமாக்கிணை - அரித்தெழும் ஓசையையுடைய பெரிய தடாரிப்பறை; "அரிக்கூ டின்னியம்" (மதுரைக். 612).

9. வஞ்சி - பகைமேற் செலவு; புறநா. 15 : 24, 33 : 10

11. அருங்கல வெறுக்கை - பெறுதற்கரிய ஆபரணமும் செல்வமும்; புறநா. 146 : 1.

13. இலம்பாடு - இல்லாமை உண்டாதல்; ஒக்கல் - சுற்றம்; "இலம்படு காலை யாயினும், புலம்பல் போயின்று பூத்தவென் கடும்பே", "இரும்பே ரொக்கல் பெரும்புலம் பகற்ற", "இரும்பே ரொக்கல் பெரும்புலம் புறினும்" (புறநா. 380 : 15 - 6, 390 : 19, 394 : 16).

14 - 5. விரலிற் செறித்தற்குரிய மோதிர முதலியவற்றைக் காதிலும், காதிற் செறித்தற்குரிய குழை முதலியவற்றை விரலிலும் செறித்துக் கொண்டாரென்றபடி.

16. அரை - இடை. யாக்குநர் - காட்டுகின்றவர். மிடறு - கழுத்து.

18. வடசொற் சிதைந்து பொருத்தமுடையனவாகச் சான்றோர் செய்யுளில் வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; தொல். எச்ச. சூ. 6, ந.; இ. வி சூ. 175, உரை.

19. அரக்கன் - இராவணன். ஞான்றை - சமயம்; ஐ : சாரியை.

20. மதரணி - கதிர்த்த ஆபரணங்கள்.

20 - 21. குரங்கின் செம்முகப் பெருங்கிளை - செவ்விய முகத்தை யுடைய பெரிய குரங்கின் குழு; சுக்கிரீவனைச் சேர்ந்த குரங்குகள்; "செம்முக மந்தி" (நற். 151 : 8); "துய்த்தலைச், செம்முக மந்தி யாடும்" (அகநா. 241 : 14 - 5). இழை – ஆபரணம்; இழைக்கப்படுத லான் வந்த பெயர். 22. அருஅ - நீங்காத. பெற்றிகும் – பெற்றேம்.

24. அரும்படரெவ்வம் - நினைவாலுண்டாகும் நோயின் வருத்தம் ; புறநா. 145 : 10.

மு. பாடாண்டிணைத் துறைகளுள், பெற்ற பின்னரும் பெருவள னேத்தி, நடைவயிற் றோன்றிய விருவகை விடை' (தொல். புறத்திணை. சூ. 30, இளம்.; சூ. 36, ந.) என்பதற்கு இது மேற்கோள். (௩௭௮)

(௩௭௯) யானே பெறுகவன் றாணிழல் வாழ்க்கை
அவனே பெறுகவென் னாவிசை நுவறல்
நெல்லரி தொழுவர் கூர்வாண் மழுங்கிற்
பின்னை மறத்தோ டரியக் கல்செத்
தள்ளல் யாமைக் கூன்புறத் துரிஞ்சும்
நெல்லமல் புரவி யிலங்கை கிழவோன்
வில்லி யாதன் கிணையேம் பெரும
குறுந்தா ளேற்றைக் கொழுங்க ணவ்விளர்
நறுநெய் யுருக்கி நாட்சோ றீயா
வல்ல னெந்தை பசிதீர்த் தல்லெனக்
கொன்வரல் வாழ்க்கைநின் கிணைவன் கூறக்
கேட்டதற் கொண்டும் வேட்கை தண்டாது
விண்டோய் தலைய குன்றம் பின்பட
..........ரவந்தனென் யானே தாயில்
தூவாக் குழவி போல வாங்கத்
திருவுடைத் திருமனை யைதுதோன்று கமழ்புகை
வருமழை மங்குலின் மறுகுடன் மறைக்கும்
குறும்படு குண்டகழ் நீண்மதி லூரே.

(பி - ம்.) 4 'பிள்ளைமறத்தோடு' 6 'கெலலமல்' 11 'கொனவல்' 18 'குறுமபடுநதொடகழிநீண்'

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

ஓய்மான் வில்லியாதனைப் புறத்திணை நன்னாகனார் (பி - ம். நன்னாதன்).

(கு - ரை.) 1. "திருந்துகழ ஞான்றுட் டண்ணிழ லேமே" (புறநா. 397 : 27). வாழ்க்கையை யான் பெறுவேன்.

2. இசை - கீர்த்தி. நுவறலை அவன் பெறுக.

3. தொழுவர் - தொழிலைச் செய்வோர்; "நெல்லரியு மிருந்தொழு வர்", "நெல்லரி தொழுவர்" (புறநா. 24 : 1, 209 : 2); "நெல்லரி தொழுவர்" (நற். 195 : 6). வாள் - அரிவாள்.

இவ்வடி, தொல். எச்ச. சூ. 19, ந. மேற்.

4. அரிய - அரிதற்கு. கல் செத்து - தீட்டுங் கல்லாக அறிந்து.

5. அள்ளல் - சேறு. புறம் - முதுகு. உரிஞ்சும் - தீட்டும்.

6. அமலுதல் - நெருங்குதல்; "கண்பமல் பழனம்" (மலைபடு. 454). புரவு - விளைநிலம்; புறநா. 260 : 9. இலங்கை - மாவிலங்கை யென்னுமூர்; புறநா. 176 : 6; "தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய, நன்மா விலங்கை மன்ன ருள்ளு, மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வா, ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்" (சிறுபாண். 119 - 22).

3 - 6. அன்னந் துயிலெழுப்ப வந்தா மரைவயலிற், செந்நெ லரிவார் சினையாமை - வன்முதுகிற், கூனிரும்பு தீட்டுங் குலக்கோ சல நாடன்" (நள. சுயம்வர. 143).

8. குறுந்தாளேற்றை - ஆண் பன்றி. விளர் - வெண்மை; விள ரூன் : புறநா. 359 : 5, குறிப்புரை.

9. நாட்சோறு ஈயா - காலையுணவை அளித்து.

9 - 10. ஈயாப் பசிதீர்த்தல் வல்லன்.

11. கொன்வரல் வாழ்க்கை - விடியற்காலத்தில் வந்து தடாரி வாசித்தலாலுண்டாகிய செல்வம்; கொன் - விடியற்காலம். விடியற் காலத்துக் கிணைப்பறை கொட்டித் தலைவன் புகழைப் பாடுதல் பொருநர்க்கியல்பு. (சீவக. 173, ந. மேற்).

12. தண்டாது - அமையாமல்.

13. விண் தோய் - ஆகாயத்தை அளாவிய. 15. தூவா உண்ணாத.

14 - 5. "தாயி றூவாக் குழவி போல" (புறநா. 4 : 18).

16. ஐது - மெல்லிது.

17. மங்குலின் - மேகம்போல. உடன் - ஒருங்கு.

ஊர் (18) வந்தனென் (14) (நஎக)

(௩அ0) தென்பவ் வத்து முத்துப் பூண்டு
வடகுன் றத்துச் சாந்த முரீஇ
...........................ங்கடற் றானை
இன்னிசைய விறல்வென்றித்
தென்னவர் வயமறவன்
மிசைப்பெய்தநீர் கடற்பரந்து முத்தாகுந்து
நாறிதழ்க் குளவியொடு கூதளங் குழைய
வேறுபெ.......................த்துந்து
தீஞ்சுளைப் பலவி னாஞ்சிற் பொருநன்
துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மையன்
நட்பெதிர்ந் தோர்க்கே யங்கை நண்மையன்
வல்வேற் கந்த னல்லிசை யல்ல
...........................த்தார்ப் பிள்ளையஞ் சிறாஅர்
அன்ன னாகன் மாறே யிந்நிலம்
இலம்படு காலை யாயினும்
புலம்பல்போ யின்று பூத்தவென் கடும்பே.

(பி - ம்.) 5 'வயன்மறவர்' 7 'கூதுளங்' 10 'யங்கையநன்மையன்', 'யங்கை யண்மையன்', 'யாங்கனீ நன்மையை' 14 'அள்ளனாகன்' 15 'இளம்படுகாலையாயினும்'

திணை - அது; துறை - இயன்மொழி.

நாஞ்சில் வள்ளுவனைக் கருவூர்க்கதப்பிள்ளை.

(கு - ரை.) 1. பவ்வம் - கடல்; "தென்கடன் முத்தும்" (பட்டினப். 189; சிலப். 8 : 9); "வெண்டிரைத் தென்கடன் முத்தும்" (தஞ்சை. 93).

2. வடகுன்றம் - இமயம். சாந்தம் - சந்தனம். உரீஇ - உரிஞ்சி; "வடவர் தந்த வான்கேழ்ச் சந்தம்" (அகநா. 340 : 16).

4. விறல் வென்றி - வென்றிவகை பலவற்றுட் போர்வீரத்தாலுண்டாகிய வெற்றி.

5. தென்னவர் வயமறவன் : "திருவீழ் மார்பிற் றென்னவன் மறவன்" (அகநா. 13 : 6).

6. முத்தாகுந்து - முத்தாகும்; இஃது உம்மீற்றுப் பெயரெச்சம்; உம், உந்தாயிற்று.

7. குளவி - மலைமல்லிகை. கூதளம் - கூதாளி; இந்த இரண்டும் சேர்த்து வழங்கப்படும்; "கூதளங் கவினிய குளவி முன்றில்" (புறநா. (168 : 12) என்பதையும் அதன் குறிப்புரையையும் பார்க்க.

9. தீஞ்சுளைப் பலவு: "தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே", "தீஞ்சுளைப் பலவின் மாமலைக் கிழவன்" (புறநா. 109 : 5, 129 : 4); "மன்றப் பலவின் தீஞ்சுளை" (ஐந். எழு. 4). நாஞ்சில் - ஒரு மலை; "நாஞ்சிற் பொருநன்" (புறநா. 137, 139, 140).

5 - 9. நாஞ்சில் வள்ளுவன் மறச்சாதியினனென்றும் பாண்டியர்களுக்குரிய படைவீரனென்றும் தெரிகிறது.

10. துப்பெதிர்ந்தோர்க்கு - வலியோடு எதிர்த்த பகைவர்க்கு; "வெப்புடைய வரண்கடந்து, துப்புறுவர் புறம்பெற்றிசினே", "கடுமான் கோதை துப்பெதிர்ந் தெழுந்த, நெடுமொழி மன்னர்" (புறநா. 11 : 8 - 9, 54 : 8 - 9). உள்ளாச் சேய்மையன் - நினைத்தற்கும் எட்டாத மிக்க தூரத்துள்ளான்.

11. நட்பு எதிர்ந்தோர்க்கு - அன்பால் அடைந்தவர்க்கு.

10 - 11. "துப்புப் பகையுமாதல்", "துப்பெதிர்ந்தோர்க்கே...... நண்மையன்' என்பதனானும் அறிக"; (குறள், 1165, பரிமேல்.)

12. கந்தனென்பது, நாஞ்சின்மலைத்தலைவர் பரம்பரையில் உள்ளானும் இப்பாட்டுடைத் தலைவனுமாகிய ஒருவன் பெயர்.

14. ஆகன்மாறு - ஆதலால்; "அனையை யாகன் மாறே" (புறநா. 4, 17, 20 : 20, பதிற். 80 : 12).

15. வற்கடக் காலம் வரினும்.

16. போயின்று - நீங்கப்பெற்றது. பூத்த - பலவாற்றுலும் பொலிவு பெற்ற.

15 - 6. புறநா. 378 : 12, குறிப்புரை. (௩௮௦)

(௩௮௧) ஊனு மூனு முனையி னினிதெனப்
பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்
அளவுபு கலந்து மெல்லிது பருகி
விருந்துறுத் தாற்றி யிருந்தனெ மாகச்
சென்மோ பெருமவெம் விழவுடை நாட்டென
யாந்தன் னறியுந மாகத் தான்பெரி
தன்புடை மையி னெம்பிரி வஞ்சித்
துணரியது கொளாஅ வாகிப் பழமூழ்த்துப்
பயம்பகர் வறியா மயங்கரின் முதுபாழ்ப்
பெயல்பெய் தன்ன செல்வத் தாங்கண்
ஈயா மன்னர் புறங்கடைத் தோன்றிச்
சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி
ஊன்சுகிர் வலந்த தெண்கண் ணொற்றி
விரல்விசை தவிர்க்கு மரலையில் பாணியின்

இலம்பா டகற்றல் யாவது புலம்பொடு
தெருமர லுயக்கமுந் தீர்க்குவோ மதனால்
இருநிலங் கூலம் பாறக் கோடை
வருமழை முழக்கிசைக் கோடிய பின்றைச்
சேயை யாயினு மிவணை யாயினும்
இதற்கொண் டறிநை வாழியோ கிணைவ
சிறுநனி, ஒருவழிப் படர்கென் றோனே யெந்தை
ஒலிவெள் ளருவி வேங்கட நாடன்
உறுவருஞ் சிறுவரு மூழ்மா றுய்க்கும்
அறத்துறை யம்பியின் மான மறப்பின்
றிருங்கோ ளீராப் பூட்கைக்
கரும்ப னூரன் காதன் மகனே.

(பி - ம்.) 1 'முனை இயவினிதென' 2 'பாஅறபெய்தவும்' 8 'துணரியதுளவாகி' 9 'பயம்பகர்பறியா', 'முதுபாட்' 10 'தாங்கினி தீயா' 11 'புறங்கடைக்கொன்றி' 12 'சிதாஅரளமபிற......தடாரிடை' 13 'ஊனுகிர்வலந்த தென்கண்' 20 'டறிகை' 24 'பிறப்பினறிருக கொள்ளாப'.

திணையும் துறையும் அவை.

கரும்பனூர்கிழானை நன்னாகனார்.

(கு - ரை.) 1. ஊன் - இறைச்சி; ஊண் - அடிசில். முனையின் - வெறுத்தால்.

2. பாகு - வெல்லப்பாகு; "காரகற் கூவியன் பாகொடு பிடித்த, விழைசூழ் வட்டம்" (பெரும்பாண். 377 - 8).

3. அளவுபு கலந்து - நன்றாகக் கலந்து.

1 - 3. "சுவைய, வேறுபல் லுருவின் விரகுதந் திரீஇ" (பொருந. 107 - 8).

4. விருந்து - புதுமை. ஆற்றி - பசியைத் தணித்துக்கொண்டு.

5. சென்மோ - வருவாயாக.

1 - 5. "ஊனு மூனு முனையினென்னும் புறப்பாட்டினுள் 'சென்மோ பெருமவெம் விழவுடை நாட்டென' என்பதனையும் தன்மைக் கண் 'மோ' வருமென இவ்வாறு அமைத்தலுமொன்று; அன்றிப் பெரும! எம் விழவுடை நாட்டே நீ செல்லென்று சுற்றத்தார் தலைவனை நோக்கிக் கூற அப்பொருநனும் பாட்டுடைத்தலைவனை நோக்கிப் பின்னும் கூறினானாகப் பொருள் கூறுதலுமொன்று" (தொல். இடை. சூ. 27, ந.).

6. அறியுநமாக - அறிவேமாக.

6 - 7. "நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரி, துவந்த வுள்ளமோ டமர்ந்தினிது நோக்கி" (மலைபடு. 559 - 60).

8. துணரியது - குலைகொண்டது; "பைம்பாகற் பழந்துணரிய, செஞ்சுளைய கனி" (பொருந. 191 - 2). ஊழ்த்து - செவ்வியழிந்து.

9. பகர்வு - கொடுத்தல். அரில் - சிறுதூறுகள். முதுபாழில்.

12. சிதாஅர் வள்பு - துண்டித்த வார்; "சிதாஅர் வள்பினென் றெடாரி" (புறநா. 376 : 4).

14. அரலை - குற்றம். பாணியின் - பாட்டால்.

17. கூலம் - பலபண்டம். 19. இவணை - இவ்விடத்துள்ளாய்.

23. உறுவர் - பெரியோர்.

24. அறத்துறையம்பி - தருமவோடம்; "பிறவி யென்னும் பெருங் கடல் விடூஉம், அறவி நாவாய்" (மணி. 11 : 24 - 5).

மகன் (26) படர்கென்றேனே (21)

மு. தொல். புறத்திணை. சூ. 30, இளம்.; சூ. 30, ந. மேற். (௩அக)

(௩அ௨) கடற்படை யடற்கொண்டி
மண்டுற்ற மலிர்நோன்றாட்
டண்சோழ நாட்டுப் பொருநன்
அலங்குளை யணியிவுளி
நலங்கிள்ளி நசைப்பொருநரேம்
பிறர்ப்பாடிப் பெறல்வேண்டேம்
அவற்பாடுது மவன்றாள் வாழியவென
நெய்குய்ய வூனவின்ற
பலசோற்றா னின்சுவைய
நல்குரவின் பசித்துன்பினின்
முன்னாள் விட்ட மூதறி சிறாஅரும்
யானும், ஏழ்மணியங் கேழணியுத்திக்
கட்கேள்விக் கவைநாவின்
நிறனுற்ற வராஅப்போலும்
வறனொரீஇ வழங்குவாய்ப்ப
விடுமதி யத்தை கடுமான் றோன்றல்
நினதே, முந்நீ ருடுத்தவிவ் வியனுல கறிய
எனதே, கிடைக்கா ழன்ன தெண்கண் மாக்கிணை
கண்ணகத் தியாத்த நுண்ணரிச் சிறுகோல்
எறிதொறு நுடங்கி யாங்கு நின் பகைஞர்
கேட்டொறு நடுங்க வேத்துவென்
வென்ற தேர்பிறர் வேத்தவை யானே.

(பி - ம்.) 2 'மணடற்ற மறனெனருட', 'மண்டற்ற மலிறநொன' 3 'பொருநன வலங்குளே' 6 'வேணடேமயறபாடுதும்' 9 'னினஞ் சுவையநல் குரவின பசித்துன்பவென்பநின்' 12 'யானுமெமணி' 13 'நாவிறறூநிறத்தவராஅப்'- 'நாவிறறூ நிறத்தவாஅப்' 15 'வயங்கு வாயபப', 'வமங்குவாயபப' 17 'விலவயினுலகு' 18 'கிடைகாழனன வென்றெண்கண்' 21 'வெநது', 'வோதுவென்'.

திணை - அது; துறை - கடைநிலை.

சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார்.

(கு - ரை.) 1. கொண்டி - பொருளின் மிகுதி; "கொண்டி பெறுகென் றோனே" (புறநா. 390 : 23).

2. மலிர் - நீரூற்று; "மணலாடு மலிர்நிறை" (ஐங்குறு. 15).

3. பொருநன் - உவமிக்கப்படுபவன்; "போர்மிகு பொருந" (முருகு. 276); "வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந" (மதுரைக். 42); அரசனுமாம்.

5. பொருநரேம் - பொருநராக உள்ளேம். 6. பிறரைப் பாடி.

7. வாழியவென அவனைப் பாடுவேம். 9. சோற்றுன் - சோற்றோடு.

12. ஏழ்மணி - எழுச்சியையுடைய மணி. உத்தி - படப்பொறி.

13. கட்கேள்வி - கண்ணுற் கேட்டல். கவைநா - பிளவுபட்ட நாக்கு.

15. வறன் - வறுமை. வழங்கு வாய்ப்ப - பிறர்க்கு யாம் கொடுத்தல் கைகூடும்படி.

14 - 5. வறுமைக்கு அராவின் விடம் உவமம்.

16. மதியும் அத்தையும் அசைநிலைகள். தோன்றல் : விளி.

17. நினதாகிய உலகு அறிய.

18. கிடைக்காழ் - நெட்டியின் காம்பு. எனதாகிய கிணையென்க.

18 - 9. கிணையினிடத்து அதனையடிக்கும் சிறுகோல் கட்டப்பட்டிருக்கும்; "நுண்கோற் சிறுகிணை" (புறநா. 383 : 3).

21. கேட்டொறும் - கேட்குந்தோறும்.

18 - 21. ஒப்பு. நற். 100 : 10 - 12.

22. வென்ற தேர் - ஏனையோரை வென்ற தேரையுடைய. பிறர் - அயலரசர். வேத்தவையான் - இராசசபைக்கண்.

அறிய (17) ஏத்துவென் (21) (௩அ௨)

(௩அ௩) ஒண்பொறிச் சேவ லெடுப்பவேற் றெழுந்து
தண்பனி யுறைக்கும் புலரா ஞாங்கர்
நுண்கோற் சிறுகிணை சிலம்ப வொற்றி
நெடுங்கடை நின்று பகடுபல வாழ்த்தித்

தன்புக ழேத்தினெ ஞக வூன்புலந்
தருங்கடி வியனகர்க் குறுகல் வேண்டிக்
கூம்பிவிடு மென்பிணி யவிழ்த்த வாம்பற்
றேம்பா யுள்ள தங்கமழ் மடருளப்
பாம்புரி யன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியி னிழையணி வாரா
ஒண்பூங் கலிங்க முடீஇ நுண்பூண்
வசிந்துவாங்கு நுசுப்பி னவ்வாங் குந்திக்
கற்புடை மடந்தை தற்புறம் புல்ல
எற்பெயர்ந்த நோக்கி..................
..........................கற்கொண்
டழித்துப் பிறந்தன ஞகி யவ்வழிப்
பிறர், பாடுபுகழ் பாடிப் படர்பறி யேனே
குறுமுலைக் கலமரும் பாலார் வெண்மறி
நரைமுக வூகமொ டுகளுஞ்சென...........
..........................கனறுபல கெழீஇய
கான்கெழு நாடன் கடுந்தே ரவியனென
ஒருவனை யுடையேன் மன்னே யானே
அறுனெவன் பரிகோ வெள்ளியது நிலையே.

(பி - ம்.) 5 'தான் புகழ்ந்து' 6 'குறுங்கல்வேண்டி' 9 'பாம்பு பயனநதனனவடிவினசாமபின' 16 'டளித்துப்' 17 'படர்பறிவோனே' 20 'தன்று பலகெழீஇய காழகெழு' 23 பரிசொவெள்ளி'

திணையும் துறையும் அவை.

......மாரூக்கத்து நப்பசலையார் (பி - ம். நபபாலையார்)

(கு - ரை.) 1. சேவல் - ஆண்கோழி. எடுப்ப - எழுப்ப. ஏற்றெழுந்து - துயிலுணர்ந்தெழுந்து; "தூமலர்க்க ணேறக துயில்" (பு. வெ. 197); "துயிலிடைக் கண்ட துணைநலத் தேவியை, இயல்புடை யங்க ணேற்றபிற் காணுது" (பெருங். 4. 7 : 91 - 2).

2. மு. புறநா. 374 : 4. உறைக்கும் - துளிக்கும்.

3. நுண்கோற் சிறுகிணை : புறநா. 382 : 18 - 9. சிலம்ப ஒற்றி - முழங்க அடித்து.

4. பகடு - உழும் எருது; எருமைக்கடாவுமாம்.

1 - 4. புறநா. 385 : 1 - 2. 6. குறுகல் - அடைதல்.

குறுகல்வேண்டி (6) ஏத்தினெனுக (5)

7. மு. புறநா. 209 : 3.

10 - 21. கலிங்கம் - ஒருவகை நல்லாடை. "நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந், தரவுரி யன்ன வறுவை" (பொருந. 82 - 3); "காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇ" (சிறுபாண். 236); "கண் பொரு புகூஉ மொண்பூங் கலிங்கம்" (மதுரைக். 433).

9 - 11. காம்பின் கழை படு சொலியின் - மூங்கிலாகிய கோலின் உட்புறத்தே பெயர்த்தெடுக்கப்படும் வெள்ளிய தோல்போல. இழையணி வாரா - நெய்யப்பட்டுள்ள இழைகளின் வரிசை கண்ணுக்குப் புலப்படாத. சொலி : கலிங்கத்திற்கு உவமை.

12. வசிந்து - தலைவனை வயமாக்கி. உந்தி - கொப்பூழ்.

16. அழித்து - மீட்டும். 17. படர்பு - செல்லுதல்.

18. மறி - ஆட்டுக்குட்டி. 20. ஊகம் - ஒருவகைக் குரங்கு.

21. அவியன் - ஓர் உபகாரி; "களிமலி கள்ளி னற்றே ரவிய, னாடிய விளமழை சூடித் தோன்றும், பழந்தூங்கு விடரகம்" (அகநா. 271 : 12 - 4).

23. அறான் - மேற்கூறிய தலைவன் தனது நிலைமை குன்றான். வெள்ளியதுநிலை எவன்பரிகோ - சுக்கிரனுடைய நிலைமைக்குச் சிறிதும் வருந்தேன்; புறநா. 384 : 20, 386 : 24. (௩௮௩)

(௩௮௪) மென்பாலா னுடனணைஇ
வஞ்சிக்கோட் டுறங்குநாரை
அறைக்கரும்பின் பூவருந்தும்
வன்பாலாற் கருங்கால் வரகி
....
னங்கட் குறுமுயல் வெருவ வயல
கருங்கோட் டிருப்பைப் பூவுறைக் குந்து
விழவின் றாயினு முழவர் மண்டை
இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து
...............................துணையேம் பெரும
நெல்லென்னா பொன்னென்னா
கனற்றக் கொண்ட நறவென்னா
.... மனையென்னா வவைபலவும்
யான்றண்டவுந் தான்றண்டான்
நிணம்பெருத்த கொழுஞ்சோற்றிடை
மண்ணாணப் புகழ்வேட்டு
நீர்நாண நெய்வழங்கிப்

புரந்தோ னெந்தை யாமலநதொலை........
அன்னோனை யுடையே மென்ப......வறட்
கியாண்டு நிற்க வெள்ளி மாண்ட
உண்ட நன்கலம் பெய்து நுடக்கவும்
தின்ற நண்ப லூன்றோண்டவும்
வந்த வைக லல்லது
சென்ற வெல்லைச் செலவறி யேனே.

(பி - ம்.) 2 'டுறவங்குநாரை' 3 'வாடைக்கரும்பின', 'அடைக் கரும்பின' 4 'வனபாலாற்குக் கருங்' 8 'ருயுனுழவா' 10 'கிணையேம்' 11 'நெல்லென்னும் பொன்னெனன்னும்' 12 'கன்னற்கொண்ட' 14 'யானறண்டவுமதூன்றண்டா' 18 'புநதெனெந்தை' 22 'நன்ப லூண்டோண்டவும்'

திணையும் துறையும் அவை.

கரும்பனூர்கிழானைப் புறத்திணை நன்னாகனார்.

(கு - ரை.) 1. மென்பால் - மருத நிலம்.

2. வஞ்சிக்கோடு - வஞ்சிமரத்தின் கிளை.

4. வன்பால் - முல்லை நிலம்.

7. இருப்பைப்பூ உறைக்குந்து - இருப்பைப்பூ உதிரும்; "முள்ளரை யிலவத் தொள்ளிணர் வான்பூ...இருநிலத் துறைக்கும்" (ஐங்குறு. 320).

8. மண்டை - ஒருவகை உண்கலம் (வாணாய்).

9. கெடிற்றுமிசை - கெடிறறு மீனாகிய உணவு; "அரிப்பறை வினைஞரல்குமிசைக் கூட்டும்" (ஐங்குறு. 81); மிசை, மிசையெனவும் வழங்கும்; "குறவர்க் கல்குமிசை வாகும்" (புறநா. 236 : 2).

11. நெல்லும் பொன்னும்: "நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க" (ஐங்குறு. 1); "பொன்னு நெல்லும் புரவின் வழங்குகென்று" (பெருங். 1. 37 : 196). 12. கனற்ற - வெதுப்ப.

14. யான் தண்டவும் - யான் நீங்கவும்; "தண்டாக் களிப்ப னுடுங்கூத்து" (மணி. 6 : 126).

17. "நீர்நாண நெய்வழங்கியும்" (புறநா. 166 : 21).

19. என்ப : அசை. வறட்கு - வற்கடகாலத்தைத் தரும் பொருட்டு.

20. வெள்ளி யாண்டு நிற்க - மழைக்கோளாகிய சுக்கிரன் எங்கே நின்றாலென்? புறநா. 383 : 24, 386 : 20 - 24.

22. நண்பல் - பல்லின் நடு. (௩அச)

(௩௮௫) வெள்ளி தோன்றப் புள்ளுக்குர லியம்பப்
புலரி விடியற் பகடுபல வாழ்த்தித்
தன்கடைத் தோன்றினு மிலனே பிறன்கடை
அகன்கட் டடாரிப் பாடுகேட் டருளி
வறனியா னீங்கல் வேண்டி யென்னரை
நீனிறச் சிதாஅர் களைந்து
வெளிய துடீஇயென் பசிகளைந் தோனே
காவிரி யணையுந் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி யம்பர் கிழவோன்
நல்லரு வந்தை வாழியர் புல்லிய
வேங்கட விறல்வரைப் பட்ட
ஓங்கல் வானத் துறையினும் பலவே.

(பி - ம்.) 6 'நிலநதினக குறைந்த சிதாஅர்,' 'நிலநதினசிதாஅர்' 7 'வெளிதுடீஇக்களைந்தோனேபசி' 8 'காவிரியகணையுந்', 'காவிரி கணையுந்' 9 'யம்பல்'

திணை அது; துறை - வாழ்த்தியல்.

அம்பர்கிழான் அருவந்தையை (பி - ம். அம்பலகிழான வெந்தையை)க் கல்லாடனார்.

(கு - ரை.) 1. புள் - கோழிச்சேவல்; பறவைப்பொதுவுமாம்; "வெள்ளியு மிருவிசும் பேர்தரும் புள்ளும், உயர்சினைக் குடம்பைக் குரற்றோற்றினவே" (புறநா. 897 : 1 - 2).

4. பாடு - ஓசை. 5. வறன் - வறுமை.

6. நீல நிறமுள்ள கந்தையை நீக்கி.

7. வெளியது - வெள்ளாடையை.

8. காவிரியென்றது இங்கே அரிசிலாற்றை. படப்பை - தோட்டம்.

9 - 10. அம்பர் - சோழநாட்டிலுள்ளதோர் ஊர். அருவந்தை - ஓர் உபகாரி; "கற்ற நாவினன் கேட்ட செவியினன், முற்ற வுணர்ந்த மூதறிவாளன், நாகரிக நாட்டத் தாரிய னருவந்தை", "நாடே பிறர் நாட்டிற்குவமை யாறே, காலமறிந் துதவுங் காவிரி தானே, ஆடவர் திலக னம்பர் மன்ன, னீடிசைத் தலைவ னருவந்தை", "வருநற் கங்கை வடதிசைப் பெருமையும், தென்றிசைச் சிறுமையு நீக்கிய குறுமுனி, குண்டிகைப் பழம்புனற் காவிரிப் பெரும்பதி, அம்பர்க் கதிபதி (திவாகரம்) என்பவற்றில் காவிரியும் அம்பரும் அருவந்தையும் பாராட்டப்பெற்றிருத்தல் காண்க. (௩௮௫)

(ங௲) நெடுநீர நிறைகயத்துப்
படுமாரித் துளிபோல
நெய்துள்ளிய வறைமுகக்கவும்
சூடு கிழித்து வாடுன் மிசையவும்
ஊன்கொண்ட வெண்மண்டை
ஆன்பயத்தான் முற்றழிப்பவும்
வெய்துண்ட வியர்ப்பல்லது
செய்தொழிலான் வியர்ப்பறியாமை
ஈத்தோ னெந்தை யிசைதன தாக
வயலே, நெல்லின் வேலி நீடிய கரும்பின்
பாத்திப் பன்மலர்ப் பூத்த தும்பின
புறவே, புல்லருந்து பல்லாயத்தான்
வில்லிருந்த வெங்குறும்பின்று
கடலே, காறந்த கலனெண்ணுவோர்
கானற் புன்னைச் சினைநிலைக் குந்து
கழியே, சிறுவெள் ளுப்பின் கொள்ளை சாற்றிப்
பெருங்கனன் னாட் டுமனொலிக்குந்து
அன்னநன் னாட்டுப் பொருநம் யாமே
பொராஅப் பொருநரேம்
குணதிசை நின்று குடமுதற் செலினும்
குடதிசை நின்று குணமுதற் செலினும்
வடதிசை நின்று தென்வயிற் செலினும்
தென்றிசை நின்று குறுகாது நீடினும்
யாண்டு நிற்க வெள்ளியாம்
வேண்டிய துணர்ந்தோன் றுள்வா ழியவே.

(பி-ம்.) 1 'நிறையககயத்துப' 10 'நெலலி வேயி னீடிய' 11 'பூத்ததுமபினனுறவேபுலலருந்து' 15 'நிலககுந்து' 16 'கொளளைச் சாறறி' 17 'பெருங்கனனுட்டு' 20-21 'குடதிசை...செலினும் வடதிசை' 24 'நிறகவெனறியாம்'

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர் கிழார்.

(கு-ரை.) 1. கயம் - பள்ளமான நீர்நிலை.

3. வறை - வறையல்; ஒருவகை உணவு. முகக்க - முகந்து கொள்ள.

1 - 3. சுட்ட நெய்யில் வேகும் வறையின் முழக்கத்திற்குக் கயத்தில் வீழும் மாரித்துளியின் முழக்கம் உவமம்; சீவக. 2971.

4. சூடு - சுடப்பட்ட இறைச்சி.

5. புறநா. 384 : 8 - 9. 6. ஆன்பயம் - பசுப்பால்.

7. உண்டமையாலுண்டான வேர்வையல்லாமல்.

8. அறியாதபடி.

10 - 11. கரும்பின் பாத்தி: "கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்" (ஐங்குறு. 65).

11. ததும்பின - நிறைந்தன.

12. புறவு - முல்லைநிலம். ஆயத்தான் - ஆயத்தோடு கூடி.

13. குறும்பு - சிற்றரண்கள்.

14. கால் தந்த - காற்றாற் கொண்டுவரப்பட்ட.

15. சினை - கிளை. நிலைக்குந்து - நிலைக்கும்.

17. உமண் - உப்பு விற்கும் சாதி.

16 - 7. "சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப், பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி" (பெரும்பாண். 64 - 5).

19. பொராஅப் பொருநர் - கூத்தர்; வெளிப்படை; பொராஅ - ஒப்பில்லாதவெனினுமாம். 20. செலினும் - சுக்கிரன் சென்றாலும்.

24. வெள்ளி - சுக்கிரன். 25. வேண்டியது - யாம் வேண்டியதை.

(௩அசு)

(௩அஎ) வள்ளுகிர வயலாமை
வெள்ளகடு கண்டன்ன
வீங்குவிசிப் புதுப்போர்வைத்
தெண்கண் மாக்கிணை யியக்கி யென்றும்
மாறுகொண்டோர் மதிலிடறி
நீறாடிய நறுங்கவுள
பூம்பொறிப் பணையெருத்தின
வேறுவேறு பரந்தியங்கி
வேந்துடைமிளை யயல்பரக்கும்
ஏந்துகோட் டிரும்பிணர்த்தடக்கைத்
திருந்துதொழிற் பலபகடு
பகைப்புல மன்னர் பணிதிறை தந்துநின்
நகைப்புல வாணர் நல்குர வகற்றி
மிகப்பொலியர்தன் சேவடியத்தையென்
றியானிசைப்பி னனிநன்றெனப்

பலபிற வாழ்த்த விருந்தோ ரென்கோ......
மருவ வினக ரகன்
திருந்துகழற் சேவடி குறுகல் வேண்டி
வென் றிரங்கும் விறன் முரசினோன்
என்சிறுமையி னிழித்துநோக்கான்
தன்பெருமையின் றகவுநோக்கிக்
குன் றுறழ்ந்த களிறென்கோ
கொய்யுளைய மாவென்கோ
மன் றுநிறையு நிரையென்கோ
மனைக்களமரொடு களமென்கோ
ஆங்கவை, கனவென மருள வல்லே நனவின்
நல்கி யோனே நசைசா ரோன்றல்
ஊழி வாழி பூழியர் பெருமகன்
பிணர்மருப் பியானைச் செருமிகு நோன்றாட்
செல்வக் கடுங்கோ வாழி யாதன்
ஒன்னாத் தெவ்வ ருயர்குடை பணித்திவன்
விடுவர் மாதோ நெடிதே நி.........
புல்லிலை வஞ்சிப் புறமதி லலைக்கும்
கல்லென் பொருநை மணலினு மாங்கட்
பல்லூர் சுற்றிய கழனி
எல்லாம் விளையு நெல்லினும் பலவே.

(பி - ம்.) 2 'வெளககொணடனன' 4 'தென்கண்' 8 'பாநதிய யங்கி' 9 'வேந்துடையிளை' 13 - 6 'நகைபபல வாழ்நர்...மிபபொலி யாத செவடி பொலியாததையென்றனியானிசப பினனினனனிநனற னிற பலபிறன்' 16 'ரெலகோ' 17 'மிருவ' 19 - 20 'வெனறிரககு முரசி ஞனெனச சிலமபினிழித்து' 20 'எனசசிறுமை' 22 'குனறகழகளிறு' 25 'மகனைககளமரொடு கலமெனெ' 27 'நலகியோனெநதை நகைசான ரோன்றல்' 31 'என்ஞத்தெவ்வர்', 'பணிததிவணிவிடுவா' 34 'மண லினுமாக்கட்'

திணையும் துறையும் அவை.

சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழி யாதனைக் குண்டுகட்பாலியாதன்.

(கு - ரை.) 1. வள் - கூர்மை; "வள்ளணி வளைநாஞ்சிலவை" (பரி. 15 : 57).

2. அகடு - வயிறு.

1 - 4. கிணைப்பறை ஆமையின் அகடுபோல்வது; "ஆமை, கம்பு ளியவ ருகை விசிபிணித், தெண்கட் கிணையிற் பிறழும்" (அகநா. 356 : 2 - 4); பு. வெ. 186, 306.

7. எருத்து - பிடரி. 9. மிளை - காவற்காடு.

11. பகடு - யானை. 13. நகைப்புலவாணர் - புலவர்.

12 - 3. பகைவர் அளித்த திறையைத் தம்மைச் சார்ந்த இரவலர்க்குக் கொடுத்தல் அரசர்க்கியல்பு.

14. தன் சேவடி மிகப்பொலிக. 16. என்கோ - என்பேனோ.

17. மருவுதற்கு இனிய நகரம்.

19. வென்று - போர்க்களத்தில் வஞ்சியாது பகைவர்க்கு முன்னே நின்று; புறநா. 112 : 4, குறிப்புரை.

20. என்னை இழித்து நோக்கானாகி.

21. தன்னுடைய மேம்பாட்டை அறிந்து. 23. மா - குதிரை.

22 - 3. ஓகாரம் எண்ணுப்பொருளில் வந்ததற்கும், அதன்பின் வல்லினம் இயல்பாயதற்கும் இவ்வடிகள் மேற்கோள்; தொல். உயிர் மயங்கு. சூ. 88, இளம்.; ந.

24. நிரை - பசுக்கூட்டம்.

26. "கனவென மருண்டவென் னெஞ்சே மாப்ப" (பொருந. 98); புறநா. 140 : 5 - 8, குறிப்புரை.

26 - 7. "கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப, நனவி னல்கியோ னசைசா ரோன்றல்" (புறநா. 377 : 19 - 20).

30. இப்பாட்டுடைத்தலைவன் பெயர் இவ்வடியில் அமைந்துள்ளது.

பணித்து - தாழ்த்தி.

33. வஞ்சியென்னும் மரவிசேடத்திற்கு உரிய 'புல்லிலை' என்னும் அடை அதன் பெயரையுடையதாகிய நகருக்கும் ஆயிற்று.

34. பொருநை - ஓராறு. "தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன், நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார், போர் முற்றொன் றறியாத புரிசை" (கலித். 67 : 3 - 5.)

33 - 4. "ஒளிதிக ழுத்தி யுருகெழு நாகம்" (பரி. 12 : 4, பரிமேல்). என்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; கலித். 67 : 3 - 4.

34 - 6. "மண்ணாள் வேந்தே நின்வா ணாட்கள், தண்ணான் பொருநை மணலினுஞ் சிறக்க" (சிலப். 28 : 15 - 6). (௩அ௭)

(௩அஅ) வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை
இரும்பறைக் கிணைமகன் சென்றவன் பெரும்பெயர்
..................................பொருந்தித்

தன்னிலை யறியுந ருக வந்நிலை
இடுக்க ணிரியல் போக வுடைய
கொடுத்தோ னெந்தை கொடைமேந் தோன்ற
....................ஞமருப்பாக
வெல்லும் வாய்மொழிப் புல்லுடைவி......
பெயர்க்கும் பண்ணற் கெடடீரொமககிரென
வினைப்பக டேற்ற மேழி கிணைத்தொடா
நாடொறும் பாடே னாயி னானா
மணிகிளர் முன்றிற் றென்னவன் மருகன்
பிணிமுர சிரங்கும் பீடுகெழு தானை
அண்ணல் யானை வழுதி
கண்மா றிலியரென் பெருங்கிளைப் புரவே.

(பி - ம்.) 3. 'இரும்பிறை கிணைமகன்' 5 'யறியினருக' 6 'போத' 10 'பெயாகுமபணணறகெடடீரொ மககீரென' 11 'வினைப் பகடெததுமேனி தினைதொடர்', 'வினைப்பகடெததுமெந்திணைந தொடா', 'திணைத்தாடா' 12 'பாடெனுபினெனுகநாணு' 13 'மணி கிளாமுககிறறெனனவன' 15 'யானைவழுகணமாறிலியா'

திணை - அது; துறை - இயன்மொழி.

சிறுகுடிகிழான் பண்ணனை மதுரை அளக்கர்ஞாழார் மகனார் மள்ளனார்.

(கு - ரை.) 1. வெள்ளிக்கோள் தென்றிசையில் எழுதல் தீய நிமித் தம். இந்நிகழ்ச்சி மழை பெய்யாமைக்கும் வற்கடம் உண்டாவதற்கும் காரணமென்பர்; "மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும், தென் றிசை மருங்கின் வெள்ளி யோடினும்" (புறநா. 117 : 1 - 2), "வசையில் புகழ் வயங்குவெண்மீன், திசைதிரிந்து தெற்கேகினும், தற்பாடிய தளி யுணவிற், புட்டேம்பப் புயன்மாறி, வான்பொய்ப்பினுந் தான்பொய்யா மலைத்தலைய கடற்காவிரி" (பட்டினப். 1 - 6), "வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி, பயங்கெழு பொழுதோ டாநிய நிற்ப", "நிலம்பயம்பொழியச் சுடர்சினந் தணியப், பயங்கெழு வெள்ளி யாநிய நிற்ப" (பதிற். 24 : 24 - 5, 69 : 13 - 4); "கரியவன் புகையினும் புகைக் கொடி தோன்றினும், விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்,... காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை" (சிலப். 10 : 102 - 8).

3. கிணைமகன் : கிணைப்பறை வாசிப்பவன்; கிணையன். பெரும் பெயர் - பெரும்புகழ்.

5. தன்னிலை - தன்னுடைய மேம்பட்ட நிலை.

6. இரியல் போக - கெட. உடைய - தன்பால் உள்ளனவற்றை.

10. பண்ணன் : இப்பாட்டுடைத்தலைவன்.

11. வினைப்பகடு - உழவுத்தொழிற்குரிய எருது; கடா. ஏற்றம் - நீர் இறைத்தற்குரியது; இப்பெயர் ஏத்தமெனவும் வழங்கும்.

13. மணி - ஆராய்ச்சிமணி; "வாயிற் கடைமணி நடுநா நடுங்க, ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன், அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்" (சிலப். 20 : 53 - 5). மருகன் - வழித்தோன்றல்.

14. பிணித்தல் - கட்டுதல்.

16. கண்மாறிலியர் - கண்ணோட்டம் ஒழிவானாக. புரவு - காத்தல். (௩அஅ)

(௩அகூ) நீர்நுங்கின் தண்வலிப்பக்
கானவேம்பின் காய்திரங்கக்
கயங்களியுங் கோடையாயினும்
ஏலா வெண்பொன் போருறு காலை
எம்மு முள்ளுமோ பிள்ளையம் பொருநன்
என்றீத் தனனே யிசைசா னெடுந்தகை
இன்றுசென் றெய்தும் வழியனு மல்லன்
செலினே காணு வழியனு மல்லன்
புன்றலை மடப்பிடி யினையக் கன்றுதந்து
குன்றக நல்லூர் மன்றத்துப் பிணிக்கும்
கல்லிழி யருவி வேங்கடங் கிழவோன்
செல்வுழி யெழாஅ நல்லேர் முதியன்
ஆத னுங்கன் போல நீயும்
பசித்த வொக்கற் பழங்கண் வீட
வீறுசா னன்கல நல்குமதி பெரும
ஐதக லல்குன் மகளிர்
நெய்தல்கே ளன்மார் நெடுங்கடை யானே.

(பி-ம்.) 1. 'கவைநிறபக' 4 'போகுறு.........பொருநவென்று' 6 'பொருநவென்று' 13 'ஆறுநுஙகன்' 'ஆகுநுங்கன' 14 'பசித்து வொஙககற பழங்' 15 'பெருமவைததல'

திணையும் துறையும் அவை.

ஆதனுங்கனைக் கள்ளிலாத்திரையனார்.

(கு - ரை.) 1. நீர்நுங்கு - நீரையுடைய பனநுங்கு. வலிப்ப - நீரின்றி வற்ற.

2. திரங்க - உலர; "திரங்குமர னாரிற் பொலியச் சூடி" (மலைபடு. 431).

3. கயம் - ஆழமான நீர்நிலை. களியும் - நீர் வற்றிக் களிமயமாதற் குரிய.

4. வெண்பொன் - வெள்ளிக்கோள். போர் - மற்றைக் கோள்களோடு அது செய்யும் யுத்தம். இது கிரகயுத்தமென்று சொல்லப்படும்; "ஆதி சான்ற மேதகு வேட்கையின், நாளுங் கோளு மயங்கிய ஞாட்பின், மதியமு ஞாயிறும் பொருவன போல" (பாரதம்; தொல். புறத். சூ. 17, மேற்.); "தோளோடு தோடேய்த் தலிற்றென்னிலந் தாங்கலாற்றாத், தாளோடு தாடேய்த்தலிற் றந்த தழற்பி றங்கல், வாளோடு மின்னோடுவபோனெடு வானினோடும், கோளோடு கோளுற் றனவொத் தடர்ந்தார்கொதித்தார்" (கம்ப. வாலிவதை. 38) என்பது இங்கே அறியற்பாலது.

5. எம்மும் உள்ளுமோ - எம்மையும் நினைப்பானோ.

7. காட்சிக்கு எளியனுமல்லன்.

8. காணுதற்கு அரியனுமல்லன்.

9. புன்றலை - சிவந்த தலை; "புன்றலை மகாரோடு" (மலைபடு. 250, ந.) இனைய - வருந்த.

9 - 11. "கறையடி மடப்பிடி கானத் தலறக், களிற்றுக்கன் றொழித்த வுவகையர் கலிசிறந்து, கருங்கான் மராஅத்துக் கொழுங் கொம்பு பிளந்து, பெரும்பொளி வெண்ணா ரழுந்துபடப் பூட்டி, நெடுங் கொடி நுடங்கு நியம மூதூர், நறவுநொடை நல்லிற் புதவுமுதற் பிணிக்கும், கல்லா விளையர் பெருமகன் புல்லி, வியன்றலை நன்னாட்டு வேங்கடம்" (அகநா. 83 : 3 - 10).

12. பகைவர் புறங்கொடுத்துச் செல்லும்போது பின் செல்லாத; மதுரைக். 117, ந.; பதிற். 90 : 27, உரை.

13. ஆதனுங்கன் : இப்பாட்டுடைத் தலைவன்.

14. ஒக்கல் - சுற்றம். பழங்கண் - துன்பம்.

17. நெய்தல் - நெய்தற் பறை; சாப் பறை. (௩அ௯)

(௩௯௦) அறவை நெஞ்சத் தாயர் வளரும்
மறவை நெஞ்சத் தாயி வாளர்
அரும்பலர் செருந்தி நெடுங்கான் மலர்கமழ்
..............................மன்னமுற்றத்
தார்வலர் குறுகி னல்லது காவலர்
கனவினுங் குறுகாக் கடியுடை வியனகர்
மலைக்கணத் தன்ன மாடஞ் சிலம்பவென்
அரிக்குரற் றடாரி யிரிய வொற்றிப்
பாடி நின்ற பன்னா ளன்றியும்
சென்ற ஞான்றைச் சென்றுபட ரிரவின்

வந்ததற் கொண்டு நெடுங்கடை நின்ற
புன்றலைப் பொருந னளியன் றானெனத்
தன்னுழைக் குறுகல் வேண்டி யென்னரை
முதுநீர்ப் பாசி யன்ன வுடைகளைந்து
திருமல ரன்ன புதுமடிக் கொளீஇ
மகிழ்தரன் மரபின் மட்டே யன்றியும்
அமிழ்தன மரபி னூன்றுவை யடிசில்
வெள்ளி வெண்கலத் தூட்ட லன்றி
முன்னூர்ப் பொதியிற் சேர்ந்த மென்னடை
இரும்பே ரொக்கல் பெரும்புலம் பகற்ற
அகடுநனை வேங்கை வீகண் டன்ன
பகடுதரு செந்நெல் போரொடு நல்கிக்
கொண்டி பெறுகென் றோனே புண்டுறை
மலையல ரணியுந் தலைநீர் நாடன்
கண்டாற் கொண்டுமனை திருந்தடி வாழ்த்தி
....
வானறி யலவென் பாடுபசி போக்கல்
அண்ணல் யானை வேந்தர்
உண்மையோ வறியல் காண்பறி யலரே.

(பி - ம்.) 2 'தாயிவிளா' 3 'செநதிநெடுநகாமலாகமழு 6 'தாவ வலர்' 7 'மழைககளத' 8 'பனனுளறையும்' 14 'வுடைகளைநததிரும வானனன' 17 'அமிரதானமரபின' 20 'பொருமபுகறறத்தடுஙகண் வேங்கை' 20 'தகடுகணைவேங்கை' 22 'படுதருசெநநெற்' 25 'கணடாராககொணடுமவனறிருநதடி'

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார்.

(கு - ரை.) 1. அறவைநெஞ்சம் - அறத்தையுடைய நெஞ்சம்; "அறவை யாய ரகன்றெரு வடைந்தன" (சிலப். 22 : 116); 'அறவை நெஞ்சத்தாயர்' என்பதை, "ஆகாத் தோம்பி யாப்பய னளிக்கும், கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை" (சிலப். 15 : 120 - 21) என்பது விளக்குகின்றது.

1 - 2. புறநா. 44 : 11 - 3. செருந்தி - ஒரு பூமரம்.

5. ஆர்வலர் - பரிசிலர். காவலர் - அரசர். 6. கடி - காவல்.

5 - 6. "புலிதுஞ்சு வியன்புலத் தற்றே, வலிதுஞ்சு தடக்கை யவனுடை நாடே" (புறநா. 54 : 13 - 4).

7. சிலம்ப - முழங்க; முழக்கம் : இங்கே எதிரொலி.

10. சென்ற ஞான்று - முதல் நாள்.

12. அளியன் - அளிக்கத்தக்கான்.

14. "ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி, வேர்புரை சிதாஅர் நீக்கி" (புறநா. 392 : 13 - 4); "பாசி வேரின் மாசொடு குறைந்த துன்னற் சிதாஅர் நீக்கி" (பொருந. 153 - 4); "பாசி யன்ன சிதர்வை நீக்கி" (பெரும்பாண். 468).

16. மலரென்றது பகன்றைப்பூவை; புறநா. 393 : 17 - 8, குறிப்புரை.

17. துவை - துவையல்.

18. வெள்ளிக்கலம் : பெரும்பாண். 477 – 80, ந.

19. முன்னூர் - ஊர்முன். பொதியில் - அம்பலம்.

20. "இரும்பே ரொக்கல் பெரும்புலம் புறினும்" (புறநா. 394 : 16)

21. அகடுநனை - உள்ளிடம் நனைந்த. வேங்கைவீ - வேங்கை மரத்துப் பூ.

22. பகடுதரு செந்நெல் - எருது முதலியவைகள் உழுதுண் டாக்கிய செவ்விய நெல்; "பகடுதரு பெருவளம் வாழ்த்தி" (புறநா. 391 : 4); "பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க" (நாலடி. 2).

21 - 2. மலைபடு. 434 - 5.

23. கொண்டி - பொருளின் மிகுதி; புறநா. 382 : 1.

26. வான் - மேகம். (௩௯௦)

(௩௯௧) தண்டுளி பலபொழிந் தெழிலி யிசைக்கும்
விண்டு வனைய விண்டோய் பிறங்கல்
முகடுற வுயர்ந்த நெல்லின் மகிழ்வரப்
பகடுதரு பெருவளம் வாழ்த்திப் பெற்ற
திருந்தா மூரி பரந்துபடக் கெண்டி
அரிய லார்கைய ருண்டினி துவக்கும்
வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
ஈங்குவந் திறுத்தவென் னிரும்பே ரொக்கல்
தீர்கை விடுக்கும் பண்பில முதுகுடி
நன..................... வினவலின்
முன்னும் வந்தோன் மருங்கில னின்னும்
அளிய னாகலிற் பொருந னிவனென
நின்னுணர்ந் தறியுந ரென்னுணர்ந்து கூறக்
காண்கு வந்திசிற் பெரும.......................
.........பெருங்கழி நுழைமீ னருந்தும்

துழைந்த தூவியம் புதாஅஞ் சேக்கும்
ததைந்த புனனின் செழுநகர் வரைப்பின்
நெஞ்சமர் காத னின்வெய் யோளொ
டின்றுயி......................ஞ்சொல்
துளிபத னறிந்து பொழிய
வேலி யாயிரம் விளைகநின் வயலே.

(பி - ம்.) 2 'விணடெறபயயிறஙகன' 3 'நெலலினகிழவர்' 9 'பண்பின' 15 'துழைமீன' 17 'தநதைததநத புனயானின செழுந காவனபபின்' 18 'காதனிவெயயொடு'

திணை - அது; துறை - கடைநிலை.

பொறையாற்று கிழானைக் கல்லாடனார் (பி - ம். காலலனார்)

(கு - ரை.) 2. விண்டு - திருமால். பிறங்கல் - மலை; இங்கே தானியப் போர்.

3. முகடு - உச்சி.

2 - 3. "விண்டு வனைய வெண்ணெற் போர்வின்" (ஐங்குறு. 58)

4. பகடுதருபெருவளம் - எருது முதலியவைகள் உழுதுண்டாக்கிய பல பண்டம்.

5. கெண்டி - கிண்டி.

6. அரியல் - கள்.

7. பசித்தென - பசித்ததாக.

8. இரும்பேரொக்கல் - வறுமையாற்கரிந்த பெரிய சுற்றங்கள்.

9. பண்பில - பண்பில்லாதன.

11. மருங்கு - சுற்றம்.

12. ஆதலின் இவன் அளியன்.

12 - 3. முருகு. 282 -5.

15. நுழைமீன் - ஒருவகை மீன்; நுழைந்துசெல்லுகின்ற மீனுமாம்.

16. புதா - ஒருவகை நாரை; இப்பெயர் போதாவெனவும் வழங்கும்; "உள்ளு றூரலும் புள்ளும் புதாவும்" (சிலப். 10 : 117)

18. நின்வெய்யோளொடு - நின்னால் விரும்பப்பட்ட மனைவியோடு.

20. பதனறிந்து - காலமறிந்து.

21. ஆயிரம் விளைக - ஆயிரக்கலம் விளைக; "வேலி, யாயிரம் விளையுட்டாகக், காவிரி புரக்கு நாடு" (பொருந. 246 - 8) (௩௯௧)

(௩௯௨) மதியேர் வெண்குடை யதியர் கோமான்
கொடும்பூ ணெழினி நெடுங்கடை நின்றியான்
பசலை நிலவின் பனிபடு விடியற்
பொருகளிற் றடிவழி யன்ன வென்கை
ஒருகண் மாக்கிணை யொற்றுபு கொடாஅ
உருகெழு மன்ன ராரெயில் கடந்து
நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்

தணங்குடை மரபி னிருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்
வைக லுழவ வாழிய பெரிதெனச்
சென்றியா னின்றனெ னாக வன்றே
ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை
நுண்ணூற் கலிங்க முடீஇ யுண்மெனத்
தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்
கோண்மீ னன்ன பொலங்கலத் தளைஇ
ஊண்முறை யீத்த லன்றியுங் கோண்முறை
விருந்திறை நல்கி யோனே யந்தரத்
தரும்பெற லமிழ்த மன்ன
கரும்பிவட் டந்தோன் பெரும்பிறங் கடையே.

(பி - ம்.) 1. 'உதியர்' 6 'கடந்த' 7 'குருதிபெரும்' 8 'மார்பின' 9 - 10 'பூட்டி......வெள்ளை' 11 'வாழியபலவென' 12 'னின்றனெனுதக' 15 'யுண்ணென' 17 'பொலங்கலத்தருள...விடுத்தல்' 18 'ஊனமுறை', 'ஊழமுறை'

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமானஞ்சிமகன் பொருட்டெழினியை ஔவையார்.

(கு - ரை.) 1. ஏர் - ஒப்பு; "இலவம் போதே ரெழிற்றகைய சீறடிகள்" (சீவக. 1588).

2. கொடும்பூண் - வளைந்த ஆபரணம்; "விளங்குமணிக் கொடும் பூண் விச்சிக் கோவே" (புறநா. 200 : 8)

3. பசலை நிலவு - இளநிலவு.

5. கொடா - திறைகொடாத.

4 - 5. "பெருங்களிற் றடியிற் றோன்று மொருகண், இரும்பறை யிரவல" (புறநா. 263 : 1 - 2).

3 - 5. "இருணிலாக் கழிந்த பகல்செய் வைகறை, ஒருகண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி" (புறநா. 394 : 6 - 7).

7. குருதிப்பெரும்பாட்டீரத்து - இரத்தப் பெருக்காலுளதாகிய ஈரத்தையுடைய.

8. களம் - தானியக்கதிரை அடிக்குங்களமும் போர்க்களமும்.

10. வெள்ளைவரகு கவடி. கொள் - குடைவேல்.

6 - 10. பகைவருடைய அரண்களையழித்துக் கழுதையேரால் உழுது அந்நிலத்தில் வெள்ளை வரகும் கொள்ளும் வித்துதல் அரசர்க் கியல்பு.

9 - 11. "வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப், பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்" (புறநா. 15 : 2 - 3), "வடதிசை மன்னர் மன்னெயின் முருக்கிக், கவடி வித்திய கழுதையே ருழவன்" (சிலப். 27 : 225 - 6), "எழுதெழின் மாடத் திடனெலா நூறிக், கழுதை யேர் கையொளிர்வேல் கோலா - உழுததற்பின், வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதாற், கள்விரவு தாரான் கதம்" (பு. வெ. 12), "இடித்துவெளி செய்துநக ரெங்கணு நுழைந்தாங், கடுத்தமட வார் வயிறலைத்தன ரிரங்கக் கொடுத்திடு வளங்கள்பல கொள்ளைகொடு மண்ணின், எடுத்துவரு வெள்வரகு கொள்ளுட னிறைத்து" (காஞ்சிப். நாட்டுப். 28) என்பவைகள் இவ்வடிகளோடு ஒப்பிடற்பாலன.

10 - 12. "இன்னும் துறையென்றதனானே புறத்தோன் கவடி வித்துதலும் தொகைநிலைப்பாற்பட்டுழி அகத்தோர்க்குச் செல்லாமை கொள்க. அது, 'மதியேர் வெண்குடை' என்னும் புறப்பாட்டினுள் 'வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும், வைக லுழவ வாழிய பெரி தெனச், சென்றியா னின்றனெ னாக' எனவரும்" (தொல். புறத்திணை. சூ. 13, ந.).

13. பகட்டிலை பெரிய இலை. "ஊருண் கேணி யுண்டுறைத் தொக்க, பாசி" (குறுந். 399).

14. சிதாஅர் - கந்தைத்துணி; "துன்னற் சிதாஅர் துவர நீக்கி" (பொருந. 81).

13 - 4. புறநா. 390 : 13; "பாசி வேரின் மாசொடு குறைந்த, துன்னற் சிதாஅர் நீக்கி" (பொருந. 153 - 4).

16. புறநா. 376 : 14, குறிப்புரை.

இவ்வடி, பொருந. 157 - 8 - ஆம் அடிகளின் உரையில் மேற் கோளாக வந்துள்ளது.

17. கோள்மீன் - கோள்களாகிய மீன்களை; சிறுபாண். 242 - 4.

18. கோள்முறை - கொள்ளும் முறை.

21. பிறங்கடை - வழித் தோன்றல்; "படிகாத்தவர், பிறங்கடைப் பெரியோய்" (கம்ப. தாடகைவதை. 63).

20 - 21. "அரும்பெறன் மரபிற் கரும்பிவட் டந்தும்" (புறநா. 99 : 2).

மு. இச்செய்யுள், கடைநிலையென்னுந் துறைக்கு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது : தொல். புறத்திணை. சூ. 36. ந. (நகூஉ)

(௱௯௩) பதிமுதற் பழகாப் பழங்கண் வாழ்க்கைக்
குறுநெடுந் துணையொடு கூமை வீதலிற்
குடிமுறை பாடி யொய்யென வருந்தி
அடனசை மறந்தவெங் குழிசி மலர்க்கும்
கடனறி யாளர் பிறநாட் டின்மையின்
வள்ளன் மையினெம் வரைவோர் யாரென
உள்ளிய வுள்ளமொ டுலைநசை துணையா
......கவக மெல்லா மொருபாற் பட்டென
மலர்தா ரண்ணனி னல்லிசை யுள்ளி
ஈர்ங்கை மறந்தவெ னிரும்பே ரொக்கல்
கூர்ந்த வெவ்வம்விடக் கொழுநிணங் கிழிப்பக்
கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த
மூடைப் பண்ட மிடைநிறைந் தன்ன
வெண்ணிண மூரி யருள நாளுற
ஈன்ற வரவி ஞவுருக் கடுக்குமென்
தொன்றுபடு சிதாஅர் துவர நீக்கிப்
போதுவிரி பகன்றைப் புதுமல ரன்ன
அகன்றுமடி கலிங்க முடீஇச் செல்வமும்
கேடின்று நல்குமதி பெரும மாசில்
மதிபுரை மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
ஆடுமக ளல்கு லொப்ப வாடிக்
கோடை யாயினுங் கோடி...............
காவிரி புரக்கு நன்னாட்டுப் பொருந
வாய்வாள் வளவன் வாழ்கெனப்
பீடுகெழு நோன்றாள் பாடுகம் பலவே.

(பி - ம்.) 6 'வளளனமெனவவரை' 7 'டுறுநசை' 10 'மறைந்த' 11 'கூர்ந்தவேவம்வீட' 12 'விடுநிறை' 15 'ஈன்றவாவினாருககடுககும்' 16 'தொனறுபடி' 22 'கொடியாயினுங்' 24 'வளருவன'

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை நல்லிறையனார்.

(கு - ரை.) 1. பழங்கண் - துன்பம். 2. துணை - மனைவி.

4. குழிசி - சமைத்தற்குரிய கலம். மலர்க்கும் - நிமிரச்செய்யும்.

6. எம்வரைவோர் - எம்மை ஏற்றுக்கொள்வோர்.

4 - 6. குழிசி மலர்க்குங் கடனறியாளர் - அரிசி முதலியன இல்லாமையாற் கவிழ்த்து வைக்கப்பட்டுள்ள கலத்தைச் சமைத்தற்

பொருட்டு அடுப்பில் நிமிர்த்துவைக்கச் செய்யும் வண்மையையுடையார்; "கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரெனச் சுரன்முத லிருந்த சில்வளை விறலி", "ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென, ஏலாது கவிழ்ந்தவென் னிரவன் மண்டை, மலர்ப்போர் யார்" (புறநா. 103 : 3 - 4, 179 : 1 - 3) என்பவை இங்கே அறியற்பாலன.

7. உலைநசை - உலைதற்குக் காரணமான இச்சை.

9. அண்ணல் : விளி.

10. ஈர்ங்கை - உண்டு பூசிய கை; "ஈர்ங்கை விதிரார் கயவர்" (குறள், 1077).

11. கூர்ந்த எவ்வம் - மிக்க துன்பம்.

12. பருத்திவீடு - பருத்தியின் சுகிர்ந்த பஞ்சு.

13. மூடைப்பண்டம் - பொதியாகிய பொருள்கள்; "பொதி மூடைப் போரேறி" (பட்டினப். 137); மூடை மூட்டையென வழங்கும்.

14. நிணமூரி - நிணத்தின் துண்டம்.

12 - 4. நிணத்திற்குப் பருத்திப்பஞ்சு உவமை; "பருத்திப் பெண்டின் பனுவ லன்ன, நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங் குறை" (புறநா. 125 : 1 - 2).

16. தொன்றுபடுசிதார் : புறநா. 400 : 10. துவர - முற்ற; "துவர முடித்த துகளறு முச்சி" (முருகு. 26).

17 - 8. கலிங்கத்திற்குப் பகன்றைமலர் உவமை; "திருமல ரன்ன புதுமடிக் கொளீஇ" (புறநா. 390 : 15); "நலத்தகைப் புலைத்தி பசை தோய்த் தெடுத்துத், தலைப்புடைப் போக்கித் தண்கயத் திட்ட, நீரிற் பிரியாப் பருஉத்திரி கடுக்கும், பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான் பூ" (குறுந். 330 : 1 - 4); "பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல், கழுவுறு கலிங்கங் கடுப்பச் சூடி" (பதிற். 76 : 12 - 3).

20. கிணைப்பறைக்கு முழுமதி உவமை; "மதியத் தன்னவென் விசியுறு தடாரி", "மாகவிசும்பின் வெண்டிங்கள், மூவைந்தான் முறைமுற்றக், கடனடுவட் கண்டன்னவெ னியம்" (புறநா. 371 : 17, 400 : 1 - 4).

23. "காவிரிபுரக்கு நாடுகிழ வோனே" (பொருந. 248); "காவிரி புரக்கு நாடு கிழவோற்கு" (சிலப். 27 : 171). (௩௯௩)

(௩௯௪) சிலையுலாய் நிமிர்ந்த சாந்துபடு மார்பின்
ஒலிபுனற் கழனி வெண்குடைக் கிழவோன்
வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்
வள்ளிய னாதல் வையகம் புகழினும்

உள்ள லோம்புமி னுயர்மொழிப் புலவீர்
யானும், இருணிலாக் கழிந்த பகல்செய் வைகறை
ஒருகண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றிப்
பாடிமிழ் முரசி னியறேர்த் தந்தை
வாடா வஞ்சி பாடினே னாக
அகமலி யுவகையொ டணுகல் வேண்டிக்
கொன்றுசினந் தணியாப் புலவுநாறு மருப்பின்
வெஞ்சின வேழ நல்கின னஞ்சி
யானது பெயர்த்தனெ னாகத் தானது
சிறிதென வுணர்ந்தமை நாணிப் பிறிதுமோர்
பெருங்களிறு நல்கி யோனே யதற்கொண்
டிரும்பே ரொக்கல் பெரும்புலம் புறினும்
துன்னரும் பரிசி றருமென
என்றுஞ் செல்லேனவன் குன்றுகெழு நாட்டே.

(பி - ம்.) 1 'சீந்தியுலாநிவாநத' 2 'ஒலிகதிர்க்கழனி' 3 'குடவன்' 4 'வளளயிழுதல', 'வளளினியெனுதல' 5 'உள்ளமோம்புமின்' 14 'வுணரமை' 15 'பகறகொண்டு', 'பதற்கொண்டு'.

திணையும் துறையும் அவை.

கடைநிலை யாயினவெல்லாம் பாடாண்டிணை.

சோழிய ஏனாதி திருக்குட்டுவனைக் *கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார்.

(கு - ரை.) 1. வில் உலாவி நிமிர்ந்த மார்பு; "சிலையுலாய் நிமிர்ந்த மார்பன்" (சீவக. 2976).

3. வலிதுஞ்சு தடக்கை - வன்மை நிலைபெற்ற பெரிய கையை யுடைய. வாய்வாள் - குறிதப்பாத வாள்.

தடவென்னும் உரிச்சொல் பெருமையை யுணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 24, சே.; உரி. 22, ந.; இ. வி. சூ. 284, உரை.

4. வள்ளியனுதல் - பெருங்கொடையை உடையானுதலை.

5. உள்ளலோம்புமின்-நினைத்தலைத் தவிர்மின். 16. வைகறையில்.

* புதுக்கோட்டைக்குத் தெற்கே கோனாட்டில் எறிச்சியென்று பழையதோர் ஊர் உள்ளது; அதிற் பஞ்ச பாண்டவர் சுனைகளென்று ஐந்து சுனைகளும் ஒரு சிவஸ்தலமும் உள்ளன. இங்கே எறிச்சிலூ ரென்றது அவ்வூரென்று கருதப்படுகின்றது.

7. "ஒருகண் மாக்கிணை யொற்றுபு" (புறநா. 392 : 5).

8. பாடு - ஒலி. தந்தை - பாட்டுடைத் தலைவன் தந்தை.

9. வஞ்சி - பகைமேற் செல்லுதலை.

11 - 2. "இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர், பெருங் களிறு நல்கி யோனே யன்னதோர், தேற்றா வீகையு முளதுகொல்" (புறநா. 140 : 7 - 9).

13. பெயர்த்தனெனாக - பெயர்க்க.

15. அதற்கொண்டு - அதனால்.

16. "இரும்பே ரொக்கல் பெரும்புலம் பகற்ற" (புறநா. 390 : 20).

மு. புறநா. 140.

இப்பாட்டினைப் பொருநராற்றுப்படைக்கு மேற்கோளாகக் காட்டினர்; தொல். புறத்திணை. சூ. 30, இளம்.; சூ. 36, ந.

இப்பாட்டு, புகழாப் புகழ்ச்சியென்னும் அணியின்பாற்படும்.

(௩௬௪)

(௩௬௫) மென்புலத்து வயலுழவர்
வன்புலத்துப் பகடுவிட்டுக்
குறுமுயலின் குழைச்சூட்டொடு
நெடுவாளைப் பல்லுவியற்
பழஞ்சோற்றுப் புகவருந்திப்
புதற்றளவின் பூச்சூடி
....
...................அரியலாருந்து
மனைக்கோழிப் பைம்பயிரினனே
கானக்கோழிக் கவர்க்குரலொடு
நீர்க்கோழிக் கூய்ப்பெயர்க் குந்து
வேயன்ன மென்றோளால்
மயிலன்ன மென்சாயலார்
கிளிகடியினனே
அகலள்ளற் புள்ளிரீஇயுந்து
யாங்கப், பலநல்ல புலனணியும்
சீர்சான்ற விழுச்சிறப்பிற்
சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்
செல்லா நல்லிசை யுறந்தைக் குணாது
நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூர்
அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம் பெரும

முன்னு ணண்பகற் சுரனுழந்து வருந்திக்
கதிர்நனி செ........................மாலைத்
தன்கடைத் தோன்றி யென்னுற விசைத்தலிற்
றீங்குரல் ....கி ளரிக்குரற் றடாரியோ
டாங்குநின்ற வெற்கண்டு
சிறிதுநில்லான் பெரிதுங்கூறுன்
அருங்கலம் வரவே யருளினன் வேண்டி
......யென வுரைத்தன்றி நல்கித் தன்மனைப்
பொன்போன் மடந்தையைக் காட்டி யிவனை
என்போற் போற்றென் றோனே யதற்கண்
டவன்மறவ லேனே பிறருள்ள லேனே
அகன்ஞாலம் பெரிதுவெம்பினும்
மிகவானு ளெரிதோன்றினும்
குளமீனொடுந் தாட்புகையினும்
பெருஞ்செய் நெல்லின் கொக்குகிர் நிமிரல்
பசுங்கட் கருனைச் சூட்டொடு மாந்தி
விளைவொன்றோ வெள்ளங் கொள்கென
உள்ளது மில்லது மறியா
தாங்கமைந் தன்றால் வாழ்கவன் றாளே.

